Issued 26—9—1966]

245

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

FRIDAY, 25TH MARCH 1966

VOLUME XXXVIII—No. 1

CONTENTS

	PAGES
I Questions and Answers	1–25
II Calling attention to stoppage of supply of cow's milk from Madhavaram Milk Project	25–28
III Privilege matter—	
Dismissal of a temple servant of Meenakshi Sundareswarar Devasthanam, Madurai	28–29
IV Final Supplementary Statement of Expenditure for 1965–66 —Presentation	29–32
V Voting on Demands for Grants for 1966–67—*cont.*	
1. Demand No. V—Registration Department	32–48
2. Demand No. XI—Jails	48–69
3. Demand No. XVII—Fisheries .. .. } 4. Demand No. XXXIV—Stationery and Printing .. .. }	69–123
VI Papers laid on the Table of the House	123–124

©
GOVERNMENT OF MADRAS
1966

Legislative Assembly Department
Madras

PRICE 50 *Paise*]

D
V211,31 N66
N66.38
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
137845

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 25th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

கைத்தொழிற் பயிற்சிப்பள்ளி, செஞ்சி தாலூகா

*412 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகாவில் ஒரு இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட் 1966-67 நிதி ஆண்டில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில் அது சம்பந்தமாக எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, இந்த இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட் எந்த அடிப்படையில் அமைக்கப் படுகிறது? திண்டிவனத்தில் ஒரு இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தென் ஆர்க்காட்டிலே இரண்டு இடத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. கடலூரில் ஒன்று, உளுந்தூர்பேட்டையில் ஒன்று. மூன்றாவது ஒரு இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்டியூட் அமைப்பதுபற்றி நான்காவது திட்டத்தில் பின்னால்தான் பரிசீலிக்கப்படும்.

சிமெண்ட் தொழிற்சாலை, வள்ளியூர்

*413 கேள்வி.—திரு. ந. சவுந்தரபாண்டியன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் சிமெண்டு ஆலை ஆரம்பிக்கத் தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அது எந்நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : A letter of intent has been granted to a private entrepreneur for setting up of an industrial undertaking to manufacture Portland Cement to a

capacity of 52,000 tonnes per annum at Nanguneri in Tirunelveli district. He is taking steps to set up the project. He has recently applied to the Government of India for increasing the capacity of the proposed plant to 2,00,000 tonnes of cement per annum.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த ஆலையை அமைக்க அனுமதி யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டாக்டர் பி. நடராஜன் அவர்களுக்கு.

திரு. து. ப. அழகமுத்து : இந்த மாதிரித் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குத் தனியாருக்கு அனுமதி வழங்கப்போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாகத் தெரிகிறதே, அப்படியிருந்தும் இப்பொழுது தனியாருக்கு வழங்கப்பட்டதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி அமைச்சர் கூறியது கிடையாது.

பனை ஓலைப் பொருட்கள்

* 414 கேள்வி.—திரு. ம. கமலநாதன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் மத்தூர் பனை ஓலைப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கம் தற்போது இயங்கி வருகிறதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No Sir.

(b) The society is dormant partly due to the apathy of the present Board of Directors and partly for want of a steady and continuous market for its products. An enquiry under section 65 of the Madras Co-operative Societies Act has been ordered with a view to decide its future.

பாரி கம்பெனி உரத்தொழிற்சாலை

* 415 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம் ராணிப்பேட்டையில் உள்ள பாரி கம்பெனி உரத்தொழிற்சாலையில் சல்பர் பாஸ்பேட் கிடைக்காததால் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதைப்பற்றி அங்குள்ள தொழிலாளர் சங்கத்திடமிருந்து புகார்கள் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அரசாங்கம் மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The Government of India was requested to permit the E.I.D. Party Limited as a special case, to import rock phosphate and sulphur on the basis of the consignments received by the company during the last year. It is understood that the import was allowed and the company has re-opened with effect from 26th February 1966.

Coimbatore Housing Unit

* 416 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the works completed and the progress made till- date in the implementation of the "Neighbourhood" Housing Project undertaken by the State Housing Board, at Kovaipudoor near Coimbatore City?

THE HON. SRI R. VENKATARAMAN : An extent of 250.68 acres of lands was taken possession of by the Coimbatore Housing Unit on 26th October 1964 under the Kovaipudur (Phase I) Project. Development works on these lands have been started. During the year 1965–66, an expenditure of Rs. 13,48,344 has been incurred so far and further expenditure of about Rs. 1.50 lakhs is expected to be incurred in this regard during the remaining period of the year. Preliminary works such as levelling up the scheme area, demarcation of plots and roads have been taken up. The works relating to the formation of 100 feet and 60 feet roads coming in the scheme area are taken up for execution. The works relating to the provision of water supply to this area from the river Noyyal and designing of the sewerage scheme for the entire scheme area are in progress.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்த அண்டைப் பகுதி வீட்டு வசதி என்றால் பெரிய நகரங்களுக்கு அருகாமையிலுள்ள இடங்களை வீட்டு வசதிக்காக எடுத்துக் கொள்ளலாம் என்பது பொருளா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆம். பெரிய நகரங்களில் சாடெலைட் டவுன்ஸ் என்று சொல்லுவார்கள், அந்த மாதிரி அருகாமையில் எடுத்துக்கொள்வதுதான்.

திருச்சி மாவட்டச் சாலைகள்

* 417 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில், கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு செஸ் மூலம் 1964-65, 1965-66-ம் ஆண்டுகளில் எந்தெந்த சாலைகளை வேலை செய்யத் திட்டமிடப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது ?

(இ) வேலை முடிவடைந்த சாலைகள் எத்தனை ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1964-65—

1. பூவாளூர்—ஆலங்குடி சாலையின் 0 கிலோ மீட்டர் முதல் 3.2 கிலோ மீட்டர் வரை மேம்பாட்டு வேலை (ஜல்லி போடும் வேலையும் தார் போடும் வேலையும்).

2. வெள்ளனூர்—சிறுமயன்குடி சாலையில் கோத்தாரி சர்க்கரை ஆலை வரை மேம்பாட்டு வேலை.

1965-66—

3. வெள்ளனூர்—புஞ்சைகங்கேந்தி சாலை மேம்பட்டுவேலை.

4. கரை வெட்டியிலிருந்து சாமாவூருக்கு வெங்கனூர் வழியாகச் செல்லும் சாலை மேம்பாட்டு வேலை.

(இ) ஒன்று.

திரு. சா. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த 1965-66-ல் கனம் அமைச்சர் அவர்கள் கரைவெட்டியிலிருந்து சன்னவூருக்கு செல்லும் சாலை திட்டமிடப்பட்டு அனுமதிக்கப்பட்டதென்று கூறினார்கள். இது 4½ லட்சத்திற்கு எஸ்டிமேட் செய்யப்பட்டு சாங்ஷன் ஆகி இருக்கிறது என்று எனக்கு அக்ரிகல்சுரல் டிபார்ட்மென்டிலிருந்து தகவல் வந்திருக்கிறது. ஆனால் அதை மாற்றி வேறு சாலை போடுவதாகத் தெரியவருகிறது. அதை வேறு சாலைக்கு மாற்றாமல் அதே சாலையைப் போடுவதற்கு முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அப்படி மாற்றும் தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1965-66-க்கு கோத்தாரி சர்க்கரை ஆலைப் பகுதியிலுள்ள சாலைகளுக்கு ஒரு திட்டம் தயாரித்து அனுப்பப்பட்டதா ? அப்படியானால் அது இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மாநில விவசாய டைரக்டர் அவர்கள் அங்கு மட்டும் அல்லாமல், மாநிலத்தில் எங்கெல்லாம் கரும்பு ஆலைகள் இருக்கின்றனவோ, எங்கே ரோடுகள் வேண்டுமோ அது சம்பந்தப்பட்ட டிவிஷனல் எஞ்சினியர்களை ரிப்போர்ட்டுகள் கேட்டிருக்கிறார்கள். அவை வந்த பிறகு பரிசீலிக்கப்பட்டு எந்தெந்த ரோடுகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது முடிவு செய்யப்படும்.

Entomology Wing for Sugar Factories

*418. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the first Technical Seminar of the Co-operative Sugar Factories in Madras State has recommended to the Government, the establishment of an entomology wing for the factories as an efficient plant protection measure; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் முதல் தொழில் நுட்பக் கருத் தாங்கு கோயம்புத்தூர், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக் கட்டடத்தில் 10—9—1965, 11-9-1965-தேதிகளில் நடை பெற்றது ; இதன் நடவடிக்கைக் குறிப்புகள் இன்னும் அரசாங்கத் திற்கு வந்து சேரவில்லை.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : கரும்பாலைகளுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள கிராமப் பகுதிகள் உரிமையுடையன என்று வரையறுத்து ரெக்கார்டு செய்வதன் அடிப்படை நோக்கம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : அதனால் அந்த ஏரியாவில் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாய மக்களுக்கு லாபம் கிடைக் கிறது ; அரசாங்கத்திற்கும் 'செஸ்' வருகிறது. வரி கொடுக்கிற வர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தக் கரும்பாலைகளைச் சுற்றியுள்ள பகுதி சாலைகள் அத்தனையும் கிராமச் சாலைகளாக இருக்கும் காரணத்தால் சர்க்கரை செஸ்ஸில் இருந்து கிடைக்கும் பணத்தைப் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு அளித்து அதன் மூலம் அந்தச் சாலைகளைப் போட ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதிலே விவசாய இலாகாவும், ஹைவேஸ் இலாகாவும் சேர்ந்து எந்தெந்த ரோடுகளுக்கு பிரையாரிடி கொடுக்க வேண்டுமென்ற முறையில் ஏற்பாடு செய்கிறார்கள்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : இவ்வாறு வரையறுத்து ஒரு பகுதியை உரிமைப்படுத்துவதால் ஆலைக்கு ஆலை போட்டி போட்டுக்கொண்டு விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்கின்ற வாய்ப்பு குறைகின்றது என்பதைச் சர்க்கார் உணரு கின்றதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படி ஒன்றும் குறைவதாகத் தெரிய வில்லை.

திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : கரும்பாலை இருக்கும் இடங்களில் ரோடு போடுவதுபோல் மற்ற விவசாயப் பொருள்கள் கொண்டு போவதற்கு வசதியாகவும் ரோடுகள் போட்டு அந்த விவசாயிகளுக்கும் வசதிகள் செய்து கொடுப் பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : பெருவழித்துறை ஹைவேஸ் பொறுப் பில் இருக்கின்றது; சிறிய ரோடுகள் பஞ்சாயத்துக்கள் பொறுப்பில் இருக்கின்றன. கரும்பு உற்பத்தி செய்பவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு இந்த ரோடுகள் போடப்படு கின்றன.

Bundobust expenditure on Governor's tour

* 419 Q.—SRI T. P. ALAGAMUTHU : Will the Hon. the Minister for Home be pleased to state the expenditure incurred in connection with the bandobust arrangements made during the various tours undertaken by the Acting Governor of the State during the period from September 1964 to September 1965?

THE HON. SRI P. KAKKAN : Rs. 15,573.13.

திரு. து. ப. அழகமுத்து : இந்தச் சுற்றுப்பயணங்களைக் கவர்னர் அவர்கள் சொந்த முறையில் மேற்கொண்டார்களா அல்லது சர்க்கார் அலுவல் காரணமாகச் சென்றார்களா? குறிப்பிட்ட சர்க்கார் அலுவல்கள் இருந்தனவா ?

MR. SPEAKER : I do not think I can allow this question. The tour is fixed by the Governor and not by the Government

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அரசாங்கந்தானே செலவை ஏற்றுக் கொள்கிறது . . . .

MR. SPEAKER : The Government is not fixing the tour of the Governor. If the Governor fixes the tour, we cannot discuss here whether it is necessary or unnecessary.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த இடைக் காலத்தில் எத்தனை நாட்கள் அவர்கள் பதவியில் இருந்தார்கள்? எத்தனை நாட்கள் டூரை மேற்கொண்டார்கள்?

கனம் திரு. பூ. கக்கன் : எத்தனை நாட்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : தற்காலிகக் கவர்னர் அவர்கள் எந்தெந்த மாவட்டங்களுக்குச் சென்றார்கள்? எந்தெந்தக் காரணங்களுக்காகச் சென்றார்கள் ?

MR. SPEAKER : Again the hon. Member is coming to the same question. I am not allowing this question.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் எங்களிடத்தில் தகவல் கிடையாது. இவற்றிற்கு விடையளிக்க முடியாது.

திரு. இராம. அரங்கண்ணல் : கவர்னர் அவர்களுடைய சுற்றுப்பயணத்தின்போது பந்தோபஸ்திற்காக நாம் செலவு செய்வது சம்பந்தமான கேள்வி இது. அவர்கள் எந்தெந்த மாவட்டங்களுக்குச் சென்றார்கள் . . . .

கனம் சபாநாயகர் : எந்தெந்த மாவட்டங்களுக்குச் சென்றார்கள் என்று கேட்டால் பரவாயில்லை; எந்தெந்தக் காரணங்களுக்காகச் சென்றார்கள் என்று கேட்டால் அது சரியல்ல.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to draw attention to Rule 67 (iv) of the Assembly Rules which says : " A member while speaking, must not reflect upon the conduct of the President or Governor or any Court of Justice."

திரு. இராம. அரங்கண்ணல் : கவர்னர் அவர்கள் எந்தெந்த மாவட்டங்களுக்குச் சென்றார்கள் என்று அறியலாமா?

கனம் சபாநாயகர் : தகவல் இல்லையென்று சொன்னார்களே !

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இடைக்கால கவர்னர் அவர்கள் இடைக் காலங்களில் எல்லாக் கோயில்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து வந்திருக்கிறார்கள் . . .

MR. SPEAKER : I am not allowing this question. I pass on to the next question.

போலீஸ் விசாரணை குறித்து உயர்நீதி மன்றக் கருத்து

* 420 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராமு என்ற முன்னாள் உதவி பப்ளிக் பிராசிகியூட்டருக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ப்பட்ட கொலை வழக்கு அப்பீலில் போலீஸ் விசாரணை குறித்துச் சென்னை உயர்நீதி மன்றம் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தனவா?

(இ) ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு போலீஸ் டெபுடி சூப்பரின்டெண்டு, போலீஸ் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகிய விசாரணை அதிகாரிகள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், போலீஸ் டெபுடி சூப்பரின்டென்டை எச்சரித்துள்ளார். சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டரும் இன்ஸ்பெக்டரும் கண்டிக்கப்பட்டுள்ளனர்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : என்னென்ன காரணங்களுக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது? அரசாங்க வக்கீலாக இருந்த ராமு என்பவர் பேரில் சரியானபடி கொலையைப்பற்றிய துப்பை விளக்கவில்லை, கொலையை மறைக்கச் சதி செய்தார்கள் என்ற காரணத்திற்காக விசாரணை செய்தார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் முதலிலேயே பதில் சொன்னேன். செங்கற்பட்டு போலீஸ் டெபுடி சூப்பரின்டெண்டு, போலீஸ் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகிய விசாரணை அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், போலீஸ் டெபுடி சூப்பரின்டென்டை எச்சரித்துள்ளார். சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டரும், இன்ஸ்பெக்டரும் கண்டிக்கப்பட்டுள்ளனர்.

[25th March 1968

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர், என்ன குற்றம் என்று கேட்கிறார் என்ன தப்பு செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டார்கள், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் கேஸை விசாரிக்கும்போது அடையாளங்களைச் சரியாகக் கண்டு பிடிக்கவில்லை; கரைகளைக் கொண்டு சரியாகக் கவனிக்கவில்லை என்பதுதான்.

Prices of edible oils

*421. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that prices of all edible oils, particularly cocoanut oil have shot up considerably within the course of an year; and

(*b*) if so, the action proposed to bring down the same?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Government of India have already been addressed for their concurrence for imposing control over prices and movement of groundnut and gingelly and groundnut oil and gingelly oil. Their reply is awaited. The position regarding prices of oil is being watched and appropriate action will be taken with due regard to circumstances.

திரு. இராம அரங்கண்ணல் : தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய் போன்றவற்றின் விலை வாரா வாரம் ஏறிக் கொண்டே போகிறது. இதைக் கட்டுப்படுத்தும் உத்தரவைச் சீக்கிரமாக அமல் நடத்துவார்களா?

கனம் திரு. வெ. ராமையா : கடலை எண்ணெய், நல்லெண்ணெயைப் பொறுத்தவரை நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்துக்கு நாம் ஆலோசனை சொல்லியிருக்கிறோம். அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல் : தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்த அளவிலும் இந்தக் கட்டுப்பாடு வருமா?

கனம் திரு. வெ. ராமையா : தேங்காய் எண்ணெய் மற்றொரு ராஜ்யத்தில் இருந்து வர வேண்டிய நிலைமை இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த எண்ணெய் வகையின் விலை திடீரென்று ஏறிக் கொண்டிருப்பதன் காரணம் என்ன? அரசாங்கம் பரிசீலனை செய்தார்களா? முடிவு என்ன?

கனம் திரு. வெ. ராமையா : கடலை, ஜிஞ்ஜிலி பொறுத்த வரை இந்த வருஷம் உற்பத்தியில் குறைவு இருக்கிறது. தேவையும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. அதோடு அல்லாமல் போக்குவரத்துக் கட்டுப்பாடு இல்லாத காரணத்தால் எங்கெங்கு பற்றாக்குறை இருக்கிறதோ அங்கெல்லாம் போய்விடக்கூடிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் இந்த

25th March 1968]

ராஜ்யத்தைப் பொறுத்தவரை, கடலை எண்ணெய், நல்லெண்ணெய் ஆகிய இரண்டையும் பொறுத்தவரை, ராஜ்ய எல்லைக்குள் ஒரு கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென்பதற்காக மத்திய சர்க்காரைக் கேட்டு எழுதியிருக்கிறோம்.

திரு. சா. கணேசன் : எண்ணெய் வித்துக்கள் ஒரு பகுதி நம் மாநிலத்திற்கு வருவதால் இதுமாதிரி நடமாட்டக் கட்டுப்பாடு விதிப்பதின் மூலம் என்ற அல்லது பிற மாநிலங்களிலிருந்து அல்லாமல் மற்றொரு பகுதி தேங்காய் கொப்பரை முதலியன இங்கே வரத் தடைப்பட்டு அதனால் மேலும் விலை அதிகரிக்கக்கூடும் அல்லது பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டிருக்கிறதா? அப்படி அதைக் கவனத்தில் கொண்டிருந்தால் இந்த மாதிரி நடமாட்டத் தடை முறையை மாற்றியமைக்க ஏதாவது முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இப்போது கட்டுப்பாடு இல்லாததால் விலை எல்லாம் ஏறிப்போயிருக்கிறது. நம் கண்ட்ரோலில் இருக்கும் பட்சத்தில் நம் பார்வையில் நமக்குள்ள சரக்கு ஓரளவு விலையைக் குறைக்கமுடியும். உதாரணமாக வேறு உணவுப் பண்டங்களைப் பொறுத்தமட்டில் கட்டுப்பாடு இல்லாத நேரத்தில் அதிக விலை இருந்ததும், அரசாங்கம் தலையிட்டதினால் விலை குறைந்ததும் தெரியும். இந்த முயற்சியால் ஒரு பாதகமும் வராது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : சிலோன் கொப்பரை வந்து தேங்காய் எண்ணெய் ஆட்டப்பட்டது. அது நிறுத்தப்பட்டால் விலை ஏறுகிறது. ஆகவே சிலோனிலிருந்து கொப்பரை வருவதற்கு சர்க்கார் அனுமதிப்பார்களா?

கனம் திரு. வெ. ராமையா : சர்க்கார் அனுமதிப்பது என்று சொன்னால் இதெல்லாம் ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் சம்பந்தப்பட்டது. அதனால் நமக்குப் போதுமான ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் இல்லாத காரணத்தினால் கொப்பரையைத் தாராளமாக வரவழைக்க முடியவில்லை.

திரு. [illegible] : கடலெண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றிற்குக் கட்டுப்பாடு விதித்தால் அந்த [illegible] ஆகிய [illegible] முதலிய பொருள்களின் விலை இறங்கும். ஆகவே விவசாயிகளுக்கு அது மிகவும் இடையூறாக அமையும். அதை நினைத்து அரசாங்கம் இதில் [illegible] வழிவகை காணுமா?

கனம் திரு. வெ. ராமையா : அதனால் கிடைக்கும் வாய்ப்பு [illegible] போய் சேரும் என்று அங்கத்தினர் [illegible] அவர்கள் சரியாக [illegible] உள்ளவர்களுக்குத்தான் [illegible] காரணம். இன்று [illegible] கட்டுப்பாடு விதிப்பதால் [illegible]

[illegible]

[25th March 1966

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர், என்ன குற்றம் என்று கேட்கிறுர் என்ன தப்பு செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டார்கள், ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்கிறுர்.

கனம் திரு. பூ. கக்கன்: முதலில் கேஸை விசாரிக்கும்போது அடையாளங்களைச் சரியாகக் கண்டு பிடிக்கவில்லை; கரைகளைக் கொண்டு சரியாகக் கவனிக்கவில்லை என்பதுதான்.

Prices of edible oils

*421. *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that prices of all edible oils, particularly cocoanut oil have shot up considerably within the course of an year; and

(*b*) if so, the action proposed to bring down the same?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) The Government of India have already been addressed for their concurrence for imposing control over prices and movement of groundnut and gingelly and groundnut oil and gingelly oil. Their reply is awaited. The position regarding prices of oil is being watched and appropriate action will be taken with due regard to circumstances.

திரு. இராம அரங்கண்ணல்: தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய் போன்றவற்றின் விலை வாரா வாரம் ஏறிக் கொண்டே போகிறது. இதைக் கட்டுப்படுத்தும் உத்தரவைச் சீக்கிரமாக அமல் நடத்துவார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கடலை எண்ணெய், நல்லெண்ணெயைப் பொறுத்தவரை நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்துக்கு நாம் ஆலோசனை சொல்லியிருக்கிறோம். அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல்: தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்த அளவிலும் இந்தக் கட்டுப்பாடு வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: தேங்காய் எண்ணெய் மற்றொரு ராஜ்யத்தில் இருந்து வர வேண்டிய நிலைமை இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த எண்ணெய் வகைகளின் விலை திடீரென்று ஏறிக் கொண்டிருப்பதன் காரணம் என்ன? அரசாங்கம் பரிசீலனை செய்தார்களா? முடிவு என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: கடலை, ஜிஞ்ஜிலி பொறுத்தவரை இந்த வருஷம் உற்பத்தியில் குறைவு இருக்கிறது. தேவையும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. அதோடு அல்லாமல் போக்குவரத்துக் கட்டுப்பாடு இல்லாத காரணத்தால் எங்கெங்கு பற்றுக்குறை இருக்கிறதோ அங்கெல்லாம் போய்விடக்கூடிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் இந்த

25th March 1966]

ராஜ்யத்தைப் பொறுத்தவரை, கடலை எண்ணெய், நல்லெண்ணெய் ஆகிய இரண்டையும் பொறுத்தவரை, ராஜ்ய எல்லைக்குள் ஒரு கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென்பதற்காக மத்திய சர்க்காரைக் கேட்டு எழுதியிருக்கிறோம்.

திரு. சா. கணேசன்: எண்ணெய் வித்துக்கள் ஒரு பகுதி அல்லாமல் மற்றொரு பகுதி பிற மாநிலங்களிலிருந்து நம் மாநிலத் திற்கு வருவதால் இதுமாதிரி நடமாட்டக் கட்டுப்பாடு விதிப்பதின் மூலம் எள்ளு அல்லது தேங்காய் கொப்பரை முதலியன இங்கே வரத் தடைப்பட்டு அதனால் மேலும் விலை அதிகரிக்கக்கூடும் அல்லது பற்றுக்குறை ஏற்படக்கூடும் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டிருக்கிறதா? அப்படி அதைக் கவனத்தில் கொண்டிருந்தால் இந்த மாதிரி நடமாட்டத் தடை முறையை மாற்றியமைக்க ஏதாவது முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்போது கட்டுப்பாடு இல்லாத தால் விலை எல்லாம் ஏறிப்போயிருக்கிறது. நம் கண்ரோட்டத்தில் நம் பார்வையில் நமக்குள்ள சரக்கு கண்ட்ரோலில் இருக்கும் பட் சத்தில் ஓரளவு விலையைக் குறைக்கமுடியும். உதாரணமாக வேறு உணவுப் பண்டங்களைப் பொறுத்தமட்டில் கட்டுப்பாடு இல்லாத நேரத்தில் அதிக விலை இருந்ததும், அரசாங்கம் தலையிட்டதினால் விலை குறைந்ததும் தெரியும். இந்த முயற்சியால் ஒரு பாதகமும் வராது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: சிலோன் கொப்பரை வந்து தேங்காய் எண்ணெய் ஆட்டப்பட்டது. அது நிறுத்தப்பட்டதால் விலை ஏறுகிறது. ஆகவே சிலோனிலிருந்து கொப்பரை வருவதற்கு சர்க்கார் அனுமதிப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: சர்க்கார் அனுமதிப்பது என்று சொன்னால் இதெல்லாம் ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் சம்பந்தப்பட்டது. அதனால் நமக்குப் போதுமான ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் இல்லாத காரணத்தினால் கொப்பரையைத் தாராளமாக வரவழைக்க முடியவில்லை.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: கடலெண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றிற்குக் கட்டுப்பாடு விதித்தால் அந்த மூலப்பொருள்கள் ஆகிய கடலை, எள் முதலிய பொருள்களின் விலை இறங்கும். ஆகவே விவசாயிகளுக்கு அது மிகவும் இடையூறாக அமையும். அதை நினைத்து அரசாங்கம் இதில் தலையிடாமல் இருப்பதற்கு வழிவகை காணுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அதனால் கிடைக்கும் லாபம் விவசாயிகளுக்குப் போய் சேரும் என்று அங்கத்தினர் பூராவும் நினைத்தால் நடைமுறைப் பழக்கத்தை அவர்கள் சரியாக கவனிக் காதது தான் காரணம். இடையில் உள்ளவர்களுக்குத்தான் அதிகமாக அது போகிறது. கட்டுப்பாடு விதிப்பதால் உடனடியாக விவசாயிகள் பாதிக்கக்கூடிய நிலை எந்த ஒரு பொருளிலும் இதுவரை நான் பார்த்ததில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தேங்காய் எண்ணெய் விலை இரண்டு மாதங்களுக்கு முன்பு கிலோ க்ராம் மூன்று ரூபாய்க்கு இருந்தது, இப்போது ரூ. 6-50-க்கு விற்கிறது. இப்போது உருளைக்கிழங்கு யு. பி.-யிலிருந்து வாங்கி இங்கு கொண்டு வந்து விற்க அரசாங்க ஏற்பாடு இருக்கிறது. அதே போல் கேரளா அரசாங்கத்திட மிருந்து தேங்காய் எண்ணெய் வாங்கி மக்களுக்கு நியாயமான விலையில் விற்கக் கூடாதா?

கனம் திரு. வெ. ராமையா : இந்த முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. ஆனால் உருளைக்கிழங்கை யு.பி.-யிலிருந்து உபரியானதை நம் ராஜ்யத்திற்கு வாங்க நேரடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதே போல் வாங்கி இங்கு கொண்டு வர அதில் கவனம் காட்டச் சென்றிருந்த காரியதரிசி என், நல்லெண்ணெய் இதையும் யு. பி. கொடுத்தால் கவர்ன்மெண்ட் வாங்க முடியுமா என்ற ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது. முடிவு இன்னும் தெரியவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : கொள்கை அளவில் கட்டுப்பாடு வந்த பிறகு விலைவாசி குறைந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே கொள்கையை அனுசரித்து எண்ணெய்க்கும், அரிசி, மண்ணெண்ணெய் இவற்றிற்கு இருப்பதுபோன்று ரேஷன் முறையைக் கொண்டு வர உத்தேசமுண்டா?

கனம் திரு. வெ. ராமையா : அதெல்லாம், மத்திய அரசாங்கம் ஒத்துழைப்புப் பெற்று அவர்கள் முடிவு தெரிந்த பிறகு கவனிக்க வேண்டிய விஷயம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : ஹோட்டல்களில் இட்லி, தோசை முதலியவற்றிற்கு தேங்காய் சட்டினி உபயோகப்படுத்தப் படுகிறது. பெருமளவில் அதன் உபயோகம் அதிகரித்துக்கொண்டு வருவதால் சாம்பார் முதலிய பொருள்களை அதற்குச் சாதனமாக வைத்துக் கொள்ளமுடியும். ஆகையால் ஹோட்டல்களில் தேங்காய் சட்டினியை உபயோகப்படுத்தக் கூடாது என்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பித்தால் தேங்காய் விலையைக் குறைக்கலாம் அல்லவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இட்லி சாப்பிட்டு ருசிப்பவர் கள் அந்தக் கருத்தைச் சொன்னால், சட்டினியை விட்டு விடுவோம் என்று பொதுவாக இந்த மன்றத்தில் சொன்னால் கவனிக்கலாம். என் கருத்து அம்மாதிரியெல்லாம் [illegible] [illegible]தல்ல.

திரு. சா. கணேசன் : இப்போது மிக, மிகப் பெரும்பாலான காப்பி ஹோட்டல்களில் தேங்காய்ச் சட்டினி என்ற பெயரால் பிண்ணாக்கு அல்லது சேப்பங்கிழங்கு, இத்யாதி விஷயங்களை வைத்துக் கொண்டு மிளகாய் மூற்றவை போட்டுத்தான் கொடுக் கிறார்கள். இதனால் அது தேங்காய் சட்டினி அல்ல என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : அந்தச் [illegible] பெயர் தேங்காய் சட்டினி என்று சொல்லாமல் வேறு [illegible] வைத்திருப்பார்கள்.

திரு. எஸ். முருகையன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது என்ன, மணிலா இவற்றின் உற்பத்தி குறைந்திருப்பதால் விலை ஏறிவிட்டது என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு எவ்வளவு உற்பத்தியானது, இந்த ஆண்டு எவ்வளவு உற்பத்தி யானது என்று விளக்குவார்களா?

கனம் திரு. வெ. ராமையா : அந்தப் புள்ளிவிவரம் என்னிடம் இல்லை, தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஏ. என். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : இட்டிலிக்குத் தேங்காய் சட்டினிதான் மிகவும் பொருத்தம். இந்தப் பொருத்தம் “உலகில் பிறருக் கெய்தும் பொருத்தமோ” என்று இராமலிங்க அடிகளார் சொல்வதுபோல் இருக்கின்றது. ஆகையால் அரசாங்கம் இதில் தலையிடாது இருக்குமா?

கனம் திரு. வெ. ராமையா : தலையிடுவது என்றால் நல்ல தேங்காய் சட்டினி கிடைக்க முயற்சி எடுக்கலாமா?

திரு. இராம. அரங்கண்ணல் : தேங்காய் எண்ணெய் விலையைக் குறைப்பதில் அரசாங்கம் விளக்கெண்ணெய் வேகத்தில் இருப்ப தற்கு என்ன காரணம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேங்காய், கொப்பரை இந்நாட்டில் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே தென்னை உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அதுதான் வழி.

சென்னை நகரில் மண்ணெண்ணெய் பங்கீடு

[illegible] கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பார்களா—

(ஆ) சென்னை நகரில் மண்ணெண்ணெய் பங்கீடு அளவு குறைக்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் காரணமென்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) As the supply of kerosene from various oil companies during February fell short of the demand, a cut had to be imposed in the ration.

திரு. து. ப. அழகமுத்து : இந்த மண்ணெண்ணெய் பங்கீடுக் குறைப்பு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்? இதைச் சரி செய்ய ஏதாவது வழியிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : சரி செய்வது என்று சொன்னால் அது சப்ளை கிடைப்பதைப் பொறுத்திருக்கிறது. இந்த விவரம் என்னிடம் இல்லாவிட்டாலும் என்னிடத்தில் சமீபத்தில் கொடுத்த விவரம், இந்த மாதத்திலிருந்து கொஞ்சம் அதிகப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை ஞாபகத்திலிருந்துதான் [illegible] திட்டவட்டமாகச் சொல்லமுடியாது.

[25th March 1966

திரு. ம. கமலநாதன் : இது சென்னை நகரத்தைப் பொறுத்த கேள்வியாக இருந்தாலும், பொதுவாக மண்ணெண்ணெய்யை ஸ்டாக் வைக்க டிப்போ இல்லாததால் தர்மபுரி போன்ற மாவட்டத்தில் பற்ருக்குறை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : தர்மபுரி மாவட்டத்தில் பொதுவாக என்று சொல்லிவிட முடியாது. எனக்குத் தெரிந்தது கிருஷ்ணகிரியில் அங்கு ஆயில் கம்பனி ஏஜென்ட் டிப்போ சரியாக இல்லை என்ற காரணத்தால் சில மாதங்கள் கஷ்டமாக இருந்தது. அதை நிவர்த்தி செய்யக்கூடிய முறையில் கலெக்டர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : மண்ணெண்ணெய் விஷயத்தில் நகரங்களில் சர்க்கார் கவனம் செலுத்துவதைப் போன்று கிராமப்புறங்களிலும் தட்டுப்பாடு இல்லாமல் இருக்க கவனம் செலுத்துவதற்கு வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கிராமப்புறங்களில் கொடுக்க வேண்டிய விஷயத்தில் அந்த அந்த ஜில்லாவில் உள்ள அதிகாரிகள் கவனம் காட்டி வருகிருர்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்படுவதற்குப் பொதுவான காரணம் லாரி சொந்தக்காரர்கள் டீஸல் ஆயிலுடன் மண்ணெண்ணெயையும் சேர்த்துப் பெருவாரியாக உபயோகிப்பதால் இவ்விதத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்பதைச் சர்க்கார் அறியுமா ? அப்படியானல் அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பற்ருக்குறை ஏற்படுகிறபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்கிருர்கள். தாராளமாக இருக்கிறபோது அதுபற்றிய பிரச்னை இல்லாமல் இருக்கிறது. பொதுவாக கிரஸின் அல்லது மற்றப் பொருள்களின் பற்ருக்குறை இருக்கிறபோது, அவை கிடைக்காமல் இருக்கிறபோது இப்படிப்பட்ட கருத்துக்கள், குற்றச்சாட்டுகள் எல்லாம் சொல்கிருர்கள். இதனுல் மட்டும் பாதகம் ஏற்படவில்லை. பொதுவாக நமக்குத் தேவையான அளவு கிடைக்காததுதான் காரணம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம் ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற மண்ணெண்ணெய் அளவு மாதம் ஒன்றுக்கு எவ்வளவு? அதை அதிகப்படுத்த வேண்டுமென்று ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா ? அப்படியானுல், அதன் பலன் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : மொத்தம் எவ்வளவு என்ற புள்ளிவிவரம் இல்லை. இது சென்னை நகரம் சம்பந்தப்பட்ட கேள்வி. கோரிக்கையைக் கொடுத்திருக்கிறேம். பெப்ரவரி, அதற்கு முன் மாதம் கொஞ்சம் எண்ணெய் குறைவாக இருந்தது. அந்த நிலையில் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டது. மீண்டும் அவர்கள் அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிருர்கள். அதோடு அல்லாமல் இன்னும் இரண்டு தினங்களில் மத்திய அரசாங்க அமைச்சர் அவர்களும், ராஜ்யங்களில் உள்ள அமைச்சர்களும், அதிகாரிகளும்,

25th March 1966]

சேர்ந்து வரக்கூடிய ஆண்டில் எவ்வளவு கிடைக்கும், எப்படி விநியோகம் செய்வது என்பதுபற்றி யெல்லாம் டெல்லியில் கூடிப் பேச இருக்கிருர்கள்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, இந்தப் பற்ருக்குறை இருப்பதற்கு முக்கிய காரணம் பதுக்கல் தான் என்பதை நாம் உணருகிறேம். அப்படிப் பதுக்கல்காரர்கள் எத்தனை பேர்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிருர்கள்? அவர்கள் மீது கடுமையான தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியில்லையென்ருல், இனி மேலாவது இப்படிப்பட்ட பதுக்கல்காரர்களுக்குக் கடும் தண்டனை வழங்குவதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : பற்ருக்குறைக்கு முக்கிய காரணம் பதுக்கல் அல்ல. பதுக்கலினுல் தான் பற்ருக்குறை ஏற்படுகிறது என்ருல், இதில் யாராவது தவறுகள் செய்தால், அந்த விபரம் அரசாங்கத்திற்கு கொண்டுவரப்பட்டால் அதற்குரிய தண்டனை வழங்கும்.

வடிகால் திட்டங்கள்

* 423 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வடிகால் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதா?

(இ) மேற்கண்ட திட்டம் எத்தனை ரூபாயில் தயாரிக்கப்பட்டது?

(உ) எப்பொழுது வடிகால் திட்ட வேலைகள் துவங்கப்படும்?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) முதல் (உ) வரை : இவ்விஷயம் பிரதம நீர்ப் பாசன இன்ஜினியர் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த வடிகால் திட்டத்தின் மூலமாக எத்தனை கிராமங்கள் பயன்படும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த வடிகால் திட்டத்தினுல் கிராமங்கள் மட்டும் தான் பயன்படும் என்பதல்ல. குறிப்பாக தஞ்சை ஜில்லாவில், வடிகால் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிற இடங்களை எல்லாம் கவனிக்க வேண்டும் என்ற முறையில், முறையாகப் பரிசிலனை செய்து, அதில் இருக்கின்ற சகலவிதமான பிரச்னைகளையும் தெரிந்து ஆராய்ந்து ஒரு முடிவு எடுப்பதற்காகத் தான் இத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு சில இடங்களில் மட்டும் நடவடிக்கை எடுத்துக் கொள்வதால் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. அதனுல் தான் பெரிய திட்டமாகப் போடப்பட்டிருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : அமைச்சர் அவர்கள் [illegible] கோடி ரூபாய் செலவில் பெரிய திட்டம் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எங்களுடைய பக்கத்தில் அமைச்சர் [illegible]

களாலேயே 89 ஆயிரம் ரூபாய்க்கு சாங்ஷன் செய்யப்பட்ட வேலை கள் இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றன. பெரிய திட்டம் வரும் வரையிலும் ஆங்காங்கு இருக்கின்ற வடிகால் திட்ட வேலைகளை நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பெரிய திட்டம் என்று சொல்லும் போது இதற்கான பூர்வாங்க வேலைகள் எல்லாம் ஆரம்பமாகி விட்டன. இதற்கிடையில் ஆங்காங்கு இருக்கின்ற சிறு வேலைகளை எடுத்துக் கொள்ளும்போது, அதனால் சாதகம் ஏற்படும் என்று அதிகாரிகள் நினைக்கும் பட்சத்தில் தொடர்ந்து அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கும். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லு கின்ற விவரத்தை என்னிடம் தெரிவித்தால் அதைப்பற்றி என்ன நிலைமை என்பதைப் பார்த்து, அந்த வேலையை எடுத்துக் கொள்ளலாமா முடியாதா என்பதைப்பற்றி பரிசீலனை செய்யச் சொல்லலாம். சில இடங்களில் வேலைகளை எடுத்துக் கொள்வது சாதகமாய் இராது என்று அதிகாரி கருதுவதாக இருந்தால் வேலை நிறுத்தப்பட்டிருக்கும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், தஞ்சை ஜில்லாவில் நடத்தப் படயிருக்கின்ற வடிகால் திட்டங்களைப்பற்றி பிரதம என்ஜினியர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தத் திட்டத்தினுடைய விவரங்கள் என்ன? எப்போது இது செயல்படுத்தப்படும் என்கின்ற விவரங்களைத் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : வடிகால் திட்டம் என்று முன்பு சொன்னால், ஏதோ கடலோரப் பகுதியில் இருக்கக்கூடிய தண்ணீரை, தேங்கக்கூடிய தண்ணீரை வாய்க்கால்கள் மூலமாக கடலில் கொண்டு போய்விட்டுவிட்டால் கஷ்டம் ஒன்றும் இராது என்ற அபிப்பிராயம் இருந்து வந்தது. ஆனால் இப்போது, அது மட்டும் போதாது என்ற நிலை வந்திருக்கிறது. அதாவது, மணல் பாங்கான இடங்களில் வடிகால் வெட்டித் தீர்த்த பின்னால் ஏதாவது மழை வந்துவிட்டால், முகத்துவாரத்தில் மண் வந்து திரும்பியும் மூடிவிடுகிறது. இதன் காரணமாகப் பெரிய அளவில் விரிவான திட்டம் தேவையாக இருக்கிறது. உபரியாக இருக்கக் கூடிய தண்ணீரைக் கடலில் விட்டுவிடுவது லாபகரம் அல்ல. அப்படி கடலில் விரயமாகிவிடக் கூடாது, அதை வேறு வழியில் உபயோகப்படுத்த வேண்டும் என்ற அளவில் வேறு என்ன வழிவகை செய்யலாம் என்பதைப்பற்றி கவனிக்க வேண்டும். தஞ்சையில் மேட்டு நிலங்களில் இந்தத் தண்ணீரைப் பயன் படுத்துகின்ற முறையில், பம்பிங் ஸ்கீம் ஏற்படுத்த வேண்டும். இவ்விதம் பம்பிங் ஸ்கீம் முறையில் சில இடங்களில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. மேட்டு நிலங்களில் இதைப் பயன்படுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அது மட்டுமல்ல; மழைக் காலத்தில் மழைத் தண்ணீரும் காவேரியிலுள்ள தண்ணீரும் வந்து பல சேதங்களை ஏற்படுத்து கின்றன, இதை முன் கூட்டியே வேறு வழியில் திருப்பிவிட

டியுமா என்பதைப்பற்றியும் ஆலோசனை செய்ய வேண்டும். ந்த அடிப்படையிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ன்றென்று, அமெரிக்காவிலிருந்து வந்த நிபுணர்கள் ... எல்லாவற்றையும் விளக்க

கனம் சபாநாயகர் : இவை
வேண்டுமா என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : விவரங்களைக் கேட்டார்கள், ஒரு பாயின்டையும் நான் சொல்லுகிறேன். இந்த அமெரிக்காவிலிருந்து வந்த னால் முடித்துவிடுகிறேன். டெல்டா ஏரியாக்களைப்பற்றி பரிசீலனை புணர்கள், தஞ்சை செய்தார்கள். அதாவது சில இடங்களில் பூமியில் உயர்ந்த மட்டத் லேயே தண்ணீர் கிடைக்கிறது, கோடை காலத்தில் கிணறுகளில் தண்ணீர் மட்டத்தைக் குறைக்க வேண்டும். அப்படியிருந்தால், அதிகமாக வருகின்ற தண்ணீரை பூமி எக்ஸாஸ்ட் செய்து கொள்ளும் என்றும் கருத்து தெரிவித்தார்கள். அதன் அடிப்படை யிலும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. ஒரேயடியாகச் சீக்கிரத் தில் சுலபமாகச் செய்துவிட முடியாது. நல்ல முறையில் பரிசீலனை செய்து தான் இந்த வேலைகளை எடுத்துக் கொள்ள முடியும். எப்படியும் இதற்கான பூர்வாங்கமான வேலைகளை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டம் விரைவாகப் பரிசீலனை செய்யப்பட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது வேலைகளை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த வேலையைப் பொறுத்தளவில் முன்னோடித் திட்டமாக இரண்டொரு இடங்களில் வேலைகள் நடந்து வருகின்றன. எந்தெந்த வேலைகளை எவ்வப்போது சேர்த்துக் கொள்ளலமோ அப்போது சேர்த்து வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

கீழ் பவானி ஆயக்கட்டுப் பகுதி

*424 கேள்வி.—திரு. ஏ. எஸ். தணிஞமூர்த்தி கவுண்டர் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கீழ் பவானி ஆயக்கட்டு பகுதியில் புதிய கிணறுகள் வெட்டப்படுவதைத் தடுப்பதால் உணவு உற்பத்திப் பாதிக்கப் படுவதை அரசாங்கம் அறியுமா ?

(இ) ஆம் எனில், இந்தத் தடையை நீக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI V. RAMIAH : (a) & (b) In the Lower Bhavani Project, the Main Canal and distributaries have to run continuously for eight months in a year and the ayacut area under alternate ... is irrigated in each turn of four months. Pumping from the wells in the area not irrigated in one turn because of the ... season will affect supplies to irrigation carried on the adjacent area which have that turn as irrigation season. Thus the condition of the Lower Bhavani Project being peculiar the ban on sinking of wells or installation of pumpsets within two furlongs from the

main canal and one furlong from distributaries cannot be removed altogether without full consideration of the whole question. The question of relaxing the ban in respect of distributaries and to what extent such relaxation can be granted is under examination of the Board of Revenue and the Chief Engineer (Irrigation).

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்த கீழ்பவானி ஆயக்கட்டில் மாற்றுமுறைப் பாசனம் என்பது இப்போது இருந்து கொண்டு வருகின்றது. நான்கு மாதம் ஒரு வாய்க்காலில் தண்ணீர் ஓடுகின்றபோது யாரும் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க மாட்டார்கள். தண்ணீர் இல்லாத நேரத்தில் தான் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கின்ற நிலை உண்டு. இதை அனுமதிப்பதில் சர்க்காருக்கு என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைத்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : லோயர் பவானித் திட்டத்தை மற்ற திட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, லோயர் பவானித் திட்டத்தில் சில விசேஷ அம்சங்கள் இருக்கின்றன. சாதாரணமாக மற்ற திட்டங்களில் எல்லாம் சாகுபடி காலம் ஒரே மாதிரியாக இருக்கும். வருடத்தில் நான்கைந்து மாதங்கள் சாகுபடியிருக்கும். ஆனால் இங்கு அப்படியல்ல. இந்தத் திட்டத்தின் கீழ் இருக்கின்ற ஆயக்கட்டுகள் ஒன்றும் பாதிக்கக் கூடாது என்பதற்காகச் சில முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக லோயர் பவானி ஆயக்கட்டுகள் இரண்டாக பிரிக்கப் பட்டிருக்கின்றன. முதலில் ஒரு வாய்க்காலில் நான்கு மாதம் தண்ணீர் விடுவதற்கும், பிறகு அடுத்த நான்கு மாதம் மற்றொரு வாய்க்காலில் தண்ணீர் விடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. இப்படி விடும்போது, வாய்க்கால்களின் பக்கத்தில் கிணறுகளை வெட்டி அதன் மூலமாகத் தண்ணீர் எடுத்துக் கொள்வதாக இருந்தால் வாய்க்காலில் போகின்ற தண்ணீர் சீப் பேஜாகிப் போய்விடும். இதைப்பற்றி அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : அங்கேயிருக்கின்ற ஒரு வாய்க்காலுக்கும் இன்னொரு வாய்க்காலுக்கும் ஒரு மைல் ஒன்றரை மைல் தூரம் இருக்கின்றது. இதிலிருந்து தண்ணீர் ஊற்று கிணறுகளுக்குப் போய்விடும் என்று சொல்வதை நம்பக் கூட முடியவில்லை. ஆகவே, இதில் தக்கபடி விசாரித்து, அங்குள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : வாய்க்காலில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தால் இந்தக் கஷ்டம் ஒன்றும் வராது. ஒரு வாய்க் காலில் போகின்ற தண்ணீர் அதற்கென்று ஒதுக்கப்பட்டிருக் கின்ற ஆயக்கட்டுகளுக்குப் போய்ச் சேரவேண்டும். கடைசியில் பாசனத்திற்குப் போய் சேருகின்ற இடத்தைப் பார்த்தால் இரண்டுக்கும் இடையில் ஒரு அடி, இரண்டு அடி கூட வித்தியாசம் இருக்கிறது. இதில் நிச்சயமாக சீப்பேஜாக தண்ணீர் போய் விடும்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : நான் கேட்டுக்
கொள்வது, அங்கங்கே இருக்கிற நீர்த்தாரைகளைக் கொண்டு போய்
கிணறுகளில் விட்டு அதிலிருந்து தேவைப்படுகிற நேரத்தில்
தண்ணீர் இறைத்துக் கொள்வதில் அரசாங்கத்திற்கு என்ன
கஷ்டம் ஏற்படுகின்றது ?

கனம் திரு. வெ. ராமையா : சர்க்காருக்கு இருக்கக்கூடிய
சங்கடம் என்னவென்றால், இவ்விதம் ஏற்படுகின்ற நீர்த்தாரை
லோயர் பவானி தண்ணீராக இருந்தால், அதைக் கிணற்றில் விட்டு
தண்ணீர் இறைத்துக்கொள்ளும்போது, இதனால் சாகுபடி செய்ய
வேண்டியவருக்குத் தண்ணீர் இல்லாமல் போய்விடும் என்பது
தான். லோயர் பவானியிலிருந்து வரக்கூடிய ஸீப்பேஜ் தண்ணீர்
இல்லை என்று சொல்வதாக இருந்தால், அதற்கு எந்தவிதமான
தடையும் விதிக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : நான் சொல்லுவ
தெல்லாம் உரம்புத் தண்ணீர் வீணாகக் கழிகிற தண்ணீர். அதைக்
கொண்டு போய்க் கிணற்றிலே விட்டு இறைத்துக் கொள்ளுவதில்
அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் வருகின்றது என்று அறிய
விரும்புகின்றேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினருடைய
முடிவுப்படி அவருடைய எல்லையில் போகும் தண்ணீர் அவருக்கு
விரயமாவதாக இருக்கலாம். ஆனால் அந்தத் தண்ணீரை அங்கத்
தினர் போன்றவர்கள் பயன்படுத்தினால் கீழே உள்ளவர்களுக்குப்
பயன்படாமல் போகலாம். உபயோகப் படுத்தக் கூடிய இடத்தில்
பர்மிட் வாங்கிப் பயன்படுத்துவதில் கஷ்டம் இருக்காது. எங்கு
தண்ணீருக்குப் பயன் இல்லையோ அங்கெல்லாம் தாராளமாக
அதிகாரிகள் பர்மிட் கொடுத்து வருகிறார்கள். அதில் ஏதேனும்
கஷ்டம் இருந்தால் அதைத் தீர்த்துக் கொடுக்க முயற்சி எடுக்க
லாம்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, வறண்ட காலத்திலே
ஆயக்கட்டுகளிலிருக்கிற தண்ணீர் பாய்கிற நிலங்களிலிருந்து
பக்கத்து நிலத்திற்குத் தண்ணீர் கசிந்துவிடும். ஆதலினாலே
அனுமதிக்க முடியவில்லை என்பது அமைச்சர் அவர்களுடைய
விளக்கம். அப்படியானால் நல்ல மழை பெய்து வறண்ட பிராந்திய
மாகக் கருதப்படுகிற இடத்தில் தண்ணீர் இருக்கிற போது ஆயக்
கட்டுத் தண்ணீர் மேலும் வந்து விடாமலாவது தடை செய்ய
அரசாங்கம் தயாராக இருக்கிறதா ? ஆயக்கட்டுத் தண்ணீர்,
மேலும் வந்து அந்த இடத்தில் அதிகத் தண்ணீர் இருக்கக் கூடிய
முறையில் இல்லாமல் தடை செய்யக் கூடிய நிலை அரசாங்கத்திற்கு
இருக்குமானால், இந்தக் கசிவையும் போகக் கூடாது என்று
சொல்லுவதற்கு இடம் இருக்கிறது . . .

MR. SPEAKER : This is a hypothetical question.

திரு. சா. கணேசன் : ஆகவே, இந்த மாதிரி தடை செய்யத்
தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[25th March 1966

கனம் திரு. வெ. ராமையா: கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வி, 'வந்தால்', 'போனால்', 'பார்த்தால்' என்று இருக்கிறது. அந்த மாதிரி ஹைப்பாத்-தெட்டிகல் க்வெஸ்டினுக்கு நான் பதில் சொல்ல வேண்டியதில்லை. இருந்தாலும், இந்த லோயர் பவானி ப்ராஜெக்டைப் பொறுத்த வரையில் ஒரு மதகில் போகும் தண்ணீர் அந்த ஆயக்கட்டு மற்றொரு ஆயக்கட்டோடு தொடர்பாக இருக்கும்போது, பூமி தண்ணீரை உறிஞ்சும் பட்சத்தில், இவர்களுக்குப் போகும் தண்ணீர் குறைந்து இவர்களுக்குப் பாதகம் ஏற்படும் என்ற கருத்து சொல்லப்படுகிறது. ஆனால் இது தொடர்ந்து பரிசீலிக்கப் படும் என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

Revenue Board

*425 Q.—SRI T. P. ALAGAMUTHU: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to abolish or to re-organise the Revenue Board; and

(b) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI V. RAMAIAH: (a) No.

(b) Does not arise.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, பக்கத்து மாநிலம் ஆகிய ஆந்திர மாநிலத்தில் இந்த ரெவின்யூ போர்டை நீக்கி விடுவது சம்பந்தமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்களே. அது போல நம் அரசாங்கமும் செய்ய முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா: மற்றொரு மாநிலத்தில் செய்வதையெல்லாம் நம் மாநிலத்தில் செய்வது என்பது இல்லை. நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் நாம் எடுத்திருக்கிற முடிவை கனம் அங்கத்தினருக்குச் சொன்னேன்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் இடையே போர்டு இருக்கிற காரணத்தினால் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? அது பற்றிப் பரிசீலித்து என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள்?

கனம் திரு. வெ. ராமையா: பொதுவாகக் காலதாமதம் ஏற்படுகிறது என்று குற்றச்சாட்டு; போர்டு ஆஃப் ரெவின்யூவால் தான் காலதாமதம் என்று அல்ல. இந்த போர்டு ஆஃப் ரெவின்யூ அரசாங்கத்தின் கொள்கைகளில் அரசாங்கம் எடுக்கக் கூடிய முடிவுகளைத் துரிதமாகச் செயல் படுத்த வேண்டிய முயற்சியில் ஈடுபட்டு பெரிதும் உதவியாக இருக்கிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, தற்போது போர்டு ஆஃப் ரெவின்யூவிடம் உள்ள அதிகாரங்களைப் படிப்படியாக எடுத்துக் கொண்டு வருவது உண்மையா?

கனம் திரு. வெ. ராமையா: அப்படி ஒன்றும் இல்லை.

25th March 1966]

நிலவரி வஜா

*426 கேள்வி.—திரு. ஆர். துரையரசன்: கனம் உதவி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டில் பருவ மழை தவறிய காரணத்தால் அறந்தாங்கி, பட்டுக்கோட்டை வட்டங்களில் நிலவரி வஜா செய்யும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) Seasonal remission of about Rs. 75,540 in Aranthangi taluk and Rs. 3,739 in Pattukottai taluk was granted.

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வரி வஜா கொடுக்கப்பட்டது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் அறிவித்தார்கள். ஆனால் கடந்த ஆண்டு பஞ்சம், புயல்; இந்த ஆண்டு காலத்தில் பருவ மழை இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். சமீப காலமாகப் பட்டுக்கோட்டை, அறந் தாங்கி வட்டாரத்தில் ஏழை உழவர்கள் வீட்டு உழவு மாடுகள் பிடிக்கப்படுவதாகவும், உணவு தானியங்கள் திடீர் திடீர் என்று ஜப்தி செய்யப்படுவதாகவும் புகார்கள் வந்திருக்கின்றன. இந்த நேரத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும், நிறைய கஷ்டப்படுவதாக வும் புகார்கள் வந்திருக்கின்றன. இதைப்பற்றி இரண்டு தினங் களுக்கு முன் கூட அமைச்சர் அவர்களிடம் விளக்கம் தந்தேன். ஆகையால் இன்னும் கொஞ்சம் காலம் தள்ளி வசூலிக்க உத்தர விடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினருடைய கோரிக்கை, கொஞ்சம் காலம் கடந்து வசூலிக்க வேண்டும் என்பது. இதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. சா. கணேசன்: இது மாதிரி விளைவற்று அல்லது சாவியாகப் போன காரணத்திற்காகப் பிற மாவட்டங்களுக்கும், இராமநாதபுரம் முதலிய பகுதிகளுக்கும், வஜா செய்த புள்ளி விவரம் அமைச்சரிடம் இருக்கிறதா? இருந்தால் தெரிவிப் பார்களா?

கனம் திரு. வெ. ராமையா: இது அறந்தாங்கி, பட்டுக் கோட்டை தாலுகா பற்றிய கேள்வி. அந்த விவரம் தான் என்னிடம் இருக்கிறது. ஆனால் பொதுவாக எங்கெங்கு பருவ மழை தவறிய காரணத்தினால் பாதகம் ஏற்படுகிறதோ அங்கெல் லாம் அரசாங்கத்தின் உத்தரவு பெற்றுத்தான் வரி வஜா செய்யவோ, அல்லது கடனைத் தள்ளிப் போடவோ வேண்டும் என்பது கிடையாது. ஒவ்வொரு மாவட்ட அதிகாரிகளும், இந்த மாதிரி பாதகம் வரும் பட்சத்தில் முடிவுகளை அவர்களே எடுக்க முடியும். இதற்கான உத்தரவுகள் நிரந்தரமாக இருக்கின்றன. இராமநாதபுரம் ஜில்லா அதிகாரிகள் இதில் கவனம் செலுத்துவார் கள். அதிலும் கிழக்கு இராமநாதபுரம் அதிகாரிகள் விசேஷ கவனம் செலுத்துவார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இந்த ஆண்டு மழை தவறியதால் ஆற்றில் குறைவாகத் தண்ணீர் வந்து பயிர்களுக்குச் சரியாகத் தண்ணீர் பாயவில்லை. தாளடிப் பயிர் நட்டும் தண்ணீர் இல்லாமல் காய்ந்து விட்டது. அதற்கு வரி வஜா செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு போடுவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : ஆற்றில் எவ்வளவு தண்ணீர் வருகிறது என்பதை வைத்து முடிவு செய்ய முடியாது. பயிர் காய்ந்து போயிருக்கிறதா, விளைச்சல் இருக்கிறதா இல்லையா, என்று பார்த்துத்தான் வரி வஜா செய்யவோ அல்லது கடன்களை ஒத்திப் போடவோ முடிவு எடுக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களில் குறைந்த தண்ணீரை வைத்துக்கொண்டே நல்ல பயிர் செய்ய முடியும். ஆகையால் ஆற்றில் தண்ணீர் வந்ததை வைத்துக் கொண்டு முடிவு செய்ய முடியாது. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் தாளடிப் பயிரோ அல்லது மற்ற பயிரோ மழை இன்மை காரணமாகத் தீய்ந்து போயிருக்கும் பட்சத்தில் வேண்டிய வரி வஜா செய்வார்கள். அதோடு மாத்திரமல்லாமல், இன்னும் தாளடிப் பயிரைப் பொறுத்த வரையில் பரிசீலனை செய்ய வேண்டுமென்று ரெவின்யூ போர்டு அங்கத்தினரும் அங்கு போய்ப் பார்த்து அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார். அதெல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலூகாக்களில் வரி வஜா செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு வரி வஜா செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : இது 1964-ம் வருஷத்திய கணக்கு. ஏக்கர் கணக்கு என்னிடத்தில் இல்லை. வரி வஜா செய்த தொகை அளவு மட்டும் தான் இருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, அரசாங்கம் வரி வஜா செய்வது பற்றி ஆராய்ச்சி செய்ய அதிகாரிகளை அனுப்பி இருப்பது பாராட்டத் தக்கது. ஆனால் பிப்ரவரி, மார்ச் கிஸ்தி செலுத்தப்பட்டிருக்கிறது. ஏப்ரல் மாதத்திலாவது கிஸ்தி செலுத்தும்போது விவசாயிகளுக்குக் கஷ்டம் இல்லாமல், ஏப்ரல் கிஸ்தியில் இந்த வரி வஜா பற்றி யோசிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : வரி வஜா என்ற பிரச்னையே எப்போதும் ஜமாபந்தி நேரத்தில்தான் வரக் கூடியது. ஆனால் தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய பல விவசாயிகள் பாதிக்கப்பட்டு விட்டோம் என்று சொன்ன காரணத்தினால் ஜமாபந்தி வரையில் காத்திராமல் முன்கூட்டி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதை யெல்லாம் பரிசீலித்து முடிவு எடுக்கும்போது எந்த வகையில் விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்க முடியுமோ அதையெல்லாம் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கப்படும்.

கிளைச் சிறை, வேலூர்

*427 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வேலூரில் உள்ள கிளைச் சிறைச்சாலையைத் தொரப்பாடியில் உள்ள மத்திய சிறைச்சாலைக்கு ஒரே இடமாக மாற்ற உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரே வார்த்தையில் 'இல்லை' என்று சொல்லி விட்டார்கள். இல்லை என்று சொல்லுவதற்குக் காரணங்கள் என்ன என்று அறியலாமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போது இருக்கிற இடமே போதிய வசதி உள்ள இடமாக இருப்பதால் அங்கேயே இருக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

Stipends for teachers' training

*428 Q.—Sri N. RAJANGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that stipends given to the students of the Higher Elementary Grade in teachers' training schools have been stopped;

(b) if so, whether any representation has been made to the Government; and

(c) if so, the action taken thereon?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாவிற்கு இடமில்லை.

இடைநிலை ஆசிரியர்கள்

*429 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இடைநிலை ஆசிரியர்களாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பணி புரிபவர்கள் மாநிலத்தில் உள்ள பள்ளிகளுடன் இடமாற்றம் செய்யப்படுகிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம்.

திரு. சா. ராமசாமி : மாநிலத்திலுள்ள பள்ளிகளுடன் இடமாற்றம் செய்யப்படும்பொழுது மாவட்டத்திற்கு மாவட்டம் பொருள்களின் விலைவாசி பலவிதமாக இருக்கிறது. ஆனால், கொடுக்கப்படும் சம்பளம் ஒரே மாதிரியாக இருக்கிறது. ஆகவே இந்த மா[illegible] அமைத்து அதிகப்படியான சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்[illegible] படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாற்றுவதனுல் சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பது என்பதில்லை. டிவிஷனல் இன்ஸ்பெக்டர் எல்லைக்குள் அல்லது இன்ஸ்பெக்டர்ஸ் எல்லைக்குள் தான் மாற்றப் படுகிறார்கள்.

* 430 கேள்வி.—**திரு. சா. ராமசாமி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் B. T. ஆசிரியர்கள் இல்லாத இடங்களுக்கு இடைநிலை பயிற்சிப் பெற்றவர்கள் நியமிக்கப் படுகிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனியார் பயிற்சிப் பள்ளிகளில் மாத்திரம் இடைநிலை ஆசிரியர்கள் ஸ்தானங்களில் நியமிக் கப்படுகிறார்கள்.

திரு. சா. ராமசாமி: அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் கூட பி.டி. ஆசிரியர்கள் இல்லாத இடங்களில் இடைநிலை ஆசிரியர் கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் இடைநிலை ஆசிரியர்களுடைய சம்பளம்தான். இவர்கள் நகர்ப்புறங்களில் பெரும்பாலும் இருக்கிறார்கள். இவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. இதை அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர் களாக இருந்தால், அவர்கள் டெபுடி இன்ஸ்பெக்டர், ஸ்கூல் அஸிஸ் டெண்ட் இரண்டும் சேர்ந்த கம்பைண்டு கேடரில் தான் நியமிக்கப் படுகிறார்கள். அவ்வாறு இல்லையென்றால், சில சலுகைகள், சில அலவன்ஸுக்கு அவர்கள் உரிமை உள்ளவர்கள் ஆக இல்லை. இதனுல் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

திரு. ம. கமலநாதன்: ஆசிரியர் பயிற்சி, ஆதார பயிற்சி நடை முறைக்கு ஏற்றதாக இல்லை என்றால் அதைக் கைவிடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு உத்தேசம் இல்லை. நடைமுறைக்கு ஏற்ற வகையிலே பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. சா. ராமசாமி: பெரும்பாலும் இது போன்ற பயிற்சிப் பள்ளிகளில், அரசினர் பயிற்சி பள்ளிகளில் பி.டி. படித்து பட்டம் பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பற்றாக்குறைதான் காரணம். ஆனால் பயிற்சி பெற்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தனியார் துறையில் நடத்தி வரும் பள்ளிகளில் செகண்டரி கிரேடு டீச்சர்ஸ் நியமிக்கப்படு கிறார்கள். சர்க்கார் துறையில் நடத்தி வரும் பள்ளிகளில் பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். பி.டி. பயிற்சி

பெற்ற ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கிற பாடத்திற்கும், செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கின்ற பாடத்திற்கும் வித்தியாசம் இருக்காதா? அப்படிச் சொல்லிக் கொடுப்பதனுல் கல்வியின் தரம் குறையுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பி.டி. ஆசிரியர்கள் கிடைத்தால் நல்லதுதான். பி.டி. ஆசிரியர்கள் கிடைக்காத நிலையிலே செகண் டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

விக்ரகம் திருட்டு

* 431 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் கலைக்கூடத்தில் உள்ள தெய்வயானை அம்மன் சிலை அண்மையில் திருட்டுப்போனது உண்மையா?

(இ) ஆமென்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம்.

(இ) கலைக்கூடக்காப்பாளர் அம்மன் சிலைக் களவு போனதைக் குறித்து போலீசில் புகார் செய்தார். இந்தச் சிலை ஈரோட்டில் கேட்பாரற்றுச் சொத்தாகக் கிடந்ததை போலீசார் கண்டுபிடித் தெடுத்து 16—12—1965-ல் அதை தஞ்சாவூர் சப்-மாஜிஸ்திரேட்டு நீதி மன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். குற்றவாளி யார் என்று கண்டு பிடிக்கப்படவில்லை.

திரு. சா. கணேசன்: இந்தத் தெய்வயானை சிலை கண்டு பிடிக்கப்பட்டு மீண்டும் அந்த இடத்தில் கொண்டு வந்து வைக்கப் பட்டு விட்டது என்று அறிய மகிழ்ச்சி. அதே காலத்தில் குற்ற வாளி கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது. இவ்வாறு குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாத நிலையை மனத்திலே கொண்டு, பிற வேறு ஆலயங்கள் அல்லது கலைக்கூடங்களில் இத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க, தக்க பந்தோபஸ்து கொடுக்க, நல்ல அறைகள் அல்லது காப்பு, இரும்புக் கதவுகள் போன்றவைகளைப் போட்டு, அதைக் காக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திருடு நேராமல் இருப்பதற்கு வேண்டிய அளவுக்குப் பந்தோபஸ்து செய்யப்பட்டுத்தான் வரு கிறது. ஆனுல், கனம் உறுப்பினர் அவர்கள் தஞ்சை கலைக் கூடத்தைப் பார்த்திருக்கலாம். அம்மாதிரி கலைக்கூடங்களில் எல்லாவற்றையும் கதவைப் போட்டு பூட்டி பந்தோபஸ்தாக வைக்க முடியாது. அது தான் இருக்கிற கஷ்டம். இதைத் திருடி யவர் கேட்பாரற்ற நிலையில் இதை ஈரோட்டில் கொண்டு போய் போட்டுவிட்டார். அந்த நிலையில் யார் திருடியவர் என்று கண்டு பிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஈரோட்டிற்குப் போனவுடன் தான் அங்கு அதைப் பார்த்துவிட்டு, அது அவசியம் இல்லை என்று போட்டுவிட்டார். ஈரோடுக்குப் போனவுடன் அங்கேயே

அதனுடைய அருமை தெரியவில்லை. அதற்கு முன்னால் அதனுடைய அருமையை உணர்ந்து கொண்டு எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்.

திரு. கோ. நாராயணசாமி நாயுடு : வேறு இடங்களில் இம்மாதிரி சிலைகள் சமீப காலத்தில் திருட்டுப் போனதுபற்றி சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். சில இடங்களில் களவு போயிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. களவு நடக்காதவாறு வேண்டிய பந்தோபஸ்து செய்யப்பட்டு வருகிறது.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : பல இடங்களில் இது மாதிரி சிலைகள் களவு போகிறது. ஆனால் கேஸ் போட்டால் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். கோவில்களில் விக்ரகங்களைத் திருடுபவர்களுக்கு தூக்குத் தண்டனை போன்ற தண்டனை கொடுப்பதாக இருந்தால் இம்மாதிரி குற்றம் குறையும். ஆகவே, அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் அவர்களுக்கு உள்ள ஆஸ்திக உணர்ச்சியையும், கலை உணர்ச்சியையும் பாராட்டுகிறேன். இதற்கெல்லாம் தூக்குத் தண்டனை கொடுப்பது என்பது முடியாது. திருடுகிறவர்கள் திருடிவிட்டால் அதற்கு ருசு வேண்டும். கோர்ட்டில் நிரூபிக்கப்பட வேண்டும். எப்பொழுதும் வேண்டிய ருசு கிடைப்பதில்லை. இருந்தாலும், போலீசைப் பொறுத்த மட்டில் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. எம். எஸ். மணி : பொதுவாக பெரிய திருட்டுகளைக் கண்டுபிடிக்க போலீஸ் நாயை பயன்படுத்துகிறார்கள். இதற்கும் அதைப் பயன்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எங்கெங்கே எதைப் பயன்படுத்த வேண்டும் என்பது போலீசாருக்குத் தெரியும்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : நல்ல நுணுக்கமான சிற்பக்கலை நிறைந்த சிலை ஒன்றை ஈரோடுக்குக் கொண்டு வந்து கேட்பாரற்றுக் கிடந்தது என்பதைக் கேள்விப்பட்ட உடனே, ஈரோட்டில் அதை விட சிறப்ப நுணுக்கம் அதிகமாக இருந்ததினால் அங்கே அதை கேட்பாரற்று விட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அப்படி நினைக்கவில்லை. ஈரோடு வந்ததும் அதனுடைய அருமை புலப்படவில்லை என்று தான் நினைக்கிறேன்.

திரு. சா. கணேசன் : ஈரோடு வந்தவுடனே அந்த விக்ரகத்தை அங்கே விட்டுவிட நினைத்ததற்குக் காரணம், ஆஸ்திக மனோபாவம் இருந்த அந்தத் திருடனுக்கு ஈரோடு வந்த பிறகு நாஸ்திக உணர்ச்சி மேலிட்டு, அந்த விக்ரகத்தை அங்கே கைவிட்டு விட்டானோ என்னவோ ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஈரோடுக்கு அந்த சக்தி, அதாவது ஆஸ்திகத்தை நாஸ்திகமாக மாற்றுகிற சக்தி இருப்பதாக நான் நினைக்கவில்லை. என்னைப் பொறுத்தவரை அதற்கு ஆஸ்திக சக்தி நிறைய இருக்கிறது என்று கருதுகிறேன். அதற்கு சிறந்த சின்னமாக விளங்கக்கூடியவர் நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள்.

திரு. மு. கருணாநிதி : சிலையைத் திருடியவனுக்கு ஈரோடு வந்தவுடன் சிலையைத் திருடியது குற்றம் என்ற பண்பு வந்து, அந்தப் பண்பின் காரணமாக அதை அங்கு விட்டுவிட்டானா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு வைத்துக் கொண்டு ஈரோட்டு உறுப்பினர் கனம் தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பெருமைப்படலாம்.

கனம் சபாநாயகர் : எல்லோரும் பேசி, திருடனைப் பிடிப்பதற்கு வழி இல்லை. (சிரிப்பு).

கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO STOPPAGE OF SUPPLY OF COW'S MILK FROM MADHAVARAM MILK PROJECT.

திரு. இராம அரங்கண்ணல் : கனம் தலைவர் அவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து சென்னை நகர மக்களுக்குப் பசும் பால் வழங்குவதை நிறுத்த அரசாங்கம் எடுத்த முடிவும், இவ்வாறு எதிர்பாராத வகையில் ஏற்பட்ட இடர்ப்பாட்டைப் போக்கிச் சீராக்க மாற்று ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டிய அவசியமும் குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை நான் கனம் உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, the Madras Dairy and Milk Project, Madhavaram, has on its rolls 20,766 customers in the Madras City whose registered daily requirements exceed 15,000 litres of buffaloes milk and 6,000 litres of cow's milk making a total of about 21,000 litres. The requirements of bulk consumers are about 2,000 litres a day. From the beginning of November 1965 there was a conspicuous increase in the availability of milk and during the period from November 1965 to January 1966 the average receipts of milk from various sources were about 23,000 litres per diem. The level of supply dwnidled all of a sudden to 20,000 litres per diem from February 1966.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : ஸ்டேட்மெண்டு தமிழிலேயே இருந்தால் நன்றாக இருக்கும். எல்லோருக்கும் புரியும்.

[25th March 1966

கனம் சபாநாயகர் : தமிழிலே இருந்தால் தமிழில் படிப்பார்.

கனம் திரு. வெ. ராமைய்யா : ஸ்டேட்மெண்டு ஆங்கிலத்தில் இருக்கிறது.

Another significant feature was that the receipts of cow's milk which were in the region of about 5,000 litres daily till the end of December 1965, registered a sharp decline from 1966 onwards.

9-30 a.m. The average receipts of cow's milk during January 1966 and February 1966 were only 4,200 litres and 3,100 litres respectively. This necessitated the imposition of a proportionate cut in the supplies of cow's milk during these two months. The present position is that the receipts of milk, especially, cow's milk continue to maintain a downward trend and no substantial improvement can be expected. The shortfall in supplies is attributed to widespread drought conditions in the milk shed areas of the project especially, in Erode-Coimbatore area. As the situation is likely to deteriorate further with the approach of summer, the Milk Commissioner considered that the only way to tide over the situation would be to effect the total replacement of the supply of cow's milk in the City by toned milk and by restricting the supply of buffaloes milk till the situation improves. He issued orders to this effect and approached the Government for ratification of his action. The Government, however, have carefully examined the situation and are of the view that the situation is not so bad as to warrant total stoppage of issue of cow's milk to consumers and that it should be possible to continue to supply the minimum requirements of cow's milk in the City and also maintain the present level of supply of buffaloes milk. With a view to maintain the *status quo* the Government propose to take up the following special steps :—

(1) the areas around Dindigul, Tiruchirappalli and Thanjavur will be tapped to get as much milk as possible and these quantities will be passed on to Tiruchirappalli for being processed at the pasteurisation plant there and forward to Madras.

(2) The Government of Mysore and Andhra Pradesh will be approached for sparing some quantities of milk from Bangalore and Vijayawada dairies respectively as a temporary measure to enable the Project to tide over the crisis in the summer.

(3) The possibilities of supplying a portion of the requirements of the hospitals in the City in the shape of toned milk and diverting the corresponding supply of cow's milk to the Madhavaram Projet are being considered; it is also proposed to go in a big way purchasing milk from individuals in and around Madras City.

(4) The issue of loans for purchase of milch animals will be liberalised and additional loans will be given to new areas wherever necesssary.

The Milk Commissioner has also been requested not to give effect to his orders replacing the supply of cow's milk by toned milk and to maintain the *status quo* in regard to the quantum and pattern of supply of milk.

25th March 1966] [Sri V. Ramaiah]

Latest reports indicate that the Madhavaram Project is now getting about 2,000 litres of milk daily from Dindigul-Madurai area. Efforts are being made to obtain milk from other sources also.

SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. Minister say it in Tamil?

MR. SPEAKER : Does the hon. Member Sri M. D. Thiagaraja Pillai want the whole translation of the statement in Tamil?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர் கேட்டதே இங்கிலீஷிலே தானே ?

MR. SPEAKER : I do not think it is necessary to take the time of the House. Hereafter when the statements are made, let them be in Tamil.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : However, when the statement has been drafted in English, I would submit that the Hon. Minister concerned, while making the statement, may be permitted to make a brief translation in Tamil so that hon. Members who could not follow the English version may follow the translation in Tamil. Of course we will make every endeavour to make the statements in Tamil. But sometimes there is delay. Sometimes it is not possible. In that case, the concerned Hon. Minister may give a brief summary in Tamil.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, பால் சப்ளை பொருத்த வரையில், நவம்பர் மாதம் வரை பசும்பால், எருமைப் பால், கன்ஸ்யூமர்களுக்குக் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால், நவம்பருக்குப் பிறகு பால் உற்பத்தியில் கணிசமாகக் குறைவு ஏற்பட்டது. அதனால், கமிஷனர், பசும் பால் வினியோகத்தைக் குறைந்த அளவாகச் செய்ய வேண்டும், அதற்காக 'டோண்ட்' மில்க்கைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள். அந்த முறையில் உத்தரவு போட்டார்கள். ஆனால் அந்த உத்தரவு அமலுக்கு வருவதற்கு முன்பாக சர்க்காருடைய 'ராடிபிகேஷனுக்கு', அதாவது அங்கீகாரத்திற்கு வந்தது. அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்தது. அது ஒரு பெரிய மாறுதலாக இருக்கும், அப்படித் திடீரென்று செய்துவிடக் கூடாது என்றும், இப்பொழுது சென்னை, மற்ற சுற்றுப் புறங்களில் கிடைக்கும் பால் போதவில்லை என்றால், வேறு இடங்களிலிருந்து வரவழைக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் ஆலோசனை செய்தது. முன்பு கோயம்புத்தூர், ஈரோடு, இன்னும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வாங்கியதோடு மட்டுமல்லாமல், மதுரை, தஞ்சாவூர், திருச்சி போன்ற இடங்களிலிருந்தும் வாங்கத் தொடங்கினார்கள். அதோடு மட்டுமல்லாமல், பங்களூர், விஜயவாடா முதலிய இடங்களிலிருந்தும், சென்னைக்குப் பால் கிடைக்க வழி இருப்பதால், சென்னை கன்ஸ்யூமர்கள் பொருத்த

வரை பாதகம் இல்லாமல் பசும் பால் கொடுக்கலாம் என்றும், 'டோன்ட்' மில்க் கொடுப்பது என்கிற கருத்தை விட்டுவிடலாம் என்றும் இப்பொழுது செய்யப் பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, இந்த உத்தரவு 15 நாட்களுக்குள்ளாகப் போட்டு முதலில் மக்களுக்கு பீதியை உண்டாக்கினார்கள். பிறகு இப்பொழுது 15 நாட்களுக்குள்ளேயே சமாளித்துவிடலாம், மாற்றத் தேவையில்லை என்று மறு உத்தரவு போட்டிருக்கிறார்கள். இப்படி நகர மக்களுக்கு திடீர் திடீரென்று பீதியை உண்டாக்கும் அறிக்கையை அந்த அதிகாரி கொடுக்கக் கூடாது என்று. . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விதிப்படி கேள்விகள் கிடையாது. கேள்விகள் கேட்டுக் கொண்டே போனால், கொடுத்த ஸ்டேட்மெண்டுக்குமேல் விளக்கம் அளிப்பது சிரமம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The hon. Member may put a separate question afterwards, if he so desires.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், கேள்வி கேட்கக்கூடாது என்பதை அறிவேன். ஆனால் இந்தமாதிரி சமயத்தில் பாராளு மன்றத்திலே கேள்வி அனுமதிக்கப் பட்டு இருப்பதால் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, பாராளுமன்றத்திலே அனுமதிக்கப்பட்டிருப்பது தெரியும் ஆனால், எது அனுமதிக்கப்பட்டது? விளக்கம் கேட்டால், கொடுக்கலாம். ஆனால் குற்றம் சாட்டுவது என்றால், அந்தமாதிரி மேலே மேலே கேள்விகள் வந்துகொண்டே இருக்கும்.

கொடுத்த ஸ்டேட்மெண்ட் புரியவில்லை என்றால், விளக்கம் கொடுக்கலாம். பாராளுமன்றத்திலே அனுமதிக்கப் பட்டது என்றால், அதே மாதிரி இங்கே அனுமதிக்க வேண்டுமா என்பது, கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் முடிவு செய்ய வேண்டும். ஆனால், கேள்விகள் கேட்பது என்பது இந்த ரூலின் கீழ் வராது.

III.—PRIVILEGE MATTER

DISMISSAL OF A TEMPLE SERVANT OF MEENAKSHI SUNDARESWARAR DAVASTHANAM, MADURAI.

MR. SPEAKER: Sri M. Kalyanasundaram, M.L.A., has given notice of a matter of privilege against the Executive Officer of Sri Meenakshi Sundareswarar Devasthanam, Madurai. The facts are as follows:—

One Sri Muthuswami, a full-time employee of Sri Meenakshi Sundareswarar Devasthanam has presented a petition containing some allegations against the administration of the temple to

Sri M. Kalyanasundaram, who in turn presented the petition to the Chief Minister and made his representation also. Subsequently a charge was framed against the said employee and one of the items of the charges is that he approached Sri Kalyanasundaram, who is a political leader, for getting redress of his grievances against the order of the superiors in the Department. Sri Kalyanasundaram has raised the point that the action of the Executive Officer amounts to an unwanted interference with the work and reflects on his action as a Member of this House. Therefore, he states that there is a breach of privilege which has to be referred to the Committee of Privileges.

The Chief Minister contended that the Government servants and also those on a par with them, should conform to rules and regulations in their conduct and service. They should not think of bringing political influence in the affairs of the administration. In the present case, the charge is only against the servant who violated the rules and there is no breach of privilege in the matter.

In a more or less similar case in England in 1951, one Mr. Geoffrey Cooper, raised a point of privilege on the ground that certain employees were dismissed on the charge that they made contact with a Parliament Member and made some allegations against the management. The Speaker of the House of Commons held that privilege cannot extend to a case of that kind; no parliamentary privilege is actually involved when there are no parliamentary duties in any way. In another case in this House, in 1955, the same Member Sri M. Kalyanasundaram gave notice of a matter of privilege against the District Educational Officer, Salem, for framing charges against a teacher on the basis of his contact with the Member. The then Deputy Speaker has held that such facts do not constitute breach of privilege.

In the result, I hold that there is no *prima facie* case to go before the Committee of Privileges.

The Speaker of the House of Commons has observed that the matter may be a very desirable one to be discussed in a debate either in Demands or on a resolution in the Select Committee of the House or in the Committee of Privileges. I also think it necessary that the Members and the Government discuss this matter in order to avoid Members' contact or their correspondence with others being made the basis of a charge like the present one.

IV.—FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1965-66—PRESENTATION.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, 1965-66-ம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகளைச் சபைமுன் சமர்ப்பிக்கின்றேன். இத்துடன் மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்றும் மன்றத்தின் முன் வைக்கப் பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கைகளின் மொத்த மதிப்பு சுமார் 21 கோடியே 33 லட்சம் ரூபாய் ஆகும். இதில் சுமார் 13 கோடியே 65 லட்சம் ரூபாய் ரெவின்யூக் கணக்கில் அடங்கும்.

[திரு. எம். பக்தவத்சலம்] [25th March 1966

பல்வேறு மானியக் கோரிக்கைகளின்கீழ் இப்போது கேட்கப்
படுகிற நிதி ஒதுக்கத்தின் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி, இம் மன்றம்.
ஏற்கெனவே ஏற்றுக்கொண்டுள்ள செலவுக்கு மேலாக புதிய
செலவையோ கூடுதல் செலவையோ குறிக்கவில்லை. 1965-66-ம்
ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் "71. பலவகை" என்ற
பெருங் கணக்குத் தலைப்பின்கீழ் அகவிலைப்படிக்காக மொத்தமாக
5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது உறுப்பினர்களுக்கு நினை
விருக்கும். இதையெடுத்து, அகவிலைப்படிகளில் மேலும் ஏற்
பட்ட உயர்விற்காக முதல் துணை மதிப்பீட்டில் 2 கோடி ரூபாய்
நிதி ஒதுக்கப்பட்டது. இம் மானியங்களின் மூலம் பெற்ற
தொகையை பொருத்தமான பெருந் தலைப்புகளின்கீழ் இப்போது
பகிர்ந்து காண்பிக்கவேண்டியுள்ளது. எனவே, ஏற்கெனவே
பெற்ற மானியத்தில் மிச்சம் ஏற்படாத இடங்களில் இதற்கென
மேற்கொண்டு நிதி ஒதுக்கீடு பெறுவது அவசியமாகிறது. இதற்
கென இறுதித் துணை மதிப்பீடுகளில் பெறும் கூடுதல் தொகைக்கு
ஏற்ப "71. பலவகை" என்னும் தலைப்பின் கீழ் தொகை திருப்பித்
தரப்படுமாதலால், இக்கூடுதல் தொகையினால் உண்மையில் செல
வினம் உயராது.

இதேபோன்று, துணை மதிப்பீடுகளில் திட்டச் செலவில் ஏற்
பட்டுள்ள உயர்வின் பெரும்பகுதிக் கேற்ப, இந்திய அரசிட
மிருந்தோ அல்லது ஏனைய சுயேச்சை நிறுவனங்களிடமிருந்தோ
மேற்கொண்டும் மானியம் அல்லது கடன் உதவி கிடைக்கும்.
எடுத்துக்காட்டாக, கிராமப் பகுதி மனித சக்தித் திட்டத்திற்காக,
சமுதாய வளர்ச்சியின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள கூடுதல் நிதி
ஒதுக்கம் மத்திய அரசிடமிருந்து இதற்கெனக் கிடைக்கும் நிதி
உதவி மூலம் சரிக்கட்டப்படும். "50. பொதுப் பணிகள்" என்ப
தன் கீழ் ஏற்பட்டுள்ள உயர்வின் பெரும் பகுதி, மத்தியச் சாலை
நிதியின்கீழ் மேற்கொள்ளப்படுகிற வேலைகளைக் குறித்ததாகும்.
இது, இந்திய அரசிடமிருந்து இப் பணிகளுக்காக நமக்குக்
கிடைக்க வேண்டிய கூடுதல் உதவியினால் சரிக்கட்டப்படும். இதைப்
போலவே, "பல்வகை ஈடுகளும், ஒதுக்கீடுகளும் Miscellaneous
Compensations and Assignments" என்பதன்கீழ் கேட்கப்படுகிற
கூடுதல் நிதி ஒதுக்கமாகிய 40 லட்சம் ரூபாய், கேளிக்கை வரியி
லிருந்து கிடைக்கிற வருவாயை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு
மாற்றுவதைக் குறிக்கிறது; கேளிக்கை வரியிலிருந்து எதிர்
பார்க்கப்படும் கூடுதல் வருவாயையே இது குறிப்பதால், இம்
மாநில அரசாங்கத்துக்குக் கூடுதல் நிதிப் பொறுப்பு எதுவும்
ஏற்படவில்லை. இவ்வாறாக, ரெவின்யூக் கணக்கில் ஏற்படும்
கூடுதல் செலவின் பெரும் பகுதி, பிற தலைப்புகளின்கீழ் ஏற்ற
தொகை திருப்பிக் கொடுக்கப்படுவதன் மூலமாகவோ அல்லது
வருவாய் கூடுதலாவதன் காரணமாகவோ சரிக் கட்டப்படுகிறது.
இவ்வாறு சரிக்கட்டியது போக மீதமுள்ள அதிகப்படிச் செலவின்
பெரும் பகுதியை ஏற்கனவே சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள
திருத்த மதிப்பீடுகள் எதிரொலிக்கின்றன. பல்வேறு துறைகளில்
தற்போதைய செலவுப் போக்கினை ஒட்டி, திருத்த மதிப்பீடுகளுக்கு

25th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

இன்றியமையாதவையெனக் கருதப்படும் செலவினங்களுக்கு
மேல் இன்றியமையாதவையெனக் [illegible] செய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்
வகை செய்யவும் இந்த [illegible] மதிப்பீடுகளை சபை ஏற்றதன்
டுள்ளோம். சென்ற துணை மதிப்பீடுகளை சபை ஏற்றதன்
பின்னர் மேற்கொள்ளப்பட்ட புதுப் பணித் திட்டங்களுக்கும்
இத் துணை மதிப்பீடுகளின்கீழ் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

ரெவின்யூக் கணக்கில் கேட்கப்படுகிற 13.6 கோடி ரூபாய்
செலவு அதிகரிப்பில், அகவிலைப்படி காரணமாகச் செலவு உயர்ந்
[illegible] தவிர, கல்வி, மருத்துவம், வேளாண்மை, விலங்கின
வளர்ப்பு, கூட்டுறவு, சமுதாய வளர்ச்சி, பின்னிலை வகுப்பினர்
நலன் போன்ற வளர்ச்சித் தலைப்புகளின்கீழ்தான் பெரும்பாலும்
செலவு உயர்ந்துள்ளன. இவ்வயர்வு திட்டச் செலவின் கீழும்
நடைமுதல் செலவின் கீழும் ஏற்பட்டுள்ளது.

மூலதன, கடன் செலவினங்களின்கீழ், ஏற்பட்டுள்ள உயர்வில்
பெரும் பகுதிகூட, இந்திய அரசும், ஏனைய சுயேச்சை நிறுவனங்
களும் வழங்கியுள்ள கூடுதலான உதவித் தொகையின் மூலம் ஈடு
செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் கிராம மின்வசதித் திட்டங்
களைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்காக, விரைவுத் திட்டத்தின்
கீழ் இந்திய அரசு 150 லட்சம் ரூபாய் கொடுத்து உதவியது.
எனவே, கிராம மின்சக்தி வேலைத் திட்டத்தை முனைந்து மேற்
கொள்ள ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ள தமிழ்நாடு மின்
சார போர்டுக்கு மேற்கொண்டும் 122 லட்சம் ரூபாய் அளவிற்கு
கடனுதவி அளிக்க, இத் துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம்
கேட்கப்பட்டுள்ளது. இந்திய அரசு கொடுத்த கடன் உதவியில்
எஞ்சியுள்ள தொகை, தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக்
குழாய் கிணறுகளுக்கு மின் வசதி வழங்குவதை விரிவு படுத்து
வதற்காக, தனிப்பட்ட மின்சார நிறுவனங்களுக்குக் கடன்
கொடுக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு வீட்டு வசதித்
திட்டங்களுக்காக, ஆயுள் ஈட்டுறுதிக் கார்ப்பொரேஷனிடமிருந்தும்
(The Life Insurance Corporation) நடப்பாண்டில் 294 லட்சம்
ரூபாய் கடன் உதவி பெற்றுள்ளோம். ஆனால், 1965-66-ம் ஆண்டுக்
குரிய வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்தபோது, இவ்வகையில்
150 லட்சம் ரூபாய் மட்டுமே கிடைக்குமென மதிப்பிட்டிருந்தோம்.
ஆயுள் ஈட்டுறுதிக் கார்ப்பொரேஷனிடமிருந்து இவ்வாறு கிடைத்த
கூடுதல் தொகையை, பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை நிறை
வேற்றுவதற்காக, தமிழ் நாடு வீட்டு வசதி போர்டுக்கு நாம்
அளிக்கவேண்டியுள்ளது. இதன் காரணமாக, "கடன்கள், முன்
பணங்கள்" (Loans and Advances), என்பதன் கீழ், மேற்
கொண்டும் 81 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கவேண்டியிருக்கிறது.

மூலதனச் செலவினைப் பொறுத்தவரையில், செலவு உயர்வில்
பெரும் பகுதி, வேளாண்மை, தொழில் வளர்ச்சி, பாசனம்
பொதுப் பணிகள் ஆகியவற்றின்கீழ் ஏற்பட்டுள்ளது. மதுரையில்
இரண்டாவது வேளாண்மைக் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டும்
வேலையின் தற்போதைய போக்கையொட்டி, 'வேளாண்மை' என்ப
தன்கீழ் 22 லட்சம் ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்க எண்ணியுள்

ளோம். "தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு" என்பதன் கீழ் 77 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பெரும் பகுதி கூட்டுறவு நூற்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட கூட்டுறவு நிறுவனங்களில் அரசாங்கம் மேலும் பங்கு கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும். சிறப்புச் சிறு பாசனத் திட்டத்திற்காகவும், தூறு எடுத்துப் பண்படுத்தும் திட்டத்திற்காகவும், "பாசன மூலதனச் செலவு" என்பதன்கீழ் 21 லட்சம் ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கியுள்ளோம்.

மற்ற தலைப்புகளின் கீழ் கேட்கப்பட்டுள்ள கூடுதல் நிதி ஒதுக்கம், வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைவிட வழக்கமாக ஏற்படுகின்ற உயர்வுக்காகவே தேவைப்படுகிறது. இவற்றைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவதற்கு ஒன்றுமில்லை என்று கூறி, இவ்விறுதித் துணை மதிப்பீடுகளை இச்சபை ஏற்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

V—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

(1) DEMAND No. V—REGISTRATION DEPARTMENT.

(2) DEMAND No. XI—JAILS.

(3) DEMAND No. XVII—FISHERIES.

(4) DEMAND No. XXXIV—STATIONERY AND PRINTING.

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 69,90,200 under Demand No. V—Registration Department.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, "ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகமும் இருக்கின்ற இடத்திலேயே பத்திரப்பதிவு அலுவலகமும் இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட" என்று நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரபணையை முன்மொழிகின்றேன்.

'That the allotment of Rs. 69,90,200 under Demand No. V—Registration Department be reduced by Rs. 100.'

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,94,39,400 under Demand No. XI—Jails.'

திரு. நா. இராசாங்கம் : கனம் சபாநாயகர் அவர்களே, "சிறைச் சாலைகளில் கைதிகளுக்குக் கொடுக்கும் உணவு கல், மண் கலந்து வேகாத உணவு கொடுப்பதால் அவர்கள் வியாதியால் பாதிக்கப்படுவதைச் சுட்டிக் காட்டி விவாதிக்க" என்கிற என் பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கின்றேன்.

"That the allotment of Rs. 1,94,39,400 under Demand No. XI—Jails be reduced by Rs. 100."

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 99,91,900 under Demand No. XVII—Fisheries.'

திரு. ஏ. சுவாமிதாஸ் : கனம் சபாநாயகர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உருவாக்கும் தேவையைப்பற்றி விவாதிக்க" என்கிற என்னுடைய வெட்டுப் பிரேரபணையை நான் பிரேரேபிக்கின்றேன்.

"That the allotment of Rs. 99,91,900 under Demand No XVII—Fisheries be reduced by Rs. 100."

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,21,36,500 under Demand No. XXXIV—Stationery and Printing.'

திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, என் பெயரால் வெளியாகியிருக்கிற "அரசிலச்சினையைக் கூட ஒரு நிலை ஆக்குவதில் அசிரத்தையும் அலட்சியமும் காட்டும் நிர்வாகத்தை நெறிப்படுத்த" என்னும் வெட்டுப் பிரேரபணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 2,21,36,500 under Demand No. XXXIV—Stationery and Printing be reduced by Rs. 100."

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதம் உருப்படியாக இருக்கவேண்டும் என்ற கவலையோடு நான் ஒரு யோசனை தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த நான்கு மானியக் கோரிக்கைகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, "ரிஜிஸ்ட்ரேஷன்" மானியத்திற்கு ஒரு மணி நேரம், "ஜெயில்" மானியத்திற்கு ஒரு மணி நேரம், "மீனளம்" மானியத்திற்கு ஒரு மணி நேரம், "அச்சுத்துறை" மானியத்திற்கு ஒரு மணி நேரம் என்று, இப்படியாக ஒவ்வொரு மானியத்தையும் தனித் தனியாக எடுத்துக்கொண்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரு மணி நேரம் ஒதுக்கிப் பேசுவது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். தங்களுடைய அனுமதியும் இந்த மன்றத்தினுடைய அனுமதியும் இருந்தால், அவ்வாறு செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். "ரிஜிஸ்ட்ரேஷன்" மானியத்திற்கு அரை மணி நேரம் போதுமானதாக இருக்கலாம். அந்த அரை மணி நேரத்தை, மீனள மானியத்திற்கு அதிகப்படுத்திக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : அப்படியே செய்யலாம்.

[25th March 1966

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தனித் தனியாக எடுத்துக்கொள்ளப்படும் என்று முதலிலேயே தெரிந்திருந்தால், தனித் தனியாக 'ப்ரிபரேஷன்' செய்துகொண்டு வந்திருக்கலாம். ஆகவே, எல்லா மானியங்களையும் ஒன்றாகவே எடுத்துக்கொண்டு விவாதிப்பது நல்லது என்று நான் கருதுகின்றேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், முன்னால் இருப்பவர்கள், தனித் தனியாக எடுத்துக் கொண்டு விவாதிப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தனித்தனியாக எடுத்துக்கொள்ளலாம். இப்பொழுது கனம் உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் பேசலாம்.

Demand No. V—Registration and the cut motion moved by the hon. Member, Sri A. G. Balakrishnan are now before the House for discussion.

திரு. நா. இராசாங்கம் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரப் பதிவுத் துறையில்—நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்த பிறகு வேலை அதிகரித்திருக்கிறது. நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்த பிறகு பத்திரப் பதிவுத் துறை கணக்கை எடுத்துப் பார்த்தால் கூட ஒவ்வாரு இடத்திலும் ஐம்பதாயிரம், அறுபதாயிரம் என்பதாக பத்திரம் வாங்கப்பட்டு ரிஜிஸ்தர் ஆகியிருப்பதைப் பார்க்கலாம். அந்தத் துறையில் இப்படி எந்த அளவுக்கு வேலை அதிகரித்திருக்கிறதோ அந்த அளவுக்கு அந்த இலாகா வளர்ச்சி அடைந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. மற்ற இலாகாக்கள் போல அந்த இலாகாவும் போதுமான வளர்ச்சியை அடைய, அரசாங்கம் தக்க கவனம் காட்டவில்லை என்றே குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள இருக்கிறேன். பத்திரப் பதிவுத் துறையை எடுத்துக்கொண்டால் நாற்பது அல்லது ஐம்பது கிராமங்களுக்கு ஒரு அலுவலகமாவது இருக்கவேண்டும் என்பதை பல பேர்களும் ஒத்துக்கொள்வார்கள். இப்போது பத்திரப் பதிவுத்துறை காரியாலயத்திற்குச் சென்றால் —ஒவ்வொரு நாளும் நிலம் விற்பது, மனை விற்பது, வீடு விற்பது இப்படி ரிஜிஸ்ட்ரேஷன் துறை வேலை அதிகரித்து விட்டது. அதிக நிலம் வைத்துக் கொள்ளக்கூடாது, சர்க்கார் சட்டம் கொண்டுவந்து எடுத்துக்கொண்டுவிடும் என்கிற ஐயத்தினால் விற்கப்படுகிற நிலங்கள் ஒரு பக்கம்—விற்கக் கூடாது என்றே விரும்பினாலும் கடன் தொல்லை பொறுக்காது விற்கிற நிலை ஒரு பக்கம்—இப்படி ஒரு சூழ்நிலை நாட்டில் உருவாகி இந்தத் துறையின் வேலையை அதிகரிக்கச் செய்திருக்கிறது. ஆனால் அந்த இலாகா அதற்குத் தகுந்தாற்போல வளர்ச்சி அடையவில்லை. அதிகாரிகளுடைய நிலையும்—அந்த இலாகா எந்த முறை அடிப்படையில் அமைக்கப்பட்டதோ அந்த நிலையிலேயே—தேக்கமுற்றுக் காணப்படுகிறது. அந்தத் துறையின் கீழ் வேலை செய்கிற குமாஸ்தாக்கள், சப்-ரிஜிஸ்திரார்கள் இப்படிப்பட்டவர்கள் மகாநாட்டிற்கு மேல் மாநாடு கூட்டி தங்கள் குறைகளை எடுத்துக்கூறி

25th March 1966] [திரு. நா. இராசாங்கம்]

வருகிறார்கள். அரசாங்கத்திற்கும் தெரியும். பதவி உயர்வுக்கு வழியில்லை. வீட்டு வசதி இல்லை. சம்பளம் போதுமானதாக இல்லை. அரசாங்கம் இத்துறையில் போதுமான கவனம் இதுவரை செலுத்த வில்லை. இனியாவது—அவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுத்து, அலவன்சைக் கூட்டிக் கொடுத்து, ஒவ்வொரு பிர்க்காவுக்கும் ஒவ்வொரு பதிவுத் துறை இலாகாவை ஏற்படுத்தி— உத்தியோக உயர்வுக்கும் வழி செய்துகொடுத்து தக்கமுறையில் அத்துறை வளர்ச்சி அடைய தீவிர கவனம் காட்ட வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆறுமுகம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள பத்திரப் பதிவுத் துறை மானியத்தை ஆதரித்து, வரவேற்று என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரப் பதிவுத் துறையின் வேலை அதிகரித்திருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல அவர்களுக்கு சர்க்கார் துறையில் மற்ற இலாகாவினருக்கு கொடுக்கிற சலுகை கொடுக்கப்படுவது தெரிந்து என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஐ.ஜி. ஆஃப் ரெஜிஸ்ட்ரேஷன் அவர்களுடைய தகுதியை —ஐ.ஏ.எஸ். நிலைக்கு—உயர்த்தியிருப்பது பார்த்து மிகவும் சந்தோஷம். அப்படி இருந்தாலும் கூட அந்த இலாகாவில் பணி புரிகின்றவர்களுக்கு அமைதியும், திருப்தியும் இருக்க கூடிய நிலையிலே அந்த இலாகாவில் உத்தியோக உயர்வுக்கு வழியில்லை என்பதை இந்தச் சபை நன்றாக அறியும். மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிற வளவிலும், இத்துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையிலும் எடுத்துக் கொள்ளப்படுகிற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு அந்தத் துறை முன்போல இல்லை. வேலை அதிகரிப்புக்குத் தக்க ஊதிய, பதவி உயர்வுகள் இல்லை. அவர்களுக்கு சில பிரத்தியேகச் சலுகை காட்டி, சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். முதலில் இந்த இலாகாவானது கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட் மெண்டு, ரெவின்யூ டிபார்ட்மெண்டு இவற்றோடு இணைந்திருந்த போது பதவி உயர்வுக்கு வழியிருந்தது. எனக்குத் தெரிந்து சப்-ரிஜிஸ்திராராக இருந்தவர், கமர்ஷியல் டாக்ஸ் உதவியாளராக மாறி—இன்றைக்கு கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசராக இருக்கிறார். ஆனால், இந்த இலாகாவை தனியே பிரித்துவிட்ட காரணத்தினால் இன்றைக்கு ப்சரிஜிஸ்திரார் சப்-ரிஜிஸ்திராராகவே இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே என்னுடைய அபிப்பிராயம் இந்த இலாகாவைத் தனியாக வைத்திருக்காமல் கமர்ஷியல் டாக்ஸ் இலாகா அல்லது ரெவின்யூ இலாகா ஆகியவற்றோடு இணைத்துவிட்டால் இந்த இலாகாவில் வேலை செய்கிறவர்களுக்கு உயர்வு கிடைக்க வழியேற்படும், அதன் காரணமாக இவர்களுக்கு ஊக்கம் ஏற்படவும் வழி உண்டு. ஆகவே, அப்படிச் செய்ய வேண்டுமென்று கோரி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சபாநாயகர் அவர்களே, நமது பத்திரப் பதிவுத் துறை சிறந்த முறையில் லாபகரமாக நடந்து வருவதைப்பற்றி இவ்விலாகாவினரையும், அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன். ஏற்கனவே நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதனால் பதிவுத் துறையில் வேலை அதிகரிப்புக்குத் தகுந்தாற்போல அதிக ஆபீஸ்களையும் திறந்திருக்கிறார்கள். உதாரணமாக 1964-ல் ஆறு இடங்களிலும், 1965-ல் ஆறு இடங்களிலும் திறந்திருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன்.

நல்ல முறையில் இத்துறை இயங்கி வருகிறது என்றாலும் வேலை அதிகமாக இருப்பதனால் அந்த அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள். சமயத்தில் கடுமையான பேச்சுப் பேசி விடுகிறார்கள். இதையும் கவனிக்கவேண்டும். அதோடு பெண்மணிகளை சப்-ரிஜிஸ்திராராக நியமிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதேபோல சப்-ரிஜிஸ்திராராக —இது சட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவும் இருப்பதால்— சட்டத்தில் பயிற்சி உடையவர்களை நியமிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களின் கட்டடங்கள் பழமையானவை. அங்கே வசதிகள் இருப்பதில்லை. ஆகவே போதுமான வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். புதிய கட்டடங்களிலும் அத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்க வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். பதிவுத்துறை இலாகாவிற்குப் போகிறவர்களுக்கு வசதி எதுவும் இல்லை. வெயிலில் நிற்கிறார்கள். குடிக்கத் தண்ணீர் இல்லை. இந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அந்த அலுவலகத்தைச் சுற்றியே சிறுநீர் கழிக்கவிடாமல் லட்ரின் கட்டித்தரவேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பத்திரம் எழுதுகின்றவர்கள் தப்பாக எழுதிவிடுகிறார்கள். அதனால் பல வழக்குகள் வருகின்றன. ஆகவே, பத்திரம் எழுதுகின்றவர்களுக்கு ஒரு பயிற்சி கொடுத்து, தேர்ச்சி வைத்து லைசென்சு கொடுத்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், துணைப்பதிவாளர் அலுவலகத்தோடேயே இவர்களை வைத்துவிட்டால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

0-00 a.m. நகல்கள் கொடுப்பதில் சப்-ரிஜிஸ்திரார் ஆபீசிலே தாமதம் ஏற்படுகிறது. உதாரணமாக, வில்லங்க சர்ட்டிபிகேட் வேண்டுமென்று கேட்டால் அது ஒரு வாரத்திற்குள்ளே கிடைப்பதில்லை. ஆகவே, கூடியவிரைவிலே நகல்கள் கிடைக்கச் செய்வதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். எவ்வளவு பத்திரப் பதிவு நிலையங்கள் ஏற்படுத்தினாலுங்கூட இன்னும் தேவையிருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் திட்டக்குடியில் தான் இருக்கிறது. தொழுதூரில்

இடையர்நத்தம், வேப்பூர் அல்லது சிறுபாக்கத்திலே ஒரு பத்திரப் பதிவு நிலையத்தை ஏற்படுத்தவேண்டும். சிக்கனத்தைக் கருதி 1966-67-ஆம் ஆண்டில் புதிய பத்திரப் பதிவு அலுவலகங்கள் திறக்கப்படுவது எடுக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஆகவே, வேப்பூரிலே எப்படியாவது ஒரு பத்திரப் பதிவு நிலையத்தைத் திறக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், பத்திரப் பதிவுத் துறை யானது மாநிலம் பூராவும், கிராமப்புறத்தில் கூட, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அடுத்தபடியாக நல்ல பரவலாக இருக்கக்கூடிய ஒரு துறையாகும். இந்தத் துறையினுடைய நிர்வாகம் இன்னும் செம்மையாக நடைபெறவேண்டும். இந்தத் துறையை வலுப்படுத்தவேண்டுமே தவிர, வேறு துறையோடு இணைப்பதால் அனுகூலம் ஏற்படும் என்று நினைப்பது தவறாகும். இந்தத் துறையில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காமல் இருக்கிறார்கள். அதற்காக இன்னும் இந்தத் துறையை வலுப்படுத்தவேண்டுமென்று தான் நினைக்கிறேன் ; கலைக்கக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்குப் பல வழிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 372 துணைப் பதிவு துணை மாவட்டங்கள், சப்-டிஸ்ட்ரிக்ட்ஸ் என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள், இருக்கின்றன. ஆனால் இவை யெல்லாம் ரெவின்யூ மாவட்டத்திற்கு இணைந்தாற்போல் இல்லை. சில இடங்களில் இணைந்ததாக இருக்கிறது, சில இடங்களில் அப்படியில்லை. மதுரையிலே 32 சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ்கள் இருக்கின்றன, திருச்சியிலே 26 இருக்கின்றன, சில மாவட்டங்களில் 19 தான் இருக்கின்றன. இவ்வளவு ஏற்றத்தாழ்வாக இருப்பதால் சில இடங்களில் வேலைப் பளு அதிகமாக இருக்கலாம், சில இடங்களில் வேலைப் பளு குறைவாக இருக்கலாம், வேலைப் பளு அதிகமாக இருப்பதால் திறமையாக வேலை செய்ய முடியாமல் இருக்கலாம். பத்திரப் பதிவுத் துறை மாவட்டங்கள் சமமான அளவுக்கு, பரப்பிலும் சரி, வேலைப் பளுவிலும் சரி, இருக்கின்ற முறையிலே ஏற்பாடு செய்ய முயற்சி செய்து ஏற்றத்தாழ்வைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று. இந்தப் பத்திரப் பதிவுத் துறையை வலுப்படுத்த வேண்டுமென்றால், அங்கேயிருந்து வேலையை எடுப்பதற்குப் பதில் புதிதாக வேலையைச் சேர்க்கவேண்டும். கம்பெனீஸ் ஆக்ட்டின் கீழ் பதிவு செய்வது எடுக்கப்பட்டு விட்டது. அதையும் இந்தத் துறையோடு சேர்க்கவேண்டுமே தவிர எடுத்திருப்பது சரியல்ல. இப்பொழுது நிறைய ஃபேக்டரீஸ் வந்துகொண்டிருக்கின்றபோது ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டிலும் பதிவுசெய்யக் கூடிய வழியை ஏற்படுத்த வேண்டும். எல்லோரும் சென்னைக்கே வரவேண்டியிருக்கிறது. விசேஷ திருமணப் பதிவுச் சட்டத்தை அமல்படுத்துவதில்கூட பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால் அவர்கள் மாவட்டத் தலைநகரத்திற்கு வந்து ரிஜிஸ்டர் செய்யவேண்டியிருக்கிறது.

கிராமத்தில் உள்ளவர்கள் சட்டப்படி எப்படித் திருமணம் செய்ய வேண்டுமென்று தெரிந்துகொள்ள முடியவில்லை. திருமணங்கள் அன்யோன்யமாக இருக்கவேண்டுமென்றால் எல்லாம் ரிஜிஸ்டர் செய்யப்படுவது நல்லதுதான். அந்த அளவுக்கு உபயோககரமான சமுதாய சீர்திருத்தமாக நான் இதைக் கருதுகிறேன். இந்தப் பணியைக்கூட ஒவ்வொரு சப்-ரிஜிஸ்திராரிடமும் விட்டுவிடலாம், அப்படி அவர்களுக்கு விடுவதில் என்ன கஷ்டம் ஏற்படுமென்று எனக்குத் தெரியவில்லை; ஜில்லாத் தலைநகரில் அலுவலகம் இருப்பதால் ஒவ்வொருவரும் 50 மைல், 60 மைல் என்று போய் ரிஜிஸ்டர் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கேயே அவர்கள் பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்திலேயே எளிய முறையிலே சொற்ப செலவில் செய்துகொள்ளக்கூடிய அளவுக்கு அதற்குள்ள அதிகாரத்தை சப்-ரிஜிஸ்திரார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று யோசனை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிட் பண்ட்ஸ் ஆக்ட் சில மாவட்டங்களில் தான் அமல் நடத்தப் படுகிறது. கூடியவரை எந்த எந்த மாவட்டங்களில் அமல் நடத்தப்படவில்லையோ அங்கேயும் அமலுக்குக் கொண்டுவர வேண்டும். இப்படியெல்லாம் ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்ட்டைப் பலப்படுத்தவேண்டுமே தவிர அந்தப் பணிகளையெல்லாம் எடுத்து போலீஸ் துறைக்கு அல்லது வேறு துறைகளுக்குக் கொடுக்கலாம் என்று சொல்வது சரியல்ல. உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்ற கஷ்டம் இருக்கிறது. கெஜடட் போஸ்ட்ஸ் அங்கே குறைவாக இருக்கிறது, மற்ற கெஜடட் அல்லாத போஸ்ட்டுகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, கிளார்க் அப்படியேதான் இருக்கவேண்டியிருக்கிறது. சப்-ரிஜிஸ்திரார்களும் அப்படியே தான் இருக்கிறார்கள். ஊசித் துவாரத்திலே ஒட்டகம் நுழைவதுபோல் இருக்கிறது, அவர்களுக்குப் ப்ரொமோஷன் கிடைப்பது. பத்திரப் பதிவுத் துறையில் ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு வேக்கன்சி இருக்கிறது என்று எண்ணி, ஒவ்வொரு வருஷமும் நபர்களை செலக்ஷன் செய்கிறார்கள். இதனால் ஒரு நபர் 4, 5 தடவைகள் அப்பியர் ஆக வேண்டியிருக்கிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இருக்கிற மாதிரி ஒழுங்கு முறைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இதற்காக லிஸ்ட் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த லிஸ்டைப் பார்த்து அதற்குத் தகுந்தமாதிரி செய்துகொள்கிறார்கள். அதே மாதிரி இங்கேயும் லிஸ்டு ஏற்படுத்தச் செய்யவேண்டும். ஒவ்வொரு வருஷமும் செய்யப்படுவதால் தான் ஒழுங்கீனங்கள் ஏற்படுகின்றன. ஒழுங்கீனங்கள் விசாரணையில் இருப்பதால் நான் அவற்றைப்பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை. ஒழுங்கீனம் இருப்பதற்குக் காரணம் ஒவ்வொரு வருஷமும் ஐ.ஜி. பார்த்து எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு ஆட்கள் எடுக்கலாம் என்ற அளவிலே இருக்கக்கூடிய பலவீனமான சூழ்நிலைதான். ஆகவே இதை முறைப்படுத்தி லிஸ்டுகள் போடவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரைக்கும் எடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்குள்ளே குழப்பம் இருக்கிறது. அவர்களுடைய உரிமையும் பாதுகாக்கப்படக்கூடிய அளவிலே ஒழுங்குபடுத்த

வேண்டும். ஆட்கள் எடுக்கப்படுவதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஹரிஜன நல மானியத்தின்மீது பேசும்பொழுது அங்கே 16 சத விகிதம் அவர்களுக்கு ஒதுக்கவேண்டுமென்று தெரிவிக்கப் பட்டது. இங்கே 50 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அவர்களில் இரண்டு பேர்கள்தான் ஹரிஜன் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி அவர்களுக்கெல்லாம் போதுமான அளவு கிடைப்பதற்கும் இதிலே வழிசெய்யவேண்டும். பலவீனம் எங்கே இருக்கிறது என்பதைப் பார்த்து இந்தத் துறையிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கக் கூடிய முறையில், பதவி உயர்வு கொடுக்கக்கூடிய முறையில் இவைகளை ஒழுங்குபடுத்தவேண்டும்.

ரெக்ரூட்மெண்ட் செய்வதில் கிளார்க்குகளை சர்வீஸ் கமிஷன் ரெக்ரூட் செய்யலாம். அவர்களுக்குக் கீழே செக்ஷன் ரைட்டர்ஸ் இருக்கிறார்கள். அவர்களை ஐ.ஜி. எடுக்கிறார். அப்படியில்லாமல் இதற்கு செலக்ஷன் போர்டு மாதிரி வைத்து அவர்களுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். தனிப்பட்ட முறையிலே இஷ்டம்போல் செய்துகொள்ளலாம் என்று இருப்பது சரியாகாது. எப்படியாவது காரணத்தைச் சொல்லி பட்ஜெட்டிலே சாங்ஷன் செய்துகொள்ளலாம் என்று நினைக்காமல் இதைப் பலப்படுத்து வதற்கு முயற்சி செய்யவேண்டும். இந்த செக்ஷன் ரைட்டர் களுக்கு 4, 5 வருஷ சர்வீஸ் ஆகிவிட்டால் அவர்கள் கிளார்க்குகள் ஆகவேண்டுமென்று பிரியப்படுவார்கள், அதில் தவறு இல்லை. இந்தப் பதவி உயர்வு தருவதற்கு நான் ஒரு யோசனை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதே துறையிலே பதவி உயர்வு இல்லாததால் வேறு துறையிலே பதவி காலியானால் இவர்களுக்கும் கொடுக்கவேண்டும். ரெவின்யூ இலாகா, பஞ்சாயத்து யூனியன்கள், பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸ்கள் இவைகளில் பதவி உயர்வு இவர்களுக்குக் கொடுக்கப்படுமானால் இவர்களுக்கு உற்சாகம் இருக்கும். ஒரு டிபார்ட்மெண்டிலேயே இருந்து ரிடையர் ஆகக் கூடிய அளவில் தேங்கிக் கிடந்து மறத்துப் போய் அந்த டிபார்ட் மெண்டிலே உற்சாகம் இல்லாமல் இருப்பவர்களுக்கு வேறு துறைகளில் பதவி உயர்வு கிடைப்பதற்கு சந்தர்ப்பம் அளிப்பதற்கு இளமை துடிப்புள்ள அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து இந்தத் துறையை முன்னேற்றுவதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு—இது கடைசி வருஷமாக இருந்தாலும் விதையைப் போட்டு வைத்தால் அது முளைத்துக்கொண்டே இருக்கும்— முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் கூறிய யோசனை களை மனதில் வைத்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எஸ். முருகையன் : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவுத் துறை மானியக் கோரிக்கையின் மீது எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரபணையையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சர்க்காரிலே எந்தத் தொழிலைச் செய்தாலும்

[திரு. எஸ். முருகையன்] [25th March 1966

நஷ்டம் வரக்கூடிய நிலை இருக்கும்போது, இந்தத் துறை சர்க்காருக்கு லாபகரமாக நடந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கு மேல் லாபம் வரக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது, ஆனால் இந்தத் துறையிலே வேலை செய்யக் கூடிய ஊழியர்களுக்கு மற்றத் துறையிலே வேலை செய்யக் கூடியவர்களுக்கு இருப்பது போல் வசதிகள், பதவி உயர்வுகள் இருக்கின்றனவா என்றால் இல்லை. தாலூக்கா ஆபீசில் ஒருவர் சாதாரணக் குமஸ்தாவாகச் சேர்ந்து டெபுடி கலெக்டர் வரை போகக்கூடிய அளவுக்கு வசதி இருக்கிறது. இந்த இலாகாவிலே குமாஸ்தாவாகச் சேர்ந்து விட்டால் கடைசிக் காலத்தில் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆகலாம். ஒரே படிப்பு, ஒரே நேரத்தில் சர்க்காரில் வேலைக்குச் சேர்ந்தவர்களில் ஒருவருக்கு அதிகப் படியான உத்தியோக உயர்வு கிடைக்கவும் ஒருவருக்கு உத்தியோக உயர்வுக்கே வழி இல்லாத நிலையும் இருக்கிறது. சர்க்கார் இதைப் பற்றி நன்றாகப் பரிசீலனை செய்து இவர்களுடைய உத்தியோக உயர்வுக்கு வழி செய்ய வேண்டும். இவர்கள் வேறு இலாகாவுக்குப் போவதற்கான சந்தர்ப்பத்தையாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

நாலைந்து நாட்களுக்கு முன்பு பத்திரப் பதிவு அலுவலகங்களைத் திறப்பது பற்றிய கேள்வி கேட்ட நேரத்தில், அமைச்சர் அவர்கள் ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தை ஒரு இடத்தில் திறக்க வேண்டுமென்றால் அங்கு ஹோட்டல் வசதி இருக்கவேண்டும், ரோடு வசதி இருக்கவேண்டும், இடவசதி இருக்கவேண்டும், போலீஸ் ஸ்டேஷன் இருக்கவேண்டும், இவ்வளவும் இருந்தால் ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறக்கலாம் என்று சொன்னார்கள். இவை எல்லாம், போலீஸ் ஸ்டேஷனைத் தவிர, என்னுடைய தொகுதியில் மங்கலம் கிராமத்தில் இருக்கிறது. மங்கலம் கிராமம் திருவண்ணாமலையில் இருந்து 10 மைல் தூரத்தில் இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் பத்திரப் பதிவுக்காகக் கீழ் பெண்ணாத்தூர் என்ற கிராமத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. மங்கலத்தைச் சுற்றி 60, 70 கிராமங்கள் இருக்கின்றன. ஒரே பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பல கிராமங்கள் வேறு வேறு பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தூரிஞ்சாபுரம் பகுதி திருவண்ணாமலையிலும், மங்கலம் பகுதி கீழ் பெண்ணாத்தூரிலும், நார்த்தாம்பூண்டி பகுதி கலசபாக்கத்திலும் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பஞ்சாயத்து யூனியன் பகுதிக்குள்ளேயே பத்திரப் பதிவு அலுவலகத்தை வைத்தால் பதிவு செய்பவர்களுக்கு வசதியாக இருக்கும். மங்கலத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கீழ் பெண்ணாத்தூர் சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் இருந்தே சிபாரிசு செய்யப்பட்டு மாவட்டப் பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்திற்கு அனுப்பினார்கள். இவ்வளவு கிராமங்கள் இருக்கின்றன, இவ்வளவு பத்திரங்கள் பதிவாகும், எல்லா வசதிகளும் இருக்கின்றன என்று எழுதினார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அங்கு பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறக்க முடியாது என்று திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. மறுபடியும் மனுக் கொடுத்து அங்கே

25th March 1966] [திரு. எஸ். முருகையன்]

ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறப்பதைப் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு இன்னும் பதில் வரவில்லை.

பத்திரப் பதிவு அலுவலகங்களில் வில்லங்க சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால் காலையில் பத்து மணிக்குச் சென்றால், அவர்கள் பத்திரப் பதிவுகளை எல்லாம் முடித்து விட்டு, இதற்கு வருவதற்குள் மாலை 4 மணி ஆகிவிடுகிறது. அவ்வளவு நேரம் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால், ஒரு குறிப்பிட்ட நேரத்தை—அது 2 மணியோ, 4 மணியோ எதுவாக இருந்தாலும்—அதற்கு என்று நிர்ணயித்து விட்டால் மக்கள் அனாவசியமாகக் காத்து நிற்காமல் அந்த நேரத்தில் வந்து வில்லங்க சர்ட்டிபிகேட்டை வாங்கிக்கொண்டு செல்ல முடியும். அதே போன்று பத்திர நகல் வேண்டுமென்கிறவர்களும் காலையிலிருந்து மாலை வரை காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அதற்கும் ஒரு நேரத்தை அதிகாரிகள் ஒதுக்கிவிட்டால் மக்களுக்கு இடைஞ்சல் இருக்காது. அவர்கள் வந்தவுடனே வேலையை முடித்து விட்டுப் போக வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பத்திரங்களை எழுதுபவர்கள் எல்லாம் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதுமென்றால் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் முன்னால் இருந்து கொண்டு எழுதிக் கொடுக்கிறார்கள். அவர்கள் எழுதுவதனாலே பல சட்டச் சிக்கல்கள் எழுகின்றன. ஆகவே, இதற்கென்று தனியான பயிற்சி கொடுத்து, இப்போது இருக்கக்கூடியவர்கள் பாதிக்கப்படாமல், வரக்கூடியவர்கள் அந்தப் பயிற்சிபெற்று எழுதும் நிலை ஏற்பட்டால், சட்டச் சிக்கல்கள் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியும். பத்திரம் சரியாக எழுதாத காரணத்தால் பலர் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள்; நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதைச் சரிசெய்ய அதிகமான பணம் ஒன்றும் செலவாகாது; இதற்கு ஒரு நல்ல முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பத்திரம் எழுதும்போது, 2,000 ரூபாய்க்கு வாங்குகிறவர்கள் அதை 10,000 ரூபாயாக, குறைத்து எழுதுகிறார்கள். இது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஒரு ஊரில் ஒரு ஏக்கர் நிலம் 5,000 ரூபாய்க்கு விற்கிறது என்றால் கிரயப் பத்திரம் 2,000 ரூபாய்க்குத்தான் எழுதுவார்கள். இது போன்றவற்றை நிவர்த்தி செய்தால் அதிக வருவாய் வர வழி ஏற்படும். இருக்கக் கூடிய சட்டங்களில் இருந்து இவற்றைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால், மாற்று முறை செய்ய முடியுமா என்று ஆராய்ந்து குற்றங்களைக் கண்டு பிடிக்க வழிவகைகளைச் செய்யவேண்டும்.

ஹரிஜனங்கள் நிலம் கிரயத்துக்கு வாங்க வேண்டுமென்றால் அவர்களும் இந்தப் பதிவுக் கட்டணத்தைக் கட்டி, ஸ்டாம்ப் வாங்க வேண்டியிருக்கிறது. இந்தத் துறையில் [illegible]டி கட்டி வாங்க [illegible] வரக்கூடிய நிலைமையில் ஹரிஜனங்கள் 250, 300 ரூபாய்க்குக்

கிரயம் வாங்குவதற்குப் பத்திரப் பதிவுக் கட்டணம் இல்லாமலும், ஸ்டாம்ப் டியூட்டி இல்லாமலும் செய்து கொடுத்தால் அது ஹரிஜனங்களுக்கு ஒரு நன்மையைச் செய்து கொடுத்ததாகவும் இருக்கும். அப்படிப்பட்ட ஏழைகள் சொத்தை வாங்குவது மிகவும் குறைவாக இருக்குமாதலால் இந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு ஏக்கருக்குக் குறைவாக உள்ள நிலத்தை ஒரு ஹரிஜன் கிரயம் வாங்க வேண்டுமென்றால் சொசைடிகளுக்குக் கிரயப் பத்திரம் எழுதுவது போல் எழுதிப் பதிவு செய்ய வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். அப்போது சட்ட சிக்கல் இருக்காது. வருவாய் வரக்கூடிய இனங்களில் இருந்து சலுகை காட்ட வேண்டும்.

கடைசியாக, என்னுடைய தொகுதியில் மங்கலம் கிராமத்தில் ஒரு பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்தைத் திறப்பது பற்றிப் புனராலோசனை செய்து ஒரு பத்திரப் பதிவுத்துறை அலுவலகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோதண்டராம பாகவதர் : கனம் சபாநாயகர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே பத்திரப் பதிவுத் துறை நல்ல முறையிலே செயலாற்றி வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிசை 10 வீதம் அதிகரிக்கவேண்டும். தமிழ்நாட்டில் 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து ஹெட்குவார்ட்டர்சிலும் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் இருக்கவேண்டும். சப்-ரிஜிஸ்ட்ராராக இருப்பவர் குறைந்தபட்சம் பி.ஏ. படித்தவராகவாவது இருக்கவேண்டும். அவர் ஒரு தாலுகாவுக்கே அதிகாரியாக இருக்கிறார். தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்டர் செய்கிறார் சட்டம் தெரிந்தவர்களாக இருந்தால் கூட நல்லது. முக்கியமாக, பாகப் பிரிவினை உறவு சம்பந்தமாக ரிஜிஸ்டர் செய்யும்போது லீகல் அட்வைசரைக் கலந்து செய்தால் நலமாக இருக்கும்.

இப்போது சிவில் கோர்ட்டில் உள்ள வழக்குகள் யாவும் பாகப் பிரிவினை சம்பந்தப்பட்டதும், உழவு சம்பந்தப்பட்டதுமான வழக்குகளாக இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட வழக்குகளைத் தடுப்பதற்கு, சப்-ரிஜிஸ்ட்ரார் லீகல் அட்வைசரை அல்லது சர்க்கார் ப்ளீடரைக் கலந்து ஆலோசித்து இந்தப் பத்திரங்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டும். வில்லங்க சர்ட்டிபிகேட்டுகள் வாங்க இப்போது ஒரு வாரம் ஆகிறது. இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் அவற்றைக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாகுமெண்ட் ரைட்டர்ஸ் ஜில்லா கலெக்டர் லைசென்ஸ் பெற்றவர்களாக இருக்கவேண்டும். இப்போது யார் வேண்டு மானாலும் பத்திரம் [illegible] அவர்களின் [illegible]

எழுதி அவர்களே சாட்சிகளையும் அழைத்துக் கொண்டு சென்று எப்படியோ ரெஜிஸ்ட்டர் செய்து விடுகிறார்கள். ஆகவே, இவற்றை எல்லாம் தடுக்க கலெக்டரிடம் லைசென்ஸ் பெற்றவர்களையே டாகுமெண்ட் டைரக்டர்களாகப் பதிவு செய்யவேண்டும்.

ஆரணி தாலுகாவில் பத்திரங்கள் எழுத ஸ்டாம்ப் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. நகராட்சி மன்றத்தில் ஒரு லைசென்ஸ் வாங்கவேண்டுமென்றால் நான்கணா ஸ்டாம்ப் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. சில பத்திர விற்பனையாளர்கள் இரண்டு மூன்று மாதங்கள் முன் தேதி போட்டு பத்திரங்களை விற்பனை செய்கிறார்கள், இதையும் அரசாங்கம் கண்காணிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : கனம் சபாநாயகர் அவர்களே, பத்திரப் பதிவு இலாகா தன் நூற்றாண்டு சேவையை முடித்துவிட்டு 101-வது ஆண்டைத் துவக்கி இருக்கிறது. இந்த நூற்றாண்டு சாதனையைப் பொறுத்தளவில் அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் இந்த இலாகா அதிக வேலைப் பளுவை ஏற்றுக் கொண்டு, திறமையான முறையில், நல்லமுறையில் வேலை செய்து வருகிறது என்று இந்த இலாகாவைப் பாராட்டு கொடுத்தார்கள். அதற்காக கனம் அங்கத்தினர்களுக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இலாகாவை இன்னும் அதிகமாக விரிவு படுத்தவேண்டும், இந்த இலாகாவில் வேலை அதிகரித்திருப்பதால் இந்த இலாகாவில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு இவை அளிக்கப்பட வேண்டும் என்று ஏகமனதாக கனம் அங்கத்தினர்கள் கருத்து தெரிவித்தார்கள். இந்தப் பத்திரப் பதிவு இலாகாவில் பணியாற்றுகிறவர்களுக்கு, ஏற்கனவே பே கமிஷன் என்னென்ன சம்பள விகிதங்கள் இருக்கவேண்டுமென்று சொன்னார்களோ அந்த அடிப்படையில் சம்பள உயர்வு கொடுக்கப் பட்டு வருகிறது. மற்ற இலாகாக்களில் பணியாற்றுகிறவர்களுக்கு எந்த எந்த வசதிகள் எல்லாம் கொடுக்கிறோமோ அதேபோன்று இந்த இலாகாவில் இருக்கிறவர்களுக்கும் கிடைத்து வருகிறது. பதவி உயர்வு ஏற்படச் செய்வதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புவார்கள் கனம் அங்கத்தினர்கள். முயற்சிகள் எடுக்கப்பட்டன. எதிர்பாராத விதத்தில் பாகிஸ்தான் தாக்குதல் ஏற்பட்ட காரணத்தினால், எடுக்கப்பட்ட அந்த முயற்சியைச் சிறிது தள்ளி வைக்கவேண்டு மென்று அரசாங்கம் கருதியதால் அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டு வருகிறது.

திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சில மாவட்டங்கள் அதிகப் [illegible] ஏற்றுக்கொண்டிருக்கின்றன, சில இடங்களில் பத்திரப் பதிவு நிலையங்கள் அதிகமாக இருக்கின்றன, சில, [illegible] குறைவாக இருக்கின்றன என்று சொன்னார்கள். [illegible] இருப்பதை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்பது [illegible] அரசாங்கக்கொள்கைகூட. அப்படி மூன்று நான்கு [illegible] பிரிக்கவேண்டியது அவசியமாகும். அப்படிப் [illegible] நிலை வருகிறபோது அதைப் பிரித்து அங்கு

[திரு. கோ. பூவராகன்] [25th March 1966

இன்னும் மாவட்டப் பத்திரப் பதிவு அலுவலகங்களை ஏற்படுத்துவோம் என்று சொன்னால் இந்த இலாகாவில் பணிபுரிகிறவர்களுக்கு ஜில்லா பத்திரப் பதிவு அதிகாரியாக உயர்வு பெற சந்தர்ப்பம் இருக்கும். அவர்களுக்கு அது கிடைக்கக்கூடிய வாய்ப்பை அரசாங்கம் தேடிக் கொடுக்கும்.

தர்மபுரி மாவட்டம் பிரிந்ததால் மட்டும் அதைப் பிரித்துவிட்டார்கள் என்ற நிலை இல்லை. அது பிரியாவிட்டாலும் தர்மபுரியில் ஒரு பத்திரப் பதிவு நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்கனவே பரிசீலனை செய்து ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி கிருஷ்ணகிரியில் ஒரு மாவட்ட பத்திரப் பதிவு நிலையத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். மதுரை, வட ஆற்காடு போன்ற மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று கொள்கை அளவில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி அவற்றைப் பிரிப்பதற்கு, நெருக்கடி நிலைமை ஓரளவிற்குத் தளர்கிறபோது, அங்கு ஏற்பாடு செய்யமுடியும்.

பதவி உயர்வு என்று வரும்போது, கிட்டத்தட்ட 372-க்கு மேற்பட்ட கிளை அலுவலகங்கள் இருக்கின்ற முறையில்--இப்போது 18 இடங்களில்தான் உயர்பதவியில் இருக்கிறவர்கள் இருக்கிறார்கள்—கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கு ஏற்றவாறு பதவி உயர்வு அளிக்கும் வகையில் ஒரு நிலையை ஏற்பாடு செய்ய முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். லாபகரமாக, அதிகம் செலவு செய்யாமல் சிக்கனமாக இருந்து, வருவாயைத் தேடிக்கொடுக்கும் இலாகா இந்த இலாகா என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதையும் கவனத்தில் வைத்து செய்யவேண்டியிருக்கிறது. பதவி உயர்வுகள் கொடுக்கவேண்டும், புதுப் பொறுப்புகளை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் வருவாயைப் பெருக்க முடியுமா என்று அதையும் கவனிக்க வேண்டும். மூன்று அல்லது நான்கு மாவட்டங்களை ஒன்றாக இணைத்து ஒரு ரீஜினல் ஆபீசரை ஏற்பாடு செய்து பத்திரங்களைக் குறைவான தொகையில் போட்டு எழுதுகிறார்கள் என்றும், அது சரியாக இல்லை என்றும் சொன்னார்களே அதை எல்லாம் கண்காணிக்க இவர்களிடம் பொறுப்பை விட்டு விடுவதன் மூலம் வருவாயைப் பெருக்க முடியுமா என்பதையும் பரிசீலனை செய்து வருகிறார்கள். சென்ற ஆண்டு உதகை மாவட்டத்தில் பணியாற்றுகிற பத்திரப்பதிவு அலுவலர்கள், அதற்குத் துணையாக இருக்கிறவர்கள், முதல் படியில் இருக்கிறவர்கள், காரியதரிசி, அவர்கள் எல்லோரும் கூடி விவாதித்துப் பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. முதல் அமைச்சர் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைத்தார்கள். பதவி உயர்வு, சம்பள உயர்வு, இலாகாவை எவ்வாறு மேலும் நல்லமுறையில் நடத்துவது என்பதுபற்றியெல்லாம் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அவற்றை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்தது. படிப்படியாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். குறைவான கட்டணம் செலுத்துவதைக் கண்டு பிடிக்கவேண்டும், இருக்கிற சட்டத்தின்படி, இருக்கிற விதிகளின்படி எவ்வாறு செய்யலாம் என்பதையெல்லாம் பரிசீலனை செய்தார்கள். அந்த இலாகாவில் பணியாற்றுகிற அதிகாரிகள் [illegible] இருந்தாலும்

25th March 1966] [திரு. கோ. பூவராகன்]

குறைவாக மதிப்புபோட்டு எழுதப்பட்ட 6407 கேஸ்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அப்படிக் கண்டு பிடித்து உரிய கட்டணத்தை விதிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்.

இப்போது இவ்விலாகாவின் மேல் அதிகாரியாக, ஐ.ஏ.எஸ். உத்தியோகஸ்தர் ஒருவரை நியமித்திருக்கிறோம். அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இந்த இலாகா நூறாண்டு கடந்த இலாகாவாக இருந்தாலும் தற்போதைய நிலைமைக்கேற்ப எவ்வாறு இந்த இலாகாவை மேலும் பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றிப் பரிசீலனை செய்து அவ்வப்போது அரசாங்கத்திற்கு அவர்கள் யோசனைகள் எழுதி அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள், அவற்றைப் பரிசீலனை செய்து, ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருப்பவற்றை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம்.

பத்திரப் பதிவு அலுவலகம் பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்தில் இருக்கவேண்டும், அவ்வாறு மாற்றியமைத்து விட வேண்டுமென்று சொன்னார்கள். பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்கனவே ஒரு இடத்தில் இருக்கிறது. பத்திரப் பதிவு மாவட்டம் ஏற்பட்டிருப்பது ஏற்கனவே மாவட்டங்களாகப் பிரித்திருக்கிற நிலையையொட்டி அமையவில்லை, தனியாக அமைந்திருக்கின்றன. இப்போது இருக்கிற இடமே ஆங்காங்குள்ள கிராம மக்களுக்குப் போதிய வசதியாக இருப்பதால் பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. புதிதாக ஏற்படுத்துகிற பத்திரப் பதிவு நிலையங்கள் பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தையொட்டி இருக்குமானால் பல கிராமங்களுக்கு அது வசதியாக இருக்க முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டால், புதிதாக ஏற்படுத்துகிற அலுவல்களை அப்படி ஏற்படுத்துவதில் ஆட்சேபணை இருக்க முடியாது. திரு. முருகையன் அவர்கள், மங்கலத்தில் நீண்ட நாட்களாக ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும், இதில் அரசாங்கம் முயற்சி எடுக்கவில்லை என்றும் கூறினார்கள். அரசாங்கம் முயற்சி எடுத்தது, பரிசீலனை செய்தது. பரிசீலனை செய்ததிலிருந்து லாபகரமாக அந்த அலுவலகத்தை நடத்த முடியாது, மிகக் குறைவான எண்ணிக்கையில் உள்ள பத்திரங்கள்தான் எல்லா கிராமங்களையும் சேர்க்கும்போது வரும் என்பதினால் ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படும் 10-30 a.m.
நிலையில் இருப்பதால் தற்போது அங்கு திறப்பதற்கில்லை என்று அரசாங்கத்திற்கு சிபார்சு வந்திருக்கிறது. இதைப்போன்று ஒவ்வொருவரும் அவரவர்களது தொகுதியில் இருக்கின்ற நிலைமைகளைச் சொல்லி, பத்திரப்பதிவு நிலையங்களை ஆரம்பிக்கவேண்டும் என்று கருத்து சொன்னார்கள். 1962-வது ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரையிலும் 20 இடங்களில் புதிதாகப் பத்திர பதிவு நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு கூட புதிதாகப் பல பத்திரப் பதிவு நிலையங்களைத் திறக்கவேண்டும் என்று இந்த இலாகாவினர் அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்திருந்தார்கள். குறிப்பாக 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட பத்திரங்கள் பதிவாகக்கூடிய இடங்களை எல்லாம் பிரித்துத் தனியாகப் பத்திரப் பதிவு நிலையங்

களை திறக்கவேண்டும் என்று அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்திருந்தார்கள். ஆனால், பண நெருக்கடி காரணமாக இந்த ஆண்டு ஒரு இடத்தில் கூட புதிதாக, பத்திர பதிவு நிலையம் திறக்க முடிவு எடுக்கப்படவில்லை. நெருக்கடி நிலை குறையும்போது, எந்தெந்த இடங்களில் எல்லாம் திறக்கவேண்டும் என்ற நிலைமை இருக்கிறதோ அங்கு திறப்பதற்கு யோசனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, பத்திரப் பதிவு நிலையங்களில் இருக்கின்ற வசதிகளைப் பற்றி சொன்னார்கள். பல இடங்களிலிருந்தும் வருகின்றவர்களுக்கு தங்கி தங்கள் வேலைகளை முடித்துக்கொள்வதற்கேற்ற வசதியில்லை என்று சொன்னார்கள். எல்லா இடங்களிலும் இந்த வசதியில்லை என்று சொல்ல முடியாது. அரசாங்கக் கட்டடங்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஒரேயடியாக செய்துவிட முடியாது, இதை ஒரு "பேஸ்டு ப்ரோகிராம்" ஆகப் போட்டு ஆண்டு ஒன்றுக்கு இத்தனை இடங்களில் தங்குவதற்கு இடவசதி செய்து கொடுப்பது என்று கணக்கிட்டு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில்—அதாவது வாடகைக் கட்டடங்களில் இருக்கின்ற இடங்களில் கூட அந்த கட்டடச் சொந்தக்காரர்களிடம் சொல்லி, இந்த வசதிகளைச் செய்து கொடுத்தால் கூடுதல் வாடகை தர்லாம் என்று சொல்லி, இந்த வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று அவ்வப்போது சொல்லி வருகிறோம். சில இடங்களில் அப்படிக் கட்டியும் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில வசதிகளைப்பற்றி சொன்னார்கள். அதாவது சில இடங்களில் மின்சார வசதியில்லை, குடிதண்ணீர் வசதியில்லை, இதையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆங்காங்கு இருக்கக் கூடிய நிலைமைக்கு ஏற்ப எந்த அளவுக்கு வசதிகள் செய்து கொடுக்க முடியுமோ அந்த இடங்களில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

வில்லங்க சர்ட்டிபிகேட் எடுப்பதில் மிகவும் காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். மூன்று நாட்களுக்குள் வில்லங்க சர்ட்டிபிகேட் கொடுத்துவிடவேண்டும் என்ற நியதியை அங்கங்கே இருக்கின்ற ஊழியர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இதைப் பற்றியெல்லாம் மாதந்தோறும் தலைமை அலுவலகத்திற்கு ரிப்போர்ட் அனுப்புகிறார்கள். வில்லங்க சர்ட்டிபிகேட் அனுப்புவதில் எங்காவது காலதாமதம் ஏற்படுமானால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்து தகுந்த தாக்கீதுகளை அனுப்புகிறார்கள். ஆகவே, அதிகமாகக் காலதாமதம் ஆகிறது என்று சொல்ல முடியாது. ஆய்வாளர் மாவட்ட அலுவலகங்களுக்கும் அங்கங்கே இருக்கின்ற கிளை அலுவலகங்களுக்கும் செல்லும்போது, இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படுகிறது என்று கண்டால் அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்கின்றார். இவ்விதமான சர்ட்டிபிகேட்டுகள் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டு [illegible] அவ்வப்போது பரிசீலனை செய்து நடவடிக்கை [illegible] [illegible]

மேல் உயர்வு கொடுக்கின்ற விஷயத்தில், இந்த ஆண்டு கீழ் மட்டத்தில் அதாவது லோயர் டிவிஷன் கிளார்க் பதவியில் இருக்கின்றவர்களில் 48 பேர்களுக்கு மேல் உயர்வு கொடுப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் வேலைப் பளு அதிகமாக இருக்கின்ற இடங்களில் கூடுதல் ஆட்களைப் போடவேண்டும் என்கின்ற எண்ணத்தை அரசாங்கம் கைக்கொண்டு, மேலும் பணியாளர்களைப் போடவேண்டும் என்று நினைத்து, மேல் பிரிவு எழுத்தர்களில் 10-ம், கீழ்ப்பிரிவு எழுத்தர்களில் 20-ம் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தத் துறையில் இருக்கின்ற கஷ்டங்களை எல்லாம் பரிசீலனை செய்து எந்த அளவுக்குத் தவிர்க்க முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமாக இந்த இலாகா நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்று அங்கத்தினர்கள் அனைவரும் ஏகமனதாகப் பாராட்டி சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும், அங்கத்தினர்கள் கேட்டுக்கொண்ட வசதிகள் பலவற்றையும் ஆலோசித்து அவற்றையும் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மான்யத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : ஸார், அமைச்சர் அவர்கள் மங்கலத்தில் பத்திரப் பதிவு நிலையம் ஏற்படுத்துவதைப்பற்றிச் சொல்லுகின்றபோது, அங்கு போதிய வருமானம் வராது என்ற காரணத்தால் திறக்கப்படவில்லை என்று சொன்னார்கள். மங்கலம் பகுதியில் இருக்கின்ற சில கிராமங்கள் எல்லாம், கீழ்பெண்ணாத்தூர் நிலையத்தோடு சேர்ந்திருக்கின்றன. இன்னும் சில கிராமங்கள்—அதாவது [illegible]ஞ்சாபுரம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள 20 கிராமங்கள் கலசபாக்கத்தில் சேர்ந்திருக்கின்றன, இன்னும் சில கிராமங்கள் திருவண்ணாமலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கலசபாக்கத்திலும் வேலை அதிகம் என்று சொல்லுகிறார்கள். கீழ்ப் பெண்ணாத்தூரிலும் வேலை அதிகம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே பஞ்சாயத்து யூனியன் இருக்கின்ற இடத்தில் வைக்காவிட்டாலும், இதன் கீழ் இருக்கின்ற பஞ்சாயத்தின் எல்லைக்குள் வைப்பதற்கு அரசாங்கம் மறுபரிசீலனை செய்வார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[illegible] **திரு. கோ. பூவராகன்** : கீழ்ப்பெண்ணாத்தூரில் இருக்கின்ற வேலையை மட்டும் எடுத்துக்கொள்ளவில்லை. மற்ற கிராமங்களை இங்கு கொண்டுவரும்போது, அங்கிருந்து போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். மற்ற இடங்களிலிருந்து கிராமங்களை இங்கு சேர்க்கும்போது, அந்த இடங்களிலிருந்து இங்கு வருவதற்கு வெகு தூரம் இருக்கக்கூடாது, அதோடு போக்குவரத்து வசதி இருக்கவேண்டும். அப்படிப்பட்ட வசதி ஒன்றும் இல்லை [illegible] சொன்னதின் காரணமாகத்தான் மங்கலத்தில் [illegible] பதிவு நிலையம் ஏற்படுத்த முடியவில்லை என்பதைத் [illegible]றேன்.

[25th March 1966

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 69,90,200 under Demand No. V—Registration Department.'

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND NO. XI—JAILS.

MR. SPEAKER : The Demand and the cut motion moved by the hon. Member Sri N. Rajangam, are now before the House for discussion.

* **திரு. ஆ. தங்கவேலு :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, சிறைச்சாலை மான்யத்தின் மீது எதிர்க்கட்சி உறுப்பினர் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மான்யத்தை ஏற்றிருக்கின்ற அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் சிறைச்சாலைப் பக்கமே போய் அறியாதவர்கள் என்று சொன்னால் அவர்கள் வருத்தப்படுவார்கள். அவர்கள் இந்த பதவியேற்றிருக்கின்ற இந்த குறுகிய நான்கு ஆண்டு காலத்தில்—இந்த சிறைச்சாலைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு சிறைச்சாலைகளில் ஏதாவது சீர்திருத்தம் செய்யபப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. சிறைச்சாலைகளுக்குச் சென்று மேற்பார்வையிட்டிருக்கிறார்களா என்றும் தெரியவில்லை. நான் பல போராட்டங்களின் காரணமாக சிறைச்சாலைக்குப் பல தடவை சென்றிருக்கிறேன். இந்த அமைச்சர் அவர்கள் பதவி ஏற்றதற்கு முன்பும் போய் இருக்கிறேன், பதவி ஏற்றதற்குப் பின்பும் போயிருக்கிறேன். முன்பிருந்ததில் எந்த விதமான முன்னேற்றமும் இல்லை. இவர்கள் பதவியேற்ற பிறகு உணவில் கல்லையும் மண்ணையும் தான் அதிகமாகப் பார்க்கிறோம். சென்ற தடவை மத்திய சிறைச் சாலையில் நான் இருந்தபோது, சில சம்பவங்களைப் பார்த்தேன். அதாவது அங்கு கைதிகளுக்கு சாப்பிடுவதற்கு ஒரு உருண்டை சோறு கொடுப்பார்கள். அவ்விதம் கொடுக்கப்பட்ட ஒரு உருண்டைச் சோற்றை ஒரு ப்ளேட்டில் வைத்து அங்குள்ள சூப்பரிண்டென்டென்டிடம் கரைத்துக் காண்பித்தேன், அதில் இருந்த கற்கள் சுமார், 2, 3 அவுன்ஸ் இருக்கும். அதற்கு அங்கிருந்த சூப்பரிண்டென்டென்ட் அவர்கள், "முன்னால் எல்லாம் தனிப்பட்டவர்களிடமிருந்து அரிசி வாங்கிக் கொண்டிருந்தோம், இப்போது கூட்டுறவு சங்கங்கள்தான் சப்ளை செய்கிறார்கள். அதில் கூட இவ்வளவு மோசமாக இருக்கிறது" என்று சொன்னார்கள். இந்த நிலைமை தான் அங்கு இருந்துகொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதோடு உணவோடு கொடுக்கப்படும் குழம்பில் கீரை போட்டிருக்கும். இந்தக் குழம்பை எடுத்துப் பார்த்தால் கீரைக்குப் பதிலாக புல்லும் தழைகளும்தான் அதிகமாக இருக்கும். இவையெல்லாம் அமைச்சர் அவர்கள் நேரடியாக

25th March 1966] [திரு. ஆ. தங்கவேலு]

அங்கே போய்ப் பார்த்தால், இப்படிப்பட்ட குறைகளைப் போக்க முடியும். சமையல் செய்வதற்கு—அதாவது ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கக் கூடிய இடத்தில் சமையல் செய்வதற்கு ஒரே இடத்தில்தான் சமையல் செய்யவேண்டியிருக்கிறது. இன்று காலையில் கொடுக்கப்படவேண்டிய உணவை நேற்று இரவே தயாரித்து விடுவார்கள். அதோடு சிறைச்சாலையில் களி கொடுப்பார்கள். இதை முந்தின நாளே செய்துவிடுவதால் ஒரே மாவாக இருக்கும். அதோடு கொஞ்சம் அதிகமான நேரம் கவனியாமல் அடுப்பில் வைத்துவிடுவதால் கரேல் என்று தீய்ந்துவிட்டிருக்கும். அந்த அளவுக்குத்தான் இருக்கிறதே தவிர, நன்றாக இருக்காது. ஆகவே சமையல் செய்யும் இடத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து வைத்தால், 4-5 மணிக்கு முன் சமையல் வேலையை ஆரம்பிக்க வசதியாக இருக்கும். ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கும் இடத்தில் ஒரே சமையல் இடமாக இருப்பதால் இந்தக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. ஆகவே இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறையில் கைதிகளுக்கு உடைகள் கொடுக்கப்படுகின்றன. வெளியே வருகிற கைதிகளின் உடையை புதிதாக வருகிறவர்களுக்குக் கொடுக்கிறார்கள். சென்ற தடவை இதைப்பற்றி நான் கேள்வி கேட்டபோது அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் நல்ல முறையில் சுத்தம் செய்து கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கு இருக்கிற கைதிகள், மது விலக்குக் கைதிகள், மற்ற கைதிகள் போட்டிருக்கிற உடையைப் பார்த்தால், தோய்த்துக் கொடுக்கிறார்கள் என்று சொன்னாலும், துர்நாற்றம், சீலைப்பேன் அப்படியே இருக்கும். அதை நாங்கள் வாங்க மறுத்தோம். அதனால் கஷ்டம் கூட ஏற்பட்டது. குறைந்த விலையில் உள்ள துணி, அங்கேயே நெய்யப்படுகிறது, அங்கேயே தைத்துக்கொடுக்கிறார்கள். புதிதாக வருகிற கைதிகளுக்குப் புதிய உடை கொடுப்பது சுகாதாரத்திற்கு நல்லது. மேலும் சுகாதாரக் கேடு ஏற்பட்டால் வியாதிகள் வர நேரிடும். ஆகவே, புதிய உடைகளைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சிறைச்சாலையில் கைதிகள் இருக்கும் இடத்தில் ஜன்னல்கள் பெரிய அளவில் இருக்கும், ஆனால் அதற்கு கதவுகள் இருக்காது. வெய்யில் காலத்தில் காற்றுக்கு வசதியாக இருக்கும். மழை காலத்தில் கதவுகள் இல்லாததால் மழைத் தண்ணீர் உள்ளே வந்துவிடும். அப்போது கைதிகள் படுக்க வசதி இருக்காது. இரவு முழுவதும் நின்றுகொண்டே இருக்க நேரிடுகிறது. ஆகவே ஜன்னல்களுக்குக் கதவுகள் அமைப்பது அவசியம்.

சாப்பிடுவதற்கு அவர்களுக்கு இடம் கிடையாது. மழையில் நனைந்து கொண்டே சாப்பிடுகிறார்கள், அதற்கும் இட வசதி செய்து தரவேண்டும்.

[illegible] பகுதி என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அது மிகவும் கொடுமையான இடம். மனிதன் அனுபவிக்கவேண்டுமென்று அங்கு 10 நாள் வைத்திருந்தால் எல்லா நரக [illegible] அனுபவிப்பார்கள். அதையும் நல்ல முறையில் மாற்றி அமைக்கவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

சப்-ஜெயிலில் சில இடங்களில் தரையில் தார் ஊற்றி இருக்கிறார்கள். குறிப்பாக திருக்கோயிலூர் சப்-ஜெயிலில் தார் ஊற்றி இருக்கிறார்கள். இந்தி எதிர்ப்பு போராட்டத்தின்போது அங்கு போயிருக்கிறோம். சித்திரை, வைகாசி மாதங்களில் தார் மீது படுத்தால் எப்படி இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். அதையெல்லாம் மாற்றி நல்ல முறையில் இருக்கும்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சிறைச்சாலையில் வேலை செய்கிற வார்டர்களுக்குப் போதிய சம்பளம் கிடையாது. நாங்கள் இங்கேயே மூன்று ஜென்மங்களாக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். 10 வருஷம் ஒரு ஜென்மம், 30 வருஷம் என்றால் மூன்று ஜென்மங்கள் என்று சொல்லுகிறார்கள். ஜென்மக் கைதிக்கு 10 வருஷம். ஜென்மக் கைதி ஒரு ஜென்மம் சிறைச்சாலையில் இருந்து விட்டுப் போகிறான், ஆனால் நாங்கள் மூன்று ஜென்மங்கள் இங்கேயே இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குப் போதிய சம்பளமோ, மற்ற வசதிகளோ கிடையாது, அவர்களுக்கு ஓய்வு கிடையாது. அந்த அளவுக்கு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பள உயர்வு, ஓய்வு, மற்ற வசதிகளெல்லாம் கொடுக்க வேண்டிய வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. இரா. நாராயணன் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, சிறை மான்யக் கோரிக்கையின் மீது எங்கள் தரப்பில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நானும் சில கருத்துக்களைச் சொல்ல விருப்பப்படுகிறேன்.

சிறையைப் பற்றி எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னாலும், சிறைச்சாலையிலே கைதிகளுக்குச் செய்து வரும் கொடுமைகளைப் பற்றி நானும் பார்த்திருக்கிறேன். நானும் அனுபவித்திருக்கிறேன். சிறைச்சாலையில் இருக்கிற கைதிகளுக்கு துணிமணிகள் நல்ல முறையில் கொடுக்கப்படுவதில்லை. அதுவும் தவிர துணிகளைத் தோய்ப்பதற்கும் கூட, துணிகளை வெளுப்பதற்குக் கூட, தண்ணீர் வசதிகள் திருச்சி மத்திய சிறையில் கூட இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குடிதண்ணீர் பஞ்சம் வேறு இருக்கிறது. குளிக்கத் தண்ணீரும் இல்லாமல் கிணற்றடியில் போய் இரண்டு நிமிஷத்தில் குளிக்கவேண்டும்; இல்லையென்றால் வார்டன் முட்டிக்கு முட்டி அடிக்கிறான். கைதிகளிடம் இருக்கக்கூடிய குல்லாய் அல்லது டம்ப்ளரில் மொண்டு ஊற்றிக்கொண்டு, தேய்த்துக் குளிப்பதற்குக் கூட நேரம் இல்லாமல் அவதி அவதி என்று போய் விடுகிறார்கள். குளிக்கும் நேரம் ஐந்து நிமிஷம் இருக்கும். இந்த நேரத்திற்குள் 2,000 கைதிகள், 1,000 கைதிகள் குளிக்க வேண்டும் என்றால், எப்படிக் குளிக்க முடியும்? இதை உணர்ந்து நல்ல முறையில் குளிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். அங்கு ஒரு தொட்டி கட்டியிருக்கிறார்கள். [illegible] கொட்ட [illegible] கோவணத்தை [illegible]

கட்டிக்கொண்டு துணிகளையெல்லாம் தோய்த்து எல்லோரும் கையில் வைத்திருக்கிறார்கள். குளிக்கும் இடத்தில் எல்லோரும் போனால் காலி இருக்கிறதா? இவன் துணியில் இருக்கிற சிலைப் பேன் இன்னொருவனுடைய துணியில் ஒட்டிக்கொள்ளுகிறது; அவன் துணியிலிருந்து இன்னொருவன் துணியில் ஒட்டிக்கொள்ளுகிறது; இப்படியே சிறைச்சாலையில் ஒரே சிலைப்பேனுகை இருக்கிறது. போன தடவை இந்திப் போராட்டத்தில் சிறைக்குப் போன சமயத்தில் மொட்டை அடித்தார்கள். இந்தத் தடவை அந்தமாதிரிச் செய்யவில்லை எல்லோருக்கும் துணி மணிகள் கொடுத்தார்கள். ஒரு நிமிஷ நேரம் ஆனாலும் கிராமத்தில் இருக்கும் கருவைப் பூச்சி ஒட்டிக்கொண்டமாதிரி உடம்பு முழுவதும் தடித்து தினவெடுத்து விட்டது. உடனே துணிமணிகளைக் கழட்டி வைத்து, புதிய துணி கொடுக்கவேண்டும் என்று கேட்டோம். உடனே ஜெயிலர் வந்தார். ஜெயில் சூப்பரின்டென்டென்டைக் கூப்பிட்டு வந்தார். அவர்கள் போட்டுக்கொண்டிருந்த துணியை அவர்களிடம் கொடுங்கள் என்று சொன்னார். அவ்வளவு அவதிப்பட்டிருக்கிறோம். நாங்கள் அவதிப்பட்டதை இங்கே எடுத்து உரைக்கவாவது வசதி இருக்கிறது. அங்கு இருக்கிற கைதிகளுக்கு அதுவும் செய்ய முடியாது. ஃபைலில் நிற்கிற போது ஏதாவது சொன்னால், பிற்பாடு 'ஃபைலில் என்னடா கையைத் தூக்கினாய்? என்னடா சொன்னாய்?' என்று முட்டிக்கு முட்டி அடிக்கிறான். நானே அதைக் கண்ணால் பார்த்தேன். வார்டன் கொடுமை எவ்வளவு என்று சொல்ல முடியாது சூப்பரின்டென்டென்ட்டிடம் சொன்னதற்காக அடிக்கிறான் . . .

கனம் சபாநாயகர் : அப்படியானால் சம்பளத்தைக் குறைக்கலாமா? முன்னால் பேசிய அங்கத்தினர் சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டும் என்று சொன்னார்.

திரு. இரா. நாராயணன் : அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் குறைவுதான். சம்பளம் குறைவாக இருப்பதால்தான் ஆத்திரம் வருகிறது. அதிகப்படுத்தியிருந்தால் ஆத்திரம் வராது என்று தலைவர் அவர்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தமாதிரி நிலைமை இருக்கிறது.

அங்கே ஒரு கமிட்டி வைத்திருக்கிறார்கள். 10½ வருஷ ஜென்மக் கைதிகளுக்கு போர்டு வைத்து, கலெக்டர், ஜெயில் சூப்பரின்டென்டென்ட் எல்லோரும் சேர்ந்து கைதிகளை விடுதலை செய்கிறார்கள். 10½ வருஷம் என்ற நிலைமை திரு. ராஜாஜி அவர்கள் காலத்தில்தான் ஏற்பட்டதாம். அதற்கு முன்பு 5 வருஷமென்று இருந்ததாம். 10½ வருஷம் என்பதை 5 வருஷமாக ஏற்பாடு செய்தால் ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு நல்லது ஏற்பட்டதாக இருக்கும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுவும் தவிர, பரோலில் வருவதற்கு, சப்-இன்ஸ்பெக்டர்கள், அவர்கள் நல்லவிதமாக நடந்தாலும், அவர்கள் சாட்சி வைத்து [illegible] செய்தாலும் கூட, நல்ல முறையில் நடக்கமாட்டார்கள் [illegible] சப்-இன்ஸ்பெக்டர்கள் எழுதி, அதனால் [illegible]

[திரு. இரா. நாராயணன்] [25th March 1966

விடுவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இதையெல்லாம் ஆலோசித்து ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆறுமுகம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யத்தை வரவேற்று, ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் ஜெயில்கள் நல்ல முறையிலே இருக்க வேண்டும், அங்கே கொடுக்கிற உடைகளை நல்ல உடைகளாகக் கொடுக்க வேண்டும், நல்ல உணவாக, சத்துள்ள உணவாகக் கொடுக்கவேண்டும், வசதியாக இருக்கவேண்டும் என்றெல்லாம் அவர்கள் இங்கே வாதிடுனார்கள். ஜெயிலுக்குப் போவது என்றால் நல்லவர்களுக்கு அங்கே வேலையே கிடையாது, பொல்லாதவர்களுக்குத்தான் அங்கே வேலை. அத்தகையவர்களுக்கு அந்த வகையில் தண்டனை கொடுத்து நல்லமுறையில் அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமென்றுதான் ஜெயில் இருக்கிறதே தவிர, அவர்கள் வந்து இருப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். ஜெயிலுக்குப் போகிற போது வெய்ட் என்ன என்று கணக்கு எடுக்கிறார்கள்; பிறகு திரும்பி வருகிறபோதும் கணக்கு எடுக்கிறார்கள். போகும் போது இருப்பதை விட திரும்பி வரும்போது எடை அதிகமாகி இருப்பதாகக் காண்கிறேன். பல அங்கத்தினர்கள் போய்விட்டு வரும்போது பார்க்கும்போது அது நன்றாகத் தெரிகிறது. கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார், அனுபவிக்க வேண்டுமென்றால் அங்கு போக வேண்டுமென்று. ஓய்வு எடுத்துக்கொள்ள, அமைதியாக இருந்து காலத்தைக் கழிக்கத்தான் செல்லுகிறார்களோ என்னவோ, அதற்காகத்தான் வசதிகளெல்லாம் வேண்டுமென்று சொல்லுகிறார்களோ என்னவோ.

அடுத்தபடியாக, செங்கம் தாலுகா ஆபீஸில் ஒரு பகுதி சப்-ஜெயிலாக இருக்கிறது. அது ஒரே இடத்தில்தான் இருக்கிறது. அந்தக் கட்டடம் 1913-ம் ஆண்டில் கட்டப்பட்டது. எனக்குத் தெரிந்தவரையில் தவறுகள் செய்த எல்லோரையும் அங்கே கொண்டுவந்து வைக்கிறார்கள். மணியக்காரர் அல்லது மற்ற அதிகாரி யாராவது பணம் கையாடல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருந்தாலும் அவர்களையும் அந்த இடத்தில்தான் கொண்டு வந்து வைக்கிறார்கள். ஒருவருக்கொருவர் தாங்கள் என்னென்ன குற்றம் செய்தார்கள் என்பதைப்பற்றி பேசிக்கொள்ளுகிறார்கள். மன்னிக்க முடியாத மிகக் கொடுமையான குற்றத்தைச் செய்தவர்களையும், குற்றம் செய்தவர்களா, இல்லையா என்று சந்தேகப்பட்டக் கைதிகளையும் ஒரே இடத்தில் சேர்த்து வைக்கிறார்கள். செங்கம் ஒரு தாலுக்கா தலைநகரமாக இருக்கிறது. இந்த நிலை இல்லாமல் தனித்தனி அறைகளை கட்டிக்கொடுக்க வேண்டும் என்று [illegible] என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

25th March 1966]

திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் சபாநாயகர் அவர்களே, சிறைச்சாலை என்பது சொர்க்கலோகம் அல்லது மாமியார் வீடு என்று நினைப்பது சரி அல்ல. சிறைச்சாலை என்றால் குற்றம் செய்தவர்கள் தண்டனையை அனுபவிப்பதற்காக ஏற்பட்ட சாலை. குற்ற மனப்பான்மை நீங்கி நல்ல வழியில் அவர்கள் திரும்பி, வெளியில் வந்து நல்ல வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற அடிப்படையில் தண்டனையை அனுபவிப்பதற்காக சிறைச்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட, முன்பு இருந்ததைவிட சிறைச்சாலைகளில் நல்ல உணவு கொடுக்கிறார்கள், உடை கொடுக்கிறார்கள், சிறந்த முறையில் நடக்கின்றன. முன்பு சென்றவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். அடிக்கடி நம்முடைய அமைச்சர் அவர்கள் சிறைச்சாலைக்குச் செல்லவில்லை என்று சொல்லுவது சரியல்ல. அமைச்சர் அவர்கள் திடீர் திடீர் என்று சென்று சோதனை செய்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னும் அங்கே மருத்துவ வசதிகளெல்லாம் நல்ல முறையில் செய்துகொடுக்கப்படுகிறது. ஜெயிலுக்குப் போகும் பொழுது எடை எடுத்துக்கொண்டு வரும்பொழுதும் எடை எடுத்துப் பார்த்தால் நன்றாக விளங்கும். அங்கே எடை குறையாமல் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்படுகின்றன.

சிறைச்சாலைகளில் மருத்துவ வசதி செய்துகொடுப்பதோடு, உடைகளை நல்ல முறையில் துவைத்துக்கொடுப்பதற்கு டோபியை நியமனம் செய்யவேண்டும். அங்கே இருப்பவர்கள் நல்ல சிறந்த உழைப்பாளிகளாக ஆகவேண்டும் என்று கருதி அவர்களுக்கு பல தொழில்கள் செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஜமக்காளம் நெய்வது, நாற்காலி, மேஜை செய்வது, மரச் சாமான்கள் செய்வது, துணி நெய்வது இதுபோன்ற பல நல்ல தொழில்களில் அவர்கள் ஈடுபட்டு, அதன் மூலம் ஊதியம் சம்பாதிக்கிறார்கள். பாதிரிமார்கள், சைவ, வைஷ்ணவத்தில் நல்ல நிபுணர்கள் அடிக்கடி அவர்களிடையே தெய்வ பக்தியை நல்ல முறையில் பரப்பி வருகிறார்கள். மேலும் கலை வளர்ச்சி, நாடக வளர்ச்சி என்ற முறையில் அவர்கள் சிறப்பாக நாடகம் ஆடுகிறார்கள் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குற்றம் செய்தவர்கள் நல்ல முறையில் திருந்தி அவர்கள் நல் வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற 'ரெபர்மேடரி தியரி'-யின் கீழ் தான் ஜெயில்களை அமைத்திருக்கிறார்கள். அதிக வசதிகளை நாம் ஜெயிலில் அதிகமாக எதிர்பார்க்க முடியாது. வீடுகளில் வாங்கிச் சாப்பிடுகிற அரிசியில் கூட சில சமயங்களில் கற்கள் இருக்கின்றன. அதே சமயத்தில் கற்கள் இருந்தாலும் அரிசியைக் களைந்து கற்களை எடுத்து விடவேண்டிய பொறுப்பு இருக்கிறது. குறைகள் இல்லாமல் மேலும் நல்ல முறையில் வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தகுதிமிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, சிறைச்சாலை மான்யத்திற்கு எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு

முன்னால் பேசிய ஆளும் கட்சி அங்கத்தினர் திரு. ஆறுமுகம் குற்றம் செய்தவர்கள்தான் சிறைச்சாலைக்குச் செல்லுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். துர்பாக்கியவசமாக குற்றம் புரிந்தவர்கள் பலர் வெளியிலேயும்; எந்தக் குற்றத்தையும் செய்யாத பலர் சிறைச்சாலைக்கு உள்ளேயும் இருக்கிறார்கள் என்பதை தங்கள் மூலமாக அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பொதுவாக சிறைச்சாலை மான்யத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் சிறைச்சாலையில் உள்ள கொடுமைகளை உணர்ந்த பல அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் திரு. நாராயணசாமி பிள்ளை அவர்கள் கூறியது போல் மாமியார் வீட்டுக்குப் போய் வருகிற மருமகன் போன்ற பல அமைச்சர்களும் இருக்கிறார்கள். ஆனால், அமைச்சர் அந்தத் துறையிலே அனுபவப்பட்டவராக இருக்க வேண்டும் என்ற வாதத்தை நான் ஒத்துக்கொள்ளுபவன் அல்ல. அதிலிருக்கும் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்திருப்பவர்களுக்கு அங்கே என்ன செய்ய வேண்டும் என்பது நன்றாகத் தெரியும். நான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்ற போது, எனக்கு ஒரு அறை கொடுக்கப்பட்டது. அந்த அறை நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் இருந்த அறை என்று சொல்லப்பட்டது. அதற்கு பக்கத்தில் இருந்த அறை முன்னாள் முதல் அமைச்சர் கனம் திரு. இராஜகோபாலாச்சாரி அவர்கள் இருந்த அறை என்றெல்லாம் பல இடங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. அந்தக் காலத்தில் இருந்த குறைபாடுகள் இந்தக் காலத்தில் மாற்றப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஆனால், சிறைச்சாலை கொடுமையை அனுபவிக்கத்தான் என்று சொன்னாலும் இப்போது அமைச்சர்களாக இருப்பவர்கள் அப்பொழுது பேசிய பேச்சை, அவர்கள் விடுத்த அறிக்கையை நாம் பார்த்தால், சிறைச்சாலையில் எவ்வளவு கொடுமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் காலம் சென்ற பட்டேல் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்து இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பது கூட ஆச்சரியம் இல்லை, அதைவிட மிகவும் மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தாற்காலிகமாக குற்றம் சாட்டப்பட்டு, அவர்கள் நிரூபிக்க முடியாத காரணத்திற்காக சிறைக்குச் செல்பவர்களும், அங்கே ஏற்கனவே பழைய கைதிகளாக இருப்பவர்களும் சேர்ந்து ஒரே இடத்தில்தான் வைக்கப்படுகிறார்கள். சிறைச்சாலைக்கு வெளியில் வருகிறபொழுது சீர்திருத்தமாகி வருவதற்குப் பதிலாக, இப்பொழுது இருக்கிற சிறைச்சாலை அமைப்பு அந்தக் கைதிகளை கைதிகளாக்கும் நிலைமையில்தான் இருக்கிறது. பொதுவாக சிறைச்சாலைகளில் ஏற்கனவே அடிக்கடி குற்றம் செய்து தண்டிக்கப்பட்டவர்கள் தனியாக அடைக்கப்பட்டு அப்படி குற்றம் செய்த கைதிகளை ஒரு பக்கமாகவும், சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக சிறை செல்லுபவர்களை தனியாக வைத்து அவர்களுக்கு தனித் தனிப் பிரிவாக ஏற்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம்.

அதுபோல பல தொழில்கள் அங்கே செய்யப்படுகின்றன. அங்கே செய்யப்படுகிற தொழில்கள் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டு, அவரவர்களுடைய தண்டனைக்கு ஏற்றவாறு அவர்களுக்கு தொழில் கொடுக்கப்படுகிறது. ஆயுள் தண்டனை கைதிகளுக்கு தச்சுத் தொழிலில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. தச்சுத் தொழிலில் பயிற்சி பெற்றவர்கள் பல காலம் சிறையிலே இருக்கிறார்கள். அவர்கள் வெளியிலே வரும்பொழுது சிறைச்சாலை அனுபவத்தைத்தான் வெளியிலே சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. நம்முடைய மாகாணத்தில் அல்லாது வெளி மாகாணங்களில் திறந்த வெளி சிறைச்சாலைகள் பல இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அந்த வகையில் திறந்த வெளி சிறைச்சாலைகளை மாத்திரம் அமைப்பதோடு அல்லாமல், அதிலேயே அவர்களுக்கு ஒரு காண்டீன் ஏற்படுத்தி அவர்களுக்கு அவர்களுடைய தொழிலிலே வருகிற ஊதியத்தை வைத்து எதாவது வசதி செய்துகொடுக்கப்பட்டால் மிகவும் நலமாக இருக்கும்.

அதுபோல் கைதிகள் விடுதலையாகி வரும்பொழுது அவர்களுடைய குடும்பத்திற்கு எதாவது தொகை சேர்த்துக் கொடுக்கும்படியான அளவுக்கு அவர்களுடைய தொழிலுக்காக ஊதியத்தை அவர்களுக்கு அளித்து, வெளியிலே இருக்கிற குடும்பத்திற்கும் அந்த ஊதியத்தைக் கொடுத்தால், அவர்களுடைய குடும்பம் நன்றாக இருக்கிறது என்று மனநிறைவு கொண்டு, அவர்கள் வெளியில் வருகிறபொழுது அவர்களுடைய குடும்பத்தை கட்டிக்காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்பில் ஈடுபடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆயுள் தண்டனைபெற்ற கைதிகளை விடுவிப்பதற்கு என்று ஒரு போர்டு இருக்கிறது. அந்த போர்டில் கலெக்டர், டெப்யூடி சூப்பரின்டென்டு ஆஃப் போலீஸ், இன்னும் போலீஸ் உயர்தர அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு நான் அஃபிஷியல் பாடி என்ற வகையில் ஒரு வழக்கறிஞர் அல்லது வேறொருவர் நியமிக்கப்படுகிறார். சூப்பரின்டென்டு ஆஃப் போலீஸ் அவர்களை விடுதலை செய்யலாம் என்று வெளியிலே சிபார்சு செய்துவிட்டு அந்தக் குழுவில் உட்கார்ந்து யோசிக்கிற போது, அவர்களை விடுதலை செய்யக் கூடாது என்று சொல்லக்கூடிய துர்பாக்கிய நிலைமை இருக்கிறது. பத்து ஆண்டு காலம் அந்தக் கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகள் மெச்சத்தக்க வகையில் நல்ல முறையில் நடந்துகொண்டிருந்தாலும் அவர்கள் விடுதலை அடைய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமை மாற்றி, அமைக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கே கொடுக்கப்படுகிற உணவைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அங்கே கைக்குத்தல் அரிசி என்ற ஒரு அரிசி கொடுக்கப்படுகிறது. அது அங்கு இருப்பவர்களின் உடல் குத்து அரிசியாகத்தான் இருந்து வருகிறது. அந்த அளவுக்கு அவர்கள் வேதனையை அதிகமாக அனுபவிக்கிறார்கள். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் அது வழங்கப்படுகிறது. உண்மையிலே பலர் கருதக்கூடும். நான் ஏதோ கூட்டுறவு இயக்கத்திற்கே விரோதமாக

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [25th March 1966

இருக்கிறேன் என்று கருதக்கூடும். கூட்டுறவு முறையில் வேதாரண்யம் பகுதியிலிருந்து திருச்சி சிறைச்சாலைக்கு கைக்குத்தல் அரிசி கொடுக்கப்படுகிறது. திருச்சி, தஞ்சை ஆகிய நெல் களஞ்சியம் என்று சொல்லக்கூடிய பகுதிகளில் நல்ல அரிசி கிடைக்கிறது. எங்கள் ஊர் பக்கத்தில் மணச்சநல்லூரில் நல்ல அரிசி கிடைக்கிறது. அந்த நல்ல அரிசி வேறு இடங்களுக்குக் கொடுக்கப்பட்டு திருச்சி மாவட்டத்தில் இருக்கிற சிறைச்சாலைக்கு வேதாரண்யத்திலிருந்து கூட்டுறவுத் துறை மூலம் கைக்குத்தல் அரிசி கொடுக்கப்படுகிறது. கைக்குத்தல் அரிசி தேவை இல்லை; அல்லது அது கூடாது என்று நான் சொல்லவில்லை. இப்பொழுது எந்த முறையில் அரிசி உரிக்கப்படுகிறது என்றால், ஒரு நாளைக்கு ஊறல் போட்டு, அந்தத் தண்ணீரிலேயே இரண்டு முறை போட்டு, அப்படியே இயந்திரத்தின் மூலம் உரிக்கப்பட்டு அரிசியாக்கப்படுவதுதான் கைக்குத்தல் அரிசி என்று சொல்லப்படுகிறது. இந்த அரிசியினால் அங்கு பல கோளாறுகள் ஏற்படுகின்றன. உண்மையான கைக்குத்தல் அரிசி கொடுப்பதில்லை. அதுபோலவே, சிறையிலே பணியாற்றும் வார்டர்கள் ஒரு சிறைச்சாலையிலிருந்து இன்னொரு சிறைச்சாலைக்கு மட்டும் மாற்றப்படுகின்ற காரணத்தி
11-00 a.m. னால் அவர்களுடைய வாழ்க்கையே சிறைச்சாலை வாழ்க்கையாகப் போய்விடுகிறது. அதை மாற்றி அவர்களையும் வேறு இலாகாக்களுக்கு, போலீஸ் போன்ற இலாகாக்களிலே பணியாற்றச் செய்து அதற்கான வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டும். அந்த வகையில் செய்தால் அவர்களும் தாங்கள் வேறு இலாகாக்களில் பணியாற்ற முடியும் என்கிற முறையில் நல்ல பணியாற்ற முடியும். கைதிக்கு ஒரு ஜென்மம் சிறைவாசம் என்றால், இந்த வார்டர்களுக்கு ஜென்ம ஜென்மமாக அங்கேயே இருக்கவேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு வேறு வேலைவாய்ப்புக்கள் அளிக்க வேண்டும். அங்கே குற்றம் செய்த வார்டர்கள் போன்ற சிப்பந்திகள், சஸ்பெண்ட் செய்யப்பட்டால்கூட மறுநாளே அவர்கள் தங்கள் வீட்டை காலி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. குற்றம் நிரூபிக்கப்படும் வரை, அவர்கள் டிஸ்மிஸ் ஆகும் வரை, தங்கள் குவார்ட்டர்ஸிலேயே இருக்கலாம் என்கிற உரிமை அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, சிறைச்சாலை மானியத்தின் மீது என்னுடைய சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த மானியத்தின் மீது நான் பேசுகிற நேரத்திலே, மிகுந்த உணர்வுடன் தங்கள் முன்னால் நின்று கொண்டு இருக்கிறேன். ஏனென்றால், இந்த மானியம் என்னோடு மிகுந்த தொடர்பு உடைய ஒரு மானியம் என்று கருதிக் கொண்டு இருக்கிறேன். அதை கனம் சிறைச்சாலை அமைச்சரும் மறுக்கமுடியாது என்று நான் நம்புகிறேன். இந்த மானியத்தில் பேசுவதற்கு முன்னால், நான், நம்முடைய, என்னுடைய பெருமதிப்பிற்கும், பெரு நட்புக்கும் உரிய கனம் முதல் அமைச்சருக்கும் என் நன்றியை கனம் சிறைச்சாலை அமைச்சர் மூலமாகத் தெரிவிக்க

25th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் நான் அப்படி இந்தச் சந்தர்ப்பத்தை என் நன்றியைத் தெரிவிக்கத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் எனக்கு என்ன வந்தது என்றால், இன்றைக்கு இந்த சட்டமன்றம் தங்களது சீரிய தலைமையில் பணி செய்யத் தொடங்கி 1,460 நாட்கள் ஆகின்றன. நாலு வருஷங்கள் ஆகின்றன. நானும் சட்டமன்ற உறுப்பினராக உறுதி எடுத்துக்கொண்டதிலிருந்து இந்த மன்றத்திலே பணியாற்றியிருக்கிற நாட்களும் அவ்வளவே தான். அதாவது 1,460 நாட்கள் ஆகின்றன. இங்கே இருக்கின்ற மற்ற உறுப்பினர்களும் பதவி ஏற்றும் அதே நாட்கள்தாம் ஆகிறது. இந்த 1,460 நாட்களிலே என்னைப் பொறுத்தவரையில், நான் 10 மாதங்கள் சிறைச்சாலையில் இருந்திருக்கிறேன். 1962-ம் வருஷத்திலே, விலைவாசி உயர்வை எதிர்த்து போராட்டம் என்ற முறையிலே, 4 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டேன்; 1963-ம் ஆண்டின் இறுதியிலும், 1964-ம் வருஷ ஆரம்பத்திலும், இந்தி நாட்டின் ஆட்சிமொழியாகக் கூடாது என்று போராட்டம் நடத்தியதற்காக கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டேன். கடந்த வருஷம், இந்தி, நாட்டின் மொழியாக அரியாசனம் ஏறுவதை எதிர்த்து நின்ற வேளையில், நள்ளிரவில், என் தலைவர் அறிஞர் அண்ணாவோடுகூட சில நாட்கள் சிறைச்சாலையில் வைக்கப்பட்டேன். ஆக மொத்தம் எனது பதவிக் காலமான 1,500 நாட்களிலே, 310 நாட்கள் சிறைச்சாலையில் கழித்திருக்கிறேன் என்பதை சொல்லிக்கொள்ளுவேன். இப்படி, கனம் முதல் அமைச்சர் ஒவ்வொருவருக்கும், ஒரு வகையான சிறப்பைத் தேடித் தந்திருக்கிறார்கள். என் மதிப்பிற்குரிய சகோதரர் திரு. கருணாநிதி அவர்களை பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பிடித்து பாளையங்கோட்டை சிறைச்சாலையில் தன்னந்தனியாக வைத்தார்கள்; கனம் உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் கைகளில் விலங்கு பூட்டி சட்டமன்ற உறுப்பினர் என்று கூடப்பாராமல், அந்த வகையில் பெருமை அளித்திருக்கிறார்கள்; அதேபோல, நண்பர் நெல்லிக்குப்பம் தொகுதி அங்கத்தினர், திரு. கிருஷ்ணமூர்த்தி, இன்னும் திரு. அழகமுத்து இவர்களையும் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கைது செய்து வழக்குத் தொடர்ந்து சிறப்பித்திருக்கிறார்கள். ஆக, நான் சம்பந்தப்பட்ட வரையில் 10 மாதங்கள், கிட்டத்தட்ட 310 நாட்கள் சிறைச்சாலையில் வைக்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டிருக்கிறேன். கோபமாகச் சொல்லவில்லை. எனவே, ஒரு பார்த்திலே ஆறு நாட்கள், ஒரு வருஷத்திலே 3½ மாதங்கள் என்று சிறைச்சாலையில் கழித்திருக்கிறேன். இதனைச் சொல்லிக் கொண்டு, இத்தனை பாத்தியதையோடு இந்த மானியத்தின் மேல் பேசி, சில உண்மைகளை கனம் சிறைச்சாலை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

... பொன்மனத் தலைவர்கள் தாம் சிறைச்சாலைக்குச் செல்லுகிறார்கள் ... ஆளும் கட்சி அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார்கள். ... சிறைச்சாலை அமைச்சரைப்பற்றி கவலையில்லை, அவர்கள் ... சிறைச்சாலைக்கு விசிட்டாராகவோ, மந்திரியாகவோ தான் சென்று கொண்டிருக்கிறார்கள். மற்ற அமைச்சர்கள் ...

வர்களா என்கிற சந்தேகம் வருகிறது. அப்படித்தான் கனம் அங்கத்தினர் சொன்னார்களா என்றும் தெரியவில்லை. கனம் உறுப்பினர் வழக்கறிஞர், சிறைச்சாலையை சொர்க்கலோகம் ஆக்கத்' தாங்கள் பேராசைப்படுவதாகச் சொன்னார்கள். உண்மையிலேயே சிறைச்சாலை இன்றைக்கு சொர்க்கலோகமாகவும் இல்லை. மெய் வழிச்சாலையாகவும்' இல்லை. பூலோக நரகமாக இருக்கிறது. இதை நன்றாக அறிவார்கள், அனுபவம் வாய்ந்தவர்கள்.

சிறைச்சாலைக் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உணவுபற்றிச் சொன்னார்கள். சாதாரணமாக உணவுக்கென்று கொடுக்கப்படும் பணத்தில் பாதி யாரோ சாப்பிட்டு விடுகிறார்கள். லஞ்ச ஊழல், லஞ்ச ஊழல் என்று எங்கெல்லாமோ சொல்லிக்கொண்டிருக்கிறோம். கனம் காமராஜர் அவர்கள் இங்கே இல்லை. அவர்களிடத்தில் தனியாக எத்தனையோ முறை இது பற்றிப் பேசியிருக்கிறேன். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பாதிப் பணத்தை எடுத்துக்கொண்டு மோசடி செய்துவிடுகிறார்கள். அதே மாதிரித்தான், கைதிகளை அடிக்கிறார்கள் என்றால், மிருகத்தனமாக, சினிமாவிலே பார்ப்பது போல, நாடகத்திலே காட்டுவது போல, அடிக்கிறார்கள்.

சிறைச்சாலையில் மருத்துவ விடுதி இருக்கிறது. அதைப் பார்த்தால், கிராமப் பக்கங்களிலே எவனாவது ஒரு சாமியார் இருப்பான், அவனைப் பார்த்து விபூதி வாங்கிவரப் பெண்மணிகளெல்லாம் ஏதாவது நோய் தீர என்று போவார்கள்; அவன் சர்வ ரோக நிவாரணி என்று ஏதாவது விபூதி, வேப்பிலை உருண்டையைக் கொடுப்பான், அதற்கு இவர்கள் 100, 200 பேர்கள் க்யூ வரிசையில் நிற்பார்கள். அது போலத்தான் இந்த கைதிகள் மருத்துவ விடுதியிலும், ஏதோ ஒரு சாயத் தண்ணீரை ஊற்றிக் கொண்டே இருப்பார்கள், எல்லோருக்கும் அதையே ஊற்றிக் கொண்டிருப்பார்கள், மருந்து என்ற நிலையிலே, ஊசி போடுகிறார்கள் என்றால், மாட்டுக்குப் போடுவதுபோல ஒரு தடித்த ஊசியைப் போடுகிறார்கள். இப்படியெல்லாம் சிறைச்சாலையில் நடக்கிறது. நல்ல மருந்துகள் சப்ளை ஆகின்றன, இல்லை என்று சொல்லவில்லை. கனம் அம்மையார் இலாகாவிலிருந்து கொடுக்கிறார்கள். நல்ல மருந்துகளே விநியோகம் செய்யப்படுகின்றன. ஆனால், அவற்றை வேறு யாரோ உபயோகிக்கிறார்கள். நம் நாட்டு நோயாளிகள் தான். ஆனால் கைதிகள் அல்லாத நோயாளிகள் உபயோகப் படுத்துகிறார்கள். இந்த மாதிரி யான அசிரத்தையினால் பெரிய ஆபத்தேகூட ஏற்பட்டுவிடுகிறது. அந்த மாதிரி நான் என்னுடைய தோழர் ஒருவரை இழந்தேன். அந்த ஆஸ்பத்திரியில் ஒரு தடி ஊசி போட்டு கோ. சு. மணி என்கிற என்னுடைய ஆதித் திராவிட தோழரை ஆயிரம் விளக்குத் தொகுதியைச் சேர்ந்த நகர மன்ற உறுப்பினர் அவர்களை இரண்டு வருஷத்திற்கு முன்பு சென்னைச் சிறைச் சாலையில், இழக்க நேரிட்டது. அதுபற்றி விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவரை எங்கேயோ வேறு பக்கத்திற்கு மாற்றினார்கள். ஆனால், தவறு புலப்படாமல் போய்விட்டது. தோழர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதுதான் மிச்சம்.

வார்டர்களெல்லாம் 16 மணி நேரம், 18 மணி நேரம் என்று வேலை செய்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கே அப்பா யார் என்று தெரியாது. குழந்தைகள் தூங்கும்போதே இவர்கள் வீட்டை விட்டு கிளம்புகிறார்கள். இவர்கள் திரும்பி வீட்டுக்குப் போகுமுன் குழந்தைகள் தூங்கிவிடுகின்றன. பலவகைகளிலும் சிறைச்சாலைகள் சீர்திருத்தம் செய்யப்படவேண்டும். நேரிடையாகப் பார்த்தால்தான் தெரியும். பல ஊழல்கள் இருக்கின்றன. உதாரணமாக, அங்கே லாண்டிரி என்று இருக்கிறது. சலவைத் தொழிலாளி வேலை செய்வதைப் பார்த்தேன். அங்கே காஞ்சீபுரம் புடவையும், பனாரஸ் புடவையும், ஆரணிப் புடவையும், ஆக இப்படி விலையுயர்ந்த புடவைகளாக இருக்கவே, 'என்ன இது இம்மாதிரிப் புடவைகள் கட்டுபவர்கள் கூடவா குற்றம் செய்கிறார்கள், அப்படியென்றால், சிறைச்சாலைகள் என்ன ஆவது' என்று கேட்டபோது, அதிகாரிகள் மனைவிமார்கள் புடவைகளைத் தனியாக லாண்டிரிக்கே போடுவதில்லையென்றும், இங்கேயே போட்டுவிடுகிறார்கள் என்றும் தெரிந்தது. அதே போலத்தான், கைதிகளுடைய உணவுக்கு என்று காய்கறிகளுக்கு என்று பணம் கொடுக்கப்பட்டால் அதையெல்லாம் தாங்களே சாப்பிட்டு விடுகிறார்கள். அமைச்சர் அவர்கள் இளைஞர். அங்கேயெல்லாம் இருக்கும் பழம் பெருச்சாளிகளைப் போக்க வேண்டும்.

சென்ற வருஷம் கூடச் சொன்னேன். கோவைச் சிறைச் சாலையில் கதரிலே 3,000 ஜாக்கெட்டுகளும், 1,000 தலையணை உறைகளும் தைக்கப்பட்டன. அவை உபயோகிக்காமலே பாழடைந்து போயிருக்கின்றன. அதுபற்றி பொதுக் கணக்குக் குழுவிடம் வந்து விசாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குப் பயங்கரமாக விரயம் ஆகிறது. "சிறைச்சாலை" என்ற பெயரையேகூட "மன நோய் ஆஸ்பத்திரி" என்று மாற்றி விடலாம். சிறைச்சாலை பூலோக சொர்க்கமாக இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. எல்லோருமே மெய்வழியில் நடக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். சிறைச்சாலையிலே உள்ள கைதிகளை மக்களாகக் கருதினால்கூட போதும். இன்றைக்கு சிறைச்சாலை ஒரு தவறான கருவியாகத்தான் பயன்படுத்தப் படுகிறது. பாதுகாப்புக் கைதிகளின் நிலைமை என்ன என்பதைப் பார்த்தோம். என்னுடைய சகோதரர் திரு. கருணாநிதி அவர்களை திருநெல்வேலிச் சிறைக்குக் கொண்டு போனார்கள். லாக்-அப்பிலே போட்டார்கள். பாதுகாப்புக் கைதிகள் என்றால் என்ன? நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கருத்தில், அவர்களுடைய மனச்சாட்சியில், அவர்களுடைய தீர்ப்பில் வேண்டுமானால் திரு. கருணாநிதி அவர்கள் குற்றவாளியாக இருக்கலாமே தவிர, எந்த வழக்குமன்றத்திலும் அவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்படவில்லை. தண்டனை பெற்றவர்களுக்கும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கும் நிச்சயமாக புலத்த வேறுபாடு இருக்கிறது. பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர் கைதியே அல்ல, பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுடைய குடும்பத்தின் நிலை என்ன?

[திரு. கே. ஏ. மதியழகன்] [25th March 1966

ஏதோ 100 ரூபாய், 50 ரூபாய் கொடுக்கிறார்கள். கடலூர் சிறைச்சாலையில் பாதுகாப்புக் கைதிகள் நிலை என்ன? அவர்கள் இன்று இடதுசாரி கம்யூனிஸ்ட்டாக இருக்கலாம். நாளை சுதந்திரக் கட்சியாக இருக்கலாம். அதற்கு மறுநாள் முன்னேற்றக் கழகமாக இருக்கலாம். அல்லது, கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்களுடைய கட்சியாகக்கூட இருக்கலாம். கடலூர் சிறைச்சாலையில் பாதுகாப்புக் கைதிகளின் நிலை என்ன? சிறைச்சாலையைச் சுற்றி ஆயிரம் காவல், சிறைச்சாலையைச் சுற்றி ஏற்கனவே ஒரு நெடிய மதில் சுவர் இருக்கிறது. அதற்கும் மேலாக ஆயுதம் தாங்கிய, கத்தி முனை நீட்டிய போலீஸ்காரர்கள் ஆயிரக்கணக்கில் காவல் காத்துக் கொண்டு நிற்கிறார்கள். அதுகூட ஆச்சரியம் அல்ல, ஒரு பெரிய கோபுரம் (டவர்) எழுப்பி, அதில் 100 பேர்கள் கத்தி நீட்டப்பட்ட துப்பாக்கிகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், கைதிகள் என்ன செய்துவிடுவார்கள் என்று நினைத்து, அப்படிக் காவல் புரிகிறார்களா என்பது புரியவில்லை. உண்மையிலேயே அது சிறைச்சாலையா? அல்லது ஸ்பெஷல் ஆரம்டு போலீஸ் காம்பா? ஆயுதப் போலீசாருடைய காவல் நிலையமா? என்று கேட்கத் தோன்றுகிறது. ஆகாய வழியாக பீகிங் நகரத்திலிருந்தோ, ருஷ்யா தேசத்திலிருந்தோ யாராவது வந்து, சிறையில் இருக்கும் திரு. ராமமூர்த்தியையோ, திரு. வெங்கட்டராமனையோ அப்படியே தூக்கிக் கொண்டு போய்விடுவார்கள் என்ற எண்ணத்திலா சிறைச்சாலைக்கு மேலே காவல் செய்கிறார்கள்? பாதுகாப்புக் கைதிகளை அப்படியா நடத்துவது? சகோதரர் திரு. கருணாநிதி அவர்களை 48 பேர்களை அடைக்கக் கூடிய ஓர் அறையில் தனியாக அடைத்து வைத்திருந்தார்கள். தனியாக ஒருவர் அங்கே இருக்கவேண்டியதாக இருந்தது. அணில்தான் அவருக்கு சிநேகிதனாக இருந்திருக்கக்கூடும். பாதுகாப்புக் கைதிகளை எதற்காக லாக்-அப்பில் வைக்க வேண்டும்? அவர்களை லாக்-அப்பில் வைக்கவேண்டிய திட்டம் அவசியம் இல்லை. சிறையில் மூட்டைப் பூச்சியும் இருக்கிறதென்றால் அதை சிநேகிதன் என்று சொல்ல முடியாது. தொந்தரவு கொடுக்கும் விரோதியாக மூட்டைப் பூச்சிகள் அங்கே இருந்து அவருக்கு தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தன. இப்படிப் காவல் கைதிகள் என்பவர்களை வைக்கவேண்டும்? ஏன் அவர்களை அந்தந்த மாவட்டத்திலேயே வைக்கக் கூடாது? திரு. கருணாநிதி அவர்களை எட்டு மாவட்டங்களைக் கடந்து திருநெல்வேலி பாளையங்கோட்டைச் சிறைக்குக் கொண்டுசெல்வானேன்? சென்னைச் சிறைச்சாலை, கடலூர் சிறைச்சாலை, திருச்சி சிறைச்சாலை, மதுரை சிறைச்சாலை என்று இப்படியாகத் தாண்டி, கடைசியில் திருநெல்வேலிச் சீமைக்கா கொண்டு போகவேண்டும்? அவருடைய குடும்பத்தார் இருக்கும் ஊருக்கு அருகாமையில் ஏன் அவரை வைத்திருக்கக் கூடாது? அவர் குற்றவாளி அல்ல; பாதுகாப்புக் கைதி என்பவர்கள் சர்க்காருடைய கருத்துப்படி வேண்டுமானால், நாட்டுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவர்களாக இருக்கலாம். இந்த நிலை மாற வேண்டும். சிறையில் வைத்திருக்கும் பாதுகாப்புக் கைதிகளுக்குப் பத்திரிகைகள் வழங்குவதில் வரையறை கூடாது. [illegible]

25th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஹைகோர்ட்டும் சென்னை ஹைகோர்ட்டும் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன. இவர்களுக்குப் பத்திரிகைகள் கொடுக்கக்கூடாது என்று ஏன் தடை (பான்) செய்யவேண்டும்? பாதுகாப்புக் கைதிகளின் குடும்பங்கள் ரூ. 500, ரூ. 600 அளவுக்கு மாதம் செலவு செய்து வந்த குடும்பங்களாக இருக்கலாம். நாட்டு மக்களுக்காகப் பணிசெய்ய வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் அரசியலில் ஈடுபட்ட பாவத்திற்காக அவர்கள் சிறையில் இருக்கும்போது அவர்களுடைய குடும்பத்தாருக்கு 100 ரூபாய் அளவில் கொடுப்பதென்றால், இது எப்படிப் பொருந்தும்? இது அவர்களுடைய குடும்பத்தைச் சிதற அடிப்பது அல்லவா? அவர்களுடைய குடும்பங்களைப் பட்டினி போடும் செயல் அல்லவா?

இதே மாதிரிதான் பரோல் விவகாரமும். பரோல் எப்படிக் கொடுத்தார்கள்? (மணி அடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு, மூன்று நிமிஷங்களில் முடித்து விடுகிறேன். பாதுகாப்புக் கைதிகளைப் பரோலில் விடுகிற விஷயத்தில் சற்றுத் தாராளமாகவே இருக்கலாம். திரு. உமாநாத் பரோல் பற்றி இந்த மன்றத்திலேயே சில நாட்களுக்கு முன்பு எழுப்பப்பட்டது. திரு. உமாநாத் அவர்களின் மனைவி ஆறு மாத கர்ப்பிணியாக இருந்தபோது அவரை பரோலில் விட்டிருந்தார்கள். அந்தப் பிரச்சினை இன்னும் இருக்கிறது. நானே ஒரு சமயம் பரோல் வேண்டுமென்று கேட்டேன். பரோலில் விடப்படுபவர்களுக்கு ஒரு சுதந்திரமான நிலைமை வேண்டும். ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்று 5½ மாதம் நான் சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது இந்த மன்றத்தின் சார்பில், எதிர்க்கட்சியின் சார்பில், கனம் சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்டு, சட்டசபை, பாராளுமன்றத் தொகுதி நிர்ணயக் கமிஷனில் பணி புரிவதற்குள்ள வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டது. சட்டசபைக்கு 234 உறுப்பினர்களுக்கான தொகுதிகள் பிரிக்கப்படுவது பற்றி விவாதிக்கப் படவேண்டிய கூட்டம் உதக மண்டலத்தில் நடந்தது. அதில் நான் கலந்து கொள்ளவேண்டிய நிலையில், நான் ஏற்கனவே 5½ மாதச் சிறைத்தண்டனை அனுபவித்து முடித்திருந்தேன். அப்பொழுது நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். "என்னுடைய தண்டனைக் காலம் ஏறக்குறைய முடிந்துவிட்டது, இன்னும் பத்து பதினைந்து நாட்கள் தான் இருக்கிறது, கனம் சபாநாயகர் அவர்களால் அளிக்கப்பட்ட ஜனநாயகக் கடமையை நான் அரசியல் சட்டப்படி செய்யவேண்டியிருக்கிறது, உதகையில் நடக்கும் கூட்டத்தில் நான் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்" என்று எழுதியிருந்தேன். ஆனால், முதல் அமைச்சர் அவர்கள், கட்சி மனோபாவத்துடன் பாவித்து, என்னுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. கனம் உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் மூலமாகத்தான் மனு கொடுக்கப்பட்டது. ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதற்காகப் போடப்பட்ட என்னுடைய பரோல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. ஆனால், [illegible] இருக்கும் [illegible] தோட்ட அதிபரும் ஆலை முதலாளிக்குப் பரோல் [illegible]

கூட பரோல் கொடுக்கப்படுகிறது. ஆக, பரோலில் விடுவதில் இந்த அரசாங்கத்திற்கு ஏன் இம்மாதிரியான தடுமாற்றம் இருக்க வேண்டும்? ஜனநாயக அமைப்பின்படி சட்டசபை உறுப்பினர்களுக்கான தொகுதி பிரிக்கிற ஒரு காரியத்திற்காகப் பத்து பதினைந்து நாட்கள் பரோல் கோரியபோது அது நிராகரிக்கப்பட்டது. ஆனால், இதே சென்னையில் ஒரு கைதிக்கு ஆறு மாத தண்டனை கொடுத்திருந்து, அவர் 4½ மாதம் சிறைச்சாலையில் இருந்திருந்தால், 20 நாட்கள், 30 நாட்கள் வீட்டுக்குச் செல்லலாம் என்ற முறையெல்லாம் இருக்கிறது. ரிமாண்டு என்ற பெயர் இருக்கிறது. தொகுதி நிர்ணயக் கமிஷன் கூட்டம் உதகையில் நடந்த வரையில் என்னைப் பரோலில் விடாமல், உதகையில் அந்தக் கூட்டம் முடிந்த மறுநாளே நான் விடுதலை செய்யப்பட்டேன். முன்பே என்னை விட்டிருந்தால் நான் அதில் கலந்துகொண்டிருக்க முடியும். நான் அதில் கலந்துகொள்ளக்கூடாது என்பது போன்ற மனோபாவத்தோடு, அரசியல் மனோபாவத்தோடு, அடக்குமுறை மனோபாவத்தோடு தான் அவ்வாறு பரோலில் விட மறுத்திருக்கிறார்கள். சிறைச்சாலை பயன்பட வேண்டும் என்றால், அது சீர்திருத்த தலமாக இருக்கவேண்டும். சிறைச்சாலைகளைச் சீர்திருத்த நிலையங்களாக மாற்றியமைக்கவேண்டும் என்ற மனோபாவம் இல்லாமல், குறுகிய நோக்கங்களுக்காகச் செயல்படுமானால், அடக்குமுறை ஆயுதமாகச் செயல்படுமானால், நான் தெளிவாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க் கட்சிகளை, அரசியல் எதிரிகளாகக் கருதிப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் அவர்களுக்கு ஒரு படிப்பினை சொல்லுவேன். கானா நாட்டில் இன்க்ருமா என்பவன் சிறைச்சாலையில் அரசியல் எதிரிகளை அடைத்தான். இன்றைக்கு அந்தச் சிறைச்சாலையும் இல்லை. இன்க்ருமாவும் இல்லை. இன்க்ருமாவினுடைய பாதை பயங்கரமான பாதை. அந்தப் பாதையிலே இல்லாமல், நல்ல சீர்திருத்தங்களும் நல்ல நிலைமைகளும் செய்வதற்கும் இன்க்ருமாவின் வரலாறு உங்களுக்குப் படிப்பினையாக இருக்கவேண்டும் என்று இந்த ஆட்சியாளருக்குக் கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் பேசும்போது, ஏதோ கிராமத்தில் சாமியார் வேப்பிலை அடித்துக்கொண்டிருந்தார் என்றும், 300 கிராமப் பெண்கள் ஒரே வரிசையாகப் போய் நின்றார்கள் என்றும் சொல்லிக் கிராமப் பெண்களுக்கு குறைவு வரக்கூடிய அளவிற்குக் கருத்தைச் சொன்னார்கள். அது உண்மைக்கு மாறான கருத்து. இப்பொழுது எந்தக் கிராமத்திலும் அப்படிப்பட்ட நிலைமை இல்லை.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினருக்கு நம்பிக்கை இல்லை, அதை அவர் சொன்னார். அவ்வளவு தான்.

திருமதி சி. குழந்தையம்மாள்: கிராமத்துப் பெண்களை அவர் குறைவாகப் பேசினார் என்பதைத்தான் நான் சுட்டிக் காட்டினேன். எந்தக் கிராமத்திலும் அப்படி நடப்பதில்லை.

கனம் சபாநாயகர்: அவருக்கு நம்பிக்கை இல்லை என்று அவர் குறிப்பிட்டார். அவ்வளவுதான்.

திருமதி சி. குழந்தையம்மாள்: பெண்களையே குறைவுபடுத்தி அவர் சொன்னார். அதுவும் கிராமப் பெண்களை மரியாதைக் குறைவாக அவர் இந்தச் சபையில் குறிப்பிட்டிருக்கிறார். எந்தக் கிராமத்திலும் அவ்வாறு நடக்கிறது என்று அவர் குறிப்பிட முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன்: காரமடையில் இன்றைக்குக்கூட அம்மா திரி போகிறார்கள்.

கனம் சபாநாயகர்: இங்கே மத சம்பந்தமான சங்கதிகளைப் பேச அதிக உரிமை கிடையாது. நம்பிக்கை இருக்கிறவர்கள் விபூதி வாங்கிக்கொண்டு போவார்கள். அது அவர்களுடைய பொறுப்பு. ஆனால், அதிலே நம்பிக்கை இல்லாதவர்கள் கேலி பண்ணிக்கொண்டிருக்கலாம். அதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? இதையெல்லாம் பெரிதாக்கக் கூடாது.

கனம் திரு. கோ. பூவராகன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் மத்திய சிறைச்சாலை, மாவட்ட சிறைச்சாலைகள், கிளைச் சிறைச்சாலைகள், பெண்கள் சிறைச்சாலை பார்ஸ்டல் ஸ்கூல்ஸ் இத்தனையும் இடம் பெற்றிருக்கின்றன. இந்த விவாதத்தில் கலந்துகொண்ட கனம் அங்கத்தினர்கள், பொதுவாக சிறைச்சாலைகள் நல்ல முறையில் சீராக, நன்றாக நடக்கவேண்டும் என்று கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இதிலே, எதிர்க் கட்சி கனம் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சிறைச்சாலையில் அவரவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லிக்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றுதான் நான் இந்தச் சமயத்தில் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் சிறைச்சாலைக்குச் சென்றபோது, அவ்வாறு இருந்தது, இவ்வாறு இருந்தது என்று சொன்னார்கள். உணவுப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். சிறைச்சாலைகளில் அளிக்கப்படும் உணவு நன்றாக இல்லை, கல்லும் மண்ணும் கலந்திருக்கிறது என்று சொன்னார்கள். நான் சிறைச்சாலைக்கு முன் அறிவிப்பு இல்லாமல் போயிருக்கிறேன். சிறைச்சாலைக்கே போய்ப் பார்க்கவில்லை என்று சொல்வது சரியல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான், சிறைச்சாலைக்கே போய்ப் பார்த்தது இல்லை என்று சொல்லவில்லை. தண்டனை பெற்று சிறைச்சாலையில் போய் இருந்தது இல்லை என்றுதான் சொன்னேன்.

கனம் சபாநாயகர்: இவர் அதற்குப் பக்கத்தில்கூடப் போகவில்லை என்று வேறு ஓர் அங்கத்தினர் குறிப்பிட்டார். நீங்கள் எந்தக் கருத்தில் சொன்னீர்கள் என்பது இப்போது தெரிந்துவிட்டது. (சிரிப்பு.)

கனம் திரு. கோ. பூவராகன்: நான் கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றைக்கும் தவறு செய்து விட்டு சிறைக்குப் போகக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காது. நான் அவ்வாறு போகவும் மாட்டேன்.

(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் எழுந்தார்கள்.)

கனம் சபாநாயகர்: நீங்கள் இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. தொடர்ந்து விவாதத்தில் இருக்கும் விஷயத்தைப் பற்றிப் பேசுங்கள்.

SRI K. A. MATHIALAGAN: On a point of Order, Sir. கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குப் போனார்கள், அதனால் தங்கள் அனுபவங்களைச் சொல்வதற்கு அதைப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்று முதலாகச் சொல்லிவிட்டு, தவறு செய்து விட்டுப் போகும்படியான சந்தர்ப்பம் தனக்கு வராது என்று சொல்கிறார்கள். இது எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய செயலுக்கு ஓர் உள்நோக்கம் கற்பிப்பதாக இல்லையா?

கனம் சபாநாயகர்: அதில் உள்நோக்கம் ஒன்றும் இல்லை.

கனம் திரு. கோ. பூவராகன்: நான் முன் அறிவிப்பின்றி சிறைச்சாலைக்குப் போகிறபோதெல்லாம் அங்கு கொடுக்கப்படுகிற உணவுப் பொருள்களைப் பார்த்திருக்கிறேன். அவை சுத்தமானதாக இருக்கிறதா, குறிப்பிட்ட அளவு கொடுக்கப்படுகிறதா என்று பார்த்த போதெல்லாம் என்னுடைய அபிப்பிராயம் அவை நல்ல முறையில் தான் வழங்கப்படுகிறது என்பதாகும். வேதாரண்யத்தில் இருந்து கைக்குத்தல் அரிசி வாங்கி திருச்சி சிறைச்சாலையில் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அங்கிருந்து வாங்கி உபயோகிப்பதில் என்ன தவறு என்று தெரியவில்லை. பக்கத்தில் உள்ள மாவட்டம்—வேதாரண்யம் கூட்டுறவு சங்கத்தில் நல்ல முறையில் கைக்குத்தல் அரிசி தயாரித்து சப்ளை செய்கிறார்கள். அங்கே வாங்குவதன் மூலம் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் ஊக்கம் அளிப்பது போல அமைகிறது. அந்த அரிசியும் நன்றாக இருக்கிறது. மேலும் உணவு தயாரிக்கின்றபோது தனித்தனியாக இருக்கவேண்டும் என்றார்கள். ஒரே இடத்தில் பொருள்களை வைக்கவேண்டும். அப்போதுதான் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணித்துக்கொள்ள முடியும். வசதியும் இருக்கின்றதா என்று பார்க்கவேண்டும். இவை எல்லாவற்றையும் பார்க்கிறபோது இப்போதுள்ள முறையே சரியானதாகும்.

சாப்பாட்டிற்கு என்று தனியாக டைனிங் ஹால் இருக்க வேண்டும் என்றார்கள். இப்போதே சிறைச்சாலைகளில் நீள வாராண்டா இருக்கிறது. அங்கே உட்கார்ந்துதான் சாப்பிடுகிறார்கள். இதுவே சரியானதாகவும், போதுமானதாகவும் இருக்கும்.

இன்னும் சிறைச்சாலைகளில் துணி கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். துணி கொடுப்பதில் பூச்சி இருக்கிறது என்றார்கள். இது சரியல்ல. ஒரு வாரம், இரண்டு வாரம் [illegible]

வர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் புதுத்துணி கொடுப்பது என்பது முடியாத காரியம். சுத்தமான துணிகளே கொடுக்கப்படுகின்றன. சிறைச்சாலைக்கு வருகிறவர்களை மூன்றுவிதமாகப் பிரித்து அவரவர்களுக்குத் தகுந்தவாறுதான் துணி கொடுக்கிறார்கள். இதுபற்றியும் நன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

சிறைச்சாலையில் போடுவதற்கு முன் க்வாரண்டைனில் வைக்கிறார்கள். அங்கே கொடுமைப்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். ஏற்கனவே இருக்கிற கைதிகளோடு இவர்களைப் போடுவதற்கு முன் இவர்களுக்குத் தொத்துநோய் இருக்கிறதா, வேறு ஏதாவது வியாதி இருக்கிறதா என்று பார்த்துத்தான் போட வேண்டியிருக்கிறது. சிறையில் இருப்பவர்களின் நலனை உத்தேசித்தே தான் இப்படிச் செய்ய வேண்டியிருக்கிறது. கைதிகளை கொடுமைப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

குளிக்கவும், குடிக்கவும் சிறைச்சாலையில் இருக்கும் தண்ணீர் கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். திருச்சி சிறைச்சாலை பற்றியும் சொல்லப்பட்டது. வேனிற் காலத்தில் வெளியில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். இன்னும் அங்கே ஆழக் குழாய்க் கிணறு போட்டு தண்ணீர் பஞ்சமே இல்லாது இருக்கும்படியான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே, சிறைச்சாலையில் உள்ள தண்ணீர் கஷ்டத்தைப் போக்கவும் அரசாங்கம் ஆவன செய்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு சிறைக்காலம் முடிவதற்கு முன்பே சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். சிலரை ஐந்து வருஷத்தில் விட்டு விடுகிறார்கள், சிலரைப் பத்தாண்டு காலம் ஆனாலும் விடுவதில்லை என்பதாகச் சொன்னார்கள். இதற்கென்று ஒரு குழுவே அமைக்கப்பட்டிருக்கிறது. அது அடிக்கடி கூடுகிறது. தண்டனைக் காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு தண்டனையை அனுபவித்துவிட்டால் அவர்கள் பெயர் இந்தக் குழுவுக்கு வருகிறது. சிறைச்சாலை அதிகாரிகளும் இந்தக் குழுவில் இருப்பார்கள். இவர்கள் எல்லோரும் கலந்து ஆலோசித்துத்தான் யார் யாரை வெளியில் விட்டுவிடலாம் என்று தீர்மானிக்கிறார்கள். இப்படி வெளியில் அனுப்புவதில் கஷ்டம் இருக்க முடியாது. இந்த ஏற்பாட்டுக்கு மாறாக நாம் ஏதாவது செய்ய வேண்டுமென்றால் சட்ட விதிகளையே மாற்ற வேண்டும். அப்படி மாற்றும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை.

அடுத்து, அடிக்கடி குற்றம் செய்கின்ற கைதிகளையும், ஏதோ சில சமயம் குற்றம் செய்து சிறைக்கு வருகின்றவர்களையும் ஒன்றாக வைப்பதாகச் சொன்னார்கள். அப்படி இல்லை. பரம்பரைக் குற்றவாளிகளாக இருந்தால் சேலம், கடலூர் போன்ற இடங்களில் வைக்கிறோம். எல்லோரையும் ஒன்றாக வைக்கக்கூடாது என்ற

[திரு. கோ. பூவராகன்] [25th March 1966

நிலையை குறித்து பரிசிலனை செய்து அடிக்கடி குற்றம் செய்கிறவர்களைத் தனியாகத்தான் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

சிறைச்சாலையில் அளிக்கப்படும் வைத்திய வசதியைப் பற்றிச் சொன்னார்கள். 'சிறைச்சாலையில் வைத்திய வசதி மோசமாக இருக்கிறது. எல்லாவித வியாதிக்கும் ஒரேவிதமான மருந்தைக் கொடுக்கிறார்கள்' என்றெல்லாம் சொல்வதற்கு இடமே இல்லை. சிறைச்சாலையில் டாக்டர்கள் இருக்கிறார்கள். கைதிகளுடைய நோயை நன்கு பரிசிலித்து தக்க மருந்து கொடுக்கிறார்கள். மார்பில் வலி, உடம்பில் வலி என்றால்கூட சட்டென்று தக்க முன்னேற்பாடாக எல்லாவிதப் பரிசீலனைகளும் செய்கிறார்கள். சமயத்தில் அருகில் உள்ள பெரிய ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பி வைக்கிறார்கள். சிறைச்சாலையில் இருக்கும் கைதிகளே சில சமயம் "எனக்கு அந்த மருந்து வேண்டாம், இந்த மருந்து கொடு, இன்ன மாத்திரை கொடு, இன்ன ஊசியைப்போடு" என்று சொல்கிறார்கள். கைதிகள் சொல்கிறபடி டாக்டர்கள் செய்ய முடியாது. அப்படித்தான் செய்ய வேண்டுமென்று சொல்வதும் பொருத்தமாக இருக்காது. கனம் உறுப்பினர் மதியழகன் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள், 'ஏதோ தடித்த ஊசியைப் போட்டார்கள். ஒரே வலியாய் இருந்தது' என்பதாக. எந்த நோய்க்கு எந்த ஊசியைப் போடவேண்டும் என்று தீர்மானிக்கவேண்டியவர்கள் வைத்தியர்கள். கைதிகளே குறிப்பிடுகிற ஊசியைப் போட்டுவிட்டு அதன் விளைவுகளுக்கு அவர்கள் பொறுப்பாளியாக இருக்கக் கூடாது. அதுவும் தற்போது சிறைச்சாலையில் வைத்திய வசதியை எவ்வளவு நல்லமுறையில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைப்பற்றி—அங்கே சென்று வந்தவர்களுக்குத் தெரியும். அதைப் பாராட்டுவார்கள் என்றும்கூட நான் நினைத்தேன். மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். பாராட்டாவிட்டாலும் வைத்திய வசதியைப் பற்றி குறைவாக இருக்கிறது என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கம் இத்துறையில் போதுமான கவனம் செலுத்தி வருகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே அதைப்பற்றி கனம் முதலமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். பரோலில் விடப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். கஷ்டங்கள் இருக்கின்றன, சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். கஷ்டம் ஏற்படுவதற்கு வழி இல்லை. அவ்வப்போது மனுக்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளில் எந்தக் கோரிக்கைகள் நியாயமான கோரிக்கைகள் என்பதைப் பரிசீலனை செய்து பார்த்துத்தான் அனுமதி கொடுக்கிறார்கள். சில சமயங்களில் ஒருவர் இறந்துவிட்டார் என்றால் அவருடைய ஈமச் சடங்குகளைச் செய்வதற்குச் செல்ல வேண்டுமென்று மனுக்கொடுக்கிறார், அது பரிசீலிக்கப்பட்டு நியாயமாக இருந்தால் அனுமதியளிக்கப்படுகிறது என்பதை இங்கேயுள்ள அங்கத்தினர்களில் பலர் உணர்வார்கள். 'என்னை விடவில்லை, கள்ள நோட்டு சம்பந்தப்பட்டவர்களை விடுகிறார்கள்' என்று சொன்னார்கள். எதற்காக, எந்தக்

25th March 1966] [திரு. கோ. பூவராகன்]

காரியத்திற்காக, எந்தச் சந்தர்ப்பத்தில், எப்படி விடவேண்டுமென்று நியதி இருக்கிறது. யாரையும் பரோலில் விடக்கூடாது என்ற காரணத்திற்காக விடாமல் இருப்பது இல்லை. கொலை செய்தவர்கூட பரோலில் விடவேண்டுமென்று கேட்டால் அவர் கூறுகின்ற காரணம் சரியான காரணமாக இருந்தால் பரோலில் விடப்படுகிறார். ஆகவே, நியதிப்படிதான் பரோலில் விடப்படுகிறார்கள்.

திறந்தவெளிச் சிறைச்சாலை பற்றிச் சொன்னார்கள். திறந்த வெளிச் சிறைச்சாலையை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய சிறைச்சாலை புழல் கிராமத்திற்கு மாற்றப்பட இருக்கிறது. அப்படி மாற்றப்படுகிற பொழுது திறந்த வெளிச் சிறைச்சாலை அங்கே ஏற்படுத்துவதற்கு வாய்ப்பும் வசதியும் செய்யவேண்டுமென்ற முன்னெச்சரிக்கையோடு செய்யப்படுகிறது. கோவை நகரத்திலே சிங்காநல்லூர் சிறைச் சாலையிலே அங்கேயுள்ள 25 ஏக்கர் நிலத்திலே திறந்த வெளிச் சிறைச்சாலை ஏற்படுத்தப்பட்டு அது நல்ல பலனைத் தருகிறது. இன்றைய தினம் எல்லாச் சிறைச்சாலைகளிலும் உள்ள இடங்களை நன்றாகப் பயன்படுத்துகிறார்கள். போதுமான அளவிலே அங்கே விவசாயம் நடைபெறுகிறது. காய்கறி பயிரிடுகிறார்கள், அங்கே வளர்க்கின்ற மாடுகளுக்கு புல் விளையச் செய்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் அந்த இடங்களிலே உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய அளவிலே அந்த திறந்த வெளிச் சிறைச்சாலையிலே செய்கிறார்கள். மத்திய சிறைச்சாலையிலும், மாவட்டச் சிறைச்சாலைகளிலும் நிறைய இடம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தவேண்டுமென்று திட்டம் தயாரித்து விவசாய இலாகா டைரக்டர், மற்ற மேல் அதிகாரிகளுடைய யோசனை கேட்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

ஒரு சிறைச்சாலையை எடுத்துக்கொண்டால் அங்கே நல்ல முறையிலே காரியங்கள் நடைபெறவேண்டும் என்றுதான் முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. அங்கே மோசடிகள் நடக்கின்றன என்று சொன்னார்கள். அங்கே மோசடிகள் நடப்பதற்குச் சந்தர்ப்பமே இல்லை. இதையெல்லாம் ஏற்படாமல் கவனிப்பதற்காக ஒரு டி.ஐ.ஜி. நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்கள் மத்திய சிறைச்சாலைக்கும், மாவட்ட சிறைச்சாலைகளுக்கும் அவ்வப்போது சென்று சோதனைகள் செய்து கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கும், குறைகள் இருந்தால் போக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சிறைச்சாலையே ஒரு சொர்க்க பூமியாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். மெய்வழிச் சாலையாக இருக்க வேண்டுமென்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கும். பொய் வழியிலே சென்றவர்களை, மெய்வழிப்படுத்துவது என்று சொன்னால் அதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். அவர்களுக்குப் பழக்கப்பட்ட வேலைகளை அங்கே கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு,—சொர்க்கத்தையோ அல்லது நரகத்தையோ பார்த்து எப்படியிருக்கும் என்று யாரும் சொல்ல

முடியாது—மெய்வழிச் சாலையாக ஆக்குவதற்கு—மெய்வழிச் சாலை என்பதைப்பற்றி எல்லோருக்கும் தெரியும்—எல்லாவகைகளிலும் அரசாங்கம் முயற்சி செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The cut motion was put and declared lost.

A poll was demanded.

The Hon. Speaker called first those Members who were in favour of the cut motion to rise in their seats, then those who were against the cut motion and then those who remained neutral. The number of Members who rose in favour of the cut motion was 40, against the cut motion 68 and neutral 1.

The cut motion was lost.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, டிவிஷன் வருகிற நேரத்தில் ஓட்டுக்களை எண்ணுவது முறையாக இருந்தாலும் கூட, சபாநாயகர் அவர்களுடைய உரிமையாக இருந்தாலும் கூட, ஒவ்வொருவரும் தங்களுடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டால் யார் சாதகமாக ஓட்டளித்தார்கள், யார் எதிர்த்து ஓட்டளித்தார்கள் என்பது வாக்களித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அந்த முறையைப் பின்பற்ற சபாநாயகர் அவர்கள் முன் வருவார்களா ?

MR. SPEAKER : In order to save time, we are doing it.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் காலத்தை மிச்சப்படுத்தும் வகையில் பாராளுமன்றத்தில் இருப்பதுபோல் இயந்திர முறையைக் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் சபாநாயகர் : அது கொண்டு வந்தால் நல்லதுதான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் ஒரு விஷயத்தை இது சம்பந்தமாகக் கனம் சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த டிவிஷன் கேட்பது எதற்காக என்றால் ஒவ்வொரு அங்கத்தினரும் தாங்கள் எதற்காக ஓட்டுச் செய்தோம் என்பது புரொசீடிங்ஸில் ரெக்கார்டு ஆக வேண்டும் என்பதற்காகத்தான். இந்த முறையில் ஓட்டு எடுத்தால் பெயர்கள் ரெக்கார்டு ஆகாது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். கனம் துணைத் தலைவர் அவர்கள் சொல்வது கவனிக்கப்பட வேண்டியதுதான். வெளியிலே பிரசாரம் செய்வதற்கு பெயர்கள் பதிவாக வேண்டுமென்று சொல்கிறார்கள். அதுவும் தேர்தல் நேரத்தில் ரொம்பவும் அவசியம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு பெயராகச்சொல்லி விளம்பரம் வருவதும் ஒன்றுதான்; கட்சியாக விளம்பரம் வருவதும் ஒன்றுதான். கட்சிகளிலே அந்த அளவுக்குக் கட்டுப்பாடு இருக்கிறது. காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எல்லாக்

கட்சிகளும் கட்டுப்பாடாக இருக்கின்றன. கட்சிக்குள்ளேயே பலவிதமாக ஓட்டுப் போடுகின்ற நிலைமை இல்லை. ஆகவே, கட்சி இந்த மாதிரி ஓட்டுப் போட்டிருக்கிறது என்பது தெரிந்தாலே போதுமானது.

திரு. மு. கருணாநிதி : சுயேச்சைகள் இருக்கிறார்கள் ; அவர்கள் எப்படி வாக்களித்தார்கள் என்பதை எப்படி தெரிந்து கொள்வது ? அதையும் முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லுகிற யோசனையை ஏற்றுக் கொள்வதில் எனக்குச் சிறிதும் ஆட்சேபனை இல்லை. பிளாக்கு பிளாக்காக ஓட்டு எடுத்தால் அதிலே கட்சி, சுயேச்சை எல்லாம் வந்து விடும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதலமைச்சர் அவர்கள் கூறுவது முற்றிலும் சரியல்ல. நம்முடைய சபையிலே அங்கத்தினர் என்ற முறையில் பரிபூரண உரிமை இருக்கிறது. 'விப்' கொடுக்க உரிமை இருக்கிறது ; ஆனால் 'விப்' கொடுத்திருக்கிறோம் என்று சொல்வது அன்பார்லிமெண்டரி; ஜனநாயகத்திற்கு விரோதமானது.

கனம் சபாநாயகர் : டிஸ்கஷனுக்கு உங்கள் நேரம் குறைந்து விடுமே என்பதால் இந்த முறையில் ஓட்டு எடுத்தேன். இன்னும் அரை மணி நேரத்திற்கு இதை நடத்திக் கொண்டிருந்தாலும் எனக்கு ஒன்றுமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இன்றைக்குத் திரும்ப ஓட்டு எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. இதே முறை இந்தச் சபையிலே அமலுக்கு வந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

MR. SPEAKER : Though the Chair has got a right to decide in what manner the division is to take place, if the hon. Members feel that the names of the Members should be recorded, I have no objection.

So, I am going to reduce the number of hon. Members who are to speak on other Demands.

Now, the question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1.94,39,400 under Demand No. XI—Jails'.

The Demand was put and carried and the Grant was made.

(3) DEMAND NO. XVII—FISHERIES.

(4) DEMAND NO. XXXIV—STATIONERY AND PRINTING.

MR. SPEAKER : We have got 11 hon. Members to speak on the Demand and the hon. Member, Sri Rama Arangannal will speak last before the Hon. Minister replies to the debate. I cannot give more than three minutes for each hon. Member.

[25th March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சியினருக்குச் சம்மதம் இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். ஃபிஷரிஸ் முக்கியமான டிமாண்டு. கவர்ன்மெண்ட் பிரசில் அதிகமாகப் பேசவில்லை என்று ஒப்புக் கொண்டால் பிஷரிசுக்கு 1½ மணிநேரம் வைத்துக் கொள்ளலாம். கவர்ன்மெண்ட் பிரஸ்ஸைப் பொருத்தவரை விவாதம் இல்லாமலே ஓட்டு எடுத்துவிடலாம். (திரு. சா. கணேசனும் மற்றும் சில அங்கத்தினர்களும்: 'கவர்ன்மென்ட் பிரஸ் பற்றியும் பேச வேண்டும்.) கவர்ன்மென்ட் பிரஸ் பற்றிப் பேசுவதும் முக்கியம் என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை. பேசலாம்.

திரு. மு. கருணாநிதி: இரண்டையும் சேர்த்துப் பேசலாம்.

கனம் சபாநாயகர்: யார் யார் எதிலே பேச வேண்டுமோ அதிலே பேசிக் கொள்ளட்டும்.

So, we are now going to have discussion on both the Demands simultaneously. There are about 20 hon. Members to speak on both the Demands for two hours. No hon. Member can take more than five minutes each.

The Demands and the cut motions moved by the hon. Members Sri A. Swamidhas and Sri Saw. Ganesan are now before the House for discussion.

* **திரு. ஆ. துரையரசன்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, மீனவ இலாகா மான்ய விவாதத்தில் எங்கள் கட்சிக்காரர் தந்திருக்கிற வெட்டுப்பிரேரணையை ஆதரித்து, ஒருவேற்று என் கருத்துக்களை தங்கள் மூலம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். நம் நாட்டிலே, சிறப்பாக தமிழகத்திலே பல்வேறு இலாகாக்களைப் போலவும் மீனவர் இலாகா சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது என்று சொன்னாலும் கூட மீனவர் சமுதாயத்தைச் சார்ந்த அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம், அவர்களுடைய நாகரீகம், அவர்களுடைய கல்வி, அவர்களுடைய சுகாதாரம், அவர்களுடைய பொருளாதார நிலை போன்றவை இன்னும் முன்னேற்றப்படாமல் இருக்கின்ற நிலையை இந்த சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடலோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஆண்டுக்கு ஒரு முறை புயலின் அபாயத்திற்கு ஆளாக்கப்பட்டு, உயிரையும் துச்சமென மதித்து வாழ்கிற ஒரு பரிதாபகரமான நிலை நம்முடைய நாட்டில் இன்னும் இருந்து வருகிறது. (**கனம் உதவி சபாநாயகர் தலைமை**) இந்த இலாகாவின் மூலம் அவர்களுடைய தொழிலுக்கு தொடர்ந்து சில பல உதவிகளைச் செய்தாலும் கூட அவர்கள் வசிக்கிற இடங்கள் சுகாதாரமற்ற நிலையில், குந்துவதற்கு குடிசை கூட இல்லாத நிலைமையில் நீடித்துக் கொண்டே வருகிறது. இந்நிலையைப் போக்குவதற்கு உடனடியாக தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1964-ல் அடித்த கோரப் புயல் காரண

25th March 1966] [திரு. அ. துரையரசன்]

மாக இராமநாதபுரம், தஞ்சை மாவட்ட கடலோரங்களில் வாழும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு கோரத்திற்கு உள்ளானார்கள், எவ்வளவு தூரம் துன்பத்திற்கு ஆட்பட்டார்கள் என்ற நிலையை நேரடியாக அந்த வட்டாரங்களைச் சுற்றிப் பார்த்த அமைச்சர்களும், அதிகாரிகளும் நன்கு அறிவார்கள். அப்படி பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்குத் தரப்பட்ட நிவாரணம், முதலில் 40 ரூபாய் ஆரம்பத்தில் தந்தார்கள். பின்னர் 150 ரூபாய் வீதம் வீடுகள் கட்டிக் கொள்ள தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டத்திலுள்ள கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. ஆனால் இந்த 150 ரூபாய் அந்த ஏழை மீனவர் குடும்பங்களுக்கு காலாகாலத்தில் கிடைக்கிறதா என்றால் இல்லை. இந்த 150 ரூபாய் வாங்கியவர்கள் 25 மைல், 30 மைல் கடந்து சென்று அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்ற தலைநகரங்களுக்கு வந்து சந்திக்கவேண்டிய அதிகாரிகளைச் சந்தித்து, நடக்கவேண்டிய இடத்திற்கெல்லாம் நடந்து சென்று குறைந்தபட்சம் 50 ரூபாய் செலவழித்துத்தான் ஆளுக்கு 150 ரூபாய் வீதம் வாங்கியிருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு வீடு கட்டிக் கொள்ளமுடியுமா என்பதை ஒரு கணம் நன்கு சிந்தித்துப் பார்த்து அவர்கள் வாழ்கிற கடலோரப் பகுதிகளில் சுகாதாரமான இடங்களாகப் பார்த்து அரசாங்கம் கூட்டுறவு முறையிலே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டத்தை தீவிரமாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக மீன் உடலுக்கு நல்லது. உணவிற்குப் பதிலாக மீனைச் சாப்பிடலாம் என்று நம் அமைச்சர்கள் உணவுப் பஞ்ச நேரத்தில் அடிக்கடி குறிப்பிட்டதை இந்த நேரத்தில் தங்கள் மூலம் அமைச்சருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அவ்வளவு சிறப்பு வாய்ந்த உணவை எடுத்துத் தருகிற மீனவ மக்கள், ஆழ் கடலுக்குள் சென்று உயிரையும் துச்சமாக மதித்து அதை எடுத்து வருகிற அந்த சமுதாய மக்கள் இன்னும் இவ்வளவு கேவலமான ஒரு நிலையில் அவர்கள் வாழ்க்கை அமைந்து இருக்கிறது. அந்த நிலைமையை ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு, நீண்ட காலக் கடன்கள், வட்டியில்லாத கடன்களாக தரவேண்டும். இந்த சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு கல்விச் சாலை வசதியில்லை. பலருக்கு, அநேகமாக எல்லோருக்கும் என்று கூடச் சொல்லலாம், சொந்தமான நிலம் கூட கிடையாது நின்ற நிலையில் தான் இருக்கிறார்கள். ஆகவே நிலமற்ற அந்த ஏழை சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு நிலம் வழங்கி, அவர்களுடைய குழந்தைகளுக்கு படிக்க கல்வி வசதி செய்து கொடுக்க எல்லாச் செலவினங்களையும் அந்த இலாகாவோ அல்லது அரசாங்கமோ மேற்கொண்டு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என் வட்டாரத்தில் சமீபத்தில் ஒரு பெரிய மீன் புத்துக்கிடா என்ற கிராமத்தில் ஒதுங்கிய செய்தியை பத்திரிகை வாயிலாகப் பார்த்திருப்பீர்கள். அமைச்சர் அவர்களும் அதை அறிந்திருப்

[திரு. ஆ. துரையரசன்] [25th March 1966

பார்கள் என்று கருதுகிறேன். அந்த மீனின் மதிப்பு கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் வரை இருக்கும் என்று கூட வந்து பார்த்த அதிகாரிகள் தெரிவித்தார்கள். அதிலிருந்து ஏராளமான மீன் எண்ணெய் எடுக்கமுடியும் என்று சொல்லி அங்கு ஆராய்ச்சிகள் கூட நடத்துவதற்காக ஒரு சில அதிகாரிகள் திட்டமிட்டிருந்தார்கள். இதைச் சொல்லக் காரணம், பலயிடங்களை விட தஞ்சை மாவட்ட கடலோரப் பகுதிகளில் கிடைக்கிற மீன்கள் பச்சை மீன்களாக இருந்தாலும் சரி அல்லது ட்ரைட் ஃபிஷ் என்று சொல்லப்படுகிற கருவாடாக இருந்தாலும் சரி அவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். மீன்களைப் பிடித்து பதப்படுத்துவதற்கும், மீனவர் களுக்கு விசைப்படகுகள் வழங்குவதற்கும், வெளிநாடுகளுக்கு மீன்களை அனுப்புவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரவும் ஆகிய இத்தகைய ஏற்பாடுகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அறந்தாங்கி வட்டக் கடலோரத்தில் வழி காட்டு வதற்கு விளக்குகள் வேண்டுமென்று மாவட்ட மன்றத்தில் கூட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டும் அந்த இலாகாவில் அந்த பேப்பர் தூங்கிக் கொண்டிருக்கிறதென்று நினைக்கிறேன். எனவே அவர்களுக்கு (கலங்கரை விளக்கம்) வழிகாட்டுகிற விளக்குகள் போன்ற வசதிகளை எல்லாம் செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பெ. ராஜகோபால்: கனம் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூறவிரும்பு கிறேன். சமுதாயத்தில் பின்தங்கியிருக்கிற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கம் பல நல்ல வழிவகைகளை வகுத்து, நல்ல திட்டங்களைப் போட்டு அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பாடுபட்டுக்கொண்டு வருகின்றார்கள். பின் தங்கிய வகுப்பினர் என்று கூறுகிறபோது குறிப்பாக பொருளா தாரத் துறையிலும், கல்வித்துறையிலும், நாகரீகத்திலும் ஒருசில பின்தங்கிய மக்கள் தங்கள் உழைப்பையே நம்பி அதன் மூலம் வருகிற ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பாக சமுதாயத்தில் மக்கள் ஒரு குறிப்பிட்ட தொழிலையே நம்பி அதன் மூலம் வருகிற ஊதியத்தை வைத்து வாழ்ந்து வருகின்ற ஒரு நிலையைப் பார்க்கின்றோம். அந்த வகையில் பார்க்கிறபோது இந்த மீனவ சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மீன் பிடிக்கின்ற ஒரு தொழிலை மட்டும் தங்கள் முக்கிய தொழிலாகக் கொண்டு அதன்மூலம் கிடைக்கின்ற ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள். இந்த மீன் பிடிக்கிற தொழில் முன்னேற்றம் அடையவேண்டும், அதன் மூலம் அதை நம்பி வாழ்கிற மீனவ சமூகத்தினர் நல்ல நிலை அடையவேண்டுமென்று அரசாங்கம் பல நல்ல திட்டங்களைப் போட்டு அந்த ஏழை சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் முன்னேற்றம் அடையவேண்டு மென்று பாடுபட்டு வருவதைப் பார்த்து பெருமைப்படுகிறேன்.

25th March 1966] [திரு. பெ. ராஜகோபால்]

இந்த மீன் வளர்ச்சிக்காக அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்
கிற நடவடிக்கைகள், இனி நடக்க இருக்கிற நடவடிக்கைகள்
இவற்றைப் பற்றி குறிப்பேட்டில் கொடுக்கப் பட்டிருப்பதைப்
பார்க்கும்போது அவை பாராட்டவேண்டிய நிலையில்
இருக்கின்றன. நான் ஒரு சில குறைகளை மட்டும் இங்கு
குறிப்பிட விரும்புகிறேன். மீன் பிடிக்க தேவையாக இருக்கின்ற
முக்கியமான கருவிகள், விசைப்படகுகள், படகுகள், கட்டுமரங்கள்;
வலைகள் இவைகள்தான். மீனவர்கள் ஆழ்கடலுக்குள் சென்று
மீன்களைப் பிடித்து வரவேண்டும். ஆழ்கடலுக்குள் செல்வதனால்
ஏற்படக் கூடிய ஒருசில விபத்துக்களை தடுக்கவேண்டுமென்று
அரசாங்கம் விசைப்படகுகளை விநியோகம் செய்து வருகிறார்கள்.
இவற்றை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்குகிறார்கள். செங்கல்
பட்டு ஜில்லாவில் ஆரம்பாக்கம் முதல் கன்னியாகுமரி ஜில்லாவில்
உள்ள வல்லிவில்லி வரையில் 371 கூட்டுறவு சங்கங்கள் இருப்பதாக
குறிப்பேட்டில் கொடுத்திருக்கிறார்கள். இந்த சங்கங்களுக்
கெல்லாம் இன்னும் சரியாக விசைப்படகுகள் கொடுக்கப்பட
வில்லை. ஒரு சில சங்கங்களுக்குத்தான் கொடுக்கப்
பட்டிருக்கின்றது. விசைப் படகுகள் கொடுப்பது ஆழ்
கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதற்குத்தான். ஆனால்
சிலர் விசைப்படகுகளை வைத்துக் கொண்டு ஆழகடலுக்குள்
செல்லாமல் அண்மைக் கடலில் மீன் பிடிக்கின்றார்கள். 3,815
சாதாரணப் படகுகளும், 14,875 கட்டுமரங்களும் இருப்பதாக
குறிப்பேட்டில் கூறியிருக்கிறார்கள். விசைப்படகுகள், படகுகள்,
கட்டுமரங்கள் இவைகள் எல்லாம் வைத்துக் கொண்டு அண்மைக்
கடலில் மீன் பிடிப்பதால் ஒருவருக்கொருவர் கலகத்தை விளைவித்
துக்கொள்கிறார்கள். இதனால் பல தொந்திரவுகள் ஏற்படுகின்றன.
விசைப் படகுகள் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் ஒரு தனி
சட்டத்தை ஏற்படுத்தி அவர்கள் ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்க
வேண்டுமென்று வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
ஏனென்றால் அண்மைக் கடலில் ஒன்று சேர்ந்து மீன் பிடிக்கின்ற 12-00 noon
காரணத்தால் பலவிதமான கலகங்கள், சண்டைகள் நடைபெறு
கின்றன என்பதை நாம் செய்தித்தாள் மூலமாக அறிகிறோம்,
அரசாங்கத்திற்கும் நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.
மெரினா கடற்கரை மீனவ மக்களைப் பற்றி ஒரு சில
வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். உலகத்தில் மிகவும்
அழகான கடற்கரையான நமது மெரினா கடற்கரை
திகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் கடலோரமாக
இருக்கின்ற மீனவர்கள் தங்கள் கட்டு மரங்களை விட்டுவிட்டு,
அங்கங்கே சிறு சிறு குடிசைகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.
அதோடு அவர்களுடைய நைலான் முதலிய வலைகளையும்
அப்படியே ஆங்காங்கே போட்டு வைத்திருக்கிறார்கள்.
மழை காலங்களில் நனைந்து வலைகள் நீண்ட கால
உழைப்புக்கு பயன்படுவதில்லை. ஆகவே இதைப் பாதுகாப்பதற்
கென்று, தனியாக ஒரு ஷெட் அமைத்து, அதில் வலைகளை வைத்து
பாதுகாத்துக்கொள்வதற்கு வசதி செய்து கொடுத்தால் நலமாக
இருக்கும். இதைப்பற்றி இலாகாவினர் ஆலோசித்துப் பார்த்து

ஆங்காங்கு நல்ல முறையில் வலைகளை வைத்துப் பாதுகாத்துக் கொள்வதற்கேற்ற ஷெட்களை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னால் இருந்த அமைச்சர் திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் காலத்தில் கடற்கரையோரமாக மீனவர்களுக்கு என்று சில ஷெட்களை அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். இப்போது அதை சரியாக உபயோகித்து வருவதாகத் தெரியவில்லை. இப்போது அதை கிளிஞ்சல் வைத்துக்கொள்வதற்கு இரண்டு ரூபாய் அளவுக்கு வாடகைக்கு விடப்பட்டிருப்பதாக என்னிடம் மீனவர்கள் சொல்லுகிறார்கள். இதையும் இலாகாவினர் ஆலோசித்துப் பார்த்து, வலைகளை வைத்துக்கொள்வதற்கென்று தனியாக ஷெட்டு களை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், விசைப்படகுகள் வழங்குவது போல் கட்டுமரங்களையும் வழங்க வேண்டும். நான் ஒரு சில மீனவர்களோடு பேசிக் கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் சொன்னார்கள், முன்பெல்லாம் கட்டுமரங்கள் கட்டுவதற்குரிய மரங்கள் சிலோனிலிருந்து தனியார்கள் வரவழைத்துக்கொண்டிருந்தார்கள், அந்த மரங்கள் நல்ல உறுதியாக இருந்தன, பத்து ஆண்டுகள் வரையிலும் கட்டு மரங்களை உபயோகிக்கக்கூடிய அளவுக்கு நல்ல வலுவுள்ளதாகவும் இருந்தன என்று சொன்னார்கள். இப்போது கன்னியாகுமரி பகுதியிலிருந்தும் கேரளா பகுதியிலிருந்தும் தான் கட்டுமரங்களை வாங்கவேண்டியிருக்கிறது. இவ்விதம் கட்டுமரங்களை கட்டுவதற் கான மரங்களைக் கொண்டு வரும்போது செக் போஸ்ட்களில் நிறுத்திவிடுகிறார்கள் இப்படிப்பட்ட பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே விசைப் படகுகள் கொடுப்பது போலவே அரசாங்கமே கட்டுமரங்களையும் கொடுக்கவேண்டும், மான்ய அடிப்படையிலோ அல்லது கூட்டுறவு சங்க அடிப்படையிலோ அல்லது இலாகா மூலமாகவோ கொடுப் பதற்கு ஏதாவது முயற்சிகள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக இந்தத் துறைக்கு தலைமை அதிகாரியாக இருக்கக் கூடியவர் நல்ல திறமையுள்ளவர்கள். மேலும் இந்தத் துறையில் பல நல்ல முயற்சிகளை எல்லாம் செய்வார்கள் என்று நம்பிக்கை யோடு, இந்த இலாகாவினரையும், அமைச்சர் அவர்களையும் பாராட்டிக்கொள்கிறேன்.

அடுத்து, அச்சகத்தைப் பொறுத்தவரையில், நல்ல கருத்துக் களை எல்லாம் நாட்டு மக்களுக்கு தெரிவிப்பதற்கு புத்தக வடிவில் புத்தகங்களை அச்சிட்டுக் கொடுத்தால் தான் மக்கள் நல்லமுறையில் கருத்துக்களை புரிந்து கொள்வார்கள். அதற்கேற்ற முறையில் நமது அரசாங்க அச்சகம் சிறந்த முறையில் விளங்கி வருகின்றது. அதோடு அரசாங்கத்தார் மாவட்டந்தோறும் கிளை அச்சகத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற சிறந்த மேற்கோளை எடுத்துக்கொண்டி

ருக்கிறார்கள். இதன் மூலமாக அங்கங்கே ஏற்படுகின்ற கால
தாமதம், தடைகள் இவைகள் எல்லாம் நீக்கப்பட்டுவிடும் என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு திருச்சியில்
ஒரு கிளை அச்சகத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அண்மையில்
சேலத்தில் ஒரு கிளை அச்சகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
இவ்விதமாக அச்சகங்களை எல்லாம் திறமையாக நடத்துவதற்குரிய
அதிகாரிகளும் நமக்கு இருக்கிறார்கள். அந்த முறையில் தான்
கிளை அச்சகங்களை எல்லாம் நிறுவியிருக்கிறார்கள். அதோடு
அச்சகத்தில் ஏதாவது பழுதடைந்தாலும் அதை நல்ல முறையில்
சீர்திருத்தம் செய்து அது இயங்குவதற்கும் நல்ல மேற்கோளை
எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் குறிப்பிடத் தகுந்த
விஷயம் என்னவென்றால் இப்போது தமிழ் ஆட்சிமொழியாக
வந்திருக்கிறது. இதன் காரணமாக அச்சகத்தில் நிறைய வேலை
இருக்கிறது. இந்த நிலையில் தமிழில் நல்ல பாண்டித்தியம்
படைத்த ஒரு அதிகாரியை இதற்கு தலைமை அதிகாரியாக
போட்டிருப்பது பாராட்டக்கூடிய விஷயமாகும். அச்சகத் துறை
யில் அதிகாரிகளோம் அதிகாரியாகவும், தொழிலாளர்களோடு
தொழிலாளியாகவும் இருந்து வேலை செய்கின்ற ஒரு அதிகாரி
இதற்குத் தலைமை அதிகாரியாக இருப்பது மிகவும் பொருத்தமான
தாகும் என்பதைச் சொல்லிக்கொண்டு, மேலும் இந்த அச்சகத்
துறை நல்ல முறையில் பணியாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள்
ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். அதே போன்று மீனவர்களுக்கு ஏற்படுகின்ற துயர்
களையும் துடைப்பதற்கு டிஸ்ட்ரஸ் ரிலீப் பண்ட் ஏற்படுத்தி
யிருப்பது மிகவும் நல்ல அம்சமாகும். அரசாங்கம் இதற்கு நிறைய
மான்யத்தை ஒதுக்கியிருக்கிறது. மேலும் அதிகமாக இதற்கு
பணம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இயற்கைக்
கொடுமைகள் பல ஏற்படுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட பண்ட்
உதவிகரமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு. இவைகளுக்
கான மான்யக் கோரிக்கைகளை அதிகரித்துக்கொண்டு, இதில் பேசு
வதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு
முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எ. சுவாமிதாஸ்: சார், மீனள மான்யக் கோரிக்கையின்
மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மீன்
நல்ல ஒரு சிறந்த உணவு. உணவுப் பற்றாக்குறையால் நலிந்து
கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அதை ஈடுகட்டும் முறையில் மீன்
உணவு இருந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, டாக்டர்கள்,
மீனை அதிகமாக சாப்பிட்டால், பால் சாப்பிடுவதற்குள்ள சத்து
கிடைக்கும் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஆகவே
மீனளத் துறையை இன்னும் நன்றாக செயல்படுத்தவேண்டும்.
அதற்கு இப்போது ஒதுக்கியிருக்கக்கூடிய ரூபாய் போதாது.
சரியாக ஒரு கோடி ரூபாய் கூட வரவில்லை. மீன்களை அதிகமாக
பிடிக்கவேண்டும் என்றால் மீனவர்களுடைய நலன்களில் இன்னும்
தாம் அக்கறை செலுத்தவேண்டும். கன்னியாகுமரி பகுதியில் மீன்
பிடிப்பதற்கான வாய்ப்பும் வசதியும் சென்ட இடங்கள் ஏராள

[திரு. எ. சுவாமிதாஸ்] [25th March 1966

மாக இருக்கின்றன. மீனும் தாராளமாக கிடைக்கிறது. ஆனால் எல்லா காலங்களிலும் மீன் கிடைப்பதில்லை. தற்போது அங்கே யுள்ள மக்களுக்கு மீன் தாராளமாக வாங்குவதற்குக் கிடைப்ப தில்லை. அதாவது மீன் சாப்பிடுகின்றவர்கள் இருக்கக்கூடிய இடத் தில் வேண்டிய அளவிற்குக் கிடைப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில் கிடைத்தாலும் குறைந்த விலையிலும் கிடைப்பதில்லை. அங்குள்ள மக்களுக்கு சாப்பிடுவதற்கு மீன் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் அண்டையில் இருக்கக்கூடிய கேரளத்தில் இருக்கின்ற பல கம்பெனிகள் தங்கள் ஆட்கள் மூலமாக மீனை வாங்கிவிடுகின்றார்கள். இதற்காக பெருந்தொகையை இந்தக் கம்பெனிக்காரர்கள் முன் பணமாக மீனவர்களுக்கு கொடுத்துவிடுகிறார்கள். இதன் காரண மாக கடனைப் பெறுகின்ற தொழிலாளி கம்பெனிக்குக் கடன்பட்டு விடுவதால், கம்பெனிக்குத்தான் தாங்கள் பிடிக்கும் மீனை கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பிறர் வாங்க முடியவில்லை. இந்த நிலையை தடை செய்தால் நலமாக இருக்கும். கேரளத்திற்கு மீனை வாங்கிக்கொண்டு போகாமல் தடைசெய்யவேண்டும்.

மேலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மக்களின் நலன்களில் இன்னும் நாம் அதிகக் கவனம் செலுத்த கடமைப் பட்டிருக்கிறோம். இன்னும் பல வசதிகளை அவர்களுக்கு செய்து கொடுக்கவேண்டும். அதாவது இப்போது அவர்களுக்கு விசைப் படகு, நைலான் வலை போன்றவைகள் கொடுத்து வருகிறோம். ஆதோடு கூட ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்க வசதி செய்து கொடுக்கவேண்டும். அவர்கள் சொல்லுகின்ற குறைகள் என்ன வென்றால், இப்போது கொடுக்கப்படும் விசைப்படகைக் கொண்டு ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்க முடியாது. ஆழ்கடலில் சென்றால் உயிர்பாதுகாப்பு கிடையாது. ஆகவே ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பதற்கு வசதியாக அதாவது ஒரு வார காலம் கடலில் தங்கியிருந்து மீன்களை பிடித்துவருவதற்கு வசதியாக பெரிய லாஞ்சகளை கொடுக்கவேண்டும். இலங்கை அரசாங்கம் இவ்விதம் உதவி செய்து வருகிறது. கொச்சியிலிருந்து இப்படி கொடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதுபோன்ற வசதியை நாமும் செய்து கொடுக்கவேண்டும். இந்த முறையில் உணவுப் பற்றாக் குறையை ஈடுகட்டும் பொருட்டு அதிகமாக மீன்களை பிடிப்பதற்கு லாஞ்ச் போன்ற வசதிகளை தாராளமாக செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு பிடித்த மீனை உள் நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய வசதி போதாமல் இருக்கிறது. கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து பிடித்த மீனை காலம் தாழ்த்தாமல் மதுரை, இராமநாதபுரம் போன்ற இடங்களுக் குக் கொண்டு வரவேண்டும். மதுரை 150 மைல் தூரம் தான் இருக் கிறது. நல்ல குளிர் சாதனங்கள் கொண்ட மோட்டார்களை கொடுத் தால் விரைவாக அங்கு கொண்டு வர முடியும். இதை தனியார் களோ, அல்லது கூட்டுறவு முறையிலோ, அல்லது அரசாங்கமோ நடத்தினால் எல்லோருக்கும் சாப்பிடுவதற்கு மீன் கிடைக்கும். சில காலங்களில் தாராளமாக மீன் கிடைக்கிறது. ஆனால் பிடித்த மீன் களை போதிய அளவுக்கு வைத்து பாதுகாத்துக்கொள்வதற்கு

25th March 1966] [திரு. எ. சுவாமிதாஸ்]

வசதியிருக்கவேண்டும். கன்னி ஸ்டோரேஜ் செய்து கொள்வதற்கு வசதியிருக்கவேண்டும். கன்னி யாகுமரி பகுதியைப் பொறுத்தளவில், கன்னியாகுமரி, குளச்சல், முட்டம், மணக்குடி, இனயம், கடியபட்டினம், தேங்காபட்டணம் இந்த இடங்களில் ஸ்டோரேஜ் வசதி செய்து கொடுக்கவேண்டும். மேலும் கருவாடு தயாரிப்பதற்காக மீனை நல்ல முறையில் உலர்த்து வதற்கு வசதியிருக்கவேண்டும். அதற்கு சிமிண்ட் தளம் போட்ட இடங்களை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதோடு மீனை நவீனமுறையில் பிடிப்பதற்கு நல்ல பயிற்சி கொடுக்கவேண்டும். இப்போது கொடுக்கும் பயிற்சி போதாது. நவீன முறையில் நார்வேயில், ஜப்பானில் கொடுக்கும் பயிற்சி போலக் கொடுக்கவேண்டும். பயிற்சி கொடுப்பதற்காக தனி பள்ளிக்கூடம் வைக்கவேண்டும். அதுவும் சிறு குழந்தைகளாக இருக்கும்போதே பயிற்சி அளிக்கவேண்டும். பல மீனவர்களை நார்வேக்கு அனுப்பி அங்குள்ள முறைகளைப் பார்த்து கற்று வரச் செய்யவேண்டும். அரசாங்கமே அந்தமாதிரி அனுப்புவது நல்லது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மீன்வள இலாகாவிலே அதிகமாக மீனவர்களுக்கே தொழில் கொடுக்க வேண்டும். அப்போது தான் மீனவர்களுக்கு இருக்கும் சிக்கல்கள், தேவைகள் எல்லாம் தெரிய வாய்ப்பு இருக்கும். அதெல்லாம் அந்தத் துறையில் ஈடுபட்டவர்களுக்குத் தான் தெரியும். ஆகவே மீனவர்களுக்கே அதிகமாக வேலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்கவேண்டும். நேற்று கூட நான் பத்திரிகையிலே படித்தேன். கன்னியாகுமரியிலிருந்து கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றபோது ஒரு கட்டுமரமானது கடலில் சென்றுகொண்டிருந்த கப்பலோடு மோதி கட்டுமரம் தூக்கி எறியப்பட்டு ஒருவர் காணாமல் போனதாகச் செய்தி படித்தேன். விபத்துக்கள் ஏற்படும் அச்சம் இருக்கிறது. அதற்காக ஒரு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் வகுக்கலாம். அவர்களுக்கு ஏற்ற முறையில் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை எளிதாக வைத்துப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். மீனவர் தம் தொழிலில் ஈடுபட் டிருக்கும்போது இறந்துபோனால் அவர்கள் குடும்பத்திற்கு நல்ல உதவி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர் வீட்டு வசதி நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்கள் தற்போது வாழும் முறையில் வீடு வசதியின்மையால் அவர்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படும் நிலையுள்ளது. ஆகவே அவர்களுக்கு நிலையான வீடுகள் அமைத்துக்கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது.

அதோடு மீன்கள் கிடைக்காத காலத்தில் அவர்கள் பட்டினி யால் வாடுகிறார்கள். அந்த நேரங்களில் வேறு சிறு தொழில் களில் அவர்கள் ஈடுபடுவதற்கு வழி செய்யவேண்டும். பெண்களுக் காவது அந்த வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மீனவர்கள் சமுதாயத்தை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்தால் அவர்கள் முன்னுக்கு வர வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. செ. சீனிவாசன் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, செய்தித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மீனள நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே, அதுவும் குறிப்பாக இராமேச்வரம், இராமநாதபுரம் பகுதியிலே இன்டோ-நார்வேஜியன் ப்ராஜெக்டை 1962-வது ஆண்டு அமைத்ததிலே அந்தப் பகுதியிலே உள்ள மீனவர்களுக்கு செய்யப்பட்ட பெரிய சேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்திலே 1964-ம் ஆண்டு டிஸம்பர் மாதத்திலே இயற்கையின் சீற்றத்தினாலே அப்பகுதியிலே வாழ்ந்த மீனவர்களெல்லாம் மிகுந்த சோதனைக்குள்ளாகி, பல நூற்றுக்கணக்கான பேர்கள் தங்களுடைய உயிர்களை இழந்து, உடைமைகளை இழந்து ரொம்பவும் கஷ்டப்பட்ட நேரத்திலே நமது அமைச்சர் அவர்கள் வெகு விரைவாக அங்கு சென்று பல்வேறு முறைகளில் அவர்களுக்கு நிவாரணம் அளித்து, மீண்டும் புனர்வாழ்வு அளித்து நல்ல முறையில் அவர்கள் தொழிலில் ஈடுபட பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதற்காக மீனவ மக்கள் சமுதாயத்திலே அவருக்கு என்றென்றைக்கும் நிரந்தரமான இடம் உண்டு என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

மண்டபத்திலே இன்டோ-நார்வேஜியன் ப்ராஜெக்ட்டிலே கட்டப்பட்டு வரும் படகுகளானது நல்ல முறையில் விநியோகிக்கப்பட்டு வந்தாலும் இராமநாதபுரம் பகுதியிலே எல்லா இடங்களுக்கும் சரியாக விசைப்படகுகள் விநியோகிக்கப்படவில்லை என்ற புகார் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. அதை நல்ல முறையில் அமைச்சர் அவர்கள் கவனித்து இனிமேல் வரும் ஆண்டுகளிலாவது முக்கியமாக இராமநாதபுரம், மண்டபம், கீழக்கரை, கடலாடி போன்ற இடங்களில் எல்லாப் பின்தங்கிய வகுப்பினரும் பயன் அடையும் முறையில் விசைப் படகுகளை விநியோகிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, இந்த மீனளத் துறையிலே மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும், தனிப்பட்ட நபர்களுக்கும் ஒரு விதமான போட்டி இப்போது ஏற்பட்டிருக்கிறது. தனிப்பட்ட நபர்கள், பண வசதி உள்ளவர்கள் எங்கேயோ இந்த விசைப் படகுகளை வாங்கிக்கொண்டு வந்து கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு நஷ்டம் ஏற்படுத்தக் கூடிய முறையில் ஒரு நீண்ட போட்டியை ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. அது கூட்டுறவு சொஸைட்டிகளையே ஓரளவு ஒழித்துவிடும் நிலையில் இருப்பதால் கூட்டுறவு சொஸைட்டிகளில் இருக்கிறவர்களுக்கு மட்டும் விசைப் படகுகளை வழங்கி ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உள் நாட்டிலே பணியாற்றி வரும் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் மீன் பிடிக்கும் விஷயத்திலே வருஷாவருஷம் எப்போது பார்த்தாலும் தகராறு ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. பஞ்சாயத்துக்கு கிராமத்தினுடைய மீன் குத்தகை எவ்வளவு அத்தியாவசியமோ அதே மாதிரி உள்நாட்டில் இருக்கிற மீனவர் கூட்டுறவு சொஸைட்டிக்கு அது அத்தியாவசியமாக இருக்கிறது. இப்போது பல கேஸ்கள் பென்டிங்காக இருக்கின்றன. ஏதாவது லாங் டெர்ம் ப்ளானாக, ஏதாவது ஃபீஸிபிளாக, இரண்டு பேர்களுக்கும் இடைஞ்சல் இல்லாமல் இதைக் கவனிக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இராமநாதபுரம் பகுதி, மண்டபம் பகுதி, இராமேச்வரம் பகுதி இங்கிருந்தெல்லாம் மீனை உள்நாட்டுக்கு மதுரை போன்ற இடங்களுக்குக் கொண்டுபோக சாதனம் இல்லாமல் இருக்கிறது என்று நினைக்கிறேன். அவைகளை நல்ல முறையில் கொண்டு போனால் உள்நாட்டில் வசிக்கிறவர்களுக்கு குறைந்த செலவில் ஃப்ரெஷ் ஃபிஷ் என்று சொல்லுகிறார்களே, அவை கிடைக்கும். அந்த முறையில் அதையும் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாப்லோ போட்ஸ் கட்டுவதையெல்லாம் 7 வருஷத் தவணையில் சர்க்காரிலிருந்து கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஃபிஷ் கிடைப்பது ஸீஸனலாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஒரு சில மாதங்களில் தான் அதிகமாகக் கிடைக்கிறது, மற்ற மாதங்களில் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஏழு வருஷம் என்பதை 10 வருஷம் அல்லது 12 வருஷம் என்று மாற்றி மீனவர்களுக்குச் சலுகை கொடுக்க முடியுமா என்பதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிவகங்கையிலே மீனவர்கள் சம்பந்தப்பட்ட அஸிஸ்டென்ட் டைரக்டர் ஆஃப் ஃபிஷரீஸ் ஆஃபீஸ் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதாவது இராமநாதபுரம் பகுதியில் இருக்கிறவர்களும், திருவாடானை பகுதியில் இருக்கிறவர்களும், சிவகங்கை ஆஃபீஸுக்கு வந்து பல வித காரியங்களை கவனித்துப் போக வேண்டியிருக்கிறது. மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற மீனவர்கள் இந்த மாதிரி ஆஃபீஸுக்கு வந்து அவர்களுடைய நேரத்தையும் பணத்தையும் செலவழிக்க முடியாமல் இருக்கிற காரணத்தினால் முதுகுளத்தூர், திருவாடானை எல்லாவற்றுக்கும் மத்தியில் இருக்கிற பரமக்குடியில் அதை அமைக்க முடியுமா என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மீன் வளர்ப்பதிலே கூட மேல் நாடுகளில் டீப்-ஸீ ஃபிஷ்ஷிங் இருந்தாலும் கூட வயல்களுக்குப் பக்கத்தில் சிறு சிறு தேக்கங்கள் கட்டி வளர்க்கிறார்கள். அதன் மூலம் விவசாயத்தை விட அதிகமாக வருமானம் வருகிறது என்று

ரேடியோ பிராட்காஸ்ட்டில் கேட்டேன், ஏதோ ஒரு புத்தகத்தில் பார்த்தேன். அது நமது மாநிலத்தில் சாத்தியமா என்று பார்க்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம் : கனம் துணைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை மீது சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டுப்புற மீன் உற்பத்தியில் சர்க்கார் அதிகமான கவனத்தைச் செலுத்துவதாக அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே சர்க்காரோ அல்லது பஞ்சாயத்தோ குளங்களை வெட்டி அதன் மூலமாக குஞ்சுகளை வளர்த்து உற்பத்தியைப் பெருக்கலாம் என்று இந்த சர்க்காரில் செய்யப்படுகிற செலவு அத்தனையும் உள்ளபடி வீணாகி, விரயமாகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய ஏரிகளில் மழைகாலத்தில் வருகிற தண்ணீரிலே இருக்கக்கூடிய முட்டைகளிலிருந்து உற்பத்தியாகக்கூடிய குஞ்சுகள் கூட தண்ணீர் வற்றியவுடன் அதிக உஷ்ணம் ஏற்பட்டு, சாகின்ற காட்சியைப் பார்க்கிறோம். இந்த நிலையில் சர்க்கார் தொட்டிகளை அமைத்து, தொட்டிகளில் தண்ணீரை நிரப்பி, அதில் குஞ்சுகளை வளர்க்கின்ற முறையையும் நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். தொட்டிகள் இருக்கின்றன. மீன்குஞ்சு வளர்ப்பு என்று போர்டு இருக்கிறது. ஆனால் அங்கு சென்று பார்க்கிற நேரத்தில் அந்தத் தொட்டியில் 4, 5 அங்குல தண்ணீர் இல்லை, எந்தவிதமான குஞ்சும் இருப்பதாகக் கூட தெரியவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே, இப்படி சர்க்கார் தொட்டிகளை அமைத்து வளர்ப்பதைவிட, கடலில் மீன் பிடிக்கக்கூடியவர்களுக்கு, மீனவர்களுக்கு அதிக வசதிகளைச் செய்து தருவதோடு, அதிகமாக சலுகைகளை மீன்பிடிப்பவர்களுக்கு சர்க்கார் செய்துதந்தால், உள்ளபடியே மீன்பிடிப்பை அதிகப்படுத்தவும், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு அதிகமான ஊக்கத்தைத் தருவதற்கும் வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒரு யூனியனுக்கு ரூ. 30,000 என்ற அளவில் மீன்வளர்ப்புக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தப் பணம் அத்தனையும் இந்த ஐந்து ஆண்டுகளுக்குள் செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை சர்க்கார் பார்க்கவேண்டும். என்னுடைய பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஆண்டுக்கு எப்படியாவது செலவு செய்து பார்க்கலாம் என்று முயற்சி செய்தால் கூட கொஞ்சத் தொகை தான் செலவு செய்ய முடிகிறது. ஆகவே, கிராமப்புறங்களில் மீன்வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகள் கிடையாது. எந்த பஞ்சாயத்து யூனியனில் இருக்கிறது என்றால், ஏதாவது ஒரு அணையை சேர்ந்தாற்போல் இருக்கக்கூடிய யூனியனாக இருந்தால் வேண்டுமானால், குளத்தை வெட்டி அதன் மூலம் மீன்குஞ்சுகளை வளர்ப்பதற்கு தண்ணீர் கிடைக்கும். அதே நேரத்தில் மீன் வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கும்.

எல்லா யூனியன்களிலும் மீன் வளர்க்கப்படவேண்டுமென்று சொன்னால், அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்படாமலேயே அப்படியே கிடக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களில் மீன்வளர்ப்பதற்கு போதுமான ஆட்கள் இல்லை, மீன்வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகளும் இல்லை. வருகிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மீன் வளர்ப்பதற்கு ஒதுக்கப்படுகிற தொகையை இந்த சர்க்கார் நிறுத்திவிட்டால் நன்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னை மெரினா கடற்கரையில் மீன்காட்சி சாலை வைத்திருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அதைப் பார்த்த பொழுது அங்கே நிறைய மீன் குஞ்சுகள் இருந்தன. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது பார்க்கிறபொழுது வெறும் தொட்டிகளாக இருக்கிறதே ஒழிய, சில தொட்டிகளில் ஏற்கனவே இருந்த காட்சி மீன்கள் இப்பொழுது இல்லை. எந்த வகையில் அவைகளுக்கு அழிவு ஏற்பட்டது என்று கண்டுபிடித்து, அதைத் தடுக்கக்கூடிய வகையில் கவனம் செலுத்தவேண்டும்.

[illegible] கடல் மீன் கிடைப்பது இல்லை. கடலூரிலிருந்து வர வேண்டியிருக்கிறது. கடலூரிலிருந்து ரயில் மூலம் அனுப்பு கிறார்கள். அது அமைச்சருடைய [illegible] இருக்கக்கூடிய காரணத்தினால் இந்த நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கிருந்து ரயிலில் வருகிறபொழுது, சேலம் வந்து சேருவதற்குள் ஒரே நாற்றம் அடிக்கிறது. [illegible] நாற்றத்தைப் போக்குவதற்கு [illegible] என்ற வகையிலாவது அந்த [illegible] உடனுக்குடன் கடல் மீன்கள் தனியாக எக்ஸ்பிரஸ் வான் மூலமாக [illegible] அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவுக்கு பதில் மீன்களை சாப்பிடலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் ஒன்றை இந்த நேரத்தில் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்தி முடித்துக் கொள்ளுகிறேன். [illegible] அளவு உள்ள இந்த [illegible] சாதாரணமாக கிராமங்களிலும், நகரங்களிலும் [illegible] கிடைக்கிறது. சர்க்கார் குடும்பக்கட்டுப்பாடு [illegible] கூட, மூன்று பேர்களுக்கு [illegible] கொடுத்து வாங்கினால் தான், [illegible] சாப்பிட முடியும். கிராமப் புறத்தில் மட்டும் அல்ல, நகர்ப்புறத்திலும் இந்த நிலை தான் இருக்கிறது. மீன் உற்பத்திக்காக செலவு செய்யப்படுகிற தொகையைப்பற்றிய புள்ளிவிவரம், அது சம்பந்தமாக கொடுக்கப் பட்டிருக்கின்ற அறிக்கைகள் இவைகளெல்லாம் வெளித் தோற்றத்திற்கு அழகாக இருக்கின்றனவே தவிர, மீன்களை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய [illegible] இல்லை. ஆகவே, நல்ல திட்டங்களை [illegible] இதற்காக ஒதுக்கப்பட்ட [illegible] நல்ல [illegible] பகுதியில் இருக்கக்கூடிய [illegible]

மீன்களை நகர்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் விநியோகம் செய்யவேண்டும். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய மீனவர்களுக்கு அதிகமான உற்சாகத்தை அளிக்கும் வகையில் திட்டங்களை தீட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும், இதைவிட மீன்வளத்தை மேம்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கோ. நாராயணசாமி நாயுடு: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். செய்தித் துறை வரவர பெருகிக் கொண்டே வருகிற ஒரு துறை. மேலும் மேலும் மக்களுக்கு படிப்பு வசதிகள் செய்துகொடுக்கிற காரணத்தினால், சர்க்கார் துறையில் வேலைகள் எப்படி நடக்கின்றன என்பதை சாதாரண மக்கள் புரிந்து கொள்ளுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். (குறுக்கீடு) ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இப்பொழுது அச்சகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும், மேலும் அச்சகங்களை அதிகப்படுத்துவதற்கு பல இடங்களில் அச்சகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த அச்சகங்கள் அமைச்சர்கள் இருக்கிற ஊராக போய்க்கொண்டிருக்கின்றன. எங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் அம்மாதிரி ஒன்றும் அமைப்பதாகக் காணோம், கூடிய சீக்கிரம் அடுத்த ஆண்டிலாவது அங்கே ஒரு அச்சகம் அமைத்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடு) சேலத்திற்குப் போயிருக்கிறது. அது அமைச்சர் ஊர் இல்லாத இடம் என்று சொல்லுகிறார்கள். அமைச்சர்களுடைய ஊர்களில் வைத்துவிட்டு, பின்பு அமைச்சர்கள் ஊர்கள் இல்லாத இடங்களிலும் வைக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

அச்சகத்தில் போடுகிற கெஜட்டுகள், எம். எல். ஏ.-க்களுக்குக் கொடுக்கப்படுகிற புஸ்தகங்கள் இவைகளெல்லாம் ஒரு புது அமைப்பில் வருகின்றன. அதிலுள்ள எழுத்துக்கள் ஒரே அடைத்து வைத்தாற்போல் நெருக்கமாக இருப்பதினால் பார்ப்பதற்கே சுவாரசியம் இல்லாமல் இருக்கிறது. நல்ல அழகான எழுத்துக்களில் நல்ல காகிதத்தில் நல்ல முறையில் அச்சடித்தால் பார்ப்பதற்கு சௌகரியமாக இருக்கும், நன்றாக இருக்கும். ஆகவே இதைப் பற்றி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொழில் வளர்ந்துகொண்டே வருகிறது. இதிலே ஈடுபட்டிருக்கக் கூடிய தொழிலாளர்களையும் நாம் கவனிக்க வேண்டும். எந்தெந்த பரீட்சை பாஸ் செய்திருந்தால், எந்த அளவில் திறமை இருந்தால் தொழிலாளர்கள் இந்த சர்க்கார் செய்தித்துறை வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று நமக்கு இதுவரையில் சொல்லப்படவில்லை. பாக்டரி ஆக்டின் கீழ் இந்தத் தொழிலாளர்கள் வருகிறார்களா? சர்க்கார் துறையில் வைத்திருப்பதுபோல், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் அவர்கள்

எடுக்கப்படுகிறார்களா? அவர்கள் எந்த உத்தியோகத்திற்கு எடுக்கப்படுகிறார்கள் என்ற விவரங் முறையில் உத்தியோகத்திற்கு எடுக்கப்படுகிறார்கள் என்ற விவரங் களெல்லாம் நமக்குச் சொல்லப்படவில்லை. எப்படியிருந்தாலும் கூட, இங்கிருந்து சில பேர்கள் வெளி ஊருக்கு மாற்றப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். அவர்கள் குறைந்த சம்பளக்காரர்கள். அந்த ஊரில் நாம் அச்சு இயந்திரங்களை அமைக்கிறோமோ அங்குள்ள வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவது தான் நமது நோக்கம். குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களை 50 மைல், 100 மைலுக்கு அப்பால் மாற்றிவிட்டால் அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. பயிற்சி பெற்றவர்கள் அங்கு தேவை என்றால், ஒரு சில மாதங்களுக்கு அவர்களுக்கு அதிகப்படி சம்பளம் கொடுத்து அங்கே வெளியூரில் நியமித்துவிட்டு திரும்பவும் அவர்களை இந்த ஊருக்கு மாற்றிவிடும்படியான ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். ஆங்காங்கு இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு பரிகாரம் தேடுவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே சமயத்தில் 500, 1,000 பேர்கள் அச்சகத்தில் கம்பாசிட்டர்களாகவோ அல்லது வேறு துறையில் தொழிலாளர்களாகவோ நியமிக்கப்படுகிறார்கள். அப்படி தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை பூராவும் அதிகாரிகள் கையில் ஒப்படைக்காமல், அதற்கென்று ஒரு கமிட்டி போட்டு, நம்முடைய மந்திரி அவர்கள், மற்றவர்களும் சேர்ந்து தொழிலாளர்களை பொறுக்கி எடுக்கும்படியான ஒரு நிலைமை இருந்தால், அது கண்யமாக இருக்கும், சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவைகளெல்லாம் நிச்சயம் உடனே கவனிக்கப்படும் என்று நம்புகிறேன். தொழிலாளர்களுடைய சம்பளம் ரொம்பவும் குறைவாக இருக்கிறதாகக் கேள்விப்படுகிறேன். அவர்களுக்கு சம்பள வசதியும், இதர வசதிகளும் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மீன் வளத்தைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். மீன் உடம்பிற்கு நிரம்பவும் நல்லது என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். எனக்கு ஓரே ஒரு குறைபாடு. நான் வைஷ்ணவன். எங்கள் சாமியின் முதல் அவதாரம் மச்சாவதாரம். சைவப்பகுதிகளிலிருந்து தான் மீன், கருவாடு என்ற வார்த்தைகள் வருகின்றன என்று நினைக்கிறேன். அவர்கள் சொல்லுகிறார்களே தவிர சாப்பிடுவதில்லை. கடவுள் எடுத்த அவதாரங்களுக்குள் மச்சாவதாரம் தான் முக்கியமானது, முதலாவதுங்கூட. மீன், கருவாடு என்ற இந்த வார்த்தைகளை மாற்றி அமைத்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். 12-30 p.m.

மீன், கருவாடு என்றெல்லாம் கூட ஒரு நண்பர் சொன்னார். அந்த வார்த்தைகள் கொஞ்சம் விரசமாக இருக்கின்றன. தமிழிலே அவைகளுக்கெல்லாம் இடக்கர் அடக்கல் என்று சொல்லுவார்கள். [illegible] நலமாக இருக்கும் புது பெயர்கள் வைத்து மாற்றிவிட்டால் அவதாரப் பிரதமன் என்று சொல்ல என்று நம்புகிறேன். மீனுக்கு அவதாரப் பிரதமம் என்றால் [illegible] கருவாட்டிற்கு அவதாரப் [illegible] [illegible] [illegible] [illegible]

சொல்லலாம்; கோழி முட்டையை சக்கரத்தாழ்வார் என்று சொல்லலாம். மீன்பிடிக்கும் படகுகளை நாமத்தைப் போட்டு, எதிராஜா, ராமானுஜா என்று பெயர் வைக்கலாம். சிவமயம், சர்வம் விஷ்ணுமயம் ஜகத் என்று சொல்வார்கள். அந்த முறையில் ஆஸ்திகத்தை இதில் சேர்த்து எல்லாம் இறைவனுக்கே அர்ப்பணமாக்கினால் சிலர் எண்ணுகிறபடி, இதை உண்பது பாபம் என்ற நிலையை மாற்றிவிடலாம். கடவுளுக்கே படைக்கக் கூடியதாக ஆகிவிடும். (குறுக்கீடு) நாட்டு மீன்களை வளர்க்க, அவைகளின் ஆகாரம் என்ன என்று சொல்லப்படவில்லை. நண்பர் ஐயர் அவர்கள் தெரிவித்தார்கள், ஏதோ புத்தகம் படித்தேன் என்று. எந்த மீனுக்கு என்ன ஆகாரம் என்று தெரிந்தால் நலமாக இருக்கும். இன்றைக்கு கௌரா மீன் என்றும் கட்லா மீன் என்றும் புதுப் புது மீன்களும் வந்திருக்கின்றன. அவை உயிரோடு இருக்க, இரண்டு வருஷத்திற்கு தண்ணீர் வற்றாமல் இருக்க வேண்டும். இரண்டு வருஷத்திற்கு தண்ணீர் வற்றாமல் இருப்பது, திருக்குளத்திலேதான். அந்தத் தண்ணீரில் உள்ள மீன்களும் செத்துப் போகின்றன. பாசம் அதிகமாக இருப்பதால், தண்ணீரில் அவை வாழ முடியவில்லை. அதோடு நண்பர் தெரிவித்தபடி, மீன்களை சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி எப்படி காப்பாற்றுவது என்று ஆராய்ச்சி செய்ய வேண்டும். கண் காட்சியில் இருக்கும் மீன்கள் கூட இறந்து போகின்றன என்றால், குறைபாடு என்ன என்பதைக் கண்டறிய இந்த இலாகாவினர், ஆராய்ந்து புத்தகங்கள் போட வேண்டும். ரெயிலிலே மீனை ஏற்றும்போது வரும் நாற்றம் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். சென்னை போன்ற நகரத்திற்கு சமுத்திரக் கரையோரமாக படகுகளில் மீனைக் கொண்டு வர தக்க ஏற்பாடு செய்யலாம். விசைப்படகுகளை உபயோகிக்கலாம்.

சமுத்திரக்கரையில் இருப்பவர்கள்தான் மீன் பிடிப்பவர்கள் என்று நினைத்துவிடக்கூடாது. இன்னும் வேறு இடங்களிலும் மீன் பிடிப்பவர்கள் இருப்பதால், அவர்கள் துண்டு துண்டு ஆக இருக்கிறவர்களுக்கும் வீட்டு வசதி செய்துகொடுக்க ஏற்பாடு செய்தால்தான், எல்லாப் பகுதி மக்களுக்கும், உதவியவர்களாவோம். அந்த வகையில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

* திரு. சி. வே. வேலப்பன் : மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெறும் மானிய விவாதத்திலே, எதிர்க் கட்சியினரால் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த அரசு திட்டங்களைப் போடும் போது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அதெல்லாம் ஏட்டளவிலே தான் இருக்கின்றன. செயல்படும்போது, பல கோளாறுகள் வருகின்றன. குறிப்பாகப் பார்க்கும் போது, உணவுப் பிரச்னையைத் தீர்க்க மீன் வளர்ப்பு மிகவும் உதவியானது என்று ஆகக் கருதி, திட்டம் போட்டு செயல்படும்போது கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த [illegible]

அமைச்சரவை சரியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.
போடப்படும் திட்டங்கள் நல்லவைகளாக இருந்தாலும், ஒவ்வொரு
இலாகாவிலும் பணிபுரிகிறவர்கள் சரிவர நடக்காததால் தவறுகள்
ஏற்பட்டு விடுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால்,
என்னுடைய தொகுதியில் பரமத்தி பஞ்சாயத்து யூனியன் இருக்
கிறது. அந்த யூனியனில் மீன் வளர்க்க வேண்டும் என்கிற அடிப்
படையில் திட்டத்தைப் போட்டு, அதற்கென்று ரூ. 30,000 ஒதுக்கி
னார்கள். அந்தப்பணம் தண்ணீர்த் தொட்டி கட்ட மட்டும்.
அந்த இலாகாவின் இயக்குனராகவும், கீழே பணிபுரிகின்ற
வராகவும் இருப்பவர்கள் முன்னால், சேலம் மாவட்டத் தலைவராக
வும் பணி புரிந்தவர், அவர்களுக்குத் தெரியும். அந்த
பரமத்தி பஞ்சாயத்து யூனியனில் தொட்டி கட்டப் பட்டிருக்
கிறது. ஒதுக்கப்பட்ட 30,000 ரூபாயில், இதுவரை கிட்டத் தட்ட
16,000 ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது. அந்தத் தொட்டியைப்
பார்க்கும்போது, அங்கே தண்ணீரே இல்லை. தண்ணீர் இல்லாத
பகுதியில் கட்டியிருக்கிறார்களா என்று பார்த்தால், அங்கே 50 அடி
தூரத்தில் ஒரு கால்வாய் ஓடுகிறது. தண்ணீரை இறைக்க
இயந்திரம் இல்லையா என்றால், அங்கே மின்சாரம் இருக்கிறது.
மின்சாரம் எடுத்துப்போக போஸ்டுகள் இருக்கின்றன. இன்னும்
ஒரு ஆயில் எஞ்ஜின், 3½ ஹார்ஸ் பவரில் வைத்திருக்கிறார்கள்.
தண்ணீர் இறைக்கப்பட வில்லையா என்றால், இறைக்கிறார்கள்.
ஆனால், இறைக்கப்பட்ட தண்ணீர் தொட்டியில் தங்கவில்லை.
ஏன்? விட்ட காண்ட்ராக்ட் அப்படிப்பட்டது. செய்த வேலை
அப்படிப்பட்டது. வேலை செய்யப்பட்டபோது தக்க கவனம்
செலுத்தாததால், தண்ணீர் விட்டாலும் அதில் நிற்பதில்லை.
அங்கே தண்ணீரும் இல்லை, மீனையும் காணவில்லை. இது சம்பந்த
மாக, அமைச்சர் தனியாகக் குறிப்பு அனுப்பி நான் இப்படிப் பேசி
யது உண்மையா என்று தெரிந்து கொள்ளட்டும். உணவுப் பஞ்சம்
காரணமாக இந்தக் காரியங்கள் செய்யப்படும் போது, இப்படி
பணத்தை விரயம் ஆக்கி, வீண் ஆக்கியிருக்கிறார்கள். இப்படிச்
செய்வதை விட, மீன் வளர்க்கிறோம் என்று உலோகங்களிலே
மீன் வார்த்து பொருள்காட்சியிலே வைக்கலாம். நமக்குப்பின்
வருகிறவர்கள் மீன் வளர்ப்புத் திட்டத்தை, அரசு இந்த வகையில்
செய்தது என்று தெரிந்துகொள்ள வழி ஏற்படுத்தியதாக
இருக்கும்.

திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு, அதனால் பயன் அடையும்
வகையில் அவர்களுடைய குடும்பம் காப்பாற்றப்படும் வகையில்
அமைவதில்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்லலாம். என்
பகுதியில் காவேரி ஓடுகிறது. அதிலே மீன்பிடிக்கும் மீனவர்
களுக்கு விடப்படுவதில்லை. ஏதோ காவேரியில் எல்லை பார்க்கி
றார்கள். எல்லை பார்த்து யாரோ கன்ட்ராக்டர்களிடம் கொடுத்து
விடுகிறார்கள். மீனவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றால்,
அந்தப் பெரிய கண்ட்ராக்டர்களிடமிருந்து சப்-கான்ட்ராக்ட்
எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இதனால்
ஏழை மீனவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அது மட்டுமல்ல,
[illegible] கள் 10, 15 மைல்கள் பகுதியில் வரும்போது [illegible]

ஏற்படுகின்றன. ஆகவே, பஸ்களிலே பரிசல்களைப் போட்டுக் கொண்டு வரும் வாய்ப்பினைக் கொடுக்கவேண்டும். அவர்களுக்குக் குடியிருக்க வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வசதிகள் கொடுப்பது போல் இவர்களுக்கும் கொடுத்தால்தான் இவர்கள் வாழ்க்கை சீர்ப்படும். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய திட்டங்களோடு, இவர் களுக்குத் தேவையான திட்டங்களையும் சேர்த்து இவர்களுக்கும் வீட்டு வசதி, கல்வி வசதி இவைகளையெல்லாம் செய்து கொடுத் தால், நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் உதவி தலைவர் அவர்களே, இந்த மீனள வளர்ச்சி பற்றிய மானியத்தின் பேரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மீனைப் பற்றி பேசும்போது, தெளிவாக எல்லாரும் எடுத்துச் சொன்னார்கள். மற்றவர்கள் எப்படிச் சொன்னாலும், என்னைப் பொருத்தவரை, மீன் ஒரு சிறந்த உணவுதான். அதைப் பற்றிக் குறை சொல்ல முடியாது. அதை விரும்பாதவர்கள் வேண்டு மானால் குறை சொல்லலாம். ஆனால் அதை விரும்புகிறவர்கள் நல்ல உணவாகவே கருதுவார்கள். இன்றைக்கு சிந்திக்க வேண்டும். நாகரிகம் வளர்ந்த இந்த நாளில் தாய்மார்கள் பால் இல்லை, குழந்தைகளுக்குப் பால் கிடைக்கவில்லை என்று சொல்லு கிறார்கள். காரணம் என்ன என்று ரொம்பப் பேருக்குத் தெரியாது. மீன், கருவாடு, இவற்றைச் சாப்பிடத் தவறியதால் தான், அதிகமாகப்பால் இல்லாமல் போய்விடுகிறது. முன்காலத் திலிருந்தே அனுபவ ரீதியான விவரம் இது. பரிட்சை செய்து பார்க்க வேண்டும் என்றால், குழந்தை பிறந்த பிறகு, மீன், கருவாடு இவற்றைச் சாப்பிட்டால், இரண்டு மடங்கு, மூன்று மடங்கு பாலை தன்னுடைய பிள்ளைகளுக்கு அதிகமாகக் கொடுக்க முடியும் என்பதைக் காணலாம். மாட்டுப்பால், மற்ற பால்கள் கிடைக்கவில்லை என்று பாடுபடவேண்டிய அவசியம் இல்லை. இதெல்லாம் அனுபவம் இல்லாதவர்களுக்குத் தெரியாது. எங்களைப் போன்ற அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். (குறுக்கீடு) இல்லை, இல்லை, கருவாடும் சாப்பிடலாம்.

இந்த இலாகாவை வைத்திருக்கிற அமைச்சர் தன்னிடத்தில் விளம்பர இலாகாவையும் வைத்திருக்கிறார்கள். எந்த எந்த மீன்களை, எந்த எந்த வகையில் என்னென்ன ஆகாரங்கள் போட்டு வளர்க்கலாம் என்பவை போன்ற விளம்பரங்கள் வரவில்லை. தயவு செய்து அடுத்த முறையாவது, விளம்பரத் துறையும் அவர் கையிலேயே இருப்பதால், இது பற்றிய விளம்பரங்கள் நிறையச் செய்ய தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும், என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பாகச் சொல்லப் போனால், எத்தனை எத்தனையோ முறை களில் சினிமாப் படங்கள் காட்டுகிறார்கள். ஏதோ பிரசாரம் எல்லாம் செய்கிறார்கள். அதிலே போட்டு விடுங்களேன். என்ன

என்ன மீனில் என்ன என்ன சத்து இருக்கிறது, யார் யார் எந்த எந்த மீனைச் சாப்பிட்டால் என்ன என்ன சத்து கிடைக்கும் என்ற வகையில் சினிமாப் படங்கள் மூலமாகப் பிரசாரம் செய்தால், கருத்துக்கள் சீக்கிரமாகப் பரவ முடியும். இதைச் செய்ய இந்த அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்க முடியும்? இதில் கஷ்டம் இல்லை. விளம்பரம் தேவை. அதைச் செய்ய வேண்டியது அவசியம்.

நான் ஒரு அறிக்கையில் பார்த்தேன். வட நாட்டில் வங்கா ளத்தில் என்று நினைக்கிறேன் மச்சப் பிராமணர்கள் என்பவர்கள் மீன் சாப்பிடுகிறார்களாம். அவர்கள் பிராம்மணர்களாயிற்றே, எப்படி மீன் சாப்பிடுகிறார்கள்? என்று கேட்கலாம். மச்சத்தைச் சாப்பிடுவதன் காரணமாகவே தான் அவர்களுக்கு மச்சப் பிராமணர்கள் என்று பெயரே வந்ததாம். ஆனால், இங்கே பிரா மணர்கள் அவ்வாறு சாப்பிடுகிறார்களா என்ற பிரச்னைக்கு நான் வரவில்லை. இஷ்டப்பட்டவர்கள் சாப்பிடட்டும்; இஷ்டப்படாத வர்கள் சாப்பிடவேண்டாம். அதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் கூட மீனுக்கு நெருக்கடி இருக்கதான் செய்கிறது. முன் காலத்தில் மீன் சாப்பிட்டவர்களின் எண்ணிக் கையைவிட இப்பொழுது மீன் சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகத்தான் சொல்கிறார்கள். குறிப்பாக, சட்ட மன்ற ஹாஸ்டலில் 1962-ம் ஆண்டிலிருந்து இன்று வரையில் ஒரே வகை மீன்தான் சமைத்துப் போடுகிறார்கள். அதே மீன் தான்; அதே மீன் குழம்பு தான். அதே ருசிதான் இருக்கிறது. 1962-இலிருந்து நானும் பார்க்கிறேன். அதே மீன் தான் போடுகிறார் கள். அது எங்கிருந்து வருகிறதென்று தெரியவில்லை. தயவு செய்து அதை மாற்றியாவது போடச் சொல்லுங்கள்.

மீன் இலாகாவிற்கும், மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட் டிருக்கும் மீனவர்களுக்கும் உள்ள நிலைமை ரொம்ப சங்கடமான நிலையாக இருக்கிறது. விவசாயத்தைப் பொறுத்த வரையில், என்ன என்னவோ கஷ்டப்பட்டு, எப்படியும் விவசாய உற்பத் தியைப் பெருக்கவேண்டும் என்பதற்காக விவசாயிகளுக்கு என்ன என்னவோ சலுகைகளும், வசதிகளும் செய்கிறார்கள். ஆனால், மீனை உற்பத்தி செய்து, உணவாகக் கொடுக்கிற மீனவர்களைப் பொறுத்த வரையில் அவர்களிடம் அரசாங்கத்திற்குக் கொஞ்சம் சிரத்தைக் குறைவாகத்தான் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் மரக்காணத்திலிருந்து கோட்டகுப்பம் வரையில் மீனவ மக்கள் வாழ்கிறார்கள். சுமார் 30 கிராமங்களுக்கு மேல் அந்த சமுதாயத்தினர் வசிக்கிறார்கள். அங்கு எந்த விவசாயமும் செய்ய முடியாது. தண்ணீரில் இறங்கினால்தான் பிழைப்பு. மீனைக்கொண்டு வந்து கரையில் விற்றால்தான் அவர்களுக்குப் பிழைப்பு. அந்த அளவு அவர்களுடைய நிலை இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான ரோடு வசதி இல்லை. படிப்பு வசதி இல்லை; குடிக்கத் தண்ணீர் வசதி இல்லை. இருக்க இட வசதியும் கிடையாது. அம்மாதிரி நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். அதெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் நேரில் அந்தப் பகுதிக்கெல்லாம் சுற்று பயணம்

வந்தார்களாம். நான் அப்பொழுது அங்கு இருக்க முடியவில்லை. அப்பொழுது நான் அங்கு இருந்திருந்தால், சில இடங்களைக் காட்டியிருப்பேன். எனக்கும் சௌகரியமாக இருக்கும்; அரசாங்கத்திற்கும் சௌகரியமாக இருந்திருக்கும். ஆனால், நான் அங்கு இருக்க முடியவில்லை. ஆக, அந்த நிலைமை அங்கு இருக்கிறது. இதை எல்லாம் தயவு செய்து பரிசீலனை செய்து பார்த்து, வெளி நாடுகளில் மீனுக்கு எவ்வளவு செல்வாக்கும், எவ்வளவு முக்கியத்துவமும் கொடுத்திருக்கிறார்களோ, அதே மாதிரி நம் நாட்டிலும் மீனுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, அந்தத் துறையிலே முயற்சி எடுத்தால் உணவுப் பற்றாக்குறையை, நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்ற கருத்தைச் சொல்கிறார்கள். அதைக் கவனிக்கவேண்டும்.

இன்னும் ஒரே ஒரு விஷயம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில், கிழக்குக் கடற்கரை ரோடு ஒன்று அமைப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது என்று தெரியவில்லை. இது மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் மறந்துவிட்டாலும், இவர்கள் மறந்துவிடாமல், தயவு செய்து இந்த இலாக்கா, சம்பந்தப்பட்ட மத்திய அரசாங்க இலாக்காவிற்கு எடுத்துச் சொல்லி, நான்காவது திட்டத்தின் முதல் வருடத்திலேயே அந்தவேலையை எடுத்துக்கொள்ளச் செய்யவேண்டும். கிழக்குக் கடலோர ரோட்டைப் போட்டுவிட்டால் ஒரு பெரிய பிரச்னை தீர்ந்துவிடும் என்று சொல்லி, அதைச் செய்யவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மீன்வளத் துறை, அச்சுத் துறை மானியக் கோரிக்கைகளை நான் ஆதரிக்கிறேன்.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், நீண்ட கடற்கரைப் பகுதி உள்ளது. ஆகவே, எவ்வளவு அதிகமாக இந்தத் துறைக்குச் செலவிட்டாலும் அது தகும். இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதுமானதல்ல. என்றாலும் சமீப காலத்தில் கூடுமானவரை அதிகமாக ஒதுக்குவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. அது பாராட்டத் தகுந்தது.

நான் சமீபத்தில் மகாராஷ்டிரத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே சில பகுதிகளுக்குப் போயிருந்தபோது, கூட்டு முறையில் அவர்கள் க்ரூப்பாகச் சேர்ந்து படகுகளுக்காகக் கடன் வழங்கும் திட்டம் வைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஆனால், நம் ராஜ்யத்தில் நாம் தனியாருக்குத்தான் கொடுத்து வருகிறோம். அத்திட்டம் நம்முடைய பகுதியிலும் சாத்தியமா என்பதை யோசிக்கவேண்டும்.

விசைப் படகுகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்காகக் கொடுக்கப்படும் இயந்திரங்கள் பழுதுபடக் கூடிய நிலைமை பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. எனக்குக் கூடப் பல புகார்கள்

வந்திருக்கின்றன. அங்கே சப்ளை செய்யும் இயந்திரம் சரியானதாக இல்லை, விசை உள்ளதாக இல்லை, இழுப்பதற்குச சக்தி உள்ளதாக இல்லை என்று சொல்லப்படுகிறது. அதில் என்ன கோளாறு இருக்கிறது, எப்படி மாற்றியமைக்கலாம் என்று சற்று ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

பல குளங்குட்டைகளுக்கெல்லாம் மீன் குஞ்சு சப்ளை செய்ய வேண்டியது அவசியம். ராஜ்யம் முழுவதிலும் லட்சக்கணக்கான கிணறுகள் இருக்கின்றன. உப்புத் தண்ணீராக இருந்தாலும், சப்புத் தண்ணீராக இருந்தாலும், அது அதற்கு ஏற்ற மீன் குஞ்சுகள் ராஜ்யம் முழுவதிலும் சப்ளை செய்து, கூடுதல் மீன் உற்பத்திக்கு வழி காண முடியுமா என்பதைப்பற்றி ஆராய வேண்டும்.

கட்டுமரங்களுக்கு அல்பீஸியா என்கிற மரம் தேவைப்படுகிறது. அது இலங்கையிலிருந்தும் கேரளாவிலிருந்தும் வரக் கூடிய நிலைமை இருக்கிறது. அங்கும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதனால் அங்கிருந்து பெறுவதில் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, நம்முடைய ராஜ்யத்திலேயே அதை வளர்த்தாக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைச் செய்யவேண்டும்.

நைலான் நூலுக்கு மானியம் 25 சதவிகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது உள்நாட்டில் நைலான் நூல், கார்வார் நூல் சப்ளை செய்யப்படுவதாக நினைக்கிறேன். அந்த நூல் தரமுள்ளதாக இல்லை; விலை அதிகமாக இருக்கிறது. ஏற்றுமதிக்காக 15 சதவிகிதம் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி சப்ளை செய்கிறபோது, இங்கிருந்து மீன், கருவாடு முதலியவைகளை வெளி ராஜ்யங்களுக்கும், இலங்கைக்கும் ஏற்றுமதி செய்யக்கூடியவர்கள் கட்டுபடியாகக்கூடிய விலை இல்லாத நிலையில், கொண்டுவரக்கூடிய நைலானுக்கு அதிக விலை வாங்குவதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. இவற்றைப் பரிசீலனை செய்து எந்த அளவு இதற்குப் பரிகாரம் காணலாம் என்பதை யோசிக்க வேண்டும்.

கடலோரமாகக் குடியிருக்கும் மீனவர்களுக்குக் குடியிருப்பு நிலம் சொந்தமில்லாத நிலைமையில் அவர்கள் பத்து வருஷம், இருபது வருஷம் குடியிருந்தால்கூட, இருக்கும் நிலங்களுக்கெல்லாம் பட்டா வழங்குவதில் கஷ்டம் இருக்கிறது. வீடுகள் கட்டக்கூடிய திட்டத்திற்குப் போதுமான அளவிற்குப் பணம் ஒதுக்கீடு இல்லை. க்ரூப் ஹௌஸிங் வசதி செய்திருக்கிறது. அது போதாது. அங்கிருக்கும் மீனவர்கள் குப்பங்களில் வீடுகள் கட்டக்கூடிய காலனி அமைப்புக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்.

திருச்செந்தூர், அமலிநகர் காலனி திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் இன்னும் கட்டப்படவில்லை. நிலம் ஒதுக்கப்பட்டாலும் கட்ட வேண்டிய நேரத்தில், இரண்டாவது திட்டம், மூன்றாவது திட்டமாக மாறி விட்டது. அதிகமான தொகை தேவை இருந்தது. எஸ்டிமேட்டை

மாற்றி அமைக்கவேண்டியதன் காரணமாக அவை பூர்த்தியடையாத நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசித்துப் பூர்த்தி செய்யவேண்டும்.

திருச்செந்தூரில் விற்பனை நிலையம்—மார்கெட்டிங் சொஸைட்டி தயார் செய்தார்கள். அதற்குப் போதுமான—உற்சாகமான ஒத்துழைப்பு இலாக்காவிலிருந்து கிடைத்ததாகத் தெரியவில்லை. சமீபத்தில் கடலோரப் பகுதிகளில் உள்ள எல்லா ஊர்களுக்கும் குளிர்ப் பதன அறை வசதிகள் செய்வதற்கு முயற்சி இருக்கலாம் என்றாலும், காலா காலத்தில் செய்வதற்கு முடியவில்லை. புன்னக் காயல், தூத்துக்குடி பகுதிகளில் இருக்கிறது. இருக்கும் இடங்களில் இருந்து சிறு அளவிற்காவது 'வான்' மூலமாக கடலோரப் பகுதிகளில் உடனடியாக இத்தகைய வசதி செய்து கொடுக்க வேண்டும். காலா காலத்தில் செய்யவேண்டும். புன்னக்காயலிலிருந்து களிமுகத்தில் வள்ளங்களில் மீன் பிடிப்பதற்கு தாராளமாகப் போய் வர இடைஞ்சல் இருக்கிறது. மண்மேடிட்டிருக்கும் காரணத்தால், அரசாங்கமே அதைக் காலா காலத்தில் அப்புறப் படுத்தி, தாராளமாகச் சென்று வர வசதி செய்ய வேண்டும். புன்னக் காயல் பகுதியை சிறிய மீன்பிடி துறைமுகமாக வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் வெகு காலமாக அரசாங்கத்திற்கு உண்டு. காலா காலத்தில் அத்தகைய வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மணப்பாடு, உவரி கடலரிப்புக்கு விமோசனம் ஏற்பட நீண்ட காலத்திட்டம் குறுகிய காலத்திட்டம் வகுக்கவேண்டும். அந்தப் பகுதியில் வள்ளங்கள், கட்டுமரங்களைக் கரையேற்றிவைப்பதற்கு சில கஷ்டங்கள் இருக்கின்றன. அதை அரசாங்கம் காலா காலத்தில் நிவர்த்தி செய்ய வேண்டும்.

மேற்குக் கடற்கரைப் பகுதியில், கேரளாவில் மீனவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதி இருந்தது. தனிப் பாடசாலை வசதி இருந்தது. நம் ராஜ்யத்திலும் அத்தகைய குழந்தைகள் கல்விக்கு வசதிவேண்டும். தனிப்பாடசாலை இல்லாவிடினும் போதிய ஹாஸ்டல் வசதி செய்ய வேண்டும். தூத்துக் குடியில் இருக்கும் மீனவர் ஹாஸ்டலில் போதுமான பிள்ளைகள் தங்க வசதி இல்லை. ஹாஸ்டல் மாணவர் எண்ணிக்கை வசதியை அதிகப்படுத்தவேண்டும். திருச்செந்தூரிலே கூட ஒரு கல்லூரி சமீபத்தில் வந்திருக்கிறது. அந்த இடத்தில்கூட மீனவர் ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க அரசாங்கம் யோசிக்க வேண்டும். தூத்துக்குடியிலே மீன் காட்சிசாலையை அமைக்க முடியுமா என்பது பரிசீலிக்கப்படவேண்டும். அதுபோலவே திருச்செந்தூரிலும் அமைக்க யோசிக்கலாம். பல யாத்திரிகையாளர்கள் ஆண்டு முழுமையும் வந்துபோகக்கூடிய இடமாதலால் இந்த வசதியை இங்கே செய்துகொடுக்க முடியுமா என்பது யோசிக்கப்படவேண்டும்.

அதுபோல அச்சுத்துறையை எடுத்துக்கொண்டால்—அது சர்க்கார் துறை. அந்த இடத்திலே அங்கஹீனமான குழந்தைகள் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியுமோ அத்தனை அளிக்கவேண்டும். மேலும் தியாகிகளுடைய குழந்தைகள், பொற் கொல்லர்களுடைய குழந்தைகள், இலங்கை பர்மாவில் இருந்து வந்த அகதிகளுடைய குழந்தைகள், ராணுவத்தினர் குழந்தைகள், ஹரிஜனக் குழந்தைகள் என்பதாக சர்க்காருடைய விசேஷ சலுகைக்கு ஆளாகக்கூடியவர்களின் குழந்தைகளுக்கு பெரும்பாலும் வேலைவாய்ப்பு வசதியைச் செய்துகொடுக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

திருநெல்வேலி-பாளையங்கோட்டை சிறைச்சாலையை அடுத்த சர்க்கார் கட்டடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை உபயோகப்படுத்திக்கொண்டு, பாளையங்கோட்டையில் சர்க்கார் அச்சுக்கூடம் ஒன்று வைத்து அரசாங்கம் இயங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்செந்தூர் தாலூக்காவில் பெரிய தாழை என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கே மீன் பிடிப்புக்கு இடைஞ்சதாக கடல் பாறைகள் தொடர்பாக இருக்கின்றன. இதனால் உயிர்களுக்கே அபத்து ஏற்படுகிறது. அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று முயற்சி சென்ற முதல், இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களிலேயே இருந்தது. ஆனால் இதுவரை அது அகற்றப்படவில்லை. இனியாவது உடனடியாக அந்த முயற்சியை மேற்கொண்டு அந்த பாறையை போக்குவரத்துக்கு வசதியாக அப்புறப்படுத்த வேண்டும்.

மீனவர்களுக்கு நாம் எந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு அவர்களது குடும்பத்தார்களுக்கு மாற்றுவேலையும் கைத்தொழில் இலாகா மூலமாகக் கொடுக்க முடியுமா என்பதை சிந்திக்கவேண்டும். இன்றைய தினம் வலை பின்னுவது. இன்னும் சங்கைக் கொண்டு பல பொருள்களைச் செய்தல் ஆகியவை கைத்தொழில் இலாகா மூலமாக அவர்களுடைய குடும்பத்தார்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தால், அவர்களது குடும்பத்தில் உள்ள பெண்களும் வீட்டிலிருந்தே சிறு கைத் தொழில் செய்து—அதனால் பொருளாதார ரீதியில் அவர்களுடைய குடும்பம் முன்னேற்றம் அடைய வழியேற்படும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோ. சி. மணி: கனம் உதவித் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மன்றத்தின் விவாதத்திற்கு வந்திருக்கிற 17-ஆவது மானியக் கோரிக்கையில் மீன் வளத்துறையைப்பற்றி எனக்குத் தெரிந்த வரையில், நங்கள் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து கூறிக்கொள்ளலாம் என்று விரும்புகிறேன்.

குறிப்பாக, மீன் வளத்துறை வளர்ச்சியுற வேண்டுமென்று கூறுகிற இந்த நேரத்தில் அதற்கு இருக்கவேடிய கூட்டுறவுகள் இல்லை என்ற குற்றச்சாட்டை முதலில் தங்கள் மூலமாகச் சுமத்த விரும்புகிறேன்.

குறிப்பாக, மீன் வள இலாகாவும், கூட்டுறவு இலாகாவும், நீர்ப்பாசன இலாகாவும் ஒருங்கிணைந்து திட்டமிட்டு வேலை செய்தால் தான் இந்த மீன் வள இலாகா முழுவெற்றியைப் பெற முடியும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, உள்நாட்டு மீன் பிடிப்பைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் உள்நாட்டு மீன் கூட்டுறவு சங்கத்திற்கு கூட்டுறவுத் துறை இலாகாவும் உதவியாக இருக்கவேண்டும். அதே நேரத்தில் ஆறுகளையும், கால்வாய்களையும், குளங்களையும் பராமரிக்கிற நீர்ப்பாசன இலாகாவும் உதவியாக இருக்கவேண்டும். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதா என்றால் இல்லை. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், உள்நாட்டு மீன் பிடிப்புக்கு மிக அத்தியாவசியமாக இருக்கிற இலாகாக்கள் இவை. குறிப்பாக, பத்தாயிரம் ரூபாய்க்கு குத்தகை ஒப்புக்கொள்கிற ஒரு குத்தகைக்காரர் ஒரு கால்வாயில் மீன் பிடிக்கவேண்டுமென்றால் சாதாரணமாக சட்டப்படி, எல்லோருக்கும் தெரிந்து, அறிகிற வகையில் மீன் பிடிக்கிற நிலை இன்று இல்லை. அந்த அந்தக் கால்வாயை கண்காணித்துக்கொண்டு வருகிற லஸ்கருடைய தயவு இருந்தால்தான் அந்த இடத்தில் உட்கார்ந்து மீன் பிடிக்க முடியும். இந்த மீன் வளத்துறையைப் பொறுத்தவரையில் அங்குள்ள அதிகாரிகள் மீனவர்களை மதிக்கிறார்கள். ஏற்றுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொன்னால் மீன் வளத்துறை டைரெக்டர் எங்களுக்கு அதிக மதிப்புத் தருகிறார்கள். ஆனால் நீர்ப்பாசன இலாகாவில் இருக்கிற ஒரு லஸ்கர் எங்களை மதிக்கிறது இல்லை. இதை மிகவும் வருத்தத்தோடுதான் சொல்கிறேன். இந்த நிலை நீடித்தால் நிச்சயமாக உள்நாட்டுத்துறை மீன் பிடிப்பே அழிந்துவிடும் என்று சொல்ல விரும்புகிறேன். நீர்ப்பாசன திட்டத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டியதுதான். ஏற்றுக்கொள்கிறேன். அதற்கு அடுத்த இரண்டாவது இடமாவது இந்த மீன் பிடிப்புக்கு கொடுக்கக்கூடாதா? இன்றைக்கு அந்த மராமத்து இலாகாவில்—கட்டடத்திற்கு 300 கஜம் தள்ளித்தான் யாராக இருந்தாலும் மீன் பிடிக்கலாம். கட்டடத்தில் உட்கார்ந்து வலைவீசுவது, மீன் பிடிப்பது எல்லாம் கட்டடத்திற்கு ஆபத்து என்கிறார்கள். சாதாரணமாக ஒரு வலையின் கனம் ½ வீசை இருக்காது. இதை வீசுவதனால் கட்டடத்திற்கு ஆபத்து என்கிற உத்தரவு இன்றைக்கு யாருக்குப் பயன்படுகிறது என்றால் அங்கே உள்ள லஸ்கருக்குத்தான். உண்மையைச் சொல்லப் போனால் நாங்கள் யாரும் அப்படி மீன் பிடிக்காமல் இருப்பதில்லை. உதாரணமாகச் சொல்கிறேன். கும்பகோணத்தில் 36 ஆயிரம் ரூபாய்க்கு குத்தகை எடுத்தோம். 42 ஆயிரம் ரூபாய்க்கு அதை [illegible] குத்தகை விட்டோம். பல பேர்களிடமிருந்து இந்த 42 ஆயிரம் ரூபாயை வசூல் செய்ய வேண்டுமென்றால் அங்கே உள்ள லஸ்கருடைய தயவுதான் வேண்டும். மீன் வள இலாகா அதிகாரிகள் எங்களுக்கு எத்தனை அனுகூலங்களைச் செய்தாலும் இந்த லஸ்கருடைய உதவி இல்லை என்றால் உள்நாட்டு மீன் பிடித் தொழிலையே நடத்த முடியாது. இங்கே நீர்ப்பாசன இலாகா அமைச்சர் அவர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். இதற்கு ஏதாவது விமோசனம்

அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்திற்கு ருந்தகம் இல்லாமல் மீன் பிடிப்புத் தொழிலுக்கும் ஒரு இரண்டாவது இடத்தையாவது கொடுத்து உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களில் நர்சரிகள் வைக்கப்படுகின்றன. அந்த நர்சரிகளில் மீன் குஞ்சுகளைவிடுவதற்கு மீன்வள இலாகா அதிகாரிகள் வந்தால் அவர்கள் பூட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள். இரண்டுபேர்களும் ஒரு இணைப்பு இல்லை. அவர்கள் இஷ்டப்பட்டால் சாவி கொடுப்பார்கள், இல்லை என்றால் பூட்டிக்கொண்டு எங்காவது போய்விடுவார்கள். ஆகவே, கட்டிய நர்சரிகள் உபயோகமில்லாமல் போகின்றன. இதுபோன்ற நர்சரிகள் இந்த இலாகாவின் பொறுப்பிலே இருக்கவேண்டும். நர்சரிகள் ஏற்படுத்துவதற்கு முன் அங்கே எத்தகைய தண்ணீர் கிடைக்கும், அங்கே நர்சரி ஏற்படுத்தலாமா என்று ஆராய்ந்து பார்த்து முடிவு செய்கிற பொறுப்பும் இந்த இலாகாவினிடத்திலேயே இருக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இன்னொன்று, உள்நாட்டு மீன் பிடிப்பு விஷயத்தில் கூட்டுறவு சங்கத்திற்கு குத்தகை கொடுக்கிறார்கள். அதே பகுதியில் தனியாருக்கு லைசென்சும் கொடுக்கப்படுகிறது. மூன்று ஆறுகள் இருந்தால் இரண்டு கோடி ஆற்றையும் லைசென்சு கொடுக்கிறபோது, அந்த ஆற்றில் இருந்து மீன் பிடித்து இந்த ஆற்றைத் தாண்டுகிறபோது இங்கேதான் பிடித்ததாகக் கூடப் பிடித்துக்கொள்கிறார்கள். ஒருபுறம் மீனவர்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லி, தனிப்பட்ட லைசென்சுகளையும் வழங்குவதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, கூட்டுறவு சங்கத்திற்கே உரிமை அளிக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. தா. ப. அழகமுத்து: கனம் உதவித் தலைவரவர்களே, 1-00 p.m.
கனம் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள அச்சுத் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறைக்கு என்று உள்ள கோரிக்கையை இங்கே வைக்கவில்லை. அச்சுத்துறை, மீன் வளம், ரிஜிஸ்ட்ரேஷன் முதலியவைகளுக்கான மானியத்தைக் கோருகிறார்கள். ஆனால் அவர் பெயரால் உள்ளதற்குள்ள மானியம், ஹெட் ஆப் ஸ்டேட்ஸ், டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் ஆகியவைகளிலே போய்விட்டது. ஆகவே, நானும் இந்தச் செய்தித் துறையைப்பற்றிய கருத்துக்களை அச்சுத்துறையோடு இணைக்காச் சொல்லலாம் என்று கருதுகிறேன். அவர் அதை ஆட்சேபிக்க மாட்டார். பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர்: அவர் ஆட்சேபிக்கவேண்டியதில்லை, விவாதத்திற்குப் புறம்பானதாக இருக்குமானால் நான் ஆட்சேபிக்கலாம்.

[திரு. கே. டி. கோசல்ராம்] [25th March 1966

விசைப்படகுகள் கொடுத்திருக்கிறோம், 'கொடுத்திருக்கிறோம் என்று பெருமைப்படுகிறோம். ஆனால், உண்மையிலே அது ஆழக் கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு உபயோகப்படுகிறதா என்று பார்த்தால் இல்லை. கட்டுமரத்தில மீன் பிடிப்பவனும் இவனும் சண்டைதான் போடுகிறார்கள் என்று திரு. சுவாமிதாஸ் அவர்கள் சொன்ன மாதிரிதான் நடக்கிறது. ஒரு ஊரிலே நானே பார்த்தேன். ஆகவே, சண்டையை உருவாக்கியிருக்கிறோம். இதில் முக்கிய மாகக் கவனிக்கவேண்டியது ஒன்று இருக்கிறது. இதிலே ரஸ்டன் எஞ்சின் மாட்டப்பட்டிருக்கிறது. அந்த எஞ்சின் உள்ள படகில் வலையைப்போட்டு இழுத்துக்கொண்டுபோகும்பொழுது எஞ்சின் சூடாகி விடுகிறது. ஆழக்கடலில் சென்று மீன்பிடிக்கமுடியவில்லை. அதில் ஏர் கூலர் இருக்கிறது. ஆனால் வாட்டர் கூலர் இல்லை. எஞ்சின் சூடாகிவிடுவதால் ஆழக்கடலில் சென்று மீன்பிடிக்க முடியவில்லை. ஆகவே அதில் வாட்டர் கூலர் வைத்துக்கொடுத்தால் நன்றாக இருக்கும். நாம் படகுகளுக்காகக் கடன் கொடுத்திருக் கிறோம், அதிலே எத்தனைபேர்கள் திருப்பிக் கட்டியிருக்கிறார்கள் என்று பார்த்தால் 100-க்கு 70 பேர்கள்கூட கட்டவில்லை. பல பேர்கள் கட்டவில்லை என்பது எனக்கு தெரியும். நாம் யாருக்கு உதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் கொடுத்தோமோ அந்த உதவி பயன்படுத்திக்கொள்ளமுடியாத நிலைக்குப் போனதற்குக் காரணம் டிபார்ட்மெண்டாகத்தான் இருக்க முடியும். யாரோ ஒருவர் தெரியாமல் இந்த எஞ்சினை வாங்கியிருக்கிறார்கள். இதைத் தெரிந்து வாங்கினார்களா அல்லது தெரியாமல் வாங்கிவிட்டார்களா என்ற விவரத்தையெல்லாம் புலன் விசாரணை செய்யவேண்டு மென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த எஞ்சின் ரஸ்டன் ஆக இருந்தாலும், வாட்டர் கூலர் மாட்டியதாக இருக்கவேண்டும். அப்படிச் செய்தால் சூடு ஏற்படாது. எக்ஸாமின் செய்து அந்த எஞ்சினை வாங்கிய, அந்த நிபுணர் களுடைய தவறினால்தான் அரசாங்கத்திலிருந்து லட்சக் கணக்காக ரூபாய் கொடுத்தும் பயன் இல்லை.

கனம் திரு. கோ. பூவராகன் : கனம் அங்கத்தினர் அவர்கள் எஞ்சினைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மெரைன் டீசல் என்ஜின் களைச் செய்வதற்காக மத்திய அரசாங்கம் ஐந்து கம்பெனிகளுக்கு அனுமதி கொடுத்தது. இரண்டு கம்பெனிகள்தான் மெரைன் டீசல் எஞ்சினைத் தயாரிக்க முன் வந்தார்கள். அந்த இரண்டிலே மிகவும் உயர்ந்த, எல்லா மாநிலங்களிலும் ஏற்றுக் கொண்ட ரஸ்டின் எஞ்சினைத்தான் நாமும் வாங்கியிருக்கிறோம்.

திரு. கே. டி. கோசல்ராம் : அமைச்சர் சொல்வதிலே எனக்கு டிஸ்ப்யூட் இல்லை. அந்த எஞ்சினிலே 'ஏர் கூலர்' வைத்திருக்கி றார்கள்; அதற்குப் பதிலாக 'வாட்டர் கூலர்' வைத்திருந்தால் சரியாக இருந்திருக்கும். அதைப் பார்த்த எஞ்சினியர் தவறு செய்திருக்கிறார் என்றுதான் கருதுகிறேன். அரசாங்கம் நல்ல திட்டந்தான் போடுகிறார்கள் என்பதை எதிர்க்கட்சியினரும் ஒத்துக் கொள்கிறார்கள். நிறைவேற்றுகிறபோது ஏற்படுகிற கோளாறுகளால், யாரோ ஒருவர் தவறு செய்த காரணத்தால்

25th March 1966] [திரு. கே. டி. கோசல்ராம்]

கொடுத்த படகை எல்லாம் அவர்கள் சர்க்காரிடத்திலே திருப்பிக் கொடுத்து நல்ல எஞ்சினைப் போட்டுத் தாருங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அந்த எஞ்சின்களுக்கு வாட்டர் கூலர் வைத்து அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது நல்லது என்று கூற விரும்புகிறேன். ரஸ்டன் கம்பெனியைத் தவிர மற்றொரு கம்பெனியும் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கம்பெனி தயாரிக்கும் எஞ்சினில் வாட்டர் கூலர் இருக்கிறதா என்றும் பார்க்கவேண்டும். குறிப்பாக எந்த அதிகாரியின் மீதும் குற்றஞ் சாட்ட வேண்டுமென்பது என்னுடைய கருத்தல்ல; யாருடைய கருத்தும் அல்ல. தவறு எப்படி நடந்தது என்பதை இனிமேலாவது இன்வெஸ்டிகேட் பண்ணவேண்டும்.

தார்வாரி நைலான் ரொம்ப மோசமாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் ஒரு எக்ஸ்பிளனேஷன் கொடுத்தால் நலமாக இருக்கும். தார்வாரியை யாரும் வேண்டாமென்று சொல்லுகிறபோது எதற் காக அதை மொத்தமாக டம்ப் பண்ணவேண்டும். நாம் சப்சிடி கொடுக்கிறோம்; கடன் கொடுக்கிறோம். அப்படி இருக்கும்போது நல்ல நைலானைக் மார்க்கட்டில் பார்த்து வாங்கிக் கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும்.

ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு பிராஜக்ட் இன்வெஸ்டிகேஷன் பண்ணவேண்டும். ஸ்டீல் ப்ளாண்டை ஏற்படுத்துவதற்காக நம்முடைய வெங்கட்டராமன் அவர்கள் ஜப்பானுக்குப் போய் நெகோஷியேட் பண்ணி நம்முடைய அரசாங்கமே ஸ்டீல் ப்ளாண்டை நடத்தலாம் என்று கூறியிருக்கிறார்கள். அதே போன்று இதிலும் ஜப்பான் ஸ்கீம், கனடியன் ஸ்கீம் எல்லாம் இருக்கின்றன. இந்த ஸ்கீமுக்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுக்கிறது, நாம் எவ்வளவு ஒதுக்க வேண்டும் என்பதை எல்லாம் பார்த்து பெரிய பிராஜக்டாகப் பண்ண நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்லண்ட் ஃபிஷிங் பற்றி செல்வராஜன் அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டில் லட்சக் கணக்கான குளங்கள் இருக் கின்றன. இந்தக் குளங்களில் எல்லாம் மீன் இலாகா கான்சென்ட்ரேட் பண்ண வேண்டும். நான் இலாகாவைக் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. நான் இரண்டு மூன்று ஏக்கரில் உள்ள 30 அடி குளத்திற்கு மீன் வேண்டுமென்று கேட்டேன்; அவர்கள் உடனே 35 ரூபாய்க்கு மீன் குஞ்சுகளைக் கொண்டு வந்து விட்டார்கள். அதற்காகச் சந்தோஷப்படுகிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதே மாதிரி யார் கேட்டாலும் உடனே கொண்டு போய் மீன் விடுவதற்கான ஏற்பாடுகளை இலாகா செய்யவேண்டும். அதை எந்த முறையிலே இம்ப்ரூவ் பண்ணலாம் என்பதைப் பற்றியெல்லாம் கூட இலாகா அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். மீன் உற்பத்தியைப் பொருத்தவரை ஒரு ஏக்கரில் 4,000 ரூபாய்க்கு அதிகமாகக் கூட வருமானம் கிடைக் கிறது. விவசாயத்தை விட அதிகமாகக் கூட இதிலிருந்து

விசைப்படகுகள் கொடுத்திருக்கிறோம், 'கொடுத்திருக்கிறோம்' என்று பெருமைப்படுகிறோம். ஆனால், உண்மையிலே அது ஆழக் கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு உபயோகப்படுகிறதா என்று பார்த்தால் இல்லை. கட்டுமரத்தில மீன் பிடிப்பவனும் இவனும் சண்டைதான் போடுகிறார்கள் என்று திரு. சுவாமிதாஸ் அவர்கள் சொன்ன மாதிரிதான் நடக்கிறது. ஒரு ஊரிலே நானே பார்த்தேன். ஆகவே, சண்டையை உருவாக்கியிருக்கிறோம். இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது ஒன்று இருக்கிறது. இதிலே ரஸ்டன் எஞ்சின் மாட்டப்பட்டிருக்கிறது. அந்த எஞ்சின் உள்ள படகில் வலையைப்போட்டு இழுத்துக்கொண்டுபோகும்பொழுது எஞ்சின் சூடாகி விடுகிறது. ஆழக்கடலில் சென்று மீன்பிடிக்கமுடியவில்லை. அதில் ஏர் கூலர் இருக்கிறது. ஆனால் வாட்டர் கூலர் இல்லை. எஞ்சின் சூடாகிவிடுவதால் ஆழக்கடலில் சென்று மீன்பிடிக்க முடியவில்லை. ஆகவே அதில் வாட்டர் கூலர் வைத்துக்கொடுத்தால் நன்றாக இருக்கும். நாம் படகுகளுக்காகக் கடன் கொடுத்திருக்கிறோம், அதிலே எத்தனைபேர்கள் திருப்பிக் கட்டியிருக்கிறார்கள் என்று பார்த்தால் 100-க்கு 70 பேர்கள்கூட கட்டவில்லை. பல பேர்கள் கட்டவில்லை என்பது எனக்கு தெரியும். நாம் யாருக்கு உதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் கொடுத்தோமோ அந்த உதவி பயன்படுத்திக்கொள்ளமுடியாத நிலைக்குப் போனதற்குக் காரணம் டிபார்ட்மெண்டாகத்தான் இருக்க முடியும். யாரோ ஒருவர் தெரியாமல் இந்த எஞ்சினை வாங்கியிருக்கிறார்கள். இதைத் தெரிந்து வாங்கினார்களா அல்லது தெரியாமல் வாங்கிவிட்டார்களா என்ற விவரத்தையெல்லாம் புலன் விசாரணை செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த எஞ்சின் ரஸ்டன் ஆக இருந்தாலும், வாட்டர் கூலர் மாட்டியதாக இருக்கவேண்டும். அப்படிச் செய்தால் சூடு ஏற்படாது. எக்ஸாமின் செய்து அந்த எஞ்சினை வாங்கிய, அந்த நிபுணர்களுடைய தவறினால்தான் அரசாங்கத்திலிருந்து லட்சக் கணக்காக ரூபாய் கொடுத்தும் பயன் இல்லை.

கனம் திரு. கோ. பூவராகன் : கனம் அங்கத்தினர் அவர்கள் எஞ்சினைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மெரைன் டீசல் என்ஜின்களைச் செய்வதற்காக மத்திய அரசாங்கம் ஐந்து கம்பெனிகளுக்கு அனுமதி கொடுத்தது. இரண்டு கம்பெனிகள்தான் மெரைன் டீசல் எஞ்சினைத் தயாரிக்க முன் வந்தார்கள். அந்த இரண்டிலே மிகவும் உயர்ந்த, எல்லா மாநிலங்களிலும் ஏற்றுக் கொண்ட ரஸ்டின் எஞ்சினைத்தான் நாமும் வாங்கியிருக்கிறோம்.

திரு. கே. டி. கோசல்ராம் : அமைச்சர் சொல்வதிலே எனக்கு டிஸ்ப்யூட் இல்லை. அந்த எஞ்சினிலே 'ஏர் கூலர்' வைத்திருக்கிறார்கள்; அதற்குப் பதிலாக 'வாட்டர் கூலர்' வைத்திருந்தால் சரியாக இருந்திருக்கும். அதைப் பார்த்த எஞ்சினியர் தவறு செய்திருக்கிறார் என்றுதான் கருதுகிறேன். அரசாங்கம் நல்ல திட்டந்தான் போடுகிறார்கள் என்பதை எதிர்க்கட்சியினரும் ஒத்துக் கொள்கிறார்கள். நிறைவேற்றுகிறபோது ஏற்படுகிற கோளாறுகளால், யாரோ ஒருவர் தவறு செய்த [illegible]

கொடுத்த படகை எல்லாம் அவர்கள் சர்க்காரிடத்திலே திருப்பிக் கொடுத்து நல்ல எஞ்சினைப் போட்டுத் தாருங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அந்த எஞ்சின்களுக்கு வாட்டர் கூலர் வைத்து அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது நல்லது என்று கூற விரும்புகிறேன். ரஸ்டன் கம்பெனியைத் தவிர மற்றொரு கம்பெனியும் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கம்பெனி தயாரிக்கும் எஞ்சினில் வாட்டர் கூலர் இருக்கிறதா என்றும் பார்க்கவேண்டும். குறிப்பாக எந்த அதிகாரியின் மீதும் குற்றஞ் சாட்ட வேண்டுமென்பது என்னுடைய கருத்தல்ல; யாருடைய கருத்தும் அல்ல. தவறு எப்படி நடந்தது என்பதை இனிமேலாவது இன்வெஸ்டிகேட் பண்ணவேண்டும்.

தார்வாரி நைலான் ரொம்ப மோசமாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் ஒரு எக்ஸ்பிளனேஷன் கொடுத்தால் நலமாக இருக்கும். தார்வாரியை யாரும் வேண்டாமென்று சொல்லுகிறபோது எதற்காக அதை மொத்தமாக டம்ப் பண்ணவேண்டும். நாம் சப்சிடி கொடுக்கிறோம்; கடன் கொடுக்கிறோம். அப்படி இருக்கும்போது நல்ல நைலானைக மார்க்கட்டில் பார்த்து வாங்கிக் கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும்.

ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு பிராஜக்ட் இன்வெஸ்டிகேஷன் பண்ணவேண்டும். ஸ்டீல் ப்ளாண்டை ஏற்படுத்துவதற்காக நம்முடைய வெங்கட்டராமன் அவர்கள் ஜப்பானுக்குப் போய் நெகோஷியேட் பண்ணி நம்முடைய அரசாங்கமே ஸ்டீல் ப்ளாண்டை நடத்தலாம் என்று கூறியிருக்கிறார்கள். அதே போன்று இதிலும் ஜப்பான் ஸ்கீம், கனடியன் ஸ்கீம் எல்லாம் இருக்கின்றன. இந்த ஸ்கீமுக்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுக்கிறது, நாம் எவ்வளவு ஒதுக்க வேண்டும் என்பதை எல்லாம் பார்த்து பெரிய பிராஜக்டாகப் பண்ண நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்லண்ட் ஃபிஷிங் பற்றி செல்வராஜன் அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டில் லட்சக் கணக்கான குளங்கள் இருக்கின்றன. இந்தக் குளங்களில் எல்லாம் மீன் இலாகா கான்சென்ட்ரேட் பண்ண வேண்டும். நான் இலாகாவைக் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. நான் இரண்டு, மூன்று ஏக்கரில் உள்ள 30 அடி குளத்திற்கு மீன் வேண்டுமென்று கேட்டேன்; அவர்கள் உடனே 35 ரூபாய்க்கு மீன் குஞ்சுகளைக் கொண்டு வந்து விட்டார்கள். அதற்காகச் சந்தோஷப்படுகிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதே மாதிரி யார் கேட்டாலும் உடனே கொண்டு போய் மீன் விடுவதற்கான ஏற்பாடுகளை இலாகா செய்யவேண்டும். அதை எந்த முறையிலே இம்ப்ரூவ் பண்ணலாம் என்பதைப் பற்றியெல்லாம் கூட இலாகா அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். மீன் உற்பத்தியைப் பொருத்தவரை ஒரு ஏக்கரில் 4,000 ரூபாய்க்கு அதிகமாகக் கூட வருமானம் கிடைக்கிறது. விவசாயத்தை விட அதிகமாகக் கூட இதிலிருந்து

கிடைக்கும் என்று சொல்லலாம். நண்பர் பூவராகன் அவர்கள் இளைஞர், உற்சாகமாக வேலை செய்யக் கூடியவர்கள்; அவர்கள் உள்நாட்டு மீன் வளப்பத்தைப் பெருக்குவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பெரியதாளைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் நடுவிலே கோரல் ராக் இருப்பதால் அதிலே அடிப்பட்டுச் செத்து விடுகிறார்கள். அங்கு ஏராளமான மீன் இருக்கிறதென்று சொன்னார்கள். அந்த கோரல் ராக்கை எடுத்து விடுகிறோம் என்று அமைச்சர்கள் பின்னால் அமைச்சர்கள் வந்து 10 வருஷமாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்; நானும் மத்திய அரசாங் கத்திற்கு எழுதி எழுதி கைவலி எடுத்து விட்டது. அந்த கோரல் ராக்கிலே கால்சியம் சத்து இருப்பதால் இண்டஸ்ட்ரிய லிஸ்ட்ஸ் கூட உடைத்து எடுத்துக் கொள்ளத் தயாராக இருக் கிறார்கள். அதற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணையில் அரசாங்க முத்திரைகளை ஒழுங்காகப் பயன்படுத்த வில்லை என்று கூறியிருக்கிறார்கள். 'கவர்ன்மெண்ட் ஆஃப் மெட்ராஸ்' என்று போட்டிருக்கிற எம்ப்ளத்தை இப்போது யார் வேண்டுமென்றாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது. பஞ்சாயத்தில், பஞ்சாயத்து யூனியனில், நகராட் சியில் எல்லாம் அதைப் பயன்படுத்துகிறார்கள். யார் 'கவர்ன் மெண்ட் ஆஃப் மெட்ராஸ்?' பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டா? யூனியன் சேர்மனா? நகராட்சித் தலைவரா? இதற்கு ஒரு வரை யறை இருக்கவேண்டும். இந்த வரையறையைப் பற்றி அமைச்சர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட, இவ்வாறு அதைப் பயன்படுத்துவது தடுக்கப்படவில்லை. அரசாங்கம் மட்டுந் தான் அந்த முத்திரையை உபயோகிக்க வேண்டும்; உள்ளாட்சி, நகராட்சித் துறைகளிலே அதைப் பயன்படுத்தக்கூடாது என்ற உத்தரவை இதுவரை பிறப்பித்ததாகத் தெரியவில்லை. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எம்.எல்.ஏ.-க்களுக்கு லெட்டர் பாட் கொடுக்கிறார். இலவச மாகக் கொடுக்கும் லெட்டர் பாட் குப்பையில் போடும் கடுதாசி போல் இருக்கிறது. பணம் கொடுத்து வாங்கும் லெட்டர் பாட் கொஞ்சம் பரவாயில்லை; நன்றாக இருக்கிறது. இங்கிருக்கும் 206 மெம்பர்களுக்கு லெட்டர் பாட், கார்டு கவர் முதலியவற்றை எல்லாம் இனமாகக் கொடுக்கலாம். அரசாங்கத் திலிருந்து வாங்கக்கூடிய சாதாரணக் கவர்களையே காசு கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. சட்டசபை உறுப்பினர்களின் தபால்

செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும். லட்சக் கணக்கான மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும்போது குறைந்தது ஒரு நாளைக்கு 20, 25 கடிதங்கள் எழுத வேண்டியிருக் கிறது. கொடுக்கிற சம்பளத்தில் பேர்பாதி இதற்கே போய்விடும் போல் இருக்கிறது. ஆகவே, நல்ல கார்டு கவர்களை இனமாகக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

டெக்ஸ்ட் புக்ஸ்-ஐ அரசாங்கம் ப்ரின்ட் பண்ணுவதாகச் சொல் கிறார்கள். சிறு குழந்தைகளுக்கான புத்தகங்களை நல்ல முறையில் அச்சடித்துக் கொடுக்கவேண்டும். ஒரு பக்கத்துக்கு ஐந்தாறு தவறுகள் இருக்கின்றன. வருஷா வருஷம் சொல்லிக் கொண்டே இருக்கிறோம்; திரும்பவும் பிழைகள் வந்து கொண்டே இருக் கின்றன. அரசாங்கத்தில் வேலை செய்பவர்கள் அதிகம் படித்து விட்டார்களோ என்னவோ; ஸ்பெல்லிங் எல்லாம் அவ்வளவு கரெக்ட் ஆக வருகிறது! பாடப் புத்தகங்கள் எல்லாம் செப்டம்பர் மாதத்திலும் அக்டோபர் மாதத்திலும் வருகின்றன. பிரைவேட் டாக பிரின்ட் செய்த நேரத்திலே ஜூன் மாதத்திலேயே வந்து கொண்டிருந்தது. இந்தக் குறையையும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

சட்டங்கள் சம்பந்தமான புத்தகங்கள் கிடைக்கவே மாட்டேன் என்கிறது. பஞ்சாயத்து ஆக்ட் வேண்டுமென்று அரசாங்க அச்சகத்தில் கேட்டால் இல்லையென்று சொல்லுகிறார்கள். அவுட் ஆப் பிரிண்ட், மறுபடியும் இப்போதுதான் அச்சிலே ஏறியிருக் கிறது என்று சொல்கிறார்கள். ஆறு மாதமாகிறது. அது இறங்க எவ்வளவு மாதம் ஆகுமோ தெரியவில்லை. இந்தப் புத்தகங்கள் எல்லாம் உடனடியாகக் கிடைக்க வசதி செய்ய வேண்டும்.

அரசாங்க அச்சகம் சம்பந்தமாகப் பல புகார்களை, ஊழல்களை எல்லாம் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவ்வளவையும் சொல்வதற்கு நேரம் இல்லை. 50, 60-க்கு மேற்பட்ட குறைகளை எழுதி அனுப்பியிருக்கிறார்கள் அங்கு வேலை செய்யக்கூடிய சிப்பந்திகள். டைரக்டர்களை அடிக்கடி மாற்றுகிறார்கள்; அதிக அதிகாரிகளைப் போட்டிருந்தாலும் வேலை அளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் வேண்டியவர்களுக்குப் புரொமோஷன் கொடுப்பதும், வேண்டாதவர்களை ரிவர்ட் பண்ணுவதுந்தான். வேலை வாய்ப்பை ஜாதி, மதம் மற்றவற்றைப் பார்த்துக் கொடுக் கிறார்கள். விரும்புகிறவர்களுக்கு மாற்றம் இல்லை; விரும்பாதவர் களைப் புதுக்கோட்டைக்கும், திருச்சிக்கும் மாற்றிவிடுகிறார்கள். வேலையில் அமர்த்துவதிலே பாரபட்சம் காட்டுகிறார்கள். இந்தக் குறைகள் எல்லாம் வரக்கூடாத அளவுக்கு அந்தத் துறையில் இருப்பவர்கள் செயல்படவேண்டும்.

நண்பர் அழகமுத்து அவர்கள், காமராஜின் படத்தைப் போட்டு காமராஜ் சோஷலிசம் என்று போஸ்டர் பிரசாத் பிரிண்டிங் பிரஸ்ஸில் அச்சடித்து அதற்கான செலவு ரூ. 25,000 அரசாங்கத்திலிருந்து கொடுத்திருக்கிறார்கள் என்றார். இது

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [25th March 1966

அரசாங்கத்தின் பணம். ஒரு கட்சித் தலைவர் சோஷலிசம் வாழ வேண்டுமென்று சொல்லட்டும். ஆனால் அதற்கான போஸ்டருக்கு அரசாங்கத்திலிருந்து எப்படிச் செலவு செய்யலாம்?

ஆனால் அதற்காக அரசாங்கச் செலவில் இப்படி (போஸ்டரைக் காண்பித்து) பெரிய அளவில் ஒரு படத்தைப் போட்டு அரசாங்கப் பணத்தைச் செலவழிக்கவேண்டுமா, இப்படி 25,000 ரூபாய் செலவழிப்பது நியாயமா என்பதற்கு அமைச்சர் அவர்கள் தக்க பதில் அளிக்கவேண்டும். உள்ளபடியே அரசாங்கம் இதற்கு அரசாங்கப் பணத்தைத்தான் செலவழித்ததா, இந்த வால் போஸ்டரைப் போடுவதற்கு அரசாங்கப் பணம் செலவழித்தோம் என்று சொன்னால் நான் தாள்படிந்து பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதவியிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என்று.

திரு. சா. கணேசன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நம் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளில் குறிப்பாக மற்றவற்றை எல்லாம் பற்றிப் பேசுவதற்கு நேரம் போதாமையால் அச்சுத்துறையைப்பற்றி மட்டும் பேசுவது என்று நான் முடிவுசெய்து தெரிவித்த நிலையில் அதை மட்டும் பேசுகின்றேன். அதுவும் கூட முழுக்க முழுக்க விளக்கிப் பேசிவிடுவதற்குரிய நேரம் இல்லையாதலினால் மிகச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். முதலிலே நம்முடைய அரசு இலச்சினை இருக்கிறதே நான்கு ஆண்டுகளாக அதைச் சொல்லிக்கொண்டே வருகிறேன். நான்கு ஆண்டுகளாகியும் அதை முறைப்படுத்தி ஒருமைப்பாடு அடையச் செய்ய முடியவில்லை. கேவலம் 1½ இன்ச் சுறுக்களவுள்ள இந்த ப்ளாக்கை ஒருமைப்படுத்த முடியாத நிலையில் தேசத்தை ஒருமைப்பாடு படுத்தி விடுகிறோம் என்று சொல்வது கேட்பதற்கே கேவலமாகவும், மனதைப் புண்படுத்தக் கூடிய நிலையிலும் இருக்கிறது. என்பதை மிக்க வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். இந்த இலச்சினைபற்றி, இன்று ஒரு அறிக்கை எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது; அதில்

"The Director of Stationery and Printing, Madras, has manufactured new steel-dyes of the State Emblem rectifying the defects pointed out by some Members in the impression of the State emblem used so far in their letter-heads."

என்று இருக்கிறது. இந்த அளவிற்காவது செக்டிஸைச் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் மேலும் குழப்பப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை விட்டும் அனுப்பியிருந்தேன். ப்ளாக் எங்கே என்று கேட்டேன். இப்போதுதான் வந்தது. ஒன்று கவுன்சிலுக்கு, ஒன்று அசெம்பிளிக்கு, கவுன்சிலுக்குள்ள இலச்சினையிலுள்ள கோபுரம் திருவாரூர் கோபுரம், அசெம்பளிக்குள்ள கோபுரம் ஸ்ரீவில்லிப்புத்தூர் கோபுரம், இரண்டும், அகலத்திலும் நீளத்திலும் வேறுபாடுள்ளது. இதைச் சொல்லும்போது மனம் புண்படுகிறது. ஒரு ஆட்சியின் இலச்சினை இத்தனை கேவலமான முறையில் இஷ்டம் போல் போடுவது என்றால், டிசைன் விஷயத்தில் பத்திரிகைகள் உட்கார்ந்து கொண்டு [illegible] படத்தை [illegible]

137845

25th March 1966] [திரு. சா. கணேசன்]

ஒன்றுக்கொன்று சம்பந்தம் இருக்காது. என்ன அர்த்தம்? கவர்னர் அவர்களிடமிருந்து இன்விடேஷன் வந்திருக்கிறது 29-ம் தேதி பார்ட்டிக்கு. அதிலும் ராஜகோபுரம் இருக்கிறது. ஆனால் அதில் ஸ்தூபி இல்லை. ஸ்தூபி இல்லாத ராஜகோபுரத்தை நான் கண்டதேயில்லை. எந்த தேசத்திற்குப் போனாலும் தேசியச் தாமரைப் பூ வைத்திருக்கும். அமைச்சர் அவர்களே பெரியதாக உள்ள புத்தகம், இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மதிப்பீடு அறிக்கைகள் கொடுக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒன்றுக்கொன்று ஒருமைப்பாடு இல்லாமல் ஒன்றோடொன்று முட்டி மோதி முரண்பட்ட நிலைதான் இருக்கிறது. ஒருமைப்பாட்டில் முரண்பாட்டைக் காட்ட முயல்கிறார்களா என்று அச்சமாக இருக்கிறது. இதைக் கலைத்துறையில் காணலாம். தாமரைப் பூ இருக்கும். அது பலவிதமாக இருக்கும். ஒன்று சின்னதாக இருக்கும். ஒன்று பெரியதாக இருக்கும். ஒன்று ஐந்திதழ் கொண்டதாக இருக்கும், ஒன்று 100 இதழ் கொண்டதாக இருக்கும், ஒன்று 1,000 இதழ் கொண்டதாக இருக்கும். அங்கு அப்படிக் காட்டுவார்கள். அந்த முறையில் இவ்வளவு குழப்படிகள் இருக்கின்றனவே தவிர செம்மையான நெறியைக் கூட உண்டாக்க முடியவில்லை என்றால் இந்தத் துறைக்குப் பொறுப்பானவர்கள் பதவியை விட்டு விலகினால்தான் இது நியாயமானதாகவும், செம்மையானதாகவும் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றே சாங்க்ஷன் பண்ணுங்கள், ஐந்து தினங்களுக்குள் 100 ரூபாய் செலவில் எல்லா ப்ளாக்கையும் செம்மைப்படுத்தி சாதாரணமாக இருக்கிற ஒரு ப்ளாக் மேக்கரிடம் செய்து தந்து விடுகிறேன். 100 ரூபாய் செலவில் செய்து தருகிறேன். நானும் ஒவ்வொரு ஆண்டும் சொல்லி வருகிறேன். இதற்கென்று ஒரு 'கீ ட்ராயிங்' வைத்துக்கொண்டால், ஒரு கீ ட்ராயிங் இருக்குமானால் வெட்டி எடுத்து லைன் ப்ளாக், ஆஃப்டோன் ப்ளாக்காகச் செய்வது சாத்தியமாகயிருக்கும். எம்ப்ளம் செய்யவேண்டுமென்றால் ஒரு ஆர்டிஸ்டைக் கூப்பிட்டு கவர்னர், அசெம்பிளி, கவுன்சில் என்று போட்டு மதராஸ் என்று பொதுவாகப் போட்டுவிடு என்று உத்தரவு கொடுத்தால் இது ஆட்சி முறையா, கையாலாகாத்தனத்திற்கு இது ஒரு சான்றாகும். இதைப் பார்க்கிற பிறநாட்டவர்கள் நம்மைப்பற்றிக் கேவலமாக மதிக்கக்கூடும். என் மனம் புண்பட்டு இதைச் சொல்கிறேனே தவிர கட்சி அல்லது வேறு எந்த விவகாரமும் அல்லது வேறு எந்த எண்ணமும் கிடையாது. யார் வேண்டுமானாலும் இருக்கட்டும், இதைச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வளவு பிழைபாடுகள், இவ்வளவு வேறுபாடுகள், இவ்வளவு வழுக்கள் இருக்குமானால்—மேற்கு ஜெர்மனியைப் பாருங்கள்; அமெரிக்காவைப் பாருங்கள், ரஷ்யாவைப் பாருங்கள், எந்த தேசத்தை வேண்டுமானாலும் எந்தக் கொள்கை உடைய தேசத்தை வேண்டுமானாலும் பாருங்கள் த்ரீ ஸ்டார் என்று வைத்து அதை மாற்றுகிறார்களா? இயாலது பிரிட்டனில் குதிரையைப் போட்டுவிட்டு சிம்மமாக மாற்றுகிறார்களா என்று. இதைப் புரிந்து கொள்ள வேண்டாமா? இதை முறையாகச் செயல்படுத்தவேண்டும். நான்கு ஆண்டு காலமாக இதைச் செய்ய முடியவில்லை என்றால் இந்த இலாகாவிற்கு இப்படிப்பட்ட

ஒரு பிரஸ் வேண்டுமா? இதில் திருப்பித் திருப்பி டைரக்டர்கள் மாறி மாறி வருகிறார்கள். கிட்டத்தட்ட வேடிக்கையாக இருக்கிறது. இதற்கு மேல், கடுமையான சொல் இருக்கிறது. ஆனால் அதைப் பிரயோகிப்பது முறை அல்ல, நான் அப்படி உபயோகிப்பவனும் அல்ல என்பதினால் இவ்வளவு கடுமையாகச் சொல்கிறேன். இவ்வளவு கேவலமான முறையில் போயிருக்கிறது என்று. (கனம் திரு. வெ. ராமையா: கேவலம் என்ற வார்த்தையைச் சொல்லலாமா?) நன்றாகச் சொல்லலாம், அது பார்லிமென்டரி வார்த்தைதான்.

அச்சு வேலையைப் பார்க்கிறபோது, அது நிரந்தரமான அச்சு வேலையா அல்லது தற்காலிக அச்சு வேலையா என்று பிரிப்பதே இல்லை, இந்த அச்சகத்திலே. நான்காண்டுகளாக பார்த்துக் கொண்டே வருகிறோம், பத்தாண்டுகள் கழிந்த பிறகுகூட வேண்டிய இந்த ரூல்ஸ் புத்தகங்கள், அல்லது ஆக்ட் புத்தகங்கள் இவை சாதாரண பரவத்தாளில் போடப்பட்டிருக்கின்றன. நான் குறைவாகப் பேசவில்லை. அமைச்சர் அவர்கள் பேச்சு கொண்ட புத்தகத்தைப் பாருங்கள். நாளை இந்தப் புத்தகத்தை நாம் எடுத்துப் படிக்கப் போவதில்லை. (கனம் திரு. வெ. ராமையா: ரெக்கார்ட் பர்பஸுக்கு இருக்கும்.) அமைச்சரின் பேச்சு மட்டும் தான் ரெக்கார்ட் பர்ப்பஸுக்கு இருக்குமா? சட்டம், ரூல்ஸ் புத்தகங்கள் எல்லாம் ரெக்கார்ட் பர்பஸுக்கு வேண்டாமா? இந்த தாற்காலிக வேலைக்கு இவ்வளவு ஸ்பேஸ் விட்டு, அழகான அட்டைப்பில் நன்றாக போடப்பட்டிருக்கிறது. 3¾ பக்கம்தான் மாட்டர் இருக்கிறது, இதற்கு நான்கு பக்கத்தில் கனத்த அட்டை. ஆனால் நூறு பக்கங்கள் கொண்ட லா ஆக்ட்ஸ் போன்றவற்றிக்கு சாதாரண ட்ராமா நோட்டீஸ் மாதிரி இருக்கிறது. இதை குறைப்படுத்திக் கூறவில்லை. நிரந்தரமான பணி எது, தற்காலிகப் பணி எது என்று கூட நிர்ணயித்து அதில் கவனம் எடுத்துக் கொள்ள முடியவில்லை அல்லது மறைக்கும்போது, அல்லது மறுக்கும்போது இந்த மூன்றுக்குள்தான் அடிபடும், இந்த நிலையில் இந்த இலாகா இயங்குமானால் அது நாட்டின் கௌரவத்தை, நம் மாநிலத்தின் கௌரவத்தை நிச்சயமாகப் பாதிக்கும் என்பதை மறந்து விடப்படாது.

இலச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், ஒரு சில முனிசிபாலிட்டிகள் இவை இவற்றை உபயோகிக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அது கூடப் பரவாயில்லை. அவை ஓரளவிற்கு கவர்ன்மென்டோடு சம்பந்தமுடையவை. சர்க்கார் ஊழியர்கள் பொழுது போக்கு சங்கத்திற்கு இதை உபயோகப்படுத்துவது என்றால் அதை அந்த இலாகாவும், மற்ற இலாகா[illegible] கவனித்ததா? கவனிக்கவில்லை என்றால் ஏன் கவனிக்கவில்[illegible]தைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு அந்த இலாகாவிற்[illegible]றது. அமைச்சர் அவர்களுக்கு நேரடியாகத் தெரிந்திரு[illegible]. ஆனால் நிச்சயமாக அவர்களுக்கும் இந்த [illegible] இருக்கும். குறிப்பாகச் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

ரிக்ரியேஷன் க்ளப் அவர்களது ஆண்டு விழாக் கொண்டாட்டத்திற்கு ஸ்டேட் எம்பளத்தைப் போட்டு, கவர்ன்மென்ட் ஆபீஸ் மெட்ராஸ் என்று போட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் ஒரு வரையறை இல்லாமல் செய்யலாமா? இப்படி இவர்கள் இன்று 1-30 p.m உபயோகப்படுத்தினால் நாளை டிராமாக்காரர் அல்லது சினிமாக்காரர் இதை உபயோகப்படுத்தி நோட்டீஸ் போட்டாலும் போடுவார்கள். நாளை ஒரு வியாபாரியும் இப்படிப் போடலாம். ஏன் போடக் கூடாது? பச்சையாகச் சொன்னால் இது ரொம்ப மட்டமான சரக்கு என்று தள்ளி விடக்கூடிய நிலைக்குப் போய்விடக்கூடாது.

இனி அரசாங்க அச்சகத்தில் இருக்கின்ற ஆட்களின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால், ஒரு முனிசிபாலிட்டிக்குப் போதுமான அளவிற்கு அதாவது கிட்டத்தட்ட 3,700 பேர்கள் இருக்கிறார்கள், இவர்களுடைய குடும்பங்களிலுள்ளவர்கள் அவர்களை ஒட்டியவர்கள் எல்லாரையும் சேர்த்துப்பார்த்தால் கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பேர்களைக் கொண்டு ஒரு நிர்வாகம் செயல்பட வேண்டியிருக்கிறது. இவ்விதம் பெருகிக்கொண்டு வருவதைத் தவிர்க்க முடியாது என்று சொல்லக்கூடும். அங்கங்கே எட்டு இடங்களில் அல்லது பத்து இடங்களில் அச்சகம் வைத்திருக்கிறோம் என்று சொல்லக்கூடும். ஆனால் மத்திய அச்சகத்தைப் பொருத்தவரையில், நான்காகப் பிரிக்க வேண்டும். அதுவும் தனித்தனியாக இயங்க வழிவகை செய்யவேண்டும். ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பிரிவை ஏற்படுத்திவிட வேண்டும். அப்படியில்லாமல் எல்லாப் பிரிவுகளையும் சேர்த்து முட்டி மோதவிட்டுக் கொண்டிருப்பதால், வேலை செம்மையாக நடக்கவில்லை, திறமையாக நடத்தப்படவில்லை, கால தாமதம் ஆகிறது, பணம் விரயமாகிறது. இத்தனையும் நடக்கின்றன நேரம் இப்போதில்லை. நேரம் கொடுப்பதாக இருந்தால், இவற்றையெல்லாம் பிரத்தியட்சய பூர்வமாக நிரூபிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். அதற்கான பொறுப்போடு தான் பேசுகிறேன். பொறுப்பற்ற முறையில் நான் கதை பேசவில்லை.

மேலும், இந்த அச்சகத்தில் அச்சடித்த பொருட்கள் எல்லாம் மறைந்து போய் இருக்கின்றன, எங்கே போயிற்று, எப்படி போயிற்று என்று தெரியவில்லை. 'பாண்டியன் இன்ஸ்க்ரிப்ஷன்', 'எபிகிராபிக் டிப்பார்ட்மெண்ட் ஆப் இண்டியா' போன்ற புத்தகங்களில் இருந்த காப்பி எங்கே போயிற்று என்று தெரியவில்லை. ஏதோ சிக்கனம் என்று சொல்லி 200 காப்பி அச்சடித்ததாகச் சொன்னார்கள். 100 காப்பியை விற்றிருக்கிறார்கள், பாக்கி 100 காப்பி எங்கே போய் விட்டது என்று தெரியவில்லை. பணம் கொடுத்தவர்களுக்கு இன்னும் காப்பி கிடைக்கவில்லை. 200 பக்கம் 35 ரூபாய் விலை போட்டார்கள், இருந்தும் இப்போது காப்பி கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல. "புதுக்கோட்டை ஸ்டேட் இன்ஸ்க்ரிப்ஷன்" போட்டார்கள், தனியாக இருந்த போது, அங்கிருந்து 3,000, 4,000 காப்பிகள் இங்கு கொண்டு வரப்பட்டன என்றும் தெரிகிறது. நானே மூன்று ரூபாய் கொடுத்து நான்கு காப்பிகள் வாங்கினேன். இப்போது அந்தக் காப்பிகள் எங்கே

என்று தெரியவில்லை. எப்படி தெரியமுடியும், இவ்வளவு பெரிய நிர்வாகத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு இருந்தால் யாரால் தான் இதைக் கண்காணிக்க முடியும்?

கடைசியாக, பாடப் புத்தகங்களைப் பொருத்தவரையில், செய்தித் தவறுகள் நிறைய இருக்கின்றன. 'காரைக்குடி மதுரையில் உள்ளது அல்லது சேலத்தில் உள்ளது' என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறது. உதாரணத்திற்காகத்தான் இதைச் சொல்லுகின்றேன். இப்படியாக ஒரே குழப்படி நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. காரணம் இந்தியாவிலுள்ள அத்தனை பிள்ளைகளுக்கும் வேண்டிய புத்தகத்தை நீயே அச்சடித்துக் கொடு என்றால், அதை இவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள், இதனால் செய்திப் பிழை ஏற்படுகிறது. பாட அமைப்பு மாறுபடுகிறது, முக்கியமாக, ஆங்கிலத்தில் பாட அமைப்பு மிகவும் வேறுபட்டிருக்கிறது. இதைப்பார்த்தால் மிகவும் பயங்கரமாக இருக்கிறது, பிரதி பெயரை கீழ்பாடங்களில் உபயோகிக்கக் கூடாது என்று நியதியே இருக்கிறது. அதற்கு நேர் மாறுபட்ட வகையில் பாடங்கள் அமைந்திருக்கின்றன 'கோட்டு அங்கே தொங்குகிறது' என்று முதலில் சொல்லப் பட்டிருந்தால், மறுபடியும் சொல்லும் போது, 'அது அங்கே தொங்குகிறது' என்று சொல்லக்கூடாது, அதே போன்று 'அது கறுப்பாக இருக்கிறது' என்று சொல்லக்கூடாது, 'கோட்டு கறுப்பாக இருக்கிறது' என்று சொல்லவேண்டும். ஆனால் நடைமுறையில் இருக்கின்ற புத்தகங்களைப் பார்த்தால் 'அது தொங்கிக்கொண்டு இருக்கிறது! . 'It is hanging' என்று தான் ஆரம்பிப்பார்கள். இப்படியெல்லாம் முறைகேடான பாடங்கள் இருக்கின்றன.

பாடப்புத்தகங்கள் கிடைப்பதில் காலத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. பிள்ளைகளுக்கு அரைப் பரீட்சை நடந்த பிறகு தான் புத்தகங்கள் எல்லா புத்தகளும் என்று சொல்லவில்லை, சில புத்தகங்கள் இவ்விதம் தான் கிடைக்கின்றன. பின்னால் வாத்தியார்கள் தலையணையில் பஞ்சைத் திணிப்பது போல் பிள்ளைகளுடைய தலையில் எல்லாவற்றையும் ஏற்றிவிடப் பார்க்கிறார்கள், அது முடிவதில்லை, இதனால் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதற்கு மேலே, புத்தக அமைப்பு முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற செய்திகளைப் பார்த்தாலும், விரும்பத் தகாத செய்திகள் இருக்கின்றன. முறை தவறிய செய்திகள் இருக்கின்றன, இவை மெல்லாம் கண்டிக்க வேண்டியவையாக இருக்கின்றன. இதற்கெல்லாம் நேரம் இருந்தால், கட்சிக் கண்ணோட்டத்தோடு என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன. என்கிற விவரங்களை எல்லாம் என்னால் நிரூபித்துக்காட்ட முடியும். இவற்றையெல்லாம் கவனித்து செவ்விய முறையில் நடப்பதற்குக் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

முடிவில் நான் கூற விரும்புவது, இலச்சினை விஷயத்தில் இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாவது இதைச் செம்மைப்படுத்தி விட்டால், இந்த ஆட்சி ஐந்து ஆண்டு பதவியில் இருந்தும் [illegible] தனியாக [illegible] இருந்தும், தனியாக [illegible]

அமைச்சர் இருந்தும் இந்த அரசாங்கத்திற்கு இழுக்கே தவிர பெருமையல்ல. அதோடு எல்லோராலும் பழிக்கக்கூடிய தொன்றாக முடியும் என்பதைப் பரிவோடும், பணிவோடும், அன்போடும் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எம். எஸ். மணி: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, மீன் வள இலாகா, அச்சுத்துறை ஆகிய மானியங்களின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். மீன் இலாகாவில் சென்ற ஆண்டு நடைபெற்ற நிர்வாக ஊழலை அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன். சென்ற 25-10-1964-ம் தேதியன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றத் துணைத்தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் இங்கு ஒரு பிரச்னையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். டெல்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் மீன் இலாகாவின் சார்பில் கலந்து கொண்ட ஜீப் அலங்கரிக்கப் பட்ட ஜீப் இங்கே வந்தது. அதே ஜீப் காமராஜ் அவர்களின் பிறந்தநாள் தினத்தன்று சென்னை ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்தது, அதை போட்டோ படம் எடுத்து சட்டமன்றத்தில் அமைச்சரிடம் காட்டி அவர்கள் பேசினார்கள். அந்த புகைப் படத்தையும் இதே சட்டமன்றத்திலேயே தாக்கல் செய்து அமைச்சர் அவர்களின் முன்னிலையில் காட்டினார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் அதை யாரும் பயன்படுத்தவில்லை, விளம்பரத்திற்காக அந்த ஜீப் ஊர் வலத்தில் வந்திருக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் ஊர்வலத்தில் இதே ஜீப் கலந்து கொண்டிருக்கலாம், கலந்து கொள்ளவேண்டும் என்பதற்காக நான் இதைக் குறிப்பிடவில்லை. இங்கே இந்தச் சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டது 25-ம் தேதி. அதற்கு அடுத்த இரண்டு நாட்களுக்குள் அதாவது 27-ம் தேதி அந்த ஜீப் டிரைவர் கணநாதன் என்பவர் இங்கிருந்து கடலூருக்கு மாற்றப்பட்டார். மாற்றப்பட்ட தேதி 27-ம் தேதி. இந்த டிரைவர் தன்னுடைய மனைவி கவர்ன்மெண்ட் ஆசுபத்திரியில் பிரசவித்திருக்கிறாள், ஆகவே இப்போது கடலூருக்குப் போக முடியாது என்று டாக்டர் சர்ட்டிபிக்கேட் வாங்கிக் கொடுத்துவிட்டு இப்போது உடனே கடலூருக்கு போவதற்கு முடியாத நிலை இருக்கிறது என்பதை எடுத்துச்சொன்னார். ஆனால் இந்த இலாகாவின் நிர்வாகமானது எப்படியாவது 'நீ போய்த்தான் தீரவேண்டும்' என்று நிர்ப்பந்தப் படுத்தச் சொன்னது. பின்னால் அந்த டிரைவர், அப்படி உடனடியாகப் போகவேண்டுமென்றால் என்னிடம் பண வசதியில்லை, ஆகவே அட்வான்ஸ் கொடுங்கள் என்று கேட்டிருக்கின்றார். அதற்கு நிர்வாகம் அப்படி உடனடியாக அட்வான்ஸ் ஒன்றும் கொடுக்க முடியாது என்று சொன்னது. ஆனால் முன்னால் இதே டிரைவர் [illegible] வேலை செய்துகொண்டிருக்கும்போது, ஒரு தடவை [illegible] மாற்றப்பட்ட போது, 80 ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து அனுப்பியிருக்கிறது. ஆனால் இப்போது இந்த

சம்பவத்தைப் பற்றி இங்கே பேசி விட்டார்கள், இந்த டிரைவர் தான் விவரங்களை எல்லாம் சொல்லிவிட்டார் என்ற நிலையில், அவரைப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, கடலூருக்கு மாற்றப்பட்டார். பின்னால் இவரால் கடலூருக்குப் போகமுடியாத நிலை ஏற்பட்டதால் தொடர்ந்தாற்போல் மூன்று மாதங்கள் ஏர்ண்ட் லீவ் (ஈ.எல்.) எடுத்துக்கொண்டிருந்தார். லீவ் முடிந்த பின்னால் மாற்றினார்கள். அப்போது இருந்த நிலைமையில் வேலூருக்கு அவரால் போகமுடியவில்லை. கையில் பணமும் இல்லை. வேலைக்கும் எந்தவிதமான உறுதியும் இல்லாமல் இருந்து கொண்டிருந்தார். அதற்குப்பிறகு 23-2-1965-ல், அவர் 1964-ம் ஆண்டிலேயே எம்ப்ளாய் மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்து கொண்டிருந்ததால், கவர்ன் மென்ட் ஆசுபத்திரியில் வான் டிரைவராக வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள். அதே நேரத்தில் மீன் இலாகாவிலிருந்து கிடைக்க வேண்டிய பாக்கி சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என்று பல தடவை கடிதம் எழுதினார். இந்தக் காரணத்தை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, கவர்ன்மென்ட் ஆசுபத்திரிக்கு எழுதி, எப்படியாவது இவரை வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று மீன் இலாகாவினர் சொல்லியிருக்கிறார்கள். ஆசுபத்திரியிலுள்ள வர்கள், இவரிடம் ' நீயாக ராஜிநாமா செய்துவிடு, இல்லையென்றால் நாங்கள் வேலையிலிருந்து நீக்கவேண்டியிருக்கும் மேலேயிருந்து எங்களுக்குத் தொந்தரவு வந்து கொண்டிருக்கிறது, என்று சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணமாக அவர் டிரைவர் வேலையி லிருந்து இப்போது க்ளீனர் வேலை பார்த்துக் கொண்டிருக் கிறார். இன்று வரையிலும் அவருக்குக் கிடைக்க வேண்டிய பாக்கிச் சம்பளம் கிடைக்கவில்லை. எவ்வளவு பணம் என்று பார்க்கும்போது, கிட்டத்தட்ட 700, 800 ரூபாய் வரவேண்டியிருக் கிறது. மூன்று வருடகாலமாகியும் இன்னும் பாக்கிச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஏன் கொடுக்கவில்லை என்று காரணம் கேட்டால், இதற்கு மீன் இலாகாவை நடத்துகின்ற நிர்வாகத்தினர் என்ன சொல்லுகிறார்கள்? சம்பளம் வேண்டுமென்றால், " கருணாநிதி நடத்துகின்ற முரசொலியில் போய் வாங்கிக்கொள் " என்று சொல்லுகிறார்களாம். இதுதான் முறையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல, மீன் இலாகா அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள். நாங்கள் அவரை டிஸ்மிஸ் செய்யவில்லை என்று சொல்கிறார்களே தவிர இத்தனை ஆண்டுகளாக ஏன் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைச் சொல்லவில்லை. இதுவரை அவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை இன்னும் ஏன் கொடுக்கவில்லை என்று நாங்கள் இங்கு கேட்டால், இப்படிப் பட்ட குறைகளைக் கேட்கும்போது, அரசாங்கம் விலாங்கு மீனைப் போன்று நடந்து கொள்கிறது. நாங்கள் குறையைச் சொன்னால் எங்களிடம் வாலை ஆட்டுகிறது; அதிகாரிகள் ஏதாவது சொன்னால் தலையைக் காட்டுகிறது. எங்களுக்கு வாலையும், அதிகாரிகளுக்குத் தலையையும் காட்டுகிற முறையில் விலாங்கு மீன் நிலையில் இன் றைக்கு தவிர நேர்மையான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு வரவில்லை.

அடுத்து, அச்சகத் துறை பற்றி ஒரு சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். அது ஒரு மிகப் பெரிய துறை. அந்தத் துறையில் சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் ஏராளமான குறை களைச் சொன்னேன். அவைகளெல்லாம் ஓரளவு கவனிக்கப்பட் டிருக்கிறது. அப்படி கவனிக்கப்பட்ட காரணத்தினால் அந்தத் துறையில் மேலும் எல்லா நகரங்களிலும் அதனுடைய கிளைகள் ஏற்படவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் சொல்லும்போது இன்னும் உள்ள சில குறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே டைரி அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த டைரியில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் எத்தனை தாலுகாக்கள் இருக் கின்றன என்று குறிப்பிடுகிற போது, திருச்சிராப்பள்ளி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அதிலே 10 தாலுகாக்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வரிசையாக தாலு காக்களின் பெயர்களை படிக்கிற போது 9 தான் வருகிறது. ஒரு தாலுகாவைச் சாப்பிட்டு விட்டார்கள். அந்த ஒரு தாலுகா முசிரி தாலுகா. ஏன் அப்படி, நம்முடைய ஜில்லாவிலதான் சாப்பிட்டி ருக்கிறார்களா என்று பார்த்தால், அடுத்து மதுரை மாவட்டம் இருக்கிறது. மதுரை மாவட்டத்தைப் பார்க்கும்போது, 8 தாலு காக்கள் என்று இருக்கும்போது, உள்ளே படித்துப் பார்க்கும் போது 7 தான் இருக்கின்றன. அதைப் போல சேலம் மாவட் டத்தை எடுத்துக் கொண்டால் 11 தாலுகாக்கள் என்று இருக் கிறது. சேலம் இப்போது பிரிந்துவிட்டது. 7 தாலுகாக்கள் தான் இருக்கவேண்டும். செவன் என்பதற்குப் பதில் 11 என்று எழுதி விட்டார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இந்த டைரியில் இப்படிப்பட்ட தவறுகளை அச்சகத் தொழிலாளர்கள் செய்திருப்பார்கள் என்று நம்பமுடியாது. யார் எழுதிக் கொடுத் தார்கள் என்பதுதான் பிரச்னை. டைரியைப் பார்க்கும்போது சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு முற்போக்காக இருக்கிறது. சென்ற ஆண்டு அங்கத்தினர்களுடைய பெயர் பொறிக்கப்பட வில்லை. இந்த ஆண்டு பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் முன்னேற்றமாக இருக்கிறது.

இந்த மான்யத்தைப் பொருத்து எங்கள் தலைக் தலைவர் அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். ஸ்டேட் சம்பளம் இருக்கிறதே அது தமிழில் இருக்கவேண்டுமென்று வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். அச்சகத் துறை யிலிருந்து எல்லாம் தமிழில் வருகின்றன. எல்லாம் நல்ல தமிழில் வருகின்றன. அப்படி இருக்கும்போது, சென்னை அரசாங்க சம்பளம் ஏன் தமிழில் இருக்கக்கூடாது என்று கேட்க விரும்பு கிறேன்.

அச்சகத்திலே 3,700 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். திருச்சியில் பிராஞ்ச் வைத்திருக்கிறார்கள்; சேலத்தில் பிராஞ்ச் வைத்திருக்கிறார்கள். நான் சென்ற ஆண்டே குறிப்பிட்டேன், எங்கு பிராஞ்ச் வைக்கிறார்களோ அந்த இடத்திலிருந்து [illegible] அந்த அச்சகத்திற்குத் தொழிலாளர்களை எடுக்கவேண்டும் [illegible].

சென்னையில் 100 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்களை மாற்றினால் அங்கே அவர்கள் வீடு பார்த்து வேலை செய்ய முடியுமா? திருச்சியில் இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலை தெரியாதா? நான் ஒரு அச்சகம் வைத்திருந்தேன். அச்சுத் தொழில் அனைத்தும் எனக்குத் தெரியும். திருச்சியில்தான் திறமையான கம்பாஸிட்டர்கள் இருக்கிறார்கள். சென்னையிலிருந்து ஏன் குடும்பத்தை மாற்றி அனுப்பவேண்டும்? அங்கு அந்த ஊரில் இருக்கிறவர்களை ஏன் எடுக்கக்கூடாது? அதற்காகத்தானே பல இடங்களில் அமைக்கவேண்டும் என்று அமைக்கிறோம்? ஆகவேதான் ஆங்காங்கு இருக்கிறவர்களை வேலையில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அச்சகத்திலே வெளியிலே சில வேலைகளைக் கொடுக்கிறார்கள். வெளியிலே வேலை கொடுப்பதை அநேகமாக குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். அனைத்தையும் நிறுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். கிராம நலம் என்ற புத்தகம் அச்சிடப்படுகிறது. அதனுடைய ராப்பரை எங்கே அச்சிடுகிறார்கள்? மவுண்ட் ரோடில் ஒரு அச்சகத்தில் அச்சடிக்கிறார்கள். அந்த அச்சகம் யாருக்குச் சொந்தம் என்று சொன்னால், சமீபத்தில் ஃபாரின் எக்ஸ்சேஞ்சில் ஊழல் ஏற்பட்டு, 2,000 ரூபாய் அபராதம் கட்டிய அந்த அச்சகத்திற்குக் கொடுக்கிறார்கள். எதற்காகக் கொடுக்கவேண்டும்? காங்கிரசுக்கு வந்த புதிய வரவு என்றா? என்ன காரணத்தினால் கொடுக்கிறார்கள்? வேறு அச்சகம் கிடைக்கவில்லையா? ஊழல் வந்து, பத்திரிகையில் செய்தி வந்தது. அப்படிப்பட்ட அச்சகத்திற்குக் கொடுக்கலாமா என்று தங்கள் மூலமாக அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் முதலிலேயே குறிப்பிட்டேன், 3,700 தொழிலாளர்கள் சென்னையில் உள்ள அச்சகத்தில் வேலை செய்கிறார்கள் என்று. 700 பேர்களுக்கு மேல் சைக்கிள் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு சரியான சைக்கிள் ஸ்டான்ட் இல்லை. அதை விரிவுபடுத்தி பிரத்தியேகமாக வாச்மென் போடவேண்டும். இத்தகைய பெரிய அச்சகத்தில் இந்தச் சிறிய குறையை நீக்கி விடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

இதைப் போலவே பேப்பர் கட்டிங் மெஷினில் பெரிய பெரிய பேல்களைப் பிரித்து கட்டிங் மெஷினில் கொடுத்து ஷிஃப்ட் முடிகிற வரையில் கட்டிங் செய்வதில் உடல் உழைப்பு அதிகமாக இருக்கிறது. அதற்காக அவர்களுக்கு எக்ஸ்ட்ரா 15 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இன்றைய தினம் சென்னையிலே 150-க்கு மேற்பட்ட பெண்களை வேலையில் வைத்திருக்கிறார்கள். அதைப் போல திருச்சியிலும், சேலத்திலும் இந்த பைண்டிங் செக்ஷனிலே அதிகமாக பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். அது பெண்கள் செய்யக்கூடிய வேலைதான். பெண்களுக்கு அந்த முறையில் வாய்ப்பு அளிக்கவேண்டும்.

க்வாலிஃபிகேஷன் தேர்டு ஃபாரம் என்று வைத்திருக்கிறார்கள். ஃபர்ஸ்ட் ஃபாரம் படித்த கம்பாஸிட்டர் செய்யக் கூடிய வேலையை பி.ஏ. படித்தவர் செய்யமுடியாது. இது அனுபவம் காரணமாக வரக்கூடிய தொழில். சர்வீஸ் ஆன தொழிலாளி செய்யக்கூடிய வேலையை டெம்பாரரி தொழிலாளி செய்யமுடியாது. இதற்கு க்வாலிஃபிகேஷன் வைக்கக் கூடாது. திறமை உள்ளவர்களை, மற்ற அச்சகங்களில் பயிற்சி பெற்றவர்களை வேலையில் வைத்துக் கொள்ளலாம். திருச்சியிலே அந்த மாதிரி திறமை உள்ளவர்கள் இருக்கிறார்கள். அதனால் சர்க்காருக்கு பணமும் மிச்சம், வேலையும் திறமையாக நடைபெறும்.

இவ்வளவு பேர்களுக்கும் குடியிருப்பு விஷயத்தில் திருச்சி, சேலத்தை எடுத்துக்கொண்டாலும் குடியிருப்பு வசதிகளும் மற்ற வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும். இப்போது வேலை செய்யக் கூடியவர்களை மாற்றிவிடுகிறார்கள். இதனால் ஏற்படுகிற தொல்லை என்ன? அவர்கள் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் லோன் வாங்கியிருக்கிறார்கள். கவர்ன்மெண்ட்டில் லோன் வாங்கியிருக்கிறார்கள். சைக்கிள் வாங்க லோன் வாங்கியிருக்கிறார்கள். பிராவிடென்ட் ஃபன்ட் லோன் வாங்கியிருக்கிறார்கள். அத்தனை லோனையும் கொடுத்து விட்டால் மாதம் 20 ரூபாய் வரும். அதை வைத்துக்கொண்டு எப்படி குடும்பம் நடத்த முடியும்? சென்னையில் இருக்கும் தொழிலாளி சென்னையிலேயே இருக்கவேண்டும். ஆங்காங்கு ஏற்படுத்தப்படுகிற இடத்தில் அந்தந்த இடங்களில் உள்ளவர்களே வேலையில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வீடுகள் வாடகைக்குக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் பெயர் வைத்திருக்கிறோம்—ஜனநாயக சோஷலிஸத்தின் கர்த்தா என்று சொல்லப்படுகிற மாஜி முதல் அமைச்சர் காமராஜ் அவர்களின் பெயரை வைத்திருக்கிறோம். அதில் வாடகை என்ன என்றால் 'ஏ' பிளாக்குக்கு 20 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள்; 'பி' பிளாக்குக்கு 24 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள்; 'ஸி' பிளாக்குக்கு 33 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். இது அதிகமாக இருக்கிறது. தொழிலாளர்கள் இருக்கும் பகுதி, கூடுதலாக இருக்கக்கூடாது என்பதற்காக 'ஏ' பிளாக்குக்கு 15 ரூபாய் ஆகவும், 'பி' பிளாக்குக்கு 20 ரூபாய் ஆகவும், 'ஸி' பிளாக்குக்கு 25 ரூபாய் ஆகவும் உடனடியாக மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே அலவன்ஸ் பலருக்குக் கொடுக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. ஓ.டி.ஸீ.ஏ. அலவன்ஸ் என்று இருக்கிறது. அதை ஸ்பெஷல் பேயுடன் சேர்த்து விட்டால் ஊதியம் உயரும். தொழிலாளர்கள் அதிகமாக வாங்கமுடியும். அதையும் உடனடியாகச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பென்ஷனைப் பொறுத்த வரையில் தாராளப் பென்ஷன் வழங்கு வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும். கிரேடுகளைப் பொறுத்த வரையில் மெஷின் மைண்டர்ஸ், சீனியர் பைண்டர்ஸ், கம்பாஸிடர்களுக்கு, சென்ற ஆண்டிலேயே நான் சொல்லியிருக் கிறேன், கிரேடுகளை மாற்றி அமைக்கவேண்டும்.

மஸ்தூர்களுக்கு ஓவர்டைம் கொடுப்பதில்லை. ஆனால் சர்வீஸ் ஹாண்ட்ஸ் வேலை செய்கிறபோது எடுபிடிக்கு ஆள் இருந்தால்தான் வேலை செய்யமுடியும். மஸ்தூர்களை வீட்டுக்கு அனுப்பி விடுகி றார்கள். அவர்களுக்கும் ஓவர்டைம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அவிர, பின் தங்கிய வகுப்பினர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும். ப்ரொமோஷன் கொடுக்கவேண்டும். மற்ற பகுதி களில் அப்படி இருக்கின்றன. இங்கேயும் அதே மாதிரி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏதாவது காலி ஸ்தானங்கள் ஏற்பட்டால், யாராவது ரிட்டயராகிப் போய் விட்டால் அல்லது இறந்து விட்டால், அப்படிப்பட்ட காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்கிறவர்களுக்கு அதே கிரேடில் வேஜ் ஃபிக்ஸ் செய்யவேண்டும். அதே கிரேடு சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு விவாதத்தில் சொன்னேன். லெட் பாய்ஸன், அதாவது ஈயத்தாலான தகடுகளையும், அச்சுக்களையும் கோர்க்கும் காரணத்தினால், உடம்பிலே அவர்களுக்கு உஷ்ணம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டேன். இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் பால் கொடுக்கிறோம், வைட்டமின் டாப்லெட் கொடுக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். நான் உள்ளபடியே அதைப் பாராட்டுகிறேன். இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும். அந்த வியாதி பின்னாலே தான் தெரியும். பல அச்சகத் தொழிலாளர்களை நான் பார்த்திருக் கிறேன். பின்னாலே அந்த வியாதியினால் தொந்தரவு ஏற்படும் என்பதற்காகத்தான் அதைச் சொல்ல விரும்புகிறேன். ஈயத்தில் வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதாவது அலவன்ஸை உயர்த்திக் கொடுத்தால், அவர்களுக்கு இப்படிப்பட்ட குறைகளைக் களைவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இந்த அச்சகத்தில் 3,500 தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அவர்களை வைத்து பராமரிக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. இந்நிலையிலே ஒருபெரிய அச்சகம், இரண்டாவது, மூன்றாவது, ஸ்தானத்தில் வரக்கூடிய பெரிய அச்சகம் என்று கூறப்படுகிறது. அதனுடைய நிர்வாகத்திலுள்ள நிலையைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய சுதந்திராக் கட்சி தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிர்வாகத்தை நடத்துகின்ற நேரத்திலே நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். உள்ளே செல்லுகின்ற தொழிலாளர்கள், அதில் சம்பந் தப்பட்ட ஊழியர்கள் அனைவரையும் நாம் சரியான முறையில்

பராமரித்துக் கொண்டிருந்தால்தான், அந்த வேலையைத் திறம்பட நடத்த முடியும். நான் சென்ற தடவை குறிப்பிட்டதற்குப் பிறகு இந்த ஆண்டு புத்தகங்கள் கொஞ்சம் பளபளப்பாக இருக்கிறது. கொஞ்சம் அமைப்பை மாற்றியிருக்கிறார்கள். இன்னும் அதிகமான அளவுக்கு நல்ல முறையில் மாற்றி அமைக்கவேண்டும். திருச்சியில் அச்சகம் அமைக்கப்பட்டிருக்கிறது என்றால், கோவாப்பரேடிவ் துறையைச் சேர்ந்த ஸ்தாபனங்களின் அத்தனை வேலைகளும் அந்த அச்சகத்தில்தான் செய்யப்படவேண்டும். அரசாங்கத்தைச் சார்ந்த வேலைகள் அனைத்தும் அந்த அச்சகத்திலேயே செய்யப்பட வேண்டும். வெளியிலிருந்து வேலைகள் நமது அச்சகத்திற்கு வரவேண்டும். அப்பொழுது அதனால் கிடைக்கிற லாபம் அரசாங் கத்தைச் சேரும். அதன் காரணமாக பணியாற்றுகிறவர்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். தனியாருக்கு ஆர்டர் கொடுக்கிறது என்றால் கமிஷன் உண்டு. ஆர்டர் வாங்கிக்கொடுப்பவர்களுக்குக் கமிஷன் உண்டு. நம்முடைய ஆர்டர் வெளியிலே செல்லுகின்ற காரணத்தினால், கமிஷன் மூலம் தவறு ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. நம்மைச் சார்ந்த வேலைகள் அனைத்தையும் நம்முடைய அச்சகத்திலேயே செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*கனம் திரு. கோ. பூவராகன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் மீனள மான்யத்தின் மீதும், அச்சக மான்யத்தின் மீதும், நடைபெற்ற விவாதத்திலே முதலாவதாக மீனள மான்யத்தைப்பற்றி அங்கத்தினர்கள் சொல்லிய கருத்துக்களுக்கு பதில் கூறுகிறேன். பல அங்கத்தினர்கள் மீனள இலாகா மேலும் மேலும் நன்றாக விரிவடையவேண்டும், இதற்காக ஒதுக்கிய பணம் போதாது, அதிக அளவிலே இன்னும் பணம் ஒதுக்கவேண்டும், உணவு உற்பத் தியில் பெரும் பங்கை ஏற்கின்ற ஒரு இலாகாவாக இருப்பதினால், அந்தக் கண்ணோட்டத்தோடு இதற்குப் பண ஒதுக்கீடு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு இதற்குப் பண ஒதுக்கீடு அதிகமாக இருக்கிறது. மூன்றா வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கிய பணம் ரூ. 2 கோடிக் கு மேலே என்பதைப் பல அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்த ஆண்டிற்கு மட்டும் ஒரு கோடி ரூபாய்க்கு மேலே மீனவத் திட்டத் திற்காக இந்த மான்யக் கோரிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. முன்னவே ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்தார்களோ, அதைவிட பன்மடங்கு, கிட்டத்தட்ட ரூ. 10 கோடிக்கு மேல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மீன் வளர்ச்சிக்காகச் செலவு செய்ய வேண்டும், அதற்கு வழிவகை காணவேண்டும் என்ற நோக்கோடு திட்டத்தை ஏற்றுக் கொண்டி ருக்கிறது.

இந்த ஆண்டு மீன் வளர்ச்சிக்கு ஒதுக்கியிருக்கிற பணத்தைப் பார்க்கிறபொழுது, நம்முடைய தமிழ் நாட்டிலே, இங்கே சொல்லப்படுகிற [illegible]
[illegible]

கவனத்தோடு மீன் வளத்தைப் பெருக்குவதற்கு முயற்சி நடந்திருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். நம் தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிலே நீண்ட கடற்கரை மட்டுமல்ல, நீர்த் தேக்கங்கள், நீர் நிலைகள், ஆறுகள், குளங்கள், குட்டைகள் இவைகளெல்லாம் பெரும் அளவிற்கு மீன் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கின்றன என்ற நிலையைப் பார்க்கிறோம். இதை முழுக்க முழுக்க பயன் படுத்திக்கொள்ளவேண்டும். நீண்ட கடற்கரை இருக்கிறது. கடலிலிருக்கிற மீன்களைப் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு வசதி வாய்ப்புகள் செய்துகொடுக்கவேண்டும். அதேபோன்று உள்நாட்டிலுள்ள நீர்த் தேக்கங்களில் மீன் குஞ்சுகளை விட்டு, மீன் வளர்ச்சியைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான பெரும் பொறுப்பை மீன் இலாகா ஏற்றுக்கொண்டிருக்கிறது. எங்கெங்கெல்லாம் நீர்த் தேக்கங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அதிக அளவிலே மீன் குஞ்சுகளை விட்டு, அதிலிருந்து மீன்வளத்தைப் பெருக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். குறிப்பாக, பொதுப் பணித் துறை இலாகாவில் ஒரு அணைக்கட்டு கட்டி முடிந்தால், மீன் இலாகாவும் அங்கு சென்றுவிடுகிறது. சென்ற ஆண்டில் தான் கோமுகி நதித் திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிந்தது. இந்த ஆண்டில் அந்த நீர்த்தேக்கத்தில் மீன் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்று மீன் இலாகா பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு எங்கெங்கே நீர் நிலையங்கள் இருக்கின்றனவோ, அந்த நீர் நிலையங்களைப் பயன்படுத்திக் கொண்டு, மீன் வளத்தைப் பெருக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அந்த முயற்சியில் வெற்றியும் கண்டிருக்கிறோம்.

ஆழ்கடலில் மீன்களைப் பிடிப்பதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்த வேண்டும் என்று எல்லா அங்கத்தினர்களும் ஒரே மாதிரியான கருத்தைத் தெரிவித்தார்கள். கட்டுமரங்களுக்குப் பதிலாக இப்பொழுது விசைப்படகுகளை வைத்திருக்கிறோம். விசைப்படகுகளில் ஆழ்கடலில் வெகு தூரம் சென்று, அதிக நாட்கள் கடலில் தங்கி, எல்லா வசதிகளையும் பெற்ற டிராலர்களில் இருந்துகொண்டு மீன்பிடிப்பதற்கு வேண்டிய வாய்ப்புகளைச் செய்வதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். விசைப்படகுகளில் நாம் எந்த அளவுக்கு முன்னுக்கு வந்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 400 படகுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு வரையறையை நாம் நிர்ணயித்துக்கொண்டிருந்தோம். இருந்தாலும் அந்த வரையறைக்கு அதிகமாகவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விசைப் படகுகளைக் கட்டி முடித்திருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இதைவிட, மூன்று மடங்குக்கு மேலாக, பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1,250 விசைப்படகுகளை வழங்க வேண்டும் என்ற பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு விசைப் படகுகள் வழங்குவதோடு மாத்திரமல்லாமல் அது சம்பந்தமாகப் பயிற்சி வேண்டும் என்று சொன்னார்கள். ஆங்காங்கு இதற்காகப் பயிற்சி கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

சென்னை நகரம், நாகப்பட்டினம், குளச்சல், கடலூர் போன்ற இடங்களில் ஆங்காங்கு பயிற்சி நிலையங்களை வைத்து, மீனவ மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு விசைப் படகுகளை எவ்வாறு இயக்குவது, இயந்திரங்களை எவ்வாறு இயக்குவது, எந்த இடத்தில் மீன்பிடி அதிகமாக இருக்கும் என்ற சூழ்நிலையை அறிந்துகொள்ளுவது, இது போன்ற துறைகளில் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டு வருகிறோம். இதன் மூலம் அவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கும் என்ற ஒரு எண்ணத்தை மனதில் வைத்து, இந்தப் பயிற்சி நிலையங்களில் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

இதோடு மீன்கள் கரைக்குக் கொண்டுவரப்படவேண்டும். கரைக்குக் கொண்டுவருவதற்குப் போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும், பாதை வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். பாதை வசதி செய்து கொடுக்கவேண்டிய பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக் தஞ்சாவூர் மாவட்டத்தில் இருக்கிற அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். நான்கு, ஐந்து கிராமங்களை ஒன்றாக இணைத்து, சாலை அமைத்துக் கொடுத்து, பனிக்கட்டி தயாரிக்கின்ற வசதி, போக்குவரத்து வசதி, மீன்களை பத்திரப் படுத்தி வைப்பதற்கு வேண்டிய வசதி ஆகிய எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு திட்டத்தை வகுத்து, அதற்காகக் கிட்டத்தட்ட ரூ. 11 லட்சம் தொகை ஒதுக்கியிருக்கிறோம். அவ்வாறு பகுதி பகுதியாக முக்கியத்துவம் வாய்ந்த சில கிராமங்களைச் சேர்த்து, அந்தக் கிராமங்களில் இது போன்ற வசதிகளைச் செய்துகொடுத்து, மீன் வளத்தைப் பெருக்கவேண்டும் என்ற பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பிடிக்கப்படுகின்ற மீன்கள் விற்பனை இடத்திற்குச் செல்ல வேண்டும். அதற்கு வாகன வசதிகள் வேண்டும். வாகன வசதிகள் இருந்தால்தான், அந்த வாகன வசதியை வைத்துக்கொண்டு, மீன்களை விற்பனை இடங்களுக்கு ஏற்றிச் சென்று நல்ல விலைக்கு விற்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். ஏற்கனவே வாகனங்கள் வாடகைக்கு விடுகிறோம். கூட்டுறவு சங்கங்களுக்கும் வாகனங்கள் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு 15 வாகனங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவைகள் வந்த பிறகு, எங்கெங்கே தேவை இருக்கிறதோ அங்கெல்லாம் அதைக் கொடுத்து உதவி செய்ய முடியும். நான் கொடுத்த அறிக்கையில் கடைசிப் பக்கத்தில் விளக்கப் படம் இருக்கிறது. எங்கெல்லாம் டிரைனிங் [illegible]கள் இருக்கின்றன, எங்கெல்லாம் ஐஸ் பிளாண்டுகள் இருக்கின்றன, எங்கெல்லாம் போட் பில்டிங் யார்டுகள் இருக்கின்றன, இம்மாதிரி அரசாங்கத் திட்டங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதை விளக்கிக் காட்டக்கூடிய விளக்கப் படம் இருக்கிறது. குறிப்பாக கடற்கரை ஓரங்களிலும், அதை ஒட்டிய இடங்களிலும் குளிர் பதன வசதி இருக்கவேண்டும், ஐஸ் கட்டி தயாரிக்கின்ற வசதி இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு [illegible]

இதிலே கவனம் செலுத்தி ஆங்காங்கு இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். விசைப் படகுகள் அதிகமாக வழங்கப்படும் பொழுது, பிடிக்கப்பட்ட மீன்களை விற்பனைக் கூடங்களுக்கு எடுத்துச் சொல்ல வசதி செய்வதோடு கூட, மீன்கள் அன்றைக்கே விற்பனையாகாத நிலைமை இருந்தால், சில தினங்கள் மீன்களைப் பக்குவப்படுத்தி வைக்கவேண்டிய நிலைமை இருந்தால், அப்படி மீன்களை ஐஸ் பிளாண்டுகளில் வைத்து பக்குவப்படுத்தி, திரும்பவும் மறுநாள் வெளியில் எடுத்து விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டுபோகக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதையெல்லாம் அரசாங்க மீன் இலாகா நன்றாக உணர்ந்து, இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

இது போன்ற வசதிகளை மீனவ மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும், அவர்கள் இன்றைய தினம் சமுதாயத்தில் பின்தங்கியவர்களாக் கஷ்டப்படுகிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். அவர்கள் கடன் படவேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்குக் கடன் வேண்டுமென்றால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தனிப்பட்டவர்களிடத்தில் அவர்கள் கடன் வாங்க வேண்டியதில்லை. அவர்கள் அப்படிக் கடன் படக்கூடாது என்பது தான் மீன் இலாகாவின் முக்கிய நோக்கமும் கூட. அவர்கள் ஏற்கெனவே வாங்கிய கடன்களைக் கூடத் தீர்க்க, கூட்டுறவு மூலம் கடன் வழங்குகிறோம். அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை
2-00 p.m. உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றுதான், அவர்களுக்கு நீண்ட கால, குறுகிய காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. எத்தனையோ குப்பங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சங்கங்களிலே மீனவ மக்கள் பங்கு கொண்டு, பலன்களை அடைந்து வருகிறார்கள். சில இடங்களிலே, தனிப்பட்டவர்களிடம் கடன் பட்டு, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களிடமே மீன்களை விற்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. மேலும், சில பழக்க வழக்கங்கள் காரணமாக அவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற நிலையிலும் சில இடங்களில் இருந்துவருகிறார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்றுதான் மீன் வள இலாகா முயற்சிகள் எடுத்துக் கொள்கிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு பிடித்த மீன்களைக் கொடுக்க வேண்டும் என்றும், அவற்றை நல்ல விலைக்கு விற்று, அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டும் என்றும் பணி புரிகிறார்கள். இலாகா அதிகாரிகளின் பெரு முயற்சியின் காரணமாக ஓரளவு நன்றாகவே நடக்கிறது.

படகுகள் கொடுக்கும்போது, எஞ்ஜின்கள் சரியாக இல்லை என்று சொன்னார்கள். இதைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் குறிப்பிட்டார்கள். எஞ்ஜின்கள் பெறுவதில் மத்திய சர்க்கார் ஒரு விதியை வைத்திருக்கிறார்கள். இரண்டு பங்கு வெளியிலிருந்தும், ஒரு பங்கு உள்நாட்டிலிருந்தும் வாங்க வேண்டும் என்று வகுத்திருக்கிறார்கள். அதோடு, என்னென்ன எஞ்ஜின்கள் வாங்கவேண்டும், யார் யார் தயாரிக்கிறார்கள் என்றும்

சொல்லியிருக்கிறார்கள். இன்னின்ன கம்பெனியிடம் இன்னின்ன எஞ்ஜின்களை வாங்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி இரண்டு கம்பெனிகள்தான் இருக்கின்றன. அவற்றில் ரஸ்டன் எஞ்ஜின் நல்ல முறையிலே இருக்கிறது. இந்த ரஸ்டன் எஞ்ஜினைப் பயன்படுத்துகிறோம். அதில் கஷ்டங்கள், தவறுகள் இருக்கின்றன, நீண்ட தூரம் மீன் பிடிக்கப் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே இயக்குகின்றவர்களுக்குப் பயிற்சி வேண்டும். அதற்காக இப்பொழுது, யார் யார் ரஸ்டன் என்ஜின் வாங்குகிறார்களோ, அவர்களுக்கெல்லாம், அந்த எஞ்ஜின்களை இயக்குவது எப்படி, என்னென்ன செய்யவேண்டும், சிறிது பழுது ஏற்பட்டாலும், எப்படிச் சரிசெய்வது என்பதையெல்லாம் விளக்கக்கூடிய விளக்க உரை அச்சடித்துக் கொடுத்து, இயக்குகிறவர்களுக்குப் பயிற்சி கொடுத்து பயன்படுத்த வேண்டும் என்று செய்யப்படுகிறது. மகாராஷ்ட்ரா அரசாங்கத்தில் நல்ல முறையில் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் எவ்வாறு செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, நம்முடைய அதிகாரிகளும் நமக்கு எப்படிப் பயன்படும் என்று பார்க்க வேண்டும் என்று இருக்கிறோம். குறைபாடுகளை நீக்க வேண்டும் என்றும், மீனவர்களுக்குக் கஷ்டங்கள் இல்லாமல் செய்யவேண்டும் என்றும், ஆங்காங்கே சிறு சிறு கூடங்கள் அமைத்து, அங்கே என்ஜினியர் ஒருவரை அமர்த்தி, மாவட்ட வாரியாக உடனுக்குடன் கஷ்டங்களைப் போக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தில் முயற்சிகள் செய்யப்படுகின்றன. விரைவில் அதைச் செய்ய முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

நைலான் நூலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒரு காலத்தில் அதுவே வேண்டாம் என்று சொன்னார்கள். நைலான் வலைபோட்டு மீன் பிடித்தால், கிடைக்கின்ற மீன்களைச் சரியாக வாங்கமாட்டார்கள் என்று சொன்னார்கள். அதோடு மீன்களும் கிடைக்காது என்றும் சொன்னார்கள். நைலான் வலை போட்டு பிடித்த இடத்தில் மறுபடியும் மீன் கிடைக்காது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு பெரும் மாற்றத்தைப் பார்க்கிறோம். கட்டுமரத்தில் செல்லுகிறவர்கள் கூட, நைலான் நூல் வேண்டும் என்று கேட்கிறார்கள், அது இன்றைக்குத் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. கட்டுமரம் வைத்து இருக்கிறவர்களுக்குக் கூடக் கொடுக்கிறோம்.

தார்வார் நூலைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி முன்பே சொன்னதுபோல, நைலான் பெறுவதிலும், சப்ஸிடி கொடுத்து, மத்திய சர்க்கார் தான் கொடுக்கிறார்கள். ஒரே மாதிரியாக எல்லா மாநிலங்களிலும் இருக்கவேண்டும் என்று செய்வதற்காக இன்னின்ன நூல்கள் வாங்கவேண்டும் என்று தீர்மானிக்க மத்தியக் குழு ஒன்று இருக்கிறது. அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். தார்வார் நூல் விலை அதிகம் என்றாலும், புகார்கள் வரவில்லை.

மேலும் பஞ்சாயத்து மீன் வளர்ப்பு பற்றி அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து மீன் வளர்ப்பிலே, குத்தகையை ஏலத்திலேவிடு கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும் என்று

[திரு. கோ. பூவராகன்] [25th March 1966

பொழுது அவர்களெல்லாம் சொல்லுகிறார்கள். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் கூட, கனம் அங்கத்தினர்கள் ஒரு கருத்துச் சொன்னார்கள், அந்த இடங்களிலே நிரந்தரமாக, ஆண்டு முழுவதிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று. அப்படிப் பயன்படுத்த முடியாது. ஒரு குறுகிய காலத்திற்கு, குஞ்சுகள் வளருகின்ற வரை வைத்திருந்து, பெரியதானதும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் ஆனதும், பாதுகாப்பாக வைத்திருந்து, பெரிய நீர்த் தேக்கங்களில் விடவேண்டும். முழுக்க முழுக்க பெரிய மீன்களாகும் வரை நர்ச்ரியிலேயே வைக்க வேண்டும் என்று செய்யப்படவில்லை. தண்ணீர் வசதி இல்லாத இடங்களில், தண்ணீர் இறைத்துச் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள், எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்குமே இந்தப் பொறுப்புக் கொடுக்கப்படவில்லை என்று. நூறு கூட்டு மன்றங்களுக்குத்தான், எங்கு எங்கு வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கே இந்த உதவிகள் கொடுக்கப்பட்டு, பஞ்சாயத்தும் பஞ்சாயத்துக் கூட்டு மன்றமும், இலாகாவும் சேர்ந்து செய்யவேண்டும் என்று செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் தண்ணீர் வசதி இல்லாவிட்டால், மோட்டார் வைத்துத் தண்ணீரை இறைத்து வசதி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதுவும் நல்ல முறையிலே நடந்து வருகிறது. அதனால் பஞ்சாயத்துக்களுக்கு நிரந்தர வருவாய் வர வாய்ப்பு இருக்கிறது. அதில் வருமானம் இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அந்த பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

கனம் அங்கத்தினர் திரு. துரையரசன் தஞ்சை மாவட்டத்திலே பட்டுக்கோட்டைப் பகுதியிலே புயலால் பாதிக்கப்பட்டபோது ஏதோ பணம் 30, 40 என்று கொடுத்தார்கள் என்பதிலும் சரியாகச் செய்யப்படவில்லை என்று குறைப்பட்டார்கள் அந்த நேரத்திலே சர்க்காரிலே என்ன செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். நேரில் யாரும் வந்து வாங்கவேண்டும் என்று கூட இல்லாமல், வீடு தேடிப்போய் அதிகாரிகள் வேண்டிய உதவிகள் செய்திருக்கிறார்கள். ரூ. 150 என்று சொல்லி, 50 ரூபாயைக் காணோம் என்று சொன்னார்கள். பொறுப்புள்ள மன்ற அங்கத்தினர்கள், மன்றத்திலே, இந்த விதமான தவறான கருத்தைக் கூறக்கூடாது என்பதை இந்தச் சமயத்திலே சொல்ல விரும்புகிறேன். மீன் இலாகா மூலம், ரெவின்யூ இலாகாவால் கொடுத்தது போக, ரூ. 50 கொடுத்தார்கள். பணமாகக் கொடுத்தார்கள். பொருளாகக் கொடுத்தது போக, கடனாகக் கொடுத்தது போக இந்தத் தொகையையும் கொடுத்தார்கள். கிட்டத்தட்ட ரூ. 24 லட்சம் இராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களிலே செலவு செய்திருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய வேலையைக் குறைத்து கணிப்பது பொருத்தம் இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். புயலால் பாதிக்கப்படுபவர்களுக்கு நிரந்தரமாகப் பலன் ஏற்படும் வகையில் உதவிகள் செய்ய வேண்டும் என்றும் நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறார்கள். இன்றைக்கும் பெரிய குப்பங்கள் இருக்கின்றன.

25th March 1966] [திரு. கோ. பூவராகன்]

எங்கெல்லாம் புயல் அபாயம் இருக்கின்றதோ அங்கெல்லாம் சமுதாய மன்றம் கட்டவேண்டும் என்று திட்டம் இருக்கிறது. அந்தச் சமுதாய மன்றத்திலே, சமையல் பாத்திரங்கள் வாங்கி வைப்பது, ரேடியோ வாங்கி வைப்பது, முதலிய ஏற்பாடுகளைச் செய்து, அதற்காக ரூ. 7½ லட்சம் இந்த ஆண்டு இராமநாதபுரம், தஞ்சை மாவட்டக் கரையோரப் பகுதிகளிலே உதவிகள் செய்ய வேண்டும் என்று பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அத்தகைய வேலை செய்து இருக்கிறார்கள். இதிலே இன்னும் கடற்கரையைப் பொறுத்த வரையில், எவ்வளவு தூரம் விரிவாக மீன் பிடிப்பிலே இறங்கவேண்டும் என்று நினைக்கிறோமோ, அந்த அளவுக்கும் போதுமான படகுகள், பெரிய மீன் பிடிக் கப்பல்கள் எல்லாம் வந்து தங்குவதற்கேற்ற இட வசதியை முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டும். இராயபுரத்திலும், தூத்துக்குடியிலும் பெரிய திட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அதிலே ட்ராலர்கள் வந்து தங்குவதற்கு வேண்டிய வசதிகள் அமைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். வருகிற ஆண்டிலிருந்து இதெல்லாம் செய்ய முடியும். இதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு இசைவு கொடுத்திருக்கிறார்கள். நாம் பணம் ஒதுக்க வேண்டும்; ட்ராலர்கள் வாங்கவேண்டும்; ட்ராலர்கள் கொடுக்கும் விஷயம் மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த அரசாங்கத்திற்குப் பரிசீலனைக்கு வந்து, கொடுப்பதாக அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்திற்கு வரும் . . . .

MR. DEPUTY SPEAKER : How much more time does the Hon. Minister require?

THE HON. SRI G. BHUVARAHAN : Half an hour Sir.

MR. DEPUTY SPEAKER : The Hon. Minister may finish his speech in another fifteen minutes.

கனம் திரு. கோ. பூவராகன் : தூத்துக்குடிப் பகுதியில் மீன்களைப் பிடித்து, அவற்றை டப்பிகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்ப வேண்டும் என்ற முறையில், 'கானிங் பாக்டரி' இந்த ஆண்டு துவக்கப்பட்டிருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டும். அதை அதிகமாக்க வேண்டும். 'ஃபிஷ் மீல்' தயாரிப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் விரைவிலே நல்ல முறையில் நடந்து நமக்கு நல்ல வருவாய் கொடுக்கக்கூடிய அளவிலே அமையும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு, நம்முடைய அரசாங்கம் கார்ப்பரேஷனில் மூன்று லட்ச ரூபாய் முதலீடு போட்டிருக்கிறது. ஐந்து கோடி ரூபாய் மூலதனத்தோடு அந்தக் கார்ப்பரேஷன் இயங்கி வருகிறது. மேட்டூரிலிருந்தும் மற்ற பல இடங்களிலிருந்தும் வங்காள ராஜ்யத்திற்கு மீன் செல்லுகிறது. மீனவ சமுதாயத்தில் இருக்கிறவர்களுக்குப் போதுமான அளவு வருமானம் கிடைக்கக்கூடிய அளவில் இல்லை. வியாபாரிகளுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கிறது. அந்த எண்ணத்திலே வைத்துக் கொண்டு, மீனவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும், அவர்களுக்கு பெரும் பங்கு வருமானத்தில்

[திரு. கோ. பூவராகன்] [25th March 1966

கிடைக்க வேண்டும் என்ற கருத்தில், மூன்று லட்ச ரூபாய் நம்முடைய அரசாங்கம் அந்தக் கார்ப்பரேஷனில் முதலீடு போட்டிருக்கிறது. இதனால் மீனவ சமுதாயத்திற்கு நல்லதொரு வாய்ப்பு இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அடிக்கடி மீனவ மக்களுக்குக் கஷ்ட நஷ்டங்கள் வருகின்றன. புயல், மழை இவற்றினால் சங்கடங்கள் வருகின்றபோது, அவர்களுக்குப் பயன்படும் முறையில், தனிப்பட்ட முறையில் ஒரு துயர் தணிப்பு நிதி இந்த ஆண்டு துவங்கி இருக்கிறோம். புயல் நிதியில் இருந்து ஒரு பெரும் பங்கு அவர்கள் கொடுக்கிறார்கள். மேற்கொண்டு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பொதுவாக கொடை வள்ளல்கள் வழங்கும் நன்கொடைத் தொகையைச் சேர்த்து நிரந்தர நிதியாக வைத்துவிட்டால் அவ்வப்போது அவர்களுக்கு வருகிற கஷ்டங்களைப் போக்குவதற்கு அந்த இலாகாவே நேரடியாகப் பயன்படுத்திக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் இருக்கும் என்ற முறையிலே இதை ஏற்பாடு செய்து இருக்கிறோம். இவ்வாறு நல்ல முறையில் மீன் இலாகா தொடர்ந்து தன்னுடைய பணிகளை சென்ற ஓராண்டு காலத்தில் செய்திருக்கிறது. வருகிற ஆண்டிற்கும் நல்ல திட்டங்களை வகுத்து வைத்திருக்கிறது. இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்குத் திறமை மிக்க நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்த இலாகாவிலே பணியாற்றுகிற டைரக்டர் அவர்கள், இந்த இலாகா பொறுப்புள்ள காரியதரிசி அவர்கள், இந்த இலாகாவில் பணியாற்றுகிற ஏனைய அதிகாரிகள் நல்ல முறையில் திட்டத்தை உருவாக்கி அதை நன்றாக நடத்த வேண்டும் என்ற பெருநோக்கு வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அரசாங்க அச்சகத்தைப் பொறுத்துக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அச்சகத்தைப் பொறுத்த வரையில், கனம் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டும் கொஞ்சம் நல்ல முறையில் எல்லா அமைப்புகளும் இருக்கின்றன என்று சொன்னார்கள். எல்லா இலாகாக்களிலிருந்தும் வருகிற வேலைகளை அச்சகம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு, அச்சகத் துறையானது துரிதமாக நல்ல முறையில் காரியங்களைச் செய்துவந்ததையொட்டி ஒவ்வொரு இலாகாவும் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் கனம் அங்கத்தினர்களும் அவ்வாறு சொன்னார்கள். நம்முடைய அரசாங்க அச்சகம் என்று சொன்னால் லாப நஷ்டக் கணக்கைப் போட்டுப் பார்க்கக் கூடாது. வெளி இடங்களில் நடத்தப்படும் அச்சகங்களுக்கும் இதற்கும் கணக்குப் போட்டு ஒப்பிட்டுப் பார்த்து, பொதுத் துறையில் இப்படி இருக்கிறது, தனியார் துறையில் இப்படி இருக்கிறது என்ற விவரம் செய்து கொண்டிருந்தால் அது அவ்வளவு பொருத்தமாக இருக்க முடியாது. அது பாராட்டத்தக்க ஒரு காரியம் ஆகும்.

25th March 1966] [திரு. கோ. பூவராகன்]

கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்கள், ஏதோ ரூ. 100 கொடுத்தால் இலச்சினையை நாளை அல்லது நாளை மறுநாள் கொடுத்து விட முடியும் என்று சொன்னார்கள். 100 ரூபாயில் இலச்சினையை அடித்துவிடுவேன் என்று அவர்கள் சொன்னால், அதே மாதிரி மற்றவர்களும், 100 ரூபாயில் பாலட் பேப்பர் அடித்து விடுவேன் என்று சொல்லலாம். ஐந்து ரூபாய் கொடுத்தால் பஸ் டிக்கட் அடித்துக் கொடுத்துவிடுவேன் என்று எல்லாம் சொல்லக் கூடும். அரசாங்க அச்சகத்தில் செய்யும் காரியம் பொறுப்பான காரியம். அதையெல்லாம், மற்றவர்கள், 'நாங்கள் அதைச் செய்து விட முடியும், எங்களால் செய்துவிட முடியும்' என்று சொல்வார்களானால், அரசாங்கம் கொள்கை அளவில் அதை எல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது. எந்த எந்தக் காரியத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு செய்ய வேண்டுமோ அதை அரசாங்கம்தான் செய்ய வேண்டும். சிறிது காலதாமதம் ஆனால், அதற்கும் காரணம் உண்டு. இலச்சினையைப் பொறுத்த வரையில், ஏற்கனவே சிறு தவறு நடந்துவிட்டது. அதை மாற்றவேண்டும் என்று சொல்லும் போது, அந்தத் தவறு இனிமேல் ஏற்படாமலிருக்க வேண்டும் என்பதற்காக, அதைப் பரிசீலனை செய்து, மத்திய அரசாங்கத்தில் அது சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அனுப்பி, அவர்களும் பரிசீலனை செய்து இங்கு வந்து இருக்கிறது. இங்கே அந்த வேலையைத் தனிப்பட்ட யாருக்கும் கொடுக்க முடியாது. அதற்கென்று அரசாங்கத்தில் ஒரு இலாகா இருக்கிறது. அந்த இலாகாவிற்கு அதை அனுப்பி, அதை அவர்கள் வரைந்து, இங்கே மறுபடியும் அதைச் சரியாகப் பரிசீலனை செய்து, அதற்குப் பிறகு இப்பொழுது வந்திருக்கிறது. அதுபற்றி நான் சம்பந்தப்பட்ட இலாகாவிற்குச் சொன்னேன். "இவ்வாறு வந்துவிட்டது, மாற்றிப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கனம் அங்கத்தினர்களுக்கு அறிக்கை அனுப்புங்கள்" என்று சொன்னேன். அதன் பிரகாரம், கனம் அங்கத்தினர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். தொடர்ந்து இவ்வாறு தவறு இருக்கிறது என்று சொல்ல முடியாது.

SRI SAW. GANESAN: I have pointed out the same defect in both papers.

கனம் திரு. கோ. பூவராகன்: சில சமயம் தோற்றத்திற்கு ஏற்றவாறு இருக்கும். கனம் அங்கத்தினர் அவர்கள்கூட, சென்ற ஆண்டோ, அதற்கு முந்திய ஆண்டோ சொன்னார்கள், ஏதோ படம் தவறுதலாக இருக்கிறது என்று. அந்தப் படம் சரியில்லை, உருவமே சரியில்லை என்று சொன்னார்கள். அந்தப் படத்தை நான் வரவழைத்துப் பார்த்தேன். ஏற்கனவே இருக்கும் உருவத்தையும் பார்த்தேன். இரண்டும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆகவே, அவரவர் கருத்துக்கு ஏற்றவாறு இருக்கலாமே தவிர. . . .

திரு. சா. கணேசன்: நான் எந்தப் படத்தைக் குறித்து, எப்போது சொன்னேன் என்பது இப்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. எந்தப் படம் என்று குறிப்பிடாமல் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவது நியாயம் அல்ல.

[25th March 1966

கனம் திரு. கோ. பூவராகன் : புத்தகங்களைப்பற்றிச் சொன்னார்கள். புத்தகங்கள் எல்லாம் சரியான நேரத்தில் வழங்கப்படவில்லை, அவ்வாறு வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். கல்வி இலாகாவில் தயாரித்து அவர்கள் அச்சகத்திற்கு அனுப்புகிறார்கள். அது அதற்குரிய காலம் குறிப்பிடப்படுகிறது. காலவரையறை பற்றி விதிகள் இருக்கின்றன. அந்தக் காலவரையறைக்குள்ளே, எவ்வளவு வேலை இருப்பினும் கூட, அதிகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஷிப்ட் முறை வைத்து Overtime allowance கொடுத்து குறித்த நேரத்திற்குள் புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்கிறோம். சிறு சிறு தவறு இருக்கிறது என்றால், அவர்கள் சொல்லுகிற மாதிரி இல்லை. "இங்கே இருந்தது அங்கே மாறியிருக்கிறது" என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லிய யோசனைகளையெல்லாம் கல்வி இலாகாவிலே இருக்கிறவர்கள் பரிசீலனை செய்து, எவ்வாறெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமோ அதை அமைப்பார்கள். அச்சகத்தைப் பொறுத்தவரையில், அங்கு எவ்வாறு அனுப்பப்படுகின்றனவோ, எந்த முறைப்படி இருக்கிறதோ, அதற்குப் பழுதில்லாமல் பார்த்து அனுப்பும் பொறுப்பை அச்சகம் ஏற்றிருக்கிறது. அந்தப் பொறுப்பைச் சிறிதும் தவறாமல் அவர்கள் செய்கிறார்கள் என்று நான் இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன்.

டைரியைப்பற்றிக் கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். டைரியில் ஒரு பெயர் விடப்பட்டிருக்கிறது, பெயரைச் சேர்க்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். முன்கூட்டியே அச்சடித்து, எனக்கு ஒரு பிரதி முதன் முதல் வந்தவுடன், விடுபட்டதை நான் கண்டுபிடித்து, "இவ்வாறு விடப்பட்டிருக்கிறதே, ஏன் விட்டுவிட்டீர்கள்?" என்று கேட்டேன். சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து அச்சகத்திற்கு வந்த விஷயத்தைக் கொண்டுவரும்படிச் சொல்லி, வாங்கிப் பார்த்தேன். அந்தத் தொகுப்பிலே அவ்வாறு தான் இருக்கிறது. அந்த இலாகாவே விட்டிருக்கிறார்கள். இப்படித் தவறு இருக்கிறது. பெயர்களெல்லாம் அடித்துப் புத்தகங்களாக 'பைண்டு' செய்து வழங்கிவிட்டார்கள். எனக்கு வந்த சமயத்தில், எல்லோருக்குமே அதே சமயத்தில் வழங்கப் பட்டுவிட்டது. ஆகையால், மேலும் சேர்ப்பதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது என்று நான் இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அச்சகத்திலே பணியாற்றுகிறவர்களுக்குப் போதுமான வசதிகள் இல்லை, சைக்கிள் வைக்க இடம் கொடுக்கப்படவில்லை என்றெல்லாம் சொல்லப்பட்டது. நான் அச்சகத்திற்குச் சென்றேன். திடீர் என்று சென்று பார்த்தேன். சைக்கிள் வைக்க அங்கே இடம் இருக்கிறது. ஆனால், வைக்க வேண்டிய இடத்தில் வைப்பதில்லை. ஒவ்வொன்றுக்கும் ஏற்கனவே இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வைக்கவேண்டிய இடத்தில் ஒழுங்காக வைக்கவேண்டும் என்று அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. சைக்கிள் வைக்கவேண்டிய இடத்தில் வைக்க

25th March 1966] [திரு. கோ. பூவராகன்]

வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். அவ்வாறு வைப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருச்சியிலும், சேலத்திலும் கிளை அச்சகங்கள் வைத்திருக்கிறார்கள். திருச்சியிலும், சேலத்திலும் அங்கங்கே இருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கும் விதத்தில், அங்கே வைத்துக் கொள்ளக்கூடாதா? இங்கிருந்து மாற்ற வேண்டுமா? என்றார்கள். கொள்கை அளவிலே அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. காரணம், மத்திய அச்சகத்தில் பயிற்சி பெற்றவர்களைத்தான் வெளி இடங்களில் உள்ள அச்சகங்களுக்கு அனுப்பவேண்டிய நிர்ப்பந்தமும் நியதியும் இருக்கிறது. மற்ற தனிப்பட்டவர்களுடைய அச்சகங்களோடு நம்முடைய அரசாங்க அச்சகங்களை ஒப்பிட்டுச் சொல்லக்கூடாது. அரசாங்க அச்சகங்களில் சில விஷயங்கள் ரகசியமாகவும், குறிப்பிட்ட முறையிலும் இருக்கவேண்டும் என்ற நியதிகள் எல்லாம் இருக்கின்றன. அரசாங்க அச்சகத்தில் இருப்பவர்கள் பயிற்சி பெற்றவர்களாகவும், நல்ல பொறுப்பான தன்மையில் பணியாற்றக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பயிற்சி பெற்றவர்களைத்தான் இங்கிருந்து அனுப்புகிறார்கள். இங்கே 3,400 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

3,400 தொழிலாளர்களில் குறைந்தபட்சம் 1,200 அல்லது 1,300 பேர்களாவது பிராந்திய அச்சகங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த முறையில் இன்றைய தினம் சிலரைத் திருச்சிக்கு அனுப்பி இருக்கிறோம். எல்லோரையுமே இங்கிருந்து அனுப்புவது என்பது முடியாத காரியம்; அவ்வாறு அனுப்பவும் இல்லை. அந்தப் பிராந்தியங்களில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்த அச்சகங்களை ஆங்காங்கு ஏற்படுத்துகிறோம். மூன்றில் ஒரு பங்கு எடுப்பது என்று திட்டமிடப் பட்டிருக்கிறது. பயிற்சி பெற்றவர்கள் இருப்பார்கள். பயிற்சி பெறாதவர்களுக்கு ஆறு மாத காலம் பயிற்சி கொடுப்பது பற்றிப் பரிசீலனை செய்யப்படுகிறது. அவ்வாறு எடுத்துக் கொள்வதற்குத் திட்டம் இருக்கிறது.

சென்ற ஆண்டு பேசுகிறபோது கனம் அங்கத்தினர்கள், அரசாங்க வேலைகள் அவ்வளவும் அரசாங்க அச்சகத்திலேயே நடைபெறவேண்டுமென்று குறிப்பிட்டார்கள்; தனிப்பட்ட அச்சகத்திற்கு வழங்கப்படக்கூடாது என்று கூறினார்கள். கொடுத்திருக்கும் விவரத்தைப் பார்த்தால் எவ்வளவு வேலைகளை அரசாங்கம் நிறைவேற்றுச் செய்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள Rural முடியும். மற்ற நகர மன்ற வேலைகளுக்கெல்லாம் கூட அ February பொறுப்பேற்றிருக்கிறது. மற்ற இடங்களில் roceedings அச்சகங்களிடம் நகர மன்ற வேலைகளை எல்லாம் கொடு the Madras வேண்டும் கூறினார்கள். பிராந்திய அச்சகங்கள் ஆங்கா House under [illegible] அரசாங்க அச்சகமே அவற்றை எல்லாம் Madras Act [illegible] முடியும். இப்போது இரண்டு அச்சகங்கள் [illegible] இருக்கின்றன. மூன்றாவதை அ[illegible]

[திரு. கோ. பூவராகன்] [25th March 1966

ஏற்பாடு செய்திருக்கிறோம். இயந்திரங்கள் வரவேண்டும்; மற்றும் வேலைகள் நடக்கக்கூடிய இடம் கொடுத்து நடத்தச் சந்தர்ப்பம் இருக்கிறது.

அச்சகத்திலே அச்சுக்களின் அமைப்பு சரியாக இல்லை; வித்தியாசமாக இருக்கிறது என்று சொன்னார்கள். பழைமையான அச்சகம்; 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய அச்சகம். அதிக வேலையாட்கள் பணியாற்றுகின்ற பெரிய அச்சகம். போதிய இயந்திரங்களை வாங்கி இப்போது இருப்பவற்றை மாற்றியமைக்கவேண்டும். இப்போது, பத்து பதினைந்து வருஷங்களுக்கு ஒரு தடவை இயந்திரங்களை மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையில் திட்டத்தை வகுத்திருக்கிறோம். சிறு சிறு தவறுகள் எல்லாம் நீக்கப்படுவதற்குக் கவனம் செலுத்தப்படும்.

பெண்களுக்கு அதிகமான வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பெண்களுக்கும் வாய்ப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. ஆண்கள் மாதிரி அவர்கள் வேலை செய்ய முடியாது. பெண்களுக்கென்று தனியாக லேபர் ஆக்ட் இருக்கிறது. அவர்களுக்கு எந்த மாதிரி வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்பதற்கெல்லாம் முறை இருக்கிறது. மவுண்ட் ரோடு அச்சகப் பிரிவின் பக்கத்தில் இருக்கும் மற்ற அலுவலகங்களையெல்லாம் காலி செய்து விட்டு அங்கு ஒரு அச்சகப் பிரிவை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே பெண்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். அங்கஹீன முற்றவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று திரு. செல்வராஜன் அவர்கள் சொன்னார்கள். அதை ஒரு திட்டமாக ஏற்றுக்கொண்ட தனிப்பட்ட ஒரு நிறுவனம் இருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது உதவி கொடுத்தால் அவர்கள் தாங்களே நடத்துவதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த உதவியை அரசாங்கம் கொடுப்பதாக இருக்கிறது. இந்த அச்சகத்திலும் அவர்களை வேலைக்கு அமர்த்துவதில் எவ்வளவுதூரம் உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்வதிலே தடை ஒன்றும் இல்லை.

சிறு சேமிப்புத் திட்ட விளம்பரங்கள் ஏன் வெளி அச்சகத்திற்குக் கொடுக்கப்பட்டன என்று கேட்டார்கள். அந்த விளம்பரங்களை எல்லாம் அரசாங்க அச்சகத்தில் அச்சிட முடியாது. [illegible]
[illegible] அரசாங்க அச்சகத்தில் இல்லை. ஆகவே, டெண்டர்கள்
என்[illegible] யார் குறைவாக ஒத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்குக்
கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள்.
வைக்க
[illegible]ஏ. வழங்கவேண்டும், அலவன்ஸ் கொடுக்கவேண்டும்
[illegible] சொன்னார்கள். அலவன்ஸ் வழங்குவதைப் பற்றி
[illegible] அவ்வப்போது பரிசீலித்துக் கொண்டு[illegible]
[illegible]ளர்கள் தன். திரு. சா. [illegible] அவர்கள், இந்த [illegible]
பட்டிருக்கிறதமாக இருக்கிறது, இந்த [illegible]

[illegible]th March 1966] *[திரு. கோ. பூவராகன்]*

வேண்டுமென்று [illegible]. நாங்களே இதை ஐந்தாகப் பிரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த மானியத்திலே அங்கத்தினர்கள் கூறியிருக்கிற பல கருத்துக்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். இந்த மானியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

The cut motion of Sri Swamidhas to Demand No. XVII—Fisheries was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 99,91,900 under Demand No. XVII—Fisheries".

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Sri Saw. Ganesan to Demand No. XXXIV—Stationery and Printing was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,21,36,500 under Demand No. XXXIV—Stationery and Printing".

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

* 176. *Notification issued with G.O. Ms. No. 168, Home, dated the 22nd January 1966, directing that the quarterly tax be collected in respect of the jeep stage carriages introduced on village roads in rural areas at reduced rate under the Madras Motor Vehicles Taxation Act, 1931. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

* 177. *Notification issued with G.O. Ms. No. 432, Rural Development and Local Administration, dated the 25th February 1966 making an amendment to the rules relating to proceedings of Panchayats and Committees of Panchayats under the Madras Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

[25th March 1966

B. Reports, Notifications and other papers.

†69. *A review on the progress made by the Forest Department* (1966) (*Tamil*).

†70. *Note on Demand No. XXIII—1966-67—Community Development* (*English*).

†71. *Financial Supplement to Demand under Community Development* (1966-67) (*English*).

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 26th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : Questions Nos. 435, 436, 437 and 438, relating to the Hon. Minister for Home are postponed.

Government Hospital, Sirkali

* 8 *Q*.—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to shift the Government Hospital, Sirkali, from the present place to other place for want of accommodation ; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. கி. இரா. சம்பந்தம் : கனம் சபாநாயகர் அவர்களே, அங்கே நான்கு பக்கங்களிலும் எக்ஸ்பாண்ட் பண்ணமுடியாத நிலைமையில் இருக்கிறது. காரணம் கிழக்கே பெண்கள் ஹை ஸ்கூல் இருக்கிறது. மேற்கே ஒரு வாய்க்கால் ஓடுகிறது. பின்புறம் வயல் இருக்கிறது. ஆகையால் இந்த மருத்துவ மனையை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தலாம் என்ற யோசனை இருந்தது. அங்கே செய்யவில்லையென்றால், புதிதாக கட்டடம் கட்ட இருப்பது எந்த இடத்தில் கட்ட யோசிக்கப்பட்டு வருகிறது என்பதை அறியலாமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது லூர்தரன் சர்ச்லாண்டைச்சேர்ந்தது. பாதிரியார் கோர்ட்டிலே கேஸ் போட்டிருக்கிறார். கேஸ் நடந்துகொண்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்வது போல் சுற்றுப்புறத்திலே வயல், வாய்க்கால் முதலியவை இருப்பதினால் அந்த ஐடியாவை டிராப் பண்ணிவிட்டு கலெக்டர் அவர்களிடத்திலே வேறு இடத்தைப் பார்த்து ரிபோர்ட் அனுப்பும்படி கோரப்பட்டது.

Stage carriage permits

* 432 *Q*.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to stop the grant of fresh stage carriage permits and to permit the transfer of stage carriage permits by the Regional Transport Authority without the approval of the Transport Commissioner;

[26th March 1966

(*b*) whether the State Transport Advisory Committee has, at its meeting held during 1965 made any recommendation in this regard; and

(*c*) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) There is no proposal to stop the grant of fresh stage carriage permits. The cancellation of the G.O. No. 2205, dated 1st July 1961 requiring the prior approval of the Transport Commissioner for transfer of stage carriage permits by Regional Transport Authority is under consideration.

(*b*) No. Only the question of amending the Motor Vehicles Act for empowering the State Government to frame rules in the matter of issue of permits for stage carriages for the guidance of the Regional Transport Authorities was discussed and dropped.

(*c*) Does not arise.

Thermal Stations

* 433 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of thermal stations to be established in the State during the Fourth Plan period, their proposed location, capacity and estimate?

THE HON. SRI R. VENKATARAMAN: The following thermal stations have been proposed to be installed in the State during the Fourth Plan period:—

(i) a 340 M.W. thermal power station at Ennore at an estimated cost of Rs. 3,956·6 lakhs; and

(ii) a 100 M.W. capacity station at Tuticorin at an estimated cost of Rs. 1,030·66 lakhs.

Besides the above two thermal plants which will be set up by the Madras State Electricity Board, the Central Government will set up an atomic power station of 400 M.W. capacity at Kalpakkam and the Neyveli Thermal Station will be expanded from 400 to 600 M.W.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த நான்கு திட்டங்களிலே முதலில் எந்த திட்டம் எடுக்கப்பட்டிருக்கிறது? அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எண்ணூர் திட்ட வேலை நடந்துக் கொண்டிருக்கிறது. கல்பாக்கம் திட்டத்திற்குப் பூர்வாங்க நடவடிக்கை நடந்துக் கொண்டிருக்கிறது. மற்றவைகளுக்கெல்லாம் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சா. கணேசன்: இந்த நான்கு திட்டங்கள் நிறைவேறி முழுப் பயனைத் தருவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அரசாங்கம் கருதுகிறது? அந்த நான்கு திட்டங்களும் முடிந்து விட்டால் நம்முடைய தேவையில் பெரும்பகுதி பூர்த்தி செய்யப்படும் என்று அரசாங்கம் கருது கிறதா?

26th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான்காவது திட்டத்திற்குள் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். நம்முடைய தேவை அதிகரித்துக் கொண்டே போவதால், நாம் ஆரம்பிக்க இருக்கிற திட்டங்கள் நம் தேவை முழுவதையும் பூர்த்திசெய்யாது என்று நினைக்கிறேன். நம்முடைய தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி இப்பொழுது போகிற வேகத்தில் செல்லுமானால், இப்போது நாம் போட்டிருக்கிற திட்டங்கள் போதாது என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இந்த திட்டங்களுக்குரிய—தூத்துக்குடி முதலிய நான்கு திட்டங்களுக்கு—நில ஆர்ஜித வேலைகள் தொடங்கப் பட்டுவிட்டனவா? இல்லையென்றால் எப்போது துவங்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எண்ணூரில் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இப்பொழுது கட்டடம் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். தூத்துக்குடியிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தூத்துக்குடியில் ஏற்கெனவே போர்ட் டெவலப்மெண்ட் ஸ்கீமில் இதற்கும் நிலம் ஒதுக்கி யிருக்கிறோம். கல்பாக்கத்திலே பூர்வாங்க நடவடிக்கை நடந்துகொண் டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தூத்துக்குடியில் அமைக்கப்படும் மின்சார நிலையம் எலெக்ட்ரிசிடி போர்டாரால் அமைக்கப்படுகிறதா? அல்லது தர்மதேஜா அவர்கள் கட்டுவதாக இருந்ததே அவர்கள் கட்டுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்னும் முடிவு எடுக்கவில்லை. இப்பொழுது இருக்கிற முடிவு பிரகாரம் எலெக்ட்ரிசிடி போர்டுதான் கட்டுவதாக இருக்கிறது. தேஜா அவர்களிடமிருந்து எக்விப்மெண்ட் தான் வாங்கவேண்டுமே தவிர, அவர்கள் கட்டுவதாக இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: இந்த நான்கு மின்சார திட்டங்கள் அல்லாமல் வேறு நீர் மின்சார திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா? அப்படியானால் எங்கெங்கு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

* 434 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the fly-ash produced at the Neyveli Thermal Station can be exploited with advantage for manufacturing cement; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) Three Cement factories in the private sector have proposed to utilise fly-ash available from the Neyveli Lignite Thermal Power Stations for the production of Pozzolona Cement.

திரு. சா. கணேசன்: இந்த வகையான செமண்ட் தற்போது இயல்பாகக் கொடுக்கப்படுகிற செமண்டைவிட தரத்தில் உயர்ந்ததாக இருக்குமா? ஒத்ததாக இருக்குமா? அல்லது குறைந்ததாக இருக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது உபயோகத்தைப் பொறுத்தது. நீர்த்தேக்கம் கட்டுவதற்கு உயர்ந்ததாக இருக்கும். பிரிட்ஜ் போன்றவை கட்டுவதற்கு ஒத்ததாக இருக்கும்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இப்போது தயாரிக்கப்பட இருக்கும் செமண்ட் இப்பொழுது விற்கப்படும் செமண்டின் விலைக்கு ஒத்ததாக இருக்குமா? ஏற்றம் இருக்குமா? இறக்கம் இருக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒரே விலை தான் இருக்கும்.

[26th March 1966

திரு. எம். எஸ். மணி : இந்த ·ஃப்ளை-ஆஷில் செய்யப்படுகிற செமண்ட் எந்தக் கலரில் இருக்குமென்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஃப்ளை-ஆஷ்லே செய்யப்படுவதில்லை. ஃப்ளை-ஆஷ் செமண்ட்டில் சேர்க்கப்படுகிறது. ஆகையால் செமண்ட் கலர்தான் இருக்கும்.

விவசாயிகளுக்கு போனஸ்

*439 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :**
திரு. கரு. சீமைச்சாமி :
திரு. வை. சங்கரன் :
திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் உணவு

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்முதல் செய்யும்போது அதிக தானியம் தரும் விவசாயிகளுக்கு போனஸ் வழங்கவேண்டும் என்ற திட்டம் ஏதேனும் இம்மாநில அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Government have proposed to pay a bonus of Rs. 2 per quintal of paddy delivered in excess of the levy to every producer.

திரு. கரு. சீமைச்சாமி : ஒரு க்விண்டாலுக்கு 2 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒரு ஏக்கராவுக்கு எவ்வளவு நெல் கொடுப்பது என்பது சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. சிவகங்கை தாலுக்காவை எடுத்துக் கொண்டால் 4 மூட்டை என்பதாக இருக்கிறது. பரமக்குடியை எடுத்துக் கொண்டால் 6 மூட்டை என்று இருக்கிறது. இப்படி லெவி முறை சரியாக நிர்ணயிக்கப்படாதிருக்கிற காரணத்தினால் கொள்முதல் செய்யப்படுகிற அத்தனை மூட்டை நெல்லுக்கும் போனஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கொள்முதல் செய்யப்படுகிற அத்தனை க்விண்டால் நெல்லுக்கும் போனஸ் கொடுப்பதாகத் திட்டம் கிடையாது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் லெவியை நிர்ணயித்திருக்கிறோம். அதற்குமேல் எந்த விவசாயி கொடுத்தாலும் அவர்களுக்கு அந்த போனஸ் கிடைக்கும்.

திரு. கரு. சீமைச்சாமி : லெவியினுடைய விகிதம் சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. அதன் காரணமாக இந்த போனஸ் திட்டம் சரியாக நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், யாருக்கும் போனஸ் கிடைப்பதாக இல்லை. ஆகவே, அதைப் பரிசீலனை செய்து உற்பத்தி செய்யப்படுகிற க்விண்டால் நெல் அத்தனைக்கும் போனஸ் கொடுக்கப் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கொள்முதல் செய்கிற நெல்லுக்கு ஏற்கெனவே நாம் கொடுத்து வந்த் விலையைக் கூட உயர்த்தியிருக்கிறோம். லெவி முறைப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அளவுக்கு மேலே கொடுக்கப்படுகிற நெல்லுக்குத்தான் க்விண்டாலுக்கு இவ்வளவு என்று போனஸ் வைத்திருக்கிறோம். அதுதான் இன்செண்டிவ் என்பதற்குப் பொருள். கொள்முதல் செய்கிற எல்லாவற்றுக்கும் கொடுப்பது என்றால் இன்செண்டிவ் போனஸ் என்பதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும். ஒரு ஏக்கருக்குள்ளே நிலம் உள்ள விவசாயிகளிடம் இருந்து இப்போது கட்டாயமாகக் கொள்முதல் செய்வதில்லை என்று வைத்திருக்கிறோம். ஆனால் இப்படி ஒரு ஏக்கருக்கு உள்ளே நிலம் வைத்திருப்பவர்கள் தங்கள் தேவைக்கு மேலே நெல் கொள்முதலுக்குக் கொடுக்கிறோம் என்றால், இதற்கும் இன்செண்டிவ் போனஸ் கொடுக்கிறோம். ஒரு ஏக்கருக்கு மேல் உள்ளவர்கள்—அவர்களுடைய நிலத்திற்கு, நிலத்தின் தரத்திற்கு ஏற்றவகையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அளவு நெல்லைக் கொடுத்துவிட்டு மேலே எவ்வளவு நெல்

26th March 1966]

கொடுக்கிறார்களோ, அதற்கு க்விண்டாலுக்கு இவ்வளவு என்று இன்செண்டிவ் போனஸ் கொடுக்கிறோம். இப்படி இல்லாது கொள்முதல் செய்யப்படுகிற எல்லா நெல்லுக்கும் போனஸ் கொடுப்பது என்றால் "இன்செண்டிவ் போனஸ்" என்பதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இன்செண்டிவ் போனஸ் கொடுப்பதிலேயும், ஜில்லாவுக்கு ஜில்லா கலெக்டர் அவர்களுடைய இஷ்டத்திற்கு நிர்ணயித்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறதா ? திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தவரையில் லெவிக்கு—கொள்முதலுக்கு பெரும்பகுதி போனஸ் கொடுக்கக்கூடிய நிலை வந்திருக்கிற தகவல் அரசாங்கத்திற்கு எட்டியிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விலை நெல்லின் தரத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அளவு அந்த அந்தத் தாலூகாவுக்கு ஏற்ற முறையில், அந்த அந்த நிலத்திற்குத் தகுந்த முறையில், ஒரு விவசாயினால் எந்த அளவு விற்க முடியும் என்று பார்த்து நிர்ணயிக்கப்படுகிறது. அந்த அளவு அதிகம் என்று சொன்னால் கலெக்டரிடம் தெரிவித்துக்கொள்ளலாம். அவர்கள் அதைப் பரிசீலனை செய்வார்கள். அந்த அளவுக்கு மேல் கொடுக்கிற நெல்லுக்கு க்விண்டாலுக்கு இவ்வளவு என்பதாக இன்செண்டிவ் போனஸ் கொடுக்கப்படுகிறது. இன்செண்டிவ் போனஸ் எந்த அளவு என்பதில் வித்தியாசம் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நெல்லுக்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை வெளி மார்க்கெட் விலையைவிடக் குறைவாக இருக்கிறது. ஒரு க்விண்டாலுக்கு சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலையைவிட 5 ரூபாய் வெளியில் அதிகமாக விற்கிற சூழ்நிலை இருப்பதனால், ப்ரொக்யூர்மெண்டு பாதிக்கப்படுகிறது. ஆகவே அரசாங்கம் நெல்லின் விலையை உயர்த்த ஏதாவது முடிவு செய்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறிய பிரகாரம் நெல்லின் விலையை க்விண்டாலுக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். அதுதான் கண்டிரோல் விலை. அதற்கு மேல் விற்றால் குற்றம். கள்ளமார்க்கெட்டில் இன்ன விலைக்கு விற்கிறார்கள் என்றால், அதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லலாம். அதைவிட்டு, கள்ளமார்க்கெட்டில் விற்கப்படுகிற விலைக்கு நாம் நெல்லுக்கு கொடுக்கக் கூடிய விலையை உயர்த்துங்கள் என்று சொல்வது நியாயம் இல்லை.

திரு. எம். எஸ். மணி: அதிக தானியம் கொடுக்கும் விவசாயிகளுக்கு போனஸ் வழங்குவதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கு ஏதாவது உச்ச வரம்பு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த அந்தத் தாலூகாவுக்கு, அந்த அந்த பிர்க்காவுக்கு ஏற்றபடி குறிப்பிட்ட நிலத்தில் எவ்வளவு சர்ப்ளஸ் இருக்கும் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. ரப் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் பிரகாரம்தான் இது நிர்ணயிக்கப்படுகிறது. இதுதான் அண்டு ரெடி மெதட் உச்ச வரம்பு. அதற்கு மேலும் நாங்கள் கொடுக்கிறோம் என்றால் அப்படிக் கொடுக்கிற நெல்லுக்குத்தான் க்விண்டாலுக்கு இவ்வளவு என்று இன்செண்டிவ் போனஸ் கொடுக்கிறோம்.

திரு. எஸ். முருகையன் : இந்த போனஸ் தொகை புஞ்சை தானியங்களுக்குக் கொடுக்கப்படுகிறதா ? எந்த எந்த மாவட்டத்தில் கொடுக்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புஞ்சை தானியங்களைப் பற்றித் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், போனஸ் கொடுப்பது என்கிறபோது எனக்குப் பத்து ஏக்கர் நிலம் இருந்தால், 40 மூட்டை மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் என்பதாகக் கொடுக்கவேண்டும். இருபது ஏக்கரா இருந்தால்

[26th March 1966

80 மூட்டை கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கிறார்கள். ஐந்து ஏக்கராவில் தான் சாகுபடி நடந்தது என்றால் 20 மூட்டை சர்ப்ளஸ் கொடுத்துவிட்டு அதற்குமேல் கொடுப்பதற்கு போனஸ் கொடுங்கள் என்றால் கொடுப்பதில்லை. அந்தமாதிரி கஷ்டத்தைப் போக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொள்முதல் செய்கின்ற அளவு—மார்க்கெடபிள் சர்ப்ளஸ் 2 ஏக்கருக்கு இவ்வளவு, ஐந்து ஏக்கராக இருந்தால் இவ்வளவு, பத்து ஏக்கராக இருந்தால் இவ்வளவு என்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஏக்கரைவிட பத்து ஏக்கருக்கு அதிகமாக இருக்கும். ஒருவருக்கு 20 ஏக்கர் இருந்தால் 20 ஏக்கருக்குள்ள அளவைக் கொடுத்துவிட்டால்—மேற்கொண்டதற்கு போனஸ் உண்டு.

SRI C. CHIRANJEEVULU NAIDU : The levy is fixed by the Revenue Authorities on the basis of the particulars furnished by the karnam which again are based on the cultivation particulars. In the matter of procurement, there is inordinate delay in purchasing the grains by procuring agents. As the ryots are compelled to sell paddy to the procuring agents, should not the Government see that procurement is made at the time of the harvest?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If producers have any grievances, they may represent them to the Collector who will certainly look into them. Or, if the hon. Member does not mind, he may discuss this matter with the Collector, and the Collector will certainly see that delay, if any, is avoided.

திரு. சா. கணேசன் : இப்படி போனஸ் வழங்குகின்றபோது 'பத்து ஏக்கர் நிலம் உள்ளவர் நீர் வசதி இன்மையால் நான்கு ஏக்கரில் தான் பயிர் செய்ய முடிந்தது என்றால்—நான்கு ஏக்கரா சாகுபடி செய்திருக்கக்கூடிய ஒருவருக்கு "உங்களுக்கு பத்து ஏக்கரா சொந்தமாக இருக்கிறது, ஆகவே பத்து ஏக்கராவுக்கு இவ்வளவு நெல் நீங்கள் கட்டாயக் கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டும்" என்று நிர்ணயிப்பது சரியாக இராது. ஆகவே பயிர் செய்யப்படுகிற அளவுள்ள நிலத்திற்கு இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதற்கு மேல் அவர்கள் கொடுக்கிற நெல்லுக்கு இன்சென்டிவ் போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒருவருக்கு பத்து ஏக்கர் நிலம் இருந்து அவர் 4 ஏக்கர்தான் பயிரிட்டார் என்றால் அரசாங்க அதிகாரிகள் அவ்வளவு கண்மூடித்தனமாக பத்து ஏக்கருக்கும் உள்ள கோட்டாவை நிர்ணயிக்கமாட்டார்கள். எங்காவது அப்படித் தவறு நடந்திருந்தால், அதிகாரிகளுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று திருத்திக்கொள்ளலாம். நான்கு ஏக்கராவுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மார்க்கெடபிள் சர்ப்ளசைக் கொடுத்துவிட்டால், அதற்குமேல் கொடுக்கிற நெல்லுக்கு இன்சென்டிவ் போனஸ் கொடுக்கப்படும்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : முன்னே—திரு பிரகாசம் அவர்கள் காலத்தில் வில்லேஜ் கமிட்டி என்று வைத்து அதிகாரிகள் அவர்களைக் கலந்துகொண்டு கொள்முதல் அளவை நிர்ணயித்தார்கள். அதுபோல் இப்போதும் பிரதேசக் கமிட்டிகளை அமைத்து, மாவட்ட கலெக்டர் அவர்களைக் கலந்துகொண்டு கொள்முதல் அளவை நிர்ணயிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் 15 ஆண்டு களுக்கு முன்னே நடந்ததைப் பற்றிச் சொல்கிறார். அப்போது முற்றிலும் கொள்முதல் செய்யப்பட்டது. அங்கக் கொள்முதல் விவரம் வேறு.

26th March 1966]

ஆனால் இப்போது அந்த முறை இல்லை. இருந்தாலும் சம்பந்தப்பட்ட ப்ரொட்யூசர்களுக்கு கஷ்டம் இல்லாத வகையில் கலெக்டர்கள் செய்யலாம். இதுபற்றி கலெக்டர்கள் கவனித்துத்தான் செய்து வருகிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், நெல்லினுடைய விலையை உயர்த்த வேண்டுமென்று சொல்லிவிட்டு வெளியிலே விலைவாசி உயர்ந்து விட்டது என்று போராட்டம் நடத்துகிறார்களே, அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஒன்று கூற விரும்புகிறேன். விலையை 2, 3 ரூபாய் அதிகப்படுத்தி இருக்கிறோம். இன்சென்டிவ் போனஸ் கொடுப்பதாகத் தெரிவித்து இருக்கிறோம். எந்த நிலையிலே கொடுக்க முடியுமோ, அப்படிக் கொடுக்கிறோம். அப்படியிருந்தும் சில்லறை விலையை ஏற்றவில்லை.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : இப்பொழுது நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கும் அளவைவிட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பொதிக்கு 10 ரூபாய் அதிகம் கொடுக்கப்பட்டது. அதேமாதிரி ஒரு பொதிக்கு 10 ரூபாய் ஏற்றிக்கொடுத்தால், விவசாயிகள் உணவு உற்பத்தியில் அதிகமாக உற்சாகம் எடுத்துக்கொள்வார்கள் என்ற முறையிலே அதற்கான வழிவகைகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விவசாயிகளுக்கு எவ்வளவு கொடுத்தாலும் நல்லதுதான். அவர்கள் வரவேற்பார்கள். கொடுக்கக்கூடிய நிலையில் இருந்தால் நான்கூட வரவேற்பேன். கனம் அங்கத்தினர் சொன்னதைப்போல் விலையை ஏற்றினால் சில்லறை விலையும் ஏறும். விலையைக் கட்டுப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தினால்தான் அரசாங்கம் கண்ட்ரோலை பிரயோகிக்க வேண்டியிருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய விலை கட்டுப்படியாகவில்லை. ஆகவே அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்து குறைந்த விலைக்கு மக்களுக்கு விநியோகம் செய்து அந்தச் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதிகமாகக் கொடுக்கவேண்டு மென்பதை வரவேற்பேன். இப்பொழுது கொடுக்கிற விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். விவசாயம் தெரியாதவர்கள் வேண்டுமானால் அப்படிச் சொல்லலாம்.

சிலோன் அகதிகள்

* 440 கேள்வி.—**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிலோனிலிருந்து வரும் அகதிகளை நீலகிரி ஜில்லாவில் கூடலூரில் குடியேற்றும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) A proposal to establish tea plantations in about 1,500 hectares of land in Nilgiris district, including Gudalur taluk, for providing employment to the Ceylon repatriates is under consideration of the Government.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இலங்கையிலிருந்து வந்த அகதிகள் எத்தனை பேர்கள் வந்திருக்கிறார்கள் ? இன்னும் எவ்வளவு பேர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள் ?

[26th March 1966

கனம் திரு. வெ. ராமைய்யா : இதுவரைக்கும் வந்தவர்களை அகதிகள் என்று சொல்ல முடியாது. காரணம், அவர்களுக்கு இந்த நாட்டிலே தொடர்பு இருக்கிற காரணத்தாலே தொடர்ந்து அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன என்ன செய்ய வேண்டும், மாணியமோ, கடனே அல்லது திருநெல்வேலியிலே கூட்டுறவு அடிப்படையிலே விசேஷமாக மில் கூட ஆரம்பித்திருக்கிறார்கள், இதையெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும். ஆனால் நாம் இப்பொழுது எடுக்கக் கூடிய முயற்சியெல்லாம் இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே எழுந்ததுதான். அங்கிருந்து அந்த அடிப்படையிலே தான் இங்கே வர இருக்கிறார்கள். அதற்காக பூர்வாங்க நடவடிக்கையாக இந்த ராஜ்யத்திலே என்ன என்ன செய்ய முடியும், அதேபோல மத்திய அரசாங்கத்தின் முயற்சியிலே மற்ற ராஜ்யங்களிலும் இதற்கு என்ன என்ன செய்யப்படவேண்டும் என்பதை எல்லாம் பார்த்து மத்திய அரசாங்கமும், நம்முடைய அரசாங்கமும் இதில் தீவிர கவனம் செலுத்துகின்றன.

திரு. ஜே. மாதா கவுடர் : சிலோன் தமிழர்களைக் கூடலூரிலே குடியேற்றுவதற்கு 1,500 ஏக்கர் தேயிலைத் தோட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ? அது கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்படுமா ? அல்லது தனித்தனியாக அவர்களுக்கு நிலம் கொடுத்து ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இவர்கள் வரும்பொழுது எங்கெங்கே என்ன செய்யமுடியும் என்ற நிலையிலே ஆராய்ந்து கொண்டிருக்கக்கூடிய நிலையைத்தான் நான் சொன்னேன். தேயிலைத் தோட்டத் தொழில் செய்பவர்களாக அவர்கள் இருக்கவேண்டுமென்றால், அதற்கு எங்கெங்கே இடம் இருக்கிறது, எவ்வளவு இடம் இருக்கிறது என்பதெல்லாம் ஆராயப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : சிலோனில் இருந்து வருகின்றவர்கள் தேயிலைத் தோட்டத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களுக்கு பூமி கொடுத்து ஏற்பாடு செய்யப்போவதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் வருகிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரியும். ஆகவே இப்பொழுதே பூமியை எங்கே கொடுப்பது எப்படிக் கொடுப்பது என்பதற்கு முயற்சிகளை ஏன் செய்யக்கூடாது என்று தெரிந்து கொள்வதற்காகத் தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அந்த விபரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த முயற்சியினுடைய பூர்வாங்க வேலையைத்தான் நாம் இப்பொழுது செய்கிறோம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இலங்கையிலிருந்து இந்த ஆண்டு இந்த ராஜ்யத்திற்கு திரும்பக் கூடியவர்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் எத்தனை பேர்கள் என்று உத்தேசமாகச் சொல்லமுடியுமா ? நீலகிரியைத் தவிர வேறு எந்த எந்த இடங்களில் அவர்களைக் குடியேற்றுவதற்கு என்ன என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த வருஷம் எத்தனை பேர்கள் எந்தெந்த அடிப்படையிலே வருவார்கள் என்று சொல்வதற்கு இல்லை. காரணம்: அங்கு ஒரு சட்டம் நிறைவேற்றவேண்டியிருக்கிறது. அது முடிந்ததற்குப் பிறகு அதையொட்டிப் பல பேச்சுவார்த்தைகள் நடந்ததற்குப் பிறகுதான் அவர்கள் எப்பொழுது இங்கு திரும்பிவர வேண்டுமென்பது முடிவு செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையின்படி பார்த்தால் சராசரி வருஷம் ஒன்றுக்கு 35 ஆயிரம் பேர்களாவது வர இருக்கிறார்கள். அந்த முறையிலே பெரும் பகுதி அவர்கள் தேயிலைத் தொழிலில் ஈடுபட்டவர்களாக இருக்கின்ற காரணத்தால், எங்கெங்கு எப்படி எப்படி அவர்களை குடியேற்றலாம் என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அவர்களுடைய பிரச்னையைப் பொறுத்தவரையில் சென்னை ராஜ்யத்தின் எல்லைகளுக்குள்ளேயே ஏற்பாடு செய்துவிடமுடியாது. மத்திய அரசாங்கமும் இதற்கு ஏற்பாடு செய்யும். சென்னை ராஜ்யத்திலே எங்கே இடம் ஏற்பாடு செய்ய முடியும், அதேபோல் வேறு பக்கங்களிலும் அவர்களுக்கு ஏற்பாடு செய்யமுடியும்

26th March 1966]

என்பதையும் பார்க்க வேண்டும். இன்னொரு யோசனைகூட சமீபத்திலே கூறப்பட்டது. அந்தமான், நிகோபார் பகுதிகளில்கூட குடியேற்ற முடியுமா என்று பார்த்து அதற்கு வேண்டிய பரிசீலனை செய்ய வேண்டுமென்று நாம் மத்திய அரசாங்கத்திடம் கூறியிருக்கிறோம். அவர்களும் இசைவு தெரிவித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : பல லட்சம் பேர்கள் திரும்பி வருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். பர்மா அகதிகள் சம்பந்தமாகவே நிலவரங்களை சமாளிக்க முடியவில்லை. அப்படியிருக்கும்பொழுது இவர்களை எல்லாம் சமாளிப்பதற்கு நகல் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறார்களா ? இதைப்பற்றி மத்திய அரசாங்கத்தை ஏதாவது கேட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் உயர்ந்த பொறுப்பை எனக்கு கொடுத்து விட்டார்கள். ஏதோ நான் ஒப்பந்தத்திலே கையெழுத்துபோட்டதாக. அந்தக் சட்டம் எனக்கு வரவில்லை. அந்த ஒப்பந்தத்தில் இரண்டு தேசங்களினுடைய பிரதம மந்திரிகளினுடைய கையெழுத்துபோடப்பட்டது. நம்முடைய ராஜ்ய முதலமைச்சர் அவர்கள் அதிக கவனம் காட்டியதால், இது சம்பந்தமாக அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த போயிருந்தபோது அந்த கோஷ்டியோடு என்னையும் சேர்த்திருந்தார்கள். பர்மா அகதிகளுக்குச் சரியாகச் செய்யமுடியவில்லை, ஆகையினால் சிலோனிலிருந்து வருகிறவர்களின் நிலை என்ன ஆகும் என்ற பயத்தின் அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்பதற்கு அரசாங்கம் பூர்வாங்க நடவடிக்கைகளைச் செய்துகொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. பிரதம மந்திரி அவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்னாலே ராஜ்ய முதலமைச்சர்களையெல்லாம் இதை ஒரு தேசியப் பிரச்சினையாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். மத்திய அரசாங்கம் அந்த வகையிலே கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் எந்தவிதமான நெருக்கடியும் ஏற்படாமல் வசதி செய்து கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சிதம்பரம்-அரியலூர் இருப்புப்பாதை.

*441 கேள்வி.— **திரு. சி. சிவசுப்பிரமணியன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரத்திற்கும் அரியலூருக்கும் குமராட்சி, காட்டுமன்னார்குடி வழியாக ரயில்பாதை ஒன்றை அமைக்குமாறு மத்திய அரசாங்கத்திற்கு ஏதேனும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன்மீது கிடைத்த பதில் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. சி. சிவசுப்பிரமணியன் : இனிமேலாவது அரசாங்கம் அதைப்பற்றி நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போதே இல்லை என்று சொல்லி விட்டேன்.

Distribution of kerosene

*442 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to distribute kerosene on the basis of ration card in the cities and other areas in the State ; and

(*b*) if so, the details thereof?

[26th March 1966

The Hon. Sri V. Ramaiah : (a) & (b) A paper[a] is placed on the table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில், சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் சர்க்கரை ஒதுக்கப்பட்டுள்ள அளவை அனுசரித்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னையில் சர்க்கரை வாங்க முடியாத அளவிற்கு இருக்கிற குடிசை வாழ் மக்கள்தான் ஏராளம். அவர்களுக்குத்தான் இந்த மண்ணெண்ணெய் முக்கியமாக தேவைப்படுகிறது. ஆகவே அரிசி விநியோகிக்கிற கார்டை வைத்து மண்ணெண்ணெய் விநியோகிக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நடைமுறையில் வருத்தமுற இது ஆறு, ஏழு மாதங்களாக இருக்கிறது. யாருக்கும் மண்ணெண்ணெய் கிடைக்காத நிலை இருப்பதாக என்னிடம் இதுவரை புகார் வரவில்லை. ஆகவே சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் சொல்கிறேன், இப்போதுள்ள இந்த விநியோக முறையில் மாறுதல் செய்யவேண்டுமென்கிற நிலை இருக்கும் பட்சத்தில் பரிசீலனை செய்யலாம். என்னிடமுள்ள விவரப்படி, அதற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : மண்ணெண்ணெய்ப் பஞ்சம் திடீரென்று ஏற்படுவதற்கு காரணம் என்ன ? கொச்சின் ரிபைனரி வேலை பூர்த்தி யான பிறகு, இந்தியன் ஆயில் கம்பெனியுடன் பர்மா ஷெல், கால்டெக்ஸ் இவை இணைந்த பிறகு இந்தத் தட்டுப்பாடு குறையுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பொதுவாக அளவிற்கு தேவையில் இல்லாததினால் சில இடங்களில் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதைச் சரிக் கட்டும் முறையில் விநியோகத்தில் அரசாங்கம் தலையிட்டு ஒவ்வொரு இடத் திற்கும் எவ்வளவு கொடுக்கவேண்டும், எவ்வளவு கொடுக்க முடியும், அதை ஒழுங்குபடுத்துவது இதுவரையில் இந்த அறிக்கையில் கொடுத் துள்ளோம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தியன் ஆயில் கம்பெனியோடு அந்த கம்பெனிகள் எல்லாம் இணையவில்லை. இறக்குமதி குறைக்கப்பட்டிருக் கிறது. அவர்கள் இறக்குமதி குறைந்ததினால்தான் இந்த பற்றாக்குறை.

Sri C. Chiranjeevulu Naidu : Kerosene is becoming a problem not only in towns but in villages also. Kerosene is being used in villages by ryots for pumpsets during agricultural operations. In addition to this, crude oil also is becoming a problem. Will the Government consider the desirability of taking suitable action in the matter by instructing the Revenue Divisional Officers to look into the matter of ditribution and rectify the defects at present noticed in the rural areas?

The Hon. Sri V. Ramaiah : If the hon. Member were to read the statement that I have placed on the table of the House, he might see that the Revenue Divisional Officers are looking into this matter. Wherever there is any difficulty and if it is brought to the notice of the Revenue Divisional Officers by the local people, the officers will look into the matter.

திரு. கே. ஏ. மதியழகன் : பத்தாயிரக்கணக்கான சிறிய கிராமங்களைப் பற்றி ஒரு விவரம் கூட இதில் இல்லை. சூரியன் அஸ்தமனமாகிவிட்டால், உதயசூரியன் வந்தால் தான் வெளிச்சம்வரும் என்ற நிலையில் அக் கிராமங்

a Printed as Appendix on pages 201–204.

26th March 1966]

கள் இருக்கின்றன. மண்ணெண்ணெய் சிறிதுகூட இல்லாமல் அவை ஒளி இழந்து கிடக்கின்றன. ஆகவே அந்தச் சிறிய கிராமங்களுக்கும் மண்ணெண் ணெய் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உதயசூரியன் இல்லாமலேயே நல்ல மின்சார வெளிச்சம் பல கிராமங்களுக்கு வந்திருக்கிறது. சீக்கிரத்தில் எல்லா கிராமங்களுக்கும் வந்துவிடும். உதயசூரியனுக்கு அவசியமே யில்லை.

திரு. எஸ். முருகையன் : வட ஆற்காட்டில் எந்தவிதமான கார்ட் முறையும் அமலில் இல்லை. மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு சிரமமாக இருக்கிறது. நியாயமான விலையில் எண்ணெய் கிடைப்பதில்லை. ஆகவே வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவந்து அங்குள்ள விவசாய மக்களுக்கும், பொது மக்களுக்கும் மண்ணெண்ணெய் நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நார்த் ஆற்காட்டில் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஏதாவது ஆலோசனைகள் இருந்தால் கலெக்டர், மற்ற அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க உதவி செய்வார்கள்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் தீ விபத்துகள்.

*443 கேள்வி.—**திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் 1964–65-ம் ஆண்டில் எத்தனை தீ விபத்துக்கள் ஏற்பட்டன ?

(இ) அதன் காரணமாக ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

The Hon. Sri V. Ramaiah : (a) 447 fire accidents took place during 1964–65.

(b) The estimated loss was Rs. 9,28,309.

திரு. சீ. சிவசுப்பிரமணியன் : இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்க்கா ரால் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் உடனடியாக ஸ்தலத்திலுள்ள அதிகாரிகள் உடனடி நிவாரணமாக 30 ரூபாய் கொடுக்கிறார்கள், (**for repairing and reconstruction of damaged houses**) பத்து ரூபாய் துணி வகையறுக்களுக்குக் கொடுக்கிறார்கள். பாதிக்கப் பட்டவர்கள் தங்கள் வீடுகளைத் திருப்பிக் கட்டிக்கொள்ள கடன் கோரி மனு கொடுத்தால், தக்காவி கடன் வாயிலாகக் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் வரைக் கடன் கொடுக்க வசதிகள் உண்டு.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 30 ரூபாய் வீடு கட்டுவதற்கும், பத்து ரூபாய் துணி வாங்கிக்கொள்ளவும் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது உண்மையில் போதாது. பணமாக 30 ரூபாய், 10 ரூபாய் என்று கொடுப்பதைவிட வீடு கட்டிக் கொள்வதற்கு என்று புறம்போக்கிலுள்ள நாலைந்து மரங்களை வெட்டிக் கொண்டுபோக, பழைய முறையில் இருந்ததுபோல் அந்த முறையைப் பின்பற்றுவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : 30–ம், 10–ம் உடனடியாக அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் கொடுக்கவேண்டியது. இப்போதுள்ள முறையில் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளை திருப்பிக் கட்டிக்கொள்ள கடன் கேட்டு அதிகாரிகளிடம் மனு கொடுத்தால், அதைப் பரிசீலனை செய்து, வீட்டைத் திருத்திக் கட்டிக் கொள்வதற்குக் கடன் கொடுப்பார்கள்.

[26th March 1966

நீராவிச் சலவை இயந்திரங்கள்.

*444 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் ஸ்டீம் லாண்ட்ரி எந்தெந்த மருத்துவ மனைகளில் இருக்கிறது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Steam laundries are functioning in the Government General Hospital, Madras, Government Stanley Hospital, Madras, Government Kasturba Gandhi Hospital for Women and Children, Madras, Government Hospital for Women and Children, Madras and Government Headquarters Hospital, Tiruchirappalli.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதுரை அரசினர் எர்ஸ்கின் ஹாஸ்பிடலுக்கு இந்த ஸ்டீம் லாண்ட்ரி மிகவும் அவசியமானது. இதுநாள் வரை அது அங்கில்லாதது பெருங்குறை. இனிமேலாவது அதை சீக்கிரம் ஏற்படுத்த அரசினர் முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் இந்த ஸ்டீம் லாண்ட்ரியை ஆரம்பிக்க ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. சா. கணேசன் : பல்வேறு மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரிகளில் எஸ்டிமேட்ஸ் கமிட்டி சென்று பார்த்து வெளுப்பு வேலை நடக்காமல் இருக்கிற நிலைமையில், மழை காலம் வந்துவிட்டால் கிட்டத்தட்ட வெளுப்பு வேலையே இல்லை என்ற நிலை ஏற்பட்டிருப்பதால், பெரிய ஆஸ்பத்திரிகளில் உடனடியாக இந்த ஆண்டே சலவை செய்யும் நீராவி இயந்திரங்களை அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : முக்கியமான தலைநகர ஆஸ்பத்திரிகளில் இந்த ஸ்டீம் லாண்ட்ரிகளை ஆரம்பித்து வைக்க தொகை அதிகப்படியாக வேண்டியிருக்கிறது, ஏறத்தாழ 6 லட்சத்திற்கு மேல் ஆகிறது. அதையொட்டி முக்கியமாக இந்த ஆண்டு எர்ஸ்கின் ஆஸ்பத்திரி, மதுரையிலும், டி. பி. சானட்டோரியம், தாம்பரத்திலும் ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கம் ஏற்கனவே உத்தரவு போட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ப்ளெயின்ஸ் போன்றல்லாமல், நீலகிரி மலைப் பகுதியில் துணிகள் விரைவாக உலர்வதில்லை, அது ஒரு பெரிய குறையாக இருப்பதினால் நீலகிரியில், உதகமண்டலத்திலுள்ள தலைமை ஆஸ்பத்திரியில் இந்த ஸ்டீம் லாண்ட்ரி அமைக்க அட்வைசரி கமிட்டி ப்ரப்போசல் கொடுத்திருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் பெருமனது வைத்து ஏற்றுக்கொள்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அங்கத்தினருடைய ஆலோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. சா. கணேசன் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற போது சுமார் 6 லட்சம் ரூபாய் அதிகப்படியாகத் தேவையிருப்பதால், உடனடியாக செய்யமுடியவில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்த ஆறு லட்சம் ரூபாய் செலவழிக்காவிட்டால், இந்த அழுக்கு முதலியவற்றால் நோய் அல்லது நோயாளிகளின் எண்ணிக்கை பெருகவும் இடமேற்படுமாதலால் இந்த ஆறு லட்சம் ரூபாயை பொருட்படுத்தாமல் உடனடியாகச் செய்யவேண்டுமென்ற அக்கறையை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இதை வைக்கவேண்டுமென்று எண்ணம் அரசாங்கத்தினிடம் ஏற்கனவே இருக்கிறது. தொகை அதிகமாகிற காரணத்தால் ஒரே

26th March 1966]

வருடத்திலேயே எல்லா மருத்துவ மனைகளிலும் செய்வதற்கு இயலாது. ஒவ்வொன்ருக செய்து வருகிருேம். இப்போது தஞ்சாவூர் மருத்துவ மனையில் இதைச் செய்வதற்கு உத்தேசமிருக்கிறது.

மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பங்கள்.

* 445 கேள்வி.—**திரு. சி. சிவசுப்பிரமணியன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ம் ஆண்டில் மருத்துவ கல்லூரிக்கு விண்ணப்பம் செய்துக்கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அதில் ஹரிஜன மாணவர்கள் எத்தனை பேர் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) 4,305.

(இ) 225.

திரு. சி. சிவசுப்பிரமணியன் : அதிலே சேர்க்கப்பட்ட ஹரிஜன மாணவர்கள் எவ்வளவு என்று அறியலாமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஷெட்யூல்ட் காஸ்ட் அண்ட் ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் இரண்டும் சேர்ந்து 221.

திரு கே. ஏ. மதியழகன் : இது சேர்க்கப்பட்டவர்களின் தொகையா அல்லது சேர்ப்பதற்கு வந்த விண்ணப்பங்களின் தொகையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சேர்க்கப்பட்ட மாணவர்களின் தொகைதான்.

இந்திய மருத்துவக் கல்லூரி, குற்ருலம்.

* 446 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்திய மருத்துவக் கல்லூரி குற்ருலத்தில் அமைவதற்கு தேவையான கட்டடங்கள் கட்டுவதற்கு இதுவரை என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நாட்டு மருத்துவ முறைக் கல்லூரிக்காக குற்ருலத்தில் 168·35 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. அது தீர்ப்பளிக்கப்படும் நிலையை எய்தியுள்ளது. இக் கல்லூரிக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டுவதற்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் ஆகியவற்றைத் தயாரிக்குமாறு தலைமைப் பொறியாளரிடம் (கட்டடங்கள்) கேட்கப்பட்டிருக்கிறது. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வரைபடங்களும், மதிப்பீடுகளும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டவுடன், கட்டட வேலை மேற்கொள்ளப்படும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இங்கு கட்டப்படக்கூடிய கட்டடங்களின் உத்தேச மதிப்பு என்ன ? உத்தேசம் எவ்வளவு காலத்திற்குள் இது கட்டி முடிக்கப்படும் என்பதை அறிய முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதில் ஆயுர்வேதம், சித்தா, யுனானி இந்த மூன்று முறை பயிற்சிகளுக்கும் வசதி செய்து கொடுக்கின்ற முறையில் கட்டிடம் கட்டப்படவேண்டும் என்று திட்டமிடப்பட்டது. இப்போது சித்த வைத்திய முறை மட்டும் தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதற்கு மட்டும் இப்போது கட்டடம் சுமார் 58 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

[26th March 1966

திரு. சா. கணேசன் : இந்த இந்திய மருத்துவக் கல்லூரியில் சித்த வைத்தியம் மட்டும்தான் இப்போது பயிற்றுவிக்கப்படுகிறது என்கிற உண்மையை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதில் பிற இந்திய வைத்திய முறைகளான ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவ முறைகளையும் இதோடு அலோபதியினுடைய அனாடமி முறையும் சேர்த்துக் கற்றுக்கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் முன்னால் இது ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்போது சித்தவைத்தியத்திற்கு மட்டும் தான் சட்டம் கற்றுக் கொடுத்தால் போதும் என்று அரசாங்கம் கருதுவதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சித்தம், ஆயுர்வேதம், யுனானி இந்த மூன்று மருத்துவ முறைகளையும் ஆரம்பிக்கவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் உத்தேசம். ஆனால் அப்ளிக்கேஷன் போட்டிருந்த மாணவர்களைப் பார்க்கும்போது, ஆயுர்வேதம், யுனானி இவைகளுக்கு சுமார் ஐந்து விண்ணப்பங்கள்தான் வந்தன. பின்னால், ஆயுர்வேத, யூனானிகளுக்கான 35 இடங்களும் சித்த வைத்தியத்தோடு சேர்த்து ஒதுக்கப் பட்டது. இப்போது 95 மாணவர்கள் சித்தா-வில் பயிற்சி பெறுகிறார்கள். அனாடமி வேண்டும் அளவு சொல்லிக்கொடுக்கப்படுகிறது. சித்த வைத்தியம் என்பது இந்திய வைத்திய முறைகளை அனுசரித்துக் கற்றுக்கொடுக்கவேண்டியது. அந்த முறையில்தான் இந்தக் கல்லூரி அமைக்கப்பட்டிருக்கிறது. அலோபதி முறை இதில் எந்த விதத்திலும் சேராது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன் : மாணவர்கள் ஆயுர்வேதம், யுனானி இவை களுக்குப் போதிய அளவில் விண்ணப்பம் அனுப்பவில்லை என்று அமைச் சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தக் கல்லூரியில், ஆயுர்வேதம் அல்லது யுனானி வைத்திய முறைகளைக் கற்றுக்கொடுப்பதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கும்போது எப்படி அதற்கு மாணவர்கள் விண் ணப்பம் அனுப்புவார்கள் ? இவைகளுக்கு ஆசிரியர்களை நியமித்திருக் கிறார்களா ? இல்லையென்றால் உடனடியாக நியமிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The position is the other way about. It is not for want of teachers that students were not admitted to Ayurveda and Unani courses. It is for want of candidates that we did not appoint teachers for Ayurveda and Unani courses.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சித்த வைத்தியக் கல்லூரி அமைப்பதற்கு பச்சிலைகள் முதலியவை கிடைக்கின்ற இடமாக இருக்கவேண்டும். அதற்கு வசதியாக இருக்கின்ற சேலம் ஏர்க்காட்டில் இவ்விதம் ஒரு கல்லூரியை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : முதலில் குற்றாலத்தில் வந்தாகட்டும், பின்னால் மற்ற இடங்களைப்பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. ம. கமலநாதன் : குற்றாலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்திய மருத்துவக் கல்லூரியைச் சென்னைக்கு மாற்றவேண்டும் என்று அங்கு போன எஸ்டிமேட்ஸ் கமிட்டி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது. அதன்படி சென்னைக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை, அங்கு ஏற்படுத்தவேண்டும் என்றுதான் உத்தேசிக்கப்பட்டது, அதன்படி குற்றாலத்தில் நிறுவுவதற்குத்தான் நட வடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. சென்னைக்கு மாற்றுவதாக உத்தேச மில்லை.

26th March 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்திய மருத்துவக் கல்லூரியில் தற்போது சித்த வைத்திய முறையை போதிப்பதற்கான எல்லா ஆசிரியர் களும் நியமிக்கப்பட்டு விட்டார்களா ? இல்லையென்றால், பாக்கி நியமிக்கப்பட வேண்டியவர்களைக் காலாகாலத்தில் நியமிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சித்த வைத்திய முறையைக் கற்றுக்கொடுப்பதற்கான எல்லா ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டாகிவிட்டது. ஆனால் சில ஆசிரியர்களை மாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : இந்த வைத்தியப் படிப்பில் எத்தனை ஆண்டு படிக்கவேண்டும் ? இதுவரை இதில் படித்துப் பட்டம் பெற்று எத்தனை பேர்கள் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது புதிதாகத் தொடங்கப்பட்ட கோர்ஸ். இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. "பாச்சிலர் ஆஃப் இண்டியன் மெடிஸன்" என்ற பட்டம் கொடுக்கப்படும். இது ஐந்து ஆண்டு கோர்ஸ்.

Age of retirement of Medical personnel

* 447 Q.—SRI V. SANKARAN:
SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: } Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have proposed to increase the age of retirement of Medical personnel in Government service?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The age of retirement of medical officers of the Madras Medical Service and the Madras Public Health Service has been raised from 55 years to 58 years with effect from 25th January 1966.

Applications for house allotment

* 448 Q.—SRI A. KUNJAN NADAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of applications pending under the Rent Control Act for allotment of houses in the city as on 1st January 1966; and

(b) the number of applications for houses received during the year 1965 and the number of houses allotted?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) 1,199.

(b) 1,737 and 531 respectively.

Dearness allowance for State Government employees

* 449 Q.—SRI V. SANKARAN
SRI S. J. RAMASWAMY
SRI A. ARUMUGAM: } Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have proposed to increase the dearness allowance of the State Government employees in the light of the recent increase in dearness allowance for the Union Government employees?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government are examining the question of revising the rates of dearness allowance of the State Government employees.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இதைப் பற்றிய விளக்கமான செயற் குறிப்பு ஏதேனும் கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்னும் மூன்று நாட்கள் கனம் அங்கத்தினர் அவர்கள் பொறுத்திருந்து பார்த்தால், அறிந்து கொள்ளலாம். நான் 29-ம் தேதி இதைப்பற்றித் தெரிவிக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், பஞ்சப்படி, பஞ்சப்படி என்று சொல்வது ஏதோ இழிவாகக் கருதப்படுகிறது. ஆகவே இந்தத் தொகையை டேவிங் பே—அடிப்படைச் சம்பளத்தோடு இணைத்துக்கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கம் அமைத்த பே கமிஷன் ஓரளவுக்குப் பஞ்சப்படியைச் சம்பளத்தோடு இணைத்துக் கொடுத்திருக்கிறது.

SRI A. ARUMUGAM : May I know whether the increase in the dearness allowance will be paid in cash or in kind?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சப்படியைப் பொறுத்த அளவில் "கைண்ட்"ல் கொடுப்பதாக உத்தேசமில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், மத்திய சர்க்கார் கொடுத்திருக்கின்ற பஞ்சப்படி உயர்வே போதாது என்று அவர்கள் கருதுகின்றார்கள். ஆகவே அதைவிட உயர்ந்த பட்ச அளவுக்குக் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இன்னும் மூன்று நாட்களில் அரசாங்கத்தின் முடிவைத் தெரிவிக்கலாம் என்று சொன்னேன். அதிலும் அரசாங்க ஊழியர்கள் திருப்திப்பட்டுவிடக்கூடாது, அதிருப்திதான் கொள்ள வேண்டும் என்பதற்காக இன்னும் கூடுதலாகக் கொடுக்க முடியுமா என்று கேட்கிறார்கள். இப்போது நான் உறுதியாகச் சொல்லுகிறேன், அது முடியாது என்று.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் முதலமைச்சர் அவர்களுக்கு மிகவும் பற்றுதலான கன்ஸ்யூமர்ஸ் (கோவாப்பரேட்டிவ்) சொஸைட்டிகள் வகையில் சேர்ந்ததா, தொகையில் சேர்ந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வகை, தொகை எல்லாம் எனக்குத் தெரியாது, கன்ஸ்யூமர்ஸ் சொஸைட்டியில் பற்றுதல் எல்லோருக்கும் இருக்கவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். அது நான் நிரந்தரமாக உருப்படியாக விலைவாசி உயர்வுக்கு நிவாரணம் அளிக்க கூடியதாக இருக்கும். அதை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. முக்கியமாக இதற்கு மற்றவர்களுடைய ஒத்துழைப்பு வேண்டும்.

Rate of interest on Provident Fund

*450 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the rate of interest allowed on Provident Fund accumulations of Government servants; and

(*b*) the difference between this rate and the prevailing Bank rate of interest?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The rate of interest allowed on Provident Fund accumulations of Government servants is fixed at 4.25 per cent per annum for 1965–66.

(*b*) The prevailing Bank rate of interest is 6 per cent. The difference is thus 1.75 per cent.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பிராவிடெண்ட் ஃபண்டிலே இப்போது நெருக்கடி காலத்தை உத்தேசித்து 5 சத வீதம் அதிகமாக வசூலிக்கப்படுகிறது. ஏற்கெனவே 6 சத வீதம் பொதுவாக இருக்கிறது. வருமான வரி கொடுக்கிற ஊழியர்களுக்கு, பெரிய கெஜடெட் ஆஃபீஸர்களிடமிருந்து ஏற்கெனவே இருந்த 6 சத வீதத்துடன் 2 சத வீதம்தான் அதிகமாக வசூலிக்கப்படுகிறது. சாதாரண என்.ஜி.ஓ.-க்களிடமிருந்து 6 சத வீதத்துடன் 5 சத வீதம் அதிகமாக வசூலிக்கப்படுகிறது. சாதாரண என்.ஜி.ஓ.-க்களுக்கு 11 சத வீதமும், இன்கம்-டாக்ஸ் கொடுக்கிறவர்களுக்கு 8 சத வீதமுமாக இருக்கிறது. பொதுவாக அதிகமாக வசூலிக்கப்படும் பிராவிடெண்ட் ஃபண்டை எடுத்து விட உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது வட்டி பற்றிய கேள்வி, என்ன வட்டி கொடுப்பது என்பது பற்றிய கேள்வி. ஆனால், அதிகமாக வசூலிப்பதை எடுத்துவிடவேண்டும் என்பது ஒரு கோரிக்கை, அது கேள்வி அல்ல. இதை நான்கூட யோசித்துக்கொண்டு இருந்தேன். அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கொடுத்தாலும் அது அவர்களுக்கேதான் திரும்பப் போகிறது. கன்ட்ரிப்யூஷன் பேரில் கடன் தாராளமாகக் கொடுக்கிறோம். இன்கம்-டாக்ஸ் ரிபேட்கூட இருக்கிறது. இந்த வசதிகளெல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் இதை எடுத்துவிடலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தேன். அதற்குள் பஞ்சப்படி உயர்வுப் பிரச்னை வந்தது. இரண்டையும் செய்ய முடியாது, ஏதாவது ஒன்றுதான் செய்ய முடியும்.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் வட்டி வீதத்தைப்பற்றிக் கூறும்போது பாங்க் வட்டி வீதம் 6 சத வீதமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். குறிப்பிடத்தகுந்த சில பெரிய ஷெட்யூல்ட் பாங்குகள் 7 சத வீதம், 7½ சத வீதம் கொடுப்பதாகப் பத்திரிகைகளில்கூட விளம்பரங்கள் சதா வந்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அரசாங்க ஊழியர்களின் சேம நிதியில் குவிந்திருக்கிற அந்தத் தொகைக்குப் பாங்கிலே கொடுக்கும் அந்த அளவுக்கு வட்டி கொடுக்க அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது என்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா ? ஏற்றுக் கொண்டு அதற்கு ஏற்ற வழிவகைகளை, நடைமுறைகளை மேற்கொள்ள உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாங்கில் போட்ட பணத்திற்கு வட்டிவீதம் வருகிறது என்று அதோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இதன் மூலம் பிரத்தியேக வசதிகள் இருக்கின்றன, நன்மைகள் இருக்கின்றன. மொத்தத்திலே இந்த பிராவிடெண்ட் ஃபண்ட் அக்கவுண்ட்டை வைத்து நடத்துவது, அதற்கு வேண்டிய ஆடிட், இதற்கெல்லாம் அரசாங்கத்திற்குச் செலவு ஆகிறது. இரண்டாவது பிராவிடெண்ட் ஃபண்டுக்குக் கொடுப்பது இருக்கிறதே அதற்கு இன்கம்-டாக்ஸ் ரிபேட் இருக்கிறது. அதன் பேரில் அட்வான்ஸ் ட்ரா பண்ணலாம், கடன் வாங்கலாம். அதெல்லாம் இல்லாமல் '**The Provident Fund money is also exempt from the Court attachment**'. இத்தனை வசதிகள் இருக்கின்றன. அதைச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உணர்வார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I know whether the Provident Fund Accounts or the accumulations of the Provident Fund which have not been transferred to this State in respect of the personnel transferred from the Andhra Pradesh, will carry the same rate of interest?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

நகராட்சிப் பள்ளிகள்

*451 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) நகராட்சிகள் தங்கள் வசமுள்ள பள்ளிக்கூடங்களைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கத்தின் மேலாதிக்கத்தின்கீழ் எடுத்துக்கொள்ளும்படி சில நகராட்சி மன்றங்கள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

(இ) இவ்விஷயம் பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை நகராட்சி மன்றங்கள் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கோரிக்கை அனுப்பினால்தான் எடுத்துக் கொள்ளுவார்களா ? அல்லது பொதுவாக அரசாங்கமே நேரடியாக எடுத்துக்கொள்ளலாம் என்ற உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாகவே நகர மன்றங்கள் நடத்தும் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் உத்தேசம் இல்லை. சில நகர மன்றங்கள், எங்களால் நடத்த முடியவில்லை, ஆகையால் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருக்கின்றன. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனையில் இருப்பதிலே அரசாங்கம் இரண்டு காரியங்கள் செய்யலாம். ஒன்று இவ்வாறே அரசாங்கம் நகர மன்றங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலே, பள்ளிகளின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளலாம், அல்லது, நகர மன்றங்களுக்கு, இந்தப் பள்ளிகளை நடத்துவதற்கு என்ன உதவி அளித்து வருகிறோமோ அதை அதிகரிக்கலாமா என்பது மற்றொன்று. இரண்டும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[Note:—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—REQUEST FOR HALF-HOUR DEBATE.

திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, 439-வது கேள்வியாக வந்த விவசாயிகளுக்கு போனஸ் கொடுக்கும் விஷயம் இருக்கிறதே அதன் மீது பல கருத்துக்கள் தெளிவுபடவும், முக்கியமான விஷயமாக இருப்பதாலே சுமார் $\frac{1}{2}$ மணி நேரம், கருத்துக்கள் தெரிவித்து அதன் மீது அமைச்சர் அவர்கள் முடிவு அல்லது பதில்களைச் சொல்ல அனுமதிப்பது பொருத்தமாகவும், தேவையாகவும், நன்மையாகவும் இருக்கும் என்று கருதுவதால் கனம் சபாநாயகர் அவர்கள் அதற்கு அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றிப் பல உப கேள்விகள் கேட்கப்பட்டுக் கூடிய வரையில் விளக்கம் கூறப்பட்டது. மேலும் இதைப் பற்றிப் பேசவேண்டுமானால், தனியாக இதற்கு $\frac{1}{2}$ மணி ஒதுக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். திங்கட்கிழமை உப-மான்யங்கள் வருகின்றன. அப்போது இதைப்பற்றிப் பேசலாம். எப்படியாவது உப-மான்யங்களோடு இது சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும். அப்போது இதற்கு விளக்கம் கூறலாம். இல்லை என்றால் செவ்வாய் கிழமை அப்ரோப்ரியேஷன் பில் வருகிறது. அந்த விவாதத்திலும் பேசலாம், அப்போது நான் விளக்கம் கூறுகிறேன்.

கனம் சபாநாயகர் : அரை மணி நேரம் வேண்டுமென்றால் இருக்கிற நேரத்திலிருந்து கட் பண்ணித்தானே கொடுக்கவேண்டும் ? அதோடு அரை மணியில் எத்தனை அங்கத்தினர்கள் பேச முடியும் ? ஆகையால் கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அப்போது பேசிக்கொள்ளலாம்.

III.—CALLING ATTENTION TO DISTRESS OF RYOTS IN TIRUTTANI TALUK.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance namely, the grave situation and the distress of the ryots in Tiruttani taluk, Chingleput district, arising out of the penal steps taken by the Revenue Authorities to recover from the ryots the loans advanced under the Loan-*cum*-Subsidy Well Scheme in the year 1948–51 though the ryots have completed the contruction of wells with the above loans and in some cases, the constructed wells have been destroyed owing to the heavy rains but the completion report have not been sent by the Revenue Authorities and therefore the recovery is sought to be made on the ground that wells have not been constructed at all and this has resulted in great hardship and distress to the ryots.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, there are 72 cases relating to the New Well Subsidy Scheme (old) in Tiruttani taluk and Pallipet sub-taluk which were transferred from Andhra Pradesh. Summary recovery orders had been passed in all these cases without exception prior to 31st March 1956 based on the reports of the then officers who inspected these cases. However, the Government of Andhra Pradesh extended the time limit till 31st March 1956 for the completion of these wells. These wells had therefore to be inspected again to verify whether they were completed. The Tahsildar, Tiruttani and the Deputy Tahsildar, Pallipet, inspected the wells. The present position of these 72 wells is as follows :—

(*a*) Number of cases in which the entire loan amount was collected	14
(*b*) Number of cases in which recovery in easy instalments was ordered	7
(*c*) Number of cases in which the entire loan amount has been written off	1
(*d*) Number of cases in which loan was converted into subsidy	7
(*e*) Number of cases in which summary recovery orders will stand	39
(*f*) Number of cases in which write off proposals are to be sent by the Collector	1
(*g*) Number of cases in which well were completed but are pending consideration regarding conversion of the loan as subsidy.	3
Total ...	72

[Sri V. Ramaiah] [26th March 1966

The present position regarding completion of the wells is as follows :—

(1) No wells have been sunk in 21 cases.

(2) Wells have been completed in 10 cases.

(3) Wells are incomplete in 41 cases.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

(1) DEMAND No. XXIII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

(2) DEMAND No. XXIX—PUBLIC WORKS—GRANTS-IN-AID.

THE HON. SRI S. M. A. MAJID : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,45,21,400 under Demand No. XXIII—Community Development Projects, etc.'

திரு. சோ. ஆறுமுகம் : கனம் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிப்பு மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள ஜீப் கார் வண்டியை அடிக்கடி ரெவின்யூ அதிகாரிகள் எடுத்துக்கொள்வதால் நிர்வாகம் பாதிக்கப்படுவதைப்பற்றி விவாதிக்க, என் பெயரில் உள்ள கீழ்க் கண்ட வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

'That the allotment of Rs. 6,45,21,400 under Demand No. XXIII—Community Development Projects, etc., be reduced by Rs. 100.'

9-30 a.m. THE HON. SRI S. M. A. MAJID : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,55,75,700 under Demand No. XXIX—Public Works—Grants-in-aid."

SRI K. A. MATHIALAGAN : Sir, I move the following cut-motion standing in my name.

"That the allotment of Rs. 2,55,75,700 under Demand No. XXIX—Public Works—Grants-in-aid be reduced by Rs. 100."

"to discuss the failure of the Government to give grants-in-aid and loans to the Corporation of Madras to implement its programmes relating to drinking water-supply, sewage, Buckingham canal and Education Scheme."

MR. SPEAKER : The Demands and the cut-motions are before the House for discussion.

திரு. மு. பொ. வடிவேல் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் தல நிர்வாக அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்ட மான்யக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சி உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

26th March 1966] [திரு. மு. பொ. வடிவேல்]

இந்த அறிக்கையில் 2,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பஞ்சாயத்திற்கு முழுநேரச் செயலரை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படி நியமனம் செய்யப்படும் பொழுது, அந்தச் செயலருக்கு என்ன வேலை, என்ன அதிகாரம், என்ன பொறுப்பு, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு என்ன அதிகாரம், என்ன பொறுப்பு என்பதைப்பற்றி வரையறுக்கப்பட்டு இந்த அறிக்கையிலே சொல்லப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் அதை விளக்கவேண்டு மென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெரும்பாலான பஞ்சாயத்துக்களுக்குக்கட்டடம் இல்லை. கட்டடம் இல்லாத காரணத்தினால் பஞ்சாயத்துத் தலைவர்கள் புஸ்தகங்களை வீட்டிற்குக் கொண்டுபோய் வைத்துக்கொள்ளுகிறார்கள். சில கிராமங்களில் பஞ்சா யத்துத் தலைவர்கள் வீட்டிலேயே மீட்டிங்குகள் கூட்டப்படுகின்றன. அதனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டங்களுக்கு வராமல் புகார் செய் கிறார்கள். கட்டடம் இல்லாத காரணத்தினால் ரேடியோவும் பஞ்சாயத்துத் தலைவர் வீட்டில்தான் இருக்கிறது. அதன் காரணமாகப் பல புகார்கள் வருகின்றன. பஞ்சாயத்து தலைவர்களைக் கேட்டால் கிராமத்தில் வேறு வீட்டு வசதி இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. உபரி நிதி வசதி உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் தம் வட்டாரத்தைச் சேர்ந்த நான்கு பஞ்சாயத்துக்களுக்கு அலுவலகக்கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 5,000 பத்தாண்டு வட்டியில்லாக் கடனாகக் கொடுத்துதவ அனுமதி யளிக்கும் திட்டம் ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் உபரி நிதி வசதியுள்ள பஞ்சாயத்து யூனியனே கிடையாது. அப்படியிருக்கும்பொழுது பஞ்சாயத்து களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு எப்படி ரூ. 5,000 ஒதுக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. 500-க்கும் குறைவாக உள்ள பஞ்சாயத்துக்களுக்குத்தான் கட்டடங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. நமது மாநிலத்தில் சுமார் 12,470 கிராமப் பஞ்சாயத்துக்களும் 423 நகரப் பஞ்சாயத்துக்களும் உள்ளன. 500-க்கும் குறைவான பஞ்சா யத்துக்களுக்குத் தான் கட்டடம் இருக்கிறது என்று சொன்னால், அவை பெரும்பாலும் நகரப் பஞ்சாயத்துக்களாக இருக்கக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. பல பஞ்சாயத்து யூனியன்கள் பாதிப் பணம் கடனாகவும், பாதி ரொக்கமாகவும் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறை வேற்றி அனுப்பியிருப்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எங்கள் பகுதியிலே ரூ. 3,000-க்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டுக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அதை மாற்றி அரசாங்கம் பாதி கடனாகவும், பாதி மான்யமாகவும் கொடுத்து உதவி செய்தால் இந்தக் கட்டட வேலைகளைக் கிராமங்களில் பூர்த்தி செய்ய முடியும். அதன் மூலம் பல பூசல்களை நிச்சயமாகத் தீர்க்க முடியும்.

அடுத்தபடியாக பஞ்சாயத்துக்களுக்குப் புறம்போக்கு நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே உழுதுகொண்டு ஆகுபை செய்துகொண்டிருக்கிற புறம்போக்கு நிலங்கள்தான் பஞ்சாயத்துக் களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவைகளைக் காலி செய்ய முடியவில்லை. ஐந்து ஏக்கர்களுக்குக் குறைவாக உள்ளவர் களுக்கு வேண்டுமானால் அந்த நிலங்களை ஜாரி செய்து கொடுத்து விடலாம். மீதியுள்ள நிலங்களைக் காலி செய்து பஞ்சாயத்துக்களிடம் கொடுத்தால்தான் உதவிகரமாக இருக்கும். காலி செய்வதற்கு வழி இல்லையா என்று கேட்கலாம். தீர்மானம் போட்டு தாசில் தாருக்கு அனுப்பி, சப்-கலெக்டர் மூலம் காலி செய் வதற்கு ஏற்பாடு செய்துகொள்ளலாம் என்று கூறக்கூடும். ஆனால் சட்டத்தில் இருக்கிறதே தவிர, நடைமுறையில் ஒன்றுமே செய்யப்படவில்லை. எத்தனையோ தீர்மானங்கள் போடப்பட்டு தாசில் தார்களுக்கு அனுப்பப்பட்டாலும்கூட, கிராமக் கர்ணம் ஆறும் நம்பர் நோட்டீஸ் கொடுத்து, அதிலிருந்து எவிக்ஷன் நோட்டீஸ் கொடுப்பதற்குள் பஞ்சாயத்துத் தலைவருடைய பீரியடே முடிந்து விடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. புறம்போக்கு நிலங்

களிலிருந்து ஆகுடை செய்துகொண்டிருப்பவர்களை வெளியேற்றி, காலி செய்துவிட்டுத்தான் அவற்றைப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைப்பதோடுகூட அவற்றிலிருந்து வரக்கூடிய வருமானத்தை மிட்–டே மீல்ஸ்-க்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், குத்தகைக்கு ஏலம் விடும் அதிகாரமும் பஞ்சாயத்துத் தலைவருக்கே இருக்க வேண்டும். பல பஞ்சாயத்துக் கள் 2 நயே பைசே மதிய உணவுத் திட்டத்திற்குக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, குத்தகைக்கு விடுதிலிருந்து வரக்கூடிய வருமானத்தைக்கொண்டு மதிய உணவுக்கு 2 நயே பைசே கொடுக்க உதவியாக இருக்கும்.

கிராமத் தெருக்கள் சர்வே செய்யப்படவில்லை. அதன் காரணமாகத் தெருக்களில் புதிய வீடுகள் கட்டப்படும்பொழுது, தெருக்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். தெருக்களை ஆக்கிரமித்துக் கொண்டவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து கேஸ் போட்டால், கேஸ் ஜெயிப்பது இல்லை. அதற்குக் காரணம் கிராமத் தெருக்கள் சர்வே செய்யப்படாததுதான். ஆகவே, உடனடியாகக் கிராமத் தெருக்களை சர்வே செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

2-லி பட்டாதார்களிடமிருந்து கிராம மணியக்காரர் வசூல் செய்து, கஜானுவில் கட்டி, பஞ்சாயத்து யூனியனில் அட்ஜஸ்ட் ஆகி, அந்தத் தொகை பிறகு பஞ்சாயத்துக்களுக்கு வரவேண்டும். நான்கு ஆண்டுக் காலம் ஆகியும் இந்த மாதிரி வசூலிக்கப்பட்ட தொகை அட்ஜஸ் ஆகி வந்தபாடில்லை. இதற்கு ஒரு சுருக்கமான வழியைப் பின்பற்றலாம். கிராமக் கர்ணமே வீட்டு வரியை வசூலிப்பதுபோல 2-லி பட்டாதார்களுக்கு நேரிடையாக டிமாண்டு நோட்டீஸ் கொடுத்து, அந்தப் பணத்தை வாங்கி நேரிடையாகப் பஞ்சாயத்து யூனியன் கஜானுவில் கட்டிவிடலாம். இந்த மாதிரி முறையைப் பின்பற்றினுல், சுற்றி வளைத்து வசூலிக்கக் கூடிய பிரச்சினை தீர்ந்து விடும்.

அடுத்தபடியாக, அபாயகரமான அருவருப்பான தொழில்கள் பற்றிய லைசென்சுகள், இந்த லைசென்சுக் கட்டணத்தை யார் வசூல் செய்வது என்பது பிரச்சினை. கிராமத்திலுள்ளவர்கள் அந்த லைசென்சுத் தொகையைக் கட்டவேண்டும். கமிஷனர் வசூல் செய்ய வேண்டும். பஞ்சாயத்து யூனியன் வசூல் செய்யவேண்டும். வசூல் செய்து பஞ்சாயத்தில் கட்டவேண்டும் என்பது முறை. நடைமுறையில் யார் பணத்தை வசூல் செய்வது? ஹெல்த் இன்ஸ்பெக்டரைக் கேட்டால் எனக்கு இந்த வேலை கிடையாது, யாராவது கட்டா விட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தான் அதிகாரம் இருக்கிறது என்று சொல்லுகிறார். இந்தத் தொழில்களுக்கான லைசென்சுத் தொகை கிராமப் பஞ்சாயத்துக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, ஹெல்த் இன்ஸ்பெக்டரே அதை வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவருக்கு ஒரு கடைநிலை ஊழியரை கொடுத்து அவரே வசூல் செய்யும்படியான நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு ரேடியோ ரிபேர், மராமத்துச் செய்ய வேண்டு மென்றால்கூட, ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் ரூ. 20 ஆணை யாளர் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து ரேடியோ ரிபேராக இருக்கிறது என்று எழுதினால் ரேடியோ சூபர்வைஸர் வருவதில்லை. ஆனால் பஞ்சாயத்துத் தலைவர்தான் ரேடியோப் பெட்டியை ரேடியோ சூபர்வைஸர் இருக்கும் இடத்திற்குத் தூக்கிக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது. மேலும் அவர்கள் சொல்லுகிற பணத்தை கொடுக்க வேண்டும் என்ற நிலைமையும் இருக்கிறது. ரேடியோ

சூபர்வைஸர் எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் மாதத்திற்கு ஒரு முறை வருகிற மாதிரி டூர் புரோகிராம் போட்டுக்கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இரண்டாவதாக, முதல் முதலில் கிராமச் சமுதாய நல செட்டுக்கள் யாரிடம் வழங்கப்பட்டது. யாரிடம் இருக்கிறது என்பதற்கு கணக்குத் தெரியவில்லை. மேல் அதிகாரிகளுக்கும், கலெக்டருக்கும் எழுதினால் யார் வைத்திருக்கிறார்கள் என்பது பற்றித் தகவல் கிடையாது. இந்த நிலையில் ரேடியோ செட்டுக்களுக்கு ரூ. 150 ஸப்ஸிடி கொடுப்பதா, மறுப்பதா என்று பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. பழைய சமுதாய நல செட்டுக்கள் யாரிடம் இருக்கிறது என்ற கணக்கு அரசாங்கத்திடம் இல்லை என்று சொன்னாலும், ரேடியோ கேட்டுக்கொண்டிருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 150 உடனடியாக மான்யம் கொடுத்து, செட்டுக்களை அமைப்பதற்கு வழி செய்யவேண்டும என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ரேடியோ சூபர்வைஸர்கள் டூர் புரோகிராம் போட்டுக்கொண்டு ஒவ்வொரு மாதமும் எல்லா இடங்களுக்கும் வந்து ரேடியோ செட்டுக்கள் சரியாக இயங்குகின்றனவா என்று பார்ப்ப தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திட்டத்தை நாம் இங்கே தீட்டுகிறோம். ஆனால் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகிறவர்கள் பஞ்சாயத்துத் தலைவர் கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள். அவர்கள் ஒவ்வொரு திட்டத்திற்கும் கிராமக் கர்ணத்தை அணுக வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. கிணறு வெட்ட வேண்டும், ரோடு போட வேண்டும், பள்ளிக்கூடம் அமைக்க வேண்டும் என்று எதைச் செய்தாலும் அவர்கள் கிராமக் கர்ணத்தை அணுக வேண்டியிருக்கிறது. ஸ்கெட்ச், பிளான் இவற்றிற்காக கிராமக் கர்ணத்தை அணுக வேண்டியிருக்கிறது. கிராமக் கர்ணங்கள் இவற் றைச் சரிவரக் கொடுப்பதில்லை. கலெக்டர், தாசில்தாருக்கு எழுதினாலும் எல்லோரும் ரெவின்யூ டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்களாக இருப்பதி னால், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதில்லை. இதனால் 1½ வருஷம் ஆகியும் திட்டம் செயல்படமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கிராம சேவக்குகளிடம் ஸ்கெட்ச், மாப், அடங்கல், சிட்டா, ஆகியவைகளின் காப்பி ஒன்றைக் கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும்.

பஞ்சாயத்து டெவலப்மெண்டு அலவன்ஸ் என்று கொடுக்கிறோம். அந்த அலவன்ஸ் பஞ்சாயத்து - யூனியன் வேலைகளைச் செய்வதற்காகக் கொடுக்கப்படுகிறது என்பது அந்த உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவ தில்லை. ஆகவே, அந்த உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதி கமிஷனரிடம் வந்து பஞ்சாயத்து டெவலப் மெண்டு அலவன்ஸை வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். இல்லாவிட்டால் மணியக்காரரை, வசூல் என்ன ஆயிற்று என்று கேட்டால் சரியாகப் பதில் சொல்லுவது இல்லை. ஆணையாளரிடமிருந்து அந்த அலவன்ஸை வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருந்தால், பணம் வருகிறது, நாம் அதற்கு வேலை செய்ய வேண்டும் என்று நினைத்து அவர்கள் வேலை செய்வார்கள், கேட்ட தகவலும் கொடுப்பார்கள். சரியாக வேலை செய்யாவிட்டால் கமிஷனர் அலவன்ஸைக் கொடுக்க மாட்டார் என்ற பயத்தில் அவர்கள் சரிவர வேலை செய்வார்கள். அப்பொழுதுதான் தீட்டப்படும் திட்டங்கள் நல்ல முறையில் செயல் படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தற்சமயம் " ஈ.ஓ.(ஈ.)" இருக்கிறார்கள். டெப்டி இன்ஸ்பெக்டர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்குள் மோதல் ஏற்படுகிறது. " ஈ.ஓ.ஈ. " என்பதைப் பழையபடி " எஸ்.ஈ.ஓ. " என்று டெஸிக்னேஷனை மாற்றிவிட

வேண்டும். டெப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸை யூனியனுடன் சேர்த்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் சுமுகமான உறவு நிலவும்.

அடுத்து, முக்கிய சேவிகைகள் பதவிகளே தேவையில்லை, அவற்றை ரத்து செய்து விடலாம். அதனால் அதிகமான பிரயோசனம் ஒன்றும் இல்லை. இராமநாதபுரம், கன்னியாகுமரி ஜில்லாக்களிலிருந்து, திருமணம் ஆகாத பெண்களை, நார்த் ஆற்காடு முதலிய ஜில்லாக்களிலே நியமித்தால், அவர்கள் எப்படி வாழமுடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அது அமைச்சருக்குத் தெரியாதது இல்லை. அவர்களை அந்த அந்த ஜில்லாக்களிலேயே, அவர்களுடைய சொந்த பிளாக்கு அன்றி வேறு பிளாக்குகளிலேயே நியமிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அவர்களைச் சொந்த ஊர்களிலிருந்து வெகுதூரத்தில் கொண்டுவந்து போடுவதால், திருமணம் ஆகாத பெண்கள் படும் சங்கடத்தை அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்துச் சட்டங்களெல்லாம் கிடைப்பது இல்லை. அரசாங்கத்திற்கு எழுதினாலும் கிடைப்பதில்லை, சர்க்கார் பிரிண்டிங் பிரஸ்ஸுக்கு எழுதினாலும் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட சட்டங்களை மலிவுப் பதிப்பாக வெளியிட்டு, எல்லாக் கடைகளிலும் மலிவாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். யார் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்கிற நிலைமையை உண்டாக்க வேண்டும். ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் மற்ற ஒரு மெம்பருக்கும் ஏதாவது தகராறு என்றால், அப்பொழுது உடனடியாகச் சட்டத்தைப் பார்க்க சட்ட புத்தகங்கள் கிடைப்பதில்லை. அரசாங்கமே ஏராளமாகப் புத்தகங்களாகப் போட்டுக் கடைகளில் இலகுவாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக கலெக்டர், அஸிஸ்டெண்ட் கலெக்டர் இன்ஸ்பெக்ஷன் போது, சேர்மனுடைய நோட்டு உண்டா என்று கேட்கும் வகையில் ஒரு "காலம்" போட்டு வைக்க வேண்டும். ஏன் பதில் கொடுக்கவில்லை யென்று கேட்கும் சந்தர்ப்பம் இருக்கும். மன்றத் தலைவருடைய குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்று ஆராய ஒரு சந்தர்ப்பம் இருக்கும்.

மாதர் சங்கங்களுக்கு டெய்லரிங் மெஷின்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அவையெல்லாம் துருப்பிடித்துப் போகின்றன. காரணம், பயிற்சி அளிக்க தையல் ஆசிரியர்கள் கிடையாது. ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் எங்களுக்குக் கிடையாது. ஆகவே தயவுசெய்து உடனடியாக ஆசிரியைகளை 4, 5 மாதர் சங்கங்களுக்கு ஒருவர் என்றாவது நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் மாறுதல்பற்றி, கனம் முதல் அமைச்சர் சொன்னதாக ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. "50 ஆசிரியர்களை ஒரே நாளில் மாற்றுவதா? ஆச்சரியமாக இருக்கிறது. அதைப்பற்றி நான் மறு பரிசீலனை செய்ய வேண்டும்" என்று சொன்னதாகச் செய்தி வந்தது. அதில் என்ன ஆச்சரியம் என்று தெரியவில்லை. அங்கே 250 அல்லது 300 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 50 பேர்களை மாற்றுவதில் என்ன ஆச்சரியம்? அதோடு மாறுதல் செய்வதை ஒரே நாளில்தான் செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு நாள் என்று செய்ய முடிவதில்லை. இதிலெல்லாம் கஷ்டம் இருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடங்களையெல்லாம் நிர்வகிக்கும் பொறுப்பை சப்-கலெக்டருக்கே கொடுத்து விட்டாலும் ஆட்சேபணையில்லை. கிராம ஆசிரியர்களுக்கு "இம்மீடியட் பனிஷ்மெண்ட்" இந்த மாதிரி மாறுதல்தான். சில சந்தர்ப்பங்களில் ஆசிரியருக்கும், பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் ஏதாவது சண்டை வந்துவிடுகிறது என்றால், உடனடியாக எதுவும் செய்ய முடிவதில்லை. சப்-கலெக்டருக்கு எழுதினால், அவர் நாலு "கொரிகள்" போட்டுத் திருப்பி விடுகிறார்கள். ஆகவே, மாற்றம் செய்தால்தான் நலமாக இருக்கும். பழைய பிரகாரமே, அந்த அதிகாரம் எங்களுக்கு இருந்தால்தான், ஆசிரியர்கள் பயந்துகொண்டு வேலை செய்வார்கள்.

கடைசியாக, இப்பொழுது கை-போரிங் செட்டு வாங்கலாம் என்றும், மார்ச் 31 தேதிக்குள், இரண்டு லட்ச ரூபாயையையும் செலவழித்தாக வேண்டும், ஆகவே, மிகுதியாக கை-போரிங் செட்டுகளை வாங்கவேண்டும் என்றும் உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அது சரியில்லை. அந்தப் பணம் வீண்தான். அதைப் பல முறை பார்த்தாகி விட்டது. ஆகவே, தயவு செய்து அதை பவர் போரிங் செட்டாகவே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதுபற்றிப் பல பஞ்சாயத்துக் கமிஷனர்கள் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அதை அவசியமாகக் கவனிக்க வேண்டும் என்று கூறி, என் உரையை முடிக்கிறேன்.

திரு. அ. ஆறுமுகம் : கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய சமுதாய நலத் துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து, வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலுள்ள கிராமங்களுக்கெல்லாம் பள்ளிக்கூடங்கள் கொடுத்திருக்கிறோம். இன்றைக்குப் பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமமே கிடையாது என்று சொல்ல வேண்டும். அதேபோல, எல்லாக் கிராமங்களுக்கும் ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்கின்ற திட்டத்தை நம்முடைய சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது. இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாகவே, நிறைவேற்றிக் கிராம மக்களுக்கு ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதை இந்தச் சந்தர்ப்பத்திலே வற்புறுத்த விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பஸ் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க நம்முடைய சர்க்கார் தயாராக இருக்கிறது. அதற்கான திட்டங்களையும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பொது மக்களுக்கு அத்தகைய நன்மை பயக்கும் காரியங்களை நிறைவேற்றத் தயாராக இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிவோம். ஆகையால் கிராமப் பகுதிகளில் உள்ள ரோடுகளையும் சீக்கிரமாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வட ஆற்காடு, ஜவ்வாது மலைமேல் உள்ள கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து, அந்தப் பகுதி மக்களுக்குப் போக்குவரத்து, கல்வி முதலிய வசதிகளை செவ்வையாகச் செய்து கொடுக்க, அந்தக் கிராமங்களைக் கொண்டு ஒரு தனி பிளாக்கு அமைத்து, அதை ட்ரைபல் பிளாக்காக அமைத்து, அந்த வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதையும் சர்க்கார் கவனித்து, அந்தப் பகுதி மக்களுக்கு எல்லாச் சலுகைகளும் கிடைக்கத்தக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தக் கிராமங்கள் பல தாலூகாக்களில் இருக்கின்றன. திருப்பத்தூர், செங்கம், போளூர், வெல்லூர் என்று நாலு தாலூகாக்களிலும் இருக்கின்றன. அந்தக் கிராமங்கள் மலைமேலே இருக்கின்றன. ஏதாவது அவர்களுக்குக் காரியம் ஆகவேண்டும் என்றால் அவர்கள் பல மைல்கள் நடந்து செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. அதையும் மனதில் கொள்ள வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு பிரைமரி ஹெல்த் செண்டர் கொடுக்க வேண்டும் என்கிற திட்டத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த வேலையை வெகு துரிதமாகச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். வட ஆற்காடு, செங்கம் தாலூகாவிலே என்னுடைய தொகுதியில், கண்டராம்பட்டி, செங்கம், புதுப்பள்ளம் ஆகிய இந்த மூன்று யூனியன்களிலும் பிரைமரி ஹெல்த் செண்டர்களே கிடையாது. ஆகையினால், அடுத்த ஆண்டிலாவது இந்த மூன்று இடங்களிலும் கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சர்க்காரின் கொள்கை, கிராமப்புறங்களிலெல்லாம், பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டு, அவைகளுக்கெல்லாம் கட்டடங்கள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும், அந்த இலாகாவினுடைய நோக்கம்

[திரு. அ. ஆறுமுகம்] [26th March 1966

அந்தப் பள்ளிக்கூடங்களைக் கலைக் கோயில்களாகச் செய்ய வேண்டும் என்று இருந்தாலும், அவை சீக்கிரத்தில் செய்யப்படுவதில்லை. அந்த நோக்கத்தைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால், பொதுப்பணத்தைக் கொண்டு, இந்தக் காரியத்திற்கு அதிகமாகச் செலவு செய்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கெல்லாம் அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டும் என்று சர்க்கார் திட்டமிட்டு இருக்கிறது. அந்த வகையில் என் தொகுதியில் கண்டராம்பட்டி, புதுப்பள்ளம், செங்கம் என்கிற யூனியன்களுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட, அந்தப் பகுதிக்கு அதிகாரிகள் அதிகமாக வருகிறார்கள் என்றால் அவர்கள் தங்குவதற்கு வீட்டு வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தாலூகா தலைநகரமாகிய செங்கத்திலாவது அதிகாரிகள் வசிக்கத் தக்க வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

கிராம மனித சக்தித் திட்டத்திலே, என் தொகுதியில் இருக்கும் மூன்று பஞ்சாயத்து யூனியன்களையும் எடுத்துக் கொண்டிருப்பதற்காகச் சர்க்காருக்கு என் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்கள் உத்தியோக மாற்றம்பற்றி நாங்கள் எல்லோரும் சென்ற கூட்டங்களில் எடுத்துச் சொன்னோம். அதன் காரணமாக, சர்க்கார் தங்களுடைய கொள்கையை மாற்றி, உத்தியோகஸ்தர்களை மாற்றும் வகையில் நல்லதொரு திட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். குறிப்பாக டெபுடி கலெக்டர் தலைமையில் கமிட்டி அமைத்திருக்கும் நிலைமையை ஆசிரியர்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள். இது அவர்களுக்கு மனநிம்மதியைக் கொடுத்திருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, என்னுடைய கருத்து ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது பல இலாக்காக்கள் இருக்கின்றன. அவற்றிலெல்லாம் அதிகமாக அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், செக்ரடேரியட் லெவலிலே, டைரக்டர் ஒருவர் இருக்கிறார். அவருக்குக்கீழ் இன்னும் அதிகமான ஜாயிண்ட் டைரக்டர்களை நியமித்து, அபிவிருத்தி வேலைகளைக் கவனிக்கவும், அங்கே இருக்கும் அதிகாரிகளைச் சிறந்த முறையில் மேற்பார்வையிட்டு நல்ல முறையில் பணி புரிவதற்கான ஆக்கம் தரும் வகையிலும் சர்க்கார் முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I would like to say a few words on the Demands which are before the House for discussion. The Panchayats, the Panchayat Unions and District Development Councils which have been constituted in the wake of democratic decentralisation are doing useful work and are contributing in a large way for development of rural areas in several aspects. Government are clarifying doubts that are being raised then and there and clarifications are being issued in a proper manner to implement the programme in a correct way. As far as the District Development Council is concerned I would only request you to consider whether secondary education could not be brought under the control of District Development Council, by providing statutory powers for the Standing Committee on Education. The question of taking over of the schools by Government for administrative and management purposes may be considered.

Regarding Panchayat Unions we have been taking measures to step up food production and for giving more incentives to agriculturists and in that line we have been giving grants and assistance

26th March 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

to ryots. Any work done must be related to the way in wihch we invest our amounts in capital expenditure. There has been certain recurring expenditure at the panchayat union level. The Compost Scheme, the Gramasahayak Scheme, Panchayat Plantation, etc., are thinks which have not produced satisfactory results. This aspect may be kindly reviewed and considered. We have appointed certain Compost Development Inspectors. I would submit that they are not necessary. Whether they are doing useful work at the villages shoud be first considered. Regarding Gramasahayak Scheme, it is only an adjustment and there have been certain irregularities in the vilages wher th manipulated figures are shown and larities in the villages where the manipulatd figures are shown and irregular supply of seeds, tc. This aspect may be well thought of and taluk marketing societies may be entrusted with the work of procuring and distributing seeds to the ryots.

Regarding administration at the Panchayat union level, elementary education has been entrusted to panchayat unions. There is lack of co-ordination between the Deputy Inspector of Schools and Extension Officer (Education). They are thinking in different directions. The Deputy Inspector of Schools and Panchayat Unions do not see eye to eye in administrative matters. Panchayat Unions also are not consulting the Deputy Inspectors of Schools in technical matters. I would suggest that Deputy Inspectors of Schools may be brought under the purview of Panchayat Unions and under their administrative control.

Regarding Gramasevaks, in the intensive Agricultural areas, five addional gramasevaks have been posted and one Extension Officer (Agriculture) has also been posted. I would request Government to see that these people make themselves available for giving proper guidance to the ryots in rural areas. Some Gramasevaks and Extension Officers (Agriculture) are there without knowing what their work is in rural areas.

I have been repetedly rtquesting the Government to provide certain norms in the matter of surcharge. The ryot is already paying heavily by way of additional wet assessment, etc. The Panchayat Union should not be allowed to levy surcharges indiscriminately. Government should provide certain norms in the matter. I would request the Government to consider these things and make these institutions useful. Thank you, Sir.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மதிப்புமிக்க சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மாநிலத்தில் ஒரு மாநகராட்சி, அறுபதுக்கும் மேற்பட்ட நகர மன்றங்கள், 12,470 பஞ்சாயத்துக்கள், 423 டவுன் பஞ்சாயத்துக்கள், 13 டவுன்ஷிப்புகள், 373 பஞ்சாயத்து யூனியன்கள் ஆகிய இந்த அமைப்புக்களைக் கொண்ட இந்தப் பெரிய நிர்வாகத்தைத் திறம்பட நிர்வகித்து வரும் நம்முடைய அமைச்சர் அவர்களையும் அதிகாரிகளையும் நான் இந்தச சமயத்தில் பாராட்டிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதன் முதலில் சென்னை மாநகராட்சியைப் பற்றி நான் இந்தச் சமயத்தில் சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னை மாநகராட்சியில் இன்று பல ஊழல்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக மதிப்புமிக்க, கட்சி சார்பற்ற, கனம் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் போன்ற பெரியவர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒரு நிலை சமீப காலத்தில், வர வர அதிகமாகிக்கொண்டு வருவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது சென்னை மாநகர மக்கள், சென்னை மாநகராட்சியினாலே தங்களுக்கு ஏதாவது உபயோகம் இருக்கிறதா, அல்லது, கொடுக்கும் வரிப் பணம் விரயமாகிக் கொண்டு வருகிறதா என்ற பீதி அடைந்திருக்கிறார்கள் என்ற ஒரு நிலையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு, அங்கே மூன்று கோடி ரூபாய் தான் மக்களிடமிருந்து வரியாக வாங்கப்பட்டு வந்தது. இப்பொழுது சுமார் 8½ கோடி ரூபாய் அளவிற்கு மக்களிடமிருந்து வரி வாங்குகிறார்கள், கார்ப்பரேஷன் நிர்வாகத்தினர். முன்பிருந்த வசதியை விட இப்பொழுது ஏதாவது அதிகமாக வசதி செய்து கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்று பெருவாரியான மக்கள், கட்சிச்சார்பற்றவர்கள் எல்லோரும் இன்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். பல ஊழல்கள் அங்கே நடைபெறுவதாகப் பத்திரிகைகள் வாயிலாகவும், மக்கள் மூலமாகவும் நாம் அறிந்திருக்கிறோம்.

அதையும் தவிர, நூற்றுக்கணக்கான லாரி டயர்கள் காணப்படவில்லை என்ற புகாரும் இன்று இருந்துகொண்டிருக்கிறது. கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான பூமிகளில், அனுமதி வாங்காமலேயே, திராவிடமுன்னேற்றக் கழகக் கவுன்சிலர்கள் பங்களாக்கள், கடைகள் போன்ற பல கட்டடங்கள் கட்டியிருப்பதாகவும் எனக்குச் செய்தி வந்திருக்கிறது. அதற்குப் பிறகு, சென்னை புகாரி ஹோட்டலுக்குக் காண்டிராக்டு விடுவதிலேகூட பெரிய ஊழல் நடந்து, அது பற்றியும் பத்திரிகையிலே செய்தி வந்திருந்தது. அது பற்றி நேரிலும் என்னிடம் வந்து பலர் கூறியிருக்கிறார்கள். இன்னும் வைக்கோல் போர் கூடக் காணமற்போகும் ஒரு சந்தர்ப்பம் இந்தக் கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் நாம் கண்ட கண்கூடான உண்மை. அதற்குப் பிறகு, வரி கொடுத்தவர்களுக்கே, மீண்டும் மீண்டும் வரியைக் கட்ட வேண்டும் என்று நோட்டீஸ்கள் போகின்றன. இவ்வாறு நோட்டீஸ்கள் போய், வரி கட்டாவிட்டால், "உங்கள் சொத்துக்கள் ஜப்தி செய்யப்படும்" என்று கூட மிரட்டும் வகையில் நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தவித அனுபவத்தை டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார்
11-00 அவர்களே மேல் சபையில் கூறியிருக்கிறார்கள். ஊழியர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்களா என்றால் கமிஷனர் போய்ப் பார்க்குமிடமெல்லாம் ஊழியர்கள் வேலை செய்யாமல், வேலைக்கு வராமலேயே ஆஜர் போட்டுக் கொள்கிற நிலை கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் இருக்கிறது. பொதுவாகச் சொன்னால் ரிப்பன் மாளிகை ஊழல் மன்னர்களின் ஊழல் மாளிகையாக ஆகிவிட்டது என்பதைக் கண்கூடாகக்காண்கிறோம். ஆகவே, கார்ப்பரேஷன் விவகாரத்தைக் கவனிப்பதற்கு பெரியவர்களைக்கொண்ட ஒரு கமிட்டி அமைத்து இப்போது கூறப்படுகிற புகார்களைப் பரிசீலனை செய்து, அவை உண்மையாக இருக்குமானால், அதையே களைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக்கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துத் தலைவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்துக்களில் இப்போது 30 இடங்களில் தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது. ஹைகோர்ட்டுகளில் இருந்து தடைகள் அகற்றப்பட்டுவிட்ட பஞ்சாயத்துக்களின் தேர்தல்களையாவது உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுவும், குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் குந்தா பிரதேசம் பஞ்சாயத்து இல்லாத காரணத்தினால் சங்கடமான நிலைமையில் இருக்கிறது. அதற்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவின் தலைமைப் பீடத்தையே ஒரு பெண்மணி அலங்கரிக்கிறார்கள். அத்தகைய நிலையில் பஞ்சாயத்துக்களில் பெண்களே வரும்படியாக கனம் அமைச்சர் அவர்கள் செய்தால்—ஆண்கள் வந்து வீணாக விவகாரம் செய்துகொண்டிருக்காத வகையில் அவை நல்ல முறையில் செயல்பட வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இந்த இயக்கத்தை—ஆண்கள் அரசியலில் ஈடுபட்டு குழப்பம் உண்டாக்கும் இடமாக வைக்காமல் பெண்களுக்கே கொடுத்துவிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

அந்த மாதிரி வாய்ப்பு அளிக்க சட்டத்தைத் திருத்தினாலும், சட்டமே கொண்டுவந்தாலும் அதை நான் மனப்பூர்வமாக ஆதரிப்பேன் என்பதாக கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து வரி வசூல் வேலையை பஞ்சாயத்து அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்திருக்கிறோம். அவர்கள் கிராம அதிகாரிகளைக் கொண்டு வசூல் செய்கிறார்கள். இதற்கென்று அவர்களுக்கு 7 ரூபாய் ஊதியமாகக் கொடுக்கிறார்கள். இது போதாது. அதை 25 ரூபாயாகவாவது உயர்த்த வேண்டும். பொதுவாக நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியில் ரோடுகள் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருக்கிறது. குறிப்பாக இத்தலாரில் இருந்து பெம்பட்டி போகும் ரோடு, பாலாடாவிலிருந்து கல்லக் கொரை போகும் ரோடு, ஒர்னளியிலிருந்து கன்னேரி போகும் ரோடு, காத்தாடி மட்டத்திலிருந்து மணியப்பட்டி போகும் ரோடு, மஞ்சூரிலிருந்து இண்ணக்கொரை போகும் ரோடு, அதிகாரப்பட்டியிருந்து பலகோலா போகும் ரோடு ஆகியவை மிகவும் சீர்கேடான நிலைமையில் இருப்பதால் மெட்டல் போட்டு, தார் போட்டுத் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சபாநாயகர் அவர்களே, தற்சமயம் விவாதத்தில் இருக்கக்கூடிய கிராம சமுதாய நலத் திட்டம் சம்பந்தமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

MR. SPEAKER: To-dav is the last day for the voting on Demands for Grants. According to the rule, we have to finish the voting on the Demands by 1 p.m. to-day.

திரு. ஆ. கு. சுப்பையா : பழைய கிராம சமுதாய அமைப்புக்களை எல்லாம் மாற்றி ஒரு புரட்சிகரமான திட்டத்தை மேற்கொண்டிருக்கக் கூடிய நேரத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகமான அதிகாரம் வழங்கக்கூடிய சட்டத்தை இந்த அரசாங்கம் வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றக் கூடிய அதிகாரிகள் கிராம மக்களோடு அடிக்கடி தொடர்பு வைத்துக் கொண்டு, தங்களுடைய அலுவல்களைச் செம்மையாகக் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. நாம் அவர்களுக்குப் பலவகையில் உற்சாகமும், ஊக்கமும் அளித்தால்தான் இது வெற்றிகரமாக இருக்கும். ஆகவே அவர்களுக்கு வேண்டிய வசதிகளை சம்பள உயர்வு அலவன்சு போன்றவற்றையும் நாம் அதிகமாக அளிக்க வேண்டும் என்பதாக இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் 6 கோடி ரூபாய்க்கு மேல் இந்தத் திட்டத்திற்காகச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் எப்படி ரெவின்யூ இலாகா கிராம கர்ணி

கர்கள் மூலமாக சகல வேலைகளையும் கவனித்து வருகிறதோ அதுபோல கிராம சேவக்குகளின் மூலமாக ஆங்காங்கே என்ன என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து காரியங்களைச் செய்ய வேண்டும். ஆலோசனை சொல்கின்ற சிறந்த ஊழியர்களாக கிராம சேவக்குகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய குறைகளைப் போக்கக்கூடிய முறையில் பதவி உயர்வு போன்ற சில சலுகைகளை அளிப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தலை எடுத்துக் கொண்டால் அதில் ஏற்படக்கூடிய சிக்கல்களை இந்த ஆண்டு பார்த்தோம். ஹைக்கோர்ட் வரையில் வந்து இன்னும் சில இடங்களில் தேர்தல் நடைபெறாத முறையில் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். இந்த முறைகளை மாற்றுவதற்கு வேண்டிய விதி முறைகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசாங்கம் ஆலோசனை செய்தாக வேண்டும். என் யோசனை என்னவென்றால் ஒரே நாளில் மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கிற அன்றைக்கே தலைவர்களையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற முறை வந்தால் இம்மாதிரி சிக்கல்கள் வர இடமிருக்காது. ஒரு வார்டிற்கு ஒருவர்தான் நிற்கவேண்டுமென்ற விதியை நிர்ணயித்தாக வேண்டும். ஒரு வார்டில் இரண்டு மெம்பர், மூன்று மெம்பர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. அம்மாதிரி இருக்கக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒவ்வொரு அலுவலகம் தனியாக இருக்க வேண்டும். இப்போது பஞ்சாயத்து அலுவலகம் என்று தனியாக இல்லாத காரணத்தினால் சில தலைவர்கள் தங்கள் வீடுகளிலேயே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சில கிராமங்களில் சாதி ஒழிந்து போய்விட்டது என்று சொல்வதற்கில்லை. ஹரிஜனங்கள் உறுப்பினர்களாக இருந்தால் அந்த வீட்டிற்குள் நுழையமாட்டாது வெளியில் உள்ள மரத்து நிழலில் தங்கவேண்டி யிருக்கிறது. இம்மாதிரி நிலை மாற வேண்டுமென்று சொன்னால் தனியாக ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு அலுவலகம் ஏற்படுத்தப்பட வேண்டும். அம்மாதிரி பஞ்சாயத்துகளே தங்களுக்கு கட்டடம் அமைத்துக்கொள்ள நிதி வசதி இல்லை. ஆகவே அரசாங்கம் தான் நிதி உதவி அளித்து பஞ்சாயத்துக்களுக்கு கட்டிட வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதாக இந்தச் சமயம் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுடைய மருத்துவ நிலையங்களை எடுத்துக்கொண்டால் போதுமான மருந்துகள் இல்லை. பல இடங்களில் டாக்டர்கள் இல்லை. கிராமங்களுக்கு டாக்டர்கள் வருவதற்கு மறுக்கிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு உண்மையிலேயே வைத்திய உதவி செய்யவேண்டுமென்றால்— பஞ்சாயத்து யூனியன்கள் நடத்துகிற மருத்துவ நிலையங்களுக்குப் போதுமான மருந்து சப்ளை செய்வதற்கும், டாக்டர்களை நியமிப்பதற்கும் உதவி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 2 லட்சம் ஒதுக்கி யிருக்கிறார்கள், வேளாண்மை, கால்நடை, மீன்வளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இந்த நிதி போதவே போதாது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அதிகமான தொகை ஒதுக்கியாக வேண்டும். இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு நடைபாதைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து, இணைப்புச் சாலைகள் போடுவது, கிணறுகள் வெட்டிக் கொடுப்பது ஆகியவற்றுக்கு ஒதுக்கப்படுகிற மானியமும் போதாது. அதையும் அதிகம் கொடுக்க வேண்டும்.

சாலை பராமரிப்புக்காக தலைக்கு 40 காசு என்று கொடுக்கப்படுகிறது. அந்த மாதிரி எடுத்துக் கொண்டு பார்த்தால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் போதாது. அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலையை கணக்கில் எடுத்துக்கொண்டு, சாலைகளில் நீளத்திற்கும்

வேலைக்கும் தகுந்தபடி கொடுக்க வேண்டும். சாலையின் நீளம் எவ்வளவு. அதற்கு ரோடு போட எவ்வளவு செலவாகும் என்று கணக்கிட்டு அந்த அடிப்படையில் மானியம் கொடுக்க வேண்டுமே தவிர நபர் ஒன்றுக்கு 40 காசு என்ற அடிப்படையில் கொடுப்பது தஞ்சை மாவட்டத்திற்குப் பொருந்தாது என்று சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

கிராம மனித சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டத்தை எனது தொகுதி தலைஞாயிறில் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. தஞ்சை மாவட்டத்தில் விவசாய காலத்தைத் தவிர மற்ற காலங்களில் மனித சக்தி வீணாக விரயமாகிறது. அதுபோன்ற விவசாய ஜில்லாக்களில் எல்லா இடத்திலும் மனித சக்தியைப் பயன்படுத்தக்கூடிய திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக எடுத்துக் கொண்டு ஏதோ சம்பிரதாய பூர்வமாக நிறைவேற்றுவதில் பயன் இல்லை, தஞ்சை மாவட்டத்தில் உள்ள மக்கள் விவசாய காலங்கள் போக, மீதமுள்ள காலங்களில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்த மாவட்டம் முழுவதிலும் இந்த மனித சக்தியைப் பயன் படுத்திக் கொள்ளும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. அ. அப்பாவு தேவர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து வரவேற்று சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். சமுதாய நல திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்வார்கள். யாரும் மறுக்க முடியாது. எங்கள் ஜில்லாவில் அநேகமாக எல்லாக் கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு நடந்துகொண்டு வருகின்றன. ரோடுகள், சிறிய ரோடுகள் எல்லாம் போடப்பட்டு வருகின்றன. இன்னும் இவைகள் இல்லாத கிராமங்களிலும் கவனித்து ரோடுகள் போடுவதற்கு ஆவன செய்யவேண்டுமாய் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். குடி தண்ணீர் வசதிகள், முக்கால்வாசி கிராமங்கள் வரையில் நல்ல முறையில் இயங்கிக்கொண்டு வருகிறது. இன்னும் கால்வாசி கிராமங்களிலும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கிராமங்களிலுள்ள குளங்களை மராமத்துச் செய்து நல்ல முறையில் வைத்துக் கொண்டால் அவைகளையும் குடி தண்ணீர் முதலியவைகளுக்குப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் தோட்டக் கலை, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு இவைகள் எல்லாம் சில கிராமங்களில் தான் செய்யப்பட்டு வருகின்றன. பாக்கியுள்ள கிராமங்களிலும் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குழந்தை, மாதர் நலம் ஏற்படுத்தப்பட்டு நடந்து கொண்டு வருகிறது. அவைகளை சின்ன கிராமங்களுக்கு இன்னும் கொண்டுவராமல் இருக்கிறார்கள். அந்த கிராமங்களுக்கும் இவைகளை ஏற்படுத்தி, தையல் சொல்லி கொடுப்பது, சிறு குடிசைத் தொழில்கள் முதலியவைகளையும் சொல்லிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் தொகுதியில், (சாலிய மங்கலம்) தொகுதியில், ஒவ்வொரு பிளாக்கிலும் தீவிர விவசாயத் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக நல்ல விதைகளை கொடுத்தும், காலத்தில் உரங்களை கொடுத்தும் இன்னும் ஒவ்வொரு பிளாக்கிற்கும் 1, 2 டிராக்டர்களைக் கொடுத்து ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் கொடுத்துதவினால் மிக சௌகரியமாக இருக்கும். இதைப்பற்றி சென்ற வருஷமும் நான் இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். சில கிராமங்களில் கம்போஸ்டு உரக் குழிகள் போடப்பட்டு வருகின்றன. அதே மாதிரி எல்லாக் கிராமங்களிலும் போடும்படி செய்தால் அவை உபயோகமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக, என்னுடைய சாலிய

மங்கலம் தொகுதியில் ஹரிஜனங்கள் வசிக்கும் இடங்களிலே ரோடு வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், விளக்கு வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலும், சிறிய கிராமங்களிலும் இவற்றையெல்லாம் ஏற்படுத்துவதற்கு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கிராமப் பகுதிகளில் இரண்டு வருஷங்களுக்கு முன்பாக தென்னைச் சாகுபடி செய்திருக்கிறார்கள். அவைகளில் கால்வாசி கூட இப்பொழுது இல்லை. அவைகளைக் கவனித்து வேறு நல்ல மரங்கள் ஆக, பலன் தரக்கூடிய மரங்களாக நடும்படி செய்ய வேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்தபடியாக, சாலியமங்கலம் தொகுதியில் மூன்று கிராமப் பஞ்சாயத்துகளுக்கு ஒரு குமாஸ்தா வீதம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதனால் தான் வேலைகள் மிக டிலேயாகிவிடுகிறது. அதற்காக கிராமக் கர்ணங்கள் வந்து அவர்களுக்கு ஒத்தாசை செய்கிறார்கள். அதனால் கிராமங்களுக்கு ஒவ்வொரு கிராமந்தோறும் தனித்தனி குமாஸ்தாவாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராம சேவக்குகள் சில கிராமங்களில் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள். சில கிராமங்களில் நன்றாக வேலை செய்யவில்லை. அதையும் கவனித்து அதற்கு ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். பிளாக் ஒன்றுக்கு ஒரு கால்நடை ஆஸ்பத்திரி இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி இன்னும் சில பிளாக்குகளில் கால்நடை ஆஸ்பத்திரி இல்லாமல் இருக்கிறது. அவைகளையும் ஏற்படுத்திதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை ஆஸ்பத்திரியில் டூரிங் வெட்டர்னரி அஸிஸ்டெண்ட் சர்ஜன் போட்டு, அவர்களை 10 கிராமங்களுக்கு ஒருவராக வைத்து, ஒவ்வொரு கிராமமாகப் போய்ப் பார்க்கும்படி செய்தால் அது சௌகரியமாக இருக்குமென்று சொல்லிக் கொண்டு எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியக் கோரிகையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியா தேசம் முழுவதையும், அதாவது எல்லாப் பகுதிகளையும் பஞ்சாயத்தின் கீழ் இணைத்து, பஞ்சாயத்தின் மூலமாக மக்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையிலே நாம் சட்டங்களைச் செய்து நாம் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம். ஆனால் ஏற்கனவே கீழிருந்து சிபாரிசு செய்யப்பட்ட பஞ்சாயத்துக்களைப் பிரித்து, அது கோர்ட்டுக்குப் போய் பிறகு கவர்ன்மெண்ட் டெஸிஷனுக்கே விட்ட பிறகும்கூட பஞ்சாயத்துகளிலே தேர்தல் நடத்தாமல் இருக்கிறார்கள் என்றால் அது வேடிக்கையாகவும் விந்தையாகவும் இருக்கிறது. கச்சை கட்டு, கச்சை கட்டு, என்று சொல்வார்கள் அந்த மாதிரி நான் கச்சை கட்டிக்கூட சொல்லிவிட்டேன். அப்படியிருந்தும்கூட இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் அது மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. பஞ்சாயத்துக்களிலே எவ்வளவு பணம் விரயமாகிறது. விவசாயத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறோம். அதையெல்லாம் எப்படிச் செலவு செய்கிறார்கள் என்று பார்த்தால் அதிலே பலவகைக் கோணல்கள் இருக்கின்றன. இன்னும் தேர்தல் நடைபெறாத பஞ்சாயத்துக்கள் 30 அல்லது 40 இருக்கலாம். அங்கே யெல்லாம் இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை யென்றால் எந்த அரசியல் அங்கே புகுந்து விளையாடுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. கச்சை கட்டியைப் பொறுத்த அளவில் 10 ஆயிரம் 12 ஆயிரம் மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். 7, 8 ஊர்கள் இருக்கின்றன. வருஷத்திற்கு 12,000 ரூபாய் வரை வருவாய் வருகிறது. நகரப் பஞ்சாயத்தாக ஆக்கலாம் என்று கேட்டிருக்கிறார்கள். முன்பே இதைப்பற்றி அமைச்சர் அவர்களும் மற்ற இலாகா அதிகாரிகளும் பரிசீலனை செய்து நகரப்

பஞ்சாயத்தாக ஆக்கியிருந்தால் மக்கள் அதை வரவேற்றிருப்பார்கள். இதில் இந்த அமைச்சர், அந்த அமைச்சர் என்று எல்லாம் அரசியலைப் புகுத்தாமல் தேர்தல் நடத்துவதற்கு உத்திரவு போட்டால் அது சாலச் சிறந்ததாக இருக்குமென்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராமச் சாலைகளுக்கு பணத்தை ஒதுக்குகிறோம். உண்மையிலே அது போதாது. தலைக்கு 40 நயா பைசா என்றால் என்னைப் பொறுத்த வரையில் நானும் பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். அது போதாது. அதை 70 பைசாவாக உயர்த்தினால் நல்லது. ஏ.பி.ஸி.டி. என்று பிரித்திருக்கிறோம். இப்படிப் பிரித்திருந்தும் கூட ஒரு சேர்மனுக்கு யாராவது ஓட்டுப் போடாமல் இருப்பார்களானால் அந்தப் பகுதியைக் கவனிக்காத சூழ்நிலை இருந்து வருகிறது. இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி இவைகளுக்காக 6·50 லட்ச ரூபாய் ஹரிஜன நல மானியத் துறையிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் நல்ல முறையில் செலவழிக்கப்படுவது இல்லை. எல்லாப் பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி, சாலை வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இன்னும் பல ஊர்களில் அவை யெல்லாம் சரியாக அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அதைப்பற்றியும் தீவிரமாகப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டால் இந்தக் குறையையும் தீர்த்து வைத்ததாக ஆகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி பல முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறேன். குடிதண்ணீர்க் கிணறுகள் வெட்டி, ஒரு ஊருக்கு ஓவர் ஹெட் டாங்க் கட்டிக் கொடுத்து விட்டு பக்கத்தில் இருக்கக் கூடிய ஊர்களை விட்டு விடுவதால் அந்த மக்களிடம் ஓட்டு வாங்கி வரும் எங்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. இதை ஒரு இணைப்புத் திட்டமாகப் போட்டு 3 மைல், 5 மைல் ரேடியஸில் உள்ள பகுதிகளை இணைத்து ஒரு ஓவர் ஹெட் டாங்க் கட்டி வசதி செய்து கொடுத்தால் எல்லோருக்கும் பாதுகாப்பாக இருக்கும்.

கிராமப் பகுதிகளில் மாதர் சங்கம் என்று வைத்திருக்கிறார்கள். அது எப்படி கிராமங்களில் வேலை செய்கிறது ? என் தங்கை கூட மாதர் சங்கத் தலைவி. என் வீட்டில் கூட ஒரு தையல் மிஷின் சும்மாவே கிடக்கிறது. இப்படி மாதர் சங்கத் தலைவி வீட்டில் 250 ரூபாய் போட்டு வாங்கக்கூடிய மிஷினை சும்மா வைத்துக் கொண்டிருப்பது என்றால் அது "மியர் நாஷனல் வேஸ்ட்". இதைப் பரிசீலனை செய்து நாலைந்து மாதர் சங்கத்திற்கு ஒரு ஆசிரியை என்றாவது போட்டு நல்ல முறையில் பயன்பட ஏற்பாடு செய்யவேண்டும்.

பட்டிக்காட்டில் தையல் சொல்லிக் கொடுப்பதில் அவ்வளவு பிரயோசனம் கூட இல்லை. பால் பண்ணைத் திட்டம், கோழி வளர்ப்புத் திட்டம் போன்றவற்றுக்கு வசதி செய்து கொடுத்தால் அவர்கள் பொருளாதார துறையில் முன்னுக்கு வரமுடியும். இது பற்றியும் பரிசீலனை செய்யவேண்டும்.

விவசாயத்தை எடுத்துக் கொண்டால் இன்று நாம் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி விட்டோம். திட்டங்களைப் பொறுத்தவரை 30 ஏக்கர், 50 ஏக்கர் அளவுக்கு இருக்கும் இடங்களில் ஒரு பெரிய காமன் வெல்—கம்யூனிடி வெல் வெட்டி பம்ப் செட் வைத்துக் கொடுத்தால் நீர்ப்பாசன வசதி கிடைக்க முடியும். பஞ்சாயத்தின் மூலமாக அதற்கு வாட்டர் செஸ் வேண்டுமென்றாலும் வசூல் செய்து கொள்ளலாம். இதைப் பற்றியும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யூனியன் தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள் . . . . (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. ர. சம்பங்கி :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கிராம நல தலை நிர்வாகத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. ர. சம்பங்கி] [26th March 1966

இன்றைய தினம் நகராட்சி மன்றங்களுக்காக இயற்றப்பட்டிருக்கும் சட்டம் 1920-ம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாகும். அதை வைத்துக்கொண்டுதான் இன்றையதினம் நகராட்சி மன்றத்திலே வேலை செய்ய வேண்டிய நிலைமையிலே இருக்கிறார்கள். ஏறத்தாழ 47 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை வைத்துக் கொண்டு நகராட்சியை நடத்திச் செல்ல வேண்டியிருக்கிறது. அதிலே எவ்வளவு சீர்கேடுகள் இருக்கின்றன என்பதை இதற்கு முன்னால் பல முறை எடுத்துச் சொல்லியும் அவை களையப்படவில்லை. அதை வைத்துக் கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற நகர மன்ற உறுப்பினர்கள் எதையும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறார்கள். உயர் மட்டத்திலே இருக்கிற மானேஜர் அல்லது அக்கவுண்டண்டை மாற்ற வேண்டுமென்றால் மெமோராண்டத்தை நகர மன்றத்திற்கு அனுப்பி நகர மன்றத்திலிருந்து அதைப் பற்றிய ப்ரொபோசலைக் கேட்கிறார்கள். அந்த உயர்தர அதிகாரியை மாற்றக்கூடாது. அங்கேயேதான் இருக்க வேண்டுமென்று நகர மன்றத்தில் அந்த ப்ரோபோசலை வைத்து ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பினாலும் அரசாங்கம் அவரை மாற்றி உத்தரவை அனுப்புகிறது. பின் எதற்காக நகர மன்றத்திலிருந்து ப்ரோபோசலைக் கேட்கவேண்டும்? நகர மன்றம் ஏகமனதாக தீர்மானம் போட்டு அவர் அந்த நகர மன்றத்திலேயேதான் பணி புரிய வேண்டும், அவரை மாற்றக் கூடாது என்று அனுப்பினால் அதைச் சர்க்கார் நிராகரித்து விடுகிறது என்றால் அந்த அளவுக்குத் தான் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படுகிறதா என்று கேட்க விரும்புகிறேன். நகர மன்றத்திற்கு வரக் கூடிய உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்தான் என்று கூறவிரும்புகிறேன்.

நகராட்சி மன்றத்தில் பணி புரிகிற ஆணையர் மீது மன்றத் தலைவராக இருப்பவர் ஆறு மாதத்திற்கு ஒரு முறை கான்பிடென்ஷியல் ரிப்போர்ட் எழுதி அனுப்ப வேண்டுமென்று இருக்கிறது. அந்த ஆணையரைப் பற்றி நல்ல படியாக எழுதி அனுப்பினால் அதைப் பற்றி ஆணையருக்கு ஒன்றும் கூற வேண்டியதில்லை. ஆனால் அந்த அதிகாரி ஜாதி வெறி பிடித்தவராக இருக்கிறார் அல்லது வேறு பல ஊழல்களிலே ஈடுபட்டிருக்கிறார் என்ற காரணத்தால் அதைப்பற்றி எழுதினால் அதை அந்த அதிகாரி தெரிந்து கொள்கிற ஒரு வாய்ப்பு இன்றையதினம் சட்டத்திலே இருக்கிறது. அதைத் தெரிந்து கொண்ட பிறகு அந்த அதிகாரிக்கும் தலைவருக்கும் இடையே இணக்கம் இல்லாமல் தகராறுகள் ஏற்படுகின்றன. அதற்குப் பிறகு அந்த ஆணையரை மாற்ற வேண்டுமென்று நகர மன்றத்திலே தீர்மானம் போட்டு அனுப்பினால் அதற்குக் கூட சர்க்கார் செவி சாய்ப்பதில்லை. இந்த முறையிலே நகர மன்றத் தலைவருக்கும் ஆணையருக்கும் இடையே சுமூகமான நிலை இல்லாமல் நகராட்சி மன்றங்களில் நல்ல காரியங்களை எப்படிச் செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நகராட்சி மன்றங்களைப் பொறுத்து நல்லதொரு சட்டதிட்டம் எதுவும் இல்லை. திருப்பி திருப்பிப் பார்த்தால் முனிசிபல் மான்யுவல், எம்.டி.எம். ஆக்ட், சி.டி. நாயுடு எழுதிய விளக்க உரைகள் இவைதான் இருக்கின்றன.

கடைசியாக, சட்ட மன்ற கூட்டுக்கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உரையாற்றியபோது, 'இந்தக் கூட்டத் தொடரில் ஒருசில மசோதாக்கள் மட்டுமே மன்றத்தின் விவாதத்திற்கு வருகின்றன. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்து செய்து அதற்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்றை இயற்றுவதற்குரிய விரிவான மசோதா ஒன்று இந்தக் கூட்டத் தொடரில் மன்ற ஆலோசனைக்கு வர இருக்கிறது' என்று கூறினார்கள். ஏன் இதுவரை அந்த மசோதா வரவில்லை? இந்தச் சட்டமன்றம் முடிவதற்குள் இன்றும், 3, 4 நாட்களுக்குள்ளாகவாவது கொண்டு வரப்படுமா? அப்படி கொண்டு வரப்படுமானால் அதிலே இந்தக் குறைபாடுகள் எல்லாம் கொண்டு வருவதற்கு வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கி. இரா. சம்பந்தம் : கனம் சபாநாயகர் அவர்களே, சமுதாய வளர்ச்சிக் கோரிக்கையின் நிதி இணைப்பு வெளியீட்டிலே, மருந்தகங்களுக்கு பராமரிப்பு மானியத்திலே 1965–66-ல் திட்ட மதிப்பீடு 5·50

26th March 1966] [திரு. கி. இரா. சம்பந்தம்]

லட்சம் என்றும், திருத்த மதிப்பீடு 4·00 லட்சம் என்றும் 1966–67-ல் திட்ட மதிப்பீடு 4·00 லட்சம் என்றும் கொடுத்திருக்கிறார்கள், அதேபோல் பேறுகால நிலயங்களுக்காகப் பராமரிப்பு மானியங்களுக்கு 1965–66-ல் திட்ட மதிப்பீடு 12·57 லட்சம் என்றும், திருத்த மதிப்பீடு 14·95 லட்சம் என்றும், 1966–67 திட்ட மதிப்பீடு 11·11 லட்சம் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற ஜனத்தொகையைப் பார்க்கும்போது மக்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதிகளைச் செய்யவேண்டுமென்ற நிலையில் மருந்தகங்களுக்காகச் செலவு செய்வது வர வரக் குறைந்து வந்திருக்கிறதே தவிர, அதிகப்படவில்லை. அதனால் தான் பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளில் மருந்தைக் கொடுக்காமல் சீட்டை எழுதிக் கொடுக்கிறார்கள். வேளாண்மைத் திட்டம் என்ற அடிப்படையில் பார்த்தால் 1965–66-ல் 87·91 லட்சம்; 1966–67-ல் 89·80 லட்சம். இந்தக் குறைந்த அளவிலே வேளாண்மைக்காகச் செலவு செய்தால் எப்படி உணவுப் பற்றாக்குறை நாட்டிலே தீரும்? எந்த அபிவிருத்தித் திட்டத்திலும் விவசாயிகளுக்கு அதிகமான அக்கறை காட்டப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தின் அளவைப் பார்த்தால் முன்னேற்றத்திற்கு அறிகுறியாக இல்லை.

அடுத்தபடியாக, மீன்வளத் திட்டம் என்று பெருவாரியாக செலவிடப் 10-30 a.m.
படுகிறது. மீன் தொட்டிகள் கட்டுவது, மீன் குஞ்சுகளை விடுவது என்று இம்மாதிரி அதிகமாகச் செலவிடப்படுகிறது. மீன் தொட்டிகள் எல்லாம் வெறுமனே இருக்கின்றன. 15,000, 20,000 என்று தொட்டிகள் கட்டிவிட்டு ஒருவிதத்திலும் மீன் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி எடுத்துக் கொள்ள முடியவில்லை. தமிழ் நாட்டில் எங்கு பார்த்தாலும் குளங்கள் இருக்கின்றன தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், அங்கு காவேரி வழியாக அணைக்கட்டிலிருந்து அதிகப்படியான மீன்கள் வாய்க்கால்கள்வழியாக தானாகவே வந்துக் கொண்டிருக்கின்றன. அவைதான் குளங்களில் வந்து நிரம்பி மீன் தானாகவே உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கவேண்டாம் என்று பழமொழி சொல்லுவார்கள். அதுபோல் அவை தானாகவே பெருகிக் கொண்டு வருகிறது. அதற்காக இவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து விட்டு, மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கும், அவர்களுக்கு ரோடு வசதி செய்து கொடுப்பதற்கும், சமுத்திர கரைகளில் உள்ள மீனவர்கள் மீனைப் பிடித்து நகரங்களுக்குக் கொண்டு வந்து விற்பதற்கு வசதி செய்து கொடுப்பதற்கும், எந்தவிதமான முயற்சியும் எடுக்கமுடியாதிருக்கிறது. அந்த மக்களுக்கு சமுத்திரத்தில் மிதக்கும் கட்டுமரங்களை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. அவர்களுக்கு வேண்டிய வலைகளை வாங்கிக் கொடுக்கலாம். இப்போது புதுமாதிரியான வலை சொஸைட்டி மூலம் வாங்கி விற்கிறார்கள். அஃவற்றை மீனவர்களுக்கு இனாமாகக் கொடுக்கலாம். இதுபோன்ற திட்டங்களை வகுத்து மீனவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். அவர்களுக்கு விசைப்படகுகள் கொடுக்கப்படவேண்டும்.

பழத்தோட்டம் என்று சொல்லி ஊரிலுள்ள புறம்போக்கு நிலங்களில் எல்லாம் ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவுசெய்து பம்ப் செட்ஸ் எல்லாம் வைத்து கடைசியில் பழத்தோட்டங்களை நெருங்கிப் பார்த்தால் அது புல் வெளியாக இருக்கிறதே தவிர அங்கிருந்து ஈல்ட் வந்திருக்கிறதா என்று பார்த்தால் புள்ளிவிவரங்களில் ஈல்ட் இருக்குமே தவிர பழத்தோட்டங்களில் அப்படி ஒன்றுமேயில்லை. க்ரீன் மன்யூருக்காகவும் நிலம் கொடுக்கப்படுகிறது. வேலியை போட்டு விட்டு மந்திரிகள் வந்து திறக்கிறார்கள். பின்னர் அங்கு பார்த்தால், வேலியும் இல்லை, காவற்காரனும் இல்லை. ஆகவே பொதுமக்களின் வரிப் பணத்தை பாழாக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அதிகாரிகள் எல்லாம் இரட்டிப்பாகவே இருந்து வருகிறார்கள். இந்த அதிகாரியிடமிருந்து அந்த அதிகாரிக்குப் போவது, அந்த அதிகாரியிடமிருந்து இந்த அதிகாரிக்கு வருவது என்று இப்படித்

தான் பேப்பர்கள் போய் வருகிறதே தவிர சமுதாய வளர்ச்சித் திட்டம் என்றால் உடனடியாக ஸ்தலத்திலேயே, கிராமத்திலேயே செய்யவேண்டிய சேவைகளை செய்யவேண்டுமென்றுதான் இந்த சமுதாய வளர்ச்சித்திட்டமே ஏற்பட்டது. (மணி அடிக்கப்பட்டது). இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அங்கு டெப்டி இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். சோஷியல் எஜுக்கேஷனல் அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர் ஒன்று சொன்னால் அவர் ஒன்று சொல்லுகிறார். டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அங்கீகாரம் செய்வதில்லை. எல்லாம் முன்னுக்குப்பின் முரணாக இருந்து கொண்டிருக்கிறதே தவிர அடித்தளத்தில் வளர்ச்சி ஒன்றுமேயில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோழிப் பண்ணையைப் பார்த்தால் பெரிய ஒரு பங்களா மாதிரி இருக்கிறது. கோழிகள் இருக்க ஒரு கொட்டகை போட்டால் போதும். அதற்குக் கீழே மண்ணைப் பரப்பி கோழிகளை வளர்த்தால் போதும். விவசாயிகளிடம் சென்று எப்படி கோழி வளர்ப்பது என்று அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டிய தேவை இல்லை. இனமாகவே போந்தா கோழிகளை அவர்களுக்கு கொடுத்தாலே போதும். அவர்கள் அதை அபிவிருத்தி செய்து கொள்வார்கள்.

***திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தின் அங்கீகாரத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கும் சமுதாய நலத்துறை மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அதிக நேரம் இல்லை. நம் நாட்டின் அரசியல் சாஸனத்தை நாம் வகுக்கும்போது நமக்கு சுதந்திரம் கிடைத்தவுடனே அதிகாரங்கள் பரவலாக மக்கள் கைக்கு மாற்றப்பட வேண்டும். பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை அனுசரித்துதான் சென்னை மாநிலத்தில் முதன் முதலாக சட்டங்களை இயற்றும்போதே முதலாவது சட்டமாக அரசியல் சாஸனத்தில் குறிப்பிட்டுள்ளபடி பஞ்சாயத்து அபிவிருத்திக்கான சமுதாயநல வளர்ச்சிக்கான திட்டங்களை அனுசரித்து சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பாரதம், ஓராயிரம் ஆண்டுகளாக ஜனநாயகம் என்றால் என்ன என்பதை அறியாத பரந்த நாடு. பல்லாண்டுகளாக பல நாட்டவர்கள் வந்து ஆண்டு நம்மை அடிமைப் படுத்தியிருந்த நாடு. ஆகவே ஜனநாயகம் என்ற வாசனையையே அறியாத நாட்டு மக்களை புதியதொரு பாணியில், புதியதொரு சமுதாயத்தை நடத்துவதற்கான வகையில் திருப்பி எல்லோரும் இந்த பக்குவத்தை பெற்று இந்தத் துறையில் சரியாக கிராம மக்களிடம் பணியாற்றுவது என்பது மிகமிக கஷ்டமான காரியம். அந்தமாதிரியான வளர்ச்சி இங்கு பல்லாண்டுகளுக்கு முன்னமேயே ஏற்பட்டிருக்கவில்லை. ஆகவே அதற்கான திட்டங்களை வகுத்து, கிராமங்களில் சமுதாய வளர்ச்சித்திட்டத்தில் அக்கறை உள்ளவர்களை தேர்ந்தெடுத்து அவர்களை இந்தத் திட்டத்தை நடத்திக் கொண்டு வருவதற்கான பொறுப்பை அவர்களிடம் கொடுத்து நல்லபடி அதை நடத்துவது என்றால் அது சிரமமான காரியம். இதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. நாம் நினைத்த அளவில் வளர்ச்சி காண வில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்வோம். ஆனால் அதை பெரிதாக கருதுவது மட்டும் கூடாது. கிராம மக்களுக்கு நல்ல பயிற்சியை அளிக்க வேண்டும். இந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அப்படி இதை ஏற்று நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை கிராம மக்களுக்குக் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் இந்த வகையில் அனுபவம் பெறமுடியாது. அத்தகைய அனுபவத்தைப் பெற்ற பின்னர் அவர்களுக்கு இந்த அதிகாரத்தை நாம் கொடுப்பது என்றால் பிரத்தியட்ச அனுபவம் அவர்களுக்கு ஏற்படாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே சிரமமாக இருந்தாலும், நினைத்த அளவில் போதிய வளர்ச்சியைக் காண முடியவில்லை என்றாலும் இந்தப் பணிகளை நிறைவேற்றும்வகையில் சிலசில சந்தர்ப்பங்களில் கிராம மக்களிடையே ஒற்றுமைக்குறைவு ஏற்படுகிறது என்றாலும் இந்தத் துறையில் அவர்கள் அனுபவம் பெற்று பணியாற்றுவதற்கு வசதி செய்து கொடுப்பது மிகமிக அவசியம். அந்த வகையில் அனுபவம் பெற்று வருகிறார்கள். தவறுகள் செய்து செய்து

திருத்திக் கொள்ளும் மனப்பான்மை உள்ளவர்கள் நம் மக்கள். சந்தர்ப்பம் அளித்து, தவறு செய்து பின்னர் அதைத் திருத்திக் கொள்ள வாய்ப்பளித்தாலொழிய திருத்திக் கொள்ளுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படாது. ஆகவே ஒருசில ஆண்டுகளில் நாம் லாப நஷ்டத்தை கணிக்க முற்படவேண்டாம்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்று இந்த மான்யத்தின்மீது சர்க்கார் தரப்பிலிருந்தும், எதிர்த்தரப்பிலிருந்தும் நடக்கும் விவாதம் நல்லதொரு சூழ்நிலையில் இவற்றை எல்லாம் மனதில் கொண்டு பேசிவருவதை கண்டு நான் மிகமிக சந்தோஷப்படுகிறேன். இந்தத் திட்டம் நல்லவகையில்தான் நிறைவேற்றுப்பட்டு வருகிறது. நம்பிக்கை அளிப்பதாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. கிராம மக்கள் இந்தப் பொறுப்புகளை அதிகமாக ஏற்றுக் கொண்டு அதற்கான பக்குவத்தைப் பெற்று எதிர்காலத்தில் நாம் எதிர்ப்பார்க்கிற விதத்தில் நல்லமுறையில் பணியாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். விவசாயத் துறையில் முன்னேற்றம் இல்லையென்று சொல்லப்படுகிறது. எந்த முறையில் விவசாயம் செய்து கொண்டு போகிறார்களோ அதே முறையிலிருந்து திருந்திய விவசாய முறைக்கு விவசாயிகளைத் திருப்புவதே கஷ்டமான காரியம். முன்னால் சொன்னதுபோல் தான் இந்த விஷயத்திலும். விவசாயத்துறையில் அரசாங்கம் எவ்வளவோ திட்டங்களை வகுத்தாலும், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றிற்கான வழிவகைகளை வகுத்திருந்தாலும் அதை ஏற்று செயல்படுத்து கிறவர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். கிராமங்களில் பொறுக்கு விதைகள் தயாரிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அதற்கான வழிவகைகள் எல்லாம் வகுக்கப்படுகின்றன. பொறுக்கு விதைகளை தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள விவசாயிகள் நல்லவிதைகளை தயாரித்து கொடுப்பது நம் பொறுப்பு என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் ஏற்படவேண்டும். இப்படி ஒவ்வொருவரும் தம் தம் பொறுப்புகளை உணர்ந்து பணி புரியும் மனப்பக்குவம் ஏற்படவேண்டும். இன்னும் சில ஆண்டுகளில் ஏற்பட்டுவிடும். பல்லாண்டுகளானாலும் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும். அவர்கள் தான் இதை செய்தாக வேண்டும் என்ற வகையில்போனால்தான் இதை நன்கு நிறைவேற்ற முடியும். இப்போதிருப்பதை மேலும் விருத்திசெய்ய, எந்தவிதமான அரசியல் கண்ணோட்டம் அல்லது வேறு நோக்கத்தோடு இல்லாமல் விவசாயப் பிரதேசங்களில், கிராமப் பிரதேசங்களில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் இவற்றின் பணிகள் சீராக நடப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்து கொண்டு என் வார்த்தைகளைக் முடித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. எல்லம நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, கிராம வளர்ச்சி, சமுதாய நல திட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில் மக்களுடைய வாழ்க்கைத்தரமானது உயரவேண்டும். கிராம ஆட்சியானது நன்கு நடைபெறவேண்டும். அதற்கேற்ற முறையில் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. தேர்தல்கள் என்பது காலத்தைப் பொறுத்த அளவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் எல்லாவற்றுக்கும் தேர்தல் என்று ஏற்படுத்தவேண்டும். ஊராட்சி மன்றத் தேர்தல், ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தல், பஞ்சாயத்து யூனியன் தேர்தல், பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல், சட்டமன்ற தேர்தல், பாராளுமன்ற தேர்தல் இவைகள் எல்லாம் ஒரே காலத்தில் நடத்துவது நலமாக இருக்கும். இந்த நாட்டிலுள்ள தேர்தல் வேலைகளை எல்லாம் மேற்கொள்வதற்கும் சிறப்பாகவும் இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்று இதைப்பற்றி பரிசீலிக்கவேண்டும் என்று உங்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் 800 அல்லது 1,000 ஜனத்தொகை இருந்தால் பஞ்சாயத்து என்று வைக்கப்படுகிறது. ஒருசில இடங்களில் இது போதுமானதாக இல்லாமல் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி

[திரு. வெ. எல்லம நாயுடு] [26th March 1966

குறைந்தது 3,000 அளவுக்கு ஜனத்தொகை இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் பல சிறிய கிராமங்களை ஒன்று சேர்த்தால் நன்றாக இருக்கும். இப்போதுள்ள நிலைமையில் அந்த பஞ்சாயத்திலுள்ள வருமானத்தைக்கொண்டு அங்கிருக்கின்ற அதிகாரிக்கு சம்பளம் கொடுப்பதற்கே போதுமானதாக இல்லாமல் இருக்கிறது. ஆகவே, பெரிய அளவில் இருந்தால் வருமானத்தை சரி செய்து கொள்ள முடியும் மற்ற பொருளாதார வசதிகளையும் பெருக்கிக்கொள்ள முடியும். இல்லையென்றால் செலவு செய்வதற்கே பணம் இல்லாமல் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் இதை மாற்றி அமைக்கவேண்டும் என்று உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் காலங்களில் நடைபெறுகின்ற விஷயங்களைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எடுத்துச்சொன்னார்கள். பெண்களுக்கு பஞ்சாயத்துக்களில் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இப்போது நியமன உறுப்பினராக பெண் அங்கத்தினர் ஒருவர் இருக்கலாம் என்று இருந்தாலும், இதை இன்னும் அதிகப் படுத்தவேண்டும். குறைந்தது இருவராவது பெண் உறுப்பினர்களாக இருப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். பெண் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தாலும், குறைந்தது இருவராவது ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இருக்கவேண்டும். அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களுக்கு கட்டடம் கட்டிக்கொடுக்கின்ற விஷயத்தில், ஆண்டு ஒன்றுக்கு, பஞ்சாயத்து யூனியனிலிருந்து நான்கு பஞ்சாயத்துக்களுக்கு கட்டடம் கட்டிக்கொள்வதற்கு கடன் அளித்து வருகிறார்கள். அதுவும் யூனியனில் பணம் இருந்தால் கடன் கொடுக்கப்படும் என்றிருக்கிறது. இதை மாற்றி, பஞ்சாயத்து யூனியனில் பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு ஆண்டுக்கு கட்டடம் கட்டிக்கொள்வதற்கு என்று நான்கு பஞ்சாயத்துக்களுக்கு 5,000 ரூபாய் வட்டியில்லா கடனாகக் கொடுக்கவேண்டும். அதற்காக வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி வசதி செய்து கொடுப்பதிலும் சில மாற்றங்கள் செய்ய வேண்டும். சாலைகளை பராமரிப்பதற்கு கொடுக்கப்படும் மான்யத்தைப் பொறுத்தவரையில், தலைக்கு 40 பைசா என்ற அளவில் கொடுப்பது எந்த அளவிலும் போதுமானதாக இல்லை. இருக்கின்ற ரோடுகளின் நீளத்தை அடிப்படையாக பார்த்து அரசாங்கம் மான்யம் கொடுக்க வேண்டும். அதோடு பஸ் போக்குவரத்து உள்ள ரோடுகளை எல்லாம் அரசாங்க பெருவழித்துறையினர் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தளவில், ஆசிரியர்களை நியமிக்கின்ற அதிகாரத்தை குறைத்து விட்டதாக பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சொல்லுகிறார்கள். 10 ஆசிரியர்கள், 15 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற இடத்தில் ஆறு பேர்கள், ஏழு பேர்கள் தான் வேலை செய்து வருகிறார்கள். இந்த நிலையை மாற்றி அவ்வப்போது தேவைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்கின்ற அதிகாரத்தை யூனியன் தலைவர்களுக்கு வழங்கவேண்டும். அதற்கேற்ற முறையில் அதிகாரங்களை மாற்றி கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவுக்காக கிராமங்களில் இருக்கின்ற புறம்போக்கு நிலங்களில் உணவுப்பயிர்களை உற்பத்தி செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் பஞ்சாயத்துக்களுக்கு புறம்போக்கு நிலங்கள் மாற்றப்பட்டாலும், அதை எடுத்துக்கொள்வதற்கான உரிமை இன்னும் கொடுக்கப்படவில்லை. ஒரு பக்கத்தில் புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தம் என்று சொல்லுகின்றோம். இன்னொரு பக்கத்தில் புறம்போக்கு நிலங்களில் யாரோ இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நிலங்களை பெறுவதற்கு ரெவின்யூ இலாகாவுக்குத்தான் அதிகாரம் உண்டு. இதற்காக தாசில்தாரிடத்திலோ

26th March 1966] [திரு. வெ. எல்லம நாயுடு]

அல்லது ஆர். டி. ஓ. அவர்களிடத்திலோ அணுகவேண்டியிருக்கிறது. இதன் காரணமாக பஞ்சாயத்துக்கள் புறம்போக்கு நிலங்கள் விஷயத்தில் எந்தவிதமான செயல்களையும் நடத்த முடியவில்லை. இதை மாற்றி எல்லா புறம்போக்கு நிலங்களையும் பஞ்சாயத்துக்கே சொந்தம், பஞ்சாயத்துக்களினுடைய சம்மதம் இல்லாமல் யாருக்கும் கொடுக்கக் கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டால், என்னுடைய தொகுதியில் தொண்டமுத்தூர் என்ற இடத்தில் சென்ற ஆண்டிலேயே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பிக்கப்போவதாக சொல்லியிருந்தார்கள். உடனடியாக அதை துவக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து இவற்றை எல்லாம் பஞ்சாயத்துக்கள் தான் கவனிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த அளவில், குடிதண்ணீர் வழங்கும் விஷயத்தில் நான்கைந்து கிராமங்கள் ஒன்று சேர்ந்து, மேல்நிலைதொட்டிகள் அமைத்து குடி தண்ணீர் வசதி பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பட்டது).

திரு. முனு. ஆதி : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கைகளின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால் சுருக்கமாக ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகிறேன். வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டத்தை அடுத்த புளியமங்கலம் பஞ்சாயத்தில் பஞ்சாயத்து தலைவர் 1959-ம் ஆண்டு தேர்தெடுக்கப்பட்டார். தேர்தெடுக்கப்பட்ட 1959-ம் ஆண்டிலிருந்து 1964-வரை எந்த விதமான கூட்டத்தையும் அவர் கூட்டவில்லை. இவ்விதம் பஞ்சாயத்து தலைவராக இருந்துகொண்டு பணத்தையெல்லாம் கையாடி பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருக்கின்றார். இவருக்கு முன்னால் இருந்த தலைவர் இவரிடம் 3,000 ரூபாய் அளவுக்கு நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் கொடுத்திருந்தார். அதை யாருக்கும் தெரியாமலும், பஞ்சாயத்துக் கூட்டத்தை போடாமலும் எந்த அதிகாரிகளுக்கும் தெரிவிக்காமலும் மாற்றி தன் சொந்தத்திற்காக செலவழித்திருக்கின்றார். சுமார் ஐந்து ஆண்டுகள் வீட்டுவரிகளை எல்லாம் வசூல் செய்து 5,000 ரூபாய் வரை எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் எடுத்துக்கொண்டு விட்டார்கள். எடுத்துக்கொண்டு விட்டார் என்று சொல்லும்போது, இதை எந்த அடிப்படையில் செய்தார் என்பது இன்னும் புரியவில்லை. அதோடு அங்கு பஞ்சாயத்து ஆபீஸிலிருந்து ரேடியோ, நாற்காலி, மேஜை இவைகள் எல்லாவற்றையும் விற்று தன் சொந்தத்திற்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும். இவ்விதமாக நடந்திருக்கின்ற காரணத்தால், அங்குள்ள உறுப்பினர்கள், பொதுமக்கள் இவர்கள் சேர்ந்து சர்க்கார் அதிகாரிகளுக்கு பல முறை 1962-லிருந்து சொல்லிக்கொண்டு வருகிறார்கள். விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்கள். இருந்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அங்கிருக்கின்ற ஆர். டி. ஓ. அவர்கள் இதைப் பற்றி "அண்டர் கன்ஸிடரேஷன்" என்று மட்டும் சொல்லியிருக்கிறாரே தவிர எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. கலெக்டருக்கும் இது சம்பந்தமாகப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் வந்த பின்பும் இதுவரை எந்தவிதமான கணக்கும் ஒப்படைக்கவில்லை. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு

வந்தவர் வெறும் நாற்பது பக்க நோட்டுப் புத்தகத்தில் எழுதி, பஞ்சாயத்துக் கூட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார். பஞ்சாயத்து சம்பந்தமான கணக்குகளையும், பைல்களையும் கொளுத்திவிட்டார் என்று போலீஸுக்கு புகார் செய்ததின் பேரில், சாம்பலை எடுத்து கெமிகல் சோதனைக்கு அனுப்பியதில், கொளுத்தப்பட்டவை எல்லாம் நியூஸ் பேப்பர்களும், சாதாரண வெள்ளைக் காகிதங்களும் தான் என்று சொல்லிவிட்டார்கள் . . . .

கனம் சபாநாயகர் : கெமிகல் சோதனைக்கு யார் அனுப்பினது?

திரு. முனு. ஆதி : போலீஸார் தான் அனுப்பினார்கள்.

கனம் சபாநாயகர் : அப்படியானால் போலீசார் பிராஸிக்யூஷன் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? இப்போது வழக்கு இருந்து கொண்டிருக்கிறதா ?

திரு. முனு. ஆதி : பிராஸிக்யூஷன் செய்வதற்கு ஆர். டி. ஓ. விடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இன்னும் கொடுக்கப்படவில்லை. இது சம்பந்தமான பைல்கள் எல்லாம் என்னிடமிருக்கின்றன. வேண்டு மென்றால் என்னால் நிரூபித்துக்காட்ட முடியும். இதுவரை கலெக்டர் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறார்கள். அந்த பஞ்சாயத்து தலைவரோ கிராமத்தை விட்டுவிட்டு இப்போது அரக்கோணத்திற்கு வந்து குடியேறிவிட்டார். ஏதோ பயிற்சி காலத்தில் தெரியாமல் செய்திருந்தால் கூட நம்மால் புரிந்து கொள்ள முடியும். இது அப்படியல்ல. வேண்டும் என்றே தெரிந்து செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி ஊர் மக்கள், பல முறை அதிகாரிகளிடம் எடுத்துச்சொல்லியும் மனுக்கள் அனுப்பியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்படவில்லை என்றால், இது எதைக்காட்டுகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை . . .(குறுக்கீடு), அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது எனக்குத் தெரியாது. புளியமங்கலம் பஞ்சாயத்து தலைவர் என்பது தான் இதில் பிரச்னை. இதன் மீது அங்குள்ள பொது மக்கள் சேர்ந்து அனுப்பிய மனுக்களைப் பார்த்தால், 3—3—1962-ல் ஒரு மனு அனுப்பி யிருக்கிறார்கள், 27—4—1962-ல் ஒரு மனு அனுப்பி ருக்கிறார்கள், 27—8—1962-ல் ஒரு மனு கொடுத்தி 16—1—1963-ல் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள், ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள், 7—2—1963-ல் மனு கொடுத்திருக்கிறார்கள், 28—8—1963-ல் ஒரு திருக்கிறார்கள், 21—4—1964-ல் ஒரு மனு கொடுத் 27—8—1965-ல் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள், 21—4—1965-ல் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள், ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். 22—3—1966-ல் இவ்வளவு மனுக்கள் கொடுத்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆர்.டி.ஓ. வைக் கேட்டால் 'கலெக்டரிடமிருந்து அனுமதி கேட்டிருக்கிறேன் பிராஸிக்யூஷன் செய்வதற்கு' என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் ஆயிரக்கணக்கான அளவில் பணத்தை மோசடி செய்தவர்மீது, கையாடல் செய்தவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் இதுவரை அதிகாரிகளுக்கு தைரியம் வரவில்லை என்று தெரியவில்லை. யார் இதற்கு, உடந்தையாக இருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. அமைச்சர் அவர்களைத் தவிர மற்ற எல்லா அதிகாரிகளிடமும் இதைப்பற்றி பல முறை சொல்லியாகிவிட்டது. இப்போதும், அங்குள்ள புதிய பஞ்சாயத்து தலைவர் வெறும் நாற்பது பக்கம் நோட்டில் எழுதிக்கொண்டு தான் பஞ்சாயத்துக் கூட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பழைய விவகாரங்களைப் பார்ப்பதற்கு அங்கு எந்தவிதமான ரிக்கார்டுகளும் இல்லை. இந்த நிலை இருந்து கொண்டிருந்தால், நிச்சயமாக மக்களுக்கு சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தில் நல்ல அபிப்பிராயம் ஏற்படாது. பஞ்சாயத்துக்களை நல்ல முறையில் நடத்தவேண்டும் என்பதற்காக நாம் பல கோடி ரூபாய்களை ஒதுக்குகின்றோம்.

அவர்கள் நல்ல முறையில் சேவை செய்வதின் மூலமாக நாட்டில் நல்ல ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசாங்கம் இதற்காக நிறைய செலவழிக்கிறது. இப்படி எங்கேயோ இருக்கிற ஒரு பஞ்சாயத்தில் ஏற்படுகிற தவறு காரணமாக எல்லோருக்கும் பஞ்சாயத்துக்களைப் பற்றி தவறான அபிப்பிராயம் இருக்கிறது. எந்தத் தலைவர் வந்தாலும் " என்னத்தை நடத்துகிறார், கிடைத்ததை வாங்கிக்கொண்டு போகப் போகிறார் " என்ற அளவுக்குத் தப்பு அபிப்பிராயம் இருக்கிறது. பகிரங்கமாக, ஊர் மக்கள் எல்லோரையும் கூட்டி, எந்த அரசியல் கட்சி என்று இதிலே கட்சிப் பிரச்னையே இல்லை, இதைப்பற்றி விசாரிக்கவேண்டும். இதை கனம் அமைச்சர் அவர்களிடம் தரவில்லையே தவிர, அத்தனை அதிகாரிகளுக்கும் தந்திருக்கிறார்கள். இதைப் பற்றி அங்கே மிகவும் கொந்தளிப்பாக இருக்கிறது. இந்தப் பிரச்னை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று என்னுடைய தொகுதியில் (மணி அடிக்கப்பட்டது.)

***திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தச் சபையின் முன் கொண்டு வந்திருக்கும் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதைச் சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்று சொல்லுவதற்குப் பதில் சமுதாய தகிடுத்தத் திட்டம் என்று கூடக் கூறலாம். ஏனென்றால் இன்றைக்கு எதற்கு எடுத்தாலும் மக்கள் பங்குத் தொகை தரவேண்டும், எந்தவேலை செய்வதென்றாலும் மக்கள் பங்குத் தொகை தரவேண்டும். கிராமத்தை எடுத்துக் கொண்டால் அங்கே கூழுக்கே திண்டாட்டம் அப்படித் திண்டாடுகிறவனிடம் 'பால் கொடு' என்று கேட்பது போல இருக்கிறது. இந்தத் திட்ட மானது பணக்காரர்களுக்குத் தான் பயன்படுகிறது என்ற குற்றச் சாட்டைக் கூற விரும்புகிறேன். இது ஏழைகளுக்குப் பயன்படவில்லை. ஏழைகளுக்குப் பயன்படவேண்டுமென்றால், இந்தப் பங்குத் தொகை இல்லாமல் அரசாங்கம் எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் இந்தத் திட்டம் பிரயோசனம் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்திலே ஏதாவது உருப்படியான தொழில் ஏற்பட்டிருக்கிறதா என்பதை நாம் எல்லோரும் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த திட்டத்தில் கோடி கோடியாக செலவு செய்தாலும்கூட, கிராமப் புறங்களில் உருப்படியான தொழில், மக்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் வாழ வழி செய்யக்கூடிய முறையில் ஒரு தொழிலும் ஏற்படவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏதாவது உருப்படியாக தொழில் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தைப் பற்றி மாபெரும் தலைவர் காந்தி அடிகள் ராம ராஜ்யம் ஏற்படுவதற்கு இது ஒரு வழியாக இருக்கும் என்று சொன்னார்கள். இது ராம ராஜ்யமா என்பதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதிகாரம் எல்லாம் மக்கள் கையில் இல்லை. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அதிகாரங்களெல்லாம் அதிகாரிகள் கையில் தான் இருக்கின்றன. ஏற்கனவே இருந்த ஜில்லா போர்டைக் கலைத்து விட்டு, இந்த திட்டத்தை மக்கள் எல்லோரும் பரவலாக அதிகாரத்தைச் செலுத்துவார்கள் என்ற நிலையில் கொண்டுவந்தோம். ஆனால் ஜில்லா போர்டின்போது இருந்த அதிகாரம் கூட பறிக்கப்பட்டு விட்டது. அந்த அதிகாரங்கள் கூட இந்த பஞ்சாயத்து யூனியனுக்குக் கிடையாது. எதை எடுத்தாலும் அதிகாரிகளை நாடவேண்டும். குதிரை ஒருவன் கையிலும், கடிவாளம்

மற்றொருவன் கையிலும் இருந்தால் எப்படி சவாரி செய்யலாமோ
அந்த முறையில்தான் இந்தத் திட்டம் இருக்கிறது என்று கூறிக்
கொள்ளுகிறேன்.

எந்த அதிகாரத்தை எடுத்துக்கொண்டாலும், பஞ்சாயத்து யூனியனைப்
பொறுத்த வரையில் சேர்மனுக எதையும் செய்ய முடியாது;
கவுன்ஸிலாக எதையும் செய்ய முடியாது. அந்த மாதிரி ஒரு
நிலைமை இருக்கிறது. எதற்கும் ஆர். டி. ஓ.-வை அணுக வேண்டும்;
கலெக்டரை அணுக வேண்டும். உபாத்தியாயர்களை மாற்றுவதிலே
ஒரு புதிய ஏற்பாடு செய்திருக்கிருர்கள். உபாத்தியாயர்களை ஆ.டி.ஓ.
கவுன்சில் தான் மாற்றவேண்டுமென்று செய்திருக்கிருர்கள். அப்படி
என்ருல் பஞ்சாயத்து யூனியன் பேரில் நம்பிக்கை இல்லையா?
பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பேரில் நம்பிக்கை இல்லையா?
என்று கேட்கிறேன். எதற்காக இந்த மாதிரி செய்திருக்கிருர்கள்?
எங்களைப் போன்ற எதிர்க் கட்சிகள் இருக்கும் இடத்தில் அதிகாரிகளை
வைத்து அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்று தான் இந்த
மாதிரி செய்திருக்கிருர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். இந்த
மாதிரி ஏற்பாட்டைச் செய்த பிறகு பள்ளிகளெல்லாம் ஒழுங்காக
நடப்பதில்லை. கமிஷனரிடத்திலேயோ, சேர்மனிடத்திலேயோ, சொல்லு
வதற்குப் பணிந்து நடக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கிழக்கு
இராமநாதபுரம் கூட்டு மன்றத்திலே கூட ஏகமனதாக இதை மாற்ற
வேண்டுமென்று டெவலப்மெண்ட் கமிஷனரிடத்தில் கூறினோம்.
அவர்களும் பார்போம் என்று சொன்ஞர்கள். இது வரையில்
ஒன்றும் நடக்கவில்லை. உடனடியாக இதை மாற்றிக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பஞ்சாயத்து யூனியனிலே ஏராளமாக எக்ஸ்டென்ஷன்
ஆஃபீஸர்களும் மற்ற அதிகாரிகளும் இருக்கிருர்கள். நான் ஒரு
பஞ்சாயத்து யூனியன் சேர்மனுகவும் இருக்கிறேன் என்று கூறிக்
கொள்ளுகிறேன். இதெல்லாம் தேவையில்லை. அவர்கள் சும்மா
இருக்கிருர்களேதவிர, அவர்களுக்கு எந்த வேலையும் இல்லை.
ஜபர்தஸ்துக்காக உட்கார்ந்துகொண்டு பேப்பரைப் படித்துக்கொண்டிருக்
கிருர்களேதவிர அவர்களுக்கு வேலையே இல்லை. ஏன் என்ருல்,
எதற்கு எடுத்தாலும் பங்குத் தொகை. பங்குத் தொகை கொடுக்க
மக்கள் தயாராக இருக்கிருர்களா என்ருல், இல்லை. உட்கார்ந்து
கொண்டு ரிப்போர்ட் எழுதுகிருர்கள். நேற்று உட்கார்ந்து எழுதி
யிருப்பார்கள் ; ஏன் என்ருல் மார்ச் கிராண்ட் பாருங்கள் ? உட்கார்ந்து
எதையோ எழுதி புள்ளிவிவரம் கொடுத்து விடுவார்கள். மார்ச்
கிராண்ட் வரும் போது புள்ளிவிவரம் கொடுக்கும் டிபார்ட்மெண்ட்டாக
இருக்கிறதேதவிர வேறு இல்லை. ஆனல் இன்னொரு காரியத்திற்குப்
பயன்படுகிருர்கள். அமைச்சர்கள் வரும்போது டூர் ப்ரொக்ராம் தயார்
பண்ண, மாலைகள் தயார் பண்ண, போகும் இடம் எல்லாம்
வரவேற்க பிரயோசனமாக இருக்கிருர்கள். இந்த அதிகாரிகள்
எல்லாம் தேவையில்லை. ரெகுலர் ஆஃபீஸர்களே செய்யலாம்.
பஞ்சாயத்து யூனியனையே கலைத்து விடலாம். எக்ஸ்டென்ஷன் ஆஃபீஸரை
எல்லாம் எடுத்து விடலாம். மக்கள் பங்குத்தொகை இல்லாமலேயே
அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை கொண்டு வேலை செய்யலாம்.
நான் அனுபவப்பட்டு சொல்லுகிறேன். இந்த மன்றத்திலேகூட 15
பேர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இருக்கிருர்கள் என்று
சொல்லப்படுகிறது. அவர்கள் எல்லோரையும் அழைத்து ஒரு கூட்டம்
கூட்டுங்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து விவாதிக்கட்டும். இதனல்
பிரயோசனம் இல்லை என்று ஏற்பட்டால் இந்த டிபார்ட்மெண்ட்டையே
கலைத்து விடுவோம்............... (மணி அடிக்கப்பட்டது).

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கனம் தலைவர் அவர்களே,
இந்த மானியத்தை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல
விரும்புகிறேன்.

மகாத்மா காந்தியடிகள் கண்ட திட்டத்தை நமது மாநில அரசாங்கம் சிறந்த முறையில் நிறைவேற்றி வருகிறது. நமது அமைச்சர் அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு இன்னும் உற்சாகமாகத் தொண்டாற்றுகிருர்களோ அவ்வளவுக்கெவ்வளவு இன்னும் இது மக்களுக்கு வெற்றிகரமாகப் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதே போன்று தேசீயப் போராட்டத்தில் பங்குகொண்ட ஒருவர் இந்த இலாகாவின் தலைமையில் இருக்கின்ற காரணத்திஞல் இன்னும் இது மக்களுக்குப் பயன்படும் முறையில் செயல்படும் என்று நம்புகிறேன்.

இன்றையதினம் உணவுப் பற்ருக்குறை இருப்பதால், முக்கியமாக உணவு உற்பத்திக்கான பல திட்டங்களை நிறைவேற்றிய போதிலும் உணவுப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்ருல், இன்றையதினம் போதுமான கவனத்தை இதிலே பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அதற்கு முக்கியமாக இப்போது ஏ.டி.ட்டி. 27 என்ற ரகம் ஆடுதுறையில் பயன் அளித்திருக்கிறது. ஒவ்வொரு பிளாக்கிலும், ஏ.டி.ட்டி. 27 திட்டங்களை எடுத்து அதற்கு விதைகளெல்லாம் கொடுத்திருக்கிருர்கள். நல்ல விதைகள் வேண்டுமென்ருல், கிராம சகாயக் திட்டம் சரியாக நடைபெறவில்லை. அதை மாற்றி நல்ல விதமாக விதைகளைக் கொடுக்கவேண்டும். ஏக்கருக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். கூட்டுறவு மூலமாகக் கொடுக்கும்போது நீண்டு போய்விடுகிறது. அரசாங்கமே உணவுப் பிரச்னையைத் தீர்க்க அதற்கு முதல் பாத்தியம் கொடுத்து 10 கோடி ரூபாயாவது செலவு செய்தால் கண்டிப்பாக உணவுப் பற்ருக்குறை நீங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் மீன் வளர்ப்புத் திட்டத்தில் தொட்டிக்கு 5,000 ரூபாய் கொடுத்து ஒன்றும் பிரயோசனம் இல்லை. அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தார்கள். ஆகவே மீன் வளர்ப்புத் திட்டத்திலே மீன் குஞ்சுகளை வளர்க்க வேண்டுமென்ருல் தலைநகரில் இருக்கிற அதிகாரிகள் அங்கேயே தொட்டி கட்டி வளர்ச்சி செய்துகொண்டு வரலாம். அந்தத் திட்டத்
தின் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் மீன் தொட்டிகளைப் பராமரிக்க 11-00
வேண்டியதில்லை. அந்தத் தொகையைக் கொண்டு கிராமங்களிலுள்ள a. m.
குளங்களையெல்லாம் நல்ல முறையில் வெட்டுவதற்குச் செலவு செய்தால் மிகவும் பிரயோசனமாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன். அநேக நல்ல திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருந்தாலும், அவையெல்லாம் நிறைவேற்றப்படவில்லை. கூட்டுறவுத் துறையின் மூலம் பணம் கிடைக்காத காரணத்திஞல்தான் அங்கே திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த நிலையை மாற்றி, அரசாங்கமே நேரிடியாக பணம் கொடுக்க முன்வந்தால் பிரயோசனமாக இருக்கும். பயிற்சித் திட்டங்கள் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்ருல், அரசாங்கமே நேரிடியாக ஒரு மாதிரிப் பண்ணை வைத்து, அவர்களுடைய காரியாலாயத்திலேயே இந்த மாதிரித் தோட்டங்கள், காய்கறிச் செடிகள் இவைகளை வைத்துக் காட்டவேண்டும். மந்திரிகள் பங்களாக்களில் காய்கறி போட்டிருக்கிருர்கள். அது மாதிரி பஞ்சாயத்து யூனியன் காரியாலயங்களில் மாதிரிப் பண்ணை அமைத்து, வருகிற ஜனங்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும் பார்க்கும்படிச் செய்தால் மிகவும் பிரயோசனகரமாக இருக்கும்.

கைத்தொழில்கள் மூலம் அனேக இடங்களில் சாமான்கள் செய்கிருர்கள். அந்த சாமான்களைக்கொண்டு ஒரு கைத்தொழில் கண்காட்சி ஏற்படுத்த வேண்டும். கிராமங்களில் கைத்தொழில்கள் மூலம் செய்யப்படுகிற சாமான்களை யூனியன் காரியாலயத்தில் கண்காட்சியாக வைக்கலாம்.

சில பஞ்சாயத்துக்கள் சரியாக வேலை செய்கின்றன சில பஞ்சாயத்துக்கள் சரியாக வேலை செய்யவில்லை. அதை பஞ்சாயத்து யூனியன் சரியான முறையில் கண்காணிக்க வேண்டும். ஜில்லா அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி எப்படி மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கண்காணிக்கிருேமோ,

அதே விதமாக மூன்று மாதங்களுக்குள் பஞ்சாயத்துக்கள் நடத்துகிற
வேலைகளைப் பற்றிய அறிக்கையை கவுன்சிலில் வைத்துப் பரிசீலனை செய்து
கண்காணிக்கலாம்.

தென்னை போன்ற பலன் தரக்கூடிய மரங்களை வைத்தால், வருவாயை
பெருக்க முடியும். பசுந்தாள் உரம் விவசாயத்திற்கு மிகவும் முக்கிய
மானது. அதையெல்லாம் மாடுகளை விட்டு மேய்த்துவிடுகிறார்கள். அதற்
குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். பசுந்தாள் உரத்தை
அதிகமாக வளர்த்தால் அதன் மூலம் உணவு உற்பத்தி பெருகுவதற்கு
உதவியாக இருக்கும் என்று கூறி, எனது உரையை முடித்துக்கொள்
கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய
தினம் நம்முடைய தல நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கும் மானியக் கோரிக்கையின்மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப்
பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்லுவதற்காகத் தங்களது
அனுமதியைக் கோருகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் நகர அபி
விருத்திக்காக சாலைகள் அமைப்பு, பாதாளச் சாக்கடைகள் அமைத்தல்,
வடிகால் திட்டம் ஆகியவைகளுக்காக இந்த மானியத்தைக் கோரியிருக்
கிறார்கள். என்னுடைய வெட்டுப் பிரேரணை சென்னை மாநகராட்சி மன்றத்
திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மானியமானது, அதனுடைய வடிகால்
திட்டங்களுக்கு, குடி தண்ணீர்த் திட்டங்களுக்கு, நகர அபிவிருத்திக்கு
போதவில்லை என்பதை வற்புறுத்துவதற்காக அமைந்திருக்கிறது. நான்
இதைப் பற்றிப் பேசுகிறபொழுது முதலில் ஒன்றை கனம் தல நிர்வாகத்
துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். சென்னை
மாநகராட்சி மன்றத்தினால் இன்றைக்கு சாலைகள் சரிவரப் பராமரிக்கப்பட
வில்லை என்பது சென்னை மாநகராட்சி மன்றத்தின் பேரிலுள்ள பெரிய
குற்றச்சாட்டு. நான் அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளுகிறேன். சாலை
கள் பழுதாகக் கிடக்கின்றன. நான் அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்
கிறேன். சாக்கடைத் திட்டங்கள் சரியாக இல்லை, கொசுத் தொல்லை இருக்
கிறது, சுகாதாரக் குறைவாக இருக்கிறது, இந்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்
கொள்ளுகிறேன். இன்றைக்கு மாநகர ஆட்சி மன்றத்தினால் குடி தண்
ணீர் கொடுக்க முடியவில்லை, குடி தண்ணீர் போதுமானதாக இல்லை என்
பது மற்றொரு குற்றச்சாட்டு. அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.
இன்னொரு குற்றச்சாட்டு என்னவென்றால், இன்றைக்கு கல்வி நெறி சரி
யான முறையில் ஏற்படவில்லை, அது சரியாக அமல் நடத்தப்படவில்லை
என்று மாநகராட்சி மன்றத்தின் பேரில் குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்
சாட்டையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். குற்றச்சாட்டுகள் இவ்வளவை
யும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். அப்படி ஏற்றுக்கொள்ளுகின்ற நேரத்
தில், இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பாளி யார் என்ற இடத்தில்
தான் கொஞ்சம் வித்தியாசப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர்
களும் சரி, உறுப்பினர்களானாலும் சரி, அமைச்சர்களானாலும் சரி இன்
றைக்கு மாநகராட்சி மன்றத்தில் இருக்கிற நான் சார்ந்திருக்கிற திராவிட
முன்னேற்றக் கட்சியின் ஆட்சிதான் இதற்குப் பொறுப்பு, இதற்குக்
காரணம் என்று சொன்னார்கள். கொலை நடக்கிறது, கனம் சபாநாயகர்
அவர்களே, நான் அதனை மறுக்கவில்லை, ஆனால் கொலை செய்தவர் யார் ?
குற்றவாளி யார் ? என்பதில்தான் நான் வித்தியாசப்படுகிறேன். இன்
றைக்கு ரிப்பன் மாளிகையை அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். நான்
சொல்லுகிறேன், இதற்கு முழுப் பொறுப்பு ∴போர்ட் செயின்ட் ஜார்ஜ்தான்,
ரிப்பன் மாளிகை அல்ல. செயின்டு ஜார்ஜ் கோட்டையில் கொலு விற்றிருக்
கும் மந்திரிகள்தான் இதற்குப் பொறுப்பு என்று நான் குற்றம் சாட்டு
கிறேன். எல்லா அமைச்சர்களும் இங்கு இல்லாமல் இருக்கிறார்கள். கனம்
முதல் அமைச்சர் அவர்களையும், குறிப்பிட்ட மந்திரிகளையும், நேரடியாக
நிர்வாகப் பொறுப்புள்ள மந்திரிகளையும் நான் குற்றம் சாட்டுகிறேன்.
ஒன்று, கனம் முதல் அமைச்சர் அவர்கள்; இரண்டு, தொழில் அமைச்சர்
கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள்; மூன்று, நம்முடைய பொது
மராமத்துத் துறை அமைச்சர் திரு. ராமையா அவர்கள்; நான்கு, சுகாதார
அமைச்சர் திருமதி ஜோதி அம்மையார்; ஐந்து, அமைச்சர் கனம் மஜீத்;

இந்த ஐந்துபேர்களும் நேரடியாக இதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டிய
வர்கள். அதற்கான வாதத்தை நான் உங்கள் முன்னிலையில் வைக்க
விரும்புகிறேன். புழுதி மண்டலத்தைக் கிளப்புவதற்கு முன்னால் நம்
முடைய கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். நிர்வாக
ஊழல் இருந்தால், அதைக் களைவதற்கு அவர்களுக்கு பொன்னான
வாய்ப்பு இருந்தது என்று நான் இந்த மன்றத்தில் சென்னை மாநகராட்சி
நிர்வாகத்தைக் கலைப்பதற்கான மசோதா கொண்டுவரப்பட்ட நேரத்தில்
விளக்கிச் சொன்னேன் தங்களுடைய சன்னிதானத்திலே....(சிரிப்பு)

கனம் சபாநாயகர் : 'சன்னிதானம்' என்று சொல்லுவதில் ஆபத்து
இருக்கிறது. என்னைக்கொண்டு என் அதில் சேர்த்துவிடுகிறீர்கள் ?

திரு. கே. ஏ. மதியழன்: சன்னிதானங்கள் ஜனநாயக சன்னிதானங்
களாக ஆகிவிட்டன. ஏதாவது குறை இருந்தால், தஸ்தாவேஜை வர
வழைக்கலாம் என்பது ஒரு விதி. அங்கே போய் சோதனை போடலாம்
என்பது இரண்டாவது விதி. மூன்றாவது விதி நிர்வாகத்தில் தவறு
ஏற்பட்டால், இப்படி செய்யத் தவறிவிட்டார்கள், இப்படிச் செய்யவேண்டும்
என்று டைரக்ட் பண்ணலாம். இன்ஸ்பெக்ட் பண்ணலாம், ரெகார்ட்லை
கால்ஃபார் பண்ணலாம், அதற்கும் மேலாக ஒரு குறிப்பிட்ட வேலைக்கு
ஒரு ஸ்பெஷல் ஆபீஸரை நியமிக்கலாம். மாநகர ஆட்சி மன்றத்தில்
நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களுக்கு உயிரே கிடையாது. அதுவரையில்
அவைகள் உயிரில்லாத சவம்தான். அரசாங்கத்திற்கு அந்தத் தீர்மானங்
கள் வந்து, கனம் அமைச்சர் மஜீத் அதற்கு உயிர் கொடுத்தால்தான்,
அந்தத் தீர்மானம் அமல் நடத்தப்படும். பதினைந்து நாட்களுக்குள் தீர்
மானம் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட வேண்டும், அது ரத்து செய்யப்
படாமல் இருந்தால்தான், 15 நாட்களுக்குப் பிறகு கமிஷனர் அதை
நிர்வாகத்தில் அமலுக்குக் கொண்டு வரலாம். இப்படி இருக்கிற சட்ட
விதிகள் போதாது என்று, மாநகராட்சியைக் கலைப்பதற்கு ஒரு சட்டம்
கொண்டுவந்தார்கள். வெள்ளிக்கிழமை கொண்டுவந்து அவசர அவசர
மாக திங்கள்கிழமை நிறைவேற்றினார்கள். ஆகஸ்டு மாதம் 4-ம் தேதி
இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு பெரிய நிர்வாக ஊழல்
கள் மாநகராட்சி மன்றத்தில் இருக்கின்றன என்று குற்றம் சாட்டினால்,
நான் கேட்கிறேன், எத்தனை தடவை இவர்கள் சோதனை போட்டிருக்கிறார்
கள்? எத்தனை தடவை இவர்கள் இன்ஸ்பெக்ட் செய்திருக்கிறார்கள் ?
எத்தனை தடவை ரிகார்டு கேட்டு வாங்கியிருக்கிறார்கள் ? எத்தனை தடவை
மாநகராட்சி மன்றத்துக்கு தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள் ? எத்தனை
தடவை தீர்மானத்தை ரத்து செய்திருக்கிறார்கள் ? என்பதையெல்லாம்
பற்றி இந்த மன்றத்தின் முன்னே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில்
விளக்கியிருந்தால் அது சென்னை நகர மக்களுக்கு ஒரு பெரிய விளக்கமாக
இருந்திருக்கும். அப்படிச் செய்யாததற்குக் காரணம் என்ன ? குற்ற
வாளி மாநகராட்சி மன்றம் அல்ல. இந்த அரசாங்கம்தான் இதற்குப்
பொறுப்பு ஏற்கவேண்டும், அவர்கள்தான் இதற்குக் காரணம், அவர்கள்
தான் குற்றவாளி என்பதைச் சுட்டிக்காட்ட ஒவ்வொன்றாக வரிசைப்படுத்தி
விளக்கிச் சொல்லுகிறேன்.

சென்னை மாநகரத்தில் இன்றைக்கு ரோடுகள் சரியாக இல்லை என்பதை
ஒத்துக்கொள்ளுகிறேன். 600 மைல் ரோடுகளை கார்ப்பரேஷன் பராமரிக்க
வேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு ஆகிறது.
ரூ. 10 லட்சம்தான் அரசாங்கம் கொடுக்கிறார்கள். என் ரோடுகளில்
குழிகள் இருக்காது ? ரோடுகளில் குழிகள் இருக்கின்றன என்றால், நம்
முடைய தொழில் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களுடைய இலாகாவைச்
சேர்ந்த பஸ்கள் ரோடுகளில் ஓடுவது காரணம் அல்லவா ? குழிகள் இருக்
கின்றன என்றால், எலக்ட்ரிஸிடி போர்டு ரோடுகளில் குழிகளைத் தோண்டு
கிறார்கள்; அது காரணம் அல்லவா ? டெலிபோன் துறையினர் ரோடு
களில் குழி பறிக்கிறார்கள், இதற்குத் தந்தி—தபால் மந்திரி காரணம்
அல்லவா ? என்னுடைய இல்லம் மவுண்ட் ரோடில் இருக்கிறது. கனம்
அமைச்சர் அவர்கள் எனது வீட்டிற்கு வருவாரோ, இல்லையோ தெரியாது.
மவுண்டு ரோடு நிர்வாகம், பூந்தமல்லி ரோடு நிர்வாகம் யார் கையில்
இருக்கிறது ? இன்றைக்கு $1\frac{1}{2}$ மணிக்கு மவுண்டு ரோடுக்கு வந்தால்

நான்கு குழிகளை தாண்டித்தான் நான் என்னுடைய இல்லத்திற்கு மேலே ஏறவேண்டியிருப்பதைப் பார்க்கலாம். மவுண்டு ரோடில் மெயில் அலுவலகத்திலிருந்து ஜெமினி வரையில் எத்தனையோ குழிகள் ரோடில் இருக்கின்றன. ஏன் அங்கு குழிகள் இருக்கின்றன? இதற்கு யார் காரணம்? இதற்கு என்ன செய்வது? நகராட்சி மன்றத்திற்கு ரோடுகள் பராமரிப்பதற்கு ரூ. 10 லட்சம் கொடுக்கிறார்கள் அரசாங்கம். இந்தத் தொகை கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரி இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? மோட்டார் வெஹிகிள்ஸ் ஆக்டின் கீழ் சர்க்கார் ரூ. $1\frac{1}{2}$ கோடி வரி வசூல் செய்கிறார்கள். ஆனால், இந்தத் தொகையில் கார்ப்பரேஷன் பெறுவது என்ன? ரூ. $3\frac{1}{2}$ லட்சம் தான். ரூ. $3\frac{1}{2}$ லட்சம் தருகிறார்கள் என்றாலும், நமது அமைச்சர் மஜீத் அவர்கள் ரூ. $3\frac{1}{2}$ லட்சத்தைக் கொடுத்துவிட்டு, மறு கையால் அதைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் கார்ப்பரேஷன் லாரிகளுக்காக ரூ. $3\frac{3}{4}$ லட்சம் கேட்டு வாங்கிக்கொண்டு விடுகிறார்கள். எப்படி ரோடுகள் சீரான முறையில் இருக்கும்? எப்படி ரோடுகளை சரிவர பராமரிக்க முடியும்?

சாக்கடைத் திட்டம் சரியாக இல்லை, நாற்றம் எடுக்கிறது என்று சொல்லுகிறார்கள். என்ன காரணம்? 1910-ம் ஆண்டு 6 லட்சம் பேர்களுக்கு அமைக்கப்பட்ட சாக்கடைத் திட்டம்தான் இன்றைக்கும் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஏராளமாக ஜனத்தொகை பெருகி இருக்கிறது. இதற்குக் கார்ப்பரேஷன் காரணமா? ஸிடி ஸூவேஜ் ஸ்கீம் ரூ. $1\frac{1}{4}$ கோடிக்குப் போட்டுக்கொடுக்கப்பட்டது பக்கிங்ஹாம் கனாலில் கொசுத் தொல்லை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் யார்? கார்ப்பரேஷனா காரணம்? இதற்குப் பொறுப்பு கனம் அமைச்சர் ராமையா அவர்கள். எத்தனையோ தடவை சொல்லியாகிவிட்டது. என்ன திட்டம் போட்டிருக்கிறார்கள்? சொன்னால் மட்டும் கோபம் வரும். இந்தக் கொசுத் தொல்லைக்குக் காரணம் இந்த சர்க்கார்தான். இந்த பக்கிங்ஹாம் கனாலிலும், கூவத்திலும், சென்னை சிறைச்சாலை (பெனிடென்ஷியரி) கழிவுகளும், இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள அரசாங்க அலுவலர்கள், ராணுவ அலுவலக ஊழியர்கள், மற்றவர்களுடைய கழிவுப் பொருள்களும், இன்னும் சேப்பாக்கத்தில் உள்ள ஆபீஸ்கள், நாம் பெருமையாகப் பேசிக்கொள்கிறோமே, டாக்டர் லட்சுமணசாமி முதலியார், அவர்களுடைய பல்கலைக் கழக ஆபீஸ்கள் இவைகளிலிருந்து வரும் கழிவுகள் எல்லாம் இந்தக் கெனாலில்தான் வந்து சேருகின்றன. கொசு வராமல் என்ன செய்யும்? இதைப் பற்றி ஸ்பெஷல் எஞ்ஜினியர் திரு. வரதராஜன் ஒரு கட்டுரையில் சொல்லியிருக்கிறார்கள்—

'The pumpsets which have served for nearly 5 decades have become very old and have become very inefficient resulting in surcharged conditions of the entire system with consequent flow of sewage into the various water courses'— என்று சொல்லிவிட்டு—

'For instance the overloaded septic tanks provided for treating the sewage, from Fort St. George, from the Penitentiary, from the Body Guard Lines, the State Transport Office, E.M.E. Station Workshops, University buildings and Chepauk Offices discharge into Cooum River and Buckingham canal also add considerable quantity of sewage'—என்று அந்த கட்டுரையிலே விளக்கி இருக்கிறார்கள். யார் பொறுப்பு? ஜனநாயகத்தில் நாங்கள் மாநகராட்சிக்கு வந்து விட்டோம் என்பதற்காக எதை வேண்டுமானாலும் சொல்லுவதென்றால் எப்படி?

இன்றைக்குக் குடி தண்ணீர் இல்லை. டில்லிக்காரன் 60 காலனும், பம்பாய்க்காரன் 70 காலனும், மற்றவர்கள் 80 காலனும் எடுத்துக் கொள்ளும்போது, நமக்குக் குடி தண்ணீர் வேண்டும் என்றால், காவேரி, கோதாவரி, கிருஷ்ணா என்று பெரிய திட்டங்களைக் காட்டுகிறார்கள். ஏதையாவது நிறைவேற்றியிருக்கக் கூடாதா?

இன்னொன்றையும் தெளிவாகச் சொன்னார்கள். ஊழல்கள் ஊழல்கள் என்று சொல்லுகிறார்கள். பங்களாக்களைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். தெளிவாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். பகிரங்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு வீடுகள் கொடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள்? நான் ஒரு வீடு வேண்டும் என்றால் கிடையாது. வாடகை வீட்டில்தான் இருக்கிறேன். எனது நண்பர் என். வி. நடராசன் விண்ணப்பம்போட்டார். வீடு கொடுத்தார்களா? சிற்றரசுக்குக் கொடுத்தார்களா? இல்லை. ஆனால், மந்திரியாக இருந்த, லூர்தம்மாள் சைமன் பங்களா கட்டிக்கொண்டிருக்கிறார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் ஒரு பங்களா கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வட சென்னை எம்.பி. சீனிவாசனுக்கு வீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தலைவர் ராமதாஸ் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்தனையும் தவறு என்று இருந்தால், லஞ்ச ஊழல்கள் என்றால், விஜிலன்ஸ் கமிஷன் இல்லையா? அவர்களிடம் அனுப்புவதுதானே? இதிலெல்லாம் ஒரு அரசியல் காரணம் இருக்கிறது. இந்த அரசாங்கத்தை அறைகூவிக் கேட்கிறேன். எந்தக் காரியங்களைச் செய்யவேண்டும் என்றாலும், பணத்தைப் பெருக்க வேண்டும் என்று சென்னை மாநகராட்சி முற்பட்டால், அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கும் திட்டத்தைத் தடுத்து, அதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். சம்பளத்திற்கே மூன்று, நான்கு கோடி ரூபாய் போய்விடுகிறது.....

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : சபாநாயகர் அவர்களே, வருமானத்தைப் பெருக்குவதில் முட்டுக்கட்டை போட்டார்கள் என்பது சீரியஸ் அலிகேஷன். அதை விளக்கமாகச் சொல்லவேண்டும்.

திரு கே. ஏ. மதியழகன் : சீரியஸ் அலிகேஷன்தான். அது நாட்டு மக்களுக்கு சீரியஸாக இருக்கிறது. மேயர் கிருஷ்ணமூர்த்தி திட்டம் போட்டார்கள். ரூ. 30 கோடியில் பக்கிங்ஹாம் கெனாலைச் சுத்தம் செய்ய என்று ஒரு திட்டம் போட்டார்கள்.....

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் சபாநாயகர் அவர்களே, கார்ப்பரேஷனுடைய வருமானத்தைப் பெருக்குவதிலே சர்க்கார் குறுக்கே நிற்கிறது என்ற வகையிலே சொன்னார்கள். நேரிடையாக அதைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பிறகு மற்றதற்குச் செல்லலாம்.

திரு கே. ஏ. மதியழகன் : இன்கம் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ், எக்ஸைஸ் ட்யூடி இவற்றின் மூலம் எல்லாம் வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்று நான்காவது .·.பைனான்ஸ் கமிஷனுக்கு விண்ணப்பம் செய்தோம். அதைப் பற்றி நகரசபை சார்பில் இந்த அரசாங்கம் ஒரு வார்த்தை சொல்லவில்லை. அது வருமானத்தைப் பெருக்கக் கூடாது என்கிற காரணத்தினால்தானே?

இந்த நகரம் பெரிய நகரம். இருபது லட்சம் மக்களைக் கொண்டது. இங்கே அதைத் தவிர, 400, 500 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. சுகாதாரக் குறைவிற்கு யார் காரணம்? கனம் வெங்கட்டராமன் பொறுப்பா அல்லது மேயர் பொறுப்பா? இதிலெல்லாம் ஏன் சர்க்கார் அக்கரை காட்டவில்லை? எல்லாம் அரசியல் காரணத்தினால்தான். ஏன், மன்றத்தைக் கலையுங்களேன். லஞ்ச ஊழல்கள் என்றால் அவர்கள் மட்டும் என்ன, எங்களையும் சேர்த்து, எங்கள் தலைவர் கருணாநிதி மீதும் என்மீதும் கூட, வழக்குப் போட்டு, விசாரணை நடத்துங்களேன்? அதை விடுத்து வேறு காரியங்கள் செய்வானேன்? இது அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போலத்தான் இருக்கிறது. ஓநாய் குறைக்கிறது என்று ஒட்டகம் பயணத்தை நிறுத்தாது. சென்னை மக்கள் ஏமாற மாட்டார்கள். இதற்குப் பரிகாரம், நகர மன்றத்திலே மட்டுமின்றி. சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலேயும், உங்களுடைய ஆட்சிப் பொறுப்பை அகற்றி, இரண்டு இடங்களிலும் எங்கள் கட்சிக்கு ஆட்சிப் பொறுப்பை கொடுப்பதுதான் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

[26th March 1966

* SRI M. WILLIAM: Mr. Speaker, Sir, in supporting the Demand that is placed before the House I will say a few words. The reorganisation of the department under the Director of Rural Development bringing together all the subordinate services under a well-knit organisation is a commendable step and much credit is due to the Hon. Minister concerned. To make local administration or panchayat administration a success, the question of manning the entire department with officers imbued with a missionary zeal is necessary. It is these officers who are to intimately contact the people and it is they who must consider the grievances of the local people and their problems in a sympathetic way. The success of this administration depends to a large extent on the selection of proper candidates from the lowest officer upto the Director, I mean candidates imbued with a missionary spirit. The success of the entire administration depends on the success of the administration at the lowest level. I think due consideration will be given to this aspect of the matter.

Certain important programmes are allotted to Panchayats and Panchayat Unions, namely, Works Programme, Social Programme of arts and crafts and training programmes. A review of the work of these programmes for the last few years has to be taken into account when we allot amounts to Panchayat Unions. Regarding "Work's Programme" I can boldly say that the large amounts allotted under this head are being wasted. That is because the officers engaged in these works, namely Junior Engineer, District Panchayat Officer and even the Revenue Divisional Officer who are to make frequent supervision are indifferent in these matters. So these huge amounts are being wasted by the local Panchayat Presidents. If there is systematic supervision on the part of officers I am sure the work would be done in a more proper way than at present.

With regard to schemes like starting of Primary Health Centres in the blocks, in some places we find there is no doctor. In some places there is no place for the doctor to live in. With such conditions, Primary Health Centres are started. We must see that these centres serve a useful purpose to the public. My request would be that provision must be made for at least 25 beds in a Primary Health Centre. They must also serve as hospitals to cater to the needs of the rural folk. They must be upgraded and made to function as hospitals.

I understand that recently many Bee fieldmen, who were engaged in developing a cottage industry, are being ousted and that notice of ousting has been served on them. The moment the matter was brought to the notice of the Departmental Head, he was kind enough to issue instructions not to oust them and, if they have been ousted to reinstate them. They are doing the important work of bee-keeping. Honey is also a kind of food. The staff must be retained permanently in the various panchayat unions and arrangements may be made for this purpose.

26th March 1966] [Sri M. William]

The allotment of two rupees per acre of wet land for maintenance works and the Local Roads Grant calculated at the rate of 40 Paise per capita are very, very meagre amounts. They must be raised at least to ten rupees per acre of wet land and one rupee per capita respectively. Unless this is done, roads and tanks cannot be maintained in proper order. About 300 tanks in the Vilavancode taluk, Kanyakumari district have become useless; they are in a dilapidated condition. The moment the rain water falls, it goes out through the dilapidated sluices. This matter has been brought to the notice of the authorities also. No action has been taken so far.

* **திரு. வி. எஸ். எஸ். மணி**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சமுதாய நல மானியக் கோரிக்கையின் பேரில் கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்கள் சொல்லப் பிரியப் படுகிறேன்.

பொதுவாக, டைரக்டரேட் ஆஃப் ரூரல் டெவலப்மெண்ட் என்கிற நிர்வாகச் சீரமைப்பைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அது பாராட்டத்தக்க ஒரு செயல்தான். அதே நேரத்தில், இந்த அமைப்பு முறை எப்படியிருக்கிறது என்றால், ஒரு புறம் ரெவினியூ டிபார்ட்மெண்ட் அதிகாரிகளும், மற்றொரு புறம் ப்ளாக் டெவெலப் மெண்ட் அதிகாரிகளும் இருந்துகொண்டிருப்பது "**Parallel Government**" என்ற அளவிற்கு இருப்பதாக மக்களுக்குக் காட்சி அளிக்கிறது. இந்த நிலை மக்களுடைய மனத்தைக் குழப்பக்கூடிய தாக இருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த ஐந்தாண்டுத் திட்டங் களில் சொல்லப்பட்டுவரும் உணவு உற்பத்தி, கிராமத் தொழில் வளர்ச்சி, விவசாயிகளுக்குக் கடன் வழங்குவது போன்ற திட்டங்கள் செயல்பட வேண்டுமானால், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தின் மூலமாகத்தான் செயல்பட வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் மூலமாகச் செயல்படும் நேரத்தில், அரசாங்கத் தின் பல இலாக்காக்கள் இணைந்து செயல்பட்டால்தான் அது நல்ல முறையில் செயல்பட முடியும். ஆனால், அந்த நிலைமை இப்பொழுது இல்லை. அவர்களுக்குள் "கோ-ஆர்டினேஷன்" கிடையாது ஒற்றுமை கிடையாது. எனவே தான், ஐந்தாண்டுத் திட்டம் தோல்வியடைந்து விட்டது என்று சொல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். ஜூனியர் இன்ஜினியர் (பஞ்சாயத்து) என்பவருக்கு யார் **Boss** என்று பார்த்தால் அஸிஸ்டென்ட் இன்ஜினியர், எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர் என்று சொல்லுகிறார்கள். அரசாங்கத்தினுடைய நேரடி நிர்வாக அதிகாரி யாகிய பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் தான் அவர்களுக்கு எஜமானர் என்ற நிலை ஏற்பட்டால்தான் அவர்கள் இணைந்து வெற்றி கரமாகச் செயல்பட முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து நிர்வாகத்தின் தலைவர், துணைத் தலைவர் இவர்களு டைய அதிகாரங்கள், பெண் உறுப்பினர்களை நியமித்தல், கூட்டங்கள் நடைபெறுவது இவற்றுக்கெல்லாம் தெளிவான விதிகள் கிடையாது. இவற்றுக்குத் தெளிவான விதிகள் வேண்டும். பஞ்சாயத்து அலுவலகத்தில் அலுவலர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அது குறைக்கப்பட வேண்டும்.

பஞ்சாயத்துக்கு வரவேண்டிய வருமானங்கள், வீட்டு வரி வசூலிப்பது போன்றவை, கிராம அதிகாரிகள் மூலமாக வசூலிக்கப் படுவதனால் அவை சரியாக வசூலிக்கப்படவில்லை. நகரப் பஞ்சாயத் துக்களில் வரி வசூலின் சத வீதம் 79 என்றும், கிராமப் பஞ்சாயத்துக்களில் வரி வசூலின் சத வீதம் 54 என்றும் இந்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்களில்

வரி வசூல் குறைவான சத வீதமாக இருப்பதற்குக் காரணம் என்ன? நகரப் பஞ்சாயத்துக்கு நிர்வாக அதிகாரி இருக்கிறார். அவருக்குக் கீழ் பில் கலெக்டர் இருக்கிறார். எனவே தான் அதிகமாக வசூல் செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், கிராமப் பஞ்சாயத்துக்களில் கிராம அதிகாரிகளின் மூலமாக வரி வசூல் செய்வதால், அவர்கள் அதிகமான அளவிற்கு வசூல் செய்ய முடிவதில்லை. ஆகவே, கிராமப் பஞ்சாயத்துக்கள் பலவற்றைச் சேர்த்து, ஒரு பில் கலெக்டர் போட்டு வசூல் செய்தால், கிராமப் புறங்களில் வீட்டு வரி முதலிய வருமானங்கள் அதிகமாக வசூல் செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

12,470 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், 423 நகரப் பஞ்சாயத்துக் களுக்கும் சென்ற ஆண்டு நடந்த தேர்தல் வெற்றிகரமாக நடந்ததாகப் பெருமையுடன் இந்தக் குறிப்பில் கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் என்ன கண்டோம் ? கிராமத்திலே பகைமை, கொலை, உறுப்பினர்களைக் கடத்தல் போன்ற இம்மாதிரி நிலைமைகள் ஏற்படும் தேர்தல் முறையை மாற்றி, மக்களுடைய வாக்குகளை நேரடியாகப் பெற்று, பஞ்சாயத்துத்தலைவர், பஞ்சாயத்து யூனியன் தலைவர் வரக்கூடிய அளவிற்குத் தேர்தல் முறை இருந்தால் அது நல்ல முறையில் செயல்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் என்று சொல்லப்படும் கமிஷனர் எங்கே குடியிருக்கிறார்கள் என்றால், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு கள் ஐந்தாறு மைல்களுக்கப்பால் குடியிருக்கிறார்கள். அங்கிருந்து அனு தினமும் அலுவலகத்திற்கு வர பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஜீப்பைப் பயன் படுத்திக்கொள்ளுகிறார்கள். ஏன் அந்த நிலை ? ஜீப்புக்குப் பெட்ரோல் யார் விடுவது ? ஏன் அவர் அலுவலகத்திற்கு அருகாமையிலே குடியிருக்கக் கூடாது ? அலுவலகத்திற்கு அருகாமை யில் அவர் குடியிருக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். இதையும் அரசினருடையவும், அமைச்சர்களுடையவும் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒரு ரெவினியூ கிராமத்திற்கு ஒரு பஞ்சாயத்து என்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்தில் 200, 300 பேர்கள் இருக்கிறார்கள். 60, 70 வீடுகள் இருக்கும். அதில் வரக்கூடிய லாண்டு ஸெஸ் வருமானம் என்ன ஆகிறது ? அதிகமான அந்த வருமானத்தை அவர்கள் எந்த வகையில் செலவழிக்கிறார்கள் என்று தெரியாமல் இருக்கிறது. இந்த விதமான வருமானங்களை பஞ்சாயத்து யூனியன் மூலமாக ஒன்று சேர்த்து, " பூல் " செய்து, பஞ்சாயத்து யூனியன் மூலமாக, அதன் கீழ் இருக்கும் பஞ்சாயத்துக் களுக்கு, மக்கள் அடிப்படையில், ஸ்தலவாரியாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும. அப்பொழுது தான் சரியான நிர்வாகமாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

* **திரு. நா. சௌந்திரபாண்டியன் :** மதிப்பிற்குறிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற
11-30 a.m. சமுதாய நலத் திட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நடப்பு ஆண்டில் திட்ட நிர்வாக அமைப்பு முறையில் சில மாறுதல்களைச் செய்திருப்பது வரவேற்கத்தக்கது. அந்த அமைப்பு முறைகளை மேலெழுந்தவாரியாக அமைத்தால் போதாது. மாவட்ட ரீதியாகவும் அமைக்க வேண்டும். இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறார்கள். அவர்கள் வருவாய்த் துறையை கவனிக்கின்ற படியால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வாக முறையை நன்றாகக் கவனிக்க முடியவில்லை. ஆகவே மாவட்ட அளவிலும் இந்த நிர்வாக அமைப்பை மாற்றி அமைத்தால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் செயல்

படும். ஆகவே இதைத் தனி அமைப்பாக ஆக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்றைய தினம் மற்ற துறைகளுக்கு இருப்பது போல இந்த சமுதாய நலத் திட்டத்திற்கும் தனி அமைப்பு இருந்தால் நல்லது. இப்படிச் செய்தால் தான் அங்கு வேலை செய்யும் ஊழியர்களும் உற்சாகமாக வேலை செய்வார்கள், அவர்களுடைய உத்தியோக உயர்வுக்கும் வழியேற்படும்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழங்கப்படுகிற விவசாய அபிவிருத்தி நிதி எவ்வாறு செலவழிக்கப்படுகிறது என்று பார்த்தால் ஏப்ரல் முதல் பிப்ரவரி மாதம் வரையில் மொத்தத்தில் 25 சதவீதம், 50 சத வீதம் தான் செலவிட்டிருப்பார்கள். மார்ச் மாதத்தில் மட்டும் 75 சதவீதம் 50 சதவீதம் என்று செலவிட்டிருப்பார்கள். இதற்கு என்ன காரணம் என்று அறிய வேண்டும். நமது திட்டம் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்றால் ஒதுக்கக்கூடிய பணம் காலா காலத்தில் நல்ல முறையில் சீராகச் செலவழிக்கப்பட வேண்டும். இதையும் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் சாலை அபிவிருத்திக்காக ஜனத்தொகை அடிப் படையில் நபருக்கு 40 காசு என்று கொடுக்கப்படுகிறது. அப்படியின்றி சாலையின் நீளத்தின் அடிப்படையில் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். பஸ் போக்குவரத்து ரோடுகளை அரசாங்கமே நேரடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள் கிறேன். அப்போதுதான் பஞ்சாயத்து யூனியன்களிடமுள்ள ரோடுகள் நல்ல முறையில் பராமரிக்கப்படும்.

பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களுக்கு நல்ல கட்டட வசதி இல்லை. அதற்கு கூடுதலாக மானியம் கொடுத்துக் கட்டடம் கட்ட திட்டம் வகுக்க வேண்டும். இப்போது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் சில ஆசிரியர்களை நியமிக்க கல்வி இலாகா உத்தரவு வேண்டும். பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்; அரசாங்க ஆணைக்கு உட்பட்டு ஆசிரியர்களை நியமிப்பதற்கு அதிகாரம் ஆணையாளர்க்கும் மன்றத்திற்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலர் பள்ளிகள் நமது மாநிலத்தில் 21 வட்டாரங்களில் நடை பெறுகின்றன. இவை நல்ல முறையில் செயல்படுகின்றன. மொத்த மாக 731 பள்ளிகள் இருக்கின்றன. ஒரு பள்ளிக்குக் கூட நல்ல கட்டட வசதி கிடையாது. படிப்படியாக எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் கட்டட வசதி செய்துகொடுக்கவேண்டுமென்றும், எல்லா வட்டாரத் திலும் பாலர் பள்ளியை ஆரம்பிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஒரு மருந்தகத்திற்கு இப்போது 5 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இன்றைய தினம் 25 ஆயிரம், 50 ஆயிரம் என்று செலவாகிறது. ஆகவே 5 ஆயிரம் என்பது போதாது. அந்தத் தொகையை கூடுமான வரையில் 25 ஆயிரம் வரையிலாவது உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். யூனியன் மருந்தகங்களை படிப்படியாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மனித சக்தித் திட்டம் நமது மாநிலத்தில் பல பஞ்சாயத்து யூனியன்களில் நடைபெறுகின்றன. ஒரு யூனியனில் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் குறைந்தது 3 ஆண்டுகளாவது நிரந்தரமாகச் செயல்பட வகை செய்ய வேண்டும்.

மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் நல்ல முறையில் செயல்பட வில்லை. ஏதோ கூடித் தீர்மானங்கள் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்கள். அரசாங்கத்திலிருந்தும் ஒவ்வொன்றாக " இதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். இப்போதுள்ள முறையை மாற்றி, அரசாங்கத்திலிருந்து ஒவ்வொரு

மாவட்டத்திற்கும் எல்லாத் துறைகளுக்கும் கொடுக்கக் கூடிய தொகை முழுவதையும், இந்த மாவட்ட மன்றங்கள் கூடி எந்த எந்த வகையில் எந்த எந்தத் திட்டத்திற்குச் செலவிடுவது என்பதைத் தீர்மானம் செய்து அதன்படி திட்டங்களை நிறைவேற்றுகிற முறையைக் கொண்டுவரவேண்டும். மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் இப்படிப் பரிசீலனை செய்து திட்டங்களை வகுப்பதற்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அரசாங்க ஆணை 2,496-ஐ இப்போது யாரும் அமல்படுத்துவது கிடையாது. இதுதான் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், ஆணையாளர்கள் இவர்களுக்கிடையே இருக்க வேண்டிய ஒற்றுமையையும் சேர்ந்து செயல்பட வேண்டியதையும் வழிவகுப்பது. அந்த ஆணையை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்டாம்ப் ட்யூட்டியில் இருந்து வருகிற வருமானத்தை சர்க்கார் நிலவரி அடிப் படையில் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திற்கும் பிரித்துக் கொடுக்கிறார்கள். அதை மக்கள் தொகை அடிப்படையில் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் பஞ்சாயத்து யூனியன்களிலே லைசென்சு கட்டணம் வசூலிக்கும் முறையானது இப்போது ஹெல்த் இன்ஸ்பெக்டர்களிடம்—சுகாதார ஆய்வாளர்களிடம்—ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி கிராம பஞ்சாயத்துத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. இராசாங்கம் : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெறுகிற சமுதாய நலத் திட்ட மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட பிறகு ஏற்கனவே நமக்கு முன்னால் இருந்த ஆட்சி முறையில் ஜில்லா போர்டுகள், தாலுக்கா போர்டுகள் என்று இருந்த முறைதான் மாறி இருக்கிறதே தவிர வேறு வித்தியாசம் இல்லை. அப்போது தாலுக்காவுக்கு 15 அல்லது 16 அங்கத்தினர்கள் கொண்ட தாலுக்கா போர்டு என்று அமைத்து நிர் வாகத்தை கவனித்தார்கள். இப்போது அதுவே 3 வட்டாரத்திற்குப் பிரிந்து காரியம் செய்து வருகிறார்கள். அப்போது தாலுக்கா போர்டுக்கு இருந்த வருவாய் என்ன? இப்போது வருகிற வருவாய் என்ன ? அந்தக் குறைந்த வருவாயை வைத்துக்கொண்டு அவர்கள் எவ்வளவு திருப்திகரமான முறையில் காரியங்களைச் செய்து வந்தார்களோ அந்த அளவுக்கு இப்போது திருப்தி மக்களிடையே இருக்கிறதா என்றால்—நான் குற்றமாகச் சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்டாம்—அங்கங்கே மக்கள் சொல்லிக்கொண்டிருப்பதில் இருந்து மக்களிடையே திருப்தி இல்லை என்பதை எல்லோரும் அறிவார்கள். காரணம் அதிகாரம் சிதறுண்டு போய் இருக்கிறது. கல்வியை எடுத்துக்கொண்டால் ஒரு புறம் கல்வி இலாகா அதிகாரிகள்; இன்னொரு புறம் இ. ஓ; அடுத்த பக்கம் பஞ்சாயத்துத் தலைவர்—இப்படித் தனித்தனியாக கவனித்துக் கொள்ளுகிற அதிகாரம் சிதறுண்டு இருக்கிறபோது பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டியிருக்கிறது ? யார் கை அந்தப் பகுதியில் பலமாக இருக்கிறதோ அவர் பக்கம் இருந்து, அவருக்கு திருப்தி ஏற்படக் கூடிய முறையில் நடந்து கொண்டு போய்விடுகிறார்கள். தங்கள் கடமையைச் சரியாகச் செய்கின்ற நிலை இல்லை. சட்டத்தின் அடிப்படையில் அப்படி இருக்கிறது. கல்வியின் தரத்தை நாம் பாதுகாக்கவேண்டுமென்றால் கல்வியின் வளர்ச்சியைக் கண்காணிக்கின்ற பொறுப்பை கல்வி இலாகா ஒன்றினிடத்திலேயே விட்டுவிடுவது நல்லது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நாம் பார்க்கிற அனுபவத்தில் இருந்து இதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும்.

சாலைகள் போடுவது என்றால் அதிலும் மூன்று நான்கு வகை. பஞ்சாயத்து எல்லைக்குள் பஞ்சாயத்துக்களே போட்டுக்கொள்ள வேண்டிய சாலைகள், ஐந்து மைல் நீளத்திற்கு மேல் பஞ்சாயத்து யூனியன்கள் பராமரிப்பில் போட்டுக்கொள்ளவேண்டிய சாலைகள், அதற்கு மேல் ஹைவேஸ் டிபார்ட்மெண்டு மேற்கொள்ளவேண்டிய சாலைகள் இப்படி.

ஒரு பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால் ஆண்டு வருமானம் 800 ரூபாய் இருக்கும். அந்த ஊர் நான்கு ரோடுகளையும் கூட நல்லமுறையில் பராமரிப்பது என்றால் 1,600 ரூபாய் தேவைப்படும். அவர்களிடம் பணம் இல்லை என்றால் அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களை அணுகவேண்டியிருக்கிறது. இதுபோல ஐந்தாறு கிராமங்கள் கோருகிற போது பஞ்சாயத்து யூனியன்களிடம் பணம் இல்லை. அவர்கள் சர்க்காரிடம் வரவேண்டியிருக்கிறது. அரசாங்கம் உதவவில்லை என்றால் அந்தச் சாலைகள் பராமரிக்க முடியாது போய்விடுகிறது. ஆகவே இதை நன்றாகச் சிந்தித்து பார்க்கிறபோது சாலைகளைப் போடுவதும், மேம்பாலங்கள் கட்டுவது மாகிய பொறுப்பை சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டும், இதுதான் நல்லது என்று சொல்ல விரும்புகிறேன். வரியை வேண்டுமானால் அங்கேயே வசூலிக்கட்டும், ரெவின்யூ துறையில் இப்போது சர்க்கார் வசூலிக்கிறமாதிரி. அந்த வேலைகளைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும்.

அடுத்து, முன்பு லோக்கல் பண்டு ஆஸ்பத்திரிகளாக இருந்தவை தான் இப்போது யூனியன் நிர்வாகத்தில் வந்திருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக் கட்டடத்தைப் பார்த்தால் கூண்டுபோல இருக்கும். உள்ளே கம்பௌண்டருக்குத்தான் இடம் இருக்கும். டாக்டர் இருந்தால் நாற்காலி கூட இருக்காது. அவற்றுக்குப் போதுமான நிதி இல்லை. நாம் மருந்துக்காக 5 ஆயிரம் கொடுக்கிறோம். இது போதாது. ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அவற்றை அபிவிருத்தி செய்ய அதிகத் தொகை ஒதுக்க வேண்டும். " வேண்டுமானால் பெரிய சர்க்கார் ஆஸ்பத்திரிக்குப் போகட்டும் " என்று சொல்லக்கூடும். குறிஞ்சிப்பாடியை எடுத்துக்கொண்டால் அங்கிருந்து 20 மைல் தள்ளி சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு கடலூர் போகவேண்டும். அதற்குள் நோயாளிகளின் நிலை மோசமாகப் போய்விடும். ஆகையால் இருக்கிற ஆஸ்பத்திரிக்கு 10 ஆயிரம் வரையிலாவது கொடுத்து அபிவிருத்தி செய்யவேண்டும். குள்ளஞ் சாவடி ஆஸ்பத்திரிக்கும் கட்டடம் ்டுவதற்கும், மருந்துக்கும் அதிக நிதி ஒதுக்க வேண்டும். பத்தாயிரம் வரை ஒதுக்கினால் பரவாயில்லை. இவற்றை கவனித்து ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, கடலோரப் பகுதிகளில், குறிப்பாக பெரிய குப்பம் பகுதியிலே மீனவர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் வாழுகின்ற பகுதிகள், 30, 35, கிராமங் கள் இருக்கின்றன. அவர்கள் மருத்துவ வசதி பெறவேண்டு மென்றால் உப்பனாறு தாண்டித்தான் வரவேண்டும். தோணி ஏறித்தான் வரவேண்டியிருக்கிறது. பிரசவ வேதனை ஏற்பட்டு விட்டால் அவர்கள் எல்லாம் அங்கிருந்து மருத்துவ வசதி பெற வருவதற்கு மிகவும் கஷ்டப்படவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அங்கேயும் ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்தி மருத்துவ வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. நா. துரைப்பாண்டியன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். பஞ்சாயத்து என்று வந்ததோ அன்றுதான் கிராமங்களிலே எல்லாம் தீண்டாமை ஒழிந்தது. அந்த முறையில் இந்தப் பஞ்சாயத்து ஆட்சி முறையை மக்கள் எல்லாம் விரும்புகிறார்கள்.

அடுத்தாற்போல் பஞ்சாயத்துக்கள் நல்லமுறையில் நடந்தால்தான் கிராமங்கள் முன்னேறும், நம்மை நாமே ஆண்டு கொள்ளுகிறோம் என்று மக்கள் புரிந்து கொள்வார்கள். அந்த முறையில் எதாகிலும் அந்த ஊரில் அபிவிருத்தி செய்தால் மக்கள் பங்குத்தொகை கொடுக்க வேண்டுமென்று இன்றைய சட்டத்தில் இருக்கிறது. அப்பொழுதுதான் அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் கிராமத்தில் எல்லாக் காரியங்களையும் தாங்களே செய்துகொள்ளுகிறோம் என்ற நம்பிக்கை ஏற்படும். பங்குத்தொகை கொடுத்தால்தான் நல்லது. பஞ்சாயத்துதான் செய்கிறது, யாரோ ஒருவர் செய்கிறார்கள் என்ற எண்ணம் மக்களிடத்திலே வரக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் செய்கிறார்கள். பஞ்சாயத்து நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால் வருமானம் அதிகமாக இருக்கவேண்டும். இந்தப் புறம்போக்கு நிலங்களையெல்லாம் இன்னும் பஞ்சாயத்துக்களிடத்திலே ஒப்படைக்கவில்லை. ஆற்றுப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, நீர்வாய்க்கால் புறம்போக்கு இவைகளைத்தான் ஒப்படைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களுக்கு எல்லாப் புறம்போக்குகளையும் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த சாலை போடுவதற்கு 40 பைசா கொடுக்கிறார்கள். அதே சமயத்தில் ஒரு பஞ்சாயத்தில் அதிக நபர்கள் இருக்கலாம், பஞ்சாயத்து விஸ்தீரணமாக இருக்கலாம். ஆகவே அந்தந்த யூனியன்களில் ரோடு எவ்வளவு நீளம் இருக்கிறதோ, எத்தனை பாலங்கள் இருக்கிறதோ அவைகளையெல்லாம் கணக்கிட்டு அந்த விகிதாசாரப்படி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் பங்கீடு ஒதுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயத் துறையில் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஏராளமாக கடன்கள் கொடுக்கிறார்கள். நல்லமுறையில் விருத்தி பண்ணுகிறார்கள். இருந்தாலும் கூட அபிவிருத்தி அதிகமாகும் காரணமாக, மக்கள் தேவை அதிகமாக இருக்கும் காரணமாக ஒரு சில திட்டங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் 3,000 ரூபாய்க்கு மேல் கடன் கொடுப்பதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை. அதற்கு மேல் ஒரு விவசாயி கடன் வாங்கவேண்டுமென்று நினைத்தால் மேல் அதிகாரிகளுக்கு மனு கொடுக்கவேண்டியிருக்கிறது. இதைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு தாசில்தார் போட்டிருக்கிறார்கள். அவர் வந்து இதையெல்லாம் பரிசீலனை செய்து கடன் கொடுப்பதற்குள்ளாக அவன் எதைச் செய்ய வேண்டுமென்று நினைத்தானோ அது முடிவதில்லை. ஆகவே, கமிஷனருக்கே ரூபாய் 3,000 முதல் 5,000 வரை கடன் வழங்கும் அதிகாரத்தைக் கொடுக்கும்படி சட்டத்தை திருத்தியமைக்கவேண்டும். அடுத்தபடியாக கிராம முன்னோடித் திட்டத்தின் மூலமாக கிராமக் குடிசைத் தொழில்களுக்கு கடன் கொடுக்கிறார்கள். நாங்குனேரியில் ஒரு முன்னோடித் திட்டம் இருக்கிறது. 2 ஆயிரம் 3 ஆயிரம் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அதை வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆபீஸரிடமிருந்து வாங்கவேண்டியிருக்கிறது. அவர்களிடம் அதற்காகப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே அதையும் பஞ்சாயத்து யூனியன்களே வழங்குவதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் அல்லது நகர சபை இவைகளில் எதை எடுத்துக்கொண்டாலும் அவற்றிற்கு வருமான வரியில் பங்கு கொடுப்பதில்லை, சேல்ஸ் டாக்ஸில் பங்கு கொடுப்பதில்லை. அந்தந்த பஞ்சாயத்து, அந்தந்த முனிஸிபாலிட்டிகள் அங்கேயுள்ள வீட்டுவரியை வைத்துத்தான் திறமையாக நடத்திக் கொள்ளவேண்டும். அதேமாதிரிதான் கார்ப்பரேஷனும். திறமையை வைத்துத்தான் இவைகளையெல்லாம் நடத்திக்கொள்ள வேண்டும். உள்ளதைக் கொண்டு நல்லதை மூடு என்று பழமொழி உண்டு. கார்ப்பரேஷன் நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்பதுதான் பொது மக்களுடைய கருத்து. இதை விளக்குவதற்கு ஒரு கதை சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள்.

அவர்கள் வியாபாரம் செய்ய பணம் கேட்டார்கள். அவன் ஒவ்வொருவனுக்கும் 1,000 ரூபாய் கொடுத்து நீங்கள் வீட்டை நிறைவு செய்யுங்கள் என்று சொன்னான். ஒருவன் 1,000 ரூபாய்க்கும் வைக்கோல் போரை வாங்கிக் கொண்டு வந்து வைத்தான். மற்றொருவன் ஒரு அணா கொடுத்து ஒரு மெழுகுவத்தி வாங்கிக்கொண்டுவந்து வைத்து வீட்டை நிறைவடையச் செய்தான் வீட்டை வெளிச்சமாக இருக்கச் செய்தான். ஒருவனுடைய திறமை எப்படியிருக்கிறதோ அதைப்பொறுத்துத்தான் அவன் சாதிக்கமுடியும். பொது வாழ்க்கையில் திடீரென்று குபேரன் ஆகிவிட்டால், அவன் மாட மாளிகைகளுக்கு அதிபராகிவிட்டால், பொது மக்கள் அவனை கண்காணிப்பார்கள். திடீரென்று பணக்காரன் ஆகிவிட்டான் என்றால் அது கள்ள மார்க்கெட்டாலோ அல்லது லஞ்சம் வாங்கியதாலோதான் இருக்க முடியும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சோ. ஆறுமுகம் :** கனம் தலைவர் அவர்களே, தல நிர்வாகத்துறை மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றிப்பு வேலைகளில், லோக்கல் ரோட்ஸ் கிராண்ட்ஸ் ஆக வழங்கப்படுகின்ற 40 புதிய காசுகள் 50 புதிய காசுகளாக உயர்த்தப்பட வேண்டுமென்பது பரிசீலனையில் இருப்பதாக அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது. ஆகவே 40 புதிய காசுகளாக இருப்பதை 50 புதிய காசுகளாக உயர்த்துவதைவிட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு ஒன்றிப்பு மன்றங்களுக்கு இதற்காக எவ்வளவு செலவு ஆகும் என்பதைப் பார்த்து அந்தத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறுபாசன வசதிக்கு ஒரு ஏக்கருக்கு 1·50 என்ற வீதத்திலே தரப்படுகிறது. ஆகவே அதையும் மாற்றி, அந்த வட்டத்திலே எவ்வளவு ஒன்றிப்பு மன்றங்கள் இருக்கின்றன, அவைகளின்கீழ் எவ்வளவு சிறுபாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்பதைப் பார்த்து அந்த அளவிலே ஒன்றிப்பு மன்றங்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கான தொகையை ஒதுக்குவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றிப்பு மன்றங்களிலே விவசாய டெப்போக்கள் இருக்கின்றன. ஒரு டெப்போ தலைமையிடத்தில் இருப்பதால், 20 மைல் தூரம் இருக்கிறது. இதனால் 15 மைலுக்கு அப்பாலிருந்து விவசாயிகள் வந்து பூச்சிக்கொல்லி மருந்து முதலியவை வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு வட்டத்திலும் இரண்டு டெப்போக்களாவது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புல்டோஸேர்ஸ், பவர் டிரில்ஸ், டிராக்டர்ஸ் இவைகள் எல்லாம் கேட்டிருக்கிறோம். மாவட்டக் கூட்டுமன்றத்தின் மூலமாகக் கூட கேட்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்காத காரணத்தாலே விவசாய அபிவிருத்தி அடைவதிற்குத் தடையாக இருக்கிறது. ஆகவே, புல்டோஸேர்ஸ், பவர் டிரில்ஸ், டிராக்டர்ஸ் முதலியவை ஒவ்வொரு ஒன்றிப்பு வட்டாரத்திற்கு வழங்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யூனியன் நிர்வாகத்திலே உள்ள பள்ளிகளைப் பராமரிக்க யூனியன் பொது நிதியிலிருந்துதான் ஒதுக்கவேண்டியிருக்கிறது. இதைக்கூட சர்க்கார் மான்யமாகக் கருதி 50 சதவீதம் உயர்த்திக்கொடுத்தால் பழுது ஏற்பட்டுள்ள பள்ளிகளை அடிக்கடி பராமரிக்க முடியும். புதிய பள்ளிகளுக்கு டைப் டிசைன் விஷயமாக 10 ஆயிரம் ரூபாய் மதிப்பிட்டு வந்தார்கள். இப்பொழுது ஷெட்யூல்டு ரேட் படி 13 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒரு கட்டடம் வருகிறது. ஏற்கனவே 10 ஆயிரத்திற்கு அரசினர் மானியம் வழங்கியது 4,000 ரூபாய். ஆனால் இப்பொழுது 13 ஆயிரத்திற்கு மேல் வரும் என்று இருந்தும்கூட அதே 4,000 ரூபாய்தான் அரசினர் மானியமாகக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்தக் காரணத்தினாலே கிராமப்புறங்களிலே பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்குத் தடையாக இருக்கிறது. ஆகவே உடனடியாக புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு யூனியனுக்கு, 13,000 என்று மதிப்பிடப்பெற்றால் அதற்கு 7,000 ரூபாய் என்ற அளவிலே கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியனிலிருந்து பழத்தோட்டம் ஆரம்பிக்கிறார்கள், அதை வரவேற்கிறேன். ஆனால் அந்தத் தோட்டம் அமைப்பதற்கு முன்னால் அதற்கு வேண்டிய கிணறுகள் வெட்டி பம்பு செட்டுகள் எல்லாம்

[திரு. சோ. ஆறுமுகம்] [26th March 1966

வைத்துவிட்ட பிறகுதான் இதில் ஈடுபட வேண்டுமென்று ஒரு வரையறை வைக்கப்பட வேண்டும். இன்றையதினம் செடிகளை வைத்து விடுகிறார்கள். அதற்கு தண்ணீர் ஊற்ற வசதி இல்லாமல் நாளா வட்டத்தில் அழிந்து விடக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீப்பைப் பற்றி ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறேன். யூனியன் ஜீப்பை ரெவின்யூ இலாகாவிலிருந்து அடிக்கடி எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு 11 மணிக்கு ஜீப் தேவை என்று சொன்னால் 10-45க்கு ஸ்பெஷல் மெசஞ்சராக ஒரு பியூனை அனுப்பி ஜீப்பை எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் யூனியன் வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஜீப் இருந்தால் யூனியனுக்கு என்று முழுமையாக இருக்கட்டும். இல்லாவிட்டால் ரெவின்யூ இலாகாவே அதை எடுத்துக் கொள்ளட்டும். ஜீப்பை கொடுத்துவிட்டு அதைப் பயன்படுத்தும் அதிகாரம் ரெவின்யூ இலாகாவின் கையில் இருப்பதை மாற்றி அமைக்கவேண்டும்.

பிரதம சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதைக் குறித்து குறிப்புகள் தந்திருக்கிறார்கள். ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 172 பிரதம சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கணக்குதரப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்ட ஆரம்ப காலத்தில் 120 சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1965-66ல் 31 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரை 151 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 172 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருப்பது சரியல்ல. இதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

* **திரு. எம். எஸ். மணி:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீதுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திருச்சி நகரமன்றத்தில் நடைபெறுகிற நிர்வாக ஊழல்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 24—1—1966-ல் தேதி தேவர் மன்றத்தில் ஒரு நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. அதிலே 3 நாற்காலிகளைப் பூட்டி வைத்தார்கள். அவற்றிலே முறையே சேர்மன், வைஸ் சேர்மன், கமிஷனர் ஆகிய மூவருந்தான் உட்காரலாம் என்ற நியதி இருந்தது. இதைப் பற்றி அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கருணாநிதி அவர்களும் குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்களுக்கு ஒரு புகார் கடிதமும் கொடுத்தோம். அதன் பேரில் அதை உடனடியாக நீக்கிவிடவேண்டுமென்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு போட்டிருப்பதாக அறிகிறேன். அதற்காக கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அங்கிருக்கிற வாச்மேன் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அந்த வாச்மேன் பாதிக்கப்படாமல் அரசாங்கம் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்திலே ஒரு குற்றம் நடைபெற்றிருக்கிறது. 23—2—1966-ம் தேதி நகராட்சி மன்ற கவுன்சிலராக இருக்கிற சக்கரபாணி என்பவர் ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்காக மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை அனுமதி வாங்கினார். மூன்று மணியிலிருந்து ஐந்து மணி வரை என்றால் 30 ரூபாய் கட்டினால் போதும். ஐந்து மணிக்கு மேல் சென்றால் மின்சாரம் கொடுக்கப்படுகிற காரணத்தால் 60 ரூபாய் கட்டவேண்டுமென்று இருக்கிறது. அனுமதி வழங்கியது 3 மணியிலிருந்து 5 மணிவரை. ஏ.22/54-70/66 என்ற உத்தரவின் கீழ் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் போஸ்டர்களிலும், அழைப்பிதழ்களிலும் 6 மணிக்கு நிகழ்ச்சி என்று இருந்தது. இதை நான் கமிஷனருக்குச் சுட்டிக் காட்டினேன். பிறகு கமிஷனர் சக்கரபாணியிடமிருந்து மேலும் 30 ரூபாய் வாங்கிக் கட்டி இருக்கிறார். மூன்று மணிக்கு மேல் நகராட்சியில் பணம் வாங்கக் கூடாது. ஆனால் 5½ மணிக்கு பணத்தை வாங்கியிருக்கிறார்கள். இப்படி நகராட்சி மன்றத்தில் இருக்கக்கூடிய கவுன்சிலரே நகராட்சிக்குக் கிடைக்க வேண்டிய

26th March 1966] [திரு. எம். எஸ். மணி]

பணத்தை ஏமாற்றுகிறார். இதை எதிர்க்கட்சியினராகிய நாங்கள் சுட்டிக் காட்டிய காரணத்தால் அந்தத் தொகை வசூலிக்கப்பட்டதே தவிர இல்லையென்றால் 30 ரூபாய் மட்டுமே கட்டி விட்டு அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கும்.

திருச்சி நகராட்சியைப் பொறுத்தவரை நடைபெறுகிற சில நிலைமைகளை அமைச்சருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கு தெருவுக்கு பெயர் மாற்றுவது தினசரித் தொழிலாகப் போய்விட்டது. நவாப் தோட்டம் என்று பரம்பரையாக இருந்ததை ஏ.எஸ். கிருஷ்ணமூர்த்தி தெரு என்று மாற்றியிருக்கிறார்கள். மாதுளங்கொல்லை தெரு என்று இருந்ததை பி. மு. ஜே. சாமி தெரு என்று மாற்றியிருக்கிறார்கள். கீழப் புளிவார் ரோடு, மேலப்புளிவார் ரோடு என்று இருப்பதை ஒரு கவுன்சிலர் பெயரால் பாபு ரோடு என்று மாற்றியிருக்கிறார்கள். தங்களுடைய பெயர்களையும், சொந்தக்காரர்களுடைய பெயர்களையும் வைக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்கவேண்டும். அப்படிப்பட்ட பெயர் மாற்றத்திற்கு அனுமதி கொடுக்கக் கூடாது. ஏராளமான மக்கள் புகார் அனுப்பியிருக்கிறார்கள். இதைப்பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகரத்தில் மத்திய பஸ் ஸ்டாண்டு ஏற்படுத்த வேண்டுமென்று நீண்ட நாட்களாக டி.டி.சி. கூட்டத்தில் சொல்லியும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. பல சிக்கல்களும், தகராறுகளும் இருக்கின்ற காரணத்தால் நகராட்சி மன்றம் இதுவரையில் புது பஸ் ஸ்டாண்டை கட்டாமலே இருந்து கொண்டிருக்கிறது. அதை உடனடியாகக் கட்டவேண்டும்.

திருச்சி நகரத்தில் கிட்டத்தட்ட 200க்கு மேற்பட்ட டாக்சிகள் இருக்கின்றன. அங்கு டாக்சி ஸ்டாண்டு இல்லை. பொதுக் கக்கூஸ் இல்லை. தண்ணீர் வசதி இல்லை. இந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பது பற்றி பரிசீலிக்காமல் பெயர்களை மாற்றுவதிலேயே திருச்சி நகராட்சி சென்று கொண்டிருக்கிறது. நமது அரசாங்கம் சரியான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டும்.

நகராட்சியில் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளுக்கு பென்ஷன் கொடுக்கப்படவில்லை. 1—4—1962-ம் தேதியிலிருந்து அதிகாரிகளுக்குப் பென்ஷன் கொடுக்கும் சட்டம் வந்து விட்டது. அதே தேதியிலிருந்து சிப்பந்திகளுக்கும் பென்ஷன் கொடுக்கும் சட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஜீப் டிரைவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய பேசிக் பே 70 ரூபாய். டி.ஏ. நாள் ஒன்றுக்கு ரூ. 1·25. எட்டு மணி நேரம் வேலை செய்தால்தான் டி.ஏ. கொடுக்கப்படும். அங்கிருக்கும் கமிஷனர் 4 மணி நேரம் வெளியே சென்று விட்டால் அந்த டிரைவருக்கு டி.ஏ. கிடைக்காது. லாரி டிரைவர்களாக இருப்பவர்கள் மாதத்தில் 15 நாட்கள் வேலை செய்தால் 150 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. இவர்களுடைய சம்பளத்தையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்.டி.சி. ஸ்கேல் அளவுக்காவது அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும்.

வையம்பட்டி பஞ்சாயத்திலே கட்டடம் கட்டியிருக்கிறார்கள். அதிலே அடிக்கல் நாட்டப்பட்டிருப்பதிலே கீழே ஒருவருடைய பெயரைப் பொறித்திருக்கிறார்கள். " முயற்சியாளர் : அய்யாவு நாய்க்கர் " என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மானியம் கொடுத்து அதிலே கட்டப்பட்ட கட்டடம் அது. அதிலே தன்னுடைய செல்வாக்கு காரணமாக "முயற்சியாளர் : அய்யாவு நாய்க்கர்" என்று பொறித்திருப்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அந்தப் பஞ்சாயத்து தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். சமீபத்தில் பொங்கல் விழாவின்போது காந்தி சிலைக்குப் பெயிண்ட் அடிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த காந்தி சிலைக்குப் பின்னாலேயே குடுமி இருந்ததாகச் சொல்கிறார்கள். பெயிண்ட் அடித்த வரும், பஞ்சாயத்துத் தலைவரும் சேர்ந்து காந்தி சிலையில் இருந்த சிண்டைப் பிடுங்கி விட்டார்கள் என்று ஒரு காங்கிரஸ்காரர் புகார் செய்தார். அதற்காக போலீசார் அவர்கள் இருவரையும் கைது செய்து, தற்போது அவர்கள் 'பெயிலி'ல் திருச்சியிலேயே இருக்க வேண்டுமென்ற நிபந்தனையில் திருச்சியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். காந்தி சிலைக்கு இருந்த சிண்டை எடுத்து விட்டதாகக் கூறி அதிலே பஞ்சாயத்துத் தலைவரைச் சம்பந்தப்படுத்தி இன்றையதினம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதைப்பற்றி அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.பி. பழனி : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் சமுதாய நலத் திட்ட மானியக் கோரிக் கையை வரவேற்று, ஆதரித்து என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நாட்டு மக்கள் நன்றியுணர்ச்சியோடு பார்க்கிற பஞ்சா யத்து திட்டத்தைப் பற்றி பேசிய சுதந்திரா கட்சி அங்கத்தினர் அவர்கள் " உருப்படியான எந்தத் திட்டமும் நடைபெறவில்லை " என்று ஒரு மிகப் பெரிய பகிரங்கமான குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். அதைப் பார்க்கின்ற நேரத்திலே சுதந்திரா கட்சியைச் சார்ந்த அவர்கள் கறுப்புக் கண்ணாடி அணிந்து கொண்டு இந்தப் பிரச்னையை அணுகுகிறார்களோ என்ற எண்ணமே எனக்கு ஏற்பட்டது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து, இந்த மானியக் கோரிக்கையோடு இணைந்தது சென்னை நகராட்சி நிர்வாகமாகும். நகராட்சி நிர்வாகத்தைப்பற்றிப் பேசிய திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் இருக்கின்ற குற்றத்தை திசை திருப்பி விடுவதற்கு முயற்சித்தார்கள் என்றே கருதுகிறேன். அரசாங கத்தால் கொடுக்கப்படுகிற நிதி, மக்களிடத்திலிருந்து வசூலிக்கப்படுகிற வரி, முறையாகச் செலவு செய்யப்படுகிறதா, அதிலே நிர்வாக ஊழல் இருக்கிறதா என்பதுதான் பிரச்னையே தவிர, அரசாங்கம் ஒத்துழைக்க வில்லை, வரி வசூலிப்பது கட்டுப்படுத்தப்படுகிறது என்றெல்லாம் சொல்வது உண்மையிலேயே மாறுபட்ட திசைக்குத் திருப்பிப் பேசுகிற பேச்சாகும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

12-00 noon. நிர்வாக ஊழல் கண்டனம் ஒரு வார காலமாக பொதுமக்களாலும், காங்கிரஸ் கவுன்சிலர்களாலும், சென்னை நகரத்தில் பல பொதுக்கூட்டங்கள் வாயிலாக மக்கள் மத்தியில் எடுத்துச்சொல்லப்பட்டு வந்ததைப் பார்த்தோம். இந்த ஊழல்களைத் தவிர்ப்பதற்கு குறிப்பாக நம்முடைய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள், ஒரு காங்கிரஸ் கவுன்சிலர் குறிப்பிட்டிருப்பதைப் போல், மூன்று நீதிபதிகளை நியமனம் செய்து இருக்கிற ஊழல்களைக் கண்டு பிடித்து ஆவன செய்யவேண்டுமென்ற கருத்தை இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து நிர்வாகத்தின் வளர்ச்சிபற்றி பார்க்கின்ற நேரத் தில் மக்களிடத்திலே அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படுதல் வேண்டும். அவர்களுக்கான திட்டங்களை அவர்களே உருவாக்கி அவர்களே ஆட்சி புரிந்து கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட உயர்ந்த திட்டமாகும், இந்த பஞ்சாயத்து திட்டம். இத்தகைய பஞ்சாயத்து திட்டத் திற்கு மாவட்ட அளவில் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தினுடைய தலைவராக மாவட்ட கலெக்டர் இருப்பது உண்மையிலேயே இந்தத் திட்டத்திற்கு இழுக் கானதாகும். இதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சொல்லிக் கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் தலைவர்களாக இருக்கவேண்டும், அதற்கான சட்டத்திருத்தத் திற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்றும் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து மன்றத்தின் கண்காணிப்பிலே இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளிகளில் அதிகாரம் யாருக்கு என்ற போட்டியும், பூசல்களும் ஆங்காங்கிருக்கிற காரணத்தினாலும், சிறந்த கல்வி ஏழைக் குழந்தை களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடும், அவர்களிடையே இன்று முறையான இணைப்பு, 'கோவார்டினேஷன்' இல்லாத காரணத்தி னாலும், எவ்வாறு பல்கலைக் கழகக் கல்வி தனியாக இயங்குகிறதோ, எப்படி உயர்நிலைக் கல்வி தனியாக இயங்குகிறதோ அதேபோன்று இந்த ஆரம்பப் பள்ளிகளையும் 'போர்ட் ஆஃப் எலிமெண்டரி எஜுகேஷன்' என்று தனியான ஒரு அமைப்பை உருவாக்கி அரசாங்கத்தின் கவனத்திலும், கண்காணிப்பிலும் அது இருப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல அங்கத்தினர்கள் சாலைச் சீரமைப்பைப் பற்றிச் சொன்னார் கள். இன்று தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சாலைச் சீர மைப்பு மிக மிக பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்ற கருத்தை பல அங்கத்தினர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். நபருக்கு 40 காசு என்ற விகிதாசாரம் உண்மையிலேயே மிக மிகக் குறைந்த விகிதாசாரமாகும். இதை வைத்துக்கொண்டு சாலைச் சீரமைப்பை நிச்சயமாக நல்லமுறையில் செய்ய இயலாது என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்து ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பல இடங்களில் விஸ்தரிப்பு அதிகாரிகள், ஈ.ஓ.(இண்டஸ்ட்ரீஸ்), தொழில்துறை விஸ்தரிப்பு அதிகாரிகள் தொழில் துறையில் படித்து பயிற்சி பெற்று பட்டம் பெருமல் வேறு மற்ற மற்ற துறைகளில் பட்டம் பெற்றவர்கள் ஈ.ஓ. (இண்டஸ்ட்ரீஸ்)-ஆக இருக்கும் நிலைமை இருக்கிறது. அதை மாற்றியமைத்து தொழில் துறையில் படித்து பட்டம் பெற்றவர்கள் தான் ஈ.ஓ. (இண்டஸ்ட்ரீஸ்)-ஆக வரக் கூடிய அளவிற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தேர்தல் முறையில் இருக்கிற குற்றங்குறைகளைப் பற்றி பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்களில் மூன்று தேர்தல்களை முடித்து விடக்கூடிய அளவிற்கு சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திச் சொல்கிறேன். பல இடங்களில் பஞ்சாயத்து உறுப்பினர்கள் 5,7,9, என்ற முறையில் ஒற்றை வரிசையில் இருப்பதைப் பார்க்கிறோம். தேர்தலை நல்லமுறையில் நடத்துவதற்கும், அதோடு கொண்டுவரப்படுகிற தீர்மானங்களில் நல்ல முறையில் முடிவு எடுக்கப்படுவதற்கும் 6,8,10 என்ற இரட்டை வரிசையில் இருப்பதை மாற்றி ஒற்றை வரிசையாக இருந்தால் எளிதாக இருக்கும். அதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

* SRI S. NANJUNDA ROW: Mr. Speaker, Sir, while speaking on the Municipal administration I just want to point out only one thing, namely, that I am a regular user of public buses and when I go to bus-stands I am obliged sometimes to use the bath-rooms and latrines in bus-stands. I am very sorry to say that in no single bus-stand the bath-room or latrine is kept properly by any municipality. If the bath-rooms and latrines in bus-stands are to be kept properly, I suggest that they may collect from those who come for bus-stands some entrance tickets, something like railway platform tickets. This amount may be used for proper maintenance of latrines and bath-rooms.

I have a suggestion to make with regard to housing units. I congratulate the Housing Board on the work it has done so far and I would only request that housing units may be extended to municipalities like Palani and Dindigul for the purpose of housing the poor.

[Sri S. Nanjunda Row] [26th March 1966

Coming to Community Development, I would like to read a line from the Note on Community Development, circulated to us :—

"The federal structure of village panchayats, town panchayats and panchayat unions has been invested with powers and authority under the Madras Panchayats Act, 1958 to enable them to function as units of self-government."

So, it is self-government or local self-government and all members of the House had been in general supporting this. But the hon. Member Sri Kariamanicka Ambalam had suggested the closure of Panchayat Unions and Community Development Programme. Somehow I feel that he had not understood the philosophy of community development and the spirit behind it. I think the Social Education Organiser in his block should come and take him (Sri Kariamanicka Ambalam is a Panchayat Union Chairman) round a village covered by community development programme and explain to him how well suited the scheme is for the development of the **country.**

***திரு. டி. என். வடிவேல் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த
கிராம நல நிர்வாகத் துறை மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள்
பேச விரும்புகிறேன். காந்தி அடிகள் நினைத்தது போல் இன்று பஞ்சா
யத்து ராஜ்யம் ஏற்பட்டு ஆங்காங்கே கிணறுகளும், ஆங்காங்கே ரோடு
வசதிகளும், பள்ளிக்கூட வசதிகளும் ஏற்பட்டு கிராம மக்கள் நல்ல
வசதிகளை அடைந்திருக்கிறார்கள். கிராமங்களில் மாதர் சங்கங்கள் ஏற்
படுத்தி பெண்களுக்கு நல்ல அறிவு வளர்ச்சியை ஊட்டக் கூடிய முறையில்
கிராமங்களில் அவை அமைந்திருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்களில்
பெண்களும் நல்லமுறையில் பங்கெடுத்துக் கொண்டு நல்ல பணியாற்று
கிறார்கள். தர்மபுரி, பஞ்சாயத்து யூனியனாக இருந்தபோது அது "ஏ"
கிளாஸாக இருந்தது. இப்போது தர்மபுரி முனிசிபாலிட்டியாகி விட்டதால்
அதை "ஏ" கிளாஸாக மாற்றி வருவாயைப் பெருக்கித் தரவேண்டும்.
பஞ்சாயத்து யூனியன்களில் பில் கலெக்டர்கள் அதிக வசூல் தந்து
நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு ப்ரமோஷன் கிடைக்
கிறதா என்றால் கிடைப்பதில்லை. அவர்கள் மேஜர் பஞ்சாயத்துக்களில்
இருந்தே காலம் கழிக்கவேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களிலே
வித்தியாசம் இருக்கிறது. ஒரு பஞ்சாயத்து யூனியனில் 55 பஞ்சாயத்துக்கள்
இருக்கின்றன, ஒன்றில் 12, 14 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. குறிப்
பாக தர்மபுரி வட்டத்தில் பாலக்கோடு யூனியனில் 55 பஞ்சாயத்துக்கள்
இருக்கின்றன. அதை ஒரு கமிஷனரால் நிர்வகிக்கமுடியவில்லை. ஆங்
காங்கு செல்லமுடியாமல், மக்களுக்கு தொண்டு புரிய முடியாமல் இருக்
கிறது. ஆகவே அந்த பஞ்சாயத்து யூனியனை இரண்டாகப் பிரித்தால்
நிர்வாகம் நல்ல முறையில் நடக்கும். தாய்-சேய் நிலையங்கள் 2,426
இருப்பதாகச் சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களில் அந்த வேலைக்கு
சரிவர யாரும் வருவதில்லை. ஆகவே சரியான ட்ரெயினிங் கொடுத்து
தாய்-சேய் விடுதிகளை பஞ்சாயத்து யூனியன்களில் ஏற்படுத்தவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். சாலை மரங்களை ஆங்காங்கு (பஞ்சா
யத்தில் போடுகிறார்கள்) பஞ்சாயத்து யூனியனில் போட்டு
வருவாயைப் பெருக்க வசதி செய்ய வேண்டும். தர்மபுரி முனிசிபாலிட்டி
யாகிவிட்டது. அங்கு குடிதண்ணீர் மிக மிகக் குறைவாக இருக்கிறது.
அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து அதற்கு முனிசிபாலிட்டி 16,000
ரூபாய் கட்டியாகிவிட்டது. ஆகவே சீக்கிரம் அங்குள்ள மக்களுக்கு குடி
தண்ணீர் வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

26th March 1966]

திரு. ம. கமலநாதன் : கனம் தலைவர் அவர்களே, அண்மையில்
நடைபெற்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல் மிகச் சிறப்பாக நடை
பெற்றது என்று பல சுவையான நிகழ்ச்சிகளை இந்த அறிக்கையில் குறிப்
பிட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல், யூனியன் தலைவர்
கள் தேர்தல் இவை நேரடியாக நடைபெற வேண்டும் என்று
பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்ட
நேரத்தில், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைவது போல,
அரசாங்கம் இதில் தலையிட்டு, நேரடி தலைவர் தேர்தல் முறை வேண்டாம்
என்று உத்தரவு போட்டது. பின்னால் தேர்தல் நேரத்தில் ஏற்பட்ட கஷ்டங்
களை அரசாங்கம் உணர்ந்து நேரடி தேர்தல் முறையைக் கொண்டுவருவ
தற்கு ஆலோசித்துக்கொண்டு இருக்கிறது. நேரடித் தேர்தல் நடந்தால்
தான் இப்போது நடைபெறுகின்ற சூழல்களைத் தடுக்க முடியும் என்பதைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற மேல் அவைக்கு, ஸ்தல ஸ்தாபனத் தொகுதியிலிருந்து
தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதற்கு பலர் வேட்பாளர்களாக நிற்கின்றார்கள்.
ஆனால், பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் தேர்தலில் போட்டி
போடும்போது, அந்தந்த யூனியன் அல்லது பஞ்சாயத்து வாக்காளர்கள்
பட்டியலில் தன் பெயர் இருக்க வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில்
ஸ்தல ஸ்தாபனத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும்
என்று போட்டி போடுகின்ற வேட்பாளர்களுடைய பெயர் அந்தந்த
ஸ்தல ஸ்தாபன வாக்காளர் பட்டியலில் இருப்பதில்லை. அப்படியிருந்தும்,
அவர்கள் எப்படி வேட்பாளர்களாக நிற்பதற்கு அரசாங்கம் அனுமதிக்கிறது
என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே
ஸ்தல ஸ்தாபன தொகுதிக்கு போட்டி போடக்கூடியவர்கள் அந்த
ஸ்தல ஸ்தாபன தொகுதி வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்
என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டுமென்றால், பஞ்சா
யத்து அமைப்பை ஓரளவுக்கு மாற்ற வேண்டும். இப்போது பஞ்சாயத்து
யூனியன் பெரிய அளவில் இருக்கிறது. இதை நல்ல முறையில் மாற்றி
அமைக்க வேண்டும். இதைப் பற்றி நான்கு ஆண்டுகளாகச் சொல்லிக்
கொண்டு வருகிறோம். தேர்தல் நேரம் வரும்போது அவசரம் அவசரமாக
வார்டுகளைப் பிரிக்கிறார்கள். பல இடங்களில் தலைவர்கள் தேர்தல் நடை
பெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். காரணம் இப்படிப்பட்ட காரி
யங்களால் ஸ்டே வாங்கி வழக்குகள் பல ஹைக்கோர்ட்டில் இருக்கின்றன.
சில இடங்களில் தலைவர்கள் தேர்தல் தேசீய நெருக்கடி காரணமாக
நடைபெறவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேயர் தேர்தலுக்கு
என்றால் நாம் விதிவிலக்கு அளிக்கிறோம். மேயர் தேர்தலை மட்டும்
நடத்தலாம் என்றிருக்கும்போது, பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலை
ஏன் நடத்தக் கூடாது? இந்தத் தேர்தல்களை எல்லாம் உடனடியாக
நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சங்கம் என்று சொல்லி ஒரு சங்கம்
இயங்கி வருகிறது. இதற்கு ஒரு தலைவர் பல ஆண்டுகளாக இருந்து
கொண்டிருக்கிறார். இவர் பஞ்சாயத்துக்களோடோ அல்லது
பஞ்சாயத்து யூனியனோடோ எந்தவிதமான தொடர்பும் இல்லாதவர். இப்
படிப்பட்டவர் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சங்கத்திற்குத் தலைவராக
இருந்து வருகிறார். அரசினரே இந்தச் சங்கத்திற்கு யூனியனிலிருந்து
100 ரூபாய், பஞ்சாயத்திலிருந்து 10 ரூபாய் ஆண்டு ஒன்றுக்குக் கொடுக்க
லாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் ஆண்டுதோறும் 60 ஆயி
ரம் ரூபாயை தனிப்பட்ட ஒருவரிடம் கொடுக்கக்கூடிய முறையில் இருக்
கிறது. இவ்விதம் தன் எதேச்சாதிகார முறையில், இந்தச் சங்கத்தை
நடத்தி வருகிறார். இது ஜனநாயகத்திற்கு முரணானது என்பதைத்
தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[திரு. ம. கமலநாதன்] [26th March 1966

பஞ்சாயத்துக்களுக்கு மானியம் கொடுக்கின்ற விஷயத்தில் எல்லா வற்றுக்கும் ஒரேமாதிரியாகத்தான் கொடுக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் இருக்கின்ற மக்கள் தொகைக்கு ஏற்ற அளவில், அங்கிருக்கின்ற பரப்பு அளவில் மானியம் கொடுக்கப்பட வேண்டும். இத்தனை கிராமங்களுக்கு இவர்கள் வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதைக் கணக்கிட்டு அதற்குத் தகுந்தவாறு மானியங்கள் கொடுக்கப்படவேண்டும். " எ—பி—ஸி—டி " என்று பஞ்சாயத்து யூனியன்களை கிளாஸிஃபிக்கேஷன் செய்திருப்பதை நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும். காரணம் அரசாங்கத்திற்கு வேலைகளுக்காக கொடுக்கப்படுகின்ற நன்கொடைகள் மாறுபடுகின்ற காரணத்தால், வேலைகள் தடைபடுகின்றன. ஆகவே, இதைப் பற்றி அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் ஒரேவிதத்தில்தான் ஸ்டாப்ஃகளை தருகிறார்கள். நண்பர் வடிவேலு அவர்கள் குறிப்பிட்டதுபோல், 10 பஞ்சாயத்துக்களைக்கொண்ட யூனியனுக்கும் ஒரேவிதமான ஸ்டாப்ஃதான், 72 பஞ்சாயத்துக்களைக்கொண்ட யூனியனுக்கும் ஒரேவிதமான ஸ்டாஃப்தான். ஒன்றில் யூனியனில் இருக்கின்ற பஞ்சாயத்துக்களுக்குத் தகுந்தபடி ஸ்டாப்களை அதிகப்படுத்த வேண்டும் அல்லது யூனியனை ரீ-அட்ஜஸ்ட் பண்ண வேண்டும்.

யூனியனில் பணியாற்றி வருகின்றவர்கள் இரண்டு எஜமானர்களுக்கு பதில்சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. கமிஷனரைப்பொறுத்தவரையில் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் இயங்கி வருகிறார். இதன் காரணமாக பஞ்சாயத்து யூனியன் வேலைகள் சரியாக நடைபெறுவதில்லை. பஞ்சாயத்து யூனியனில் வேலைகள் சரியாக நடைபெற வேண்டுமென்றால், கமிஷனர்களுக்கு என்று தனியாக ஒரு நிலை இருக்க வேண்டும். கடந்த ஐந்தாறு மாதங்களாகப் பார்த்துக்கொண்டு வருகிறோம்: அவர்கள் பல கடன்களை வசூலிப்பதில்தான் காலத்தைக் கழிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அதைத் தவிர அலுவலகத்தில் இருக்கின்ற மானேஜர்களுக்கு நாட்டாண்மைக் கழகத்தில் இருக்கின்ற ஆபீஸ் சூப்பரின்டென்டென்ட்களுக்கு இருக்கின்ற பொறுப்பைப் போல், சம்பளப் பட்டுவாடா, நினைவூட்டுக் கடிதம் எழுதுவது, பருவ வெளியீடுகள் இவைகளை எல்லாம் மானேஜர்கள் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும். அந்த நிலை ஏற்பட்டால், ஆணையாளர்கள் பொதுமக்களோடு தொடர்புகொண்டு அபிவிருத்தி வேலைகளில் காலத்தைக் கழிப்பதற்கு முடியும் என்று நம்புகிறேன்.

அடுத்து, கிராம சக்தி திட்டம் இப்போது நடைமுறையில் இருந்து கொண்டுவரும் என்று குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். இது எவ்வளவு காலத்திற்கு இருக்கும், இதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் என்பது தெரியவில்லை. பயன்படாமலிருக்கும் மனித சக்தியை உபயோகப்படுத்தி பஞ்சாயத்துக்களுக்கு கட்டடம் கட்டுவதில் ஈடுபடுத்த வேண்டும் என்று இருப்பது நன்றாகத்தான் இருக்கிறது. இதற்கு அதிகமான தொகை ஒதுக்கி நீண்ட நாள் இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 12,500 சில்லறை பஞ்சாயத்துக்கள் இருப்பதில் இதுவரை 500 பஞ்சாயத்துக்களுக்குத்தான் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இந்த நிலைமை எவ்வளவு சீர்கேடாக இருக்கிறது என்பதற்கு இது நல்லதொரு உதாரணமாகும்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், விவசாய டிப்போக்களை யூனியனில் இருக்கும் விவசாய விஸ்தரிப்பு அதிகாரியிடமிருந்து எடுத்து இலாகாவுக்கு கொடுத்துவிட வேண்டும். அப்போது இந்த விஸ்தரிப்பு அதிகாரி தன் முழு நேரத்தையும் வேளாண்மையில் ஈடுபடுத்த முடியும். அதேபோல் இதில் பல தவறான புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த இலாகாவுக்கு நல்ல திறமையுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி டைரக்டராக இருக்கிறார். இவர் சிறந்ததொரு அதிகாரி என்று நாங்களெல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு இருக்கக்கூடியவர்கள். அவர் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் இப்படிப்பட்ட புள்ளிவிவரங்கள்

26th March 1966] [திரு. ம. கமலநாதன்]

எப்படி வந்தது என்பது தெரியவில்லை. நாற்பதாயிரம் பேர்கள் கிராம சேவக்களாக இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சுத்த தவறு. கிராமத் தொண்டர் படை பற்றியும் அதேபோன்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. மாதர் சங்கங்கள் இருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. மாதர் சங்கங்கள் உள்ளபடியே இயங்குகின்றதா, மாதர் சங்கங்கள் எத்தனை இருக்கின்றன என்று கணக்கெடுப்பதைவிட, இதற்காக வாங்கப்பட்ட தையல் மெஷின்கள் எத்தனை துருப்பிடித்துக் கிடக்கின்றன என்று கணக்கெடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. இப்படிப்பட்ட தவறான புள்ளிவிவரங்களைத் தர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் கூற விரும்புவது, பஞ்சாயத்து யூனியனில் அதிகமாக அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதைத்தான், இதைப் பற்றி முன்னாலும் பேசப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரிகள் எல்லாம் இல்லாவிட்டால் அங்கேயிருக்கக்கூடிய கட்டுக்கோப்பு போய்விடும் என்று சொல்லப்படுகிறதே தவிர வேலைகள் சரியாக நடைபெற வேண்டும் என்ற அளவில் அரசாங்கம் அதிகாரிகளைப் போட்டிருப்பதாகத் தெரியவில்லை. கிராம சேவிகா, முக்கிய சேவிகா இவர்கள் தேவைதானா என்பதைப் பார்க்க வேண்டும். அதே போன்றுதான் கம்போஸ்ட் டெவலெப்மெண்ட் இன்ஸ்பெக்டர், ஈ.ஓ. (கோவாப்ரேஷன்), ஈ.ஓ. (இண்டஸ்ட்ரீஸ்), சோஷியல் வொர்க்கேர்ஸ் இப்படிப் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் யூனியனில் எந்தவிதமான பலனுள்ள வேலையும் செய்யாமல் வீணாக அரசாங்கப் பணத்தை சாப்பிட்டுக் கொண்டு சுற்றி வருகிறார்கள். இதைப் பற்றி அரசாங்கம் கவனித்து, நல்ல வேலைகளில் இவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்புமிக்க தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து ராஜ்யம் என்பது இன்றைக்கு அல்லது நேற்றைக்கு ஆரம்பித்த ஒன்றல்ல. நீண்ட நெடுங்காலமாக கிராமங்களில் நடந்து வந்திருக்கின்ற பஞ்சாயத்து முறைகளில் இன்னும் அதிக அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்ற காரணத்தினால் பஞ்சாயத்து மன்றங்கள் நிர்வகித்து வந்த நிர்வாகப் பொறுப்புக்கள் அரசியலோடு தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும் என்ற நிலைமை வந்தபோது, வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்திலேயே கொண்டுவரப்பட்ட நகராட்சி சட்டத்தின் அடிப்படையில் பஞ்சாயத்துக்கள் இயங்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டபோது, அதன் பயனாக தமிழ் நாட்டில் பஞ்சாயத்துக்களின் மீது நம்பிக்கையில்லாத ஒரு துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டு இருந்தது. அந்த நேரத்தில் உலக உத்தமர் காந்தி யடிகள், இந்த ராஜ்யத்திற்கு ராமராஜ்யம் என்று பெயரிட வேண்டும் என்று விரும்பினார். ராமராஜ்யம் என்ற அளவில் அமைக்க முடியாது என்ற காரணத்தினால் கிராம ராஜ்யம் என்ற அளவில் அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில்—அதற்கேற்ற வகையில் இந்திய அரசியல் சட்டத்தை அமைத்த நேரத்தில் அரசியல் சட்டத்தின் 40-வது பிரிவில் கிராமப் பஞ்சாயத்துக்களை அமைத்து அவைகள் சுய ஆட்சி உறுப்புக்களாக இயங்க வேண்டும் என்ற முறையில் அதற்கான அதிகாரங்களையும், அலுவல்களையும் எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. நிர்வாகத்தில் பரவலான முறையை அமைத்து, பஞ்சாயத்து அடிப்படையில் சமூக, பொருளாதார அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு, அந்தந்த கிராமங்களிலேயே சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்கின்ற வகையில் திட்டங்களை ஏற்படுத்துவதற்கும் நியதியை ஏற்படுத்தினார்கள். அதன் பயனாக இன்றையதினம் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 12,470 கிராமப் பஞ்சாயத்துக்களும், 423 நகரப் பஞ்சாயத்துக்களும் பணியாற்றி வருகின்றன. உண்மையிலேயே இந்த இயக்கம் மிகச் சிறந்த முறையிலே நடைபெற வேண்டுமென்று சொன்னால், அதிகாரங்கள் பரவலாக ஆக்கப்பட வேண்டும் என்பதைவிட, அதிகாரங்கள் அதிகமாக வழங்கப்பட வேண்டும் என்பதை விட, அதிலே பணியாற்றி வருகிறவர்கள் நல்ல மனப்பக்குவம் பெறத் தக்க வகையில் இருந்தால், சட்டத்தின் மூலமாக இதை நிறைவேற்றுவதைவிட, சமாதானத்தின்மூலம், சேவையின் மூலம் நல்ல பணியாற்ற முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

சட்டங்கள் புகுந்ததற்குப் பிறகுதான் கிராமங்களில் பஞ்சாயத்து தீர்ப்புக்கு உட்பட்டு கட்டுப்பட்டது, அவர்கள் சக்திக்கு மீறுகிற அளவுக்கு ஏற்பட்டுவிட்டது. தீர்க்க முடியாத பல வழக்குகள் பஞ்சாயத்து மூலமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட இடத்தில் அதிகாரம் தேவை, அதிகாரம் தேவை என்ற காரணத்தினால், அதிகாரம் இருக்கிறது என்று அவர்களும் கருதுகிற காரணத்தினால், அரசியல் புகுந்த காரணத்தினால், அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யும் துர்பாக்கிய நிலை ஏற்பட்டது.

சமீபத்திலே ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வந்த ஒரு குழு எங்களை சந்தித்தபோது, என்னிடம் முதன்முதலாகக் கேட்ட கேள்வி " உங்களுக்கு, பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அதிக அதிகாரம் வேண்டுமா ?" என்பது. நான் சற்று சிரித்துக்கொண்டே சொன்னேன்—"இது ஏதோ குழந்தையிடத்தில் போய் லட்டு வேண்டுமா என்று கேட்பது போல் இருக்கிறது" என்று சொன்னேன். உடனே அவர்கள் "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் ?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "அதிகாரங்கள் வேண்டாமென்று யாரும் மறுத்துக் கூற மாட்டார்கள்", ஆனால் எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை வைத்துக்கொண்டே எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பணம் அத்தனையையும் செலவு செய்துவிட்டோம். அதிக அதிகாரங்கள் இருந்தால், அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது ? அதிகப் பணத்தைக் கொடுத்துவிட்டு அதிக அதிகாரங்கள் தேவையா என்று கேட்டால் அதற்கு நான் பதில் சொல்ல முடியும் என்று குறிப்பிட்டேன். 'உண்மையிலேயே தமிழ்நாட்டில் எப்படியோ நீங்கள் நல்ல முறையில் பணிபுரிந்து வருகிறீர்கள் ; அதிகாரிகளுக்கும் உங்களுக்கும் நல்ல தொடர்பு இருக்கிறது. அதனால்தான் அந்த அளவுக்கு வெற்றிகரமாக நடத்துகிறீர்கள்' என்று சொன்ன அவர்களிடத்திலே நான் பூரிப்போடு சொன்னேன், "எங்களிடத்தில் இருக்கும் ஒற்றுமை காரணமாக அதிகாரிகளும் அதிகாரிகள் என்ற ஆணவத்தில் இல்லாமல் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற மனப்பான்மையோடு இருக்கிற காரணத்தினால் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன" என்று. அவர்களும் மெத்த சந்தோஷம் என்று சொன்னார்கள். இதை நான் குறிப்பிடுகிற நேரத்தில் இப்படிச் சொல்லிவிட்டு, இருக்கின்ற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டவேண்டுமென்று விரும்பினால் அதைத் தவறாகக் கருதக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக தமிழ்நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தல் முறைகள் முதன்முதலாக எப்படி துவக்கப்பட்டது என்று பார்க்கும்போது, அந்தக் காலத்தில் முதன் முதலாக பஞ்சாயத்துக்கள் துவக்கப்பட்ட நேரத்தில் யாராவது ஐந்து பேர்கள் பொறுப்பாக இருந்து நடத்துங்கள் என்ற நிலை இருந்தது. பிறகு ஐந்து பேர்களைத் தேர்ந்தெடுப்பது என்ற நிலை வந்தது. அதற்குப் பிறகு யார் தலைவராக இருப்பது என்று வரும்போது, அதிக அதிகாரங்கள் இருக்கின்றன என்று நம்பிய காரணத்தினால்தான், பஞ்சாயத்து தலைவராக ஆனால் அது உயர்ந்த பதவியாகும், அரசியல் கட்சிக்காரர்களிடத்தில் தொடர்பு கொள்ளலாம் என்று மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்ட காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. தேர்தல் எப்படி நடைபெற்று முடிந்தது என்பதை அதிகமாக நான் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் சுமுகமாக நடைபெற்று முடிந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் வேதனையோடு சொல்லுகிறேன். நாங்கள் நேரடித் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்ன நேரத்தில் அதை எதிர்த்து அது முறியடிக்கப்பட்ட காரணத்தினால் எத்தனை பஞ்சாயத்து மெம்பர்கள் பலியாகியிருக்கிறார்கள் ? எத்தனை பஞ்சாயத்து மெம்பர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள் ? எத்தனை கிராமங்களில் இன்னும் பஞ்சாயத்தையே கூட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருக்கிறது ? ஆனால் நீங்கள் அதையெல்லாம் மறைத்திருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே பல பஞ்சாயத்துக்களில் இப்படிப்பட்ட தவறுகள் இருக்கின்றன. இன்றைக்கு எங்கள் கட்சியைச்

சேர்ந்த கனம் அங்கத்தினர் கமலநாதன் குறிப்பிட்டதைப் போல இதிலே அரசாங்கத்தின் குறுக்கீடு இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை விட அரசியல் குறுக்கீடு இருக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். குறிப்பாகச் சொல்லிக்கொள்வேன், என்னுடைய பகுதியில் மாடக்குடி பஞ்சாயத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக பல முறை நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு, அதற்குப் பிறகு நாங்களெல்லாம் அதை எந்த எந்த வகையில் சீர்திருத்தம் செய்யலாம் என்று ஏற்பாடு செய்து, இறுதியில் கலெக்டர் உத்தரவு பிறப்பித்து அந்தத் தலைவர் 420—வது குற்றப் பிரிவு சட்டப்படி தண்டிக்கப்பட்டார் என்று விலக்கப்பட்ட காரணத்தினால், அந்த பஞ்சாயத்தில் மற்றும் என்னென்ன தவறுகள் செய்திருக்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டிருக்கும்போது, இங்கே ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், பஞ்சாயத்து நிர்வாகம் சரியாக இயங்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

இங்கே மகிழம்பாடி குடி தண்ணீர்த் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றிற்று. பஞ்சாயத்து யூனியன் கூட்டத்தில் அந்தத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்படியும் போட்டுவிட வேண்டும், அங்கு இருக்கும் ஹரிஜன மக்கள் பல ஆண்டுகளாக குடிக்கத் தண்ணீர் இல்லை என்று சொல்லுகிறார்களே என்ற நல்ல நோக்கத்தோடு உடனே நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி, அதை ஆர்.டி.ஓ.வுக்கு அனுப்பி, ஆர்.டி.ஓ. கலெக்டருக்கு அனுப்பி, கலெக்டர் ஸ்டே கொடுத்து, பிறகு கலெக்டர் ஸ்டேயை காலி செய்த பிறகு அரசாங்கம் அன்றாட நிர்வாகத்தில் தலையிட்டு ஸ்டே கொடுத்துவிட்டது. வாங்கிப்போட்ட பைப்புகள் அப்படியே இருக்கின்றன. வெட்டப்பட்ட குழிகள் மூடாமலேயே இருக்கின்றன. அதிகாரிகளோடு கலந்து செய்தார்களா ? இல்லையென்றால் எங்களைப் பார்த்து ஏதாவது கேட்டார்களா ? அதுவும் இல்லை. இப்படிப்பட்ட தகவல் இருக்கிறதே என்று கேட்டார்களா ? பஞ்சாயத்து தீர்மானம் போட்டிருக்கிறது என்றால் அதற்குக் கவுரவம் அளிக்க வேண்டாமா ? அந்தக் கவுரவம் அளிக்கப்படுகிறதா ? கனம் அங்கத்தினர் மணி அவர்கள் குறிப்பிட்டார்கள், பல தெருக்களுக்கு பெயர் மாற்றப்படுகிறது என்று. எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை துறையூர் பேருந்து நிலையத்திற்கு வைக்கவேண்டுமென்று பஞ்சாயத்தில் தீர்மானம். நிறைவேற்றப்பட்டது ஒத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால், லால்குடியில் உள்ள பேருந்து நிலையத்திற்கு காமராஜர் பேருந்து நிலையம் என்று பெயர் வைப்பதற்கு எப்படி அனுமதிக்கப்பட்டது ? அது மட்டுமல்ல ; தீர்மானம் நிறைவேற்றி அரசாங்க அனுமதி பெறாமலேயே காமராஜர் அவர்களுடைய 63-வது பிறந்த நாள் விழா என்ற காரணத்திற்காக நகரசபையின் சொந்தப் பணத்திலிருந்து, நகராட்சியின் சார்பில் வளைவைக் கட்டி மதிப்பிற்குரிய ராமைய்யா அவர்கள் திறந்து வைத்து இருக்கிறார்கள். அதற்கு அனுமதி வழங்கியது ஏன் ? எப்படி சட்டத்தை எந்த அளவுக்கு துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்துக்களைப் பற்றிப் பேசவேண்டுமென்றால் அதற்குப் போதுமான நேரம் இல்லை. எல்லா இலாகாக்களுக்கும் அதிக நேரம் கொடுத்துவிட்டு கிராமத்தார்களாக இருக்கிறோம் என்றோ என்னவோ இதற்கு ஒரு நாள் போட்டு, அதுவும் ஒரு மணிக்குள் முடிக்க வேண்டும் என்ற உத்தரவு இருக்கிறது..........

கனம் சபாநாயகர் : அடுத்த தடவை இரண்டு நாட்கள் விவாதம் வைத்துக்கொள்ளலாம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதைப்போலவே இந்த இலாகா தனி இலாகாவாக இயங்க வேண்டுமென்று நான் பலமுறை வற்புறுத்தியிருக்கிறேன். இந்தத் தடவை பல இலாகாப் பொறுப்புக்களையும் ஒன்றாக இணைத்து, அதற்கு தனி நெறியாளர் ஏற்படுத்தி, தனி இலாகாவாக இப்போது இயங்கி வருகிறது என்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். அப்படி தனி இலாகாவாக ஆன பிறகு பல பல உத்தரவு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [26th March 1966

களெல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளில் பலவற்றை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். செய்கிற முறை மேலும் நல்ல முறை யாக இருக்க அரசாங்கம் அரசியல் காரணத்தைக் காட்டித் தலையிடாமல் இருந்தால் பஞ்சாயத்து ராஜ்யம் நல்ல கிராம ராஜ்யமாக நடைபெற முடியும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதைப் போலவே மதிய உணவுத் திட்டத்திற்காக இப்போது ஒரு உத்தரவு வந்திருக்கிறது. அந்தந்தப் பஞ்சாயத்துக்கள் தங்கள் தங்கள் பஞ்சாயத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி யூனியனுக்கு அனுப்பி விட்டால் அவர்கள் கணக்கிலிருந்து கொடுத்துவிடலாம் என்று உத்தரவு வந்திருக்கிறது. இதைப் புனராலோசனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்துத் தலைவருக்கு பஞ்சாயத்தில் இருக்கிற மாணவர்களுக்கு உணவு அளிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், தீர்மானத்தை நிறை வேற்றாமலேயே கூட இருந்துவிடலாம். இப்பொழுது எலக்ட்ரிஸிடி சார்ஜை பஞ்சாயத்து யூனியனே கொடுத்து பஞ்சாயத்தின் பணத்திலிருந்து எடுத் துக்கொள்ள வசதி செய்திருப்பது போல் பஞ்சாயத்து மூலமாகக் கொடுத்து பஞ்சாயத்துக் கணக்கில் வரவு வைத்துக்கொள்வது என்று இருந்தால் உள்ளபடியே பலன் அளிப்பதாக இருக்க முடியும் என்று கருது கிறேன்.

கடைசியாக, ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மாதர் சங்கங் கள் சரியாக இயங்கவில்லை. கிராமப் பெண்களை அழைத்துக்கொண்டுவந்து பட்டணம் காட்டும் வேலையாகத்தான் இருக்கிறது. உருப்படியாக ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. தாய்மார்கள் யாராவது இருந்தால் கோபித்துக்கொள்ளக்கூடாது. எப்படியாவது பணத்தைச் செலவு பண்ணி யாக வேண்டும், மார்ச் மாதத்திற்குள் செலவு செய்தாக வேண்டும் என்று வேலை வெட்டி இருந்தால் கூட, அவர்களைத் தொந்தரவு செய்து தொல்லைப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த ரூபாயை சமூகக் கல்வி நிலையம், பால்வாடி திறக்க உபயோகப்படுத்துங்கள். கிராம சுகாதார நிலையங்கள், தாய்-சேய் நல விடுதிகள் திறந்து மக்களுக்கு ஒத்தாசை செய்யுங்கள். தையல் மெஷின் வாங்கிக்கொடுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் பொன் னம்மாள் சொன்னது போல தையல் மெஷின் பிரஸிடெண்ட் வீட்டில் தான் இருந்துகொண்டிருக்கிறது. பால்வாடி மிக மிக அவசியம். இள மையாக இருக்கும் குழந்தைகள் பெரியவர்கள் ஆனால் அது பயன்தரக் தக்கதாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

12-30 p.m. பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஜீப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஜீப்புக்கு ரிபேர் செய்ய வேண்டுமென்றால், தஞ்சாவூருக்குப் போக வேண்டியிருக்கிறது. பல முறை இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். என்னைப் பொறுத்த வரையிலும், கலெக்டரோ, தாசில்தாரோ அல்லது வேறு ரெவின்யூ டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தரோ ஜீப்பைக் கேட்பதில்லை. ஆனால் மற்ற பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள் ஒரு மாதத்தில் 28 நாட்கள் ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்குத்தான் ஜீப் உபயோகப்படுத்தப்படுகிறது என்று சொல்லு கிறார்கள். அதைவிட ஜீப்பை அவர்களுக்கே கொடுத்துவிடலாம் என்று சொல்லுகிறார்கள். எமெர்ஜென்ஸி இருந்தால் கூட மந்திரிகள் புதிய கார்கள் வாங்கிக்கொள்ளுகிறார்கள். ஒரு ஜீப் வேண்டுமென்றால், சேர்மனுக்கோ, கமிஷனருக்கோ ஒரு ஜீப் வேண்டு மென்றால், 10 வருஷம் பிடிக்கிறது. ஜீப்புக்கு ஒரு டயர் வாங்க வேண்டுமென்றால் கூட அதற்கு எங்களுக்கு அதிகாரம் இடையாது. டெக்னிகல் பீப்பிளைக் கேட்டுச் செய்ய வேண்டும். போனது போகட்டும், இருந்தது மிச்சம் என்பது போல இருக்கிறது. பொது மக்களுக்குச் சேவை செய்வதற்காக இதில் போகலாமா, வேண்டாமா என்று கூட பயம் ஏற்பட்டுவிடுகிறது. இந்தக் குறைகளையெல்லாம் போக்குவதற்கு நிச்சயமாக வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் கட்டை வண்டியில் போகலாம் என்று சொன்னார்கள். ஏற்றுக்கொள்ள

26th March 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

தயார். நாங்கள் கட்டை வண்டியில் ஏறி சவாரி செய்யத் தயார். அதே நேரத்தில் சிக்கனத்தைக் கடைபிடிக்கும் முறையில் வில் வண்டியில் மந்திரிகள் போய்விட்டு வந்தால் ரொம்பவும் பொருத்தமாக இருக்கும்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். மாநகராட்சி மன்றத்திலுள்ள ஊழல்களைப் பற்றியெல்லாம் பேசினார் கள் அங்கத்தினர்கள். தெருவிலே பேசி, அம்பலத்திற்கு வந்திருப் பதைப் பார்க்கிறோம். சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை சென்னை மாநகராட்சிமன்றத்தின் மீது பிரயோகம் செய்யலாமா என்ற எண்ணத்தோடு இருப்பதாக அஞ்சுகிறேன். அப்படிப்பட்ட துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டால், தமிழ் நாட்டிலே பல நகராட்சி மன்றங்கள் நிச்சயம் நடக்காது, நடக்காது என்பதைச் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

***கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்துள்ள இரண்டு மான்யக் கோரிக்கை களின் மீதும் காரசாரமாக விவாதம் நடைபெற்றது. குறிப்பாக, இந்த மான்யத்தை விவாதிப்பதற்கு அதிகமாக நேரம் வேண்டும் என்று திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்து துறை மான்யம் என்பது மற்ற எல்லா இலாகாக்களுடன் சம்பந்தப்பட்ட ஒரு டிமாண்டு. அதற்கு அதிக நேரம் வேண்டியது தான். அதற்கு நான் தான் பொறுப்பு என்பதைச் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு உடல் நிலை சௌகரியம் இல்லாதிருந்த தினால் என்னுடைய இலாகா மான்யத்தைக் கடைசியில் போடும்படி கனம் ஸ்பீக்கர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். ஆகவே, இந்த மனக்குறைக்கு நான் பொறுப்பு என்பதை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது இயற்கையாக ஏற்பட்ட நியதி, நான் வேண்டும் என்று சொல்லவில்லை என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள்.

சமுதாய நலத் திட்டம் என்பது காந்தியடிகளின் சொந்த அனுபவத் தின் மீது கிராம மக்களுடைய மறுமலர்ச்சிக்குப் பாடுபடவேண்டும் என்று அவர்கள் நன்றாக சிந்தித்துத் தோற்றுவிக்கப்பட்டது. கிராம மக்கள் சுய ஆட்சி பெற வேண்டும், அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். அந்த அடிப்படையில் தான் சுதந்திரம் பெற்ற பிறகு கிராம மக்களுடைய நல்வாழ்க்கைக்காக, வட்டார அளவிலே நல்ல நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு ஆலோசனை கூறி, கிராமங்களில் சாலை வசதி, குடிநீர் வசதி, கல்வி வசதி, விவசாய உற்பத்திப் பெருக்கம். இதுபோன்ற வசதிகளைச் செய்து கொடுப் பதற்கு நல்ல பல திட்டங்களைச் செயலாற்றவேண்டும் என்று கருதி 1958-ம் வருஷத்திய பஞ்சாயத்துச் சட்டத்தின் மூலம் நாம் செயலாற்றி வருகிறோம்.

நடைமுறையில் ஒரு சில கோளாறுகள் இருப்பதைப் பற்றிக் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நேரம் அதிகமாக இல்லாததினால் எல்லா அங்கத்தினர்களுக்கும் நான் தனித்தனியாக பதில் அளிக்க முடியாது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். என்றால் இயன்றவரை சில கருத்துக்களுக்குப் பதில் அளிக்கிறேன். பதில் அளிக்க முடியாத அம்சங்கள் பற்றி அந்த இலாகா சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த கவனம் செலுத்துவார்கள் என்பதை முதற்கண் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

புறம்போக்கு நிலங்களைப் பூரணமாக பஞ்சாயத்துக்கள் அனுபவிக்க முடியவில்லை என்று கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்பு ஒரு சில ஏழைகள் அல்லது வேறு சம்பந்தப்பட்டவர்கள் வீடு கட்டிக்கொண்டு இருக்கலாம் அல்லது நிலத்தைப் பயிரிட்டுக் கொண்டிருக் கலாம். அம்மாதிரி நிலைமையில் கீழ் மட்ட அதிகாரிகளிலிருந்து உயர் மட்ட அதிகாரிகள் வரை கேஸ்கள் செல்லுகின்றன என்பது

சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அம்மாதிரி ஏழைகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருந்தால், சர்க்கார் அதைப் பார்த்துக்கொண்டு வாளா இருக்க முடியாது. ஆகவே புறம்போக்கு நிலங்கள் விஷயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நன்ருகப் பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்க்கார் ஒரு விளக்கம் கூறியிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஐந்து அங்கத்தினர்களுக்கு மேலே ஆசிரியர்கள் மாற்றம் சம்பந்தப்பட்ட வரையிலே ஆதரித்தும், எதிர்த்தும் பேசினார்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். ஆசிரியர்களை நியமிக்கக் கூடிய அதிகாரம் அவர்கள் தலைமையிலே இயங்கக் கூடிய கமிட்டிக்குத் தான் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யக்கூடிய கிளார்க்குகளை நியமிக்கக்கூடிய அதிகாரமும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களிடத்தில் தான் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கீழே வேலை செய்யக்கூடிய பல ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றப்படுவதாக சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. கல்வியில் அதிகக் கவனம் செலுத்தக்கூடிய ஆசிரியர்கள், வருங்கால சந்ததியினரை உற்பத்தி செய்யக்கூடிய ஆசிரியர்கள் இம்மாதிரி தொந்தரவுக்கு ஆளாகக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் தான், ஜனநாயக மரபிலே தேர்ந்தெடுக்கப் பட்டு வந்த பஞ்சாயத்துப் பெருந்தலைவர்களும் இம்மாதிரி ஒரு குற்றத்திற்கு ஆளாகக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் தான் இம்மாதிரி ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவுக்கு முன்பிருந்த நிலை என்ன, இப்பொழுதுள்ள நிலை என்ன என்பவை தாரதம்யத்துடன் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவரும் கமிஷனரும் சிந்தித்து ஆசிரியர்களை மாற்றம் செய்ய வேண்டும், அவர்களுக்குள்ளே, ஏதாவது தகராறு அல்லது சிக்கல் ஏற்பட்டால், அதை ஆர். டி. ஒ. வுக்கு ரெபர் செய்யவேண்டும் என்பது முன்பிருந்த உத்தரவு. இந்த மூன்று நபர்களுக்கு மேலே மாவட்ட அளவில் உள்ள கல்வி இலாகா சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரியின் ஆலோசனையையும் கோரி ஆசிரியர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று புதிய உத்தரவு கோருகிறது. தலைவருடைய அதிகாரம் இதனால் எந்த விதத்திலும் குறைக்கப்படவில்லை. ஆசிரியர் தவருக நடந்து கொண்டால், தவருக அட்டெண்டென்ஸ் மார்க்கு செய்தால், "பால்ஸிபிகேஷன் ஆப் அடென்டென்ஸுக்கு" அவர் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு, கமிஷனருக்கு அதிகாரம் இருக்கிறது. அதற்கான விதிமுறைகளெல்லாம் இருக்கின்றன. சஸ்பெண்ட்டு பண்ணலாம், டிஸ்மிஸ் பண்ணலாம், அதற்கான அதிகாரம் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் பெர்ஸனல் பைலை இனிஷியேட் செய்வது பஞ்சாயத்து யூனியன் தலைவர் தான். அதிகாரம் கொடுக்கவில்லை, அதிகாரம் கொடுக்கவில்லை, என்று சொல்லுகிருர்கள். இவ்வளவு அதிகாரம் கொடுக்கப்பட்டுத் தான் இருக்கிறது. அதிகாரம் இல்லை என்று சொல்வதற்கில்லை. நன்ருகத் தீர்க்கமாகச் சிந்தித்துத் தான் சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறது. ஆசிரியர்களுடைய நலனும் பாதுகாக்கப்படவேண்டும், கல்வியினுடைய தரமும் கெட்டுவிடக்கூடாது. ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மக்களிடையே நல்ல பெயர் இருக்கவேண்டும் என்று பல கோணங்களில் சிந்தித்துப் பார்த்துத் தான் இந்த உத்தரவு போடப்பட்டது. ஆகவே இதைப்பற்றி மறு பரிசீலனை செய்வதற்கே இடமில்லை என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன் இதற்குக் கட்சி நோக்கம் உண்டு என்று இரு தரப்பிலும் கூறப்பட்ட விஷயத்தை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. இதிலே கட்சி ஒன்றுமில்லை. ஆயிரக்கணக்கான பஞ்சாயத்துக் களில் ஆட்சியில் இருக்கக் கூடியவர்களில் பெரும்பாலும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிருர்கள். இல்லை, என்று சொல்ல முடியாது.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் முறையிலும், மாறுதல் செய்ய வேண்டும் என்ருர்கள். நேரிடைத் தேர்தல் வேண்டும் என்ருர்கள். தேர்தல்கள் நடந்து இப்பொழுது தான் ஒரு வருஷம் ஆகிறது.

இன்னும் 4 வருஷங்கள் ஆகவேண்டும். அப்பொழுது இந்தச் சட்ட மன்றம் இருக்கும். நன்ருகப் பரிசீலனை செய்து சட்டத்தை வேண்டுமானல் திருத்திக் கொள்ளலாம். நாம் அடைந்திருக்கும் அனுபவங்களை மனத்தில் கொண்டு, நேரிடைத் தேர்தல் தேவையா என்பதைப் பரிசீலித்துப் பார்க்கலாம். இதில் இந்தக் கட்சி அந்தக் கட்சி சொன்னது என்பது ஒன்றும் இல்லை. அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்களேதான் முதன் முதலிலே இதைச் சொன்ஞர்கள், ஆகவே வேறு யாரும் பாத்தியதை கொண்டாடவேண்டாம். அப்படிக் கொண்டாடு வதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. நேரிடைத் தேர்த லில் என்ன கோளாறு என்று பரிசீலிக்க வேண்டும். (குறுக்கீடு) நான் ஈல்ட் பண்ண முடியாது. குறைவான நேரம்தான் இருக்கிறது. 1958 பஞ்சாயத்து சட்டத்திற்கு முன்பு, பஞ்சாயத்து களுக்கு நேரிடைத் தேர்தல் கொண்டு வந்தோம், அதிலே சிக்கல்கள் இருக்கின்றன., அவற்றையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும், வார்டுகளைப் பிரிக்க வேண்டும், சிங்கிள், டபிள், என்றெல்லாம் இல்லாமல், எல்லாமே சிங்கிளாக வரவேண்டும் என்று குறிப்பிட்ட டார்கள். அதையெல்லாம் பற்றிப் பின்னல் யோசிக்கலாம். இப்பொழுது அதற்கு ஒன்றும் அவசியம் இல்லை. இப்பொழுதுதான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களையெல்லாம் சூபர்சீட் செய்ய முடியாது. ஐந்து ஆண்டுகள் சிந்தனை செய்து கொள்ளலாம் என்பதை எல்லோரும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. ஆறுமுகம், ட்ரைபல் பிளாக்கு வேண்டும் என்ருர்கள். அப்படி அமைக்க வேண்டும் என்ருல், மொத்தம் 50 சதவீதத்திலிருந்து 66 2/3 சதவீதம் வரை அதிலே மலைஜாதியினர் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான் அமைக்க முடியும் என்பது மத்திய சர்க்காருடைய திட்டம். அப்படி இந்த ஜவ்வாது மலைப் பிரதேசத்தில் ஜனத்தொகை இல்லை. அது சம்பந்தமாக இலாகா வினர் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சிரஞ்சீவுலு நாயுடு டெபுடி இன்ஸ் பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் பஞ்சாயத்து யூனியனுடைய நிர்வாக இயந்தரத் தின் கீழே கொண்டு வரப்பட வேண்டும் என்ருர்கள். அப்படிச் செய்வதாக சர்க்காருக்கு உத்தேசம் இல்லை. சர்சார்ஜ் பற்றிச் சொன்ஞர்கள். ஏற்கனவே விதி முறைப்படி 100 சதவீதம் என்று மாக்ஸிமம் சீலிங் கொடுத்திருக்கிருேம். லோகல் கண்டிஷன் அடி படைத் தேவைகளைப் பார்த்து தாரதம்மியமாகச் செய்ய வேண்டும்.

கனம் அங்கத்தினர் ஏ. கே. சுப்பையா பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்திலே கிராம சேவக்குகள், டெஸ்டுகள் பாஸ் செய்து, டெவலப்மெண்ட்டு பி. ஏ. வாக வரும் வரை விதிமுறைகளைச் சென்ற ஆண்டிலே வெளியிட்டு இருக்கிருேம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளு கிறேன். விவரங்கள் அச்சடித்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மேல் விளக்கம் தேவையில்லை.

குந்தா பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தப்பட்ட வரை ஏற்கனவே ஹைகோர்ட் ஸ்டே வழங்கி இருந்தது. அது வெகேட் செய்யப் பட்டு, தேர்தல் நடக்க வேண்டும் என்று உத்தரவு போடுவது பற்றி ஆலோசனை செய்தபோது, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு வந்தது. ஆகவே, அதை நிறுத்தி வைத்திருக்கிருேம். கூடிய சீக்கிரத்தில் அதில் கவனம் செலுத்தப்படும்.

சாலைகள் பராமரிப்பு பற்றிக் குறிப்பிட்டார்கள். தஞ்சைமாவட்ட அங்கத்தினர் 40 பைசா என்கிற இந்தத் தொகை தங்களுக்குக் காணுது என்று குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தை விட மற்ற மாவட்டங்களுக்கு அது அதிகமாகப் பொருந்தும். தஞ்சையிலே எங்கும் நெல்தான், கல்லே கிடையாது. கல் வேண்டும் என்ருல் திருச்சியிலிருந்துதான் கொண்டு வரவேண்டும். லீடிலே அதிகமாகி

விடும். அங்கே சர்சார்ஜ் அதிகமாக வர வாய்ப்பு இருக்கிறது. இந்த விஷயம் சர்க்காருடைய ஆழ்ந்த பரிசீலனையில் இருக்கிறது. இதை சாலைகளின் நீள அடிப்படையில் உயர்த்த வேண்டுமா அல்லது நபர் ஒன்றுக்கு 40 பைசா என்பதை 45, 50 பைசா என்று உயர்த்த வேண்டுமா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.

திருமதி பொன்னம்மாள் கச்சை கட்டிக்கொண்டு சொல்லுகிறேன். என்றும், தேர்தல்கள் நடக்கவில்லை அரசியல் விளையாடுகிறது என்றும் குறிப்பிட்டது பேராச்சரியமாக இருந்தது. இதிலிருந்தே பஞ்சாயத்துக்குப் பெண்களை விட்டால் என்ன ஆகும் என்று சந்தேகமாக இருக்கிறது ; அது இந்த ஒரு வார்த்தையிலிருந்தே விளங்குகிறது.

கனம் அங்கத்தினர் திரு. சம்பங்கி அவர்கள் மானேஜர் முதலிய சிப்பந்திகளை ஒரு நகராட்சியிலிருந்து இன்னொரு நகராட்சிக்கு மாற்ற கவுன்சில் ஏகமனதாக அபிப்பிராயம் சொன்னாலும், சர்க்கார் அனுமதிக்கவில்லை என்றார்கள். முனிசிபல் ஆக்டின் கீழே அவர்கள் தவறு செய்தால், அது சர்க்காருடைய கவனத்திற்கு வந்தால் என்ன நடக்கும் என்பதை அங்கத்தினர்களுடைய யூகத்திற்கே விட்டு விடுகிறேன். இந்த சர்வீஸுக்கு வருகிறவர்கள் லோகல் மென். அவர்களுக்கு அங்கே சொத்துக்கள் இருக்கலாம். கிராஜுவேட்டாகவோ அல்லது டபிள் கிராஜுவேட்டாகவோ இருக்கலாம். அடுத்த முனிசிபாலிடிக்குப் போக வேண்டும் என்றால் அவர்கள் விரும்ப மாட்டார்கள். ஏன் ? அவர்களுக்கு இங்கே வெஸ்டட் இன்டரஸ்ட் இருக்கிறது. அதற்காகத்தான் லோகல் பாடி சர்வீசுக்கு வந்திருக்கிறார்கள். இதிலே சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. கவுன்சிலை கன்சல்ட் செய்தால் போதும் என்று இருக்கிறது. ஆகவே இந்தக் குற்றச் சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

திருச்சி சம்பந்தப்பட்டவரை, ஒரு கனம் அங்கத்தினர், இன்னும் கனம் கருணாநிதிகூட பொது விவாதத்தின் போது குறிப்பிட்டார்கள். திருச்சி தேவர் ஹாலில் மூன்று சேர்கள் பூட்டி வைக்கப் பட்டிருக்கின்றன என்று. ஏதோ சர்க்கார் அம்மாதிரி உத்தரவு போட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அம்மாதிரி உத்தரவு எதுவும் போட வில்லை. அது சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனையில் இருக்கிற விஷயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாம் என்றாலும், அதன் சரித்திரத்தைக் கனம் அங்கத்தினர்களெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

சற்றேறக்குறைய 1929-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். திருச்சி நகரத்திலே இந்து-முஸ்லீம் சண்டை நடந்தது. அப்பொழுது சேர்மனாக இருந்தவர் ஒரு விழாவிற்குச் செல்லும்போது அவருக்கு அங்கு " ஸீட் " போடவில்லை. அதுதான் பிரச்னையாக முற்றி, கலகம் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது. உடனே அங்கு நகராட்சி சம்பந்தப்பட்ட வரையில், இம்மாதிரி ஒரு பொறுப்புள்ள நகரத் தந்தையாக இருக்கிற அவருக்கு அந்த அவமானமான நிலை ஏற்படக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் தேவர் ஹாலைக் கட்டி மூன்று ஸீட்டுகளை ஒதுக்கி நகராட்சித் தலைவர், நகராட்சி உதவித் தலைவர், நகராட்சிக் கமிஷனர் ஆகிய இவர்கள் எப்பொழுது அங்கு வந்தாலும் அவர்களுக்கு ஒரு ஸீட் நிச்சயமாக அங்கு இருக்கவேண்டும், அந்தச் சமுதாயத்திலே கீழ்த்தரமான பார்வை ஏற் படக்கூடிய சூழ்நிலை ஏற்படாதவாறு அமையவேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டு, கவுன்சிலிலேயே செலவு செய்து, அதை வைத்துப் பராமரித்து வருகிறார்கள் என்பதைக் கனம் அங்கத்தினருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சர்க்கார் எந்தவிதமான உத்தரவும் இது சம்பந்தமாக இடவில்லை.

திரு மு. கருணாநிதி : "நகர சபையின் சார்பாகவே அது போடப் பட்டது" என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். ஆனால், நகர சபையிலிருந்து சர்க்காருக்கு அவர்கள் எழுதியிருக்கிற பதிலில், பூட்டப் பட்டிருப்பதற்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல. முழுக்க முழுக்க அந்த வாட்ச்மென் தான் பொறுப்பாளி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்தக் கடிதத்தின் நகல் என்னிடம் இருக்கிறது.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நான் முன்பிருந்த சரித்திரத்தை, அந்த விவரத்தைச் சொன்னேன். அதில் எந்தவிதமான முடிவும் அரசாங்கம் எடுக்கவில்லை. அதை நன்றாக யோசிப்போம். உத்தரவு இன்னும் போடவில்லை.

விவசாய உற்பத்திப் பெருக்கம் பஞ்சாயத்துக்களின் முக்கியமான கடமைகளில் ஒன்றாகப் பஞ்சாயத்துச் சட்டத்தின் முகப்புரையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. விவசாய உற்பத்திப் பெருக்கத்திலே பஞ்சாயத்துத் தலைவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும், அதற்கான காரியங்களில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தில் பஞ்சாயத்துச் சட்டம் அமைந்திருக்கிறது. அதற்காகப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒதுக்கப் படக்கூடிய தொகை காணாது என்று கனம் அங்கத்தினர் திரு. சம்பந்தம் அவர்கள் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு இந்தத் துறைக் காக ஒதுக்கப்படும் தொகை மட்டும் தான் என்பது அல்ல. விவசாய இலாகா மூலமாக ஒதுக்கப்படும் பணமும் இதில் செலவழிக்கப்படுகிறது. என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் கீழ் "பஞ்சாயத்து டெவலப்மென்ட் ஸ்கீமாடிக் பட்ஜெட்" பற்றிய "ஃபைனான்ஷியல் ஸப்ளிமென்ட்" தயாரித்து இந்த வருஷம் கனம் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. டைரக்டர் ஆப் ரூரல் டெவலப்மெண்ட் அவர்கள் இதிலே மிக்க கவனம் எடுத்துத் தயாரித்து இருக்கிறார்கள். அதிலிருந்து விவரங்கள் எளிதாக பார்த்து புரிந்து கொள்ளக் கூடிய நிலைமையில் அமைந்துள்ளது.

சமுதாய நலத் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில், கனம் உறுப்பினர் திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் சில கருத்துக்கள் தெரிவித்தார் கள். அவர்களுடைய கட்சித் தலைவர் அவர்களே அவ்வாறு குறிப்பிடும் போது, இவர்கள் எப்படி அதைக் குறிப்பிடாமல் இருப்பார்கள்? கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்தும் கூட, அம்மாதிரி நிலையிலே உள்ள பிரச்சினைகளை உற்று நோக்கித் தீர்ப்புச் சொல்லவேண்டிய நாணயமான அமைப்பிலே அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும் கூட, அவர்கள் இங்கே சொல்லிய கருத்துக் களைக் குறித்து வேதனை தான் படவேண்டியிருக்கிறது. கிராம மறுமலர்ச்சிக் காக, கிராம மக்களின் நல்வாழ்விற்காக, அவர்களுடைய தேவையை அனுசரித்து, வட்டார அளவில் சென்று, வயல் வெளிகளில் சென்று, அங்குள்ளவர்களுடைய குறைகளைத் தெரிந்து, நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்படும் வகையில் நல்ல "இம்பேக்ட்" இருக்கிறது. நன்மை ஏற்பட்டிருக்கிறது. எத்தனை மைல் நீளம் சாலைகள் அமைக்கப்பட்டிருக் கின்றன, எத்தனை ஆரம்பப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன, எத்தனை குடிதண்ணீர்த் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரம் எல்லாம் அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது. சிற்சில இடங்களில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அதெல்லாம் சகஜம் தான். நெல் வயலில் ஏராளமான நெல்மணிகள் இருக்கும். ஒன்றிரண்டு சக்கைகள் (பதர்கள்) போகத்தான் செய்யும், பெரிய வெள்ளம் வரும்போது, மேலே நுங்கு நுரை இருப்பதைப் பார்த்து, பூராவும் தண்ணீர் இல்லை என்று சொல்லி விட முடியுமா ? நுங்கு நுரைக்குக் கீழே நல்ல தண்ணீர் இருக்கும். தண்ணீர் இல்லையென்றால் உலக ஜீவராசிகள் ஜீவிக்க முடியாது. சமுதாய நலத் திட்டம் பூராவுமே "வேஸ்ட்" என்று கண்டிக்க கூடிய அளவிற்கு நம்முடைய ராஜ்யத்தில் நிலைமை இருக்கிறது என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட கருத்துக்கள் கொண்ட கனம் அங்கத்தினர், எந்த ஆசையோடு பஞ்சாயத்து யூனியன் தலைவராகத்

தேர்ந்தெடுக்கப்பட்டார், எதற்காக அந்தப் பதவிக்கு வந்தார் என்றே எனக்குப் புரியவில்லை. ஒன்றுமே அதிகாரம் இல்லை என்றால், அதிலே ஏன் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், சட்டசபை மெம்பராக மட்டும் இருந்திருக்கலாமே என்பது தான் என்னுடைய யோசனை. அதிலே சில "அட்ராக்ஷன் இருக்கிறது என்பதை ஏன் அவர்கள் மறுத்துப் பேச வேண்டும் ? (குறுக்கீடு) கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். சட்டமன்ற உறுப்பினர்களில் பஞ்சாயத்து யூனியன் சேர்மேன்களாகப் பதினைந்து பேர் வந்திருக்கிறார்கள். சமுதாய நலத் திட்டத்தையே கலைத்துவிடலாம் என்று கனம் அங்கத்தினர் சொன்னார்கள் என்பதற்காகத்தான் நான் மனம் வேதனைப்பட்டுச் சொன்னேன்.

மீன் வளர்ச்சி சம்பந்தமாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. 54,000 ரூபாய்க்கு ஸ்கீமாடிக் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நல்ல தண்ணீர் வசதி இருக்கும் இடங்களில் தான் மீன் வளர்ச்சி நல்லபடி விருத்தி ஏற்படும். ஆனால், ஒரு சில இடங்களில் அந்தத் திட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் செய்திருப்பதை நானும் பார்த்தேன். ஒருசில இடங்களில் தவறு இருப்பதை நானும் ஏற்றுக் கொள்ளுகிறேன். கோடைக்கானல் போகும் வழியில் ஓரிடத்தில் நீர்வளமற்ற இடத்தில் மீன் தொட்டி போட்டிருந்தார்கள். ஒன்றிரண்டு இடங்களில் இம்மாதிரி திட்டத்தைப் புரிந்துகொள்ளாமல் சிலர் தவறு செய்திருக்கலாம். ஆனால் மீன் வளர்ச்சிக்கான திட்டங்களைப் பொறுத்த வரையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறந்த கவனம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஏற்கெனவே இது சம்பந்தமாக சர்க்கார் கவனம் செலுத்தி வருகிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்ட வரையில் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் பலமான குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிட்டார்கள். கார்ப்பரேஷனுக்குச் சர்க்காரிலிருந்து என்ன என்ன விதமான உதவித் தொகை சென்ற நான்கைந்து வருஷங்களில் கொடுத்திருக்கிறோம் என்பதற்கான புள்ளி விவரத்தை வாசித்துக்கொண்டே விளக்க விரும்புகிறேன். நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

"**Roads, bridges, light, Town Planning, etc.**" ஆகிய இந்தத் திட்டங்களுக்காக, 1960-61-ம் ஆண்டில் கடனாகக் கொடுத்தது 48·55 லட்ச ரூபாய். க்ராண்டாகக் கொடுத்தது 5·48 லட்ச ரூபாய். இதே வகையில் 1961-62-ம் ஆண்டில் கடனாகக் கொடுத்தது 55·01 லட்ச ரூபாய். க்ராண்டாகக் கொடுத்தது 25·66 லட்ச ரூபாய். 1962-63-ம் ஆண்டில் கடனாகக் கொடுத்தது 51·90 லட்ச ரூபாய். க்ராண்டாகக் கொடுத்தது 24·94 லட்ச ரூபாய். 1963-64-ம் ஆண்டில் கடனாகக் கொடுத்தது 50·80 லட்ச ரூபாய். க்ராண்டாகக் கொடுத்தது 27·43 லட்ச ரூபாய். 1964-65-ம் ஆண்டில் கடனாகக் கொடுத்தது 29·76 லட்ச ரூபாய். க்ராண்டாகக் கொடுத்தது 23·78 லட்ச ரூபாய். 1965-66-ல் ஆண்டில் கடனாகக் கொடுத்தது 42·08 லட்ச ரூபாய். க்ராண்டாகக் கொடுத்தது 34·88 லட்ச ரூபாய். இத்துடன் "**Education, Water works, Drainage, Urban Compost Scheme, Miscellaneous**" ஆகிய இந்தத் திட்டங்களுக்காகக் கார்ப்பரேஷனுக்குக் கடனாகவும் க்ராண்டாகவும் கொடுத்த தொகையை உத்தேசமாகக் குறிப்பிட விரும்புகிறேன். 1960-61-ம் ஆண்டில் 1·32 கோடி ரூபாய். 1961-62-ல் 1·75 கோடி ரூபாய். 1962-63-ல் 1·6 கோடி ரூபாய். 1963-64-ல் 2·3 கோடி ரூபாய். 1964-65-ல் 2·3 கோடி ரூபாய். 1965-66-ல் 2·6 கோடி ரூபாய். இதற்குமேலே, "**Surcharge on entertainment tax and show tax**" என்ற வகையில் 100 சத வீதமும், 300 சத வீதமும் விதித்து, சர்க்கார் வசூலித்துக் கார்ப்பரேஷனுக்குக் கொடுப்பதன் மூலமாகச் சற்றேறக்குறைய 1·2 கோடி ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. 1965-66-ம் ஆண்டில், இனி இந்த வகையில் சற்றேறக்குறைய 3 கோடியிலிருந்து 3½ கோடி ரூபாய் வரக்கூடும். மற்ற நகராட்சிகளுக்கும் மாநகராட்சிக்கும் வித்தியாசம் இருக்கிறது. தண்ணீர்த் திட்டத்திற்காக "லோன் பேஸிஸ்" இல் மற்ற நகராட்சிகளுக்குக் கொடுக்கிறோம். ஆனால், கார்ப்பரேஷனுக்கு, எந்த நகராட்சிக்கும் இல்லாத உரிமை அளித்து, "லோன்

பேஸிஸ்" இலும், "கிராண்ட்" பேஸிஸிலும் கொடுக்கிறோம். இது போன்ற அம்சங்கள் கார்ப்பரேஷனுக்கு இருக்கின்றன. கல்வி சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், கட்டடம் கட்டுவதற்காக (திரு.கே.ஏ. மதியழகன் அவர்களின் குறுக்கீடு) நேரம் இல்லாததால், நான் குறுக்கீடுகளுக்குப் இப்பொழுது பதில் சொல்வதற்கில்லை. சுருக்கமாகவே என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி சம்பந்தப்பட்ட கட்டடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தையும் கார்ப்பரேஷன் சரியாகச் செலவழிக்கவில்லை என்றும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தண்ணீர்' பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 60 லட்சம் ரூபாய். அவர்கள் செலவழித்த பணம் 32·05 லட்சம். ஆக, ஒதுக்கப்பட்ட பணத்தையும் அவர்கள் காலாகாலத்தில் செலவிட முடியவில்லை. கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்டவரையில், இன்று விவரமாகப் பேசவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அவகாசம் இல்லை.

கனம் சபாநாயகர் : இன்றைக்கு முடியாது. இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நல்ல கடன் வசதிகளும், மானிய வசதிகளும் மற்ற நகராட்சிகளுக்கு இல்லாத அளவுக்குக் கூட, சென்னை மாநகராட்சிக்குக் கொடுத்து வருகிறோம். அவற்றை நல்ல முறையில் பயன்படுத்த மாநகராட்சி நிர்வாகம் முன் வரவேண்டும். இதை விட்டுவிட்டு, "சர்க்கார்தான் பொறுப்பு" என்று மேடையிலே பேசுவது போலப் பேசி, "மந்திரிகள் ராஜினாமாச் செய்யவேண்டும்", "முதல் அமைச்சரிலிருந்து லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் அமைச்சர் வரைக்கும் பொறுப்பு" என்று குற்றம் சாட்டிப் பேசுவதென்றால் அதற்கு ஆதாரம் இருக்க வேண்டும். நகராட்சிகளை மாற்றாந்தாய்ப் பிள்ளைகளாகக் கருதுவது போலக் கூட அவைகளுக்குச் செய்யாத சலுகைகளைச் சென்னை மாநகராட்சிக்குச் செய்துகொண்டிருந்தால், இம்மாதிரி அவர்கள் குற்றஞ் சட்டாமல் வேறு என்னதான் செய்வார்கள் ? மாநகராட்சியைச் சர்க்கார் பாரபட்சமாகக் கருதவில்லை. இது ராஜதானியினுடைய தலைநகரம். இங்கே அந்நியர்கள் பலர் வந்து போகிறார்கள். அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சென்னை மாநகரத்தில் சாலைகள் சீராகப் பராமரிக்கப்பட வேண்டும், சுகாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும், தண்ணீர் வசதியெல்லாம் நல்ல முறையில் கவனிக்கப்பட வேண்டும் என்று நல்ல முறையில் இதற்குச் சலுகை வழங்கிக் கொண்டிருக்கும்போது அரசியல் காரணமோ, அரசியல் குரோதமோ, அம்மாதிரி எண்ணங்களோ இருப்பதாக மாசு கற்பிப்பதற்கு கனம் அங்கத்தினர்களுக்குத் தகுதி இல்லை........முறை இல்லை.... (கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் எழுந்தார்கள்) "தகுதி இல்லை" என்ற வார்த்தைகளை வாபஸ் வாங்கிக் கொண்டு, முறை அல்ல, நேர்மை அல்ல, நீதி அல்ல, பண்பு அல்ல என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். "கனம் உறுப்பினர்களுக்குப் பண்பில்லை" என்ற வார்த்தையை அமைச்சர் அவர்கள் உபயோகப்படுத்தக் கூடாது, பண்பல்ல என்ற வார்த்தை அன் பார்லிமெண்டரி ஆகாதா ? 1.00 p.m.

கனம் சபாநாயகர் : எதிர்க்கட்சித் தரப்பில் இருந்தும் எத்தனையோ தடவை உபயோகிக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, எதற்காகப் பண்பில்லை என்று சொன்னார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். அக்கிரமமாக மாசு கற்பிப்பது பண்பல்ல, அதல்ல, இதல்ல, என்ற வகையில் சொன்னார்கள், மாசு கற்பிப்பது சரி என்று வாதாடுவார்களானால் அதற்குமேல் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கலாம்.

திரு. மு. கருணாநிதி : அப்படியானால் மாசுள்ள மந்திரிகள் இங்கு இருப்பதும் பண்பில்லை என்று குறிப்பிட்டால் கூட அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகுமா ? அப்படிப்பட்ட மரபை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுக்க வேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[26th March 1966

கனம் சபாநாயகர் : அதையும் சொல்லிவிட்டுத்தானே இதையும் சொல்லுகிறீர்கள் ' Much a do about nothing '. அவ்வளவுதான்.

Now, I will put the cut motion of Sri S. Arumugam to the vote of the House.

The cut motion of Sri S. Arumugam was put and lost.

SRI K. A. MATHIALAGAN : Sir, I want a division.

MR. SPEAKER : At the time of guillotine, no division can take place.

திரு கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரு மணிக்கு இன்றையதினம் முடிக்க வேண்டுமென்பது விதி. கட் மோஷனை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாக பதினைந்து இருபது நிமிஷங்களுக்கு முன்னாலேயே தெரிவித்திருக்கிறோம். ஆகவே அருள்கூர்ந்து கட்மோஷனை ஓட்டுக்கு விடவேண்டும். மெயின் மோஷன்களை வோட்டுக்கு விடப்போவதில்லையா ? அதுபோலவே இதையும் ஓட்டுக்கு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திற்கு மட்டும் அல்ல, உலகத்திற்கே புதுமையான ஒரு வழியைக் கனம் அங்கத்தினர் அவர்கள் காட்டுகிறார்கள். ஒரு மணிக்கு 'கில்லடின்' என்றால் மெயின் மோஷனையும் வோட்டுக்கு அதற்குப் பிறகு விடக்கூடாது என்பதாக ஒழுங்குப் பிரச்சினை, உரிமைப்பிரச்னை என்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இது ரொம்ப முக்கியமானது. தங்கள் தீர்ப்பை எதிர்ப்பார்க்கிறேன்.

கனம் சபாநாயகர் : நான் ரூலைப் படிக்கிறேன்.

Rule 155 (3) says—

' At the expiry of the time allotted under sub-rule (1) for the discussion of any demand, the Speaker shall put every question necessary for the disposal of that demand, and at 1 p.m. on the last day of the days allotted for the voting of demands for grants, the Speaker shall forthwith put every question necessary to dispose of all the outstanding matters in connexion with the demands for grants, including the motion for reducing of a grant, if any, then under discussion.'

So, according to this rule, I am putting all the Demands including the cut motions to the vote of the House. This is what the procedure observed in the past years reveals. But, there cannot be a division.

SRI K. A. MATHIALAGAN : The Chair can put the motion.

MR. SPEAKER : That is exactly what I am going to do. But your point of order is that nothing should be put.

SRI K. A. MATHIALAGAN : Not that nothing should be put but the Chair could have anticipated . . .

MR. SPEAKER : There is no question of the Chair anticipating or not anticipating. The Chair should not take up responsibility on such matters.

26th March 1966] [Mr. Speaker]

Now, I will again put the cut motion of Sri S. Arumugam to the vote of the House.

The cut motion of Sri S. Arumugam was put and declared lost.

MR. SPEAKER : The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 6,45,21,400 under Demand No. XXIII—Community Development Projects, etc.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Sri K. A. Mathialagan to Demand, No. XXIX Public Works Grants-in-aid was put and lost.

MR. SPEAKER : The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 2,55,75,700 under Demand No. XXIX—Public Works—Grants-in-aid.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : This matter raised by Sri Mathialagan, could be very leisurely discussed. As I understand it, I acted honestly.

SRI V. KRISHNAMOORTHY : Nothing is mentioned about the division.

MR. SPEAKER : That is why, there is no division.

V.—ANNOUNCEMENT.

THE MADRAS APPROPRIATION BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Appropriation Bill, 1966.

VI.—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Appropriation Bill, 1966.

MR. SPEAKER : The question is—

' That leave be granted for the introduction of the Madras Appropriation Bill, 1966.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 28th March 1966. 1-10 p.m.

The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other papers.

† 72. *Note on fisheries in the Madras State (Tamil).*

† 73. *Policy note and Speach by the Minister for Information and Publicity on Registration Department (Tamil).*

†74. *A review on Working of the Stationery and Printing Department during* 1965–66 *(Tamil and English).*

† 75. *Speach by Minister for Information and Publicity on the Demand No. XXXIV—Stationery and Printing (Tamil and English).*

§ 76. *Note on Demand No. XXIX* 1966–67 *(Tamil and English).*

§ 77. *Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for* 1965–66 *(Tamil and English).*

§ 78. *Final Supplementary Estimates* 1965–66—Speech of *Hon. Sri M. Bhaktavatsalam, Chief Minister (Tamil and English).*

§ 79. *Notice for Demands for Grants for Further Expenditure in the year* 1965–66 *(Tamil and English).*

80. *The Annual Financial Statement for* 1966–67 *and Supplementary Financial Statement for* 1965–66 *of the Madras State Electricity Board.*

† Despatched to Members on 24th March 1966.
‡ Despatched to Members on 25th March 1966.
§ Laid on the table of the house on 25th March 1966.

APPENDIX.

[*Vide* Answer to Starred Question No. 442 on page 134].

Particulars regarding proposal to distribute kerosene on the basis of ration cards.

1. In the district of *Ramanathapuram* there is no proposal to distribute kerosene on the basis of ration cards. The card system will be introduced when scarcity is felt.

2. *Tirunelveli.*—There is no proposal to introduce card system to distribute kerosene. However as a measure of caution the supply and distribution of kerosene to diffenent taluks, have been regulated with reference to the stock position to each taluk.

3. *Salem.*—There is no proposal to introduce ration to distribute kerosene in any area.

4. *The Nilgiris.*—In the district, kerosene is distributed on an *ad hoc* basis at the rate of one litre per family per month. No separate cards have been issued.

5. *North Arcot.*—No permanent card system has been introduced in the district. *Ad hoc* distribution is now made throughout the district in accordance with the day-to-day availability of kerosene.

6. In Madurai district there is no proposal to introduce rationing to distribute kerosene.

7. *Coimbatore.*—In Coimbatore City, kerosene is distributed on the family cards at the rate of 1/2 litre per day. The question of issue of permanent ration cards, will be finalised shortly. In parts of rural areas where family card system is in vogue, 1/2 litre per day per family is issued. In areas where there is no family card system kerosene is supplied on *ad hoc* basis.

8. *Madras City.*—The distribution of kerosene is done through a permanent ration card system. The following is the scale at which kerosene is isssued per family linked with the allotment of sugar rations.

Sugar quota in Kgs.	Maximum quota of Kerosene.
(1)	(2)
2 Kgs.	6 litres for month per lighting only.
3 to 5½ Kgs.	8 litres for cooking and lighting.
6 to 9 Kgs.	20 litres.
10 to 14 Kgs.	30 litres.
Above Rs. 1,000 p.m.	Whatever has been asked for.

9. *Thanjavur.*—Distribution of kerosene is not done through card system. But equitable distribution of kerosene is undertaken.

10. *Kanyakumari.*—No card system has been introduced to distribute kerosene in the district at present.

11. *Dharmapuri.*—A proposal has been drawn up to distribute on the basis of family cards in Municipalities and big villages where family cards have been distributed and by *ad hoc* allotment in other villages according to households. One litre per card per week is proposed to be given.

12. *Chingleput.*—In the belt area supply of kerosene is done at the rate of 10, 15 and 20 litres per mensem on the basis of sugar cards. In non-belt areas the Revenue Divisional Officers have been instructed to issue kerosene in the villages with the help of panchayats and village officers.

13. *South Arcot.*—Card system has been introduced in all the 4 municipalities and 22 major panchayats for supply of kerosene. Kerosene is distributed on the basis of monthly sugar quota as detailed below:—

Sugar (Kgs.)	Kerosene (litres).
(1)	(2)
2 Kgs.	6 litres per month.
2 to 5 Kgs.	10 litres per month.
6 to 10 Kgs.	20 litres per month.

The distribution will be done proportionately according to available stock.

14. *Tiruchirappalli.*—No ration card system has been introduced. In Tiruchirappalli, Srirangam, Pudukottai and Karur Municipalities distribution is done on the basis of family cards issued for supply of rice.

பங்கீட்டுக் கார்டுகளின் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான திட்டம் பற்றிய விவரங்கள் :

1. **இராமநாதபுரம் மாவட்டத்தில்.**—பங்கீடு கார்டுகளின் அடிப்படையில் மண் எண்ணெய் வழங்கும் யோசனையில்லை. மண்ணெண்ணெய் பற்றுக் குறை ஏற்பட்டால் கார்டு முறை கொண்டுவரப்படும்.

2. **திருநெல்வேலி.**—மண்ணெண்ணெய் வழங்குவதற்காக கார்டு முறையைக் கொண்டு வரும் யோசனையில்லை. ஆயினும், எச்சரிக்கை நடவடிக்கையாக, ஒவ்வொரு தாலூகாவிலும் உள்ள இருப்பு நிலவரத்தை அனுசரித்து பல்வேறு தாலூகாக்களுக்கும் மண்ணெண்ணெய் ஒதுக்குவதும் வழங்குவதும் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

3. **சேலம்.**—எந்தப் பகுதியிலும் மண்ணெண்ணெய் வழங்குவதற்கார பங்கீட்டு முறையை ஏற்படுத்தும் யோசனையில்லை.

4. **நீலகிரி.**—இம்மாவட்டத்தில், ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு லிட்டர் வீதம் இதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. தனியாகக் கார்டுகள் எவையும் வழங்கப்படவில்லை.

5. **வட ஆர்க்காடு.**—இம்மாவட்டத்தில் நிலையான கார்டு முறை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. மண்ணெண்ணெய் அன்றுடம் கிடைக்கும் நிலையை அனுசரித்து இம் மாவட்டம் முழுவதிலும் தனி ஏற்பாட்டின் மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

6. **மதுரை.**—மதுரை மாவட்டத்தில் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக பங்கீட்டு முறையை ஏற்படுத்தும் யோசனையில்லை.

7. **கோயம்புத்தூர்.**—கோயம்புத்தூர் நகரில் குடும்பக் கார்டுக்கு நாளொன்றுக்கு ½ லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. நிலையான பங்கீடு கார்டுகள் வழங்குவது குறித்து விரைவில் இறுதி முடிவு செய்யப்படும். குடும்பக் கார்டு முறை அமுலிலுள்ள கிராம புறங்களின் சில பகுதிகளில் நாளொன்றுக்கு ஒரு குடும்பத்துக்கு ½ லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. குடும்பக் கார்டு முறை அமுலிலில்லாத பகுதி களில் தனி ஏற்பாட்டின் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப் படுகிறது.

8. **சென்னை மாநகரம்.**—நிலையான கார்டு முறை மூலம் மண் ணெண்ணெய் வழங்கப்படுகிறது. சர்க்கரை ஒதுக்கப்பட்டுள்ள அளவை அனுசரித்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் பின்வரும் அளவு வீதங்களில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது :

சர்க்கரை அளவுப் பங்கீடு. (கிலோ கிராமில்).	மண்ணெண்ணெய் பெறும் அளவுப் பங்கீடு.
(1)	(2)
2 கிலோ	6 லிட்டர் ஒரு மாதத்திற்கு விளக்கெரிக்க மட்டும்.
3 முதல் 5½ கிலோ கிராம்	8 லிட்டர் சமைக்கவும் விளக் கெரிக்கவும்.
6 முதல் 9 கிலோ கிராமம்	20 லிட்டர்.
10 முதல் 14 கிலோ கிராமம்	30 லிட்டர்.
மாதம் ரூ. 1000-க்கு மேல் வருமானம் உடையோர்.	கேட்கப்படும் அளவு.

9. **தஞ்சாவூர்.**—கார்டு முறை மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்பட வில்லை. ஆனால் மண்ணெண்ணெய் சமமாக வழங்கப்பட்டு வருகிறது.

10. **கன்னியாகுமரி**. தற்போது இம்மாவட்டத்தில் மண்ணெண்ணெய் வழங்க கார்டு முறை ஏற்படுத்தப்படவில்லை.

11. **தர்மபுரி.**—குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ள நகராட்சி களிலும் பெரிய கிராமங்களிலும் குடும்பக் கார்டுகளின் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கவும் மற்ற கிராமங்களில் குடும்பங்களுக்கேற்ப தனி ஏற்பாட்டின் மூலம் மண்ணெண்ணெய் ஒதுக்கப்பட்டு வழங்கவும் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. வாரத்திற்கு கார்டு ஒன்றுக்கு ஒரு லிட்டர் வீதம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

12. **செங்கற்பட்டு.**—இம் மாவட்டத்தின் எல்லையோரப் பகுதியில் குடும்பக் கார்டுகளின் அடிப்படையில் மாதத்திற்கு 10, 15, 20 லிட்டர்கள் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. பிற பகுதிகளில், பஞ்சாயத்துக்களின் உதவியைக் கொண்டும் கிராம அதிகாரிகளின் உதவி யுடனும் மண்ணெண்ணெய் வழங்குமாறு வருவாய்க் கோட்ட அதிகாரி களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

13. **தென் ஆர்க்காடு.**—மண்ணெண்ணெய் வழங்கப்படுவதற்காக 4 நகராட்சிகள், 22 பெரிய பஞ்சாயத்துக்கள் ஆகிய எல்லாவற்றிலும் கார்டு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாத சர்க்கரை அளவுப் பங்கீட்டு வீதத்தின் அடிப்படையில் கீழே விவரம் கொடுத்துள்ளவாறு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

சர்க்கரை (கிலோ கிராம்). (1)	மண்ணெண்ணெய் (லிட்டர்). (2)
2	ஒரு மாதத்திற்கு 6.
2 முதல் 5 வரை	ஒரு மாதத்திற்கு 10.
6 முதல் 10 வரை	ஒரு மாதத்திற்கு 20.

கிடைக்கும் இருப்புக்கு ஏற்ற வீதாச்சாரப்படி மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

14. **திருச்சிராப்பள்ளி.**—பங்கீட்டுக் கார்டு முறை ஏற்படுத்தப்படவில்லை. திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை, கரூர் நகராட்சிகளில் அரிசி வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட குடும்பக் கார்டுகளின் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 28th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Tractors

* 212 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to establish a factory for manufacture of tractors and power tillers in the State, either in the public or private sector?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have decided to set up an Agro-Industries Corporation in the composite sector for the manufacture of agricultural implements such as tractors, power drills, plant protection equipments, etc. The Corporation is expected to be registered shortly. In the private sector, the proposals of certain parties for the establishment of factories for the manufacture of hand drawn tractor machines and agricultural tractors are under the consideration of the Government of India.

திரு. வை. சங்கரன்: நம்முடைய ராஜ்யத்தில் குறிப்பாக நிலவுடைமைகள் கணிசமாக இரண்டு மூன்று ஏக்கர்கள் என்று குறைந்த அளவிலே இருப்பதினாலே அப்படிப்பட்ட கணிசமான விவசாயிகளுக்குப் பயன்படும் வகையிலே 5 ஹார்ஸ் பவர் டிரில்லர் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது அவ்வளவு பயன்படவில்லை என்று சொல்லப்படுகிறது. நம்முடைய ஸாயில் மிகவும் கெட்டியாக கடினமாக இருக்கக்கூடிய காரணத்தினால், மிகவும் குறைந்த ஹார்ஸ் பவர் இருக்கக்கூடிய டிராக்டர்கள் பவர் டிரில்லர்கள் உபயோகிப்பதில்லை. குறிப்பாக, தோட்டங்களில் காய்கறி விவசாயத்திற்கு இந்தப் பவர் டிரில்லர்களை உபயோகப்படுத்தலாம். ஆகையால் இரண்டு விதமான டிராக்டர்கள் உற்பத்தி செய்வதற்கு உத்தேசம் இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தத் தொழிற்சாலை எங்கே ஆரம்பிக்கப்படும் ? எவ்வளவு மூலதனம் வைக்கப்படும் ? இதில் எவ்வளவு உற்பத்தி செய்யப்படும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு மூலதனம் ஒரு கோடி ரூபாய். எங்கே அமைக்கப்படும் என்று முடிவு எடுக்கப்படவில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know when these will come into production and what is the horse-power of these tractors?

THE HON. SRI R. VENKATARAMAN : It is difficult to say at this moment.

[28th March 1966

தனியார்த் துறை துரித பஸ்கள்

* 452 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) திருச்சி, சேலம் மாவட்டங்களில் தனியார் துறையில் ஓடுகின்ற எக்ஸ்பிரஸ் பஸ்கள் எத்தனை ?

(இ) அதன் ஒவ்வொரு ரூட்டுக்கும் உள்ள குறைந்தபட்ச, அதிக பட்ச மைல்கள் எவ்வளவு ?

(உ) ஒவ்வொரு பஸ்ஸுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள சீட்டுகள் எத்தனை ?

(எ) ஒவ்வொரு பஸ்ஸுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணம் எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) to (d) A statement[a] is placed on the Table of the House.

திரு. எஸ். முருகையன் : இந்த மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில், பொதுவாக சர்க்கார் திட்டம் 120 மைலுக்கு மேல் உள்ள பஸ் ரூட்டுகளை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டுவிடுவது என்று இருந்தாலும், இந்த அறிக்கையில் 120 மைலுக்கு அதிக தூரம் உள்ள பஸ் ரூட்டுகள் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்றன. அப்படி எடுத்துக் கொள்ளவில்லையென்றால் அதற்கான காரணம் என்னவென்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா ?

திரு. எஸ். முருகையன் : திருவண்ணாமலை, திருச்சி, திருக் கோயிலூர், மடப்பட்டு, உளுந்தூர்ப்பேட்டை, வேப்பூர், தொழுதூர், பெரம்பலூர், சமயபுரம் செல்லும் ரூட்டுகள் இன்னும் ஒன்றிரண்டு ரூட்டுகள் இருக்கின்றன.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 120 மைலுக்கு மேல் இருக்கின்ற ரூட்டுகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் முடிவு எடுத்துக்கொள்வதற்கு முன்பே கொடுக்கப்பட்ட ரூட்டுகள் அவை.

திரு. ஆ. தங்கவேலு : தனியார்த் துறையில் விடுகின்ற எக்ஸ்பிரஸ் பஸ்கள் எந்த முறையில் இருக்க வேண்டும் என்று விதிகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கான விதிகள் எல்லாம் இருக்கின்றன.

திரு. வி. எஸ். எஸ். மணி : தனியார்த் துறையில் விடுகின்ற துரித பஸ்களில் வசூலிக்கப்படுகின்ற கட்டணத்தைவிட சர்க்கார் பஸ்ஸிலே அதிகமாகக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றதே, அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : பெட்டர் சர்வீஸ், லக்சுரி சர்வீஸ்.

திரு. ஜே. மாதா கவுடர் : 120 மைலுக்கு மேலுள்ள தனியார்த் துறைக்குக் கொடுக்கப்பட்ட ரூட்டுகளைப் படிப்படியாக அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

[a] Printed as Appendix I on pages 287–292.

28th March 1966

Inter-State Transport buses

* 453 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have entered into any understanding with Kerala and Mysore Governments regarding running of Inter-State Transport buses; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) As regards the reciprocal arrangement with the Government of Kerala, a statement[a] is placed on the Table of the House. The terms of reciprocal arrangement with the Government of Mysore have been questioned before the High Court of Madras in a Writ Petition by an operator, and so that matter is *sub-judice.*

திரு. ஜே. மாதா கவுடர் : உதகையிலிருந்து கொச்சினுக்குப் போகக் கூடிய வகையில் கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தப் படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கேரள அரசாங்கத்துடன் சில ரூட்டுகள் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படுகின்றன. அதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் என்ன நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்று சொல்ல முடியும்.

திரு. வை. சங்கரன் : தற்போது கிருஷ்ணகிரி வரை செல்லும் பஸ்களை பெங்களூர் வரையிலும் நீட்டிவிடுவதற்குப் பேச்சு வார்த்தை நடத்தப் பட்டதா, விவரம் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கேஸ் கோர்ட்டிலே பெண்டிங் காக இருக்கிற காரணத்தினால் விவரம் கொடுப்பதற்கில்லை.

Match factories

* 454 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government for making an equitable distribution of the available potassium chlorate, to the safety match units in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : The three producers of Potassium Chlorate have been requested to step up production of Potassium Chlorate and to pool the products and distribute them directly among the various match factories on the basis of their excise deturns. A total quantity of 101 tons was distributed among the match factories during February 1966. Arrangements have been made to distribute 130 metric tons of Potassium Chlorate per month during March and April and subsequent months.

திரு. வை. சங்கரன் : மேட்டூர் கெமிகல்ஸ், பொட்டாசியம், கால்சியம் க்ளோரேட், காஸ்டிக் சோடா உற்பத்தி செய்துவந்தவர்கள் பவர் கட் வந்ததன் காரணமாகவும், காஸ்டிக் சோடா லாபகரமாக இருப்பதனாலும், அனுமதிக்கப்பட்ட மின்சாரத்தில், காஸ்டிக் சோடா உற்பத்தியில் மட்டும் இறங்கிவிட்டதால் பொட்டாசியம் க்ளோரேட் உற்பத்தி குறைந்து விட்டது என்பது உண்மையா ?

[a] Printed as Appendix II on page 293.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எனக்கு எந்தக் காரணம் என்று தெரியாது. மேட்டூர் கெமிகல்ஸ் ஜூன் 1964 168 டன்னுக்கு மேல் கையில் ஸ்டாக் அதிகமாக இருந்த காரணத்தினால்தான். பின்பு பவர் கட் வந்ததனுல்தான் அதிகம் உற்பத்தி செய்ய முடியவில்லை.

திரு. சா. கணேசன் : இந்தக் காரணத்தினுலே ஏராளமான தொழிற் சாலைகள், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதால் இது மாதிரி பவர் கட் செய்வதால் இன்னும் தொழில், தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் இவை பெரிதும் பாதிக்கப்படுகிருர்கள் என்ற காரணத்தைக் கொண்டு இந்த மாதிரி இன்றியமையாத ஒரு வகையில் நெறிப்படுத்தப்பட்ட உப் பொருள்கள் பல இருக்கின்றன. இவற்றிற்கு சலுகைகள் சில கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதே சில சலுகைகள் கொடுத்திருக்கிருேம். இப்போது கையில் இருப்பதை, மின்சார சக்தியை இன்னும் அதிகமாக இந்தத் துறைக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்ஞல் வேறு துறைகளுக்குக் கொடுத்துக்கொண்டிருப்பதைக் குறைக்க வேண்டிய நிலை எற்படும். இப்போது அது சாத்தியமில்லை.

திரு. சா. கணேசன் : நம்முடைய மின்சார வழங்கு துறை மூலம் வழங்க முடியாவிட்டால் அவர்கள் தனியாக ஜெனரேட்டர்ஸ் வைத்துக் கொண்டு அதன் மூலம் மின்சாரத்தைப் பெற்று இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள அரசாங்கம் அனு மதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அனுமதித்திருக்கிறது. அது மாத்திரமல்ல. சலுகைகள் கூடக் கொடுத்திருக்கிருேம். தனியாகவே சொந்த ஜெனரேட்டர்கள் வைத்துக்கொண்டு அவர்கள் மின்சாரத்தை இப்போது கட்டுப்பாடு இருக்கிற காலத்தில் உற்பத்தி செய்தால் அதற்கு வரி கொடுக்க வேண்டாம் என்றுகூட செய்திருக்கிருேம்.

திரு. வை. சங்கரன் : கேரளாவில் உள்ள பொட்டாஷியம் க்ளோரேட் தயாரிக்கும் தொழிற்சாலைகள் முன்பு நம் ராஜ்யத்திலுள்ள தீப் பெட்டிகளுக்கு என்று கொடுத்ததுபோல் அதையனுசரித்து இப்போது உற்பத்தியை வினியோகம் செய்வதில்லை என்பதும் ஒரு காரணம் என்பது வாஸ்தவமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுவும் சரியல்ல. மத்திய அரசாங்கத்திலிருந்து இதற்காக அதிகாரி ஒருவர் வந்து தென்னுட்டி லுள்ள, 3 தொழிற்சாலைகளின் பிரதிநிதிகளை அழைத்து வைத்துப் பேசியதன் முடிவாகத்தான் 130 டன் இன்று எல்லோருக்கும் சேர்ந்து 'பூல்' செய்து கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்மேகம் கவுடர் : தீப்பெட்டித் தொழிலுக்கு எவ்வளவோ சலுகைகள் செய்து கொடுத்திருந்தும் தீக்குச்சியின் தரம் வரவர இன்ஃபீரிய ராகிக்கொண்டு வருவதால் அதை அரசாங்கம் கண்காணிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான தகவல் சர்க்கா ரிடம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : நம் மாநிலத்தில் தீப்பெட்டித் தொழிலுக்கு இந்த மருந்துகள் வருடத்திற்கு எவ்வளவு தேவைப்படுகிறது ? பவர் கட் ஏற்பட்ட பிறகு எவ்வளவு பற்ருக்குறை ஏற்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சற்றேறக்குறைய 30 சத வீதம் குறைவு ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. வருடத்திற்கு எவ்வளவு வேண்டும் என்று கணக்கிட முடியாது. சில ஆண்டுகளில் அதிகமாக வாண வெடி உற்பத்தி செய்ய அதிகம் பொட்டாஷியம் க்ளோரேட் வேண்டி யிருக்கிறது. சில ஆண்டுகளில் குறைவாக உபயோகப்படுத்தப்படுகிறது.

திரு. சி. பொன்னுசாமி : விம்கோ கம்பெனியார் தீப்பெட்டியின் ஒரு பக்கத்தில் மட்டும் இந்த மருந்தைப் போடுகிருர்கள். அதில் சிக்கனம் இருப்பதாகத் தெரிகிறது. அதே போன்று மற்ற கம்பெனிக்காரர்களும் மருந்தைக் குறைவாக உபயோகிக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்னிடம் இந்தத் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விசாரித்துச் சொல்லலாம்.

திரு. வை. சங்கரன் : தீப்பெட்டித் தொழில் நம் ராஜ்யத்தில் விசேஷ மாக நன்ருக வளர்ந்துள்ள ஒரு குடிசைத் தொழிலாக இருப்பதால் இவர் களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பொதுத் துறையில் அரசாங்கம் இந்தப் பொட்டாஷியம் க்ளோரேட் தேவையான போதிய அளவு உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மின்சாரப் பற்ருக்குறை, பொதுத் துறையாக இருந்தாலும் சரி, தனியார்த் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி, இருக்கும்.

மாநில இயணைப்புப் படை

* 435 கேள்வி—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தொழிற்கூடங்களில் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக் கிறது போல் M.F.S. ஒர்க்ஷாப்பில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கும் போனஸ் கொடுக்கப்பட்டு வருகிறதா ?

(இ) இல்லை என்ருல், காரணம் என்ன ?

(உ) உண்டு என்ருல், எந்த அடிப்படையில் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) மத்திய அரசின் அல்லது மாநில அரசாங்கத்தின் ஒரு துறை நடத்துகிற அல்லது அதன் அதிகாரத்தின் கீழ் நடத்தப்படுகிற தொழில் நிறுவனம் ஒன்றினுல் அமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு, 1965-ம் ஆண்டு பூரிப்பூதியம் வழங்கும் சட்டத்தின்கீழ் பூரிப்பூதியம் பெறும் உரிமை இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த எம்.எஃப். எஸ். தொழிற் சாலையில், வொர்க்ஷாப்பில் வேலை செய்கிறவர்கள் தொழிலாளர்கள் ரகத்தி லும் சேராமல், சர்க்கார் சிப்பந்திகள் என்ற ரகத்திலும் சேராமல், தொழிலாளர் ரகத்தில் சேர்ந்தால் அவர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டும், சர்க்கார் சிப்பந்திகள் இனத்தில் சேர்ந்தால் அவர்களுக்கு தொழிலுக்கு மேல் டெக்னிக்கல் அலவன்ஸ் கொடுக்கவேண்டும். ஆக, அதுவும் கொடுப்பதில்லை, இதுவும் கொடுப்பதில்லை. அவர் களை எப்படித்தான் நடத்துகிருர்களோ! இவர்கள் எப்படித்தான் ஜீவிப்பது என்று அரசாங்கம் சொல்லுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எப்படித் தொழிலாளர்களை நடத்த வேண்டுமோ அப்படித்தான் அரசாங்கம் நடத்துகிருர்கள். சர்க்கார் விதி முறைகள் எல்லாம் இருக்கின்றன. தனியார்த் தொழிற்சாலை போன்ற வற்றில் வேலை செய்தால் போனஸ் இருக்கிறது, சர்க்கார் தொழிற்சாலை களில் பென்ஷன், கிராட்டியுட்டி போன்றவை இருக்கின்றன. இந்த போனஸ் திட்டத்தின் கீழ் அவர்கள் வருவதில்லை.

அரிசன நலத் துறை.

* 436. கேள்வி.—**திரு. பி. முருகையன்:**
திரு து. ப. அழகமுத்து:
திரு. எஸ். ஜே. ராமசாமி:
திரு. ஆ. தங்கவேலு:
கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள ஹரிஜன நலத் துறை இயக்குநர் அலுவலகத்தை அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) தற்போது அலுவலகம் வைத்துள்ள இடத்திற்கு மாத வாடகை எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) தற்பொழுது அலுவலகம் உள்ள கட்டடத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 7,605·32 வாடகை கேட்கிறார்கள். அது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. பி. முருகையன் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிற நேரத்தில் என் முதல் கேள்விக்கு மாற்றம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆண்டிற்கு முன்பாக அந்த அலுவலகம் மாற்றப்பட்டிருக்கிறது. ஹரிஜன நலத் துறை டைரக்டர் அலுவலகம் மட்டும் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இருக்க வேண்டிய அவசியம் என்ன ? காரணத்தை விளக்குவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதல் கேள்விக்கு இல்லை என்று சொன்னேன். அடிக்கடி மாற்றப்படுகிறதா என்று கேட்டால் அதற்குத்தான் இல்லை என்று சொன்னேன். மாற்றவில்லை என்று சொல்லவில்லை. அடிக்கடி மாற்றவில்லை. இன்று ஒரு இடம், நாளை ஒரு இடம், அடுத்த மாதம் ஒரு இடம் என்ற அர்த்தத்தில், அடிக்கடி மாற்றவில்லை என்று சொன்னேன். தாற்காலிகமாகத்தான் இந்த இடத்தில் வைத்திருக்கிறோம். புதிதாகக் கட்டப்படுகிற இடத்தில் இடம் பார்த்து நல்ல இடத்தில் வைக்க வேண்டுமென்று சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். எந்த விதமான முடிவிற்கும் வரவில்லை. வாடகை நிர்ணயம் செய்யவில்லை.

திரு. நா. இராசாங்கம் : ஹரிஜன நலத் துறை டைரக்டர் அலுவலகம் நான் வந்த பிறகு இரண்டு இடங்களுக்கு மாறியிருக்கிறது. அடிக்கடி மாறவில்லை என்று சொல்லுவது பொருத்தமில்லை. இருந்தாலும் இட்டத்தட்ட 1,500 ரூபாய்க்கு மேல் வாடகை இருக்கும் என்று சொல்லப்படுகிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு என்று ஒரு கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கக் கூடாதா ? பெரிய அதிகாரியின் அலுவலகத்திற்காவது ஒரு கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கலாமே. மேற்கொண்டாவது நடவடிக்கைகள் எடுப்பார்களா, ஒரு கட்டடம் கட்டிக் கொடுக்க?

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன நலத் துறைக்கு என்று ஒரு கட்டடம் கட்டத் தேவையில்லை. அரசாங்கக் கட்டடங்கள் எல்லாம் ஹரிஜன நலத் துறைக்கும் சம்பந்தப்பட்டதுதான். அரசாங்கம் எங்கெல்லாம் கட்டடம் கட்டுகிறார்களோ ஹரிஜன நலத் துறைக்கும் உதவி செய்வதற்காகத்தான் கட்டப்படுகிறது. புது இடம் கட்டியிருக்கிறார்கள். அங்கு போகக் கொஞ்சம் தயங்குகிறார்கள். அதைவிட நல்ல கட்டடம் கட்டும்போது பார்த்துக் கொள்ளலாம் என்றிருக்கிறார்கள். பீச் பக்கத்தில் கட்டிக்கொண்டிருக்கிறோம். இந்த இடத்திற்கு வந்துவிடுவது நல்லதா என்பது யோசிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : மாதம் ஒன்றுக்கு 7,605 ரூபாய் வாடகை கேட்கிறார்கள் என்று பதில் அளித்திருக்கிறார்கள். முதலிலேயே வாடகை பேசப்படாமலேயே அந்த அலுவலகம் அங்கு மாற்றப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கக் கட்டடத்திற்கு வாடகை, பி.டபிள்யூ.டி. சீஃப் என்ஜினியர் (பில்டிங்க்ஸ்) இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று குறிப்பு எழுதினால் அதைக் கொடுக்கிறோம். அந்த மாதிரி எந்த விதமான முடிவும் செய்யவில்லை. ஏற்கனவே இருந்த கட்டடம் பிரிண்டிங் பிரஸ்ஸுக்காக வேண்டியிருப்பதால் அதை ரொம்ப நாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்ததால் இடையூறு செய்யவேண்டாம் என்று உடனடியாக மாற்றியிருக்கிறோம். வாடகை இன்னும் ஃபிக்ஸ் செய்யவில்லை.

Cocoanut Package Programme

* 437 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have proposed to implement a Cocoanut Package Programme in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) : 1966-67-ம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டத்தில், தென்னைமர முனைப்பு, வளர்ப்புப் பிரிவுகள் மூன்றைத் தொடங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவை தஞ்சாவூர், கன்னியாகுமரி, வட ஆர்க்காடு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரிவாகத் தொடங்கப்படும்.

திரு. [illegible] : [illegible] தேங்காய், தேங்காய் எண்ணெய் விலை உயர்வு [illegible]டுமல்ல[illegible], மற்ற ஜில்லாக்களில் எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறது. [illegible] வசதியிருக்கிறதோ, அப்படிப்பட்ட மற்ற ஜில்லாக்களிலும் இதைச் செயல்படுத்த, விரிவுபடுத்த சீக்கிரம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது இந்த மூன்று இடங்களில் இன்னும் ஒரு ஐந்து நான்காவது திட்டத்தின்கீழ் இருக்கின்றன. சென்டர்கள் ஆரம்பிக்கலாம் என்று அரசாங்கம் முடிவிற்கு வந்திருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : பொதுவாக தென்னை, வாழை போன்ற தீவிரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் செய்யப்படுகின்றவைகளைக் கவனிக்கத் தனியாக அலுவலகங்கள் ஏற்படுத்தித் தனியாக அலுவலர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவர்கள் சிபார்சு செய்து அனுப்புகின்ற கடன் மனுக்களை எல்லாம் கோவாபரேடிவ் சொஸைடிகளுக்கு அனுப்புகிறார்கள். ஆனால், அந்த மனுக்கள் எல்லாம் திருப்பி அனுப்பப்படுகின்றன. இதனால் எந்த விதமான பயனும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே விவசாய டிபார்ட்மெண்ட் மூலமாகவே கடன்களை எல்லாம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது என்ன திட்டத்தைச் சர்க்கார் கையாண்டு வருகிறதோ அதுதான் இனிமேலும் கையாளப்படும் என்று நினைக்கிறேன். தனியாக இதைப் பற்றிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. சி. பொன்னுசாமி : நெல்லை மாவட்டத்தில் கடற்கரையோரத்தில் தென்னைகள் வைப்பதற்கு ஏற்பாடு செய்ய ஒரு குழு வைத்திருக்கிறார்கள். அந்தக் குழு பார்வையிட்டிருக்கிறார்களா ? அப்படியானால் அந்த வேலை எப்பொழுது நடக்கும் என்று தெரிவிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. [illegible] கோயில்பட்டி பகுதியிலே [illegible] சமுத்திரக் கரையோரமாக தென்னை [illegible] [illegible] என்று சட்டசபை அங்கத்தினர்கள் [illegible] தற்கு வாய்ப்பு இருக்கிறது [illegible] அதைப் பற்றி அரசாங்கம் பின்னாலே பரிசீலனை செய்யும். [illegible]

திரு. சி. பொன்னுசாமி : இதைத் தீவிரமாக ஆலோசனை பண்ணி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலிலேயே கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது சம்பந்தமாக விவசாய இலாகா டைரக்டர், உதவி டைரக்டர் இவர்கள் எல்லாரும் பார்த்து தென்னை வைப்பதற்கு உகந்ததாக இடம் இருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து அது சாதகமாக இருந்தால், பரிசீலனை செய்யப்படும்.

மது விலக்குக் குற்றங்கள்.

* 438 கேள்வி.—**திரு. இ. சிவசுப்ரமணியம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிய தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலூகாவில் கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்றங்கள் எத்தனை ?

(இ) இவற்றில் தண்டனையடைந்து அபராதம் விதிக்கப்பட்டவர்களும், சிறை தண்டனையடைந்தவர்களும் முறையே எத்தனை பேர் ?

கனம் திரு. பூ. கக்கன் :

(அ) 1160.

(இ) அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 747, சிறை தண்டனையடைந்தவர்கள் 371.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்தத் தண்ட[illegible]டைந்தவர்களிலே போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள் அல்லது மு[illegible] வார்டர்கள் யாராவது இருக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. மு. சண்முகம் : இந்தக் குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படுவதிலே போலீஸ்காரர்கள் நிரபராதிகள் மீதும் அநியாயமாக கேஸ் தாக்கல் செய்துவிடுகிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? உதாரணமாக தென் ஆற்காடு ஜில்லாவில் கடையம் பஞ்சாயத்து பிரஸிடெண்ட் மீது பொய்க் கேஸ் தாக்கல் செய்யப்பட்டு, கோர்ட்டில் அவர் நிரபராதி என்று சொல்லப்பட்டு, அந்த கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக மந்திரி அவர்களுக்கு அனுப்பப்பட்ட தகவலின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

கனம் திரு. பூ. கக்கன் : மந்திரி அவர்களிடம் கொடுக்கப்பட்டதைப் பற்றி ஞாபகம் இல்லை. எப்பொழுதோ கொடுத்திருந்ததுபற்றி இப்பொழுது ஞாபகம் இல்லை. நிரபராதிகள் குற்றச்சாட்டுக்கு ஆளாகக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் அவா. அப்படி ஏதாவது நடந்திருந்தால் அதைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதை விசாரித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். எஸ். மணி : இந்த மது விலக்குக் குற்றங்களில் வசூலிக்கப்பட்டதில் அபராதம் ஆகியவைகளின் மூலம் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : இந்தக் குற்றச்சாட்டுகள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. கடுமையான நடவடிக்கை எடுக்காவிட்டால் இதைப் போக்க முடியாது. கள்ளச்சாராயம் காய்ச்சினால் அந்த ஊருக்கே அபராதம் போட்டும், [illegible] இருந்து வரும் Flying [illegible]

குற்றத்தைக் கண்டுபிடித்தால் அந்தப் போலீஸ் நிலையத்திற்கே கடுமையான தண்டனை விதிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : யார் யார் திருட்டுச் சாராயம் காய்ச்சினார்களோ அவர்கள் மீதுதான் குற்றம், அவர்கள்தான் தண்டிக்கப்பட வேண்டும். அப்படியில்லாமல் அந்த ஊரையே தண்டிக்கவேண்டும் என்று சொன்னால் அது அரசாங்கத்தின் மீது அதிகமாக அதிருப்தியை ஏற்படுத்தக்கூடிய முயற்சியாகும். அதனால் அரசாங்கம் அவ்வாறு செய்வதற்கில்லை. அப்படிச் செய்யவேண்டுமென்ற எண்ணம் கனம் அங்கத்தினருக்கு இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்தக் கேள்வியிலே, ஹெட்வார் ஸ்டேட்மெண்ட், கேஸ்ட்வார் ஸ்டேட்மெண்ட் அமைச்சர் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா? கொடுத்திருந்தால் அதைச் சொல்ல முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. கொடுக்கவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : மதுவிலக்குக் குற்றம் செய்பவர்களுக்கு அபராதம், சிறை இரண்டும் கொடுக்கலாம் என்று சட்டத்திலே இருக்கிற காரணத்தாலே அபராதம் கட்டக்கூடியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அபராதம் கொடுப்பதற்குப் பயப்படுவதில்லை. ஆகவே அபராதம் என்பதை எடுத்துவிட்டு மது அருந்தினால் சிறைத் தண்டனை என்று சட்டத்தை திருத்தியமைப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இருக்கின்ற சட்டத்திலே அபராதம் மட்டுமல்ல, சிறைத்தண்டனையும் கொடுக்கலாம் என்று இருக்கிறது. நீதிபதி பார்த்து இரண்டு தண்டனையும்கூட கொடுப்பதற்கு முடியும்.

கள்ள நோட்டுகள்.

* 455 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) குமரி மாவட்டம், குலசேகரம் வட்டாரத்தில் நவம்பர் திங்களில் கள்ள நோட்டுகள் பிடிபட்டனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இல்லை. 24—11—1965 அன்று குழித்துறை போலீஸ் இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்ட இருவர் ஐந்து ரூபாய் (திருட்டு) நோட்டு அடிப்பதற்கான உருவரையற்ற அச்சுக்களையும், ஈயத்தையும் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. திருட்டு நோட்டுகள் எவையும் அச்சடிக்கப்படவில்லை என்பது புலனாய்வில் தெளிவாகியது.

திரு. இராம. அரங்கண்ணல் : அமைச்சர் அவர்கள் தந்த பதிலிலிருந்து அதற்கான, அதாவது கள்ளநோட்டுகள் அச்சடிப்பதற்கான கருவிகள், கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் ஐந்து ரூபாய் நோட்டுகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற தகவலைச் சொன்னார்கள். கள்ள நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவா, 100 ரூபாய் 10 ரூபாய் நோட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : கருவிகள் வைத்திருந்ததைக் கண்டுபிடித்து விசாரணை செய்கிறார்கள், மீண்டும் விசாரணை செய்து[illegible].

[28th March 1966

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இந்த கள்ள நோட்டு அச்சடிப்பது இருக்க இருக்க அதிகமாகிக்கொண்டு வருகிறதா, அல்லது குறைந்துகொண்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது கூடுதலாகியிருக்கிறது என்ற பிரச்னேயில்லே. சமுதாயத்தில் நல்லவர்களாக அதிகம்பேர் இருக்கிருர் கள். கெட்டவர்கள் ஒரு சிலர் இருக்கிருர்கள். கெட்டவர்களும் திருந்தவேண்டும், அவர்களும் நல்லொழுக்கமுள்ளவர்களாக ஆக வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். ஆனால், நல்லவர் களேயும் தீயவர்கள் கெடுத்துவிடுகிருர்கள். ஆகவே, எல்லாவற்றை யும் அரசாங்கம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கள்ளநோட்டுகள் நம்முடைய பொருளாதாரத்திற்கு அபாயத்தைத் தோற்றுவிக்கின்ற காரணத்தினலே, மேல்நாடுகளில் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் பழைய நோட்டுகளே எல்லாம் திரும்பிப்பெற்றுக்கொண்டு புதுநோட்டுகளே வெளியிடுகிருர்கள். அதைப்போல நம்முடைய நாட்டிலும் செய்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதை மத்திய அரசாங்கம் செய்யவேண்டும். ஆகவே இதற்கு விடை சொல்வதற்கில்லே.

சப்-இன்ஸ்பெக்டர்களில்லாத காவல் நிலேயங்கள்.

* 456 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) திருச்சி, தஞ்சை, தென்னுர்க்காடு மாவட்டங்களிலுள்ள காவல் நிலேயங்கள் 68-ல் சப்-இன்ஸ்பெக்டர்கள் இல்லே என்று கூறப் படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.

திரு. து. ப. அழகமுத்து : தலேவரவர்களே, டி. ஐ. ஜி. அவர்களே இதுமாதிரி 68 காவல் நிலேயங்களில் சப்-இன்ஸ்பெக்டர்கள் இல்லே என்று பத்திரிகையாளரிடம் செய்தி கொடுத்திருக்கிருர். அப்படி இருக்கும்பொழுது அமைச்சர் அவர்கள் அப்படியில்லே என்று கூறியிருக்கிருர்கள். எது உண்மை என்று அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

கனம் சபாநாயகர் : பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு கேட்கமுடியாது. வேறு தகவல் இருந்தால் கொடுங்கள்.

கனம் திரு. பூ. கக்கன்: ஹெட்கான்ஸ்டெபிள்கள் ப்ரமோஷனில் சப்-இன்ஸ்பெக்டர்களாக வந்திருக்கிருர்கள். Inspector-General told me that the M.L.A.'s allegation was not correct. All the stations are managed by Sub-Inspectors. Not evetn a single station is without a Sub-Inspector.

இனும் ஒழிப்புச் சட்டம்.

* 457 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1963-ம் ஆண்டு இனும் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எத்தனே இனும் கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன ?

28th March 1966]

(இ) அந்தக் கிராமங்களில் செட்டில்மெண்டு பணிகள் நடை பெறுகின்றனவா ?

(உ) இல்லேயென்ருல், காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 1,914 estates have been notified by the Government under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. Out of the above cases, stay orders in respect of 65 cases have been issued by the High Court before the estates were taken over. As such, only 1,849 estates have been taken over by the Government. Further proceedings are stayed by the High Court in respect of 217 estates.

(*b*) In respect of the estates taken over under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, settlement work has not yet been undertaken.

(*c*) The settlement work will commence only on receipt of the survey records as per the programme drawn up. All the estates have been notified for survey under the provisions of the Survey and Boundaries Act and the survey has been taken up by the survey parties concerned. The survey officers will start supplying the survey records for the inam estates from 1st March 1966.

திரு. செ. மாதவன் : 1963-ம் ஆண்டு சட்டம் போட்டு 1965-ல் 9-00 a.m.
விதிகள் வந்துவிட்டன. விதிகள் பிறப்பித்து பின்னல் நோடிபிகேஷன் ஆனது. இதுவரை செட்டில்மெண்ட் தாசில்தார் போய் என்க்வைரி செய்யாத காரணம் என்ன ? உடனடியாக செட்டில்மெண்டுக்கான நட வடிக்கைகளே எடுக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு என்ன விதிமுறைகளில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று முடிவு செய்த சமயத்தில் ஹைக்கோர்ட் தடை பிறப்பித்தது. செட்டில்மெண்ட் ஆக வேண்டுமென்ருல் சர்வே நடக்க வேண்டும். இந்த செட்டில்மெண்டுக் கான புள்ளி விவரங்களே சர்வே ரெக்கார்சிலிருந்து எடுப்பதற்கு அதிகாரிகள் 1966-ம் ஆண்டு மார்சு மாதம் 1-ந் தேதியில் இருந்து ஆரம்பித்து விடுவார்கள். அதற்குப் பிறகு இந்த செட்டில்மெண்ட் எல்லாம் நடக்கும்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர் : தேவதாய இனும் என்ற ஒரு வகை இனும் இருக்கின்றது. அதுவும் இந்த இனும் ஒழிப்புச் சட்டத் தின் கீழ் வருகின்றதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னென்ன இனும்கள் இந்தச் சட்டத்தின் கீழ் வருகின்றன என்பது சட்டத்திலே இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இனும் கிராமங்களில் உள்ள கண்மாய்கள் மராமத்து செய்யப்படுவதில்லே ; கிணறுகள் வெட்டுவதற்கோ, மாடுகள் வாங்குவதற்கோ கடன் கொடுக்கப்படுவதில்லே. சட்டம் வந்தாலும் சரியாகச் செயல்படாத கிராமங்களில் கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்கும் கடன் வசதிகள் கிடைப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த கஷ்டங்கள் எல்லாம் நீங்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சட்டம். இந்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வரும்வரை விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற காரணத்தால் சில இடங்களில் சம்பந்தப்பட்ட கண்மாய்கள், ஏரிகளுக்குச் சம்பந்தம் இருந்தால் மராமத்துச் செய்யலாம் என்று இருப்பதாகத் தெரிகிறது. திட்டவட்டமாகச் சொல்லமுடியாது.

திரு. செ. மாதவன் : அண்மையில் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் மதுரைக்குச் சென்று இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளேக் கலந்து தென் மாவட்டங்களேப் பொறுத்தவரை ஆலோசித்தார்கள் என்ற செய்தி

வந்தது. இந்தச் சட்டத்திலே ஏதாவது தடங்கல்கள் இருப்பதாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அப்போது கொண்டு வரப்பட்டதா ? தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் இந்தச் சட்டத்தில் உள்ள சில குறைபாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறதா ? அவற்றின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தச் சட்டத்தின் மூலம் துரிதமாக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து வைத்துப் பேசி இன்னும் தீவிரமாக என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று ஒரு முடிவு செய்யப்பட்டது. நான் முதலில் சொன்ன மாதிரி 1966ம் வருஷம் மார்ச்சு மாதம் 1-ம் தேதியிலிருந்து செட்டில்மெண்டுக்கான புள்ளிவிபரங்களை அதிகாரிகள் எடுக்க வேண்டுமென்று முடிவு எடுத்ததே இந்த ஆலோசனைக்குப் பிறகுதான். காங்கிரஸ் கமிட்டி என்ன அறிக்கை கொடுத்திருக்கிறது, என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இத்தகைய இனும் நிலங்களில் பட்டாப் பெறுவதற்காக ஒரு காலக் கெடு நிர்ணயிக்கப்பட்டது. அதை நீடிக்க வேண்டு மென்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? காலக் கெடு நீடிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : முதலிலே சர்வே நடத்தி ஆகவேண்டும். அதற்குப்பிறகுதான் செட்டில்மெண்ட்.

* 458 *Q.*—Sri M. KALYANASUNDARAM : } Will the Hon.
Sri S. MADHAVAN : }
the Minister for Food be pleased to state—

(*a*) the number of notifications issued under Inam Estates Abolition Act; and

(*b*) the number of notifications, which have been stayed by the High Court?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 1,914 estates were notified by the Government under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1963.

(*b*) Stay orders have been received from the High Court in respect of 65 estates after they were notified and before they were taken over. Two hundred and seventeen estates have been stayed by the High Court after they were taken over.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஹைக் கோர்ட்டில் இருக்கும் ரிட் மனுக்கள் எந்த நிலையில் இருக்கின்றன ? சட்டங்களில் எந்தப் பகுதியை ஆட்சேபித்து ரிட் மனு போடப்பட்டிருக்கிறது.

கனம் திரு. வெ. ராமையா : எந்தப் பகுதியை ஆட்சேபித்து ரிட் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இல்லை. துரிதமாகப் பரிசீலனையில் ஹைகோர்ட் நடவடிக்கை இருப்பதாக அறிகிறேன். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : காங்கிரஸ் அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இனும் ஒழிப்புச் சட்டத்தை எதிர்த்து காங்கிரஸ் எம்.பி. ஒருவரே ரிட் மனு போட்டிருக்கிறார் என்ற தகவல் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : யார் யார் பாதிக்கப்படுகிறார்களோ அவர்கள் ரிட் போடுகிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நமது மாநிலத்தில் ஜமீன் ஒழிப்புச் சட்டங்கள் இனும் ஒழிப்புச் சட்டங்கள் கொண்டு வந்த பிறகும் நீலகிரி ஜில்லாவில் கூடலூரில் ஜன்மித் திட்டம் என்று இருப்பதை ஒழித்து ரயத்துவாரி சிஸ்டமாகக் கொண்டு வருவதற்காக ஒரு தனிக் குழு அமைத்து ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

MR. SPEAKER : Let the hon. Member put a separate question, as his supplementary quetstion does not relate to the main question.

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருப்பது. இனும் ஒழிப்பு சம்பந்தப்பட்டது. அதற்குத் தனியாகச் சட்டம் செய்ய வேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்தச் சட்டத்தைப் பற்றி உயர்நீதி மன்றத்தில் எழுப்பப்பட்டிருக்கும் பிரச்சினையை நமது அரசாங்க சட்ட இலாகா ஆராய்ந்ததா ? அதிலே, பர்சனல் கல்டிவேஷன் 3 வருஷங்கள் என்று போட்டிருக்கிறார்கள். சீலிங் ஆக்டுக்கு வராத அளவிலே ஒரு புரொவிஷன் போடப்பட்டிருக்கிறது. நஷ்ட ஈடு கொடுக்கும் முறையைப் போட்டிருக்கிறார்கள். பர்சனல் கல்டிவேஷன் என்றால் தனிப்பட்டவர்களுக்கும் பொருந்தும், மத ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும், இது பற்றிய பிரிவைக் " கொஸ்டியன் " செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்க சட்ட இலாகா என்ன கூறியது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஷரத்து செலக்ட் கமிட்டியில் பொதுவாக அங்கத்தினர்கள் இந்த விதமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதால் மாற்றிச் சேர்க்கப்பட்டது. பொதுவாக, நடைமுறைக்கு, நியாயத்தை ஒத்த அளவில் சரியாக இருக்குமென்று சேர்க்கப்பட்டது. சரியல்ல என்ற தாவா இருக்கிற காரணத்தால் கோர்ட் முடிவு எப்படி வருகிறதோ அதை ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. ம. கமலநாதன் : ஜமீன், இனும் ஒழிப்புக்குப் பூர்வாங்கமான காடுகள் போன்றவைகளை எடுத்துக் கொண்டும், அவர்களுக்கு மிக அதிகமான வருமானம் வரக்கூடிய வாரச் சந்தைகளை இன்னும் எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்கம் அறிக்கையை வெளியிட்ட கிராமங்கள் சம்பந்தப்பட்டமட்டில் உயர்நீதி மன்றத்தால் தடை உத்தரவு பிறப்பித்து தேக்கி வைக்காத கிராமங்களில் உடனே யாரும் மரங்களை வெட்டக் கூடாது என்று அறிக்கை விட்டு பாதுகாப்பதற்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : மற்ற கிராமங்களைப் பொருத்த வரை டேக் ஓவர் ஆகிவிட்டன. கவர்ன்மெண்ட் அதிகாரிகளுக்கு அதிகாரம் " வெஸ்ட் " ஆகியிருக்கிறது. தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. மாதவன் : சட்டத்தில் போட்டிருக்கிற "பர்சனல் கல்டிவேஷன் " என்பதை அரசாங்கம் நியாயம் என்று உணர்ந்து போட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே உச்ச வரம்புச் சட்டமும் அப்படித்தான் கொண்டு வரப்பட்டது. உச்ச வரம்பு செல்லாது என்று தீர்ப்பு வந்தாலும் அது அரசாங்கக் கொள்கையாக இருந்த காரணத்தால் ஆர்டிகிள் 31-வது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டது. அது போன்ற ஏற்பாட்டை இந்த இனும் ஒழிப்புச் சட்டத்திலும் அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member is anticipating the decision of the High Court. I am still hopeful that the High Court may be in our favour.

Thanjavur-Tiruchirappalli Highway

* 459 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any proposal has been received from the Bharat Heavy Electricals, Tiruverambur for handing over the portion of Thanjavur-Tiruchirappalli Highway running through the township under their control; and

(*b*) if so, the details of the decision taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No such proposal has been received.

(*b*) Does not arise.

Food ration

* 460 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Government has suggested to the State Government that the food ration both formal and informal might be fixed in terms of grams instead of ounces per head per day, and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) It has been implemented in Madras State.

வெள்ள நிவாரணம்.

*461 கேள்வி.—**திரு. சா. ராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

வெள்ளம், புயல், தீ ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : No.

திரு. சா. ராமசாமி : தலைவர் அவர்களே, தீ விபத்தால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு 40 ரூபாய் உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. வெள்ளம், புயல் போன்றவற்றால் பாதிக்கப் படுகிறவர்களுக்கு 30 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. பத்து ரூபாய்க்கு மேல் கிஸ்தி கட்டுகிற விவசாயிகளுக்கு உதவித் தொகை இல்லை யென்றும் இருக்கிறது. ஆரம்பகாலத்தில் ரூபாய் 10 கிஸ்தி செலுத்திய வர்கட்கு இப்போது அவர்கள் எல்லாம் இரட்டிப்பு மடங்கு கிஸ்தி செலுத்தவேண்டிய நிலை இருக்கிறது. எனவே 10 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துபவர்கட்கு உதவி இல்லை என்பதை மாற்றி 40 அல்லது 50 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது இருக்கக்கூடிய முறை, தீயால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி கொடுக்கிற முறையில் சிறு உதவியை உடனே செய்கிறார்கள்.

அவர்களுக்கு நிரந்தரமாக உதவி செய்யக்கூடிய முறையில் பிறகு ஆயிரம் ரூபாய் வரை கூட கடன் அடிப்படையில் கருவிகள் போன்றவற்றை வாங்குவதற்காகக் கொடுக்கிறார்கள். யார் யாருக்குத் தகுதி இருக்கிறது என்று பார்த்து அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

திரு து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தீ விபத்து ஏற்பட்டால் கொடுக்கக்கூடிய உதவித் தொகை எப்போது நிர்ணயிக்கப் பட்டது ?

கனம் திரு. வெ. ராமையா : 1952-ம் வருஷம்.

பல் மருத்துவப் பிரிவு.

* 462 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) நமது ராஜ்யத்தில் உள்ள எந்தெந்த ஜில்லா, தாலுகா தலைநகர் ஆஸ்பத்திரிகளில் பல் வைத்தியப் பிரிவு அமைக்கப் பட்டிருக்கிறது?

(இ) மீதி உள்ள சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலெல்லாம் பல் வைத்தியப் பிரிவு அமைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) A Dental Clinic is already functioning in all the District Headquarters Hospitals except at Dindigul, Nagapattinam and Kancheepuram.

(*b*) In the draft Fourth Plan, there is a scheme to establish forty Dental clinics.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், சீனா, ஜப்பான் முதலிய தேசங்களில் பல் கட்டும் நிபுணர்கள் அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அங்கு போய் நமது மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இங்கேயே ஜெனரல் ஆசுபத்திரியில் நல்ல டாக்டர்கள் இருக்கிறார்கள். இங்கேயே நல்ல முறையில் இந்தப் பயிற்சியில் தேர்ச்சி பெற்று வருகிறார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : 40 பல் வைத்திய பிரிவுகள் ஏற்படுத்த அரசாங்கத்தினிடத்தில் திட்டம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார் கள். ஒரு பல் வைத்தியப் பிரிவில் யார் யார் இருப்பார்கள், அதாவது டாக்டர்கள், உதவியாளர்கள் யார் யார் இருப்பார்கள்? ஒவ்வொரு பிரிவுக்கு உத்தேசம் என்ன செலவிட வேண்டிருக்கும் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், சாதாரணமாக ஹெட்குவார்ட்டர்ஸ் ஆசுபத்திரியில் ஒவ்வொரு பல் வைத்திய பிரிவுக்கும் 17,300 ரூபாய் ஆகும். ரிக்கரிங் எக்ஸ்பென்டிசர் 37 ஆயிரம் ஆகும். இப்போது மூன்று இடங்களில் ஆரம்பிக்கப் படவேண்டும். அதாவது காஞ்சீபுரம், திண்டுக்கல், நாகப்பட்டினம். இந்த இடங்களில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நடைபெறும் என்று நம்புகிறேன். இந்த பிரிவில் டென்டல் சர்ஜன், பாராமெடிக்கல் வொர்க்கர் இவர்கள் இருக்கிறார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரை எர்ஸ்கின் ஆசுபத்திரியில் பல்லைப் பிடுங்குகிறார்கள், ஆனால், பல் கட்டுவது கிடையாது, பல்களில் ஏற்படுகின்ற ஓட்டையை அடைப்பது கிடையாது. அங்கே மெடிகல் காலேஜ்

[28th March 1966

இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்தில் பற்கள் கட்டுவது, பற்களிலுள்ள ஓட்டையை அடைப்பது போன்றவற்றையும் மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பல்நோய் வந்தால் உடனடியாக ரிலீப் கிடைப்பதற்குப் பல்லை பிடுங்க வேண்டியது தான். பின்னால் பல்லை கட்டிக்கொள்ள வேண்டுமென்றால், பக்கத்தில் இருக்கின்ற சென்னைக்கு வந்து கட்டிக் கொள்ளலாம். (திரு. மீ. கலியாண சுந்தரம் : மதுரைக்குப் பக்கத்தில் ஏதாவது சென்னையிருக்கிறதா என்ன . . .?) சென்னை மதுரைக்குப் பக்கத்தில் தான் இருக்கிறது. இங்கே வந்து பல்லைக் கட்டிக்கொள்ளலாம்.

பல் வைத்தியக் கல்லூரி.

* 463 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

4-வது ஐந்தாண்டு காலத்தில் நமது ராஜ்யத்தில் பல் வைத்தியக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : மருத்துவக் கல்லூரியில் பல் வைத் தியப் பயிற்சி பெறுவதற்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றன? வருடாவருடம் இந்தப் பயிற்சியில் எத்தனை மாணவர்கள் இருந்து வரு கிறார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போது மெட்ராஸ் மெடிக்கல் காலேஜில் டெண்டல் விங்-கில் 45 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். முதல் வருட இண்டகிரேடட் பி.டி.எஸ். இருக் கிறது. இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு "பாச்சிலர் ஆஃப் டெண்டல் சர்ஜரி" என்று டிக்ரி வழங்கப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இப்போது பல் வைத்யத்தில் பயிற்சி பெறுகிறவர்கள் நமது ராஜ்யத்தினுடைய தேவைக்குப் போது மானதாக இருக்கிறதா ? போதுமானதாக இல்லை என்றால் அதை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : செங்கற்பட்டு, திருநெல்வேலி இவ்விடங்களில் இருக்கின்ற மெடிக்கல் காலேஜிலும் நான்காவது திட்டத் தில் டெண்டல் பயிற்சிக்காக 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்தப் பல் வைத்தியத்தில் போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் ஆரம்பிக்கத் திட்டம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆம் ஸார்.

Woraiyur Reservoir

* 464 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware of the fact that the Woraiyur Reservoir in Tiruchirappalli district commissioned several months back, is not being filled up due to non-installation of the proposed 20-inch feeder pipe-line alongside Kodumuratti bridge on the Karur Road?

28th March 1966]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, the position is as follows :—

Two reservoirs have been constructed at Woraiyur. One of the reservoirs along with the branch pumping main, etc., has been handed over to the Municipality. The work on the other reservoir has been completed and it is being tested for water tightness. As a portion of the branch main which will feed the reservoir has to pass through Tennur-Railway crossing, the railway authorities have been requested to lay the pipe across the railway track. As soon as this portion of the work is completed the reservoir can be commissioned.

The laying of 20-inch C.I. main across Kodumuratti river is for supplying water to Rock-fort area and this work has no bearing on the non-commissioning of the service reservoir in Woraiyur.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், உறையூரில் இருக்கக்கூடிய இந்த நீர் தேக்கம் பூர்த்தியாகி நாலைந்து வருஷங்களாகியும், இதை முனிசிபாலிட்டிக்குக் கொடுக்கப்பட்டும் கூட, இவ்வளவு காலதாமதம் ஏன் ஏற்படுகிறது ? ரயில்வேக்காரர்களுடைய அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதா இந்த அரசாங்கம்? அப்படியானால் ரயில்வே நிர்வாகத் தினிடம் அனுமதி எப்போது கோரப்பட்டது ? சீக்கிரமாகப் பதில் பெறு வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், பிப்ரவரி 1965-ல் தான் முனிசிபாலிட்டிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரயில்வே அத்தா ரிட்டீஸ்-க்கும் எழுதியிருக்கிறோம். இன்னும் கவர்ன்மெண்ட் ஆஃப் இண்டியா-விலிருந்து பதில் வரவில்லை. ரிமைண்டர்ஸ் அனுப்பியிருக்கிறோம். பைப் போடுவதற்கான வேலைகள் ஆரம்பிக்க சாங்ஷன் அளித்தாகிவிட்டது.

திரு. வை. சங்கரன் : இதைப் பூர்த்தி செய்து கொடுத்தால் தான் அங்குள்ள மக்களுடைய தண்ணீர் கஷ்டம் தீரும் என்ற நிலைமை யிருப்பதால், இதைக் கூடிய சீக்கிரத்தில் செய்து கொடுக்கும்படி ரயில்வே-க்கு இங்கிருந்து தாக்கீது அனுப்பப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கவர்ன்மெண்ட் ஆஃப் இண்டியா-விலிருந்து பதில் வந்தவுடன் சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Drinking Water Scheme

* 465 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any scheme has been envisaged for improvement of protected drinking water-supply to the towns of Chinglеput, Srivilliputhur, Thanjavur and Tiruchirappalli respectively, and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) ஆம்.

(இ) இது குறித்து சபை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

---

a 294-296-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[28th March 1966

திரு. வை. சங்கரன் : தஞ்சாவூரில் ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. அப்படி யிருந்தும் அங்குள்ள மேட்டுப்புறநகரங்களில் புறங்களில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. ஆகவே, தஞ்சாவூரில் இருக்கின்ற குடி தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு சீக்கிரமாக நடவடிக்கை மேற்கொள்ளப் படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், இந்தத் திட்டத்திற்காக மெயின் பைப் எல்லாம் போட்டாகிவிட்டது. இதற்காக ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஆகிறது. வேலை முடிந்தவுடன் முனிசிபாலிட்டிக்கு ஹாண்ட் ஓவர் செய்து விடுவார்கள். அதற்குப் பின்னால் இந்தத் தண்ணீர் கஷ்டம் எல்லாம் தீர்ந்துவிடும் என்று நம்பலாம்.

திரு. மு. சண்முகம் : காவேரி நீர்த்தேக்கத்திலிருந்து சென்னைக்குத் தண்ணீர் எடுத்துக்கொள்ளும் திட்டம் இருந்து வருவதால், வழியில் இருக்கின்ற பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் இவைகள் தனியே குடி தண்ணீர் வசதிக்காகச் செலவு செய்வது அனாவசிய மாக இருக்குமாதலால், இத்திட்டம் வருவது வரையிலும் தற்காலிகமாக மற்ற வேலைகளை நிறுத்தி வைக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கொள்ளிடம், காவேரி யிலிருந்து தஞ்சாவூருக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு இன்வெஸ்டிகேஷன் நடத்துவதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், தஞ்சாவூர் நகரில் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் அங்குள்ள ஜனங்கள். திட்டம் எப்போது முடிவு அடையும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த இன்வெஸ்டிகேஷன் ரிபோர்ட்டு வந்தவுடன் அதை இம்ப்ளிமெண்ட் செய்வதற்கு அரசாங் கம் தீர்மானிக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, பல கிராமங்களை 5 மைல், 4 மைல் சுற்றளவில் உள்ள கிராமங்களை ஒன்றாக இணைத்து இணைப்புத் திட்டமாகப் போட்டு குடி தண்ணீர் திட்டம் செய்து கொடுக்கவேண்டுமென்று சபையில் பல அங்கத்தினர்களால் சொல்லப்பட்டு இருக்கிறதே, அதையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்விக்கு எல்லாக் குடி தண்ணீர் திட்டங்களையும் எடுத்துக்கொள்ளும்போது அவர்கள் சொல்லுகிற கிராமங்களுக்கும் எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன். குறிப்பிட்ட கேள்வி செங்கற்பட்டு, ஸ்ரீ வில்லிப்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களைப் பொறுத்தது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு மத்திய பாங்கு, தர்மபுரி.

*466 கேள்வி.—**திரு. இராம அரங்கண்ணல் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா?

தர்மபுரிக்கு என்று மாவட்ட அளவில் District Co-operative Central Bank ஒன்று புதிதாகத் வைக்கும்படி அரசாங்கம் அண்மையில் உத்திரவிட்டுள்ளதா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Yes.

8th March 1966]

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, அது என்று துவக்கப்படும்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப் போது சென்ட்ரல் பாங்க், சேலம் தர்மபுரி சென்ட்ரல் பாங்க் என்ற முறையில் செயல்பட வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. இதற்குத் தனியாக ஒரு டெபுடி ரிஜிஸ்ட்ரார் அவர்களை நியமித்து இதனுடைய வேலைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

கிராம சேவக்குகளுக்கு வீட்டு வசதி.

*467 கேள்வி.— **திரு. சா. ராமசாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

1965-66-ம் ஆண்டில் மாவட்டவாரியாக எத்தனை கிராம சேவக்கு களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் :

மாவட்டங்களின் பெயர்.	1965-66 ஆண்டில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (1966 ஜனவரி மாதம் முடிய.)
செங்கற்பட்டு	5
வட ஆர்க்காடு	5
தென் ஆர்க்காடு	6
தஞ்சாவூர்	7
திருச்சிராப்பள்ளி	1
மதுரை	3
இராமநாதபுரம்	6
திருநெல்வேலி	3
கன்னியாகுமரி	6
சேலம்	5
தர்மபுரி	..
கோயம்புத்தூர்	..
நீலகிரி	..
மொத்தம் ..	47

திரு. சா. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்ட இடங்களில் திருச்சி மாவட்டத்தில் மிகக் குறைவாக இருக்கிறது. கிராம சேவக்குகளைப் பொறுத்த வரை யில் பஞ்சாயத்து யூனியன் தலைமை இடங்களில் தான் இருக் கிறார்கள். ஏன் என்றால் கிராமப் புறங்களில் அவர்களுக்கு வீடு கிடைப்பதில்லை. எனவே இந்தத் திட்டத்தை விரைவு படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : குறிப்பிட்ட தகவல் போக இப்போது மொத்தம் கட்டப்பட்டுள்ளது 302 ஆக ஆகியிருக்கிறது. இன்னும் 65 கட்டி முடிக்கப்படவிருக்கிறது. இன்னும் கட்டப்பட வேண்டியது குறைந்த அளவில் தான் இருக்கும். அவைகளையும் துரிதப்படுத்த முயற்சிக்கலாம்.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் 5 வீடுகள் கட்டப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்த எந்த வட்டா ரங்களில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

[28th March 1966

திரு. கனம் சே. ம. அ. மஜீத் : வட்டார அளவில் விவரங்கள் இல்லை. ஜில்லா அளவில் தான் விவரங்கள் கேட்கப்பட்டது. அதைத் தான் சொன்னேன்.

Employees' Provident Fund Act.

* 468 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleasd to state—

(*a*) whether the Government have exempted the establishment under the control of Madras State Electricity Board from the provisions of the Employees' Provident Fund Act subject to certain conditions, and

(*b*) the details of those conditions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government have exempted under section 17 (1) (b) of the Employees Provident Fund Act, 1952, certain establishments under the control of the Madras State Electricity Board from the provisions of the Employees' Provident Fund Scheme, 1952, subject to certain conditions. A copy of the relevant notification [a] is placed on the Table of the House.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த கண்டிஷன்கள் பூர்த்தி ஆக்கப்பட்டனவா ? செயல்படுத்தப்படுகின்றனவா என்று பரிசீலிக்கப்பட்டதா ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. சட்ட இலாகாவும் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலோசனை முடிந்த பிறகு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

SRI R. V. SWAMINATHAN : May I know whether these are the only institutions that have been exempted or whether there are other institutions also that have been exempted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are other institutions also that have been exempted. But I would like to have notice to give particulars.

தலைமை ஆசிரியர்களின் சம்பள விகிதம்.

* 469 கேள்வி.— **திரு. சா. ராமசாமி** : கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், உயர் நிலைப்பள்ளிகளிலும் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களுக்குச் சம்பள விகிதத்தில் வித்தியாசமிருப்பதன் காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no difference in the scales of pay of Headmasters of Government Training Schools and those in Government High Schools.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்த உயர் நிலைப் பள்ளிகளில் பணி புரிவதற்கு விஞ்ஞான ஆசிரியர்களும், கணக்கு ஆசிரியர்களும் இடைப்பதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதற்கு

[a] Printed as Appendix IV on pages 296–302.

28th March 1966]

அதிகமான பேர்கள் வருவதற்கு வழி செய்யும் முறையில் ஆசிரியர்களின் சம்பள அடிப்படையை உயர்த்த அரசாங்கம் முன் வருமா? மத்திய அரசாங்கம் இப்போது ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்துவதில்லை என்று முடிவு எடுத்து இருப்பதாகத் தெரிகிறது. அதை ஏற்றுக் கொள்ளாமல் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் சம்பளத்தை அதிகப்படுத்த முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, உயர் நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகத் தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததன் நோக்கம் என்ன என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது பற்றியும் தனிக் கேள்வி வேண்டும். இந்தக் கேள்வியிலிருந்து இது எழுவதில்லை.

மதுரைக் கல்லூரி விடுதி.

* 470 கேள்வி.— **திரு. செ. மாதவன்,** }
திரு. வை. சங்கரன் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

மதுரை நகரில் கல்லூரி விடுதியில் உணவு உட்கொண்ட மாணவர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ விடுதியில் 1966-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சேர்க்கப்பட்டனரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அவர்களிலே எத்தனை பேர்கள் ஆபத்தான கட்டத்திலிருந்து தப்பிவிக்கப்பட்டார்கள் ? இந்த நிகழ்ச்சிக்கான காரணம் பரிசீலிக்கப்பட்டதா ? தவறு செய்தவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பற்றி கீழ்க்கண்ட விவரங்கள் அளிக்க விரும்புகிறேன்.

There are about 450 students in the Madurai College Hostel Madurai. All of them took Chappatti with vegetable kurma on the night of 2nd March 1966. On the 3rd March about 110 students, and on the 4th March about 8 students, took ill with mild symptoms of gastro-enteritis. Many complained of acute pain all over the body and some of them developed very high temperature ranging from 100°F to 104°F. Some had abdominal pain, vomiting and diarrhoea also. All these students were admitted in the Government Erskine Hospital, Madurai, for treatment (110 students on 3rd March and 8 students on the 4th March). The samples of food taken by them on 2nd March 1966 could not be taken, as it was not preserved. The students developed these symptoms late on 3rd March 1966. No casualty has been reported. None of them were having high temperature except 20 students who had mild fever and one who is said to be seriously ill. All the students admitted in the hospital have since been discharged. There are no further incidents. The cause of the illness has not yet been known.

Investigation with regard to the surroundings in the hostel reveal nothing specific in regard to tinning of vessels or environmental sanitation or the water-supply. The quality of wheat flour which

[28th March 1966

was used for the Chappati appeared to be not good. The use of the wheat flour has been stopped, and sample of the same has been sent to Guindy, Madras, for report. The result on the samples of flour sent are awaited. Sulphaguanadine is administered to other cases of mild nature which are sitll in the hostel. The water sources have been thoroughly cleared up and protected. Disinfection of the surroundings has been attended to. The vomitus and rectal swab were sent for culture for pathogenic organisms. The vomitus has been taken and also preserved for being sent for chemical analysis on receipt of necessary requisition from the Magistrate. All patients admitted in the hospital were attended to immediately by providing extra number of Medical Officers and nursing and other staff to look after these patients.

The Collector of Madurai and the District Superintendent of Police, Madurai, paid a visit to Government Erskine Hospital. The situation is being watched and prompt curative and preventive measures have been taken by the Municipal Health Officer, Madurai.

திரு. வை. சங்கரன் : ஸார், ஆயிரம் பேர்களுக்கு மேற்கொண்டு இருக்கிற அந்தக் கல்லூரிக்குக் குடிதண்ணீருக்குக் கிணறு தவிர வேறு வசதி இல்லை. வெல்-வாட்டர் கன்டாமினேஷன் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதுவதால் குடி தண்ணீர் இணைப்புக் குழாய் உடனடியாகத் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அளித்த தகவல் தவிர வேறு தகவல் ஒன்றும் இல்லை.

திரு. செ. மாதவன் : சப்பாத்தி, குருமா சாப்பிட்டார்கள் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வீட்ஃப்ளவர் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதாகச் சொன்னார்கள். அது எங்கிருந்து தருவிக்கப்பட்டது ? வேறு இடத்திற்கும் அந்த மாதிரி சப்ளை செய்யப் பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்தார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோதுமை மாவு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் முடிவு தெரிந்த பிறகு இதே மாதிரி மாவு வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. கரு. சிமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மாதிரி விடுதிகளில் உணவில் விஷம் கலந்து விடுவது, மாணவர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுவது சகஜமாக இருக்கிறது. இது என்ன காரணத்தினால் ஏற்படுகிறது ? விடுதியில் தங்கி உணவு உட்கொள்ள மாணவர்கள் பீதி அடைகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று அரசாங்கம் பரிசீலித்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எப்போதோ ஒரு முறை தான் ஏற்படுகிறது இந்த மாதிரி. எப்போதும் ஏற்படுவது இல்லை. ஏற்படுகிற போது பரிசீலனை செய்து காரணத்தை உணர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

Educational Officer

* 471 Q. —Sri A. KUNJAN NADAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of District Educational Officers and the Gazetted Headmasters in the State confirmed in those posts; and

28th March 1966]

(b) the number of promotees holding Grade I posts in the Education Department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) District Educational Officers—1;

(b) Headmasters—Nil; and

(c) There is only one grade now in the categories of District Educational Officers and Headmasters.

SRI A. KUNJAN NADAR : May I know the number of posts in each category in the State?

The HON. SRI M. BHAKTAVATSALAM : Prior to 1960 there were two grades of District Educational Officers and Headmasters. Consequent on the revision of pay scales in 1960 on the recommendation of the Pay Commission, the two grades were combined into a single grade. Thus, there is only one grade now.

SRI A. KUNJAN NADAR : Sir, is there any special reason for not confirming them in their posts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Regarding District Educational Officers, there are 24 permanent posts. As regards Headmasters, there are 13 permanent posts.

When an officer is temporarily promoted to a permanent post, the vacancy thus created cannot be filled up by a permanent person.

Unless the vacancy is a permanent one, it cannot be filled up by a permanent person. That is the main reason.

MR. SPEAKER : Questions are over.

[Note,—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF ORDER re. DIVISION DURING GUILLOTINE.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, on a point of order. I am raising a point for the sole purpose of seeking guidance and ruling from the Chair regarding the future conduct of our proceedings.

MR. SPEAKER : I think the hon. Member is raising the point as to whether a division can take place at the time of guillotine?

SRI K. A. MATHIALAGAN : Rule 71 lays down the procedure for voting, which includes the right of a Member to challenge the opinion of the Hon. Speaker as to the decision of the House.

Rule 155 (3) which relates to closure, does not specifically exclude the right under Rule 71 to demand a division. Only the discussion is closed but that cannot take away the inherent substantive right of a Member of the House to demand a division. A division might be favourable to the Opposition, and, as the

[Sri K. A. Mathialagan] [28th March 1966

Hon. Speaker in one of his rulings given in this House on another occasion, has pointed out, it may even amount to No-Confidence against the Ministry.

The denial of the right to demand a division is a denial of a fundamental right. Without a specific and express provision the right of the Members cannot be taken away. This is an important matter. The voting on the cut motion on Saturday by voice vote, rejecting the demand for division is defective and has vitiated the voting on the Demand and therefore on the Budget itself.

My second point is that that was an irregular proceedings because the guillotine was applied only at 1-7 p.m. It was a contravention of the definite rules of procedure. My great submission is that we follow the House of Commons regarding certain aspects of our rules. In this connection, I want to quote, for your guidance, from the book ' Parliament in India ' written by Mr. W. H. Morris Jones (page 208). Sir, we have to follow for certain things the principles applied in the House of Commons. In this Book, it is very clearly stated—

' The makers of modern Indian Parliamentary procedure have respect for experience provided it is relevant experience. Their post-independence examination of Commons ' procedure persuaded them that in some respects India's own quasi-parliamentary experience deserved to be followed in preference to that of Westminster.''

That is the difficulty and that does not arise with regard to our affairs.

Mr. SPEAKER : Then, why did the hon. Member refer to it?

Sri K. A. MATHIALAGAN : Rules are very clear.

Mr. SPEAKER : I will consider the matter.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றிக் கூட அல்ல. சாதாரணமாக கில்லெடின் பண்ணுவது என்றால், விவாதத்தைத் தான் கில்லெடின் பண்ணுவது. கில்லெடின் என்று சொன்னாலும் கூட, கவர்னர் அவர்கள் நிர்ணயித்த நேரத்திற்கு டிமாண்டுகள் பேரில் விவாதம் முடிந்து, மிச்சம் இருக்கக் கூடிய டிமாண்டுகள் விவாதம் இல்லாமல் வோட்டுக்குப் போடவேண்டும். வோட்டுக்கு விடுகின்ற சமயத்தில் டிவிஷன் கேட்பதற்கு உரிமை உண்டு. டிவிஷன் கேட்டால் வோட்டு எடுக்காமலேயே கில்லெடின் ஆவதில்லை. குறிப்பிட்ட டிமாண்டை கில்லெடின் பண்ணுவதற்கு கனம் சபாநாயகர் அவர்களுடைய சௌகரியத்தைப் பொருத்தும், இந்தச் சபையினுடைய சௌகரியத்தைப் பொருத்தும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நீடிப்பதற்கு இந்தச் சபைக்கு உரிமை இருக்கிறது. கடைசி நாளில் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக் கூடிய நேரத்தில், பாக்கி இருக்கக் கூடிய டிமாண்டுகளை கில்லெடின் பண்ண வேண்டும். ஆனால் ஒரு தனி டிமாண்டை இந்தச் சபையின் சௌகரியத்தை உத்தேசித்தும், கனம் சபாநாயகர் அவர்கள் அனுமதிக்கிற வரைக்கும் விவாதிக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

28th March 1966]

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் திரு. மதியழகன் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை மிகவும் முக்கியமானது. ஏனென்றால், விவாதத்திற்குத் தான் கில்லெடின் என்று இருக்கிறது. அந்த விவாதத்தை ஒட்டி, வோட்டு எடுப்பதற்கு அனுமதித்துவிட்டு, பிறகு வாய்ஸ் வோட்டுக்குப் பின் எங்கள் தரப்பிலிருந்து டிவிஷன் கேட்ட நேரத்தில் அது அனுமதிக்கப்படாத நிலை ஏற்பட்டு விட்டது. விவாதத்தோடு அது முடிக்கப்பட்டு, அதற்கு மேல் விவாதம் தொடரக் கூடாது என்ற அளவிலே, ஒரு மணிக்கு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில் விவாதம் முடிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு கூட வோட்டு எடுப்பதற்கு வழி இருக்கிறது. வோட்டு எடுப்பதற்கு வழி வகுத்துவிட்டு, வாய்ஸ் வோட்டுக்கு விடப்பட்ட பொழுது, எங்கள் தரப்பிலிருந்து வெட்டுப் பிரேரணைக்கு ஆதரவாக " எஸ் ஹாவ் இட் " என்று எடுத்துச் சொல்லிய பொழுது, நானும், திரு. மதியழகனும் மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியும் கூட, டிவிஷனுக்கு விடப்படாத ஒரு நிலைமை ஏற்பட்டது. அது உள்ளபடியே முறையற்ற ஒரு நிலையாக ஆகியிருக்கிறது. ஆகவே, திரு. மதியழகன் எழுப்பிய பிரச்னை விவாதத்திற்குரியது என்பதை இந்தச் சபையிலே நான் தங்களுக்கு கவனப்படுத்துகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று முன் தினம் நடைபெற்ற விஷயம் இது. அன்று ஒரு மணிக்கு நீங்கள் கில்லெடின் பிரயோகித்தீர்கள். அதன்பேரில் விவாதம் நின்றது. பிறகு வோட்டு எடுக்க முற்பட்டீர்கள். அப்பொழுது டிவிஷன் கேட்டார்கள். தாங்கள் டிவிஷனை அனுமதிக்கவில்லை. வெட்டுப் பிரேரபணை வோட்டுக்கு விடப்பட்டு, அது தோற்றுப்போய் விட்டது என்று தீர்ப்புக் கூறி, டிக்ளேர் செய்து, அதற்கப்புறம் டிமாண்டு வோட்டுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. அது நேற்று முன் தினம் நடந்த நடவடிக்கை. நேற்று முன்தினம் நடைபெற்ற நடவடிக்கை இன்றைக்கு தவறு என்று கூற முடியுமா என்பதை முதலில் பரிசீலனை செய்யவேண்டும்.

அரசியல் அமைப்புச் சட்டத்திலே, 212-வது ஆர்டிகிள், (1)-வது பிரிவில், ' The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure ' என்றிருக்கிறது அது ஒன்று. அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன், திரு. மதியழகன் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : அது எனக்குத் தெரிந்ததுதான்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சொல்லக்கூடக் கூடாதா ?

திரு. கே. ஏ. மதியழகன் : கேலி செய்ய வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கேலி பண்ணுகிறேன் என்றால், நான் சொல்வதெல்லாம் கேலி என்றால், கேலியில்லாமல் எனக்குச் சொல்லவே தெரியாது. ஆர்டிகிளை கோட் செய்கிறேன்.

அதன் பிறகு நாம் விதித்திருக்கும் விதிகளில் 71 (2), வது பிரிவில் ' The Speaker shall determine the method of taking votes by division ' என்றும், (3)-வது பிரிவில், ' The result of a division shall be announced by the Speaker and shall not be challenged ' என்றும் இருக்கிறது, இந்த விதிகளைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். திரு மதியழகன் அவர்களும் இதைக் கவனிக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[28th March 1966

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய விதி 71 (1) பிரிவைக் கவனிக்க வேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சாதாரணமாக, எத்தனையோ சபாநாயகர்கள் "டிவிஷன்" கொடுக்க முடியாது என்று, டிவிஷன் ஃபிரிவலஸ் என்று மறுத்திருக்கிறார்கள். அந்த உரிமை சபாநாயகருக்கு இருக்கிறது. அதன் பிறகு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். "கில்லட்டின்" என்று சொன்னாலே, சில விளக்கங்கள் கூறியிருக்கிறார்கள். "கில்லட்டின்" என்பது ஒரு **division saving device** என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். "கில்லட்டின்" என்றால் என்ன ? தூக்குப் போடுவது இல்லை. அது ஒரு **division saving device** என்கிற விளக்கமே கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதில் விவாதிக்க வேண்டிய பிரச்சினையே இல்லை என்பதைத் தெரிவிக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய விதி 71(1)-ல், சேலஞ்ஜ் செய்தால், டிவிஷன் எடுப்பதற்கு சபாநாயகர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது, அதை அவர்கள் தீர்மானிக்கிறார்கள். 71(2)-ல் எந்த வகையில் டிவிஷன் எடுப்பது என்பதைத் தீர்மானிப்பது. டிவிஷனில் பெயர்களைக் கூப்பிடுவதா, வேறு முறையிலா—அன்றுகூட அதைப்பற்றிச் சொன்னோம்—என்பதைப் பற்றியது. ஆகவே, அது எந்த வகையில் செய்வது என்பது பற்றியது என்பதை கனம் சபாநாயகர் அவர்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன்.

MR. SPEAKER : I am not giving now any ruling. I am only giving my opinion. I will consider the matter in detail later. This has not taken place from the inception of this legislature till now. When once the guillotine is applied, nobody has asked for a division till now. In one case the **Speaker** himself has taken the division sometime earlier, before the time for guillotine. He has said at that time as follows: "On the understanding that after the guillotine has been applied, there cannot be a division, I take it up before fifteen minutes." That was what was done in 1949 in this Assembly. As the hon. Member Sri K. A. Mathialagan pointed out, we need not follow Westminster always. In that book, from which the hon. Member read his quotation, it is said that guillotine is a '**division saving** form'. That is the meaning which has been given to the term 'guillotine'. The idea is that all important matters of debate must be discussed earlier and on the last day at 1 p.m. all other items of business which both the Ruling Party and the Opposition think could be conveniently passed off without any division must be put to the guillotine. Anything important must be taken earlier with the understanding of both the parties, namely, the ruling party and the opposition parties. I do not find anywhere any division having taken place after guillotine in the history of 'legislature'. But in this case I myself was thinking and I was about to order for division on that day but for the fact that the Secretary brought to my notice that the position was different. Whatever it may be, as I told the hon. Members the other day, I will study the matter and give my opinion on a later date, after getting the opinion from other legislatures also.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would also like you, Sir, to give your ruling on the interpretation of Article 212 of the Constitution.

28th March 1966]

MR. SPEAKER : Article 212 is definite. Once an irregularity is committed here, it is only for this House to regularise it and not for any Court of Law to interfere in that. That is definite and quite clear. We are not at this stage on that point.

III.—ADJOURNMENT MOTIONS.

(1) WRONG CLASSIFICATION OF PART INAM ESTATES IN PUDUKKOTTAI.

(2) FAILURE OF GOVERNMENT TO SECURE ADDITIONAL ALLOTMENT FOR BACKWARD AREAS IN THE STATE.

MR. SPEAKER : I do not think both the adjournment motions given notice of by hon. Members Sri M. Kalyanasundaram and Sri A. K. Subbiah are in order. I will read them if the hon. Members want...

திரு. மீ. கலியாணசுந்தரம் : I am trying to give an opportunity for the Hon. Chief Minister to explain the position, Sir. புதுக்கோட்டைப் பகுதியில் மட்டும் இது சாதாரணப் பிரச்னையல்ல. 400 பார்ட் இனாம்கள், மைனர் இனாம் என்று சொல்லி, அதிகாரிகளைப் போட்டு பரிசீலனை செய்து உத்தரவு போட்டிருக்கிறார்கள். இனாம் ஒழிப்புச் சட்டம் வந்தும், 400 கிராமங்களில், கிட்டத்தட்ட 10,000 விவசாயிகள் நிலம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தலைமுறை தலைமுறையாக உழுது பயிர் செய்து கொண்டு வந்தவர்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்குத் தெரிவித்தும் அவர்கள் தலையிட முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். 10,000 குடியானவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் இது சம்பந்தமாக கோர்ட்டுக்குப் போகும் நிலையில் இல்லை. இனாம்தார்கள் வசதி படைத்தவர்கள். அவர்கள் இது சம்பந்தமாக கிளர்ச்சி செய்தாலும், போலீசார்கள் அதை அடக்குகிறார்கள். இந்த விவகாரத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்காக ஒரு விசேஷ அதிகாரியை நிய மித்து, இதை மறுபரிசீலனை செய்யவேண்டும். இதில் அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கிறது. ரெவின்யூ போர்டு மெம்பர் அந்தஸ்து உள்ள ஒரு அதிகாரியை நியமித்து, இந்த கிராமங்களின் நிலையை மறுபரிசீலனை செய்ய வெண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காகவே இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன்.

இன்னொன்று, புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், அரந்தறங்கி, ஆகிய பகுதிகள், பின்தங்கிய பகுதிகள் என்று கருதி, இதற்கு தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தில்கூட வந்திருக்கிறது. அப்பொழுது இதைப்பற்றி விளக்கம் கேட்ட பொழுது சரியாக பதில் தரப்படவில்லை. நம்முடைய அரசாங்கத்தினுடைய நன்மையை உத்தேசித்தும், நம்முடைய ராஜ்யத்தின் நன்மையை உத்தே சித்தும்தான் நான் இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும், இந்தச் சபையினுடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். இது "ரிப்போர்ட் ஆஃப் ஜாயிண்ட் ஸ்டடி டீம் ஃபார் உத்திர பிரதேஷ்" என்ற புத்தகம். இதில் பாக்வர்ட் ஏரியாக்களை எல்லாம் ஐடென்டிஃபை பண்ணி சிபாரிசு செய் திருக்கிறார்கள். அந்தச் சிபாரிசிலே என்ன கூறுகிறார்கள் என்றால்,

"Additional outlays and Central assistances allocated to State Governments for the accelerated development of the backward areas have not always produced the desired result. It is therefore necessary to have specific targets and ear-marked outlays ... those areas. Any shortfall in a particular State will not ... available for utilisation under the general plan but might ... utilised in areas in other States which would go forward ...

greater speed'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ராஜ்யத்திலே பின்தங்கிய பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை ஜெனரல் பிளானுக்குச் செலவழிக்கக்கூடாது. அந்த ராஜ்யத்திலே அதற்குச் செலவழிக்கப்பட்டது போக மீதியிருந்தால் அதை மற்ற ராஜ்யங்களில் உள்ள பிற்போக்கான பகுதிகளுக்குச் செலவழிக்கவேண்டும் என்று இருக்கிறது. பார்லிமெண்டில் இதைப்பற்றிச் சொல்லும்பொழுது அமைச்சர் அவர்கள் சென்னை அரசாங்கம் அதுமாதிரி யோசனைகள் அனுப்பவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் பின்தங்கிய பகுதிகள் இல்லையா ? நம்முடைய அரசாங்கத்தைக் குறைகூறுகிற மாதிரி மத்திய அரசாங்க அமைச்சர் கூறியிருக்கிறார்கள். கீழ இராமநாதபுரம் பகுதியில் பின் தங்கிய பகுதிகள் இருக்கின்றன. அவற்றைக் கவனிப்பதற்கு ஸ்பெஷல் ஆபீஸர் போட்டு விசேஷமாகக் கவனிக்கவேண்டுமென்று செய்யப்பட்ட சிபாரிசின் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதும் தெரியவில்லை. புதுக்கோட்டை, கீழ் இராமநாதபுரம், அறந்தாங்கிப் பகுதிகள் மட்டுமல்ல, மற்ற ஜில்லாக்களிலும் சாலை வசதி, மின்சார வசதி, தண்ணீர் வசதி இல்லாத பகுதிகள், இவை பற்றுக்குறை உள்ள பகுதிகள், விவசாயம்கூட செய்யமுடியாத பகுதிகள், நிறைய இருக்கின்றன. ஆகவே, அவற்றையும் அரசாங்கம் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மத்திய அரசாங்க மந்திரி, நம்முடைய ராஜ்ய சர்க்கார் முயற்சி எடுக்கவில்லை என்று குறை கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதிக்கவேண்டும். இந்தச் சபை விவாதம் முடிவதற்கு இன்னும் 2, 3 தினங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, இந்த இரண்டு பிரச்னைகள் பற்றியும் அரசாங்கத்தினுடைய நிலையைத்தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் ஒத்திவைப்பு பிரேரணையைத் தனித்தனியாகக் கொடுக்க நேர்ந்தது. கனம் சபாநாயகர் அவர்கள் இந்த ராஜ்யத்தின் ஒட்டுமொத்தமான நலத்தை உத்தேசித்து இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றிய விவாதத்திற்கு அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : விஷயம் முக்கியமாக இருக்கலாம். ஆனால், அது அட்ஜர்ன்மெண்ட் மோஷனுக்கு உரிய விதிகளின் கீழ் வருகிறதா என்பது தான் கேள்வி. விஷயம் சிறந்ததா, இல்லையா என்பதைப்பற்றி நான் சொல்லவில்லை.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுடைய அனுதாபத்தைக் கோரினார்கள், தங்களுடைய அனுதாபம் யாருக்கும் இருக்கிறது என்பதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை. என்னுடைய அனுதாபம் குறைவாக இருக்கிறது என்று சொல்வதற்கு நிமித்தம் இருக்கலாம். தாங்கள் தெரிவித்ததுபோல் இரண்டு அவசரப் பிரேரணைகளையும் ஒட்டுமொத்தமாக விளக்கிவிட்டார்கள். ஆகவே, அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்ற தங்களுடைய தீர்ப்பை ஏற்றுக்கொண்டு, அதற்குப் பிறகு எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக சொல்லிவிடலாம் என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். செட்டில்மெண்ட் ஆபீஸர்ஸ், டைரக்டர் ஆஃப் செட்டில்மெண்ட், போர்டு, பிறகு அரசாங்கம் அதற்காக இருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் ஒரு வரம்பு இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. அரசாங்கம்கூட அந்த வரம்பிற்கு உட்பட்டுதான் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கு மேலே கோர்ட்டு இருக்கிறது. இதிலே அரசாங்கம் ஏதோ செய்யத் தவறிவிட்டது என்று கூறுவதற்கு இடமில்லை. இதிலே சம்பந்தப்பட்டவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்ற அளவுக்கு, அவர்கள் பாதிக்கப்பட்டால், நிவாரணம் அளிக்கும் வகையிலே, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக உண்ணாவிரதம் இருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையல்ல; அது நிவாரணத்திற்கு வழிசெய்யக்கூடியது அல்ல. அப்படி உண்ணாவிரதம் இருப்பது கிளர்ச்சிக்காக இருக்குமே தவிர,

நிவாரணத்திற்கு வழி செய்யாது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அதைக் கவனிக்கவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. அரசாங்கம் இதற்கு இப்பொழுது உறுதிமொழி கொடுக்கவேண்டுமென்றால் இதுவரையில் கவனிக்கவில்லை என்று வரும், அப்படிக் கவனிக்கவில்லை யென்பதை நான் ஒத்துக்கொள்வதற்கில்லை. பாதகம் இருந்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். சட்டத்தை அதற்காக மாற்றவேண்டுமென்றால் மாற்றலாம். ஆகவே, அந்தந்த வகையிலே இதிலே போதுமான அளவுக்குத் தொடர்ந்து தீவிர கவனம் செலுத்தப்பட்டுவருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது அவசரப் பிரேரணைக்குரியது அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயம், பிற்போக்கான பகுதிகள் என்று நாம் நிர்ணயம் செய்து, மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லத் தவறிவிட்டோம் என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டிவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். யார் யார்மீது குற்றம் சாட்டினார்கள், எப்படிச் சாட்டினார்கள் ? கனம் அங்கத்தினர் இந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டலாம், மத்திய அரசாங்கம் எதற்காக இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்ட வேண்டும்? என் குற்றம் சாட்ட வேண்டும் ? அவர்கள் குற்றம்சாட்ட என்ன இருக்கிறது ? ஏதோ உத்திரப்பிரதேசத்தில் பிற்போக்கான பகுதிகள் இருக்கின்றன, அதற்காக அவர்கள் கேட்டார்கள், இந்த அரசாங்கம் கேட்கவில்லை என்று சொன்னார்கள். அது குற்றமா ? மத்திய அரசாங்க அமைச்சர் அவர்கள் தெரிவித்தது குற்றம் சாட்டக்கூடிய வகையில் அல்ல, இந்த அரசாங்கத்தினிடமிருந்து மத்திய அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுக்கவில்லை என்றுதான் சொன்னார்கள், அது தப்பா ? அதுவா குற்றம் ? கனம் அங்கத்தினர் வேண்டுமானால் குற்றம் சாட்டலாம், மத்திய அரசாங்கம் குற்றம் சாட்டினார்கள் என்று சொல்லவேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். நிலைமை என்னவென்றால், மத்திய அரசாங்கம் சில மாகாணங்களில் ஒரு ஜில்லா பூராவும், அதாவது மாவட்டம் முழுவதும், பிற்போக்காக இருந்தால் அவர்களுக்கு தெரிவிக்கவேண்டுமென்று இருக்கிறது. அப்படி மாவட்டம் முழுவதும் பிற்போக்கான நிலைமையில் இருந்தால் அதற்குப் பிரத்யேகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதுதான் மத்திய அரசாங்கத்தின் கருத்து. அது உத்திரபிரதேசமாக இருக்கலாம், அல்லது வேறு மாநிலமாகக்கூட இருக்காலம். ஆனால் இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டில் ஜில்லா பூராவும் பிற்போக்கு என்று சொல்லக்கூடிய நிலையில்லை என்பது தான் இந்த அரசாங்கத்தின் கருத்து. அப்படிப் பிற்போக்காக இருந்தால் சொல்லலாம். ஆனால் அவர்கள், நீங்கள் எல்லாம் எவ்வளவோ மேலாக இருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். இராமநாதபுரம் ஜில்லாவாக இருந்தாலும், வேறு எந்த ஜில்லாவாக இருந்தாலும், ஜில்லா பூராவும் பிற்போக்கான நிலை என்று சொல்லக்கூடிய நிலை இல்லை என்பது தான் அரசாங்கத்தின் கருத்து. ஆகவே, மத்திய அரசாங்கத்திற்குச் சொல்ல வில்லை என்பது தான் என் கருத்து. அதனால், இங்கிருந்து, தகவல் வரவில்லை என்று தான் மத்திய அரசாங்கம் சொன்னார்கள்.

இந்த அரசாங்கம் அதோடு விடவில்லை. ஒவ்வொரு மாவட்டமும் பிற்போக்கான நிலையில் இருக்கிறதா என்பதைப்பார்க்கின்ற மாதிரி ஒவ்வொரு தாலுகாவும் பிற்போக்கு நிலையில் இருக்கிறதா என்று தாலுகாவாரியாக இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது மாவட்டத்திற்குப் பதில் தாலுகாவாரியாக எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டோம். அதற்கு மத்திய அரசாங்கம் இணங்கவில்லை. தாலுகாவாரி இல்லை, ஜில்லாவாரியாக இருந்தால் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே எந்த இடங்கள் பிற்போக்காக இருக்கின்றனவோ அவைகளைப்பற்றியெல்லாம் நாம் திட்டத்தின்கீழே கவனம் செலுத்துகிறோம். திட்டத்தின் அடிப்படையிலேதான் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணத்தைவிட நமக்கு அதிகம் வராது. வேறு ஒரு பிற்போக்கான பகுதிக்குக் கொடுக்க வேண்டுமென்றால் முன்பே ஒதுக்கியிருப்பதைக் குறைத்துக்கொள்ளவேண்டும். முதல் ஐந்

[திரு. எம். பக்தவத்சலம்] [28th March 1966

தாண்டுத்திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம், மூன்ருவது ஐந்
தாண்டுத் திட்டம் என்று இப்படி நாம் திட்டங்களை வைத்துதான் இவற்றை
யெல்லாம் செய்து கொண்டுவருகிருேம். கிழக்கு இராமநாதபுரம் பகுதி
யிலே வறட்சி இருக்கிறது, அது பிற்போக்கான நிலையில் இருக்கிறது,
சிலோன் அகதிகளும் வந்துகொண்டிருக்கிருர்கள். ஆகவே, இதற்கு ஒரு
பிரத்யேகமான திட்டம் போடப்பட்டு, திட்டக்குழு அனுமதித்திருக்கிறது.
அவர்களுக்கு மாதா மாதம் கடன் கொடுத்து தென்னை வைத்து
வளர்த்து பலன் அடையச் செய்வதற்கும், இதைத்தவிர அவர்களுக்கு
மானியமாகவும் கொடுப்பதற்கு திட்டமிருக்கிறது. வேறு சில பிராந்தி
யங்களில் உள்ள விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்கும் ஒரு வழி
செய்யப்பட்டிருக்கிறது. கூடியவரைக்கும் மின்சாரம் அவர்களுக்கு
குறைந்த செலவில் கொடுப்பதற்கு வழிசெய்யப்பட்டிருக்கிறது. மின்சா
ரத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் மற்ற மாநிலங்களை
விட குறைவான செலவில்தான் கொடுக்கிருேம். இருந்தாலும், இன்னும்
10-00 a.m. குறைத்துக் கொடுக்கிற திட்டம் இருக்கிறது.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை வகுக்கும்போது, உதாரணமாக,
பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை எடுத்துக்கொண்டால், முதலில்
பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டைக்குத்தான் நீர்ப்பாசன வசதி செய்து
கொடுப்பதாக இருந்தது. பிறகு பல்லடம் தாலுகாவும் பிற்போக்கான
பிராந்தியம் என்று அதற்கும் கொடுக்க வேண்டுமென்று கருதி,
வாய்க்காலை நீடிக்க வேண்டும், செலவானுலும் பரவாயில்லை என்று
அதற்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டது. பிறகு தாராபுரம் கொஞ்சம்
பிற்போக்கான பகுதி என்று கருதி அதற்கும் நீர்ப்பாசன வசதி கொடுக்கப்
பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் தாலுகா கூட பிற்போக்கானதுதான்
என்று சொல்லி இப்படி நீடிக்கும்போது செலவாகத்தான் செய்கிறது.
கீழ்ப்பவானித்திட்டம் கொண்டு வந்தபோதுகூட தாராபுரத்திற்குக் கொண்டு
வருவதாக இல்லை. ஆனுல் பின்னர் செலவானுலும் பரவாயில்லை என்று
25 மைலுக்கு வாய்க்காலை நீடித்துக் கொடுத்தோம். அவனுசிக்கே
கொடுத்து விட வேண்டுமென்றுதான் அவனுசி உறுப்பினர் கேட்பார்;
அவர் கேட்பது நியாயம். ஆனுல் செலவானுலும் பரவாயில்லை என்று
நீடித்து எந்த அளவுக்குப் பிற்பட்ட பகுதிகளுக்கெல்லாம் கொடுக்க
முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த வகையில்
அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. ஆகவே, இது
ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதலமைச்சர் அவர்கள் கூறும்
போது ஒரு மாவட்டமே பின் தங்கிய நிலையில் இருந்தால்தான் சொல்ல
வேண்டுமென்று சொன்னுர்கள். ஆனுல் நிலைமை அப்படி இல்லை.
Identification of backward areas-க்கு **indicators** சில இருக்கின்றன.
ஒரு தாலுகாவின் சிறு பகுதியாக இருந்தாலும் கவனம் செலுத்தலாம்
என்று இருக்கிறது. பாக்வார்டு ஏரியா என்று ஐடெண்டிபை பண்ணி
வைத்திருந்தால், மத்திய அரசாங்கம் ஒதுக்கக்கூடிய நிதியில், வேறு
ராஜ்யத்தில் செலவழிந்தது போக மிச்சம் இருப்பதை, மற்ற ராஜ்யங்
களுக்கும் டைவர்ட் பண்ணலாம் என்று இருக்கிறது. கனம் முதலமைச்சர்
அவர்கள் இந்த விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்
தான் இதைக் கூறுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் சொன்னதை கனம் அங்கத்
தினர் உண்மை அல்ல என்று சொல்லலாம். ரெக்கார்டு இருக்கலாம்.
இந்த அரசாங்கக் கடிதப் போக்குவரத்தின் போது, மத்திய அரசாங்கம்
சொன்னதைத் தெரிவித்தேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மத்திய அரசாங்க சர்குலரிலே........

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு
அதிகமாகத் தெரியும். எனக்குத் தெரியாது. மத்திய அரசாங்கம்
என்ன சொல்லியிருக்கிறது என்பதை, எழுத்து மூலம் சொல்லியிருப்பதைச்

28th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

சொன்னேன். நான் இருப்பதைச் சொன்னேன். அதை அவர் நம்ப
வில்லை என்ருல், அவர்களுடைய உரிமை அது. எவ்வளவு நிதி ஒதுக்கு
வதாக இருந்தாலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு
பணம் நமக்கு வேண்டுமென்ற நிர்ணயம் இருக்கிறது. இதிலே இன்னும்
அதிகமாக வேண்டுமென்று சொன்னுல், அதைக் குறைத்துத்தான்
கொடுப்பார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஓரே ஒரு கிளாரிபிகேஷனை மட்டும்
அமைச்சர் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன்....................

MR. SPEAKER : Sri Kalyanasundaram is a well versed
politician with experience for more than ten years. அவரே
அட்ஜூர்ன்மெண்ட் மோஷனில் இந்தக் கட்டத்தில் இப்படிப் பேசிக் கொண்டே
போனுல் என்ன அர்த்தம் ?

SRI R. V. SWAMINATHAN : Sir, by the present method,
the very purpose of an adjournment motion is being flouted. The
purpose of moving an adjournment motion is to ask for a discus-
sion. But the discussion has been completed now even before
it is admitted. If any Member wants to move an adjournment
motion, he must give notice of it to the Speaker in his room,
and the Speaker should decide whether it should be allowed or
not.

SRI M. KALYANASUNDARAM : On a point of order, Sir.

MR. SPEAKER : Let the hon. Member Sri R. V. Swami-
nathan finish what he has got to say.

SRI M. KALYANASUNDARAM : Is it not reflection on
the Speaker ?

SRI R. V. SWAMINATHAN : If the Speaker gives his
consent and the House grants leave, then the matter could be
discussed. If the Speaker thinks that the subject matter is
such that it could not come within the scope of an adjournment
motion, he can straightway inform the Member that that is
not a matter for an adjournment motion.

MR. SPEAKER : Even in this case Sri M. Kalyanasundaram
came to me and told me about the adjournment motion. Of
course, the Speaker can straightaway dispose of the matter in
his chamber. But, sometimes, it is taken up here for any clarifi-
cation.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இவ்வளவு முக்கியமான பிரச்சினையில்
10,000 விவசாயிகளைப் பற்றிய பிரச்சினையில் கனம் முதல் அமைச்சர்
அவர்கள் . . . . .

MR. SPEAKER : Let the hon. Member please resume his
seat. I with hold my consent to these adjournment motions.

Sri M. Kalyanasundaram and Sri A. K. Subbiah staged a
walk-out.

MR. SPEAKER : Hon. Members could have done so even
without this adjournment motion.

(3) STOPPAGE OF YARN TO WEAVERS BY THE HANDLOOM WEAVERS' CO-OPERATIVE SOCIETY, TINDIVANAM.

* **திரு. ஆ. தங்கவேலு** : மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, திண்டிவனம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் திண்டிவனம் நகரம், கூச்சிங்கொளத்தூர், முட்டியூர் முதலிய கிராமங்களிலுள்ள சுமார் 250 கைத்தறிகளுக்குத் திடீரென முன்னறிவிப்பின்றி நூல் கொடுக்கப்படாததால் 250 குடும்பங்கள் வேலை இல்லாமல் பட்டினி கிடக்கும், அதிமுக்கியத்துவம் வாய்ந்த அவசர நிலையைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்.

MR. SPEAKER: I find that this is not a matter suitable for an adjournment motion. Therefore, I withhold my consent to it. It is only to give the hon. Member an opportunity that I allowed him to raise this matter.

IV. CALLING ATTENTION TO CLOSURE OF CIGAR FACTORIES IN TIRUCHIRAPPALLI TOWN.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, அந்தப் பிரச்சினையில் 'வாக் அவுட்' முடிந்துவிட்டது. . . .

கனம் சபாநாயகர் : அதை யார் கேட்டார்கள் ? இந்தப் பிரச்னைக்கு வாருங்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 41வது விதியின் கீழ் நான் கொடுத்திருக்கக் கூடிய பிரச்சினை குறிப்பாக தமிழ்நாடு பூராவும் புகையிலை சுருட்டுத் தொழில் ஸ்தம்பித்திருக்கிறது, திருச்சியிலும், உறையூரிலும் தயாரிக்கப்படும் இரட்டை எடு சுருட்டுகள் என்று சொல்லப்படுகிற உயர்ந்த ரக சுருட்டுகளைத் தயார் செய்கிற தொழில், அந்நியச் செலாவணியைப் பெருமளவு சம்பாதித்துத் தரக்கூடிய அந்தத் தொழில் இன்று ஸ்தம்பித்திருக்கிறது.

MR. SPEAKER: The hon. Member should confine his remarks to simply raising the matter. I am not going to allow a speech over it.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அந்த சுருட்டுகளுக்கு வரி போட்டிருப்பதால் இன்று பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. இந்த வரி விதிப்பிலிருந்து விலக்கு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் கோரிக்கை அனுப்ப வேண்டுமென்ற முறையில் இந்தப் பிரச்சினையை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, Twenty-two double-wrapper cigar factories in Tiruchirappalli Town are reported to have stopped working with effect from 1st March 1966, affecting 270 workers. Certain representations on the closure have been received by this Government from the Cigar Manufacturers' Association, Woriyur, Tiruchirappalli, addressed to the Finance Minister, Government of India. The matter relates to the levy of excise duty on cigars which is within the exclusive competence of the Government of India. The Minister for Industries has drawn the attention of the Union Finance Minister to the difficulties caused by the imposition of excise duty and has requested him to give his earnest consideration to the representation.

V.—ANNOUNCEMENTS.

(1) THE MADRAS ELECTRICITY DUTY (AMENDMENT) BILL, 1966.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Electricity Duty (Amendment) Bill, 1966.

VI.—GOVERNMENT BILL.

(1) THE MADRAS ELECTRICITY DUTY (AMENDMENT) BILL, 1966.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move for leave to introduce the Madras Electricity Duty (Amendment) Bill, 1966.

MR. SPEAKER: The question is—

"That leave be granted to the introduction of the Madras Electricity Duty (Amendment) Bill, 1966".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

VII.—FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1965-66—GENERAL DISCUSSION.

MR. SPEAKER: I wish to bring to the notice of the House that even to-day we will have to apply the guillotine at 1 p.m. If a division is to be taken on any motion, then we will have to take up the voting at about 12-30 p.m.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒரு யோசனை. 12 மணிவரையில் பொது விவாதத்தை வைத்துக் கொண்டு முக்கியமான ஒரு டிமாண்டை எடுத்துக் கொண்டு அதற்கு கட் மோஷன் மூவ் செய்து ஒரு மணி நேரம் அதற்கு வைத்துக்கொள்ளலாம். ஒரு மணிக்கு கில்லட்டின் செய்து வோட்டிற்கு விட்டு விடுவோம்.

திரு. இராம. அரங்கண்ணல் : எங்கள் தரப்பிலிருந்து எல்லா வெட்டுப் பிரேரணைகளையும் மூவ் செய்யப்போவதில்லை. ஒரு பிரேரணையை எடுத்துக் கொண்டு விவாதம் நடத்தி அதன் மீது வோட்டு எடுப்பதாக இருந்தால் தகவல் தருகிறோம்.

MR. SPEAKER: Yes. The hon. Member Pulavar Govindan will now speak.

* **புலவர் கா. கோவிந்தன்** : கனம் தலைவர் அவர்களே, நம் அமைச்சரவை, 21 கோடி ரூபாய்க்கு இறுதி துணை மானியக் கோரிக்கைகளை சபைமுன் வைத்திருக்கிறார்கள். சாதாரணமாக, நிதிநிலை அறிக்கை சமர்

[புலவர் கா. கோவிந்தன்] [28th March 1966

பிக்கிற நேரத்தில் ஒரு ஆண்டு முடிய ஒவ்வொரு தலைப்பின் கீழும் எவ்வளவு செலவாகும் என்று திட்டவட்டமாக எதிர்பார்த்து நிதிநிலை அறிக்கையில் மான்யம் கோருவது முறையாகும். ஆனால், அந்த முறைக்கு மாருக நம் அரசு இந்த முறையில் துணை மான்யக் கோரிக்கைகளை கேட்டு வருகிறது. எதிர்பார்க்கக்கூடிய செலவினங்களைக் கேட்காமல் விட்டு விடுவதும், வேண்டாத சிலவற்றிற்கு மான்யங்கள் கோருவதும், வேண்டாத சிலவற்றிற்கு கேட்டுவிட்டு செலவிடப்படாமல் விட்டு விடுவதும் போன்ற நிகழ்ச்சிகள் நம் அமைச்சரவைக்கு வழக்கமாக இருந்து வருகிறது. நிதிநிலை அறிக்கையில் எவ்வளவு தொகை கேட்கிருர்களோ அதில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு, சில நேரம் பாதி அளவிற்குக்கூட துணைமான்யக் கோரிக்கைகள் மூலம் மான்யம் கோருவது நல்ல பொருளாதார முறைதாளு என்பதை அமைச்சரவைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பது ஜனநாயக ஆட்சி. மக்கள் தங்களுடைய குறைகளை அரசுக்கு எடுத்துக் கூறக் கூடியவர்கள் யார் என்று பார்த்து தேர்ந்தெடுக்கிருர்கள் சட்டசபை உறுப்பினர்களை. சட்ட சபை உறுப்பினர்களாக வந்திருக்கிறவர்கள் அரசு அமைத்து ஆளக் கூடியவர்கள் யார் என்பதைப் பார்த்து அவர்கள் தகுதி திறமை இவற்றைப் பார்த்து அமைச்சர்களாக ஆக்குகிருர்கள். ஆக்கிவிட்டவுடனே அமைச்சர்கள் செய்கிற தவறுகளைக் குறித்து குற்றம் காணுவது உறுப்பினர்களுடைய கடமையாகவும், சட்டசபை உறுப்பினர்கள் தவறு செய்தால் அவர்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டுவது வாக்காளர் பெரு மக்களின் கடமையாகவும் இருக்கவேண்டுவது ஜனநாயக முறையில் மிக இன்றியமையாத ஒன்று என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் நாம் சட்டமன்ற உறுப்பினர்களாகிவிட்டோம், நம்மிடம் குற்றம் காண என்ன தகுதியிருக்கிறது என்று வாக்காளர் பெருமக்களைக் கேட்பதும், அமைச்சர்கள் நாங்கள் செய்கிற செயல்களில் குற்றம் காண்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன தகுதியிருக்கிறது என்று கேட்பதும் நல்லதொரு ஜனநாயக மரபுதாளு என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். தகுதி, திறமை அடிப்படையில் வைத்து இந்த அமைச்சரவை அமைக்கப்பட்டிருந்தால் நான் நிச்சயமாகச் சொல்வேன் இப்போது நாம் காண்கிற மந்திரிசபையை கண்டிருக்க மாட்டோம். ஆளும் கட்சியில், இந்த மந்திரிசபையில் வீற்றிருப்பவர்களைக் காட்டிலும் தகுதி, திறமை படைத்தவர்கள் பலர் இருக்கிருர்கள். அவர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அதில்லாமல் வேறு ஒருமுறையால் இந்த மந்திரிசபை அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் திட்டவட்டமாகச் கூறமுடியும். பல நேரங்களில் அங்கத்தினர்கள் கேட்ட கேள்விக்கு சரியான தகவல் அளிக்கமுடியாத நிலையில் அமைச்சர்கள் இருந்திருக்கிருர்கள் என்பது இந்தச் சபையின் நிகழ்ச்சிகளைப் பார்த்திருப்பவர்களுக்கு நன்ருகத் தெரியும். அந்த நிலையில் உள்ள அமைச்சர்கள் இந்த உறுப்பினர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்பது நல்லதொரு முறைதாளு என்பதை அமைச்சரவை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, நம் முதல் அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கூறினுர்கள். நெல்லுக்கு விலை கொடுக்கிற நேரத்தில் இப்போதுள்ள விலை கட்டுபடியாகாது என்று சொன்ன நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள், விவசாயம் தெரிந்தவர்கள் இந்த விலை கட்டுபடியாகாது என்று கூறமாட்டார்கள் என்று. முதல் அமைச்சர் அவர்கள் நல்ல விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். ஆனால் அவர்களுக்கு விவசாயம் தெரியுமா என்பது எனக்குச் சந்தேகமே. நல்ல விவசாயம் தெரிந்தவராக இருந்தால் இந்த விலை கட்டுபடியாகும் என்று சொல்லியிருக்க மாட்டார்கள். இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற விலை கட்டுபடியாகுமா என்பதற்கு நான் செலவு போட்டுத் தருகிறேன். ஒரு ஏக்கருக்கு 15

28th March 1966] [புலவர் கா. கோவிந்தன்]

சால். 50 ஏக்கருக்கு ரூபாய் 100. அண்டைகழிக்க இரண்டு ஆளுக்கு ரூ. 4. நாற்று எடுக்க ஏழு ஆள்களுக்கு 14 ரூபாய். நட 15 ஆளுக்கு ரூ. 18·75· களை எடுக்க 10 ஆளுக்கு 12.50. அறுக்க 20 ஆளுக்கு 25 ரூபாய். அடிக்க இரண்டு ஆண்கள், நான்கு பெண்களுக்கு ரூ. 10. தாள் அடிக்க ரூ. 10. இது மொத்தம் ரூ. 194.25 காசு ஆகிறது. பின்னர் விதை 20 படிக்கு ரூ. 12. எருவு 20 வண்டிக்கு ரூ. 60. பிண்ணுக்கு இரண்டு மூட்டைக்கு ரூ. 80· சூப்பர் பாஸ்பேட் ஒரு மூட்டைக்கு 25 ரூபாய். அம்மோனியம் சல்பேட் 20 படிக்கு 20 ரூபாய். தண்ணீர் செலவு ரூ. 40. நிலவரி ரூ. 20. ஆக, மொத்தம் 451 ரூ. 25 காசு ஆகிறது. இவ்வளவு செலவில் விளைவது 15 மூட்டை. அரசாங்கம் கொடுக்கிற விலை ஆற்காடு கிச்சலிக்கு $34\frac{1}{2}$ ரூபாய். ஆக, ஏக்கருக்கு செலவுபோக ரூ. 66·25 தான் கிடைக்கும். இது கட்டுபடியாகுமா ? இது கட்டுபடியாகும் என்று விவசாயக் குடும்பத்தில் பிறந்த முதல் அமைச்சர் அவர்கள் நினைக்கிருர்களா என்று கேட்கிறேன். மணிலா பயிர் செய்வது என்ருல் எட்டு சால் ஓட்டினுல் 24 ஏர். ரூ. 48. அண்டை கழிக்க இரண்டு ஆட்களுக்கு ரூ. 4. விதை 32 படி ரூ. 85. எருவு 15 வண்டி ரூ. 30. தண்ணீர் செலவு ரூ. 10. களை பறிக்க பத்து ஆள்களுக்கு ரூ. 12·50. மொத்தம் ரூ. 189–50 ஆகிறது. விளைவு 16 மூட்டை ஆகும். மூட்டை 40 ரூபாய் விலை. ஆக 640 ரூபாய்க்கு விளையும். ஆக மணிலா விவசாயம் செய்தால் ரூ. 450 கிடைக்கிறது. நெல் பயிர் செய்தால் ரூ. 66–25 கிடைக்கிறது. இது போதுமா ? இதை முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து எனக்கு பதில் அளிக்கவேண்டும். இந்த அரசு இன்னெரு வியாபாரம் செய்கிறது. நம் நாட்டிற்கு ராஜஸ்தானிலிருந்தும் மற்ற பிற வடக்கேயுள்ள மாநிலங்களிலிருந்தும் கடலை, கடலைப் பருப்பு இவற்றை வாங்கி விற்கிறது. அங்கு வாங்குகிற விலை கடலை க்விண்டால் ஒன்றுக்கு ரூ. 56 கடலைப் பருப்பு ரூ. 64 அங்கிருந்து கடலையை 56 ரூபாய்க்கு வாங்கி இங்கே 124 ரூபாய்க்கு விற்கிருர்கள். கடலைப் பருப்பை 64 ரூபாய்க்கு வாங்கி இங்கே 135 ரூபாய்க்கு விற்கிருர்கள். இது முறைதாளு ? இரண்டு மடங்கு கூட அல்ல அதற்கு மேலேயே கூட விலை வைத்து விற்பது முறைதாளு ? இன்னெரு அச்சம் எனக்கு. இங்கு இப்படி 124, 135 ரூபாய்க்கு விற்கிருர்கள் என்று அறிந்தவுடனே அங்கே, வடக்கே உள்ளவர்கள் தங்களுடைய விற்கிற விலையை எந்த அளவுக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்று நினைக்கிருர்கள். இதை முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல கருத்தை தெரிவித்திருக்கின்ருர்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திருநெல்வேலியில் உள்ள தமிழ்நாடு தமிழ் சங்கத்திற்கு 20-ம் நூற்ருண்டு இலக்கியத் தொகுதிகளை வெளியிடுவதற்காக நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று தமிழ்ப்பண்பாடு என்னும் பத்திரிகை வெளியீட்டிற்காக தமிழ் பண்பாட்டுக் கழகத்திற்கு நிதி உதவி அளிக்கவும் அரசாங்கம் முடிவு செய்து இருக்கிறது. இதற்காக நான் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இதில் ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது தமிழ்நாடு தமிழ் சங்கம், தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் இது போன்ற கழகங்களுக்கு உதவி அளிப்பதில் அரசாங்கம் என்ன கொள்கையை கையாண்டு வருகிறது ? தொகுதிகள் வெளியிடுகின்ற விஷயத்தில் எந்தெந்த இலக்கியங்களை வெளியிடுவதற்கு அரசாங்கம் என்ன என்ன கொள்கையை வைத்திருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எந்தெந்த சங்கங்களுக்கு என்னென்ன விதத்தில் உதவி அளிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன். 20-ம் நூற்ருண்டு இலக்கியங்களைப் போலவே, பல இலக்கியங்கள், இலக்கணங்கள் படிப்பாரற்று அச்சிட முடியாத நிலையில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் எடுத்து வெளியிடுவதற்கு தனிப் பட்டவர்களோ அல்லது வேறு வெளியீட்டு நிலையங்களோ முன் வந்தால் அதற்கும் அரசாங்கம் உதவி அளிக்க முடியுமா என்பதையும் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று தமிழ்ப் பண்பாடு என்ற பத்திரிகைக்கு அரசாங்கம் உதவி அளிக்க முன் வந்திருப்பது போல் மற்றவர்களும் இது போன்ற பத்திரிகை தொடங்க இருந்தால் அவர்களுக்கும் இதேபோன்று இந்த அரசு உதவி கொடுக்குமா என்பதையும் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது உள்துறை அமைச்சர் அவர்கள் அரிசன நலத்துறைப் பற்றிய விவாதத்தில் பேசும்போது, வெள்ளிப்பாத்திரங்கள் அரிஜனங்களுடைய வீடுகளில் இருக்கின்ற அளவு அரிஜனங்கள் முன்னேற்றம் அடைந்திருக் கிறார்கள் என்று கனம் உள்துறை அமைச்சர் கூறி வருகிறார். அது உண்மையான நிலையன்று என்று நான் மறுத்துக்கூறியபோது அமைச்சர் அவர்கள் எங்கே அவ்வாறு கூறவில்லை என மறுப்பார்களோ என அஞ்சினேன். ஆனால் "வெள்ளிப் பாத்திரங்கள் எல்லா அரிஜன மக்களுடைய வீட்டிலும் இருக்கும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வசதி படைத்த ஒன்றிரண்டு அல்லது ஐந்தாறு பேர்களின் வீடுகளில் வெள்ளிப்பாத்திரங்கள் இருக்கும்" என்றுதான் கூறினேன் என்றார்கள். அதற்கு நன்றி; 60 லட்சம் ஜனத் தொகை கொண்ட இந்த மக்கள் இனத்தில் ஐந்தாறு பேர்களுடைய வீடுகளில்—அமைச்சர் அவர்களுடைய வீட்டில், செயலாளர் அவர்களுடைய வீட்டில், ஐ.எ.எஸ். அதிகாரிகளுடைய வீடுகளில் மட்டுமே இப்பாத்திரங்களை காணக்கூடிய நிலை இருப்பது நல்ல பொருளாதார வளர்ச்சியைக் காட்டுவதாகுமா என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் நமது உள்துறை அமைச்சர் அவர்கள், இங்கு சபையில் அங்கத்தினர்கள் எதைச் சொன் ஞலும், அதை தேர்தலுக்காகத்தான் சொல்லுகிருர்கள் என்று கூறி வருகிருர்கள். அரிஜன மானியத்தின்போது, நான் குறிப்பிட்டது "பறையர் என்ற சொல்போய் அரிஜன் என்ற வார்த்தை வந்திருக்கிறது. அந்த அளவுக்குத்தான் இந்தத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. வேறு எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை" என்பதைத் தான் சொன்னேன். ஆனால் அமைச்சர் அவர்கள் நான் ஏதோ பறையர் என்ற கருத்தில் அரிசனங்களை இழிவாகப் பேசுகிறேன் என்று சொன்னர் . . .

கனம் திரு. பூ. கக்கன் : இது சப்ளிமெண்டரி டிமான்ட் விவதாம், இதில் குறிப்பிட்ட டிமாண்டைப்பற்றித்தான் பேசுவது முறை, ஜெனரல் டிஸ்கஷன் மாதிரி பேசுவது முறையல்ல என்பதை தெரிவித்துக்கொள் கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : இது சப்ளிமெண்டரி டிமான்டாக இருந் தாலும் அரிஜனத்துறைக்கும் மானியம் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் கருத்துக்களைச் சொல்வது மிகவும் பொருத்தம்தான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையில், நான் பேசின பேச்சு எந்த விதத்திலும் அரிஜனங்களை குறைத்து பேசியது அல்ல என்று நான் தெளிவாக்கியிருந்தும், அமைச்சர் அவர்கள் தவருக என்னுடைய பேச்சை மக்கள் தவருக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இவ்வாறு திருத்திப் பேசுகின்ற முறையை கைவிட்டுவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு—கூட்டுறவு முறையில் நடை பெறுகின்ற ஆலை என்று சொல்லப்பட்டிருக்கிறது—இதற்கு ஐந்து லட்சம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிருர்கள். ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று சொன்னல் அதற்கு ஒரு கோடி 15 லட்சம் ரூபாய் முதலீடு தேவைப் படுகிறது. பொதுமக்களிடமிருந்து கிடைக்கின்ற பணம் 15 லட்சம் ரூபாய் தான். சர்க்கார் 20 லட்சம் கொடுக்கிருர்கள். கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாக 15 லட்சம் ரூபாய் கொடுக்கிருர்கள். இண்டஸ்ட்ரியல் பைனன்ஸ் கார்ப்பரேஷன் மூலம் 65 லட்சம் ரூபாய் கொடுக்கிருர்கள். இவ்விதம் 1 கோடி 15 லட்சம் ரூபாய் அளவுக்கு நடைபெறக் கூடிய இயக்கத்திற்கு கூட்டுறவு இயக்கத்தில் நடைபெறுகிற ஆலை என்று சொல்லி—15 லட்சம் மட்டும் பொதுமக்களுடைய பங்குப்பணம் இருக்கின்ற ஒரு

இயக்கத்தை கூட்டுறவு ஆலை என்று சொல்லி, அதில் வசதி படைத்த—பணம் படைத்த நாலைந்து பேர்களிடம் ஒப்படைப்பது நல்ல முறைதான ஜனநாயக முறைக்கு சமதர்ம முறைக்கு இது நல்ல வழியாக அமையுமா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, இன்று நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில், 120 மைல்களுக்கு அப்பால் இருக்கும் பஸ் ரூட்டுகள் எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்வதாக இருந்ததே அப்படி யானல் அதற்கு மாருக பல ரூட்டுகளில் தனிப்பட்டவர்கள் பஸ் போக்கு வரத்து நடத்துகிருர்களே, அதை எப்படி சர்க்கார் அனுமதிக்கிறது என்று கேட்டதற்கு, அமைச்சர் 120 மைல்களுக்கு மேல் உள்ள ரூட்டுகளை சர்க்கார் எடுத்துக்கொள்வது என்கிற சட்டம் வருவதற்கு முன்னலேயே இந்த ரூட்டுகள் வழங்கப்பட்டது என்று சொன்னர்கள். இது அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதையும், இவ்விதம் சொல்வது அரசாங்கத்தின் கொள்கைக்கு நல்லது தான என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்றும் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிவில் சப்ளைஸ் சம்பந்தமாக சில வார்த்தைகள் பேசிவிட்டு முடித்துக் கொள்கிறேன். சிவில் சப்ளைஸ் இலாகாவில் மாவட்டங்களுக்கு மாவட்டம் செக்-போஸ்ட், மாநிலங்களுக்கிடையே செக் போஸ்ட் வைத்து, அதற்கு பணியாளர்களை நியமிக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டி ருக்கிருர்கள். இப்போது இச்சலி சம்பா அறுவடை முடிந்து விட்டது. கார் அறுவடை தொடங்குகின்ற நேரம். இந்த நேரத்தில் சர்க்கார்—சிவில் சப்ளைஸ் அதிகாரிகள்—சர்க்கார் இது சம்பந்தமாக மேற் கொண்டிருக்கின்ற கொள்கைகளில் இருக்கின்ற குழப்பங்களின் காரண மாக—பல நடவடிக்கைகள் மேற்கொள்கிருர்கள். விவசாயிகளிடத்தில் இருக்கின்ற நெல்களை எடுப்பதற்கு முயற்சிக்கின்ருர்கள். விவசாயிகள் தங்களுடைய தேவைக்கு அதாவது அடுத்த அறுவடை வரையிலும் ஏற்படுகின்ற தேவைக்கு விதைக்காகவும், உணவுக்காகவும், ஐந்தாறு மூட்டை நெல் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். இந்த நேரத்தில் சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் வீடுவீடாக நுழைந்து, கொட்டடி, கொட்டடியாக, நுழைந்து அங்கேயிருக்கும் ஐந்தாறு மூட்டை நெல்லையும் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். இதன் காரணமாக அங்கங்கே இருக்கின்ற பொதுமக்களின் மத்தியில், நெல் கொள்முதல் சம்பந்தமாக பெரியதொரு கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் உணரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

SRI A. KUNJAN NADAR : Mr. Deputy Speaker, Sir, I wish to refer to certain facts or happenings relating to the Kanyakumari district. Sir, there is a big scheme called, 'The Kodayar Hydro-Electric Scheme' under execution in the Kanyakumari district. Several crores of rupees are being spent on this scheme. It seems that there is no control over the officers implementing the scheme there, and they are spending money as they like. It is not corruption or irregularity that is going on. It is simply looting of public money that is going on. On a previous occasion I raised this point before this very House. Sir, no enquiry is required to find out the truth. Records would show that what I say is correct. If only the Government have a mind to go into the matter, everything can be seen in the records. I am in possession of more facts and concrete facts regarding the Hydro-Electric Scheme. I wish that the Hon. Minister concerned should have been here. Unfortunately, as usual, he has left the House.

Sir, there are two dams, lower dam and upper dam. The upper dam is 500 feet above the lower dam up in the Hills. It is in the interior area of dense forests. There are two channels to be connected with these two dams. The work relating to the Channel connected with upper dam has been given to Messrs. Petal & Company for a contract involving several lakhs of rupees, after calling for tenders. Sir, the work relating to the Channel of the Lower Dam is also given at that rate without tenders. What the people there say is that persons up to topmost level have got their share in all these things. Sir, in the Upper Dam area, human existence is not possible. It is so cold and people will be shivering and it would not be possible to work there. But the wage paid to a coolie working in the Upper Dam area is only Rs. 67 per mensem. The Lower Dam is located near Pechiparai Dam and the work there can be done with half the amount spent on the Upper Dam. The wage paid there is Rs. 1—8—0 per day. These are things borne out by the records. Sir, iron, cement and other materials are stored at the Lower Dam site. The persons working there come from Tirunelveli and other places and they are taken to Valliyur (via) Kalladakurichi and then to the Manjolai Estate and then finally to the Upper Dam site, a distance of 250 to 300 miles round-about.

This is going 250 to 300 miles round-about. There is nobody to check all these things. This is public money. Public money is being wasted. It should be remembered that the tax-payer has worked hard to pay this money. That money is simply wasted. Kanyakumari district is famous for its technical people in quality, quantity as well as cheapness. It is famous in all respects. For construction of quarters in damsite, timber is taken from Coimbatore and Salem. The contractor has to deliver the timber on the spot. The electricity board lorries, government lorries, go and take the timber to the spot. Such things are going on. This Patel & Company is a company which is the favourite of some big people or officer or even the Hon. Minister. The proprietor of this company belongs to Bombay. For rock blasting of 120 cft. Patel & Company is paid Rs. 128 whereas the local rate is only Rs. 25 for 100 cft. So also for excavation of earth. For one unit (1000 cft.) of excavation Patel & Company is paid Rs. 200 whereas the local rate for that work is Rs. 17. This sort of thing is going on in Kodaiyar scheme. I do not have much time. So I limit myself only to a few instances.

With regard to this levy, I may first of all say that there is a peculiar sort of Government that is going on in our district. I do not know how it is in other places. Levy and ration are not new to us. We were having levy and we were having State-wide rations during the last war. There was no hub-bub anywhere. Everything was in order. Everything was peaceful. All the people were living quietly. To-day certain Special Tahsildars are appointed. These appointments of Tahsildars go by district seniority. Instead of promoting the senior people of the district

as Tahsildars, some fellows are imported to our district. They are given a jeep. What they do is, they simply snatch away paddy and rice from females.

Mr. DEPUTY SPEAKER: The hon. Member should have avoided the use of the term "fellows".

Sri A. KUNJAN NADAR: As far as possible, Sir, sometimes there are no other terms available and I will have to resort to it just to express my emotion.

If a sturdy man goes, they won't molest him since that man would repay them with blows. If a female or child takes some paddy for local use, they simply snatch and put it in the jeep and go away. They do not give any respect to the people. They do not give the just price also. What happens to the paddy? They do not take it to Government. No receipt is given, no accounts or anything. These people sell the paddy in black market and they make it a point to earn Rs. 2,000 to Rs. 3,000 a month. This is no exaggeration. On the 21st of last month. . .

Mr. DEPUTY SPEAKER: The hon. Member should finish his speech within a minute or two.

Sri A. KUNJAN NADAR: On the 21st of last month, three Special Tahsildars went in a jeep with a gang of rowdies armed with sticks. They went to a junction called 'Manakaval' at 10 o'clock in the night. They assaulted all sorts of people, males, females and children. People began to run away thinking they were police people. The people in the jeeps went to neighbouring houses, broke open the lock, molested females and molested males also. This happened on 21st night. I took up the matter with the Collector and told about this in the District Development Council meeting which took place on the 22nd. On the night of 22nd, with five jeeps, revenue jeeps (I can understand if they were police jeeps), the District Supply Officer assaulted the people again. Police raj, we can even tolerate. Our leader Sri Kamaraj says that he will hand over the whole thing to military. We would welcome military rule. Military rule is much better than the present rule we are having now. If the Government are not able to control the officers and make them behave in a lawful manner, it is better the Government resign and go, for the sake of the country. But if the Government want to stay, let it control the officers. I cannot understand a revenue officer going with rowdies and molesting females. If the Government do not control them, we will retaliate. We have given instructions to our people to pay these officers back in their own coin. If anyone enters my house and molests the females there, we will cut him to pieces. We have that much right for self-defence. Please put a stop to these crimes.

Mr. DEPUTY SPEAKER: The hon. Member Sri G. Venkataraman may now speak.

SRI A. KUNJAN NADAR: I want to tell one more point.

MR. DEPUTY SPEAKER: I have given enough time to the hon. Member. The hon. Member may resume his seat now. I now call upon the hon. Member Sri G. Venkataraman to speak.

திரு. கோ. வெங்கட்டராமன்: மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் வந்திருக்கிற துணை மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய எதிர்க் கட்சி அங்கத்தினர் கோவிந்தன் அவர்கள வாக்காளர்கள் கடமையையும், சட்டமன்ற உறுப்பினர்கள் கடமையையும் பற்றி எடுத்துச் சொன்னார்கள். துணை மான்யக் கோரிக்கைவைப்பதே சரியல்ல. ஒரு முறை வரவு-செலவுத் திட்டத்தை வைத்து விட்டால், ஆண்டு இறுதியில் துணை மான்யக் கோரிக்கைகளை வைப்பது சரியல்ல என்று சுட்டிக் காட்டினார்கள். ஒரு ஆண்டில் இந்த இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் திட்டமிட்ட பிறகு பல்வேறு காரணங்களுக்காக துணை மான்யக் கோரிக்கைகளை இறுதியில் வைக்க வேண்டிய நிலையில் பல செலவினங்கள் அதிகரிக்கவும், பல புதிய திட்டங்களை நிறைவேற்றவும், ஆக சந்தர்ப்ப சூழ்நிலையை அனுசரித்து ஏற்படுகிறது. ஆகையால் இத்தகைய துணை மான்யக் கோரிக்கைகளை வைப்பது சரியல்ல என்று சொல்லுவது சரியல்ல.

அது மட்டுமல்லாமல் வாக்காளர் கடமையையும், சட்டமன்ற உறுப்பினர்கள் கடமையையும் பற்றிப் பேசிய பிறகு, அரசாங்கம் நெல்லுக்கு விதித்திருக்கிற விலை நியாயமானது அல்ல, இன்னும் அதிகமாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் எழுப்பினார்கள். அதைப் பார்க்கிறபோதுதான் உண்மையிலேயே வேதனைப்பட வேண்டியிருக்கிறது. தேர்தல் காலத்தில், வாக்காளர் கடமை பற்றி எடுத்துச் சொல்லுகிறவர்கள், வாக்காளர்களிடத்தில் சென்று ஓட்டுக்களைக் கேட்கிற நேரத்தில், ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம், உங்கள் ஓட்டுக்களைத் தாருங்கள் என்று கேட்டுவிட்டு, சட்டமன்றத்தில் விவசாயிகளுக்கு நிர்ணயித்திருக்கும் விலை மிகக் குறைவு என்று சொல்லி, இந்த விவசாயிகளைப் பற்றி எங்களுக்குத் தெரியும் என்று சொல்வது இரட்டை நாக்குப் படைத்திருக்கிற முறையாகத்தான் இருக்கிறது. ஓட்டுக்களைப் பெறுகிறபோது மக்களிடத்தில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், வாக்குறுதி கொடுக்கலாம் என்று ஓட்டுக்களைப் பெற முயற்சி எடுத்துக்கொண்டு பிற்பாடு சட்டமன்றத்தில் நடவடிக்கைகளை முற்றிலும் மாறுபட்டதாகக் காட்டுகிறார்கள்.

அதே போல வாக்காளர்களிடத்திலே வோட்டு கேட்கிறபொழுது உணவுப் பிரச்னை என்றைக்கும் நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பொதுவாக, வெளிப்படையாகப் பேசும்பொழுதுகூட, அடுத்த பொதுத் தேர்தல் வரையிலாவது இந்த உணவுப் பிரச்னை நீடித்துக்கொண்டே இருக்க வேண்டும், இந்த உணவுப் பிரச்னையை வைத்துக்கொண்டே இந்த அரசாங்கத்தை ஒரு கை பார்த்துவிடுவோம் என்று சொல்லுவது சரியல்ல. நாட்டில் உணவுப் பிரச்னை தீரவேண்டும், மக்களுக்கு வயிரார உண்ண உணவு கிடைக்க வேண்டும் என்ற நல்ல மனப்பான்மை இல்லாததைத்தான் அது எடுத்துக் காட்டுகிறது. வாக்காளர்களிடத்தில் வோட்டுக்களைப் பெறுவதற்கு முன்னால் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து காட்ட வேண்டும் என்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்தது. அதுபோலவே பல்வேறு பிரச்னைகளைப் பற்றி வெளியிலே மக்களிடத்திலே ஒன்று சொல்லுவதும், சட்டமன்றத்தில் வேறு ஒன்று பேசுவதுமாக இருப்பது சரியல்ல. சோஷலிஸத்தைப் பற்றிப் பேசுகிறபொழுதுகூட, ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறபொழுதுகூட அதனுடைய அடிப்படைகளைத் தெரிந்து கொண்டுதான் சட்டமன்றத்தில் உரையாற்ற வேண்டும். இது ஜனநாயக லட்சியமல்ல, சோஷலிஸ லட்சியமல்ல என்றெல்லாம் பேசுவது சரியல்ல.

துணை மான்யக் கோரிக்கையைப் பார்க்கிறபொழுது உணவுப் பிரச்னையில், அதுவும் உணவுப் பங்கீட்டு முறையிலே சர்க்கார் மிகுந்த சிரமத்தோடு அக்கறையோடு பல நல்ல காரியங்களைச் செய்து வருகிற நேரத்தில், அதற்கான செலவினங்கள் அதிகரித்துக்கொண்டுதான் போகும். குறிப்பாக நகர்ப்புறங்களிலே குறைந்த விலைக்கு, நியாயமான விலைக்கு தானியங்கள் கிடைப்பதற்கு வேண்டிய பல வழிவகைகளை அரசாங்கம் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அளிக்கின்ற சலுகைகள், நிறைவேற்றுகிற திட்டங்களின் முழுப் பலனையும் மக்கள் பெறுகின்றார்களா என்பதைப் பார்வையிடுவதற்கு அதிகாரிகள் போதுமானவர்களாக இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தானியங்கள் சரியான முறையில் வினியோகிக்கப்படுகின்றதா, ஏழை மக்கள் வாழ்கின்ற பகுதியிலே, நெசவுத் தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதியிலே, கூலி ஜீவனம் செய்யும் மக்கள் வாழ்கின்ற பகுதியிலே சரியான முறையில், நியாய விலையில், தானியங்கள் பூராவும் வினியோகிக்கப்படுகிறதா என்பதைச் சரிபார்ப்பதற்கு, சோதனை செய்வதற்கு ஒவ்வொரு நகரத்திலும் இருக்கும் அதிகாரிகளுடைய எண்ணிக்கையைப் பார்க்கிறபொழுது மிக மிகக் குறைவாக இருக்கிறது. ஒவ்வொரு நகரத்திலும் 5 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் 240, 250 கடைகளை சோதனையிடுவதற்கு, சரியான முறையில் தானியங்கள் வினியோகிக்கப்படுகின்றதா என்று பார்ப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மிக மிகக் குறைவானது. ஒரு அதிகாரி 50 கடைகளை சோதனை போடுவது என்பது சரியானதல்ல. இது மிக மிகக் குறைவானது. ஆகவே இது விஷயமாக இன்னும் அதிகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு பிரச்னைகளைப் பற்றி, பல்வேறு கோரிக்கைகளைப் பற்றி உடனுக்குடன் அவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு முக்கிய கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, சேலம் நகரத்தில், குடிதண்ணீர் திட்டத்தை விஸ்தரிப்பதற்காக, குடிதண்ணீர் பிரச்னை மிகவும் அதிகமாக இருக்கிற காரணத்தினால், ஏற்பாடு செய்யப்பட்டது. மேட்டூரிலிருந்து கொண்டுவரப்படுகிற தண்ணீர் இரண்டு பம்பு செட்டுகளை வைத்துக் கொண்டு வரப்படுகிறது. மூன்றாவது பம்பு செட்டு வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரி, அதற்கான முயற்சி எடுத்து, மூன்றாவது பம்பு செட்டு வைப்பதற்காக இயந்திரமும் வந்து, பல நாட்கள் ஆகிவிட்டது. ஆனாலும், இன்றையதினம் வரையில் மூன்றாவது பம்பு செட்டு மேட்டூரில் நிறுவி தண்ணீர் சப்ளை செய்வதற்கான முயற்சி எடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்குக் காரணம், அதற்கு வேண்டிய மின்சார சாதனங்களைப் பொருத்துவதற்கான வேலையை மேற்கொண்ட கண்டிராக்டர் காலதாமதம் செய்வதனால்தான் என்று சொல்லப்படுகிறது. இதனால் பல லட்சக் கணக்கான ரூபாய் பெறுமான இயந்திரம் அப்படியே இருக்கிற நிலைமையில் இருப்பதைப் பார்க்கிறபொழுது, இதிலே அதிக தீவிர கவனம் செலுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவு தானிய வினியோகத்தைப் பொறுத்தவரையில் நாம் செய்து வருகிற காரியங்கள் அனைத்தும் சரிவர நடைபெற வேண்டுமென்றால் நல்ல முறையில் சீராக தானியங்கள் வினியோகிக்கப்பட வேண்டுமென்றால், விலை அளவு, பிரைஸ் லெவன் கட்டுப்படுத்தப்பட்டு மக்களுக்கு நல்ல முறையில் தானியங்கள் வினியோகிக்கப்பட வேண்டுமென்றால், அதற்கு வேண்டிய எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்க வேண்டுமென்றால், அதிகாரிகளைப் போதுமான அளவிலே நியமிக்க வேண்டும். மக்களிடமிருந்து வருகின்ற புகார்களை அவ்வப்பொழுது கவனிப்பதற்கு, லயசான் ஆபீசர் போன்றவர்களை நியமிக்க வேண்டும். உணவு வாங்குவோர்கள் சங்கம் அமைத்தாலும் சரி, அல்லது மக்கள் பிரதிநிதிகள் பிரச்னைகளை எடுத்துச் சொன்னாலும் சரி, அவைகளைக் கவனிப்பதற்குப் போதிய அதிகாரிகளை நியமிக்க வேண்டும். போதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிற நிலைமை இருந்

SRI A. KUNJAN NADAR: I want to tell one more point.

MR. DEPUTY SPEAKER: I have given enough time to the hon. Member. The hon. Member may resume his seat now. I now call upon the hon. Member Sri G. Venkataraman to speak.

திரு. கோ. வெங்கட்டராமன் : மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் வந்திருக்கிற துணை மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய எதிர்க் கட்சி அங்கத்தினர் கோவிந்தன் அவர்கள வாக்காளர்கள் கடமையையும், சட்டமன்ற உறுப்பினர்கள் கடமையையும் பற்றி எடுத்துச் சொன்னார்கள். துணை மான்யக் கோரிக்கைவைப்பதே சரியல்ல. ஒரு முறை வரவு-செலவுத் திட்டத்தை வைத்து விட்டால், ஆண்டு இறுதியில் துணை மான்யக் கோரிக்கைகளை வைப்பது சரியல்ல என்று சுட்டிக் காட்டினார்கள். ஒரு ஆண்டில் இந்த இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் திட்டமிட்ட பிறகு பல்வேறு காரணங்களுக்காக துணை மான்யக் கோரிக்கைகளை இறுதியில் வைக்க வேண்டிய நிலையில் பல செலவினங்கள் அதிகரிக்கவும், பல புதிய திட்டங்களை நிறைவேற்றவும், ஆக சந்தர்ப்ப சூழ்நிலையை அனுசரித்து ஏற்படுகிறது. ஆகையால் இத்தகைய துணை மான்யக் கோரிக்கைகளை வைப்பது சரியல்ல என்று சொல்லுவது சரியல்ல.

அது மட்டுமல்லாமல் வாக்காளர் கடமையையும், சட்டமன்ற உறுப்பினர்கள் கடமையையும் பற்றிப் பேசிய பிறகு, அரசாங்கம் நெல்லுக்கு விதித்திருக்கிற விலை நியாயமானது அல்ல, இன்னும் அதிகமாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் எழுப்பினார்கள். அதைப் பார்க்கிறபோதுதான் உண்மையிலேயே வேதனைப்பட வேண்டியிருக்கிறது. தேர்தல் காலத்தில், வாக்காளர் கடமை பற்றி எடுத்துச் சொல்லுகிறவர்கள், வாக்காளர்களிடத்தில் சென்று ஓட்டுக்களைக் கேட்கிற நேரத்தில், ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுப்போம், உங்கள் ஓட்டுக்களைத் தாருங்கள் என்று கேட்டுவிட்டு, சட்டமன்றத்தில் விவசாயிகளுக்கு நிர்ணயித்திருக்கும் விலை மிகக் குறைவு என்று சொல்லி, இந்த விவசாயிகளைப் பற்றி எங்களுக்குத் தெரியும் என்று சொல்வது இரட்டை நாக்குப் படைத்திருக்கிற முறையாகத்தான் இருக்கிறது. ஓட்டுக்களைப் பெறுகிறபோது மக்களிடத்தில் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், வாக்குறுதி கொடுக்கலாம் என்று ஓட்டுக்களைப் பெற முயற்சி எடுத்துக்கொண்டு பிற்பாடு சட்டமன்றத்தில் நடவடிக்கைகளை முற்றிலும் மாறுபட்டதாகக் காட்டுகிறார்கள்.

அதே போல வாக்காளர்களிடத்திலே வோட்டு கேட்கிறபொழுது உணவுப் பிரச்னை என்றைக்கும் நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பொதுவாக, வெளிப்படையாகப் பேசும்பொழுதுகூட, அடுத்த பொதுத் தேர்தல் வரையிலாவது இந்த உணவுப் பிரச்னை நீடித்துக்கொண்டே இருக்க வேண்டும், இந்த உணவுப் பிரச்னையை வைத்துக்கொண்டே இந்த அரசாங்கத்தை ஒரு கை பார்த்துவிடுவோம் என்று சொல்லுவது சரியல்ல. நாட்டில் உணவுப் பிரச்னை தீரவேண்டும், மக்களுக்கு வயிரார உண்ண உணவு கிடைக்க வேண்டும் என்ற நல்ல மனப்பான்மை இல்லாததைத்தான் அது எடுத்துக் காட்டுகிறது. வாக்காளர்களிடத்தில் வோட்டுக்களைப் பெறுவதற்கு முன்னால் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து காட்ட வேண்டும் என்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்தது. அதுபோலவே பல்வேறு பிரச்னைகளைப் பற்றி வெளியிலே மக்களிடத்திலே ஒன்று சொல்லுவதும், சட்டமன்றத்தில் வேறு ஒன்று பேசுவதுமாக இருப்பது சரியல்ல. சோஷலிஸத்தைப் பற்றிப் பேசுகிறபொழுதுகூட, ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறபொழுதுகூட அதனுடைய அடிப்படைகளைத் தெரிந்து கொண்டுதான் சட்டமன்றத்தில் உரையாற்ற வேண்டும். இது ஜனநாயக லட்சியமல்ல, சோஷலிஸ லட்சியமல்ல என்றெல்லாம் பேசுவது சரியல்ல.

துணை மான்யக் கோரிக்கையைப் பார்க்கிறபொழுது உணவுப் பிரச்னையில்,
அதுவும் உணவுப் பங்கீட்டு முறையிலே சர்க்கார் மிகுந்த சிரமத்தோடு
அக்கறையோடு பல நல்ல காரியங்களைச் செய்து வருகிற நேரத்தில்,
அதற்கான செலவினங்கள் அதிகரித்துக்கொண்டுதான் போகும்.
குறிப்பாக நகர்ப்புறங்களிலே குறைந்த விலைக்கு, நியாயமான விலைக்கு
தானியங்கள் கிடைப்பதற்கு வேண்டிய பல வழிவகைகளை அரசாங்கம்
செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அளிக்கின்ற சலுகைகள், நிறை
வேற்றுகிற திட்டங்களின் முழுப் பலனையும் மக்கள் பெறுகின்றார்களா
என்பதைப் பார்வையிடுவதற்கு அதிகாரிகள் போதுமானவர்களாக இல்லை
என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். தானியங்கள் சரியான முறையில் வினியோகிக்கப்படுகின்றதா,
ஏழை மக்கள் வாழ்கின்ற பகுதியிலே, நெசவுத் தொழிலாளர்கள் வாழ்
கின்ற பகுதியிலே, கூலி ஜீவனம் செய்யும் மக்கள் வாழ்கின்ற பகுதியிலே
சரியான முறையில், நியாய விலையில், தானியங்கள் பூராவும் வினியோகிக்
கப்படுகிறதா என்பதைச் சரிபார்ப்பதற்கு, சோதனை செய்வதற்கு ஒவ்
வொரு நகரத்திலும் இருக்கும் அதிகாரிகளுடைய எண்ணிக்கையைப்
பார்க்கிறபொழுது மிக மிகக் குறைவாக இருக்கிறது. ஒவ்வொரு நகரத்தி
லும் 5 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் 240, 250 கடைகளை சோதனையிடு
வதற்கு, சரியான முறையில் தானியங்கள் வினியோகிக்கப்படுகின்றதா என்று
பார்ப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மிக மிகக் குறை
வானது. ஒரு அதிகாரி 50 கடைகளை சோதனை போடுவது என்பது சரியான
தல்ல. இது மிக மிகக் குறைவானது. ஆகவே இது விஷயமாக இன்னும்
அதிகக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

பல்வேறு பிரச்னைகளைப் பற்றி, பல்வேறு கோரிக்கைகளைப் பற்றி
உடனுக்குடன் அவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு முக்கிய கவனம்
எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, சேலம் நகரத்தில், குடிதண்ணீர்
திட்டத்தை விஸ்தரிப்பதற்காக, குடிதண்ணீர் பிரச்னை மிகவும் அதிகமாக
இருக்கிற காரணத்தினால், ஏற்பாடு செய்யப்பட்டது. மேட்டூரிலிருந்து
கொண்டுவரப்படுகிற தண்ணீர் இரண்டு பம்பு செட்டுகளை வைத்துக் கொண்டு
வரப்படுகிறது. மூன்றாவது பம்பு செட்டு வேண்டும் என்று பல ஆண்டு
களாகக் கோரி, அதற்கான முயற்சி எடுத்து, மூன்றாவது பம்பு செட்டு
வைப்பதற்காக இயந்திரமும் வந்து, பல நாட்கள் ஆகிவிட்டது. ஆனாலும்,
இன்றையதினம் வரையில் மூன்றாவது பம்பு செட்டு மேட்டூரில் நிறுவி
தண்ணீர் சப்ளை செய்வதற்கான முயற்சி எடுக்கப்படாமல் இருக்கிறது.
அதற்குக் காரணம், அதற்கு வேண்டிய மின்சார சாதனங்களைப்
பொருத்துவதற்கான வேலையை மேற்கொண்ட கண்டிராக்டர் காலதாமதம்
செய்வதனால்தான் என்று சொல்லப்படுகிறது. இதனால் பல லட்சக்
கணக்கான ரூபாய் பெறுமான இயந்திரம் அப்படியே இருக்கிற நிலைமையில்
இருப்பதைப் பார்க்கிறபொழுது, இதிலே அதிக தீவிர கவனம் செலுத்து
வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்ளுகிறேன்.

உணவு தானிய வினியோகத்தைப் பொறுத்தவரையில் நாம் செய்து
வருகிற காரியங்கள் அனைத்தும் சரிவர நடைபெற வேண்டுமென்றால்
நல்ல முறையில் சீராக தானியங்கள் வினியோகிக்கப்பட வேண்டுமென்றால்,
விலை அளவு, பிரைஸ் லெவன் கட்டுப்படுத்தப்பட்டு மக்களுக்கு நல்ல முறை
யில் தானியங்கள் வினியோகிக்கப்பட வேண்டுமென்றால், அதற்கு
வேண்டிய எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்க வேண்டுமென்றால்,
அதிகாரிகளைப் போதுமான அளவிலே நியமிக்க வேண்டும். மக்களிட
மிருந்து வருகின்ற புகார்களை அவ்வப்பொழுது கவனிப்பதற்கு, லயசான்
ஆபீசர் போன்றவர்களை நியமிக்க வேண்டும். உணவு வாங்குவோர்கள்
சங்கம் அமைத்தாலும் சரி, அல்லது மக்கள் பிரதிநிதிகள் பிரச்னைகளை
எடுத்துச் சொன்னாலும் சரி, அவைகளைக் கவனிப்பதற்குப் போதிய அதிகாரி
களை நியமிக்க வேண்டும். போதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு,
அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிற நிலைமை இருந்

தால்தான், நிச்சயம் நாம் உணவுப் பிரச்னையை தீர்க்க முடியும். ஆகவே இதில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு வேண்டிய அதிகாரிகளை நாம் நியமிக்க வேண்டும். அதனால், செலவினங்கள் அதிகரித்தாலும் கவலைப்படவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் துணை மான்யக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. செ. மாதவன் : கனம் நலைவந் தலைவர் அவர்களே, உணவுப் பங்கீட்டைப் பற்றி துணை மான்யக் கோரிக்கையிலே தொகை கேட்கப் பட்டுள்ளது. அதைக் குறிப்பிட்டுப் பேசும்பொழுது, விவசாயிகளுக்கு ஒரு பக்கம் நன்மை செய்ய வேண்டும், இன்னொரு பக்கம் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை அரசாங்கம் வாங்குகிறது, அப்படி வாங்குகிறபொழுது விவசாயிகளுக்கு அதனால் தீமை விளையக் கூடாது என்ற கருத்தைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்துகிறது. அதைக் கூடப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள். நாட்டில் பலதரப்பட்ட குழப்பங்கள் வருகின்றன. அரசாங்கம் பின்பற்றும் கொள்கையிலே, ஒரு பக்கம் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர் உணரவேண்டும் என்பதை இங்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஆட்சிமொழிக் குழு ஒன்றை அமைத்து அதற்காக மானியக் கோரிக்கை கேட்டிருக்கிறார்கள். அது ஒரு நல்ல ஏற்பாடு. வரவேற்கிறோம். மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மொழிக் குழு நீண்டநாட்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டு விட்டது. நம்முடைய மாநில சர்க்கார் அத்தகைய குழுவை இப்பொழுது ஏற்படுத்தியிருக்கிறது. நம்முடைய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிற இந்தக் குழு எத்தகைய பணிகளைச் செய்யப்போகிறது? மத்தியக் குழுவுக்கும், மாநிலக் குழுவுக்கும் ஏற்படக்கூடிய முரண்பாடுகள் என்ன? மத்திய சர்க்காருடைய கொள்கைகளை இந்தக் குழு ஏற்றுக்கொண்டு செயல்படுமா? அல்லது தன் இச்சையாக செயல்படுமா? என்பதெல்லாம் கொள்கைப் பிரச்னை. அதிலே வேறுபட்ட கருத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக, மாநில சர்க்கார் செய்யக்கூடிய சட்டங்கள் இருக்கின்றன, மத்திய சர்க்கார் செய்யக் கூடிய சட்டங்கள் இருக்கின்றன. மத்திய சர்க்கார் செய்யக்கூடிய சட்டங்களை மத்திய சர்க்கார் மொழி பெயர்க்கலாம், மாநில சர்க்காரும் மொழி பெயர்க்கலாம். ஆனால் மத்திய சர்க்கார் குழு "நாங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சொற்களைத்தான் நீங்கள் கையாள வேண்டும்" என்று இப்பொழுது வற்புறுத்துகிறது. அந்த வற்புறுத்தலுக்கு இந்த அரசாங்கம் பணிந்துவிடக் கூடாது. உதாரணத்திற்காக நான் ஒன்று சொல்லுவேன். நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே அடிக்கடி ஒரு வார்த்தையை உபயோகிப்பார்கள். திருஷ்டாந்தத்திற்கு என்று சொல்லுவார்கள். அதாவது எடுத்துக்காட்டாக என்று சொல்லுவதற்கு என்பதற்கு அப்படிக் கூறுவார்கள். அது சிலருக்குப் புரியும், சிலருக்குப் புரியாமல் இருக்கலாம். இது போன்ற ஒரு சொல் சில பேருக்கு புரியக் கூடிய காரணத்தினால், எல்லோரும் அதைப் பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துவது நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக அமையாது. அருமையான சரியான தமிழ்ச் சொற்கள் ஏராளமாக இருக்கின்றன. மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் தமிழிலேதான் நடவடிக்கைகள் நடத்தப்படுகிற பல முறைகளை நாம் பார்க்கிறோம். தமிழ்ச் சொற்களை விட்டுவிட்டு, இந்தி சொற்களைச் சட்டத்துறையிலே பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தை மத்தியக் குழு இப்பொழுது வற்புறுத்தி வருகிறது, அப்படிப்பட்ட யோசனைகளை அடிக்கடி சர்க்காருக்குத் தெரிவிக்கிறது. அதை இந்த மாநிலக் குழு ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்திற்கும், தமிழ் வளர்ச்சிக்கும் நிதி கேட்கப் பட்டிருக்கிறது. இதுவும் வரவேற்கக்கூடிய செய்திதான். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசாங்கம் அரசியல் அமைப்புச் சட்டப்படி ஒரு தனித்த அரசாங்கம் இல்லை என்றாலும்கூட, குடி ஆட்சி என்ற முறையில்

தமிழைப் பற்றி பிரதிநிதித்துவமாக எடுத்துச் சொல்லக் கூடிய அரசாங்க மாக இந்த அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆர்வத்தை மேலும் வளர்த்து, தமிழ்ப் பண்பாடு மற்ற மாநிலங்களுக்குப் பரவ வேண்டும், வெளிநாடுகளுக்கும் பரவ வேண்டும். வெளிநாட்டுத் தமிழர்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கு தனிப்பட்ட கழகங்களையோ அல்லது அரசாங்கமே இப்படிப்பட்ட அமைப்பு களையோ ஏற்படுத்த வேண்டும். அதற்கான நிதி ஒதுக்கி, அந்தத் தொகையை இந்தக் காரியங்களுக்காக செலவழிக்க வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

துணை மான்யக் கோரிக்கை கேட்கும்பொழுது, பூமிக்கு அடியில் உள்ள நீரை ஆராய்ந்து, அதைப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டங்களைத் தீட்டுவது தான் கருத்து என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து செயல் படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு பல ஆண்டு களுக்கு முன்பே இருந்துவருகிறது. ஆனால் நடைமுறையில் இதுவரையில் எந்தவிதமான முன்னேற்றமும் காணாத நிலைமை இருக்கிறது. இப்படிப் பட்ட ஒரு திட்டம் வேண்டும் என்று மத்திய சர்க்காரும் கருதி, அதற்காக ரூ. 80 லட்சம் ஒதுக்கி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலிருந்து உதவி பெற்று இந்தத் திட்டம் செயல்பட வேண்டும் என்று முன்வந்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் இதற்காக போதிய நிதி ஒதுக்கவில்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஏராளமான தொகை கிணறுகள் வெட்டு வதற்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்தத் திட்டம் தோல்வி அடைந்து விட்டது என்று மாவட்ட அளவில் உள்ள அத்துறை அதிகாரிகளும் ஒத்துக்கொள்கிறார்கள். அதற்குக் காரணம் பூமிக்கு அடியில் உள்ள நீரை ஆராய்வதற்கு புதிய இயந்திர சாதனம் எதையேனும் கண்டுபிடிக்க வேண்டும். இதைச் செயல்படுத்துவதற்கு தனியாக ஒரு திட்டம் இந்த அரசாங்கத்தினிடம் கிடையாது. ஃபுட் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டு அல்லது மைனர் இர்ரிகேஷன் டிபார்ட்மெண்டு அல்லது பொதுப் பணித் துறையாக இருந்தாலும் சரி, இந்தத் திட்டத்தைச் சரியாக செயல்படுத்துவ தற்கு வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இங்கு ஒரு முறை கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது, "மத்திய சர்க்கார் திட்டம் இருக் கிறது. நாங்களும் இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம்" என்று கூறினார்கள். இதுவரையில் இதைச் செயல்படுத்துவதற்கு சரியான முயற்சி எடுக்கவில்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நில ஆர்ஜித நடவடிக்கைகளுக்கு மேற்கொண்டு பணம் வேண்டும் என்று இந்த மான்யக் கோரிக்கையிலே கேட்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள சட்ட சிக்கல்களை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். நில ஆர்ஜிதம் செய்யும்போது நஷ்ட ஈடு கொடுப்பதற்காகத் தொகை ஒதுக்கப்படுகிறது. கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய ப்ரொவிஷன் சட்டத்திலே இருக்கிறது. ஆனால், எந்த அடிப்படையில் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும், மார்க்கெட் வால்யூவா அல்லது வேறு புள்ளி விவரங்களிலேயா என்பதில் வேறுபாடு இருப்பதால், அடிக்கடி நீதிமன்றங்களிலே தீர்ப்பாகி அதிகமான தொகைகள் கொடுக்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது. மார்க்கெட் வால்யூ என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துவிட்டது. ஆகவே, அதன் பிரகாரம், மார்க்கெட் வால்யூவைத் தீர்மானிக்க வேண்டும் என்று விதிகளை அமைக்க வேண்டும். நில ஆர்ஜிதம் செய்யும்போது, பொது மக்களுடைய நன்மைக்காக என்று சட்டத்திலே இருக்கிறது. சில இடங் களிலே நிலத்தை எடுத்த பிறகு பொது மக்களுடைய நலனுக்கு விரோத மாக நிலத்தைப் பயன்படுத்துகிறார்கள். அந்த மாதிரி, மதுரை மாவட்டத் திலே, மேலூரிலே, தனிப்பட்ட உபயோகத்திற்காக வாங்கிவிட்டு—அமைச்ச ருக்கு நன்கு தெரியும்—மாதாகோவில் கட்ட, மதப் பிரசாரம் செய்ய உபயோகிக்க இருக்கிறார்கள் என்று தெரிகிறது. கனம் முதல் அமைச்சர் கூட ஒத்துக்கொண்டார்கள். அம்மாதிரி ஏற்பட்டால் நிலத்தைத் திரும்பப்

[திரு. செ. மாதவன்] [28th March 1966

பெற சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லுகிருர்கள். எதாவது தவறு ஏற்பட்டால் நிலத்தைத் திரும்ப வாங்க ப்ரொவிஷன் இல்லை என்று சொல்லுகிருர்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் விடை அளித்தபோது, ஒரு நிபந்தனையின்பேரில் கொடுக்கப்பட்டதால், அதை வற்புறுத்தலாம், அந்த உபயோகத்திற்குச் செய்யவில்லை என்ருல் வாபஸ் பெறலாம் என்று தெரிகிறது. அவ்வாறு நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னேன்.

திரு. செ. மாதவன் : நம் சர்க்காருடைய கோரிக்கையை மீறி மாதா கோவில் அமைப்பதாக இருந்தால், அதைத் திரும்பப் பெற முடியும் என்பதற்காக ரொம்ப சந்தோஷப்படுகிறேன்.

பாதுகாப்பு விதிகளைச் செயல்படுத்த என்று துணை மானியம் கேட்கப் படுகிறது. பாதுகாப்பு விதிகளை எதற்காக உபயோகப்படுத்தவேண்டும் என்று மத்திய சர்க்கார் ஒரு கருத்துச் சொல்லுகிறது. அங்கே உள்ள உள் துறை அமைச்சர் ஒரு கருத்துச் சொல்கிருர். ஆனால் மாநில சர்க்கார் வேறு காரணங்களுக்காக, அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்து கிருர்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விவாதத்திலே, பாதுகாப்பு என்ருல், 'சிவில் டிபன்ஸ்'. சிவில் டிபன்ஸில் என்ன அரசியல் இருக்கிறது? உள்நாட்டின் தேவைக்குப் பயன்படும் அளவில் ஒரு பயிற்சி கொடுக்கப் படுகிறது. நெருக்கடி இருந்தாலும், இல்லாவிட்டாலும், அது நடக்கிறது. இன்றைக்கு ஹோம் கார்ட்ஸ் என்று எடுத்துக்கொண்டால், அதில் அரசியல் ஒன்றும் இல்லை. சிவில் டிபன்ஸுக்காக இந்த மானியம் கோரப்படுகிறது.

திரு. செ. மாதவன் : சிவில் டிபன்ஸைத்தான் நானும் சொல்லு கிறேன். ஜனநாயக சர்க்கார் வேண்டாம், ராணுவ ஆட்சியே வரும் என்று மக்களைத் தூண்டி, புரட்சியைத் தூண்டுவது போன்ற தவருன கருத்தை ஒருவர் சொல்லுகிருர். அவர்மீது இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் புரிந்துகொள்ள வில்லையென்ருல். அது வேறு விஷயம். ஆனால், தவருகப் பிரசாரத்திற் காக அப்படிச் சொல்ல வேண்டும் என்ருல், செய்யலாம். ஆனால் புரிந்து கொள்ளவில்லை என்ருல், அதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன். அங் கத்தினர் சொல்கிற மாதிரி யாரும் காங்கிரஸ் தலைவரோ, வேறு யாரோ, ராணுவ ஆட்சி வேண்டும் என்று சொல்லவில்லை. சொல்லாததைச் சொல்லு வது சரியல்ல.

திரு. செ. மாதவன்: அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர், இந்த நாட்டில் காங்கிரஸ் ஆட்சிக்கு வரவேண்டும் ; அப்படியில்லையென்ருல், ராணுவ ஆட்சிதான் வரவேண்டும் என்று கூறியது முதல் அமைச்சருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராணுவ ஆட்சி வேண்டும் என்று அவர் சொல்லவில்லை.

SRI M. S. SELVARAJAN : On a point of order, Sir. All India Congress Committee President happens to be a member of this House. He is not here to answer, and if any charge is made against a member of this House in his absence, is that relevant ?

MR. DEPUTY SPEAKER : The hon. Member has raised the point and the Hon. Chief Minister has replied to that point.

28th March 1966]

திரு. செ. மாதவன் : சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர், சட்ட சபைக்கு வரவில்லை என்பதைக் குறிப்பிட்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். பாதுகாப்பு விதிகளைப் பயன்படுத்தும்போது, அமைச்ச ரவைக்கு, அமைச்சர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பக்கத்தில் இருப்பவர்களானால் பாதுக்காப்பு விதி வருகிறது. ஆனால் புரட்சியைத் தூண்டும் வகையில் பேசுபவர்கள் மீது உபயோகிக்க மனம் வரவில்லை.

மாநில கண்காணிப்புக் கமிஷன் பற்றிச் சொல்லியிருக்கிருர்கள். முன்பு இதையே வேண்டாம் என்று முதல் அமைச்சர் வாதம் செய்தார் கள். இப்பொழுது அது வேண்டும் என்று சொல்லுகிருர்கள். அப்படி வேண்டும் என்று சொல்லி செயல்படும்போது, ஒரு அரசாங்க அதிகாரியைப் போட்டிருப்பது முறைதானு என்று யோசிக்க வேண்டும். மத்திய சர்க் கார், இப்படிப்பட்ட கமிஷனை ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி கையில் கொடுக்கவேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிருர்கள். ஓய்வு பெற்ற அதிகாரிக்கு குற்றங்களைக் கண்டுபிடிக்க என்ன வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைக் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

***திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் கொண்டுவந்திருக்கும் துணை மானியக் கோரிக்கை களை ஆதரிக்கிறேன். ஏறக்குறைய 21 கோடி ரூபாய் மானியமாகக் கோரப்பட்டிருக்கிறது. இந்த ராஜ்ஜியத்திலே ஆரம்பத்தில் திட்டமிட்டதற் கும் மேலாக 21 கோடி ரூபாய் அதிகமாகச் செலவிடப்பட்டிருக்கிறது. அதிகமாக நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டு கிறது. அரசாங்க விவரத்திலே பார்க்கும்போது, சேதுசமுத்திர திட்டத்திற்கு பூர்வாங்க காரியங்களுக்கு, பர்மாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்கு, தொழில்கள் வாய்ப்புக்காக, இன்னும் மொழிக் கமிஷனுக்கு, அதே போல, அகில இந்திய கல்வி சர்வே, இன்னும் பல்வேறு இனங்களுக்காக நிதி ஒதுக்கீடு கோரியிருப்பது வரவேற்கத் தக்கது. திருநெல்வேலி ஜில்லாவில் நதியுண்ணிக் கால்வாயை திருத்தியமைக்கும் வேலைக்குப் பணம் ஒதுக்கியிருக்கிருர்கள் என்று அறிகிறேன். இன்னும் பல கால்வாய் வேலைகள் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன. தனித்தனியாக ஒவ்வொரு கால்வாயாக சாங்க்ஷன் செய்வது போதுமானதாக இல்லை என்பது என் னுடைய கருத்து. கன்னடியின் கால்வாயிற்கு $5\frac{1}{2}$ லட்ச ரூபாய்க்கு திட்ட மிடப்பட்டு, பல வருஷங்கள் ஆகின்றன. காலா காலத்தில் சாங்க்ஷன் செய்துவிட்டால், தண்ணீர் இல்லாத காலத்தில் அவ்வேலைகளைச் செய்வ தற்கு வசதியாக இருக்கும். அதைச் செய்ய வேண்டும்.

சிறிய தொழில்களுக்கு உதவி செய்யும் இண்டி கூட்டுறவு பாங்கிற்கு சிரமம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஐந்து லட்சம் சாங்க்ஷன் செய்திருக்கிருர்கள். ஆனால் சில மாதங்கள் ஆகியும் பண உதவி செய்ய வசதி இல்லை. இந்த சப்ளிமெண்டரி டிமாண்டில் தொகை கோரிப் பெற்றிருக்கலாம். இப்பொழுது இல்லாவிட்டாலும், காலாகாலத்தில் இந்த சிறு தொழில் களுக்கு உதவும் பாங்கிக்கு உதவவேண்டும். கடனுகவோ பங்காகவோ கொடுத்து சிரமங்களைப் போக்க வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே, சில மாதங்களுக்கு முன்பு என்று நினைக்கிறேன், ஆசிரியர் களுக்கும், நிர்வாகிகளுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டு, அது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிருர்கள். அதன் விளைவை அரசாங்கம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு செக்யூ ரிடி ஆப் சர்வீஸ், பந்தோபஸ்து இருக்க வேண்டும் என்பது சர்க்காரின் எண்ணம். இந்தத் தீர்ப்பின் விளைவாக எந்த அளவுக்குப் புங்கப்படுத்தப் படும், என்ன சிரமத்தை உண்டுபண்ணும் என்பதைச் சர்க்கார் ஜாக்கிரதை யாகப் பரிசீலனை செய்து ஆசிரியர்களுக்கு வேலை உறுதிக்குப் பந்தோபஸ்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவசியமானால் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [28th March 1966

திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த மட்டில், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள்—முன்பு இது சம்பந்தமாக புள்ளி விவரங்களைக் கொடுத்தேன். சென்ற ஆண்டு வரை 1,100 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று, பதிவு செய்து, வேலையில்லாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் 18 அல்லது 25 ரூபாய் என்று ஸ்டைபெண்ட் வாங்கிப் படித்திருக்கிறவர்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போகுமேயானால், அவர்கள் வாங்கியிருக்கும் ஸ்டைபெண்ட் பணத்தைத் திரும்பப் பெற்றுத்தான் ஆகவேண்டுமா அல்லது அதை மானியமாக மாற்றுவதில் என்ன சிரமம் இருக்கிறது என்று பரிசீலனை செய்து அவர்களுக்குக் காலாகாலத்தில் வேலைவாய்ப்புக்கு நல்ல வழிவகைகளைச் செய்ய என்ன ஏற்பாடுகள் தேவை என்பதைத் தீர்க்கமாக யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸிஸ்டர்ன் டாங்குகள் சம்பந்தப்பட்ட வரையில், திருநெல்வேலி ஜில்லாவில் பேய்க்குளம் என்று ஒரு பெரிய குளம் இருக்கிறது. மாதிரித் திட்டமாக அதைத் துப்புறவு செய்ய பதினைந்து ஆண்டுகளுக்கு முன் 6 லட்ச ரூபாயில் திட்டமிட்டு இப்போது வாய்ப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முன்பு இருந்த சீப் இன்ஜினீயர் ஆனந்த ராவ் அவர்கள் பெயரால் அழைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தூர் எடுத்து மண்ணை நீர்பிடி நிலத்தை உயர்த்தக்கூடிய திட்டம் இருந்தது. அந்தத் திட்டம் ராஜ்ஜியம் முழுதும் வெற்றிகரமாக நடக்குமா, அல்லது என்னென்ன மாற்றங்கள் தேவை என்பது பற்றி தீவிரமாக யோசிக்க வேண்டும்.

இப்பொழுது இருக்கக்கூடிய புள்ளி விவரத்தின்படி மண்ணை எங்கே போடுவது, போதுமான கருவிகள் இல்லை என்று செய்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகவல்கள் போதுமானதுதானா என்பதையும் பார்க்கவேண்டும். இப்பொழுது இருக்கக்கூடிய மானாவாரிக் குளங்களைச் சுத்தம் செய்கிறார்கள். ஆனால் சிஸ்டர்ன் டாங்ஸ் பல வருஷங்களாக இருக்கின்றன. இதையெல்லாம் தூர் எடுப்பதற்கு திட்டம் தயாரித்து திட்டவட்டமாக இத்தனை வருஷத்திற்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவிக்குமாறு செய்யவேண்டும்.

இலங்கையிலிருந்து வருகின்றவர்களுக்கும், பர்மாவிலிருந்து வருகிறவர்களுக்கும் வித்தியாசம் காட்டப்படுகிறது. அது ஏன் என்று புரியவில்லை. இலங்கையிலே மொழிக்கொள்கையின் காரணமாக 10, 15 ஆண்டுகளாக ஆயிரம் ஆயிரமாக நாடு திரும்பினார்கள். 50 ஆயிரம் பேர்கள் நாடு திரும்பினார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலே மாத்திரம் 20 ஆயிரம் பேர்கள் நாடு திரும்பி வந்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே கோடிக்கணக்கான ரூபாய்களை இழந்து, தங்களுடைய உடைமைகளையெல்லாம் இழந்து இங்கே வந்திருக்கின்றார்கள். அவர்கள் இதைப்பற்றியெல்லாம் மத்திய அரசாங்கத்திடம் முறையிட்டார்கள். நம்முடைய அரசாங்கத்திடமும் தெரிவித்தார்கள். அவர்களுக்கு வசதி செய்வதை கொள்கையளவிலே இந்த அரசாங்கம் விட்டுவிட்டதா என்று கேட்க விரும்புகிறேன். பர்மாவிலிருந்து அகதிகள் வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ஓரளவிற்கு உதவிகள் செய்யப்படுகின்றன. ஆகவே, அதைப் போலவே இலங்கையிலிருந்து நாடு திரும்புகின்றவர்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி, கோவை போன்ற இடங்களிலே மோட்டார் தொழிலிலே பயிற்சி பெறுவதற்கு வசதி செய்திருக்கிறார்கள். இதைத் திருநெல்வேலியிலும் செய்யலாம். பர்மாவிலிருந்து வந்தவர்களுக்கு குழந்தைகளுக்கு ஹாஸ்டல் வசதி எல்லாம் செய்துகொடுத்திருக்கிறார்கள். அதேபோல் இலங்கையிலிருந்து வந்தவர்கள் திருச்செந்தூர் தாலுகாவில் மாத்திரம் சில வருடங்களுக்கு முந்திய கணக்குப்படி 17,000 பேர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது 25 ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கும் ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

28th March 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

இந்தச் சிட் பண்டு பொறுத்தவரையில் மெட்ராஸ், திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற ஜில்லாக்களிலே மட்டும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஒரு பகுதியிலே சட்டமியற்றபட்டு, மற்ற பகுதிகளிலே சட்டமியற்றப்படாமல் இருப்பதால், அவர்கள் இயற்றப்படாமல் இருக்கின்ற பகுதிகளிலே ஆபீஸ் வைத்து தப்பித்துக் கொள்ள முடியும். சமீபத்திலே எனக்கு கிடைத்திருக்கின்ற செய்தி சென்னை நகரில் இரண்டு வருஷத்திலே 90 கேஸ்கள் பிடித்திருக்கிறார்கள். ஒரு மாதத்திற்குள் இப்பொழுது 200-க்கும் மேற்பட்ட கேஸ்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. ஆகவே இவையெல்லாம் கவனிப்பதற்கு போதுமான அளவிலே ஸ்டாஃப் கொடுக்க வழிசெய்ய வேண்டும்.

சப்-ரிஜிஸ்திரார்களுக்கு இப்பொழுது 150 ரூபாயிலிருந்து, 225 ரூபாய் என்று ஸ்கேல் இருக்கிறது. அங்கே வேலை பார்க்கக்கூடிய சீனியர் கிளார்க் ஆக இருந்தால் 175 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதிலே இப்படிப்பட்ட தாரதம்மியம் இருப்பதால் சிரமம் ஏற்படுகிறது. இதைப் போக்கவேண்டும். இட்டினெரரி ஸ்கீம் போல் சப்ரிஜிஸ்திரார்கள் 1, 2 தினங்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்குப் போய் ரிஜிஸ்ட்ரேஷன் வேலைகளைச் செய்யக்கூடிய வழிவகைகளைச் செய்ய முடியுமா என்பதையும் பார்க்கலாம். உபமான்யக் கோரிக்கையில் மீனவர்களுக்கு வசதி செய்ய மத்திய மீன்வளக் கார்ப்பரேஷனுக்கு நாமும் பணம் ஒதுக்கியிருக்கிறோம். 3 லட்ச ரூபாய் வரையில் அந்தக் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கிறோம். அது வரவேற்கத்தக்கது. கடலோரமுள்ள சிறிய கிராமாந்திர இணைப்பு ரோடு போடுவதற்கு 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மீன் பிடிப்புத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்ப்பதற்கு கடலோரக் கிராமங்களுக்கு டெலிபோன் வசதி, காற்று மானி முதலியவை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று அதுவும் காலாகாலத்தில் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம் : கனம் தலைவரவர்களே, துணை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த இறுதித் துணை மதிப்பீட்டில் முதலமைச்சர் அவர்கள் வேளாண்மை, தொழில் வளர்ச்சி, விவசாய வசதி போன்றவற்றிற்கும் முக்கியமான முதலிடம் கொடுப்பதற்கான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இதிலே காட்டப்பட்டுள்ள விவரப்படி விவசாயிகளுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கிறதா என்பதைப் பார்க்கும்பொழுது நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தேசிய நெருக்கடி நிலை ஏற்பட்ட பிறகு விவசாய உற்பத்தியிலும், உணவு உற்பத்தியிலும் இந்த அரசாங்கத்திற்கு அதிகமான அக்கறை பிறந்திருக்கிறது. அதற்கு முன்னால் இந்த மன்றத்தில் என்னுடைய சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும், சேலம் மாவட்டத்திலே மேட்டூர் அணை இருந்தும் அந்த மாவட்டம் பின் தங்கிய நிலையில் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி, சேலம் தாலுகாவைப் பொறுத்த வரையிலும், குறிப்பாக வீரபாண்டி, திருச்செங்கோடு, நாமக்கல் போன்ற பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருப்பதால், பொன்னியாறு, திருமணிமுத்தாறு, திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பல ஆண்டுகளாக இங்கு எடுத்துச் சொல்லிப் பார்க்கிறோம். இதை உணவு அமைச்சர் அவர்கள் கூட பரிசீலனை செய்து இதற்கு 327 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும், ஆகவே இந்தத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்வது சாத்தியமில்லையென்றும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கின்ற நேரத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.

பல ஆண்டுகளாக ஒரு திட்டத்தை சேலம் பகுதிக்கு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், இதை சர்க்கார் புறக்கணித்து வருகிறது. எடுத்துச் சொல்லப்படுகின்ற பிரச்சினைக்கும் தீர்வு காணப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆகவே இந்த வகையில் சேலம் மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சர் அவர்களிடத்திலே கருத்துரையாற்றி சிறிய பெரிய கிணறுகளை ஆங்காங்கே வெட்டி உணவு உற்பத்தியைப் பெருக்கலாம் என்று திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். இதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் மத்திய அரசாங்கத்திடமிருந்து கொடுப்ப பதற்கு முடியும் என்பதின் பேரில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதையொட்டி சேலம் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் எவ்வளவு கிணறுகள் எங்கெங்கு வேண்டுமோ, அவற்றிற்கெல்லாம் அப்ளிகேஷன் கொடுக்க வேண்டுமென்று ஆணை வந்தது. வீரபாண்டி வட்டத்தில் 327 மனுக்களைப் பெற்றோம். அதே போன்று மற்ற பஞ்சாயத்து யூனியன்களிலும் புதிய கிணறுகளை வெட்டுவதற் காக விண்ணப்பங்களைப் பெற்றோம். பெற்றோமே தவிர, மானி யத்தை அதற்காக சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை. துணை மதிப்பீட்டில்கூட அதற்கு தொகை ஒதுக்கப்பட வில்லை.

விவசாயிகளுக்கு கொடுக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்று கிறார்களா என்பதைப் பார்க்கும்போது நாங்கள் எல்லாம் ஏமாற்றமடையக் கூடிய வகையிலேதான் இருக்கிறோம். நிலத்திற்கடியிலே உள்ள நீர்வளத்தைக் கொண்டுவர 30 ஆயிரம் ரூபாய் செலவில் இரண்டு ஜீப்கள், 40 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு டிரக் வாங்குவதற்கு மதிப்பீட்டிலே அனுமதி கேட்டிருக்கிறார்கள். நீர்வள ஆராய்ச்சியில் சேலம் மாவட்டத்திற்கும் வழிவகை செய்து தரவேண்டும். ஏர்க்காடு, கொள்ளிமலை ஆதிவாசி வட்டார வளர்ச்சிக்காக அங்கே செய்யவேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்கு 3 லட்சம் ரூபாய் துணை மதிப்பீட்டில் கேட்டிருக்கிறார்கள். இது அந்த பகுதிக்குப் போதவே போதாது. அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய மக்கள் கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் பின் தங்கிய நிலையிலே இருக்கின்றார்கள். ஆகவே மூன்று லட்சம் அந்த வகையிலே போதுமா? மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட தொகை ஒதுக்கியிருப்பார் களானால், நிச்சயமாக அந்தப் பகுதிக்கு அது நன்மை செய்யக் கூடிய வகையிலே அமைந்திருக்கும். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப்பற்றி துணை மதிப்பீட்டில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதை மற்ற அங்கத்தினர்களும் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப்பற்றி எவ்வளவோ பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. அதற்காக நிறைய பணத்தைச் செலவழிக்கிறோம். ஆனால் அந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டப் பிரச்சாரம் கிராமப் பகுதிகளிலேதான் அதிகமான அளவிலே ஏற்படுத்தப்படுகிறதே தவிர, நகரப் பகுதிகளில் பிரச்சார வேகம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே, நபர்களை ஈர்க்கின்ற வகையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக் கிறேன். கிராமப் பகுதிகளை விட நகரப் பகுதிகளில் தான் அதிகமாக மக்கள் உற்பத்தி ஏற்படுகிறது. எங்கு மக்கள் உற்பத்தி அதிகமாக ஏற்படுகிறதோ, அங்கு இந்த சர்க்கார் கவனம் செலுத்தாமல் கிராமப் பகுதிகளிலே வருவாய் குறைந்த அளவிலே கிடைப்பதை வைத்துக்கொண்டு சிக்கனமாக குடும்பத்தை வைத்து வாழக்கூடிய மக்களை மேலும் மேலும் கசக்கிப் பிழியக் கூடிய வகையிலே கிராமப்புறங்களிலே பிரச்சாரம் செய்கிறார்கள். ஆகவே நகரப் பகுதிகளிலும் அதிகக், கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

இந்தச் சர்க்கார் விவசாயிகளை வாழ வைக்கக்கூடிய நிலையில் இல்லை நீருக்குள்ளே இருக்கக்கூடிய முதலையாக இருக்கிறது. விவசாயிகளுக்கு ஆபத்தைத் தேடித்தரக்கூடியதாக இருக்கிறது. விவசாயிகளை வாழ வைக்க நல்லதொரு திட்டம் இல்லையென்று கூறி முடித்துக்கொள் கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : முதலை மாதிரி நடந்து கொண்டு வருகிற திராவிட முன்னேற்றக் கழகந்தான் இந்தச் சர்க்காரைப் பார்த்து முதலை என்று கூறுகிறது.

திரு. சோ. ஆறுமுகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நாங்கள் பல திட்டங்களை எடுத்துச் சொல்கிறோம். அதை ஏற்க இந்தச் சர்க்கார் மறுக்கிறது. ஆகவே, பதுங்கியிருந்து பிடிக்கக்கூடிய முதலை யோடு இந்தச் சர்க்காரை ஒப்பிட்டுச் சொன்னேனே அல்லாது வேறு ஒன்றும் இல்லை.

MR. DEPUTY SPEAKER : There is no point of order. The Hon. Minister has only expressed his opinion.

*** திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே. இந்தச் துணை மான்யத்திலே பல்வேறு இனங்களுக்கு அதிகப்படியான நிதி கோரப்பட்டிருக்கிறது. புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது "இது ஒரு யூஷுவல் ஃபீச்சாக ஆகிவிட்டது. வருடத்திற்கு மூன்று நான்கு சப்ளிமெண்டரி டிமாண்டு வந்து விட்டது" என்று சொன்னார்கள். உண்மையிலேயே, இது வரவேற்கக்கூடிய அம்சம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாலைந்து தடவை சப்ளிமெண்டரி டிமாண்டு வரும்போது அங்கத்தினர்களுக்கு அப்போதைக்கப்போது ஏற்படும் குறைகளை, உருவாகும் பிரச்னைகளை அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதனால் திட்டங்களுக்கு அதிகப்படியாகச் செலவழிக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே, இதை நான் வரவேற்கிறேன்.

சைனிக் ஸ்கூல் சம்பந்தமாக மெட்டீரியல்ஸ் வாங்குவதற்காக 1,25,000 ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு இதைப் பற்றிய பேச்சு வந்த போது, அடுத்த சைனிக் ஸ்கூலை கோடைக் கானலில் ஆரம்பிப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் இதுவரை அதைப்பற்றி எந்த வித பேச்சும் எழக்காணோம். தற்போதுள்ள தற்காப்பு நிலையையொட்டி இந்த மாதிரி பயிற்சி கொடுக்கிற ஸ்கூலை சீக்கிரத்தில் கோடைக்கானலில் ஆரம்பிப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

ஃபாமிலி பிளானிங் செண்டர் சம்பந்தமாக 23,800 ரூபாய் அனுமதி கோரியிருக்கிறார்கள். ஆண்கள் வாசக்டமி செய்வதற்குப் பூரண நிதி உதவி அளிக்கப்படுகிறது. சில இடங்களில் ஆண்கள் "வீக்" ஆக இருந்தால் பெண்கள் ஸ்டரிலிசேஷன் செய்துகொள்ள முன்வருகிறார்கள். அவர்களுக்கு டெலிவரி சமயத்திலேதான் ஸ்டரிலிசேஷன் செய்ய முடியும். அந்தச் சமயத்தில் அவர்களுக்கு டெலிவரி சார்ஜஸ் ஸ்டே சார்ஜ் 100, 150 ரூபாய் வரை ஆகிறது. அந்தச் செலவுக்கெல்லாம் நிதி உதவி செய்யக்கூடிய நிலைமை இன்று இல்லை. அவர்கள் ஸ்டரிலிசேஷன் செய்து கொள்ள முன் வருகிறபோது டெலிவரி சார்ஜஸ் ஸ்டே சார்ஜ் எல்லாம் கூடச் சேர்த்துக் கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

மெடிகல் காலேஜ் சம்பந்தமாக அதிகமாகப் புரொபசர்களை அப்பாயிண்ட் செய்வதற்காக நிதி கோரியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே திரு சிரஞ்சீவலு நாயுடு அவர்கள் கூறிய ஒரு கருத்தை நானும் ஆதரிக்க விரும்புகிறேன். ஆஸ்பத்திரியில் வேலை செய்யக்கூடிய அல்லது கல்லூரி யில் டீச்சிங் செய்யக்கூடிய டாக்டர்களுக்குப் பிரைவேட் பிராக்டீஸ் பண்ணு வதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது. மற்றப் புரொபஷன்களில் எல்லாம் அந்தத் தடை இருக்கிறது. இதிலே மட்டும் ஏன் இவ்வாறு அனுமதி

கொடுக்கவேண்டும்? அவர்கள் பிரைவேட் பிராக்டீஸ் பண்ணலாம் என்று இருப்பதால், அவர்கள் ஆஸ்பத்திரியில் அல்லது கல்லூரியில் சரியாகச் சேவை செய்ய முடிவதில்லை. எப்போதும் நர்சிங் ஹோமுக்குப் போவதிலேயே ஆவலாக இருக்கிறார்கள். தங்களுடைய சொந்த வசதிகளைப் பெருக்கிக் கொள்ள, பணத்தை தேடுவதற்கு தகுதியாகச் சர்க்கார் ஆஸ்பத்திரிகள் பயன் படுத்திக்கொள்ளப்படுகின்றன. அவர்களுடைய சம்பள ஸ்கேலை அதிகரித்தாவது பிரைவேட் பிராக்டிஸ் செய்வதற்கு ஒரு "பார்" விதித்தால்தான் ரீசர்ச்சுக்கு எல்லாம் வசதிகள் ஏற்படும். இதைச் சற்றுக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மெடிகல் காலேஜஸ், காலேஜ் ஹாஸ்டல் இவற்றை எடுத்துக் கொண்டால் பல வசதிகள் இன்னும் செய்யப்படாமலே இருக்கின்றன, குறிப்பாக மதுரை வைத்தியக் கல்லூரி விடுதியில் குடிதண்ணீர் வசதி கூடப் போதுமான அளவு இல்லை. விமென்ஸ் வெல்பேர் டிபார்ட்மெண்ட் முன்பு மூன்று பிரிவாக இருந்தது. மத்திய சமூக நல போர்டு, சென்னை மாநில சமூக நல போர்டு என்று இருந்தது. 1961-ல் அவை ஒன்றாகச் சேர்க்கப்பட்டபோது அப்போது மாநில சமூக போர்டில் வேலையில இருந்து நிறுத்தப்பட்டு பின்னால் சேர்க்கப்பட இருந்த கிராம சேவிகைகளுடைய சீனியாரிடி எல்லாம் அங்கீகரிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. இதிலும் தகுந்த கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோர்ட்டுகளைப் பொருத்தவரை புத்தகங்கள், மற்ற மெட்டீரியல்ஸ் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பார் அசோசியேஷனை எடுத்துக் கொண்டால், மதுரை போன்ற இடங்களில் லாவட்டரிக்கு தண்ணீர் வசதி கிடையாது. சாப்பிடத் தனி அறை கிடையாது. இந்த மாதிரி எலிமெண்டரி ஃபெசிலிடிஸ் கூட இல்லாத பார் அசோசியேஷன்கள் ராஜ்யத்தில் பல இருக்கின்றன.

மெட்ராஸ் ஹாண்ட்லூம் சொசைடியை எடுத்துக்கொண்டால், 7 லட்சம் ரூபாய்க்குத்தான் ஷேர் காபிடல் அலவ் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பணம் வாங்கக் கூடிய பல சிறு கொவாபரேடிவ் சொசைடிகளுக்கு 4 மாதங்களுக்குமேல் பாக்கி நிற்கிறது. ஆதலால் நின்றுவிடும் தறுவாயில் இருக்கின்றன. அந்த நிலையை மாற்றவேண்டும்.

கம்யூடெட் வால்யூ ஆப் பென்ஷன் அலவ் செய்திருக்கிறார்கள். இன்றைக்குள்ள நிலையையொட்டி பென்ஷனர்கள் தங்கள் பென்ஷனை அதிகரிக்கும்படியாகக் கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் பரிசீலனை செய்யவேண்டும்.

பப்ளிக் ஹெல்த் சானிடரி இன்ஸ்பெக்டர் அப்பாயிண்ட்மெண்ட் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அடல்ட்ரேஷன் ஆக்டை அமல் படுத்துவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதைத் தகுந்த முறையில் திருத்துவதற்கு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத்துணை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற நேரத்தில் எங்கள் கட்சியைச் சார்ந்த புலவர் கோவிந்தன் அவர்கள் பேசியதைத் தொடர்ந்து காங்கிரஸ் அங்கத்தினர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் பேசினார்கள். தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்தத் தேர்தலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அவர்களும் ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். நாங்களும் ஆரம்பிக்க இருக்கிறோம். "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மேடையிலே ரூபாய்க்கு 3 படி அரிசி கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதே சமயத்தில் இங்கே விவசாயிகளுக்கு நெல்லுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள் இவ்வாறு இரட்டை நாக்குப் படைத்தவர்களாக இருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். நாங்கள் தாழ்மையுடன் சொல்லிக்கொள்வது, எங்களுக்கு இரட்டை நாக்குக் கிடையாது : இருப்பது ஒரே ஒரு நாக்குத்

இல்லையென்றால் நாங்கள் என்ன
தான். புரிந்து கொள்கிற சக்தி
செய்வது ? ரூபாய்க்கு 3 படி அரிசி விற்றது நமக்குத் தெரியும்.
ரூபாய்க்கு ஐந்து படி, ரூபாய்க்கு எட்டு படி அரிசி விற்றது எனக்கே
தெரியும். இன்று ஒரு படி அரிசி 1¼ ரூபாய், 1½ ரூபாய் விற்கிறதே,
இதற்குக் காரணம் என்ன ? அரிசி விலை குறைய வேண்டுமென்று
சொல்கிற சமயத்தில் எல்லா விலைகளும் குறையவேண்டும். அவ்வாறு
எல்லா விலைகளும் குறைகிற நேரத்தில் நெல் விலையும் குறையும்.
இன்றைக்கு மற்றப் பொருள்களின் விலை அதிகமாக இருக்கும் நேரத்தில்
விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுக்கவேண்டுமென்று
தான் கூறுகிறோம். நண்பர் வெங்கட்டராமன் அவர்கள் இதைப் புரிந்து
கொள்ளவேண்டும். இன்றைக்கு ரூபாயின் மதிப்பு எப்படி இருக்கிறது ?
ஒரு ரூபாய்க்கு 1938-ல் இருந்த மதிப்பு இப்போது 20 பைசா வீதத்திற்கு,
ஐந்தில் ஒரு பங்குதான் இருக்கிறது. காரணம், உற்பத்தியாகிற பண்டங்
களைவிட ஐந்து மடங்கு பணப் புழக்கம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள்
ஒருவருக்கொருவர் வாங்கக்கூடிய சக்தி, பணப் புழக்கம் அதிகமாகி
இருக்கிறது. அதன் காரணமாக விலைவாசி ஏறிக்கொண்டே செல்கிறது.

இது அரசாங்கம் அச்சிடுகிற நோட். அரசாங்கம் இல்லாது மற்றவர்கள்
அச்சடிக்கிற நோட் தனியாக இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னர்
பாராளுமன்றத்தில் அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள், நாட்டில்
கள்ள 100 ரூபாய் நோட் புழங்குகிறது என்று. இந்த A, B சீரிஸையே
வித்ட்ரா செய்ய முடியுமா என்றால் அப்படிச் செய்யமுடியாது. அதனால்
பல நஷ்டங்கள் வரும் என்று சொல்கிறார்கள். ஆக, அரசாங்கம்
அச்சடிக்கிற நோட் வேறு, தனியார் அச்சடிக்கிற நோட் வேறு என்று
இருக்கிறது. இப்படி ஒரு ரூபாய், பத்து ரூபாய், நூறு ரூபாய் நோட்
அச்சடிக்கிற ஸிஸ்டம் இருப்பதால் ஒரு பாரலல் கவர்ன்மெண்ட் மாதிரி
கள்ள நோட்கள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. அதனால்தான் விலை
ஏறிக்கொண்டே போகிறது. முன்பு ரூபாய்க்கு அரிசி ஐந்து படி
விற்றார்கள். ஆண்டவனா விற்றான் ? மனிதர்கள் தான் விற்றார்கள்.
இன்று மூன்று படி கொடுக்கலாம் அல்லது இரண்டு படியாவது கொடுக்க
லாம் என்று சொன்னால், அதற்கான திட்டங்கள் என்ன என்று கேட்டால்
அதைச் சொல்லத் தயாராக இருக்கிறோம். இன்று, மூன்று படி அரிசி
கொடுக்கவேண்டுமென்றும் சொல்கிறார்கள். நெல் விலை அதிகமாக
கொடுக்கவேண்டும் என்றும் சொல்கிறார்கள். இது பிரச்சினையை புரிந்து
கொள்ளாமல்தான் பேசுகிறார்களா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.
இன்று நாட்டிலுள்ள விலைவாசிகள் குறைக்கப்படவேண்டுமென்றால் பண
சர்க்குலேஷன் குறைய வேண்டும். அதைக் குறைக்க நம் மாநில அரசு
மட்டும் முயற்சி எடுத்தால் முடியாது என்பதை நான் அறிவேன். மத்திய
அரசுதான் கட்டுப்படுத்த முடியும். ஆளும் கட்சியாக மத்திய அரசிலும்
காங்கிரஸ் கட்சிதான் இருக்கிறது. விலைவாசி ஏறினால் அதனால்
பாதகமும் இருக்கிறது, சாதகமும் இருக்கிறது. அப்படி சாதகம் அதிக
மாக இருந்தால் விலைவாசி ஏற்றத்தை வரவேற்கலாம். ஆனால், நம்
நாட்டில் இருப்பவர்கள் 80 சத விகிதம் ஏழைகளாக இருக்கிறார்கள்,
பரிதாபத்திற்குறியவர்கள். இந்த 80 சத வீதம் மக்களுடைய வருமானம்,
வாங்கும் சக்தி ஏராளமாக இருந்தது என்று சொன்னால் இப்பிரச்சினையைப்
பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. ஆனால் அவர்கள் நம் நாட்டில்
தரித்திர நாராயணர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம்
இரண்டு மடங்குதான் கூடியிருக்கிறதே தவிர கிராமப்புறங்களிலுள்ள
மக்களின் வருமானம் ஐந்து மடங்கிற்குக் கூடியிருக்கிறதா ? அவர்களுக்கு
வாங்கும் சக்தி அதிகரிக்கவில்லை. அதனால் அவர்கள் விலைவாசி ஏற்றத்தி
னால் பாதகம் அடைகிறார்கள். அதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.
அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். விலை
வாசியேற்றத்தைக் குறைத்து, மக்களுக்கு மூன்று படி என்ன ஐந்து
படி அரிசி ரூபாய்க்கு கொடுக்கவேண்டுமென்ற மனம் ஆட்சியாளருக்கு
இருக்குமானால் விலைவாசியைக் கட்டுப்படுத்த மத்திய அரசாங்கம் ரிசர்வ்
பாங்கை நம்பினால், ஓப்பன் மார்க்கட்டில் லோன் வருகிற நிலையை

நம்பினால், வட்டி விகிதத்தை ஏற்றினால் இவர்கள் விலைவாசியைக் கட்டுப்
படுத்த முடியும். அதைச் செய்ய முடியாததால் இன்று இங்கிருக்கிறவர்கள்
நோட் அடிக்கிறார்கள். எங்கெங்கோ இருக்கிறவர்கள் கள்ள நோட் அடிக்
கிறார்கள். அதனால் நாட்டில் பணப்புழக்கம் அதிகமாகிறது.
இதனால் விலைவாசி ஏறுகிறது. அதன் காரணமாக ஏழை மக்கள்,
சம்பளம் வாங்கக் கூடியவர்கள், ஃபிக்ஸட் இன்கம் க்ரூப்பில் இருப்பவர்
கள் இன்று நடுத்தெருவில் இருந்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள் என்றால்
இதைச் சொல்வதில் என்ன குறை இருக்கிறது. ஆகவே விலைவாசி
குறைக்கப்படவேண்டுமென்று சொல்கிறோம். இப்போதும் சொல்வோம்,
தேர்தல் காலத்திலும் சொல்வோம், வருகிற காலத்திலும் சொல்வோம்.
ஆகவே; இனிமேல் பேசுகிற அங்கத்தினர்கள் சற்று புரிந்து கொண்டு
பேசவேண்டுமென்று கூறி ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்து விடலாம்
என்று உதவி சபாநாயகர் அவர்களின் அனுமதியைக் கோருகிறேன்.

இப்போது மின்சாரக் கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். சாயங்காலம்
பீச்சுற்குப் போய் உட்கார்ந்தால் அங்கு லைட்டே கிடையாது. பத்து மெர்குரி
லைட்ஸ் இருக்கின்றன. அது எரியவில்லை. சனிக்கிழமை, ஞாயிற்றுக்
கிழமைகளில் லட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள். வெய்யில் காலத்தில்
லட்சக்கணக்கான மக்கள் சாயங்காலம் கடற்கரைக்கு வருகிறார்கள். பத்து
லைட் கூட எரியவில்லை. கரண்ட் இல்லையாம், அரசாங்கம் சொல்கிறது.
பீச்சில் ரோடில் கூட லைட் ஒன்றை விட்டு ஒன்று எறிகிறது. நேற்று
இரவு நான் ஊரிலிருந்து வந்து கொண்டிருந்தேன். மதுராந்தகம்
பக்கத்தில் முனுசாமி முதலியார் நாஷனல் ஃபாரம் என்று ஒன்றிருக்கிறது.
அவர் முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர். இரவு ஒரு
மணியில் அங்கு 300 ட்யூப் லைட்ஸ் எரிந்து கொண்டிருந்தன. அது
தவிர எரியக்கூடியது ஆயிரக்கணக்கில் பல வண்ண விளக்குகள்
எரிகின்றன. என்ன சமாசாரம் என்று கேட்டேன். முதலமைச்சர் அவர்
களும் உள்துறை அமைச்சர் அவர்களும் வருகிறார்கள், என்று சொன்னார்
கள். இன்று சாயங்காலம் வரப்போகிறார்கள். ஆனால் இரண்டு நாட்
களுக்கு முன்னதாகவே ஒத்திகை போட்டுப் பார்க்கிறார்கள். எங்கிருந்து
அவர்களுக்கு மட்டும் கரண்ட் கிடைக்கிறது. பின், ஏற்றியிருக்கிற கொடி
காங்கிரஸ் கொடியா ? 500, 600 நாஷனல் .·.ப்ளாக்ஸ் பறக்கின்றன.
முனுசாமி முதலியார் நாஷனல் .·.ப்ளாக் ஏற்றுகிறார்கள். முதலமைச்சர்
அவர்கள் வந்து காப்பி சாப்பிடுவார்களோ என்னவோ இந்தக் கரண்ட்
எங்கேயிருந்து அவர்களுக்கு வருகிறது? அவர்களுக்கு இவ்வளவு கரண்ட்
கிடைக்கிறது. இங்கு பீச்சில் இரண்டு லைட் எறியக் கூடாதா ? ஏன் இந்த
ஏற்றத்தாழ்வு ? மந்திரிகள் போகட்டும், அங்குள்ள குட மிளகாயின்
ருசியை அறியட்டும். அங்குள்ள திராட்சையின் ருசியை அறியட்டும்.
அதற்காக இப்படி மின்சாரத்தை வீணாக்குவதா ? ஒரு பக்கத்தில் மின்
சாரத்தை வீணாக்குகிறார்கள் முனுசாமி முதலியாரின் கம்பெனிக்கு,
இன்னொரு பக்கத்தில் லட்சக்கணக்கான மக்கள் திருவல்லிக்கேணி கடற்
கரைக்கு வந்து லைட் இல்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள், இந்த அவல
நிலை எதற்காக என்று கூறி இந்த அளவோடு என் பேச்சை முடித்துக்
கொள்கிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்
களே, இந்த துணை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்
தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். புதுப்பணிகளுக்காக இந்த மானியக்
கோரிக்கைகளை கொண்டு வந்திருக்கிறோம் என்று இந்த விளக்கத்தில்
கொடுக்கப்பட்டிருக்கிறதே அதன் மூலமாகவே அறிந்து கொள்ளலாம்.
துரிதமாக புதுப்பணிகளை மேற்கொண்டு முன்னேற ஆசைப்படுகிறோம் என்
பது இதிலிருந்தே தெரியும். துணை மானியக் கோரிக்கைகள் அனாவசிய
மான செலவுகளுக்காக வந்தால் அது சரியல்ல என்ற வாதத்திற்கு
அர்த்தம் உண்டு. அதை விட்டு விட்டு நல்ல பணிகள் வரவு செலவுத்
திட்டத்திற்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிலையை

அகற்றி உடனடியாக அவற்றைத் துவங்க முன்வருகிறார்கள் என்றால்
அது பாராட்டப்படத் தக்க ஒரு நிகழ்ச்சியாகும். இதில் பல துறைகளில்
பணம் கேட்கப்பட்டிருக்கிறது. வேளாண்மை பற்றி எனக்கு முன்னால்
பேசிய எதிர்கட்சி அங்கத்தினர் அவர்கள் பேசும்போது ஒரு ரூபாய்க்கு
மூன்று படி அரிசி போட எங்களிடம் திட்டம் உண்டு, கேட்டால் சொல்
வோம் என்று ஏதோ ஒரு பெரிய சிதம்பர ரகசியத்தை மறைத்து வைத்துக்
கொண்டு, கேட்டால்தான் சொல்வோம் என்று சொல்கிறார்கள். நாலைந்து
ஆண்டுகளாக இந்த சட்டசபையில் உட்கார்ந்து இடத்தைத் தேய்த்தவர்கள்
ஏன் இதுவரை அவற்றைச் சொல்லவில்லை...... (திரு. வெ. கிருஷ்ண
மூர்த்தி : எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறோம். புரியாவிட்டால்
நாங்கள் என்ன செய்வது?) இவர்கள் அறிவு பலருக்கு இல்லை என்றால்
இவர்கள் அறிவைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதுதான். எல்லோருக்கும்
புரிகிற மாதிரி ஒன்றைச் சொன்னால் உடனடியாக அதை ஏற்று நடத்த
அரசாங்கம் தயாராயிருக்கிறது. யாரிடத்தில் இருந்து வந்தாலும் அதை
ஏற்று நடத்த அரசாங்கம் தயங்கவில்லை என்று சொன்னால் அது மிகை
யாகாது.

தஞ்சை மாவட்டத்தில் வடி மூனைக் கிணறுகளுக்காக மின்விசை
வழங்க தொகை கேட்டிருக்கிறார்கள். பலமுறை நான் இங்கு எடுத்துச்
சொல்லியிருக்கிறேன். தமிழகத்தில் ஒருசில தனியார் கம்பெனிகள் மின்
சாரம் வழங்குகிறார்கள். அவர்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்
ற அக்கறை கிடையாது. எந்த நேரத்திலும் தேசீய மயமாக்கி விடுவார்
கள், நமக்கு என்னப்பா என்று பேசாமல் இருந்து விடலாம் என்று
நினைக்கிறார்கள். அப்படி தனியார் துறைக்கு அக்கறையில்லாதிருப்பதால்
இன்னும் பல கிராமங்களில் தஞ்சை மாவட்டத்தில் மின்சார வசதி இல்லா
மல் இருக்கிறது. ஆகவே எட்டு, பத்து கோடி இருந்தால் தேசீயமாக்கி
விடலாம். அப்படிச் செய்து விட்டால் விறு விறு என்று எல்லாக் கிராமங்
களுக்கும் நம் உணர்ச்சியைப் போன்று வேகமாக மின்சக்தியை வழங்க
முடியும். குழாய் கிணறுகளுக்கு மின்விசை வழங்கும்போது அரசாங்கம்
கொடுப்பதற்கும், தனியார் துறையிலிருந்து கொடுப்பதற்கும் உள்ள ரேட்
டைப் பார்த்தால் அதில் வித்தியாசம் இருக்கிறதென்று சொல்கிறார்கள்.
அரசாங்கம் கொடுக்கிற இடத்தில் குறைவாகவும், தனியாரால் வழங்கப்
படுவதற்கு அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுவதையும் பார்த்தால்
விவசாயிகள் இப்படி இரண்டு இடங்களில் இருப்பதால் அவதிப்படுகிறார்கள்
என்பதை அரசாங்கம் உணர்ந்து உடனடியாக இதை புதுப்பணிகளில் சேர்த்து
இதை தேசீயமயமாக்கவேண்டும். அப்படிச் செய்ய முன்வந்தால் நாம்
மிக வேகமாக கிராமங்களுக்கு மின்சார வசதியை அளிக்க முடியும்.

அடுத்தபடியாக, ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸ். அவர்களுக்காக, சில
கூடாரங்கள் வாங்க தொகை கேட்டிருக்கிறார்கள். அங்குள்ள காவலர்கள்
சென்னை நகரத்தில் குடியிருப்பார்களானால் அவர்களுக்கு வீட்டு வாடகைப்
பணம் கொடுப்பது கிடையாது. நான் இதுபற்றி பலமுறை கூறியிருக்கி
றேன். இதைக் கவனித்து இனிமேலாவது நகரப்புறத்தில் வாழக்கூடிய
அந்த காவலர்களுக்கு வீட்டு வாடகைப் பணம் கிடைக்கும்படிச் செய்தால்
அது போற்றத்தக்கதாக இருக்கும். அமராவதியில் சைனிக் பள்ளிக்காக
மேஜை, நாற்காலிகளுக்கு தொகை கேட்டிருக்கிறார்கள். வரவு செலவுத்
திட்டத்திலேயே இதைப்போட்டிருக்கலாம். மேஜை, நாற்காலி வாங்க புதுப்
பணியின் கீழ் கொண்டு வர வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை
ஆராய்ச்சி செய்யவேண்டும்.

அமராவதியில் சைனிக் பள்ளி வைத்திருப்பது போன்று சென்னைக்கும்
அப்படிப்பட்ட ஒரு சைனிக் பள்ளி கொடுத்தால் சாலச்சிறந்ததாக இருக்கும்.
இங்கு ஒரு சைனிக் பள்ளி தொடங்க முன்வந்தால் மாணவர்களுக்கு
வசதியாக இருக்கும்.

[திருமதி டி. என். அனந்தநாயகி] [28th March 1966

மிளகாய் அபிவிருத்திக்காக பணம் கேட்கப்பட்டிருக்கிறது. இன்று எண்
ணெய் விலே விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கிறது. தேங்காய் எண்
ணெய், நல்லெண்ணெய் இவற்றின் விலேயைப் பார்த்தால் வாங்கவே
பயமாக இருக்கிறது. ஆக்வே எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்திக்கும்
தொகை ஒதுக்கினுல் சிறந்ததாக இருக்கும். பின்னர், மண்ணெண்ணெய்
கிடைத்துக்கொண்டிருந்ததால் ஸ்டவ்வில் சமையல் செய்து கொண்டிருந்
தார்கள். இப்போது மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு வந்தவுடனே
விறகு வாங்க ஆரம்பித்தவுடன் விறகின் விலே குண்டுக்கு 3½ ரூபாய் என்று
விற்பதினுல் காட்டிலாக அமைச்சர் அவர்களும், அரசாங்கமும் சிந்தித்து
விறகு, எண்ணெய் இவற்றின் விலேயைக் கட்டுப்படுத்த என்னென்ன
முறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் யோசித்தால்
சென்னே நகர மக்கள் மிக மிக நன்றியுடையவர்களாக இருப்பார்கள்
என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, எண்ணெய் அபிவிருத்தித்
திட்டத்தில் கவனம் செலுத்தி, எண்ணெய் விலேயை குறைக்க வேண்டும்,
அது போலவே விறகின் விலேயையும் குறைப்பதற்கு அக்கறை காட்டவேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

10
1. பர்மா தமிழர்கள் விஷயமாக, அவர்கள் சென்னேயில் ஆங்காங்கு
வசித்துக் கொண்டிருக்கிறுர்கள். பல பேர்களுக்கு பல கடன் வசதி
அளிக்க சர்க்கார் முன் வந்திருக்கிறது. இருந்தும் அவர்களில் பல பேர்
இன்னும் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள
முடியவில்லே. முக்கியமாக அவர்களுக்கு குடியிருக்க வீட்டு வசதியில்லே.
இவர்களுக்கு வீட்டுவசதி போர்டார் கட்டுகின்ற வீடுகளில் சிலவற்றை
ஒதுக்கிக் கொடுத்தால் அவர்கள் நிம்மதியாக வாழ முடியும் என்று
எண்ணுகிறேன். வீட்டு வசதி போர்டாரிடத்தில் கேட்டால், இப்போது கட்டப்
பட்டிருக்கும் வீடுகள் எல்லாம் சேரி மக்களுக்காக கட்டப்பட்டிருக்கின்றன,
இதை அரசாங்கத்தின் உத்தரவில்லாமல் பர்மா தமிழர்களுக்கென்று
கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக மறுத்து விடுகிறுர்கள். ஆகவே
பர்மாத் தமிழர்கள் நலன் வசதி இவைகளை கவனிக்கும் அமைச்சர் அவர்
களும், வீட்டு வசதி போர்டு அமைச்சர் அவர்களும் கலந்து பேசி எப்படி
யாவது அவர்களுக்கு இருந்து வருகின்ற வீட்டுக் கவலேயைப் போக்கு
வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தால் மிகவும் போற்றத்தக்கதாக
இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கீழ்ப்பாக்கத்தில் மருத்துவக் கல்லூரிக்காக ஹாஸ்டல் கட்ட
வேண்டுமென்று மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர அமிஞ்சிக்
கரையில் 70, 80 ஏக்கர்கள் மூலிகைகள் வளர்ப்பதற்காக எடுத்துக்கொண்
டிருக்கிறுர்கள். இதில் போதிய அக்கறை செலுத்தாதன் காரணமாக அதில்
எந்த விதமான மூலிகைகளும் இப்போது வளருவதாக தெரியவில்லே.
இப்போது இதை மருத்துவ இலாகா வைத்துக்கொள்வதா அல்லது
காட்டிலாகா எடுத்துக்கொள்வதா என்ற பிரச்னேயில் கடிதப்போக்குவரத்து
நடத்திக்கொண்டிருப்பதின் காரணமாக யாரும் கவனிக்கப்படாமல் அந்த
இடம் இருந்து வருகிறது. அந்த நிலேயை மாற்றி அந்த இடம் கீழ்
பாக்கம் மருத்துவ கல்லூரிக்குத் தேவை என்பதை உணர்ந்து, அதன்
மூலமாக அதிகமான படுக்கைகளை போடுவதற்கும், மருத்துவத்திற்கு
தேவைப்படுகிற மூலிகைகளை வளர்ப்பதற்கும் அக்கறை எடுத்துக்கொள்ள
வேண்டும். திருநெல்வேலியில் அமைத்ததோடு போதும் என்று இருந்து
விடக்கூடாது. கீழ்ப்பாக்கம் லண்டன் தோட்டம் ஆசுபத்திரி என்று சொன்
ஞல் முன்னுலேயே பெயர் பெற்ற இடம். இப்போதும் அதே பெயரில்
பலரும் வைத்தியம் செய்து கொள்வதற்கு வருகிறுர்கள். ஆகவே இன்
னும் இந்த ஆசுபத்திரியை விஸ்தரிக்கும் வகையில் இதில் அக்கறை
காட்டி, இந்த 70, 80 ஏக்கர் நிலத்தை பாழாக்கிவிடாமல் அதில் நல்ல
மூலிகைகளை வளர்ப்பதற்கும், மேலும் படுக்கைகளை அமைப்பதற்கும் நட
வடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவ அமைச்சர் அவர்
களைக் கேட்டுக்கொள்கிறேன்.

28th March 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

தமிழ்மொழிக் கமிஷனேப் பார்க்கும்போது, இதற்கு தனியாக கமிஷன்
போட்டிருக்கிறுர்கள். இது வரவேற்கத்தக்கது. சட்டச் சொற்களை எல்லாம்
அழகான தமிழில் முன்பு மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார்
கள். அதைத் தொடர்ந்து இப்போதும் நல்ல சொற்களை உருவாக்கு
வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வது மிகவும் பாராட்டத்தக்கது.
அதோடு இந்த கமிஷனில் இருப்பவர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்க
வேண்டும். ஏதோ அந்தக் கூட்டங்களுக்குப் போனுல் வெறும் காப்பி,
டிபன் என்ற அளவோடு வசதியை நிறுத்திக்கொள்ளக் கூடாது. இன்னும்
அதிகமான அளவில் வசதி செய்து கொடுக்கவேண்டும். அப்போதுதான்
நல்ல முறையில் இந்த முயற்சி வெற்றி அடைய முடியும். அதற்கும்
ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதி நிர்வாகத்திற்கு வரும்போது, பல ஆண்டுகளாக நான் ஒரு
விஷயத்தைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். ஹைக்கோர்ட்டில், லேட்
ஹவுஸின் பக்கத்தில் வக்கீல்களுக்கு "சேம்பர்" கொடுத்திருக்கிறுர்கள்.
ஆனுல் கோர்ட்டிற்கு போக வேண்டுமென்றுல் மாடிக்குப் போவதற்கு லிப்ட்
வசதி கிடையாது. புதிதாக வந்த கட்டிடத்தில் லிப்ட் வசதி போட்டார்கள்.
ஆனுல் அதில் நீதிபதிகள் மட்டும் தான் போகலாம் என்று போட்டிருக்
கிறுர்கள். ஏன் இந்த பாரபட்சம் காட்டப்படுகிறது என்று தெரியவில்லே.
வக்கீல்கள் என்று சொன்னுல் அவர்களுக்கு மட்டும் மேலே ஏறிப்
போவதற்கு தெம்பு இருக்குமா ? நீதிபதிகள் லிப்டை உபயோகித்துக்
கொள்ளலாம் என்று சொல்லும்போது, ஏன் அதை வக்கீல்களும் உப
யோகித்துக்கொள்ளக்கூடாது ? இந்த பாரபட்சம் எதற்காகக் காண்பிக்கப்
படவேண்டும் ? ஹைக்கோர்ட்டுக்குச் செல்லவேண்டுமென்றுல் மூன்று மாடி
களும் செல்லவேண்டியிருக்கிறது. இவ்விதம் படிகள் ஏறிப்போவதற்கு
மூச்சு திணறி விடுகிறது. ஆகவே புதுப்பணியில் சேர்த்து, இங்கு ஒரு
லிப்ட்-டை ஏற்படுத்தினுல் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்
பதையும் தெரிவித்துக்கொண்டு, இதை ஏற்படுத்திக் கொடுப்பதின் மூல
மாக நீதியை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்
என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் துணைத்தலைவர் அவர்களே,
இங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்ற துணை மானியத்தின் மீது கொடுக்கப்
பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச்
சொல்லலாம் என்று நினைக்கிறேன். வட சேலம் தொழில் துறையில்
பின்னடைந்து இருக்கிறது, பொருளாதாரத்துறையில் பின்னடைந்து இருக்
கிறது என்பதை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு தர்மபுரி
மாவட்டம் என்று தனியாக ஏற்படுத்தப்பட்டது. மாவட்டம் பிரிக்கப்பட்டு
பல மாதங்கள் ஆகியும், தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படவில்லே.
பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் ஏற்படவில்லே. வெறும் நிர்வாக
சௌகரியத்திற்காக மட்டும் தான் இம்மாவட்டம் ஏற்படுத்தப்பட்டதா என்று
நினைக்கின்ற அளவுக்குத்தான் நிலேமை இருந்து கொண்டிருக்கிறது.
முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல் தொழில் துறையிலும்,
பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும்
என்ற நோக்கம் இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரை ஏற்
படவில்லே. தர்மபுரி மாவட்டம் என்று பிரிவினே செய்ததின் மூலமாக
ஏதாவது அந்தப் பகுதியில் முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்று
பார்த்தால் நிச்சயமாக இல்லே என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது.
"கடன் பட்டும் பிச்சைக்காரன், கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி"
என்கிற அளவில் தான் தர்மபுரி மாவட்டத்தின் நிலேமை இருந்து
கொண்டிருக்கிறது. புதிதாக மாவட்டம் எந்த நோக்கத்திற்காக அமைக்
கப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறக்கூடிய வகையில் அரசாங்கம் செயல்
படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், தர்மபுரி மாவட்டத்தின் தலேநகரம் தர்மபுரி
யாகத்தான் இருந்து வருகிறது. அனேகமாக மாவட்ட தலேநகரங்களில்
எல்லாம் ஜுடிஷியல் ஃபஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்கள் இருந்து

வருகின்றன என்று நம்புகிறேன். ஆனால் தர்மபுரி மாவட்டத்தின் தலை நகரான தர்மபுரியில் ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இல்லை. இங்கு ஏற்கனவே ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருந்தது. மாவட்டப் பிரிவினைக்குப் பிறகு, அதை டிஸ்ட்ரிக்ட் முனிசீப் கோர்ட்-டாக மாற்றி அதை கிருஷ்ணகிரிக்குக் கொண்டு போனார்கள். கிருஷ்ணகிரி ஜுடி ஷியலுக்கு ஹெட் க்வார்ட்டர்ஸ்-ஸாக இருக்க வேண்டும் என்றும், ரெவன்யூ ஹெட் க்வார்ட்டர்ஸ் தர்மபுரியாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அப்படியே எடுத்துக்கொண்டாலும் கூட, மாவட்ட தலை நகரம் என்ற முறையில் அங்கு ஃபஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்த வேண்டியது மிகவும் நியாயம். இந்த மாநிலத்தில் மாவட்ட தலைநகரங்களில் இவ்வாறு ஃபஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட் இல்லாத தலைநகரம் ஏதாவது இருக்கிறதா என்றால், அது தர்மபுரியாக மட்டும் தான் இருக்கும். ஆகவே இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், வருகின்ற நான்காவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் ஐந்து ஆண்டுகளிலும், குறிப்பாக நடைமுறை ஆண்டிலும் நம் நாட்டில் ஏதாவது தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதை நமக்கு தரப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கை யிலும், துணைமான்யக் கோரிக்கைகளிலும் பார்த்தால், நிச்சயமாக தொழில் வளர்ச்சி ஏற்படும் என்கின்ற நிலைமை இல்லை. ஏனென்று கேட்டால் பல இடங்களிலும் மின்சாரப் பற்றாக்குறை, மூலப்பொருட்கள் பற்றாக்குறை, பணம் புழக்கத்தில் நெருக்கடியான நிலைமை, அன்னியச் செலாவணி தட்டுப்பாடு இவைகள் எல்லாம் தொடர்ந்து அன்றாடம் பிரச்னைகளாக இருந்து கொண்டிருக்கின்றன. பாதுகாப்புக்கான பொருட்களை வாங்கு வதற்கே அன்னியச் செலாவணி நீங்குவதாக இல்லை. தங்கத்தைக் கொடுத்துத்தான் அயல்நாடுகளிலிருந்து பாதுகாப்பிற்கான பொருட்களை பெறவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அப்படிப் பார்க்கும்போது, தொழில்துறைக்கு அன்னியச் செலாவணியைப் பெருக்கிக்கொள்வதற்கு தங்கம் எங்கே கிடைக்கப்போகிறது ? பாதுகாப்புக்கே தங்கம் கிடைக்காத போது, தொழில்துறைக்கு அன்னியச் செலாவணியைப் பெருக்கிக்கொள் வதற்கு தங்கம் கிடைக்குமா என்றால் நிச்சயமாகக் கிடைக்காது. அதற்கு மாறாக நம் நாட்டிலுள்ள பொருட்களையே உற்பத்தி செய்து, வெளி நாடு களுக்கு ஏற்றுமதி செய்தால் நமக்கு வேண்டிய அன்னியச் செலாவணி கிடைக்கும். அந்த நிலைமையிலும் இருக்கிறோமா என்று பார்த்தால் அதுவும் இல்லை. தொழில் அமைச்சர் அவர்கள் தொழில் அதிபர்களையும் விஞ்ஞான மேதைகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறார். பொருட்களின் விலையைக் குறைக்கவும், அதற்கான விதத்தில் பொருட்களை உற்பத்தி செய்யும்படி தொழில் அதிபர்களுக்கும், அன்னியச் செலாவணியைப் பெருக்கு வதற்கு தகுந்த வழியில் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும் என்றும், அதற்கேற்ற வகையில் நுணுக்கங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் விஞ்ஞான மேதைகளுக்கும் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அவர்கள் விடுத்த வேண்டுகோளின்படி தொழில்கள் பெருகி அன்னிய நாடுகளுக்குப் பொருட்களைக் கொடுத்து, அதன் மூலம் அன்னிய நாட்டுச் செலாவணியைப் பெருக்கினால், நாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்வளர்ச்சி காண முடியும். அதற்குப் பல தடைகள் இருக்கின்றன. அது நீங்குவது வரையிலும் நாம் தொழில் வளர்ச்சி அடைய முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சேலம் உருக்காலை குறித்து ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றுள்ள நிலையில் பேஸிக் இண்டஸ்ட்ரீஸ்-ஸாக, அதா வது கனரகத் தொழில்களை எல்லாம் மத்திய அரசாங்கம் தான் ஏற் றெடுத்து நடத்துகிறது. ஆனால் சேலம் உருக்காலை சம்பந்தமாக நமது மாநில அரசு மத்திய அரசுக்கு பல முறை வேண்டுகோள் விடுத்தும், மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. அப்படி இல்லாத நிலையிலே நமது தொழில் அமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்று சேலம் இரும்பு ஆலையை மாநில அரசு ஏற்று நடத்தும், அதற்கு மத்திய அரசு

உதவுமா என்று கேட்ட நேரத்தில், உதவுவதாகப் பிரதமர் அவர்கள் சொன்னதாகத் தொழில் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப் படிச் சொன்ன நேரத்தில் நமது மாநிலத்தில் இரும்பு ஆலை வரப் போகிறது என்ற மகிழ்ச்சி இருந்தாலும், மத்திய அரசு இந்த ஆலையை ஏற்படுத்த ஏன் மறுத்தது என்று தெளிவுபடுத்தவில்லை ; அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் இரும் பாலையைப் பொறுத்த வரையில், அது ஜப்பான் நாட்டின் உதவியுடன் ஏற் படுத்தப்படும் என்ற நம்பிக்கை இருந்தாலும் கூட, இதிலே அன்னியச் செலாவணித் தட்டுப்பாடு இருக்கும். அதை எந்த வகையில் நீக்க இருக் கிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கனம் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்புக்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக் கும் துணை மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் நாளைக்கு நமது மாநிலத்தில் உள்ள என்.ஜீ.ஓ.-க்களுக்குச் சில சலுகைகளை அளிக்கப் போகிறார்கள். இதைப் பற்றி இந்த மாநிலத்தில் உள்ள மக்கள் அனைவரும், குறிப்பாக என்.ஜீ.ஓ.-க்கள், சந்தோஷத்துடன் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக் கும் நிலையில், நீலகிரி ஜில்லாவில் இருக்கிற பிரச்னைகளைப் பற்றி அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, நீலகிரி ஜில்லாவில் அடிப்படை சம்பளம் ரூ. 800-க் மேல் வாங்கும் அதிகாரிகள் நான்கு பேர்கள் தான் இருக்கிறார்கள். சூப்பரிண் டென்டெண்ட் ஆஃப் போலீஸ், கலெக்டர், ஆர்ட்ஸ் காலேஜ் பிரின்ஸிபால், கன்ஸர்வேட்டர் ஆஃப் ஃபாரஸ்ட்ஸ் ஆகிய இந்த நான்கு பேர்கள் தான் ரூ. 800-க்கு மேல் அடிப்படைச் சம்பளம் வாங்குகிறவர்கள். ரூ. 800-க்கு மேல் அடிப்படைச் சம்பளம் வாங்கும் அதிகாரிகளுக்கு ஹில் அலவன்ஸ் கொடுக்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது. அவர் கள் சார்பாக நாலும் அவர்களும் கனம் முதல் அமைச்சர் அவர்களிடத் தில் முறையிட்டிருக்கிறோம். மற்றவர்களுக்குக் கொடுப்பது போல, மலை வாசஸ்தல அலவன்ஸை ரூ. 800-க்கு மேல் சம்பளம் வாங்குகிற இந்த நான்கு பேர்களுக்கும் உடனடியாக அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையையும் மதிப்பு மிக்க முதல் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து அந்த அலவன்ஸ் அளித்தால் நல்லது என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நீலகிரி ஜில்லாவில் உள்ள ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் ஹில் அலவன்ஸானது ரொம்பக் காலத்திற்கு முன்பு நிர்ண யிக்கப்பட்ட அடிப்படையில் இருக்கிறது. அங்கு உள்ள மத்திய சர்க்கார் ஊழியர்கள் வாங்கும் அளவுக்கு இருக்கிறதா என்றால், ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நீலகிரி ஜில்லாவில் இருக்கும் ஆசிரியர்களுக்கும், என்.ஜீ.ஓ.-க்களுக்கும் ஹில் அலவன்ஸை சற்று உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டு வாடகை அலவன்ஸைப் பொறுத்த வரையில் முனிஸிபல் சிப்பந்திகளுக்கு முனிசிபாலிட்டியார் ரூ. 17–18 கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் சிப்பந்திகள் வாங்குவதோ ரூ. 3 தான். உதகையில் பெருவாரியாக மக்கள் குடியேறும் நிலையில் வீடு கிடைப்பதே அரிதாக இருக்கும் நிலையில் வீட்டு வாடகை அலவன்ஸை உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உதகையானது க்வீன் ஆஃப் ஹில் ஸ்டேஷன்ஸ்—இந்திய நாட் டின் மலைகளுள் ராணி என்று புகழப்பட்டும், கடந்த இரண்டு ஆண்டு களாக மழையின்மை காரணமாக, குடி தண்ணீருக்கே பாடுபடும் நிலைமை

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [28th March 1966

ஏற்பட்டிருக்கிறது. அடுத்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஸீஸன் ஆரம்பிக்கப் போகிறது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும், உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரீகர்கள் உதகைக்கு வந்து செல்லுகிறார்கள். அங்கே டூரிஸ்ட் பங்களா ஒன்று கட்டிவைத்திருக்கிறோம். அந்த பங்களாவிலிருந்து ரிசர்வ்செய்து இருக்கும் பெரியவர்களுக்கு உதகையில் தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. ஒரு மணி நேரம் தான் தண்ணீர் கொடுக்கப்படும் என்று நோட்டீஸ் டிப்பார்ட்மெண்ட்டிலிருந்து அனுப்பப்படுவதாகத் தகவல் எட்டியிருக்கிறது. இந்த நிலையை மாற்றி, உதகையைப் பொறுத்த வரையில் அது சர்வ தேச முக்கியத்துவம் வாய்ந்த மலைவாசஸ்தலமாக இருப்பதால், இந்த நிலையை ஒழுங்குபடுத்தி, சர்வே செய்து எப்படியாவது தீர்த்துக்கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக நீலகிரி ஜில்லாவிலே எங்களுக்கு இருந்த பெரிய குறை கல்லூரி இல்லை என்ற குறை. அந்தக் குறையை நமது அரசாங்கம் நீக்கி விட்டிருக்கிறது. இந்தக் கல்லூரிக்கு இப்போது ஹாஸ்டல் கட்டுவதிலே மிகவும் காலதாமதம் ஆகிக்கொண்டு வருகிறது. இப்போது ஏறக்குறைய ஆயிரம் மாணவர்கள் உதகைக் கல்லூரியில் படிக்கும்போது 30 பேர்களுக்குத் தான் ஹாஸ்டல் வசதி செய்து கொடுத்திருக்கிறோம். பல ஏழை மாணவர்கள், ஹோட்டல்களில் இருந்துகொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், நீலகிரியைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவர்களுக்கு பெரிய மனது இருக்கிறது. உடனடியாக ஹாஸ்டல் வசதி செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்தைப் பற்றி சில பிரச்னைகளைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீலகிரி ஜில்லாவிலே எங்களுடைய விவசாயம் உருளைக் கிழங்கு விவசாயம் தான். 6-7 வருஷங்களாக லேட் ப்ளைட் என்ற கொடிய நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். சமீபத்திலே பத்திரிகைகளில் செய்தி பார்த்தோம். அரசாங்கமே உத்திரப் பிரதேசத்திலிருந்து உருளைக் கிழங்கை வாங்கி மக்களுக்கு சப்ளை செய்யப் போவதாகப் பார்த்தோம். அது நீலகிரி மக்களிடத்தில் பயத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை மதிப்பு மிக்க உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். நீலகிரி ஜில்லா உருளைக் கிழங்கு மேட்டுப்பாளையத்தில் 90 கிலோ கொண்ட மூட்டை ரூ. 40-க்கு விற்கிறது. இதை வாங்குவதை விட்டு உத்திரப் பிரதேசத்திற்குப் போய் ஆயிரம் டன் உருளைக் கிழங்கை வாங்கிக்கொண்டு வந்து எங்கே சப்ளை செய்யப் போகிறார்கள்? இது தொடர்ச்சியாகப் போய்விட்டால் நீலகிரியில் உற்பத்தி ஆவது என்ன ஆவது—மக்கள் பயப்படுவது தவறாக இருக்கலாம்—அமைச்சர் அவர்கள் இதை விளக்கவேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இப்போது லேட் ப்ளைட் ஏற்பட்ட பிறகு தக்காவி லோன்களைத் திருப்பிக் கொடுப்பதைத் தள்ளிக் கொடுத்திருக்கிறார்கள், காலத்தை நீடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி நீடித்துக் கொடுத்ததன் பலனாக பீனல் இண்டரஸ்ட் அதிகமாக உயர்ந்திருக்கிறது. கடனை விட 2-3 மடங்கு பீனல் இண்டரஸ்ட் உயர்ந்திருப்பதன் காரணமாக கடன் பெற்றவர்கள் கஷ்டப்படுகிற நிலை இருக்கிறது. திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களில் வரி வஜா செய்து கொடுத்திருக்கிறோம். அதே போல எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில், கனம் முதல் அமைச்சர் அவர்களையும் கனம் உணவு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன், பீனல் இண்டரஸ்டையாவது வஜா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, துணை மான்யக்கோரிக்கைகளை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. பி. ஜயராஜ் :** மதிப்புக்குரிய துணை சபாநாயகர் அவர்களே, பெருமதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

28th March 1966] [திரு. பி. ஜயராஜ்]

தஞ்சை ஜில்லாவில் மின்சாரத்திற்காகத் துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கியிருந்த போதிலும், தஞ்சை ஜில்லாவில் பெரும் பகுதியான இடத்தில் மின்சாரம் வராத காரணத்தினால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மோட்டார் என்ஜின்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட முடியாமல் இருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் விவசாய உற்பத்தி அதிகமாகப் பெருக வேண்டுமென்று 2,000 வடி முனைக் கிணறுகள் இறக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் குறிப்பாக விவசாயிகளுக்கு 5 ஏக்கர் குத்தகை சாகுபடி செய்கிற விவசாயிகளுக்குப் பயன் தரத்தக்க அளவில் இல்லை. சிறு நிலச்சுவான்தார்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கிறவர்கள், நடுத்தர நிலச்சுவாந்தார்கள் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யவில்லை. அதற்கும் அரசாங்கம் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மோட்டார் என்ஜின்கள் கொடுக்கப்பட்டு 5—6 மாதங்கள் ஆகியும் மின்சார சப்ளை கொடுக்கப்படவில்லை. மின்சாரம் கொடுப்பது தனியார் துறையில் சவுத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனிடத்தில் இருக்கிற காரணத்தினால், விவசாயம் செய்வதற்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை. அதை துரிதமாக எலெக்ட்ரிசிடி போர்டில் கொண்டுவந்து மின்சாரத்தை உடனடியாகக் கொடுப்பார்களானால் இந்த ஆண்டு விவசாயத்திற்கு எல்லோருக்கும் மோட்டார் என்ஜின் கிடைக்கும்; மின்சாரம் மூலமாக விவசாயம் செய்கிற நிலை இருப்பதால் விவசாயிகளுக்குப் பயன் தரும் வகையில் மின்சாரம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, நன்னிலம் தாலுகாவில் பெரும்பகுதியான விவசாயிகள், மிராசுதாரர்கள் மோட்டார் என்ஜின் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் அதைப் பயன்படுத்த முடிவதில்லை. அதைப் பயன்படுத்துவதற்கும், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மின்சார இணைப்பு வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பர்மா அகதிகளின் பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கிறது. 100-க்கு 10 பேர்கள் கூட சரியான முறையில் கடன் பெறமுடிவதில்லை. அவர்கள் லோன் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சர்க்கார் இயற்றியிருக்கிற சட்டதிட்டங்கள் பிரகாரம் இவர்கள் யார் வீட்டில் குடியிருக்கிறார்கள், சொந்த வீடா, மற்றவர்கள் வீடா, அதற்கும் மேல் இவர்கள் எந்தக் காம்பில் இருந்தார்கள், எங்கு தங்கியிருந்தார்கள், அங்கு கடன் வாங்கியிருந்தார்களா என்றெல்லாம் விசாரித்து அறிவதற்கு வெகு காலதாமதம் ஆகிறது. 6 மாதம், ஒரு வருஷம் கூட ஆகிறது. இதைப்பற்றி ஏராளமான பர்மா அகதிகள் என்னிடம் வந்து முறையிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு சீக்கிரம் பணம் கிடைக்கும்படிச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிடைப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்து உத்தரவு போடவேண்டும். பர்மா அகதிகளுக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, மருத்துவ மனையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் மூலமும், பஞ்சாயத்து யூனியன் மூலமும், டி. எம். ஓ. மூலமும் 4, 5 ஆண்டுகளாக கேட்கப்பட்டும், மகஜர் கொடுக்கப்படும் இதுவரையில் இந்தக் கோரிக்கை அரசாங்கத்தினால் கவனிக்கப்படவில்லை. அந்த மருத்துவ மனைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அது பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருக்கிற காரணத்தினால், சரியான மருந்துகள் கிடைக்கவில்லை. ஏழை மக்கள் இதனால் கஷ்டப்படுகிறார்கள். இதை அரசாங்கம் துரிதமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறி, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. நா. இராசாங்கம் : கனம் சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இந்தத் துணை மான்யக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். துணை மான்யக் கோரிக்கையில் குறிப்பாக

மருத்துவம், வேளாண்மை, மற்றும் இதர துறைகளுக்கு மான்யம் கோரி இருப்பது நியாயம்தான். குடிநீர் பிரச்னையின் முக்கியத்துவத்தை நான் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதிலும் முதல் அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக, தென் ஆற்காடு மாவட்டத்தில் சில தாலுக்காக்களில், கடலூர், காடாம்புலியூர், குறிஞ்சிப்பாடி முதலிய தாலுக்காக்களில் குடிநீர்ப் பிரச்னை மிகவும் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக காடாம்புலியூரில் பூமிக்கு 50 அடிக்குக் கீழே தான் தண்ணீர் இருக்கும். மழை பெய்த காலத்தில் தான் கிணற்றில் தண்ணீர் இருக்கும், மற்ற நாட்களில் தண்ணீர் இருப்பதில்லை. நெய்வேலிக்கு பக்கத்திலுள்ள இடம் காடாம்புலியூர். நெய்வேலியிலிருந்து குழாய் மூலம் அங்கு தண்ணீர் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதை கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கவனித்து, தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிஞ்சிப்பாடி ஒரு நகரப் பஞ்சாயத்து. பக்கத்தில் வடலூர் சேஷசாயி இண்டஸ்டிரீஸ் இருக்கிறது. பல தொழிலாளிகள் தங்கியிருக்கிற இடம் குறிஞ்சிப்பாடி. அங்கு ஒரு ஓவர்ஹெட் டாங்கு இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் எடுத்து வண்டிகள் மூலம் தெருக்களுக்கு சப்ளை செய்கிறார்கள். சிலர் வண்டி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் எடுத்து காசுக்கு விற்கிறார்கள். அது கூட 2, 3 மாதங்களுக்குத்தான் நடக்கும், அதற்கு மேல் நடக்காது. ஓவர்ஹெட் டாங்கு அடிக்கடி கெட்டுப்போய்விடுகிறது. இதுபற்றி அரசாங்கம் தயவு செய்து கவனிக்கவேண்டும். இரண்டு, மூன்று தடவை இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். நான் இன்னொரு திட்டமும் கொடுத்தேன். பரவனாறு பக்கத்தில் இருக்கிறது. அங்கு ஒரு பம்பிங் ஸ்டேஷன் ஏற்படுத்தி, குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவந்து குறிஞ்சிப்பாடி போன்ற இடங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கலாம் என்று சொன்னேன். அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயத் துறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் பேசி முடித்துக் கொள்ளுகிறேன். விவசாயத் துறையில் பொதுவாக மின்சாரம் கொடுப்பதற்காக உள்ள விதிகளை தளர்த்திக்கொடுக்கவேண்டும். அவர்கள் போதுமான மின்சார வசதி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் மின்சார போர்டு ஏற்படுத்தியிருக்கிற விதிகளை தளர்த்த முடியவில்லை என்பது தான். அவர்கள் மின்சார வசதி செய்து கொடுக்க மறுக்கவும், விவசாயிகள் பயிர் காய்ந்துவிட்டது என்று அலறவும், இடையிலே சிக்கல் நீடித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் நேரடியாக கவனம் செலுத்தி, விவசாயிகளுக்கு வேண்டிய மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு அல்லாமல் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கும் வகையில் கவனம் செலுத்துவதும் விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும்.

அடுத்தபடியாக மருத்துவமனைபற்றி சொல்லுகிறேன். மருத்துவமனைகளில் கொடுக்கப்படுகிற உணவு போதாது. உணவு போதாது என்றாலும் கூட, இன்றைய சூழ்நிலையில் அது அப்படித்தான் இருக்கும் என்று வைத்துக்கொண்டாலும்கூட, உணவின் தரம் நன்றாக இருக்கவேண்டும். வியாதியஸ்தர்களுக்கு வியாதி தீருவதற்கு கொடுக்கிற உணவு நல்ல தரமுள்ள உணவாக இல்லாமலிருந்தால், மருந்து கொடுத்தும் பயன் இல்லை. ஜில்லா ஆஸ்பத்திரிகளில் மருந்துக்காக லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்யும்பொழுது ஆயிரக்கணக்கில் உணவுக்காக செலவழித்தால் பாதகம் இல்லை. ஆகவே, அரசாங்கம் இதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற துணைமான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சிறப்பாக சிறு பாசன திட்டத்திற்காக, தூர்

எடுத்து பண்படுத்தும் திட்டத்திற்காக, பாசன மூலதனச் செலவு என்ற தரப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையானது மிகவும் பயன்தரக் கூடிய ஒரு திட்டத்திற்குப் செலவிடப்படுகிற தொகை. அதோடு கூட நம்முடைய அரசாங்கம் பாசன திட்டங்களுக்காக இவ்வளவு அவசரமாகவும் தீவிரமாகவும் செலவு செய்தது பாராட்டத்தக்கது.

எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை வைத்துக்கொண்டு, அந்த அடிப்படையின்கீழ் சிறு பாசன திட்டங்களை எடுத்து, வேலை செய்ய முடிவதே இல்லை. ஏனென்று கேட்டால் அந்த வட்டாரத்தில் அதிகமாக பணம் செலவு செய்தால் தான் கூலி ஆட்கள் கிடைக்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கக்கூடிய எஸ்டிமேட் டில் வேலை செய்ய முடிவதே கிடையாது. கிட்டத்தட்ட 6 ஆண்டு காலமாக எஸ்டிமேட்டு போட்டு, டெண்டர் வரவழைக்கப்பட்ட திட்டங்களைப் பொறுத்த வரையிலும்கூட, வேலை நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதற்குக் காரணம் விவசாய இலாகாவில் உபயோகிக்கக்கூடிய டிராக்டர்களை தூர் எடுப்பதற்கு வேண்டி கேட்டால், விவசாயிகளுடைய நிலத்தை சமப்படுத்துவதற்காகத் தான் டிராக்டர்கள் கொடுக்கப்படுமே ஒழிய, இப்படிப்பட்ட கமர்ஷியல் வேலைகளுக்கு கொடுக்கப்படமாட்டாது என்று அவர்கள் சொல்லு கிறார்கள். ஆகவே, சிறு பாசன திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளக்கூடிய வேலைகள் அதிகப்படியான வேலைகள் நின்று போய்விட்டன. சாங்ஷன் ஆன வேலைகள் 18 வேலைகள் என்னுடைய பிர்காவில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் துரிதமாக எடுத்து முடிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மழை காலத்தில் அடித்துவரக்கூடிய தண்ணீர் நின்று, கிணற்றில் ஊற்று எடுக்கக்கூடிய நிலைமை தான் அங்கு இருக் கிறது. எங்கள் பகுதி கிணற்றைப்பற்றி நான் அநேக தடவை இந்தச் சபையில் சொல்லியிருக்கிறேன். கிணறு 120 அடி ஆழம் என்று சொல்லும்பொழுது, 90 அடிக்கு படியில் இறங்கலாம். அடுத்து எங்கு இறங்கவேண்டுமென்று கேட்டால், படிக்கு உடனேயே ஒரு ஏணி வைத் திருப்பார்கள். அந்த ஏணியில் இறங்கவேண்டும். ஏணியில் இறங்கி கயிற்றைப் பிடித்துக்கொண்டு தொங்கவேண்டும். தெருக்கூத்திலே கயிற் றிலே நடப்பது மாதிரி, கயிற்றைப் பிடித்துக்கொண்டு தொங்கவேண்டும். ஒவ்வொரு நாளும் குடும்பத்தைப் பிழைக்க வைப்பதற்காக ஆடவர், மனைவி, குழந்தை மூவரும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு தொங்கி தெருக்கூத்து ஆடுகிற மாதிரி, எங்கள் பகுதியில் விவசாயி நாள்தோறும் காலையில் 90 அடி படியில் இறங்கி, அதற்குப் பிறகு ஏணியில் இறங்கி, அதற்குக் கீழே ஒரு சிறிய ஏணியில் இருக்கிற கயிற்றைப் பிடித்துக்கொண்டு தொங்கி, தெருக்கூத்து ஆடுகிறமாதிரி கிணற்றில் இறங்கி மோட்டாரை ஓட்டவேண்டும். தண்ணீர் மேலே வந்தவுடன் சில சமயம் "டக்" என்று நின்றுபோய்விடும். காரணம் தண்ணீர் எடுக்கக்கூடிய "புல்லிங் பவர்" குறைவாக இருக்கிறது. மிக ஆழத்தில் இறங்கி தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பெரிய நீர்ப்பாசன திட்டங்களை தீவிரப் படுத்துவதோடு சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக ஒதுக்குகிற பணத்தை உடனடியாக செலவு செய்யவேண்டும், எஸ்டிமேட்டை அதிகரிக்கவேண்டும், போட்டிருக்கக்கூடிய எஸ்டிமேட்டுக்கு உடனடியாக வேலையை துவக்க வேண்டும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உடனடியாக வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்று கண்காணிக்கவேண்டும். 6 வருஷங்கள் ஆன திட்டங்கள் கூட வேலை துவக்கப்படாமல் இருக்கின்றன. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கண்காணித்து, எங்கள் வட்டாரத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 12—
இந்த துணை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன். முக்கியமாக உணவுப் பிரச்சினையிலே, வட ஆர்க்காடு ஜில்லாவிலே, அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் நடுத்தர வர்க்கத் தினரை, அவர்களுடைய வீட்டிலே புகுந்து தானியத்தை எடுக்கக்கூடிய

நிலையில், தொந்தரவுக்குள்ளாக்குகிறார்கள். அது பற்றிய மனு இங்கே சர்க்காருக்கும் வந்திருக்கிறது. எனக்கும் வந்திருக்கிறது. அப்படி மக்களை துன்புறுத்துவது சரியில்லை. அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை எப்படி வசூல் செய்வது என்கிற முறையில் லெவியை வைக்க வேண்டும். எல்லார் இடத்திலும் வசூல் செய்யவேண்டும் என்பது சரியாகாது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற மக்கள், நெல்லை விற்றுத்தான் மற்ற காரியங்கள் செய்யவேண்டும். பதுக்கப் போவதில்லை. விற்றது போக பாக்கியை சாப்பாட்டிற்கும், விதைக்கும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் பிடுங்கிக்கொண்டால், அவர்கள் எப்படி சாகுபடி செய்யமுடியும். இதை நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகரத்திற்கு அருகாமையில் உள்ள கிராமங்களிலிருந்து தலைச் சுமையாக அரிசி கொண்டுவருகிறார்கள். கவர்ன்மெண்ட் ரேட்டைவிட குறைவான விலைக்கு புழுங்கல், பச்சை அரிசி விற்கிறார்கள். அதைத் தடுத்ததால் தான் சென்ற வருஷம் பஞ்சம் ஏற்பட்டது. அப்படித் தலைச் சுமையாகக் கொண்டு வருவதைத் தடுக்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். அப்படிச் செய்யவில்லை என்றால் நகர மக்களுக்கு உணவு அளிக்க முடியாது.

ஜில்லா போர்டிலே இருக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளில் இருக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் சம்பள வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஜில்லா போர்டிலே தலைமை ஆசிரியர்களாக இருந்தால் அவர்களுக்கு ஹெட் மாஸ்டர் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். அதே ஆசிரியர்கள் தனிப்பட்டவர்களுடைய பள்ளியிலே வேலை செய்யும்போது அலவன்ஸ் கொடுக்கவில்லை. நாங்கள் மாத்திரம் 92 எம். இ. ஆர். படி சர்க்கார் என்ன சம்பளம் கொடுக்கவேண்டும் என்று திட்டம் போடுகிறார்களோ அதைக் கொடுக்கவேண்டும். ஆனால் சர்க்காரிலே கொடுக்கும் அந்தத் தலைமை ஆசிரியர்கள் அலவன்ஸை நிறுத்தியிருக்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீனவர்களை ஷெட்யூல்ட் வகுப்பில் சேர்க்கவேண்டும். பின்தங்கிய வகுப்பில் சேர்க்கப்பட்டாலும், அவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப் பட்டவர்களாகத் தான் இருக்கிறார்கள். வெய்யிலோ, மழையோ சமுத்திரக் கரையில் இருந்துகொண்டு, தனியாகக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு விசேஷ சலுகைகள் கொடுக்கவேண்டும். அவர்களில் படித்தவர்கள் இருந்தால், அவர்களையே மீன் இலாகா உத்தியோகஸ்தர்களாகப் போட்டால், அவர்களுடைய நிலைமைகளை நன்றாகத் தெரிந்து மீனவர்களுக்கு வசதி செய்து கொடுக்கமுடியும். முற்போக்கு இனத்தவரைப் போட்டால், ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்கிறாற்போல மீனவர்கள் பிரச்னை தெரிந்து நடக்கமுடியாது. மீனவர்களாகப் பலபேர்கள் ட்ரெயினிங் பெற்றிருக்கிறார்கள். விசைப்படகு விடுவதற்கு, இவர்களுக்கு துரிதமாக விசைப் படகுகள் வினியோகம் செய்யவேண்டும். மீன் அதிகமாகப் பிடிப்பதற்கு, அவர்களுக்கு உற்சாகம் இருக்கிறது. நைலான் வலைகளை சிலர் உபயோகிக்கிறார்கள். நல்ல வகையில் நிறைய மீன்கள் பிடிக்கிறார்கள். அதை இன்னும் பாபுலர் செய்யவேண்டும். வசதி உள்ளவர்கள் வாங்குகிறார்கள். ஏழை மீனவர்கள் வாங்கமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களை ஷெட்யூல்ட் வகுப்பில் சேர்த்து, இவர்களுக்கு இனமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரு நிமிஷம், சார், மிகவும் பின் தங்கிய வகுப்பினராக லிஸ்டில் போட்டு என்னென்ன சலுகைகள் கொடுக்கப்பட்டன, இப்போது கொடுக்கப்பட்டு வருகிறதா, ஏட்டளவிலேதான் இருக்கிறதா என்பதை விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரே ஒரு விஷயம்.. (மணியடிக்கப்பட்டது).

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நம்முடைய கனம் முதல் அமைச்சர் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைச்சொல்ல விரும்புகிறேன். ரெவின்யூ கணக்கில் 13 கோடிக்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது பாராட்டுக்குரிய ஒன்று. என்.ஜி.ஓ.-க் களுக்கு சைக்கிள், ஸ்கூட்டர் முதலியவை வாங்க பணம் கொடுக்கிறோம். வீடு கட்ட பணம் அட்வான்ஸ் கொடுக்கிறோம். ஆனால் பல என். ஜி. ஓ.-க்கள் தங்கள் குழந்தைகளுக்கு கலியாணம் செய்துவைக்க கஷ்டப்படுகிறார்கள். ஆகையினால், குழந்தைகள் கலியாணத்திற்கு என்றும் பணம் அட்வான்ஸ் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். அவர்கள் வாழ்க்கையில் படும் சிரமத்தை ஓரளவு தீர்க்க முடியும்.

இன்றையதினம் உணவு உற்பத்தித் துறையில், பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். நீர்ப்பாசன திட்டத்திற்கு ஒவ்வொரு ஜில்லாவிற்கும் 6,000 கிணறுகள் என்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு வந்தது. உடனடியாக 6,000 கிணறுகளுக்கும் மக்கள் தயாராக இருந்தார்கள். ஆனால் இன்றையதினம் அடிஷனல் அமௌண்ட் வரவில்லை. பணம் வந்தவுடன் கொடுக்கப்படும் என்கிறார்கள். அந்தப் பணத்தை சீக்கிரமாகக் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். 40, 50 ஏக்கர்களுக்கு ஒரு கிணறு என்று வெட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்வதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரையைப் பொருத்த வரையில், பெண்களுக்கு என்று ஒரு கல்லூரியை ஏற்படுத்தியிருப்பது சாலச்சிறந்தது. அதற்காக கனம் முதல் அமைச்சருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், தண்ணீர் இல்லாததால் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. அந்த நிலைமையைப் பரிசீலனை செய்து, 24 மணி நேரமும் தண்ணீர் கிடைக்கும்வகையில் நிலைமைகளை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன நல மானியத்தில் நிறையப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், டைரக்டர் இருக்கும் கட்டடத்திற்கு மாதம் ரூ. 7,000 வாடகை கொடுக்கிறார்கள். தோட்டத்திலே பாதி கிணறு என்பதுபோல, இந்தப்பணம் விரயமாகப் போகிறது. ஆகவே, டைரக்டர் ஆபீசுக்கு என்று தனியாக ஒரு கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்காலர்ஷிப் ரொம்பப் பேர்களுக்கு கொடுக்கிறோம். ஆனாலும் பல பேர்கள் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இன்னும் கொஞ்சம் அதிமாக ஒதுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, கடைசியாக, ஒரு ரூபாய்க்கு எட்டு படி அரிசி எங்கே என்கிறார்கள். எட்டு படி விற்றது, ஆனால், அன்றைக்கு வாங்க ஆள்கள் இல்லை. காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாக இருப்பதுபோல, முன்னேற்றம் இல்லை, முன்னேற்றம் இல்லை என்று இவர்கள் சொன்னாலும், ஜனங்கள் அரசாங்கத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள், என்று கூறி முடிக்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : கனம் சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, சர்க்கார் சார்பில் முதல் அமைச்சர் கோரியிருக்கும் ரூ. 21 கோடி துணை மானியங்கள் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நல்ல காரியங்களுக்காக துணை மானியம் கோரியிருப்பார்களேயானால், அதை நாம் வரவேற்றிருக்கலாம், அதை தடுக்கக்கூடாது. ஆனால் இப்பொழுது எந்தெந்த காரியங்களுக்காக துணை மானியங்கள் கோரியிருக்கிறார்கள் என்பதைப்பார்த்தால் வேடிக்கையும் வேதனையுமாக இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷன் புதிதாக திறக்க என்றும், பள்ளிக் கூடங்களுக்கு நாற்காலி மேசைகள் வாங்க என்றும், இன்னும் பல காரியங்களுக்காகவும் கேட்டிருக்கிறார்கள். நம் மாநிலத்தில் வரவு செலவு திட்டமே ஒரு மாத காலத்திற்கு முன்புதான் வந்தது. அப்பொழுது இதையும் சேர்த்திருக்கலாம். துணை மானியமே அவசியம் இல்லை. அதிலும் முதல் அமைச்சர் முக்கியமாகக் கோரியிருப்பது, ரிசர்வ் பாங்கியிலிருந்து தாற்காலிகமாக வாங்கிய தொகைகளுக்கு வட்டி கட்ட என்கிற

இனத்திற்காக, சர்க்கார் பணம் இல்லை என்றால், ஓவர்-ட்ராப்ட் வாங்கு
கிறார்கள். அப்படி வாங்கும்போது, அந்தப் பணத்திற்குக் வட்டி கட்ட
வேண்டும் என்று சொல்லி, அதை எதிர்பார்த்த வகையில், அப்படிப்பட்ட
தற்காலிக லோன்களுக்காக வட்டிகொடுக்க ரூ. 42 லட்சத்திற்குக் கேட்கி
றார்கள் என்று சொன்னால், உள்ளபடியே, இதைப் பார்க்கும்போது
ஆச்சரியமாக இருக்கிறது. நான் நினைப்பது தவறுதலாக இருந்தால்,
அருள்கூர்ந்து கனம் முதல் அமைச்சர் விளக்கம் கொடுக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மாதிரி 42 லட்சம் ரூபாய் துணை மானியத்தில் தற்காலிகக் கடன்
வாங்கியதற்காக வட்டி கொடுக்க நேர்ந்தது என்ற நிலைமை இந்த முறை
யில் தான் ஏற்பட்டிருக்குமென்று நினைக்கிறேன். இதற்கு முன்பு ஏற்
பட்டிருந்தால் அதை முதலமைச்சர் அவர்கள் திருத்திச் சொல்லலாம் என்ப
தையும் தெரிவித்துக்கொள்கிறேன். 42 லட்ச ரூபாய் தற்காலிகக் கடனுக்கு
மட்டும் வட்டி கொடுக்கிறோம் என்றால் சாதனைகளைப்பற்றி விரிவாக,
விளக்கமாகச் சொன்னால் அது லாபகரமாக இருக்கும். அம்மையார் அவர்
கள் காமாலைக் கண்ணன் என்றெல்லாம் சொன்னார்கள். ஹரிஜன்
ஸ்காலர்ஷிப்புக்கு ஒதுக்கிய பணம் போதவில்லை என்று சொன்னார்கள்.
இப்பொழுது 42 லட்ச ரூபாய் வட்டி கொடுக்கிறார்களே பின்னால் பில்
கொண்டுவந்து இதை பாஸ் செய்திருக்கலாம், அந்தப் பணத்தை அதற்குக்
கொடுத்திருக்கலாம் அல்லது பணத்தை மிச்சமாக்கியிருக்கலாம் என்று
சொல்லியிருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் சொல்லாமல் எது
எதையோ சொன்னார்கள். இதில் மாநகராட்சிக் குடி தண்ணீர்பற்றித்
திட்டம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 1964ஆம் ஆண்டில்
யுனைடெட் நேஷன்ஸைச் சேர்ந்தவர்கள் வந்து சர்வே செய்தார்கள்,
சென்னையைச் சுற்றியிருக்கின்ற அண்டர்கிரவுண்ட் வாட்டரைக் கொண்டு
வந்து 3 கோடி காலன் தண்ணீர் வரைக்கும் சென்னைக்குத் தரமுடியும்
என்று 1964-ல் சொன்னார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான்
சர்க்காரைக் கேட்கிறேன், இவ்வளவு பெரிய திட்டத்தைத் துணை மானியக்
கோரிக்கையில் ஏன் வைத்திருக்கிறீர்கள், ஏன் வரவு செலவுத் திட்டத்
திலேயே, பெரிய திட்டத்தை மாநகராட்சிக்குக் கொண்டுவந்து இருக்கிறோம்
என்று சொல்லியிருக்கக் கூடாது? நேற்று முன்தினம் நடைபெற்ற
மானியத்தின்மீது சென்னை குடித்தண்ணீர் வசதிக்கு சர்க்கார் பெரிய
திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது என்று உள்ளாட்சித் துறை அமைச்சர்
குறிப்பிடுவார் என்று எதிர்பார்த்தேன், ஏன் குறிப்பிட்டிருக்கக்கூடாது?
ஏன் குறிப்பிடவில்லை என்று கேட்டால் சட்டென்று எழுந்து ஏன் என்று
கேட்க என்ன தகுதியிருக்கிறது என்று கேட்கக்கூடும். இப்படி சில அவசரக்
காரர்கள் முதிர்ந்த முதலமைச்சர் இருக்கிறார் என்ற தைரியத்தில், தகுதி,
திறமைபற்றிப் பேசுகின்ற தகுதி இந்த அமைச்சரவையில் உள்ள அத்தனை
பேர்களுக்கும் இருப்பதாக எண்ணிவிடவேண்டாம். முதலமைச்சர் அவர்
கள் இருக்கிறார்கள் என்ற ஒரே தைரியத்தில் அவர்கள் அதிக, அதிகமாக
வார்த்தைகளைக் கொட்டிவிடுகிறார்கள். முதலமைச்சர் இருக்கிறார் என்ற
ஒரே ஒரு காரணத்திற்காகத் தகுதி பெற்றுவிட்டோம் என்ற தப்புக் கணக்குப்
போட வேண்டாம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதே
மன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் "செஞ்சிக் கோட்டை மீது ஏறியவன்
எல்லாம் ராஜாவாக ஆகமுடியுமா" என்று கேட்டார்கள். அதேபோல்
முதிர்ந்த முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக
எல்லோருக்கும் தைரியம் வந்துவிட்டதாக நினைத்துவிட வேண்டாம் என்ப
தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.
என்னுடைய மாவட்டத்தில் 34½ ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்திருக்
கிறார்கள். ஆனால் ஹோல்சேல் டீலர்கள் ரூ. 41 கொடுத்து வாங்குகிறார்கள்.
நான் இதைப்பற்றிப் பொது விவாதத்தின்போதுகூடச் சொன்னேன். நான்
குறிப்பிட்டுவிட்டேன் என்பதற்காகக் கவனிக்காமல் இருந்துவிட வேண்டாம்.
34½ ரூபாய் என்று சர்க்கார் நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறா
ர்கள். ஆனால் வியாபாரிகள் 41 ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள். அவர்

கள் அரிசியாகக் கொடுக்கும்பொழுது அதைவிட லாபம் அவர்களுக்கு வரு
கிறது. என்னுடைய குற்றச்சாட்டு சர்க்கார் மீது என்னவென்றால், சர்க்கார்
நெல்லை நிர்ணயித்த விலைக்கும், அரிசியை நிர்ணயித்த விலைக்கும் அதிக
வித்தியாசம் இருக்கிறது. லாபம் விவசாயிக்கு வரவில்லை. முதலாளிக்குப்
போகிறது, அதைத் தடுக்க வேண்டும். வாங்குபவனுக்குக் கிடைத்தால்கூட
பொறுத்துக்கொள்ளலாம், இடையிலே இருக்கின்ற தரகர்கள் அடித்துக்
கொண்டு போகிறார்கள். இதைப் போக்குவதற்கு வழி செய்யவேண்டும்.
இந்தச் சோதனைக் கூடங்கள் மாவட்டத்திற்கு மாவட்டம் ஏற்படுத்தி இருக்
கிறார்கள். ஒரே இடத்தில் இரண்டு சோதனைக் கூடங்கள் இருக்கின்றன.
இதைக் குறைக்கலாம். நான் சொல்லக்கூடிய உருப்படியான யோசனை
களை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை
எனக்கு இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டமும், வட ஆற்காடு மாவட்ட
மும் சந்திக்கின்ற இடத்தில், தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு சாவடி
யும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு சாவடியுமாக இரண்டு சாவடிகள்
வைத்திருக்கிறார்கள். இரண்டு சாவடிகள் இருப்பானேன்? ஒரே ஒரு
சாவடி போதாதா? நடப்பது ஒரே சர்க்கார், இதில் ஏன் ஒரே இடத்தில்
இரண்டு சாவடிகள் வேண்டும்? பஸ்ஸில் போனால் பார்க்கலாம், ஒரு
சாவடியில் இருப்பவன், அதுதான் அந்தச் சாவடியில் பார்த்துவிட்டானே
திறந்துவிடு என்று சொல்வான், அதேமாதிரி இந்தப் பக்கத்தில் இருப்பவ
னும், அவன் பார்த்துவிட்டானே, திறந்துவிடு என்று சொல்வான். ஆகவே
செக்போஸ்ட்கள் இரண்டு இருக்கக்கூடாது, ஒன்றுதான் இருக்கவேண்டும்.
ஒரு செக்போஸ்டுக்கு மூன்று ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், 3 பியூன்கள்
இருக்கிறார்கள். ஒரு செக்போஸ்டுக்கு 1,000 ரூபாய் செலவழிக்கப்படக்
கூடிய நிலை இருக்கிறது, ஆகவே இதைக் குறைத்துவிடவேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களைத் தணிக்கை செய்வதற்கு ஊழியர்கள் நிய
மிப்பதற்காக என்று தொகை கேட்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களில்
சீனியர் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர்ஸ் எல்லாம் சென்ட்ரல் பாங்கின் தலைவ
ருடைய கண்ட்ரோலில் இருக்கிறார்கள், அதை மாற்றுங்கள். ஊழல்கள்
கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படுவதற்கு முக்கியமான காரணமே இதுதான்.
சென்ற இடைத் தேர்தலின்போது கூட்டுறவுச் சங்கத் தலைவர் பணம்
எடுத்தார்கள், சீனியர் இன்ஸ்பெக்டர் அவருக்கு இடைத் தேர்தலின்போது
40 ஆயிரம் ரூபாய் பினாமிலோன் கொடுத்துவிட்டார். பணத்தை எடுத்துக்
கொண்டு பிறகு அது கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைக்கு வந்தது. அவ்வளவு
லோனும் பினாமியாகக் கொடுக்கப்பட்டது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.
ஆனால் அந்தத் தலைவரைக் கைதுசெய்யவில்லை. உடன் இருந்த சீனியர்
இன்ஸ்பெக்டரை சஸ்பெண்டு செய்திருக்கிறார்கள். அவரைக் கைதுசெய்ய
வில்லை, காரணம் அவர் காங்கிரஸ்காரர். ஆனால் ஏமாந்த இளிச்சவாயன்
இருக்கிறாரே சீனியர் இன்ஸ்பெக்டர் அவரை சஸ்பெண்டு செய்திருக்கிறார்
கள். அவர்கள் எல்லாம் பயந்துகொண்டு வேலை செய்கிறார்கள். அவர்
கள் சர்க்கார் ஊழியர்களாக இருந்தால் இந்தத் தவறுகள் ஏற்படாது.
தைரியமாகச் சோதனைபோட முடியும். சோதிக்கப்படுகிற இடத்திலே அந்தத்
தலைவர் சென்று என்ன, வேறு இடம் மாற்றுதல் தேவையா என்றும்,
என்ன, ஏதாவது செய்யவேண்டுமா என்றெல்லாம் மிரட்டுகிறார்கள்.
ஆகவே, சீனியர் இன்ஸ்பெக்டர்களைத் தயவுசெய்து சென்ட்ரல் பாங்குத்
தலைவரின் கண்ட்ரோல்களிலிருந்து விடுவியுங்கள். அவர்களைச் சர்க்கார் ஊழி
யர்களாக மாற்றுங்கள்.

இந்தக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டிகளைப்பற்றியும் சொல்ல
விரும்புகிறேன். இப்பொழுது 30 ஆலைகள் ஏற்படுத்தப்போவதாகச் சொல்
கிறார்கள். இந்த மில்கள் எல்லாம் புதிய மில்களாக வைக்கப்போகிறார்
களா அல்லது காண்ட்ராக்ட் எடுக்கப்போகிறார்களா என்ற விவரம் தெரிய
வில்லை, அதையும் சொன்னால் நல்லது. கோவையில் இரண்டு மில்களை
ஏற்படுத்தப்போகிறார்கள், ஒன்று கோவையிலும், மற்றொன்று பெருந்துறை
யிலும், வட ஆற்காட்டிலும், தென் ஆற்காட்டிலும் உள்ள நெல்லை
எடுத்துக் கொண்டுவந்து அங்கே கொண்டுபோய்த்தான் அரைக்க
வேண்டுமா? ஏன் இங்கேயே ஒரு ஆலையை ஏற்படுத்தக்கூடாது? மாவட்டத்

திற்கு இரண்டு ஆலைகள் வீதம் கொடுக்கப்போகிறார்களா அல்லது கோவை
யில் மட்டும்தான் இரண்டு ஆலைகளா என்பதையும் விளக்கினால் நல்லது.
அதோடு புதிய மில்களாகக் கட்டப்போகிறார்களா அல்லது வாடகைக்கு
எடுத்துக்கொள்ளப்போகிறார்களா என்ற விவரத்தையும் சொல்லவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். மார்க்கெட்டிங் சொஸைட்டிகளின் தலைவர்
களாக இருக்கின்றவர்கள், வியாபாரச் சங்கத்தின் தலைவராகவோ அல்லது
உறுப்பினராகவோ இருக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அப்படி
இருந்தும் தலைவராக இரண்டிலும் இருக்கிறார்கள். அதைப்பற்றிய ரிப்போர்ட்
அனுப்பினால் அது டி.ஆர்.க்கு வருகிறது, வழக்கம்போல அது
குப்பையில் போய் விழுகிறது. மார்க்கெட்டிங் சொஸைட்டிகளில் வியாபாரி
கள் தலைவர்களாக இருந்தால் அவர்கள் உயர்த்துவதற்கு முயற்சி செய்ய
மாட்டார்கள், அதை அழிப்பதற்குத்தான் முயற்சி செய்வார்கள். இந்த
அடிப்படை உண்மையைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். திருவண்ணா
மலையில், அண்ணாமலையார் நுகர்வோர் பண்டகசாலை என்று ஒன்று
இருக்கிறது. அதிலே தவறுகளைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதற்கு அர
சாங்கம் தயங்குவானேன்? அங்கே 4,500 ரூபாய் பணமோசடி நடந்திருக்
கிறது. ஆடிட்டில் இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது, அவர்களும் பண
மோசடி என்று சொல்லிவிட்டார்கள், கட்டவேண்டுமென்று சொல்லி
விட்டார்கள். கட்ட வேண்டிய ஆட்களையும் சொன்னார்கள். ஆனால் யார்
பொறுப்பாளியோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத்
தவறி விட்டார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காமல்
இருப்பதற்குக் காரணம் அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருப்பதுதான்
என்பது எல்லோருக்கும் தெரியும்.

இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பல சிறு அணைகளைக்
கட்ட வேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய
தொகுதியில் ஒரு சிறு அணைக்கட்டு, ஓலையாற்றில் நெய்காப்பு என்ற இடத்
தில் ஓர் அணை, அது எந்த இலாகாவின் கீழ் இருக்கிறது என்று மாவட்ட
கலெக்டரும், டெபுடி கலெக்டரும் நானும் சேர்ந்து கண்டு பிடிக்க
ஓராண்டுக் காலம் ஆகி, கடைசியில் அது ஃபுட் டிபார்ட்மென்டில், க்ரோ மோர்
ஃபுட் திட்டத்தின்கீழ் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அணையைக்
கட்டவேண்டுமென்று எத்தனையோ முறை எழுதியும் பதில் இடையாது.
இந்த அணையைக் கட்டாததால் ஏராளமான தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்
கிறது. உடனடியாக அதைக் கட்ட முயற்சி எடுக்கவேண்டும்.

கடைசியாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். தனியார் துறை மின்
சாரத்திற்குக் கடன் கொடுப்பதற்காக மானியம் கோரியிருக்கிறார்கள். நான்
சர்க்காரைக் கேட்டுக் கொள்வேன்—எப்போது? தனியார் துறையை எல்லாம்
சர்க்கார் துறையிலே எடுத்துக்கொள்ளப்போகிறார்கள்? தனியார் துறைக்கு
உதவி செய்ய மானியம் கோரியிருக்கிறார்கள். இவ்வாறு தனியார் துறையை
வளர்த்துக்கொண்டே போவது சரிதானா? முன்னால் பேசிய காங்கிரஸ்
உறுப்பினர்கள்கூட, தனியார் துறையில் மின்சார நிறுவனங்கள் இருக்கு
மிடங்களில் கிராமங்களுக்குச் சரியாக மின்சாரம் கிடைக்கவில்லை என்று
கூறினார்கள். இவ்வாறு பரவலாக இருக்கிற தனியார் துறையை எல்லாம்
சர்க்கார் துறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, இந்தத் துணை
மானிய விவாதத்தின்போது எடுத்துச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்
கெல்லாம் பதில் கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய
நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே,
இந்த உப மானியக் கோரிக்கைபற்றிய விவாதத்திலே, இவ்வளவு
அதிகத் தொகை, 21 கோடி ரூபாய் அளவுக்கு வேண்டுமா என்ற பிரச்
சினை முக்கியமான பிரச்சினை. 21 கோடி ரூபாய் என்று கணக்குக் காட்டு
கிறது; புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அதைப்பற்றிக் குறிப்பிடுவது
உப மானியக் கோரிக்கை விவாதத்திற்கு மிகவும் உகந்ததே. விவா
தத்தைத் துவக்கி வைத்த கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்

களும், முடித்து வைத்த கனம் உறுப்பினர் திரு. சண்முகம் அவர்களும்
குறிப்பிட்டார்கள். ஏன் பட்ஜெட்டில் எல்லாவற்றையும் எதிர்பார்த்து, வேண்
டிய செலவினங்களுக்கெல்லாம் ஏற்பாடு செய்யக்கூடாது என்று கேட்டார்
கள். கூடிய வரையில் பட்ஜெட் தயாரிக்கப்படுகிறபோது செலவினங்களை
எல்லாம் எதிர்பார்த்துத் தயாரிக்கப்படுகிறது. ஆனால், அந்த பட்ஜெட்
படி நிர்வாகத்தை நடத்துகிறபோது எதிர்பாராத செலவினங்கள் ஏற்படு
கின்றன. எப்பேர்ப்பட்ட செலவினங்கள் என்று கேட்டது நியாயமான
கேள்வி.

ஸ்காலர்ஷிப் அதிகம் வேண்டுமென்று பிற்பட்டவர்களும், ஹரிஜனங்
களும் கேட்கிறார்கள். ஒதுக்கி வைத்ததைவிட அதிகமாகக் கேட்கிறார்கள்.
இல்லை என்று மறுத்து விடுவதற்கு மனம் வருவதில்லை. எப்படியாவது
வேறு செலவைக் குறைத்தாவது ஸ்காலர்ஷிப் கேட்கிறவர்களுக்கெல்லாம்
கொடுக்க வேண்டுமென்ற முறையில் கொடுத்து வருகிறோம். அந்த வகை
யில் எதிர்பாராத செலவினங்கள் ஏற்படுகின்றன.

விவசாயத்திலே புதிய புதிய திட்டங்கள் "கிராஷ் புரோகிராம்" வரு
கின்றன. புதிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அப்படி வரும்போது
அதற்கு அதிகத் தொகை வேண்டியிருக்கிறது. அதை நாம் நிறைவேற்ற
வேண்டியிருக்கிறது.

இப்போது சென்னை நகரைச் சுற்றிக் குடிதண்ணீர் வசதியைப் பெருக்கு
வதற்காக உப மானியம் கோரப்பட்டிருப்பதை ஏன் பட்ஜெட்டிலேயே
கொண்டு வந்திருக்கக் கூடாது, இந்த பட்ஜெட்டிலாவது சேர்த்திருக்க
லாமே, எதற்காக உப மானியக் கோரிக்கை கொண்டு வர வேண்டும்
என்று கேட்டார்கள். முன்பே இதுபற்றி விளக்கப்பட்டிருக்கிறது. இந்தக்
குடி தண்ணீர்ப் பிரச்சினை சாதாரணமாக ஓடுகின்ற நீரை எடுத்துக்
கொள்வது ஒன்று; ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது மற்
றொன்று. அது எல்லாம் இல்லாமல் **"United Nations Development
Programme—Ground Water Project"**-ஆல் எடுத்துக்கொள்ளப்
பட்டது. அந்தக் குழுவினர்கள் வந்தார்கள், டெக்னிகலாக எவ்வளவு சாத்தி
யம், எகனாமிக்காக எவ்வளவு சாத்தியம் என்று ஆராய்ந்தார்கள். இந்த
வசதிகளை எவ்வாறு பெருக்குவது என்பதிலே **"Madras City and
its environs, Palar River Basin, Neiyveli and Cauvery Delta"**
ஆகியவைதான் தற்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.
பரிசீலனைக்குக் கொஞ்ச நாளாகும். இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்
வதற்கு 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியில் ஒப்பந்தம்
கையெழுத்துப் போடப்பட்டது. தமிழ்நாடு பூராவும் தற்போது எடுத்துக்
கொள்வது என்பதல்ல; நான் குறிப்பிட்ட பிராந்தியங்களைப் பொறுத்தது.
இந்த வரவு செலவுத் திட்டத்திலே இதை எடுத்துக் கொள்ளலாம் என்றால்
எப்ரல் மாதம் முதல் தேதிவரை காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கும்.
போன வரவு செலவுத் திட்டத்திலே இதை எதிர்பார்த்திருக்க முடியாது.
1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியில் முடிவு செய்யப்பட்டது. இதை
உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, கன்-
டின்ஜன்சி ஃபண்டில் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறை
யில் சப்ளிமெண்டரி எஸ்டிமேட் சமர்ப்பிக்கிறோம். இல்லையென்றால் எப்ரல்
மாதம் முதல் தேதி வரையில், அப்ரோப்ரியேஷன் பில் பாஸாகின்ற வரை
யில் ஒன்றும் செய்ய முடியாது. அதுதான் நான் விளக்க விரும்புவது.

சென்னை நகர குடிதண்ணீர்த் திட்டத்தைப்பற்றி ஏராளமான
குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் மீது சாட்டப்பட்டன. மந்திரிகள் மாற்றாந்
தாய் மனப்பான்மையில் நடந்து கொள்கிறார்கள், ஓரவஞ்சகம் காட்டப்படு
கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்
அவர்கள் விடை அளித்தார்கள். அது மேலும் கோபம். "தகுதி, பண்பு"
எல்லாம் அடிபட்டது. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மந்திரி
அவர்களுக்குக் கோபம் வந்ததற்குக் காரணம், இவ்வளவும் செய்கிறோமே,

[திரு. எம். பக்தவத்சலம்] [28th March 1966

செய்தாலும் அதற்குத் தகுந்த ஒத்துழைப்பு இல்லையே, ஒன்றுமே கொடுக்க வில்லை, நகரமன்றத்திடம் ஓரவஞ்சமாக நடக்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் குற்றம் சாட்டுகிறார்களே, நாம் இவ்வளவு செய்தும், இவ் வளவு தூரம் கொடுத்தும் அவர்கள் ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டு, இப்படி எல்லாம் கூறுகிறார்களே என்று அது பற்றித்தான் அமைச்சர் அவர் கள் குறிப்பிட்டார்கள். நான் ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்பு கிறேன்.

பூண்டி ரிசர்வாயரிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதில் லைன் பண்ணும் திட்டத்திற்காக மொத்தத்தில் 64 லட்சம் ரூபாய் ஆகிறது. பூண்டியிலிருந்து தாமரைப்பாக்கம் வந்து குர்த்தலை யாறு வழியாகத் தண்ணீர் வருகிறது. அந்தத் திட்டத்திற்காக 1962–63-ல் சாங்ஷன் செய்து பணம் ஒதுக்கினோம். அதோடு கடன் வேறு, கிராண்ட் வேறு கொடுக்கிறோம். 1963–64-ல் அரசாங்கக் கடன் 6½ லட்சம் கொடுத் தோம். கிராண்ட் 6½ லட்சம். மொத்தம் ரூ. 13 லட்சம் கொடுத்தோம். ஆனால் இதுவரை மொத்தத்தில் அவர்கள் செலவு செய்திருப்பது 1,11,000 ரூபாய்தான். 1964–65-ல் 21 லட்ச ரூபாய் கொடுத்தோம், ஆனால் மொத்தத்தில் செலவானது 2,68,000 ரூபாய்தான். திருப்பி 1964–65-ல் 14 லட்சம் இருந்ததற்கு 4,36,000 ரூபாய்தான் செலவழித்திருக்கிறார்கள். இவ்வாறு கொடுத்த பணத்தையே செலவு செய்யவில்லை.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், ஒதுக்கிய பணத்தை மாநகராட்சி செலவு செய்யவில்லை என்று கூறு கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவது—ஒதுக்கிய பணம் செலவு செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் டெக்னிகல் சாங்ஷன் இல்லாததன் காரணமாகச் செலவு செய்யப்படவில்லையா ? என்ன காரணம் என்று அரசாங்கத்திலிருந்து கேட்டார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆண்டுதோறும் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறோம். நான்கு நாட்களுக்கு முன்பு கூடக் கேட்டோம். முடிவாகச் சொல்லிவிட்டேன். பி.டபிள்யூ.டி. இலாகா மூலம் அரசாங்கம் எடுத்துச் செய்யும் என்று முடிவாகச் சொல்லிவிட்டேன். அதற்கு ஒரு குற்றச்சாட்டு அமைச்சர் மீது வரும், என் மீது வரும். கரண்ட் இயரில் 170 லட்சம் ரூபாய் வாட்டர் அண்டு டிரெய்னேஜ் ஸ்கீமுக்காக அலாட் செய்யப்பட்டது.

அவர்கள் செலவு செய்தது ரூ. 150 லட்சம்தான். ரூ. 20 லட்சம் மிச்சமா
2-30 p.m. கிறது. பணம் ஒதுக்காமல் இல்லை. (குறுக்கீடு). காரணம் என்னை விட அவர்களுக்காக வாதாடுகிற உறுப்பினருக்குத் தெரியும். ஒரு மணிக்குள் முடிக்க வேண்டும். கில்லட்டின் இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : நம் அரசாங்கத்தினால் 1963–64-ல் கல்விக்காக 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில் 27 கோடிதான் செலவாயிற்று. மூன்று கோடி செலவு செய்யப்படாமல் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அதே மாதிரி செலவு செய்யாமல் திருப்பிக்கொடுக் கப்பட்டதற்குக் காரணம் கொடுக்கப்பட்டதா, அதை விளக்குவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திட்டத்தின்கீழ் செலவைப் பார்த் தால், ஒன்றில் குறைந்தால் இன்னொன்றில் செலவு செய்கிறோம். இந்தப் பதினைந்து ஆண்டுகளில் பார்க்கலாம். 31-ம் தேதிக்குள்ளாக மூன்றா வது ஐந்தாண்டுத் திட்டம் முடிகிறது. இந்தப்பதினைந்து ஆண்டுகளில் ஏதாவது ஒரு வருடத்தில் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது அவ்வளவும், மொத்தத்தில் எல்லாத் திட்டங்களுக்காகவும் செலவு செய்யப்படவில்லை என்று ஒரு அங்கத்தினரும் சொல்ல முடியாது. எவ்வளவு ஒதுக்கி னோமோ அதற்கு மேலேயே செலவு செய்திருக்கிறோம். ஆனால் இங்கு கொடுக்கிற பணம் செலவாக வில்லை. (குறுக்கீடு). வாட்டர் சப்ளைக்கு என்று கொடுத்தால் ரோடிற்கு டைவர்ட் செய்ய முடியாது. எவ்வளவோ

28th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

சங்கடங்கள் இருக்கின்றன. நிர்வாகத்தைச் செய்கிறவர்கள் அதிகாரிகளைக் கூட மிரட்டுகிறார்கள். ஒரு தப்பு நடந்து அதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் போனால், நீ என் நடவடிக்கை எடுக்கிறாய் என்கிறார்கள். போலீஸிடம் கொடுக்காதே என்று மிரட்டுகிறார்கள். அந்தக் கட்சிக்காரன் என்று சொல்கிறார்கள். காங்கிரஸ்காரன் என்று சொன்னால் லஞ்சத்தைப் போக்கக் கூடாது என்று அர்த்தமா ? இப்படி அதிகாரிகளை மிரட்டுகிறார் கள். பொதுவாக, ஒரு நகரமன்றத்தைக் குற்றம் சாட்டும் வகையில் நான் பேசவில்லை. இந்த நிலையில்தான் அமைச்சர் அவர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் அன்று விவாதம் நடந்தது. ஆகவே அபாண்டமாக குற்றம் சொன்னால் அம்மாதிரிச் சொல்லத் தகுதியில்லை என்று சொன்னார் கள். தகுதி, தகுதி என்றெல்லாம் பேசலாம். பேசினால் என்ன பயன் ? உபமான்யம் எதற்காகக் கேட்கிறீர்கள், நல்ல விஷயமாக இருந்தால் சரி என்றார் திரு. சண்முகம் அவர்கள். எது நல்ல விஷயம், எது நல்ல விஷயம் இல்லை ? விஷம் கூட நமக்கு வேண்டியிருக்கிறது. இன்ஜெக்ஷன் மூலம் உடல் நிலைக்குத் தகுந்தபடி விஷம் கூடச் செலுத்துகிறார்கள்.

போலீஸ் ஸ்டேஷனுக்காகக் கொடுக்கிறோம் என்றார்கள். போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று பொது மக்கள் கேட்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். போலீஸ் ஸ்டேஷனில் மக்களுக்கு நம்பிக்கையிருக் கிறது. ஜூலை மாதத்தில் கேட்டால் எப்ரல் மாதம்வரை காத்திருங்கள் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லலாம் என்றால், அவசிய மாக வேண்டியிருக்கிறது என்று சொன்னால், எப்ரல் வரை காத்திருக்க முடியாது. பள்ளிகளில் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக் கிறது. ஆகவே மேஜை, நாற்காலிகள் வேண்டுமென்றால் எப்ரலில் பார்த்துக் கொள்ளலாம், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்பார்கள், ஆகவே, தரையில் உட்காருங்கள் என்று சொல்ல முடியுமா ? திரு. சண்முகம் கேட்பார், நான் என்ன பதில் சொல்வது, ஆகவே ஆசிரியர்கள் எப்ரல் வரை தரையில் உட்கார்ந்து கொள்ளட்டும் என்று சொல்ல முடியுமா ?

நாற்பத்திரண்டு லட்சம் ரூபாய் இன்ட்ரஸ்ட் எதற்காக என்று கேட்டார்கள். ப்ரொக்யூர்மெண்ட் செய்கிறோம். அதற்கு அவசியமிருக்கிறது. வியாபாரம் செய்யவில்லை. மிச்சமான நெல்லைக் கொள்முதல் செய்து, பற்றாக்குறை உள்ள இடங்களுக்குக் கொடுக்கவேண்டும். ஒரு சிறிய அளவு கேரளா விற்குக் கொடுக்கிறோம், கொஞ்சம் மைசூருக்குக் கொடுக்கிறோம். இல்லா தவர்களுக்குக் கொடுப்பதுதான் நம் உயர்ந்த பண்பு. இந்தப் பண்பை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். பட்டினி இருக்கிறவர்களுக்குக் கொஞ்சம் கொடுப்பதில் தப்பில்லை. நம் தேவையைப் பார்த்துவிட்டு, நமக்குள்ள விநியோகத்திற்கு வைத்துக்கொண்டு கொடுக்கிறோமே தவிர இங்கு பட்டினி கிடக்கச் செய்து கொடுக்கவில்லை. மார்ஜினல் சர்ப்ளஸ் எங்கே இருக்கிறது என்று பார்த்துக் கொள்முதல் செய்துதான் கொடுக்கவேண்டி யிருக்கிறது. அதற்குப் பணம் அட்வான்ஸ் செய்ய வேண்டியிருக்கிறது. வியாபாரிகள் அட்வான்ஸ் செய்வதில்லை. அரசாங்கம்தான் கொடுக்கிறது. ஆகவே, கடன் கேட்கவேண்டியிருக்கிறது. எவ்வளவு வட்டி என்று எதிர்பார்க்க முடியாது. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சில நடவடிக்கைகள் எடுக்கும்போது இந்த மாதிரி நிலைமை ஏற்படுகிறது. தவிர்க்கக் கூடாத வகையில் செலவு செய்ய அப்போதைக் கப்போது இந்த மன்றத்தின் அனுமதியைப் பெறுகிறோம். உபமான் யங்கள் அப்போதைக்கப்போது சமர்ப்பிக்கப்படுகின்றன. முதல் உபமான் யம், இரண்டாவது உபமான்யம் என்று அப்போதைக்கப்போது கொண்டு வருகிறோம். எல்லாவற்றையும் சேர்த்து வைத்துச் செய்வதில்லை. நெல், அரிசி இவற்றின் விலைபற்றி திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது விலையை உயர்த்தியிருக்கிறோம். மொத்தத்தில் உயர்த்தி யிருக்கிறோமே தவிர, ரீட்டெய்ல் ப்ரைஸை உயர்த்தவில்லை. விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டி ...தை உயர்த்தியிருக்கிறோம். நியாயமாகப்பார்த்தால் ரீட்டெய்ல் ப்ரைஸையும் ...ர்த்த வேண்டும். ஆனால் அப்படி உயர்த்தவில்லை. ஹோல்சேலில் ...ங்குவதற்கும், ரீடெய்லில் கொடுப்பதற்கும் அதிக மார்ஜின் இருப்ப

தாகச் சொன்னார்கள். இன்ஸென்டிவ் போனஸ் கொடுக்கிறோம். ஒரு
ஏக்கருக்கு மேல் மற்றவர்களுக்கு டார்கெட் ஃபிக்ஸ் செய்து பத்து மூட்டை
களுக்கு மேல் இரண்டு மூட்டை கொடுத்தால் அதற்கு இன்சென்டிவ்
போனஸ் கொடுக்கப்படுகிறது. அதோடு இந்த இரண்டு மூன்று ரூபாய்
அதிகமாக விலையும் கொடுக்கிறோம். ஒரு ஏக்கருக்குக்கீழ் உள்ளவர்களுக்கு
கம்பல்சரியில்லை என்றாலும், அவர்களும் விற்கவேண்டியிருக்கிறது.
அவர்கள் கொடுத்தால் இந்த விலை உயர்வு மாத்திரமல்ல, இன்சென்டிவ்
போனஸும் கொடுக்கிறோம். ஆனால் அதற்காக ரீட்டெய்ல் ப்ரைஸை
உயர்த்தவில்லை. மார்ஜின் அதிகமாக இல்லை. சோதனைக் கூடங்கள்
பற்றிச் சொன்னார்கள். தவறுதல்கள் நடக்கக் கூடாது, ப்ரொக்யூர்மெண்ட்
சீராக நடைபெற வேண்டுமென்றுதான் இதை வைத்திருக்கிறோம்.
ப்ரொக்யூர்மெண்ட் தீவிரமாக நடக்கும்போது, இதில் கண்டிப்பாக இருக்க
வேண்டும். என் காரையும் நிறுத்துகிறார்கள். மற்றவர்கள் காரை
நிறுத்துகிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது, என் காரையும்
நிறுத்துகிறார்கள். நானும் கூட சிறிது நேரம் நிற்கவேண்டி இருக்கிறது.
தீவிரமான ப்ரொக்யூர்மெண்ட் ஏப்ரல் 15-ம் தேதிக்குள் முடிந்து போய்
விடும் என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு தடைகள் எல்லாம்
நீங்கலாம் என்று நினைக்கிறேன்.

ரைஸ் மில்ஸ்பற்றிச் சொன்னார்கள், கோவைக்குக் கொடுக்கிறீர்களே
என்று. வட ஆற்காட்டிலும் ஏராளமாக இருக்கின்றன. கோவையில்
குறைவாகத்தான் இருக்கின்றன. வட ஆற்காட்டில் அதிகமாக இருக்
கின்றன. கோவையிலும் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். கேரளா
விற்கு அனுப்புவதாக இருந்தாலும் அரிசியாக அனுப்பலாம். இதை
யெல்லாம் இங்கு குத்திக் கொடுக்கலாம். தஞ்சாவூரில் ரைஸ் மில்ஸ்
போட்டிருக்கிறோம். எங்கெங்கு வேண்டி யிருக்கிறதோ அங்கே போடுவது
என்று இருக்கிறோம்.

மின்சாரத் துறையிலுள்ள ப்ரைவேட் லைசென்ஸீஸ்பற்றிச் சொன்
னார்கள். அது அந்த ஏரியாவில் அரசாங்கத்தைப் பொறுத்த
மட்டில் தொல்லை அளிக்கிறது. நானும் ஒப்புக் கொள்கிறேன்.
அரசாங்கம் நேரடியாக போர்ட் மூலம் விநியோகிக்கிற இடத்தில் நன்றாக
வேகமாக நடக்கிறது. அந்த வேகம் இதில் இல்லை. இது ஆங்காங்குள்ள
மக்களுக்கு ஒரு குறையாக இருக்கிறது. அதை நீக்க ஈடுபட்டிருக்கிறோம்.
தனிப்பட்டவர்கள் லைசென்ஸ் கொஞ்சம்தான் இருக்கிறது. உற்பத்தி
செய்கிறவர்கள் அரசாங்கம் அல்லது மின்சாரக் குழு. • விநியோகிக்கிற
வர்கள் தனியாக இருக்கக் கூடாது என்று சட்டம் செய்திருக்கிறோம். பல
நிறுவனங்களை எடுத்திருக்கிறோம். இன்னும சில இருக்கின்றன.
அதை எடுத்துக் கொள்வது என்பதுதான் அரசாங்கத்தின்
நோக்கம். அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளும்போது நாம்
காம்பென்சேஷன் கொடுக்கவேண்டும். முக்கியமாக இதற்குப்
போதுமான பணம் நம்மிடம் வேண்டும். அதே நேரத்தில் பல
புதிய மின்சாரத் திட்டங்களையும் நாம் நிறைவேற்ற வேண்டும்.
அதையும் நிறுவி வருகிறோம். அதனால்தான் கம்பெனிகளிடமிருந்து
எடுத்துக்கொள்வதில் காலதாமதமாகிறது, வேறு ஒன்றுமில்லை. பின்னால்
பேசிய திரு. ஜெயராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சை ஜில்லாவில்
வடிமுனைக் குழாய் திட்டம் எடுத்துக்கொண்டிருக்கிறோம், இதற்கெல்லாம்
மின்சார இணைப்பு மிகவும் தேவையாக இருக்கிறது, அப்படியிருந்தும்
இணைப்புக் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள், அதுவும் உண்மைதான்,
சில இடங்களில் கம்பெனிகள்தான் இணைப்புக் கொடுக்க வேண்டி
யிருக்கிறது, இவ்விதமான இடங்களில் சீக்கிரமாக இணைப்புக் கொடுக்க
வேண்டும் என்பதற்காகத்தான் அவர்களுக்கு நாம் கடன் உதவி செய்து
கொடுக்கிறோம். அந்தக் கடனை நாம் நிச்சயமாக எடுத்துக்கொள்வோம்.
அவர்களுடைய கம்பெனிகளை எடுத்துக் கொள்ளும்போது, இதைக் கணக்கில்
எடுத்துக்கொள்வோம். இப்போது கொடுப்பது, காம்பன்ஸேஷனுக்கு
அட்வான்ஸ் கொடுப்பதுபோல் எடுத்துக் கொள்ளலாம். இரா[illegible]

சீக்கிரமாக மின்சாரம் கொடுக்க வேண்டும், அதற்கு அவர்களுக்குப் பண
உதவி செய்கிறோம். ஆகவே இதில் எந்தவிதமான தவறும் இல்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, விலை கட்டுப்படியாகக் கூடிய விதத்தில் இல்லை என்று
கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள்.
அவர்களோ தமிழாசிரியர், புலவர் அவர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுப்பது
மட்டுமல்ல, கணக்குச் சொல்லிக் கொடுக்கவும் தெரியும், நானும் கணக்குக்
கற்றுக்கொண்ட மாணவன்தான், கணக்கும் ஓரளவுக்குத் தெரியும்.
அவர்கள் தமிழ்ப் புலவர், அவர்களுக்குக் கணக்கும் சொல்லிக் கொடுக்க
முடியும் என்பதைத் தெளிவாக்கினார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நான் தமிழ் படித்
தவன், எனக்குக் கணக்கும் சொல்லிக் கொடுக்கத் தெரியும் என்று
அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு ஆசிரியத் தொழில்
தெரியும் என்றிருந்தாலும், விவசாயத்தைப்பற்றி நன்றாகத் தெரியும்,
சொந்தமாகவே விவசாயம் செய்யக் கூடியவன். விவசாய நுணுக்கங்கள்
அத்தனையும் நான் தெரிந்தவன். ஆகவே நான் கொடுத்தது நல்ல
கணக்குத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நானும் அதைத்தான் சொல்ல
வந்தேன். நல்ல தமிழ் ஆசிரியர், தமிழ் அறிஞர், தமிழ் புலவர்,
அவர்களுக்கு விவசாயமும் தெரியும், அதோடு கணக்கும் தெரியும் என்று
தான் சொன்னேன். ஆனால் விவசாய வருமான வரி போடும்போது,
விவசாயிகளுக்கு எங்கே கணக்கு வைத்துக் கொள்ளத் தெரியும் என்று
அப்போது கேட்கப்பட்டது, அப்படியல்ல என்பதை அவர்கள் நிரூபித்துக்
காட்டினார்கள். நானும் கணக்கு மாணவனாக இருந்திருக்கிறேன். இப்போது
மாணவன் என்ற கணக்கில் எடுத்துக் கொள்ளலாம், நல்ல மார்க்
வாங்கியிருக்கிறேன். ஏட்டில் வேண்டுமென்றால் கணக்கைப் போட்டுக்
கொள்ளலாம். ஆனால் நடை முறைக்குச் சரியாக இருக்க வேண்டும்.
எனக்கும் விவசாயத்தைப்பற்றித் தெரியும். கனம் புலவர் கோவிந்தன்
அவர்கள் வேண்டுமென்றால் எனக்கு விவசாயத்தைப்பற்றி அடியோடு
தெரியாது என்று சொல்லக்கூடும். அதை நான் முற்றிலும் ஏற்றுக்
கொள்ள முடியாது. அவர்களுக்குத் தெரிந்த அளவுக்கு எனக்கு விவசா
யத்தைப்பற்றித் தெரியாவிட்டாலும் ஓரளவுக்குத் தெரியும். எனக்குத்
தெரிவது மட்டுமல்ல, பல பெரிய விவசாயிகளிடத்திலும் கேட்டிருக்கிறேன்.
அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள
வர்களைக் கேட்டிருக்கிறேன் ; தஞ்சாவூரிலுள்ளவர்களையும் கேட்டிருக்
கிறேன். கோயம்புத்தூரில் மிக உற்சாகத்தோடு, உறுதியாக விவசாயத்
திற்கு என்று பாடுபடக் கூடிய ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனக்கு
விவசாயத்தைப்பற்றி அதிகம் தெரியும் என்று நினைத்துக்கொண்டிருக்கக்
கூடியவர்—அவருக்கு நிறையத் தெரியும் என்று நானும் கருதுகின்றேன்
—அவர்களிடம் விவசாயத்தைப்பற்றிய கணக்கை எல்லாம் கொடுத்தால்,
இப்போதுள்ள விலை கட்டுப்படியாகக்கூடிய அளவில்தான் இருக்கிறது
என்று சொல்லியிருக்கிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : நம்முடைய முதலமைச்சர் அவர்கள்
சொல்வதைக் கேட்டால், இந்த மன்றத்திலுள்ள ஆளும் கட்சியிலுள்ள
விவசாய அங்கத்தினர்கள் இப்போது கொடுக்கப்படும் விலை கட்டுப்படி
யாகத்தான் இருக்கிறது என்று ஒப்புக் கொள்கிறார்கள் என்று அமைச்சர்
அவர்கள் சொல்லுகிறார்களா ? . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த விவசாயியும் அவ்விதம்
சொல்லமாட்டார். இந்த மன்றத்தில் மட்டும் அல்ல, வெளியிலும்
அப்படித்தான். இன்னும் கூடுதல் கொடுத்தாலும் சரி என்றுதான்
சொல்வார்கள். நானும்தான் சொல்வேன். ஆனால் வாங்கிச் சாப்பிடு
கிறவர்களுடைய நிலைமை என்ன என்பதையும் பார்க்கவேண்டும். ஏரான
மான பேர்கள் வாங்கிச் சாப்பிடுகின்றவர்களாக இருக்கிறார்கள். மூன்றுகைக்

[திரு. எம். பக்தவத்சலம்] [28th March 1966

கோடிப் பேர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள் என்றால், ஏறக்குறைய 50, 60 லட்சம் பேர்கள்தான் பட்டாதார்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் வாங்கிச் சாப்பிடுகின்றவர்கள்தான். அவர்களுடைய நிலைமையையும் நாம் பார்க்க வேண்டும். அதற்காக விவசாயிகளுக்கும் கட்டுபடியாக இருக்க வேண்டும். அதையும் நாம் மறந்துவிடவில்லை. விவசாயிகளுக்கு உற்சாகம் ஏற்படக்கூடிய வகையில், விலை அமைந்திருக்க வேண்டும். அந்த முறையில்தான் நெல்லுக்குக் கொடுக்கப்படும் விலையோடு, இன்ஸென்டிவ் போனஸும் கொடுக்கிறோம். பொதுவாக விவசாயிகளும் இதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் விவசாயிகளுக்கு இப்போது கொடுக்கப்படும் விலை கட்டுபடியாகவில்லை என்று சொல்வது சரியல்ல. அது உண்மைக்குப் புறம்பானது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் நல்ல பலன் அடைய வேண்டும் என்ற எண்ணத்தால்தான் அரசாங்கத்திலிருந்து பல உதவிகளைச் செய்கிறோம், மான்யங்கள் கொடுக்கிறோம், கடன் வசதி கொடுக்கிறோம். விவசாயிகளுக்கு என்னென்ன வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க முடியுமோ, அவைகளை எல்லாம் செய்து கொடுக்கிறோம், மேலும் செய்து கொடுப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். அரசாங்கத்தின் முதல் கவனம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் விலை கட்டுபடியாக இருக்கவேண்டும் என்பது. இரண்டாவது கவனம், விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் விலை நியாயமாக இருக்க வேண்டும் என்பது. மற்றப் பொருட்களின் விலைகள் எல்லாம் ஏறிக் கொண்டு போகின்றன என்றால், முக்கியமான தேவையாக இருக்கின்ற அரிசியின் விலை கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. அரிசி உற்பத்தி செய்கின்றவர்களுக்கு மட்டுமல்ல, வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுக்கும் கட்டுபடியாகின்ற விலை இருக்க வேண்டும் என்ற முறையில் மேலும் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ, அவற்றில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அரசாங்கம் மேலும் என்னென்ன முறையில் கவனம் செலுத்தி வருகிறது என்பதை நாளைக்கு நான் தெரிவிப்பேன், அதிலிருந்து கனம் உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளலாம். ஆகவே அரசாங்கம் எப்போதும் விவசாயிகள் விஷயத்தில் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கத்தின் கொள்கையைப் பொறுத்தவரையில், உற்பத்தியாளர்களிடத்தில் மிச்சம் இருப்பதை வாங்கி பற்றாக்குறையாக இருக்கின்ற இடங்களில் கொடுப்பது என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. தமிழ்நாட்டில் பல மாவட்டங்கள் பற்றாக்குறை மாவட்டங்களாக இருக்கின்றன. அதையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துத்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

விஜிலென்ஸ் கமிஷனைப்பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். மத்திய அரசாங்கம் ஹைகோர்ட் நீதிபதியைத்தான் போடவேண்டும் என்று சொல்லவில்லை. இப் பதவிக்கு நியமிக்கப்படுபவர் வேறு ஒன்றும் எதிர்பாராதவராக இருக்க வேண்டும் என்பதுதான். அந்த முறையில் ரிட்டயர்ட் சீப்-செக்ரட்டரி, ரிட்டயர்ட் நீதிபதி இவர்களைப் போடலாம் என்று சொல்லப்பட்டது. அந்த முறையில் தான் ரிட்டயர்ட் சீப்-செக்ரட்டரியைப் போட்டோம். ஆகவே, இதில் எந்த விதமான தவறும் இல்லை. இப்போது அரசாங்கம் போட்டிருக்கின்றவர் இந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெருக்கடி வந்த பிறகுதான் இந்த அரசாங்கம் விவசாயத்தில் கவனம் செலுத்த முன்வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அது சரியல்ல. இதைப்பற்றிச் சொன்ன சேலம் ஜில்லாவிலிருந்து வரும் கனம் அங்கத்தினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். மேட்டூர் ரிசர்வாயர் தஞ்சாவூருக்குத்தான் என்று சொல்லப்பட்டிருந்தது. அதில் மிச்சம் இருக்கும் தண்ணீரை எடுத்து, ஹை லெவல் ஸ்லுயிஸ் மூலமாக கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட திருச்செங்கோடுக்கே தண்ணீர் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த அரசாங்கம்

28th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

தொடர்ந்து 15 ஆண்டுகளாக—திட்ட காலத்தில் இருந்தே—விவசாயத்தில் கவனம் செலுத்திக் கொண்டுதான் இருக்கிறது. அதன் பயனாக நல்ல பலனும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பாராத வகையில் பருவ மழை தவறுகின்ற நேரங்களில் சில கோளாறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆகவே இதில் மீண்டும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதில் விவசாயிகளுடைய பரிபூரண ஒத்துழைப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது, அதன் மூலமாக நாம் அபிவிருத்தி அடைந்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் அவர்கள், உருளைக் கிழங்கைப்பற்றிச் சொன்னார்கள். உத்திரப் பிரதேசத்திலிருந்து பருப்பை வரவழைத்தோம். அதே போன்று உருளைக்கிழங்கு விலை குறைவான விலைக்குக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள், அதனால் வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அதே நேரத்தில் இங்கே உற்பத்தி செய்கின்ற வர்களுக்குப் பாதகம் ஏற்படும்படியான அளவில் இந்த அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை, அவ்விதம் ஒன்றும் செய்யாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, கனம் அங்கத்தினர்கள் பலர் வரவு செலவுத் திட்ட விவா தத்தில் பேசுவது போல் பல குறைகளைத் தெரிவித்தார்கள். அவற்றைப் பற்றி யெல்லாம் அரசாங்கம் அவ்வப்போது கவனம் செலுத்தும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : சென்னையிலுள்ள மாநகராட்சிமன்றத்தில் ஏற்படுகின்ற செலவினங்களின் பொறுப்பை அவர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member can raise it on another occasion.

SRI K. A. MATHIALAGAN : Sir, this pertains to the discussion before the House.

MR. DEPUTY SPEAKER : The discussion is over. Now the Hon. Chief Minister will move the Demands for Further Grants.

VIII.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE FOR 1965-66.

A—EXPENDITURE ON REVENUE ACCOUNT.

Demand No. I—Land Revenue Department.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 17,31,900 under Demand No. I—Land Revenue Department.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. II—Motor Vehicles Acts—Administration.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 3,10,500 under Demand No. II—Motor Vehicles Acts—Administration.'

The Demand was put and carried and the Grant was made.

[28th March 1966

Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, On the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 15,43,100 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration.

The Demand was put and carried and the Grant was made.

Demand No. V—Registration department.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 8,06,900 under Demand No. V—Registration Department.

The Demand was put and carried and the Grant was made.

Demand No. VI—State Legislature.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 76,600 under Demand No. VI—State Legislature.

The Demand was put and carried and the Grant was made.

Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 48,54,600 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. X—Administration of Justice.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,04,400 under Demand No. X—Administration of Justice.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XI—Jails.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 85,89,700 under Demand XI—Jails.'

The Demand was put and carried and the Grant was made.

28th March 1966]

Demand No. XII—Police.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,46,59,500 under Demand No. XII—Police.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XIII—Education.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,58,98,900 under Demand No. XIII—Education.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XIV—Medical.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,08,12,500 under Demand No. XIV—Medical.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XV—Public Health.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 2,10,400 under Demand No. XV—Public Health.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XVI—Agriculture.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Government, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 75,64,600 under Demand No. XVI—Agriculture.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XVII—Fisheries.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 17,32,500 under Demand No. XVII—Fisheries.'

The Demand was put and carried and the Grant was made.

[28th March 1966

Demand No. XVIII—Animal Husbandry.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 46,82,100 under Demand No. XVIII—Animal Husbandry.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XIX--Co-operation.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 45,95,500 under Demand No. XIX—Co-operation.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XX—Industries.

THE HON. SRI M. BHAKATAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand No. XX—Industries.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXI—Cinchona.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 2,98,000 under Demand No. XXI—Cinchona.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXIII—Community Development Projects, etc.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 85,00,200 under Demand No. XXIII—Community Development Projects, etc.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXIV—Labour including Factories.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 89,80,500 under Demand No. XXIV—Labour including Factories.'

The Demand was put and carried and the Grant was made.

28th March 1966]

Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 48,38,000 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXVI—Irrigation.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 44,64,400 under Demand No. XXVI—Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXVII—Public Works—Works.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,08,51,700 under Demand No. XXVII—Public Works—Works.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 56,23,000 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXIX—Public Works—Grants-in-aid.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,98,700 under Demand No. XXIX—Public Works—Grants-in-aid.'

The Demand was put and carried and the Grant was made.

[28th March 1966

Demand No. XXX—Road Transport Schemes.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 31,75,900 under Demand No. XXX—Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXXI—Famine Relief.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

1-00 p.m. 'That the Government be granted a further sum not exceeding Rs. 29,93,500 under Demand No. XXXI—Famine Relief.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXXIII—Miscellaneous.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,800 under Demand No. XXXIII—Miscellaneous.'

SRI RAMA. ARANGANNAL: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, "சட்ட பூர்வமான பங்கீட்டு முறை அமலில் இருக்கும் சென்னை மாநகரில் உள்ள உணவு விடுதிகளுக்கு கண்ட்ரோல் விலையில் உணவுப் பொருள்களைத் தந்ததற்குப் பின்பும் உணவுப் பண்டங்களின் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தத் தவறியதைச் சுட்டிக்காட்ட" என்ற என்னுடைய வெட்டுப் பிரேரேபணையைப் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 1,800 under Demand No XXXIII—Miscellaneous be reduced by Re. 1.'

The cut-motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,800 under Demand No. XXXIII—Miscellaneous.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXXIV—Stationery and Printing.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. XXXIV—Stationery and Printing.'

The Demand was put and carried and the Grant was made.

28th March 1966]

Demand No. XXXV—Forest Department.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 16,48,700 under Demand No. XXXV—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XXXVI—Other Miscellaneous Compensations and Assignments.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 41,26,300 under Demand No. XXXVI—Other Miscellaneous Compensations and Assignments.'

The Demand was put and carried and the Grant was made.

B. EXPENDITURE ON CAPITAL ACCOUNT.

Demand No. XXXIX—Capital Outlay on Agriculture.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 26,25,500 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XL—Capital Outlay on Consumers Co-operatives.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 5,90,500 under Demand No. XL—Capital Outlay on Consumers Co-operatives.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XLI—Capital Outlay on Industrial Development

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 76,80,800 under Demand No. XLI—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XLII—Capital Outlay on Irrigation.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 21,15,700 under Demand No. XLII—Capital Outlay on Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XLIII—Capital Outlay on Public Works.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 69,17,200 under Demand No. XLIII—Capital Outlay on Public Works.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XLIV—Capital Outlay on Road Transport Schemes.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 57,500 under Demand No. XLIV—Capital Outlay on Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XLVI—Commuted Value of Pensions.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 2,15,500 under Demand No. XLVI—Commuted Value of Pensions.'

The Demand was put and carried and the Grant was made.

Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 400, under Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading.'

The Demand was put and carried and the Grant was made.

C. EXPENDITURE ON LOAN ACCOUNT.

Demand No. XLVIII—Loans and Advances by the State Government.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 3,08,15,600 under Demand No. XLVIII—Loans and Advances by the State Government.'

The Demand was put and carried and the Grant was made.

V.—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS APPROPRIATION (No. 2) BILL, 1966.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Governor has given his reccommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Appropriation (No. 2) Bill, 1966.

VI.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1966.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 2) Bill, 1966.'

MR. DEPUTY SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 2) Bill, 1966.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

V.—ANNOUNCEMENTS—*cont.*

(3) BUSINESS OF THE HOUSE.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that as decided by the Business Advisory Committee at its meeting to-day, the Assembly will adjourn on the 30th March 1966 after transaction of the business set for that day. The following are the items of business set for 29th and 30th March 1966 :—

29th March 1966—Consideration and passing of Appropriation Bills.

30th March 1966—(1) Consideration and passing of the following officials Bills :—

(i) The Madras Co-operative Societies (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 2 of 1966).

[Mr. Deputy Speaker] [28th March 1966

(ii) The Madras Electricity Duty (Amendment) Bill, 1966 (Bill introduced today).

(iii) The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 (to be introduced tomorrow).

(2) Other Government Resolutions.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

1-07 p.m. The House then adjourned.

IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 178. *Notification issued with G.O. Ms. No. 176, Home, dated the 22nd January 1966, making an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, published with the Home Department Notification S.R.O. No. A-291 of 1960, dated the 18th August 1960, at pages 3 to 121 of the Rules Supplemnet to Part V of the* Fort St. George Gazette, *dated the 14th September 1960 as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*

B. Reports, Notifications and other papers.

† 81. *Note on Demand No. XXIII—1966-67—Community Development (Tamil).*

† 82. *Financial Supplement to Demand under Community Development (Tamil).*

* Laid on the Table of the House on 26th March 1966.

† Despatched to Members on 25th March 1966.

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 452, at page 206.]

Statement showing the names of routes, number of express buses, distance of routes, permitted mileage, seating capacity and rates of fares in respect of express buses run by private operators in Tiruchirappalli and Salem districts.

Name of route. (1)	Number of express buses. (2)	Distance of route. (3) K.M.	Daily permitted mileage. (4) K.M.	Permitted seating capacity. (5)	Approved rate of fare. (6)
Chidambaram—Salem (via) Neyveli, Vridhachalam and Athur.	3	180·5	361	43 (for 1 bus) 45 Do. 39 Do.	4·5 paise per K.M. Do. Do.
Cuddalore to Tiruchirappalli (via) Vridhachalam and Tholudur.	2	186·7	373·4	43 (for 1 bus) 44 Do.	4·5 paise per K.M. Do.
Cuddalore to Salem (via) Panruti, Ulundurpet, Kallakurichi and Athur.	1	193·1	386·2	44	4·5 paise per K.M.
Salem to Krishnagiri (via) Omalur, Dharmapuri, Karimangalam and Kaveripatnam.	2	115·9	231·8	48 (for 1 bus) 55 Do.	3·5 paise per K.M. 2·75 paise per K.M. (enhanced rate of 3·5 paise per K.M. permitted.)
Salem to Tiruchirappalli (via) Namakkal.	1	222·2	444·4	48	3·5 paise per K.M.

Name of route.	Number of express buses.	Distance of route.	Daily permitted milege.	Permitted seating capacity.	Approved rate of fare.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		K. M.	K. M.		
Salem to Tiruchirappalli (via) Rasipuram and Namakkal.	1	222·2	444·4	61	3·25 paise per K.M.
Salem to Cuddalore (via) Karipatti, Valapadi, Athur, Thalaivasal, Kallakurichi and Ulundurpet.	1	310·7	621·4	55	Do.
Coimbatore to Salem (via) Avanashi, Perundurai, Erode, Bhavani and Sankari.	2	177	354	51 (for 1 bus) 45 Do.	3·5 paise per K.M. Do.
Tiruchirappalli to Tirupathur (via) Pudukottai and Tirumayam.	1	96·6	193·2	45	3 paise per K.M.
Tiruchirappalli to Salem (via) Namakkal, Thottiam and Musiri.	2	133·6	400·8	50 (for both buses)	3·5 paise per K.M.
Madurai to Salem (via) Dindigul, Pallapatti, Aravankurichi, Karur, Pugulur Bridge, Paramathi, Namakkal and Rasipuram.	2	239·9	239·9	45 Do.	Do.
Salem to Madurai (via) Rasipuram, Namakkal, Velur, Karur, Aravankurichi, Pallapatti and Dindigul.	2	239·9	239·9	45 Do.	Do.
Salem to Hosur (via) Omalur, Dharmapuri and Krishnagiri on trunk road.	1	165·8	165·8	48	Do.
Tiruvannamalai to Tiruchirappalli (via) Tirukoilur, Madapet, Ulundurpet, Veppur, Thozhudur, Perambalur and Samayapuram.	2	209·3	418·6	51 (for both buses)	3 paise per K.M.
Total ..	23				

திருச்சிராப்பள்ளி, சேலம் மாவட்டங்களில் தனியார் துறையில் ஓடுகின்ற எக்ஸ்பிரஸ் பஸ்களின் வழித் தடம் (Routes), எக்ஸ்பிரஸ் பஸ்களின் எண்ணிக்கை, வழிகளின் தொலைவு, அனுமதிக்கப்பட்ட மைல் அளவு, இருக்கைகளின் எண்ணிக்கை, பஸ் கட்டணங்களின் விகிதம் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை.

பஸ் செல்லும் வழி.	எக்ஸ்பிரஸ் பஸ்களின் எண்ணிக்கை.	பஸ் வழியின் தொலைவு.	அன்றாடம் அனுமதிக்கப் பட்ட மைல்கள்.	அனுமதிக்கப்பட்ட இருக்கைகளின் எண்ணிக்கை.		அங்கீகரிக்கப்பட்ட கட்டண விகிதம்.
(1)	(2)	(3)	(4)	(5)		(6)
		கி. மீ.	கி. மீ.			
சிதம்பரம்—சேலம். நெய்வேலி, விருத்தாசலம்—ஆத்தூர் (வழியாக).	3	180·5	361	43	(ஒரு பஸ்ஸுக்கு)	ஒரு கிலோமீட்டருக்கு 4·5 காசுகள்.
				45	ஷை	ஷை
				39	ஷை	ஷை
கடலூர்—திருச்சிராப்பள்ளி. விருத்தாசலம், தொழுதூர் (வழியாக).	2	186·7	373·4	43	ஷை	ஷை
				44	ஷை	ஷை
கடலூர்—சேலம். பண்ருட்டி, உளுந்தூர் பேட்டை, கள்ளக்குறிச்சி, ஆத்தூர் (வழியாக).	1	193·1	386·2	44		ஷை
சேலம்—கிருஷ்ணகிரி. ஓமலூர், தர்மபுரி. காரிமங்கலம், காவேரிப்பட்டணம் (வழியாக).	2	115·9	231·8	48	(ஒரு பஸ்ஸுக்கு)	ஒரு கிலோ மீட்டருக்கு 3·5 காசுகள்.
				55	ஷை	ஒரு கிலோ மீட்டருக்கு 2.75 காசுகள். (ஒரு கிலோ மீட்டருக்கு 3·5 காசுகள் விகிதம் உயர்த்த அனுமதிக்கப் பட்டுள்ளது.)
சேலம்—திருச்சிராப்பள்ளி. நாமக்கல் (வழியாக).	1	222·2	444·4	48		ஒரு கிலோ மீட்டருக்கு 3·5 காசுகள்.
சேலம்—திருச்சிராப்பள்ளி. இராசிபுரம், நாமக்கல் (வழியாக).	1	222·2	444·4	61		ஒரு கிலோ மீட்டருக்கு 3.25 காசுகள்.
சேலம்—கடலூர். காரிப்பட்டி, வாழைப்பாடி, ஆத்தூர், தலைவாசல், கள்ளக்குறிச்சி, உளுந்தூர் பேட்டை (வழியாக).	1	310.7	621.4	55		ஷை
கோயம்புத்தூர்—சேலம். அவிநாசி, பெருந்துறை, ஈரோடு, பவானி, சங்கரி (வழியாக).	2	177	354	51	(ஒரு பஸ்ஸுக்கு)	ஒரு கிலோ மீட்டருக்கு 3·5 காசுகள்.
				45	ஷை	ஷை
திருச்சி—திருப்பத்தூர். புதுக்கோட்டை, திருமயம் (வழியாக).	1	96·6	193·2	45	ஷை	ஒரு கிலோ மீட்டருக்கு 3 காசுகள்.
திருச்சி—சேலம். நாமக்கல், தொட்டியம், முசிறி (வழியாக).	2	133·6	400·8	50	(இரண்டு பஸ் களுக்கும்)	ஒரு கிலோ மீட்டருக்கு 3·5 காசுகள்.
மதுரை—சேலம். திண்டுக்கல், பள்ளப்பட்டி, அரவங்குறிச்சி, கரூர், புகலூர் பாலம், பரமத்தி, நாமக்கல், ராசிபுரம் (வழியாக).	2	239·9	239·9	45	ஷை	ஷை
சேலம்—மதுரை. இராசிபுரம், நாமக்கல், வேலூர், கரூர், அரவங்குறிச்சி, பள்ளபட்டி, திண்டுக்கல் (வழியாக).	2	239·9	239·9	45	(இரண்டு பஸ் களுக்கும்)	ஒரு கிலோ மீட்டருக்கு 3·5 காசுகள்.
சேலம்—ஹோசூர். ஓமலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி (நெடுஞ்சாலை வழியாக).	1	165·8	165·8	48		ஷை

பஸ் செல்லும் வழி.	எக்ஸ்பிரஸ் பஸ்களின் எண்ணிக்கை.	பஸ் வழியின் தொலைவு.	அன்றாடம் அனுமதிக்கப்பட்ட மைல்கள்.	அனுமதிக்கப்பட்ட இருக்கைகளின் எண்ணிக்கை.	அங்கீகரிக்கப்பட்ட கட்டண விகிதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		கி. மீ.	கி. மீ.		
திருவண்ணாமலை—திருச்சி. திருக்கோயிலூர், மடப்பட்டு, உளுந்தூர்பேட்டை, வேப்பூர், தொழுதூர், பெரம்பலூர், சமயபுரம் (வழியாக).	2	209·3	418·6	51 (இரண்டு பஸ்களுக்கும்)	ஒரு கிலோ மீட்டருக்கு 3 காசுகள்.
மொத்தம் ..	23				

APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 153 at page 207.]

Terms of reciprocal arrangement between the Governments of Madras and Kerala on the division of permits of stage carriages on the inter-State routes to be implemented from 1st April 1966.

1. The principle for the division of permits of stage carriages on the existing inter-State routes between Kerala and Madras States shall be reciprocity on the basis of mileage covered in the respective States with regard to each routes, without prejudice to the existing position. Any imbalance shall be set right without disturbing the existing arrangement by grant of additional permits or additional trips, as the case may be. In regard to variation of these routes, it will be decided on the merits of each case with the concurrence of both the Governments.

2. For the sharing of permits, the State in which the major portion of a route lies shall be given the first priority and the State in which the minor portion of the route lies may be given the second priority for each route separately.

3. In each case it shall be open to the State Government whose share is concerned, to decide whether their quota will be given to the Nationalised Transport or any private operator of that State.

ஒரு மாநிலத்தையும் இன்னொரு மாநிலத்தையும் இணைக்கும் பஸ் வழிகளில் பஸ் பெர்மிட்டுகளைப் பிரித்துக்கொள்வது பற்றி தமிழ்நாடு கேரள அரசாங்கங்கள் செய்துகொண்ட பரிமாற்ற ஏற்பாட்டின் (Reciprocal arrangement) நிபந்தனைகள்.

1. கேரள மாநிலத்தையும் தமிழ் நாட்டையும் இணைக்கும் தற்போதைய பஸ் வழிகளில் பஸ் பெர்மிட்டுகளைப் பிரித்துக்கொள்வதற்கான கோட்பாடு இதோ தரப்பட்டுள்ளது; மேற்சொன்ன ஒவ்வொரு பஸ் வழியிலும் அந்தந்த மாநிலத்தில் எவ்வளவு மைல் நீளசாலை அடங்கு கிறதோ அதற்கேற்ப, தற்போதைய நிலைக்கும் குந்தகமின்றி, பரிமாற்ற அடிப்படையில் பஸ் பெர்மிட்டுகளைப் பிரித்துக்கொள்ளவேண்டும். இப் பிரிவினையில் சமனற்ற நிலை ஏதாகிலும் இருந்தால், தற்போதைய ஏற் பாட்டினைக் குலைக்காமல் கூடுதலாகப் பெர்மிட்டுகளோ குறிப்புகளோ (பயணத் தடவைகள்) வழங்குவதன் மூலம் அதைச் சமன் செய்யவேண்டும். இந்த பஸ்வழிகளை மாற்றுவதாயிருந்தால் அது ஒரு அரசாங்கங்களின் இசை வுடன் ஒவ்வொன்றின் தகுதிகளுக்கேற்ப முடிவு செய்யப்படும்.

2. பெர்மிட்களைப் பிரித்துக்கொள்வதைப் பொறுத்தவரையில், ஒரு பஸ் வழியின் பெரும்பகுதி எந்த மாநிலத்தில் அமைந்துள்ளதோ அந்த மாநிலத்திற்கு முதலிடம் அளிக்கவேண்டும். ஒரு பஸ்வழியின் சிறு பகுதி எம்மாநிலத்தில் அமைந்துள்ளதோ அம்மாநிலத்திற்கு இரண்டா வது இடம் அளிக்கவேண்டும்.

3. இது ஒவ்வொன்றிலும், பஸ்வழி பெர்மிட்டில் ஒரு மாநிலத்தின் பங்கினை அரசாங்க பஸ் போக்குவரத்திற்கு வழங்க வேண்டுமா அல்லது அம்மாநிலத்தில் தனிப்பட்ட பஸ் முதலாளி ஒருவருக்கு வழங்க வேண்டுமா என்பதை அந்தந்த மாநில அரசாங்கம் நிச்சயிக்கவேண்டும்.

[28th March 1966

APPENDIX III.

[*Vide* Answer to Starred Question No. 465 at page 221.]

[SUBJECT.—*Water-supply improvement schemes for Chingleput, Srivilliputhur, Thanjavur and Tiruchirappalli.*]

Chingleput.

The investigation for improving the existing water-supply scheme for the Municipality and also for extending the scheme to Alagesa Nagar, Vedachalam Nagar, etc., within the Municipal limits has been sanctioned. Field investigation has been completed and a detailed report is under preparation.

Srivilliputhur.

The Government have sanctioned the construction of a barrage wall across Payanar infiltration well and pump house and also the laying of pipe from the pumping main to the existing infiltration works at an estimated cost of Rs. 1,25,650. The work will be executed by the municipality.

Thanjavur.

The first stage of the water-supply improvement scheme of the town, viz., improvements to the distribution system, has been completed and handed over to the municipality.

In May 1964 sanction was accorded for the execution of the Second and Third stages of the water-supply improvement scheme, viz., the construction of a new filter basin and pump house installation of pumpsets laying of pumping main, etc., at an estimated cost of Rs. 30·83 lakhs. Before the work was taken up for execution the Municipal Council resolved to have the additional head works located in River Coleroon instead of in Vennar river. So sanction was accorded to investigate the possibility of drawing water from Coleroon or Cauvery for supply to Thanjavur. The investigation is in progress. The execution of the second and third stages of the improvement was kept in abeyance pending the report on the above investigation. Subsequently at the instance of the Municipal Council the execution of the second and third stages of the water-supply improvement scheme was ordered to be taken up. Instructions have also been issued to link up the improvement scheme with the alternative source under investigation when it is taken up for execution so that there will be no scarcity of water in the town.

Tiruchirappalli.

In November 1958 sanction has been accorded for improving water-supply to the southern and western areas in Tiruchirappalli Municipality at an estimated cost of Rs. 28·91 lakhs by redesigning and relaying distribution mains in Palakkarai, Woriyur and Cantonment, construction of service reservoirs in these areas and laying branch pumping mains to feed the respective reservoirs. The work is nearing completion.

28th March 1966]

Sanction has also been accorded in October 1962 for improving the head works, pump house, pumping plant and pumping main at an estimated cost of Rs. 8·76 lakhs so that it may be possible to draw 68 lakhs gallons of water per day for meeting the demand at 25 gallons per head per day of the expected population of 270,000 in 1976. The work is in progress.

[பொருள்.—செங்கற்பட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளிக் குரிய நீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்கள்.]

செங்கற்பட்டு.

நகராட்சியின் தற்போதைய நீர் வழங்கல் திட்டத்தை மேம்பாடு செய்வதைக் குறித்து பரிசீலனை செய்யவும், நகராட்சி எல்லைகளுக்குள் இருக்கும் அளகேச நகருக்கும், வேதாசலம் நகருக்கும் இத்திட்டத்தை விரிவாக்கம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தந்த இடத்தில் சென்று புலனாய்வு நடத்தும் வேலை முடிந்துவிட்டது. விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீவில்லிபுத்தூர்.

பாயனாறுக்குக் குறுக்கே அணை ஒன்றையும், வடிகட்டிக் கிணறு (Infiltration Well) ஒன்றையும், விசை ஏற்ற நிலையம் (Pump House) ஒன்றையும் கட்டுவதுடன், விசை ஏற்றத்தின் மூலக் குழாயிலிருந்து ஏற்கெனவேயுள்ள வடிகட்டி நிலையத்திற்குக் குழாய் போடவும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இவ்வேலைகளுக்கு ஆகும் செலவு மதிப்பீடு ரூ. 1,25,650. இந்தப் பணியை நகராட்சி நிறைவேற்றும்.

தஞ்சாவூர்.

நகரின் நீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் நிலை அதாவது நீர் வழங்கல் அமைப்பைச் சீர்படுத்தும் வேலையை முடித்து அந்தப் பணி நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்தின் 2-ம், 3-ம் நிலைகளை அதாவது, வடிகட்டிக் குட்டை ஒன்றையும், விசை ஏற்ற நிலையம் ஒன்றையும் கட்டுதல், விசை ஏற்றக் கருவிகளை நிறுவுதல், பம்பின் மூலக் குழாயை அமைத்தல் முதலிய பணிகளை நிறைவேற்ற 1964 மே மாதம் அரசாங்கம் அனுமதி வழங்கியது. இவ்வேலைகளுக்கு ஆகும் செலவு மதிப்பீடு ரூ. 30·83 லட்சம். இந்தப் பணியை நிறைவேற்ற மேற்கொள்வதற்கு முன், கூடுதல் தலைப்பு நிலையத்தை வெண்ணாற்றுக்குப் பதில் கொள்ளிடத்தில் அமைக்குமாறு நகராட்சி மன்றம் முடிவு செய்தது. எனவே, கொள்ளிடம் அல்லது காவிரியிலிருந்து தஞ்சாவூருக்கு நீர் வழங்கும் சாத்தியக் கூறு பற்றி பரிசீலனை செய்யும்படி அனுமதி வழங்கப்பட்டது. இது பற்றிய புலனாய்வு நடந்துவருகிறது. மேற்படி புலனாய்வு அறிக்கை பெறப்படும் வரையில் இந்த மேம்பாட்டுத் திட்டத்தின் 2-ம், 3-ம் நிலைகளை நிறைவேற்றுவது நிறுத்திவைக்கப்பட்டது. அதற்குப் பின் நகராட்சி கேட்டுக் கொண்டதன் மேல் நீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டத்தின் 2-ம், 3-ம் நிலைகளை நிறைவேற்ற எடுத்துக்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டது. இந்த மேம்பாட்டுத் திட்டத்தை, இப்போது புலனாய்விலுள்ள மற்றொரு நீர் ஆதாரம் குறித்து வேலைகளை நிறைவேற்ற எடுத்துக் கொள்ளும்பொழுது அதனுடன் இந்த மேம்பாட்டுத் திட்டத்தை இணைத்துவிட்டால் நகரில் தண்ணீர்த் தட்டுப்பாடே இராது என்ற கருத்தில் அவ்வாறு இணைக்கும்படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி.

1958 நவம்பரில் ரூ. 28·91 லட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி நகராட்சியின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் நீர் வழங்கல் நிலையை மேம்பாடு செய்வதற்கு [illegible] அனுமதி வழங்கப்பட்டது. இதன் கீழ், பாலக்கரை, உறையூர், [illegible]

கண்டோன்மெண்ட் ஆகிய இடங்களிலுள்ள பங்கீட்டு மூலக் குழாய்களின் அமைப்பைப் புதிதாக்கியும், அவற்றை மீண்டும் புதிதாகப் பதித்தும் இப்பகுதிகளில் விநியோக நீர்த் தேக்கங்களை அமைத்தும் இந்த நீர்த் தேக்கங்களுக்கு நீர் வழங்க மூலக்கிளைக் குழாய்களை அமைத்தும் இப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணி முடியும் தறுவாயில் உள்ளது.

தலைப்பு நிலையம், விசை ஏற்ற நிலையம், நீர் இறைவை யந்திரம், நீர் இறைவை மூலக்குழாய் மெயின் ஆகியவற்றைச் சீர்படுத்த 1962 அக்டோபரில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 8·76 லட்சம். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 68 லட்சம் காலன் நீர் பெற முடியும். இதனால் 1976-ல் எதிர்பார்க்கப்படுகிற மக்கட் தொகை 270,000 பேருக்கு தலைக்கு அன்றாடம் 25 காலன் வீதப்படி தேவையான நீர் கிடைக்கும். இந்தப்பணி நிறைவேறி வருகிறது.

APPENDIX IV.

[*Vide* Answer to Starred Question No. 468 at page 224]

[G.O. Ms. No. 2783, Industries, Labour and Co-operation (Labour), dated 29th May 1965.]

NOTIFICATION.

Whereas, in the opinion of the Government of Madras the employees of the establishments mentioned in column (2) of the Annexure (hereinafter referred to as 'the said establishments') are in enjoyment of benefits in the nature of provident fund, pension or gratuity which separately or jointly are on the whole not less favourable to such employees than the benefits provided under the Employees' Provident Funds Act, 1952 (Central Act XIX of 1952) (hereinafter referred to as 'the said Act'), or the Employees' Provident Funds Scheme, 1952 (hereinafter referred to as 'the said Scheme'), in relation to the employees in any other establishment of a similar character;

Now, therefore, in exercise of the powers conferred by clause (*b*) of sub-section (1) of section 17 of the said Act, the Governor of Madras hereby exempts the said establishments from the operation of all the provisions of the said Scheme, subject to the conditions specified in the Schedule below.

2. The exemption hereby granted shall be deemed to have come into force on the dates specified in column (3) of the Annexure.

THE SCHEDULE.

Conditions.

1. The establishments shall have a provident fund scheme in force the rules of which with respect to the rates of contribution shall not be less favourable than those specified in section 6 of the said Act and the employees shall also be in enjoyment of other provident fund benefits which on the whole shall not be less

favourable to the employees than the benefits provided under the Act or any schemes in relation to the employees in any other establishment of a similar character and these shall be followed in all respects.

2. The employer in relation to the establishments (hereinafter referred to as 'the employer') shall within three months of the date of the publication of this notification in the *Fort St. George Gazette*, amend the constitution of the provident fund maintained in respect of the establishment in regard to the following matters, namely :—

(*a*) Where the employees and the employer come to an agreement for adopting any particular method of nomination or election to the Board of Trustees constituted in pursuance of the constitution of the provident fund it shall be left to such mutual agreement and any stipulation generally made in the scheme need not be made applicable to such establishment subject to the continuance of the said Board of Trustees being restricted to the current term of tenure.

(*b*) The representatives of the employees shall be elected through a secret ballot by a single vote by the covered employees in the establishments at a meeting convened for that purpose by the employer on a working day. The election shall be held in the presence of an officer nominated by the Regional Commissioner in the same manner as the elections are conducted by the Labour Officers under the Industrial Employment (Standing Orders) Act, 1946 (Central Act XX of 1946). Workers elected at such election shall serve on the Board of Trustees for a period of three years.

3. The provident fund rules of the establishments shall not be amended except with the previous approval of the Regional Commissioner. Where any amendment affects the interest of the employees, before giving his approval, the Regional Commissioner shall give a reasonable opportunity to the employees to explain their point of view.

4. (*a*) The employer shall maintain accounts of the provident fund in such manner and submit returns to the Regional Commissioner as the Central Provident Fund Commissioner may from time to time direct.

(*b*) The employer shall furnish to the Regional Commissioner such accounts relating to the provident fund of the establishments as the Central Provident Fund Commissioner may prescribe from time to time. He shall also furnish an annual statement of account or a pass book, in such form as may be approved to each subscriber who, but for the exemption, would have been a member of the fund established under the said Scheme.

(c) The employer shall make all investment of accumulation accruing after the take of exemption in securities of the Central Government. The reinvestment or conversion of securities on maturity shall also be in the securities of the Central Government. The employer shall formulate a procedure for prompt investment of provident fund moneys and shall get it approved by the Regional Commissioner.

5. The employer shall afford such facilities for inspection of the accounts of the provident fund as the Central Provident Fund Commissioner may from time to time specify.

6. All expenses invovled in the administration of the provident fund scheme including the maintenance of accounts, submission of accounts and returns, transfer of accumulations and payment of inspection charges shall be borne by the employer.

7. The employer shall display on the notice board of his establishments, in English, a copy of the approved rules and the translation of salient points of the rules in the language of the majority of the workers respectively.

8. The employer shall within three months of the date of publication of this notification in the *Fort St. George Gazette*, transfer to the Board of Trustees the accumulations standing to the credit of the employees who but for the exemption would have been members of the statutory fund.

9. (1) When exemption of the establishments is cancelled, accumulations standing to the credit of the employees who but for the exemption would have been members of the statutory fund shall be transferred to the fund as soon as possible and, in any case not later than thirty days in the case of securities and not later than ten days in the case of cash in hand or bank, together with a statement or statements as may be required by the Regional Commissioner.

(2) In the event of the closure of the establishments and the consequent winding up of the provident fund the accounts of the members shall be settled in such manner as may be prescribed by the Regional Commissioner.

10. The employer shall accept the past provident fund accumulations of an employee who is already a member of the Employees' Provident Fund or an exempted fund and who obtains employment in his establishments. Such an employee shall immediately be admitted as a member of the establishment's provident fund. His accumulations which shall be transferred within three months of his joining, the establishments shall be credited to his account.

11. The employer shall provide for nomination in his provident fund rules in accordance with the provisions contained in paragraph 61 of the said Scheme.

12. The amount of contributions shall be calculated to the nearest quarter of a rupee, that is 12·5 Paise or more shall be counted as the next higher quarter of a rupee and fraction of a rupee less than 12·5 Paise shall be ignored. The amounts of inspection charges and damages shall be calculated to the nearest 5 Paise, that is 2·5 Paise or more shall be counted as 5 Paise and any amount less than 2·5 Paise shall be ignored.

13. On all repayable loans granted by the establishments interest shall be charged at the rate of 4½ per cent, or 1 per cent above the rates allowed on the balance to the credit of the members, whichever is higher.

14. The employer shall pay to the Regional Commissioner inspection charges payable, failing which damages shall be paid at a rate fixed by the Central Government, from time to time.

15. The employer shall maintain an inspection note-book in such form as the Regional Provident Fund Commissioner may specify for inspector to record his observations on his visit to the establishment.

16. Exemption hereby granted is liable to be withdrawn by the State Government for breach of any of the aforesaid conditions or for any other sufficient causes which may be considered appropriate.

17. The State Government reserve the power to impose such further conditions as may be deemed necessary in the interest of the employees in the establishments.

ANNEXURE.

Serial number.	Name and address of the establishment.	Date of coverage.
(1)	(2)	(3)
1	Basin Bridge Power House, Madras-12	1— 7—1957
2	Moyar Power House, Moyar Camp P.O., The Nilgiris.	1— 7—1957
3	Mettur Power House, Mettur Dam, Salem ..	1— 7—1957
4	Madurai Thermal Station, Samayanallur, Madurai District.	1— 7—1957
5	Papanasam Power House, Papanasa Project P.O., Tirunelveli District.	1— 7—1957
6	Mettur Workshops, Mettur Dam, Salem District ..	1— 7—1957
7	Pykara Power Station, Singara P.O., The Nilgiris ..	1— 7—1957
8	M.E.S. Regional Workshop, Mylapore, Madras-4 ..	1—12—1958
9	Erode Sub-Station, Erode	1—10—1957
10	Pykara Electricity System, Coimbatore	1— 6—1958

Serial number. (1)	Name and address of the establishment. (2)	Date of Coverage. (3)
11	Pykara Electricity System Workshop, Coimbatore ..	1— 1—1959
12	Tiruppur Sub-Station, Avanashi Road, Tiruppur, Coimbatore West.	1— 1—1961
13	Kunnathur Operation and Maintenance Distribution System, Coimbatore.	1— 1—1961
14	Udumalpet Sub-Station, Udumalpet, Coimbatore ..	1— 1—1961
15	Pollachi Sub-Station, Pollachi, Coimbatore ..	1— 1—1961
16	Madras Electricity Board Receiving Station, Ootacamund.	1— 1—1961
17	Madras State Electricity Board Sub-Station, Kattabette Post, The Nilgiris.	1— 1—1961
18	Periyar Power House, Periyar Project, P.O., Madurai District.	1—11—1961
19	Pasumalai Sub-Station, Pasumalai P.O., Madurai District.	1— 1—1961
20	Canada Power House, Kundha Bridge P.O., The Nilgiris.	1— 9—1963
21	Special Maintenance Sub-Division, Madras Electricity System, Madras-4.	1—10—1964
22	Special Maintenance, Pykara Electricity System, Coimbatore.	1—11—1964
23	Metre Relay Testing Sub-Station, Coimbatore ..	1—11—1964
24	R.C.C. Yard Pykara Electricity System, Coimbatore.	1— 1—1965

(தொழில், தொழிலாளர், கூட்டுறவுத் துறையின் 1965-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதியுள்ள 2783 எண் அரசாங்க ஆணை.)

அறிவிப்பு.

இத்துடனுள்ள பிற்சேர்க்கையின் (2) பத்தியில் குறிப்பிட்டுள்ள பணி
மனைகளின் (இவை இப்பால் 'மேற்படி பணிமனைகள்' என குறிப்பிடப்
படுகின்றன) வேலையாட்கள் வருங்கால சேமிப்பு நிதி, ஓய்வு ஊதியம்
அல்லது பணிக்கொடை ஆகியவை பெறுகின்றனர். இவைத் தனித்தனி
யாகவோ ஒருங்கு சேர்ந்தோ, இவர்கள் வேலைசெய்கின்ற பணிமனைகளை
ஒத்த பிற பணிமனைகளில் வேலைசெய்கின்ற வேலையாட்களுக்கு 1952-ம்
ஆண்டு வேலையாட்கள் வருங்கால சேமிப்பு நிதி சட்டத்தின்கீழ் (மத்தியச
சட்டம் 19/1952) (இது இப்பால் 'மேற்படி சட்டம்' எனக் குறிப்பிடப்படுகிறது)
அல்லது 1952-ம் ஆண்டு வேலையாட்கள் வருங்கால சேமிப்பு நிதி சட்டத்தின்
கீழ் (இது இப்பால் 'மேற்படி சட்டம்' என குறிப்பிடப்படுகிறது) கொடுக்கப்
படுகிற நன்மைகளைவிட குறைந்த அனுகூலமானவை அல்ல என தமிழ்நாடு
அரசாங்கம் கருதுகிறது. எனவே மேற்படி சட்டத்தின் 17-வது பிரிவைச்
சேர்ந்த (b) பகுதியிலுள்ள அதிகாரங்களைக்கொண்டு தமிழ்நாடு கவர்னர்
அவர்கள் மேற்படி பணிமனைகளுக்கு மேற்படி திட்டத்தின் விதித்துறைகள்
அனைத்திலிருந்தும் கீழே விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனை
களுக்குட்பட்டு இதனால் விலக்களிக்கின்றார்.

2. இதனால் அளிக்கப்படும் விலக்கு பிற்சேர்க்கையின் (3) பத்தியில்
குறிப்பிட்டுள்ள தேதிகளில் செயலுக்கு வந்துவிட்டிருப்பதாகக் கருதப்படும்.

விவர அட்டவணை.

நிபந்தனைகள்.

1. இந்தப் பணிமனைகளில் வருங்காலச் சேமிப்பு நிதித் திட்டம் ஒன்று
செயலுக்கு வரவேண்டும். பங்குத்தொகை வீதங்கள் [illegible] விதிகள்
மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள [illegible] குறைந்த
அனுகூலமுள்ளதாயிருக்கக் கூடாது. வேலையாட்கள் வருங்கால சேமிப்பு
நிதியின் ஏனைய நன்மைகளையும் அனுபவிக்க வேண்டும். இவை
மொத்தமாகப் பார்க்குமிடத்து, இப் பணிமனையை ஒத்த மற்ற பணிமனை
யின் வேலையாட்களுக்குக் கொடுக்கப்படுகிற நன்மைகளைவிட குறைந்த
அனுகூலமுள்ளவையாயிருக்கக் கூடாது. இவை எல்லா விஷயங்களிலும்
அனுசரிக்கப்படவேண்டும்.

2. பணிமனைகள் விஷயமாய் தொழிலதிபர் (இவர் இப்பால் 'மேற்படி
தொழிலதிபர்' எனக் குறிப்பிடப்படுகிறார்). இந்த அறிவிப்பு தமிழ்நாடு அர
சாங்க இதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குக்
கீழ்க்கண்டவை விஷயமாய் மேற்படி பணிமனையில் வைத்து வரப்படுகிற
வருங்கால சேமிப்பு நிதியின் அமைப்பைத் திருத்த வேண்டும்: அவை
யாவன:—

(a) வருங்காலச் சேமிப்பு நிதியின் அமைப்பை அனுசரித்து ஏற்படுத்
தப்பட்ட தருமகர்த்தா சபைக்கு நியமனம் செய்ய அல்லது தேர்தல் நடத்த
குறித்த யாதொரு முறையை மேற்கொள்ள வேலையாட்களும் தொழிலதி
பரும் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருந்தால் அந்த நியமனம் அல்லது தேர்
தல் அவர்களது ஒருமித்த உடன்பாட்டுக்கு விடப்படவேண்டும். மேற்படி
திட்டத்தில் பொதுவாக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனை அந்தப் பணிமனைக்குப்
பொருந்த வேண்டியதில்லை. ஆனால் அந்த தருமகர்த்தா சபை அவர்
களுடைய தற்போதைய பதவிக்கால அளவு வரையில் மட்டுமே தொடர்ந்து
பதவியிலிருக்கவேண்டும்.

(b) வேலையாட்களின் பிரதிநிதிகள் இத்திட்டத்தின்கீழ் வருகிற பணி
மனைகளின் வேலையாட்களினால் ஒற்றை வாக்குமூலம் இரகசிய முறையில்
தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுப்பதற்காக மேற்படி
தொழிலதிபர் ஒரு வேலை தினத்தன்று அவர்களை ஒருங்குக் கூட்டவேண்டும்.
இத்தேர்தல் வட்டாரக் கமிஷனர் நியமனம் செய்த அதிகாரி ஒருவரின்
முன்னிலையில் நடைபெறவேண்டும். 1946-ம் ஆண்டு தொழிலியல் வேலை
(நிலை யாணைகள்) சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 20/1946) தொழிலாளர்
அதிகாரிகள் தேர்தல் நடத்துவதைப் போலவே இத் தேர்தல் நடைபெற
வேண்டும். இதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தருமகர்த்தா சபையில்
மூன்றாண்டுக் காலம் பணி புரிவர்.

3. மேற்படி பணிமனைகளின் வருங்காலச் சேமிப்பு நிதியில் வட்டாரக்
கமிஷனரின் முன் அனுமதியின்றி திருத்தப்படக்கூடாது. யாதொரு திருத்
தம் வேலையாட்களின் நலனைப் பாதிப்பதாயிருந்தால், வட்டாரக் கமிஷனர்
அதற்கு அனுமதியளிப்பதற்குமுன் வேலையாட்கள் தங்கள் கருத்தைத்
தெரிவிப்பதற்காக அவ் வேலையாட்களுக்கு நியாயமான வாய்ப்பளிக்க
வேண்டும்.

4. (a) அவ்வப்போது மத்திய வருங்காலச் சேமிப்பு நிதிக் கமிஷனர் கட்
டளையிடக்கூடிய முறையில் மேற்படி தொழிலதிபர் வருங்காலச் சேமிப்பு நிதி
கணக்குகளை வைத்திருப்பதுடன், அத்தகைய விவரக் கணக்குகளை வட்டாரக்
கமிஷனருக்கு பணிந்தனுப்ப வேண்டும்.

(b) அந்தப் பணிமனைகளின் வருங்காலச் சேமிப்பு நிதியைப் பற்றி அவ
வப்போது, மத்திய வருங்கால சேமிப்பு நிதிக் கமிஷனர் நிச்சயிக்கும்
கணக்குகளை மேற்படி தொழிலதிபர் வட்டாரக் கமிஷனருக்குப் பணிந்தனுப்ப
வேண்டும். மேலும் அவர் ஏற்கப்படக்கூடிய படிவத்தில் ஆண்டு விவரக்
கணக்கு ஒன்றை அல்லது பற்றுவரவுச் சீட்டு ஒன்றை, விலக்களிக்கப்பட்
டிருந்தாலன்றி இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள நிதியின் உறுப்
பினராயுள்ள ஒவ்வொரு சந்தாதாரருக்கும் கொடுக்கவேண்டும்.

(c) விலக்களிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு சேர்ந்துவருகிற தொகை அனைத்தையும் மேற்படி தொழிலதிபர் மத்திய அரசின் ஈடுகளில் முதலீடு செய்ய வேண்டும், பத்திரங்கள் கால நிறைவு எய்துவதன்பேரில் மீண்டும் முதலீடு செய்வதும், மாற்றி முதலீடு செய்வதும் மத்திய அரசு ஈடுகளிலேயே செய்யவேண்டும். வருங்கால சேமிப்பு நிதியின் தொகைகளை உடனடியாக முதலீடு செய்வதற்கு மேற்படி தொழிலதிபர் ஒரு நடைமுறையை வகுத்து அதற்கு வட்டாரக் கமிஷனரின் ஏற்பைப்பெறவேண்டும்.

5. வருங்கால சேமிப்பு நிதியின் கணக்குகளைத் தணிக்கைச்செய்ய மத்திய வருங்காலச் சேமிப்பு நிதி கமிஷனர் அவ்வப்போது குறிப்பிடக்கூடிய வசதிகளை மேற்படி தொழிலதிபர் செய்து தரவேண்டும்.

6. கணக்குகளை வைத்து வருவது, கணக்குகளையும் விவரக்கணக்குகளைப் பணிந்தனுப்புவது, சேர்ந்துவரும் தொகைகளை மாற்றுவது, தணிக்கைக் கட்டணங்களைக் கொடுப்பது உட்பட, வருங்காலச் சேமிப்பு நிதித்திட்ட நிர்வாகத்தில் ஏற்படும் செலவுகள் அனைத்தையும் மேற்படி தொழிலதிபரே செய்யவேண்டும்.

7. மேற்படி தொழிலதிபர் தமது பணிமனையின் அறிவிப்புப் பலகையில் ஏற்பளிக்கப்பட்ட விதிகளின் நகலொன்றை ஆங்கிலத்தில் காட்டிவைக்க வேண்டும். வேலையாட்களில் பெரும்பானமையோர் அறிந்துள்ள மொழியில் அந்த விதிகளின் முக்கியமான அம்சங்களை மொழிபெயர்த்து அதையும் அறிவிப்புப் பலகையில் ஒட்டிவைக்கவேண்டும்.

8. இந்த அறிவிப்பு தமிழ் நாடு அரசாங்க இதழில் வெளியிட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், மேற்படி தொழிலதிபர், வாக்களிக்கப்பட்டிராவிட்டால் சட்டப்படி அமைக்கப்பட்ட நிதியின் உறுப்பினர்களாயிருந்த வேலையாட்களின் கணக்கில் சேர்ந்துவந்துள்ள தொகையைத் தர்மகர்த்தா சபைக்கு மாற்றிவிடவேண்டும்.

9. (1) மேற்படி பணிமனைக்குக் கொடுத்துள்ள விலக்கு ரத்து செய்யப்பட்டால், விலக்களிக்காவிட்டால் சட்டப்படிக்கான நிதியின் உறுப்பினராயிருந்திருக்கக்கூடிய வேலையாட்களின் கணக்கில் சேர்ந்துவந்துள்ள தொகைகள் இயன்ற விரைவில் மேற்படி நிதிக்கு மாற்றப்படவேண்டும். எப்படியும் ஈடுகள் விஷயத்தில் முப்பது நாட்களுக்குப் பிற்படாமலும், இருப்பிலுள்ள அல்லது பாங்கிலுள்ள ரொக்கத்தின் விஷயத்தில் 10 நாட்களுக்குப் பிற்படாமலும், அவ்வாறு மாற்றிவிட வேண்டும். மேலும் வட்டாரக் கமிஷனர் கேட்கிற விவர அறிக்கை அல்லது விவர அறிக்கைகளை அனுப்பி வைக்கவேண்டும்.

(2) பணிமனைகள் மூடப்பட்டு வருங்காலச் சேமிப்பு நிதி முடித்து விடப்பட்டால், உறுப்பினர்களின் கணக்குகள் வட்டாரக் கமிஷனர்கள் நிச்சயிக்கக் கூடிய வகையில் தீர்க்கப்படவேண்டும்.

10. வேலையாட்கள் வருங்காலச் சேமிப்பு நிதியில் அல்லது விலக்களிக்கப்பட்ட நிதியில் ஏற்கெனவே உறுப்பினராயுள்ளவரும் தனது பணிமனையில் வேலை புரிபவருமான ஒரு வேலையாளுக்கு கடந்த காலத்தில் வருங்காலச் சேமிப்பு நிதியில் சேர்ந்துள்ள தொகையைத் தொழிலதிபர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தகைய உறுப்பினரை இப் பணிமனையில் வருங்காலச் சேமிப்பு நிதியில் ஓர் உறுப்பினராக உடனடியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர் கணக்கிலுள்ளத் தொகைகள் அவர் இப்பணிமனைக்கு வேலைக்குச் சேர்ந்ததிலிருந்து மூன்று மாதத்துக்குள் மாற்றப்பட்டு அவர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

11. மேற்படி தொழிலதிபர் மேற்படி திட்டத்தில் 61-வது பாராவில் கண்டுள்ள விதித் துறைகளுக்கேற்ப தனது வருங்கால சேமிப்பு நிதியில் நியமனம் செய்வதற்கு வகைசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

12. பங்குத்தொகை முழுக் கால் ரூபாயாகக் கணக்கிடப்படவேண்டும். அதாவது, 12·5 காசு அல்லது அதற்கு மேற்பட்டது அடுத்த உயர் கால் ரூபாயாகக் கணக்கிடப்படவேண்டும். 12·5 காசுக்குக் குறைந்த தொகை புறக்கணிக்கப்படவேண்டும். தணிக்கைக் கட்டணங்களும் இழப்பீட்டுக் கட்டணங்களும் 5 காசுகளின் மடங்குகளில் கணக்கிடப்பட வேண்டும். அதாவது 2·5 காசு 5 காசாகக் கணக்கிடப்படவேண்டும். 2·5 காசுக்குக் குறைந்தத் தொகை புறக்கணிக்கப்படவேண்டும்.

13. திருப்பிச் செலுத்தப்படத் தக்கணவாய் மேற்படி பணிமனைகள் வழங்கிய கடன்கள் அனைத்துக்கும் 4½ சத வீதம், உறுப்பினர் கணக்கிலுள்ள இருப்புக்கு அனுமதிக்கப்படுகிற வட்டி வீதத்துக்குக் கூடுதலாய் 1 சத வீதம் இவற்றுள் எது கூடுதலாயுள்ளதோ அந்த வீதப்படி வட்டி விதித்து வாங்கப்பட வேண்டும்.

14. மேற்படி தொழிலதிபர் வட்டாரக் கமிஷனருக்குச் செலுத்தவேண்டிய தணிக்கைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் மத்திய அரசு அவ்வப்போது விதிக்கிற வீதப்படி இழப்பீடு செலுத்த வேண்டும்.

15. மேற்படி தொழிலதிபர், தணிக்கைக் குறிப்புப் புத்தகம் ஒன்றை வட்டாரத் தொழிலாளர் கமிஷனர் நிச்சயிக்கக் கூடிய படிவத்தில் வைத்து வரவேண்டும். ஓர் இன்ஸ்பெக்டர் அப் பணிமனைக்கு வரும்போது தாம் கண்டவற்றை எழுதி வைப்பதற்காக, இவ்வாறு வைத்திருக்க வேண்டும்.

16. இதனால் கொடுக்கப்படும் விலக்கு, மேற்சொன்ன நிபந்தனைகள் எதையாகிலும் மீறியதற்காக அல்லது தகுந்ததெனக் கருதக்கூடிய போதுமான யாதொரு காரணத்துக்காக மாநில அரசாங்கத்தால் நீக்கப்படலாம்.

17. பணிமனைகளின் வேலையாட்களின் நலனுக்கு அவசியமெனக் கருதக் கூடிய நிபந்தனைகளை மேற்கொண்டும் விதிக்க மாநில அரசாங்கம் அதிகாரமுள்ளதாகும்.

தொடர் எண். (1)	பணிமனைகளின் பெயரும் முகவரியும். (2)	இத்திட்டத்தின் கீழ் வந்த தேதி. (3)
1	பேசின் பிரிட்ஜ் மின் நிலையம், பேசின் பிரிட்ஜ், சென்னை–12.	1— 7—1957
2	மோயாறு மின் நிலையம், மோயாறு முகாம் அஞ்சல், நீலகிரி.	1— 7—1957
3	மேட்டூர் மின் நிலையம், மேட்டூர் அணைக்கட்டு, சேலம்.	1— 7—1957
4	மதுரை அனல் மின்சார நிலையம், சமயநல்லூர், மதுரை மாவட்டம்.	1— 7—1957
5	பாபநாசம் மின் நிலையம், பாபநாசத் திட்டம் அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம்.	1— 7—1957
6	மேட்டூர் தொழில் பட்டறை, மேட்டூர் அணைக்கட்டு, சேலம் மாவட்டம்.	1— 7—1957
7	பைகாரா மின்நிலையம், சிங்காரா அஞ்சல், நீலகிரி.	1— 7—1957
8	சென்னை மின்சார ஏற்பாட்டின் வட்டாரத் தொழில் பட்டறை, மயிலாப்பூர், சென்னை-4.	1—12—1958
9	ஈரோடு துணை நிலையம், ஈரோடு	1—10—1957

தொடர் எண். (1)	பணிமனைகளின் பெயரும் முகவரியும். (2)	இத்திட்டத்தின் கீழ் வந்த தேதி. (3)
10	பைகாரா மின்சார ஏற்பாடு, கோயம்புத்தூர் ..	1— 6—1958
11	பைகாரா மின்சார ஏற்பாட்டுத் தொழில் பட்டறை, கோயம்புத்தூர்.	1— 1—1959
12	திருப்பூர் துணை நிலையம், அவினாசி சாலை, திருப்பூர், கோயம்புத்தூர் மேற்கு.	1— 1—1961
13	குன்னத்தூர் மின்சார உற்பத்தி—பேணுதல்—பங்கிடுதல் அமைப்பு, கோயம்புத்தூர்.	1— 1—1961
14	உடுமலைப்பேட்டை துணை நிலையம், உடுமலைப் பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.	1—1 —1961
15	பொள்ளாச்சி துணை நிலையம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர்,	1—1 —1961
16	தமிழ்நாடு மின்சார போர்டு பெறல் நிலையம், உதகமண்டலம்.	1— 1—1961
17	தமிழ்நாடு மின்சார போர்டு துணை நிலையம், கட்டபெட்டே அஞ்சல், நீலகிரி.	1— 1—1961
18	பெரியாறு மின் நிலையம், பெரியாறு திட்ட அஞ்சல், மதுரை மாவட்டம்.	1—11—1961
19	பசுமலை துணை நிலையம், பசுமலை அஞ்சல், மதுரை மாவட்டம்.	1— 1—1961
20	கானடா மின் நிலையம், குந்தா பிரிட்ஜ் அஞ்சல், நீலகிரி.	1— 9—1963
21	தனிபராமரிப்பு துணை நிலையம், தமிழ்நாடு மின்சார அமைப்புத் திட்டம், சென்னை-4.	1—10—1964
22	தனி பராமரிப்பு, பைகாரா மின்சார ஏற்பாடு, கோயம்புத்தூர்.	1—11—1964
23	மீட்டர் ரிலே சோதனைத் துணை நிலையம், கோயம்புத்தூர்.	1—11—1964
24	ஆர். சி. சி. துணை நிலையம், பைகாரா மின்சார நிலையம், கோயம்புத்தூர்.	1— 1—1965

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 29th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Inam Estates Abolition Act

* *S.N. Q.* 9.—SRI M. KALYANASUNDARAM : SRI A. K. SUBBIAH : } Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representation was received by the Government from the Communist Party of Tiruchirappalli objecting to the classification of about 400 Inams as Minor Inams;

(*b*) whether there is any proposal to classify them as Part Inam Estates under Section 2 (ii) of Inam Estates Abolition Act; and

(*c*) the details of any further action under consideration of the Government for protecting the occupancy rights of the ryots in the Pudukottai Inams ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes. A representation has been received on 24th March 1966.

(*b*) The tenure of Pudukkottai inams has already been investigated in detail by the Special Officer for Inam Settlement. Only 82 estates were found to be liable to be notified under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 and they have been notified.

(*c*) Both the Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 and Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 provide that the Government shall not dispossess of any person of any land both in the inam estates and in the minor inams pending decision of the Settlement Officer. These provisions are considered adequate for the protection of the occupancy rights of the ryots.

திரு. ம. கலியாணசுந்தரம் : சார், கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு இந்தப் பரிசீலனை செய்ததன் விளைவாக 82 கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன, மற்ற கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. இந்தப் பரிசீலனை எப்போது நடந்தது? எந்த அடிப்படையில் நடந்தது, இந்தப் பரிசீலனை நடக்கும்போது சம்பந்தப்பட்ட குடியானவர்களுக்கு முன் எச்சரிக்கை செய்யப்பட்டதா, அவர்களுடைய ஆட்சேபணை, சமாதானம் பெறப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[29th March 1966

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தப் பரிசீலனையைப் பொறுத்தவரை ஒரு ஸ்பெஷல் ஆபீசர் 1952-ம் வருஷத்திலே இன்வெஸ்டிகேஷன் செய்திருக்கிறார்கள். அவர்கள் பொறுத்தவரையில் 82 இனும் எஸ்டேட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டத்தின் மூலம் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். விசாரணை நடந்தபோது எந்தெந்த முறையில் விசாரணை நடத்தினார்கள் என்ற விவரம் இல்லை. இருக்கக்கூடிய முறைப்படி அவர்கள் யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 1952-லே இந்த விசேஷ அதிகாரி விசாரணை செய்யும்போது, அப்போது, இனும் கிராமம், பார்ட் இனும் கிராமம் என்று தெளிவு கிடையாது. 1963-ல் தான் சட்டங்கள் செய்யப்பட்டன. அந்தப் பரிசீலனையையொட்டித்தான் விவசாயிகள் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆகையால் அதை மறு பரிசீலனை செய்து இன்னொரு விசேஷ அதிகாரியை நியமித்து 1963-ம் வருஷத்திய டெபனெஷன்படி பார்ட் இனும் எஸ்டேட்டாக வருமா என்று பார்ப்பதற்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த விசேஷ அதிகாரி பரிசீலனை செய்த பிறகு புதுக்கோட்டை இனும் ஆக்ட் பாஸ் பண்ணி இருக்கிறது. 1963-ம் வருஷத்தில் மொத்தமாக ராஜ்யம் பூராவுக்கும் நிறைவேற்றப் பட்ட சட்டம் இருக்கிறது. அப்பொழுது இருந்த நிலைப்படி இது ஜாயின்ட் செலக்ட் கமிட்டியிலும் பரிசீலனை செய்யப்பட்டு சட்டம் செய்யப்பட்டது. 82 கிராமங்கள் மட்டும் அல்லாமல் மீதம் இருக்கக்கூடியவைகளை பார்ட் இனும், மேஜர் இனும் என்ற அடிப்படையில் சட்டம் அமலாக்க வேண்டும் என்ற கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது சமீபத்தில் கொடுக்கப்பட்ட கோரிக்கை. இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. தொடர்ந்து பரிசீலனை செய்து விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படக்கூடிய வகையில் இருந்தால் மீண்டும் பரிசீலனை செய்யும் நிலைமை இருக்கும் பட்சத்தில் அதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 1963-ம் வருஷத்திலே 31-வது சட்டம் சப்ளிமென்டரி ஆக்டின்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்கும் கடிதம் வந்திருக்கிறது. இந்தச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஒவ்வொருவரும் சொந்த நிலத்திற்காக போகமுடியாது. நான் சொல்லக்கூடிய யோசனை, இந்தச் சட்டத்தின் நோக்கம் குடியானவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்பதுதான், இனும்தார்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்பதல்ல. அப்படியிருக்கிறபோது 26-வது சட்டப்படி அறிக்கைவிட மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : புது கோரிக்கை வந்து பரிசீலனையில் இருக்கிறது. முடிவாகும்போது விவசாயிகளுக்குப் பாதகம் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும் பட்சத்திலே அதற்கு வேண்டியதை அரசாங்கம் செய்யும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 82 இனும் கிராமங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அதன் விவரம் அறிய முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : புதுக்கோட்டைப் பகுதியில் இருக்கிறது. இது சம்பந்தமாக கெஜட் நோடிபிகேஷன் வந்திருக்கிறது.

திரு. [illegible] கு. [illegible] : சம்பந்தப்பட்ட சாகுபடியாளர்கள் பார்ட் இனும்களுக்குத் [illegible]யுள்ள தஸ்தாவேஜிகள் வைத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஏன் பார்ட் [illegible]ாக எடுத்துக்கொள்[illegible]

29th March 1966]

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இருக்கிற சட்டப்படி அவர்களை வெளியேற்றுவதற்கு முடியாது. ஆகையால் செட்டில்மென்ட் ஆகிற வரைக்கும் நடவடிக்கை எடுக்க முடியாது. பார்ட் இனும் பற்றிய தஸ்தாவேஜிகள் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது கொடுத்திருக்கக்கூடிய கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது. ஆரம்ப விசாரணையில் போதுமான புள்ளிவிவரமோ, தகவலோ விடப்பட்டிருக்கும் பட்சத்தில், மறுபரிசீலனை செய்வதற்குத் தக்க காரணங்கள் இருக்கும் பட்சத்தில் மறு பரிசீலனை செய்யப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மறுபரிசீலனை செய்வது வரவேற்கத்தகுந்தது. புது கோரிக்கை மார்ச்சு மாதம்தான் கொடுத்தேன் என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் எனக்கு எழுதியிருக்கிற பதிலிலே 'your letter, dated 4th August 1965, என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் இந்த பதிலைத் திருத்திக்கொண்டு விசேஷ நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பதிலைத் திருத்தவேண்டியதில்லை. இப்போது வந்தது மார்ச் மாதம். அதற்கு முன்பே திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

அரசாங்க ஜீப்களைப் பழுதுபார்த்தல்

* 472 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் கைத்தொழில் அமைசசர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க 'ஜீப்' கார்களை தஞ்சாவூரில் உள்ள அரசாங்க தொழிற்சாலையில்தான் பழுது பார்க்க வேண்டுமென்ற அரசாங்க நிபந்தனைகள் ஏதேனும் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவைகளை மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes. Government vehicles in the districts of Thanjavur, Tiruchirappalli and South Arcot should be generally got repaired in the Regional Automobile Workshop at Thanjavur.

(*b*) Theere is a proposal to re-organise the set-up of the Motor Vehicles Maintenance Organisation.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் இவைகளை பழுது பார்க்கவேண்டும் என்று இருக்கிற காரணத்தால், மூன்று மாவட்டங்களிலும் இருக்கும் சர்க்கார் ஜீப்புகள் ஒரு ஆண்டு காலம் ஆகியும் பழுது பார்க்கப்படாமல் இருப்பதைப்பற்றி சர்க்காருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால், வேறு இடங்களில் இந்தமாதிரி நிலையத்தை வைக்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்தவிதமான புகாரும் வரவில்லை. நிறைய வண்டிகள் இருக்கின்றன, ரிபேர் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்றுதான், இன்னும் கோயம்புத்தூர், கன்யாகுமரி போன்ற இரண்டு இடங்களிலும் ரிபேர் செய்ய வசதி செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அடுத்த ஆண்டில் இவை துவங்கப்படும்.

திரு. எம். டி. தியாகராஜபிள்ளை : திருவாரூரில் இருக்கும் ட்ராக்டர் ஒர்க்ஷாப்பில் ஜீப் ரிபேர் செய்யவேண்டியிருப்பதால், ட்ராக்டர்கள் ரிபேர் உடனுக்குடன் செய்யமுடியாமல், தாமதம் ஏற்படுகிறது. ஜீப்கள், ட்ராக்டர்கள் இவற்றிற்கு வேறு வேறு தனித்தனியாக ரிபேர் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

[29th March 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது மோட்டார் வெஹிகிள்ஸ் மெயிண்டினன்ஸ் ஆர்கனைசேஷன் மூலமாக ஜீப்கள் தஞ்சாவூரில் ரிபேர் செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து தஞ்சாவூரில் பழுதுபார்க்கும் அலுவலகம் இருக்கிற காரணத்தால், தாமதமும் சிரமும் ஏற்படுகிறது என்பதால், மாவட்ட வாரியாக அமைத்தால் சௌகரியமாக இருக்கும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : செலவு ஏராளமாக ஆகும்.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து தஞ்சைக்குச் செல்லவேண்டியிருப்பதால், காலதாமதம் ஏற்படுகிறது. அதையே சென்னையில் வைத்தால் சௌகரியமாக இருக்கும். சீக்கிரமும் முடியும். அப்படிச் சென்னையில் வைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னையில் ரிப்பேர் செய்ய வேண்டிய வண்டிகள் அதிகமாக இருக்கின்றன. சென்னை ஜில்லா, செங்கற்பட்டு ஜில்லா ஆக இரண்டுக்கும் இங்கே ரிபேர் செய்ய பெஸிலிடீஸ் வைத்திருக்கிறோம். தஞ்சாவூரில் செய்தால் காலதாமதம் ஏற்படாது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொந்தமான ஜீப்களை ரிப்பேர் செய்ய பல மாதங்கள் ஆகியும் அவை அப்படியே தொழிற்சாலையிலேயே இருக்கின்றன. ஆகவே, மைனர் ரிபேர் ஏற்பட்டால் பஞ்சாயத்து யூனியனே செய்துகொள்ளலாம் என்று உத்தரவு போடுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் என்னுடைய சக அமைச்சருக்குக் கேள்வி போட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

" Tex Mark "

* 473 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the hardships caused due to the delay in the issue of necessary "Tex Mark" permits by the Union Commerce Ministry to the Powerloom Union which have obtained L-4 Licences and the consequent denial of power supply to them by the State Electricity Board;

(*b*) whether the Government will be pleased to make recommendations to the Centre thereon; and

(*c*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*c*) A person desiring to start a Powerloom factory with one or more looms should first of all obtain a permit from the Textile Commissioner under clause 12 (6) of the Cotton Textile Control Order, 1948. Government are not aware of any delay in the issue of Tex Mark by the Textile Commissioner to those entitled under clause 12 (6) of the Control Order. In respect of powerlooms not covered by permit under clause 12 (6) of the order referred to above, they are unauthorised and consequently not eligible for Tex Mark though they might have obtained L-4 Licence from the excise authorities.

29th March 1966]

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி எல்.4 லைசென்ஸ் எடுத்த பிறகும் பர்மிட் வருவதற்கு சில மாதங்கள் ஆகிவிடுகின்றன. அதனால் எலெக்ட்ரிசிடி சப்ளை கிடைக்கவில்லை. அந்த மாதிரி புகார் சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களுக்குக் கிடைக்காது என்று பதில் சொன்னேன். காட்டன் டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆர்டர், 12-வது பிரிவுப்படி யார் அனுமதி வாங்குகிறார்களோ, அவர்களுக்கு டெக்ஸ் மார்க் கிடைக்கும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த எல்.4 லைசென்சை நம்பி, இயந்திரங்களை வாங்கி பவர்லூம் போட்டுக் கொண்டு, அப்படியே இயந்திரங்களைச் சும்மா வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். எந்த எந்த ஜில்லாவில் எத்தனை எத்தனை பேர்கள் ? அவர்கள் அரசாங்கத்திற்கு முறையிட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முறையிட்டிருக்கிறார்கள். எத்தனை பேர்கள் அப்படிப் பட்டவர்கள் என்கிற விவரம் இல்லை. ஆனால், அனுதரைஸ்ட் பவர்லூம்கள் 3,700 என்கிற கணக்கு இருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவர் அவர்களே, குடிசைத் தொழிலைப் போன்று ஒன்று, இரண்டு, மூன்று பவர்லூம்கள் வைத்திருப்பவர்களுக்கு இந்த டெக்ஸ் மார்க் அவசியமா ? அதைப் பற்றி மறுபரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவசியம் இருக்கிறது என்றுதான் அந்த விதமான சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நம் ராச்சியத்தில் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று பெரிய கிளர்ச்சி நடக்கிறது. ஆகவேதான் அவர்கள் அப்படிப் பாதிக்கப்படுவார்கள் என்கிற கருத்து சர்க்காரில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், அனுமதி அற்றது 3,000-க்குமேல் இருக்கிறது என்று கனம் அமைச்சர் கூறினார்கள். அவர்களுக்கு எலெக்ட்ரிசிடி கொடுக்காத காரணத்தால் ஓடாமல் வைக்க முடிகிறது. ஏற்கனவே எலெக்ட்ரிசிடி பெற்று, அனுமதியும் பெற்று இருக்கும் விசைத்தறிகளுக்கு அதிகமாக இருப்பது எவ்வளவு, அனுமதியோடு ஓடுவது மட்டும் எவ்வளவு ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, எல்.4 லைசென்ஸ் பெறாமல், மின்சாரம் பெறாமல், ஆயில் எஞ்ஜின் மூலமாக ஓட்டுகிறார்கள். ஒரே காலத்தில் வாங்கியவர்கள் பாதிப்பேர் ஓட்டுகிறார்கள், பாதிப்பேர் ஓட்ட முடியவில்லை. இதைப் பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது ? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்க போகிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்வாறு ஓட்டுவது சட்டப்படி தவறு.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், நம்முடைய ராச்சியத்திற்கு மொத்தம் அனுமதிக்கப்பட்ட விசைத்தறிகள் எத்தனை ? அனுமதியற்று ஏற்படுத்தப்பட்டது அதிகமாக இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூன்றாவது பிளான் ஆரம்ப காலத்தில், இந்த விதமாக அனுதரைஸ்ட் பவர்லூம்கள் வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லி, அன்றைய தினத்தில் அவைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போடப்

பட்டது. அனுதரைஸ்ட் ஓம்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது என்று இன்னும் அதிகமாக இப்பொழுது 3,000-க்கும் மேல் புதிதாக அனுதரைஸ்ட் பவர் லூம்கள் வந்திருக்கின்றன.

Power-cut on factories

* 474 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have recently received any representation from the tea planters and tea-factory owners of the Nilgiris district regarding the power cut imposed on their factories; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) Reliefs to the extent feasible have been granted.

திரு. வை. சங்கரன் : சார், இந்த டீயின் மூலமாக பாரின் **எக்ஸ் சேஞ்ச்** கிடைக்கிறது. மொத்தத்தில் மின்சார கன்சம்ஷனும் 4 சத விகிதத்துக்கும் குறைவாக இருக்கிறது. ஆகவே, இந்த டீ. பாக்டரிகள் மூலமாகச் செய்யப்படும் தொழிலுக்கு பூரணமாகக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டும் என்கிற கோரிக்கை வந்ததா ? அதன்மேல் எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டீ பாக்டரிகள் தங்களுக்கு பவர் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு ராஜ்யத்தில் இருக்கக்கூடிய நிலையையொட்டி, நெருக்கடியை எல்லோரும் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்று, எந்த அள வுக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது.

தீ அணைப்பு நிலையங்கள்

*475 கேள்வி—**திரு. பி. ஜயராஜ் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலுகா நன்னிலம் நகரில் தீ அணைக்கும் படை (**Fire Service Station**) ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஜயராஜ்: சார், நன்னிலம் தாலுகாவில் ஏற்படுகிற தீ விபத்து களுக்கு, மாயூரம், திருவாரூர் முதலிய இடங்களிலிருந்து தீ அணைக்கும் படை வருவதற்குள்ளாக தீ பிடித்து சாம்பலாகிவிடுகிறது. ஆகவே, அங்கே தாலுகா தலைநகரத்திலேயே ஒரு தீ அணைக்கும் நிலையத்தை ஏற்படுத்த சர்க்கார் முன்வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலிலேயே இல்லை என்று சொன்னேன். நன்னிலம் திருவாரூரிலிருந்து 14 கிலோ மீட்டர்தான் என்று தெரிகிறது. அதோடு தீயணைக்கும் நிலையம் வைப்பது பற்றி, ப்ரையாரிடி கொடுத்து அந்த வகையில் நிறுவி வருகிறார்கள். லிஸ்டைப் பார்த்தால் கூட, கனம் அங்கத்தினர் கேட்கும் பகுதிக்கு இல்லைபோல் இருக்கிறது. திருவா ரூரில் இருப்பதால் அங்கத்தினர் பகுதியில் நெருப்பு ஏற்பட்டால், அந்த [illegible] தக்க ஏற்பாடுகள் செய்வார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இரண்டு தினங்களுக்கு முன்னால், தஞ்சையிலிருந்து 20 மைலுக்கு அப்பால் உள்ள சூரக்கோட்டை கிராமத்தில் ரூ. 30,000 பெருமானமுள்ள வைக்கோல் போர்கள் தீப்பற்றிப் போனது தெரியும். அது மாதிரி அடிக்கடி தஞ்சைப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டு, சேதம் உண்டாகிறது. பிரையாரிடி லிஸ்டைப் பார்க்காமல் முக்கியமான இடங்களில் தீ அணைக்கும் நிலையத்தை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சை ஜில்லாவிலே தீ அணைக்கும் நிலையங்கள், கும்பகோணம், மன்னார்குடி மாயவரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் முதலிய ஆறு இடங் களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இதர இடங்களுக்குப் ப்ரையாரிடி லிஸ்ட் போட்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் வேண்டும் என்றால், ஃபயர் ஸ்டேஷன் வைக்க முடியாது.

* 476 *Q*.—SRI. V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have proposed to locate a Fire Service Station at Dharmapuri, the headquarters of the newly formed District ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆம். ஆனால் தற்பொழுது பிரையாரிடி லிஸ்டின்படி (**Priority List**) வேறு ஆறு இடங்களில் முதலில் தீயணைக்கும் நிலையங்கள் ஏற்படுத்திய பிறகுதான் தர்மபுரியில் ஒரு நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். இதனால் இதை ஏற்படுத்த இன்னும் கொஞ்சகாலம் செல்லும்.

திரு. வை. சங்கரன் : ஒரு சில வாரங்களுக்கு முன்னால் விஜயலக்ஷ்மி மோட்டார் ஒர்க்ஸில் தீ விபத்து ஏற்பட்டு, முப்பது நாற்பது மைல்களுக்கு அப்பாலிருந்து ஃபயர் என்ஜின் வருவதற்குள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் சேதம் ஏற்பட்டு விட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? தருமபுரி ஜில்லா ஹெட்குவார்ட்டர்ஸாக இருப்பதால், அங்கே ஒரு ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன் வைப்பது பற்றி சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : தருமபுரி ஜில்லா தலைநகரமாக வந்திருப்ப தால், அங்கே ஒரு ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன அமைப்பது பற்றி அரசாங் கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. பின்னால்தான் ஒரு முடிவுக்கு வருவார்கள்.

திரு. எஸ். மணி: கனம் அமைச்சர் அவர்கள் பதிலளித்தபோது, ஆறு இடங்களில் புதியதாக ஃபயர் ஸ்டேஷன்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த ஆறு இடங்கள் என்ன என்ன என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆறு இடங்கள் என்று சொன்னது, ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் வைத்ததைச் சொன்னேன்.

Fire Stations at Dharmapuri will, therefore, be opened only after Fire Stations have been established in the first six towns, viz., Tirunelveli, Perambalur, Coimbatore, Tindivanam, Srirangam and Ramanathapuram.

Fire Service Department

* 477 *Q*.—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have resolved to raise the salary and service conditions of the employees of the Fire Service Department on a par with those in Police Department;

[29th March 1966

(*b*) whether there is any proposal to re-organise the department;

(*c*) if so, the details of the proposals; and

(*d*) whether any speed limit has been fixed for the fire service vehicles ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) போலீஸ் இன்ஸ்பெகடர்-ஜெனரல் (தீயணைப்புப் படை) அனுப்பியுள்ள கீழ்க்கண்ட முக்கிய செயற்குறிப்புகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளன.—

(i) துணை அதிகாரிகள் தரத்தையும், அவர்களுக்கு மேற்பட்ட தரத்தையும் சேர்ந்த தீயணைப்பு அதிகாரிகளின் தற்போதைய பதவிப் பெயரை மாற்றுதல் ;

(ii) வெளியூரிலுள்ள டிவிஷனல் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் பணியாளர்களை நியமிக்க அனுமதி அளித்தல் ;

(iii) வடக்கு, தெற்கு வட்டாரங்களைச் சேர்ந்த தீயணைப்புத் தலைமை அதிகாரிகளின் அலுவலகங்களை எடுத்துவிட்டு, அதிகார வரம்பை மேலும் பொருத்தமான அடிப்படையில் மாற்றியமைத்தல் ; தீயணைப்புத் தலைமை அதிகாரிகள் பதவிகள் இரண்டில் ஒன்றை கூட்டு நெறியாளர் பதவியாக உயர்த்துதல்—தீயணைப்புப் பிரிவு போலீசுத் துறையிலிருந்து முடிவாகப் பிரிவதற்கு முன்பு, ஓராண்டுக் கால அளவுக்கு போலீஸ் இனஸ்பெக்டர்-ஜெனரலின் நிர்வாகத்தில் தீயணைப்புத்துறை செயல்படும்பொருட்டு அவ்வாறு செய்ய வெண்டும்.

(iv) தீயணைப்புத் தலைமையிட அலுவலகத்தில் பணிபுரிவதற்காக நிர்வாகத் தனி உதவியாளர் பதவி ஒன்றை ஏற்படுத்துதல் ;

(v) நிலைய அதிகாரிகளுடன் தீ விபத்துத் தடுப்புப் பிரிவு ஒன்றை நிறுவுதல் ;

(எ) ஆம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: தீயணைப்புப் பிரிவைப் போலீஸ் துறையிலிருந்து பிரித்து, தனி அதிகாரியினுடைய தலைமையின் கீழ்தனித் துறையாக அமைக்கும் உத்தேசம் உண்டா ? அப்படியானால், எப்பொழுது முடிவு எடுக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : தீயணைப்புப் பிரிவை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களுடைய நிர்வாகத்திலிருந்து பிரிப்பதாக உத்தேசம் ஒன்றும் இல்லை. இருந்தாலும், வேலை துரிதமாக நடப்பதற்கு, நான் முன்பு சொன்னபடி, அவர்கள் சில ஆலோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். அவைபற்றி அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

New tank at Ottanagampatti

*478 Q.—Sri S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any proposal for the formation of a new tank (under the S.M.I.P.) at Ottanagampatti near Vedasandur is under the consideration of the Government; and

(*b*) if so, when it will be sanctioned ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இந்தத் திட்டத்தை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

29th March 1966]

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : என்னுடைய தொகுதியில் இம்மாதிரி நான்கு, ஐந்து திட்டங்கள் இருக்கின்றன. அவற்றுக்கு உடனடியாக சாங்ஷன் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் சபாநாயகர் : எந்தெந்தத் திட்டம் என்று சொல்லாமல், நான்கைந்து திட்டங்கள் என்று பொதுவாகச் சொன்னால், கனம் அமைச்சர் அவர்கள் எப்படிப் பதில் சொல்ல முடியும் ?

அரசாங்க நந்தனூர் உயர்நிலைப் பள்ளிகள்.

*479 கேள்வி.—**திரு. சி. சிவசுப்ரமணியம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசாங்க நந்தனூர் உயர்தர ஆண், பெண் பள்ளிகளில் இருக்கும் லைப்ரரிகளை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்போது அதற்கான வேலைகள் மேற்கொள்ளப் படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*480 கேள்வி.—**திரு. சி. சிவசுப்ரமணியம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசாங்க நந்தனூர் உயர்தர ஆண், பெண் பள்ளிகளில் வேலை செய்யும் மொத்தம் ஆசிரியர்கள், ஆசிரியைகள் தனித் தனியாக எத்தனை பேர் ?

(இ) அவரவர்கள் பெற்றிருக்கும் தகுதி என்ன ?

(உ) அவர்களில் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை வருமாறு—

(i) அரசாங்க நந்தனூர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி—

ஆசிரியர்கள்—31.

ஆசிரியைகள்—இல்லை.

(ii) அரசாங்க நந்தனூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி—

ஆசிரியர்—1.

ஆசிரியைகள்—25.

(இ) அவர்கள் பெற்றிருக்கும் தகுதிகள் விபரம் வருமாறு—

(I) அரசாங்க நந்தனூர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி—

(1) தலைமை ஆசிரியர் எம்.ஏ.,பி.எஸ்.சி., பி.டி.—1.

(2) பி. டி. ஆசிரியர்கள்—

உரிய கல்வித்தகுதி பெற்றவர்கள்—6.

உரிய கல்வித் தகுதி பெறாதவர்கள்—2.

(3) செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்—11.

(4) தமிழ் ஆசிரியர்கள்—

Iம்நிலை வித்துவான்—2.

II-ம்நிலை புலவர்—2.

(5) இந்தி ஆசிரியர் I-ம் நிலை (விசாரத்)—1.

(6) உடற்பயிற்சி நெறியாளர்—உடற்பயிற்சி டிப்ளோமா—1.

[29th March 1966

(7) உடற்பயிற்சி ஆசிரியர்கள்—உடற்பயிற்சி டிப்ளொமா—2.

(8) ஓவிய ஆசிரியர்—ஓவிய உயர்நிலை—1.

(9) கைத்தொழில் ஆசிரியர்கள்—T.T.C. (கைவேலைப் பயிற்சி)-2.

(II) அரசாங்க நந்தனூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி—

(1) தலைமை ஆசிரியை, பி.எஸ்.சி., பி.டி.—1.

(2) பி. டி. ஆசிரியர்கள்—

தகுதி பெற்றவர்கள்—5.

தகுதி பெறாதவர்கள்—3.

(3) செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்—9.

(4) தமிழ் ஆசிரியர்கள்—

தகுதி பெற்றவர் (B.O.L.)—1.

தகுதி பெறாதவர்கள்—3.

(5) இசை ஆசிரியை—1.

(6) இந்தி ஆசிரியர்—S.S.L.C.—1.

(7) தையல் ஆசிரியை III-ம் படிவம்—1.

(8) உடற்பயிற்சி ஆசிரியர் S.S.L.C (தேறாதவர்)—1.

(உ) (i) அரசாங்க நந்தனூர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி ஹரிஜன சமூகத்தவர்—11.

(ii) அரசாங்க நந்தனூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஹரிஜன சமூகத்தவர்—3.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, நந்தனூர் உயர்நிலைப்பள்ளியில் நந்தனூர் சரித்திரம் வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : அது இந்தக் கேள்வியிலே வராதே !

அரசாங்க நந்தனூர் மாணவர் விடுதி.

* 481 கேள்வி.—**திரு. சி. சிவசுப்ரமணியன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லா, சிதம்பரம் அரசாங்க நந்தனூர் மாணவர் விடுதியில் உள்ள உணவுக் கூடம் (Dining Hall) சமையல் அறை (Kitchen) இவைகளை விரிவுபடுத்தவும், அங்கு ஒரு பொது ஹால் (Common Hall) நிறுவுவது குறித்தும் அரசாங்கத்திற்கு அண்மையில் விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) சிதம்பரம் அரசாங்க நந்தனூர் மாணவர் விடுதியிலுள்ள சமையல் அறையை விரிவுபடுத்துவது குறித்தோ அங்கு ஒரு பொதுக் கூடத்தைக் கட்டுவது குறித்தோ முறையீடு எதுவும் பெறப்படவில்லை. ஆனால் மேற்கூறிய விடுதியில் தற்போதுள்ள இரண்டு உணவுக் கூடங்கள் போதுமானவையாக இல்லை என்பது பற்றி அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. எனவே டி விடுதியில் 1966–67-ல் மூன்றாவது உணவுக் கூடம் ஒன்றைக் கட்டுவது குறித்த செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

29th March 1966]

அரிசன நலப்பள்ளிக் கட்டடம்.

* 482 கேள்வி.—**திரு. சி. சிவசுப்ரமணியம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலூகா, தர்மநல்லூர் கிராமத்தில் ஹரிஜன நல இலாகாவால் ஹரிஜன நல பள்ளிக்கென கட்டிய கட்டடம் பூர்த்தியடையாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை துரிதமாக கட்டி முடிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) உள்ளூர் வளர்ச்சி வேலைத் திட்டங்களின்கீழ், ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பள்ளிக் கட்டட வேலை அவர்களால் காலம் தாழ்த்தப்பட்ட காரணத்தால் அரிசன நல இலாக்கா இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் அதை முடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரரிடம் எந்த வருஷத்தில் ஒப்பந்தம் பண்ணப்பட்டது ? ஏன் அவர் கட்ட முடியவில்லை என்பதற்கான காரணத்தை அரசாங்கம் கண்டுபிடித்ததா ? அதற்கு என்ன பரிகாரம் காணப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : 1958-ம் வருஷத்தில் இந்தக் கட்டடத்திற்கான எஸ்டிமேட் எல்லாம் போட்டு, முதலில் ஒரு கண்டிராக்டரிடம் வேலை ஒப்படைக்கப்பட்டது. கண்ட்ராக்ட் எடுத்தவர் வேலை செய்யாத காரணத்தால், இன்னொருவருக்கு கண்ட்ராக்ட் விடப்பட்டது. அவரும் சரியாகச் செய்யாமல் வேலை அப்படியே இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது அரசாங்கம் இந்த வேலையை அரிசன நல இலாக்கா மூலமாகச் செய்வதற்கு முன்வந்திருக்கிறது.

பருப்பு வகைகள்.

* 483 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து கடலை, துவரை, உளுந்து, பட்டாணி, ஆகிய பருப்பு வகைகள் வெளி மாவட்டங்களுக்குக் கொண்டுபோவதைத் தடை செய்து உத்தரவு ஏதேனும் சோதனைச் சாவடிகளுக்கு 15—11—1965-ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Some restrictions were issued early in November 1965.

(*b*) The movement of Bengal Gram and Gramdhal should not be allowed through the checkposts from Madras to other districts. The movement of other articles was not prohibited.

திரு. எஸ். மணி : அண்டை ராஜ்யங்களிலிருந்து கடலைப் பருப்பு முதலியவை நம்முடைய ராஜ்யத்திலுள்ள வியாபாரிகளுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு முறையில் கொடுப்பதற்கு வியாபாரிகள் சங்கம் கொடுத்தால்தான் பொதுமக்கள் வாங்குவார்கள் என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு முறையில் கொடுப்பதற்கும் வியாபாரிகள் சங்கம் கொடுப்பதற்கும் விலையில் வித்தியாசம் இருக்கிறது

[29th March 1966

என்று சொல்லுகிறார்கள். இது பற்றி அரசாங்கத்திற்கு வியாபாரிகள் சங்கம் ஒரு மனுக் கொடுத்ததா ? அப்படிக் கொடுத்திருந்தால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : விநியோகம் சம்பந்தமாகத் தனியாக கேள்வி போட்டால், விவரம் தெரிந்து சொல்லலாம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, வெளி மாகாணங்களிலிருந்து வாங்கப்படுகிற இந்தக் கடலைப் பருப்பு மிகவும் கெட்டுபோய், உபயோகப்படக்கூடிய நிலையில் இல்லை என்ற புகார் கூறப்படுவது உண்மையா ? அங்கே இருக்கும் விலைக்கும் நம்முடைய மாகாண விலைக்கும் ஒன்றுக்கு மூன்று மடங்கு விலை அதிகமாக இருக்கிறது என்பதும் உண்மையா ? அப்படியானால், விலையைக் குறைக்க என்ன வழிவகை செய்யப்படும் ?

கனம். திரு வெ. ராமைய்யா : இவை அத்தனையும் உண்மையே அல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நமது ராஜ்யத்திற்குப் பிற மாநிலங்களிலிருந்து இந்தப் பருப்பு வகைகள் எவ்வளவு கொண்டுவரப்படுகின்றன ? அவை எந்த முறையில் கொள்முதல் செய்யப்படுகின்றன ? அவற்றை அதிகமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பெங்கால் க்ராம், தூர்டால், இன்னும் இதுபோன்ற பருப்பு வகையறுக்கள் நமது ராஜ்யத்திற்கு மற்ற ராஜ்யங்களிலிருந்துதான் வரவேண்டும். குறிப்பாக, ராஜஸ்தான், மத்தியப் பிரதேஷ், பஞ்சாப், போன்ற மாநிலங்களிலிருந்து வரவேண்டும். சென்ற வருஷம், ஜூன், ஜூலை மாதங்களில் அங்கிருந்து வரக்கூடிய இந்தப் பருப்பு வகைகள் எல்லாம் நின்று விட்டன. அங்கிருக்கும் அரசாங்கம் அவ்வாறு பல முடிவுகள் எடுத்ததுதான் இதற்குக் காரணம். அதனால் இங்கு விலைவாசி மிக வேகமாக உயர்ந்து கொண்டே போயிற்று. இதைப் பார்த்த நமது ராஜ்ய முதல் அமைச்சர் அவர்கள், அங்கங்கே இருக்கக்கூடிய ராஜ்ய முதல் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதியதன் பேரில், அந்த ராஜ்யங்களின் முதல் அமைச்சர்கள் நம்முடைய முதல் அமைச்சருடைய கடிதத்திற்கு மதிப்புக் கொடுக்கக்கூடிய முறையில், நமக்கு அவர்கள் ஓரளவு இந்தப் பருப்பு வகையறுக்களைக் கொடுத்தார்கள். அவை இங்கு வந்தன. அப்படி வந்த பருப்பு வகையறுக்கள் வேறு ராஜ்யங்களுக்குப் போய்விடக்கூடாது என்பதற்காகத்தான் நாம் இந்தப் போக்குவரத்து நடமாட்டத்தைக் கொஞ்சம் தடை செய்யவேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக்கொண்டோம். பிறகு இந்த நிலை மேலும் மேலும் சீர்கெட்டுக்கொண்டே இருந்த காரணத்தால், கோர்ஸ் க்ரெயின்ஸ், பருப்பு வகைகள் நடமாட்டத்தைத் தடை செய்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, அவர்கள் தடை விதிப்பதற்கு வேண்டிய ஒரு அதிகாரத்தை நமக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டோம். அவர்கள் அதை டிசம்பரில் கொடுத்தார்கள்.

Movement of coarse grains including pulses and grams பற்றிய உத்தரவு போட்டதற்கு பிறகு இப்பொழுது அந்த நடமாட்டம் எல்லம் முறைப்படுத்தப்பட்டிருக்கிறது

9-00 a.m. **திரு. எஸ். முருகையன் :** வேறு மாநிலங்களிலிருந்து எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது. துவரை, கடலை போன்றவைகள் குவிண்டால் என்ன விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டது ? இங்கே கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்ன விலைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனியாகக் கேள்வி வேண்டும். இது நடமாட்டத்தைப் பொறுத்தது.

29th March 1966]

கிராம தானம்

* 484 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வத்தலக்குண்டிலுள்ள தமிழ்நாடு சர்வோதய மண்டல், கிராமதான கிராமங்களில் உள்ள வெளியூர் நிலச்சுவான்தார் நிலங்களையும், மடத்து நிலங்களையும் பற்றி முதல் அமைச்சருக்கு யாதாஸ்து ஏதேனும் சமர்ப்பித்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes. The Tamil Nad Sarvodaya Mandal submitted a Memorandum, dated 8th April 1965.

(*b*) A statement * showing the requests made and the orders passed thereon is placed on the Table of the House.

திரு ஆ. கு. சுப்பையா : அரசாங்கம் அளித்திருக்கக்கூடிய பதிலில் அந்த மண்டல் ஆலோசனை 8-லே சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் எக்காரணத்தைக் கொண்டும் வெளியேற்றப்படக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் சட்டப்படி சில காரணங்களைச் சொல்கிறார்கள். அங்கே விவசாயம் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களைப் பதிவு செய்வது கிடையாது. வேறு எங்கேயோ இருக்கக்கூடியவர்களைத்தான் பதிவு செய்கிறார்கள். ஆகவே நேரடியாக சாகுபடி செய்யக்கூடியவர்களைப் பதிவு செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த மண்டலினுடைய கோரிக்கையையும், பதிலையும் கனம் அங்கத்தினர் படித்துப் பார்த்தால் தெரியும். என்ன காரணத்தைக்கொண்டும் விவசாயிகளை அப்புறப்படுத்தக்கூடாது என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு சட்டத்தின் அடிப்படையிலே போதுமான ஏற்பாடுகள் இருக்கின்றன என்று சொல்லி இருக்கிறோம்.

Sample survey of vehicles

* 485 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—,

(*a*) whether the results of the sample survey of vehicles, using the bypass road with the second bridge over the river Cauvery conducted by the Divisional Engineer (Traffic Cell), Madras in October 1963 have been announced; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) The details of Survey were published in the Annual Report of the Highways Research Station for 1963–64.

(*b*) The through traffic on National Highway 45 at Tiruchirappalli Town limit constitutes 30 to 35 per cent of the total automobile traffic. The bypassable traffic constitutes 10.5 to 13 per cent of the total automobile traffic in the case of South-bound traffic and 19.2 to 21.4 per cent of the total automobile traffic in the case of North-bound traffic. By providing suitable facilities of servicing and fuelling, restaurants and hotels, the bypassable traffic could

* Printed as Appendix I on pages 404–408.

be increased by another 10 to 12 per cent in the case of South bound traffic and 5 to 7 per cent in the case of North bound traffic. The ultimate bypassable traffic could be 23 per cent in case of South bound traffic and 26 per cent in the case of North bound Traffic.

திரு. வை. சங்கரன் : இந்த பை-பாஸ் ரோடானது பழுதான நிலைமையில் இருப்பதினாலே பூரணமாகப் பயன்படவில்லை என்ற குறை சொல்லப்படுகிறது. அது வாஸ்தவம் தானா? அப்படியானால் சீக்கிரமாக பழுது பார்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : புதிதாக அமைக்கப்பட்டது நஞ்சை நிலத்தில் அமைக்கப்பட்ட ரோடு. அதற்குத் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்ற முறையிலேதான் சமீபத்திலே மராமத்து செய்திருக்கிறார்கள். புதிதாகப் போடப்பட்டிருப்பதால் துரு டிராஃபிக்குக்காக பயன்படுத்தப் படவில்லை. ஆனால் முன்பு சர்வே எடுத்தபொழுது இருந்ததைவிட இப்பொழுது அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்று நினைக்கிறேன்.

சாலைக் கண்காணிப்பாளரின் சம்பள விகிதம்

* 486 கேள்வி.— **திரு. சா. ராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பெரும்பாட்டை இலாகாவில் பணிபுரியும் சாலை ஆய்வாளர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களில் பணி புரியும் சாலை ஆய்வாளர்களுக்கும் சம்பள விகிதத்தில் வித்தியாசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை.

திரு. எஸ். மணி : பெரும்பாட்டை இலாகாவில் பணிபுரியும் என்ஜினீயரிலிருந்து கீழ்நிலை ஊழியர்கள் வரை சம்பள வித்தியாசம் இருக்கிறது. அதே போல் பஞ்சாயத்து யூனியன்களில் என்ஜினீயர்களிலிருந்து கீழ்நிலை ஊழியர்கள் வரை சம்பள வித்தியாசம் இருக்கிறது. அவர்களுக்கு ஒரு தகுதியைக் கொடுத்து வித்தியாசமில்லாமல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது ரோடு இன்ஸ்பெக்டர்ஸ் சம்பந்தப்பட்டது. அதிலே வித்தியாசம் இல்லை என்றுதான் நான் சொன்னேன்.

முசுகுந்தா நதி குறுக்கே நீர்த்தேக்கம்

* 487 கேள்வி.—**திரு. எல். ஆனந்தன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் முசுகுந்தா நதி குறுக்கே லக்கிநாயக்கன்பட்டி அருகே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும்படி தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து ஒரு கோரிக்கை வந்ததா ;

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) & (இ) : துணைச் சபாநாயகர் ஸ்ரீ கே. பார்த்தசாரதி, எம்.எல்.எ. அவர்களிடமிருந்தும் லக்கிநாயக்கன் பட்டியைச் சேர்ந்த சில கிராமவாசிகளிடமிருந்தும் இது குறித்து முறையீடுகள் பெறப்பட்டுள்ளன. லக்கிநாயக்கன்பட்டி கிராமத்திற்கருகில் முசுகுந்தா நதிக்குக் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதற்கான திட்டம் குறித்து முன்னோடிப் புலனாய்வுப் பணி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: முசுகுந்தா நதியின் குறுக்கே லக்கிநாயக்கன்பட்டி அருகே ஒரு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்துவதற்கு என்ன செலவாகும் ? செலவு ஒரு புறம் இருக்க, அந்த நீர்த்தேக்கத்தி

னால் எத்தனை கிராமங்கள், எந்த எந்தக் கிராமங்கள் பலன் அடையும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது பிரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் நடந்துகொண்டிருக்கின்ற நிலையில்தான் இருக்கிறது. அதற்குப் பிறகு தான் விவரங்கள் சொல்ல முடியும்.

கோமுகி நதித் திட்டத்திலுள்ள வீடுகள்

* 488 கேள்வி.—**திரு. எல். ஆனந்தன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோமுகி நதித் திட்டம் முடிவடையும் நிலையில் இருப்பதால் அங்கு கட்டப்பட்ட வீடுகளை பின்னிட்டு உபயோகப்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் இடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The buildings will be utilised to the extent possible for further departmental requirements and the balance, if any, transferred to other Departments of Government requiring them.

(*b*) Details have not yet been finalised.

ஆரம்ப சுகாதார நிலையம், உறையூர்.

*489 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள உறையூர் என்ற கிராமத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் (Primary Health Centre) திறக்க உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இதுவரை திறக்காமைக்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) The Government sanctioned the opening of a Primary Health Centre at Woraiyur, Nellikuppam Panchayat Union on 2nd July 1965 and the Primary Health Centre has commenced functioning on 27th January 1966. A Medical Officer could not be posted earlier.

அரசாங்க மருத்துவ மனைகள்

*490 கேள்வி.—**திரு. சி. சிவசுப்ரமணியம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகா, பாளையங்கோட்டையில் அரசாங்க மருத்துவ மனைக்குக் கட்டடம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில் அவ்வேலை எப்போது துவங்கப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) பாளையங்கோட்டையில் உள்ள அரசாங்க மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தேசிய நெருக்கடியை முன்னிட்டு தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

MR. SPEAKER : Is there another Palayamkottai in Chidambaram taluk ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, Sir.

[29th March 1966

*491 Q.—Sri A. KUNJAN NADAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the staff of the Ottapidaram and other hospitals in Tirunelveli district taken by the Government from the District Board are paid the Government scale of pay; and

(b) if not the reasons therefor ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Full particulars about the educational qualification, pay drawn under the previous employer, relaxation of rules, if any, for absorption into Government service, etc., have not been received in respect of some of the staff of the Medical Institutions which were taken over by Government. The Director of Medical Services has been asked to furnish them quickly. On receipt of the particulars orders for the absorption of the staff in Government service will be issued and they will be then paid the Government scale of pay and allowances.

Sri M. S. SELVARAJAN: Are the Government aware that there has been abnormal delay in absorbing such employees and may I know what action the Government intend taking to expedite the matter ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELUM: Government could not do it earlier. Certain difficulties arose with regard to audit objections. The Director of Medical Services has been requested to furnish complete details of the absorption of these officers and as soon as the report is received, the matter will be dealt with.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாவட்டக் கழகங்கள் நிர்வாகத்திலிருந்த ஆஸ்பத்திரிகளை எடுத்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதிலே தற்போது அரசாங்க மருத்துவ மனையிலேயே வேலை செய்கிறவர்களும், மாவட்டக் கழகத்திலிருந்து வந்தவர்களும் பணி புரிகிறார்கள். இரண்டு பேர்களுக்கும் ஒரே குவாலிபிகேஷன் இருந்தும் கூட சம்பள விகிதத்தில் வேறுபாடு இருக்கிறதா.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாவட்டக் கழக மருத்துவ மனைகளில் வேலை செய்கிறவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளில் எடுத்துக் கொள்ளப்படும்போது அவர்களுடைய குவாலிபிகேஷனை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அவர்கள் இதற்கு முன்பு இருந்த மருத்துவ மனைகளில் எந்த விதமான சம்பளம் கொடுக்கப்பட்டது என்பதை எல்லாம் விவரமாக ஆராய்ந்துபார்த்து அதன் பிறகு அவர்களுடைய சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: : டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் மறைந்து ஆறு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் அவை கலையும்போது தஸ்தாவேஜுகளை எல்லாம் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டுக்கு அனுப்பத் தவறி விட்டார்கள். சுகாதாரப் பிரிவிலும் மருத்துவப் பிரிவிலும் இந்த மாதிரி கோளாறு இருக்கிறது. இன்றைக்கு மெடிகல் சர்விஸஸ் மட்டும் எப்படி அந்தத் தகவல்களைச் சேகரிக்க முடியும். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? பழைய தஸ்தாவேஜுகள் எங்கே இருக்கின்றன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டிஸ்ட்ரிக்ட் போர்டு அதாரிடிஸ் தான் அவற்றைக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். குறிப்பாக, ஒட்டபிடாரம், எட்டையபுரம் மருத்துவ மனைகளில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. சாத்தான்குளத்திலிருந்து அரசாங்கம் ரிபோர்ட்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

29th March 1966]

வெளிநாடு செல்லும் மருத்துவ மாணவர்கள்

*492. கேள்வி.—**திரு ஏ. குஞ்சன் நாடார் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) இங்கிலாந்தில் F.R.C.S. and M.R.C.P. படிப்பிற்கு மருத்துவ மாணவர்கள் செல்ல அனுமதிப்பதற்கு அல்லது அவர்களைச் சிபாரிசு செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள கோட்பாட்டின் விவரங்கள் யாவை ?

(இ) கடந்த ஆண்டில் மேற்படி படிப்பிற்காகப் பணியிலிருந்தும் பிற வகையிலும், அங்கு சென்ற மாணவர்கள் எத்தனை பேர் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) மருத்துவ மாணவர் வெளிநாடு சென்று பயில இப்பொழுது சிபாரிசு செய்யப்படுவதில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Sri V. S. S. MANI: When there is dearth of medical men, in our State why should we allow our Medical Graduates to go abroad for jobs under the guise of further training?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: This particular qualification is not F.R.C.P. It is M.R.C.P. for which students from our State are anxious to go. Under the circumstances we have now stopped sending our candidates abroad in view of the fact that we have got our own post-graduate facilities here. Apart from that, candidates who go abroad to do this M.R.C.P. go to the United States, work there and then apply for Fellowship of the Royal College of Physicians.

திரு. ம. கமலநாதன் : இப்படி அமெரிக்காவுக்குச் செல்லும் மாணவர்கள் அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிடுகிறார்கள். ஆகவே, இங்கே டாக்டர்கள் பஞ்சம் ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பாமல் தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவர்கள் இங்கிருந்து போகும் போது அவர்கள் திரும்பி வருவார்களா அல்லது அங்கேயே தங்கிவிடுவார்களா என்பது நமக்குத் தெரியாது. அனுப்பிய பிறகுதான் தெரிகிறதே தவிர, அதற்கு முன்பே ஒன்றும் தெரியாது.

மாநில மகளிர் பொதுநல போர்டு

*493 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநில மகளிர் பொதுநல போர்டுக்கு (State Women's Welfare Board) 1964-65-ல் நமது சர்க்காரால் அளிக்கப்பட்ட நிதி உதவி எவ்வளவு ?

(இ) போர்டு உறுப்பினர்களுக்கு ஹானரேரியம் ஏதாவது அளிக்கப் படுகிறதா ?

(உ) ஆமெனில், எவ்வளவு தொகையளிக்கப்படுகிறது ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (a) No grant was sanctioned to the Board. Funds were allotted by Government to the Women's Welfare Department for carrying out various activities under Women and Child Welfare.

(b) No.

(c) Does not arise.

திரு. எஸ். மணி : தமிழ்நாடு பெண்கள் பொதுநல போர்டின் தலைவர் யார் என்று அறியலாமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள்தான் அதற்குத் தலைவி.

வண்டியூர் கண்மாய் மீன் பாசிக் குத்தகை.

*494 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை வண்டியூர் கண்மாய் மீன் பாசி இந்த ஆண்டுக்கு குத்தகைக்கு விடப்பட்டதா ?

(இ) ஆம் என்றால் எவ்வளவு ரூபாய்க்கு ?

கனம் திரு கோ. பூவராகன் : (அ) ஆம். 1965-க்கு மீன்பாசி குத்தகை, மேலமடை மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு விடப்பட்டது.

(இ) ரூ. 11,660-க்கு.

மீன் பதனப் படுத்தும் தொழிற்சாலை.

*495 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மீன் பதனப்படுத்தும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கத் தனியார் துறையில் விண்ணப்பங்கள் ஏதேனும் வந்தனவா ?

(இ) ஆயெனில் எத்தனை பேருக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) தமிழ்நாட்டில் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கத் தனியார் துறையிலிருந்து இரண்டு விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகின்றன.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : ஒன்று கடலூர், மற்றொன்று தூத்துக்குடி.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, மீன் பதனச்சாலை ஆரம்பிப்பதற்குத் தனியார் முன்வந்தால் சர்க்கார் தனியாருக்கு ஏதாவது உதவி செய்யுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அவ்வாறு தனியார் துறையில் முன்வந்தால் அரசாங்கம் ஏதாவது உதவி தேவையென்றால் கொடுப்பதாக இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இரண்டிலே ஒன்று கடலூரில் என்றார்கள். கடலூரைவிட மரக்காணம் வசதியாக இருக்கும். அதைப் பற்றிப் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு கோ. பூவராகன் : இப்போது விண்ணப்பம் போட்டிருப்பவர்கள் கடலூர்தான் வசதியாக இருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

மீனளத் துறை.

*496 கேள்வி.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் கேம்பில் மீனளத் துறை ரிசர்ச் அஸிஸ்டெண்டு தேர்வுக்கு, சென்ற 3—9—1965-ல் தேர்வு நடத்தியதில் எத்தனை பேர் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்?

(இ) அவர்களில் எத்தனை பேர் ஆதித்திராவிட மாணவர்கள் என்பதை அறியலாமா?

(உ) மொத்த வேகன்சிகள் எத்தனை ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் கேம்பில் 3—9—1965-ல் ரிசர்ச் அஸிஸ்டெண்டு பதவிக்காக தமிழ்நாடு மீனளத் துறையினரால் நேர்முகத் தேர்வு ஒன்றும் நடத்தப்படவில்லை.

(இ) & (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

Scheme for provision of drinking water

* 497 *Q.*—SRI T. P. ALAGAMUTHU : } SRI V. SANKARAN : } Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether this Government have submitted any scheme to the Centre for the benefit of the areas where scarcity of drinking water exists; and

(*b*) if so, whether a copy of the statement will be placed on the Table of the House ?

கனம் திரு சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ராஜ்ய முழுமையிலும் சுகாதாரக் குடிதண்ணீர்த் திட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் முடியாவிட்டாலும், ஐந்தாவது திட்ட காலத்திற்குள்ளாகவாவது எல்லா கிராமங்களும் இணையும்படியாக பூர்த்தி செய்ய அரசாங்கம் ஆவன செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மத்திய சர்க்கார் ஹெல்த் மினிஸ்ட்ரியின் கீழ் இந்த மாதிரி ஸ்கேர்சிடி ஏரியாக்களைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்வதற்காக ஒரு ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டிவிஷனை போடப்பட்டிருக்கிறது. திருச்சி, சாத்தூர், ஈரோடு போன்ற இடங்களில் குடிதண்ணீர்த் திட்டத்திற்காக ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 1,226 கிராமங்களில் அவர்கள் பிரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் செய்திருக்கிறார்கள். 320 கிராமங்களுக்கு டீடைல்டு எஸ்டிமேட்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நீடிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கோரியிருக்கிறோம். இந்தப் பிரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் எல்லாம் முடிந்து டீடைல்டு எஸ்டிமேட்ஸ் எல்லாம் தயாரித்து டிரிங்கிங் வாட்டர் போர்டுக்குச் சமர்ப்பித்த பிறகு அவர்கள் மற்ற மாகாணங்களிலிருந்து வரக்கூடிய பூர்வாங்க யோசனைகளையெல்லாம் பரிசீலித்து ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரிப்பார்கள்.

திரு. வை. சங்கரன் : டிரிங்கிங் வாட்டர் ஸ்கேர்சிடி ஏரியா என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அவர்கள் உதவி வழங்க திட்டம் இருக்கிறதா ? அப்படி என்றால் அரசாங்கம் அந்த உதவியைப் பெற என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மத்திய சர்க்காருடைய அபிப்பிராயத்தின் பேரில்தான், அவர்களுடைய அனுமதியின் பேரில்தான் இந்த மாதிரி இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது. இன்வெஸ்டிகேஷனுக்கு ஆகும் செலவை எல்லாம் அவர்கள்தான் ஒத்துக்கொள்கிறார்கள்.

மாநிலத்திலுள்ள பிற்பட்ட பகுதிகள்.

*498 கேள்வி.—**திரு. மீ. கல்யாணசுந்தரம், திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தனிக் கவனம் செலுத்தி வளர்ச்சியடையச் செய்ய வேண்டியுள்ள பிற்பட்ட பகுதிகள் எவை என்பது பற்றி அறிவிக்குமாறு திட்டக் கமிஷன் அல்லது இந்திய அரசாங்கம் தகவல் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அளிக்கப்பட்ட பதிலின் விவரம் யாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : Yes. The Planning Commission requested this Government to furnish the particulars regarding certain indicators of economic development drawn by it. They were collected to the extent possible and furnished to the Planning Commission in 1962 and 1963.

In 1965 the Planning Commission has communicated a revised list of indicators and requested for the particulars relating to them also. The particulars collected are being processed and a reply will be sent shortly.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய அடையாளங்கள்படி நம்முடைய மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகள் பின் தங்கி இருக்கின்றன என்ற ஆராய்ச்சி செய்யப்பட்டதா ? விவரங்கள் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிளாக் வாரியாக சில பிளாக்குகள் பிற்போக்கான பகுதி என்று நிர்ணயிக்கப்படுகிறது. இராமநாதபுரம் ஜில்லாவிலே முன்பு ஜமீன் பிராந்தியமாக இருந்த தாலுகாக்கள் எல்லாம் பின் தங்கிய பிராந்தியமாகக் கருதப்படுகின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இவைகளுக்கு எத்தகைய உதவி அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக இந்த விவரங்கள் சேகரிக்கப் படுகின்றன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தந்தப் பிராந்தியத்திற்கு ஏற்ற வகையிலே முன்னேற்றம் ஏற்படுவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. நேற்று நான் விளக்கினேன். இராமநாதபுர மாவட்டத்திலே கடலோரப் பகுதிகளில் தென்னை வைத்து அகதிகளுக்கு உதவி செய்யப்படுகிறது. தென்னை வைத்து பயிராக்குவது திட்டம். பிளாக்குகளில் பிற்போக்கான நிலைமை இருந்தால் மின்சாரம் கொடுப்பதிலே சலுகை காட்டப்படுகிறது. மொத்தத்திலே பின் தங்கிய பகுதி என்று கவனிக்கப்படுவதிலே தொழில் வளர்ச்சி, விவசாயத்திற்கு வேண்டிய வசதிகள், பயிரிடக்கூடிய நில அளவு, எவ்வளவு மின்சாரம் கிடைக்கிறது, ரெவின்யூ எக்ஸ்டென்ட் என்ன, பர்காபிடா என்ன என்பதெல்லாம் ஆராய்ந்து பார்த்து வகுக்கப் படுகிறது.

திரு. செ. மாதவன் : பின் தங்கிய பகுதிகளுக்கு தனியாக திட்டங்கள் தீட்ட வேண்டுமென்ற யோசனையை திட்டக் கமிஷனும், மத்திய அரசும் கூறியதா ? அதை ஏற்றுக் கொண்டு நம் மாநில அரசாங்கம் திட்டங்களைத் தீட்டும்போது இந்தப் பகுதிகளை தனியாக வைத்து நிதி ஒதுக்கீடு செய்ய திட்டம் தீட்ட அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நேற்று நான் விளக்கியதுபோல், பகுதிய சர்க்காருடைய கருத்து மாவட்டம் பூராவும் பின் தங்கிய மத்தியாக இருந்தால் அதைப்பற்றிய விவரங்கள் வேண்டுமென்பது. ஆனால், அந்த நிலை இம்மாநிலத்தில் இல்லை. மாவட்டத்திற்குள்

எது பிற்போக்கான பகுதியோ அதைத்தான் எடுத்துக் கொண்டு அதில் என்ன விசேஷ கவனம் செலுத்துவது என்பது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கோசல்ராம் : பின் தங்கிய பகுதிகள் என்றால் எந்தெந்த அடிப்படையில் எல்லாம் அவை எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தெளிவு படுத்துவது என்றால் திருநெல்வேலி ஜில்லாவில் நீறியநல்லூர், பாலூர், சாத்தான்குளம் போன்ற இடங்களில் நீர்தேக்கங்களை கிடையாது. ஆற்றுவசதி கிடையாது. சாதாரண வானம் பார்த்த பூமியாக இருக்கக்கூடிய இடங்கள் எல்லாம் ஏன் அந்த ஜில்லாவில் எடுக்கப்படவில்லை ? அந்த அடிப்படையை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னென்ன வகையில் பிற் போக்கான பகுதிகள் என்று நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப்பற்றிக் குறிப்பிட்டேன். முன்பு ப்ளாக் வாரியாக எவை எவை பிற்போக்கான பகுதிகள் என்பது எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன என்றும் அதில் கவனம் செலுத்தப்படுகிறது என்றும் சொன்னேன். ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட கிராமங்கள் எந்த ப்ளாக்கில் வருகின்றனவோ, அந்த ப்ளாக்கு பிற்போக்கான ப்ளாக்கு என்று கருதப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : எத்தனை ப்ளாக்குகள் பிற்போக்கானவை என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சிபார்சு ஒன்றுமில்லை. எவ்வளவு ப்ளாக் என்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. கே. ஆர். ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம் : இப்போதுள்ள டி. ப்ளாக்குகள் எல்லாம் பின் தங்கிய பகுதிகள் என்று கருதப் படுகிறதா? மின்சாரம் கொடுப்பதில் பின் தங்கிய பகுதிகளுக்கு சலுகைகள் அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். எந்த வகையில் சலுகைகள் அளிக்கப்படுகின்றன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ப்ளாக்குகள் ஏ, பி. ஸி. என்று இப்படி வகுக்கப்படுகிறது. குறிப்பாக பிற்போக்கான பகுதிகள் எவை என்று ப்ளாக்கில் நிர்ணயிக்கப்படுகிறது. மின்சாரம் கொடுப்பதில் ரேட் கூட குறைவாக கொடுக்கப்படுகிறது, ரொம்ப பிற்போக்கான பகுதிகளுக்கு.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ப்ளாக் அடிப்படையில் வைக்கிற போது இப்போது ப்ளாக்குகளை நிர்ணயித்திருப்பது பழைய ஃபிர்க்காக்கள், இரண்டு ஃபிர்க்காக்கள் கூட சேர்த்து சில பிளாக்குகள் இப்போது அமைந்திருக்கின்றன. ஒரு ஃபிர்கா எல்லா அம்சங்களிலும் மிகவும் பிற்போக்கானதாகவும் ஒரு ஃபிர்கா தகுதியுள்ளதாக இருந்தாலும் கூட சில ஃபிர்க்காக்கள் ப்ளாக் லெவலில் நிர்ணயிக்கும்போது அவைகள் வசதியுள்ள ப்ளாக்குகள் என்றுகூட நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே ஃபிர்க்காவை அடிப்படையாக வைத்து செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைத்தான் குறிப்பிட்டேன். ப்ளாக்குகள், பிற்போக்கான ப்ளாக்குகள் என்று வகுக்கப்பட்டிருக்கிற போது அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் ப்ளாக் கவனிக்கப்பட வேண்டியது சமுதாய நலத் திட்ட வேலையைப்பற்றி கவனிக்கும்போது அது. குறிப்பிட்ட பிராந்தியங்கள், மிகப் பிற்போக்கான பிராந்தியங்களில் பொதுவாக விசேஷ கவனம் செலுத்துவது என்பதை நிர்ணயிக்கும்போது ப்ளாக்கிற்குள்ளே எந்தக் கிராமங்கள், எந்தப் பகுதிகள் ரொம்ப பிற்போக்கான நிலையில் இருக்கிறது என்று பார்த்து அதற்கான திட்டங்கள் வகுக்கவேண்டியிருக்கிறது.

[29th March 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : திட்டக் கமிஷன் சில இண்டிகேட்டர்ஸ் அனுப்பியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அவற்றின் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் என்னிடம் இல்லை.

உயர்நிலைப் பள்ளிகளின் இடமாற்றம்.

*499 கேள்வி—**திரு. சி. சிவசுப்ரமணியம்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சிதம்பரத்தில் மாணவிகளை முன்னிட்டு அரசாங்க உயர்தர பெண் பள்ளியை பச்சையப்பன் உயர்தர பள்ளிக்கும், பச்சையப்பன் உயர்தர பள்ளியை சிதம்பரம் ரெயில்வே ஸ்டேஷன் ஓரம் இருக்கும் அரசாங்க உயர்தர பெண் பள்ளிக்கும் இடம் மாற்றவேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஏதேனும் மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை ;
(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

" ஹையர் கிரேடு " ஆசிரியர்கள்.

*500 கேள்வி.—**திரு. சி. சிவசுப்ரமணியம்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

ஹையர் கிரேடு ஆசிரியர்கள் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்த பிறகு செகண்டரி கிரேடு பரீட்சை எழுதி பாஸ் செய்யும்வரையில் அவர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகவே பாவிக்க அரசாங்கத்தில் ஏதேனும் யோசனை உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. ம. கமலநாதன் : துவக்கப்பள்ளிகளில் வேலை செய்பவர்கள் எல்லாம் ஆசிரியைகளாக இருக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதை நடைமுறையில் கொண்டு வர என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : படிப்படியாக செகண்டரி கிரேட் ஆசிரியைகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஹையர் கிரேட் ஆசிரியர்கள் பத்தாவது வகுப்பு பாஸ் செய்த பிற்பாடு அவர்கள் செகண்டரி கிரேட் பரீட்சை நேரடியாக எழுத முடியுமா ? அல்லது அவர்கள் செகண்டரி கிரேட் பயிற்சி பெறவேண்டுமா ? செகண்டரி கிரேட் பரீட்சை நேரடியாக எழுத மார்ச் மாதத்தில் பரீட்சை எழுத வசதி செய்வதைப் போன்று அக்டோபரிலும் எழுத வசதி செய்து தரப்படுமா ? இப்போது செய்யப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எவ்வளவு பேர்கள் பரீட்சை எழுத தயாராயிருக்கிறார்கள் என்பதை பொறுத்திருக்கும். அக்டோபர் மாதத்தில் பரீட்சை எழுத ஏற்பாடு செய்யப்படுகிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

ஆசிரியர் நல நிதி.

*501 கேள்வி.—**திரு. சா. ராமசாமி** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) ஆசிரியர் நல நிதி சேமிப்பு எந்த ஆண்டு முதல் துவங்கப் பெற்றுள்ளது ?

29th March 1966]

(இ) இதுவரை சேர்ந்துள்ள தொகை எவ்வளவு ?

(உ) இதுவரை ஆசிரியர் நலனுக்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 1964-ஆம ஆண்டு முதல் துவக்கப்பட்டது.

(இ) இதுவரை எந்த தொகையும் சேரவில்லை.

(உ) இதுவரை எந்த தொகையும் செலவழிக்கப்படவில்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[Note:—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT.

THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966.

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1966.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966.

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS APPROPRIATION BILL, 1966 (L.A. BILL No. 5 OF 1966).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

" That the Madras Appropriation Bill, 1966 a (L.A. Bill No. 5 of 1966) be taken into consideration."

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Appropriation Bill, 1966 (L.A. Bill No. 5 of 1966) be taken into consideration."

* **திரு. து. ப. அழகமுத்து** : கனம் தலைவர் அவர்களே, நம் மாநிலத்தின் 1966-67-ம் ஆண்டுக்கான 188 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்தை 6 நாட்கள் பொது விவாதமாகவும், 48

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 26th March 1966

மான்யக் கோரிக்கைகளை 17 நாட்களும் விவாதித்து வோட்டளித்து அதற்கான நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்ற இருக்கிறோம். நம் சட்டமன்ற விதி 153 (2)-ன்படி பொது விவாதம் எட்டு நாட்களுக்கு மேல் போகாமலும், கோரிக்கைகள் 20 நாட்களுக்கு மேல் போகாமலும் இருக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் நம்முடைய பொது விவாதம் ஆறு நாட்களும், கோரிக்கைகள் 17 நாட்களிலும்தான் நாம் இதுவரை விவாதித்திருக்கிறோம். ஏன் இவ்வளவு நாட்கள் குறைவாக வைத்து சில முக்கியமான கோரிக்கைகளை எல்லாம் சுருக்கமாக விவாதித்து முடிக்கவேண்டுமென்ற ஒரு அவசியம் நமக்கு ஏற்படுகிறது? மாவட்ட மான்யம் 7 கோடி ரூபாய். மாநில அரசாங்கம் வழங்கும் கடன்கள், முன்பணம் இவை 32 கோடி ரூபாய். இந்த இரண்டு மான்யங்களையும் ஒரே நாளில் விவாதித்திருக்கிறோம். அதைப்போலவே, விவசாயத்திற்கு 10 கோடி
9-30 a.m. ரூபாய் செலவு செய்கிறோம். அரசாங்க திட்டங்களுக்கு மூலதனச் செலவுக்கு 74 கோடி செலவு செய்கிறோம். இவை இரண்டும் ஒரு நாளில் தான் விவாதித்திருக்கிறோம். கல்விக்கு 45 கோடி ஒதுக்கியிருக்கிறோம். இந்த 45 கோடி செலவு செய்வதையும் ஒரே நாளில் தான் விவாதித்து இருக்கிறோம். அதைப்போலவே போலீஸ், மெடிக்கல், கல்வி, அரிஜன நலன், சமுதாய நலன் இவைகள் எல்லாம் ஒவ்வொரு நாளில் தான் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. மோட்டார் ஸ்கீம்களை எடுத்துக்கொண்டால் அதற்கு அரை நாள் தான் விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இவைகள் எல்லாம் மிக முக்கியமான கோரிக்கைகளாகும். அதிக பணச்செலவு செய்கிறோம். பல விஷயங்களை இதில் சொல்லவேண்டிருக்கிறது. ஆனால் ஒதுக்கப்படுகின்ற ஒரு நாளில் இவைகளை சரியாக சொல்ல முடிவதில்லை. உதாரணத்திற்குச் சொல்வதாக இருந்தால் கல்வியில் மட்டும் எடுத்துக்கொண்டால், யூனிவர்சிட்டி, கல்லூரிகள், நடுத்தரக் கல்வி, ஆரம்பக் கல்வி, தொழில் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, பயிற்சி கல்விக் உடற்பயிற்சிக் கல்வி, என்.ஸி.ஸி., மியூஸியம், சிறப்புக் கல்வி இப்படி 13, 14 இனங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் சேர்த்து, ஒரே நாளில் விவாதித்தால் எப்படி இது சம்பந்தமான பல விஷயங்களை விவாதிக்க முடியும் ? சாதாரணமாக எதிர்கட்சி உறுப்பினர்களில் 7 அல்லது 8 பேர்களுக்குத்தான் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஒரே நாளில் எல்லா விஷயங்களையும் எப்படிச் சொல்வது? ஆகவே விவாதிக்கப்படுகின்ற நாட்கள் போதுமானதாக இல்லை. இதை அதிகமாக்கவேண்டும் என்று இதே சட்டமன்றத்தில் பல முறை கூறியிருக்கிறோம். எதிர்கட்சியிலுள்ள தலைவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதனால் தான் இவ்விதம் வைத்தோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறக்கூடும். ஆனால் சட்டமன்றத்தை கூட்டுவிக்கும்போது எதிர்கட்சித் தலைவர்களை கலந்து ஆலோசிப்பதில்லை. சட்டமன்றத்தை அவர்களாகவே கூட்டு கிறார்கள். கூட்டிய பிறகு எப்படி விவாதத்திற்கு நாட்களை ஒதுக்குவது என்று நிச்சயிக்கிறார்கள். அப்போது எப்படியும் மார்ச் 31-ம் தேதிக்குள் முடிக்கவேண்டும் என்பதற்காக சட்டமன்ற அலுவல்களை நிர்ணயிக்கிறார்கள். ஆகவே விவாதத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நாட்கள் போதுமானதாக இல்லை. நம்முடைய ஃபைனான்ஷியல் மான்யுவலில் எப்படி பட்ஜெட் சமர்ப்பிப்பது என்பதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் . **about the end of February in each year** என்று தான் இருக்கிறதே ஒழிய பிப்ரவரி மாதம் கடைசியில் தான் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. பிப்ரவரி 20-ம் தேதியே பட்ஜெட் கூட்டத்தை ஆரம்பிக்கலாம். அப்படி ஆரம்பிக்காமல் பிப்ரவரி கடைசியில் பட்ஜெட்டை சமர்ப்பித்து விவாதத்தை ஆரம்பிக்கிறார்கள். இது போதுமானதாக இல்லை. ஒவ்வொரு உறுப்பினரும், ஒவ்வொரு இலாக்காவின் மீது தங்களுடைய கருத்துக்களை பல்வேறு துறைகளில் சொல்வதற்கு இப்போதுள்ள காலம் போதாது. நாம் இப்போது சட்டமன்ற விதியை பொது விவாதத்திற்கு எட்டு நாட்களும், டிமான்ட்களுக்கு 20 நாட்களும்

என்று வைத்திருக்கிறோம். அது போதாது. சட்டமன்ற விதிகளைத் திருத்தி பொதுவிவாதத்திற்கு 10 நாட்களும், மான்யக் கோரிக்கைகளுக்கு 30 நாட்களும் என்ற அளவிலே அமைத்தால் எல்லா விஷயங்களைப்பற்றியும் விவாதிப்பதற்கு எல்லோருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அந்த காரியத்தை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று ஃபைனான்ஷியல் மான்யுவலில் 69-ம் பிரிவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுப்பதற்காக ஒரு வாரத்திற்கு முன்னலேயே டீடெய்ல்ட் பட்ஜெட் எஸ்டிமேட்டுகள் செக்ரட்டரி அவர்களுக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நடைபெறுவது என்னவென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு வந்த பிறகுதான் டீடெய்ல்ட் பட்ஜெட் எஸ்டிமேட்டுகள் கிடைக்கிறது. காலதாமதம் ஆகின்ற இந்த காரியத்தை நிதி இலாக்காதான் செய்கிறது. இதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். இவையெல்லாம் பொதுவிவாதத்தைப் பொறுத்த விஷயங்கள். அடுத்தாற்போல், டிமான்டைப்பற்றி சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். நமது அரசாங்கத்தில் 437 உட்பிரிவுகளைக்கொண்ட 74 இலாக்காக்கள் இருக்கின்றன. இந்த 74 இலாக்காக்களுக்கும் சேர்த்து 48 மான்யக் கோரிக்கைகளை இங்கு வைக்கிறார்கள். பல இலாக்காக்கள் இணைக்கப்படுகின்றன. இணைக்கப்பட்டுத்தான் பல இலாக்காக்களினுடைய விவாதங்கள் நடைபெறுகின்றது. உதாரணமாகச் சொல்வதானால் மாதர் நல இலாகா; இந்துமத அற நிலைய இலாகா இவைகள் எல்லாம் ஹெட் ஆப் ஸ்டேட் என்ற கோரிக்கையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. மாதர்நல இலாக்காவுக்கு அமைச்சராக இருக்கின்றவர்கள் அமைச்சர் ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள். ஆனால் இதற்கு இங்கு மான்யம் கேட்பது 8-வது மான்ய கோரிக்கையில் நமது முதலமைச்சர் அவர்கள் 48 லட்சம் ரூபாய் செலவு செய்யக்கூடிய இந்த கோரிக்கையைப் பற்றி விவாதிப்பதற்கு உறுப்பினர்களுக்கு போதுமான சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. காரணம் வேறு பல முக்கியமான பிரச்னைகள் வந்துவிடுகின்றன. அதனால் இதைப்பற்றிய விஷயங்களை விட்டு விட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மாதர் நலன்களைப்பற்றியும், அவர்களுக்கு கொடுக்கப் படவேண்டிய உரிமைகளைப்பற்றியும் அதிகமாக பேசுகின்ற ஆளுங் கட்சியிலிருக்கும் தாய்மார்கள் தங்கள் நல இலாக்காவைப்பற்றி பேசுவதற்கு தனியாக ஒரு நாள் ஒதுக்க வேண்டும் என்று ஏன் இதுவரை கேட்காமல் இருக்கிறார் என்று தெரியவில்லை. இதை தனி மான்யமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று தான், இந்துமத அற நிலைய இலாகா இருக்கிறது. இதை மாவட்டங்களுக்கான கோரிக்கைகள் வரும்போது, அதில் இணைக்கப்படுகிறது. 1966-67-ல் 26 லட்சம் ரூபாய் இதற்கான செலவு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த செலவில் இலாக்காவின் மூலமாக முக்கால் பங்கு வருமானமாக வந்து விடுகிறது என்று சொன்னாலும் இதைப்பற்றி தனியாக விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. இந்த இலாகா சம்பந்தமான கேள்விகளுக்கு முன்பொருமுறை பதில் அளிக்கும்போது விக்கிரகங்கள் காணமல் போய்விடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட பல முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. இதைப் பற்றி தனியாக விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. காரணம் இன்னொரு மான்யத்தோடு இணைத்திருப்பதுதான். தஞ்சாவூரில் சிவபுரம் என்ற இடத்தில் பத்து வருடங்களுக்கு முன்னால் ஒரு கிணறு தோண்டினபோது அங்கு நடராஜர், சிவகாமி, கணேசர், அய்யர் முதலிய சிலைகள் கிடைத்தன. அதைப்போன்ற விக்கிரகங்கள்

இப்போது பம்பாயில் பெட்வார் என்பவரிடத்தில் இருப்பதாக சொல்கிறார்கள். அவரிடத்தில் எப்படி இந்த விக்கிரகங்கள் கிடைத்தன ? அப்படியானால் இங்கே இருப்பது போலியா அல்லது பம்பாயில் பெட்வார் என்பவரிடத்தில் இருப்பது போலியா ? எப்படி அவர்கள் இந்த சிலையை பெற்றார்கள் என்பது தெரியவில்லை. ஒரு வேளை இதே போன்று போலியை அவர்கள் உருவாக்கி வைத்திருக்க வேண்டுமென்றால், இவைகளின்மேல் மோல்ட் செய்து தான் உருவாக்கியிருக்கவேண்டும். அப்படியானால் அதற்குரிய பெர்மிஷன் கொடுக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. இவைகளை எல்லாம் கேட்டுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. காரணம் தனியாக இதற்கென்று மான்ய விவாதம் செய்ய நாள் ஒதுக்கப்படாமல் இருப்பது தான். கோவில் சிலைகளில் 20 பங்கு மாற்றப்பட்டிருக்கிறது, கோவில் விவகாரங்களில் காங்கிரஸ்காரர்களை தவிர எதிர்கட்சியினர் அதைப்பற்றி கவனிப்பதற்குக் கூட சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. இதுவரை மான்யங்கள் இணைக்கப்பட்டிருப்பதைப்பற்றி சொன்னேன். சில மான்யங்கள் பிரிக்கப்பட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. செய்தித் துறையை எடுத்துக்கொண்டால், இதற்கு எட்டு லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இந்த மான்யத்தை இரண்டாகப் பிரித்து மான்யம் 8-ல் 23 ஆயிரமும், மான்யம் 9-ல் எட்டு லட்சமும் சேர்த்து மொத்தத்தில் 8 லட்சத்து 90 ஆயிரம் என்று மான்யம் கேட்கப்பட்டிருக்கிறது. இதற்கான மான்யத்தை முதலமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். செய்தித்துறையைப்பற்றி தனியாக விவாதம் கிடையாது. ஆனால் இந்த துறைக்கு என்று தனியாக அமைச்சர் இருக்கிறார். தனியாக அமைச்சர் இருந்தும் இந்தத்துறை சம்பந்தமான விஷயங்களை சொல்லும்போது, இதைப்பற்றி செய்தி துறை அமைச்சர் பதில் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறார். காரணம் முதல் அமைச்சர் அவர்கள் தான் இதற்கும் பதில் சொல்ல வேண்டும். செய்தித் துறை அமைச்சர் பதில் சொல்வதில்லை. முதலமைச்சர் அவர்கள் அதற்கு சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. காரணம் வேறு பல முக்கியமான காரியங்கள் வந்துவிடுகின்றன. ஏதாவது முக்கியமான காரியங்களைப்பற்றி செய்தித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டால் அவர் நடந்துகொள்வது எப்படியிருக்கிறது என்றால், பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாணவன், தனக்கு புத்தகம் வாங்க கொடுத்த காசைக்கொண்டு சினிமா பார்த்துவிட்டு, பின்னால் தகப்பன் அதைப்பற்றி கேட்கும்போது, சினிமா பார்த்து விட்டு வந்த பையன் எப்படி தாயின் பின்னால் வந்து ஒளிந்து கொண்டு நிற்பானோ, அதே போல் நமது செய்தித் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களின் பின்னால் நிற்கின்ற நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. விளம்பரத்துறையைப்பற்றி தனியாக ஒதுக்கி அதற்கென்று தனியாக ஒரு அமைச்சரையும் தந்து, அவருக்கு செய்துத்துறை அமைச்சர் என்று பெயரையும் கொடுத்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது அந்த துறைக்கான பணத்தை கேட்பது முதலமைச்சர் அவர்கள், அது சரியாக இருக்குமா என்பதைத் தான் யோசித்துப்பார்க்கவேண்டும். கேவலம் பஞ்ச தணிப்பு என்ற தலைப்பில் தனியாக மான்யம் ஒதுக்கி 11 ஆயிரம் ரூபாய் மான்யம் பெறுகிறார்கள். ஆனால் செய்தித்துறையைப் பொறுத்த அளவில் 10 லட்சம் கேட்கப்படுகிறது. 8 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் இந்தத் துறைக்கும், அதிகாரிகளுக்கும் ஏற்படுகின்ற செலவையும் சேர்த்துப்பார்த்தால் 10 லட்சம் வருகிறது. இப்படிப்பட்ட ஒரு துறைக்கு ஏன் தனியாக மான்யம் வைக்கக்கூடாது ? இன்னொரு வேடிக்கை என்னவென்றால் செய்தித் துறையில் டைரக்டர் ஒருவர் மேலதிகாரியாக இருக்கிறார். ஆனால், அவருக்கு தனியான அந்தஸ்து இல்லை. அவர் பப்ளிக் டிபார்ட்மெண்டோடு இணைக்கப்பட்டிருக்கிறார். இது எப்படியிருக்கிறது என்றால் Satellite Minister and shadow Director என்று சொல்லக்கூடிய அளவில் தான் இந்தத்துறை இருக்கிறது.

இந்த நிலையில் நமது முதலமைச்சர் அவர்களின் தலையீடு இல்லாமல் வருகின்ற மற்ற அமைச்சர்களின் மான்யமே கிடையாது என்று சொல்லலாம்.......

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலமைச்சர் நிதி அமைச்சராகவும் கூட இருக்கிறார்.......

திரு. து. ப. அழகமுத்து : நிதி அமைச்சராக இருக்கிறார் என்றால் பணம் கொடுக்கலாம், அதற்காக தானேதான் செய்யவேண்டும் என்கிற நிலை ஒன்றும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல கைத்தறித் தொழில் இண்டஸ்ட்ரீஸோடு இணைக்கப்பட்டிருக்கிறது. கைத்தறி தனியாக விவாதிக்கப்பட வேண்டிய விஷயம். ஏனென்றால் அதிகமான தொகை இதற்கு மான்யமாகக் கொடுக்கிறோம். பல காரியங்களுக்குக் கொடுக்கிறோம். ஆனால் விவாதம் இண்டஸ்ட்ரீஸோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அது தனியாக பிரிக்கப்படவேண்டும்.

அதேபோல வீடு கட்டும் போர்டு. எப்படி ரெவின்யூ போர்டு எல்லா இலாக்காக்களிலும் அதிகாரம் வகிக்கிறதோ அதேபோல வீடு கட்டும் போர்டு எல்லா மான்யங்களிலும் பங்கு பெறுகிறது. இந்த இனத்தைப் பிரித்து, அதைப் பற்றித் தனியாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வேண்டும்.

ஆகவே, மாதர் நலம், செய்தித் துறை, இந்து அற நிலையத் துறை; கைத்தறி, வீடு கட்டும் போர்டு ஆகியவைகளைப் பொறுத்தவரையில் தனி மான்யம் வேண்டும்.

நான் முதலிலே குறிப்பிடும்போது சில விஷயங்கள் மறைக்கப்படுகின்றன என்று கூறினேன். அப்படி மறைக்கப்படுவதிலே ஒன்று நம் முதல் அமைச்சர் அவர்களுக்கு ப்ரஸ் ரிலேஷன்ஸ் ஆஃபீஸர் ஆக ஒருவர் இருக்கிறார். அவருக்கு எதிலிருந்து சம்பளம் தருகிறார்கள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் 1966-ம் வருடம் மார்ச் மாதம் 25-ம் தேதி யன்று மைலாப்பூர் காந்தி மன்றத்தில் " காந்தி தர்சனம் " என்ற புத்தகத்தை வெளியிடும் வெளியீட்டு விழாவில் பேசுகிறார், "நம் சர்க்காரில் ஆளும் கட்சிக் கொறடாவாக இருக்கிற திரு. ராமச்சந்திரனுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று. ஒரு சர்க்கார் அதிகாரி அப்படிப் பேசலாமா ? இதைப்பற்றிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைப்பதில்லை. ஏன் என்றால் அவர்களுக்கு எப்படிப் பணம் கொடுக்கப்படுகிறது என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

சரி, மானியக்கோரிக்கைகள் அதிகமாகப் போகக்கூடாது என்று உண்டா ? இல்லை, அதிகமாகலாம். ஏன் என்றால், 1955-56-ல் 42 கோரிக்கைகள்தான் இருந்தன. இன்றையதினம் 1965-66-ல் 84 கோரிக்கைகளாக அது வளர்ந்திருக்கிறது. இடையிலே குறைந்திருக்கிறது, கூடியிருக்கிறது. ஆகவே கோரிக்கைகளை அதிகமாக்கி விவாதத்தில் நல்ல பயனை உண்டாக்க அமைச்சர் அவை முயற்சிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வெள்ளைக்காரன் காலத்தில் அமைக்கப்பட்ட முறையிலேயே கணக்குத் தயாரிப்பு இருக்க வேண்டுமா என்பது யோசிக்கப்படவேண்டிய ஒன்று. நம்முடைய நிதி இலாகா தயாரிப்பு முறையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பலவகை என்று ஒரு இனத்தில் கணக்குகள் எல்லாவற்றையும் சேர்த்து விடுகிறார்கள். அவைகள் என்ன என்று இப்போது தயாரிக்கும் முறையிலிருந்து புரிந்துகொள்ள முடியவில்லை. இவைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் பற்றி ஒரு குறிப்பு கொடுக்கிறார்கள். அந்தக் குறிப்பிலே உள்ள புள்ளிவிவரங்களுக்கும் பட்ஜெட்டுக்கும் சம்பந்தம் இருப்பதாகப் புரியவில்லை. ஏன் என்றால் பட்ஜெட்டோடு தொடர்பு

படுத்திப் பார்க்கும்போது புரிந்துகொள்ள முடியவில்லை. நான் அறிந்த
வரையில் திட்ட லொகாவிற்கும் நிதி இலாகாவிற்கும் கருத்து வேறுபாடு
இருப்பதாகத் தெரிகிறது. இதை அமைச்சர் அவை கவனிக்க வேண்டுமெ
ன்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல கார்ப்பரேஷன் விவகாரத்தைப் பற்றி கனம் முதல்
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், "கொடுத்த பணத்தைச் செல
வழிக்கவில்லை" என்று. அதே சமயத்தில் தாங்கள் ஒதுக்கிய பணத்தைச்
செலவழிக்கவில்லை என்றாலும் வேறு இனத்தில் செலவிடுகிறோம் என்று
பெருமையோடு கூறிக்கொண்டார்கள். சர்க்காருக்கு இருக்கிற வசதி கார்ப்ப
ரேஷனுக்குக் கிடையாது. எதற்காக ஒதுக்கப்பட்டதோ அதற்குத்தான்
செலவிட வேண்டும். செலவு செய்ய நிர்வாக வசதிகள் வேண்டும்.
நிர்வாக வசதிகள் இருந்தால் மட்டும் போதாது, சட்டம் துணை செய்ய
வேண்டும். முனிசிபல் சட்டத்தைத் திருத்தும்போது முன்னாள் மேயர்
திரு. முனுசாமி அவர்கள் இந்தத் திருத்தங்கள் நிர்வாகச் சிக்கல்களை
உண்டாக்கும், காரியம் ஆற்ற முடியாது என்று சாட்சியம் கூறியிருக்
கிறார். அதை எடுத்துப் பார்த்தால் நலமாக இருக்கும் என்று கனம்
முதல் அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொண்டு, கார்ப்பரேஷன் சட்டத்
திற்கு உட்பட்டு நடந்துகொண்டிருக்கிறது, வீணான பழிகளைச் சுமத்த
வேண்டாம் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***புலவர் கா. கோவிந்தன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று
இந்த நாட்டை ஆண்டு வருகிற காங்கிரஸ், இந்த காங்கிரஸ், ஆட்சிக்கு வரு
கிற காலத்தில் இந்த காங்கிரஸினுடைய வளர்ச்சிக்குப் பாடுபட்ட அந்தக்
கட்சி தியாகிகளுக்கு நன்மை செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை
நான் மறுக்கவில்லை. அந்த முறையில் காங்கிரஸ் தியாகிகளுக்கு நம்
முடைய சர்க்கார் நிலங்களை வழங்கி தியாக மான்யங்களை அங்காங்கு உண்
டாக்கியிருக்கிறார்கள். அதற்கும் இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்
கள் மறுப்புக் கூற மாட்டார்கள். ஆனால், நம்முடைய சர்க்கார், நம்முடைய
சர்க்காருடைய கருவூலங்களை காங்கிரஸ் தியாகிகளுடைய சொந்த உடமை
யாக ஆக்கும் காரியத்தைச் செய்து வருகிறது என்ற குற்றச்சாட்டை
நான் இங்கே கூற விரும்புகிறேன். உதாரணத்திற்கு, இந்த காங்கிரஸ்
தியாகிகளில் தமிழ்ப் பண்ணை என்ற புத்தக நிலையத்தை வைத்து நடத்து
கிற சின்ன அண்ணாமலை என்பவர் ஒருவர். அவர் பல புத்தகங்களை வெளி
யிட்டு வருகிறார். அந்த நிலையம் எப்படிப்பட்ட பணியைப் புரிந்து வரு
கிறது என்பதற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது "விடுபட்ட
கிளிகள்" என்ற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தை
வெளியிடுவதற்கு அமெரிக்க சர்க்கார் பண உதவி அளித்திருக்கிறது.
பண உதவி அளிக்கும் நேரத்தில் இந்தப் புத்தகத்தின் விலை ரூ. 3-க்கு
மேல் இருக்கக்கூடாது என்ற ஒப்பந்தத்தின் பேரில் அளிக்கப்பட்டது.
அதே முறையில் புத்தகத்தை வெளியிட்டு, ரூ. 3 என்று போட்டு வெளி
யிட்டு, அமெரிக்காவுக்கு அனுப்பியாகி விட்டது. அமெரிக்காவுக்கு ரூ. 3
என்று போட்டு அனுப்பிய அதே புத்தகத்தை நம் மார்க்கெட்டில் ரூ. 5-க்கு
விற்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையத்திற்கு நம் அரசாங்கம் நம் அரசாங்கப்
பணத்தை வாரி வாரி இறைத்து இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக்
கூற விரும்புகிறேன்.

ஹரிஜன நலத் துறையில் ரூ. 12,000-க்கு அந்தக் கம்பெனியின்
புத்தகங்களை வாங்கி வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கம்பெனி சாதாரண
மாக ரூபாய்க்கு 25 காசு கமிஷன் தருவது வழக்கம். ஹரிஜன நலத்
துறையில் வாங்கிய புத்தகங்களுக்கு கமிஷனே இல்லை. இதற்கு அமைச்சர்
என்ன பதில் கூற இருக்கிறார்? இன்னொரு பெரிய கொடுமை நடந்
திருக்கிறது, நடக்க இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
அதே கம்பெனியின் புத்தகங்களை ரூ. 48,000-க்கு நம்முடைய கல்வித்
துறை அரசாங்கப் பணத்தைக் கொடுத்து வாங்கி மாநிலத்திலே இருக்கிற
பள்ளிகளுக்கும் நூல் நிலையங்களுக்கும் வழங்க ஒரு ஏற்பாடு செய்து வரு
கிறது. இது ஏழு மாத காலமாக அரசாங்கத்திலே தாமதப்பட்டு வருகிறது

முன்னால் இந்த மாநிலத்தின் கல்வி இயக்குனராக இருந்த திரு. என். டி.
சுந்தரவடிவேலு அவர்கள் அப்பதவி வகித்த நேரத்திலேயே இப்படிப்
பட்ட முயற்சியை கனம் முதல் அமைச்சர் அவர்கள் செய்தார்கள். ஆனால்
அந்த கல்வி இயக்குனர் நம் கல்வி இலாகா, கம்பெனிகளின் ஏஜெண்டாக
இருக்க முடியாது என்று கூறி விட்ட காரணத்தினால் அதை அப்போது
செய்ய முடியவில்லை. அது மட்டுமல்ல, அரசாங்கத் துறையில் முன்னால்
தலைமைச் செயலாளராக இருந்தவர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. தியாகி
களுக்குச் சலுகைகளைச் செய்யவேண்டுமென்றால் முதல் அமைச்சர் கைப்
பணத்திலிருந்து கொடுத்துக்கொள்ளட்டும், சர்க்கார் பணத்தைப் பாழாக்க
மாட்டேன் என்று கூறி விட்டார். அவரும் இப்போது ஓய்வு பெற்று
விட்டார். குறுக்கே நந்தி போல் இருந்த இயக்குனர் வேறு இடத்திற்கு
அனுப்பப்பட்டு விட்டார். நந்தி விலகி விட்டது. செயலாளரும் போய்
விட்டார், இப்போது ரூ. 48,000-ஐ வாங்குவதற்கு ஏற்பாடு ஆகி கவர்னர்
கையெழுத்துக்குப் போகும் நிலையில் இருக்கிறது என்று அறிகிறேன். இது
நியாயம்தானா? தமிழ் நாட்டிலே எத்தனையோ கம்பெனிகள் இருக்கின்
றன. தரமான புத்தகங்களை வெளியிடுகிற கம்பெனிகள் இருக்கின்றன.
பல புத்தகங்களை வாங்க ஒரே கம்பெனியைத் தேர்ந்தெடுத்த காரணம்
காங்கிரஸ் தியாகி நடத்தக் கூடிய கம்பெனி என்ற ஒரே காரணம் தான்.
முதல் அமைச்சர் பெயரிலும், உள்துறை அமைச்சர் பெயரிலும் வரக்கூடிய
புத்தகங்கள் கூட வாங்கக் கூடிய புத்தகங்களுள் இருக்கும் என்று நினைக்
கிறேன். இப்படிப்பட்ட அநியாயம் எந்த நாட்டிலும் நடைபெறவில்லை.
சர்க்கார் பணம் தியாகிகளின் புத்தகங்கள் வாங்கப்படுவதற்கு வழங்கப்படு
வது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன். சிபாரிசு செய்வது
மட்டுமல்லாமல் வாங்குவதற்கு மறைமுகத் தூண்டுதல் கூட செய்யப்
பட்டிருக்கிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது. திருச்சி மாவட்ட
நூல் நிலையக் குழு புத்தகங்கள் வாங்க ஏற்பாடு செய்திருக்கிறது. திரு.
சின்ன அண்ணாமலைக்குரிய தமிழ்ப் பண்ணை, சங்கப் பலகை ஆகிய இரு
கம்பெனிகளில் புத்தகங்களை வாங்குவதற்கு ரூ. 7,000-க்கு அனுமதி
கொடுக்கப்பட்டிருக்கிறது. புக்ஸ் இண்டியா கம்பெனி என்ற காங்கிரஸ்காரர்
நடத்தக் கூடிய கம்பெனியின் புத்தகங்களை வாங்குவதற்கு ரூ. 5,000-க்கு
அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அருணோதயம் என்ற கம்பெனி,
தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தில் பணிபுரியும் வள்ளியப்பன் சகோதரர்
நடத்தும் கம்பெனியிலிருந்து புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ. 3,500-க்கு
அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பழனியப்பா கம்பெனியின் புத்தகங்கள்
வாங்குவதற்கு ரூ. 5,000-க்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சென்னை
மாநிலத்தில் பெரிய பெரிய வெளியீட்டு நிலையங்களெல்லாம் இருக்கின்றன.
அந்தக் கம்பெனிகளுக்கு ரூ. 100, 200-க்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, இப்படி
காங்கிரஸ்காரர்களுடைய கம்பெனிகளுக்கு பெரிய தொகைக்கு ஆர்டர்
கொடுப்பது முறைதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அடுத்து,
ரஹீம் என்ற ஒரு காங்கிரஸ்காரர் புத்தகம் எழுதி வருகிறார்கள். அவர்
புத்தகங்களைப் பாடப் புத்தகங்களாக வைக்காமல் துணைப்புத்தகங்களாக
வைப்பதற்கு ஒரு ஏற்பாடு நடந்தது. இதற்கு முன்னால் இருந்த கல்வி
இயக்குனர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்கள் இதற்கு சிபாரிசு
செய்ய முடியாது என்று மறுத்து விட்டார்கள். இப்பொழுது என்ன
ஆகியிருக்கிறது என்றால், அந்தப் புத்தகங்களை வாங்கவேண்டும் என்று
நம்முடைய கல்வித் துறையிலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.
அது மட்டுமல்ல. ஆங்காங்கு செல்லுகின்ற கல்வி அதிகாரிகள் ஒவ்வொரு
ஆசிரியரையும் எவ்வளவு புத்தகங்கள் வாங்கினீர்கள் என்று கணக்குக்
கேட்டு அனுப்புகிற ஒரு நிலைமை நடந்திருக்கிறது. இது நல்லதுதானா?
கல்வித் துறையை விளம்பர இலாகாவாகவோ அல்லது மற்ற கம்பெனி
களின் ஏஜெண்டுகளாகவோ ஆக்குவது முறை தானா என்பதுபற்றி
முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, தமிழ் வெளியீட்டுக் கழகத்தில் பல புத்தகங்கள் அச்சடிக்கப்
பட்டு வாங்கப்படாமல் இருக்கின்றன என்று நம்முடைய முதல் அமைச்சர்
அவர்கள் குற்றம் சாட்டினார்கள். தமிழ் பயிற்சி மொழித் திட்டம் வந்து
விட்டது. வேண்டுமென்றெல்லாம் கேட்டார்கள், மொழி பெயர்ப்பு நூல்

[புலவர் கா. கோவிந்தன்] [29th March 1966

களை வாங்குவதற்கு ஆட்கள் இல்லை என்று சொன்னார்கள். இதற்கு காரணம் என்ன என்று எண்ணிப் பார்க்கிறபொழுது, இந்தப் புத்தகங்களை வெளியிடுகின்ற முறையில் நடக்கின்ற நியாயமற்ற செயல்கள்தான். சாதாரணமாக ஒரு டபிள் டிம்மி அச்சுக்கு கூலி ரூ. 35-க்கு மேலே இல்லை. ஆனால், இவர்கள் ரூ. 55 கொடுத்து வருகிறார்கள். அது மாத்திரமல்ல. ப்ரூஃப் ரீடர்ஸ் என்று தனியாக வைத்திருக்கிறார்கள். ப்ரூஃப் ரீடிங்குக்காக ஒரு பாரத்திற்கு ரூ. 15 கொடுக்கிறார்கள். சாதாரணமாக புத்தகக் கம்பெனி ரூ. 5-க்கு மேல் கொடுப்பது இல்லை. இப்படிப்பட்ட முறையிலே பணத்தை வாரி வழங்கி, புத்தகங்களின் விலை அதிகமாக இருக்கும்படிச் செய்வது நியாயம்தானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, இந்தத் துறையிலே எப்படிப்பட்ட ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று பார்ப்பதற்காக இந்த மன்றத்தில் இருக்கிற சில உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இதைப் பரிசீலிக்க வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாவட்டங்களிலுள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கு வேண்டிய புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இருக்கக்கூடிய ஒரு முறையை இந்த சர்க்கார் ஆண்டுக்கு ஆண்டு மாற்றிக்கொண்டு வருகிற நிலையைப் பார்க்கிறோம். மாவட்ட வளர்ச்சி மன்ற கல்வி நிலையக் குழு இதைச் செய்யவேண்டும் என்ற ஒரு ஏற்பாடு இருந்தது. இந்த ஏற்பாட்டை இடையிலே மறுத்துவிட்டார்கள். மறுபடியும் இந்தக் கல்வி நிலையக் குழுவுக்கே இந்த அதிகாரத்தைக் கொடுக்க முன்வந்தார்கள். கடைசியில் மாவட்ட ஆட்சித் தலைவர் தாங்கள் விரும்பிய இரண்டு பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களை தேர்ந்தெடுக்க வேண்டும். கல்வித் துறை இயக்குனர் தான் விரும்பிய இரண்டு மாவட்டக் கல்வி அதிகாரிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அதோடு கூட மாவட்ட ஆட்சித் தலைவர், ஆக ஐவர் சேர்ந்த ஒரு குழு புத்தகங்களை தேர்ந்தெடுக்கும் என்ற ஒரு நிலையை இப்பொழுது உருவாக்கியிருக்கிறார்கள். சர்க்கார் கையை பலப்படுத்திக் கொண்டால், அதிகாரிகளின் கையை பலப்படுத்திக்கொண்டால், அந்த அதிகாரிகளைக்கொண்டு ஆளும் கட்சியினர் தங்களுக்கு வேண்டிய கம்பெனிகளுக்கு சலுகை செய்ய இது ஒரு மறைமுகமான வழி என்ற குற்றச்சாட்டை நான் கூறிக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியிலே நான் நீண்ட நாட்களாக கேட்டு வருவது தண்டரை அணை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே இதற்கு 'ஏ' பிரயாரிடி கொடுக்கப்பட்டு, உடனடியாக எடுத்துக்கொண்டு முடிக்கப்படவேண்டிய திட்டமாக இது சேர்க்கப்பட்டிருந்தது. இதற்கு ரூ. 77 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1965-66-ல் முடிக்கவேண்டும் என்ற அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருந்தும் கூட, இந்தத் திட்டம் இன்னும் எந்த இடத்தில் இருக்கிறது என்பதைக் கூட கண்டுகொள்ள முடியவில்லை. தண்ணீர் ஒரு சொட்டுக் கூட வீணாகாமல் பயன்படுத்தியாகி விட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாறு, செய்யாறு என்று இரண்டு ஆறுகள் இருக்கின்றன. அவற்றுள் மணல் ஓடுகிற ஆறாகிய பாலாற்றில் அணை கட்டி, அதனுடைய இம்ப்ரூவ்மெண்டுக்காக ரூ. 44, 45 லட்சம் பணம் கூட செலவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி மணல் ஓடுகிற ஆற்றில் அணை கட்டியிருக்கும்பொழுது, நீர் ஓடுகிற செய்யாற்றில் அப்படிப்பட்ட ஒரு அணையைக் கட்டாமல் அந்த மாவட்டம் வளர்ச்சி பெற முடியாத நிலைமையில் இருப்பது வருந்தத்தக்கதுதான். இதில் அரசியல் நோக்கம் இருக்குமானால், நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன், உறுதிமொழி தருகிறேன், இந்த செய்யாற்றில் அணை கட்டுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டால் நான் என்னுடைய தொகுதியில் போட்டியிடாமல் கூட நின்று விடுகிறேன் என்று நம்முடைய உணவு அமைச்சர் அவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, அந்த அணையைக் கட்டி முடித்துத் தர வேண்டும் என்று தங்கள் மூலம் உணவு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

29th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அமைச்சர் அவர்கள் உங்களுடைய தொகுதியில் நிற்கவில்லையாம். அதனால் இது பிரயோசனம் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : என்னுடைய மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தொல்லை கொடுக்கக்கூடியது பாலாறு படுகை விதிகள். நிபுணர்கள் இதில் கருத்து மாறுபாடு கொண்டிருக்கிறார்கள். ஒரு கிணற்றுக்கு 10 அடிக்கு பக்கத்தில் இன்னொரு கிணறு தோண்டினால் கூட அந்தக் கிணற்றுத் தண்ணீர் இந்தக் கிணற்றுக்கு வருவதில்லை. அப்படியிருக்கும்பொழுது 200 கெஜ தூரத்திலுள்ள பாலாற்று ஊற்றை கிணறு கெடுத்துவிடும் என்று சொல்லி, கிணறுகளுக்கு மின்சாரம் வழங்குவது என்று சொன்னால் கிணறு ஆற்றினுடைய ஊற்றைக் கெடுக்காது என்று சர்டிபிகேட் கொடுத்தால்தான் அனுமதி வழங்கப்படும் என்று கூறுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு பெரும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, இந்தத் தொல்லையைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பாலாற்றில் நீர்வரும்பொழுது, மாமண்டூர் கலிங்கு வழிந்து, கழிவடை நீர் செல்லுகின்ற ஒரு மடு இருக்கிறது. அந்த மடுவிலிருந்து ஆங்காங்கு விவசாயிகள் கொண்டம் கட்டி தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளுகிறார்கள். அப்படி கொண்டம் கட்டிக் கொள்ள குண்டியாந்தண்டலம் மக்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படி கொண்டம் கட்டிக்கொள்ளுவதில் என்ன நிலைமை என்றால், அந்த இடத்தில் அந்த மடு அதிக அகலமாக இருக்கிறது. மண் கிடைக்காத காரணத்தினால் கொண்டம் அவ்வப்பொழுது கட்டுவது இயலாத நிலையாக இருக்கிறது. அவர்களுக்கு கல் கொண்டம் கட்டித் தரவேண்டும் என்று கேட்கிறார்கள். கல் கொண்டம் கட்டித் தருவதற்கு முன்னால் ஒரு ஏற்பாடு நடந்தது. ஆனால், அடுத்து இருப்பது செங்கற்பட்டு மாவட்டம், நமது முதல் அமைச்சர் அவர்களுடைய மாவட்டம். அம்மாவட்டத்தில் 100 கெஜ தொலைவிலே ஆர்ப்பாக்கம் கொண்டம் இருக்கிறது. அந்த ஆர்ப்பாக்கம் கொண்டத்திற்குக் கீழே இருக்கிற ஆயக்கட்டுதார்கள் மேலே இருக்கிற மண் கொண்டத்தை கல் கொண்டமாக ஆக்கிவிட்டால் தங்களுக்கு பாதகம் வரும் என்று இதைத் தடுக்கிறார்கள். இதை ஒன்றை மட்டும் காரணமாக வைத்துக்கொண்டு கல் கொண்டம் கட்டாமல் இருப்பது நியாயமல்ல. கொண்டம் கட்டிக்கொள்வதற்கு மக்களுக்கு உரிமை இருக்கிறது. இப்பொழுது அந்த மடுத்தண்ணீரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அகலம் அதிகமாக இருப்பதால் கல் கொண்டம் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். கல் கொண்டத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு முதல் அமைச்சர் அவர்களும், அந்த மாவட்டத்து ஆயக்கட்டுதாரர்களும் குறுக்கே நிற்கக்கூடாது. அந்த ஒன்றை மட்டும் காரணமாக வைத்து கல்கொண்டம் கட்டாமல் இருக்கிற நிலையை விட்டுவிட்டு, உடனடியாக கட்டித் தரும்படியாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். அதிலும் வடக்கு வேலூர், தெற்கு வேலூர் என்று இருக்கிறது. வடக்கு வேலூரைவிட தெற்கு வேலூர் மிகவும் பின்தங்கிய பகுதி. திருவண்ணாமலை, செய்யாறு டிவிஷன்களில் செய்யாறு டிவிஷன் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே கரும்பு அதிகமாக விவசாயம் செய்யப்படுகிறது. கரும்பில் சர்க்கரை அதிகமாக இருக்கக் கூடிய டிவிஷன். அந்த இடத்தில் ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி நெசவாளர்கள் வாழக்கூடிய பகுதி. ஆகவே, நெசவாளர்களுக்கு வசதி செய்துகொடுக்கக் கூடிய அளவிலே அந்த இடத்தில் ஒரு நூற்பு ஆலையையும் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியிலே கல்லூரி இல்லை. அங்கு ஒரு அரசினர் கல்லூரி அமைத்துக்கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

[29th March 1966

திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக முனிசிபாலிடிகளைப் பொறுத்தவரையில் ஒரு குறை பல காலமாக கூறப்பட்டுக்கொண்டு வருகிறது. அதாவது, பெரிய முனிசிபாலிடிகளை எடுத்துக்கொண்டால், முனிசிபாலிடி ஏரியாவைச் சுற்றி பெல்ட் ஏரியா இருக்கிறது. அந்த பெல்ட் ஏரியாவில் வாழக்கூடிய மக்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. "ஜஸ்ட் ஆன் தி வெர்ஜ் ஆஃப் தி முனிசிபாலிடி" என்ற அளவில் முனிசிபாலிடிக்கு வெளியே இருக்கக் கூடிய காரணத்தினால் அவர்களுக்கு தண்ணீர் வசதி, லைட் வசதி, ரோடு வசதி, மற்ற வசதிகள் கிடைப்பதில்லை. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், மதுரையைச் சுற்றி சிறிய சிறிய காலனிகள் இருக்கின்றன. சோமசுந்தரம் காலனி, ஜெய்ஹிந்த்புரம் இப்படி பல இடங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் பெரிய வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்தப் பகுதிகள் முனிசிபாலிடியில் சேர்க்கப்பட்டால் முனிசிபாலிடிக்கும் நல்ல அனுகூலம் கிடைக்கும், அங்கு இருக்கிற மக்களுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கும். வீட்டு வரி மூலமாகவே முனிசிபாலிடிக்கு ஏராளமான தொகை வரும். அதன்மூலம் முனிசிபாலிடிக்கு அனுகூலம் கிடைக்கும். அப்படியிருந்தும் கூட இந்தப் பகுதிகள் முனிசிபாலிடியில் சேராமல் இருப்பதால் முனிசிபாலிட்டிக்கும் எந்தவிதமான அனுகூலமும் கிடையாது. அதே சமயத்தில் அங்குள்ள மக்களுக்கும் எந்தவிதமான அனுகூலமும் கிடைப்பதில்லை. ஆகவே, முனிசிபாலிடிக்கு சுற்றியுள்ள பகுதிகளை அவசியம் ஏற்பட்டால், அல்லது அந்த மக்கள் விரும்பினால், அதை முனிசிபாலிடியோடு சேர்க்க வேண்டும், முனிசிபல் பகுதி விரிந்துகொண்டே போவதற்கு வசதி செய்யக் கூடிய முறையில் விதிகள் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தமாதிரி செய்வதால் முனிசிபாலிடிக்கும் வருமானம் இருக்கிறது, மக்களுக்கும் அனுகூலம் இருக்கிறது. ஆகவே, தனியாக முனிசிபல் டவுன்களிலே வாழும் மக்கள் வாடகை ஓரளவு குறைவாக இருக்கிறது என்று இரு ஓரங்களிலும் இருக்கிறார்கள். இன்றைக்கு ரேஷன் சம்பந்தப் பட்டவரையில் கூட, டவுனை ஒட்டி வாழ்கின்றவர்களுக்கு கார்டுகள் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இந்த பெல்ட் ஏரியாக்களில்
10-00 a.m. வசிப்பவர்களையும் முனிசிபாலிடியில் சேர்க்க சீக்கிரம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, குடி தண்ணீர் சம்பந்தமாக பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். மதுரை போன்ற நகரங்களில்கூட இன்னும் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. பேரணித் திட்டம் இன்னும் செய்து முடிக்கவில்லை. அதைச் சீக்கிரத்தில் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, டவுன் ஏரியாக்களில் ஓவர் பிரிட்ஜ் மிகவும் அவசியமாக இருக்கிறது. ட்ரெயின்களும், குட்ஸ்களும் வரும்போது மற்ற வெஹிகுலர் ட்ராபிக் அதிகமாகத் தடைப்பட்டுப் போகின்றன. அதனால் மக்களுக்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, முனிசிபல் ஏரியாக்களில் ஓவர்பிரிட்ஜ் அல்லது இன்னும் நல்ல முறையில் சப்-வேயாக செய்தால் செலவும் குறைவாக இருக்கும். அந்த முறையில் சீக்கிரமாக கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த காவேரி பேசின் சம்பந்தமாக, அங்கேயெல்லாம் எக்ஸ்பெரிமெண்டல் ட்ரில்லிங் நடைபெறுகிறது என்று சொல்லப்படுகிறது. ஐந்து ஆண்டு காலமாக சர்வே நடந்து, ஒரு சில மாதங்களாக ட்ரில்லிங் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால், காலதாமதம் ஏற்பட்டிருப்பதைப் பற்றி யோசிக்கவேண்டும். அமெரிக்கன், ப்ரெஞ்ச் ஸ்டாண்டர்டு மெஷின்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காதது ஒரு காரணம் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையில் இல்லாமல், செய்வதற்காக எடுக்கப்படும் திட்டங்கள் இன்னும் எக்ஸ்பெரிமெண்டல் ஸ்டேஜிலேயே, இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலேயே இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது; அந்த நிலைமையை மாற்றி, பயன்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

29th March 1966] [திரு. வை. சங்கரன்]

அதேபோலத்தான் பெர்ட்டிலைசர் ப்ளாண்ட். சமீபத்திலே கொலாபொரேஷன் அக்ரிமெண்டும் ரெடியாக இருப்பதாகத் தெரிகிறது. அமெரிக்கன் ஆயில் கம்பெனி, இரானியன் ஆயில் கம்பெனி இவைகளின் கொலாபொரேஷன் ஏற்பாடு ஒத்துவரவில்லை என்று சொன்னார்கள். அது முக்கியமான திட்டம். ஆகவே, அது சீக்கிரமே கைகூடும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு இராச்சியத்திலுள்ள பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றை இயங்க உதவிகள் செய்யவேண்டும். அல்லது சர்க்காரே எடுத்து நடத்த தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய சர்க்காரிலிருந்து வேண்டுமானால் உதவி பெற ஏற்பாடுகள் செய்யவேண்டும். இன்றைக்குள்ள விலைவாசியில் தொழிலாளிகள் வேலையில்லாமல் இருந்தால், அவர்கள் மிக்க தொல்லைகளுக்கு உள்ளாவார்கள். ஆகவே, அதைத் தவிர்ப்பதற்கு அந்த மில்களை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும். ஏற்கனவே துவங்கிய மில்கள் இந்த நிலையில் இருக்கும்போது இன்னும் புது, புது மில்களை ஆரம்பிப்பதற்கு முன் அந்தப் பழைய மில்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

சர்க்கரைபற்றிச் சொல்லும்போது, 915 ரூபாய் இண்டர்னல் ப்ரைஸ் என்று இருக்கும்போது, ரூ. 350 தான் எக்ஸ்போர்ட் ப்ரைஸ். ஆகவே, கிட்டத்தட்ட 500, 600 ரூபாய் அளவில் சப்சிடைஸ் செய்து வெளிநாட்டில் கொடுத்து ∴பாரின் எக்ஸ்சேஞ்ச் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது. இந்த அளவில் செய்யவேண்டுமா என்பதை சர்க்கார் மறுபரிசிலனை செய்ய வேண்டும். மூன்றில் ஒரு பங்கு சப்சிடைஸ் செய்து ஒரு பொருளை விற்று அப்படி ∴பாரின் எக்ஸ்சேஞ்ச் பெறுவது பொருளாதார ரீதியில் சரிதானா என்று பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, நம்முடைய இராச்சியத்திலே சிறு தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. ஆனால் ரா மெட்டீரியல்ஸ், பேஸிக் மெட்டீரியல்ஸ் கிடைப்பதில்லை. அதன் காரணமாக, பல என்ஜினியரிங், கெமிகல் இண்டஸ்ட்ரிகள் நின்றுவிடும் தருவாயில் இருக்கின்றன. தொழிற்சாலைகள் லே ஆஃப்கொடுக்கும் நிலையில் இருக்கின்றன. தொழிலாளர்கள் வேலையை இழக்கும் நிலையில் இருக்கிறார்கள். அதைப்பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

மத்திய சர்க்காரிலே, இம்ப்ரூவ்ட் டெக்னிக்ஸ் கண்டு பிடித்தால், இம்போர்ட் சப்ஸ்டிட்யூஷன்களுக்காக என்று, அப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்க, பரிசுகள் வழங்குகிறார்கள். அதே முறையில் இண்டஸ்ட்ரிகளில் கண்டு பிடிப்பவர்களுக்கு பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ரா மெட்டீரியல்ஸ் அத்தியாவசியமானது. அதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ரெயில்வே லைன்கள் சம்பந்தமாக, மத்திய சர்க்கார் அமைச்சர் சமீபத்திலே புதிய ரெயில்வே லைன்கள் வரும் என்கிற நம்பிக்கை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த நான்காவது திட்டத்திலே புதிய இருப்புப்பாதைகள் திறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. 61 கோடி ரூபாய் வரை அனுமதிக்கலாம் என்றும் சொன்னார்கள். நம் மாநிலத்தில் முன்பு அதிகமாகத் திறக்கவில்லை. நான்காவது திட்டத்திலாவது சிலவற்றைத் திறக்க ஏற்பாடு செய்யவேண்டும். தூத்துக்குடி துறைமுக விஸ்தரிப்பு, நெய்வேலி தொழில்கள் இவற்றின் காரணமாக தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே, தூத்துக்குடிக்கு மீட்டர் கேஜை பிராட் கேஜாக மாற்றியமைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் இப்பொழுதே எடுப்பதுதான் நல்லது. தொழில் வளர்ச்சி ஏற்பட்ட பிறகு அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தால் நலமாக இருக்காது. ஆகவே, இரண்டையும் இணைப்பாகவே யோசித்துச் செய்ய வேண்டும்.

எஜுகேஷன் டிபார்ட்மெண்ட் சம்பந்தப்பட்டவரையில் ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். டீச்சிங் ஸ்டாஃபுக்கு நல்ல முறையிலே வசதிகள் செய்திருக்கிறது. ஆனால் நான்-டீச்சிங் ஸ்டாஃப், கிளார்க்கு

கள், மீனியல் சர்வெண்ட்ஸ் போன்றவர்கள் எந்த வசதிகளும் இன்றி
இருக்கிறார்கள். இதுபற்றி பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். சர்வீஸ்
எக்ரிமெண்டே அமுல்படுத்தவில்லை. கன்ஸிடரேஷனில் இருக்கிறது என்
கிறார்கள். இதைப் பூர்த்தி செய்ய வழிவகை காணவேண்டும். இன்
றைக்கு பென்ஷனர்களுக்கு உதவி செய்திருக்கிறோம். அதேபோல இந்த
சிப்பந்திகளுக்கும் பென்ஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
அதோடு அவர்களுக்கு பிராஸ்பெக்ட்ஸே இல்லாமல் இருக்கிறது. அவர்
களுக்கும் மேலே ப்ரமோஷன் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.
அப்படியிருந்தால்தான் அவர்களுக்கும் கொஞ்சம் இன்டரஸ்ட் ஏற்படும்.
அவர்கள் அப்பர் டிவிஷன் கிளார்க்குகளாக பதவி உயர்வு பெற ஏற்பாடு
செய்யவேண்டும். டீச்சர்களுக்கும் கூட, 15, 18 ஆண்டுகளுக்குப் பிறகு
ஏதாவது இன்சென்டிவ் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்
களுக்கும் ஊக்கம் ஏற்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்,
அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

முனிசிபாலிடிகளைப் பொறுத்தவரையில், ஆந்திர ராஜ்யத்தில் ட்ரிங்கிங்
வாட்டர் சப்ளை ஸ்கீம்களுக்காக லைப் இன்ஷ்யூரன்ஸ் காரப்பரேஷன் ஒன்றரை
கோடி ரூபாய்க்கு மேல் கடன்கள் வழங்கியிருக்கிறார்கள். அதற்கு ஸ்டேட்
கவர்ன்மெண்ட் காரண்டி கொடுத்திருக்கிறது என்று அறிகிறேன். அந்த
முறையில், நம்முடைய ராஜ்யத்தில் உள்ள முனிசிபாலிடிகளுக்கும்
ட்ரிங்கிங் வாட்டர் சப்ளை ஸ்கீம், அண்டர்க்ரௌண்ட் ட்ரெயினேஜ் ஸ்கீம்
இவைகளுக்காக லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து கடன் வாங்க
ஸ்டேட் கவர்ன்மெண்ட் காரண்டி கொடுக்க வகை செய்யவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயம் சம்பந்தமாக பல கண்மாய்கள் டீஸில்ட்டிங் செய்யப்பட
வேண்டியிருக்கின்றன, மேடிட்டிருக்கக்கூடிய பல கண்மாய்கள் நம்முடைய
ராஜ்யத்தில் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அதுபற்றியும்
ஆக்க ரீதியாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய
உரையை முடிக்கின்றேன்.

* **திரு. ஆ. தங்கவேலு :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்
களே, நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை நான்
கூற விரும்புகிறேன்.

அரசாங்கச் சிப்பந்திகளுக்குப் பஞ்சப்படியை உயர்த்தப் போவதாக
இரண்டு நாட்களுக்கு முன்னால் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்
கள். அந்தப் பஞ்சப்படியை உயர்த்தும்போது, ஓரளவு அவர்கள் மன
நிறைவு கொள்ளும் வகையில் கணிசமான அளவு உயர்த்தப்படுவதோடுகூட
இன்னொன்றையும் செய்யவேண்டும். மத்திய சர்க்கார் டிசம்பர் மாதத்தி
லிருந்து பஞ்சப்படியை உயர்த்தி இருக்கிறார்கள். மாநில சர்க்காரும்
அந்த அளவு டிசம்பரிலிருந்து கொடுப்பதற்கு வேண்டிய அறிவிப்பைச்
செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்காலர்ஷிப் வழங்குவதில் ரூ. 1,500 வருமான வரம்பு என்று இப்
பொழுது வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு சம்பள உயர்வு
சற்று அதிகமாக இருந்ததனால், இந்த வருமான வரம்பு காரணமாக,
சர்க்கார் உத்தியோகத்தில் உள்ளவர்களுடைய பிள்ளைகள் ஸ்காலர்ஷிப்
பெறுவதில் சங்கடம் ஏற்பட்டது. வருமான வரம்பை உயர்த்த வேண்டும்
என்று நாங்கள் இங்கே பல தடவை கேட்டிருக்கிறோம். இன்னும் கவ
னித்ததாகத் தெரியவில்லை. அதிலும் குறிப்பாக, மாதச் சம்பளம் பெறும்
அரசாங்கச் சிப்பந்திகளுடைய பிள்ளைகள்தான் ஸ்காலர்ஷிப் பெறுவதில்
மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, வருமான வரம்பை
ரூ. 1,500-யிலிருந்து ரூ. 2,000-க்கு உயர்த்தினால் ஓரளவு சௌகரியமாக
இருக்கும். அதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளு
[illegible]

அரசாங்கச் சிப்பந்திகளுக்கு ஏற்கெனவே ப்ராவிடெண்ட் பண்டு முத
லியவை எல்லாம் பிடிக்கப்படுகிறது. சில வருஷங்களாக எமர்ஜன்ஸி
ப்ராவிடென்ட் பண்டு என்ற வகையில் சம்பளத்திலிருந்து பிடித்துக்
கொண்டு வருகிறார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய சம்பளத்தி
லிருந்து எமர்ஜன்ஸி ப்ராவிடென்ட் பண்டுக்காகப் பிடித்துக்கொண்டு
இருந்ததை இப்பொழுது நிறுத்தி விட்டார்கள். ஆனால், நம்முடைய
மாநில சர்க்கார் அதைத் தொடர்ந்து பிடித்துக்கொண்டு வருகிறார்கள்.
அதிலும், ஏற்கெனவே 5 ரூபாய் பிடித்துக்கொண்டிருந்ததை பிப்ர
வரியிலிருந்து 7 ரூபாயாகப் பிடிக்கும்படி உத்தரவிட்டிருப்பதாகத்
தெரிய வருகிறது. இப்படி அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்துக்
கொண்டிருப்பதால் அவர்கள் விலைவாசி உயர்வினால் மிகவும் கஷ்டப்பட
வேண்டியிருக்கிறது. எமர்ஜன்ஸி பிராவிடெண்ட் பண்டுக்காகப் பிடிப்பதை
நிறுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திண்டிவனம் மருத்துவ மனையை விரிவுபடுத்தவேண்டும் என்று சுகா
தார அமைச்சர் அவர்களிடத்தில் நான் பல முறை கேட்டுக்கொண்டிருந்தும்
இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் அதுபற்றி ஒருவிதக் குறிப்பும் இல்லை.
திண்டிவனம் ஒரு பெரிய நகரம், ஏராளமான ஜனத்தொகை கொண்டது.
அந்த மருத்துவ மனையில் 42 படுக்கைகள்தான் இருக்கின்றன. அது
போதாது. குறைந்தபட்சம் 100 படுக்கைகளாவது இருந்தால்தான் வசதி
யாக இருக்கும். அந்த அளவிற்கு அதை விரிவுபடுத்த தகுந்த நட
வடிக்கை எடுக்கவேண்டும். அது தவிர, அங்கே ஆண், பெண் வியாதியஸ்
தர்கள் வந்தால் காலை 7 மணியிலிருந்து 11 மணி வரையிலும் வெளியே
வெயிலிலும் மழையிலும் நிற்கவேண்டிய நிலைதான் இருக்கிறது. நிற்பதற்கு
ஷெட்டோ, வராந்தாவோ கிடையாது. அதனால்தான் மழை பெய்தாலும்,
வெயில் அடித்தாலும் வியாதியஸ்தர்கள் அவதிப்பட வேண்டியிருக்கிறது.
வியாதியஸ்தர்கள் வியாதியைப் போக்கிக் கொள்வதற்காக மருத்துவ
மனைக்கு வரும்போது, காலை 7 மணியிலிருந்து 11 மணி வரை வெயி
லிலும் மழையிலும் வெளியே நின்று கொண்டிருந்தால் வியாதி இன்
னும் அதிகமாகுமே தவிர, வியாதி குறையாது. ஆகவே, அங்கு ஒரு
ஷெட் போட்டுக்கொடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். திண்டிவனம் மருத்துவ மனை
யில் பெண் டாக்டர் ஒருவர்தான் இருக்கிறார். ஒருவர் போதாது. இன்
னும் ஒரு பெண் டாக்டரை நியமிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்ளுகிறேன்.

தீயணைக்கும் படையொன்றை திண்டிவனத்தில் நிறுவப் போவதாக
சென்ற இரண்டு ஆண்டுகளாக கனம் உள்துறை அமைச்சர் அவர்கள்
சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இன்றைக்குக் கூட கேள்வி நேரத்தின்
போது, திண்டிவனத்திற்கு முதல் ப்ரையாரிடி இருப்பதாகச் சொன்னார்
கள். இப்படிச் சொல்லப்படுகிறதே தவிர, அதற்கு வேண்டிய நிதி ஒதுக்
கீடு செய்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளுக்கு வழிவகை செய்யவில்லை.
சென்ற ஆண்டு, திண்டிவனம் கிடங்கல் 17-வது வட்டம் அரிசனக் காலனி
யில் 13 வீடுகள் தீப்பற்றி எரிந்து விட்டன. அடுத்து, 18-வது வட்டத்தில்,
அதே அரிசனக் காலனியில் 35 வீடுகள் தீப்பற்றி எரிந்து விட்டன. உள்
துறை அமைச்சர்கூட அந்த நேரத்தில் அந்தப் பக்கத்திற்கு வந்தார்கள்.
அவர்களும் நேரடியாக தீ விபத்தை பார்த்துப்பரிதாபப் பட்டார்களே
தவிர தீயணைக்கும் படையை உடனடியாக அங்கே அமைப்பதற்கு வேண்டிய
அங்கீகாரம் கொடுப்பதற்கு அவர்களுக்கு கருணை இல்லை என்பதைத்
தான் இந்த நேரத்தில் நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட திண்டிவனம் அவர
பாக்கம் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
ஆகவே, தீயணைக்கும் படையை உடனடியாக நிறுவும் அங்கீகாரம் அளிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வீடூர் அணையில் அரசாங்கப் பணியாளர்கள் 13 பேர்கள் வேலை செய்
கிறார்கள். அவர்களில் மூன்று பேர்களுக்குத்தான் பஞ்சப்படி கொடுக்கப்
படுகிறது. மற்றவர்களுக்கு பஞ்சப்படி கொடுக்கப்படவில்லை. அவர்கள்

தங்களுக்கும் பஞ்சப்படி கொடுக்க வேண்டும், எங்களால் அறுபது, எழுபது ரூபாயில் காலம் தள்ள முடியவில்லை என்று அரசாங்கத்தை அணுகிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், கிடைக்கவில்லை. சென்ற ஆண்டு, சம்பளம் வாங்கப்போவதில்லை என்று கூடச் சொல்லி, அதற்குப் பிறகு அதிகாரிகள் தலையிட்டு வாங்கிக்கொள்ளும்படிச் செய்தார்களே தவிர, இன்னும் பஞ்சப்படி உயர்த்துவதைப் பற்றி அவர்கள் கவனிக்கவில்லை. அங்கே டிவிஷனல் என்ஜினியரைக் கேட்டால், "கவனிக்கிறோம்" என்கிறார்கள். பிரதம என்ஜினியரைக் கேட்டாலும், "கவனிக்கிறோம்" என்கிறார்கள். அஸிஸ்டெண்ட் என்ஜினியரைக் கேட்டாலும் அவ்வாறுதான் சொல்லுகிறார்களே தவிர, அவர்களுடைய நிலை கவனிக்கப்படவில்லை. ஆகவே, பஞ்சப்படி கொடுப்பதில் இனியும் காலதாமதம் செய்யாமல், உடனடியாகக் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகை செய்யவேண்டும் என்று நான் வற்புறுத்தி கூறிக்கொள்ளுகிறேன்.

அரிசன மக்களுக்கு வீடு கட்டுவதற்கு மனை கொடுப்பதில் மிகக் காலதாமதம் ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக, என்னுடைய பகுதியிலே சாரம் அரிசனக் காலனிக்கு மனை கேட்டு ஐந்தாறு ஆண்டுகள் ஆகியும் இன்னும் மனை கொடுக்கப்படவில்லை. காலதாமதமாகிக்கொண்டே வருகிறது. 1961-ம் ஆண்டு அங்கே ஒருவருடைய மனையைப் பார்த்து, அதற்கு வேண்டிய முயற்சி எடுத்து, அரசாங்கம் அங்கீகாரம் கொடுத்து, கல் நாட்டினார்கள். ஆனால், அந்த மனைக்குச் சொந்தக்காரர் ஒரு காங்கிரஸ்காரர். அவர் நம்முடைய உள்துறை அமைச்சரை அணுகி, "அது என்னுடைய மனை, அதை எடுக்கக்கூடாது" என்று சொன்னவுடனே, அதை மாற்றி விட்டார்கள். அவ்வளவுதான். அதற்குப் பிறகு எந்த விதமான நடவடிக்கையும் இல்லை. அதுபற்றி இந்த மன்றத்தில் பல தடவை கேட்டுக்கொண்டிருந்தேன். இப்பொழுது ஆறு மாதங்களுக்கு முன்னால் வெல்ஃபேர் தாசில்தார் ஒருவர் வந்து, ரோடுக்குக் கீழ்ப்புறத்தில் உள்ள சில நிலத்தைப் பார்த்து, அதை எடுத்துக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படிச் செய்தாலும் சரிதான் என்று நாங்கள் ஒப்புக்கொண்டோம். ஆனால், இப்பொழுது, பத்து நாட்களாக நாங்கள் கேள்விப்பட்டது—இப்பொழுது வேறொரு தாசில்தார் வந்து அந்த இடத்தையும் விட்டு விட்டாராம். இப்பொழுது அதற்குப் பக்கத்தில், ஊருக்குப் பொதுவாக உள்ள மந்தைவெளிப் புறம்போக்கு நிலம் இருக்கிறதே, அதை எடுத்துக் கொடுத்துவிடலாமா என்று பார்த்திருக்கிறார்கள். அதுவாவது நடக்குமோ, நடக்காதோ? எந்தக் காரணத்தினால் இம்மாதிரியெல்லாம் காலதாமதமாகிக்கொண்டு வருகிறது என்று எனக்குத் தெரியவில்லை. நான் நினைக்கிறேன்—சாரம் பகுதி திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வளர்ச்சியுள்ள பகுதி. இங்கிருந்து தெற்கே செல்லக்கூடிய அமைச்சர்கள் பார்க்கலாம். சாரம் ரோடு ஓரங்களில் எப்போதும் கறுப்பு சிவப்புக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கும். அதனாலே அவர்களுடைய கண்கள் அந்த அரிசனக் காலனி மீது பாய்ந்து, அங்குள்ள அதிகாரிகள் இதைச் சீக்கிரமாகச் செய்து கொடுத்தால், அரசாங்கமோ அமைச்சர்களோ ஏதாவது தவறுதலாகக் கருதி விடுவார்களோ என்று இப்படி ஆறு ஆண்டுக் காலமாக காலம் கடத்தி வருகிறார்களோ என்று சந்தேகப்பட வேண்டிய நிலை இருக்கிறது. கட்சியைப்பற்றி இல்லாமல், அரிசன மக்களுக்கு மனை கொடுக்கிறோம் என்ற எண்ணத்தில், இந்த ஆண்டிலாவது சாரம் அரிசனக் காலனிக்கு வேண்டிய மனைகள் வழங்கும் வேலையைப் பூர்த்தி செய்து கொடுக்கவேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திண்டிவனத்திலிருந்து இரட்டணைக்குப் போவதற்கு வழியில் தொண்டி ஆறு இருக்கிறது. அதற்கு பால வசதி கிடையாது. திண்டிவனத்திலிருந்து ஒலக்கூர் போகும் வழியில் சாரம் என்கிற ஒரு ஆறு இருக்கிறது. அதற்கும் பால வசதி கிடையாது. திண்டிவனத்திலிருந்து ஒலக்கூருக்கு பஸ் விடப் போகிறார்கள், அங்கீகாரம் ஆகி விட்டது. அதை எப்படி விடப் போகிறார்களோ. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாலம் கட்டுவதற்கு முக்கிய கவனம் செலுத்தவேண்டும். பெரிய பாலம் கட்டுவதற்கு [illegible] ரூபாய் செலவாகலாம் என்று சொன்னாலும், நான்

குறிப்பிட்ட இப்படிப்பட்ட ஆறுகளில் குறுக்கே சறுக்குப் பாலமாவது கட்டிக் கொடுத்தால் வசதியாக இருக்கும். பல தடவை இம்மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். அதையும் கவனிக்கவில்லை. தயவு செய்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலாவது அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து, அந்தச் சிறிய பாலங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை ஆதரித்து ஒரு சில யோசனைகள் சொல்வதற்காக நான் பேசுகிறேன். இந்தச் சட்டசபையில் ஆளும் கட்சியினரின் கொள்கை, திட்டம் இவற்றைப்பற்றி எதிர்க்கட்சியினர் கூட சில சந்தர்ப்பங்களில் அதிகமாகக் குறை கூறாமல் புகழ்ந்துகூடப் பேசியிருக்கிறார்கள். திட்டங்கள் நிறைவேற்றப்படும்பொழுதுதான் அடிப்படையில் இருக்கின்ற தவறுகளை எதிர்க்கட்சியினரும், ஆளும் கட்சியினரும் எடுத்துச் சொல்லி குறை கூறிக்கொண்டு வருகிறார்கள் என்பதை அரசாங்கம் அறியும். இத்தகைய தவறுகளை நிவர்த்தி செய்யவேண்டிய இடம் இந்த சட்டசபைதான். ஒரு உறுப்பினர் இங்கே ஏதாவது கேட்கிறார் என்றால் அதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார் என்றால், அமைச்சர் சொல்கின்ற பதிலை உடனுக்குடன் நிறைவேற்றுவதற்குத்தான் அரசாங்க அமைப்பு இருக்கிறது. காலையிலே $8\frac{1}{2}$ மணிக்கு நாம் இங்கே கூடுகிறோம். முக்கியமான கேள்விகள் கேட்கப்படுகின்றன. அமைச்சர்கள் துரிதமாகப் பதில் சொல்கிறார்கள். நல்ல எண்ணத்துடன், மக்கள் மீதுள்ள அபிமானத்துடன் வருகின்ற பதில்களை மக்கள் பார்த்துவிட்டு அரசாங்கம் உடனடியாக இதைச் செய்யப் போகிறார்கள், முதலமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள், செய்வார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் துர்பாக்கிய வசமாக அது அடிப்படையிலே நிறைவேறுவதற்கு எவ்வளவு நாட்கள் ஆகின்றன? அதற்குக் காரணம் என்ன? இங்கே, காலை $8\frac{1}{2}$ மணிக்கு எந்த அரசாங்க அதிகாரியும், செகரட்டரியும் வருவதே கிடையாது, வருவதற்கு முடியாதா? மிகவும் முக்கியமானது கேள்வி நேரம்தான். எத்தகைய பதிலை அமைச்சர் சொல்லுகின்றார் என்பதைப் பார்ப்பதற்கு, அங்கத்தினர் கேள்வி கேட்கிறார், அமைச்சர் பதில் சொல்கிறார், மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், உடனடியாக அமைச்சருடைய பதிலை குறிப்பு எடுத்துக்கொண்டு உடனடியாக அவற்றை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் இங்கு வருவதில்லை. அவர்கள் வரமுடியவில்லை என்றால் சட்டசபை அவர்கள் வரக்கூடிய நேரத்தில் ஏன் கூடக்கூடாது என்பதை நான் இங்கு சமர்ப்பித்துக்கொள்கின்ற வேண்டுகோளாகக் கருதுகிறேன். இதைப்பற்றி ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் முடிவு செய்யவேண்டும். ஏதோ கமிட்டியிலே முடிவு செய்து விட்டோம் இத்தனை மணிக்குத்தான் கூடுவோம் என்று சொன்னால், மக்களுக்கு அதில் என்ன நன்மை ஏற்படப்போகிறது? $8\frac{1}{2}$ மணி சௌகரியமாக இருக்கிறது என்பதற்காக கூடுகிறோம் என்றால் அமைச்சர் சொல்கின்ற பதிலை நடைமுறையில் நிறைவேற்றுவதற்கு அரசாங்க "மெஷினரி" இங்கு இருந்தால்தான் அவற்றையெல்லாம் உடனடியாக நிறைவேற்ற முடியும். ஆகவே, நான் மேலும் அரசாங்கத்தையும், எதிர்க்கட்சியையும் கேட்டுக்கொள்கிறேன், இரண்டையும் கேட்கக்கூடிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

அடுத்தபடியாக, முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு முக்கியமான வேண்டுகோள். சென்றமுறை நான் பேசினேன், அப்பொழுது அமைச்சர் மன்றாடியார் அவர்களும், உள்துறை அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். பதநீர் இறக்குவதற்கும் விற்பதற்கும் திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி பகுதிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து பேர்கள் சேர்ந்து ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்துக்கொண்டால், அப்படி அமைத்துக்கொள்ளலாம், அவர்கள் கூட்டுறவு சங்கம் மூலமாக பதநீர் இறக்குகிறார்கள். அதை கிராம மக்களுக்கு விற்கிறார்கள். மிஞ்சியதைக் கருப்புக்கட்டி காய்ச்சுகிறார்கள். இந்த ப்ரோகிபிஷன் இன்ட்ரடியூஸ் பண்ணும்பொழுது 1948-ம் வருஷத்திலே ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அப்பொழுது நெல்லை

மாவட்டத்தில் இருந்த நிலைமை எனக்குத் தெரியும், மற்ற மாவட்டங்களிலுள்ள நிலைமையைப்பற்றி அதிகமாக எனக்கு தெரிந்திருக்க முடியாது. அப்பொழுது திருநெல்வேலி, கன்னியாகுமரி ஜில்லாக்களுக்கு விதிவிலக்குத் தரப்பட்டது. அங்கே பதநீர் இறக்கலாம், விற்கலாம், காய்ச்சலாம், விவசாயிகள் எல்லாம் வாங்கிக் குடிக்கலாம். பதநீர் சத்துள்ள ஒரு ஆகாரம் என்பதை நிபுணர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பதநீரை செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருச்சி, சேலம், கோயம்புத்தூர் போன்ற ஜில்லாக்களில் இறக்கலாம், ஆனால் விற்கக்கூடாது. பதநீரை ஒரு லிட்டர் 15 பைசா வீதம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நகரங்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் அதை 40 பைசாவுக்கு கொடுக்க வேண்டும். கிராமத்தில் பதநீரை இறக்குகிறார்கள், கிராமத்தில் சுற்றியிருக்கக்கூடிய விவசாயிகள் பதநீரைக் குடிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடையாது. பதநீர் இறக்குபவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படக்கூடிய வகையில் அவர்களுடைய நிலைமை பாதுகாக்கப்படவில்லை. பதநீர் இறக்கி தாராளமாக விற்கிறார்கள். அதற்காக லட்சக்கணக்கான ரூபாய்களை கொடுக்க வேண்டாமென்று நினைத்தேன். மற்ற ஜில்லாக்களில் பதநீரை இறக்கி விட்டால், அதை எங்காவது விற்று விட்டால் 3, 4 போலீஸ்காரர்கள் ஏதோ ஒரு கேஸ் போட்டு தண்டனை போட்டு விடுகிறார்கள். இதை முதலமைச்சர் அவர்கள் மிகுந்த காருண்யத்துடன், இரக்கத்துடன் கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்துவேன். அவர்கள், திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதிகளில் எப்படி இருக்கிறதோ அப்படியே மற்ற ஜில்லாக்களிலும் செய்யலாம் என்று சொல்வார்களானால் நான் நன்றி பாராட்டுவேன். இந்தச் சபையிலே முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது எல்லா ஜில்லாக்களிலும் உள்ள மக்களுக்கு பதநீர் கிடைக்கக்கூடிய வகையில் பதில் சொல்வார் என்ற நம்பிக்கையோடு நான் இதை வற்புறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உள்துறை அமைச்சர் இருக்கிறார்கள், அவர்களிடம் வற்புறுத்திச் சொல்லலாம், நான் இதற்கு சொல்ல வேண்டியதில்லை. இப்படியெல்லாம் செய்யலாம் என்று சொல்கிறார்கள்.

திரு. கே. டி. கோசல்ராம் : நிதி ஒதுக்கல் மசோதாவை முதலமைச்சர் தான் பிரேரேபித்து இருக்கிறார்கள். உள்துறை அமைச்சர் பிரேரேபித்து இருந்தால் நான் கேட்டு இருப்பேன். நெஞ்சிலே படும்படியாகப் பேசியிருப்பேன். ஸவிஸ்தாரமாகவும் பேசியிருப்பேன். முதலமைச்சர் அவர்கள் என்னிடம் மிகுந்த இரக்கத்துடன் பதில் சொன்னார்கள். அவர் பிரேரேபித்ததால்தான் அவர்களிடம் கேட்கிறேன். உள்துறை அமைச்சரிடமும் கேட்கலாம்.

அடுத்தபடியாக, கைக்குத்தல் அரிசியைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒரு புறத்தில் கைக்குத்தல் அரிசியைப் பரப்பவேண்டும் என்றும் மற்றொரு புறத்திலே ரேஷன் மூலமாக அரிசியைத்தான் கொடுப்போம் என்றும் சொன்னால் கைக்குத்தல் அரிசியை எப்படிப் பரப்ப முடியும் ? கிராமாந்தரங்களில் ரேஷன் கொடுக்கும்பொழுது அரிசியாகக் கொடுக்காமல் அதற்குப் பதிலாக நெல்லாகக் கொடுத்து விட்டால் எல்லோரும் அதை குத்தி கைக்குத்தல் அரிசியாகச் சாப்பிடுவார்கள். உணவு அமைச்சர் திரு. ராமைய்யா அவர்கள் 2, 3 தடவைகள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொழுதும், முதலமைச்சர் அவர்கள் வந்தபொழுதும், ஜில்லா முழுவதும் ஏகோபித்த முறையிலே வற்புறுத்தியிருக்கிறோம். நெல்லாகக் கொடுங்கள் என்று. கையால் குத்தி சமைப்பார்கள். அதில் வைட்டமின் சத்தும் இருக்கும். ரைஸ் மில்லில் குத்தினால் சோறு மாதிரி அதை வேக வைத்து விடுவார்கள். தண்ணீரை ஊற்றி நன்றாக நனைய வைத்து விடுகிறார்கள். ஒரு படி அரிசிக்கு ½ படி அரிசிதான் கிடைக்கிறது. ஆகவே அரிசியாகக் கொடுப்பதற்குப் பதிலாக நெல்லாகக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். இன்றும் நான் இதை வற்புறுத்துகிறேன். கொள்கை நல்லதுதான், ஆனால் அது நடைமுறையில் செயல்படவில்லை. அதிகாரிகள் எங்கெங்கோ ஒப்பந்தம் செய்து விட்டோம் என்று சொல்லலாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆட்சேபமே இல்லை. அதிகாரிகள் ஆட்சேபிக்கவில்லை. நெல்லை வாங்கிக்கொண்டு போய் அவர்கள் குத்திக்கொண்டால் அப்படிக் கொடுப்பதற்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் எல்லா மாவட்டங்களுக்கும் அப்படிக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல முடியாது.

திரு. கே. டி. கோசல்ராம் : மிகுந்த நன்றி. நெல்லை மாவட்டத்திற்கு கொடுக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதை மற்ற மாவட்டங்களிலும் உள்ளவர்கள் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, எதிர்க்கட்சி அன்பர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி பேசினார்கள். அமைச்சர் அதற்கு பதில் சொல்லவில்லை. நான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் இதை நான் சொல்லாமல் இருக்க முடியாது. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், ஜனநாயக சோஷலிஸ தினம் கொண்டாடப்பட்டபொழுது இந்த சபையின் அங்கத்தினர், அவருடைய பெயரைப்போட்டு, படத்தைப்போட்டு போஸ்டர் அடித்தார்கள் என்று சொல்லி பேப்பரையெல்லாம் படித்தார்கள். அது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அச்சடித்த விளம்பரம். அமைச்சர் அவர்கள் அதை உடனடியாக மறுத்திருக்கவேண்டும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியால் அது அச்சடிக்கப்பட்டது. அது சம்பந்தமான அத்தனை பில்லையும் நான் இந்த சபையிலே கொண்டுவந்து காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். அதை அரசாங்கம் செய்தது என்று குற்றஞ்சாட்டியதற்கு உடனடியாக பதில் சொல்லியிருக்க வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : அந்த விளம்பரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வெளியிட்டது என்று இருக்கிறதா ?

திரு. கே. டி. கோசல்ராம் : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிதான் போட்டது என்பதற்கு பில்லைக்கொண்டு வந்து காட்ட நான் தயாராக இருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விளம்பரத்தில் அரசாங்கம் வெளியிட்டது என்று இருக்கிறதா ?

திரு. து. ப. அழகமுத்து : எந்த வெளியீடு என்று போடாமல் இருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் தருகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் இதை வெளியிட்டது என்பதற்கு என்ன ருசு இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினரிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : பொதுமக்கள் அந்தச் செய்தியைப் பார்த்தவுடனே ஒரு தவறான எண்ணம் வருவதற்கு இடம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதற்குச் சரியான விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். அவர்கள் கொடுக்காததால் நான் இதை எடுத்துக் கூறினேன். 10-30 a.m.

இனம் சட்டத்தைப் பொறுத்து இந்த அரசாங்கத்தைப் பெருமையுடன் பாராட்ட விரும்புகிறேன். நிலத்திலே உழுகின்ற உழைப்பாளிகளுக்குத்தான் நிலம் சொந்தம் என்று அண்ணல் காந்தியடிகள் சொன்ன பொன்மொழிகளை வைத்து, விவசாயிகளுக்காக எவ்வளவோ சீர்திருத்தச் சட்டங்களை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. அந்தச் சீர்திருத்தங்கள் அங்குமிங்குமாக ஏதோ சில இடங்களில் செயல்படாமல் இருக்கலாம். 1937-ம் ஆண்டிலேயே பிரகாசம் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து அன்றே விவசாயிகளுடைய நிலைமை, இனம்தார்களுடைய நிலைமை எல்லாம் பரிசீலிக்கப்பட்டது. இனம் ஒழிப்பு மசோதாவுக்காக, அந்தப் பரிசீலனையின் பலனாகத்தான் இனம் ஒழிப்பு மசோதா வந்தது. இதிலே பிரசிடெண்ட் எல்லாம் இண்டர்ஃபியர் பண்ணும்படியான நிலை

மையை கொண்டு வந்தார்கள். அதற்கெல்லாம் மத்தியில் இனும் ஒழிப்
புச் சட்டத்தைப் பரிபூரணமாக நிறைவேற்றினோம். நானும் அந்த
செலக்ட் கமிட்டியில் இருந்தேன்; அந்தச் சட்டத்திலுள்ள வார்த்தைகள்
ஃப்ளெக்சிபிள் ஆக இருக்கின்றன; பின்னால் சங்கடம் வரப் போகிறது
என்று அன்றே நான் எச்சரித்தேன். இன்று அந்த நிலைமை வந்து
விட்டது. "பார்ட் இனம்" ஆக இருந்தாலும் அதையும் சட்டத்திலே
சேர்க்கவேண்டுமென்று சேர்த்திருக்கிறோம். நான் ஞாபகத்தில் கூறு
கிறேன். ஒரு இனம் நிலத்தில் ஒரு விவசாயி மூன்று வருஷம் விவ
சாயம் செய்திருக்கிறான் என்பதற்கு ஆதாரம் இருந்தால் அந்த நிலத்தை
அவனுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டும். இதிலே டிமென்டிங்
நோட் எல்லாம் வந்து கடைசியிலே தீர்மானித்தோம். இன்று பரிதாப
மான நிலைமையில் இருக்கிறது, புதுக்கோட்டை சம்பவம். சட்டத்திற்கு
மாறாக, சட்டசபை அங்கத்தினர்களுடைய எண்ணம் என்ன, அரசாங்கத்
தின் எண்ணம் என்ன என்பதிலே கூடக் கவனம் செலுத்தாமல் நேருக்கு
மாறாக, எங்கோ இருக்கிறவர்களுக்கு, நிலத்தையே பார்க்காதவர்களுக்குப்
பட்டா கொடுக்கவேண்டுமென்று சட்டத்தையே திரித்துச் சொல்லியிருக்
கிறார்கள். அந்த அதிகாரி அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார். நான்
முதலமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்—உடனடியாக
ஸ்பெஷல் ஆபீசரை அப்பாயிண்ட் பண்ணி ரீ-இன்வெஸ்டிகேட் செய்ய
வேண்டும். அமைச்சர் திரு. ராமையா அவர்கள் காலையில் பதில்
சொல்லும்போது ஓரளவு ஒத்துக் கொண்டு பதில் சொன்னார்கள். மிக்க
மகிழ்ச்சி. உடனடியாக ஸ்பெஷல் ஆபீசரை அப்பாயிண்ட் செய்து மறுபடி
யும் அதை எடுத்து குடியானவனுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு அர
சாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். சட்டத்திலே சில
லகூனா இருக்கலாம். அது கோர்ட்டிலே இருப்பதால் அந்த செக்ஷனை
பற்றிப் பேசத் தயாராக இல்லை. அந்த செக்ஷனிலே லகூனா இருக்கு
மானால் அதைத் திருத்த இந்த அரசாங்கம் முன்வர வேண்டும். காலுக்
குத்தான் செருப்பே யொழிய, செருப்புக்காகக் கால் அல்ல. ஏழைக்
குடியானவனுக்காகத்தான் சட்டம், அந்தச் சட்டத்தைத் திருத்த, அந்தக்
குறைபாட்டை மாற்ற இந்த அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும்.
அந்த செலக்ட் கமிட்டியிலே எதிர்க்கட்சியினர் எல்லாம் இருந்தார்கள்;
திராவிட முன்னேற்றக்கழக அங்கத்தினர்கள் இருந்தார்கள்; கம்யூனிஸ்ட்
நண்பர்கள் இருந்தார்கள்; நாங்களும் இருந்தோம். அபிப்பிராய பேதம்
இல்லாமல், குடியானவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்ல
எண்ணத்துடன் செய்தோம். அந்தச் சட்டத்திலே தவறு இருந்தால்
அதை உடனடியாகத் திருத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசாங்க அதிகாரிகளைப் பற்றி அங்கத்தினர்கள் குறை சொல்லலாம்.
அரசாங்கம் அந்த இலாகாவைப் பாராட்டலாம், போற்றிப் புகழலாம்.
முதலமைச்சர் அவர்களே கூட, போலீஸ் இலாகாவின் திறமையைப்
பாராட்டுகிறேன் என்று பேசியிருக்கிறார்கள். உண்மையிலேயே பாராட்டத்
தான் வேண்டும். ஆனால் குறிப்பிட்ட அதிகாரியைப் பார்த்து, ஒரு அமைச்
சர் "அவரைப் பாராட்டுகிறேன்" என்று சொல்லுவது இந்த சபைக்கு
சரியாக இருக்குமா என்பதைக் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்கு விட்டுவிடுகிறேன். அதற்குமேல் பேச விரும்பவில்லை. குறிப்
பிட்ட அதிகாரியைப் பாராட்டி ஃபைலிலே எழுதலாம்; பிரமோஷன்
கொடுக்கலாம்; எவ்வளவு பெரிய உத்தியோகத்திலே வேண்டுமென்றாலும்
அவர்களை அமர்த்தலாம். அதைப் பற்றியெல்லாம் ஒன்றும் சொல்ல
முடியாது. ஆனால் இந்த சபையிலே பெயர் சொல்லி அந்த அதிகாரியைப்
பற்றிப் பாராட்டிப் பேசவேண்டியது அவசியமா என்பதை உங்களுடைய
கவனத்திற்கு விட்டுவிடுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயம் சம்பந்தமாக அமைச்சர் ராமையா அவர்
கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தமாக மேஜராக உள்ள திட்டங்கள்
எல்லாம் தீர்ந்துவிட்டன என்று சொல்லுகிறார்கள். சென்ற வருஷம்
அப்பர் பெரியாறுக்கு 100 ரூபாய் டோக்கனைக் கிராண்டு கேட்டு பாஸ்

பண்ணியிருக்கிறோம். தண்ணீர் நமது எல்லைக்கு வருகிறது. கேரளாவில்
வீணாகக் கடலில் போய் விழுகிறது. அதிலே நமக்கு உரிமை இருக்கிறது;
அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. பரம்பிக்குளம் திட்டம் மாதிரி
உள்ளது இது. இந்த விஷயத்தில் நமது பழுத்த, முதிர்ந்த, திறமை
வாய்ந்த முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக வெற்றி காணவேண்டும்.
முன்பு இதைப் பற்றியெல்லாம் பேசுவதற்காக நண்பர் சி. சுப்பிரமணியம்
அவர்கள் சென்றார்கள். அவர்கள் கோவைக்காக வாதாடியதைப்
பாராட்டுகிறேன்; ஆனால், பம்பையாறு திட்டத்தைப் பிரஸ் பண்ணவில்லை
என்று சொல்லிவிட்டார்கள். பவர் கமிஷன் புரொஸீடிங்ஸைப் பாருங்
கள். இது இருக்கிறது. பட்டம் தாணுப் பிள்ளை கொடுத்தார்.
பம்பையாறு ஸ்கீம் பற்றி முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே அச்சடித்துக்
கொடுக்கப்பட்டது. ஆனால் அது நின்றுவிட்டது. அப்பர் பெரியாறு
திட்டம் சென்ற வருஷம் கிடைக்க வேண்டியது நின்றுவிட்டது. கேரளா
வில் ஏதாவது தகராறு இருக்கலாம். இந்த அரசாங்கத்தில், குறிப்பாக,
முதலமைச்சர் அவர்கள்மீது, அவர்களுடைய பண்பு, நிர்வாகத் திறமை
எல்லாவற்றிலும் எல்லோருக்கும் மரியாதை உண்டு; நம்பிக்கையுண்டு.
அவர்கள் அதிகமாகக் கவனம் செலுத்தி அங்கு வெறுமனே போகிற
தண்ணீரை இங்கே கொண்டுவருவதிலே வெற்றி பெறுவார்களேயானால்,
கேரளா முழுமைக்கும் அரிசி கொடுக்கக்கூடிய அளவுக்கு நம்மிடத்திலே
சக்தி இருக்கிறது; இடம் இருக்கிறது. இந்தக் காரியத்தை வெற்றிகரமாக
முடிப்பதிலே முதலமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

தற்போது பவர் டிரில்கள் கிடைக்கவில்லை. பவர் டிரில்கள் இருந்தா
லொழிய பூமியில் இருக்கும் தண்ணீரைக் கொண்டுவர முடியாது. எவ்
வளவோ லக்சுரி கூட்ஸ் எல்லாம் இம்போர்ட் செய்கிறோம். ஆகவே,
இந்த பவர் டிரில்ஸைப் பொறுத்தவரை எந்த அளவுக்கு இம்போர்ட்
செய்ய முடியுமோ அவ்வளவையும் இம்போர்ட் செய்து கொடுக்க
வேண்டும். பவர் டிரில்களை எந்த அளவுக்கு அதிகமாகக் கொடுக்க
முடியுமோ அந்த அளவுக்கு எல்லா ஜில்லாக்களுக்கும் கொடுத்தால்தான்
விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியும். விவசாய அமைச்சர் அவர்
கள் அதற்கான பொருள்களை எல்லாம் இம்போர்ட் செய்வதற்கான நட
வடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்
துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. எஸ். எஸ், மணி :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே,
நிதி ஒதுக்கீடு மசோதாவின் கீழ் ஒரு சில கருத்துகளைச் சொல்ல விரும்பு
கிறேன். அரசாங்கத்தின் நிதியிலே சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்
டிய பொறுப்பு இந்த மன்றத்திலுள்ள இருசாராரின் பொறுப்பாகும்.
ஆளும் கட்சியின் பொறுப்பு அதிகமாகும். ஆளும் கட்சியினர் சர்க்காரின்
நிதியைப் பாதுகாக்கவேண்டும். சிக்கனப்படுத்தவேண்டும் என்று
நினைத்திருந்தால் நேற்று நடந்த ராஜ்ய சபைத் தேர்தலில் அனாவசியமான
போட்டியைத் தவிர்த்திருக்கலாம். வெற்றிபெற முடியாது என்று தெரிந்
திருந்தும் கூட போட்டி உண்டாக்கப்பட்டது.

MR. SPEAKER : That is not a subject under discussion. Let the hon. Member come to the Bill under discussion.

திரு. வி. எஸ். எஸ். மணி : Yes, Sir, I am coming to the Bill.
இந்த அனாவசியமான போட்டியைத் தவிர்த்திருந்தால் சட்டமன்ற இலாகா
வுக்கு வேலை இல்லாமல் போயிருக்கும். அனாவசியமான செலவு
இல்லாமல் இருந்திருக்கும்.

இப்போது அதிதீவிர சாகுபடி திட்டத்தின் பெயரால் பனை-வாழை
போன்ற வேளாண்மைக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். வாழை
தீவிர சாகுபடி செய்து அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்ற காரணத்
தால் அந்நியச் செலாவணி கிடைக்குமென்று அதற்காகத் தனியான
இலாகா ஏற்படுத்தி பல அதிகாரிகளை நியமிக்கிறார்கள்.

குறிப்பாக, என் மாவட்டத்தில், திண்டுக்கல் வட்டத்தில் வாழை தீவிர சாகுபடித் திட்டம் (பஞ்சு பாக்கேஜ் ஸ்கீம்) என்பதற்கு ஒரு அலுவலகம் ஏற்படுத்தியுள்ளார்கள். அந்த மாவட்ட தனி விவசாய அதிகாரிக்கு எந்தவிதமான வேலையும் இடையாது. வாழை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை அணுகி அவர்களிடமிருந்து கடன் மனுக்களை வாங்கி பரிசீலனை செய்து, சிபார்சு செய்து கடன் வழங்கும்படி "Farm Plans—Proposals கூட்டுறவு கிரெடிட் சொஸைட்டிக்கு அனுப்பியுள்ளார்கள். ஆனால் கூட்டுறவு கிரெடிட் சொஸைட்டிகள் அவைகளை தள்ளிவிடுகிறார்கள். ஏற்கனவே அந்த விவசாயிகள் இந்த கிரெடிட் சொஸைட்டியில் கடன் வாங்கியிருக்கிறார்கள். ஆகவே இதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தள்ளிவிட்டார்கள். இப்போது ஏறத்தாழ 300 **proposals** அந்த தனி மாவட்ட விவசாய அதிகாரியால் அனுப்பி வைக்கப்பட்டதை கிரெடிட் சொஸைட்டி தள்ளிவிட்டார்கள். ஆக, அவர்களுக்கு கடன் வசதி கிடைக்கவில்லை. இந்த முறையில் நடந்தால் அவர்களுக்கு கடன் கிடைக்க வசதியில்லாமல் இந்தத் திட்டம் தோல்வி அடைகிறது. ஆகவே அந்த மாவட்ட விவசாய அதிகாரியின் மூலமே கடன் வழங்கினால் இந்த திட்டம் நல்லமுறையில் செயல்படும். கிரெடிட் சொஸைட்டி மூலம் போனால் அவர்களுக்கு பணம் கிடைப்பதில்லை. இது வாழை விவசாயிகளுக்கு மட்டுமல்ல. வேளாண்மைத் துறையிலுள்ள சகல விவசாயிகளுக்கும் அந்தந்த இலாகாக்கள் மூலம் கடன் வசதி கொடுத்தால் விவசாயிகளுக்கு நல்ல முறையில் கடன் வழங்க வசதியாக இருக்கும். கூட்டுறவு சொஸைட்டிக்குப் போனால் நல்லமுறையில் அவர்களுக்கு கடன் கிடைப்பதில்லை. இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

வேளாண்மைத் துறைக்கு அடுத்தபடியாகவுள்ளது கைத்தறித் தொழில். கைத்தறி என்று சொல்லும்பொழுது அதற்கு என தனியாக ஒரு மான்யம் கொடுத்திருக்கவேண்டும். கதருக்கு என்று தனி மான்யம் இருக்கும்போது கைத்தறிக்கு ஏன் அப்படிக் கொடுக்கவில்லை ? கைத்தறிக்குள் அடங்கியதுதான் கதர். கதரும் கைத்தறிதான் என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். அதற்கு ஏன் தனியாக மான்யம் கொடுக்கவில்லை ? கைத்தறிக்கு என்று ஒரு தனி மான்யம் கொடுத்து அதற்குள் கதரையும் சேர்த்திருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். இப்போது கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. என் மாவட்டத்திலுள்ள செயற்கை பட்டு நூலில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு பெரிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. செயற்கைப் பட்டு நூல் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படவில்லை. இறக்குமதி செய்யப்படும் பட்டு நூலால் நெய்யப்படும் துணி நல்ல ரகமாக இருக்கிறது. அதன் இறக்குமதியை அனுமதிக்காததால் நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். உள்நாட்டில் கிடைக்கக்கூடிய செயற்கைப் பட்டு நூல் விலை மிகவும் கூடிவிட்டது. அதை வாங்கி உற்பத்தி செய்யக்கூடிய துணிகளின் அடக்கம் அதிகமாகிறது. அந்த விலைக்கு விற்பனை செய்ய முடிவதில்லை. அதனால் பட்டு நூல் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அதன் விலைவாசியைக் குறைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியில் மருதா நதி அணைக்கட்டுத் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. நான்கு ஆண்டுகளாக நான் சொல்லிச் சொல்லிப் பார்க்கிறேன். அமைச்சர்களிடமும் சொல்லியிருக்கிறேன். ஆனால் அதை கவனித்தபாடில்லை. பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் சொல்கிறார்கள். அங்குள்ள பிரபல மிராசுதாரர்கள், பிரபல அரசியல் வாதிகள், இந்த மருதா நதித் திட்டம் நிறைவேறிவிட்டால் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினருக்கு நல்ல பெயர் உண்டாகிவிடும், ஆகவே, அவர் காலத்தில் இது உருவாகக் கூடாது என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்குச் சொல்கிறேன், அமைச்சர் அவர்களுக்கும் சொல்கிறேன். இப்போது இத்திட்டம் செயல்படாவிட்டாலும் கூட, அடுத்த மந்திரி சபையில், அடுத்த பீரியட்டில் நிச்சயமாக நிறைவேற்றப்பட்டுவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

காரணம் அடுத்த தேர்தலில் தி. மு. க. அமைச்சரவை அமையும் என்பது உறுதி. அடுத்த அமைச்சரவையில் நிச்சயமாக அந்தத் திட்டம் நிறைவேறும் என்று மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படியானால் அந்தப் பெருமையை கனம் அங்கத்தினரே எடுத்துக்கொள்ளலாம். இப்போது அதை வற்புறுத்த வேண்டாமே, நம்மிடமுள்ள பணத்தை வேறு ஒன்றுக்கு எடுத்துக் கொள்ளலாமென்றால் அந்தப் பெருமையை அங்கத்தினரே வைத்துக் கொள்ளட்டும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : நாலாண்டுகளாக இந்த அமைச்சரவை அதைப்பற்றி கொஞ்சம் கூட கவனிக்கவில்லை என்று ஆத்திரம் வருகிறது. அந்தத் திட்டம்போல் என் மாவட்டத்தில் வேறு எந்த திட்டமுமே கிடையாது. அது வெற்றிகாமான திட்டம், பயன் படக்கூடிய திட்டம். அது வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகிறது என்றுதான் சொல்வேன். திண்டுக்கல்—கூடலூர் ரெயில்வே லைன் 1946-ல் சர்வே செய்யப்பட்டு ஆரம்பிக்கும் தறுவாயில்தான் நம் ஆட்சி மாறிய காரணத்தினால் நின்றுவிட்டது. அதை யாரும் கவனிக்கவில்லை. நல்லதொரு லைன் அது. விவசாயம் சம்பந்தப்பட்ட, வியாபாரம் சம்பந்தப்பட்ட பல இடங்களை இணைக்கக்கூடிய லைன் அது. 75 மைல் தூரம் இருக்கிறது. நம் அரசாங்கத்தின் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யாமலிருப்பது வருந்தக் கூடியது. அவை அவசியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri A. KUNJAN NADAR : Mr. Speaker, Sir, I shall confine myself to our local problems. Sir, in the Kanyakumari district there is a very serious and very curious situation created by the Government. Stamps and Stamp papers are sold in the black market there. It is a very unhappy state of affairs. If we want an eight-anna stamp, we have to pay Rs. 3. If we want one-rupee stamp paper, we have to pay Rs. 10. Several petitions and documents which have to be filed with stamps cannot be filed in courts and other offices. The documents cannot be registered in the Sub-Registrar's offices. I myself had experience of sending one person to Srivaikuntam, a place about 100 miles away to get some papers for my use, a few days ago. Sir, this is a commodity produced by the Government and distributed by the Government. Who is responsible for this state of affairs? This is an eye-opener to all of us in the South to see how scarcity and black markets are created. This Government which are not able to produce and distribute stamps, etc., have undertaken to procure and distribute foodgrains for 44 crores of people of India. Sir, from this I feel that the food scarcity is most artificial and that it is due to the inefficiency of the Government. We do not mind the Congress ruling for thousand years but we want a good Government and we want an efficient Government. All right, let the Congress rule us. Why not the best in the Congress rule us? But there are tyrants in the Congress. This is one matter.

Now, I want to draw the attention of the Government to another matter. The Khadi Commission was functioning in our State. When it handed over its functions to the State Khadi Board, the State Khadi Board had promised that all the staff

would be taken over by the State Government. Sir, in the Kanyakumari district, several persons in the Khadi Commission who are drawing about Rs. 150 are now transferred to Ajmer, Lucknow and other far-off places in North India though they have put in 10 or 15 years' experience. Sir, a Government servant having 15 years' experience will naturally have one daughter of marriageable age, at least one boy studying in a college and two or three boys studying in high schools and these persons with a meagre income are transferred to Ajmer, Lucknow and other places. Either the Government are responsible or the Officers of the Khadi Commission manned by big people are responsible for this state of affairs. Sir, the State Khadi Board has taken several new hands for bee-keeping section but these persons of 10 or 15 years experience are not taken by them. All the staff are transferred to North India, where the language spoken is unknown and where the living is, very costly. Regarding this 'Padaneer' my hon. friend Sri K. T. Kosalram was telling something about this. You know how deeper and how hard the man works to take this 'Padaneer'. I do not want any favour to be done to Kanyakumari. If you are bold enough, you introduce this in Kanyakumari. We will resist it and within 24 hours you will be compelled to withdraw your law. This was introduced by the Travancore-Cochin Government but it was not there within 24 hours of its introduction. I challenge you. We are people with life and there is life in Kanyakumari, not as animals as you think.

With regard to distribution of lands I agree that it should be distributed to the poor. With regard to hand-pounded rice the officers could get only polished rice from rice-mills and not hand-pounded rice. Hand-pounding is done by females in the houses. The Hon. Chief Minister said that there is no demand from Kanyakumari for that. We have unanimously expressed our views in the District Development Council meeting several times. All members of the District Development Council, including Congress Members are for distributing these rations as paddy and not as half-boiled rice. The vitamin part of the rice is taken away in the process of hulling in rice mills and a portion is wasted in the process of powdering the rice. The vitamin content is thus lost. So, I urge that paddy should be distributed to poor people.

With regard to issue of 'Stamps' a lot of difficulty is created by the establishment in Kanyakumari where land settlement is going on. Several statements have to be filed within time so that one tenure may be converted into another tenure. For the sake of the people of Kanyakumari I request the Hon. Minister to kindly look into the matter. If you cannot do it, why should you be here? After all, what is the cost of printing these stamp papers? It is not much. It is sold in black-market. It is a shameful thing.

Mr. SPEAKER: All these challenges must not be addressed towards the Chair in the direct form. They should be addressed to the Government. "Why should the Government do this or

that?"—In that way the hon. Member should address. If the expression 'you is used, then it refers to me. Challenges should be addressed to Government in the indirect form.

Sri A. KUNJAN NADAR: I challenge the Government through the Hon. Speaker, Sir.

Mr. SPEAKER: The expression 'You' would refer to me. Challenging the Government, through 'me' is not necessary. The hon. Member can challenge the Government by using the indirect form and not the direct form. Then it will be allright.

Sri A. KUNJAN NADAR: There is one more point also. I sent so many questions. But all questions were disallowed. That is another thing I want to submit to you, Sir. Probably the Hon. Speaker is not aware of that. One question related to a complaint regarding admission of students to M.B.B.S. . .

Mr. SPEAKER: The hon. Member cannot talk about disallowed questions here. I might have disallowed the question in a particular form. The hon. Member can meet me in my Chamber if he is interested in the matter.

Sri A. KUNJAN NADAR: One question has been disallowed saying that it is not of public importance. Who is to judge whether it is of public importance or not? I am coming to this Assembly for the fifth year . . .

Mr. SPEAKER: The hon. Member's time is up. I now call upon Sri S. Nanjunda Row to speak.

*திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்: கனம் சபாநாயகர் அவர்களே, சமுதாயநலத் திட்டம் பற்றி முந்தின நாள் பேசியபோது சில கருத்துக்களை சொல்வதற்கு எனக்கு நேரம் கிடைக்கவில்லை. அதனால் இப்போது அந்த கருத்துக்களை சொல்லுகிறேன். சமுதாய நலத்திட்ட வேலைகள் என் தொகுதியில் மிகவும் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கின்றன என்றிருந்தாலும் சில கஷ்டங்களும் இருக்கின்றன. ட்ரை ஏரியாவாக இருக்கிற இடங்களை எல்லாம் விவசாயத்திற்கு கொண்டு வரமுடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதன் காரணமாக அங்கிருக்கிற கிராம சேவகர்களுக்கு என்ன வேலை கொடுப்பது என்பதில் பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கும் கமிஷனருக்கும் கஷ்டமாக இருக்கிறது. பத்து கிராம சேவகர்கள் இருக்கிறார்கள். இந்த பத்து பேர்களுக்கும் என்ன வேலை கொடுப்பது என்பதைப்பற்றி பல தடவை யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது. இதற்கு என்னுடைய தாழ்மையான யோசனை என்னவென்றால், "இன்டன்ஸிவ் அக்ரிகல்சர் ஏரியா" வில் வேண்டுமென்றால் பத்து அல்லது பதினைந்து கிராம சேவக்-களை போடலாம். மற்ற டிரை ஏரியாவாக இருக்கிற தாராபுரம், வேடச்செந்தூர், ஒட்டன்சத்திரம் போன்ற இடங்களில் ஐந்து பேர்களை போட்டால் போதுமானது. இதைத் தவிர அந்தந்த பிளாக்-கிலிருந்து கூடுதலாக வேண்டும் என்று விரும்பினால் அதிகமாக கிராம சேவக்-களை போடலாம். அப்படியில்லாமல் ஒரு பிளாக்குக்கு இத்தனை பேர்களை கட்டாயம் அனுப்பவேண்டும் என்று நிலை இல்லாமல் தேவைக்குத்தகுந்த படி அனுப்புவது சரியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

ஒவ்வொரு பிளாக்கிலும் அந்தந்த ஏரியாக்களுக்கு சுயதேவை ஏற்படுகின்ற முறையில் விவசாயம் பெருகிவருகிறதா என்பதைப் பார்க்கும் போது, அங்கு தேவைப்படுகின்ற பல விஷயங்களுக்காக பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

[திரு. எஸ். நஞ்சுண்டராவ்] [29th March 1966

விவசாயத்தைப் பெருக்கவேண்டும் என்பதற்காக பல ஸ்கீம்-கள் போடப்பட்டிருக்கின்றன. முக்கியமாக தண்ணீர் வசதியை ஏற்படுத்துவதற்காக டீப்-போரிங் செட் வைக்க வேண்டும், அதன் மூலம் கிடைக்கின்ற தண்ணீரை உபயோகித்துக்கொள்ளலாம். 20 எக்கர், 30 எக்கர் என்று எடுத்துக்கொண்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அதற்குள்ள செலவை தண்ணீர் தீர்வைப் போட்டுக்கூட எடுத்துக்கொள்ளலாம். அதோடு கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ராக் பிளாஸ்டிங் யூனிட் அமைக்கப் படவேண்டும். இதையும் சமுதாயநலத் திட்டத்தோடு ஏற்பாடு செய்ய வேண்டும். பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு பல ஃபங்ஷன்ஸ் சொல்லப்பட்டிருக்கிறது. 'Monetary powers, statutory powers, discretionery powers and agency functions' விவசாயத்தைப் பொறுத்தவரையில் கவர்ன்மெண்டின் ஏஜென்ஸியாக இருந்து ஃபங்ஷன் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே விவசாயத்தின் மீது யூனியன்கள் அதிக அக்கரை செலுத்தவேண்டும். ஆனால் பள்ளிக்கூடத்தை மானேஜ்மெண்ட் செய்வதுதான் முக்கிய வேலையாக இருந்து கொண்டிருக்கிறது. இது போதாது, விவசாயத்தில் முக்கிய கவனம் செலுத்துகின்ற வகையில் "புட் ப்ரொடக்ஷன்"-க்கு கம்பல்ஸரி பிளான் ஒன்று ஏற்படுத்தி, அந்தந்த பகுதிக்கு எவ்வளவு தேவையோ அதை அவர்களே உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லி அதற்கு பல ஆலோசனைகளையும் சொல்ல வேண்டும். என்னுடைய தொகுதியில் வேடசெந்தூர், குஜிலியம்பாறை இந்த இடங்களில் முக்கியமாக "ராக் போரிங் யூனிட்" அமைப்பதற்கான திட்டத்திற்கு சாங்க்ஷன் கொடுத்தால் நலமாக இருக்கும். இப்போது உடனடியாக எக்ஸ்பரிமெண்டாக வேலை நடப்பதற்கு உதவி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும்.

பஞ்சாயத்து யூனியனில் **staff** அதிகமாக இருக்கிறார்கள் என்று பலரும் இங்கே சொல்லுகிறார்கள். இதில் முக்கியமாக கல்வியைப் பொறுத்தவரையில், ஒரு டெப்யுடி இன்ஸ்பெக்டர் போதும், ஈ. ஓ. (எஜுகேஷன்) தனியாகத் தேவையில்லை என்று சொல்கிறார்கள். ஆகையினாலே இதையும் அரசாங்கம் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

11-00 a.m. டெபுடி இன்ஸ்பெக்டரே யூனியனுக்கு ஆலோசனைகள் சொன்னால் போதுமானது. கல்வி விஸ்தரிப்பு அதிகாரி வேண்டியதில்லை. ஆனால் ஈ. ஓ. (ஸோஷல் எஜுகேஷன்) கட்டாயம் இருக்கவேண்டும். எவ்விதத்தில் என்றால் அவர்களை இன்ஃபர்மேஷன் அண்ட் பப்ளிஸிட்டி டிபார்ட்மெண்டுக்கு டிரான்ஸ்ஃபர் செய்தால் ஈ. ஓ. (ஸோஷல் எஜுகேஷன்) நல்ல முறையில் வேலை செய்ய சவுகரியமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதே மாதிரி, ஹை-பவர் கமிட்டி நியமித்திருப்பதாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒரு சின்ன ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு யூனியனும் நல்ல முறையில் வேலை செய்ய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. யூனியனை மேலும் நல்ல முறையில் எப்படி பலப்படுத்தலாம் என்று ஆலோசிக்கும்போது அவர்களுக்கு ரெவின்யூ பவர்ஸ் ஏன் கொடுக்கக்கூடாது என்று ஆலோசனை செய்து, தாசில்தார் மூலமாக நிர்வாகம் வேறு, பஞ்சாயத்து யூனியன் மூலமாக நிர்வாகம் வேறு என்று இல்லாமல், ரெவின்யூ பவர்ஸைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்தால், தாசில்தார்களே சப்-கலெக்டர் வேலையைச் செய்யலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் ஃபாமிலி ப்ளானிங் வேலை நல்ல முறையில் கவனிக்கப்படவில்லை. ஆத்தூர் வட்டாரத்தில் மட்டும் ஃபாமிலி ப்ளானிங் வேலையை நல்ல முறையில் கவனித்து, என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் பர்த் ரேட் 2 பர் செண்ட் குறைந்திருக்கிறது என்று ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். பல தடவைகள் ஆத்தூர் பிளாக்குக்குச் செல்லும்போது பர்த் ரேட் குறைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையாகக் குறைந்திருக்கிறதா ? எந்த வகையில் குறைந்திருக்கிறது ? என்று கேட்கும்போது வாசெக்டமி

29 th March 1966] திரு. எஸ். நஞ்சுண்டராவ்]

மட்டும் இல்லை, காண்ட்ராசெப்டிங்ஸைப் பழக்கப்படுத்தி, துரிதமாக ஃபாமிலி ப்ளானிங் வேலை நடக்கிறது என்று சொன்னார்கள். இப்போது எங்கே வாசெக்டமி ஆப்பரேஷன் அதிகமாக நடந்திருக்கிறதோ அந்த இடத்திற்கு ப்ரைஸ் கொடுப்பது வழக்கமாக இருக்கிறது. அது இல்லாமல் உண்மையான விதத்தில் எந்த இடத்தில் பர்த் ரேட் குறைந்திருக்கிறதோ, எந்த பிளாக்கில் குறைந்திருக்கிறதோ, அந்த இடத்திற்கு ப்ரைஸ் கொடுக்க வேண்டுமென்பதை அரசாங்கம் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பென்ஷன் சம்பந்தமாக ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஹைவேஸ் அஸிஸ்டெண்ட் ஒருவர் 5—6 மாதங்களுக்கு முன்பு ரிட்டயர் ஆனார்கள். அவரை நான் சில நாட்களுக்கு முன்பு சந்தித்தேன். என்னுடைய பென்ஷன் பற்றி முடிவு ஒன்றும் ஆகவில்லை. ரூ. 120—130 பென்ஷன் வரலாம், இத்தனை நாட்கள் ஆகியும் முடிவு தெரியவில்லை என்று சொன்னார்கள். ரிட்டயர் ஆகும் போதே டென்டேட்டிவ்வாக 120—130 ரூபாய் வரும் என்றால் 100 ரூபாயாவது பென்ஷன் கொடுத்தால் நலமாக இருக்கும். அந்த முறையில் ரிட்டயர் ஆகும்போதே ஆர்டர் கொடுத்தால் நலம் என்று நினைக்கிறேன். எந்த சர்க்கார் சிப்பந்தியும் ரிலீவ் ஆகிற நேரத்திலேயே அவருக்கு பென்ஷன் பேப்பர்களைக் கொடுப்பது நல்ல திட்டமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதே மாதிரி அவர்களுக்கு ரூபாய் 4,000 கிராச்சுயிட்டி வரும் என்று சொன்னார்கள். ஏ. ஜி. ஆஃபீஸிலேயோ, ஃபைனான்ஸ் டிப்பார்ட்மெண்டிலேயோ முடிவு ஆகவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் எதற்காகச் சொன்னார்கள் என்றால் அவருடைய மகளுக்கு கல்யாணம் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், கையில் பணம் இல்லை என்றும், கிராச்சுயிட்டி பணம் ரூ. 4,000 வருவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்றும் சொன்னார்கள். என்னுடைய வேண்டுகோள் என்ன என்றால், கெஜெட்டெட் ஆஃபீஸராக இருந்தாலும், நான்-கெஜெட்டெட் ஆஃபீஸராக இருந்தாலும் உடனடியாக டென்டேட்டிவ்வாக பென்ஷனையும், கிராச்சுயிட்டியையும் கொடுப்பது நல்லது என்பதாகும். ரிட்டயர் ஆகும்போது ரிலீவிங் ஆர்டர் ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன். காப்பி இருந்தால் இங்கு வந்து கேட்கலாம் என்று கேட்டேன். ரிலீவிங் ஆர்டர் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அமெரிக்க அரசாங்கத்தின் ஒரு நிர்வாக ஏற்பாடு எப்படி இருக்கிறது என்று சொன்னால் யாரையாவது வேலைக்கு அமர்த்தும்போது ஜனாதிபதியே ஆர்டர் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

Reposing special trust and confidence in your Integrity, Prudence and Abiity, I do appoint you for such and such a post and do authorise and empower you to have and to hold the said office and to exercise and enjoy all the rights, privileges and immunities appertaining to your post.

என்று அமெரிக்க ஜனாதிபதியே, மிஸ்டர் ஜான்ஸன் அவர்களே கையெழுத்திட்டு, சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் கையெழுத்திட்டுக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதுபோல சர்டிஃபிகேட் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுக்கு, ஃபாரின் சர்வீஸ் அதிகாரிகளுக்குக் கொடுக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. இதுபோல நல்ல சர்டிஃபிகேட் **Reposing special trust and confidence in your Integrity, Prudence and Ability** என்று போட்டு மாநில கவர்னரோ, சீஃப் செகரட்டரியோ அல்லது சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரியோ கொடுக்கும்போது அதை கடைசி வரையில் பெருமையாக வைத்துக் கொண்டு சர்க்கார் அதிகாரிகள் பெருமைப்படலாம் என்று நினைக்கிறேன். நியமனம் செய்யும்பொழுதும், பதவிக்காலம் முடிந்து ரிட்டையர் ஆகும் பொழுதும் இதுபோல ஒரு ஷிஸ்டத்தைக் கொண்டுவந்தால் நல்ல டிஸப்

ளின் ஏற்படுத்தமுடியும். அந்த முறையில் பெருமைப்படுகிற அளவுக்கு இப்பேர்பட்ட சர்ட்டிபிகேட் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் வந்திருக்கக்கூடிய மசோதாவின் மீது என்னுடைய இரண்டொரு கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதாவது நம்முடைய ராஜ்யத்திலே இப்பொழுது உரப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தங்கள் மூலமாக மந்திரி சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று நேரடியாக விவசாயிகளுக்கு உரம் கிடைப்பது கிடையாது. சூப்பர் பாஸ்ஃபேட், யூரியா ஆஃப் பொட்டாஷ், சல்ஃபேட் ஆஃப் அம்மோனியா போன்ற உரங்கள், உணவு உற்பத்திக்கு, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு அவசியமாக இருக்கிறது என்று சொல்லும் நேரத்தில், இவைகள் கிடைக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கக்கூடாது. உடனடியாக அரசாங்கம் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி, எங்கெங்கே நமது ராஜ்யத்தில் உரப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறதோ அங்கங்கே உரம் நல்ல முறையில் கிடைப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அவைகளையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதே போல கலப்பு உரம் உற்பத்தி செய்யும் வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வேண்டிய உரங்கள் கிடைப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. அதையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இரண்டாவதாக, புதிய வீரிய விதைகள் வந்திருக்கின்றன. நெல், கம்பு, சோளம் முதலியவைகளை நல்ல முறையில் அதிகப்படியாக ஒரு ஏக்கரில் சாகுபடி செய்யவேண்டுமென்றால், சயன்டிஃபிக் மெனியூர், யூரியா ஆஃப் பொட்டாஷ், சல்ஃபேட் ஆஃப் அம்மோனியா போன்ற உரங்களை விவசாயிகளுக்குக் கொடுத்தால்தான சாகுபடியை நல்ல முறையில் செய்யமுடியும். அந்த உரங்கள் இல்லாமல் வீரிய விதைகளைப் போட்டால் நல்ல பலன் இல்லாமல் நோய் ஏற்பட்டு, சரியான வெள்ளாமை கூட வராது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் உரப் பற்றுக்குறையை மந்திரி சபை கவனத்தில் வைத்துக்கொண்டு உடனடியாக உரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியிலிருந்து சில முக்கிய விவசாயிகள் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். வீரிய விதைகளோ, பொறுக்கு விதைகளோ, கம்பு, சோளம் போன்றவைகள், பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் கிடைப்பது கிடையாது என்று நேற்று இரவு பல முக்கிய விவசாயிகள் தகவல் கொடுத்திருக்கிறார்கள். கிணறுகளில் இருக்கிற தண்ணீரை வைத்துக்கொண்டு வெள்ளாமை செய்ய முயற்சிக்கும் போது விதை கிடைக்காவிட்டால் ஒன்றும் செய்யமுடியாது. எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் தேவையான அளவுக்கு விதைப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை ஏராளமாகத் தேங்கிக் கிடக்கிறது. இது ராஜ்ய சர்க்கார் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை. இருந்தாலும் முதல் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்கு அவசரமாகத் தகவல் கொடுப்பதன் மூலம் இந்தக் குறையை நீக்கமுடியும். ஒன்று தேங்கி இருக்கிற சர்க்கரையை டிஸ்போஸ் செய்யவேண்டும்; இல்லை என்றால் அவர்களுக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஆலைச் சொந்தக்காரர்களுக்கு பணம் கிடைக்காத காரணத்தினால் விவசாயிகளுக்கு பணம் கொடுக்கவில்லை. விவசாயிகளுக்குப் பணம் கிடைக்காவிட்டால் அவர்களால் விவசாயம் செய்யமுடியாது. அதோடு ஆலைகளில் இருக்கக் கூடிய, ஊழியம் செய்கிற ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுப்பதில் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, சர்க்கரையைப் பொறுத்த

வரையில் ஒன்று டிஸ்போஸ் செய்யும் முயற்சியை மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று மாநில சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும், அல்லது கடன் கொடுத்தாவது விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இதற்கு அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் இப்போது நியாய விலைக் கடைகள் தேவையாக உள்ளது. குடும்ப கார்டு முறை நகரங்களில்தான் உள்ளது. குறிப்பாக மேஜர் பஞ்சாயத்துக் களிலாவது குடும்ப கார்டு கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவது ஒவ்வொரு ரெவின்யூ கிராமந்தோறும், கிராமம் தோறும் அல்லது பஞ்சாயத்துதோறும் நியாய விலைக் கடைகள் வைத்து ஒன்று அரிசி வேண்டுமானாலும் கொடுக்கலாம், இல்லையென்றால் புன்செய் தானிய மாகக் கொடுக்கலாம். அதுவும் முடியாவிட்டால் கோதுமையாகக் கொடுத் தால் வாங்கிக்கொள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள், எங்கள் ஜில்லா வைப் பொறுத்தவரையில் சொல்லுகிறேன், மற்ற ஜில்லா விவரம் பூர்ண மாக எனக்குத் தெரியாது. மெட்ராஸ் படி அரிசி இங்கெல்லாம் கடையிலும் சரி, வெளி மார்க்கட்டிலும் சரி ரூ. 2-க்கு மேல் கிடையாது. ஆனால் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் ரூ. 3—4-க்குக் கூட விற்கிறது என்பதை அமைச்சர் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல ஜில்லாக்களில் இருக்கக்கூடிய நிலவரத்தைப் பல நண்பர்களிடம் விசாரித்தேன். எங்கள் ஜில்லாவில் இருக்கும் அளவுக்கு ரூ. 3, 3–50, ரூ. 4 அளவுக்கு வெளி இடத்தில் கிடையாது. ஆகையால் கோதுமையாவது கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக காளிங்கராயன் கால்வாய் பகுதியில் மூன்றும் போகம் வைக்கக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. விவசாயிகள் நாற்று பிடுங்கி நடவு நட்டதற்குப் பிற்பாடு இந்த உத்தரவு போடப்பட்டிருக் கிறது. விவசாயிகள் ஏற்கனவே 10,000 ஏக்கர் நிலங்களில் மூன்றும் போகம் பயிர் வைத்தாகிவிட்டது. மூன்றும் போகத்திற்கு இன்னும் 50 நாட்களுக்காவது தண்ணீர் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமீபத்தில் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தன்னுடைய இலாகாவைப் பற்றி ஒரு அறிக்கை கொடுத்தார்கள். பவானியிலிருந்து காவேரிக்கு தண்ணீர் கொடுப்பது பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வருஷம் லோயர் பவானியில் ஜூன்—ஜூலை, அக்டோபர்-நவம்பர் ஆகிய நான்கு மாதங்களில் ஏராளமான தண்ணீர் வந்தது. எவ்வளவு தண்ணீர் வந்ததோ அவ்வளவு தண்ணீரில் பெரும் பகுதி காவேரிக்கு திருப்பி விடப்பட்டது. ஒரு ஆற்றுத் தண்ணீரை இன்னொரு பகுதிக்கு விடும்பொழுது, அந்த ஆற்றுப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களை கவனத் தில் வைத்துக்கொள்ள வேண்டும். எது புராதனமானது, பழமையானது, எது பழைமை இல்லாதது என்ற அடிப்படையில் இருக்கக்கூடாது. பூராவும் 2 லட்சம் ஏக்கராவுக்கும் தண்ணீர் கிடையாது. மந்திரி சபையிலிருந்து யாராவது ஒரு மந்திரி இந்தப் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்து பார்த் தால், அங்கு இருக்கக்கூடிய ஜனங்களின் மனோபாவத்தைத் தெரிந்து கொள்ளலாம். நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், காவேரியை காட்டி கீழ்பவானிப் பகுதியை நாசமாக்குகிற கொள்கையை இந்த சர்க்கார் நிறுத்திவிடவேண்டும். மூன்றாவது வருஷத்தில் ஆரம்ப காலத்தில் ஏரா ளமான தண்ணீர் காவேரிக்கு திருப்பிவிடப்பட்டது. கடைசியில் அவசிய மாக இருக்கும்பொழுது தண்ணீர் கிடையாது. இரண்டாவது போகம பயிர் வைக்கக் கூடாது என்று சர்க்கார் தெரிவித்தார்கள். கீழ்பவானி மக்கள் 2, 3 சந்தர்ப்பங்களில் இம்மாதிரி தொல்லையை அனுபவித்துக் கொண்டு வந்துவிட்டார்கள். எந்தக் கால்வாயை எடுத்துக்கொண்டாலும், கடை கோடி வரையில் தண்ணீர் விட்டு, பிறகு கடை கோடியிலிருந்து பாசனத் திற்கு தண்ணீர் கொடுப்பது வழக்கம். கீழ்பவானி பகுதியில் தலைகீழாக நடக்கிறது. எப்பொழுது தண்ணீர் குறைவாக இருக்கிறதோ அப்பொழுது

மேலே இருந்து தண்ணீர் கொடுப்பது என்பது கூடாது. காவேரி உரிமையைக் காட்டி கீழ்பவானிப் பகுதியை நாசமாக்கக்கூடாது. காவேரிக்கு உரிமை இருக்கலாம். எப்படி உரிமை இருக்கிறது என்பது பற்றி இந்தச் சபையில் முன்னால் தகவல் கொடுத்தார்களா என்றால் இல்லை. அந்த மாதிரி தகவல் கொடுத்திருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஒப்பந்தம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஒப்பந்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, காவேரி உரிமையைக் காட்டி கீழ்பவானிப் பகுதியை நாசம் செய்கின்ற கொள்கையை சர்க்கார் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபையில் எல்லா அங்கத்தினர்களையும் பார்க்கிறபொழுது, நமது முதல் மந்திரி அவர்கள் சுமார் 30 வருஷங்களாக சட்டசபை அங்கத்தினராக மட்டும் அல்லாமல் நிர்வாகத்திலும் அதிக அனுபவம் பெற்றவர்கள், முதிர்ந்த அனுபவம் பெற்றவர்கள். இந்தச் சட்டசபை அங்கத்தினர்கள், எப்படி நடந்துகொள்ள வேண்டும், அங்கத்தினர்களுடன் அரசாங்கமும் அதிகாரிகளும் எப்படி நடந்துகொள்ள வேண்டும், செகரடேரியட் எவ்வளவு தூரம் உதவியாக இருக்க வேண்டும் என்பதையெல்லாம் நான் அவர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நானும் சுமார் 20 வருஷங்களுக்கு மேலாக தொடர்ந்து அனுபவம் பெற்றிருக்கிறேன். என்னுடைய அனுபவத்தில் எனக்குத் தோன்றிய சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அந்தக் காலத்தில் சட்டசபையில் ஏதாவது ஒரு அங்கத்தினர் புதிய கருத்தைத் தெரிவித்தால்—அந்தக் கருத்து அனுபவ சாத்தியமாக இருக்கலாம், அனுபவ சாத்தியம் இல்லாமல் இருக்கலாம்—அந்தக் கருத்தை தெரிந்துகொள்ளுவதற்கு, செக்ரடேரியட் டிபார்டுமெண்டில் உள்ளவர்கள், செக்ரடரிகள் பெரும்பாலும் சட்டசபையில் கேள்வி நேரத்தின்போதும் சரி, மசோதாக்கள் விவாதிக்கப்படும் பொழுதும் சரி அல்லது பட்ஜெட் போன்ற விவாதத்தின்போதும் சரி சட்டசபையில் இருப்பார்கள். தங்கள் இலாகாவுக்கு சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும், மற்ற செகரட்டரிகளும் இருந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு செகரடரியின் ரூமிலும் லெளட் ஸ்பீக்கர் வைத்திருப்பார்கள், அதன் மூலம் அவர்கள் இங்கு நடக்கும் விவாதத்தைக் கேட்டுக்கொண்டு இருப்பார்கள். விவாதத்தில் உள்ள புதிய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருப்பார்கள். என்னுடைய அனுபவத்தில் நான் சொல்கிறேன். ஏதாவது ஒரு அங்கத்தினர் புதிய கருத்தைத் தெரிவித்தால், அந்த டிபார்ட்மெண்ட் செக்ரடரி உடனே அந்த அங்கத்தினருக்கு எழுதி மேலும் விவரம் கேட்பார். **Dear Mr, Swaminathan, you have expressed a view. Will you please explain it ? What is it that the Government can do in the matter? Can you please give us any further information about this?** என்று லெட்டர் எழுதி விவரம் கேட்பார். சில மந்திரிகள் கூட அம்மாதிரி அங்கத்தினர்களுக்கு லெட்டர் எழுதி, அவர்கள் சொன்ன கருத்துக்களைப் பற்றி விளக்கம் கேட்பார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் அந்த மாதிரி ஒன்றுமே வருவதில்லை. செக்ரடரிகள் அந்த மாதிரி சபைக்கு வருவதும் இல்லை. அப்படி வந்தாலும் இங்கு கூறப்படும் கருத்துக்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மேலும், என்ன விவரம் என்று விசாரித்து கேட்கக்கூடிய அளவுக்கு முக்கியத்தும் கொடுப்பதில்லை. புதிய கருத்தை எந்தக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் சொன்னாலும் சரி, அவர் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினராக இருந்தாலும் சரி, அல்லது எதிர் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினராக இருந்தாலும் சரி—அந்தக் கருத்து காரிய சாத்தியமானதாக இருக்கலாம், காரிய சாத்தியமில்லாமல் இருக்கலாம்—அந்தக் கருத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அது எப்படி நம்முடைய மாநிலத்திற்கு நன்மை பயக்கக்கூடியது என்பதை மேலும் விளக்கம் கேட்டு தெரிந்துகொள்ளலாம் என்ற அளவில் அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, அதைப்பற்றி செக்ரடரிகள் அங்கத்தினரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முயற்சிப்பது என்பதே இல்லை. அந்த பழக்கமே

இப்பொழுது இங்கு இல்லை. இதுவரையில் எந்த செக்ரடரியும் நான் சொன்ன எந்தக் கருத்தைப்பற்றியும் எனக்கு எழுதியதில்லை. நானும் பல அங்கத்தினர்களைக் கேட்டேன். அவர்களுக்கும் எந்த செக்ரடரியும் அவர்கள் கூறிய கருத்தைப்பற்றி எழுதிக் கேட்டதாகத் தெரியவில்லை. இந்த ஐந்து வருஷங்களில் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஒரே ஒரு செக்ரடரி நான் சொன்ன கருத்தைப்பற்றி எழுதிக் கேட்டார். நானும் அதற்குப் பதில் சொன்னேன். "நீங்கள் ஒருவர்தான் இம்மாதிரி எழுதிக் கேட்டிருக்கிறீர்கள். இந்த பத்து வருஷ காலத்தில், இம்மாதிரி யாரும் எழுதிக் கேட்டதில்லை. நீங்கள் பழைய ஐ.சி.எஸ். அதிகாரி, அந்த ஞாபகத்தில் எழுதியிருக்கிறீர்கள்" என்று கூட அவருக்கு "அப்ரிஸியேஷனை" பதில் எழுதினேன்.

என்னுடைய நண்பர் திரு. கோசல்ராம் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். சாதாரணமாக இம்மாதிரி அதிகாரிகளைப்பற்றி நாங்கள் கருத்துத் தெரிவிக்கிறோம். அதிகாரிகளைப் புகழக் கூடிய அளவில் மந்திரிகளும் கருத்து தெரிவிக்கிறார்கள். ஆனால் ஒரு விஷயம், அங்கத்தினர்கள் ஒரு குறிப்பிட்ட அதிகாரியின் பெயரைச் சொல்லி அவரைத் தாக்கி பேசக்கூடாது. அம்மாதிரி குறிப்பிட்ட அதிகாரியைத் தாக்கிப் பேசினால், அதற்குப் பதில் சொல்லுவதற்கு அவர் இங்கு இல்லை. அதிகாரிகளின் பெயரைச் சொல்லி குற்றம் சாட்டிப் பேசினால், அவர்களுக்காக மந்திரிகள் பேசவேண்டியிருக்கிறது. சாதாரணமாக பார்லிமெண்டரி சம்பிரதாயம் என்னவென்றால், டிபார்ட்மெண்டைத் தாக்கிப் பேசவேண்டுமே தவிர, டிபார்டுமெண்டில் ஊழல் நடக்கிறது அல்லது டிபார்டுமெண்டு சரியாக நடக்கிறது என்று சொல்லவேண்டுமே தவிர அல்லது அந்த டிபார்ட்மெண்டிற்கு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற மந்திரியைத் தாக்கி பேசவேண்டுமே தவிர, தனிப்பட்ட முறையில் அதிகாரியைத் தாக்கி பேசக்கூடாது. அப்படித் தாக்கிப் பேசுவது சம்பிரதாயம் இல்லை. பார்லிமென்டரி ஸிஸ்டத்தில், ஜனநாயக முறையில் அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அனுபவம் உள்ளவர்களாக இருக்கலாம், அனுபவம் இல்லாதவர்களாக இருக்கலாம். அப்படி அனுபவம் இல்லாத ஒரு அங்கத்தினர் அதிகாரியின் பெயரைச் சொல்லிவிட்டாலும் கூட, மந்திரி அதற்காக ஒரு குறிப்பிட்ட அதிகாரியை அவர் இந்திரன், சந்திரன் என்று புகழ்வது பார்லிமெண்டரி ஸிஸ்டத்திற்கு, ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்பது மந்திரிகளும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம். இம்மாதிரி மந்திரிகள் அதிகாரிகளை புகழ்ந்துகொண்டிருப்பது ரொம்ப தவறாக வரக்கூடிய விஷயம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சாதாரணமாக ரெவின்யூ டிபார்ட்மெண்டைப்பற்றி கருத்துச் சொல்லும் பொழுது, ரெவின்யூ டிபார்ட்மெண்டில் வரி வசூலிப்பதில் ரொம்பவும் மக்களுக்கு கஷ்டம் கொடுக்கிறார்கள். இப்பொழுது நடைமுறையில் ஊழே உள்ள அதிகாரிகள் தப்பு பண்ணுவதற்கு ஏது இருக்கிறது. அதனால் கிரிமினல் கேஸஸ் வருகின்றன, மிஸ்அப்ரோப்ரியேஷன் ஏற்படுகிறது என்று கூறி, இதையெல்லாம் தவிர்ப்பதற்கு புதிய கருத்துக்களை நாங்கள் இங்கு தெரிவித்தோம். இந்தக் கருத்து சாத்தியமாக இருக்கலாம், சாத்தியம் இல்லாமல் இருக்கலாம். இருந்தாலும், ரெவின்யூ டிபார்ட்மெண்ட் செயலாளர் அந்தப் புதிய கருத்துக்களைப் பற்றிய விளக்கம் என்னவென்று அங்கத்தினர்களைக் கேட்பது இல்லை. அது தான் போகட்டும். ஜனநாயக முறையில் இந்த தேசம் போய்க்கொண்டிருக்கிறது. சட்டசபையில் இப்பொழுது 207 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அடுத்த வருஷம் சட்டசபையில் 230 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அந்த 230 அங்கத்தினர்களில் சுமார் 8 பேர் மந்திரிகளாக வரலாம். ஒருவர் ஸ்பீக்கர், ஒருவர் டெப்யூடி ஸ்பீக்கராக வரலாம். இந்த 10 பேர்கள் போக பாக்கி 220 பேர்களுக்கு என்ன வேலை? ஏதோ சட்டசபைக்கு வருவது, ஏதோ விவாதத்தில் கலந்துகொள்ளுவது, பிரசங்கம் செய்வது, போவது என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. மந்திரிகள் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை, செக்ரடேரியட் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஏதோ சட்டசபையில் பேசிக்கொண்டு போகிறார்கள் என்ற நிலைமையில் போய்க்கொண்டிருந்

தால், ஜனநாயகம் வெறும் கேலிக்கூத்தாகிவிடும். அங்கத்தினர்கள் கூறு கிற கருத்துக்களுக்கு அரசாங்கமும், மந்திரிகளும், எல்லா உத்தியோகஸ்தர் களும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர் : டைம் ஆகி விட்டது.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : இப்பொழுதுதானே ஆரம்பித்தேன்.

கனம் உதவி சபாநாயகர் : இன்னும் இரண்டு நிமிஷங்களுக்குள் கனம் உறுப்பினர் அவர்கள் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : அங்கத்தினர்களை அரசாங்கமும் மந்திரி களும் "கான்பிடென்ஸில்" எடுத்துக்கொள்ள வேண்டும். ஏதாவது புதிய கருத்துக்கள் கூறப்பட்டால் அது விஷயமாக மேலும் விசாரிப்பதற்கு அவசியமானால் ஒரு கமிட்டி கூட போடவேண்டும். எனது நண்பர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் பதநீர் இறக்குவது பற்றி கருத்து தெரிவித் தார்கள். திரு. குஞ்சன் நாடார் அவர்களும் கருத்து தெரிவித்தார்கள். அதில் ஏதாவது சிக்கல் இருக்கலாம். ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசம் இருக்கலாம். ஏதாவது புதிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டால் 230 பேர் களில், 10 பேர் மந்திரிகள் முதலியவர்கள் போக பாக்கி 220 பேர்களில், 5 பேர்கள், 10 பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியை மந்திரி அவர்கள் நியமித்து, "நீங்கள் போய் பார்த்து அதிகார தோரணையில் விசாரணை பண்ணி இம்மாதிரி செய்யவேண்டும், அம்மாதிரி செய்யவேண்டும் என்று யோசனை சொல்லலாம்" என்று கூறலாம். அந்த மாதிரி யோசனைகளையும் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

புதுக்கோட்டை இனும் விஷயமாக நேற்று திரு. கல்யாணசுந்தரம் ஒரு அவசரப் பிரேரணையைக் கொண்டு வந்தார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இவ் விஷயத்தில் என்னுடைய கருத்துக்கும், கம்யூனிஸ்ட் கட்சி கருத்துக்கும் அதிக வேற்றுமை இல்லை. ஒரு விதத்தில் புதுக்கோட்டை இனும் விஷயமாக அவருடைய தீர்மானத்தை அமைச்சர் எதிர்க்க வேண்டி யிருந்தாலும், அது சரி என்றாலும், பிரச்சினை சம்பந்தப்பட்ட வரையில், அது சரியான குறைப்பாடு தான். நான் அரசாங்கத்தைக் குற்றம் சொல்ல வில்லை. நிறைய இனாம்தார்கள் இருக்கிறார்கள். அவர்களும், குடிகளுக்கு விரோதமாக நடக்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக இருப்பதில்லை. புதுக்கோட்டைப் பகுதியில் இருப்பதும், இராமநாதபுரத்தில் இருப்பதும் ஒன்றேதான். சட்டத்திலே, புதுக்கோட்டை அரசாங்கச் சட்டமும், எங்கள் பகுதியில் ஜமீன் சட்டமும், ஆதிகாலத்தில் பிரிட்டிஷ்காரன் சட்டமும் மூன்று முறையில் இருந்தாலும், பிரச்னை என்னவோ ஒன்று போன்றது தான். 200, 300 எக்கர்களை, 100, 200 விவசாயிகள் பல நூறு ஆண்டு களாகப் பயிர் செய்துகொண்டு இருக்கிறார்கள். இனாம்தார்கள் அதன் பேரில் வாரம் வாங்கிக் கொண்டிருப்பார்கள். ஒரு இனாம்தார் இனாம் கிரா மத்தை வேறு ஒருவருக்கு விற்று இருப்பார்கள். அந்த வகையில் நூறுபேர் கை மாறியிருக்கும். ஆனால் விவசாயிகள் அவர்களேதான். அவர்களே அந்த நிலங்களை உழுது பயிர்செய்துகொண்டு வந்திருப்பார்கள். இன்றைக்கு நம்முடைய சட்டமும், மனப்பான்மையும், உழுதவனுக்கு நிலம் என்பதுதான். ஆனால் 100, 200 ஆண்டுகளாக உழுது பயிர் செய்து கொண்டிருந்த விவசாயிகள் இன்றைக்கு உரிமை இல்லாமல் இருக்கிறார் கள். விவசாயினுடைய நிலைமையை தார்மீக முறையில் பார்க்கவேண் டும். (மணியடிக்கப்பட்டது) ரொம்ப விஷயம் பேச வேண்டும். அப்ரோப் பிரியேஷன் பில்லில்தான் அதிகமாகப் பேசுவது வழக்கம். இரண்டு நிமிஷம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேசி முடித்து விடுகிறேன். ஆகவே, புதுக்கோட்டை விவசாயிகள் விஷயம் இராமநாதபுரம் விவசாயிகளுடையதைப் போன்றதுதான். அதில் கட்சி விஷயம் ஒன்றும் இல்லை. அனுபவத்தில் இருப்பவர்களுக்கு உரிமையைக் கொடுக்கவேண் டும்.

கடைசியாக, வைகை ஸ்கீம் பற்றிசொல்ல வேண்டும். கேபிடல் அவுட் லேயின் கீழே பணம் ஒதுக்கியிருக்கிறோம். ஏற்கனவே சிவகங்கைப் பகுதி யில் 6,000 ஏக்கருக்கு தண்ணீர் வருகிறது. இப்பொழுது நான்கு ஐந்து வருஷமாக சிவகங்கை விவசாயிகள் இந்த ஸ்கீம் கம்ப்ளீட் பெய்ல்யூர் என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. இதைப்பற்றி பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த முறையில் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்கள் இதற்காக வரியும் கொடுக்கிறார்கள். அப்படி யிருந்தும் தண்ணீர் இடைக்கவில்லை. இந்த ஸ்கீம் அவர்களுக்கு வசதி யில்லாமல், பிரயோசனம் இல்லாமல் போய்விட்டது. சொல்லுவதை அர சாங்கம் கவனிக்கவில்லை. செக்ரடேரியட் டிபார்டுமெண்டுகள் எழுதிக்கேட்டா லும் விவரம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அவர்களும் அப்படிக் கேட்க முன்வருவதில்லை. அமைச்சர்களும் வைகை ஸ்கீம் என் பெயில் ஆகிவிட்டது என்றும், வரி வாங்குகிறோமே, அது ஏன் பிரோயசனப்பட வில்லை என்றும் கவனிப்பதில்லை. ஏதோ சட்ட சபையில் பேசுகிறோம். இதைப் பரிசீலனை செய்யக் கூடிய சூழ்நிலை, மனப்பான்மை வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* **SRI C. CHIRANJEEVULU NAIDU :** Mr. Deputy Speaker, Sir, I request the Government to provide more funds for sinking new wells as the funds allotted now are meagre and the eagerness on the part of ryots for sinking more wells and getting electric connection to augment the water-supply is increasing. I request that the allotment under the new well subsidy scheme may be enhanced and the subsidy portion raised. the disbursement made at a reasonable period and the agriculturists are not made to incur much expenditure in getting these loans.

I request the Government to consider whether they cannot give assistance for deepening of existing wells, because by deepening existing wells and tapping more water we will be able to overcome the present difficult food situation. This aspect also may be examined.

There is a proposal for the supply of 250 tractors in the ensuing year. I request that some more funds may be allotted for the purchase of tractors and that arrangements may be made for the import of spare parts as agriculturists, who have invested Rs. 20,000 for purchasing a tractor, find it very difficult to get spare parts whenever required.

Regarding improved agricultural implements, Government have a scheme to start a factory. But in the meanwhile I request that more funds may be provided for the purchase of improved implements from Madhya Pradesh and Maharashtra which are far ahead of us in this respect. I request the Government to consider this matter.

Regarding power set and power drills, there are not many in the agricultural engineering department. Funds may be provided for purchasing power sets and power drills and facilities provided for the ryots to make use of them.

The yield from fields has become very low. The reason given by the agriculturists is that it is the effect of the application of chemical fertilisers and pesticides. The Government should write to the Indian Council of Agricultural Research to investigate the

[Sri C. Chiranjeevulu Naidu] [29th March 1966

effect of fertilisers and pesticides on various soils and crops. The Department must consider whether it should not give proper information and advice to ryots regarding the use of pesticides, etc.

Regarding kerosene and crude oil, the position of agriculturists in rural areas is very difficult. Crude oil, which used to be available at Rs. 7 per tin, is now selling at Rs. 12 or Rs. 13. There is no proper control over dealers in crude oil and kerosene oil. Whenever we make any representation to the Government, we are told that the Revenue Divisional Officers may be contacted in the matter. They express their inability and say that they do not have control over this. There is a lot of confusion in the villages and the agriculturists in rural areas are suffering a lot.

Whenever we represent any difficulty to the Government their reply is that we may represent the matter to the Collector or the Revenue Divisional Officer. The state of affairs in the villages and also at the district level is not at all happy. To-day we are at the mercy of the officers who are not able to properly implement the various Government orders and schemes. I request that the serious difficulties which we are facing may be considered. Specific instructions may be issued to the dealers in kerosene, diesel oil and crude oil as the agriculturists are finding it very difficult to get these oils.

The Food Production Department is repairing the tanks in the taken-over villages. There is a tendency on the part of the Engineering Department to spend the amount that has been allotted; there is indiscriminate spending. Even where there is encroachment up to the tank bund and there is not even a cent of land which could receive the water, we see the tank bund being repaired. This may kindly be considered and suitable instructions in the matter issued to the Department.

Regarding the formation of new tanks, there has been inordinate delay. Investigation has been going on for the last four years. But no tangible results are seen.

So, also, with regard to the Desilting-*cum*-Reclamation Scheme, I understand that in the Chingleput district, for the
30 n past three years not even a tank has been repaired though estimates have been prepared and the schemes have been approved. In this connection, I have reminded the Department several times but they say that they do not have proper machinery to execute the schemes. I request that this aspect of the matter may kindly be considered.

Regarding procurment, as the Hon. Chief Minister has repeatedly pointed out, the prices of foodgrains now fixed under the Price Control Order are really remunerative. I also have a feeling that it is the price-support order. With all that, there has been inordinate delay with regard to procurement. The ryot

th March 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

have developed a tendency to dispose of their produce at the time
of harvest on the threshing floor itself. But the procurement
agents and millers are not coming forward to procure it at the
time of harvest. Now, the ryots do not want to get the food-
grains and store them and then to sell them at a later date. So
far as the fixation of levy is concerned even the particulars col-
lected from the karnam are not correct in certain respects and
if that is rectified, it will go a long way in improving the levy
system. If it is not done properly, it will reflect on the adminis-
tration. The persons who are entrusted with this work both
at the taluk and the district level may be asked to implement it
in a proper and correct way so that the agriculturists need not
say anything against the Government. Of course, the levy
system, which has now been introduced, is a good thing but
certain aspects of it may be considered, wherever there is failure
of crops or wherever the normal yield is less, levy must be reduced.
So far as Tirutani is concerned, all the three crops have failed
and I request the Hon. Chief Minister to treat the Tirutani
taluk as an area where all the crops have failed and wherever
there has been failure of crops and less yield, remission may be
given, and kist and loan arrear collections may be postponed.
Sir, I request the Government to consider all these aspects of
the matter. With these words, I conclude my speech.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை நான் வரவேற்கிறேன்.

ஆரம்பத்திலேயே, எதிர்கட்சியிலேயே குறிப்பிட்ட ஒரு கனம் அங்கத்தினர், தேச பக்தியை வளர்ப்பதற்குச் சிறு குழந்தைகளுக்காக இப்பொழுது பாடப் புத்தகங்கள் வைத்திருப்பதற்குப் பண ஒதுக்கீடு செய்வதைக்கண்டித்தார்கள். யார் இத்தகைய புத்தகங்களை எழுதுகிறார்கள் என்பது முக்கியமல்ல. தேச பக்தியை வளர்க்கக்கூடிய புத்தகங்களை யார் எழுதினாலும், அதற்கு அரசாங்கம் ஊக்கம் கொடுக்கவேண்டியது நியாயம். அத்தகைய ஊக்கம் கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். சமீப காலத்தில் அதற்குரிய ஆக்கமான வேலைகளில் அரசாங்கம் ஈடுபட்டு இருப்பதிலும் மிகவும் நியாயம் இருக்கிறது. தேச பக்தி கொள்ளுகிற நாம் நம்முடைய தலைமுறையோடு தேச பக்தி தீர்ந்துவிட வேண்டும் என்று யாரும் நினைக்க முடியாது. குழந்தைகள் மனத்திலே, பிஞ்சு உள்ளத்தில் நஞ்சு பாயாமல், நல்ல தேச பக்தியோடு வளரச் செய்து, அவர்கள் இந்தத் தேசத்தின் சின்னமாக நிலைக்க முடியும். அதற்குரிய ஆரம்ப நடவடிக்கையாக இந்தப் பாடப் புத்தகங்கள், கதைப் புத்தகங்கள் இவையெல்லாம் அமைவது மிகுந்த நியாயம். எங்களுடைய கவலை—தேசத்தினுடைய பாதுகாப்பைச் செய்யக் கூடிய இராணுவ வீரர்களுக்கு என்ன என்ன அளவு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கிறோமோ, அதே போல், இந்தத் தேசத்தின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட பரம்பரையினருடைய குழந்தைகளுக்குக் கல்வி வசதிக்குக் கூடப் போதுமான அளவுக்கு உதவி செய்ய வேண்டாமா என்பதையும் யோசிக்க வேண்டும். தியாகிகளின் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடிய கல்வி வசதி போதாது. எல்லா குழந்தைகளுக்கும் மேல் படிப்புக்குத் தாராளமாக உதவி செய்யவேண்டியதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீர்வை வசூல் சம்பந்தமாக, விவசாயிகள் நிலச்சுவான்தார்கள் செலுத்த வேண்டிய தீர்வையின் அளவைச் சரிவரத் தெரிந்து கொள்வதற்கு அரசாங்கம் வழி செய்தாகவேண்டும். செலுத்த வேண்டிய தீர்வையைப்பற்றி

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [29th March 1966

முன்கூட்டியே டிமாண்டு நோட்டீஸ் அனுப்புவதன் மூலமாக அதற்குப் பரிகாரம் காணலாம். செலுத்தவேண்டிய தீர்வை என்ன என்பதை விளம்பரப் பலகை மூலமாகத் தெரிந்து கொள்ள வசதி செய்தால் அவர்கள் தீர்வை செலுத்த வசதியாக இருக்கும்.

தமாஷா வரி ஏய்ப்பு சில இடங்களில் இருக்கிறது. கண்டுபிடிக்கக்கூடிய இடத்தில் தவறான வழிகளில் வேறு மாதிரி ஃபீல் உபயோகப்படுத்தக்கூடிய செய்தி இருக்கிறது. அதை அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டும். எந்த எந்த இடங்களில் தவறான ஃபீல் உபயோகப்படுத்துகிறார்கள் என்று கண்டுபிடித்து, குறைந்தபட்சம் அந்த தியேட்டர் லைசென்ஸ்களை சில காலமாவது ஸஸ்பெண்டு செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் அத்தகைய நிலைமை ஏற்படாமல் இருக்க வழி ஏற்படும். அதற்கு வழி செய்யவேண்டும்.

தமாஷா வரி வசூலைப்பொறுத்த வரையில், எந்தப் பஞ்சாயத்துக்கு அதன் பங்கு என்பதில் நிச்சயமில்லாமல் இருக்கிறது. தியேட்டர் எந்தப் பஞ்சாயத்தில் இருக்கிறதோ அந்தப் பஞ்சாயத்துக்குத்தான் தமாஷா வரி போய்ச்சேர வேண்டுமா ? அல்லது அந்தத் தியேட்டரைச் சுற்றியுள்ள மற்ற பஞ்சாயத்துக்களுக்கும் அதில் பங்கு உண்டா ? இதில் அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை. காலா காலத்தில் அதற்கு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசாங்கத்திற்குப் பண வருவாய் கொடுக்கக்கூடிய உப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய கண் சிகிச்சைக்கு தாராளமாக மத்திய சர்க்காரிலிருந்து உதவி பெற முடியும். செஸ் நிதியிலிருந்து உதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கும், கல்வி வசதியும், உப்புத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மருத்துவ வசதிபோன்ற வசதிகளையும் மத்திய நிதியிலிருந்து கேட்டுப் பெற இடம் இருக்கிறது.

அரசாங்கம் ஏழைகளுக்கு நிலம் ஒதுக்கவேண்டும் என்ற நல்ல எண்ணம் வைத்திருக்கிறது. செம்மறிகுளம் என்ற கிராமத்தில் பத்து வருஷங்களுக்கு முன்பு திட்டம் தயாரிக்கப்பட்டு, தோண்டப்பட்ட குழாய்க்கிணறு இன்னும் உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிறது. இது போன்ற குறைகளுக்கு இடம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

திருச்செந்தூர் தாலுகா எழுவரைமுக்கி பிடானேரி பகுதியில் 200 ஏக்கர் நிலம் ஏழைகளுக்கு உதவுவதற்காக, குறிப்பாக இலங்கையிலிருந்து வந்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக ஒதுக்கி வைத்தார்கள். வசதியுள்ள ஒருவர், நான்கு அரிசனங்கள் பெயரால், தானே அதில் இருபது ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு, தானே கிணறு போட்டு வைத்துக்கொண்டிருக்கிறார். அரசாங்கம் கண்விழிப்போடு இருந்துதான் மேற்கொண்டு இத்தகைய தவறு நிகழாமல் நில விநியோகத்தைத் தடை செய்தது. அந்தத் தடை பத்து வருஷ காலமாக இருந்து வருகிறது. இலங்கையிலிருந்து வந்த விவசாயிகள் பலருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தோடு தயார் செய்தார்கள். பத்து வருஷம் ஆனாலும் கூட, அதற்கு உண்டான திட்டம் தயாரித்து, கூட்டு முறையிலாவது, அல்லது தனிப்பட்டவர்களுக்காவது விவசாயம் செய்வதற்கு உதவ முடியுமா என்பதில் அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை. அதிலே தீவிரமான கவனம் செலுத்த வேண்டும். தாமதமில்லாமல் முடிவு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடம்பா குளத்தில் உட்பகுதியில் நூற்றருபது ஏக்கர் நிலம் நீர்ப்பிடி நிலம் இருக்கிறது. யாருக்கும் உபயோகம் இல்லாமல் அந்த நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் மூன்றடி மண் போட்டு உயர்த்தினால்தான் அந்த நிலத்தில் பயிர் எடுப்பதற்கு முடியும் என்று அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறது. முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்பு கோர்ட் வரையில் போய், ஒரு அடிக்கு மேலே மண் போடக்கூடாது என்று நிறுத்தி வைக்கப்பட்டது. மணிமுத்தாறு திட்டம் வந்து விட்டதால் பழைய தடையை நீக்குவது எப்படி என்பதைப் பார்த்து அந்த நிலத்தைச் சாகுபடிக்குக்

29th March 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

கொண்டுவர அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். விவசாயிகளே கோர்ட்டிற்குப் போய் தடையை நீக்க முயற்சிப்பது கஷ்டம். ஆகவே, சர்க்காரே முயற்சி எடுக்க வேண்டும்.

திருச்செந்தூர் தாலுகாவில் வீரபாண்டியன் பட்டணத்தில் திருச்செந்தூர் வடிகால் திட்டத்தின்கீழ் முதலியார்குளம் என்று குளம் அமைத்துத் தண்ணீர் கொடுக்க முடியும். தண்ணீர் இருக்கிறது. விளைவுக்கேற்ற நிலம் இருக்கிறது என்று அரசாங்க அதிகாரிகளுடைய தீர்ப்பு இருக்கிறது. ஆனால், விரும்புகிற பயிரை நிலத்திலே விவசாயம் செய்ய முடியுமா என்பது சர்ச்சை. இந்த சர்ச்சைக்குப் பரிகாரம் காணவேண்டும். அதிகாரிகள் தைரியமாக முன்வந்து உதவ முன்வரவேண்டுமே அல்லாது, விவசாயிகளிடத்தில் பயிர் செய்து காட்டுங்கள், பின்னர் திட்டம் போடலாம் என்று கேட்பது சரியான வாதம் ஆகாது.

300 ஏக்கர் நிலம் நஞ்சையாகப் பதிவு செய்யப்பட்ட நிலம் பள்ளிப்பத்து கிராமத்தில் பெட்டைக்குளப் பாய்மானத்தில் இருக்கிறது. நஞ்சைத் தீர்வையை விதித்துப் பின் புஞ்செய்த் தீர்வையாக மாற்றுகிறார்கள். ஊற்றுத் தண்ணீரிலிருந்து பாயக்கூடிய நிலையில் அந்நிலங்கள் இருந்து வந்தன. பெட்டைக் குளத்தை விருத்தி செய்து அந்நிலங்கள் பாசன வசதிபெறத் திட்டமிட வேண்டும். இதற்கெல்லாம் வேண்டிய அவசரப் பரிகாரம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சீட்டுக்காக ஒரு சட்டம் இருக்கிறது. சட்டத்தின்படி கோர்ட்டுக்குப்போவதென்றால் பல மாதம் ஆகிறது. யாரோ தெரிந்தோ தெரியாமலோ சீட்டு போடக்கூடிய கஷ்டம் ஏற்படக்கூடிய நிலைமையில் காலா காலத்தில் முடிவு ஏற்படுத்துவதற்குக் கோர்ட்டுக்குப் போய்த்தான் பரிகாரம் ஏற்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக அதிகாரிகளே கம்பவுண்டு செய்து சட்டப்படி சீட்டுப் பிடிக்காதவர்களுக்கு அபராதம் போட்டுப் பரிகாரம் காணுவதன் மூலமாக அனுவசியமாக சீட்டில் சேர்ந்த ஏழைகளுக்கு நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

குற்றாலத்தில் நேருஜிக்கு சிலை அமைப்பதற்காக நிலம் சம்பந்தமாக, பழைய கால கிராமச் சாவடி இருக்கும் நிலத்தில் நேருஜிக்குச் சிலை அமைப்பதாக சர்க்கார் முடிவு செய்து, எனக்கே தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் ரெவின்யூ அதிகாரிகள் அதைச் சுற்றி காம்பவுண்டு வைத்துக் கட்டடத்தை விருத்தி செய்துகொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இதைக் காலா காலத்தில் தடை செய்யவில்லையென்றால் வீணான செலவும் சிரமங்களும் ஏற்படக்கூடும்.

கூட்டுறவுத் துறையில் இயங்குகிற தீப்பெட்டித் தொழிலுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நாமே லட்சக்கணக்கான ரூபாய் பங்குத் தொகை மூலதனத்திற்குக் கடன் கொடுத்திருக்கிறோம். மூலதனக் கடனுக்கு வட்டி இல்லாமல் கொடுக்கக் கூடிய நிலைக்கு வந்துவிட்டால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் லாபகரமாக ஓடும், நஷ்டமாவது இல்லாமல் இருக்கலாம். நூற்றுக்கணக்கானவர்கள் வாழ்க்கைக்குரிய அத் தொழிலுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரே ஒரு விஷயம், தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ், இன்றைய தினம் சட்டம் இருக்கிற நிலைமையிலே, தங்க வேலை செய்கிற ஒரு பொற்கொல்லர் 100 கிராமுக்கு மேல் ஏக காலத்தில் வைத்துக்கொள்ளக் கூடாது. அதைவிட அதிகமாக கையில் வைத்துக்கொண்டிருந்தால் கஷ்டத்திற்கு உள்ளாகக்கூடிய நிலை இருக்கிறது. நானறிந்தமட்டில், பழைய நகையாக 100 கிராமுக்கு மேல் ஒரு பொற்கொல்லர் வைத்துக்கொள்வது சட்டப்படி தவறில்லை. ஆனால் 100 கிராம் வரை தான் ஒரே நேரத்தில் வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம். சட்டங்களில் இருக்கக்கூடிய நிலைமைகளைத் தொழிலாளர்கள் சரிவர உணர்ந்து கொள்வதற்கு உதவலாம். அமுல் நடத்தும் அதிகாரிகள் இந்தச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

கோதுமை கொடுக்கிறேம். ஸப்ஸிடைஸ்டு ரேட்டில் அதைக் கொடுத்தால் நல்லது. மாற்று உணவுக் கொள்கையை நிறைவேற்ற உதவியாக இருக்கும்.

*** திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் 'உதவி சபாநாயகர் அவர்களே, நிதி ஒதுக்கீட்டில் நான் பேசுகின்ற சமயத்தில், கடந்த ஒரு மாத காலமாக இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 188 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்தை அனுமதிக்கின்ற இன்றைய தினம் நாம் இங்கே வந்திருக்கின்றேம். இந்த 188 கோடி ரூபாயையும் அரசாங்கம் நாளை முதற்கொண்டு செலவழிக்கின்ற நேரத்தில் ஏழைகளை மனதிலே வைத்துக்கொண்டு இவர்கள் செலவுசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் செலவழிக்கின்ற ஒவ்வொரு ரூபாயும், இவர்கள் செலவழிக்கின்ற ஒவ்வொரு பைசாவும் இந்த நாட்டிலே இருக்கின்ற $3\frac{1}{2}$ கோடி மக்களால் தரப்படுகின்ற வரி, அந்த $3\frac{1}{2}$ கோடியிலே பெரும்பாலானவர்கள், 70 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் ஏழைகளாக இருக்கின்றவர்கள். அவர்கள் கொடுக்கின்ற வரி என்பதை ஒவ்வொரு சமயத்திலும் அமைச்சர்கள் முதலிலேயே மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் செலவழிக்கின்ற சமயத்திலே ஏழை மக்களை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகின்ற நேரத்திலே, ஒழுங்காக வரவேண்டிய வரியையும் திறமையாக வசூல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ரூபாயையும் விடாமல் வசூல் செய்கின்ற அளவிலே முதலிலே நம்முடைய அமைச்சர்களுக்கு பணக்காரர்களுடைய உருவம் தோன்றவேண்டும். வசூல் செய்யும்பொழுது பணக்காரர்களையும் செலவு செய்கின்றபொழுது ஏழைகளையும் மனதிலே வைத்து நல்லபடியாக செலவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் ஆண்டாக இருக்கிறது. வரப்போகின்ற தேர்தல் சம்பந்தமாக இப்பொழுதே மாநிலம் பூராவிலும் அதற்கான வேலைகளைப் பல கட்சியினரும் துவங்கிவிட்டார்கள். இருந்தாலும் நம்முடைய அமைச்சர்கள் சுற்றுப்பயணத்தை குறைத்துக்கொள்ளவேண்டும். குறைத்துக் கொள்ளவேண்டுமென்றல், ஏதோ அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணத்தின் காரணமாக நிறைய பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்று கூறுவதற்காக அல்ல, ஜனநாயக முறையை வைத்துள்ள இந்த நாட்டில் அமைச்சர்களாக உள்ளவர்கள், ஆட்சியிலே இருக்கின்றவர்கள், தேர்தல் பிரச்சாரத்திற்காகப் போகக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். தேர்தல் பிரச்சாரத்திற்கு அவர்கள் செல்லுவார்களானால் அப்படிச் செல்லுகின்ற நேரத்திலே கலெக்டர்கள், ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர்கள், இன்னும் மற்ற அதிகாரிகள் அத்தனை பேர்களும் வந்துவிடுகிறார்கள். அங்கே வருகின்ற ஏழை மக்கள் அதிகாரிகளைப் பார்க்கிறார்கள். அமைச்சர்களையும் பார்க்கிறார்கள். அமைச்சர்கள் சொல்கின்றபடி நாம் நடந்தால்தான் அதிகாரிகளிடமிருந்து சலுகைகள் கிடைக்கும் என்று நினைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அமைச்சர்கள் எல்லாம் தங்களுடைய சுற்றுப்பிரயாணத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அப்படியும் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்வார்களானால் அவர்கள் காரிலே ஏறி உட்காருகின்றபொழுதே கூழைக் குடிக்கின்ற குப்பனையும், எண்ணெ இல்லாமல் பறட்டத்தலையுடன் இருக்கின்ற ஏழையையும் மனக்கண் முன்னே கொண்டுவரவேண்டும். அவர்கள் அதற்குப் பிறகு வேண்டுமானால் நியாயமான காரியங்களுக்குப் பிரயாணம் மேற்கொள்ளலாம்.

திரு. சுவாமிநாதன் அவர்களும், மற்றொரு அங்கத்தினர் அவர்களும், இந்தச் சபையிலே கேள்விகளை எழுப்புகின்றபொழுது அமைச்சர்கள் சொல்கின்ற பதிலைகளை அதிகாரிகள் செயல்படுத்த மாட்டார்கள், செயல்படுத்தக்கூடிய முறையில் இல்லை என்று சொன்னார்கள். அது ஓரளவு உண்மை என்றுதான் சொல்வேன். இந்தப் பகுதியிலே இருக்கின்ற நாங்கள் பல விவாதங்களிலே ஈடுபடுகின்றேம். பல

கோரிக்கைகளைத் தெரிவிக்கின்றேம். தெரிவிக்கின்ற கோரிக்கைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து அது சரியான கோரிக்கையல்ல என்று கூடச் சொல்லிவிடலாம். ஆனல் எடுத்து வைக்கின்ற கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கு முதலில் வழியேற்படவேண்டும். ஒரு இடத்திலே 10 சுண்ணும்புக் கல் கிடைக்கிறது என்றல், அந்த இடத்தில் ஒரு சிமின்ட் ஆலையை ஏற்படுத்தலாம் என்று யோசனை தெரிவித்தால் அதைப் பரிசீலனை செய்யவேண்டும். பரிசீலனை செய்தபிறகுதான் அந்த சுண்ணும்புக்கல் ஆலை வைக்கக்கூடிய அளவுக்கு போதாது, ஆகவே எடுத்துக்கொள்வதற்கில்லை என்று சொல்லலாம். இந்த சட்டசபையிலே தெரிவிக்கின்ற யோசனைகளையெல்லாம், திட்டங்களையெல்லாம், இந்த சட்ட சபை முடிந்ததற்குப் பிறகுகூட அமைச்சர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். இதுவரை அப்படிப் பரிசீலனை செய்ததில்லை. இனிமேலாவது அப்படிச் செய்யவேண்டும். இங்கே எட்டு மந்திரிகள் இருக்கிறார்கள். நாங்கள் பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே அவர்கள் பல வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். அவர்கள் பைல்களைக் குவித்து வைத்துக்கொண்டு அந்த பைல்களை கவனிப்பதில் மனத்தை ஈடுபடுத்தியிருக்கலாம், அல்லது வெளியூர்களுக்குச் சென்றிருக்கலாம். ஒரே ஒரு மந்திரி இருந்தால்கூடப் போதும், ஜாயின்ட் ரெஸ்பான்ஸிபிலிட்டி இருக்கிறது என்று சம்பிரதாயம் இருக்கிறது. ஆளுங்கட்சியினரும், எதிர் கட்சியினரும் தெரிவிக்கின்ற யோசனைகளை திட்டங்களை, நிறைவேற்றுவதற்கு அமைச்சர்கள் பரிசீலனை செய்யவேண்டும்.

மின்சார இலாகாபற்றி வரப்போகின்ற செஷனிலே பேசப்போகின்றேம். அந்த இலாகாவிலே இந்த மாதிரிச் செய்கிறார்கள். அங்கத்தினர்கள் இங்கே கூறுகின்ற யோசனைகளை அவர்கள் பரிசீலனை செய்து, இதை ஏற்றுக்கொள்ளமுடியும், அல்லது முடியாது, இவ்வளவு செலவாகும் என்றெல்லாம் அடுத்த தடவை வருகின்ற செஷனிலே தெரிவிக்கிறார்கள். அதேபோல் இந்த மன்றத்திலே கூறுகின்ற யோசனைகளையெல்லாம் பரிசீலனை செய்து அதைப்பற்றிய முடிவுகளைத் தெரிவிக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு இங்கே பேசுவதைதவிர வேறு வழி இடையாது. நாங்கள் இங்கே பேசித்தான் பயன் அடையலாம். ஆனல் ஆளுங்கட்சியினருக்கு அப்படியில்லை, அவர்களுக்குப் பக்கத்திலே அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் பேசிக்கொள்கிறார்கள். காதோடு காதாக விவகாரம் முடிந்துவிடுகிறது. எங்களுக்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை, ஆகவே நாங்கள் பேசுகின்றவற்றைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டசபை முடிந்ததற்குபிறகு, திட்டங்களை யார் கூறினர்கள், தொழில் அமைப்பதற்கு யார் திட்டம் கூறினர்கள், செலவை குறைத்து சிக்கனத்திற்கு யார் யோசனை சொன்னர்கள், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு யார் யோசனை சொன்னர்கள், என்பதையெல்லாம் பார்த்து பேசப்பட்ட கருத்துக்களையும் கடந்த ஒரு மாத காலமாகத் தெரிவிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களையும் நன்றாக அஸெஸ் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேசுவதற்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம் ரொம்பக் குறைவு. 30, 35 அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்றல் ஒவ்வொருவருக்கும் 3 அல்லது 2 நிமிஷம்தான் வருகிறது. ஆகவே, எல்லாக் கருத்துக்களையும் அதற்குள் எடுத்துத் தெரிவிப்பது சிரமமாக இருக்கும். ஆகவே சட்டசபை முடிந்தகற்கு பிறகு நேரடியாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ யோசனைகளைத் தெரிவித்தால் அவைகளை பரிசீலனை செய்து—சட்டசபையில் சொல்லப்படுகின்ற யோசனைகளைப் புறக்கணிப்பதுபோல் இல்லாமல்—நல்லமுறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் சாதுரியமுள்ளவர், அவர் பதில்கள் சட்டசபையில் கூறக்கூடிய மாதிரி இல்லாமல் தனிப்பட்ட முறையில் சொன்னல் வேறு ஒரு மாதிரியாக இருக்கும். அதைப்போலவே மற்ற அமைச்சர்களும் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [29 th March 1966

இன்றும் இரண்டு நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்கிறேன். எதிர் கட்சியின் சார்பில் கட்மோஷன்ஸ் கொடுக்கிறோம். ஆனால் ஆளுங் கட்சிக்காரர்கள் கட்மோஷன்ஸ் கொடுக்க முடியாது. அவர்கள் நேரடி யாகப் பேசி விவகாரத்தை முடித்துக்கொள்கிறார்கள். நாங்கள் கொடுக் கின்ற கட் மோஷன்ஸ் தோற்கடிக்கப்படலாம், அல்லது பிரஸ் பண்ண முடியாத நிலையில் இருக்கலாம். ஆனால் அவையெல்லாம் தோற்கடிக்கப் பட்டாலும், அவையெல்லாம் பொதுமக்களுக்கு உகந்ததாக இருக்கிறதா என்பதைப் பார்த்து அவற்றையும் பரிசீலனை செய்யவேண்டும். ஆகவே இங்கே தெரிவிக்கப்படுகின்ற அத்தனை கருத்துக்களையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆபீஸர் ஓரியண்டெட் ஸ்கீம் வரப்போகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. செகரட்டரியேட்டைப் பொறுத்த வரையில் அது தேவையில்லை என்பதுதான் என்னுடைய அபிப்ராயம். என்னுடன் படித்தவர்களில் கலெக்டர் ஆபீசில் குமஸ்தாவாகி சிலர் ஆர்.டி.ஓ.வாக இருக்கிறார்கள் வேறு இடங்களில். ஆனால் செகரட்டரியேட்டிலே இருக்கக்கூடியவர்கள் எல்.டி.சி. யாகவும், யூ.டி.சி. யாகவும்தான் இருக்கிறார்கள். அவர் களுக்கு அதற்குமேல் ப்ரோமஷன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இந்த நேரத்தில் அதிகாரிகளைக் கொண்டுவந்து போட்டு டம்ப் செய்து விட்டால் அவர்களுக்கெல்லாம் நிரந்தரமாகப் ப்ரமோஷன் கிடைக்காது. டிப்ரொமொஷன்தான் இருக்கும்.

அடுத்தபடியாக இந்த ஸ்டேட்டிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அங்கே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். 20-க்குமேல் கெஜட்ட் அதி காரிகள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே என்ன பண்ணுகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் கூறுகின்ற புள்ளிவிவரத்திற்கும் விலைவாசிக் கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது. அதிகாரிகளை அதிகமாகப்போடு வதால், வரிப்பணம் பாழாகக்கூடிய நிலை ஏற்படும். போடப்படு கின்ற அதிகாரிகள் தேவையா இல்லையா என்பதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும்.

என்னுடைய மாவட்டம் சம்பந்தமாக சில யோசனைகளைக்கூற விரும் புகிறேன். என்னுடைய ஊரில் பாரி அண்ட் கம்பெனி இருக்கிறது. அங்கே 10,000 எக்கர் கரும்பு பயிரிட வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அங்கே ஏழை விவசாயிகள் மேலும் 600 ஏக்கர் களில் கரும்பு பயிரிட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 25,000 டன் கரும்பு தேங்கிக்கிடக்கின்றது. ஆலைக்காரர்களைக் கேட்டால் சீசன் குறைவாக இருக்கிறது; இடையிலேயே பத்துப் பதினைந்து நாட்கள் ஆலை ஓடாமல் நின்று விட்டது என்று சொல்கிறார்கள். பத்து நாட்களுக்கு சீசனை எக்ஸ்டென்ஷன் செய்தால் 25,000 டன் கரும்பை ஆலையிலே ஆட்டலாம். கனம் முதலமைச்சர் அவர்கள் இதிலே ஈடுபாடு கொள் வார்களேயானால் ஓரளவு பரிகாரம் காண முடியும். ஒரு டன் கரும்பு விலை 54 ரூபாய். தென்னாற்காடு மாவட்டத்தில் பாதிக்கப்படாமல் தக்க வழி செய்யவேண்டும். அரசாங்கத்துக்குக் கம்பெனி கொடுக்கிற ஐந்து ரூபாய் செஸ்ஸைக்கூட நாங்களே கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அந்த ஐந்து ரூபாயை எங்களுடைய விலையிலிருந்து குறைத்துக்கொண்டு கரும்பை எடுத்துக்கொண்டால் போதும். இந்தக் கரும்பை பாக்டரியில் எடுத்துக்கொளவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். ராமசாமி நாயுடு** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சட்டசபையிலே ஆளும் கட்சி, ஆளும் கட்சி என்று சொல்லி பல குற்றச்சாட்டுகளையும், புகழ்மாலைகளையும் கொடுக்கிறார்கள். 'ஆளும் கட்சி' என்று தமிழறிந்த பெருமான்கள் சொல்லுகிறார்கள். முழு மையும் அறிந்த முனிவர்களாகவும் அவர்கள் இருப்பார்களோ என்று சந்தேகம் ஏற்படுகிறது. தமிழறிந்தவர்கள் ஆளுகிற கட்சி என்று சொல்லாமல் ஆளும் கட்சி என்று முக்காலத்துக்கும்

29th March 1966] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

பொதுவான வினையைத் தழுவிச் சொல்கிற நிலையில் இந்தக் கட்சி
தான் எப்போதும் ஆளும் கட்சியாக இருக்கும் என்று மனத்திலே
பட்டுத்தான் சொல்கிறார்கள் என்று மிகப் பெருமிதம் அடைகிறேன்.

ஆளுங்கட்சி தங்களுடைய கட்சிக்குச் சாதகமான காரியங்களைச்
செய்கிறார்கள். மற்றவர்களுக்கு ஒன்றும் செய்வதில்லை என்று
சொல்லப்படுகிறது. ஆளுங்கட்சி அங்கத்தினர்கள் ஜெயித்து வந்த
தொகுதிகளில் தோற்றுப்போன எதிர்க் கட்சி அபேட்சகர்கள் பல
ஆயிரக்காணக்கான வாக்குகளை வாங்கியிருப்பார்கள் என்பதை மறந்து
விடக்கூடாது. அதே போல் எதிர்கட்சி அங்கத்தினர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்ட தொகுதிகளில் ஆளுங்கட்சியின் சார்பில் நின்ற பிரதி
நிதிகளும் பல ஆயிரக்கணக்கான வாக்குகளை வாங்கித்தான் தோற்றிருப்
பார்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது. ஆகவே, இங்கே ஆளுங்
கட்சிக்குச் சாதகமாக இருக்கிறது என்றோ, பாதகமாக இருக்கிறது
என்றோ எந்தக் காரியத்தையும் செய்ய இயலாத நிலை ஒன்று
இருக்கிறது என்பதை உண்மையிலேயே தெரிந்திருந்தும்கூட
அரசியல் ரீதியாக அதைப் பற்றியே சொல்லிக்கொண்டிருப்பதில்
அர்த்தம் இல்லையென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
மாரி ஒருவரை வரைந்து பேயாததுபோல் காங்கிரஸ் கட்சி சார்பாக
ஆட்சியை நடத்துகிறவர்கள் யாரையும் வரைந்து எக்காரியத்தையும்
செய்வதில்லை. எல்லா நல்ல காரியங்களையும் எல்லோருக்கும் பயன்
படுமாறு செய்து வருகிறார்கள். ஆளியாறு திட்டம் வந்தால் ஆளுங்
கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மட்டுந்தான் நலம் இருக்கிறது மற்றவர்
களுக்கு நன்மை இல்லை என்று சொல்ல முடியாது. ஆகவே, இந்த
மாதிரி அர்த்தமில்லாத பேச்சுக்களைப் பேசுவதை விட்டு விட்டு நல்ல
ஆக்க முறையில் காரியங்களைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

சென்ற தேர்தலில் எதிர்கட்சியில் இருந்து ஜெயித்து வந்தவர்களில்
பலர் பல இடங்களில் இந்தத் தேர்தலில் தோற்றுப்போனார்கள் என்றால்
அது எதனாலே? அவர்கள் அந்தத் தொகுதியைச் சரியாகப் பிரதிபலிக்
காததனாலா அல்லது தனக்கு இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நாண நன்னயம் செய்து விடல் என்பதற்கேற்ப அரசாங்கம் பல நன்மை
களைச் செய்ததனாலா? என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். முடிவை அவர்கள்தான் சொல்ல
வேண்டுமே தவிர, நான் சொல்லுவது நன்றாக இருக்காது.

குறைகள் மலிந்த இந்த நாட்டிலே எத்தனை அணைகளைக் கட்டினாலும்
எத்தனை கிணறுகளை வெட்டினாலும், மின்சாரத்தைக் கொடுத்தாலும்,
காட்டாறுகளை மடக்கி குளங்களுக்குத் தண்ணீர் விட்டு லட்சோப லட்சம்
எக்கர் நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டு வந்தாலும், ஆகாயத்தைப்
புகை மண்டலமாக்கி பூமியை சப்தமண்டலமாக்கும் அளவுக்குத்
தொழில் அபிவிருத்தியைச் செய்தாலும் கூட, இன்னும்
காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று சொல்வது பொருத்தமாக இருக்
கும். ஒன்றுமே செய்யாமல் விட்டு விட்டார்கள் என்று சொல்லிக்
கொண்டிருப்பதில் நியாயம் இல்லை.

இந்த நாட்டில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம்.
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை என்றுதான் பெரியவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். உழவேண்டும், அதன்மூலம் உணவைப்பெற்று
வாழவேண்டும். உயிரை உடம்பில் வைத்துக்கொண்டிருப்பது மட்டும்
வாழ்வாகிவிடாது, வாழ்வாங்கு வாழவேண்டும். ஆகவே, உழவுத்
தொழிலை அடிப்படையாகக் கொண்டு உணவுப் பொருளை உற்பத்தி செய்
கிறவன் மட்டுமல்லாமல் இந்த நாட்டில் இருப்பவர்கள் அத்தனை பேரும்
வாழ்வாங்கு வாழ வழி செய்யவேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு
இருக்கிறது. அதற்கான முயற்சிகளைச் சர்க்கார் எடுத்துக்கொண்டு
வருவதற்காகச் சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

குடிக்கக் கூழ் இல்லாத குப்பனுக்கும், கூழுக்கு உப்பு இல்லாத சுப்பனுக்கும், இருக்க இடம் இல்லாத இருசப்பனுக்கும், தலைக்கு எண்ணெய் இல்லாத தங்கம்மாளுக்கும் வசதிகளைச் செய்து கொடுக்க சர்க்கார் பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது என்பதை நன்றாக அறிவோம். அந்தத் திட்டங்கள் பயன்பட்டு நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கிற காரணத்தால் பொதுமக்களுடைய வாழ்க்கைத்தரம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம்.

புள்ளி விவர இலாகா கொடுக்கும் புள்ளி விவரங்கள் சரியாக இல்லை என்று கனம் எதிர்கட்சி அங்கத்தினர்கள் சொன்னாலும் கூட, விவாதத்திற்கு வரும்போது அந்தப் புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்துத்தான் வாழ்க்கைப் புள்ளி உயர்ந்துவிட்டது, வரவுப் புள்ளி உயரவில்லை என்று சொல்வதைப் பார்க்கிறோம். ஒன்றுக்கு உபயோகப்படுத்திக் கொண்டு மற்றொன்றுக்கு உபயோகப்படுத்தாமல் இருப்பது சரியல்ல.

விவசாய மக்களுக்கு மட்டுமல்ல, தொழிலாளர்களுடைய வாழ்க்கை தரமும் இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. இருந்தாலும் நான் சொல்வது போல் இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. விவசாயிகளுக்காக எவ்வளவோ கிணறுகளை வெட்டி, மாடுகளைக் கொடுத்து ஆடுகளைக் கொடுத்து, நீர் எற்ற இயந்திரங்களைக் கொடுத்து, மின்சாரத்தைக் கொடுத்து, உரத்தைக் கொடுத்து எவ்வளவு செய்திருந்தாலும் கூட, இன்னும் செய்யவேண்டிய நல்ல காரியங்கள் இருக்கின்றன, அவர்கள் செய்யும் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். திருடர்களிடமிருந்து, நோயிலிருந்து, மாரி வரண்டு போவதிலிருந்து காப்பாற்ற பல நிவாரணங்கள் செய்து கொடுக்க வேண்டும். ஆங்கிலத்தில் கிராப் இன்ஷூரன்ஸ் என்று சொல்வார்களே, அதைச் செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். மிருக இன்ஷூரன்சுக்கும் வழி செய்து கொடுக்க வேண்டும். இதல்லாமல், உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், உபயோகிக்கக்கூடிய பொருள்களாக ஆக்கப்படுகிற நேரத்தில் இடைக்கக் கூடிய விலை வித்தியாசமும் அந்த விவசாயிகளுக்கே கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். பருத்தி உற்பத்தி செய்கிறார்கள். பருத்தி பஞ்சாகி நூலாகும் வரை உள்ள விலை வித்தியாசம் பருத்தி உற்பத்தியாளருக்கே கிடைக்கும்படிச் செய்யவேண்டும். கூட்டுறவு இயக்க முறையில் விவசாயிகள் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு வழி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் உற்பத்தி செய்யும் மக்களுக்கே அது கிடைக்கும் வாய்ப்பு இருக்கும். அது போலவே கடலை இருக்கிறது. அதை அவர்கள் விற்று விடுகிறார்கள். பிறகு எண்ணெயாகவும், புண்ணாக்காகவும் அதிக விலை கொடுத்து அவர்களே வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே விவசாயிகள் 'மாரல்' ஆக, அவர்களுடைய ஸ்தாபனத்திலேயே எண்ணெய் ஆக்கப்பட வேண்டும். சோளம் போன்றவற்றிலிருந்து மால்ட் தயாரிக்கப்படுகிறது, அதுவும் விவசாயிகள் சார்பிலேயே செய்யப்பட வேண்டும்.

விவசாயத்திற்காக இன்றைக்கு அதிகமான கிணறுகளைத் தோண்டி, இருக்கும் நீரை எல்லாம் மின்சார வசதியைக் கொண்டு எடுத்துப் பயன்படுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதி போன்ற வரண்ட இடங்களில் தண்ணீர் இல்லாமல் ஆழமாகப் போய் விடுகிறது. அந்தக் கிணறுகளை ஆழப்படுத்தவேண்டும் அல்லது புதிய கிணறுகளை வெட்ட வேண்டுமென்றால் நடுத்தர விவசாயிகளால் அதைச் செய்ய முடியவில்லை. அதற்கு அவர்களுக்குச் சக்தி இல்லை.

கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகச் சர்க்காரில் புதிதாக மானியம் கொடுக்கப்படுமானால், சர்க்காரில் ஒரு டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி விவசாயிகளுக்குக் கிணறுகளை ஆழப்படுத்திக் கொடுப்பதோ அல்லது கோசல்ராம் அவர்கள் சொன்னது மாதிரி 'போர்' குழாய்கள் போட்டோ, அல்லது நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி புதிய கிணறுகளை வெட்டிக் கொடுத்தோ விவசாயிகளுக்கான வசதிகளைச் சர்க்கார் 'மாரலி'லேயே செய்து கொடுக்கவேண்டும். விவசாயிகளுக்கு

2,000 ரூபாய் கிணறு வெட்டுவதற்காகக் கடன் கொடுத்தாலும் 4,000 ரூபாய் செலவு செய்தால்தான் கிணறு வெட்ட முடிகிறது. ஆகவே, சர்க்காரே கவனித்து விவசாயிகளுக்குக் கிணறுகளை வெட்டிக்கொடுத்தால் பயனுடையதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தி ஆர்வத்துடன் பல ரஸ்தாக்கள், குடிதண்ணீர்க் கிணறுகள், சாக்கடைகள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றை ஆக்கி பராமரிக்கும் பொறுப்பு இருக்கிறது. பஞ்சாயத்தால் அவைகளை எல்லாம் பாராமரிப்பது கஷ்டமாக இருக்கிறது. பஞ்சாயத்துக்கு அதிக நிதி வசதியைக் கொடுக்கவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். ஒன்றைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். கிராமங்களில் கிராம ராஜ்யம் ஏற்படவேண்டுமென்று பஞ்சாயத்து சட்டத்தை இயற்றினோம். பஞ்சாயத்து ராஜ்யம் படிப்படியாக மாறி கமிஷனர் ராஜ்யமாக ஆகிவிடாமல் சர்க்கார் பார்த்துக் கொண்டால் அதுவே கிராம மக்களுக்கு பெரியதொரு நன்மையாகும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் துணை சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீதுள்ள விவாதத்தில் சில வார்த்தைகள் சொல்வதற்கான இந்த வாய்ப்பை அளித்ததற்காக தங்களுக்கு 12-00 noon
என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று காலை நம் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை முன்மொழிந்து பேசுகிற நேரத்தில் நம் மாநில ஊழியர்களுக்கான அகவிலைப்படி பற்றிய அறிவிப்பை தருவார்கள் என்று எதிர்பார்த்தேன். கடைசியாக சொல்வதாக இப்போது சொல்லக்கூடும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு பெரிய ஏமாற்றத்தைத்தான் கொடுக்கிறது என்பதை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் அவர்கள் கூறப்போகிற அந்த அறிவிப்பை அவர்களது முன்னுரையில் கூறியிருப்பார்களேயானால் இந்த மன்றத்திலுள்ள கனம் உறுப்பினர்கள் அதுபற்றிய தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கும், அது எந்த அளவில் வரவேற்கத்தக்கது, எந்த அளவில் அவர்களுக்கு நன்மை தரக்கூடியதாக இருக்கிறது என்று சொல்லக் கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் முதலிலேயே பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ள முதல் அமைச்சர் அவர்கள் இனி என்ன ஏமாற்றத்தைக் கொடுக்கப் போகிறார்களோ என்ற நிலையில்தான் நான் பேச முற்படுகிறேன். நம் மாநில ஊழியர்களின் அகவிலைப்படியைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படி அளவிற்குத்தான் அதை உயர்த்துகிற நிலை இருக்குமானால் நிச்சயமாக அது உண்மையில் திருப்திப் படத்தக்கதல்ல. அது உண்மையில் ஏமாற்றத்தைத்தான் அளிக்கும். அந்த அளவோடு இருக்குமானால் அது வரவேற்புக்குத் தகுந்த அம்சமாக இருக்காது என்பதை பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே மாநில அரசாங்க ஊழியர்களை விட மத்திய அரசாங்க ஊழியர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகாய விமான இலாகாவிலிருந்து, துறைமுக இலாகாவிலிருந்து, சுங்க இலாகாவிலிருந்து, தபால் இலாகாவிலிருந்து, இன்கம்டாக்ஸ் இலாகாவிலிருந்து இப்படி பல்வேறு இலாகாக்களில் பணியாற்றக்கூடிய மத்திய அரசாங்க ஊழியர்கள் இன்று அகவிலைப்படி மட்டுமல்லாமல், வீடு வாடகைப்படியோடு நகர ஈட்டுப்படியும் பெற்று வருகிறார்கள். இதைப் பற்றி நன்கு விளக்கியிருக்கிறோம். இன்று மாநில அரசாங்க ஊழியர்களுக்கு 90 ரூபாய்க்கு குறைவாக சம்பளம் இருந்தால் அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி 10 ரூபாய்தான் கிடைக்கிறது. 90-ல் இருந்து 300 ரூபாய் வரையில் வீட்டு வாடகைப்படி 15-தான் பெறுகிறார்கள். மத்திய அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தமட்டில் சம்பளம் நூறு ரூபாய்க்கு குறைவாக இருந்தால் அவர்கள் வீட்டு வாடகைப்படி 15 ரூபாயும், 100-க்கு மேல் 3,000 ரூபாய் வரை சம்பளம் பெறுகிறவர்கள் சம்பளத்தில் 15 சத விகிதம் வீட்டு வாடகைப்படி பெறுகிறார்கள். அதோடு அவர்கள் நகர ஈட்டுப்படி என்று 8 சதவிகிதம் பெறுகிறார்கள். இங்கு 300 ரூபாய் சம்பளம் வாங்கக் கூடிய உத்தியோகஸ்தருக்கு வீட்டு வாடகைப்படி மத்திய அரசுக் கணக்குப்படிக் கொடுத்தால் 45 ரூபாய் கிடைக்கப்போகிறது. 400 ரூபாய்

பெறுகிறவர்களுக்கு வாடகைப்படி 60 ரூபாய் கிடைக்கப்போகிறது. 500 ரூபாய் வாங்குகிறவர்களுக்கு ரூ. 75 கிடைக்கப்போகிறது. ஆனால் 300 முதல் 500 வரை சம்பளம் வாங்குபவர்களுக்கு அப்படி இல்லை. ஆக, இவர்களுக்கு நகர ஈட்டுப்படி இல்லாமல் அவர்களை வைத்திருப்பது நல்ல காரியம் அல்ல. நான் ஒரு தெளிவான யோசனை கூறுவேன். திரும்பத் திரும்ப எட்டு தடவை பஞ்சப்படியை உயர்த்தியிருக்கிறோம், வழிவகை இல்லையென்று கூறலாம். ஒன்று நான் கேட்டுக்கொள்வேன், இவர்களுக்கு மனம் இருக்குமானால் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல், நம் மாநில அரசாங்க ஊழியர்களுக்கு மத்திய அரசாங்கத்தில் கொடுப்பதை விட அதிகமாகக்கூட கொடுக்கலாம். நான் ஒரு யோசனை சொல்வேன். வேஸ் அண்ட் மீன்ஸ் என்ன என்று கேட்பார்கள். நான் சொல்கிறேன். வாங்கிய கடனுக்காக பல ஆண்டுகளாக நம் அரசு மத்திய அரசுக்கு வட்டி செலுத்திக்கொண்டு வருகிறது. வட்டி விகிதத்தை மாற்றிவிட வேண்டும். நீண்ட காலத் தவணைகளில் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை எல்லாம் சொல்கிறோம். மத்திய அரசாங்கத்திற்கு நாம் வாங்கிய பணத்திற்கு கொடுக்கவேண்டிய வட்டியைப் பற்றி சொல்கிறேன். 1963–ல் 5½ கோடி ரூபாய், 64-ல் 6 கோடி 61 லட்சம் ரூபாய், 65-ல் 9 கோடி, என்று வட்டி கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டில் நாம் கொடுக்கப்போகும் வட்டி 10 கோடி ரூபாய். நமக்கு எப்படி மத்திய அரசு கடன் கொடுக்கிறது ? வெளிநாடுகளில் கடன் வாங்கியது, சர்க்கார் அச்சடிக்கும் நோட்டுகள், உள்நாட்டுக் கடன் இப்படி பல காரியங்களின் மூலமாகத் தான் கொடுக்கிறது. நாம் வாங்கியுள்ள பணத்திற்கு கொடுக்கவேண்டிய வட்டியை 20 ஆண்டுகளுக்கு கொடுப்பதில்லை என்ற நிலைமை இருந்தால் இதைச் செய்ய முடியும்.

அடுத்தபடியாக, நகராட்சிமன்றம் பற்றி நகரசபை இலாகா அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும், சொன்னார்கள். ஆனால் நான் எழுப்பிய பிரச்னைக்கு அந்த இலாகா அமைச்சர் அவர்களோ அல்லது முதல் அமைச்சர் அவர்களோ இரண்டு பேர்களும் பதில் சொல்ல வில்லை. நான் கேட்டது, மாநகராட்சிக்கும், நம் மாநில அரசாங்கத்திற்கும் உள்ள தொடர்பைப்பற்றி. ஆனால் மஜீதிற்கும் மதியழகனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றித்தான் அவர்கள் சொன்னார்கள். நான் எழுப்பிய பிரச்னைக்கு பதில் சொல்லவில்லை. பல பிரச்னைகள் எழுப்பப் பட்டன. இதற்கு முன்னாலிருந்த ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் ஒரு ஊழலில் ஈடுபட்டு வீடு தனக்கு ஒதுக்கிக் கொண்டது முதற்கொண்டு பல குற்றச்சாட்டுகளைச் சொன்னேன். போதிய நிதி ஆதாரங்கள் செய்யப்பட வில்லை என்று சொன்னதற்கும் பதில் இல்லை. மாறாக, செலவு செய்ய வில்லை, செலவு செய்யவில்லை என்றுதான் சொன்னார்கள். நேற்றைய தினம் நம் சட்டசபை காரியதரிசி அவர்கள் மூலம் நம் நிதி இலாகா காரியதரிசி அவர்களிடமிருந்து சில விவரங்களைப் பெற்றுக்கொண்டேன். இது ரிப்பன் மாளிகை விவரம் அல்ல. நேற்று மூன்று மணிக்கு கேட்டேன். மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு, நல்ல ஆர்வத்தோடு இரவு எட்டு மணி அளவில் ஒரு அதிகாரியை என் இல்லத்திற்கு அனுப்பி இந்த விவரங்களைத் கொடுத்தார்கள். அவர்களின் பொறுப்புணர்ச்சிக்கு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். நகராட்சி மன்றத்திற்கு கல்விக்காக 320 பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. இதில் பாதிப் பள்ளிகள் வாடகைக் கட்டடத்தில்தான் இருக்கின்றன. மதுரை மணிநகரம் கட்டடம் மாதிரி இடிந்து விழும் நிலையில் இருக்கின்றன. புள்ளி விவர நகலில் நிதி இலாகா காரியதரிசி, ஜி. ராமச்சந்திரன் என்று கையெழுத்திட்டிருக்கிறார்கள். இதிலிருந்து கல்வித்துறைக்கு, மாநகராட்சிக்குக் கடன் கொடுத்த விவரம் ஐந்தாண்டுகளுக்குள்ளதை படிக்கிறேன். 1960-ல் 1½ லட்சம் ரூபாய், 61-ல் 0, 62-ல் ஒன்றுமில்லை, 63, 64-ல் ஒன்றுமில்லை. கடனாக எதுவும் கொடுக்கவில்லை. ஒன்றுமே கொடுக்கவில்லையா என்று கேட்பார்கள். உண்மை அதுதான். அடுத்த ஆண்டுக்கு மானியமாக கொஞ்சம் கொடுத் திருக்கிறார்கள். மூன்று லட்சம் பேர்கள் படிக்கிற இடத்தி இவ்வளவு தான் தரப்படுகிறது. நகரசபை செலவு செய்வதில் பாதிகூட இல்லை...

மாச்சிங் கிராண்ட் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். 50 லட்சம் செலவு செய்தால அதே அளவிற்கு மாச்சிங் கிராண்ட் கொடுக்க வேண்டும. அது கொடுக்கப்படவில்லை.

திருமதி டி. என். அனந்தநாயகி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இதே நகரமன்றத்திற்கு ஆறு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்ட கடன் கொடுத்து ஆறு ஆண்டுகளாக கட்டவில்லை என்று செய்தித் தாளில் பார்த்தோம். அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் ?

MR. DEPUTY SPEAKER : This is not a point of order.

திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கெனவே அதற்குப் பதில் சொல்லி ஆகிவிட்டது. பாதாள சாக்கடை திட்டத்தை எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். 1961-ல் 25,000 ரூபாய், 1962-ல் ரூ. 1,51,000, 1963-ல் ரூ. 1,48,000, 1964-ல் ரூ. 4,91,000 என்று இவ்வளவுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய பெரிய ரோடுகள் எல்லாம் பாரமரிக்கப்பட வேண்டியிருக்கிறது. 700 மைல் உள்ள ரோடுகள் இருக்கின்றன. மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸ் வசூலாகிறது. 1964-ல் 12 கோடி ரூபாய் தமிழ்நாட்டில் வசூலாகியிருக்கிறது. 1965-ல் 13 கோடி ரூபாய் வசூலாகி யிருக்கிறது. சென்னையில் மட்டும் 1½ கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது. இந்த வரி இனம் ஏற்கெனவே நகரமன்றத்திற்கு இருந்து வந்தது. அந்த இனத்தை அரசு எடுத்துக்கொண்டு 3½ லட்சம் ரூபாய்தான் காம்பன்சேஷன் கொடுக்கிறார்கள். ரோடுகளுக்காக செலவு செய்யப்பட வில்லை என்று சொன்னார்கள். தயவு செய்து ஐந்து நிமிடங்கள் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1960-ல் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் கீழ் பைப்ஸுக்காக 50 லட்சம் ரூபாய் மான்யம் கொடுக்கப்பட்டது. இந்த மானயதிற்கான உத்தரவை எப்படி வியாக்கியானம் செய்வது என்பதிலேயே அக்கௌன்டென்ட் ஜெனராலுக்கும், சர்க்காருக்கும், கமிஷனருக்கும் ஏற்பட்ட கடிதப் போக்குவரத்திலேயே காலதாமதம் ஏற்பட்டது, எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், பாடினவன் பாட்டைக் கெடுத்தான் என்பது போல், இதில் காலதாமதம் ஆகி 60-வது வருடத்தில் 50 லட்சம் ரூபாய் திரும்பி வந்துவிட்டது, ஆனால் இது எதற்காக செலவு கோரப்பட்டது ?

To meet the expenditure on the purchase of pipes and specials required for water-supply and drainage schemes included in the Third Five-Year Plan.

1960-ல் மட்டுமல்ல, 1962-லும் 50 லட்சம் திரும்பி வந்திருக்கிறது. 60-ல் 50 லட்சம் வந்திருக்கிறது. 62-ல் 50 லட்சம் வந்திருக்கிறது. மொத்தம் ஒரு கோடி திரும்பிவந்துள்ளது. இதற்கு யார் பொறுப்பு ? பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டிகூடச் சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறது. . . .

The Committee observed that the provision of Rs. 50 lakhs made in 1962–63 also remained unutilised.

The Committee was informed that the procedure for release of assistance had since been revised and that under the revised procedure there would be no such procedural difficulty. The committee however fails to understand why prompt steps were not taken to remove the bottlenecks in time and ensure the utilisation of the facilities offered.

இவ்விதம் பல முறை பணம் திரும்பி வந்துவிட்டது. காரணம் மார்ச் மாதத்தில் கொடுத்துவிட்டு அதை உபயோகிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே சொல்கிறார்கள். பொது சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், பொது சுகாதாரத்தைப்பற்றி பேசுகிறார்கள். ஆனால் பொது சுகாதாரத்திற்காக ஒரு பைசாகூட அரசாங்கத்திலிருந்து

கார்ப்பரேஷனுக்கு இந்தத் துறைக்காகத் தனியாகக் கொடுக்க வில்லை. 20 லட்சம் மக்கள் வாழக்கூடிய இடத்திற்கு ஏதோ ஒரு கோடி, இரண்டு கோடி என்று மட்டும் கொடுத்துவிட்டால் போதாது. சாதாரண தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கடனாக 20 கோடி, 30 கோடி என்று உதவி செய்கிறார்கள், இது சரியானதுதானா, முறையானதுதானா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். எதை எடுத்தாலும் சேதாரம் என்று அரசாங்கத்தில் ஏற்படுகின்ற நஷ்டத்திற்குச் சமாதானம் சொல்லிவிடுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. மாதவரம் பண்ணையில் 1 கோடி 16 லட்சம் நஷ்டம், லிமிடெட் டிபாஸைப்போர்டை எடுத்துக்கொண்டால்—1,000—1,200 பஸ்கள் ஓடுகின்றன—இதில் 1964-ல் 28 லட்சம் நஷ்டம், 1965-ல் 38 லட்சம் நஷ்டம் 1966-ல் 28 லட்சம் நஷ்டம் என்றுதான் இருந்து கொண்டிருக்கிறது. விதைப் பண்ணையை எடுத்துக்கொண்டால் பல லட்சக்கணக்காக ரூபாய் விரயம் ஆகிற காட்சியைத்தான் நாம் பார்க்கிறோம். கீரனூர் என்ற இடத்தில் சங்கர அய்யர் என்பவருக்கு எந்தவிதமான தேவையுமில்லாமல் 2½ லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் சேதாரம் என்று சொல்லி விடுவதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை, நிச்சயமாக ஒரு சிலருடைய வாய்ப்புக்காகத்தான் இவ்விதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என் பதை நான் தெளிவாகச் சொல்லுகிறேன். இது மட்டுமல்ல, பொதுத் துறையில் வரவேண்டிய அலுமினிய பாக்டரி கோயம்புத்தூர் மில் அதிபருக்கு, காங்கிரஸ் எம்.பி. என்ற காரணத்திற்காக கொடுக்கப்பட்டிருக் கிறது. அதே போன்று தான் பொதுத்துறையில் வரவேண்டிய பேப்பர் தொழிற்சாலை, தனிப்பட்ட முறையில் சேசாயி கம்பெனிக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவ்விதம் தொழிற்சாலைகள் அமைப்பதில் ஏகபோகங்கள், உத்தியோகங்களில் ஏக போகங்கள், இந்து மத அற நிலையத்தில் ஏக போகங்கள், இப்படி எல்லாவற்றிலுமே ஏக போகங்கள் இருந்துகொண் டிருக்கின்றன. மதுரையில் மீனாட்சி அம்மன் கோவிலில் டிரஸ்டி நியமித் திருப்பது சரியல்ல என்பதை எடுத்துச் சொன்னேன். அறுபது வயதைத் தாண்டிய திரு. சிதம்பரம் முதலியார் அவர்களை நியமித்திருப்பது ஏன், 60 வயதுக்குட்பட்டுத்தான் உறுப்பினர் இருக்க வேண்டும் என்ற விதிக்கு விதிவிலக்குக் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன? முதலமைச்சரிடம் மதுரை சொக்கநாதன் கனவில் வந்து சொன்னாரா, அல்லது மதுரை மீனாட்சி அம்மன் வந்து சொன்னாரா என்பது தெரியவில்லை. வேறு யாரும் அங்கே தலைவராக வருவதற்கு இல்லையா? முன்னால் இருந்த திரு. சங்கரன் அவர்கள் இப்போது வரவில்லையே. உள்துறை அமைச்சர் அவர்கள் வரவேண்டும் என்று விரும்பியவர் தர்மகர்த்தாக்களாக வர முடியவில்லையே. அதற்கு நேர்மாறாக கள்ளழகர் கோவிலில், சிதம்பர முதலியாரின் அண்ணன் மகன் அருணாசல முதலியார் வருவதற்கு வழி வகை செய்யப்பட்டது.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பெருமைக்குரிய மருதை அவர்கள் மானேஜிங் டிரஸ்டியாக இருக்கிறார். பெரிய பெரிய கோவில்களிலெல் லாம் ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் டிரஸ்டிகளாக இருக்கிறார் கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்போது தலைவராக இருக்கின்றவருக்கு 60 வயதாகிறது என்பதற்காக விதிவிலக்கு அளிக்க வேண்டிய அவசிய மென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி எனக்குத் தெரியாது. விதிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியமேயில்லை. எனக்கு இதிலுள்ள சட்டத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். விதிவிலக்கு அளிக்கவேண்டிய அவசியமேயில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இதற்காகத்தான் நான் முன்பே சொல்லி யிருக்கிறேன். தெரியாது என்று சொல்லிவிட்டதாலேயே பொறுப்பு இல்லை என்று சொல்லமுடியாது. Caesar's wife should be above suspicion.

லீஸரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும் என்கின்ற அளவில் செயல்பட வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். தொழில் துறையில் ஏகபோகம், உத்தியோகத்தில் ஏகபோகம், இவை எல்லாம் நடைபெறுகிறது என்று சொல்லும்போது நான் ஏதோ குறுகிய நோக்கத்தோடு சொல்லுகிறேன் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. பல நல்ல காரியங்கள் மாநிலத்தின் நன்மைக்காக நடைபெற வேண்டும் என்கின்ற கருத்தில்தான் இவற்றைச் சொல்லுகிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

நாட்டில் சோஷலிஸம் வளரவேண்டும் என்று சொல்லி வருகின்ற காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் இங்கு வருவார்கள் என்று நினைத்தேன், ஏமாற்றம் அடைந்தேன். ஏகபோகம் வளர்ந்த முறையைப் பற்றி விசாரணை செய்வதற்காக ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார். அதே போன்று உத்தியோகத்துறையில் நமது மாநில அரசில் ஏற்பட்டிருக்கின்ற ஏகபோகங்கள், தொழிற்துறைகளில் ஏற்பட்டிருக்கின்ற ஏகபோகங்கள் இன்னும் இதுபோன்ற பல துறையில் ஏற்பட்டிருக்கின்ற ஏகபோகங்கள், இவற்றைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்வதற்கு ஒரு கமிட்டியை நிறுவ வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன். இன்றைக்கு அரசாங்கத்திலிருந்து சொல்லுகின்ற சோஷலிஸக் கொள்கைகள் இந்த நாட்டிலுள்ள ஏழை மக்களை வாழ வைத்ததா, வாழவைக்கும் என்று தான் நம்ப முடியுமா? தனிப்பட்ட பெரிய முதலாளிகளை வாழ வைப்பதற்குத்தான் இவர்களது சோஷலிஸக் கொள்கை வாய்ப்பளிக்கிறது. இதை மாற்ற வேண்டும், அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கடைசியில் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டில் நடைபெற்ற 18 வருட காங்கிரஸ் ஆட்சியின் மூலமாகத் தொழில்களில் எல்லாம் பெரிய முதலாளித்துவ ஏகபோகங்கள் ஏற்பட் டிருக்கின்றன. அவர்களுடைய கைப்பாவையாக சர்க்கார் மாறிய கார ணத்தினால் பொதுமக்கள் மன்றத்தில் அமைச்சர்கள் வரும்போது, இங்கே கேட்கப்படும் கேள்விகளுக்கு, இங்கே சொல்லுகின்ற "தனிக்கேள்வி வேண்டும்", "தகவல் இல்லை" என்ற பதில்களை எல்லாம் சொல்ல முடியாது, வெளியில் மைதானத்தில் மக்களைச் சந்திக்கின்ற நேரத்தில் நீங்கள் 18 ஆண்டுகளாக நடத்திய செயல்களுக்குப் பதில் கூறியே ஆக வேண்டும். அவர்கள் கொடுக்கின்ற தண்டனையிலிருந்து நீங்கள் தப்பவே முடியாது என்பதைக் கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் பட்ஜெட் விவாதக் கூட்டம் முடியும் தருவாயில் இருக் கின்றோம். தேர்தல் நடப்பதற்கு இன்னும் ஓராண்டுக் காலம் இருக்கிறது. இந்த ஓராண்டுக் காலத்தில் என்னென்ன அரசாங்கம் செய்ய வேண்டும் என்பதற்கான கருத்துக்கள் ஒன்றிரண்டைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member will take fifteen minutes.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அதற்குள் முடித்துவிடப் பார்க்கிறேன். இன்றைக்கு நாட்டில் பல காரணங்களினால் இயற்கையின் கோளாறுகளி னாலும், மனிதர்களின் கோளாறுகளினாலும், நெருக்கடி ஏற்பட்டது. பருவ மழை இல்லாததின் காரணமாக மின்சார உற்பத்தி குறைந்ததின் காரணமாகத் தொழில் உற்பத்தி பாதித்தது. அதைத் தீர்ப்பதற்கு அரசாங் கம் போதுமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். பஞ்சாலைகளில் இருக்கக்கூடிய நெருக்கடி இந்த மின்சார உற்பத்திக் குறைவினால் மட்டும் ஏற்பட்டதல்ல. முதலாளிகள் ஏற்படுத்தக்கூடிய சதி மனப்பான்மை சேர்ந்துகொண்டு நெருக்கடியை இதற்காகவே டபிள் கணக்கு அவர்களுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. வைத்துக்கொண்டு ஏராளமான லாபத்தைச் சம்பாதித்துக்கொண்டு, தொழில்

துறையில் போதுமான உற்பத்தி நடந்தால் என்ன, நடக்காவிட்டால் என்ன, என்ற பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களில் ஒரு சிலருக்கேனும் புத்தி புகட்டக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களேயானால் முதலாளிகள் நன்றாக நடந்து கொள்வதற்கு வழி ஏற்படும். அப்படி நடவடிக்கை எடுத்தால் தொழில்களை நிறுத்திவிடுவார்கள், அரசாங்கம் என்ன செய்வது என்று அரசாங்கம் சொல்லி வருகின்ற சால்ஜாப்பு முதலாளிகளை இன்னும் தூண்டிவிடக்கூடிய முறையில் தான் அமைந்திருக்கிறது. இதை மாற்றி அரசாங்கமே தொழிலை ஏற்று நடத்தும் என்கின்ற முறையில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்துறையில் அதிகப்படியாகக் கவனம் செலுத்த வேண்டும். விவசாய உற்பத்தி பெருக வேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. ஆனால் எப்படிப் பெருக்குவது, விவசாயிகளுக்குப் போதுமான அளவு உற்சாகம் அளிக்க வேண்டும். விவசாயிகள் என்றால் வயலில் இறங்கிப் பாடுபடக்கூடிய விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். கல்டிவேட்டிங் டெனன்ட் ப்ரொட்டக்ஷன் ஆக்ட்டை திருத்த வேண்டும். அவ்விதம் திருத்தச் சட்டம் கொண்டுவரப் போகிறோம் என்று உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கவர்னர் உரையின்மீது விவாதம் நடைபெறும்போதே சொன்னார்கள். அந்தமாதிரியான ஒரு மசோதா இதுவரை அறிமுகப்படுத்தப்பட்டதாகத தெரியவில்லை. நாளையோடு இந்தத் தொடர்கூட்டம் முடிவடையப்போகிறது. எப்போது கொண்டு வரப்போகிறார்களோ தெரியவில்லை. சாகுபடியாளர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குச் சட்டம் இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் அதில் இருக்கின்ற பலஹீனங்களைப் பயன்படுத்திக்கொண்டு ஆயிரக்கணக்கான பெட்டிஷன்கள் ஹைக்கோர்ட்டில் இருந்து கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. அதேபோன்று குடியிருப்பு மனை பாதுகாப்புக்குச் சட்டம் இருக்கிறது. அதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இதையும் தீர்க்கவேண்டும். இனம் அடிப்புப் பிரச்னை பெரிதாக இருந்து கொண்டிருக்கிறது. இது ஏதோ புதுக்கோட்டைக்கு மட்டும் இருக்கின்ற பிரச்னை அல்ல. பல வருஷங்களாக பல இடங்களிலும் இருந்து வருகின்ற பிரச்னை. 1958-ம் வருஷம் ஏதோ ஒரு அதிகாரி எழுதி வைத்தது. இன்னும் அது மாற்றப்படவில்லை. இதில் ஏற்படுகின்ற பிரச்னைகளைப் பற்றி இதே சபையில் பல முறை அங்கத்தினர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குத் தக்க பரிகாரம் காணவேண்டும் என்று கனம் முதலமைச்சர் அவர்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஏதோ நான் இதைப்பற்றி அட்ஜேர்ன்மெண்ட் மோஷன் கொண்டு வந்துவிட்டேன், இதைப்பற்றிப் பேசிவிட்டேன் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். அது என்னுடைய குறையாகக்கூட இருக்கலாம். என்னுடைய கட்சி உண்ணாவிரதம் இருக்கலாம்; கிளர்ச்சி நடத்தலாம்; ஊர்வலம் நடத்தலாம்; ஆர்ப்பாட்டம் நடத்தலாம். அதையே மனத்திலே வைத்துக்கொண்டு கலியாணசுந்தரம் கேட்டதற்காகச் சொல்லக்கூடாது என்று இருக்கக்கூடாது. கிளர்ச்சி செய்கிறார்கள் என்று, அவர்களுக்குச் சாதகமான பதில் சொல்லக் கூடாது என்று விவசாயிகள் வயிற்றில் அடிக்க வேண்டாம், நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவசியமானவர்கள் விவசாயிகள், அவர்கள் மனத்தை ஒடிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தமாதிரி இயக்கங்கள் நடத்துவது ஜனநாயகத்திலே அவசியமானது. தீ வைப்பது, கொள்ளை அடிப்பது போன்றவைதான் கூடாதே தவிர, ஜனங்களைத் திரட்டி, அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கையை நிறைவேற்றுவதற்குக் கூட வலிவைத் தேடிக்கொள்ளப் பயன்படும் என்ற பரந்த மனப்பான்மையில் எடுத்துக் கொள்ளுவதென்றால் எடுத்துக்கொள்ளுங்கள். எப்படி இருந்தாலும் உள்ளதை நாங்கள் ஜனங்களிடத்தில் சொல்லத்தான் போகிறோம். குடியிருப்பு மனை பாதுகாப்பு சட்டம், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், இனம்கள் சட்டம் எல்லாவற்றையும் அமல் நடத்த இன்னொரு

அதிகாரியைப் போட்டு விசாரணை செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதற்குக்கூட மனம் இல்லை, ஒத்துக்கொள்ளவில்லை.

வரி பாக்கி வசூலை ஒத்திப்போட வேண்டுமென்று எதிர்க்கட்சி மட்டுமல்ல, காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள்கூட வற்புறுத்தினார்கள். திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம் ஜில்லாக்களோடு, தஞ்சை ஜில்லாவில் கூட ஒத்திப்போட வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அந்த அளவுக்குக் கஷ்டம் இருக்கிறது. ஆகவே வரி வசூலை, பாக்கி இருப்பதை ஒத்திப்போட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைவிட முக்கியமாக வற்புறுத்திக் கூற விரும்புவது, போன சட்ட சபைக் கூட்டத்தில் புதிதாக விவசாயிகளுக்குக் கொண்டு வந்த சர்சார்ஜை, 25 சத விகிதம் அதிகமாக்கி இருப்பதைக் கைவிட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைவிட முடியாவிட்டாலும் இந்த வருஷத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியை முன்னிட்டு இந்த வருஷம் அதை அமல் நடத்துவதில்லை, 1967-ம் ஆண்டிலிருந்து அமல் நடத்துவது என்று ஒத்தி போடவாவது ஒத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விடாது. இதன் மூலம் 1 கோடி ரூபாய்தான் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த முறையில் ஒத்திப் போடுவது அரசாங்கத்திற்கு விவசாயிகளிடத்தில் அக்கறை இருக்கிறது என்ற நல்ல எண்ணத்தைக் காட்டிக் கொள்ளுவதாக இருக்கும். ஆகவே அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடன் தொல்லை விவசாயிகளுக்கு அதிகமாக ஆகியிருக்கிறது. கடன் பளுவைச் சமாளிக்க முடியாமல் கிராமப்புறத்தில் வாழுகின்ற சாதாரண விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்பேர்பட்டவர்களுக்குக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்பது என் அபிப்பிராயம். அவர்களுடைய கடன் பளுவைக் குறைக்க இந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கடன் என்றால் தனிப்பட்டவர்களிடத்தில், லேவாதேவிக்காரர்களிடத்தில் பட்டிருக்கிற கடனைச் சொல்லுகிறேன். அரசாங்கம் கொடுத்திருக்கிற கடனை ஒத்தி வைக்கச் சொல்லுகிறீர்களா என்று கேட்கலாம். அரசாங்கக் கடனையும் சட்டத்திலே சேர்த்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அரசாங்கக் கடன்களை ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஒத்தி போடலாம்; அந்த அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. தனிப்பட்டவர்களிடத்தில் கடன் வாங்கி, கடன் தொல்லை இருக்கிறவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமப் புறத்தில் வீட்டு மனைகளைபற்றிப் பத்திரிகைக்காரர்களிடத்தில் சொன்னார்கள் முதல் அமைச்சர் அவர்கள். அது நடைமுறையில் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதிலேயே முன்னேற்றம் ஏற்படவில்லை. இன்னும் மற்றப்படி மேல் ஜாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் நிலையில் இருக்கிறவர்களிலும் பொருளாதாரத் துறையில் பின் தங்கி இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். இந்த நாடு நமக்குச் சொந்தம் என்று சொல்லுகிறார்கள்; அவர்களுக்கு இருக்க வீடாவது இருக்க வேண்டும். அந்த முறையில் கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, ஒரே வருஷத்தில் முடியாது, திட்டத்தை ஆரம்பித்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு உற்சாகம் அளித்தால் தான் அவர்கள் நல்ல முறையில் விவசாயத்தில் ஈடுபடுவார்கள். இல்லாவிட்டால் கிராமத்தில் விவசாயம் செய்வதை விட்டு விட்டு, வெளியே நகரத்தில் 2, 3 ரூபாய் கூலி கிடைத்தால் போய்விடலாம் என்று வெளியேறும் நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் முறையில் சொன்ன யோசனைகளையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம் உணவு விஷயத்தில், உற்பத்தியான பொருள்களைச் சரியாக வினியோகம் செய்யவேண்டும். உணவு விஷயத்திலும் கூட எடுத்த நடவடிக்கை என்ன பலன் அளித்திருக்கிறது என்றால், இவர்கள் போடுகிற அரிசியைவிட, ரேஷன் கடைகளில், நியாயவிலைக் கடைகளில் கொடுப்பதைவிட வெளியில் குறைவான விலையில் கிடைக்கும் நிலை இருக்கிறது. அரசாங்கம் எந்தத் தொழிலை நடத்தினாலும் அதில் நஷ்டம் தான் வரும். அது நன்றாக நடைபெறாது என்ற அபிப்பிராயத்தை ஜனங்களிடத்தில் ஏற்படுத்தி, பொதுத் துறையையே கேவலப்படுத்த வேண்டுமென்று காரியங்கள் நடக்கிறதோ என்னவோ தெரியவில்லை. இந்த விஷயத்தை அரசாங்கம் கவனிக்க வேண்டும். நல்ல அரிசி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல்லாகக் கொடுக்க வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். அந்த ஜில்லாவைப் பொறுத்தவரையில் சரி ; ஆனால் நகரத்தில், நகர்ப்புறத்தில் இருக்கிறவர்களுக்கு அரிசியாகத்தான் கொடுக்கப்பட வேண்டும். நல்ல அரிசி கிடைக்க முக்கியமாக கவனிக்க வேண்டியது, ரெக்கவரி 70 சத விகிதம், 68 சத விகிதம் என்று போட்டதால், மில்கள் தனிப்பட்டவர்கள் கையில் இருப்பதால், நெல்லை ஊற வைத்து அரைத்து விட்டால் கூடுதலாக வரும் என்று செய்கிறார்கள். ஆரம்பத்தில் சோதனைக் காலமாக எடுத்துக்கொண்டு ஆரம்பித்தால், முயற்சி வெற்றிகரமாக நடைபெற்றால், நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஜனங்களுக்குச் சோறு கொடுப்பதற்காக ஏற்பட்ட நஷ்டம் என்று துணிவோடு செய்ய வேண்டுமே தவிர, நஷ்டம் வந்தாலும் எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் குறை சொல்லத்தான் செய்வார்கள் ; செய்வதை நல்ல முறையில் செய்தால் மக்களைத் திருப்தி செய்ய முடியும் என்பது எனது அபிப்பிராயம்.

நகர்ப்புறங்களில் இந்த அரிசி வினியோகம் செய்வதில் வீட்டில் வசிப்பவர்களுக்கு இருக்கட்டும், ஹோட்டல்களில் நடக்கிற அக்கிரமம் சொல்லி முடியாது. விலை ஏறிக்கொண்டே போகிறது. அரசாங்கம் இதிலே தலையிட்டுச் சில ஸ்டாண்டர்ட் ஹோட்டல்கள் ஏற்படுத்த வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். மலிவான விலையில், ஸ்டாண்டர்டாக, அடம்பரம் எதும் வேண்டாம், உணவுப் பொருள்களைக் கொடுக்க ஏற்பாடு செய்தால் பலன் நல்லதாக இருக்கும். அடம்பரமான முறையில் அட்களை நிறையப் போட்டு, நாற்காலிகளெல்லாம் போட்டுச் செய்ய வேண்டுமென்பதில்லை. அவரவர்களே தட்டை எடுத்து வாங்கிக் கொள்ளும் முறையில் பஃபே முறையில் கான்டீன்களை அரசாங்கமே நடத்தவும் முன்வரவேண்டும். வெற்றி காணவும் வேண்டும். அப்போதுதான் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க முடியும். பல முறைகளில் நடவடிக்கை எடுப்பதோடு இந்த முறையிலும் முயற்சி செய்ய வேண்டும். ஜில்லாவிட்டு ஜில்லா அரிசி போகக் கூடாது, மாகாணம் விட்டு மாகாணம் போகக் கூடாது என்றாலும் போய்க்கொண்டுதான் இருக்கிறது. தொழிற்சாலைகளில் கான்டீன் வைத்து நடத்த வேண்டும் என்பதைக் கட்டாயம் அமுல் நடத்தவேண்டும். அவர்களுக்குப் பண்டகசாலைகளுக்கு அரிசி, கோதுமைப் பண்டங்கள் பெறுவதில் கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அதை நீக்க வேண்டும். தொழிற்சாலைகளில் வேலை செய்கிறவர்களுக்கு 8 அவுன்ஸ் கொடுப்பது ரொம்பக் குறைவு. அரிசிப் பங்கை அதிகப்படுத்த வேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது அல்லாமல், இந்தச் சபையிலே, நிர்வாகத்தைப் பற்றிய பிரச்னைகளில் பல பிரச்னைகள் இந்தக் தொடர்க் கூட்டத்தில் சொல்லியிருக்கிறோம். அவற்றிலெல்லாம் கவனம் செலுத்த வேண்டும். நிர்வாகத்தை எப்படித் திறம்பட நடத்துவது என்பதற்குக் கமிட்டி போட்டிருக்கிறது. பரிசீலனை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். நிர்வாகம் பெரிதாகப் போய்க் கொண்டிருக்கிறது. பெரிதாகப் போவதைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதோடு ஊழியர்கள் உற்சாகத்தோடு பணிபுரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஊழியர்களுடைய அகவிலைப்படி பற்றி அறிவிக்கப் போவதாக முதல் அமைச்சர் சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். ஆரம்பத்தில் சொல்லிவிட்டால், எதுவும் போதாது, திருப்தி இல்லை என்று பேசுவோம் என்றோ என்னவோ முடிவில் சொல்லலாம் என்று இருக்குமோ

என்னவோ, அல்லது சொல்ல வேண்டியதைக் கடைசியில் சொல்லிவிட்டுப் போகலாம் என்று இருக்கலாம். அல்லது இந்தச் சபையில் சொல்லுவானேன், பத்திரிகை மூலமாகச் சொல்லலாம் என்று இருக்கலாம். என்ன இருந்தாலும் அவர்கள் தான் நிர்வாகத்தை வைத்து வேலை வாங்க வேண்டியவர்கள். குறை கண்டுபிடிப்பதுதான் எங்கள் வேலையே தவிர சாதனைபற்றிச் சொல்ல வேண்டியது இல்லை. அதை உடனடியாகத் தெரிவித்து, உத்தரவிடும்போது, அதே சமயத்தில் வொர்க் சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட்ஸ், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகரசபை ஊழியர்களுக்கும், அதே சமயத்தில் கிடைக்குமாறு ஒரே உத்திரவைப் போட்டு, பல உத்திரவுகள் வேண்டுமென்றாலும் ஒரே சமயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிர்வாகத்தில் இருக்கிற குறைகளைப்பற்றிப் பல சொல்லியிருக்கிறோம். அவற்றைப்பற்றித் தக்க முறையில் விசாரணை செய்ய வேண்டும். எதிர்க்கட்சிகள் நிரூபிக்கத் தயாராக இருக்கிறார்களா இல்லையா என்றபோது, எங்கள் பக்கத்தில் விழிப்போடு இருந்து பதில் சொல்லத் தவறி இருக்கலாம், அல்லது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் இந்தச் சபையில் கிளப்பப்பட்ட பிரச்னைகள் அத்தனையும் விசாரிக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சியில் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வரத்தான் செய்வோம். குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்று நிரூபித்துக் கொள்ளுவது அரசாங்கத்தின் பொறுப்பு, அமைச்சர்களின் பொறுப்பு.

இன்னொரு விஷயம் என் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஹவுஸிங் போர்டு சம்பந்தமானது அது. வீட்டு வசதி செய்து கொடுக்கக் கூடியது ஹவுஸிங் போர்டு. வீடு கட்டுவதில் யந்திர செங்கல் சூளை வைக்க யந்திரங்களை செக்கோஸ்லோவாக்கியாவிலிருந்து வாங்குவது என்று திட்டமிட்டு மூன்று வருஷங்களுக்கு முன்னாலேயே அதற்காக டெண்டர் கால்ஃபார் செய்தார்கள். டெண்டர்கள் வந்தன. யார் டெண்டரை ஒத்துக்கொண்டார் 12-30
கள் ? இம்போர்ட் லைசென்ஸ் இல்லாத ஆசாமி, இந்த மாதிரி வியாபாரம் p.m.
செய்து அறியாத ஆசாமி—எந்த நாட்டிலே அந்த யந்திரத்தை உற்பத்தி செய்கிறார்களோ அந்த நாட்டில் இருக்கிறவர்களே டெண்டர் கொடுத்திருந்தும் அந்த டெண்டரை ஏற்றுக்கொள்ளாமல்—அந்த ஆசாமியின் டெண்டர் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒப்புக்கொள்ளப்பட்டது மாத்திரம் அல்ல, சாமான்களைப் பார்க்காமல் 1½ லட்ச ரூபாய் பணம் கொடுத்தாகிவிட்டது. இந்தப் பணம் கொடுத்து 3 வருஷம் ஆகிறது. இயந்திரம் எந்த இடத்தில் இருக்கிறது என்று தெரியாது. தனிப்பட்ட முதலாளி யாரும் கிடையாது. முதலாளியிடம் நேரில் பேசி வாங்கப்போவது கிடையாது. விலை ஏறுவதற்குக் காரணம் இல்லை. தருவித்திருப்பவர்கள் என்ன விலைக்குத் தருவித்திருக்கிறார்கள் என்று கூறுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. இதற்கு மட்டும் ஏன் விலை அதிகமாக இருக்க வேண்டும் ? ஏன் முன் பணம் கொடுக்க வேண்டும் ? முன் பணம் கொடுத்துக்கூட இயந்திரம் வரவில்லை. செக்கோஸ்லோவாக்கியா தூதராலயத்தோடு பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கமிஷன் கொடுப்பார்கள், கமிஷனில ரூ. 1½ லட்சம் அட்ஜஸ்டு பண்ணக்கூடிய அளவில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது முதல் இல்லாத வியாபாரமாகச் செய்யப்படுகிறது. இம்மாதிரியெல்லாம் நடப்பது முறையல்ல.

வேண்டியவர்களுக்கு—ஆளும் கட்சிக்கு வேண்டியவர்களுக்கு—சலுகை கொடுக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. முக்கியமாக மதுரை நகரத்தில் டி.வி.எஸ். பஸ் முதலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏகபோகம் இருக்கிறது. அது கூடாது. சமீபத்தில் 12 புதிய ரூட்டுகளுக்கு விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் அவை கான்ஸல் செய்யப்பட்டுவிட்டது, அல்லது கைவிடப்பட்டது. ஏன் அந்த ரூட்டுகள் கொடுக்கப்படவில்லை ? புதிய ரூட்டுகளைச் சிறிய முதலாளிகளுக்குக் கொடுக்க வேண்டும், அப்பொழுது பெரிய முதலாளிகளுக்கு வருமானம் குறைந்துபோய்விடும் என்ற எண்ணத்தினால் இப்படிச் செய்துவிட்டார்களோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [29th March 1966

தேவஸ்தானங்களில் இருக்கக்கூடிய குறைபாடுகளைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். ஜாதி மனப்பான்மையோடு, கட்சி மனப்பான்மையோடு அவர்களிடத்தில் செல்வாக்கு உடையவர்கள் என்ற மனப்பான்மையோடு எதையும் செய்யக் கூடாது. எந்த ஜாதியில் பிறந்தவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அவர்களைத் திண்டாடவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தில்தான் சொல்லுகிறேன். எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, பின் நிலையில் இருக்கக்கூடியவர்களுக்குத்தான் சலுகை கொடுக்கப்பட வேண்டும். முன் நிலையில் இருப்பவர்களுக்குச் சலுகைகள் அளிக்க வேண்டிய அவசியமில்லை. அதில் ஏதாவது அரசியல் லாபம் இருக்கிறதா அல்லது கட்சிக்காவது பிரயோசனமாக இருக்கிறதா என்றால், இல்லை. தங்களுடைய சுயநலத்திற்காக, தங்களுடைய தவறுகளை மறைத்துக் கொள்ளுவதற்காக இப்படிச் செய்யக்கூடியவர்களிடத்தில் விழிப்பாக இருந்து விசாரிக்கவேண்டும். மதுரை மீனாட்சி கோவில் தேவஸ்தானம் சம்பந்தமாகச் சில தாஸ்தாவேஜுகளை நான் கனம் சபாநாயகர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் பார்த்து, சரியாக இல்லையென்றால் அந்த உத்தரவுகளை ரத்து செய்யவேண்டும், அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எந்தக் கமிட்டியில் அங்கத்தினர்களை நியமித்தாலும் விருப்புக்கு வெறுப்புக்கு இடமில்லாமல், அந்தத் துறையில் திறமையுள்ளவர்களை அனுபவம் உள்ளவர்களை நியமிக்க வேண்டும். யுனிவர்ஸிடி அட்வைஸரி கமிட்டிக்கு எந்த அடிப்படையில் அங்கத்தினர்களை நியமித்தார்கள் ? யாரை நியமித்தார்கள் ? கல்வியோடு தொடர்பு கொண்ட திறமைசாலிகள் சட்டசபை அங்கத்தினர்களுள் இல்லையா ? எப்படி அட்வைஸரி கமிட்டி போட்டார்கள் ? கமிட்டி போடுவது, பதவிகள் வழங்குவது, பெர்மிட் கொடுப்பது, லைசென்ஸ் கொடுப்பது இதெல்லாம் கட்சி மனப்பான்மையில் செய்யப்பட்டால் பெரிய முதலாளிகளால் எலக்ஷனில் என்ன லாபம் இருக்கும், எப்படி அவர்கள் உதவியாக இருக்க முடியும் என்ற மனப்பான்மையில் செய்யப்பட்டால் அது நாட்டில் அராஜகத்தைத்தான் உண்டாக்கும்! பொருளாதாரத் துறையில் அராஜகத்தைத்தான் உண்டாக்குமே தவிர, சரியான நிர்வாகம் ஏற்படாது.

நான் தொழில் இலாகாவைப் பற்றிக் குறைகள் , கூறியிருக்கிறேன். தேவஸ்தானங்களைப் பற்றிக் குறை கூறியிருக்கிறேன். இன்னும் மற்ற உறுப்பினர்கள் மாதவரம் பால்' பண்ணையைப் பற்றிக் குறை கூறியிருக்கிறார்கள். இன்னும் மற்ற உறுப்பினர்களும் மற்ற இலாகாக்களைப் பற்றிக் குறை கூறியிருக்கிறார்கள். மாதவரம் பால் பண்ணையிலுள்ள அதிகாரியை மாற்ற வேண்டும். அதில் நம்பிக்கை இருக்கக்கூடியவர்களை அந்த இடத்தில் போட வேண்டும். சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லுவதில்லை. சொல்லத் தகாத விஷயத்தைச் சொல்லி மக்களுக்கு ஆத்திரமூட்டக் கூடிய நிலைமைதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு வேளை இந்தப் பால் பண்ணையை குளோஸ் பண்ணிவிட வேண்டும் என்ற மனப்பான்மையினால் இருக்கிறாரோ என்னவோ அந்த அதிகாரி. இது பற்றியெல்லாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கூட்டத் தொடரில் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள், குறைகள் எத்தனையோ சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் விசாரிப்பதாக இருந்தால், நிரூபிக்கத் தயாரா என்று முதல் அமைச்சர் கேட்டால், பலவற்றை நிரூபிக்க நான் தயார், பொறுப்பு ஏற்றுக்கொள்ளத் தயார் என்று சொல்லுகிறேன். நான் அன்று தெளிவாகச் சொல்லவில்லை என்று கூறப்பட்டது. அதற்காக நான் இன்று தெளிவாகச் சொல்லுகிறேன். நான் பொறுப்பு ஏற்கத் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

29th March 1966]

***திரு. மு. கருணாநிதி** : கனம் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூ. 190 கோடிக்கு மானியங்கள் பிரிக்கப்பட்டு, அந்த மானியத தொகையை நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இந்த மன்றத்தின் சம்மதத்தைப் பெற இருக்கிற இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையாற்றிய நேரத்தில் இந்த மன்றத்தினுடைய இந்தத் தொடர்பு கூட்ட காலத்தில் சில மசோதாக்கள், முக்கியமான மசோதாக்கள் வர இருக்கின்றன என்று அறிவித்தார்கள்.

(திரு. கே. பி. பழனி தலைமை).

கவர்னர் அவர்கள் அறிவித்தது வீண் போகாது, நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற எண்ணத்தோடு, மதிப்பு மிகுந்த ஒரு இடத்திலிருந்து வந்துள்ள அந்த உறுதி நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற எண்ணத்தோடு மன்ற உறுப்பினர்கள் அத்தகைய மசோதாக்கள் இந்த மன்றத்தில் வருமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். கூட்டத்தினுடைய தொடர் இன்னும் முடியவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சமாதானம் சொல்லக்கூடும். கூட்டத்தின் தொடர் அடுத்த ஜூலை, ஆகஸ்டு வரை மறுபடியும் நீடிக்கப்படலாம் என்று கூறக்கூடும். கவர்னர் அவர்களுடைய பேருரையில், " தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்து செய்து அதற்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்றை இயற்றுவதற்குரிய விரிவான மசோதா ஒன்று இந்தக் கூட்டத் தொடரில் மன்றத்தின் ஆலோசனைக்கு வரவிருக்கிறது " என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த மசோதா இந்த மன்றத்தினுடைய விவாதத்திற்கு வரவில்லை. ஜூலையில் நடக்கின்ற கூட்டத்தில் வரும் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களோ என்ற ஐயப்பாடு கூட எனக்கு இருக்கிறது. ஏனென்றால், இந்த மசோதா வராமலேயே செய்துவிடுவதற்குப் பல்வேறு முயற்சிகள் நகராட்சித் தலைவர்களிடமிருந்து, ஆளுகின்ற தரப்பின் தலைவர்களிடமிருந்து அத்தகைய முயற்சிகள் மெத்த சிரமத்தோடு செய்யப்படுகின்றன என்று எனக்குக் கிடைத்த தகவல்படி தெரியவருகிறது. நான் உள்ளபடியே அஞ்சுகிறேன். முதல் அமைச்சர் அவர்களுடைய புன்னகையிலிருந்து அந்தச் சந்தேகத்திற்கு இடமில்லை என்று, அவர்களுடைய புன்னகை எனக்குத் தெரிவிக்கிறது. அப்படி இருக்குமானால் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மசோதா இந்தத் தொடர் கூட்டத்தில் வருவதற்கான வழிகளை நிச்சயம் இந்த அமைச்சர் அவை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய பல நண்பர்கள் எடுத்துக் காட்டியதுபோல், இன்று காலையிலேயே எல்லோரும் வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். இந்த பஞ்சப்படி உயர்வைப் பற்றி அமைச்சர் தெரிவிப்பார் என்று எல்லோரும் சொன்னார்கள். நான் எதிர்பார்க்காத காரணத்தினால் கொஞ்சம் தாமதமாகவே வந்தேன். ஏனென்றால், அதை முதல் அமைச்சர் அவர்கள் காலையிலேயே சொல்லி அதை விவாதத்திற்குரிய ஒரு விஷயமாக ஆக்கிவிடக்கூடிய அளவுக்கு அமைச்சர் அவர்கள் அவ்வளவு கெட்டிக்காரத்தனத்தை விட்டுவிடுபவர் இல்லை. அதைக்கூட பேச்சு ஆரம்பத்தில் சொல்லுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கடைசியிலே சொல்லலாம். நாடகத்திலே கிளைமாக்ஸ் வருவதுபோல், கையிலே என்னிடம் இருக்கிறது, என்ன தெரியுமா ? என்று கையை மூடிக் கொண்டு சொல்லுவது போல, பேச்சின் இறுதியிலேதான் குறிப்பிடுவார் என்று கருதுகிறேன். அது எப்படி இருந்தாலும், மனநிறைவு அளிக்கத் தக்க விதத்தில் அமைய வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோளாகும். இப்படிச் சர்க்கார் சிப்பந்திகளுக்குப் பஞ்சப்படியை உயர்த்துவது மாத்திரம் போதுமானதுதானா என்பதையும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆராயவேண்டும். அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த வேண்டும். அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தினால்தான் சர்க்கார் சிப்பந்திகளுக்கும் நாம் ஒரு நல்ல நீதியை வழங்கியவர்களாவோம். சர்க்கார் சிப்பந்திகளுக்குப் பஞ்சப் படியை உயர்த்து

[திரு. மு. கருணாநிதி] [29th March 1966

கிற நேரத்தில் நான்காம்தர சிப்பந்திகளுக்கும், கடைநிலை ஊழியர்களாக இருப்பவர்களுக்கும் அது உயர்த்தப்படுமா என்ற சந்தேகம் தோன்றியிருக்கிறது. இப்படி உயர்த்துவதற்கான திட்டம் இல்லாவிட்டால், இடையிலே இருக்கிற சில நிமிஷ நேரத்திலாவது முதல் அமைச்சர் அவர்கள் யோசித்து, சிந்தித்து, கடைநிலை ஊழியர்களுக்கும், அரசாங்க சிப்பந்திகளின் வரிசையில் இருக்கிற நான்காம்தர உத்தியோகஸ்தர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தை அல்லது பஞ்சப் படியை உயர்த்தி அவர்களுக்கு நல்ல நீதியை வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேரம் மிகக் குறைவு விவாதத்திற்கு என்றும், அமைக்கப்பட்ட நாட்களும் மிகக் குறைவு என்றும் குறிப்பிட்டு மன்ற உறுப்பினர்கள் பலராலும் ஆண்டுதோறும் குறிப்பாக எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களால் எடுத்துச் சொல்லப்படுகிறது. அதற்கு அவ்வப்பொழுது முதல் அமைச்சர் அவர்களும் பதிலையும் தருகிறார்கள். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் அப்படித்தான் தீர்மானித்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியிலாகட்டும், இந்த மன்றத்திலாகட்டும், இனிமேலாவது இப்படிப்பட்ட விவாதங்களுக்கு அதிக நேரத்தை ஒதுக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை இந்த நாட்டை ஆளும் சர்க்கார் உருவாக்க வேண்டும். நான் இந்தச் சர்க்காரை அப்படிச் செய்யவேண்டும் என்று கூறவில்லை ; காரணம், அடுத்த வரவு-செலவு விவாதத்தின்போது இந்தச் சர்க்கார்தான் இருக்குமோ என்கிற சந்தேகம் இருக்கிற காரணத்தினால், இந்தச் சர்க்காரை வற்புறுத்த விரும்பவில்லை. கூட்டுறவுத் துறை பற்றியும் மிக முக்கியமாகப் போலீஸ் துறை பற்றியும், அரிசன நல இலாகா பற்றியும், மருத்துவத் துறை பற்றியும், வருவாய்த் துறை பற்றியும், விவசாயத்துறை உணவுத் துறை இவை பற்றியும், இந்த மன்றத்திலே பல முக்கியமான கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. அத்தனைக்கும் அமைச்சர்கள் கூறிய பதில்களில் இழையோடியது, எல்லாம் தேர்தல் பிரசாரம், தேர்தல் பிரசாரம் என்ற அளவிலே பதில் இறுத்து அமர்ந்திருக்கிறார்கள். பிரச்னைகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் உறுதிமொழியும் கொடுக்கவில்லை. சரியான பதிலும் அளிக்கவில்லை. ஆனால் இன்றைக்கு ஆளும் கட்சி அங்கத்தினர் திரு கோசல்ராம் அவர்கள் ஒரு உண்மையைத் தெரிவித்தார்கள். எங்கள் தரப்பிலிருந்து நண்பர்கள் அழகமுத்துவும், கிருஷ்ணமூர்த்தியும் ரூ. 25 ஆயிரத்தை செய்தித் துறை, ஜனநாயக சோஷலிஸம் என்கிற பெயராலே, திருவிழா நடத்தி, காங்கிரஸ் தலைவர் காமராஜர் படத்தை வெளியிட்டதைக் குறித்து, ஒரு அரசியல் தலைவர் படத்தை, பிரசுரிப்பதில் செய்தித் துறை இலாகா சர்க்கார் பணத்தைச் செலவழிக்கலாமா என்று கேட்டபோது, செய்தித் துறை அமைச்சரோ அல்லது மற்ற அமைச்சர்களோ, அப்பொழுது அதற்குப் பதில் சொல்லவில்லை. ஆனால் இன்றையதினம் நண்பர் கோசல்ராம் அதற்கான பதிலைக் கொடுத்தார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிதான் அந்தப் போஸ்டர்களைப் பிரசுரித்தது என்று. அது சரியா, இல்லையா என்ற விவாதத்தில் நாம் இறங்கவில்லை. ஒன்றை மட்டும் சொல்லுவேன், கோசல்ராம் இருக்க வேண்டிய இடத்தில் பூவராகன் இருக்கிறார்கள் (சிரிப்பு). அவர்கள் கொடுத்த பதில் சரியோ தவறோ, அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் அப்படிப்பட்ட விளக்கத்தைக் கொடுக்க அமைச்சர் தவறிவிட்டார்கள். இந்த வகையில் அமைச்சர் நடந்துகொண்டால், நாங்கள் இந்த மன்றத்திலே நல்ல தகவல்களை எப்படிப் பெறமுடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கூட்டுறவுத் துறையில் எவ்வளவு அநியாயங்கள் நடைபெறுகின்றன என்பதைப் பற்றி எங்கள் கட்சி சார்பில் அத்தனை பேர்களும் எடுத்துச் சொன்னார்கள். நண்பர் அரங்கண்ணல் பேசும்போது, இந்த மாநிலத்தில் இருக்கிற பெரிய பெரிய நிறுவனங்களெல்லாம் காங்கிரஸ் கட்சிக்காரர்களைச் சேர்ந்தது என்றும், அப்படிப்பட்ட நிறுவனங்களில் காங்கிரஸைச் சேர்ந்த பெரும் புள்ளிகளே இடம் பெற்று இருக்கிறார்கள் என்றும் எடுத்துக் கூறியபோது, அமைச்சர் மன்றாடியார், அவர்களெல்லாம் அந்த அளவுக்கு யோக்கியர்கள், தகுதி உள்ளவர்கள், அவற்றில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆளும் கட்சி தேர்தலை மனதில் கொண்டு, இப்படிப்பட்டவர்கள் கூட்டுறவுத் துறையில் இருந்தால், இந்தப் பெரிய மனிதர்கள் இல்லை, இவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு நிறுவனங்

29th March 1966] [திரு. மு. கருணாநிதி]

களில் இருந்தால், இந்தப் பெரும் புள்ளிகள் இருப்பதால், இவர்கள், இவர்களுடைய ஏஜெண்டுகள் வழியாகக் கிராமங்களில் கடன் வசதி போன்ற பணத்தைக் கொடுத்தால், தேர்தல் நேரத்தில் இவற்றைச் சலுகைகளாக்கி, பெறுபொருள் ஆக்கி, ஓட்டு மொத்தமாக, 300, 400 என்று வாக்குகளை, ஓட்டு மொத்தமாக 500, 1,000 என்று வாக்குகளை ஆளுகின்ற காங்கிரஸ் கட்சிக்குப் பெறுவதற்குப் பயன்படுகிறது அல்லாமல், இதில் யோக்கியதாம்சம் இருக்கிறதா இல்லையா என்கிற விவாதம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

பின்தங்கிய பகுதிகளைப் பற்றி இந்த மன்றத்திலே 4, 5 தடவைகளுக்கு மேல் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கை மீது நடந்த பொது விவாதத்தின்போதே புதுக்கோட்டை, கிழக்கு ராமநாதபுரம், அறந்தாங்கி போன்ற பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளாக்க வேண்டும் என்ற கோரிக்கை பாராளுமன்றத்திலே, கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களால் கேட்கப்பட்டு, திட்ட மந்திரி திரு பகத் அவர்கள், எல்லா மாநிலங்களிலிருந்தும் அதைப் பற்றித் தகவல்கள் வந்திருக்கின்றன ; உத்தரபிரதேசத்திலிருந்தும் வந்திருக்கிறது. ரூ. 10 கோடி அளவில் அந்தப் பிரதேசத்தில் செலவழிக்க நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்று குறிப்பிட்டுவிட்டு, தமிழக அரசு அப்படிப்பட்ட தகவல்களைத் தரவில்லை என்கிற பதிலை அளித்திருக்கிறார்கள். அதை வைத்து நான் நம்முடைய முதல் அமைச்சரைக் கேட்டேன். ஆனால் அவர்கள் தன்னுடைய உரையிலே அதைப் பற்றி விளக்கம் சொல்லவில்லை. நண்பர் கலியாணசுந்தரம் அவர்களும் அவசரப் பிரேரணைமீது பேசும்போது அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே என்ன நிலைமை ? வேதனையாக இருக்கிறது. 1962-ம் ஆண்டு திட்டக் கமிஷன் எந்த அடிப்படையில் இதைப் பின்தங்கிய பகுதி அல்லது பின்தங்காத பகுதி என்று நிர்ணயிக்கிறார்கள் என்றபோது, பிளாக்கு அடிப்படையில் அதை முடிவு செய்யலாம் என்று பதில் அளிக்கப்பட்டது. பிளாக்குகள் ஏ., பி., ஸி., டி. என்று தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டது. அந்த முறையில் ஆராய்ச்சி நடைபெற்றது. 375 பிளாக்குகளில் நடைபெற்ற ஆராய்ச்சியில் முடிவு எடுத்ததில் வித்தியாசங்கள் இருந்தன. ஒரே அளவை வைத்துப் பின்தங்கிய பகுதி பின்தங்கிய பகுதி அல்ல என்று குறிப்பிட்ட பல வித்தியாசங்கள் இருக்கின்றன என்று புள்ளி விவர டைரக்டர் சுட்டிக்காட்டினார். சுட்டிக்காட்டி, தாலூகா வாரியாக விவரம் சேகரிக்க வேண்டும் என்றார். தாலூகா வாரியாக விவரம் சேகரிக்கும்போது, திட்டக் கமிஷனிடமிருந்து அவசரச் செய்தி ஒன்று வந்தது. நான்காவது திட்டம் தயாரிப்பதற்குள்ளாக, இந்தத் தகவல்கள் தர வேண்டுமென்று. ஆகவே, ஜில்லா அளவிலே, பொது விவரங்கள், மருத்துவ மனைகள் எவ்வளவு, சாகுபடியாகும் நிலங்கள் எவ்வளவு, இப்படிப்பட்ட விவரங்களை ஜில்லா மட்டத்தில் எங்களுக்கு வழங்குங்கள் என்று கேட்டார்கள். அதையும் நான்காவது திட்டம் தயாரிப்பதற்கு முன் கொடுத்தாக வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். உடனே பழைய முயற்சிகளெல்லாம் கைவிடப்பட்டன. மறுபடியும் அந்த வேலை தொடங்கப்பட்டது. அப்பொழுது புள்ளி விவர டைரக்டர் குறுக்கிட்டு, அது சரியில்லை என்று ஒரு வாதத்தை எழுப்பினார்கள். கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பின்தங்கிய மாவட்டம் என்று குறிப்பிட முடியாது. ஆனால் கோவையிலேயே பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. ஆகவே தாலூகா வாரியாக எடுக்கப்படவேண்டும் என்று தன்னைக் குழப்பிக்கொள்ள ஆரம்பித்தது. நீங்கள் தாலூகா வாரியாக விவரம் அளிக்கும் வரை எங்களால் காத்திருக்க முடியாது என்று திட்டக் கமிஷன் அறிவித்த பிறகு, அவர்களுடைய நிலைக்கும், நம்முடைய முடிவுக்கும் ஒவ்வாமல் குழப்பங்களுக்கு இந்தச் சர்க்கார் ஆளாகிவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நம் சர்க்கார் ஏன் தைரியமாக ஒரு முடிவு எடுக்கக் கூடாது ? மாநிலத்தின் நிலையை எடுத்துக் கூறியிருக்கக் கூடாது ? மாநிலத்திற்கும் மாநிலத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. உத்தரப்பிரதேசத்திற்கும், தமிழகத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. எவ்வளவு ஒருமைப்பாடு என்று பேசினாலும், தனிக் கலாசாரம், தனிப் பண்பு, தனியான நில அமைப்புகள், தனியான கல்வி

முறை என்று இவற்றிலெல்லாம் வேறுபாடுகள் இருக்கின்றன. அந்த நிலையில், தமிழகத்தின் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று திட்டக் கமிஷனுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய தைரியத்தையும், துணிவையும் இந்த அமைச்சரவை பெறவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசன நல இலாகா பற்றிப் பேசும்போது, முக்கியமாக அரிசனங்களுக்கு உதவிகள் கொடுப்பது பற்றி, கடன் வசதிகள், நில ஆர்ஜிதம் செய்வது, வீட்டு மனை கொடுப்பது போன்ற பிரச்னைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, மிக முக்கியமானதான தீண்டாமையை எப்படியும் ஒழித்தாக வேண்டும் என்று எதிர்க் கட்சி தரப்பிலிருந்தும், ஆளும் கட்சியிலிருந்தும் அதிகமாக எடுத்துச் சொல்லப்பட்டது. பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதை நானும் சுட்டிக் காட்டினேன். திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு கிராமத்தில், லால்குடி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மகிழம்பாடி என்ற கிராமத்தில் ஜாதி இந்துக்கள், அரிசனங்களுக்குத் தண்ணீர் தர மறுக்கிறார்கள். அரிசனங்கள் தண்ணீர் எடுக்கும் குழாய்களுக்குத் தண்ணீர் போவதை ஜாதி இந்துக்கள் தடுக்கிறார்கள் என்றும், அந்த அளவில் ஸ்டே வாங்கி, இன்றைக்கு ஸ்டேயும் கான்ஸல் செய்யப்பட்ட பிறகு, இன்றைக்கு இந்த அமைச்சரவை ஜாதி இந்துக்களுக்கு உடந்தையாக இருந்து தடுத்து நிறுத்தியிருக்கிறது என்றால், அது ஸ்டேயா அல்லது உத்தரவா என்று புரியவில்லை என்ற அளவுக்குச் சமாளிப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. உள்ளபடியே நிலைமை என்ன? ஜாதி இந்துக்கள் ஆதிதிராவிட சகோதரர்களுக்குத் தண்ணீரைத் தடுக்கும் அளவுக்கு தீண்டாமை உச்ச கட்டத்தை, பயங்கரமான நிலையை அடைந்து, அதற்கு இந்தச் சர்க்கார் ஆதரவு தருகிறது என்றால், தீண்டாமை ஒழிப்பில் இந்தச் சர்க்காருக்கு எவ்வளவு நிறைந்த நம்பிக்கை இருக்கிறது என்று நான் சந்தேகப்படுகிறேன்.

மருத்துவம், சுகாதாரம் பற்றியும், அதற்காக ஒதுக்கப்படுகிற பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். வேறு மற்றக் காரியங்களுக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்று பார்ப்பது எவ்வளவு அவசியமோ அதைவிட ஆயிரம் மடங்கு அவசியம், இந்த மருத்துவ, சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்படுகிற பணம் ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்பதைக் கவனிக்க வேண்டியது. அதிலும் நான் தொடக்கத்திலே ஒன்று கூற விரும்புகிறேன். வெள்ளைக்காரர்களுடைய காலத்திலே இருக்கிற பழைய முறைகள் இரண்டு இன்னும் நம்முடைய 'சர்க்காரை விட்டுப் போகவில்லை. அதாவது, இருபது ரூபாய்க்கு மேல் என்றால் எப்படியும் ஸ்டாம்ப் ஒட்டியாகவேண்டும் என்று இருப்பதும், நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுகிறவர்கள் ஆஸ்பத்திரியிலே இலவச அனுமதி பெற முடியாது என்பதும் வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இந்தச் சர்க்காருடைய காலம் வரையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிற காரியமாக இருக்கிறது. 100 ரூபாய்க்கு மேல் பெறுகிறவர் யாராயிருந்தாலும், ரூ. 101, ரூ. 110 சம்பளம் பெற்றாலும், மருத்துவ மனைகளுக்குச் செல்லுகிற நேரத்தில் இலவசமாக அனுமதிக்கப்படமாட்டார். நான் சொல்வதைக் குறித்து மற்ற உறுப்பினர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ரூ. 250 சம்பளம் பெறுகிற சட்ட மன்ற உறுப்பினருக்குக் கூட மருத்துவ மனைகளில் இலவச அனுமதி இருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்கும் மருத்துவ மனைகளில் இலவச அனுமதி இருக்கிறது. இவர்களுக்கெல்லாம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. இவற்றைச் சுட்டிக் காட்டுகிறேன். ரூ. 250 சம்பளமாகப் பெறுகிற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வேறு அரசாங்க ஊழியர்களுக்கும் இலவச அனுமதி மருத்துவ மனையில் இருக்கிற நேரத்தில், ரூ. 100-க்கு மேல் சம்பளம் பெறும் யாராயிருந்தாலும் அவர்களுக்கு இலவச அனுமதி கிடையாது என்று இருக்கும் முறை, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து தொடர்ந்து வருகிற முறை. அந்தக்

காலத்திலேயே 100 ரூபாய் என்று வைத்திருந்தார்கள். அந்தக் காலத்தில் பத்து ரூபாய் என்றால், இந்தக் காலத்தில் அப்படி அல்ல. ஆகவே, இந்தக் காலத்திலே 100 ரூபாய் என்று இருப்பதை ரூ. 200 அல்லது ரூ. 250 என்ற அளவிலே ஆக்கவேண்டும் என்று நான் இந்த மானியம் நிறைவேறுகிற நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஒழுங்காக இந்தப் பணம் செலவழிக்கப்படவில்லை என்பதற்கு மருத்துவ மனைகளில் காண்கிற நிலைமை மிகக் கண்கூடு. மருத்துவ மனைக்குச் சென்றால் எத்தனை நோயாளிகள் படுக்கவேண்டிய கட்டிலில் படுத்திருக்கிறார்கள்? ஏதோ திருவிழாவிற்கு வந்திருப்பவர்கள் படுத்திருப்பது போல, சத்திரத்தில் படுத்திருப்பவர்கள் போல, நடந்து போகிற நேரத்தில் கவனக் குறைவாகச் சென்றால் நோயாளிகள் மீது தடுக்கி, இன்னொரு நோயாளி மீது விழுந்து செல்லக்கூடிய அளவிற்கு வழியிலே படுக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்; கட்டிலுக்குக் கீழே படுக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு பணம் ஒதுக்கியும் இந்தப் பணம் எல்லாம் ஏன் ஒழுங்காகச் செலவழிக்கப்படவில்லை?

சென்னையில் இருக்கிற ஜெனரல் ஆஸ்பத்திரி பெரியவர்கள், மந்திரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் இவர்களுக்கு நோய் வந்து அடிக்கடி அங்கே போகிற காரணத்தால் ஓரளவு நம்முடைய பார்வையில் படுகிற மருத்துவ மனையாக இருக்கிறது. அதைப்போன்ற ஒரு பெரிய மருத்துவ மனை ஸ்டான்லி ஆஸ்பத்திரியாகும். அது சென்னை நகரின் வேறொரு பகுதியில் இருக்கிறது. அந்த மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு "வெலிங்டன் வார்டு" என்று ஒரு வார்டு இருக்கிறது. அந்த வார்டுக்குள்ளே குழந்தையைத் தூக்கிக் கொண்டு போகும்போது, கையோடு ஒரு துடைப்பத்தையும் எடுத்துக் கொண்டு போகவேண்டும். ஒட்டடை அடித்துவிட்டுச் சென்றால் தான் உள்ளே நுழையலாம். அத்தகைய பழங்கால இருட்டுக் குகை. அந்த வெலிங்டன் வார்டில், சென்ற வியாழக்கிழமையன்று எட்டுக் குழந்தைகள் செத்திருக்கின்றன. இந்த எட்டுக் குழந்தைகள் செத்த அவ்வளவு மிக முக்கியமான நாள் அன்று எந்த டாக்டரும் அன்றையதினம் அந்த வார்டுக்கு வரவே கிடையாது. எவ்வளவு பெரிய கொடுமை! எட்டுக் குழந்தைகள் செத்த கணக்கை எப்படி ஆக்கியிருக்கிறார்கள்? செத்துப்போன பிறகு, அந்தத் தாய்மார்களை அழைத்து, அங்கே உள்ள சிப்பந்திகள், "இங்கே செத்ததாக நீ சொன்னால், குழந்தைகளைப் பிரேதக் கிடங்குக்கு அனுப்பி, அதனுடைய தலை, கை, கால் வேறாக எடுத்துப் பிரேத பரிசோதனைக்குப் பிறகு தான் தரவேண்டியிருக்கும். ஆகவே, செத்துப் போய்விடும் என்று தெரிந்து நாங்களே வலிய, பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போய்விட்டோம் என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போங்கள்" என்று அந்தத் தாய்மார்கள் மிரட்டப்பட்டு, அந்தக் குழந்தைகள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இவ்வளவும் ஸ்டான்லி ஆஸ்பத்திரியிலே, அமைச்சர்கள் வாழ்கிற சென்னைமாநகரத்தின் ஒரு பகுதியிலே இருக்கிற ஒரு மருத்துவ மனையிலே நடைபெற்றிருக்கிற காரியமாகும்.

செலவழிக்கப்படுகிற பணம் பெரும்பாலும் கட்சி ஆதரவுக்காகத்தான் செலவழிக்கப்படுகிறது என்பதற்குப் பல மேற்கோள்கள் இங்கே எடுத்துக்காட்டப்பட்டன. எங்கள் கட்சியின் சார்பில் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒன்று சொன்னார்கள். லைப்ரரி புத்தகங்கள் ஒதுக்குவதிலே கூடக் கட்சி நிலை தாண்டவம் ஆடுகிறது. அதை நிச்சயமாக யாரும் மறுக்க முடியாது. ஒரு புத்தகத்தைச் சொன்னார். மூன்று ரூபாய் என்று விலை போடப்பட்ட புத்தகம். லைப்ரரி பதிப்பு என்றால் ஐந்து ரூபாய் ஆகிறது என்று முதல் அமைச்சர் பதிலளிப்பார். லைப்ரரி பதிப்பு, நூல் நிலையப் பதிப்பு, அழகான பதிப்பு, அதற்குப் போடப்பட்ட தாள் விலையுயர்ந்த தாள்

என்றெல்லாம் சொல்லுவார். நான் அந்த இரண்டு புத்தகங்களையும் இங்கே காட்சிக்குக் கொண்டுவந்திருக்கிறேன். "விடுபட்ட கிளிகள்" என்பது புத்தகத்தின் பெயர். ஆசிரியர் பற்றிக் கவலை இல்லை. "வின்ஸெண்ட்" என்று போட்டிருக்கிறது. "விடுபட்ட கிளிகள்" என்ற புத்தகத்தை "வின்ஸெண்ட்" என்பவர் எழுதியிருக்கிறார். அவரே தான்—வின்ஸெண்ட் அவர்களே தான்—வேறு வின்ஸெண்ட் அல்ல—ஏனென்றால், அவருடைய போட்டோ இருக்கிறது—அவரேதான் இந்தப் புத்தகத்தையும் எழுதியிருக்கிறார்.. இந்தப் புத்தகத்திலும் 227 பக்கங்கள். இந்த இன்னொரு புத்தகத்திலும் 227 பக்கங்கள் (இரண்டு புத்தகங்களையும் கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் காண்பித்தார்கள்.) இந்தப் புத்தகத்தின் விலை மூன்று ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பண்ணை வெளியிட்ட இந்தப் புத்தகத்தின் விலை ஐந்து ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. வெளியிட்டவர் "கருணாநிதி"—நான் அல்ல. சின்ன அண்ணாமலையினுடைய பையன். சின்ன அண்ணாமலை அவர்களின் நூல் பதிப்புக் கழகம்தான் என்பதற்கு அடையாளம் இருக்கிறது. "என்னுடைய பதிப்பகத்தின் சார்பில் வெளியிடுகிற நூல்" என்று சொல்லி வேறொரு நூலுக்கு சின்ன அண்ணாமலை அவர்கள் முன்னுரை எழுதியிருக்கிறார். நம்முடைய கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்களுடைய திருவுருவம் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. இப்படிப் பட்ட புத்தகங்கள் மாணவர்களை நல்ல பாதைக்கு அழைத்துச் செல்லுகிற புத்தகங்களாக இருக்க வேண்டாமா? புலவர் கோவிந்தன் அவர்கள் இப்படிப் பேசினாரே என்று மதிப்புமிக்க செல்வராஜன் அவர்கள் மிக்க ஆதங்கப்பட்டுக் கொண்டார்கள். இந்தப் புத்தகங்களில் என்ன கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன? இந்தச் சர்க்கார் ஐம்பதாயிரம் ரூபாய்க்குச் சின்ன அண்ணாமலைப் பதிப்பு பூராவையும் வாங்கத் திட்டமிட்டு, அநேகமாக இன்றோ நாளையோ அதற்கான சாங்ஷன் கையெழுத்து போடப்படக்கூடிய நிலை இருக்கிறது. அந்தப் பதிப்பகத்திலிருந்து வருகிற, மாணவர்கள் படிக்கின்ற அல்லது லைப்ரரியில் இருக்கும் புத்தகம் ஒன்றிலுள்ள வாசகங்களை இங்கே படிக்கக்கூட அச்சப்படுகிறேன். ஆனால், படிப்பது முக்கியம் என்ற காரணத்தால் படிக்கிறேன்.

> "என் மனைவி என்னைக் காதலிக்கிறாள் என்று எந்த முட்டாள் எண்ணுகிறானோ அவன் கூண்டுப்பறவைபோல் என்றென்றும் தன் மனைவிக்கு அடிமையாவான்."

இது ஒரு பொன்மொழி!

சமதர்மம், தீண்டாமை ஒழிப்பு இவைகளுக்காக லட்சக்கணக்காகச் செலவழிக்கிற இந்தச் சர்க்கார் எந்தப் பதிப்பகத்தை, எப்படிப் பட்டவர்களை ஆதரிக்கிறது என்பதற்கு அடையாளமாக இதோ இன்னொரு பொன்மொழி!

> "பிராமணனும், குழந்தையும், பெண்ணும், சந்நியாசியும், நோயாளியும் கொல்லத் தகாதவர்கள். அவர்கள் பெரிய குற்றம் புரிந்தால் அதற்குத் தண்டனை அங்கஹீனம்தான்!"

இது தீண்டாமை ஒழிக்கிற, சமதர்மத்தை நிலைநிறுத்துகிற இந்த சர்க்கார், 50 ஆயிரம் ரூபாய் செலவழித்து வாங்க இருக்கிற புத்தகத்தில் இருக்கிறது. இந்தப் புத்தகங்களுக்கு லைப்ரரிக்கென்று ஒரு விலை; வெளியே இதற்கென்று ஒரு விலை. மூன்று ரூபாய், ஐந்து ரூபாய் என்று இப்படிப்பட்ட மோசடியை இந்தச் சர்க்கார் அனுமதிக்கிறது என்றால், இதிலே மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஜனநாயகத்திற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? நேர்மைக்கு, நாணயத்திற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? என்றுதான் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை).

இன்னொன்றும் குறிப்பிட விரும்புகிறேன். கால்நடை மருத்துவக் கல்லூரி என்று ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியில் பாஸ் செய்த பையனை "நீ தேர்வில் தோல்வி அடைந்துவிட்டாய்" என்று சொல்லி விட்டார்கள். 53 மார்க் வாங்கிய மாணவனைப் பார்த்து, "நீ 43 மார்க் தான் வாங்கியிருக்கிறாய்" என்று சொல்லி, "ஆகவே, தோல்வி அடைந்து விட்டாய்" என்று அவனை அனுப்பிவிட்டார்கள். அந்த மாணவர் யுனிவர்ஸிடிக்கு எழுதி மார்க் எல்லாம் வந்தது. அந்த மாணவன் பெயர் புருஷோத்தமன். அவர் வாங்கியிருக்கிற மார்க் 53 என்று இருக்கிறது. அவர் அதைப் போட்டோ எடுத்து வைத்துக்கொண்டு, உடனே கால்நடை மருத்துவக் கல்லூரிக்குச் சென்றார். "இதோ பாருங்கள் 53 மார்க் வாங்கியிருக்கிறேன்; ஆனால், நான் தோல்வி அடைந்ததாகச் சொல்லிவிட்டீர்களே, இது என்ன அக்கிரமம்?" என்று கேட்டார். மூன்று மாதம் கழித்து "ஆமாம், நீ பாஸ் செய்துவிட்டாய்" என்று அறிவிக்கப்பட்டு, அவருக்கு இன்றைய தினம் அனிமல் ஹஸ்பண்டிரி டிபார்ட்மெண்டில் வேலை கிடைத்திருக்கிறது. அவர் பாஸ் செய்ததாக முன்பே அறிவிக்கப்படாததால் மூன்று மாத காலத்தில் அவர் பெற வேண்டிய சம்பளம் அவருக்கு நஷ்டமாகி இருக்கிறது. வேறு பல முன்னேற்றத் துறைகளில் சென்றிருக்க வேண்டிய இந்த மூன்று மாத காலம் பின்னுக்கு இழுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் நாம் ஒதுக்குகிற பணம் அக்கறையற்ற தன்மையில், கவனிப்பாரற்ற தன்மையில் போய்க்கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொல்ல விரும்பினேன்.

மாநகராட்சி மன்றத்தைப்பற்றி இந்தச் சபையில் வெகுவாகப் பேசப் பட்டது. நான் வேறு பல பிரச்சினைகளையெல்லாம் தள்ளி வைத்துவிட்டு, அதை மாத்திரம் இங்கு பேசி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். மாநகராட்சி மன்றத்தில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை அவர்கள் சரிவர செலவு செய்தார்களா? என்று அனந்த நாயகி அம்மையார் அவர்கள் கேட்டார்கள். காங்கிரசுக்காரர்கள் மாநகராட்சி நிர்வாகத்தில் இருந்தபோது இருந்த உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நிர்வாகத்திற்கு வந்தபிறகு 16 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 1962–63-ல் ஐந்து உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சர்க்கார் சாங்க்ஷன் கொடுத்தார்கள். மூன்று ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கவேண்டும் என்று 11 லட்ச ரூபாய் அதற்காகக் கொடுத்தார்கள். 11 லட்ச ரூபாய் வழங்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்ட அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு டி.பி.ஐ. ஆலோசனையோடு, சீஃப் இன்ஜினீயருடைய அங்கீகாரம் வரவேண்டும். ஆனால், அந்த அங்கீகாரம்—சீஃப் இன்ஜினீயருடைய அங்கீகாரம்—எப்பொழுது வந்தது? சீஃப் இன்ஜினீயர் என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எந்தக் கிளையிலோ உறுப்பினர் அல்ல. அவர் அதிகாரவர்க்கத்தைச் சேர்ந்தவர். அந்த சீஃப் இன்ஜினீயர் 1965 நவம்பர் மாதத்தில் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார். 1965 டிசம்பரில் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார். நிலைமை இப்படியிருக்கும்பொழுது 1966-க்குள் எப்படி கட்டி முடிக்கமுடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 11 லட்ச ரூபாய் ஒதுக்கியது உண்மை; ஐந்து பள்ளிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டது உண்மைதான். ஆனால் இரண்டு பள்ளிகளுக்குத்தான் டி.பி.ஐ. உடைய ஆலோசனையுடன் சீஃப் இன்ஜினீயரின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. கார்ப்பரேஷனுக்கு ரோடு பராமரிப்புக்கு 3,64,843 ரூபாய் கொடுத்திருக்கிறோமே என்று சொன்னார்கள். கொடுக்கிற தொகை பெரும் தொகைதான். ஆனால் கார்ப்பரேஷன்தான் வைத்திருக்கின்ற வாகனங்களுக்காகச் செலுத்தப்படுகிற வரி 4,28,977 ரூபாய் என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஒதுக்கப்பட்ட பணம் திருப்பிவிடப் பட்டது; காரணம், செலவழிக்க முடியவில்லை என்பதல்ல என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1965-ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் 4·50 லட்ச ரூபாய் திருப்பித்தரப்பட்டது. ஒரு தொத்துநோய் ஆஸ்பத்திரி தென் சென்னையில் அமைக்க வேண்டுமென்பதற்காக 4·50 லட்ச ரூபாய் தரப்பட்டது உண்மைதான். ஆனால், அந்தத் தொத்துநோய் ஆஸ்பத்திரியை அமைப்பதற்கான இடம் தென் சென்னையிலேயே கிடைக்கவில்லை. [illegible]

1-00 p.m.

போர்டு வேண்டுமானால் வேண்டுமென்ற இடத்தை அதற்காகத் தந்திருக்கலாம். ஆனால் மாநகராட்சி எங்கே இடவசதியைத் தோற்றுவிக்க முடியும்? ஆகவே இடம் கிடைக்காததால்தான் திருப்பித் தந்தார்கள். திருப்பித் தந்தது குற்றமெனக் கருதுகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. 1965-ஆம் ஆண்டிலே 1·40 லட்சம் திருப்பித் தரப்பட்டது. கம்போஸ்டு உரம் தயாரிப்பதற்காக அந்தப் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் அதற்கும் நிலம் கிடைக்காத காரணத்தால் அதுவும் திருப்பித் தரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதேபோல் 1964-ஆம் ஆண்டில் ஆகஸ்டு மாதத்தில் ஏறத்தாழ 4 லட்ச ரூபாய் திருப்பித்தரப்பட்டது. அந்தத் தொகை சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே சப்வே கட்ட வேண்டுமென்பதற்காகத் தரப்பட்டது. அது கட்டப்படாததற்குக் காரணம், பூந்தமல்லி ஹைரோடைச் சர்க்காரே எடுத்துக்கொண்ட காரணத்தாலே அதிலே மாநகராட்சி தலையிட்டுக் கட்ட முடியாது என்பதற்காகத்தான் திருப்பித் தரப்பட்டது. அதேபோல் மவுண்ட் ரோடில் ஒரு சப் வே கட்டுவதற்காக 5 லட்ச ரூபாய் பெறப்பட்டது. மவுண்ட் ரோடையும் சர்க்காரே எடுத்துக்கொண்ட காரணத்தால் அதற்காக ஒதுக்கப்பட்ட பணமும் திருப்பித்தரப்பட்டது. இதே தான் நிலைமையே தவிர வேறு அல்ல என்பதைக் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றிய ஒரு குறிப்பையும் படித்துக்காட்டுவது நல்லது என்று நினைக்கிறேன்.

“சென்னை நகரத்திற்கு இன்னொரு சாபம். இங்கே ஓடுகிற பஸ்களை அரசாங்கம் நடத்துகிறது. மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்சேஷன் இருப்பதால் இந்த பஸ்களைத் தனியார் நடத்திவந்தால் அவர்களிடம் வரிப்பணத்தை வாங்குவோம். பஸ்களை தேசிய மயமாக ஆக்கியிருப்பதால், இதிலே வரிப் பணத்தை நகராண்மைக் கழகத்திற்குக் கொடுக்காமல் வீதிகளை மட்டும் நன்றாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் எப்படி முடியும்? இப்படி மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸேஷனில் எங்களுக்குக் கிடைக்கவேண்டியது 67 லட்சம். ஆனால் கிடைப்பது 5 லட்சம் ரூபாய். நல்ல சாம்பாருக்கு வாசனைக்காக ஒரு பெருங்காயத் துண்டைப்போடுவது போலக் கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய பணத்தைக் கொண்டு நகரிலுள்ள எல்லாச் சாலைகளையும் எப்படிப் பராமரிக்க முடியும்? அப்படி பராமரிக்க முடியவில்லையென்றால் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ளட்டும், வாங்குவது நகரசபைதானே, நமக்கு என்ன என்ற முறையில் இருக்கிறார்கள். இதைப்பற்றி பல ஆண்டுகளாக நகராட்சி மன்ற அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியும், அங்கத்தினர்கள் தூதுக் குழு அமைத்து அமைச்சரைக் கண்டு அதிகமாக ஒதுக்குங்கள் என்று கேட்டபோதிலும், அதைப்பற்றி காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் மாற்றாந்தாய் குணத்தை ஏன் எங்களுக்குக் காட்டுகிறீர்கள் என்று நான் கேட்கிறேன்.” இப்படிப் பேசியது 1959-ஆம் ஆண்டு மார்ச்சு 25-ஆம் தேதி மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார், காங்கிரஸ்காரர்கள் மாநகராட்சி மன்றத்தில் இருந்த நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் பேசியதைப் போலவே நான் இப்பொழுது பேசுகிறேன். இவர்கள் சொன்னதையே நான் திருப்பிச் சொல்லுகிறேன். அவர்கள் ஏற்புடைய கருத்தைச் சொன்னார்கள். அந்த ஏற்புடைய கருத்தை இன்று நான் இந்த மன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்னொரு முறை நண்பர் திரு. மதியழகன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அமைச்சர் மஜீத் அவர்கள் பதிலளிக்கும்பொழுது எந்த எந்த வருமானங்களுக்கு நாங்கள் மாநகராட்சி மன்றத்திற்குக் குறுக்கீடாக இருக்கிறோம் என்று கேட்டார்கள். பஸ் துறையிலே வருகின்ற வருமானம் மாநகராட்சிக்குச் சொந்தமாக வேண்டுமென்று கேட்கப்பட்டது. யாத்ரிகர்களுக்கு வரி வசூலிக்கப்படுவதை மாநகராட்சிக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்கப்பட்டது. வருமானத்தைப் பெருக்கிக்கொள்கின்ற காரியத்தை சர்க்கார் அங்கீகரிக்கவில்லை, தடுத்துவிட்டது. சினிமாக்களில் சர்சார்ஜ் மாநகராட்சிக்காக வசூலிக்கப்பட்டு அதிலே 10 சதவிகிதம் கமிஷன் சர்க்காருக்குக் கொடுக்கிறது. அதைப்போல லைப்ரரி செஸ் வசூலிப்பதில் அதிலே 10 சதவிகிதம் மாநகராட்சிக்குக் கொடுக்க வேண்டுமென்று வருமானத்துறை அளவிலே கேட்டார்கள். அதைப் போலவே, ப்ரொஃபெஷன் டாக்ஸிலிருந்து சாதாரண மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, சாதாரணத் தொழில் செய்பவர்களுக்கு விலக்களிக்கவும்

அதிகமான வருமானம் உள்ளவர்களுக்கு வரிப்போடப்பட வேண்டுமென்று கேட்ட திட்டத்தையும் சர்க்கார் அங்கீகரிக்க மறுத்துவிட்டது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக இந்த மன்றத்திலே நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு கருத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன். ஒன்றல்ல, மன்னிக்கவும் இரண்டு கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன். தனியார் துறை, பொதுத் துறைஇரண்டும் இருக்கவேண்டுமென்றும் அதுதான் சர்க்காரின் கொள்கை யென்றும், அதுதான் சோஷலிஸம் என்றும் தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சோஷலிஸம் ஒரு குத்துவிளக்கு; பொதுத் துறை என்பது அதில் உள்ள திரி; அதிலே தனியார் துறை என்ற தண்ணீரை விட்டால் சோஷலிஸக் குத்துவிளக்கு எப்படி ஒளிவீசும்? ஆகவே தனியார் துறை என்ற தண்ணீரை ஊற்றாமல் சோஷலிஸக் குத்துவிளக்கை ஏற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். இந்த நேரத்திலே ராஜ்ய சபா தேர்தலைப்பற்றிச் சொன்னால் முதலமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஒரிஸ்ஸா மாநிலத்திலே பொது எதிரியை வீழ்த்தவேண்டுமென்பதற்காக கணதந்திர பரிஷத் என்ற பிற்போக்கு கட்சியோடு கூட்டுச் சேர்ந்தது. அதேபோல் கேரள மாநிலத்தில் முஸ்லீம் லீக்குடன், வகுப்புவாதத்தைக் கிளப்பும் சக்தி என்று இவர்கள் சொல்லுகிறார்களே அந்த முஸ்லீம் லீக்குடன் காங்கிரஸ்காரர்கள் கூட்டுச் சேர்ந்து கொண்டார்கள். 1952-ஆம் ஆண்டில் விருதுநகர், சாத்தூர் தொகுதிகளில் காங்கிரஸை வீழ்த்த வேண்டுமென்பதற்காக கம்யூனிஸ்டுகள் திரு. ஜி. டி. நாயுடு அவர்களை ஆதரித்தார்கள். திரு. ஜி.டி. நாயுடு அவர்களை தேசிய முதலாளி என்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள், காங்கிரஸை வீழ்த்தவேண்டுமென்பதால். ஆகவே, பொது எதிரியை வீழ்த்துவதற்கு ஒன்று சேருவதில் தவறில்லை என்பது நடைபெற்று வரக்கூடிய ஒன்று. ஆகவே தனியார் துறை, பொதுத் துறை என்று குழப்பிக்கொண்டிருக்காமல் தனியார் துறைகளையும் பொதுத் துறைகளாக ஆக்குங்கள், உங்களால் ஆக்க இயலாவிட்டால் எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் ஆக்குவார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டு, தேர்தலில் சுமுகம் ஏற்பட்டு, தேர்தல் ஒழுங்காக நடைபெற பாதுகாப்புச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் முடியாது, முடியாது என்று கோபம் காட்டுகிறார். கோபம் காட்டுகிறார் என்று சொல்வதைக் காட்டிலும் அவர் அன்புக்குப் பாத்திரமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அன்புக்கு கட்டுப்படவில்லை என்று அன்றைக்கே அவர்கள் சொல்லிவிட்டார்கள். அன்பு காட்டவேண்டியது எங்கள் கடமை. அதைத் தடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அது வேறு விஷயம். ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் ரூபாயின் இரண்டு பக்கங்களைப்போன்றவை. ராஜா ஒரு பக்கம் இருக்கிறது. ஒரு பக்கம் பூ இருக்கிறது. ஒரு பக்கம் பூவும் மற்றொரு பக்கம் தலையும் இருப்பதுதான் நாணயத்திற்கு அழகு. அந்தப் பூவில்லாமல் தலை இருந்தால் அது பொலிவாக இருக்காது. அதேபோல் எதிர்க்கட்சியில்லாது ஆளுங்கட்சிக்குப் பொலிவு வராது. நாங்கள் ஆளுங்கட்சியாக வந்தாலும், நீங்கள்தான் எதிர்கட்சியாக இருக்கவேண்டுமென்பதை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் ஆளுகின்ற உரிமையைத் தருகின்ற வாய்ப்பை அடைக்காதீர்கள். பாதுகாப்புச் சட்டத்தை உள்ளபடியே ஒழுங்காகப் பயன்படுத்துகிறார்களா? திரு. அழகமுத்துவை நோக்கிப் பாய்கின்ற பாதுகாப்புச் சட்டம், திரு. கிருஷ்ணமூர்த்தியைத் தேடி அலைகின்ற பாதுகாப்புச் சட்டம், கருணாநிதியைப் பிடிக்கின்ற பாதுகாப்புச் சட்டம், கம்யூனிஸ்டுகள்மீது பாய்கின்ற பாதுகாப்புச் சட்டம், ஏன் பெரியாரைக் கண்டு அஞ்சுகிறது?—ஏன் பாயவில்லை என்றுகூடச் சொல்லமாட்டேன்—ஏன் அஞ்சுகிறது என்று கேட்க விரும்புகிறேன். அதற்குக் காரணம் அச்சம் தான். அவருடைய தயவில்லாமல்

காங்கிரஸ்காரர்கள் வாழமுடியாது. அவர்கள் இல்லாமல் காங்கிரஸ் எம். எல். ஏ.—க்கள் வெற்றிபெறமுடியாது. இங்கே 138 காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் வந்து இருக்கிறார்கள் என்றால் இதில் மிகப் பெரும்பாலோர் பெரியாருடைய தயவினால்தான் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். . . .

திரு. கே. டி. கோசல்ராம் : இல்லை, இல்லை; க்வெஸ்டின்.

திரு. மு. கருணநிதி : இல்லையென்று சொன்னால் அது பெரியாருக்கே அவமானம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தாங்கள் அனுமதித்தால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஆத்திரம், காரம், சாரம் இவற்றிற்கெல்லாம் அவசியமே இல்லை. கனம் உறுப்பினர் திரு. கோசல்ராம் ஆத்திரப்படவேண்டியதில்லை.

* * * *

தி.மு.க. துணைத்தலைவர் அவர்கள் பெரியார் அவர்களிடம் வளர்ந்தவர், அவரிடம் அவருக்கு மரியாதை இருக்கிறது. அவருக்கு மரியாதை செலுத்துகின்றபொழுது மற்றவர்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டாம்.

திரு மு. கருணநிதி : நான், பெரும்பாலான காங்கிரஸ் உறுப்பினர் கள் பெரியார் அவர்கள் தயவால் வந்தவர்கள் என்றுதான் சொன்னேன். இப்போதும் சொல்லுகிறேன். திரு. கோசல்ராம் அவர்களும், திரு.சங்கரன் அவர்களும் மாறுபட்டவர்கள் என்றால் மகிழ்ச்சியடைகிறேன். அப்படிப் பட்ட வீர உள்ளம் காங்கிரசிலே பல பேருக்கு இல்லை என்பதைத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். பல பேர் பெரியார் அவர்களை வருந்தி வருந்தி அழைத்தார்கள். 'முதலமைச்சர் பக்தவத்சலம் ஆட்சி ஒழிய வேண்டுமென்று வேண்டுமானாலும் சொல்லுங்கள் ; எங்களுக்கு ஓட்டுக் கேட்க வாருங்கள்' என்று பல பேர் பெரியார் அவர்களை அழைத்துக் கூட்டம் நடத்தினார்கள். இன்றைக்குத்தான் என்ன நிலைமை ?

நாத்திகம் என்ற பத்திரிகை காமராஜர் அவர்களால் தொடங்கி வைக்கப் படுகிறது ; எம். ஆர். ராதா நாடகம் போட்டு நிதி திரட்டப்பட்டு காமராஜர் மூலம் கொடுக்கப்படுகிறது ; அந்தப் பத்திரிகையிலே கனம் தொழில் அமைச்சர் வெங்கட்டராமனைப் பற்றிப் பல குற்றச்சாட்டுகள் வந்திருக் கின்றன. 'சாக்கடை வார்த்தைகள்' என்று கனம் அமைச்சர் அவர்களே அன்று சொல்லிவிட்டார்கள். அது சாக்கடையா, பூக்கடையா என்ற ஆராய்ச்சி வேறு. ஆனால் அந்தக் குற்றஞ்சாட்டுகிற பத்திரிகையைக் கண் டிக்க இன்றையதினம் காங்கிரசின் சார்பிலே திராணி இல்லாமல் இருக் கிறது. என்ன காரணம் ? அவர்களுடைய தயவால் இரண்டு மூன்று எம்.எல்.ஏ.-க்கள் அதிகமாகக் கிடைக்காதா என்ற ஆசையைத் தவிர வேறு என்ன ? இதற்குப் பிறகு வெளியிலே, சென்னை நகரிலே, சுவ ரொட்டிகளிலே, 'ராதா கவுடரும், நாத்திகம் ராமசாமியும் பேசுகிறார்கள்' என்று பெரிய பெரிய விளம்பரங்கள். அப்படியானால் காங்கிரஸ் கட்சிக் குள்ளேயே தொழிலமைச்சர் அவர்களுக்கு எதிராக ஒரு சதி உருவாகிறது என்பதை நீங்கள்—மந்திரிமார்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும். அதற்கு அமைச்சர்களே துணை போகிறார்கள், காங்கிரஸ் ஆளும் கட்சியின் பெருந் தலைவர் காமராஜர் அவர்களே துணையாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதைச் சொல்லக் காரணம், பாதுகாப்புச் சட்டத்தைப் பல வகையிலே பயன்படுத்துகிறார்கள் ; சில இடத்திலே அதைப் பயன் படுத்தப் பயப்படுகிறார்கள். அவர்கள் தயவு இல்லாமல் வர முடியாது, தேர்தலைத் தாண்ட முடியாது என்ற காரணத்தால் பாதுகாப்புச் சட்டம் அங்கே பயன்படுத்தப்படவில்லையே தவிர வேறு அல்ல.

*** Expunged as ordered by the Chair.

அதிலே நான் பெரியாரைப் பாராட்டுகிறேன். காஞ்சீபுரம் மாநாட்டிலே காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய அவர், கலியாணசுந்தர முதலியார் தலைவராக மேடையிலே அமர்ந்திருந்தபோது துண்டை உதறித் தோளிலே போட்டு ஒரு சபதம் எடுத்தார்கள். 'காங்கிரஸ் கட்சியை ஒழித்துக் கட்டி விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன்' என்று சபதமெடுத்துவிட்டு வெளியே வந்தார்கள். அந்தக் காரியத்தைப் பெரியார் அவர்கள் திறம்படச் செய்து கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய அடிமையாகக் காங்கிரஸ் கட்சியை ஆக்கிவிட்டார் பெரியார். ஈரோட்டு மாளிகையின் வாசலிலே காங்கிரஸ் கட்சி காத்துக்கொண்டிருக்கும் நிலைமையை ஏற்படுத்திவிட்டார் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திருமதி டி. என். அனந்தநாயகி : தொத்து நோய் ஆஸ்பத்திரி கட்ட இடம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான இடங்களை வேண்டிய நபர்களுக்கு விற்றுக்கொண்டிருக்கிறார் கள். அதை இந்த ஆஸ்பத்திரி கட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கலாமே.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டும். அம்மையார் அவர்கள் . . . . (மணி அடிக்கப்பட்டது).

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத் திட்ட விவாதங்கள் எல்லாம் பூர்த்தியாகி, இன்று நிதி ஒதுக்கீடு மசோதாவின் பேரிலே நீண்ட நேரம் விவாதம் நடந்தது. இதற்குப் பிறகு இந்த மாதிரி விவாதம் நடக்குமோ, யார் எங்கே உட்காரு வார்களோ என்ற எண்ணம், கவலை, ஆசை, கனவு எல்லாம் இருக்கிறது. அந்த நிலையில் இந்த விவாதம் காரசாரமாக இருந்தது. அந்த நிலையில் கனவு காண்பவர்களுக்குக் கூடப் பேசுவதில் தடுமாற்றம் ஏற்படும். அது நடக்கும், இது நடக்கும், இப்படி நடந்தால் என்ன என்றெல்லாம் தோன்றும். அவர் மீது குற்றம், இவர் மீது குற்றம் என்றெல்லாம் கூறத் தோன்றும். நம்முடைய மனோபாவத்தை உணர்ந்துகொள்ள வேண்டுமென்று பொது விவாதத்தின்போதே குறிப்பிட்டேன். அப் போதும், அதற்குப் பின்னாலும், நம்முடைய மன்றத்திலே இப்போதும் சரிய முறையிலே விவாதம் நடந்திருக்கிறது. இப்போது ஒன்றும் பழுது இல்லை. எந்தப் பக்கத்தில் யார் உட்காருவது என்பதிலே கனவு வந்து விட்டது. அப்படி வந்த நிலையில் விவாதம் நடக்கிறது. காங்கிரஸ் கட்சி மக்க ளைப் பொறுத்த மட்டில், கனவு ஒன்றுமில்லை. காங்கிரஸ் கட்சி மக்க ளுடைய ஆதரவைப் பெற்றிருக்கிற கட்சி. இன்றைக்கும் மக்களுடைய ஆதரவு இருக்கிறது என்ற நம்பிக்கை காங்கிரசுக்கு இருக்கிறது. அதிலே சிறிதும் ஐயமில்லை. மக்களுடைய ஆதரவைப் பெற்று நடக்கிற கட்சி. வேறு ஒருவர் காங்கிரசுக்கு வெளியில் உள்ள ஒருவர் ஆதரவு அளித்தால் அது வரவேற்கும். அதற்காக காங்கிரஸ் தன்னுடைய கொள்கையை விட்டுக் கொடுத்து வேறு யாரையும் பிடித்து வைத்துக்கொண்டுதான் வெற்றி பெற வேண்டுமென்ற நிமித்தம் இல்லையென்பதை நன்றாக உணர்ந்திருக் கிறது. கனம் எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்கள் கூறினார்கள். பாதுகாப்புச் சட்டத்தை நீக்க வேண்டும், பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு தேர்தலை நடத்தாதீர்கள் என்று சொன்னார்கள். தேர்தலுக்குப் பாதுகாப்பு சட்ட விதிகளையோ, சட்டத்தையோ பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நிமித்தம் காங்கிரசுக்குச் சிறிதும் இல்லை. பாதுகாப்புச் சட்டத்தை தேர்தலைப் பொறுத்த மட்டில் காங்கிரஸ் அரசாங்கம் சிறிதும் பயன்படுத்தாது.

ஆனால், நெருக்கடி நிலை நீங்கிவிட்டது என்று கூறுகிறவர்களுடைய மனோ கூற்றை ஒருகாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களுடைய மனோ பாவம் என்ன என்றுதான் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. அன்றாடப் பத்திரிகையில் பார்க்கிறோம். ஒரு பக்கத்தில் சீனர்கள் தொல்லை ; மறு பக்கத்தில் பாகிஸ்தான் தாஷ்கெண்ட் ஒப்பந்தத்திற்கு மாறாக சென்று கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை. சீனாவுடன் ஒப்பந்தம் செய்து

[திரு. எம். பக்தவத்சலம்] [29th March 1966

கொண்டு சீன டாங்குகளைக் காட்டுகிற நிலை இவற்றையெல்லாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். இந்த நிலையில் நெருக்கடி நிலை தீர்ந்துவிட்டது என்று கூறுங்கள் என்ற கூற்றைத்தான் நான் உணர்ந்துகொள்ள முடியவில்லை. பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் அது நாட்டின் பாதுகாப்புக்காக அமைந்ததே தவிர, பாதுகாப்புச் சட்டத்தை ஒருகாலும் இந்த அரசாங்கம் தனது தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்திக் கொள்ளாது என்று மீண்டும் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

முதலிலே இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த கனம் உறுப்பினர் [illegible] அவர்கள் 'இந்த விவாதங்களுக்கு எல்லாம் ஒதுக்கப்பட்ட காலம் போதாது ; இதற்கு மேலும் கொஞ்சம் ஒதுக்கியிருந்தால் நலமாக இருந்திருக்கும்' என்று கூறினார்கள். பதினாறு, பதினேழு நாட்கள் மானியங்கள் விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டு கட் மோஷன்கள் எல்லாம் கொடுத்து விவாதிக்கப்பட்டிருக்கின்றன. பொது விவாதத்திற்காக ஐந்தாறு நாட்கள் ஒதுக்கப்பட்டன. அந்த முறையில் நடைபெற்று வருகிறது. ஆனால் 31-ம் தேதிக்குள் பட்ஜெட்டைப் பாஸ் செய்ய வேண்டுமென்றால் இன்னும் முன்னதாகவே பட்ஜெட்டை சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆண்டில் ஒரு நாள் முன்பே பிப்ரவரி 26-ம் தேதியே பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கும் முன்னால் பட்ஜெட்டை சமர்ப்பிக்க வேண்டுமென்று சொன்னால் திட்டத்தின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. ஐந்தாண்டு திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் கூட ஆண்டுதோறும் திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. அது டிசம்பர் மாதத்திற்கு முன்னால் நிர்ணயிக்கப்படுவதில்லை. திட்டத்தின் நிர்ணயத்தைத் தெரிந்துகொண்ட பிறகுதான் அதற்கேற்ற வகையில் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. இன்னும் பத்து நாள் முன்னதாகவே வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென்பதால் அதில் இருக்கக்கூடிய கஷ்டங்களைத்தான் தெரிவிக்கிறேன். பல கோடி ரூபாய்க்கு மானியம் கோரப்படும்போது அதைப் பற்றிய விவாதம் நடத்த ஒரு நாள் இரண்டு நாள் போதுமா என்று கேட்கிறார்கள். விவாதம் கோடியைப் பொறுத்ததல்ல. பிரச்னையைப் பொறுத்தது ; கொள்கையைப் பொறுத்தது. எத்தனை கோடி மானியம் கோரப்படுகிறது என்பதல்ல பிரச்னை. ஒரு நாள் போதாது என்றால், 4 மணி நேரம் போதாது என்றால் நேரத்தை நீடித்துக்கொள்ளலாம். இப்போதே அனேகமாக ஒவ்வொரு நாளும் $1\frac{1}{2}$ மணிக்குப் பதிலாக இரண்டு மணி, இரண்டரை மணி வரைகூட ஆயிற்று. தேவையானால் சில சமயங்களில் மாலைப் பொழுதில் வேண்டுமென்றாலும் வைத்துக்கொள்ளலாம். இதெல்லாம் அப்போதைக்கப்போது கலந்து ஆலோசிக்கப்படுகிற விஷயங்கள். முன்பெல்லாம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எதெல்லாம் தனித் தனியாக விவாதிப்பது அவசியம் என்று கருதுகிறார்களோ அவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவற்றை எல்லாம் விவாதம் இல்லாமலே கில்லட்டினில் சேர்த்துவிடுவார்கள். எதை எதைக் குறிப்பாக எடுத்துக் கொண்டு விவாதிக்க வேண்டுமென்பது அவர்கள் முடிவு செய்கிற விஷயம். இந்த வருஷம் நான் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துவிட்டேன். இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறேன். அடுத்த வருஷம் யார் இந்த பெஞ்சில் இருப்பார்களோ அவர்கள் அப்போது எதிர்க்கட்சியாக இருப்பவர்களைக் கலந்து ஆலோசிக்கலாம். அவர்களுடைய மனோபாவத்தை, கனவு காண்பதைப் பொறுத்தமட்டில் சொல்லுகிறேனே தவிர, எனக்கு ஒன்றும் ஐயமில்லை—நான் இருப்பதைப் பற்றியல்ல, இந்தக் கட்சி இருக்கும். காங்கிரஸ் கட்சி இருக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை, இந்த மன்றத்தில் உள்ளவர்களுக்கும் ஐயமில்லை.

இப்போது இங்கு நடைபெற்ற விவாதத்தில் நகரமன்றத்தில் யாரோ குற்றம் சாட்டுவது, அதற்கு டிஃபென்ஸாக இவர்கள் விடை அளிப்பது என்ற வகையில் பேசப்பட்டது. அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் நகர மன்றத்தின் பேரில் குற்றம் சாட்ட வேண்டுமென்ற நிமித்தம் இல்லை. குற்றம் இருக்கிறது, குற்றம் சாட்டக்கூடும். அரசாங்கம் பொதுமக்களின் நன்மையையொட்டி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள விரும்புகிறது. அது

29th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

வும், ஆதாரத்தோடுதான் எடுத்துக்கொள்ளலாம். எங்களுக்குள்ள சங்கடத்தைப் பற்றிச் சொன்னேன். ஸ்டேட் டெவலப்மெண்ட் கமிட்டி என்றிருக்கிறது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லோரும் கூடி அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வளவுதூரம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன ; ஏன் ஓரளவு நிறைவேற்றப்படவில்லை, முழுவதையும் நிறைவேற்றுவதற்கு என்ன செய்வது என்பதைப் பற்றியெல்லாம் விவாதிப்பதுண்டு. நான்கு தினங்களுக்கு முன்பு கூட அந்தக் கூட்டம் நடந்தது. இந்த கார்ப்பரேஷன் இனம், குடிதண்ணீர்த் திட்டம் பற்றி எல்லாம் வந்தது. நான்கு வருடங்களுக்கு முன்பு 1962–63-ல் பணம் ஒதுக்கப்பட்டதே, ரொம்ப அவசரமானதாயிற்றே, ஏன் செய்யவில்லை என்று கேட்டேன் சீஃப் எஞ்ஜினீயரை. நீங்கள் இப்போது எடுத்துக்கொண்டால் முடிக்க எவ்வளவு காலமாகும் என்று கேட்டதற்கு எட்டு மாதங்களில் முடித்துவிடுவோம் என்று சொன்னார்கள். அப்படியானால் அதை 1964-லேயே முடித்திருக்கலாம்.- என்ன கஷ்டமிருக்கிறது, எப்படி நிவாரணம் அளிப்பது என்றுதான் அங்கே விவாதிக்கப்பட்டது. பணம் ஒதுக்கப்பட்டது; ஆனால், அது அப்படியே நின்றுவிட்டது. கார்ப்பரேஷனால் நடத்தமுடியவில்லையென்றால் பி.டபிள்யூ.டி.யே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும், எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அங்கு சொன்னதைத்தான் இங்கு குறிப்பிட்டேன். அளிக்கப்பட்ட பணம் செலவு செய்யப்படவில்லையென்றால் எவ்வாறு திருப்பிக் கொடுக்கப்பட்டது, எந்த நிலையில் கொடுக்கப்பட்டது என்று திரு. மதியழகன் அவர்கள் கேட்டார்கள்; எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்களும் கேட்டார்கள். அது வேறு விஷயம். ஐந்தாண்டுத் திட்டம் என்றால், ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கப்படுகிற பணம் செலவாகவில்லையென்றால் செலவாகாததற்குக் காரணம் சொல்லியிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளுகிறோம். காரணம் இல்லாமல் நிறைவேற்றவில்லை என்றால் அது திருப்திகரமாக இல்லை என்று சொல்கிறோம். மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸிலிருந்து எவ்வளவு கொடுத்தோம் என்றால் அது கார்ப்பரேஷனுக்கு மட்டுமல்ல, சென்னை நகரத்துக்கு மட்டுமல்ல. மற்ற நகரங்களும் இருக்கின்றன. மோட்டார் வெகிக்கிள்ஸ் வரியால் வருவதைக் கொண்டு ரோடுகள் பராமரிக்கப்படுகின்றன. இங்கு கூட ரோடுகள் திருப்திகரமாகப் பராமரிக்கப்படவில்லை. கிராண்ட் கொடுத்தும்கூட திருப்திகரமாகப் பராமரிக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக சில முக்கியமான ரோடுகளை எடுத்துக்கொண்டோம். மேலும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. ரொம்ப முக்கியமான ரோடுகளை எடுத்துக்கொள்ளலாம் என்று எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்போதைக்கப்போது அரசாங்கத்திற்கும் நகரமன்றத்திற்கும் இடையே சர்ச்சை ஏற்படுகிறது. நகரமன்றத்தின் நலனையொட்டி, நகரத்தில் வாழும் மக்கள் நலனையொட்டி, வரி கொடுப்பவர்களின் நலனையொட்டி அதைச் செய்வது தவறு, இதைச் செய்வது தவறு என்று அரசாங்கம் எடுத்துக்காட்டுகிறது என்றால், நகர மன்றத்தின் மீது பழி சுமத்துகிறார்கள் என்று கூறுவது நியாயமல்ல. முன்பே நான் கூறியிருக்கிறேன், வீடுகள் வாடகைக்கு விடுவதுபற்றி. பங்கு போட்டுக் கொண்டுவிடுவது சரி அல்ல என்று சொன்னோம். அதை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்துவிட்டார்கள். கார்ப்பரேஷனுக்குச் சொந்தமாகவுள்ள நிலத்தை விற்க வேண்டுமென்றால், 'ஏலத்தில் விடுங்கள், பப்ளிக் ஆக்ஷனில் விடுவதுதான் நல்லது' என்று சொன்னதற்கு, 'முடியாது; லீஸுக்குக் கொடுக்கிறோம்' என்று சொல்கிறார்கள். பப்ளிக் ஆக்ஷனில் விடுங்கள், அதிகம் வரும், அப்படி அதிகம் வருவது வரவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொன்னால் அவர்கள் கேட்பதில்லை. மக்களின் நலனையொட்டி இவ்வாறெல்லாம் கூறுகிறபோது அவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் மறுக்கிறார்கள் என்றால் அதை எடுத்துக் காட்டத்தான் வேண்டியிருக்கிறது. அரசாங்கம் ஏன் தலையிடுகிறது என்றால், தவறுதலான பாதையில் செல்லுகிறபோது, கூட ஒத்துழைக்கவில்லை என்று கூறினால் அதற்குச் சமாதானம் சொல்ல வேண்டியிருக்கிறது. நகரமன்றத்தை ஒரு சாரார் குற்றஞ்சாட்டுவது, மற்றொரு சாரார் அதற்கு விளக்கம் தருவது, நகரமன்றத்தைத் தாங்கிப் பேசுவது என்ற இந்த முறையில் இந்த விவாதத்தை மாற்றிக்கொள்ளக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சில தமிழ்ப் புத்தகங்கள் பற்றிச்சொன்னார்கள். புலவர் கோவிந்தன் அவர்களும் சொன்னார்கள். கனம் துணைத் தலைவர் அவர்களும் சொன்னார்கள். புத்தகங்களைப் பொறுத்தமட்டில் யார் எழுதிய புத்தகங்கள், யார் பிரசுரிக்கிறார்கள் என்பதல்ல. இந்த அரசாங்கத்திற்குள்ள ஆவல் எல்லாம் நல்ல புத்தகங்களா, நல்ல நூல்களா, மாணவர்களுக்கு ஏற்ற நூல்களா, நாட்டுப்பற்று, வீரம், தியாக உணர்ச்சி இவற்றை அளிக்கக்கூடியவகையில் நல்ல புத்தகங்கள் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும், அவர்கள் நல்ல முறையில் அவற்றைப் படிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் ஆவல். அந்த வகையில் சில சமயங்களில் நல்ல புத்தகங்கள் கிடைப்பதில்லை. நல்ல புத்தகங்கள் கிடைக்கும் வகையில் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, அரசாங்கத்திற்கு யாரிடமும் தனி ஈடுபாடு இல்லை. நூலகங்களுக்குக் கொடுக்கிற புத்தகங்களின் விலையை அதிகப்படுத்துகிறார்கள் என்று துணைத் தலைவர் அவர்கள் கூறினார்கள். நூலகங்களுக்கு குறைவாகக் கொடுக்க வேண்டுமென்றுதான் நான் சொல்லி வருகிறேன். 25 சத விகிதம், 50 சத விகிதம் டிஸ்கவுண்ட் கொடுத்து குறைத்துக் கொடுங்கள் என்றுதான் என்னிடம் வருகிற பிரசுரகர்த்தாக்களிடம் கூறுகிறேன். தங்களுடைய புத்தகங்களை வாங்குவதில்லை என்று கூறி, முன்வைக்குப்பின் தெரியாதவர்கள் என்னிடம் வருகிறார்கள், அவற்றில் சில நன்றாக இருக்கின்றன. இந்தப் புத்தகங்களைக் கூட வாங்குவதில்லை என்றால் நீங்கள் குறைத்துக் கொடுங்கள் என்று கூறுகிறேன். அதிக விலை போட்டு, லைப்ரரி ப்ரைஸ் என்று அதிகம் போட்டு அதில் ஓரளவு குறைத்துக் கொடுக்கிறார்கள் என்ற புகார் வருகிறது என்று அதையும் கூறினேன். ஒருவர் மட்டும் சம்பாதிக்க வேண்டும், லாபம் பெறவேண்டும் என்ற அக்கறை இந்த அரசாங்கத்திற்கு இல்லை. சக அமைச்சர், உள்துறை அமைச்சர் அவர்களின் படம் போட்ட புத்தகத்தை எடுத்துக்காட்டினார்கள். எனக்கு நினைவிற்கு வந்தது; அதை மேலும் ஊர்ஜிதப்படுத்தினார்கள் அமைச்சர் அவர்கள். ஹரிஜன நல இலாகா என்று நினைக்கிறேன். அந்தப் புத்தகத்தை வைக்க வேண்டுமென்ற எண்ணம் சாதாரணமாக வந்தது. அமைச்சர் அவர்கள் என்னிடம் வந்து, 'என் படம் போட்டிருக்கிறது; என் படத்தைப் போட்டிருப்பதால் இது வேண்டாமென்று நினைக்கிறேன்' என்று கூறினார்கள். உள்ளே போகவில்லை. 'உங்கள் படம் போட்டிருந்தால் என்ன? உள்ளே இருக்கிற விஷயம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால், நல்லதாக இருந்தால் ஏன் அதை ஆட்சேபிக்க வேண்டுமென்று கேட்டேன். அந்தப் புத்தகத்தை வைத்ததாகத் தெரியவில்லை. நல்ல புத்தகங்களை வைக்கவேண்டுமென்ற ஒரே நோக்கம்தான் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது.

கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் நிதி இலாகா காரியதரிசி அவர்களை ரொம்பப் பாராட்டினார்கள். அவர்களிடமிருந்து தகவல் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதைக் கேட்டபோது ஏதோ பெரிய தகவல் இருக்கிறது என்று நினைத்தேன். அப்படி ஒன்றும் தகவல் இல்லை. பழைய பேச்சுத்தான். பழைய குற்றச்சாட்டுகள்தான். பொதுவாகச் சொல்வதுதான் இருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்குப் போதிய மானியம் கொடுக்கவில்லை என்றால், பள்ளிக்கூடங்களுக்கு எஜுகேஷன் செஸ் இருக்கிறது; வீட்டு வரிமேல் செஸ் இருக்கிறது. மற்றும் கொடுக்கிறார்கள். நேற்று சொன்னதற்குப் பதில் இல்லை. லைனிங் போடுவது, பூண்டி ரிசர்வாயரிலிருந்து வருவதை அதிகரிப்பதில் நகரமன்றம் என்ன செய்தது என்பது பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நிதி இலாகா காரியதரிசி அவர்களிடமிருந்து விவரங்கள் வந்திருக்கின்றன என்று கூறிய போது, 'ஏதோ வாங்கியிருக்கிறார்கள், பெரிய ஒரு விளாசல் இருக்கிறது, தாக்குதல் இருக்கிறது; அதை எப்படித் தாங்கப்போகிறோம், என்று நினைத்தேன். ஆனால் ஒன்றுமில்லை.

சில சமயங்களில் அபூர்வமான ஒரு அனுபவம் ஏற்படுகிறது. கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இன்று பேசியது ரொம்ப நூதனமாக இருந்தது. புது முறையில், அசாதாரணமான முறையில் அவர்கள் பேசினார்கள். நெல்லிக்குப்பம் கரும்பாலையில் கரும்பு எடுத்துக்கொள்ள

மறுக்கிறார்கள் என்று கூறினார்கள். அப்படிச் செய்தால் உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கஷ்டம்தான், அதை உணருகிறேன். ஐந்து ரூபாய் கூட குறைத்து வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதைப் பாராட்டுகிறேன். கொஞ்சம் விவரமாக எனக்கு எழுதி அனுப்பினால் அவர்களிடம் சொல்லலாம்; உத்தரவு போட முடியாது; அவர்கள் ஏதாவது சமாதானம் சொல்லக்கூடும்; அவர்களிடம் சொல்லி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களைப் பார்த்து கரும்பு வீணாகப் போகாமல் எடுத்துக் கொள்ளக் கூடுமான முயற்சியைச் செய்யலாம். 1-30 p.m.

அதே மாதிரி நேற்று முன்தினம் கனம் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள்; அதாவது அவர் இரவு ஒரு மணிக்கு மதுராந்தகத்தின் பக்கத்தில் ஒரு பண்ணையின் பக்கத்தில் வரும்போது 500-க்கு மேல் மின்சார விளக்குகள் போடப்பட்டிருந்தன, இதை எப்படித் தொழில் அமைச்சர் அவர்கள் அனுமதிக்கலாம் என்று கேட்டார்கள். அது மட்டுமல்ல; அங்கே இது போன்று விளக்குகளைப் போட்டுக்கொள்ள அனுமதி கொடுத்துவிட்டு, இங்கே பீச்சில் விளக்குகள் சரியாகப் போடவில்லை, ஆல்டர் நேடிவ்லாம்ப்-போஸ்ட்களில் தான் விளக்குகள் போட்டிருக்கிறார்கள். இது போதாது என்று சொன்னார்கள். நான் கருதுவது, பீச்சில் இப்போது இருக்கின்ற விளக்குகளே போதுமானவை என்றுதான். கடற்கரையைப் பொறுத்த அளவில் இப்போதிருக்கின்ற விளக்குகள் போதுமானவை. அது மட்டுமல்ல, இன்னும் வருகின்ற ஏப்ரலில் நீலகிரியில் மழை இல்லாமல் இருந்தால் இன்னும் நிலைமை எப்படியிருக்கும் என்று சொல்வதற்கில்லை. தொழிற்சாலைகள் பாதிக்கப்படாத வண்ணம் நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதில் நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, முடிந்த வரையில் மின்சாரத்தை உபயோகிப்பதில் நாம் சிக்கனத்தைக் கையாண்டு வருகிறோம். ஆகவே பீச்சில் இருக்கின்ற விளக்குகள் போதுமானவை—கனம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பீச்சுக்கு போவதாக இருந்தால்—விளக்கு இல்லாமல் இருப்பது நல்லது தான், ரொம்பவும் வெளிச்சம் இருக்கக்கூடாது தான், ஆகவே இதற்கு தொழில் அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கவேண்டிய தேவையில்லை........

திரு. மு. கருணாநிதி: கடற்கரையில் விளக்கு இல்லாமல் இருப்பது நல்லது தான் என்று நமது முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதை அவர்களது அனுபவத்திலிருந்து சொல்கிறார்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்கு அந்த அனுபவம் கிடையாது. நான் கடற்கரைக்குப் போவதும் இல்லை. நேற்று முன் தினம் தான் கனம் உறுப்பினர் இதைக் கூறினார்கள், 500 விளக்குகள் அனாவசியமாகப் போட்டிருக்கிறார்கள் என்று. இதை நான் நேரடியாகப் போய்ப் பார்த்தேன். அந்தப் பண்ணையைப் போய் பார்த்தேன். அங்கு போனவுடன் விளக்கைப்பற்றித்தான் கேட்டேன். அவர்கள் சொன்னது, 'இங்கு நாங்கள் தனியாக ஜெனரேட்டர் வைத்துத் தான் விளக்குகளைப் போட்டோம், எலெக்ட்ரிஸிட்டி ஸிஸ்டத்திலுள்ள கரண்டை எடுத்துக் கொள்ளவில்லை' என்று சொன்னார்கள்....

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நேற்று முன் தினம் இரவு ஒரு மணிக்கு நான் அந்தப் பண்ணையின் பக்கத்தில் வந்து கொண்டிருந்த போது 500-க்கும் மேற்பட்ட விளக்குகள் போடப்பட்டிருப்பதைப் பார்த்து அங்கே இறங்கி விசாரித்தேன். விவரங்களை எல்லாம் சேகரித்தேன். ஏதோ ஜெனரேட்டர் வைத்துத்தான் உபயோகித்தோம் என்று சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியல்ல, பம்ப்செட்டிலிருந்து எட்டு ந.பை. ரேட்டில் கரண்ட் எடுத்து அந்தக் கரண்டிலிருந்துதான் விளக்குகள் போட்டிருந்தார்கள். இதையெல்லாம் விசாரித்து விட்டுத்தான் இங்கு பேசினேன். அதோடு, நமது முதலமைச்சர் அவர்களின் நண்பர் இதை மறைக்கவேண்டும் என்பதற்காக அடுத்த நாள் 3½ மணிக்கு ஜெனரேட்டர் எடுத்துக்கொண்டு போய் வைத்ததும் தெரியும், அதை முதலமைச்சர் அவர்களுக்கு காட்டினார்கள்

என்கின்ற விவரமும் எனக்குத் தெரியும். இதையெல்லாம் பார்த்துவிட்டு முதலமைச்சர் அவர்கள் இப்படி பதில் சொல்லப்போகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏதோ என்னுடைய நண்பர் என்று சொல்லுகிறார்; எல்லோரும் எனக்கு நண்பர்கள்தான்; கனம் உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட என் நண்பர் தான். 'முதலமைச்சர் அவர்களிடம் எவ்வளவோ கேட்கிறோம், அவர்களும் செய்கிறார்கள்' என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் இதைப்பற்றி விசாரித்தேன் என்று சொல்லுகிறார்கள். நான் நேரில் போய்ப் பார்த்தேன். தனியாக ஜெனரேட்டர் வைத்துத்தான் விளக்குகளை போட்டோம் என்று சொன்னார்கள்; நானும் பார்த்தேன். நல்ல அற்புதமான பண்ணை; அந்த இடத்தை ஏக்கருக்கு 50 ரூபாய் அல்லது 75 ரூபாய் அளவுக்கு வாங்கினார்கள்; இப்போது நல்ல பண்ணையாக இருக்கிறது; நெல் வளருகிறது; கறிகாய் போட்டிருக்கிறார்கள்; நல்ல பழ வகைகள், இவைகளை எல்லாம் எப்படி நல்ல விதத்தில் அமைப்பது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது அந்தப் பண்ணை. உபயோகமற்று கிடந்த அந்த இடத்தை—பாறையாக கிடந்த இடத்தை வாங்கி இவ்வளவு நல்ல பண்ணையாக ஆக்கியிருக்கிறார்கள். இதைப் பார்த்து எல்லோரும் பயன் அடைய வேண்டும். ஜெனரேட்டர் வைத்து விளக்குகள் போடுவதாக இருந்தால் இப்படி ராத்திரியில் விளக்குகள் போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன். எல்லோரும் இதைப் பார்த்து பின்பற்ற வேண்டும் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

அதே போன்று கனம் உறுப்பினர் மதியழகன் அவர்கள் அரிஜன இலாகா மான்யம் பற்றி விவாதிக்கப்பட்ட பொழுது, நான் இங்கு இல்லை, இருந்தாலும் அவர் சொன்ன ஒரு விஷயத்தைப்பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். திடீரென்று ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டு, அதிலும் எனக்குத் தெரியாத ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டு உடனே பதில் சொல்லுங்கள் என்று சொன்னால் ஒன்றும் சொல்ல முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. எதையும் விசாரித்துத்தான் சொல்லவேண்டும். எடுத்தவுடனேயே எதையாவது சொல்லிவிட்டு, அது இல்லை என்று சொன்னால் அதை நிரூபியுங்கள் என்று சொன்னால் உடனடியாக எங்கே போவது என்று எனக்கு தெரிவதில்லை. அவர்கள் சொன்ன விஷயத்தைப்பற்றி விசாரித்தேன்.... (குறுக்கீடு) கனம் மதியழகன் அவர்கள் அல்ல; கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—கனம் உறுப்பினர் மதியழகன் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்—அதாவது கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது, ஸ்ரீபெரும்புதூரில் வல்லக்கோட்டை என்ற இடத்தில் அரிஜன காலனி ஏற்படுத்துவதற்காக, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது, அதற்கு அரிஜனங்களுக்குச் சொந்தமான நிலத்தையே வாங்கியிருக்கிறார்கள், அக்வயர் செய்திருக்கிறார்கள், காரணம், அங்கேயிருக்கின்ற அரிஜனங்கள் எனக்கு வோட்டு போடவில்லை என்பதற்காக இந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்று சொன்னார்கள். இது என்ன விஷயம் என்பதை விசாரித்தேன். நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது 1960-ல், எலெக்ஷன் நடந்தது 1962-ல். ஆகவே அந்த ஊரில் உள்ளவர்கள் எனக்கு வோட் போடவில்லை என்கின்ற கேள்வியே வருவதற்கில்லை. அப்படிப் பார்த்தாலும் அந்த ஊரில் எனக்கு நிறைய வோட்டுப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த ஊரைப்பற்றி எனக்கு குறையே இடையாது. 1960-ல் அரிஜனங்களுக்குக் காலனி ஏற்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 3 ஏக்கர் 23 செண்ட் அக்வயர் செய்யப்பட்டது. இதற்கு 976 ரூபாய் 55 ந.பை. காஸ்டாகியிருக்கிறது. ஏழு பிளாட்-கள் வாங்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் அக்வயர் செய்யப்பட்டதைப் பார்க்கும்போது, பலருடைய நிலங்களும் இருக்கின்றன; நாயுடு, வேறு பல இனத்தவர்களுடைய நிலங்களும் இருக்கின்றன. அவர்களில் ஒரு நிலத்தின் சொந்தக்காரர் ஒருவர் நாயுடு—அவர் குறிப்பிட்ட ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு ஆட்சேபித்தார். அது எனக்கு வேண்டும் என்று

சொன்னார். இங்கு கனம் உறுப்பினர் தங்கவேலு அவர்கள் சொன்னார்கள், அரிஜனங்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும் போது, சிலர் தங்களுக்கு வேண்டும் என்று ஆட்சேபனை செய்கின்றார்கள் என்று சொன்னார்கள். அந்த முறையில் இவரும் ஆட்சேபித்திருக்கிறார். இருந்தாலும் இவர் ஆட்சேபிப்பதில் நியாயம் இல்லை, அரிஜனங்களுக்காக எடுத்துத்தான் தீரவேண்டும் என்று சொன்னோம். அதற்குப் பிறகு அவர் அரிஜன் ஒருவருக்கு டிரான்ஸாக்ஷன் நடத்தியிருக்கிறார்கள். இவ்விதம் செய்வது பினாமி டிரான்ஸாக்ஷன் ஆகும். இதைத் தவிர மற்ற எந்த அரிஜனங்களுக்கும் அதில் பட்டா கிடையாது. இது சம்பந்தமாக பிரச்னை ஏற்பட்டது; இப்போது கோர்ட்டுக்குப் போயிருக்கிறார் என்று தெரிகிறது. ஆகவே, இதில் வோட்டு போடவில்லை, அதற்காக இப்படி அரிஜனங்களிடமிருந்து நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டால் அரசாங்கம் உடனடியாக எதையும் சொல்வதற்கில்லை. எனக்குத் தெரியாது என்றுதான் சொல்ல முடியும். ஆனால் இப்படிச் சொல்லிக்கொண்டிருப்பது எங்கே போய் நிற்கும் என்று தெரியவில்லை. அப்படிப் பல குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. இப்படி சொல்வது நியாயம் தானா என்பதை எதிர்க்கட்சிகள் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே சொல்லிவிடுவதால் உடனே உண்மையாகி விடாது; இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு அல்லது இன்னொரு நாளைக்கு உண்மை தெரிந்து விடுகிறது. காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் மந்திரி சபை என்று மட்டும் நினைத்துக்கொண்டு எதைவேண்டுமென்றாலும் இங்கு சொல்லலாம், ஆனால் வெளியில் இருக்கின்றவர்கள், ஊர்களில் இருக்கின்றவர்கள் எது உண்மை என்பதை நன்றாக உணர்வார்கள். அந்த ஊரிலேயே போய் ஒரு கருத்தை சொன்னாலும் அங்குள்ள மக்களுக்கு உண்மை எது என்பது நன்றாகத் தெரிந்து விடுகிறது. ஆகவே இந்த விதமாக சொல்லிக் கொண்டிருப்பதில் எந்த விதமான பயனும் இல்லை, அவை எல்லாம் பயனற்றது என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் அவர்கள், 'இந்த நில ஆர்ஜிதம் நடைபெற்றது 1960-ல், தேர்தல் நடந்தது 1962-ல், ஆகவே இது சம்பந்தமாக சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டு தவறு என்று சொல்கிறார்கள். தேர்தல் 1962-ல் மட்டுமல்ல, 1957-லும் நடந்தது, முதலமைச்சர் அவர்கள் அதே தொகுதியில் நின்று தான் வெற்றிபெற்று வந்தார்கள் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். நிலத்தின் சொந்தக்காரர் நாயுடு, அரிஜன் ஒருவருக்கு விற்றிருக்கிறார், அதற்கு முன்பே ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பினாமி டிரான்ஸாக்ஷன் நடந்திருப்பதை ஒப்புக்கொள்கிறார்கள். இதே மாதிரி நில உச்சவரம்பு சட்டத்தை அமல் செய்வதிலும், பல பினாமி டிரான்ஸாக்ஷன்கள் நடந்திருக்கின்றன. அவைகளில் எல்லாம் இங்கே காட்டிய விறுவிறுப்பும் வேகமும் ஏன் காட்டப்படவில்லை என்பதை கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பினாமி டிரான்ஸாக்ஷன் எத்தனையோ இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் இப்போது பதில் சொல்ல முடியாது. இதைப்பற்றி சொல்லப்பட்டது; அதனால் அதற்குப் பதில் சொன்னேன்.

பொதுவாக பல கருத்துக்கள் கனம் உறுப்பினர்களால் சொல்லப்பட்டன. கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களாலும் சொல்லப்பட்டது. கனம் கோசல்ராம் அவர்கள் சொன்ன கருத்தை கனம் ஆர். வி. சுவாமிநாதன் அவர்களும் சொன்னார்கள் என்று நம்புகிறேன். கனம் கோசல்ராம் அவர்கள் குறிப்பிட்டது, கேள்வி நேரத்தில் எல்லா இலாகா சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளும் இங்கே வந்து உட்கார வேண்டும் என்று சொன்னார்கள். அது முடியாத காரியம். இங்கே கேட்கப்படுகின்ற கேள்விகள், அதற்குரிய விடைகள், கேட்கப்படுகின்ற உப கேள்விகள், விடைகள் எல்லாம் அன்றைக்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே இங்கே வந்து உட்கார்ந்திருந்து கவனிக்கவேண்டும் என்பதில்லை. அவ்விதம் நாம் எதிர்பார்க்கவும் முடியாது. இதைப்பற்றி யாரும் கவலைப்பட்டுக்கொள்ள வேண்டிய தேவையில்லை. கேள்விகள், உப கேள்விகள், பதில்கள், இவைகள் எல்லாம்

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் போய்விடுகின்றன. அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவற்றை அதிகாரிகள் அவ்வப்போது எடுத்துக்கொள்கிறார்கள். கனம் சுவாமிநாதன் அவர்கள் சொல்லும்போது, அதிகாரிகளிடமிருந்து தங்களுக்குக் கடிதம் ஒன்றும் சரியாக வருவதில்லை என்று சொன்னார்கள். கடிதம் அனுப்புவது என்று சொன்னால், ஏதாவது விளக்கம் கொடுக்கவேண்டும் என்று இருந்தால் பதில் தெரிவிப்பார்கள். அது அவசியமில்லை என்று தெரியுமானால் பதில் எழுதவேண்டிய அவசியமில்லை. இதற்குரிய விளக்கம் வேறுவிதத்தில் தெரிந்து விடுகிறது என்றால் எதற்காக பதில் எழுத வேண்டும்? ஆகவே அதிகாரிகள் சரியானபடி பதில் கடிதம் எழுதுவதில்லை என்று வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. எனக்கு நன்றாகத் தெரியும், அதிகாரிகள் என்னைச் சந்திக்கும்போது அவர்களே சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதிலிருந்து இந்த மன்றத்தில் நடைபெறுகின்ற விவாதங்களைப்பற்றி, கேள்விகளைப் பற்றி எந்த அளவுக்கு அவர்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அது மட்டுமல்ல; அதைக் கவனித்துக் கொள்கிற விதத்தில், எங்களுடைய கவனத்திற்கும் வந்தது என்று அவர்கள் சொல்கிறார்கள். இதிலிருந்து இங்கு நடைபெறுகின்ற விவாதங்களைப்பற்றி அவர்கள் பொறுப்போடு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கனம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, கனம் உறுப்பினர்கள் இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் வெளியீட்டுக் கழகம் வெளியிடும் புத்தகங்களின் விலை அதிகமாக இருக்கிறது என்று புலவர் கோவிந்தன் அவர்கள் கூறினார்கள். அப்படி விலை அதிகமாக இருப்பதாக நான் நினைக்கவில்லை. எவ்வளவு செலவு ஆகிறது என்று பார்த்துத்தான் அதற்குத் தகுந்தபடி போடுகிறார்கள். கட்டுபடி ஆகும் விலையாகப் போடவேண்டுமென்று தான் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். . . . . .

புலவர் கா. கோவிந்தன்: விலை அதிகம் என்று குற்றச் சாட்டு அல்ல. விலை அதிகமாக்கப்படுகிறது. காஸ்ட் ஆஃப் ப்ரொடக்ஷனை அதிகப்படுத்துகிறார்கள். ஃபாரத்திற்கு 35 ரூபாய் வீதம் வெளியில் அடிக்கிறார்கள் என்றால் இங்கே 55 ரூபாய் போடுகிறார்கள். ப்ரூஃப் பார்க்க 5 ரூபாய் வெளியில் இருக்கிறது என்றால் இங்கே 15 ரூபாய் ஆக்குகிறார்கள். உண்மையிலேயே கொடுக்கிறார்களா என்பது வேறு விஷயம். அதிகமாகப் போட்டு அந்த அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது என்று தான் சொன்னேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் உறுப்பினர் அவர்கள் வேண்டிய தகவலைப் பெற்று, அந்தத் தகவலை வைத்துக்கொண்டு யோசனை சொன்னால் அரசாங்கம் மேலும் பரிசீலனை செய்யலாம்.

கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஒன்று மற்ற உறுப்பினர்கள் கூடக்குறிப்பிட்டார்கள். சில சட்டங்கள், சில மசோதாக்கள் இங்கே வரவில்லை என்பது அது. கவர்னர் அவர்களோ தெரிவித்திருந்தார் என்று குறிப்பிடப்பட்டது. மெட்ராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிஸிபாலிட்டீஸ் ஆக்ட் என்பது நகர மன்றங்களைப் பற்றிய சட்டம். எந்த நகர மன்றத்தலைவரும் வரவில்லை; யாரும் கேட்கவில்லை. கேட்டுச் சலுகை காட்டவேண்டுமென்ற நிமித்தம் இல்லை. இது காம்ப்ரெஹென்ஸிவ் பில். நீண்ட காலம் திருத்தப்படாமல் இருக்கிற சட்டம்; திருத்தப்படவேண்டும் என்று மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. மசோதா தயாராகிவிடும், இந்தக் கூட்டத்திலேயே சமர்ப்பித்து விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. அதைத் தான் கவர்னர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், மேலும் சில கருத்துக்கள் நகர மன்றங்களைப் பொறுத்த மட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் மேலும் ஆராய்ந்து முடிவாக மன்றத்திற்குச் சமர்ப்பிக்கலாம் என்பது கருத்து. ஆகவே தான் இந்தக் கூட்டத்திற்குள்ளே சமர்ப்பிக்க முடியவில்லை. இன்னொரு யோசனை எனக்கு இருக்கிறது. அதை என்னுடைய

சகாக்களோடு கூட கலந்து ஆலோசிக்கவில்லை. சபாநாயகர் அவர்களோடு கூட ஆலோசித்தேன். நாங்கள் மசோதாவைத் தயாரித்திருந்தால் கூட, அதை இங்கே சமர்ப்பித்திருந்தால் கூட, அது இந்தக் கூட்டத்தில் சட்டம் ஆகாது. பெரிய முக்கியமான சட்டமாக இருப்பதால், அவகாசமும் இருப்பதால், அதைச் சபாநாயகர் அனுமதியின் பேரில் பிரசுரித்து, என்ன கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன என்று தெரிந்துகொண்டு சட்ட மன்றத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்ற யோசனை இருக்கிறது.

அதே மாதிரி இன்னொரு சட்டம் குத்தகைதாரர்கள் சட்டம்—காம்ப்ரெஹென்ஸிவ் டெனன்ஸி பில். அதுவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பரிசீலனை முடியவில்லை. அதைக் கூட இந்தக் கூட்டத்திலேயே கொண்டுவரலாம் என்று எதிர்பார்த்தேன்; ஆனால் முடியவில்லை. இன்னும் கொஞ்சம் அவகாசம் வேண்டியிருக்கிறது. தயாரிக்கப்பட்டவுடன் பிரசுரித்து, மற்றவர்களுடைய கருத்தைக் கேட்டு செய்யலாமா என்ற எண்ணம் இருக்கிறது. அதைச் சபாநாயகர் அவர்களோடு கலந்து செய்யலாம் என்று நினைக்கிறேன்.

முன்பே கூறினேன்; இப்போது அக்கிரமமாகச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு குத்தகைதாரர்களை அப்புறப்படுத்துவார்கள் என்றால், இதற்கு விதிகள் இருக்கின்றன; அமைப்பு இருக்கிறது; யந்திரம் இருக்கிறது; அவர்கள் கவனிக்க வேண்டும். ஆனால் அதற்கு மேலும் விமோசனம் இல்லை; சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்றால் மாற்றி அமைப்பதற்கு வேண்டுமானால் அந்தச் சட்டத்தையும் கொண்டுவரும் என்று கூறினேன். அது அரசாங்கத்தின் கவனத்தில் தொடர்ந்து இருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் இந்தப் பஞ்சப்படியைப்பற்றி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு சர்க்கார் ஊழியர்கள் பஞ்சப்படி பற்றி இன்று தெரிவிப்பதாகச் சொன்னேன். அதை முதலில் தெரிவித்திருக்கலாம், முதலில் தெரிவித்திருந்தால் நாங்கள் எங்கள் கருத்துக்களைச் சொல்லலாம், குற்றம் சாட்டலாம், குறை சொல்லலாம், அதைத் தவிர்ப்பதற்காகத்தான் நான் கடைசியிலே சொல்ல இருக்கிறேன் என்று சொன்னார்கள். அடுத்தபடியாக கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் அவர்கள் இன்றைக்கு இல்லை என்று சொல்லிவிடுகிறேனே, பத்திரிகையில் பார் என்று சொல்லிவிடுவேனே என்று கூறினார்கள்; அது அவர்கள் கவலை. அவர்களுக்கு தூரதிருஷ்டி; அப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யலாம் என்று கூறினார்கள். ஆனால் ஒன்று. அதாவது முதலிலேயே இதைத் தெரிவித்தால் மன்ற உறுப்பினர்கள் அதைப் பற்றி குறை கூறுவார்கள் என்று நான் நினைக்க இடம் இல்லை. அன்று என்னுடைய விடையிலே கூட, தெரிவிக்கப்போகிறேன் என்று கூறவில்லை. இன்றைக்குத் தெரிவிக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன் என்று தான் சொன்னேன். உறுதியாகக்கூட சொல்லவில்லை. யோசித்து இன்றைக்குச் சொல்லாவிடில் பின்னால் கூடச் சொல்லலாம். உறுதியாகச் சொல்லவில்லை. யோசிக்கிறேன் என்று தான் சொன்னேன். அன்றைக்குச் சொன்னேனே அதை வைத்துக் கொண்டு, ஜுலையில் இருந்து கொடுக்கவேண்டும். டிசம்பரில் இருந்து கொடுக்கவேண்டும், அதிகமாகக் கொடுக்க வேண்டும், ஸிட்டி அலவன்ஸ் கொடுக்கவேண்டும், சொல்லுவதைக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது அதற்கு மேல் போகவேண்டுமே என்று எதிர்பார்த்து அதிகமாகக் கேட்டு வைக்கவேண்டும், அப்போது கொடுக்கவில்லை என்று சொல்லலாம் என்று இப்போதே பேசும்போது, எனக்குத் தெரியாதா? இதை நான் எதிர்பார்த்திருக்க முடியாதா? அதைத்தான் எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இதெல்லாம் எதிர்பாராதது அல்ல. நான் பேசும்போது சொல்லலாம் என்று நினைத்தேன். சொல்லுவதை முதலில் சொன்னால் என்ன என்று

[திரு. எம். பக்தவத்சலம்] [29th March 1966

கேட்கலாம். அப்போது நிமித்தம் இல்லை. ஆரம்பத்தில் ஸ்பீச் பண்ணியிருந்தால் கூடச் சொல்லுவது சரியாக இருக்கும். இப்போது சொல்லுகிறேன் என்றால் வேண்டுமென்று குற்றம் கூறுவதைத் தவிர்ப்பதற்காகச் சொல்லுகிறேன் என்று சொல்லுவது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன். நானும், முடிவு செய்திருப்பதைச் சொல்லுகிறேன். அதற்கு மேல் என்ன சொன்னால் என்ன? லிட்டி அலவென்ஸ் கொடுத்தால் என்ன, சம்பளத்தில் இணைத்தால் என்ன அதற்கும் மேல் குறை சொல்ல முடியாதா ? அது எனக்குத் தெரியாதா ? எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள் தேர்தல் எப்போது வரப் போகிறது, இங்கு உட்கார வேண்டுமே என்ற ஆசையில், இதனால் நான்கு ஓட்டுகள் வருமா என்று நினைக்கலாம். ஆனால் மக்கள் ஏமாற மாட்டார்கள். எப்போது கொடுத்தாலும் சொல்லப் போகிறார்கள். ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்த்து நிர்ணயம் செய்வது இல்லை. நம் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன செய்யலாம், எப்படிச் செய்வது என்று பார்த்து நிர்ணயம் செய்கிறோம். பட்ஜெட்டிலேயே போட்டிருக்க முடியாதா? . பட்ஜெட்டிலே போடுவது என்றால் நிலைமையைப் பார்த்துத்தானே போட வேண்டும் ? எட்டிலே போட்டுவிட முடியுமா ? பட்ஜெட் தயாரித்திருக்கிறோம். திட்டம் வேறு இருக்கிறது. செலவு ஆகிறது. செலவு ஆகிறதே, எப்படிச் சரிக்கட்டுவது, எப்படி முடியும் என்று பார்க்க வேண்டியிருக்கிறது. வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போதே சொன்னேன். அந்த அளவில் பார்க்கிறோம். குறை சொல்வது என்றால் சொல்லிக் கொண்டே இருக்கலாம். சர்க்கார் ஊழியர்களைப் பொறுத்தவரையில் இப்போது உள்ள நிலையில் என்ன எதிர் பார்க்க முடியும் என்று அவர்களுக்குத் தெரியும். ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தேர்தலுக்கு முன்னால் அக்டோபரிலாவது கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார்கள். அவ்வளவு தூரம் போகாது என்று சொன்னேன் . . . (குறுக்கீடு) . . . . 2 மணிக்கு மேல்தான் சொல்ல வேண்டும் . . . . (சிரிப்பு) (குறுக்கீடு) . . . . . 3 மணிக்குப் போகாது. ஏன் என்றால் 3 மணிக்கு ராகு காலம் . . . . . (சிரிப்பு).

பிற்போக்குப் பிராந்தியத்தைப் பற்றி கனம் துணைத் தலைவர் அவர்கள் கூறினார்கள். கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்களும் சொன்னார்கள். இன்று காலையில் கூட விளக்கி இருக்கிறேன். ஒன்று கூற விரும்புகிறேன். உறுதியாகக் கூற விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து வரும் பணத்தில் ஒரு பைசா கூட விட்டு விடுவதில்லை. எவ்வளவு கொடுத்தாலும் திட்டத்தின் கீழ் தான் கொடுக்கிறார்கள். 2½ கோடி ரூபாய்க்கு மேலேயே திட்டம் போட்டிருக்கிறோம். அதைப் பெறலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. திட்டங்களுக்கு என்ன கிடைக்கும் என்று சொன்னார்களோ அதற்கு மேலேயே திட்டங்களைப் போட்டு 2½ கோடி ரூபாய்க்கு மேலே பெறலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். அவர்களும் ஒருவாறு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பிற்போக்கு பகுதிகள் பற்றி பாராளுமன்றத்தில் கேள்விப் கேட்டதற்கு பதில் சொன்னதைக் கொண்டு கிடைக்கக் கூடியதை விட்டுவிட்டோம் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

மருத்துவ நிலையங்களைப் பற்றிச் சொன்னார்கள். ரூபாய் 100-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கும் ஏன் இலவசமாக மருத்துவ நிலையங்களில் சிகிச்சை அளிக்கக் கூடாது என்று கேட்டார்கள். நல்லதுதான். எல்லோருக்கும் அந்த மாதிரி சலுகை கொடுக்கலாம். ஹெல்த் இன்ஷூரன்ஸ் இருக்கிறது. தொழிலாளர்கள் பணம் கொடுத்துத்தான் வைத்தியம் செய்து கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு நல்ல ஆஸ்பத்திரிகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். நல்ல மருந்துகள் கொடுக்கிறோம். அவர்களும் சம்பளத்தில் கொஞ்சம் பணம் கொடுக்கிறார்கள். அதுதான் எம்ப்ளாயிஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ். திட்டம் எல்லோரையும் இலவசமாக ஆஸ்பத்திரிகளில் அனு

29th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

மதித்தால், பிறகு ஆஸ்பத்திரியில் இடமே இருக்காது. ரூபாய் 100-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கும் ஆஸ்பத்திரியில் இலவசமாக இடம் கொடுக்க வேண்டும் என்றால், நன்றாகத்தான் இருக்கும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை ஆனால் அந்த ரூபாய் 100-க்கும் கீழே வருமானம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். கொஞ்சம் வசதியுள்ளவர்கள் டாக்டரை வீட்டிற்கு அழைத்துக் கொண்டுவந்து கூடப் பார்த்துக்கொள்ளலாம். கொஞ்சம் கூட வசதியே இல்லாதவர்களை, ஆஸ்பத்திரியில் இடமில்லை என்று வெளியே எப்படி அனுப்புவது? இதுதான் அரசாங்கத்திற்கு இருக்கிற ஒரு சங்கடம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வரி பாக்கி பற்றிக் கூறினார்கள். இது பற்றி நான் முன்னமே தெரிவித்திருக்கிறேன். இப்பொழுது பருவ மழை தவறி விட்டதினால் எவ்வளவு தூரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு எத்தகைய நிவாரணம் அளிப்பது என்பதை நாங்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய உத்தரவுகளையும் பிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். அதெல்லாம் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் பாதிக்கப்படுவதற்கு இடம் கொடுக்காமல் எப்படி வரி வசூலிப்பது, எந்த அளவுக்கு வரி வசூலிப்பது, அது 25 சத விகிதம் ஸர்சார்ஜாக இருந்தாலும்சரி—சர்சார்ஜைப்பற்றிக் குறிப்பிட்டார்கள் திரு. கலியாணசுந்தரம் அவர்கள்—வாடர் செஸ்ஸாக இருந்தாலும் சரி, இன்கிரீஸ்டு வாடர் செஸ்ஸாக இருந்தாலும் சரி, அயன் வரியாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும், விளைச்சல் இல்லை, போதிய விளைச்சல் இல்லை, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற நிலையில், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும். அதிகப்படி வரியாக இருந்தாலும் சரி, அல்லது ஏற்கனவே கொடுக்கக்கூடிய வரியாக இருந்தாலும் சரி, எந்த விவசாயியும் சிறிதும் பாதிக்கப்படுவதற்கு இடம் கொடுக்க மாட்டோம். இது தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாலைகளைப் பற்றிக் கூறினார்கள். 'பஞ்சாலை நிர்வாகிகள் வேண்டுமென்றே தவறுகள் செய்கிறார்கள், ஒரு சிலர்தான், எல்லோரையும் சொல்லவில்லை' என்று சொன்னார்கள். இருந்தாலும் கூட, இன்றைக்கு ஒரு சுமூகமான நிலையை நாம் நாட வேண்டும். சுமூகமான நிலையை ஏற்படுத்தி, பாஞ்சாலைகளை ஓடும்படிச் செய்து, வேலையில்லாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்படி செய்ய வேண்டும். அந்த வகையில் இரு தரப்பினர்களோடும் கலந்து பேசினோம், நானும் தொழில் அமைச்சர் அவர்களும், நேற்று முன்தினம் கோவையில் பேசினோம். நேற்று மறுபடியும் லேபர் கமிஷனர் அவர்களை அங்கே போகச் சொல்லியிருக்கிறேன். அவர்களை வைத்துக்கொண்டு அவர்களிடம் பேசி என்ன வகையிலே எப்படி அவர்களிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்தி மூடப்பட்டிருக்கிற மில்களை எப்படி ஓடும்படிச் செய்வது, எப்படி மேலும் அந்த மில்கள் வேலை செய்யும்படி செய்வது என்று அந்த வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அரசாங்கம் என்ன செய்யக்கூடும், என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யெல்லாம் கவனம் செலுத்தும் வகையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை நான் கனம் உறுப்பினர்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

அரிசியைப்பற்றிச் சொன்னார்கள். கோவை நகரத்தில் ஸ்டாசுடரி ரேஷன் முறை இருக்கிறது. அரிசி மட்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நேற்று முன்தினம் நான் அங்கு இருந்தபொழுது கலெக்டர் இடம் சொன்னேன். அவர்கள் 20, 25 விதமான சாம்பிளைக் கொண்டுவந்தார்கள். சில பெண்மணிகளும் அங்கு இருந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு யாரும் வரவில்லை. இங்கு இருந்து விட்டார்கள். அந்த அரிசியில் ஏதாவது மட்டமாக இருக்கிறதா என்று அந்தப் பெண்மணிகளைக் கேட்டேன். அவர்களும் அரிசி சாம்பிளை ஒவ்வொன்றாகப் பார்த்தார்கள். 'அரிசியில் ஒன்றும் தவறு இல்லை' என்று கூறினார்கள். மட்டமான அரிசியாக இருந்தால், உடனே அதைத் தவிர்க்கிறோம், இதில் தொடர்ந்து கவனம்

செலுத்தப்பட்டு வருகிறது. எப்பொழுதும் மட்டமான அரிசி கொடுக்கிறார்கள் என்று கூறுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றபடி இப்பொழுது டியர்னெஸ் அலவன்ஸைப்பற்றி நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், பஞ்சப்படி 'கொடுப்பதில் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கு, மீனியல்ஸ், லாஸ்டு கிரேடு உத்தியோகஸ்தர்கள் விஷயமாக ஏதோ நாங்கள் பாகுபாடு செய்திருக்கிறோம், அவர்களை இதில் விலக்கிவிடுவோம் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி இல்லை. எல்லோருக்கும் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது, ஸ்தல ஸ்தாபன ஊழியர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, இந்த அரசாங்கம் இதுவரையில் அனுசரித்து வருகிற கொள்கைக்கு ஏற்றவாறு கொடுக்கப்படுகிறது. நான் அந்த விவரங்களை ஆங்கிலத்திலே குறிப்பிடுகிறேன். அந்த வகையிலே நாம் பஞ்சப்படி உயர்த்திக்கொடுப்பதாக முடிவு செய்திருக்கிறோம், ஆனால் பஞ்சப்படி உயர்த்திக் கொடுப்பது என்றால், எப்பொழுதிலிருந்து கொடுப்பது என்ற பிரச்னை வருகிறது. டிசம்பரிலிருந்து கொடுக்கலாம் என்று சொல்லலாம். அக்டோபரிலிருந்து கொடுத்தால் கூடப் போதும் என்று சொல்லலாம். எப்பொழுதிலிருந்து கொடுப்பது என்பது இந்த அரசாங்கத்தின் நிதிநிலையைப் பொருத்தது. நிதிநிலை அனுமதித்திருந்தால் வரவு செலவுத் திட்டத்திலேயே இவைபற்றி தெரிவித்திருப்போம். நிதிநிலை இன்னும் அனுமதிக்கவில்லை. இருந்தாலும், இந்த சட்டமன்றம் நடக்கிறபொழுது நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதைத் தெரிவிப்பது நமது கடமையும் பொறுப்புமாகும். அந்த வகையிலே நான் இதை இன்றைக்குச் சொல்லுகிறேனே தவிர, கனம் உறுப்பினர்கள் யாரும் இதை "ஏதோ ப்ரீமெசூர் பப்ளிகேஷன்", என்று தவறுதலாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். இப்பொழுது இதைப் படிக்கிறேன்.

In my budget speech in this House on 26th February 1966, I have already stated that the State Government was examining the question of increasing the rates of dearness allowance admissible to their employees so as to bring them on level with those applicable to the Central Government employees. The hon. Members will have noticed that Government's ways and means position will continue to be difficult next year. Any decision on dearness allowance should therefore be such as not to upset our delicately balanced overall budgetary position. The Government have therefore decided that an increase in rates of dearness allowance is unavoidable. It will be given effect from the pay for June due on 1st July 1966. We do hope some improvement in resources position by then.

The revised rates of dearness allowance will be as follows :—

Pay Groups.	Dearness allowance.
Rs.	Rs.
up to 89	38
90—149	58
180—209	76
210—399	93
400—1,200	100
	with marginal adjustments up to Rs. 1,300.

With this revision, the rates of dearness allowance of employees of State Government up to Rs. 1,200 will be on par with those of Government of India and in the pay range Rs. 90--109 in fact slightly better. Following past practice, the revised rates of dearness allowance will apply also to teachers and employees of local bodies.

மற்றொன்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். (திரு அ. பெ. தர்மலிங்கம்: லோஸ்ட் கிரேடு உத்தியோகஸ்தர்களைப் பற்றி என்ன ஆயிற்று?) "அப்டு" ரூபாய் 89 என்றால் லோஸ்ட் கிரேடு உத்தியோகஸ்தர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்ததுதான். யாரையும் விலக்கவில்லை.

விற்பனை வரி விஷயத்திலே சில முடிவுகளை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அதையும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒன்று எக்ஸைஸ் வரி இருக்கிறது. இந்த எக்ஸைஸ் வரிக்கு மேலே ஸேல்ஸ் டாக்ஸ் போடுவதில்லை. மற்ற மாநிலங்களில் போடுகிறார்கள். மற்ற மாநிலங்களில் போடுகிறபடி நாமும் போடுவதுதான்முறை என்று நாம் உணர்ந்து, அவ்வாறு ஒரு முடிவு செய்திருக்கிறோம். அதை நான் இப்பொழுது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதில் ஒரு மாறுதல் இருக்கிறது, விற்பனை வரி விகிதத்தில்.

Under the Madras General Sales Tax Rules, 1959, excise duty paid by a dealer to the Central Government is excluded from his turnover for purpose of levy of Sales Tax. The adjoining Andhra State excise duty has all along been included in the turnover for purpose of Sales Tax. The Government of Kerala have since decided to adopt the procedure followed in Andhra Pradesh and the Government of Mysore are also following suit. Excise duty is already being included in turnover for purpose of levy of Central Sales Tax. It is considered preferable to follow the same procedure in respect of both the Acts. Also Government will be falling in line with the procedure being followed in the three neighbouring States. The Government have therefore decided to delete the existing provision providing for the deduction of the excise duty from the taxable turnover.

The incidence of the inclusion of excise duty in the turnover for purpose of levy of local sales tax on the goods manufactured in the cottage industries has been considered by the Government taking into account the rate of excise duty payable on them. As a measure of relief to certain goods where such inclusion will result in a considerable burden, the Government have decided that hand-made soaps, hand-made paper and hand-made matches may be exempted from local sales tax. In respect of matches other than hand-made matches the Sales Tax will be reduced to one per cent. Under the provisions of the Central Sales Tax Act the same concessions will be available in respect of inter-State transactions in these commodities. [12-00 p.m.

மற்றொரு முடிவு எடுத்திருக்கிறோம், விற்பனை வரி விஷயத்திலே. அதை உறுப்பினர்கள் வரவேற்பார்கள். அதாவது உணவுப் பண்டங்கள் மீது விற்பனை வரியை எடுக்க வேண்டும் என்று தமிழ் நாட்டில் இந்த மன்றத்திலேயும், வெளியிலேயும் கோரப்பட்டது. அதிலே ஒரு

முடிவு எடுத்திருக்கிறோம். சாதாரணமாக நாம் சாப்பிடுகிற தானியங்கள் மீதுள்ள, அரிசி மற்றும் புஞ்சை உணவு தானியங்கள், இன்றும் பால்—பாலையும் சேர்த்திருக்கிறோம்—இவற்றின் மீது உள்ள வரியை எடுக்க வேண்டும் என்று ரொம்ப நாளாகக் கேட்கப்பட்டது.

'There has been considerable demand both inside and outside the House for the abolition of the Sales Tax on foodgrains. The Sales Tax collection on foodgrains has been on the increase and during 1964–65 a sum of Rs. 89 lakhs was realised. The Government have however decided to forego this revenue and exempt all foodgrains except wheat and wheat products from Sales Tax.'

(எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து சிரிப்பு) கோதுமையைப்பற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள். அது அங்கேயிருந்து வருகிறது. (சிரிப்பு).

"The Government have decided to exempt milk also from Sales Tax. Pulses and grams will continue to be subjected to multi-point tax."

இது ஒரு முடிவு.

மற்றொன்றும் நான் கூற விரும்புகிறேன். சாதாரணமாக அங்கத்தினர்கள் அதை வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். முன்பு ஒரு நாள் நான் அபிஷல் நாளன்றோ, அதற்கு முன்னதாகவோ, இந்த எகானமி கமிட்டி அறிக்கையைச் சமர்ப்பிக்கப் பார்க்கிறேன். என்று, சொன்னேன். இப்பொழுது அதை வழங்குகிறேன். பரிசீலனை செய்து என்னென்ன முடிவுகள் என்பதை கனம் அங்கத்தினர்கள் அதிலே பார்ப்பார்கள். இதைப் பற்றி வேண்டுமானால் விவாதிக்கலாம். விளக்க அவகாசமும் இருக்கும் தேர்தலுக்கு முன்னால் கூடப் போகிறோம். அப்பொழுது விளக்கம் கொடுக்கலாம் அந்த முடிவைத் தெரிவிக்க வேண்டும் என்று இந்த அறிக்கையைச்சமர்ப்பிக்கிறேன். இந்த முடிவெப்படி ஒரு கோடி ஐந்து லட்ச ரூபாய் மிச்சம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

"**Savings anticipated** on account **of the recommendations made so far by the committee**" என்று 14-வது பக்கத்திலே இருக்கிறது, உறுப்பினர்கள் கவனித்திருப்பார்கள். இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

இன்னொரு முடிவும் எடுத்திருக்கிறோம். முன்பு ஒரு நாள், நான்—அபிஷல் டேயிலே, விவாதம் வந்தபோது, திருவள்ளுவர் நாள் என்று விடுமுறை விடவேண்டும் என்று கேட்கப்பட்டது. ஒருவரைப் பற்றிக் கொண்டாடுவது என்றால், விடுமுறை வேண்டும் என்று கேட்கக் கூடாது. இப்பொழுது விடுமுறைகள் அதிகமாக இருக்கின்றன. அவ்வளவு விடுமுறைகளோடு திருவள்ளுவர் நாள் என்று இன்னொரு விடுமுறை ஒதுக்கப் படுமேயானால், அது சரியாக இருக்காது. ஆகவே, ஒரு நாளை திருவள்ளுவர் நாள் என்று கொடுக்க வேண்டும் என்றால், நான்—கெஜடட் ஆபீசர்களும் ஒத்துக் கொண்டால், இரண்டாவது சனிக்கிழமையை விட்டு விட்டு, அதற்கு பதிலாக இந்த விடுமுறைக்கு ஒத்துக்கொண்டால், அதைத் திருவள்ளுவர் தினம் என்று எல்லோரும் மகிழ்ச்சியோடு கொண்டாடலாம் என்று கருதினோம். நான் கெஜடட் ஆபீசர்களைக் கலந்து ஆலோசித்து, அவர்களும் மனமுவந்து அதை ஏற்றுக்கொண்டார்கள். இது சம்மந்தமான உத்தரவும் மார்ச் 18-ம் தேதி பிறப்பிக்கப்பட்டது. அதாவது,

"The question of setting apart a particular day as 'Thiruvalluvar Day' and declaring it as a Government holiday in lieu of a Second Saturday has been engaging the attention of Government for some time. After taking into consideration the

views expressed by the Tamil Nad Non-Gazetted Government Officers' Union and the Tamil Nad Secretariat Association on the subject, it has been decided :—

(i) that the day on which Thiruvalluvar attained Mukthi (Vaikasi Anusham) shall be declared a Government holiday in lieu of the Government holiday on the 2nd Saturday of the same month, and

(ii) that during 1966, Thursday, the 2nd June 1966 (the day on which Thiruvalluvar attained Mukthi) will be a Government holiday in lieu of the holiday on the 11th June 1966 (Second Saturday)."

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நட்சத்திரம் வருஷா வருஷம் மாறும், ஒரே தேதியாக இருக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விவாதத்தின் போதே, நாளைப் பற்றி விவாதம் வேண்டாம், ஏதாவது ஒரு நாள் இருக்கட்டும் என்று குறிப்பிட்டேன். எந்த நாளாக இருந்தாலும், அது ஜூன் மாதத்தில் வரலாம். ஜூலை மாதத்தில் வரலாம். மே மாதத்திலும் வரலாம். அது எப்பொழுது வந்தாலும் அந்த மாத ஸெகண்ட் ஸாடர்டேக்குப் பதிலாக அந்த நாளைக் கொண்டாடலாம். (குறுக்கீடு) அது அந்த அந்த வருஷம தெரிவிக்கப்படும்.

அடுத்து, பிராவிடண்ட் பண்ட் கட்டாயமாக 7 சத விகிதம் என்று குறிப்பிட்டார்கள், அது சரியல்ல, 5 சத விகிதம்தான். இரண்டையும் சேர்த்துக் கொடுக்க முடியாது, என்பதை முன்னமேயே தெரிவித்திருக்கிறேன்.

இன்னும் பல குறைகளை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தங்கள் தொகுதி சம்பந்தமாகக் குறைகள் சொன்னார்கள், இதெல்லாம் சர்க்காரின் கவனத்தில் தொடர்ந்து இருக்கும், வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று கூறி முடிக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சருடைய கடைசி அறிவிப்பை வரவேற்று, அந்த நான் அபிஷல் ரெசலூஷனைக் கொண்டு வந்தவன் நான் என்கிற முறையில், வள்ளுவருக்கு ஒரு நாள் விடுமுறை என்று கொண்டு வந்ததற்காக தமிழ் நாட்டின் சார்பாக, தமிழ் மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் புலவர் கோவிந்தன் என்பதைக் குறிப்பிட மறந்துவிட்டேன் மன்னிக்க வேண்டும். அதை இப்பொழுது ஊர்ஜிதப்படுத்துகிறேன். எனக்குக் கொஞ்சம் கவலையாக இருந்தது, இந்த நாளை எப்படி ஏற்றுக் கொள்வார்களோ என்று. புலவரே ஏற்றுக் கொண்டபிறகு, அது எல்லோரும் ஏற்றுக்கொண்டது போலத்தான் என்று எடுத்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர்.. .. ... — — .. ..

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நானே சொல்லுகிறேன். கனம் உறுப்பினர் திரு. கோசல்ராம் ரொம்ப ஆவேசத்தோடு பேசியிருக்கிறார்கள், நீரா விஷயம் பற்றி, திருநெல்வேலியில் அவர்களுக்குக் கவலையில்லை. மற்ற இடங்களில் பெறுவதற்கு வழி காட்ட வேண்டும். அதைப்பற்றி பரிசீலனை செய்து, நானும் கனம் உள் துறை அமைச்சரும், கவனித்து, அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றப் பார்க்கிறேன் என்று சொல்லி முடிக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Appropriation Bill, 1966 (L.A. Bill No. 5 of 1966) be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1, The Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Appropriation Bill, 1966 (L.A. Bill No. 5 of 1966) be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS APPROPRIATION (No. 2) BILL, 1966. (L.A. BILL No. 7 OF 1966).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Appropriation (No. 2) Bill, 1966 * (L.A. Bill No. 7 of 1966) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1, The Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Appropriation (No. 2) Bill, 1966 (L.A. Bill No. 7 of 1966) be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

* Published in the *Fort St. George Gazette Extraordinary*, dated 29th March 1966.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 179. *Notification issued with G.O. P. No. 229, Revenue, dated the 3rd February 1966 regarding exemption from payment of tax by any dealer under the Madras General Sales Tax Act, 1959 on the sales other than the first sales of Coriander, Ajiwan and Cuminseed, for the period commencing from the 1st of April 1959, and ending with the 31st December 1964. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

* 180 *Notification issued with G.O. Ms. No. 129, Rural Development and Local Administration, dated the 27th January 1966 declaring that the Melapathinettangudi hamlet of Pathinettangudi village in the Melur taluk of Madurai district, to be a Gramdan village for the purposes of the Madras Bhoodhan Yagna Act, 1958. [Laid on the Table of the House under section 28 (3) of the Madras Bhoodhan Yagna Act, 1958 (Madras Act XV of 1958).]*

* 181. *Notification issued with G.O. Ms. No. 30, Agriculture, dated the 5th January 1966, declaring the areas in Dharmapuri and Salem districts specified in the Schedule of the notification to be notified areas for the purpose of preparation and execution of any land improvement scheme, etc. [Laid on the Table of the House under section 44 (3) of the Madras Land Improvement Schemes Act, 1959 (Madras Act 31 of 1959).]*

B. Reports, Notifications and other papers.—*Nil.*

* Laid on the Table of the House on 28th March 1966.

APPENDIX I.

[*Vide* answer to starred question No. 484 at page 317]

Statement showing the suggestions made by the Tamiland Sarvodaya Mandal, Batlagundu, Madurai district and the orders of Government Thereon.

Suggestions. (1)	*Orders of Government.* (2)
Suggestion No. 1— The Government should purchase the lands in Gramdhan villages belonging to absentee landlords, for sale to the Gramasabha and collect the land value in instalments. Pending this, the Government should arrange for lease of the lands by the land owners to the Gramasabha.	Under the existing law it is not possible for the Government to acquire the land from the land owners residing outside the Gramdhan villages merely for the purpose of giving the lands to the villagers of Gramdhan villagers for cultivation. It is also not possible to compel the landowners to lease the lands to a particular tenant or a co-operative society:
Suggestion No. 2— The Government should arrange for lease of mutt lands to the Gramasabha or to the Sarvodaya Co-operative Societies, for long periods, so that the latter may sink capital in digging wells and carrying out other improvements.	Under the existing law the mutts cannot be compelled to lease their lands to the residents of the village only. It is also not possible to compel the mutts to utilise only the local labourers for cultivation purposes.
Suggestion No. 3— The mutts should collect from the cultivators not the statutory fair rent, but a fixed amount according to the taram of the land, similar to the land revenue collected by the Government.	The Government cannot compel the mutts to collect less than the statutory fair rent from the cultivating tenants.
Suggestion No. 4— In villages belonging to mutts, the irrigation tanks are in disrepair, with the results that cultivation suffers. Arrangement should be made for the repairing the tanks.	This is a matter for the mutts to consider with reference to their financial resources. The Sarvodaya Mandal may approach the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department in the matter.
Suggestion No. 5— Intermediaries should be eliminated and cultivation should be done through the Gramasabha.	The Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961, specifically excluds intermediaries. Under the provisions of this Act, public trust lands other than those which are under the personal cultivation of the Trust can be cultivated only by tenant forming Society or cultivating tenants or persons who under take to personally cultivate the lands.
Suggestion No. 6— Kudiyiruppu lands (house-sites) belonging to mutts should be transferred from the mutts to the villagers permanently so as to enable the latter to lay roads, construct houses and schools and provide drinking water facilities.	The question is separately under consideration.
Suggestion No. 7— **The Minor Inams and Inam Estates Abolition Acts should be brought into force immediately.**	**Both the Minor Inams and the Iam Estates Abolition Acts have been brought into force.**

Suggestions. (1)	*Orders of Government.* (2)
Suggestion No. 8— The cultivators are not sufficiently protected from eviction by the Madras Cultivating Tenants Protection Act, 1955. The Act should be amended so as to provide that the cultivating tenants are not evicted for any reason.	Under the Madras Cultivating Tenants Protection Act, 1955 no cultivating tenant can be evicted except on specified valid grounds viz. non-payment of rent, negligence which is destructive of or injurious to the land or the crop thereon, failure to cultivate the land, using the land for a non-agricultural purpose and wilfully denying the title of the landlord to the land. A provision that a cultivating tenant should in no case be evicted, cannot be justified. The Act which was a temporary one, has been placed on a permanent basis by an amending Act called the Madras Cultivating Tenants Protection (Continuance) Act, 1965, published on 21st April 1965. There are similar provisions in the Public Trusts Act regarding public trust lands.
Suggestion No. 9— As the cultivating tenants do not have any documentary evidence to prove that they are cultivating tenants and assert their rights, particulars relating to them should be recorded in the village adangal.	Instructions have been issued by Government for the recording of particulars of cultivating tenants in the village adangal.
Suggestion No. 10— The Fair Rent Act should be enforced properly.	Under the Fair Rent Act, it is open to the cultivating tenants to apply to the rent court for fixation of fair rent, if any land owner demands more than the fair rent from him. There are similar provisions in the Public Trusts Act, regarding public trusts lands.

மதுரை மாவட்டம், வத்தலகுண்டு, தமிழ்நாடு சர்வோதய மண்டல் அனுப்பிய ஆலோசனைகளும், அவ்வாலோசனைகளின் மீது அரசாங்கம் பிறப்பித்த ஆணைகளும் அடங்கிய விவர அறிக்கை.

ஆலோசனைகள். (1)	அரசாங்கம் பிறப்பித்த ஆணைகள். (2)
ஆலோசனை 1.—அயலிட நிலக் கிழார்களுக்குச் சொந்தமானவையும் கிராமதான கிராமங்களில் உள்ள வையுமான நிலங்களைக் கிராம சபைகளுக்கு விற்பனை செய்வதற்காக அரசாங்கம் அவற்றை வாங்கி நிலத்தின் விலையைக் கிராம சபையிடமிருந்து தவணைகளில் வசூலிக்க வேண்டும். இதை நிறைவேற்றும் வரையில் நிலக்கிழார்கள் அவர்களுக்குச் சொந்தமான நிலங்களை கிராம சபைக்கு குத்தகைக்குவிட அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.	நிலங்களைச் சாகுபடி செய்வதற்காக கிராமதான கிராமங்களில் உள்ள கிராம மக்களுக்குக் கொடுப்பதற்காக, கிராமதான கிராமங்களுக்கு வெளியே வசிக்கும் நிலக்கிழார்களிடமிருந்து அக்கிராம நிலத்தை அரசாங்கம் வாங்குவது இப்போதுள்ள சட்டப்படி ஏலாத காரியமாகும். நிலங்களைக் குறிப்பிட்டதொரு குத்தகைக்காரர்களுக்கோ கூட்டுறவுச் சங்கத்துக்கோ குத்தகைக்கு விடுமாறு நிலக்கிழார்களைக் கட்டாயப்படுத்துவதும் இயலாத காரியமாகும்.

ஆலோசனைகள். (1)	அரசாங்கம் பிறப்பித்த ஆணைகள். (2)
ஆலோசனை 2.—கிராம சபை அல்லது சர்வோதய கூட்டுறவுச் சங்கம் கிணறு வெட்டுவதிலும், பிற மேம்பாட்டு வேலைகளிலும் முதலீடு செய்வது சாத்யமாக இருப்பதற்காக, மடத்து நிலங்களைக் கிராம சபை அல்லது சர்வோதயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு விட அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.	தற்போதைய சட்டத்தின்படி, மடங்கள் தங்கள் நிலங்களை அந்த கிராமத்தில் வாழ்வோருக்கு மட்டும் குத்தகைக்கு விட வேண்டும் என்று மடங்களைக் கட்டாயப் படுத்த முடியாது. அதே மாதிரி பயிரிடும் காரியங்களுக்காக உள்ளூர் குடியானவர்களையே பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் மடங்களைக் கட்டாயப் படுத்த முடியாது.
ஆலோசனை 3.—மடங்கள் சாகுபடியாளரிடமிருந்து சட்டப்படிக்கான நியாய வாரத்தை வசூலிக்காமல், அரசாங்கம் வசூலிக்கும் நிலவரிக்கு ஒப்ப நிலத்தின் தரத்தையொட்டி நிலையான தொகை ஒன்றை வசூலிக்க வேண்டும்.	பயிர் செய்யும் குத்தகைதாரரிடமிருந்து சட்டப்படிக்கான நியாய வாரத்திற்குக் குறைந்த குத்தகையை வசூலிக்குமாறு அரசாங்கம் மடங்களைச் கட்டாயப்படுத்த முடியாது.
ஆலோசனை 4.—மடங்களுக்குச் சொந்தமான கிராமங்களில், பாசன ஏரிகள் பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையிலிருக்கின்றன. இதனால் பயிர் விளைவு பாதிக்கப்படுகிறது. ஏரிகளைப் பழுது பார்க்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.	இது மடங்கள், அவற்றின் நிதி நிலையையொட்டி கவனிக்க வேண்டிய விஷயம். சர்வோதய மண்டல் இது குறித்து இந்து அறநிலையத்துறை (நிர்வாகக்) கமிஷனரை அணுகலாம்.
ஆலோசனை 5.—இடைத் தரகர்கள் முறையை எடுத்துவிட்டு, கிராம சபை மூலமாகப் பயிர் விளைவிக்கப் பாடுபட வேண்டும்.	தமிழ்நாடு 1961–ம் ஆண்டு பொது டிரஸ்டு (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டம் இடைத் தரகர்களை எடுத்து விடுவதைப்பற்றிக் குறிப்பாகக் கூறுகிறது. இச் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், டிரஸ்டு நேரடியாக சாகுபடி செய்யும் நிலங்கள் நீங்கலாக, பிற பொது டிரஸ்டு நிலங்கள் குத்தகைக்காரர் பண்ணைச் சங்கத்தினால் மட்டும் அல்லது நிலங்களை நேரடியாக சாகுபடி செய்ய ஒப்புக் கொள்ளும் சாகுபடி குத்தகைக்காரர்கள் அல்லது நபர்களால் மட்டுமே பயிர் விளைவிக்கப்படலாம்.
ஆலோசனை 6.—மடங்களைச் சேர்ந்த வீட்டு மனைகள் நிலையாக கிராம மக்களுக்கு மாற்றப்பட வேண்டும். இப்படிச் செய்தால் சாலைகள் அமைப்பது, வீடுகள் கட்டுவது, பள்ளிகள் கட்டுவது, குடிநீர் வசதிகள் ஏற்படுத்துவது ஆகிய காரியங்களைக் கிராம மக்கள் மேற்கொள்ளுவது சாத்தியமாகும்.	இவ்விஷயம் தனியாகக் கவனிக்கப்பட்டு வருகிறது.

ஆலோசனைகள். (1)	அரசாங்கம் பிறப்பித்த ஆணைகள். (2)
ஆலோசனை 7.—சிறு இனும், இனும் எஸ்டேட்டுகள் எடுத்து விடுதல் சட்டங்களை உடனடியாகச் செயலுக்குக் கொண்டு வரவேண்டும்.	இவ்விரு சட்டங்களும் ஏற்கனவே செயலுக்கு வந்துள்ளன.
ஆலோசனை 8.—சாகுபடிச் செய்பவர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து தமிழ்நாடு 1955-ம் ஆண்டு சாகுபடிக் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் போதிய அளவு பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படாத வகையில் இச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.	தமிழ்நாடு 1955-ம் ஆண்டு சாகுபடி செய்யும் குத்தகைக்காரர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சாகுபடி செய்யும் குத்தகைக்காரர் எவரும் குறிப்பிட்ட சில காரணங்களுக்காக அன்றி மற்றபடி சாதாரணமாக நிலங்களிலிருந்து வெளியேற்றப்படக் கூடாது. அக்காரணங்களாவன. குத்தகை செலுத்தப்படாமலிருத்தல், நிலத்தை அல்லது அதில் வளர்ந்துவரும் பயிரை அழிக்கும் அளவு பாதிக்கும் வகையில் நிலத்தை கவனியாதிருத்தல், நிலத்தில் பயிரிடாதிருத்தல், வேளாண்மை அல்லாத பிற காரியங்களுக்காக நிலத்தைப் பயன்படுத்துதல், நிலச் சொந்தக்காரரின் உரிமையை வேண்டுமென்றே மறுத்தல், எக்காரணத்தினாலும் சாகுபடி செய்யும் குத்தகைக்காரர் நிலத்திலிருந்து வெளியேற்றப்படக் கூடாது என்று விதி செய்வது நியாயமாகாது. முதற்கண் தாற்காலிகமாக கொண்டு வரப்பட்ட மேற்படி சட்டம் தமிழ்நாடு 1965-ம் ஆண்டு சாகுபடி குத்தகைக்காரர் பாதுகாப்பு (நீட்சிச் சட்டம்) சட்டத்தினால் நிலையான சட்டமாக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன திருத்தச் சட்டம் 1965–ம் வருஷம் ஏப்ரல் மாதம் 21–ந் தேதி அன்று வெளியிடப்பட்டது. பொது டிரஸ்டு நலங்கள் குறித்து இதைப்போன்ற விதித்துறைகள் பொது டிரஸ்டுகள் சட்டத்திலும் உள்ளன.
ஆலோசனை 9.—சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் அவர்கள் உரிமையைக் காண்பிக்க எத்தகையதொரு ஆவணமும் கிடையாது. எனவே, அவர்கள் சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் என்பதை காண்பிக்கும் விவரங்கள் கிராம அடங்கலில் பதிவு செய்யப்பட வேண்டும்.	சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்கள் பற்றிய விவரங்களைக் கிராம அடங்கலில் பதிவு செய்யுமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
ஆலோசனை 10.—நியாய வாரச் சட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட வேண்டும்.	நியாய வாரச் சட்டத்தின்கீழ் நியாய வாரத்திற்கு மேற்பட்ட வாரம் கொடுக்கும்படி சாகுபடி செய்யும் குத்தகைக்காரர்களை நிலச் சொந்

[29th March 1966

ஆலோசனைகள்	அரசாங்கம் பிறப்பித்த ஆணைகள்
(1)	(2)
	தககாரர் கேட்டால், சாகுபடி செய்யும் குத்தகைக்காரர் நியாய வாரம் நிச்சயிக்கப்படுவதற்காக நீதி மன்றத்திற்கு மனு செய்து கொள்ளலாம். இதே போன்ற விதித்துறைகள் பொது டிரஸ்டு நிலங்கள் குறித்தும் பொது டிரஸ்டு சட்டத்தில் உள்ளன.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 30th March 1966

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Intensive Agricultural Programme

*10 Q.—SRI K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Home be pleased to state the number of villages brought under the Intensive Agricultural District Programme in Thanjavur district?

கனம் திரு. பூ. கக்கன் : 1965-66 முடிய, 1750 கிராமங்கள் தஞ்சை மாவட்டத் தீவிரச் சாகுபடித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

திரு. கி. இரா. சம்பந்தம் : இந்த அக்ரிகல்சுரல் ஸ்கிமுக்கும் பாக்கேஜ் ஸ்கிமுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பாக்கேஜ் ஸ்கீமிலே கூடுதலான வசதிகள் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக

Technical guidance is provided to all farmers at all stages of farming in respect of agronomy, farm management, plant protection, agricultural engineering and quality seed production.

இதைத்தவிர இதரக் கடன் வசதிகள் குறிப்பாக கூட்டுறவு சொசைட்டி மூலமாக கடன் வசதிகள் இன்னும் சில வசதிகள் கொடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கி. இரா. சம்பந்தம் : அமெரிக்காவிலிருந்து நிதி கொடுக்கப்படுகிறதே அது அக்ரிகல்சுரல் ஸ்கீமுக்குப் பயன் படுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் பாக்கேஜ் ஸ்கீமுக்காகத்தான் ஃபோர்டு பவுண்டேஷனால் கொடுக்கப்படுகிறது. இந்த உதவிகள் விவசாயிகளுக்குக் கிடைக்கின்றன.

[30th March 1966

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : பாக்கி கிராமங்கள் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்? இந்தத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே சொன்னேன் சில உதவிகள் பற்றி. அதாவது, பணவசதி, விதைகள் கொடுப்பது, உரம் கொடுப்பது பெஸ்டிசைட்—பூச்சிக்கொல்லி மருந்து—கொடுப்பது போன்றவைகள் பற்றி. இன்னும், கூட்டுறவு மூலமாக உதவிகள் செய்வது ஃபார்ம் பிளான் தயார் செய்வதற்கு அதைப் பார்த்து என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு வசதிகள் செய்யப்படுகின்றன. இதர கிராமங்கள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஜில்லா பூராவிற்கும் விரைவாகக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இந்தத் திட்டத்தின் கீழ் ஏ.டி.டி. 27 விதையானது நல்ல அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஆனால், கோவாப்ரேடிவ் சொசைடி மூலம் விவசாயிகளுக்கு பணம் கொடுப்பதில், கோவாப்ரேடிவ் சொசைடி சரியாக இயங்காத காரணத்தினால் இந்தத் திட்டத்திற்குப் பணம் கிடைப்பதில்லை. இதனால் இந்தத் திட்டத்தின் பயனைப் பெறமுடியவில்லை. ஆகையால் இந்த நல்ல திட்டத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டு கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : வசதிகள் செய்வது கூட்டுறவு மூலமாகச் செய்வதுதான் நல்லது என்று அரசாங்கம் எண்ணிச் செய்து வருகிறது. கூட்டுறவு முறையில் கொடுத்த உதவியைப் பார்த்தால் நன்மையும் இருக்கிறது. ஒரு சில இடங்களில் நன்மைகள் இல்லாமல் இருந்தால் அதைத் திருத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கூட்டுறவு வாயிலாக இப்போது உதவிகள் கொடுத்துவருகிறார்கள். ஆயிரக்கணக்கான ஃபார்ம் பிளான் திட்டங்கள் கோவாப்ரேடிவ் சென்ட்ரல் பாங்க் அனுப்புகிறார்கள். ஆயிரக்கணக்கான திட்டங்களுக்கு அவர்கள் கொடுக்கமுடிவதில்லை. அது அரசாங்கப் புள்ளிவிவரத்தைப் பார்த்தால் தெரியும். ஒரு பிளாக்கில் 25 வீதம் எடுத்து ஒரு எக்கருக்கு 200 கொடுத்து தீவிரமாக அபிவிருத்தி செய்வதாகத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமாதிரி இந்தத் திட்டம் வெற்றிகாமாக நடைபெறவேண்டுமென்றால் பணத்தை அரசாங்கமே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : உதாரணமாகத் தஞ்சையை எடுத்துக் கொண்டால் தஞ்சையில் கூட்டுறவு சொசைடி இருக்கிறது. கும்பகோணத்திலும் கூட்டுறவு சொசைடி இருக்கிறது. இந்த

30th March 1966]

இரண்டைப் பார்க்கும்போது தஞ்சாவூரில் உள்ள சொசைடி நன்றாக வேலை செய்கிறது. அதைப்பற்றி ஒன்றும் இல்லை. அது மாதிரி இங்கேயும் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : விவசாயிகளுக்கு உரம் கூட்டுறவு சொசைடி மூலமாக கொடுக்கப்படுகிறது. இந்த வருஷம் இம்மாதிரி கிடைப்பது அறிதாக இருக்கும். ஆகையால் இதை விவசாய இலாக்கா மூலமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூட்டுறவு சொசைடி மூலமாகப் பணமோ உரமோ பாக்கேஜ் ஸ்கீமில் கொடுக்கப்பட்டு வருகின்றன. சொசைடி மூலமாகக் கொடுப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ஏ.டி.டி. 27 விதை வேறு மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டதா ? அது நிறைய உற்பத்தியைப் பெருக்குகிறது என்று சொல்லப்படுகிறதே, அதை மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும், அதுவும் டெல்டா பகுதிகளுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரும். ஓரளவு பரீட்சார்த்தமாக முயற்சி செய்து வெற்றி கண்டிருக்கிறோம். இதர மாவட்டங்களுக்கும் படிப்படியாகக் கொண்டு வரலாம்.

வெண்ணெய் தயாரிப்பு

***502 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேர்க்கடலையிலிருந்து வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க திட்டம் பரிசீலிக்கப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ? எங்கெங்கு ?

THE HON. SRI. R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலிருந்து மணிலா பயிர், மணிலா எண்ணை, மணிலா புண்ணாக்கு இவைகளெல்லாம் வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதை விட்டு விட்டு நம்முடைய மணிலா பயிரிலேயிருந்து ஈடபல் கேக்ஸ் உற்பத்திச் செய்வதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் இருந்து ஏராளமாக மணிலாப் பயிர் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று என்னிடத்தில் தகவல் இல்லை. நம்முடைய நாட்டிலே வனஸ்பதி பாக்டரிகள் வந்துவிட்டன. இந்நாட்டு தேவை போக எவ்வளவு தூரம் அன்னிய செலாவணி சம்பாதிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அந்த அளவிற்குத்தான் ஏற்றுமதி செய்யப்படும்.

[30th March 1966

Standard Motor Products of India, Vandalur

*503 *Q.*—SRI V. SANKARAN:
SRI T. P. ALAGAMUTHU:
SRI S. J. RAMASWAMI: } Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that the Standard Motor Products of India Limited, Vandalur, Madras, is hampered in its production with the imminent danger of effecting a lay off of a portion of its labourers due to the inability to secure adequate Foreign Exchange to import its normal quota of foreign components?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes.

திரு. செ. மாதவன்: இந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனி மறுபடியும் உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஒரு திட்டம் போட்டு மத்திய சர்க்காருடைய அனுமதி கேட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா? அப்படியானால் எப்போது உற்பத்தி தொடங்குவார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பிப்ரவரி மாதத்தில் 12½ லட்சம் ரூபாய்க்கு இம்போர்ட் லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு அவர்கள் உற்பத்தியைத் தொடங்கமுடியும். பின்னால் ஏப்ரல் மாதம் வரை 12½ லட்சம் ரூபாய் வரை அனுமதிக்கப்படுகிறது. மேற்கொண்டு அதற்குப் பின்னால் அனுமதி கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. வை. சங்கரன்: நம்முடைய ராஜ்யத்தில் கனரகத் தொழில்கள் நிறைய இல்லாமையினாலே, இதுபோன்று உருக்கு, சில பார்ட்டுகள் கிடைக்காமல் இருக்கின்றன. அவைகள் வெளி நாடுகளில் இருந்துதான் வாங்கவேண்டியிருக்கிறது. ஆகையால், அப்படி வாங்குவதற்கு ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் பூராவும் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் ஒரு வரம்புக்குத்தான் கொடுக்கப்படும். போதிய ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் இல்லாத காரணத்தினால் எல்லோருக்கும் விகிதாசாரப்படி குறைக்கப்படுகிறது.

திரு. வை. சங்கரன்: ஏற்கனவே நம்முடைய ராஜ்யத்திலே திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இருந்து பனை ஈர்க்கு போன்றவை அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. அவற்றை அதிகமாக அனுப்பி ஃபாரின் எக்ஸ்சேஞ்சை அதிகமாக்கலாம் அல்லவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஸ்டாண்டர்டு மோட்டார் பற்றிய கேள்வி இது. பனை ஈர்க்கு பற்றித் தெரியாது.

திரு. செ. மாதவன்: கிடைக்கக்கூடிய கார்களிலேயே ஸ்டாண்டர்டு கார்தான் கொஞ்சம் சுலபமாகக் கிடைக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாகிறது. இதற்கு ஏற்பட்-

30th March 1966]

டிருக்கிற கஷ்டத்தைப் போக்க நம்முடைய அரசாங்கம் அதிக முயற்சி எடுத்து கூடுதலாக ஃபாரின் எக்ஸ்சேஞ்சு கொடுக்க வழி செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நம்முடைய அரசாங்கம் உதவி செய்ய முடியுமானால் எப்போதும் செய்யத் தயங்குவதில்லை. அந்நியச் செலாவணியை நாம் கொடுக்க முடியாது. ஓரளவு இதைப்பற்றியெல்லாம் மத்திய சர்க்காரிடத்தில் சொல்லித்தான் 12½ லட்சம் ரூபாய்க்குப் புதிதாக அந்நியச் செலாவணி கொடுக்கப்பட்டிருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் பலதொழிற் பயிற்சிப் பள்ளி

*504 **கேள்வி.—திரு. எல். ஆனந்தன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

(உ) கள்ளக்குறிச்சி தாலுக்காவில் அதை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) There is a proposal to establish a Polytechnic in Cuddalore.

(*c*) No.

கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சிபுரம்

*505 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சீபுரத்தில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைக்கு கதிர்கள், மெஷினரிகள், நூற்பாலைக் கட்டிடங்கள் ஆகியவைகளுக்கு தனித்தனியே செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) பங்கு மூலதனமாக செலுத்தப்பட்ட (ஷேர் காபிடல்) தொகை எவ்வளவு?

(உ) அரசாங்கத்தால் கடனாக கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

[30th March 1966

(எ) ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு நூல்கள் உற்பத்தியாகும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு ஆலையில் மூலதன அடக்கம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

	(ரூ. லட்சத்தில்)
நிலம்	1.44
கட்டிடங்கள்	13.30
யந்திரங்கள் கதிர்கள் அடக்க விலை உட்பட	44.85
பலவகை உடைமைகள்	2.44
மொத்தம்	62.03

(இ) 31—1—1966 வரை பங்கு மூலதனமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 20.21 லட்சம்.

(உ) அரசாங்கம் கடனுதவி தங்களது நிதியிலிருந்து ஒன்றும் கொடுக்கவில்லை.

(எ) 12,312 கதிர்கள் முழுவதும் மூன்று வேளைகளிலும் இயங்கினால் ஆண்டொன்றுக்கு ரூ. 57 லட்சம் பெறுமானமுள்ள 4,280 கட்டுகள் (bales) கொண்ட பருத்தி நூல் உற்பத்தியாகும்.

விவசாயத்திற்கு இலவச மின்சாரம்

* 506 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

விவசாயத்திற்குப் பயன் படுத்தப்படும் மின்சாரத்திற்கு கட்டணம் வசூலிக்காமல் வழங்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

திரு. செ. மாதவன் : சமீபத்தில் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கும் காரணத்தால் இப்படி விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் சப்சிடி கொடுக்க மத்திய சர்க்கார் தயாராக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திலே நம்முடைய ராஜ்யம் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யூனிட்டுக்குப் 12 பைசாவுக்கு அதிகமாக சார்ஜ் செய்யக்கூடிய இடங்களில் விவசாயிகளுக்கு அந்தக் கட்டணத்தைக் குறைக்கும் வகையில் மத்திய சர்க்கார் சப்சிடி கொடுக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 8¼ பைசாதான் சார்ஜ் செய்யப்படுகிறது. ஆகவே, அந்த விதி நமக்குப் பொருந்தாது.

30th March 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தைக் கொடுக்காவிட்டாலும், விவசாயத்திற்கு செலவாகிற மின்சாரக் கட்டணத்தில் பாதியையாவது அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதிக்குக் கொஞ்சம் குறைவாக இப்போதே சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. யூனிட் ஒன்றுக்கு எல்.டி. ரேட் செலவாவது 14 பைசா விவசாயிகளுக்கு சார்ஜ் செய்வது 8¼ பைசா. இப்போதே பெரிய அளவு சர்க்காரே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Copper ore in Kottaipatti area

* 507 *Q.*—SRI V. SANKARAN :
SRI M. KARUNANITHI : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether it is a fact that deposit of copper ore has been discovered in the Kottaipatti Forest area near Harur taluk in Dharmapuri district; and

(*b*) the detailed result and report of the survey made thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) and (*b*) Evidences of copper mineralisation were noticed by the State Geological Branch in the course of survey for minerals over an area of 250 square miles around Bairanaickenpatti and Kottaipatti in Harur taluk of Dharmapuri district during the latter part of the year 1965. The occurrence was first observed near Bairanaickenpatti at the road junction about 20 miles east of Harur. In view of the favourable geological structures and evidences of mineralisation of the area, it is proposed to recommend the area to the Geological Survey of India for necessary geophysical investigation to know more on the ore minerals.

திரு. வை. சங்கரன் : தோராயமாக எவ்வளவு கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மதிப்பிடப்படவில்லை.

திரு. ம. கமலநாதன் : தர்மபுரி மாவட்டத்தில் தாமிரம் மட்டுமல்ல ; சுண்ணாம்புக்கல், தங்கப்படிவம் எல்லாம் கிடைக்கும் என்ற அளவுக்குச் சொல்லப்படுகிறது. ஆகவே, ஸ்பெஷல் ஜியலாஜிகல் சர்வே நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பிரிலிமினரி ஜியலாஜிகல் சர்வே ஏரியா பூராவும் சென்னை ராஜ்ய சர்க்கார் செய்து கொண்டிருக்கிறது. அதன் பயனாக இந்த விதமான மினரலிசேஷன் இருக்கலாம் என்று கண்டு பிடித்திருக்கிறோம். இப்போதும் அந்தப் பகுதியில் ஸ்டேட் ஜியலாஜிகல் சர்வே நடந்து கொண்டுதான் இருக்கிறது.

[30th March 1966

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தாமிரக் கனி திண்டிவனம் பகுதியில் கிடைப்பதாகச் சொல்கிறார்களே ! உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கள்ளக்குறிச்சியிலே கிடைக்கிறது ; திண்டிவனம் பகுதியில் அல்ல.

Laboratories for science subjects

* 508 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any special laboratories for physics, chemistry and other technological subjects are to be set up in the State ; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : மற்ற ராஜ்யங்களில் இந்த மாதிரி ஸ்பெஷல் லாபரடரிஸ் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் அதிகப் பயன் தருவதாகச் சொல்லப்படுகிறது. அந்த மாதிரி இங்கும் ஏற்படுத்த சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பிற ராஜ்யங்களில் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை பற்றி எங்களிடத்தில் தகவல் இல்லை.

தையல் இயந்திரங்கள் வழங்குதல்

* 509 கேள்வி.—திரு. பி. ஜயராஜ் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் 1963, 1964, 1964-65 ஆண்டுகளில் அரிசன இலாகாவால் எத்தனை தையல் மிஷின் வழங்கப்பட்டது ?

(இ) அதில் நன்னிலம் தாலூகாவில் கொடுக்கப்பட்டது எத்தனை ?

(உ) அதன் விவரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் :

	ஆண்டு.	இயந்திரங்களின் எண்ணிக்கை.
	(1)	(2)
(அ)	1962–63	27
	1963–64	27
	1964–65	39
(இ)	1962–63	இல்லை.
	1963–64	3
	1964–65	2

30th March 1966]

வழங்கப்பட்ட இயந்திரங்களின் விலை.

		தஞ்சை மாவட்டத்தில்.	நன்னிலம் தாலூகாவில்.
		ரூ. பை.	ரூ. பை.
(உ)	1962–63	10,426 05	—
	1963–64	7,914 33	879 36
	1964–65	11,922 69	611 42

திரு. கே. பி. பழனிசாமி : தையல் மெஷின் கொடுப்பதிலே லெதர் தைப்பதற்கும் மெஷின் கொடுத்தார்கள். இப்போது அது கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஏன் கொடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : தோல் தைக்கும் மெஷின்கள் கொடுக்கவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இது ஜாஸ்தி விலையாக இருப்பதால் திருப்தி செய்ய முடியாது என்று சொல்லப்பட்டது. ஆயினும் வழக்கம் போல் தோல் தைக்கிற மெஷின் கொடுப்பது நல்லது என்று கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தையல் மெஷின் தருவது எந்தெந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது ? வழங்கப்பட்டதற்குப் பிறகு அதைப் பெற்றவர்கள் அதைச் சரிவர உபயோகிக்கிறார்கள் என்ற தகவலை நமது இலாகா பெற என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தொழிலைப் பயின்றவர்கள் இதற்காக விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பித்தவர்களைக் கூப்பிட்டு பரிட்சை செய்யப்படுகிறது. அதற்குப் பிறகு உண்மையிலேயே தொழிலைப் பயின்றிருக்கிறார்கள் என்றால் இந்த மெஷின்கள் வழங்கப்படுகின்றன. இதைக் கொண்டு பொதுவாக அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஓரிரு இடங்களில் புகார் வந்தால் உடனே விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டத்தில் பத்தாயிரம் ரூபாய் அளவுக்குத்தான் தையல் மெஷின்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். எத்தனை மெஷின்கள் வாங்கப்பட்டன ? எந்தெந்த தாலூகாவிற்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : 1962-63-ல் வாங்கிய மொத்த மெஷின்களின் எண்ணிக்கை 27 என்று சொன்னேன். எந்தெந்த தாலூகாவுக்கு எவ்வளவு என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. நன்னிலம் தாலுகாவைப் பற்றிக் குறிப்பாகக் கேட்டதால் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இவ்வாறு தையல் மெஷின் கொடுப்பதன் மூலமாக அவர்கள் பிழைக்க வழி இருக்கிறது. அந்த மெஷின்கள் ரிப்பேர் ஆகிவிட்டால் பிளாக் மூலம் ரிப்பேர் செய்து கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

[30th March 1966

கனம் திரு. பூ. கக்கன் : இயந்திரங்களைப் பெற்றுத்தான் எல்லாம் நன்மை அடைய முடியும் என்று சொன்னேன். ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால், ஒரு நட்டுப்போனால்கூட அத்தனையும் செய்து கொடுக்கவேண்டுமென்று இல்லாமல் அதையெல்லாம் அவர்களே செய்துகொள்ளவேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 1963-64-இல் 27 என்றும் 1964-65-ல் 19 என்றும் சொன்னார்கள் . . . .

கனம் திரு. பூ. கக்கன் : 19 என்று சொல்லவில்லை, 39 என்று சொன்னேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : 19 என்று எனக்குக் கேட்டது, ஆகவே குறைந்ததற்குக் காரணம் என்ன என்று கேட்கலாம் என்று நினைத்தேன்.

Harijan Welfare Elementary School, Kilambil

* 510 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any case of food poisoning was reported, in a Harijan Welfare Elementary School at Kilambil in Lalgudi taluk; **and**

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி கலெக்டர் அனுப்பியுள்ள அறிக்கையின்படி, லால்குடி வட்டம் கீழ் அன்பில் ஹரிஜன நல உயர் தொடக்கப் பள்ளியில் 9-12—1965 அன்று 211 சிறுவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்பட்டது. உணவு உண்ட சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு 15 சிறுவர்கள் இரண்டொரு முறை வாந்தியெடுத்தனர். அவர்களில் சிலரிடம் இலேசான மயக்க அறிகுறிகள் தென்பட்டன. அவர்களுக்கு உடனடியாக அன்பில் கிராம மருந்தகத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது. லால்குடி அரசாங்க மருத்துவ மனையின் மருத்துவ அதிகாரியும் அச்சிறுவர்களுக்கு புறநோயாளிகளுக்குரிய சிகிச்சை அளித்தார். மாவட்ட நல அதிகாரி 10—12—1965-ல் அப்பள்ளியைப் பார்வையிட்டு, எல்லாச் சிறுவர்களும் உடல் நலத்துடன் இருப்பதைக் கண்டார்.

திரு. வை. சங்கரன் : என்ன காரணத்தினாலே இது போன்ற சம்பவங்கள் ஏற்படுகின்றன, இதற்கு யார் பொறுப்பு என்று கண்டுபிடிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அது விசாரணை செய்யப்பட்டு கிண்டிக்கு அனுப்பி அதைப் பார்த்திருக்கிறார்கள். அதில் விஷம் இல்லை என்று கலெக்டருக்குக் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த பதில் இங்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு எந்தக் காரணமும் இல்லையென்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

30th March 1966]

திரு. இராம. அரங்கண்ணல் : இதுபோல் ஹரிஜன ஹாஸ்டல்கள், வேறு இடங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற நண்பகல் உணவு ஆகியவைகளில் தொடர்ந்து நச்சுப் பொருள்கள் கலப்பதும், மாணவர்கள் ஏதாவது வியாதிகளுக்கு உள்ளாவதும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. உயிரோடு விளையாடுகின்ற இந்த விஷயத்தில் ஒரு தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்த முன்ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா விடுதிகளிலும் மாணவர்களுக்கு முறையாக உணவு போடவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம். விஷம் ஏதும் விழுந்துவிடாமல் இருப்பதற்காக மூடிவைக்கவேண்டும், எந்த விதமான ஆபத்தும் ஏற்படவிடக்கூடாது என்பதைப்பற்றி அரசாங்கத்தின் மூலமாக முன்னெச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Scarcity of fertilisers in Madurai district

* 511 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the scarcity of nitrogenous fertilisers in Madurai district and the consequent hardship to ryots thereat; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) மத்திய ரசாயன உரத்தொகுப்பு ஏற்பாட்டின் கீழ் இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட ரசாயன உர அளவையொட்டி இம்மாவட்டத்தின் தேவைக்கு எந்த அதிக அளவுக்கு உரம் வழங்க முடியுமோ அந்த அளவு உரம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : இந்த மாதிரி கடந்த காலத்தில், சமீபத்திலே ஏற்பட்டபொழுது உரம் இடவேண்டிய காலத்திலே வரவில்லை, மிகவும் தாமதமாக வந்தது, வந்தபிறகுகூட போதுமான அளவு விவசாயிகளுக்கு எல்லாம் கிடைக்கவில்லை என்பது சர்க்காரின் கவனத்திற்கு வந்ததா ? அப்படியானால், போதுமான அளவு கொடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : மதுரை ஜில்லாவைப் பொறுத்த வரையில் கூடுதலாகத்தான் கொடுத்திருக்கிறார்கள். இதர ஜில்லாக்களில் மிச்சப்பட்டதைக்கூட வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாகாணத்திற்கு வருகிற கோட்டா வரவில்லை. இருந்தாலும் மதுரை ஜில்லாவிற்கும் கவனம் செலுத்தப்பட்டு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

[30th March 1966

திரு. கரு. சீமைச்சாமி : உரப் பற்றாக்குறை எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. எந்தக் காலத்திலே உரம் வேண்டுமோ அப்பொழுது கொடுக்கப் படுவதில்லை. முதலமைச்சர் அவர்களிடம் அமெரிக்காவிலிருந்து வருகின்ற உரத்திற்கு அடையாளமாகக் கொடுத்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆகவே இதையெல்லாம் ஆரம்பத்திலேயே இங்கு வரவழைத்து விவசாயிகளுக்கு வசதியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடுகள் செய்யும்?

கனம் திரு. பூ. கக்கன் : கொடுப்பதையெல்லாம் ஆரம்பத்திலேயே கொடுத்துவிடமாட்டார்கள். மத்திய அரசாங்கத்தின் மூலமாக இந்த மாநிலத்திற்கு எவ்வளவு தூரம் கொடுத்து உதவ முடியுமோ அவ்வளவு தூரம் கொடுக்க முன் வந்துகொண்டிருக்கிருர்கள். நான் பட்ஜெட் விவாதத்தின்போதுகூட சொன்னபடி காலப்போக்கிலே அதிகப்படியாக வரும். காலப்போக்கிலே இதுபோன்று இருக்காது என்று நினைக்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Though it is a fact that manure will be supplied throughout the year, at least connot the Government take the responsibiliy of storing these fertilisers and releasing them at the time of transplantation, i.e., in June July and August for Samba and November, December and January for Navarai ? The present release of fertilisers is such that actually in the season the ryot is not benefited. Will the Government consider this?

THE HON. SRI P. KAKKAN : The Government are taking the responsibility through the co-operative society. Whenever fertilisers are available, they are given to the farmers

Cattle Development Scheme

* 512 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to Question No. 272 on 4th November 1965, when the Intensive Cattle Development Scheme will be extended to other districts in the State?

கனம் திரு. பூ. கக்கன் : மும்முர கால்நடை வளர்ச்சித் திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கு விரிவுப்படுத்த அரசாங்கத்திடம் இப்போது செயற் குறிப்பு ஏதும் இல்லை.

Agricultural Seminars

* 513 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to organise Agricultural Production Seminars, in the State; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) வேளாண்மை உற்பத்திக் கருத்தரங்குகளை நடத்துவது பற்றிய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

30th March 1966]

ஆனால், 1965 ஆகஸ்டில் தஞ்சாவூரில் ஒரு கருத்தரங்கும் 1966 பெப்ரவரியில் கோயம்புத்தூரில் மற்றொன்றுமாக இரு கருத்தரங்குகள் நடைபெற்றன. மேற்கூறிய இரு கருத்தரங்குகளையும் மத்திய உணவு—வேளாண்மை அமைச்சர் தொடங்கி வைத்தார். இக் கருத்தரங்குகளில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி விவாதிக்கப் பட்டன.

தஞ்சாவூர் கருத்தரங்கு :

(1) தர விதைகள், உரங்கள், பயிர்களை அழிக்கும் பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்தல், கடன் வசதி அளித்தல் போன்ற அம்சங்களில் சிறப்பாகக் கவனம் செலுத்தி, தீவிரமாக நெல் சாகுபடி செய்தல்.

(2) தஞ்சாவூரில் (கலப்புச் சாகுபடி உள்பட) பல பயிர்களை விளைவிப்பதற்கான வாய்ப்பும் அதற்குத் தேவையான வசதிகளும்.

(3) (வடிமுனைக் கிணறுகள், இறைவைப் பாசனம் உள்பட) நீர் வசதி நிர்வாகமும் வடிகால் வசதிகளும்.

கோயம்புத்தூர் கருத்தரங்கு :

(1) நெல் உற்பத்தியை உச்ச அளவிற்குப் பெருக்குதல்.

(2) புன்செய்தானிய உற்பத்தியை உச்ச அளவிற்கு உயர்த்துதல்.

(3) வாணியப் பயிர்களின் உற்பத்தியை அதிக அளவிற்குப் பெருக்குதல்.

திரு. வை. சங்கரன் : இந்த இரண்டு கருத்தரங்குகளும் நல்ல பலனைக் கொடுத்ததா என்று அறிய விரும்புகிறேன். அப்படியென்றால் மற்ற மாவட்டங்களில் அங்கேயுள்ள விவசாயப் பிரச்னைகள் சம்பந்தமாக கருத்தரங்குகள் நடத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : நான் முதலிலே சொல்லும்பொழுதே சொன்னேன். பின்னால் சில ஜில்லாக்களில் நடத்தவேண்டி வரும். அப்படி வரும்பொழுது எந்த எந்த ஜில்லாக்களில் முதலிலே நடத்தலாம் என்று ஆராய்ந்து அந்த ஜில்லாக்களில் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வரும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லாவிலும், கோயம்புத்தூர் ஜில்லாவிலும் நடந்த கருத்தரங்குகளில் பல நிபுணர்களும், அறிவாளிகளும் கலந்து கொண்டு நல்ல ஆலோசனைகளைத் தெரிவித்தார்கள். அதை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறதா? அப்படி வெளியிடாமல் இருந்தால் அதை வெளியிட்டு மற்ற விவசாயிகளும் அதைப் புரிந்து பயன்பெறுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

[30th March 1966

கனம் திரு. பூ. கக்கன் :
The recommendations made by Groups 1 and 2 of the seminar are under the consideration of the Director of Agriculture. அவர்கள் கன்சிடர் செய்து அந்த ரிப்போர்ட் வந்த பிறகுதான் வெளியிடப்படும். The recommendations made by Group 3 are under the consideration of the Public Works Department. இது பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டின் கன்சிடரேஷனில் இருக்கிறது. அவர்கள் பார்த்து முடிவுக்கு வந்த பிறகு அது விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மாவட்ட அளவிலே நடைபெறுகின்ற கருத்தரங்குகளில் வாய்ப்பு உள்ளவர்களும், ஒரு சில அதிகாரிகளும்தான் பங்கு கொள்ள முடிகிறது. பொதுமக்கள் இதை முக்கியமாகக் கருதுகின்ற வகையில் குறிப்பாக தஞ்சை திருச்சி, வட ஆற்காடு, மதுரை போன்ற நான்கு மாவட்டங்களில் உள்ள பிளாக்குகளுக்குள்ளே கருத்தரங்குகள் நடத்துவதற்கு, இந்த ஆண்டிற்குள்ளாவது கருத்தரங்குகள் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு பிளாக்கிலேயும் நாம் செய்ய முடியாது. செலவும் ஜாஸ்தியாகும். ஜில்லாக்களில் நடக்கும் பொழுது அந்தந்த பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களும், விவசாயத்திலே அதிக ஆர்வம் உள்ள விவசாயிகளும், சட்டசபை அங்கத்தினர்களில் பலரும் கலந்து கொள்கிறார்கள். ஆகவே, இவ்வாறுதான் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Raid for currency notes

* 514 *Q.*—SRI. V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any raid has been conducted in a shop in Sowcarpet area in Madras City to seize 100 Rupee Currency Notes; and

9-00 a.m. (*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

மதுரையில் Cr. P. C. 54-வது செக்ஷன்கீழ் கைது

* 515 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் வருடம் மதுரை டவுன் போலீஸ் நிலையங்களில் 54 Cr. P. C. பிரகாரம் எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் ?

(இ) அவர்களில் எத்தனை பேர் பழைய குற்றவாளிகள் ?

(உ) தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனைபேர் ?

30th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 4219.

(இ) 529.

(உ) 4164.

திரு. கரு. சீமைச்சாமி : போலீஸ் மேல் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் ஒரு நாளைக்கு இவ்வளவு கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக ஒரு பாவமும் அறியாத கூலிகளையும், ரெயில்வே ஸ்டேஷன்களில் படுத்திருப்பவர்களையும், பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருப்பவர்களையும் எல்லாம் போலீஸ் பிடித்து அவர்கள் மேல் கேஸ் போடப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நிரபராதிகள் மேல் எந்த விதமான கேசும் போடக்கூடாது என்பது அரசாங்கத்தின் கட்டளை. சில சமயங்களில், சில இடங்களில் சிலர் உட்கார்ந்து கொண்டு அவர்கள் சொந்தப் பெயரைச் சொல்லாது திருட்டுத்தனமாக ஏதாவது செய்தால் சந்தேகப்பட்ட பேர்வழிகளைப் பிடித்து விசாரிக்கிறார்களே தவிர சந்தேகம் இல்லாத, நிரபராதிகளுக்கு எந்தவிதமான ஆபத்தும் உண்டாக்க மாட்டார்கள், அப்படிச் செய்யக்கூடாது என்று நானே சொல்லியிருக்கிறேன்.

திரு. செ. மாதவன் : நிரபராதிகளைப் பிடிக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செக்ஷன் 54, 55 படி அந்தக் காலத்தில் போடப்பட்ட பிரிவுகளின் படி வாகபாண்ட்ஸை கைது செய்யலாம், சொத்து இல்லாதவர்கள் கைது செய்யப்படலாம் என்ற பிரிவுகள் காணப்படுகின்றன. அவர்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்க கோர்ட்டுக்குச் செல்ல வாய்ப்பில்லை. ஜாமீன் கொடுத்தவுடன் வெளியே விட்டுவிடுகிறார்கள். அப்படிக் கைது செய்வது இந்தச் சட்டத்திற்கு புறம்பாக இல்லை என்று வாதாட முடியாது. வாகபாண்ட்சை கைது செய்யலாம், பெயரை தப்பாகச் சொன்னால் கைது செய்யலாம், சொத்து இல்லாதவர்களைக்கூட கைது செய்யலாம் என்று இருக்கிற பிரிவினையை மாற்றுவதற்கு வழி செய்யப்படுமா ?

கனம் சபாநாயகர் : சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று சொல்கிறீர்கள். **There is no use in making this suggestion during question hour. The hon. Member cannot seek to amend an Act by putting a supplimentary question.**

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தச் சட்டப் பிரிவுகளின் கீழ் நகரப்புறங்களில் தான் ஏராளமான பேர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அப்படி ஒவ்வொரு நகரப்புறங்களில் உள்ள போலீஸ் நிலையங்களுக்கும் மாதா மாதம் இவ்வளவு வழக்குகளாவது பிடிக்க வேண்டுமென்று கோட்டா முறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவ்வாறில்லை, அவ்வாறு உத்தரவில்லை என்று பலமுறை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன்.

[30th March 1966

Special Armed Police

* 516 Q.—SRI C. KOTHANDARAMA BHAGAVATHAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to recall the Special Armed Police of Avadi now stationed at Jullundur (Punjab District) for use in our State?

கனம் திரு. பூ. கக்கன் : இக் கேள்விக்குப் பதில் அளிப்பது பொது மக்களின் நலனிற்கு ஏற்றதன்று.

சென்னை மாநகரைச்சுற்றி வட்டச்சாலை

* 517 கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மாநகரைச் சுற்றி Ring Road ஒன்று அமைக்கும் யோசனை எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH : A statement* is placed on the Table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த ரிங்ரோடு அமைக்க முதல் நடவடிக்கையாக நகருக்கு வெளி ஊர்களிலிருந்து வருகிற பஸ்கள் எல்லாம் நகரத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கிற வகையில் கிழக்கே கொரட்டூர் வரையில், தெற்கே கிண்டி தொழிற்பேட்டை வரையில், மேற்கே ஆரம்பாக்கம் அருகில் வெளி ஊர் பஸ் நிலையங்கள் கட்ட உத்தேசமுண்டா?

கனம் திரு. வெ. ராமையயா : பி. டபிள்யூ. டி.-யைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கவேண்டியதற்கு நிலைமை இது மாதிரியிருக்கிறது. மற்றவை பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்குக் கேள்வி போடவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : இப்படிப்பட்ட ஒரு சுற்றுப்பாதை அமைத்துவிட்டு வெளியூர்களிலிருந்து வருகிற பஸ்கள் அந்த இடத்தில் நிற்கவேணடுமென்று வைத்து விட்டால் வெளி ஊர்களிலிருந்து சென்னைக்கு வருகிற பிரயாணிகள் கஷ்டப்படுவார்கள். அப்படிப்பட்ட பிரயாணிகள் பஸ்களில் சென்னை நகர உட்பகுதிக்கு வர வழிவகை செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமையயா : நகரத்திற்குள் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலை குறைக்க வேண்டிய ரோடு அமைப்பை பொறுத்தவரையில் உள்ளது இந்தக் கேள்வி.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கிற பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி இவற்றைத் தூர்த்துவிட்டு அங்கு பாதாள ரெயில்கள் ஓட்ட வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றிய அரசாங்கக் கருத்து என்ன?

*Printed as Appendix I on pages 510–511

30th March 1966]

கனம் திரு. வெ. ராமையயா : தன் சொந்தக் கருத்தாக சொன்னதாக, நேற்றையதினம் தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை இன்றையதினம் பத்திரிகைகளில் பார்த்தேன். அது சம்பந்தமாக தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

மவுண்ட்ரோட்டில் சுரங்கப்பாதை

* 518 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மவுண்ட்ரோடில் அமைக்கப்படவிருக்கும் சுரங்கப் பாதையின் 2-ம் கட்ட வேலைத் தொடக்கத்தில், அருகில் உள்ள சினிமா கொட்டகையின் சுவர்கள் ஏதேனும் இடிந்து விழுந்தனவா?

(இ) ஆமெனில், அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(உ) இதன் காரணமாக, சினிமா காட்சிசாலை உரிமையாளருக்கு நஷ்டஈடு ஏதேனும் கொடுக்கப்பட்டதா?

(எ) ஆமெனில், அதன் விவரமென்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) No. It did not fall down. It showed signs of crack and hence the contractor was requested to bring down the structure.

(b) No workers were affected.

(c) and (d) No compensation has to be paid to the Cinema Theatre owner. The contractor will have to bear the cost of the reconstruction of the building under the terms of the contract. It is estimated that the amount of additional cost of construction will not be more than rupees three thousand.

Highways Department

* 519 Q.—SRI V. SANKARAN:
SRI SAW. GANESAN:
SRI S. MADHAVAN:
SRI A. KUNJAN NADAR:
} Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have initiated and put through any programme for provincialisation of hands in work-charged establishment (Highways) of more than 5 years, service, as per the recommendation of the Pay Commission: and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) Road Inspectors and Tools and Plant Workers, including workers in Transport and Machinery Workshops, are borne on the work-charged establishment of the Highways and Rural Works Department. It is

difficult to formulate a regular programme for the provincialisation of posts included in the work-charged establishment, but so far, 1,042 posts of Road Inspectors and 1,110 posts in Transport and Machinery Workshops and Divisions have been provincialised. The question of provincialising the remaining posts has been taken up with the Chief Engineer (Highways and Rural Works).

திரு. வை. சங்கரன் : பிளானிங் கமிஷன் சீக்கிரத்தில் படிப்படியாக இதை எடுத்துச் செய்யவேண்டுமென்று ரெக்கமென்டேஷன் செய்திருக்கிறது. அந்த முறையில் எவ்வளவு காலத்திற்குள் இது முடிக்கப்படும் ? ஏற்கெனவே 1963-ல் இரண்டு ஜீ.ஓ.-க்கள் போடப் பட்டிருக்கின்றன. எவ்வளவு சீக்கிரத்தில் இது அமல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது ராஜ்ய பே கமிஷன் சிபார்சு. அவர்கள் சிபாரிசின் அடிப்படையில்தான் பரிசீலனை செய்து இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட சீஃப் என்ஜினியர் அவர்களால் எடுக்கப்படுகின்றன.

SRI A. KUNJAN NADAR : Sir, may I know whether there is any scheme contemplated by the Government for absorbing them into regular service by a gradual process?

THE HON. SRI V. RAMAIAH : We are provincialising their services as per the existing rules and that work is going on rapidly now. We expect that the cases of all those who are entitled to be looked into, will be looked into and the needful done.

திரு. செ. மாதவன் : சம்பளக் கமிஷன் பல ஆண்டுகளுக்கு முன்பே இதுபற்றிய ஒரு திட்டத்தைத் திட்ட அரசாங்கத்திற்கு யோசனை கூறியுள்ளது. ரோடு இன்ஸ்பெக்டர்களுக்கு மட்டும் திட்டமிடுவதாகச் சொன்னார்கள். வொர்க் சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ் மெண்ட் பல இலாகாக்களில் இருக்கின்றன. அவர்கள் அத்தனை பேர்களும் 15, 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள்கூட நிரந்தர மாக்கப்படாமல் திடீரென்று அவர்களை விலக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்காவது முன் உரிமை கொடுத்து வேறு இலாகாக்களில் அவர்களை அப்சார்ப் செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுபற்றிய விவரம் என்னிடமில்லை. வொர்க் சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட் பற்றி கவனம் செலுத்தி வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விவரம் என்னிடம் இல்லை. இது ஸ்பெஸிஃபிக் க்வெஸ்டினாக இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : நெடுஞ்சாலை துறை காங் கூலிகள் 15, 20 ஆண்டுகளாக பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு தினக் கூலிதான் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு

எந்தவிதமான சம்பள உயர்வு, மற்ற வசதிகள் கிடையாது. ஆகவே, அவர்களை நிரந்தரமாகச் செய்து சம்பள உயர்வு போன்ற வசதிகளைச் செய்து தர அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் கோரிக்கைகள் தனியாகப் பரிசீலனை செய்யப்படுகின்றன.

நிலச் சீர்திருத்தச் சட்டம்

* 520 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. து. ப. அழகமுத்து : } கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் இது வரை அறிவிக்கப்பட்ட உபரி நஞ்சை, புஞ்சை நிலங்கள் மாவட்ட வாரியாக எவ்வளவு ?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு ஏக்கர் நிலம் பிரித்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A statement [a] showing the extent of surplus lands notified under section 18 (1) of the Land Ceiling Act, and leased out for the crop season ending 31st March 1966 is placed on the table of the House.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த அறிக்கையில் உபரியாக கிடைத்திருக்கிற நிலங்களைப் பார்க்கும்போது மிக கொஞ்சமாக இருக்கிறது. நன்செய், நிலங்கள் 3,634 ஏக்கர், புன்செய் 6529 ஏக்கர் என்றுதான் இருக்கிறது. ஜனங்களை ஏமாற்றுவதற்காக இந்தச் சட்டம் போடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கத்தினர் அவர்கள் என்ன கருத்துப்பட வேண்டுமானாலும் பேசலாம். மான்யக் கோரிக்கை விவாதம் நடந்தபோது இதன் விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். இன்றுள்ள புள்ளி விவரப்படி இவ்வளவு வரும். இந்தச் சட்டம் பரிபூர்ணமாக அமலுக்கு வந்த பிறகுதான் எவ்வளவு வரும், எப்படிச் செய்யவேண்டுமென்று சொல்ல முடியும்.

திரு. ஆ. கு. சுப்பையா : மேலும் எவ்வளவு ஏக்கர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : விவாதத்தின்போது சொன்னதாக ஞாபகம். இந்த நேரத்தில் அந்த புள்ளிவிவரம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த அறிக்கையில் தஞ்சை மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கக் கூடிய நிலங்களின் பரப்பளவு 1,635 ஏக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அப்படி

a Printed as Appendix II on pages 511–512.

[30th March 1966

யானால் இந்த 1,635 ஏக்கர் நிலங்கள் யாருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் தரப்படவில்லை. அறிவிக்கப்பட்ட உபரி நிலங்கள் யாரிடம் எந்த நிலைமையில் இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: அதாவது கவர்ன்மெண்ட் சர்ப்ளஸ் லாண்ட் என்று டிக்ளேர் செய்தாகிவிட்டது. இப்போது அவற்றில் பயிர் இருந்துகொண்டிருக்கும். அதில் இப்போது இருக்கும் மகசூலை எடுத்த பின்னால்தான் தற்காலிகமாக குத்தகைக்கு விடவேண்டும். யார் யாருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்மானிப்பது வரையிலும் இந்த நிலைமை இருக்கும். உடனடியாக யாருக்கு கொடுப்பது என்பது முடிவாகவில்லையென்றால் மகசூல் எடுத்த பின்னால் லீஸில் ஒரு வருடத்திற்கு தற்காலிகமாக விடவேண்டும்.

திரு. செ. மாதவன்: 1961-ம் ஆண்டு இந்தச் சட்டத்தை கொண்டு வரும் போது, இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு லட்சத்து 85 ஆயிரம் ஏக்கர் வரை கிடைக்கும் என்று அப்போதிருந்த ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு உறுதி அளித்திருக்கிறார்களா? அவ்வாறு உறுதி அளித்தார்கள் என்றால் அளித்த உறுதி இப்போது என்ன நிலைமையில் இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், கனம் சீமைச்சாமி அவர்கள் ஏமாற்றுவதற்காகத்தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் கோபப்பட்டார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக கிடைத்திருப்பது மிகவும் குறைவு. காரணம் 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று வைத்திருப்பதுதான். அதை இன்னும் குறைத்தால் இன்னும் அதிகமாக நிலங்கள் கிடைக்கும். அவ்விதம் குறைப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: இது சம்பந்தமாக 10, 15 நாட்கள் விவாதம் நடந்தது. இப்போது ஏற்பட்டிருப்பதே எல்லாம் பரிபூரணமாக நடந்துவிட்டது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. இதில் சொல்லப்பட்டிருக்கின்ற விவரங்கள் குறிப்பிட்ட தேதியிலுள்ள புள்ளிவிவரம்.

திரு. எஸ். முருகையன்: இந்த நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கான நிலங்களாக இருந்தால் அதில் எல்லா நிலங்களிலும் சாகுபடி செய்யாமல் தரம்பாகப் போடப்பட்டிருக்கிறதே, அதற்கு என்ன காரணம்?

கனம் திரு. வெ. ராமையா: நிலங்கள் எல்லாம் விவசாயத்தில் இருக்கக்கூடியதுதான். கவர்ன்மெண்ட் டிக்ளேர் செய்தவுடன் நிலத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். நிலத்தை அதிகாரிகள்

30th March 1966]

எடுத்துக்கொள்ளும்போது, அந்த நிலங்களில் சாகுபடி இருந்தால் அந்த மகசூலை எடுத்த பின்னால், ரூல்ஸ் படி கொடுக்க வேண்டிய நபருக்கு கொடுக்கப்படும் வரையிலும் டெம்பரரியாக லீஸ்-க்கு விட வேண்டும். அந்தக் கட்டத்தில் தான் இப்போது இருக்கிறது.

* 521 **கேள்வி.—திரு. எம். எஸ். மணி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கம் மேற்கொண்டுள்ள நில சீர்திருத்தச் சட்டத்தில் பழத் தோட்டம், காய்கறி தோட்டம், கோழி, ஆடு, மாடு, வளர்ப்பு பண்ணை நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்ததால் விளை நிலங்கள் மேற்படி நிலங்களாக பல பகுதிகளில் மாற்றப்பட்டு வருவது அரசாங்கத்திற்கு தெரியுமா?

(இ) ஆம் என்றால் அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. வெ. ராமையா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. மாதவன்: இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தை நிர்வகிக்கக்கூடிய நிர்வாகத்திற்கு 36 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு வருவது உண்மையா? இவ்வளவு செலவு செய்தும், இந்த இலாகாவினால் போதிய அளவு பலன் இல்லை என்று சர்க்காருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கேள்வியிலிருந்து கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற உபகேள்வி எழவில்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

உணவு தானியங்களின் விலை

* 522 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்முதல் செய்யும் தானியங்களின் விலையில் ஒரு பகுதி ஈரம், பதர் ஆகியவற்றிற்காக கழித்துக் கொடுக்கப்படுகிறதா?

(இ) கழிவு எந்த அடிப்படையில்?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) For fair average quality paddy, certain specifications have been prescribed in the Annexure to Schedule I to the Madras Paddy (Maximum Prices) Order, 1964. For the paddy below

the fair average quality, the prices shall be determined by reducing the prices specified by the amounts of cuts indicated in column (3) of the Table below :

THE TABLE.

Constituents of admixture.	Free tolerance limit for fair average quality of paddy.	Rate at which cuts shall be imposed over free tolerance limits in column (2).
(1)	(2)	(3)
	PER CENT.	
Dirt, mud, sand, chaff, and other similar foreign matter.	1·0	At full value.
Insect damaged kernels ..	0·25	At half value.
Admixture of other varieties	6·0	Over 6 per cent at ½ value.
Moisture content	12·0	32 paise per quintal for every one per cent over 12 per cent upto and inclusive of 14 per cent and 67 paise per quintal for every one per cent over 14 per cent.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், ஈரம், பதர் கழிவுக்காக சதவிகிதத்தில் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தந்த விவரங்களில் இருந்து தெரிகிறது. சதவிகிதத்தில் நிர்ணயிப்பது சுலபமாக இருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறதா ? உண்மையாக நடைமுறையில் இதில் பல சிரமங்கள் இருக்கும் என்பதைக் கருதி, சராசரியாக ஒரு அளவுக்கு குறைத்துக்கொள்வதற்கு தகுந்த வகையில்—அதாவது ஒரு கிலோ அல்லது ஒன்றரை கிலோ--என்கின்ற அளவில் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக ஈரம், பதர் கழிவுக்காக கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : நடைமுறையில் பார்க்கிற பொழுது, இந்த முறையினால் விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படுவதாக எந்தவிதமான புகார்களும் வரவில்லை. ஏற்கனவே பல முறை இதைப்பற்றி பரிசீலனை செய்து இவ்விதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக ஏதாவது பாதகம் ஏற்படும் பட்சத்தில், அதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரிவித்தால் அரசாங்கம் ஆலோசனை செய்யும்.

Aliyar Dam

* 523 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that during the first crop period, ryots in over 20,000 (twenty thousand) acres out of 28,000 acres

for which water was let out in the channels fed through the Aliyar Dam had neither reclaimed their lands, nor utilised the water for irrigation; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The answer[a] is laid on the Table of the House.

திரு. வை. சங்கரன் : இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் 8,000 சொச்சம் ஏக்கர்கள்தான் பயன்பட்டன என்றும், பாக்கி சுமார் 20,000 ஏக்கர்களுக்கு பயன்படுத்த முடியவில்லை என்றும் அமைச்சர் அவர்களே ஒத்துக்கொள்கிற முறையில் அறிக்கையில் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே குடியானவர்களிடமிருந்து இந்த நிலங்கள் எல்லாம் பாசன வசதி பெறும் என்று சொல்லி ஆயக்கட்டுகளாக எடுத்துக் கொண்டோம். இப்போது முடியாது என்று தெரிகிறது. பெரிய பாசனத்திட்டங்களைப் போடும்போது, இவ்விதம் சரியான நிர்ணயம் செய்யவில்லையென்றால், அரசாங்கத்திற்கு போதிய அளவு ரிட்டர்ன் அமையாது அல்லவா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த அறிக்கையில் இருக்கக்கூடிய விவரங்கள் பூராவையும் பார்த்தால், இதில் என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடியும். தண்ணீர் கிடைப்பதில், சரியானபடி பருவ மழை இருக்கவேண்டும். அதற்கேற்ற முறையில் தான் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள முடியும். முக்கியமாக மணிலாப் பயிருக்கு பாய்ச்சல் முறையில் விவசாயத்தை கொண்டு வரலாம் என்று கருத்துச் சொல்லப்பட்டது. சென்ற வருடம் இதில் பரிபூரண அனுபவம் இல்லாத காரணத்தால் இந்த ப்ராஜக்டின்கீழ்—விவசாயிகளுக்கு ஆலோசனை சொல்லும் வகையில் விசேஷ அதிகாரி போடப்பட்டு, விவசாய விஷயத்திலும், அட்மினிஸ்ட்ரேஷன் விஷயத்திலும் இருக்கின்ற சிரமங்களைப் பற்றி கவனிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்கள் நிலக்கடலைப் பயிரை பாய்ச்சல் மூலமாக சாகுபடி செய்யலாம் என்ற அளவில் சொன்னார்கள். 40 கோடி ரூபாய் அளவில் போடப்பட்ட இந்தத் திட்டத்தில் 28 ஆயிரம் ஏக்கர்களுக்கு தண்ணீர் வசதி கிடைக்கும் என்று சொல்லப்பட்டுவந்தது, இப்போது 8 ஆயிரம் ஏக்கர் தான் வசதி பெற்றிருக்கிறது, மற்ற இடங்களில் எல்லாம் போதிய அளவு போத்திகள் சரியாக வெட்டப்படாத காரணத்தினால்தான் பாசன வசதி பெற முடியவில்லை என்று சொல்லப்பட்டது. போத்திகள் வெட்டப்படாத இடத்தில் எல்லாம் சர்க்காரே எடுத்து வெட்டி கொடுப்பதற்கான சட்டம் வரும் என்று வாக்குறுதி சொன்னார்கள். அவ்வாறு கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[a] Printed as Appendix III on pages 512–514.

[30th March 1966

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் எதையெல்லாமோ சொல்லிவிடலாம். வாய்க்கால் வெட்ட வேண்டுமென்றும் குறைந்தது 25 ஏக்கர் என்ற அளவிற்காவது வெட்டவேண்டும். அதே நோத்தில் அங்கே இருக்கக்கூடிய புஞ்சைப் பயிர் சாகுபடி செய்யவேண்டும். எல்லா இடத்திற்கும் பாசன வசதி கிடைக்கவேண்டும் என்றால் நிலத்தை சமப்படுத்த வேண்டும். இதற்காக நீர்ப்பாசன கமிஷனிடமிருந்து 10, 12 கோடி ரூபாய் உதவி பெற்றிருக்கிறோம். இவைகளை எல்லாம் செயல்படுத்தவேண்டும். இவையெல்லாம் டைம் கன்ஸுமிங் ப்ராசஸ்--கொஞ்சகாலம் ஆகத்தான் செய்யும்.

வாலாஜா ஏரிப் புறம்போக்கு, பின்னலூர்

***524 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்காவில் பின்னலூர் கிராமத்தில் வாலாஜா ஏரிக்குப் பக்கத்தில் சுமார் 500 ஏக்கருக்குமேல் கிடக்கும் புறம்போக்கில் பயிரிடும் விவசாயிகளிடமிருந்து அடமானம் கோரி அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) About 167 persons have encroached upon the land in R.S. No. 135 known as Wallajah Eri poramboke in Pinnalur village, Chidambaram taluk. Of these, four persons applied to the Tahsildar, Chidambaram, for assignment of land.

(b) As the portions occupied by them lie in the water-spread and submersible area of the tank, their request for assignment was not considered.

மாநிலத்திலுள்ள தரிசு நிலங்கள்

***525 கேள்வி.—திரு. எம். எஸ். மணி** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழகத்திலுள்ள பயன்படுத்தப்படாத மொத்த தரிசு நிலங்களின் பரப்பளவு எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : The Uppal Committee which visited this State in 1960 and surveyed blocks of over 250 acres of land has reported that an extent of 38,466 acres could be reclaimed. The Special Officer appointed for making recommendations regarding the implementation of a centrally sponsored scheme for the settlement of landless agricultural labourers has surveyed blocks of less than 250 acres and has reported that an

30th March 1966]

extent of 66,015 acres is available for the implementation of the scheme. The extent of other isolated patches of lands not covered by the two surveys mentioned above is not known.

திரு. எம். எஸ். மணி : ஸார், அந்த நிலங்களை உடனடியாக விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள விவசாயிகளுக்கு அரசு அனுமதி தருமா ?

கனம் திரு. வெ. ராமையா : இவர்கள் ஆலோசனை கூறியிருப்பது விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டால் மட்டும் போதாது, விவசாயம் செய்ய நிரந்தரமாக பல கடன் வசதிகள், விவசாயத் தேவைகள் பூர்த்தி ஆகவேண்டும் என்பது. கிணறு தோண்ட வேண்டியதாக இருக்கும், ரிக்ளமேஷன் செய்யவேண்டியதாக இருக்கும். இப்போது ஒரு திட்டம், மத்திய அரசாங்க உணவு—விவசாய இலாகா மூலமாக, அவர்கள் கூறி இருக்கும் ஆலோசனை, ஒரு விவசாயி போய்க் குடியேற ஏறத்தாழ ரூ. 5,000 செலவு ஆகும் என்பதாகும். அந்த அடிப்படையில் தான் இந்த நிலங்கள் சாகுபடிக்கு வர முடியும். அது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. கே. ஏ மதியழகன் : தலைவர் அவர்களே, இந்தத் தரிசு நிலங்கள் பல ஆயிரம் ஏக்கர் இருப்பதிலே, யுத்த கால அடிப்படையில், லாண்ட் ஆர்மி—பூமி சேனை—அமைத்து, உணவு உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்ய அரசாங்கத்திடம் ஏதேனும் செயற்குறிப்பு உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலே ஒவ்வொரு விவசாயியும் விவசாயத்தில் ஒரு பெரிய வீரன் மாதிரித்தான் செயல்பட முடியும். அவர்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுத்தால் போதும், ஆர்மி ஒன்றும் தேவையில்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது அமைச்சர் கூறிய பதிலில் சாதாரண ஏழைகள் அந்த நிலங்களைச் சாகுபடி செய்ய முடியாது என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் அதை ஒரு சில நிலப் பிரபுக்களுக்கோ அல்லது தொழில் அதிபர்களுக்கோ பிரித்துக் கொடுக்க ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் சொன்ன பதிலில் மற்றொரு பகுதியை விட்டு விட்டார்கள். நிலத்தைக் கொடுத்துவிட்டால் போதாது, அதற்கு வேண்டிய சாதனங்களை அரசாங்கமே செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். பெரிய நிலப்பிரபுக்களுக்கோ, மற்றவர்களுக்கோ கொடுக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அமைச்சர் கொடுத்திருக்கும் விவரத்தில் உபயோகப்படுத்தப்படாது இருக்கிற நிலத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சர்க்கார் புறம்போக்கு நிலங்கள்

[30th March 1966

மற்றவர்கள் அனுபவத்தில் இருந்து அபராதத் தீர்வைக்குட்பட்டு இருக்கிற நிலங்களின் விவரங்கள் இருக்கிறதா? அதைப்பற்றி சொல்ல முடியுமா?

கனம் திரு. வெ. ராமையா: அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

கிராம மணியக்காரர்கள் நியமனம்

*526 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

நமது மாநிலத்தில் கிராமங்களில் உள்ள பரம்பரை மணியக்காரர் பதவிகளை மாற்றி தகுதி அடிப்படையில் நியமிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

கனம் திரு. வெ. ராமையா: ஆம்.

திரு. செ. மாதவன்: ஸார், இந்திய தலைமை நீதி மன்றம் இது பற்றி ஒரு தீர்ப்பு வழங்கி நீண்ட நாள் ஆகிவிட்டது. இதைப் பரிசீலிக்க ஒரு காபினெட் சப்-கமிட்டி போட்டு பரிசீலிக்கப்படும் என்று பல ஆண்டுகளுக்கு முன் இந்த மன்றத்தில் சொன்னார்களே, அந்த காபினெட் கமிட்டியின் கதி என்ன ஆயிற்று?

கனம் திரு. வெ. ராமையா: கதி நல்ல கதிதான். காபினெட் சப்-கமிட்டி இந்தப் பிரச்னை மட்டுமல்ல, அதோடு பல பிரச்னைகள், நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய வில்லேஜ் ஆபீஸர்களுடைய வேலை, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியம், கொடுக்க வேண்டிய மரியாதை எல்லாவற்றையும் பூர்ணமாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்தார்கள். அந்த அடிப்படையில் பல வசதிகளைச் செய்துகொடுக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்தப் பதவியை நிரந்தரமாக பரம்பரையாக உள்ளவர்களுக்குக் கொடுப்பது ஒரு பிரச்னை. இருக்கிற பிர்க்கா, வில்லேஜிஸில் மாற்றி அமைத்து இப்போது இருக்கக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டுமென்று போர்டு ஆஃப் ரெவின்யூவிலிருந்து ப்ரொபோஸல் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பற்றியும் அண்மையில் முதல் அமைச்சர் அவர்கள் இவர்களுடைய மாநாட்டில் பேசும்போது எல்லாவற்றையும் பரிசீலித்து ஒருவருக்கும் பாதகம் இல்லா முறையில் செயல் திட்டம் உருவாக்கப் போவதாகச் சொன்னார்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. வெ. ராமையா: இப்போது கேள்வி பரம்பரை பாத்தியதையைப் பொறுத்தது. சுப்ரீம் கோர்ட்டில் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தீர்ப்பு வந்த பிறகு புதிதாக நியமனம் செய்கிறவர்களை எந்த அடிப்படையில் நியமனம் செய்வது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது வரையில் எங்கேயாவது வேக்கன்ஸி வரும் பட்சத்தில் நியமனம் செய்து [illegible]

30th March 1966]

கலெக்டர் யுக்தமானியம்

*527 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்ட கலெக்டர் தன்யுக்த உதவிநிதி (Discretionary Fund) யிலிருந்து 1964–65, 1965–66-ல் நிதி உதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், அதன் விபரம் ஒன்று சபைமுன் வைக்கப் படுமா?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) A statement [a] showing the particulars of items for which the discretionary grant of the Collector of Tiruchirappalli for 1964–65 and 1965–66 was spent is placed on the Table of the House.

Private dairies in Erode

*528 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) Whether the Government is aware of the fact that the private dairies in Erode, have suspended milk supply since 6th December 1965; and

(*b*) if so, the reasons therefor and the action taken thereon by the Government?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*): The private milk vendors in Erode Town suspended their sales from 6th December 1965 to register their protest against enforcement of the provisions of the Prevention of Food Adulteration Act. To minimise the difficulties of the public, large quantities of milk were made available through the Erode Co-operative Milk Supply Society. The private vendors resumed their sales to the public from 11th December 1965.

Ceylon repatriates

*529 Q.—SRI A. KUNJAN NADAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the steps taken by the Government to resettle Ceylon repatriates in Kanyakumari district;

(*b*) the steps taken in Tirunelveli and other districts;

(*c*) whether the Kanyakumari District Repatriates' Association has approached the Government with definite proposals for repatriation; and

(*d*) if so, the action taken by the Government on these proposals?

---

[a] Printed as Appendix IV on pages 515–519.

[30th March 1966

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A statement * is placed on the Table of the House.

(c) No, Sir.

(d) Does not arise.

SRI A. KUNJAN NADAR : Sir, may I know the steps taken by the Government regarding Kanyakumari district repatriates?

(No answer)

திரு. கே. ஏ. மதியழகன் : கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வருகிற அகதிகளைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்கார் அகதி மந்திரியே பூராவாக ஏற்றுக்கொள்ளுகிறார்களே, அதே மாதிரி ஆகின்ற செலவு முழுவதையும் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தியிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இனிமேல் வரக் கூடியவர்களுக்கு என்ன செய்யவேண்டுமென்பதா? (திரு. கே. ஏ. மதியழகன்: ஆம்) . . .

கனம் சபாநாயகர் : இரண்டு நாட்களுக்கு முன் இங்கு விவாதிக்கப்பட்டதே!

கனம் திரு. வெ. ராமைய்யா : பாரதப் பிரதமர் கூறி விட்டார்கள். இதற்கு முன்பு வந்தவர்களுடைய நிலைமை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. என்ன நிலையில் எந்த அடிப்படையில் வருகிறார்கள் என்பது தெரியும். அவர்களுக்கும் கூடுமான வரையில் நம் ராஜ்ய அரசாங்கம் என்னென்ன சிறு உதவிகள் கொடுக்கவேண்டுமோ, கொடுத்து வருகிறது.

குடும்பக் கட்டுப்பாடு

* 530 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1965-ம் வருடம் நவம்பர் மாதம் முடிய குடும்பக் கட்டுப்பாடு (அறுவை) செய்துகொண்டவர்கள் எத்தனை பேர்கள்?

(இ) அவர்களில் ஒவ்வொரு ஜாதியிலும் எத்தனை பேர்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 14,771.

(இ) அறுவை சிகிச்சை செய்த காலத்தில் இவ்விவரங்கள் சேகரிக்கப்படவில்லை.

District Board Hospitals

* 531 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government took over the District Board Hospitals at Sivagangai and Pallathur; and

(b) whether the scales of pay have been regularised in those hospitals after taking over them?

* Printed as Appendix V on pages 520-522.

30th March 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இந்த மருத்துவ மனைகளின் பணியாளர்களை அரசாங்கப் பணியில் சேர்த்துக்கொண்ட பின்புதான், அவர்களுக்கு அரசாங்க சம்பள விதப்படி சம்பளம் வழங்கப்படும். இது குறித்து இன்னும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அவர்களைப் பற்றிய குறிப்புகளெல்லாம் கீழேயிருந்து டி.எம்.எஸ். ஆபீஸுக்கு வந்து விட்டன. இதைப் பரிசீலிப்பதில் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இன்னும் டி.எம்.எஸ். ஆபீஸிலிருந்து தகவல் வரவில்லை, வந்த பின் தான் பரிசீலிக்க வேண்டும்.

Primary Health Centre at Poonimangadu

* 532 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to the answer given to Question No. 73 placed on the Table of the House on 1st April 1965 whether the construction of Primary Health Centre buildings and staff quarters at Poonimangadu village in Thiruvalangadu Panchayat Union, in Chingleput district has been completed?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No.

சிதம்பரம் பிச்சைக்காரர் விடுதி

* 533 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள பிச்சைக்காரர்கள் விடுதியில் எத்தனை பிச்சைக்காரர்கள் இருக்கின்றார்கள்?

(இ) அவர்களுக்குத் தொழிற்பயிற்சி ஏதேனும் அளிக்கப்பட்டு வருகிறதா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) 31.

(b) No. But training was imparted to the inmates in mat-weaving till January 1966.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Regarding this building at Poonimangadu, the construction of medical officers' quarters has been completed. The construction of the remaining building—hospital and staff quarters—has to be completed. The emergency provision need not be applied to it, as it is only a case of completion of an incomplete building. May I request the Government to consider this?

[30th March 1966

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Recently the hon. Member has given a representation regarding the Primary Health Centre and the Government are considering it.

Thandarai-Vaipur Road

*534 Q.—SRI A. ARUMUGAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether lands have been acquired for the formation of a road from Thandarai Railway Station to Vaipur in Tiruvannamalai taluk, North Arcot district;

(b) if so, the number of acres so acquired;

(c) whether the compensations have been awarded; and

(d) if not, the reasons therefor?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) முதல் (எ) வரை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகளைச் சேர்ந்த இந்தச் சாலைப் பணி, மாவட்டக் கழகம் நிறைவேற்றுவதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு பணியாகும். இது இப்போது, அரசாங்கப் பணியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஜமீன் அகரம் கிராமத்தில் நான்கு பர்லாங்கு நீளமுள்ள சாலையைத்தவிர எஞ்சிய சாலை அமைக்கப்பட்டு விட்டது. ஆனால், நில ஆர்ஜித நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. இச்சாலை அமைப்பில் ஏறக்குறைய 20 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்டுள்ளது. ஜமீன் அகரத்தி லுள்ள நிலத்தைத் தவிர மற்ற நிலத்தின் மதிப்பு நிச்சயிக்கப்பட்டு விட்டது. ஜமீன் அகரத்திலுள்ள நிலத்தைக் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்யவேண்டிவரலாம். நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவு செய்யப்படவில்லையாதலால், இந்த நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை.

தங்கப் பத்திரத் திட்டம்

*535 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்: }
திரு. செ. மாதவன்: } கனம் முதல்
திரு. கரு. சீமைச்சாமி: }

9-30 a.m. அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தங்கப் பத்திரத்திற்கு இதுவரை எவ்வளவு தங்கம் திரட்டப்பட்டிருக்கிறது, ஜில்லாவாரியாக?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன்: தங்கம் வசூலிக்கும்பொழுது தங்கத்தினுடைய காரட் எத்தனை என்று சரியாக பரிசீலிப்பதற்கு கிராமங்களில் வசதி செய்யப்படவில்லையே? ஆகவே, தங்கம் வசூலிக்கும்பொழுது இது சம்பந்தமாக தவறுகள் ஏற்படலாம். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா?

*[illegible]-535-ம் [illegible] இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

30th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் தவறுகள் ஏற்படுவதற்கில்லை. தங்கத்தை வாங்கிக்கொண்டு, உடனடியாக மதிப்பிட்டு பணம் கொடுப்பது என்பது இல்லை. யார் தங்கம் கொடுத்தார்கள், எங்கு கொடுத்தார்கள் முதலியவைகளையெல்லாம் பரிசீலனை செய்து தான் தங்கப் பத்திரம் வழங்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: தங்கப் பத்திரங்களுக்கு, திருப்பித் தரும்பொழுது தங்கம் கொடுக்கப்படுமா அல்லது பணமாகக் கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உயர்ந்தத் தங்கமாகக் கொடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த அறிக்கையை பார்க்கும்பொழுது தமிழ் நாட்டில் இருக்கிற தங்கத்தின் அளவுக்குப் பொருத்தமானதாக இதிலே உத்திரவாதம் தரப்பட்டதாகத் தெரியவில்லை. ஏராளமான கள்ளத் தங்கம் இருக்கிறது. கள்ளத் தங்கத்தை கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த சர்க்காரும், மத்திய சர்க்காரும் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கனம் அங்கத்தினரிடம் ஏதாவது தகவல் இருந்தால் அதையும் கொடுத்தால், மேற்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

*536 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் தங்கப்பத்திரத்தில் முதலீடு செய்யும் தங்கத்தை சென்னையிலேயே மதிப்பிடுவதற்கான வசதி செய்யும்படி மத்திய சர்க்காரிடம் கேட்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், என்ன பதில் கிடைத்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) There are only two Government Mints in the Country handling this work. The Government of India have therefore stated that they cannot arrange assays in each State, since they do not propose to go to private agencies for this work.

*537 Q.—SRI V. SANKARAN: }
SRI K. CHEEMAICHAMY: } Will the Hon. the Chief Minister be pleased to state the total quantity of gold invested by the Temples, Churches and Mosques respectively in the State for Gold Bond?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: According to the information furnished by the District Collectors, 1,49,348 grammes

[30th March 1966

of gold have been invested by the Temples, Churches and Mosques as detailed below :—

	GRAMMES
Temples	1,44,908
Churches	2,453
Mosques	1,987
Total ...	1,49,348

திரு. வை. சங்கரன் : இந்த விவரங்களைப் பார்த்தால், ஏதோ இந்த ராஜ்யத்தில் இந்துக்கள் மட்டும் தான் இருக்கிறார்கள் தற்காப்புக்காக, மற்றபடி முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் இதிலே பங்கு கொள்ளவில்லை, அவர்களுக்குப் பொறுப்பு இல்லை என்ற தவறான கருத்து ஏற்படுவதற்கு இடம் இருக்கிறது. ஆகவே முஸ்லிம், கிருஸ்துவ கோவில்களுக்கும் இதை எடுத்துக் காட்டி, அதிகமாக வசூல் செய்வதற்கு என் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தகவல்படி கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் இவர்களுடைய அறநிலையங்களும் கொடுத்திருப்பதால், அம்மாதிரி தவறுதலான கருத்து ஒன்றும் ஏற்படாது.

திரு. கரு. சீமைச்சாமி : எச். ஆர். ஈ., ஆண்டு ஸி. போர்டு கோவில்களை கட்டாயப்படுத்தி இந்தத் தங்கம் வசூல் செய்யப்படுகிறது. அதே மாதிரி முஸ்லிம் கோவில்கள், சர்ச்சுகளுக்கும் ஏதாவது போர்டு இருக்கிறதா ? அவர்களையும் இம்மாதிரி வசூல் செய்யும்படி அரசாங்கம் ஏதாவது உத்தரவிட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பதிலிருந்து கட்டாயப்படுத்தி வசூலிக்க வேண்டும் என்று சொல்லுகிற மாதிரி இருக்கிறது. புகார் சொல்லுகிறார்கள், இஸ்லாமிய, கிருஸ்துவ கோவில்கள் ஏன் கட்டாயப்படுத்தப்படவில்லை என்று. கட்டாயப்படுத்தினதாக என்னிடம் தகவல் இல்லை. எந்தத் தர்மகர்த்தாவும் அந்தமாதிரி புகார் சொல்லவில்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தகவல் இருந்தால் அதைத் தெரிவிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : கள்ளத் தங்கம் சம்பந்தமாக . .

MR. SPEAKER : The Hon. Member cannot put that question now as it does not relate to the main question. I am not allowing that question. Next question.

கோவை அரசினர் கலைக்கல்லூரி

*538 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பயிற்சி [illegible] பட்டப்படிப்பும் [illegible] மாணவர்களிடமிருந்து

30th March 1966]

சலுகைகள் அளிக்க வேண்டும் எனக்கோரி விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) கல்லூரிகளில், 1965-66, 1966-67-ம் ஆண்டுகளில் பி.ஏ. பட்டப்படிப்பைத் தமிழில் படிக்கும் மாணவர்களின் நலனை முன்னிட்டு முழுச் சம்பளச் சலுகைகள், பயிற்சி உதவிப் பணம் (Stipend) வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

State Educational Survey

*539 Q.—SRI V. SANKARAN : SRI T. P. ALAGAMUTHU : SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have proposed to conduct any State Educational Survey ; and

(b) if so, the details thereof and the benefits expected to accrue therefrom ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The Government have decided to participate in the Second All-India Educational Survey conducted under the auspices of the National Council of Educational Research and Training. They have set up a State Educational Survey Unit. The object of this Survey is to make the information collected by the First All-India Educational Survey (1957) up-to-date. The adequacy of the existing facilities at the primary and the secondary level is proposed to be assessed and a plan for the future covering these sectors is likely to be evolved as a result of this Survey.

திரு. வை. சங்கரன் : இதுவரைக்கும் எவ்வளவு வேலைகள் முடிவடைந்திருக்கின்றன ? முற்றிலும் முடிவதற்கு எத்தனைக் காலம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I know who are the officers entrusted with the work of collecting these particulars at the level of the District Educational Officer?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டெப்யூடி இன்ஸ்பெக்டர் கிரேடில் ஒவ்வொரு எஜுகேஷன் மாவட்டத்திற்கும் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஜில்லா கல்வி அதிகாரியினுடைய காரியாலயத்தில் வேலை செய்வார்கள். ஜில்லா கல்வி அதிகாரிகள் இதையெல்லாம் மேற்பார்வையிடுவார்கள்.

[30th March 1966

Elementary Schools in Panchayat Union Councils

* 540 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any programme to improve the equipments such as furniture, blackboards, maps, etc., in the Elementary Schools managed by Panchayat Union Councils;

(*b*) if so, the details of the same; and

(*c*) whether any standard has been prescribed for equipments in the Elementary Schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The Government have decided to provide Rs. 3.00 lakhs per annum as assistance towards expenditure on furniture and equipment for Elementary Schools of Panchayat Union Councils. The Maximum fixed for each Panchayat Union is Rs. 1,200 per annum.

(2) Besides, it has also been proposed to give equipment grant at the rate of Rs. 500 for Lower Elementary Schools and at Rs. 1,000 for Higher Elementary Schools during 1966–67. Panchayat Union Schools also will be benefited by this scheme.

(*c*) Yes.

பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கட்டடம்

* 541 கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த இடைக்காட்டூர் கிராமத்தில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கட்டடம் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இடிந்து விழுந்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணமென்ன?

(உ) இக்கட்டடம் எப்பொழுது கட்டப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இடைக்காட்டூரிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள தத்திகுளத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தின் கூரை 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சிறிது சேதமடைந்தது.

(இ) கடுங் காற்றும், பெருமழையும்தான் இந்தச் சேதத்திற்குக் காரணம்.

(உ) அந்தக் கட்டடம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது.

Last Grade Government Servants

* 542 *Q.*—SRI A. KUNJAN NADAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether integration of services has been completed in the case of Last Grade Government Servants in Kanyakumari district allotted from the former Travancore-Cochin State;

30th March 1966]

(*b*) whether the Government have received recently any memorandum from the Last Grade Government Servants' Association, Kanyakumari district; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) No.

(*c*) Does not arise.

சரஸ்வதி உயர்தொடக்கப்பள்ளி, மதுரை

* 543 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் இடிந்து விழுந்த மணிநகரம் சரஸ்வதி பள்ளியை மீண்டும் நடத்தவேண்டும் என்று கோரி அப்பள்ளியின் நிர்வாகியிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The Manager and Correspondent of the Sri Saraswathy Higher Elementary School, Maninagaram, Madurai, addressed the Government to restore recognition for the School with effect from the academic year 1964–65. The Government decided not to accede to the request.

திரு. கரு. சீமைச்சாமி: இந்த இடிந்து விழுந்த பள்ளிக்கூடக் கட்டடம் அரசாங்க மான்யத்தை வாங்கிக் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் சரியாகக் கட்டப்படவில்லையாதலால், இப்படி மான்ய மாக வாங்கிய தொகையைத் திருப்பி வாங்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் மான்யம் எவ்வளவு கொடுத்தது, கொடுத்ததா, எப்படி கட்டப்பட்டது என்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விடை அளிக் கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: இடிந்து விழுந்த இந்த மணிநகரம் பள்ளி, இதே போன்று சென்னையில் வெடி மருந்து சாலை ஆகிய சம்பவங்களில், 60, 70, பேர்கள் மரணம் அடைந்தார்கள். நாம் வழக்குப் போட்டாலும், இவைகளுக்கெல்லாம் நமக்கு நியாயம் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் சர்க்கார் தரப்பு வக்கீலின் வாதத்தன்மை குறைவா அல்லது சட்டத்தில் ஏதாவது தவறு இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கோர்ட்டில் வழக்குப் போட்டால், அதற்கு மேலே விமர்சனம் செய்வது முறையல்ல.

[30th March 1966

UNSTARRED QUESTIONS.

Stage Carriage Permits

4 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of stage carriage permits granted by the State Transport Authority and the Regional Transport Authorities to private operators in the State during 1964 and 1965 districtwise?

A.—

Name of district.	Number of permits granted during	
	1964.	1965.
(1)	(2)	(3)
1 Chingleput	32	8
2 Coimbatore	22	6
3 Dharmapuri	Nil.	Nil.*
4 Kanyakumari	Nil.	Nil.
5 Madurai	26	2
6 North Arcot	26	7
7 Ramanathapuram	10	9
8 Salem	11	Nil.
9 South Arcot	7	6
10 Thanjavur	1	5
11 The Nilgiris	3	10
12 Tirunelveli	21	12
13 Tiruchirappalli	17	20
14 State Transport Authority Madras.	Nil.	Nil.

* Separate Regional Transport Officer is functioning from 2nd October 1965 on bifurcation of the Salem district.

5 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of stage carriages other than spare buses, having primary permits in North Arcot district till 31st October 1965 together with their registration numbers, name of the route, seating capacity, total mileages done and the quarterly tax paid for each bus?

A.—A statement [a] is appended.

வடார்க்காடு ஜில்லாவில் மேம்பாலங்கள்

6 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு ஜில்லாவில் ஓடும் நதிகளில் எத்தனை நதிகள் மீது மேம்பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன?

(இ) எத்தனை நதிகள் மீது காஸ்வேக்கள் கட்டப்பட்டிருக்கின்றன?

(உ) எந்தெந்த நதிகள் மேம்பாலமோ, காஸ்வேக்களோ இல்லாமல் இருக்கின்றன?

(எ) அவைகளில் மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

a Printed as Appendix VIII on pages 524–547.

30th March 1966]

பதில்கள்.—(அ) முதல் (எ) வரை: சபைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

A.—(a) to (d):—A statement [a] is placed on the table of the house.

நூல்நிலையங்களுக்கான புத்தகங்கள்

7 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ம் நிதி ஆண்டில் ஆகஸ்டு மாதம் முடிய தமிழக உயர்நிலைப் பள்ளியில் உள்ள நூல் நிலையங்களுக்கும் மாவட்டக் கிளை நூல்நிலையங்களுக்கும் அரசாங்கம் வாங்கித்தந்த புத்தகங்களுக்குச் செலவழித்தத் தொகை எவ்வளவு?

(இ) வாங்கித் தந்த புத்தகங்களின் பெயர்கள், அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் பெயர்கள், வெளியிட்ட கம்பெனியின் பெயர்கள் யாவை?

பதில்.—

(அ) ஒன்றும் இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

(a) Nil.

(b) Does not arise.

திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள்

8 கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து சென்னை மாநிலத்திற்கு வேலை மாற்றி வந்த பட்டதாரி ஆசிரியர்கள் மொத்தம் எத்தனைபேர்?

(இ) அவர்களுள் எத்தனை பேருக்குத் தர உயர்வும், சம்பள உயர்வும், பதவி உயர்வும் அளிக்கப்பட்டுள்ளன?

(உ) அவர்கள் அனைவருக்கும் தர உயர்வு, சம்பள உயர்வு அளிக்கப்படாததன் காரணம் யாது?

பதில்.—(அ) 247; (இ) 23 பேருக்கு, மேல் பதவிக்கான உயர்வு அளிக்கப்பட்டது.

(உ) திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து தமிழ்நாடு அரசாங்கப் பணிக்கு அனுப்பப்பெற்ற (allotted) ஏனைய அதிகாரிகள் அனைவரும் அவர்கள் இதற்கு முன் வகித்து வந்த பதவிகளுக்கு இணையான பதவிகளான துணை மேற்பார்வையாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் தரம்-II என்பன போன்ற பதவிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தொடர்ந்து அதே பதவி

a Printed as Appendix VIII on pages 548–558.

[30th March 1966

களில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் உயரிய சென்னைச் சம்பள விதங்கள் அகவிலைப்படி விதங்களில் சம்பளம் பெறுகின்றனர். அதாவது 1-6-1960-க்கு முன்னர் ரூ. 85—5—125—1-6-1960-லிருந்து ரூ. 140-5-10-250 என்கிற உயரிய சம்பள விதத்தில் 1-6-60-லிருருந்து ரூ. 140-5-10-250 என்கிற உயரிய சம்பள விதத்தில் சம்பளம் அளிக்கப்படுகிறது. தங்கள் பதவிகளில் 1-வது தரத்திற்கோ அல்லது இத்துறையில் ஏனைய யாதொரு பதவிக்கோ அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது பற்றி, மற்றவர்களுடன் அவர்களுடைய முறை வரும்பொழுது விதிகளுக்கிணங்க அதுகுறித்து யோசிக்கப்படும்.

(a) 247.

(b) Twenty-three persons have been promoted to higher categories.

(c) All the other allotted officers who were absorbed in the equated category of "Deputy Inspectors, School Assistants and Headmasters Grade II" continue to be in those categories. They have all been given the benefit of the increased Madras Scale of pay and rates of Dearness allowance (i.e.) Rs. 85–5–125–10–175 before 1st June 1960 and Rs. 140–5–180–10–250 from 1st June 1960. Their cases for promotion to Grade I in the category or to any other posts in the Service will be considered in their turn along with others in accordance with the rules.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

INVALIDATION OF THE MADRAS URBAN LAND TAX ACT BY THE HIGH COURT.

திரு. செ. மாதவன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட சென்னை நகர்ப்புற நிலவரிச் சட்டம் செல்லாது என்று அண்மையிலே உயர் நீதி மன்றத்தினால் தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டது. இப்படி தீர்ப்பளிக்கப்பட்டு சில நாட்கள் ஆகிவிட்டன. இதைப்பற்றி ஏதாவது அரசாங்கம் அறிவிக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். இதன் மூலம் கிட்டத்தட்ட ரூ. 45 லட்சம் வரி வசூலிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு கூறப்பட்டுவிட்டதால், இந்த ரூ. 45 லட்சத்தைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இது போன்ற நிலைமைகளில் ஏற்கனவே ஷுகர் கேன் செஸ் வாலிடேஷன் ஆக்ட் கொண்டு வந்தார்கள். அப்பொழுது இது போன்ற சூழ்நிலைகள் ஏற்பட்டன. அதே போன்று இந்தச் சட்டத்தின் கீழும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை கொண்டுவர விரும்புகிறேன்.

30th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டார்கள், இந்தச் சட்டம் இந்த மன்றத்தினால் இயற்றப்பட்டது என்றும், உயர் நீதி மன்றம் அண்மையில் அதில் ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறது என்றும், அதன் மீது உடனடியாக அரசாங்கம் ஏதோ செய்யவில்லை என்றோ அல்லது செய்ய வேண்டும் என்றோ விவாதிக்க இடம் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலையில் இதற்கு மேல் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும், சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய, இடம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். ஹைகோர்ட்டார் தீர்ப்புக் கொடுத்தால், அதை ஏற்றுக் கொண்டு சட்டத்தை எப்படி மாற்றுவது என்பதையும் யோசிக்க வேண்டும். இதெல்லாம் ஒரு நாள், இரண்டு நாளில் முடிவு எடுக்கக் கூடியது அல்ல. சட்ட ஆலோசகர்களைக் கலந்து ஆலோசித்து, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டும். இதில் அரசாங்கத்தின் மீது புகார் சொல்ல ஒன்றும் இடம் இல்லை. இதில் விவாதிக்கவும் ஒன்றும் இல்லை. ஆகவே, இது ஒத்திவைப்பு பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவிக்கிறேன்.

MR. SPEAKER: Consent is withheld.

III.—CALLING ATTENTION TO CLOSURE OF INDUSTRIES DUE TO SHORTAGE OF ELECTRICITY.

SRI M. KALYANASUNDARAM: Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, partial closure of industries and dislocation in the State due to shortage of electricity. I request the Hon. Minister to make a statement.

* THE HON. SRI R. VENKATARAMAN: Owing to the thorough failure of the South West Monsoon in 1965, the hydel storages in the State were not filled up last year and they had only about 15 per cent of the full reservoir conditions by the middle of October 1965. It was found that this storage, would not be enough to meet the requirements of power till the onset of the next South West Monsoon. In order to conserve power, a conference of the industrialists of the State was held on 18th October to discuss the situation. It was decided to impose a cut on the power consumption of all industries except certain essential industries, with effect from 1st November 1965. In the case of H.T. Industrial Consumers, a cut of 25 per cent of the energy consumed was imposed. The cut in the Madras Thermal area was restricted to 20 per cent. In the case of low tension supply the cut was fixed at 25 per cent both in the hydel and thermal areas. Industries having their own generators were allowed to use them and the power so produced was exempted from consumption tax.

[Sri R. Venkataraman] [30th March 1966

We have negotiated with the Government of Mysore and arranged for the purchase of 400 Million Units of power. This has enabled the Government to reduce the cut to 10 per cent in the case of certain continuous process industries, like cement, sugar, aluminium and newspapers and domestic bulk supplies. Additional power was given to many units, engaged in defence production and other vital lines of production. All new industries were given power for the night shift. These exemptions resulted in reducing the effective cut to about 7 per cent.

As a result of the power cut, there has been a fall in production and consequent lay off of the labour in the industry. The fall in production has been estimated at about 5 per cent in the continuous process industries and about 10 to 15 per cent in other industries. But this cannot be attributed solely to the power cut, as there were other factors like the shortage of raw materials, difficulties in foreign exchange and tight money market conditions that affected the industrial production. As regards textiles, the accumulation of stocks was an important factor which, along with the power cut, reduced the production and caused closure of four mills and resulted in the retrenchment of about 350 employees. Actual figures about the short fall in production and retrenchment and lay-off of workers are not available.

This year's power failure has once again pointed out to the need to increase the thermal content of the power grid in the State in the context of the industrial advancement of our State. The Ennore plant and the Kalpakkam plant, the Neyveli Expansion and the Tuticorin thermal plant will, to some extent, meet this imbalance between the hydel and the thermal generations, towards the end of the fourth plan.

IV.—ANNOUNCEMENTS.

(1) Nomination to Business Advisory Committee.

MR. SPEAKER : Under Rule 193 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following members to be members of the Business Advisory Committee :—

1. Sri K. Parthasarathy, Deputy Speaker.
2. Hon. Sri M. Bhaktavatsalam, Leader of the House.
3. Hon. Sri V. Ramaiah.
4. Hon. Sri P. Kakkan.
5. Sri P. Ramachandran, Government Whip.
6. Sri V. R. Nedunchezhian.
7. Sri Saw. Ganesan.
8. Sri M. Kalyanasundaram.
9. Sri K. R. Nallasivam.
10. Sri T. P. Elumalai.

The Speaker is the ex-officio Chairman of the Committee.

(2) Nomination to Rules Committee.

MR. SPEAKER : Under Rule 229 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members of the Madras Legislative Assembly to be members of the Rules Committee :—

1. Hon. Sri M. Bhaktavatsalam.
2. Hon. Sri V. Ramaiah.
3. Sri V. R. Nedunchezhian.
4. Sri Saw. Ganesan.
5. Sri T. L. Sasivarna Thever
6. Sri K. R. Nallasivam
7. Sri P. Ramachandran
8. Sri K. Parthasarathy.
9. Sri M. Kalyanasundaram.
10. Sri S. Madhavan.
11. Sri K. Narayanaswami Pillai.
12. Sri N. Ramachandra Reddi.
13. Sri G. Rajaram.
14. Sri R. Ponnappa Nadar.

The Speaker is the ex-officio Chairman of the Committee.

(3) Nomination to Committee on Government Assurances.

MR. SPEAKER : Under Rule 214 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members of the Madras Legislative Assembly to be members of the Committee on Government Assurances for the year 1966–67 :—

1. Sri A. Raghava Reddi.
2. Sri A. Arumugham.
3. Sri A. S. Dakshinamoorthi Gounder.
4. Sri S. Nanjunda Row.
5. Sri Rama. Arangannal.
6. Sri N. Sountharapandian.
7. Sri A. Swamidhas.

Under Rule 215 (1) of the said rules, I hereby nominate Sri Rama. Arangannal to be the Chairman of the Committee.

(4) Association of Council Members with the Committee on Subordinate Legislation.

MR. SPEAKER : I have to announce to the House that the following three Members have been nominated by the Legislative Council to be associated with the Committee on Subordinate Legislation of the Legislative Assembly for the financial year 1966–67 :—

1. Sri K. Balasubramanya Ayyar.
2. Sri S. Jayarama Reddiar.
3. Sri M. Raja Iyer.

[30th March 1966

V.—PRESENTATION OF REPORTS.

(1) REPORT OF THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI K. PARTHASARATHY : Sir, I rise to present the thirteenth report (1965–66) of the Committee on Subordinate Legislation.

(2) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI P. RAMACHANDRAN : Sir, I rise to present the first report of the Committee on Estimates (1965–66) on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report of the Madras Dairy and Milk Project.

(3) REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, அரசாங்க உறுதி மொழிக் குழுவின் எட்டாவது அறிக்கையைச் சபை முன் சமர்ப்பிக்கிறேன்.

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS CO-OPERATIVE SOCIETIES (AMENDMENT) BILL, 1966 (L.A. BILL NO. 2 OF 1966).

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, I move—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, * 1966 (L.A. Bill No. 2 of 1966) be taken into consideration."

It is a great privilege to say that our State is one of the leading States in spreading the co-operative movement for the benefit of the citizens. Co-operative societies have been organised in our State in respect of all walks of life from Co-operative farming to Industrial Co-operatives and from hand-pounding, bee-keeping co-operative societies to co-operative sugar mills and co-operative spinning mills, etc. The principle in organising the co-operatives is "Each for all and all for each". The Co-operative societies are organised mainly for the promotion of thrift, self-help and mutual aid among persons with common economic needs so as to bring about better living. The Co-operative Societies are managed by the elected members of the respective societies, elected by themselves and from among themselves. In certain cases, that too in the preliminary stages of a society or when the by-laws of the society provide that the management of the society may be held by the persons nominated by the Registrar or the Government, the Committee members will be nominated by the Registrar or the

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 1st February 1966.

Government as the case may be. In all other cases, the management of societies is in the hands of the members of the Committee of the Co-operative Societies constituted according to their by-laws. It is regrettable that a number of cases have come to the notice of the Government where funds of the co-operative societies have been misappropriated by their office-bearers. Government consider it necessary to take deterrent action to check this tendency. If this tendency is allowed to continue, the co-operative movement will to a great extent be jeopardised. Therefore it has been decided to introduce a new section in the Madras Co-operative Societies Act, 1961 (Madras Act 53 of 1961) empowering the Registrar to remove the committee members of a co-operative society who are responsible for any irregularity in the working of the society or for acts of omission or commission in regard to the transactions of the society and prohibiting such persons from becoming committee members of any co-operative society in future.

To have a check over the decisions of the Registrar and to review the orders of the Registrar in this regard, a provision for appeal against the orders of the Registrar under the proposed new section has been made by suitably amending section 96 of the Act. A consequential amendment to section 28 (1) of the Act has also been proposed.

Subsequent to the moving of the amendment, it has been found that provision should be made to enable action being taken against past members also wherever necessary. This has also been proposed by way of further amendment.

I commend the motion for the acceptance of the House.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 2 of 1966) be taken into consideration".

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move—

'That the Madras Co-operative Societis (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 2 of 1966) be referred to a Select Committee consisting of..............Members of the House.'

I welcome this measure. Certain cases of malpractice have come to the notice of the Government. The object of this Bill is to prohibit such malpractices and to make the people in the co-operative movement discharge their duties properly and efficiently and not demoralise themselves by misappropriating funds of co-operative societies, tampering with the records or fraudulently retaining cash balances with them. Regarding the other provisions the power taken under this Amending Act is very arbitrary and very wide in scope. For the purpose of taking action against a committee member, the Registrar will have to depend upon the

[Sri C. Chiranjeevulu Naidu] [30th March 1966

reports submitted by the Senior Inspector of Co-operative Societies, Co-operative Sub-Registrar and Deputy Registrar of Co-operative Societies. Their report is deemed adequate for taking action for removing a committee member of a co-operative society. When we have entrusted the work of managing panchayats or co-operative societies to non-officials, my humble opinion is that the members or presidents should not be allowed to handle cash. There is scope for misappropriation of funds because the president is allowed to disburse loans. I have been requesting the Government to appoint co-operative supervisors as secretaries for the management of societies and see that the presidents do not handle the funds of the societies. Instead of doing that, we have now come forward to amend the existing Act to empower the Registrar to remove the president. If any president or member misappropriates the funds, fraudulently retains cash balances or commits breach of trust, I quite agree that he should be removed. Under any circumstances, he cannot be removed for not discharging his normal duties or functions noticed here and there. The scope given to the Department to remove a committee member is very wide. Even to-day it cannot be said that all the incumbents at the lower level are discharging their duties satisfactorily and in conformity with the spirit of the provisions of the Co-operative Societies Act. Under the Representation of the People Act, if a candidate is proved to have resorted to corrupt practices, he is disqualified from contesting election for six years. Here we are giving power to the Registrar not only to remove a member but also to disqualify him from holding office in any co-operative society in future. I welcome the removal and disqualification if a member has misappropriated funds, retained cash balances of the society fraudulently, or committed breach of trust, but not for the simple reason that he has not been carrying out the duties entrusted to him. He is not a paid servant to be treated in that manner. There are primary societies, district societies and the State or apex society. In the district and State societies we have appointed departmental people to work as secretaries. To-day departmental people are working as secretaries in many co-operative institutions. If there is mismanagement, the responsibility for it is not only on the committe members but also on the secretary who is a Government servant. The power given to the Registrar under this Bill is very wide.

MR. SPEAKER: Let the hon. Member make out a case for referring the Bill to a Select Committee. He can go into details when the clause by clause consideration is taken up.

SRI C. CHIRANJEEVULU NAIDU: There are certain defects in the Co-operative Societies Act. There has to be retirement of one-third of the number of members. Whatever might have been the object of the Government, the provision has not served the [illegible]. Now we are seeing the same members continuing to [illegible] Every eleventh month, we are having election. When-

30th March 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

member ceases to be a member at the level of the primary society, he ceases to be a member at the apex level also. All these things are there. I request the Government to bring forward a comprehensive amending Bill.

* திரு. இராம. அரங்கண்ணல்: கனம் தலைவர் அவர்களே,
கூட்டுறவுத் துறை சம்பந்தமாக ஏராளமான புகார்கள் கூறப்பட்டு
வருவதை ஏற்று, நிறைந்த அளவில் இல்லாவிட்டாலும், இந்த
அளவுக்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதை, நல்ல
வைகளை ஆதரிக்கவேண்டும் என்கிற எங்களுடைய கட்சியின்
பண்புக்கேற்ப, நான் இதை வரவேற்க்க கடமைப்பட்டிருக்
கிறேன். ஆனால் இந்தத் திருத்த மசோதாவினைக் கூட செலக்ட்
கமிட்டிக்கு விடவேண்டும் என்று இங்கே கனம் உறுப்பினர் திரு.
சிரஞ்சீவுலு நாயுடு அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை நான்
எதிர்க்கிறேன். இது கூட்டுக் கமிட்டிக்கு விட்டு ஆலோசனை
செய்யவேண்டிய அளவுக்கு உள்ள ஒரு பெரிய பிரச்னை அல்ல.
கொண்டுவந்திருக்கிற திருத்தம் ஓரே ஒரு விதி சம்பந்தமாக,
அதுவும் அவசரமாகச் செய்யவேண்டும் என்கிற எல்லோ
ருடைய கருத்தையும் ஏற்கிற வகையில் கொண்டுவரப்பட்டிருக்கிற
திருத்தமாக இருக்கும் காரணத்தால் கனம் உறுப்பினர் திரு.
சிரஞ்சீவுலு நாயுடு அவர்களுடைய திருத்தத்தை நான் எதிர்க்
கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே,
கூட்டுறவு இயக்கம் வளர்ந்து பல துறைகளிலே பரவி வருவதைப்
பற்றிக் கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, அந்த
இயக்கத்தின் கௌரவத்தை உயர்த்தி, அந்த இயக்கத்தில்
மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படிச் செய்ய வேண்டியது
அவசியம். இப்பொழுது கூட்டுறவு இயக்கத்தில் வரக்கூடிய
குறைபாடு, விசாரணை, குற்றச்சாட்டு இவற்றையெல்லாம் பார்க்கும்
போது, கூட்டுறவு இயக்கத்திலே பலர் புகுந்து கொண்டு கூட்டுறவு
இயக்கத்தையே பாழ்படுத்தக் கூடிய நிலைமை ஏற்படுத்திக்கொண்
டிருக்கிறார்கள். அத்தகையவர்களை நீக்க வேண்டியது அவசியமாக
இருக்கிறது என்பதை உணர்ந்து தான் இந்தத் திருத்தம்
இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.
1961-ம் ஆண்டில் கூட, அந்தச் சட்டத்தை இயற்றும்
போதேகூட, இந்தப் பிரச்னை கவனிக்கப்பட்டது. கூட்டுறவு
இயக்கம் சுதந்திரமாக, அதிகாரிகளுடைய குறுக்கீடு இல்லாமல்
இயங்கவேண்டும் என்பது உயர்ந்த நல்ல தத்துவம்தான்.
இருப்பினும், கூட்டுறவு இயக்கத்தின் நன்மையை முன்னிட்டு,
அதிகாரிகளுக்கு ஓரளவுக்கு அதிகாரம் கொடுக்க
வேண்டியிருக்கிறது. இந்தத் திருத்தம் அதிகமான அதிகாரத்தை 10-00 a.m.
ரிஜிஸ்திராருக்குக் கொடுக்கிறதே என்பது மனதிலே ஒரு சந்தே
கத்தைக் கொடுக்கிறது. இருப்பினும் என்ன பண்ணுவது?
கூட்டுறவு இயக்கத்தினுடைய எதிர்காலத்தை முன்னிட்டு ரிஜிஸ்தி
ராருக்கு இத்தகைய ஒரு அதிகாரம் இருக்கவேண்டிய அவசியம்
இருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து. [illegible]

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [30th March 1966

இல்லாமல் டிஸ்குவாலிஃபிகேஷன் ஆக்கிவிடுவது என்று இருக்கிறது. கூட்டுறவு அதிகாரிகளும் சில சமயங்களில் தவறு செய்யலாம். அதற்கு ஒரு பாதுகாப்பு வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். தவறு செய்தவர்கள்கூட சட்டசபைக்கோ பார்லிமெண்டுக்கோ அல்லது மற்ற தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஸ்தாபனங்களுக்கோ நிற்பதற்கு காலவரையறை கொடுக்கப்படவேண்டும். இந்த டிஸ்குவாலிஃபிகேஷனுக்கும் ஒரு காலவரையறை இருக்க வேண்டும். அது இல்லாமல் இப்பொழுது செய்து இருக்கிறார்கள். அதற்கும் காலவரையறை கொடுத்துவிட்டால் மட்டும் போதும். அமைச்சர் அவர்களே, அதற்கு ஒரு திருத்தம் கொடுத்து, மூன்று வருஷம் அல்லது ஐந்து வருஷம் என்று காலவரையறை கொடுத்து டிஸ்குவாலிஃபிகேஷன் என்று சொல்லி இரண்டாவது செக்ஷனுக்குத் திருத்தத்தைக் கொடுப்பார்களானால் பொருத்தமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் தலைவரவர்களே, காலவரையறை இல்லாமல் இருக்கின்ற காரணத்தால், அதற்கு ஐந்து ஆண்டு அல்லது மூன்று ஆண்டு என்று காலவரையறையை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எப்பொழுதும் ஒருவருக்குக் கட்டுப்பாடு விதிக்கமுடியாது என்ற காரணத்தாலே, சட்டப்படி இந்த டிஸ்குவாலிஃபிகேஷன் செல்லுமா, செல்லாதா என்ற சட்டப் பிரச்னை எழும். எத்தகைய குற்றங்களைச் செய்தவர்களுக்குக்கூட, கொலைக்குற்றம் செய்தவர்களுக்குக்கூட, மாரல் டெலின்குவன்ஸி என்ற அளவில் தவறு செய்தவர்களுக்குக்கூட பொதுத் தேர்தலில் நிற்கவேண்டுமென்றால் குறிப்பிட்ட காலம் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டுகள் அல்லது ஐந்து ஆண்டுகள் என்று, எத்தகைய பெரிய தவறுகளைச் செய்தவர்களுக்கே கூட காலவரையறை வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதிலே வருகின்ற தவறும் ஒரு மன்னிக்கமுடியாத தவறு தான், நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், ஒரு காலவரையறை இல்லாத காரணத்தால், இத்தகைய ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தாலும், அந்தத் திருத்தம் உயர்நீதிமன்றங்களுக்கு எடுத்துச்செல்லப்படும்பொழுது, இந்தச் சட்டம் செல்லாது என்றுகூட தீர்ப்பு அளித்துவிடலாம். ஆகவே, ஐந்து ஆண்டுகள், அல்லது பத்து ஆண்டுகள் என்று காலவரையறை நிர்ணயித்தால் இதை ஒரு நல்ல சட்டமாக அமைக்கமுடியுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

புலவர் கா. கோவிந்தன் : கனம் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை நம்முடைய நாட்டில் நல்ல பணிகளை ஆற்றவேண்டிய ஒரு துறையாகும். ஆனால், இந்தத் துறை இப்பொழுது அதற்கு நேர்மாறான முறையில் நடந்துசெல்கிறது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 'என் [illegible] நம்பிக்கையைக் கூட்டுறவுத் துறையிலே விட்டுவிட்டேன், [illegible] விட்டுவிட்டேன்' என்று சொன்னார்கள்.

30th March 1966]

கனம் சபாநாயகர் : இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதாவின் மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினருக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூட்டுறவு இயக்கத்திலேயே நம்பிக்கையை விட்டுவிட்டேன் என்று நான் சொல்லவில்லை.

புலவர் கா. கோவிந்தன் : கேடுகள் இருக்கின்றன, ஊழல்கள் மலிந்துவிட்டன என்ற செய்திகளைப் பலரும் கூறினார்கள். ஆளுங் கட்சியினரும் கூறினார்கள், எதிர்க்கட்சியினரும் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் அதை மறுக்கின்ற நேரத்திலேதான் தங்களுடைய காலத்தைக் கழித்தார்கள். இப்பொழுது அதை விட்டுவிட்டுப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற உணர்வோடு அமைச்சர் அவர்கள் திருத்தம் கொண்டுவருவதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுகூட குதிரை திருட்டுப்போன பிறகு லாயத்தைப் பூட்டுகின்ற முயற்சியாகும். குதிரை திருடு போகாமல் இருப்பதற்கு வழிவகை செய்யவில்லை. திருட்டுகள் நடைபெறாமல், ஊழல்கள் நடைபெறாமல் இருக்கவேண்டுமானால், அமைச்சர் அவர்கள் செய்யக்கூடிய திருத்தம் ஒரு முறை நிர்வாகத்திற்கு வந்தவர்கள் தொடர்ந்து இருக்கலாம் என்பதை அறவே நீக்கிவிட்டு, இடையிலே ஒரு காலவரையறையை ஏற்படுத்தி, ஒரு குறிப்பிட்ட பீரியடுக்காவது அவர் வரக்கூடாது என்று வைத்தால் நல்லது. அவர்கள் ஐந்து ஆண்டுக் காலம் அல்லது மூன்று ஆண்டுக் காலம் இருக்கக்கூடாது என்று ஒரு கால எல்லையை வைத்துவிட்டால் அது நல்ல வழியாக இருக்க முடியும். அந்த மாதிரித் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : கனம் சட்டமன்றத் தலைவரவர்களே, கூட்டுறவு இயக்கத் திருத்த மசோதாவைப்பற்றி விளக்குகின்ற நோக்கத்தில் என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்கலாம் என்று இருக்கிறேன். ஒரு அங்கத்தினர் குற்றம் செய்துவிட்டால், காலவரையறையில்லாமல் நீக்கிவிடலாம் என்று இருக்கிற சட்டத்தை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். ஆனால், இன்னும் வார்த்தைகள் கடினமாகப் போடவேண்டுமென்பது என்னுடைய கருத்து. 'ரிஜிஸ்திரார் மே டிஸ்குவாலிபை' என்று இருக்கிறது. அதிலே 'மே'-யை எடுத்துவிட்டு 'ஷல்' என்று போடவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். குற்றம் செய்துவிட்டார் என்று ஏற்பட்டுவிட்டால் அவரை ரிஜிஸ்திரார் இஷ்டப்பட்டால் தள்ளிவிடலாம் என்றபடி தான் இப்பொழுது சொல்லப்பட்டிருக்கிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இதில் அரசியல் பிரச்னைகள் எல்லாம் வரும். ஆகவே, இதை மாற்ற வேண்டும். 'மே' மீன்ஸ், 'மே நாட் ஆல்ஸோ' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். ஆகவே 'மே' என்பதை எடுத்துவிட்டு 'ஷல்'

[திரு. ப. சன்முகம்] [30th March 1966

என்ற வார்த்தையைப் போடவேண்டுமென்பது கட்டாயமாகப் போடவேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. இன்னும் இந்தச் சட்டத்தைக் கடுமையாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற கூட்டுறவுத் திருத்த மசோதாவைப்பற்றி என்னுடைய கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் குறிப்பிட்ட உரையைத் தொடர்ந்து நானும் சில வார்த்தைகள் கூறலாம் என்று கருதுகிறேன். இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டியதில்லை, இப்பொழுதே நிர்ணயிக்க வேண்டுமென்று உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் குறிப்பிட்டார்கள். சுயேச்சை உறுப்பினர். இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொன்னார்கள். இந்த மசோதாவை ஏன் கொண்டுவருகிறோம் என்பதைப்பற்றிய விளக்கங்களையும், நோக்கங்களையும், காரணங்களையும் அமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்—'A number of cases have come to the notice of the Government where the funds of the Co-operative Societies have been misappropriated by their office-bearers. It is considered necessary that deterrent action should be takn to check this tendency. It is, therefore, proposed to introduce a new section.....' என்று கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்குக் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி அமைச்சர் அவர்களும் மசோதாவைப் பிரேரபித்துப் பேசுகின்ற நோக்கிலே தெளிவாகச் சொன்னார்கள். கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் சமதர்ம அடிப்படையில் ஏழைகள் எல்லோருக்கும் உற்பத்திச் சாதனங்களும், மற்ற அமைப்புக்களில் வசதிகளும், செல்வ ஆதாரங்களும் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்பதிலே ஈடுபடுகின்ற ஒரு கட்சி. இதைப் பற்றி எங்களுடைய கட்சி இங்கே விமர்சிக்கின்ற நோக்கிலே அரசாங்கத்தைக் குறைகூறவேண்டும், அரசாங்கத்தின் மீது தவறாகப் பழிசுமத்தவேண்டுமென்ற வகையில் அல்லாமல், புனிதமான ஸ்தாபனமாக உருவாக்குகின்ற முறையிலே, சோஷலிஸ ஸ்தாபனத்திற்கு அடித்தளமாக இருக்கவேண்டுமென்ற முறையிலே தான் எங்களுடைய விமர்சனங்கள் எல்லாம் அமைந்திருக்கின்றன. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் பல காலமாக எடுத்துரைத்து இருக்கிறோம். திரு. சண்முகம், திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. மாதவன், திரு. கோவிந்தன் போன்றவர்கள் எல்லாம் இந்தத் தொடரிலேயும் சரி, இதற்கு முன்பும் சரி, கூட்டுறவு அமைப்பு புரையோடுகின்ற நிலையில் இருக்கிறது என்பதையும், ஊழல்களும், மோசடிகளும் இருக்கின்றன என்றும் சொன்ன போது, அமைச்சர் அவர்கள் ஏதோ பாலில் விஷம் விழுந்து விட்டது என்றால் பாலே கெட்டுவிட்டதா, எங்கோ புரையோடி விட்டால் . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படியானால் பாலே கெட்டுவிடுமே.

30th March 1966]

திரு. கே. ஏ. மதியழகன் : ஏதோ ஒரு இடத்தில் அந்த மாதிரிச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன், அதைப்பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எங்கேயோ ஊழல்கள் இருக்கின்றன என்றால் பாலில் கொஞ்சம் விஷம் போட்டாலும் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது பல பெருச்சாளிகளுக்கும், தங்களுடைய சுயநலத்தையும் சுகத்தையும் கருதி, அதற்காக சுகபோக மாளிகைகள் அமைத்துக் கொள்ள வேண்டுமென்று நினைப்பவர்களுக்கும் நிலைக்கலங்கிவிட்டது. இந்த விதமான கருத்துக்கள் எல்லாம் இங்கே தெரிவிக்கப்பட்டன. ஆனால், ரொம்பவும் மகிழ்ச்சி, அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதின்மூலம் அவர்கள் நாங்கள் கூறிய அடிப்படையை ஒத்துக்கொள்ளுகிறார்கள், கையாடல்கள், நடைபெற்றன, ஊழல்கள் நடைபெற்றன, மோசடிகள் நடைபெற்றன, பல இடங்களில் என்பதை, அந்தப் பேருண்மையை ஒத்துக்கொள்கிறார்கள். அது மட்டுமல்ல, இது எதிர்க்கட்சிக்குக் கிடைத்த முதல் வெற்றி. 'டெடரன்ட்' ஆக நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பொருள் என்ன ? அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று சொன்னதிலிருந்து ஒரு உண்மையை ஒத்துக்கொண்டார்கள். இவ்வளவு நாட்களாக அதைக் கவனிக்காமல் இருந்தார்கள் ; அரசாங்கம் அவர்களுக்கு அனுகூலமாக இதுவரை இருந்திருக்கிறது. அவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற உண்மையை இதன் மூலமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே பேசும்போது கனம் மன்றாடியார் அவர்களிடம் சொன்னேன், ஊழல், பணம் கையாடல், ஃப்ராட், மிஸ்-அப்ரோபிரியேஷன் இவற்றிற்கெல்லாம் பெயர் அகராதியிலே 'கோவாப்பரேடிவ்' என்று வந்து விடுமோ என்ற நிலை இருக்கிறது என்று. கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொஸைடிஸ் எல்லாம் ஏற்படவேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் பல ரூபங்களிலே கூட்டுறவு முறையிலே ஸ்தாபனங்கள் வர வேண்டியிருக்கின்றன. ஆனால் இப்போது இது சில குடும்பங்களின் சொத்தாக, பழம் பெருச்சாளிகளின் உடைமையாக இருந்துகொண்டிருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் இப்போது கொண்டு வந்திருக்கும் திருத்தத்திற்காக உண்மையிலேயே இந்த மாநில மக்கள் $3\frac{1}{2}$ கோடிப் பேரும் அமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்துவார்கள். தவறு செய்பவர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். கனம் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் வைத்தியம், சுகாதாரம் இரண்டுக்கும் பொறுப்பான அமைச்சர் ஒன்று நோய் வந்தால் தடுப்பது ; மற்றொன்று நோய் வராமலே தடுப்பது. அதே போன்று குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பது என்பது ஒரு புறம் இருக்க, குற்றமே ஏற்படாமல் தடுப்பதற்கான 'பிரிவெண்டிவ்' ஆக்ஷனும் இருக்கவேண்டும். அதற்கான வழிவகைகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. இர. பொன்னப்ப நாடார்: கனம் தலைவரவர்களே, இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். கூட்டுறவுத் துறையிலே செயல்படுகிறவர்களைச் சரியான முறையில் கண்காணிக்கவும், தவறு செய்கிறவர்களை தகுந்த முறையில் இந்த இயக்கத்தில் இருந்து அப்புறப்படுத்தவும் ஆன அதிகாரத்தை வழங்க இந்தத் திருத்தம் மிகவும் உதவியாக இருக்கும். கூட்டுறவு இயக்கத்தில் ஊழல்கள் மலிந்திருக்கின்றன; கூட்டுறவாளர்கள் நாணயமாக நடக்கவில்லை என்ற புகார்கள் தாராளமாக இப்போது எழுந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய புகார்கள் வருகிற நபர்களைச் சரியான முறையில் கண்காணிக்க வேண்டுமென்றால் இத்தகைய அதிகாரம் வழங்கினால் தான் நல்ல முறையில் கண்காணிக்க முடியும் என்பது என்னுடைய துணிச்சலான கருத்து. கூட்டுறவு இயக்கத்திலே இன்று பல பெரிய ஸ்தாபனங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே பலரும் ஈடுபட்டிருக்கிறார்கள். நாணயமற்றவர்களை அப்புறப்படுத்தவும், நாணயமாக உழைக்கிறவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், இத்தகைய ஷரத்து நலமாக இருக்கும். குறிப்பாக, இந்தக் கூட்டுறவுச் சட்டத்தையே முழுமையாக மாற்றியமைக்க வேண்டுமென்ற ஒரு கருத்தையும் என்னுடைய நண்பர் கூறினார். பல திருத்தங்களும் இந்தச் சட்டத்திற்குத் தேவையாக இருக்கின்றன. இதில் இருக்கின்ற அதிகாரங்கள் போதாது. இன்னும் திருத்தங்கள் வேண்டியிருக்கின்றன என்பதைப் பற்றியுள்ள கருத்தை, இப்போது இந்த ஒரு செக்ஷனுக்கு மட்டும் திருத்தம் கொண்டு வரப்படுகிறபோது, விவாதிப்பது சரியல்ல என்றுதான் கூற விரும்புகிறேன். இந்த செக்ஷனிலே 'மே' என்று இருக்க வேண்டுமா அல்லது 'ஷல்' என்று இருக்க வேண்டுமா என்பதைப்பற்றிய ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. 'மே' என்று சொன்னாலும் சில சமயங்களில் 'ஷல்' என்று கருதுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எப்போது ஒருவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு விடுகிறாரோ, அப்போதே 'ஷல்' என்ற கருத்து ஏற்பட்டுவிடுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கூட்டுறவுத் திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன். இந்தத் திருத்தத்தைக் கூட்டுறவுத் துறையிலே பல்வேறு தவறுகள் நிகழ்ந்து விட்டன என்ற கருத்தோடு கொண்டு வந்ததாக நினைக்க முடியாது. அது ஒரு பொதுத் துறை. இந்தத் துறையிலே பங்கு போடுகிறவர்களுக்கு மாத்திரமல்லாமல், மற்றவர்களுக்கும் இதிலே அக்கறை இருக்க நியாயம் உண்டு. அதனால் ஏற்படுகிற நல்லது தீது சமுதாயத்தைப் பாதிக்கக்கூடியது. சிறு தவறு இருந்தாலும் களையவேண்டுமென்ற பெரு நோக்கத்தோடு இத்தகைய கண்டிப்பான சட்டத் திட்டங்களை அரசாங்கம் கொண்டு வருவதாகக் கருதுகிறேன்.

கூட்டுறவுத் துறையில் பல காலம் வேலை செய்யக்கூடியவர்கள்கூட— சிறிய தவறுகளுக்காக கான்ஸ்டிடியூஷனல் ரெஸ்பான்சிபிலிடிஸ்— சட்டபூர்வமான பொறுப்பை—ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் வகிக்கின்ற ஸ்தானம் காரணமாக உண்மையிலேயே குற்றத்திற்குக் காரணம் இல்லாதவர்கள்கூட தண்டனை அடையும் நிலைமைகள் பல சங்கங்களில் ஏற்படுகின்றன. ஒரு கூட்டுறவு சொசைடியில் பத்துப் பதினைந்து வருஷம் கழித்து ஸ்பெஷல் ஆடிட் நடக்கும்போது நியூஸ் பேப்பரைச் சேகரித்து விற்று வரவு வைக்காத காரணத்தால் 100 ரூபாய் வரவேண்டியது வராமல் போய்விட்டது; அப்போதைக்கப்போது சேர்த்து வைத்திருந்தால் அந்தப் பணம் வந்திருக்கும் என்று சொல்லிப் பொறுப்பைக் கட்டுகிற நிலைமை வரலாம். இது போன்ற நிலைமைகள் வரும்போது அந்தத் துறையிலே வேலை செய்வதற்குப் பொது நோக்கோடு வரக்கூடியவர்கள், நாணயம் உள்ளவர்கள்கூட கஷ்டத்திற்குள்ளாகும் நிலைமை வரலாம். இத்தகைய கடின சட்டதிட்டத்தின் மூலம் தவறுகள் களையப்பட வேண்டுமென்ற பெருநோக்கம் இருப்பினும், உண்மையாகவே தவறு என்பதையும் தீர்க்கமாக உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். ஆகவே, இதை அதிகாரிகள் கண்ணுங்கருத்துமாக மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். சட்டங்களின் கடினம் காரணமாக இந்தத் துறைக்கு நல்லவர்களும் வந்து பணி செய்யத் தயக்கம் வந்துவிடாதபடி இதை அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய கூட்டுறவுத் திருத்த மசோதாவை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களிலே நடக்கிற பல தவறுதல்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக இவ்வாறு ஒரு திருத்தம் அவசியம் என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கூட்டுறவு இயக்கம் ஒரு பெரிய . இயக்கம். அது கிராமங்கள் தோறும் பூரணமாகப் பரவ வேண்டுமென்ற அளவிலே அரசாங்கம் பல திட்டங்களைத் தீட்டி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். கூட்டுறவு இயக்கம் பல இடங்களிலும் பரவி வருகிறது. கூட்டுறவு இயக்கம் பல இடங்களில் பரவி வரும்போது, அதே சமயத்தில் சில இடங்களில் தவறுதல் செய்வதைப் பார்க்கிறோம். 1960-ம் வருஷத்திலே கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்தியபோதுகூட இதற்கெல்லாம் என்ன செய்யலாம் என்பதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்தது. செலக்ட் கமிட்டியில் பல யோசனைகள் கூறப்பட்டன. சூப்பர்சீட் செய்தால் போதுமா என்பதற்காக விசேஷ அதிகாரம் கொடுத்து அப்போதைய சட்டத்திலே ஒரு புரொவிஷன் வைக்கப்பட்டது. அதற்கு முன்னால் புரொவிஷன் இருந்தால்கூட சூப்பர்சீட் நோட்டீஸ் கொடுத்ததற்குப் பிறகும் அவர் மீண்டும் ஆபீஸ் பேரர் ஆக வரலாம் என்ற நிலைமை இருந்தது. அதேசமயத்தில் அவர்கள் வருவதைத் தடுக்க

[திரு. கே. எஸ் சுப்பிரமணிய கவுண்டர்] [30th March 1966

வேண்டு மென்பதற்காக சூபர்ஸிஷன் நோட்டீஸ் கொடுத்திருந்தால்
மீண்டும் அந்தச் சங்கத்திற்கு வர முடியாத நிலைமையில்
சட்டத்தைத் திருத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்குப்
பிறகும் பார்க்கும்போது சூப்பர்சீட் செய்ய நோட்டீஸ் கொடுத்
திருந்தால் முன்னதாக ராஜிநாமா செய்து விட்டால் அவர்களை
ஒன்றும் செய்யமுடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது.
பலவிடங்களில் தவறுகள் நடக்கும்போது அதை எவ்வாறு
கண்டிக்கலாம் என்று பார்க்கும்போது சட்டத்தில் நேரடியாகக்
கண்டிக்க எந்தவிதமான புரொவிஷனும் இல்லை என்ற காரணத்
தினால் அதற்காக என்னென்ன காரியங்களைச் செய்தால்
உண்மையில் தவறு செய்பவர்களைத் தண்டிக்க மார்க்கம் இருக்கும்
என்பதற்காக ரெஜிஸ்ட்ரார் மட்டுமல்ல, அரசாங்கம் மட்டு
மல்லாமல் கூட்டுறவு சம்பந்தப்பட்டவர்கள் யாரோ சிலர் தவறு
செய்கிறார்கள், அதனால் அந்த இயக்கத்திற்கே கெட்ட பெயர்
வருகிறது, அதை எவ்வாறு நீக்க முடியும் என்ற அளவில் இதற்கா
கப் பல இடங்களில் சர்ச்சைகள் செய்யப்பட்டு இம்மாதிரி
ரெஜிஸ்ட்ராருக்கு ஒரு எதேச்சாதிகாரம் இருந்தால்தான்
உண்மையில் தவறு செய்பவர்களைத் தடுக்கமுடியும் என்று
அவ்வாறு பேசப்பட்டது. அதையொட்டி அரசாங்கம் இம்மாதிரி
யான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததைக் கூட்டுறவு இயக்கத்
தில் உள்ளவர்கள் பூரணமாக ஆதரிக்கிறார்கள். கூட்டுறவு
இயக்கமே பூரணமாகத் தவறுதலாக இருக்கிறது என்ற அளவில்
பலவிடங்களில் பேசப்படுகிறது. இன்றும் சிலர் சொன்னார்கள்.
சாதாரணமாக நன்றாக நடக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களைப்
பொறுத்த வரையில் அதற்குச் சாதாரணமாக விளம்பரமே இருப்ப
தில்லை. ஏதோ தவறுகள் இருந்தால்தான் அம்மாதிரித் தவறுதலாக
இருக்கக்கூடியதை எல்லோருக்கும் தெரியக் கூடிய அளவில்
கோர்ட்டுக்கு அல்லது மற்ற இடங்களுக்குப் போவது என்று
இம்மாதிரி விளம்பரம் ஏற்படுகிறதே தவிர, நன்றாக நடக்கிற
கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகமாக விளம்பரம் இருப்பதற்கு
இப்போதுள்ளதில் மார்க்கமில்லை. 18,000 சங்கங்கள் இருப்பதில்
ஒரு சில இம்மாதிரியாகிவிட்டால் எல்லாமே மோசம் என்று
சொல்வது நியாயமல்ல, சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.
இம்மாதிரி ரெஜிஸ்ட்ரார் அல்லது அரசாங்கமோ தவறு செய்கிறவர்
களை நீக்கிவிடக்கூடிய மார்க்கம் இருக்கிறது என்ற அளவில்
இருந்தால், தவறு செய்கிறவர்கள் தவறு செய்யாமல் இருக்க
வேண்டுமென்ற ஒரு பயம் இருக்கும். அடிக்கடி சொல்கிறார்கள்,
நம் முதல் அமைச்சர் அவர்களுக்குக் கூட்டுறவு இயக்கத்தில்
நம்பிக்கை போய்விட்டது என்று. எனக்குத் தெரிந்தவரையில்
முதல் அமைச்சர் அவர்கள் தஞ்சை ஜில்லாவில் இருக்கும்
கூட்டுறவு விவசாயப் பண்ணைபற்றி ஏதோ சொன்னதை
வைத்துக்கொண்டு முதல் அமைச்சர் அவர்கள் கூட்டுறவு
இயக்கத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லிவிட்டார்கள் என்று
சொல்வது சரியல்ல. அம்மாதிரிச் சொல்வது கூட்டுறவு இயக்கம்
வளர அவ்வளவு சிறந்ததாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். ரெஜிஸ்ட்ரார், ஒருவரைப் பூரணமாக

30th March 1966] [திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]

நீக்கி விட அதிகாரம் வேண்டுமா அல்லது தவறுதலுக்குத்
தகுந்தபடி ஒருவரை எந்தக் காலத்திற்கு நீக்கி வைக்கலாம் என்ற
அளவில் முடிவு செய்ய ஏற்பாடு செய்யலாம் என்பதுபற்றி
நானும் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்த கிளாஸ்
வரும்போது அதைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம் என்று கூறிக்
கொண்டு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய
திருத்தத்தைப் பொதுவாக வரவேற்று என் வார்த்தைகளை முடித்
துக் கொள்கிறேன்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்: கனம் சபாநாயகர்
அவர்களே, நம் கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்
பட்டிருக்கிற இந்தக் கூட்டுறவுத் திருத்த மசோதாவை நான்
ஆதரிக்கிறேன். கூட்டுறவு இயக்கம் நம் நாட்டின் சோஷலிஸ
சமுதாயத்தை அமைப்பதற்கு முதல் படியான பெரியதொரு
இயக்கமாகும். அந்த இயக்கம் நாட்டிலே நன்கு வளரவேண்டும்,
அந்த இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் நன்மை பெறவேண்டும்,
அதன் மூலம் நாட்டிலே செல்வங்கள் பகிர்ந்து அளிக்கப்பட
வேண்டுமென்ற நோக்கம் பெரிதானது. ஆனால் கூட்டுறவு
அமைப்பில் இப்போது பல தீங்குகள் நேரிடுகின்றன. கூட்டுறவு
அமைப்பில் இருக்கிற ஒருசில சங்கங்களில் தவறுதல்கள் செய்யக்
கூடிய சில அமைப்புகள் இருப்பதின் காரணமாகத் தவறுகள்
செய்கிறார்கள். அதைக் களைவதற்காக இம்மாதிரியான ஒரு சட்டம்
கொண்டு வரப்பட்டிருக்கிறது. ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கு அதிக
மான அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது, குற்றம் செய்தவர்களை
நீக்குவதற்காக, உண்மையிலே இப்போது பலர் குற்றம் செய்திருக்
கிறார்கள். பலர் குற்றம் செய்யாமலேயே அவர்கள் மீது குற்றம்
சுமத்தக்கூடிய வாய்ப்புக்கூட இந்த அமைப்பில் இருக்கிறது.
குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதில் யாருக்கும் ஆட்சேபணை
கிடையாது. அவர்களைத் தண்டிக்கவேண்டியது அவசியம்தான்.
ஆனால் குற்றம் செய்யாதவர்கள் பேரிலும் மொட்டைக் கடிதாசுகள்
எல்லாம் போட்டுக் குற்றம் செய்திருப்பதாக அவர்கள்
கண்காணிக்கப்படுகிறார்கள். அம்மாதிரிப்பட்டவர்களை நன்றாக
விசாரித்து ஆலோசித்து இம்மாதிரிக் குற்றம் செய்தவர்களைத்
தண்டிக்கவேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படு
கிறேன். காலவரையறை இன்றி அவர்கள் நீக்கப்படுவார்கள்
என்று இல்லாது, குற்றத்திற்குத் தக்க அளவில் அவர்கள்
இவ்வளவு ஆண்டுகள் கூட்டுறவு சொசைட்டியில் வராமல் இருக்கத்
தடுக்க வேண்டுமென்று ஒரு முறை ஏற்பட்டால்தான் கூட்டுறவுத்
துறைக்கு வருகிறவர்கள் நல்லெண்ணத்துடன், தைரியமாக வந்து
இந்தச் சமூக சேவையில் ஈடுபடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொண்டு இந்த மசோதாவைப் பொதுவாக ஆதரிக்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தகுதி மிக்க சட்டமன்றத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் நம் கூட்டுறவுத் துறை அமைச்சர்
அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்த மசோதா
காலதாமதமாக வந்தது என்று சொல்லப்பட்டாலும்கூட,

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [30th March 1966

இப்போதாவது இந்தத் திருத்தத்தைச் செய்ய முன்வந்திருக்கிறார்
களே என்பதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். பொது
வாகக் கூட்டுறவு இயக்கங்களில் நடைபெறுகிற ஊழல்களை நாங்கள்
எடுத்துச் சொல்லுகிறபோது, ஏதோ கூட்டுறவு இயக்கத்திற்கே
நாங்கள் விரோதிகள் என்பது போலவும், கூட்டுறவு இயக்கமே
தேவையில்லை என்று சொல்வது போலவும் பலர் இங்கு பேசிக்
கொண்டு வருவதை நாம் நன்றாக அறிவோம். மதிப்பிற்குரிய
கனம அங்கத்தினர் திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் கூட
பல ஆயிரக்கணக்கான சங்கங்கள் இருக்கிற இடத்தில் ஒன்றிரண்டு
சங்கங்களில் தவறுதல்கள் ஏற்பட்டால் அதைத் தவறாகக் கருதக்
கூடாது என்று குறிப்பிட்டார்கள். 'கலப் பாலில் துளி விஷம்'
என்பதுபோல் ஒரு துளி தவறு இருந்தாலும் கூட அது தவறாகப்
பேசப்படுகிறது, அது களையப்படவேண்டும் என்பதற்காகத்தான்
அவற்றை எடுத்துச் சொல்கிறோமே தவிர, கூட்டுறவு இயக்கமே
தேவையில்லை என்ற வகையில் அல்ல என்பதை எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறுகிற மோசடி
களைப்பற்றி விசாரித்து ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்பதன்
காரணமாக, காலதாமதத்தைப் பார்க்கிறபோது நிச்சயமாக
இப்போதிருக்கிற அமைப்பு முறை மூலம் அந்தச் சிக்கல்களைத்
தீர்த்து விட முடியாது என்பதை நான் தங்கள் மூலம் அவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் அடிக்கடி
இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி வருவதுபோல் கூட்டுறவு
இயக்கம் ஒரு சில குடும்பங்களுடைய சொத்தாகத் தமிழகத்தில்
ஆகக் கூடாது என்பதை வலியுறுத்துகிற வகையில்தான் சென்ற
ஆண்டு கூட ஒரு திருத்தம் கொடுத்தேன். ஒருவர் பதவிக்கு
வந்தால் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுக் காலம் பதவி வகித்த
தற்குப் பிறகு இடைவெளி மூன்றாண்டுக் காலம் இருக்கவேண்டு
மென்று குறிப்பிட்டேன். அந்த இடைவெளிக் காலத்தில் கூட
முதலில் தலைவர்களாக இருந்தவர்களுடைய வாரிசுகள் அல்லது
அவர்கள் குடும்பத்தார் அதில் அங்கம் வகிக்கக்கூடாது என்று
குறிப்பிட்டுச் சொன்னேன். அதற்குக் காரணம், கூட்டுறவுத்
துறையில் மிகவும் அதிகமான ஊழல்கள் நடைபெறுகின்றன என்ற
காரணத்தினாலும் அது பாம்பரைச் சொத்தாக இருக்கிற
காரணத்தினாலும்தான் என்பதை என்னால் நிச்சயமாக நிரூபித்துக்
காட்ட முடியும் நான் அங்கம் வகிக்கிற எங்கள் மாவட்ட மத்தியக்
கூட்டுறவு வங்கியில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒரு சிலர்
பதவி வகித்து வந்ததற்குப் பிறகு, சமீப காலத்தில்
அதற்குப் புதுத் தலைவரைத் தேர்ந்தெடுத்ததற்குப் பிறகு,
இப்போது அங்கே கிட்டத்தட்ட இரண்டு லட்சம் ரூபாய் மோசடி
செய்யப்பட்டிருக்கிறது; மூன்று சங்கங்களுக்கு மேல் இப்போது
வழக்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம் காரணம்,
பரம்பரையாக அங்கு அங்கம் வகிக்கிற காரணத்தினால் அவர்கள்
பல கருத்துக்களைச் சொல்லமுடியாது என்பது மாத்திரமல்ல,
அவர்கள் காலத்தில், அந்தத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால்
அந்தத் தலைவர் நிர்வாகத் திறமை இல்லாதவர் என்று

30th March 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

சொல்வார்களோ என்று அஞ்சுகிற காரணத்தினால்கூட
அதை மறைக்க வேண்டிய துர்பாக்கியகரமான நிலை ஏற்பட்டு
வருகிறது. அதனால் இரண்டு ஆண்டுக் கால இடைவெளிக்குப்
பிறகுதான் அவர்கள் பதவிக்கு வரவேண்டுமென்ற திருத்தத்தைச்
சேர்க்கவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, இந்தத் திருத்த மசோதாவில், அதிகாரம் 10-30 a.m.
ரெஜிஸ்டிராருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு
திருத்தத்தை மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. சுப்பிரமணிய
கவுண்டர் அவர்கள் தந்திருக்கிறார்கள். நம்முடைய அதிகாரி
களை நாங்கள் அதிகமாகப் பாராட்டினால் நம்முடைய முதலமைச்
சர் அவர்கள் ஏதோ நாங்கள் அவர்கள் தயவுக்காகப் பேசுகிறோம்
என்று நிச்சயமாகச் சொல்லக்கூடும். நான் நிச்சயமாகச் சொல்லு
கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசு
செய்கின்ற நல்ல காரியங்களைவிட, அரசு துறையில் பணியாற்றி
வருகின்ற அதிகாரிகள் மிகவும் திறமையாக பணியாற்றி வருகிறார்
கள் என்று சொன்னால் அது மிகையாகாது. சில காரியங்கள் செய்
வதில் நல்ல பெயர் ஏற்பட்டிருக்கிறது என்றால் அது நம்முடைய
அதிகாரிகளின் திறமையினாலே, தவிர அரசாங்கத்தினுடைய
திறமையல்ல. அதுமட்டுமல்ல, அமைச்சரவை இன்னும் அதிகாரி
களுடைய பணியில் தலையிடாமல் இருந்தால், அன்றாட அலுவல்
களில் தலையிடாமல் இருந்தால், நீதியோடும், நேர்மையோடும் அதி
காரிகளால் பணியாற்ற முடியும் என்பதை நான் திட்டவட்டமாகத்
தெரிவித்துக்கொள்கிறேன். எனவே ஓரளவுக்கு அதிகாரிகளை
நாம் நம்பித்தான் ஆகவேண்டும். ஆகவே அதிகாரிகளிடம்
இன்னும் அதிகாரத்தை நாம் வேண்டிய அளவுக்கு ஒப்படைக்க
லாம். அப்படி ஒப்படைத்தால், மிகவும் வசதியாக இருக்கும்
என்று நினைக்கிறேன். இங்கு நடைபெற்ற கூட்டுறவு மான்ய
விவாதத்தில், அம்மாபேட்டை, சேலம் கூட்டுறவு நெசவாளர்
சங்கத்தைப்பற்றிப் பல குற்றச்சாட்டுகளை நான் எடுத்துச்
சொன்னேன். அன்றையதினம், தொழில் அமைச்சர் அவர்கள்
சபையில் இல்லாததால் பின்னால் விடை அளிப்பார்கள் என்று
சொன்னார்கள். ஆனால் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்
இதைப்பற்றிக் கேள்வி போடுங்கள் பதில் சொல்லலாம் என்று
சொல்லிவிட்டார்கள். இது சம்பந்தப்பட்டவர் தீவிரக் காங்கிரஸ்
காரர் என்ற காரணத்தால்தான் நடவடிக்கை எடுக்கத் தயங்கு
கிறார்கள். நான் இந்தக் குற்றச்சாட்டுகளை இங்கு சொன்ன
பின்னால் அங்கே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்
என்பதைப்பற்றி எனக்குக் கடிதம் வந்து இருக்கிறது. அதாவது
இந்த ரிக்கார்டுகள் எல்லாம் எப்படி அன்பில் தர்மலிங்கத்திற்குக்
கிடைத்தன என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்வதில்தான் கவனம்
செலுத்திக்கொண்டிருக்கிறார்களே தவிர, அங்கே நடைபெற்ற
ஊழல்களைப்பற்றி விசாரிப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.
ஆகவே, இந்தத் திருத்த மசோதா உடனடியாக அமல் நடத்தப்பட
வேண்டுமே தவிரச் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டிய அவசிய

மில்லை. பல ஆண்டுகளாகச் சொல்லி வந்த இந்த மசோதாவை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன். இப்போதாவது இத்தகைய மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்ததற்காக நாம் அரசாங்கத்தை மிகவும் பாராட்டவேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கோவாப்பரேடிவ் இயக்கம் நல்ல முறையில் நடந்து வருகிறது என்றாலும் அதில் பல குறைகள் ஏற்பட்டுவிட்டன. அவற்றைப்பற்றிப் பலரும் இங்கே பேசியிருக்கிறார்கள். நானும் கூட்டுறவு விவாதத்தில் பேசியிருக்கிறேன். ஆகவே இதைப்பற்றி இப்போது நான் பேச விரும்பவில்லை. பொதுவாகக் கூட்டுறவு சொசைட்டிகளில் தவறுகள் நடக்கின்றன என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். அவற்றை தடுக்க வேண்டுமென்பதில் யாருக்கும் ஆட்சேபணை கிடையாது. அதற்காக எல்லா சொஸைட்டிகளிலும் தப்பு நடக்கிறது என்று சொல்ல முடியாது. சில சொஸைட்டிகள் நல்லமுறையில் நடைபெறுகின்றன. சில சொஸைட்டிகளில் பொது நலத்திற்காக, பொதுமக்களின் நலத்திற்காக பலர் டைரக்டர்களாகவும், சேர்மன்களாகவும் இருந்து வேலை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள் ஆனால் அப்படியிருப்பது, 100-ல் ஒன்று, அல்லது 1000-ல் ஒன்று என்ற அளவுக்குத்தான் சொல்ல முடியும். நான் குறிப்பிடக்கூடிய முக்கியமான விஷயம் என்னவென்றால், சொஸைட்டிகளில் தவறுகள் நடக்கின்றன, அவற்றின் மீது கேஸ்கள் நடக்கின்றன, இவ்விதம் கிரிமினல் கேஸ் வரும்போது, இவன் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியிலிருந்து பணத்தைக் கையாண்டு விட்டான், திருடிவிட்டான், மோசம் பண்ணிவிட்டான் என்று எல்லோரும் சொல்ல ஆரம்பித்துவிடுகிறார்கள். அது மட்டுமல்ல, இவன் பெரிய மோசக்காரன் என்று சொல்லி அரெஸ்ட் செய்து கொண்டு போகிறார்கள், 'பெயில்' கூட விடுவதில்லை. இப்படியெல்லாம் இருந்தும் பின்னால் எப்படியாவது தப்பிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் சட்டத்தில் இருக்கின்ற லூப் ஹோலை பயன்படுத்திக்கொண்டு, கேஸிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். அதன் பின்னாலும் வேண்டாம் என்று விடுவதில்லை, திரும்பியும் வந்து அந்த சொஸைட்டியிலேயே டைரக்டராகவும், சேர்மனாகவும் வந்து விடுகிறார்கள். இதில் முக்கியமாக இரண்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டும். சட்டத்தில் இருக்கின்ற லூப் ஹோலை வைத்துக்கொண்டு திரும்பி வந்துவிடுகிறார்கள். அதே நேரத்தில் சொஸைட்டியில் வரும்போது பார்த்தால், சம்பளத்திற்கு வருவதில்லை, வெறும் ஹானரரியாகத்தான் வருகிறார்கள். செக்ரட்டரி, சேர்மன் இப்படி வருகின்றவர்களுக்கு எல்லாம் ஹானரரி உத்தியோகம்தான். இப்படி வருகின்றவர்களுக்கு கோவாப்ரேட்டிவ் சொஸைட்டியில் வழக்குகள் வரும்போது கெட்ட பெயர் ஏற்பட்டு விடுகிறது. கௌரவமாக நடந்து கொண்டிருப்பவர்கள், சேவா மனப்பான்மையோடு வருகின்றவர்கள், இவர்களுக்கு எல்லாம்

சொஸைட்டியிலுள்ள பணத்தைத் திருடிவிட்டான் என்று பொது மக்கள் மத்தியில் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடுகிறது, இருந்தும் கேஸில் தப்பித்துக்கொண்டு வெளியில் வந்து திரும்பவும் சொஸைட்டிகளில் பதவிகளில் வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். முக்கியமாக பர்ச்சஸிங் கமிட்டிக்கு வந்துவிடுகிறார்கள், வெளியூர்களுக்குப் போகலாம், சம்பாதிக்கலாம் என்று வந்துவிடுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இவர்களைத் தடுக்கவேண்டியது முக்கியமான கடமைதான். இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்கள் சிலர் கூட, அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் பொறுப்பெடுத்து சேவை செய்து கொண்டிருப்பவர்கள், சொன்னார்கள், நீங்கள் இதை எதிர்த்துப் பேச வேண்டும் என்று. என்னைக் கேட்டால், கோவாப்பரேட்டிவ் இயக்கத்தில் தப்பு என்று தெரிந்த உடனே ஜெயில் தண்டனைதான் கொடுக்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள் பின்னால் கோவாப்பரேட்டிவ் இயக்கத்திற்கு வரவே கூடாது. இப்படிப்பட்ட தவறுகளைச் செய்துவிட்டுப் பின்னால் பொது மக்களின் முன்னால் வரவே கூடாது, அநேகமாக அவர்களுடைய லைஃப் முழுவதும் 'டி-பார்' செய்யக்கூடிய வகையில் தண்டனை கொடுக்க வேண்டும்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கேட்பது போல் இந்தச் சட்டத்தில் தண்டனை கொடுப்பதற்கான பிரிவுகள் இருக்கின்றனவா இல்லையா ?

திரு ஆர். வி. சுவாமிநாதன் : கொஞ்சம், கொஞ்சம் இருக்கிறது. என்னுடைய ஆசை, வேண்டுகோள் என்னவென்றால், அரசாங்கம் இன்னும் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த மசோதாவை ஏகமனதாக எதிர்க்கட்சிகள் உட்பட நிறைவேற்றப் போகின்றோம். அதில் கூட்டுறவு இயக்கத்தில் தப்பு செய்வதற்கு உடனடியாகத் தண்டனை கொடுக்க வேண்டும், அதற்கேற்ற வகையில் அரசாங்கமே திருத்தம் கொண்டு வரவேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள். கூட்டுறவு இயக்கத்தில் ஏதாவது தவறுதல் நடந்தால், அதற்குக் காரணமாக இருந்தவர்கள் பின்னால் எந்தவிதத்திலும் திரும்பவும் கூட்டுறவு சொஸைட்டிகளில் வந்து பதவி வகிக்கக்கூடாது என்று ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டும். இந்த மசோதாவில் அதிகாரிகளுக்கு பவர் கொடுக்கப்போகிறார்கள். சாதாரணமாக இப்படி அதிகாரிகளுக்கு பவர் கொடுக்கும்போது, அவர்கள் சிறிதளவு தயவு தாட்சணியம் பார்த்துச் செயல்படவேண்டும் என்று பொதுஜனப் பிரதிநிதிகளாகிய நாம் சொல்வது வழக்கம். அதாவது அவசியமானால்தான் அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்று சொல்வது வழக்கம். ஆனால் இதில் முக்கியமாக என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், கூட்டுறவு இயக்கத்தில் தவறு நடக்கிறது, அல்லது தப்பு நடந்திருக்கிறது என்று கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் கூட, உடனடியாக இந்த அதிகாரத்தை உபயோகப்படுத்த வேண்டும், ஏதாவது தப்பு நடக்கிறது என்று

சந்தேகம் வந்தால் கூட, அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகள் கடுமையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இதில் முக்கியமாக அதிகாரம் கொடுக்கப் பட்டிருப்பது, கூட்டுறவு இயக்கத்தில் தவறுகள் நடந்தால் பொறுப்பில் இருக்கின்றவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு டிஸ்க்வாலிஃபை பண்ணலாம் என்றிருக்கிறது. முக்கியமாக 'நெக்லிஜன்ஸ் ஆஃப் டியூட்டி, மிஸ்-மானேஜ்மெண்ட், மிஸ்-ஃபீஸன்ஸ்' என்றெல்லாம் போடப்பட்டிருக்கிறது. அதாவது 'negligence, mismanagement, gross mismanagement, presistent or gross negligence, misfeasance or default in carrying out his obligation and functions under the law' என்று போட்டிருக்கிறது. சாதாரணமாக மிஸ்-ஃபீஸன்ஸ் என்று சொல்லும்போது அது ஸிம்பிள் நேச்சராகவும் இருக்கும். சில சீரியசாகவும் இருக்கும். இதைப்பற்றி விரிவாகச் சொல்லாமல் 'க்ராஸ் மிஸ்-மேனேஜ்மெண்ட்' என்று சொல்லியிருப்பது போதாது. அதில் ஓமிஷன் ஏற்பட்டிருக்கின்ற அளவுக்கு, பரவலாகத்தான் இது இருக்கிறது. அதிலேயும் 'சீரியஸ் நேச்சர்' என்று இருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

ஊழல்கள் நடக்க இரண்டே இரண்டு காரணங்கள்தான் இருக்கின்றன. ஒன்று கமிட்டிக்கு அதிக பவர் இருப்பதால் டெம்டேஷன் இருக்கிறது. இன்னொன்று கைத்தறி சொஸைட்டிகள் சம்பந்தமாகப் பார்க்கும்போது கோவாப்பரேட்டிவ் பாங்கிலிருந்து காலா காலத்தில் உதவி கிடைப்பதில்லை. ஸ்டேட் சொஸைட்டியில் வாங்கினால் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. 4-5 மாதங்களுக்கு மேல் பாக்கி வைத்துக்கொண்டிருக்கிற காலத்தில் ரன்னிங் எக்ஸ்பென்ஸுக்குக் கூட பணம் இல்லாமல் இருக்கிறது. நூல் வாங்கி, காரியங்களைச் செய்வதற்குப் பண வசதி இல்லாததால், ஊழல் ஏற்பட வழிவகை ஏற்படுகிறது. காலாகாலத்தில் ஸ்டேட் சொஸைடியிலிருந்து கொடுத்து இரண்டு மாதங்களுக்கு மேல் இல்லாமல் செய்ய வேண்டும். கோவாப்பரேட்டிவ் பாங்கிலிருந்து காலாகாலத்தில் கடன் கொடுக்க வழிவகை இருந்தால் தவறுகள் தவிர்க்கப்படும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று வந்திருக்கிற இந்தத் திருத்த மசோதாவின் பேரில் கனம் அங்கத்தினர்களெல்லாம் நல்ல முறையிலே மசோதாவை வரவேற்றுப் பேசினார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். குறிப்பாக இந்த மசோதாவைக் கொண்டு வந்தது, ஏதோ கூட்டுறவுத் துறையிலே அதிகமாக ஊழல்கள் நடக்கின்றன; அதை ஒத்துக்கொண்டு செய்தார்கள் என்று யாரும் எண்ண வேண்டியதில்லை. நல்ல முறையில் உயர பதித்தவேண்டும் என்ற எண்ணம்தான். இந்தத் துறையில்

இருக்கிறவர்கள் இன்னும் அக்கறை எடுத்து, இந்தக் கூட்டுறவு இயக்கத்தினுடைய சங்கங்களில் செயல்படவேண்டுமென்ற அடிப் படைக் கருத்தை வைத்துத்தான் இதைக் கொண்டு வந்திருக் கிறோம். இதிலே நேரடியாகச் சில பிரச்னைகள் வருகின்றன என்று சொன்னால் ரிஜிஸ்டிரார் அவர்களுடைய கவனத்திற்கு வரும். அவர் களுடைய ரெப்ரெஸண்ட்டேட்டிவ்ஸ் என்று சொல்லக் கூடியவர் களோ அல்லது அவர்களோ விசாரித்து, தவறு ஏற்பட்டது என்று சொன்னால், தவறு என்று ஏற்படுகிறபோது, குறிப்பிட்ட ஆபீஸ் பேரர்ஸ் என்று சொல்லக் கூடிய அளவில் இருக்கிறவர்களில் யாரை அது பாதிக்கிறது, யார் உகந்தவர்கள் என்ற முறையில் வருகிற நேரத்தில் அவர்களை மாற்றி சொஸைட்டிகளிலே அல்லது கூட்டுறவுச் சங்கங்களிலே அவர்கள் இருக்கக் கூடாது என்பது தான் அடிப்படைக் கருத்து. ஆகவே, கூட்டுறவுத் துறை நல்ல வளர்ச்சி அடைந்து மூன்றாவது திட்டத்தைவிட நான்காவது திட்டக் காலத்தில் பல லட்சம் ரூபாய் கொடுத்து பல பேர்களுக்குப் பிரயோஜனம் ஏற்படும் நிலை ஏற்பட்டிருப்பதை வைத்து இன்னும் நல்ல முறையில் உஷாராகச் செயல்பட்டுப் பயன்படும் நிலை ஏற்படவேண்டும் என்பதுதான் கருத்து.

இதிலே பேசும்போது பல மெம்பர்கள் பேசினார்கள். சில மெம்பர்கள் ஒன்றிரண்டு திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் நல்ல முறையில் கவனித்துத்தான் மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். 1961-ல் இந்தச் சட்டம் கொண்டுவந்த போது அசெம்பிளிக்கு வந்து அது செலக்ட் கமிட்டிக்கு விடப் பட்டது. செலக்ட் கமிட்டியிலே அதை மாற்றி அமைக்கவேண்டு மென்ற நிலை ஏற்பட்டதால்தான் அந்த முறையில் அமைக்கப்பட் டிருக்கிறது. மெம்பர்கள் இடைவெளி வேண்டும், பரம்பரையாக வந்துகொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்போது அந்த ஸ்டேஜிலே வேறு மாதிரியாகக் கொண்டுவரும் நிலை ஏற்பட்டதால் அதற்குப் போகவேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தில்தான் இந்த அமென்ட்மென்டைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இதனாலே சில பேர்களுக்கு இருக்கக் கூடிய ஊக்கம் குறைந்து விடுமா என்று கூடச் சில மெம்பர்கள் கருதினார்கள். இதனால் எப்படி ஊக்கம் குறைய முடியும்? ஊக்கமாக இன்னும் செய்யவேண்டுமென்ற கருத்துத்தான் வரும் என்று கருதுகிறேன். இதன் காரணமாக ஊக்கம் குறைந்து விட வேண்டிய நிலை இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ரிஜிஸ்டிரார் அவர்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்ததன் காரணமாக, இது அதிகப்படியாக இருக்கக் கூடும் என்று சிலர் கருத்து தெரிவித்தார்கள். பொறுப்பாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அந்த அளவுக்குச் செய்து வரும்போது, சர்க்கார் அல்லது அதிகாரிகள் தவறான முறையில் அதிகாரங்களைச் செலுத்துவது என்ற நிலை நிச்சயமாக வர முடியாது. அதே போல

[30th March 1966

[திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

அப்பீல் செய்கிற அளவிலே, இந்த சொஸைட்டியிலே தவறு செய்திருக்கிறார்கள்; அதன் காரணமாக நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் உடனடியாகச் செய்த பிறகு, விசாரணை செய்த பிறகு, சர்க்காருக்கு அப்பீல் செய்ய வழிவகை செய்யப்பட்டிருப்பதையும் மெம்பர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள். அந்தப் பிரச்னைக்கும் இடம் இல்லை என்று கருதுகிறேன்.

மற்றும் ஒன்று, கூட்டுறவு அளவிலே கனம் அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது கூட சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இன்னும் கொஞ்சம் அதிகப்படியாகவே இருந்தால் நல்லது என்று அவர்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். இதையெல்லாம் நன்றாக யோசனை செய்து நல்ல முறையில் செய்ய வேண்டும், இன்னும் கூட்டுறவுத் துறை மக்களிடத்தில் பரவ வேண்டும் என்றுதான் கொண்டு வந்திருக்கிறோம்.

இதில் வரக்கூடிய தலைவர்கள் பரம்பரையாக வருகிற காரணத்தினால் தவறு செய்கிறார்கள், திரும்ப இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் இடம் இருக்கிறது என்று இல்லாமல் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். பரம்பரையாக வருவது என்பது இல்லை. எலெக்ஷன் இருக்கிறது, மெம்பர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தேர்தெடுக்கும் நிலைதான் இருக்கிறதே தவிர வேறு இல்லை. பரம்பரையாக வரக் கூடாது என்பது இல்லை. திரும்ப மெம்பர்களெல்லாம் சேர்ந்து தேர்ந்தெடுக்கிறார்கள் என்றால், இதற்காகப் பரம்பரையைப் புகுத்த வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

இதற்கு கால வரம்பு வைக்கவேண்டுமென்று சில மெம்பர்கள் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்களும், அவர்களுக்குப் பின்னால் அம்மையார் அவர்களும் சொன்னார்கள். இதற்கு என்ன கால வரம்பு வேண்டும்? சர்க்காருக்கு வருகிறபோது தவறு இல்லை என்று வந்து விட்டால் ரீஇன்ஸ்டேட் பண்ணும் நிலையில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கால வரம்பு வைக்கும் முறையில் ரிஜிஸ்டிராருக்குக் கொடுக்கவேண்டியதில்லை. மூன்று வருஷங்களுக்கு, நான்கு வருஷங்களுக்கு வரக் கூடாது என்று வேண்டாம். அப்பீல் செய்து அவர்களுக்கு அனுகூலமாக வந்து விட்டால் சர்க்காருடைய முடிவைப் பொறுத்து இருக்கும் காரணத்தினால் கால வரம்பு என்று உபயோகப்படுத்தும் அவசியம் ஏற்படாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு இதை எல்லோரும் முழு மனதாக ஆதரித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கனம் அங்கத்தினர்கள் திருத்தங்கள் கொடுத்திருப்பதைப்பற்றி க்ளாஸ்வாரியாக எடுத்துக் கொள்ளும்போது அவற்றைப்பற்றிச் சொல்லுவதோடு, நானும் அமெண்ட்மெண்ட் கொண்டு வந்திருக்கிறேன்; அதைப்பற்றியும் க்ளாஸ்வாரியாக எடுத்துக்கொள்ளும்போது சொல்லுகிறேன் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

30th March 1966]

MR. SPEAKER : The question is :—

" That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 2 of 1966) be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2

MR. SPEAKER : The question is—

" That Clause 2 do stand part of the Bill ".

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, I move the following amendment—

" In new clause (*h*) proposed to be inserted by sub-clause (ii), omit the expression ' under section 28-A ' and add the following expression at the end, namely—

" or disqualified under section 28-A ".

* திரு. இராம. அரங்கண்ணல்: கனம் தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது கிளாசில் என்னுடைய திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

" In section 28 of the Principal Act after the proposed clause (h) in sub-section (1) add the following viz :

(i) has held or is holding office as a member of the Committee unless a period of three years has elapsed from the date on which his last term of office expired or the present term of office will expire, as the case may be :

Provided that nothing contained in this clause shall apply to any official nominated to the Committee by the Government or the Registrar. "

The amendment was duly seconded.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தத் திருத்தத்திற்கான முக்கியமான நோக்கங்களைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய திருத்தம் நம்முடைய அரசுத் தரப்பில் எந்த நோக்கத்தோடு இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டதோ அதற்கு நேர் மாறானது அல்ல என்பதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார்கள். அதே நிலையில் என்னுடைய இந்தத் திருத்தத்தையும் நமது அரசுத் தரப்பிலே ஏற்றுக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. இன்றைய தினம் கூட்டுறவுத் துறையைப் பற்றி அதிகமாக விமர்சனம் செய்துகொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்த மசோதா நிறைவேற்றப்படுமானால், இதிலே தவறான காரியங்களில் துணிந்து ஈடுபடுகிறவர்களுக்கு அதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்ற ஒரு எண்ணம் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம்

[திரு. இராம. அரங்கண்ணல்] [30th March 1966

ஏற்படுகிறது. நான் கொடுத்திருக்கிற இந்தத் திருத்தத்தையும் அரசுத் தரப்பில் ஏற்றுக்கொள்வார்களேயானால், நாட்டிலே இருப்பவர்களுக்கெல்லாம் கூட்டுறவுத் துறையைப்பற்றி எந்த பயம் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த பயத்திற்கே வழியில்லாமல் போகும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சாதாரணமாக கூட்டுறவு துறை, மான்ய விவாதத்தின்போது எடுத்துச் சொன்னது போல ஒரு சிலருடைய கையிலே இருந்துகொண்டிருக்கிறது என்ற உண்மையை மறுக்க முடியாது. அந்த ஒரு சிலர் நமக்கு நண்பர்களாக இருக்கலாம், மிகவும் நல்லவர்களாகவும் இருக்கலாம். இந்தக் கூட்டுறவுத் துறை ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் மிகவும் வேகமாக வளர்ந்து வந்தது என்பதை நாம் அறிவோம். அன்று கூட்டுறவுத் துறை ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் எல்லோரையும் நம்பி பல பேர்களுடைய பணத்தையும் பொறுப்பையும் சேர்ந்தாற்போல் அளிக்கின்ற தன்மை அப்பொழுது இல்லை. யார் ஒவ்வொரு ஜில்லாவிலும் வசதி உள்ளவர்களாகவும், பணக்காரர்களாகவும் இருக்கிறார்களோ, அவர்களுடைய நாணயத்தை நம்பி, இப்படிப்பட்ட கூட்டுறவுத் துறை அன்றைய தினம் வளர்ந்தது. இன்றைய தினம் அவர்கள் அத்தனை பேர்களும் நாணயஸ்தர்களாக இருக்கலாம். அவர்களில் சில பேர்கள் வேறு விதமாகவும் இருக்கலாம். ஆனால் அது இப்பொழுது வளர்ந்திருக்கிற நிலைமையில் பரம்பரை பாத்தியதை முறை இருக்கவேண்டுமா என்பது பிரச்னைக்குரிய விஷயமாகும். கூட்டுறவுத் துறையில் வேறு எந்தத் துறையிலும் இருப்பதுபோல் 'மொனாபொலி' இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். நம்முடைய அரசின் கருத்தும் அதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். தனிப்பட்டவர்கள் ஆதிக்கம் வரையறுக்கப்படவேண்டும் அல்லது தகர்க்கப்படவேண்டும் என்ற சமதர்ம நோக்கத்தை நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த நோக்கத்தினுடைய அடிப்படையில் ஜமீன்தார்கள், பெரிய நிலச்சுவான்தார்கள், இன்னும் பெரிய முதலாளிகள் எல்லாரையும் கட்டுப்படுத்தவேண்டும் என்ற ஒரு ஆர்வம் நமக்கெல்லாம் இருக்கிறது. ஆனால், கூட்டுறவுத் துறையைப் பொறுத்த அளவில் அது ஒரு ஸ்தாபன அமைப்பு, அதிலே தேர்தல் மூலம் வருகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு, எந்த ஜில்லாவை எடுத்துக்கொண்டாலும், வெள்ளி விழா, பொன் விழா அல்லது வைர விழா கொண்டாடவேண்டிய அளவுக்கு ஒவ்வொரு குடும்பத்தாரும் இந்தத் துறையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நல்ல தீர்க்காயுசு) கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தீர்க்காயுசோடு இருக்கவேண்டும் என்று அவர்களுக்கே உள்ள நல்லெண்ணத்தோடு வாழ்த்துகிறார்கள். அவர்கள் எல்லாம் தீர்க்காயுசாக எல்லா நன்மைகளையும் பெற்று வாழவேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பம். பொது நிறுவனங்களில் இப்படி மொனாபொலி இருப்பது கூடாது என்பது தான் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற அம்சமாகும்.

Mr. SPEAKER : The hon. Member may please be short. We have two more Bills.

30th March 1966]

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த மாநிலத்தில் இருக்கிற பாங்குகள் போன்ற நிறுவனங்களில் பொறுப்பு வகித்துக்கொண்டிருக்கிறவர்கள் அவர்களாகவே கூட அந்தப் பொறுப்பை விட்டு மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கும் வகையில் விலகிக்கொண்டால் நல்லது என்ற கருத்து இருக்கிறது. பெரிய மனிதர்கள் வீட்டுப் பிள்ளை என்றால், அந்த ஊருக்கு சேர்மனாக இருக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சம் ஒரு ராவ்பாதூர் டைடிலாவது வாங்க வேண்டும், இரண்டும் கிடைக்கவில்லையென்றால் அந்த ஊரிலே இருக்கிற பாங்குக்கு டைரக்டராக வரவேண்டும் அல்லது சேர்மனாக வரவேண்டும் என்று நாட்டுப்புறத்தில் சொல்லுவார்கள். அந்தப் பழக்கம் 20 ஆண்டு காலமாகியும் மாறி இருக்கிறதா என்று பார்த்தால், மாறி இருக்கிற நிலைமையை நாம் பார்க்க முடியவில்லை. நம்முடைய ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்கை எடுத்துக்கொண்டாலும், அங்கே தலைவராக இருப்பவர் தீர்க்காயுசாக, நிரந்தரமாக இருக்கிறார். அதே போலத்தான் மார்கெட்டிங் சொஸைடியாக இருந்தாலும் சரி, ஹவுசிங் சொஸைடியாக இருந்தாலும் சரி, லாண்டு மார்ட்கேஜ் பாங்காக இருந்தாலும் சரி, எதை எடுத்துக்கொண்டாலும், அவர்கள் அத்தனை பேர்களும் தொடர்ந்து இருக்கிற பரம்பரை பாத்தியதை இருந்துகொண்டிருக்கிறது.

Mr. SPEAKER : What about Legislature ?

Sri K. A. MATHIALAGAN : Legislature is democratic.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்கள் நம்முடைய சட்டமன்றத்தைப் பற்றி கேட்கிறார்கள். கூட்டுறவு நிறுவனங்கள் பணம் சம்பந்தமாக நிர்வகிக்கின்ற பொது ஸ்தாபனமாகும். அவர்களுக்கும் உள்ள வித்தியாசங்கள், வேற்றுமைகள் நமக்கு எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நான் அதற்குள்ளே போவதற்கு விரும்பவில்லை. இந்தக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த அளவில், இந்த பரம்பரை பாத்தியதைக்கு ஒரு வரம்பு செய்யப்படவேண்டும் என்பதற்காகத்தான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அவர்கள் இந்த கோவாப்பரேடிவ் ஸ்தாபனங்கள் பக்கமே மறுபடியும் திரும்பிப் போகக் கூடாது என்பது என்னுடைய நோக்கம் அல்ல. ஒருவர் தொடர்ந்து டைரக்டராக வந்துவிட்டால், தொடர்ந்து அதே இடத்தில் அவர் பொறுப்பில் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எல்லோரையும் அனுசரித்துக்கொண்டு, தேர்தல் நடந்ததாகச் சொல்லி மினிட்ஸ் புக்கில் எழுதுகின்ற கட்டமும் இருப்பதை அறிவோம். மறுபடியும் அவர்களே அந்த ஸ்தாபனத்தில் தொடர்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கிற தன்மை இருந்து கொண்டிருக்கிறது, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். எவ்வளவுதான் நாம் சட்டங்களை நிறைவேற்றினாலும், எவ்வளவு அதிகாரத்தை ரிஜிஸ்டிராருக்குக் கொடுத்தாலும், அத்தனையும் பயனற்றுப் போகும் என்பது என்னுடைய கருத்து. இந்த திருத்த மசோதாவின் மூலம் ஊழல் தடுக்கப்படவேண்டும். ஊழல் செய்கின்றவர்களுக்கு எதிர் காலத்தில் எந்த இடமும் அளிக்கக் கூடாது என்கின்ற அளவுக்கு தீவிரமான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்து நிறைவேற்றப்படாமலே, அதிகாரி

களுடைய விஷயத்தில் குறுக்கிடாமல் நம்முடைய ஆளும் கட்சி இருக்குமா, ஆளும் கட்சித் தலைவர்கள் இருப்பார்களா என்பதெல்லாம் பிரச்னைக்குரிய விஷயம். இவைகளெல்லாம் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும் என்று சொன்னால், நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை அரசுத்தரப்பில் ஏற்றுக்கொள்ளுவார்கள், ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு டைரக்டராக இருந்து விட்டால், மேலும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து இருக்கவேண்டியதில்லை, இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய திருத்தமாகும். அடுத்த மூன்று ஆண்டுகள் கழித்து, அவர்கள் நல்லது செய்துள்ளார்கள் என்றால், மீண்டும் அவர்கள் டைரக்டராக வருவதற்கு இடம் இருக்கிறது. பரம்பரை பாத்தியதை தொடர்ந்து அனுபவிக்கப்படுகிறது, அது குறைக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கமாகும். ஆகவே, இந்தத் திருத்தத்தை ஆட்சேபிக்க எந்த அம்சமும் இருக்காது என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆளும் கட்சித் தரப்பிலே கொண்டு வந்திருக்கிற திருத்த மசோதாவை எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் எல்லாம் எப்படி மகிழ்ந்து வரவேற்கிறோமோ, அதே போல எதிர்க்கட்சித் தரப்பில் நான் இந்த மசோதாவுக்கு கொடுத்திருக்கிற திருத்தத்தையும் நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

Mr. SPEAKER : The Clause and the amendment are before the House for discussion. The hon. Member Sri K. A. Mathialagan may now speak. The hon. Member may please be short, in his speech.

* **திரு. கே. ஏ. மதியழகன்** : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர் திரு. இராம அரங்கண்ணல் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தின் அடிப்படையில் அதனை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். திருத்தத்திற்கான காரணங்களை அவர்கள் மிகத்தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். எந்த நோக்கத்தோடு இந்த மசோதா இன்று நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கத்தை செவ்வனே நிறைவேற்றுவதற்கு, இந்த மசோதா முழு வெற்றி பெறுவதற்கு இந்தத் திருத்தம் மிக இன்றியமையாதது என்று நான் மிகவும்
1-00 p.m. திடமாக நம்புகிறேன்.

இன்றைக்கு நாம் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். காரணம் ஊழல்கள், கையாடல், மோசடிகள் இருக்கின்றன. அவற்றைக் களையவேண்டும். இன்றைக்கு அதற்கு தண்டனை கொடுக்க வேண்டும். அப்படிக் குற்றம் செய்யும் மனப்பான்மைத் தடுக்க வேண்டும். To check the tendency அதற்காகத்தான் இந்த திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்தக் [illegible] இயக்கம் நாட்டு மக்களுக்கு நல்ல வகையில் பயன்பட

வேண்டும் என்பதற்காகத்தான் நண்பர் இராம. அரங்கண்ணல் மூன்று வருஷம் ஆகவேண்டும் என்கிற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் அதை நன்றாக விளக்கினார்கள். இன்றைக்கு கூட்டுறவு இயக்கத்தில் சில குடும்பங்கள், ஜமீன் போல, தங்களுடைய சுகபோக பண்ணையாக ஆக்கிக் கொண்டு, குளிர் சாதனங்கள் வைத்துக்கொண்டு, பல கட்டத்தில் லஞ்ச ஊழல்கள், லாவண்ணியங்கள் ஏற்படக் காரணமாக இருக்கிறார்கள். அதனால்தான் நாம் இன்றைக்கு விஜிலன்ஸ் கமிஷன் வைத்திருக்கிறோமோ என்று கூட எண்ணவேண்டியிருக்கிறது. அந்த வகையில் பொது வாழ்வைப் புனிதப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். கனம் சுகாதார அமைச்சர் கூறியபடி, இராடிகேஷன் கொண்டு வரலாமா என்று அவர்களுடைய சுகாதார பாஷையிலேயே சொன்னார்கள். ஆகவே, இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்கள் மூன்று வருஷத்திற்குத் தள்ளிவைக்கப் படவேண்டும். இந்த மாதிரியான திருத்தங்கள் மூலம் தான் சமுதாயத்தில் புனிதமான நோக்கங்கள் ஈடுசெய்ய முடியும். இன்றைக்கு இருக்கும் பல்வேறு முறையாக இருக்கும் சாக்கடையைச் சரி செய்ய முடியும். ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. சிலருடைய ஏகபோகமாக ஆக்கிவிடக் கூடாது. இன்றைக்கு சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கும் பேராபயத்தைக் கண்டுதான் காங்கிரஸ் தலைவர் இன்றைக்கு ஒரு கமிட்டியை நிறுவியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த இயக்கம் அதிகாரிகளுடைய வேட்டைக்காடாக ஆகாமலும் தடுக்க வேண்டும். இந்த திருத்தம் ஒரு சாதாரணத் திருத்தம். அதை அமைச்சர் அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அந்தத் துறைக்கு பெருமை தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. அரங்கண்ணல் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை ஆதரிக்கிறேன். இன்றைக்கு கூட்டுறவு இயக்கத்திலே ஊழல்கள் இருக்கின்றன. வேண்டுமானால் ஜாபிதாவும் கொடுக்கிறேன். தொடர்ந்து திருப்பித் திருப்பி சிலர் கூட்டுறவு இயக்கத்தில் தலைவராகவும், மற்ற பதவிகளிலும் இருப்பதால், பல தீமைகள் ஏற்படுகின்றன. பேசும்போது விவரமாகச் சொல்ல முடியாவிட்டாலும், சரியான முறையில் விசாரணை நடத்துவதாக இருந்து, அமைச்சரோ அல்லது சர்க்காரோ விவரம் கேட்டால் ஒரு ஜாபிதாவே கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இன்னார் இன்னார் ஊழல்களுக்கு காரணமானவர்கள், இன்னின்ன காரியங்கள் செய்தார்கள் என்கிற பட்டியல் கொடுக்க முடியும். ஒரு ஸ்தாபனத்திலே திருப்பத் திருப்ப ஒருவரே வருகிறதனால், அந்த ஸ்தாபனத்தை சாக்கடையாக்கி, கொசு, மூட்டைப் பூச்சி இவை வளரும் இடமாக ஆக்கிவிடுகிறார்கள். அந்த நிலைமையைச் சீர்படுத்த நண்பர் அரங்கண்ணலுடைய திருத்தம் சிறந்ததாக இருக்கும். இயக்கம் என்னவோ நல்ல இயக்கம். அதை சிலர் கூடிக்கொண்டு கெடுத்து விடுகிறார்கள். அது அமைச்சருக்கே தெரியும், அரசாங்கத்திற்கே தெரியும். இந்த இயக்கம் விவசாயி

[திரு. க. ர. நல்லசிவம்] [30th March 1966

களுக்குக் கடன்கள் கொடுக்க, இன்னும் இந்த மாதிரி எவ்வளவோ நன்மைகளைச் செய்ய ஒரு நல்ல இயக்கம். இது விவசாயிகளுக்கு கற்பக தரு போன்றது. ஆனால் இதில் தவறு செய்பவர்களை வெளியேற்ற வேண்டிய அவசியம் இருப்பதை உணர்ந்து இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்: கனம் தலைவர் அவர்களே, கனம் இராம. அரங்கண்ணல் கொண்டுவந்திருக்கும் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஏனென்றால், இப்பொழுது நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற திருத்த மசோதாவை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தவறான காரியங்கள் செய்பவர்களை, ஊழல் நடப்பதைத் தடுக்க அதிகாரம் ரெஜிஸ்ட்ராருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு கூட்டுறவு இயக்கத்தில் நடக்கும் தவறுகளை, அக்கிரமங்களை நடக்காமல் தடுக்கமுடியும். ஒருவர் மூன்று வருஷத்திற்கு மேலாக இருக்கக் கூடாது என்பது ஜனநாயக பரம்பரைக்கு உகந்ததாக இருக்காது என்று நான் கருதுகிறேன். ஒருவர் ஒரு கூட்டுறவிலே நியாயமாக, நாணயமாக நல்ல முறையிலே நடந்து கொள்கிறார்கள் என்றால், அவர்களுடைய சேவை மூன்று வருஷத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்பது சரியாகாது. பரம்பரைச் சொத்து என்று நினைக்கக் கூடாது என்கிறார்கள். குற்றம் புரிகிறவர்களைத் தண்டிக்க அதிகாரம் இருக்கிறது. ஆகையினால் இந்த திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்கிற கருத்தினை நான் தெரிவிக்கிறேன்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. அரங்கண்ணல் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை நான் தீவிரமாக எதிர்க்கிறேன். மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் இருக்கக்கூடாது என்பது பொருத்தமாகாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஒருவர் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து இருந்தால், நல்ல முறையில் பணிசெய்ய வாய்ப்பு இருக்கும். பதவிகாலம் மூன்று வருஷத்திலே முடிந்துவிடவேண்டும் என்றால் அங்கே ஜனநாயகத்திற்கே இடம் இல்லை. கூட்டுறவு இயக்கத்தின் மூலம்தான் சோஷலிசம் வெற்றி பெறுவதற்கு இடம் இருக்கிறது. கூட்டுறவு வெற்றிபெறவில்லையென்றால், அது சோஷலிசம் வரமுடியாது என்பதற்கு முன் அறிவிப்பு. அதிகாரிகளுடைய வேட்டைக்காடு என்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையைத் தடுக்கவேதான் அமைச்சர் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கும் மேல் அப்பீல் செய்வதற்கு இடம் இருக்கிறது. அந்த நிலையில் மேலும் மூன்று வருஷம் என்று தடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கூட்டுறவு இயக்கத்திலே சுரண்டல் வாதிகள் தோன்றக்கூடும் என்றால் சர்க்காரே திருத்தம் கொண்டு வந்து நிலைமையைச் சரிசெய்வார்கள். இயக்கம் நல்லதுதான். வண்ண மலர் நல்ல ரோஜாவாக இருந்தாலும், செடியின் முள் தைத்துவிடாமல் பறிக்கவேண்டும். கூட்டுறவு நல்ல இயக்கம். அதில் அசம்பாவிதங்கள் என்கிற முள் தைக்காமல், நல்ல முறையில்

30th March 1966] *[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]*

நடத்த சர்க்கார் கவனம் செலுத்துவார்கள். ஆகவே, இந்தத் திருத்தம் வேண்டியது இல்லை என்று சொல்லி இந்த திருத்தத்தை நான் எதிர்க்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிலே இரண்டுக்கும் இடையான கருத்தை நான் சொல்லுகிறேன். கனம் அங்கத்தினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் "மூன்று வருஷங்கள்" என்று சொன்னதை மாற்றி "ஆறு வருஷங்கள்" என்று ஆக்கிக்கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால், பரம்பரையாக ஒருவரே தலைவராக இருக்க வேண்டும் என்ற கருத்தை நான் ஆதரிக்கவில்லை. பெரிய அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியே இரண்டு 'டர்ம்'-க்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. பெரிய ஜனநாயக நாட்டின் தலைவரே இரண்டு தடவைக்குமேல் பதவியில் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நிர்ணயித்துக்கொண்டிருக்கும்போது, இத்தனை கோடி மக்களைக் கொண்ட ஜனநாயகத்தில் மட்டும் ஏன் ஓரே நபர் சாகும் வரையில் இப்படிப்பட்ட பதவியில் இருந்து கொண்டு இருக்கவேண்டும்? **Death or resignation alone can remove them** என்ற நிலையில், ஏன் ஒருவரே இருக்கவேண்டும்? அவருக்குப் பின் அவருடைய பிள்ளை, அவருக்குப் பின் அவருடைய பேரன் அல்லது பங்காளி அல்லது மனைவி இப்படியே குடும்பச் சொத்து மாதிரி இருக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துவது உண்மையிலேயே ஜனநாயகக் கருத்துக்குப் புறம்பானது தான். ஆகையால், பரம்பரை பரம்பரையாக எந்தப் பொதுச் சொத்தையும் ஒருவரே அனுபவிக்கலாம் என்று விடுவது ஜனநாயகக் கருத்துக்கே புறம்பானது (திரு. ஆர். வி. சுவாமிநாதன் சட்டசபை மெம்பராக மட்டும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கலாமா?) சட்டசபை மெம்பராக இருப்பதென்பது, சட்டசபையில் பதவி வகிப்பது என்பது வேறு. காரணம் This is adult franhcise. சட்டசபை அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படுவது என்றால், அது adult franchise அடிப்படையில் நடைபெறும் தேர்தல். வயது வந்தோர் அத்தனை பேருக்கும் வாக்குரிமை உண்டு. அதனால், சட்டசபை மெம்பர் பதவி என்பது வேறு. ஆனால், கூட்டுறவுத் துறையில் இருப்பவர்கள் நாற்காலியை விடமாட்டேன் என்கிறார்களே? அப்படி இருக்கும்போது, அதுவும் இதுவும் எப்படி ஒன்றாகும்? ஆகவே, இயக்கத்தில் இருக்கும் தவறை நீக்குவதற்கு, பரம்பரை பரம்பரையாக அங்கத்தினராக இருப்பவரை மாற்றி, "மூன்று வருஷங்கள்" என்று இல்லாமல், கனம் உறுப்பினர் திருமதி ராஜாத்தி அம்மையார் அவர்கள் தெரிவித்ததுபோல் மூன்று வருஷங்களிலே காரியம் அவ்வளவாகச் செய்ய முடியாது என்ற கருத்தையொட்டி, "ஆறு வருஷங்கள்" என்று மாற்றி அமைக்கலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இரண்டு 'டர்ம்'கள் 'கன்ஸிக்யூடிவ்'வாக இருக்கலாம். அதற்குப் பிறகு இருப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்வது நல்லது. கூட்டுறவு இயக்கத்திலேயே புரட்சியைக் கொண்டுவந்த பெருமைக்குரிய அமைச்சர் அவர்கள் இன்றைக்கு கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்தத்தையொட்டி அதையும் கொண்டு வந்துவிடுவார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, முதன் முதலாக கனம் உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் கொண்டுவந்த திருத்தம் எவ்வளவு தூரம் விதிகளுக்கு உட்பட்டது என்பதை, விதிகளை நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக, நான் விளக்க விரும்புகிறேன் அதை நான் 'அப்ஜெக்ஷன்' ஆகச் சொல்லி, 'ரிஜெக்ட்' செய்துவிடவேண்டும் என்று சொல்லவில்லை. "Amendment should not expand the scope of the Bill" என்பது நம்முடைய விதிகள். இன்றைக்கு நாம் கொண்டுவந்திருக்கிற இந்தத் திருத்த மசோதா Disqualification-ஐப் பற்றியது Disqualification என்றால் இப்பொழுது இருக்கிற Disqualification என்ன, முன்பு இருந்த Disqualification என்ன; அதற்கு என்ன "பனிஷ்மென்ட்" அதற்கு என்ன விவகாரங்கள் என்பதைப்பற்றியதுதான். ஒரு அங்கத்தினர் எத்தனை காலம் தொடர்ந்து டைரக்டராக இருக்கலாம், எத்தனை காலம் எக்ஸிக்யூடிவ் கமிட்டியில் இருக்கலாம் என்பது தனி ஷரத்து. அது வேறு விவகாரம். கனம் உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தம் இன்றைக்கு நாம் கொண்டு வந்திருக்கிற திருத்தச் சட்டத்திற்கு outside the scope ஆக இருக்கிறது. It is expanding the scope of the Bill என்று நான் முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். Admit பண்ணிவிட்டார்களே என்று வாதிடுவதில் அர்த்தம் இல்லை. அதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும் நம்முடைய விதிகளையெல்லாம் காற்றில் விட்டுவிடுகிற மாதிரி எனக்குப் பயம் வந்துகொண்டிருக்கிறது. ஒரு 'அமெண்டுமென்ட்'டைக் கனம் சபாநாயகரோ, அவருடைய ஆபீஸோ 'அட்மிட்' செய்தால் *Prima facie* ஆக அட்மிட் பண்ணத் தகுந்த அமெண்டுமென்டாக இருக்கிறது Absurd amendment அல்ல என்பதைக் குறிக்கும் அதற்கு மேல், செல்லுபடியாகுமா; செல்லுபடியாகாதா என்று விவாதிக்க இந்த சட்டசபைக்குத்தான் உரிமை உண்டு. அதைப்பற்றி நாம் இங்கே தீர்மானிக்கவேண்டியது அதை நான் ஒரு 'அப்ஜெக்ஷன்' ஆகச் சொல்லவில்லை. விதிகள் இவ்வாறு இருக்கிறது என்பதை மாத்திரம் கூறுகிறேன். (கனம் உறுப்பினர் திரு. கே. ஏ. மதியழகன் எழுந்தார்) ஒரு 'அமெண்டுமென்ட்' கொடுத்தால், அது சட்டத்திற்குக் 'கம்ப்ளீட்'டாக எதிராக இல்லாமல் இருக்கவேண்டும். உதாரணமாக, இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதாவிலே, வேறொரு சட்டத்திலே இருக்கும் ஷரத்தை மாற்றவேண்டும் என்று திருத்தம் கொடுத்தால், அதை 'அட்மிட்' செய்யமாட்டார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் சம்பந்தமாக ஷரத்துக்குத் திருத்தம் கொடுத்தால், let them take their chance in the House என்று 'அட்மிட்' செய்துவிடுவார்கள். அதுதான் டிபார்ட்மென்ட் செய்யக்கூடிய அலுவல். 'அட்மிட்' செய்து 'அமெண்டுமென்ட்'டாக வந்த பிறகு, இந்த 'அமெண்டுமென்ட்' செல்லுபடியாகுமா, ஆகாதா என்று பேசக்கூடிய உரிமை கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. அதைத்தான் நான் விளக்கிச் சொல்லுகிறேன். ஏனென்றால், சட்டசபையில் எந்த அளவுக்கு விதிகளுக்குட்பட்டு நடக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும்.

சட்டசபை விதிகளை நாம் கவனிக்காமல், சட்டசபை விதிகளுக்குப் புறம்பாக நாம் நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்துவிட்டால், பார்லிமென்டரி ஜனநாயகம் (Parliamentary Democracy) என்று சொல்வது சிறப்பான முறையில் நடைபெற முடியாது. விதிகள் இவ்வாறு இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்பினேன்.

இரண்டாவது, கருத்து சம்பந்தப்பட்ட வரையில், இது ஒன்றும் புதிதான கருத்தல்ல; கனம் உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் புதிய கருத்து ஒன்றும் கொண்டுவரவில்லை. 1961-ம் ஆண்டில் சட்டம் கொண்டுவந்தபோதே, இது சம்பந்தமான ஒரு கருத்து Original Bill-இலே போடப்பட்டு, மறுபடியும் ஆய்வுக் குழுவிலே அது மாற்றப்பட்டது. (திரு. கே. ஏ. மதியழகன்: என் மாற்றப்பட்டது?) கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் ரொம்பவும் அவசரப்படுகிறார். அதிலும் என்னைப் பொறுத்த வரையில் ரொம்பவும் அவசரப்படுகிறார். நான் மெதுவாக, ஒவ்வொரு அடியாகப், படிப்படியாகப் பேசுகிறவன். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களுடைய மனோவேகம், இன்றைக்கு Laser rays என்று கண்டுபிடித்து இருக்கிறார்களே அதைவிட வேகமாகச் செல்லும் காரணத்தால், நான் சொல்வதற்குள், "என்ன ஆயிற்று?" என்று கேட்டுவிடுகிறார், காரணம் என்னவென்றால், பலவிதமான அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி கருத்து ஏகோபித்திருக்குமானால், அதை ஒத்துக்கொள்வதிலே சர்க்காருக்கு எந்தக் கஷ்டமும் ஆட்சேபனையும் இருக்காது. ஆனால், ஏதாவதொரு விஷயத்தைப்பற்றி பல்வேறு கருத்துக்கள் இருக்குமானால், அதைப் பரிசீலனை செய்ய வேண்டும்; விசாரணை செய்ய வேண்டும். பல தரப்பில் இருக்கக்கூடிய கருத்துக்களை ஆராய்ந்து, எந்த அளவுக்கு அதை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். அந்த விதமாகச் சென்ற முறை அதைப் பரிசீலனை செய்ததிலே இரண்டு தரப்பிலும் பலமான அபிப்பிராயம் இருந்தது. இரண்டு 'டர்ம்'கள் தான் இருக்கவேண்டும், அதாவது ஆறு வருஷங்கள் தான் இருக்கவேண்டும், அதற்குமேல் வேண்டுமானால் 12 வருஷங்கள் இருக்கலாம், அதற்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய கருத்து மிகவும் பலமாக இருந்தது. அவ்வாறு ஷரத்துக்கள் போடக்கூடாது என்ற கருத்தும் பலமாக இருந்தது. அப்போதும் கேட்டார்கள். இப்பொழுதும் சட்டசபையில் பேசுகிறபோது கேட்கவில்லையா? தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவாளர்கள் இரண்டு 'டர்ம்' தான் இருக்கவேண்டும் என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்கள் இரண்டு 'டர்ம்'-க்குமேல் எதற்காக இருக்கவேண்டும்? என்று கேட்கிறார்கள். அப்படித்தான் கேட்பார்கள். அது நியாயமான வாதம். மற்றத் துறைகளிலும் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் ஏன் இரண்டு 'டர்ம்'-க்கு மேல் இருக்கவேண்டும்? என்றெல்லாம் ஒவ்வொன்றாகக் கேட்க ஆரம்பிப்பார்கள். ஆகவே, இந்த விஷயத்திலே கருத்து ஒற்றுமை இல்லை. கருத்து ஒற்றுமை இல்லாத விஷயத்திலே திடீரென்று 'அமெண்டுமென்ட்' கொண்டு

வந்தால் நிறைவேற்ற இயலாது. இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்றால், மீண்டும் இந்தக் கூட்டுறவு சங்கங்கள் சட்டம் பூராவையும் பரிசீலனை செய்கிறபோதுதான், அதற்குவேண்டிய பல்வேறு ஷரத்துக்கள் எல்லாவற்றையும் இணைத்து அதை எப்படிச் செய்ய முடியும் என்று பார்க்கவேண்டும். சர்க்காரைப் பொறுத்த வரையில், இது இரண்டு 'டர்ம்' தான் இருக்கவேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி நிரந்தரமான முடிவு இல்லை. இது இரண்டு 'டர்ம்' ஆக இருக்கவேண்டும் என்று பெருவாரியான அபிப்பிராயங்கள் இருக்குமானால், பிறகு சட்டம் திருத்தப்படுகிற நேரத்தில் மாற்றுவதற்குத் தயாராயிருக்கும். அது கூடாது என்ற அபிப்பிராயம் இருக்குமானால், அதையொட்டி சர்க்கார் அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளவும் தயாராகயிருக்கும். ஆனால், இப்பொழுது இந்தச் சமயத்தில் நாம் வேறொரு ஷரத்தைப்பற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறபோது, புதிதாக ஒரு ஷரத்தை, அதைப்பற்றிய பூர்வாங்க விவாதம், அதைப்பற்றிய ஆய்வு முதலியவை நடத்தாமல், திடீரென்று ஒத்துக்கொள்ள இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, இங்கு நடைபெற்ற வாதத்திற்கு ஒரு சில அபிப்பிராயங்கள் சொல்லி என்னுடைய திருத்தத்தை வலியுறுத்த விரும்புகிறேன். என்னுடைய திருத்தத் தீர்மானத்தை வரவேற்ற சகோதரிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினருடைய திருத்தத்தைக் கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் வரவேற்கவில்லை. அவர்கள் இன்னொரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: என்னுடைய திருத்தத்தை அவர்கள் ஆறு ஆண்டுகளாக உயர்த்தி வரவேற்றிருப்பதைக் குறித்து நான் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்ளுகிறேன். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரத்தில், சட்ட விதிகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய திருத்தம் புதிதானதல்ல, காங்கிரஸ் கட்சியால் பேசப்பட்ட விஷயம் என்றும் எடுத்துச் சொன்னார்கள். நான் ஓரளவுக்கு ஒத்துக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியால் மட்டுமல்ல. கனம் தொழில் அமைச்சர் அவர்களே கூட, நான் இன்றையதினம் எந்தக்கருத்தில் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேனோ அதற்குச் சாதகமான கருத்தை, ஒரு சமயம் கொண்டிருந்தார்கள் என்பதை நான் அறிவேன். அதையொட்டித்தான், அவர்கள் எல்லாம் மிகவும் அனுபவசாலிகள், இந்தச் சமதர்மம் வளர வேண்டும் என்பதிலே தொழில் அமைச்சர் போன்றவர்கள் நல்ல அக்கறை கொண்டவர்கள், அந்த அக்கறையை என்னைப் போன்றவர்கள் பின்பற்றுவதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. அந்த வகையிலே அவர்கள் இதனுடைய உரிமையை எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்றால், இதில் தொழில் அமைச்சர் அவர்களுக்கும் பூரண பங்கு [illegible], அவர்களுடைய அடிச்சுவட்டில் [illegible] கொண்

வரப்பட்டிருக்கிறது. ஆகவே அப்படியே இதை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்! சட்ட விதியைப் பொறுத்த வரையில் மசோதாவில் இருக்கின்ற 28-வது விதிக்கு திருத்தம் கொண்டுவர வேண்டும் (h) அடுத்தபடியாக, (i) என்ற விதியைச் சேர்க்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து. நான் சட்ட நிபுணன் அல்ல. இருந்தாலும் நியாயத்தின் அடிப்படையிலே திருத்தம் இருக்கின்ற காரணத்தினாலே சட்டமும் நியாயத்துக்கு ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறேன். இரண்டாவதாகத் தரப்பட்ட வாதம் எம்.எல்.ஏ. மட்டும் இரண்டு தடவைகள், மூன்று தடவைகள் வரலாமா என்ற வாதம் தெரிவிக்கப்பட்டது. அப்படியே, இரண்டு தடவைகள் தான் வரலாம், அரசியல் கட்சித் தலைவராக இருக்கின்றவர் இரண்டு தடவைகள் தான் வரலாம், பஞ்சாயத்து போர்டு தலைவராக ஒருவர் இரண்டு தடவைகள் தான் வரலாம், இதற்கெல்லாம் ஒரு இடைவெளி தரப்படவேண்டுமென்று சொன்னால் அரசியல் கட்சிகள் அந்த மாதிரி முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொன்னால், காங்கிரஸ் கட்சியிலே அதற்குத் தயாராக இருப்பார்களானால், நான் என்னுடைய கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன் என்னுடைய கட்சியும் தயாராக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த ஒரு கருத்தும் நாட்டிலே ஏற்றுக்கொள்ளப்படுமானால் அதை எல்லோரும் ஏற்றுக்கொள்வதிலே என்ன தவறு இருக்கமுடியும்? சட்டத்தை நிர்வகிக்கின்ற முறை வேறு, மக்களிடத்திலே இருந்து வருகின்ற பணத்தை ஏற்றுச் செயல்படுகின்ற பொறுப்புக்கள் வேறு. பரம்பரை, பரம்பரையாக இருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. 50 ஆண்டுகள், 25 ஆண்டுகள் என்று பரம்பரையாக இருப்பதால் அந்தப் பாதுகாப்பிலேதான் ஆளுங்கட்சி பதுங்கிக் கொண்டிருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ஆறு ஆண்டுகள் என்பதை ஏற்றுக்கொண்டால்கூட, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அதை வாபஸ் பெறவேண்டுமென்று அவர்கள் சொன்னால்கூட அதைக்கூட ஏற்றுக்கொள்ள வேண்டும். உட்கார்ந்திருப்பவர்கள் இடம்கொடுத்து மற்றவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களே வரலாம். ஆகவே பரம்பரை, பரம்பரை என்ற முறை போய் புதிய பரம்பரை வரவேண்டும். அதற்குப் பிறகுகூட பழைய பரம்பரை வரலாம்.

The amendment of hon. Member Sri Rama. Arangannal was put and declared lost.

A poll was demanded.

MR. SPEAKER: For want of time, I am going to count the number of Members; I am not going to call their names.

The Hon. Speaker called first those Members who were in favour of the amendment to rise in their seats and then those who [illegible]

were against the amendment. The number of Members who rose in favour of the amendment was 33 and the number of Members who rose against the amendment was 75.

The amendment of hon. Member Sri Rama. Aranganna1 was lost.

The Government amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

Clause 3

MR. SPEAKER : The question is—

" That clause 3 do stand part of the Bill. "

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, I move—

" In new section 28-A,—

(i) for the marginal heading, substitute the following, namely :—

" Removal or disqualification. ";

(ii) In sub-section (1),—

(*a*) *for* the words " a member of a committee has misappropriated ", *substitute* the words " a person who is, or was, a member of a committee has misappropriated " ;

(*b*) *for* the portion beginning with the words " remove, by order in writing, " and ending with the words " office of such member. ", *substitute* the following, namely :—

" by order in writing, remove such person from the office of member of committee, if he holds such office, or disqualify him from holding in future the office of a member of the committee, if he has ceased to hold such office." ;

(iii) In sub-section (2),—

(*a*) In the first sentence, *for* the words " No member of the committee shall be removed ", *substitute* the words " No person shall be removed or disqualified " ;

(*b*) In the second sentence, *for* the words " order removing the member from office ", *substitute* the words " order removing or disqualifying him ".

1-30 p.m. SRI K. S. SUBRAMANIA GOUNDER : Mr. Speaker, Sir, I move the following amendment—

Substitute the following for clause 3 of the Bill—

" 3. *Insertion of new section 28-A in Madras Act* 53 *of* 1961.—In Chapter IV of the principal Act, after section 28, the following section shall be inserted, namely—

' 28-A. *Removal or disqualification.*—(1) Where in the course of an audit under section 64 or an inquiry under section 65 or an inspection under section 66 or section 67, it appears that a

person who is, or was, a member of a committee has misappropriated or fraudulently retained any money or other property or been guilty of breach of trust in relation to the society, the Registrar, if in his opinion the association of such person with the management of any society will not be in the interest of the movement, may, without prejudice to any other action that may be taken against such member, by order in writing, remove such person from the office of member of the committee, if he holds such office, or disqualify him from holding in future the office of a member of the committee for such period as the Registrar may think fit, if he has ceased to hold such office.

2. No person shall be removed or disqualified under sub-section (1) without being given an opportunity of making his representations. A copy of the order removing or disqualifying him shall be communicated to him. "

The amendment was duly seconded.

PULAVAR K. GOVINDAN : Sir, I move the following amendment—

" Substitute the following for sub-section (1) of new section 28-A—

" 28-A. *Removal or disqualification.*—(1) Where in the course of an audit under section 64 or an enquiry under section 65 or an inspection under section 66 or section 67, it is proved that a person, while acting as a member of a committee, has misappropriated or fraudulently retained any money or other property or been guilty of breach of trust in relation to the society or of gross or persistent negligence in connection with the conduct and management of, or of gross mis-management of, the affairs of the society, or of misfeasance or default in carrying out his obligations and functions under the law, or when he is sentenced by criminal court to imprisonment for any offence involving moral delinquency (such sentence not having been reversed), the Registrar may without prejudice to any other action that may be taken against such member, by order in writing remove such person from the office of member of committee, if he holds such office or disqualify him from holding in future the office of the member of the committee if he has ceased to hold such office."

The amendment was duly seconded.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move the following amendment—

" (i) In section 28 (A) delete the words beginning from " or of gross or persistent negligence in connection with the conduct and management of, or of gross mismanagement of, the affairs of the society, or of misfeasance or default in carrying out his obligations and functions under the law,"

(ii) In section 28-A delete the words beginning from "the Registrar may. . . . . . . to such office" and add the following—

"the Registrar may by notice in writing require such member to offer within a specified date, his explanation with respect to any such misappropriation or fraudulent retention of money or property or breach of trust in relation to the society mentioned in the notice.

2. If the explanation is received within the specified date, and the Registrar considers that the explanation is satisfactory the Registrar may drop further action with respect to the notice. If no explanation is received within the specified date or if the explanation received is in his opinion not satisfactory, he shall forward to the Deputy Registrar of the Division concerned a copy of the notice referred to in sub-section (1) and explanation of such member with a proposal to remove him from office.

3. The notice referred to in sub-section (1) and the explanation offered, if any, along with the proposal for removal of such member shall be placed for consideration of the General Body of the concerned Society, specially convened for the purpose and presided over by the Deputy Registrar with due notice as may be prescribed under the rules.

4. If the proposal has been accepted by the General Body of the concerned Socity, the Registrar shall, by notification, remove such member from office or disqualify him from holding in future the office of a member of the Committee, if he has ceased to hold such office."

The amendment was duly seconded.

MR. SPEAKER: Now, the clause and the amendments are before the House for discussion.

*SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, with regard to the amendments I have moved to this clause, I request the Government to clarify the position. I want to know to what extent the officials would be entrusted with the work of defining the expression 'gross or persistent negligence in connection with the conduct and management of, or of gross mismanagement of, the affairs of the society or of misfeasance or default in carrying out his obligations and functions under the law' As I have already stated, I wholeheartedly welcome the Bill.

Then with regard to the expression 'member of a committee has misappropriated or fraudulently retained any money or other property or been guilty of breach of trust', it has been stated that if a member of a committee does not discharge his obligations and functions under the law, he may be removed. As I have already stated in my main speech earlier, there are certain secretaries of

a Department also working in the Agricultural Banks, Central Banks, Taluk Marketing Societies and other societies. Even if they do not discharge their functions or carry out their obligations and functions under the law, the member of the committee is liable for removal. Sir, in a democratic set-up where non-officials have been entrusted with the working of these societies, is it not desirable that we should also define clearly to what extent they will be held responsible and would be removed if they do not discharge their obligations. Is it not proper to see that their interests also are safeguarded? If he has committed a grievous offence or if he has violated certain conditions which have been stipulated in the Act, he is liable for removal. Also, in the discharge of his duties or carrying out his obligations, if he commits an offence, it is not an individual responsibility but it is a joint responsibility of those persons managing the affairs of a society. I request the Government to clarify the position in regard to this matter.

As regards subsequent amendment to the same clause, we have made provision in the Panchayats Act for communicating the removal of a member of a society from office to the general body of the Panchayat Union Council. Here also an apportunity should be given to the members of the society to see whether a member of that society has misappropriated funds or mismanaged the society. The people in the village also will take him to task. In this connection, I suggest that the provision provided in the Panchayat Act that the Director of Rural Development can direct the Revenue Divisional Officer to preside over the meeting of the General Body of the concerned Panchayat Union to find out from the general body for himself whether one has mismanaged the society or misappropriated the funds of the society and whether he should be removed from office may be known from the general body by asking the concerned Deputy Registrar to call for the meeting. I request that this aspect of the matter also may be considered. The Government may also consider whether my amendment can be accepted.

திரு. செ. மாதவன்: கனம் தலைவர் அவர்களே, இந்த மூன்றும் பிரிவுக்கு எங்கள் தரப்பில் இருந்து திருத்தம் கொடுத்திருக்கிறோம். கொடுக்கப்பட்ட திருத்தத்திலே மூன்று அம்சங்கள் வலியுறுத்தப் பட்டிருக்கின்றன. ஒரே ஒரு பிரிவைப் புதிதாகப் போடக்கூடிய ஒரு சிறு சட்டத்திலே, இந்தச் சட்டம் இந்தச் சபையிலே இன்ட்ரட்யூஸ் செய்து பல மாதங்கள் ஆகிவிட்ட பிறகும் கூட சர்க்கார் திடீரென்று மூன்று திருத்தங்களைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு குழப்பத்தை உண்டு பண்ணக்கூடிய அளவுக்குச் சட்ட இலாகா என்ன செய்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இதை நான் சட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களே பல திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள் ஒரே பிரிவில் மூன்று திருத்தங்கள். நாங்கள் மறுபடியும் திருத்தம்

[திரு. செ. மாதவன்] [30th March 1966

கொடுக்க குழப்பமாக இருக்கிறது. மீண்டும் இந்த நிலைமை ஏற்படாதவாறு சட்ட இலாகா பார்த்துக் கொள்ளவேண்டுமென்று சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முதலாவதாகக் கொடுத்திருப்பது நடைமுறையில் எப்படி நடத்துவது என்பதைப்பற்றியது. இப்போது இருக்கக்கூடிய பிரிவின் அடிப்படையில் "Where it appears" என்று இருக்கிறது. ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுக்கிறோம். கடுமையான அதிகாரம் என்று எல்லாத் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் அதை நிறைவேற்றுகிறபோது 'appears' என்று கூறிவிட்டு நியாயம் கிடைக்க வழி ஏற்படுமா? 'appears' என்று இருந்தால் அவர்களுடைய எண்ணம் எதுவாக இருக்கிறதோ அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம் என்று அமைந்து விடுகிறது. எந்தக் குற்றத்தைச் செய்ததாக ரிஜிஸ்ட்ரார் கருதுகிறாரோ அந்தக் குற்றம் உண்மையிலே செய்யப்பட்டது என்று நிரூபணமாகிறதா என்று பார்க்க வழி இல்லாமல் இருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய சட்டப்படி, அங்கத்தினர் தவறு செய்து விட்டால் ஐ.பி.சி. படி கோர்ட்டில் நடவடிக்கை. எடுக்கலாம். இந்தப் பிரிவுப்படி ரிஜிஸ்ட்ரார் நடவடிக்கை எடுக்கலாம். அதற்கும் ஒரு பாதுகாப்புக் கொடுக்க வாய்ப்பு இருக்க வேண்டுமென்ற காரணத்தால் எங்களுடைய திருத்தத்தில் 'Where it is proved' என்று கொடுத்திருக்கிறோம். சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய பிரிவில் 64, 65, 66-ல் ஆடிட் இன்ஸ்பெக்ஷன், என்குவைரி என்று இருக்கிறது. அதைச் செய்வதற்குத்தான் உரிமை இருக்கிறது. அதிலே கண்டு பிடித்ததை உண்மைதான் என்று தீர்மானிக்க எந்த விதமான அதிகாரமும் கிடையாது. இந்தப் பிரிவிலே 'it is proved' என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொண்டால் பாதுகாப்பாக இருக்கும்.

அடுத்தாற்போல் ஒரு வெர்பல் சேஞ்சு கொடுத்திருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள். இது ஏற்கனவே இருப்பதைக் 'கன்ப்யூஸ்' பண்ணுவதாக இருக்கிறது. 'ரிமூவல், டிஸ்குவாலிபிகேஷன்ஸ்' என்பதிலே 'who is or who was' என்று மாற்றியிருக்கிறார்கள். ஒரு கமிட்டியில் இருந்தவர் தவறு செய்தார் என்றால் நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள். கமிட்டியில் அங்கத்தினராக முன்பு இருந்தவராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக 'Who was a member' என்று பாஸ்ட் டென்சில் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தம் 'While acting as a member" என்பதாகும். இவ்வாறு போட்டுவிட்டால் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். அவர் மெம்பராக இருக்கும்போது தவறு செய்தால் டிஸ்குவாலிபை செய்யலாம். ஆகவே, இவ்வாறு பொதுவாக இருந்தால் பொருத்தமாக இருக்கும்.

மூன்றாவது, தவறுகளில் முக்கியமான தவறு, சொசைட்டியில் தவறு செய்தால், நடவடிக்கை எடுக்கலாம் என்பது திருத்தம். இப்போது இருக்கக்கூடிய நிலைமை என்ன? சொசைட்டியில்

30th March 1966] [திரு. செ. மாதவன்]

இருப்பவர்கள் வேறு ஒரு கிரிமினல் அஃபென்ஸ் செய்து ஓராண்டு, இரண்டாண்டு ஜெயிலுக்குப் போனால் கூட சொசைட்டியில் பதவி வகிக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. இது பொருந்துமா என்று பார்க்கவேண்டும். இது பணம் கையாளப்படக்கூடிய நிறுவனம். இதிலே மக்களுடைய நம்பிக்கையை இழந்தவர்கள் இருக்கக்கூடாது. வேறு குற்றத்தைச் செய்து நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு ஓராண்டு ஜெயிலில் இருந்தவர்கள் இந்த நிறுவனத்திலே இருக்கலாம் என்று கருதுவது பொருந்தாது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்கள் இதிலே இருக்கக் கூடாது என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு பஞ்சாயத்து ஆக்டில் இருக்கிறது. முனிசிபல் ஆக்டில் இருக்கிறது. இந்தச் சட்டத்திலேயே கூட அவர்கள் கிரிமினல் குற்றம் செய்தால் 'டிஸ்குவாலிபை' செய்யவேண்டுமென்ற புரொவிஷன் இருக்கிறது. வேறு சட்டத்திலே இல்லை என்ற நிலை இல்லை. ஆகவே, இதையும் மாற்றியமைக்க வேண்டும்; இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த மூன்று அம்சங்களிலும் எங்களுடைய திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது பிரிவுக்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அரசாங்கம் திருத்தம் கொடுத்திருப்பது, இது இரண்டையும் சேர்த்து வேறு சில தேவையில்லாததை விட்டு விட வேண்டுமென்ற அளவிலும் இன்னும் ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்குக் குற்றம் செய்தவர்கள் மேல் இன்னும் சற்று அதிகமான அளவில் நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய அளவில் அதிகாரம் இருக்கவேண்டு மென்ற அளவிலும் என்னுடைய திருத்தம் அமைந்திருக்கிறது. Member of a Committee என்பதற்குப் பதிலாக who is or who was a member of a Committee என்ற அளவில் அரசாங்கத் திருத்தம் இருக்கிறது. அதையே நானும் கொடுத்திருக்கிறேன். இம்மாதிரித் திருத்தத்தின் அவசியமே, ஒருவர் மெம்பராக இருந்து நடவடிக்கைகள் எடுக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் அவர் மெம்பர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டால் அவர் பேரில் நடவடிக்கைகள் எடுக்க முடியாது என்றளவில்தான் முதலில் அரசாங்கம் கொடுத்த திருத்தம் இருந்தது. அவ்வாறு தப்பு செய்கிறவர்கள் தப்பித்துக் கொள்வார்கள் என்ற முறையில் அவர்கள் தப்பித்துக் கொள்ளக்கூடாது என்ற வகையில்தான் இத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. திரு மாதவன் அவர்கள் சொன்னதுபோல் அந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் பிறகு மறுபடியும் ரிமூவ் செய்துவிட்டுத் திரும்ப அதே பதவிக்கு வருவதைத் தடுக்கமுடியாது. ஆகவே Member of a Committee என்பதற்குப் பதிலாக a person who is or who was a member of a Committee என்றிருப்பதுதான் மிகப் பொருந்தும். அவ்வாறு செய்தால் உண்மையில் தவறு செய்தவர்கள் தப்பித்துக் கொள்ளாத அளவில் அமையும். ஆகவே அவ்வாறு இருப்பதுதான் சரி. சங்கங்களில் பலவிதத் தவறுகள் நடக்கின்றன. நான்

கொடுத்திருக்கும் திருத்தத்தில் அரசாங்கம் சொன்னதில் பல பகுதிகளை அப்படியே ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். 'a member who has misappropriated பணம் கையாடல் செய்திருந்தாலும் சரி, 'fraudulently retained any money' சங்கப் பணத்தை வேண்டுமென்றே வைத்துக் கொண்டிருந்தாலும் சரி, 'or has been guilty of breach of trust in relation to a society' 'or has been guilty of breach of trust in relation to a society' சொஸைட்டியின் சொத்தை துர்விநியோகம் செய்திருந்தாலும் அப்படியில்லாவிட்டால் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளாமல் இருந்தாலோ இம்மாதிரி குற்றத்திற்காக சங்கத்திலிருந்து நீக்கி விடுவது என்பதைப் பற்றி ஆட்சேபணையில்லை. அவ்வாறு செய்வதை வரவேற்கிறேன் என்ற அளவிலும் சொல்ல விரும்புகிறேன். அவ்வாறு செய்யாவிட்டால் தவறு செய்கிறவர்களைத் தண்டிக்கமுடியாது, இப்போதுள்ள சட்டத்தில் அவ்வாறு தண்டிக்க பூர்ணமான வழிகளும் கிடையாது. அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய மற்றக் காரியங்களுக்கு இப்படிப்பட்ட நடவடிக்கைகள் அவசியமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இதர சாதாரண குற்றங்களுக்காக—சங்கரன் அவர்கள் கூட ஏற்கனவே முதலிலே குறிப்பிட்டார்கள்—இந்த disqualification, removal வேண்டுமா என்பதை யோசிக்கவேண்டும். சூப்பர்ஸீட் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. Default in carrying out the obligations and functions under the law என்றிருப்பதெல்லாம், பொதுவான ஒரு அமைப்பாக அந்த வாக்கியம் அமைந்திருக்கிறது. அதன்படி, உண்மையாக, ஒழுங்காக இருப்பவர்கள் கூட சரியாகச் செய்யவில்லை என்று சொல்லவேண்டுமானால் அம்மாதிரி சொல்லலாம் என்ற காரணத்தினால் அது தேவையில்லை, மற்றதையெல்லாம் வைத்துக்கொள்ளலாம் என்ற முறையில் என் திருத்தம் இருக்கிறது. Registrar may without prejudice to any other action சூப்பர்ஸீட் செய்ய அந்தச் சட்டத்தில் ரெஜிஸ்ட்ராருக்கு ஒரு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் அபிப்பிராயத்தில் If in the opinion of the Registrar என்ற அளவில் இருந்தால், ரெஜிஸ்ட்ரார் அவர்கள் இம்மாதிரி ஏதாவது தவறுதல் வந்திருக்கிறது என்று அவர்கள் மனதில் பட்டது என்று சொன்னால் கூட அம்மாதிரி நபர்களை நீக்குவதற்கு வாய்ப்பிருந்தால் இதை நிரூபிப்பது, எந்த அளவிற்கு மறுபடியும் செல்லும் என்ற அளவில் இல்லாமல் அமையும். "If in the opinion of the Registrar" என்ற அளவில் இருந்தால் ரெஜிஸ்ட்ராருக்கு அதிக அளவில் அதிகாரம் கொடுக்கக் கூடிய அளவில் இருக்கும். கோர்ட் போன்றவற்றிற்குச் சென்று தடுத்து நிறுத்த இடமில்லாத அளவில் இருக்க முடியும், தப்பிதம் செய்தவர்கள் தப்பித்துக் கொள்ளாமலிருக்கக் கூடிய அளவில் இருக்கும். எவ்வளவு நாட்களுக்கு இவர்களை டிஸ்க்வாலிஃபை செய்வது என்பதைப் பொருத்தமட்டில் குற்றம் பெரியதாக இருக்கிறதா, பெரிய குற்றம் செய்தால் அவர்களை நிரந்தரமாக நீக்குவது பற்றி ஆட்சேபணையில்லை. அவ்வாறு செய்யலாம். சாதாரணக் குற்றமாக இருந்

தால் எவ்வளவு நாட்களுக்கு என்று சொல்லும்போது. For such period as the Registrar may think fit என்ற அளவில் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். சில பூரணமாக டிஸ்க்வாலிஃபை செய்யக்கூடிய குற்றங்களாக இருக்கலாம். சில பத்து ஆண்டுகளுக்கு இருக்கக்கூடாது என்று சொல்லும் அளவில் இருக்கலாம் சில ஐந்து ஆண்டுகள் இருக்கக் கூடாது என்று சொல்லும் அளவில் இருக்கலாம். ஆகவே குற்றம் எந்த அளவிற்கு இருக்கிறது என்ற அளவில் அமைந்தால் பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு அரசாங்கம் இந்தத் திருத்தம் சரி என்று கருதினால் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால் சாதாரண விஷயங்களுக்கு இவையெல்லாம் உபயோகிக்கப்படமாட்டாது என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் சொல்லும் போது தவறு செய்பவர்களைத் தண்டிப்பதற்கு அல்லது அவர்களைப் பூரணமாக விலக்கிவிடுவது என்றால் எனக்கு அதில் ஆட்சேபணையில்லை, என்று சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். சாதாரணக் குற்றங்களுக்கு, அவர்கள் இதற்கு உள்ளாகக் கூடாது என்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. ஏ. மதியழகன்: கனம் தலைவர் அவர்களே, புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தங்கள் மீது நான் இரண்டொரு வார்த்தைகள் கூறிக் கொண்டு முடிக்கிறேன். இந்தத் திருத்தத்தில் கடைசியாக இருக்கிற அம்சத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர்களைப் பொறுப்பிலிருந்து அகற்றுவது பற்றியும், அதற்கான டிஸ்க்வாலிஃபிக்கேஷன்ஸ் பற்றியும் சொல்லியிருக்கிறது. இங்கே குற்றங்கள், குறைகள் நடந்தால் மட்டும் போதாது. சமுதாயத்தில் வேறுவிதமான நிறுவனங்களில் அல்லது வழக்குமன்றத்தில் தண்டிக்கப்பட்டிருந்தால், அவர்களை இதில் அனுமதிக்கப்படமுடியாத நிலை இருக்க வேண்டும் என்பதுதான் சாராம்சம். திரு. மாதவன் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒரு யோசனை கூறுவேன். திரு. மாதவன் அவர்களின் திருத்தம் பரந்த அளவில் இருக்கிறது. 'மாரல் டெலிங்க்வன்ஸி' என்ற அளவில் இருக்கிறது. இந்தியக் குற்றச்சட்டத்தில் இருப்பதுபோன்ற கையாடல், போர்ஜரி, மிஸப்ராப்பிரியேஷன் இவற்றை வெளியே வேறு நிறுவனங்களில் செய்து விட்டு அவர்கள் யோக்கியர்கள் போல் உறுப்பினர்களாக இருக்க வழி வகுத்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. திரு. மாதவன் அவர்கள் கூறியதன் அடிப்படையில் அமைச்சர் அவர்களே ஒரு திருத்தம் கொண்டுவரலாம். க்ரிமினல் குற்றங்கள் வெளியில் வேறு துறையில் செய்திருந்தால் அதையும் சேர்க்கும் நிலை இருந்தால்தான் எந்த நோக்கத்திற்காக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேற வழி ஏற்படும். சுடுகாட்டிற்கு மத்தியில் குடிநீர் குளத்தை வைத்து தண்ணீர் சுத்தமாக இருக்கிறது என்று சொல்வது போல், வெளியில் குற்றங்களைச் செய்துவிட்டு, ஏழு லட்சம் ரூபாயை ஏமாற்றிவிட்டு வந்தவரைக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக

இருந்து பரிசுத்தமானவர், புனிதமானவர் என்று சொன்னால் அது சரியல்ல. இந்தத் திருத்தத்தை திரு. மாதவன் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்ற அவசியமில்லை. எங்கள் கட்சி சார்பில் வற்புறுத்தாமல் அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கும் வகையில் தவறுகள் நிகழாமல் இருக்கக்கூடிய அளவில் அரசாங்கம் ஒரு திருத்தத்தை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஷரத்தை விளக்கி இரண்டொரு வார்த்தைகள் சொன்னால் பல திருத்தங்களை அவர்களே இவை அவசியமில்லை என்று வாபஸ் பெறுவார்கள் என்று நம்புகிறேன். இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தத்தில் பிரிவுகள் 64, 65, 66, 67 பிரகாரம் விசாரணைகள் நடத்தி அதன் மூலம் சில குற்றங்கள், கையாடல் போன்ற தவறுதல்கள் ஏற்பட்டிருந்தாலும் சரி mismanagement, default in carrying out the obligations போன்றவை நடந்திருந்தாலும் சரி, அந்த மாதிரி ஏதாவது ஏற்பட்டிருக்குமானால் ரெஜிஸ்ட்ரார் அவர்கள் 'டிஸ்க்வாலிபை' செய்யலாம் என்று போட்டிருக்கிறோம். கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் . . . Where it appears என்றிருப்பதை மாற்றி where it is proved என்று போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலுள்ள இரண்டாவது பகுதியைப் பார்ப்போமானால்

. . . no person shall be removed or disqualified under sub-section (1) without being given an opportunity of making his representations என்று இருக்கிறது. ஆகவே முதலில் இந்தவிதமான தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று கண்டுபிடித்து அவர்களுக்கும் 'ஆப்பர்ச்சூனிட்டி' கொடுத்த பின்னால் தான் 'டிஸ்க்வாலிபை' செய்ய முடியும். ஆகவே இதில் எந்தவிதமான மாறுதலும் செய்யவேண்டிய தேவையில்லை, ஆப்பர்ச்சூனிட்டிக்காக சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், It is an enquiry, it is a quasi-judicial enquiry என்றிருக்கிறது. அதில் பாதிக்கப்பட்டவர் ரெப்ரசென்டேஷன் கொடுத்து, தன்னுடைய வாதத்தை எடுத்துச் சொல்வதற்கும், குற்றத்தை மறுத்துச் சொல்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். அதற்காகச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கனம் உறுப்பினர் திரு. சிரஞ்சீவிலு நாயுடு அவர்கள் இந்த ஷரத்தில் ஒரு மாறுதல் செய்யவேண்டும் என்ற ஒரு அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். அதாவது

. . . gross or persistent negligence in the conduct of management or mismanagement of the affairs

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது போதாது, எந்தவிதமான குற்றங்கள் செய்தவர்களாக இருந்தாலும் டிஸ்க்வாலிபை செய்யலாம் என்றால் இதற்கான உத்தரவைப் போட்டால் நிறைவேற்றி விடுவார்கள். வேறு துறையில் தவறுகள் நடந்திருந்தால் கூட சொஸைட்டி நடக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும், அதோடு இதன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாத

நிலைமை ஏற்பட்டுவிடும். மிஸ்-மானேஜ்மென்ட் மிஸ் பீஸன்ஸ் என்று வரும்போது, ரெஜிஸ்டிரார் அவற்றை என்கொயரி செய்த பின்னால் தான் உத்தரவு போடுவார்கள். அந்த உத்தரவைப்பற்றி கேட்பதற்கு கோர்ட்-களுக்கு அதிகாரம் இருக்கிறது. நாம் என்ன போட்டிருக்கிறோம். . . gross or persistent negligence in connection with discharge of his duties சில சமயங்களில் இன்னின்ன காரியங்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது, அதோடு ரெஜிஸ்டிரார் உத்தரவுக்கு மேல் கவர்ன்மென்டக்கு அப்பீல் இருக்கிறது. அதற்கு மேல் ஹைக்கோர்ட் ரிட் ஜுரிஸ்டிக்ஷன் இருக்கிறது. mismanagement, misfeasance போன்றவை இருந்தால் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. gross or persistent disobedience of action misfeasance இந்த மாதிரி மிஸ்-பீஸன்ஸ் இருந்தால்—அது கேள்விக்குரிய இடமாக வருகிறது. It is a question of fact எந்தச் சூழ்நிலையில், எந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்டது என்பதையும், பதவியிலிருந்து விலக்குவதற்குரிய காரணங்கள் போதுமானதாக இல்லையா என்பதைப்பற்றி அப்போது பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும். அதற்காக இந்த மாதிரி தவறுகள் செய்தால் பதவியிலிருந்து மாற்றக்கூடாது என்று சொல்வதை சர்க்காரால் ஏற்றுக்கொள்ள முடியாது.

கனம் அங்கத்தினர் திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள், கூறினதற்கு ஒத்ததாகவே நான் கூறுகிறேன். சாதாரணமாக மிஸ் மானேஜ்மென்ட், நெக்லிஜன்ஸ் என்றிருந்தால் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள், அவ்விதம் நடவடிக்கை எடுக்கவும் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன் . . gross, negligence, misfeasance என்கின்ற அளவில் தவறுகள் இருந்தால், ரிமூவ் செய்வதற்குரிய காரணங்கள் இருந்தால் தான் இதை பயன்படுத்த முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கனம் உறுப்பினர் திரு. சிரஞ்சீவிலு நாயுடு அவர்கள் டிஸ்க்வாலிபை செய்வதைப்பற்றி ஜெனரல் பாடியைக் கலந்து ஆலோசித்துவிட்டு முடிவு எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அது அவசியமில்லை. காரணம், இது தனிப்பட்ட ஒருவருடைய செய்கையைப் பற்றியது. இப்படிப்பட்டவர் பதவியில் இருப்பதற்குத் தகுதியுள்ளவரா இல்லையா என்பதை ரெஜிஸ்டிரார் தீர்மானம் செய்வது தான் பொருத்தமாக இருக்கும். ரெஜிஸ்டிரார் முடிவில் வித்தியாசம் இருக்குமானால் அதன் மீது அப்பீல் செய்து கொள்வதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதற்கு ஜெனரல் பாடியைக் கலந்து ஆலோசிக்கவேண்டும் என்பதில்லை. பஞ்சாயத்து ஆக்டை இதற்கு ஒப்பிடுவது சரியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : செக்ஷன் 95-ல் டிரிபுனலுக்கு விடுவதில் ஆட்சேபனை இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : I am sorry. There is a tribunal for a separate purpose from which there is appeal என்கொயரிக்காக கவர்ன்மென்டுக்கு 96-பிரிவின் கீழ் அப்பீல் வருகிறது. அதற்குப் பிறகு வேறுவிதமாக அப்பீல் வேண்டும்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [30th March 1966

என்று யாராவது சொன்னால் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும். அந்த அப்பீல் தான் வேண்டும் இந்த அப்பீல் தான் வேண்டும் என்று சர்க்கார் முடிவு எடுக்கமுடியாது. ஆகவேதான், இதை விளக்கினேன்.

அடுத்து திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் திரு. மாதவன் அவர்கள் சொன்ன ஒன்றிரண்டு கருத்துக்களுக்கு தக்கமுறையில் பதில் அளித்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அதாவது 'இஸ்' என்று இருந்தால் போதும் என்று வைத்துக்கொண்டால் முன்னால் இருந்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. கனம் உறுப்பினர் திரு. சுப்பிரமணிய கவுண்டர் சொன்னது, அதாவது டிஸ்க்வாலிஃபை செய்யும்போது, குறிப்பிட்ட காலத்திற்கு என்று அதாவது ஐந்து வருடம் அல்லது ஆறு வருடம் என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும் என்று சொன்னார்கள். சர்க்கார் இதைப்பற்றி நன்றாகப் பரிசீலனை செய்து தான் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். ஒருவர் கூட்டுறவு இயக்கத்தில் தவறாக நடந்து கொண்டதின் காரணமாக மேலும் பதவியில் இருக்கத் தகுதியற்றவர் என்று முடிவு செய்து சட்டப்படி தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னால், ஐந்து வருடங்கள் கழித்து அவர் நல்லவராக ஆகிவிடப் போகிறாரா என்ன? (குறுக்கீடு) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற சட்டங்கள் வேறு, இது எப்படியென்றால் பொதுமக்களுடைய பணத்தை ஒருவருடைய கையில் கொடுத்து பாதுகாத்து நிர்வாகம் செய்யும்போது, அந்தப் பொறுப்பிலிருந்து தவறுகள் செய்கின்றார்கள் என்ற காரணத்திற்காகத் தான் அவரைப் பதவியிலிருந்து விலக்குகிறோம். ஆகவே, இதில் ஐந்து வருடம் என்று மட்டும் நிர்ணயித்தால் போதும் என்று சொல்வது சர்க்கார் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. முன்பே இதைப்பற்றி நன்றாகப் பரிசீலனை செய்து தான் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசும் போது, சர்க்கார் இப்போது தான் திருத்த மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள், அதற்கிடையில் இன்னொரு அமெண்ட்மெண்ட் எதற்கு. அமெண்ட்மெண்ட்டுக்கு அமெண்ட்மெண்ட் எதற்கு என்று கேட்டார்கள். இவ்வளவு சீக்கிரமாக ஏன் கொண்டுவரவேண்டும் என்று கேட்டார்கள். உண்மையில் இது சீக்கிரமாகத் தயாரித்த மசோதா தான். இந்தச் சட்டசபை கலைவதற்குள் இந்த மசோதாவைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்பதற்காகத்தான் சீக்கிரமாக, அவசரத்தில் தயாரிக்கப்பட்டது. சாதாரணமாக நடைமுறையில் இருக்கின்ற போர்ட் ஆஃப் மானேஜ்மெண்டில் ஒருவர் இருக்கலாம். அவர் மீது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கக்கூடிய நேரத்தில் அவர் ரிஸைன் செய்து விடுகிறார். இவ்விதம் ரிஸைன் செய்துவிட்டால் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. அதற்காகத் தான் 'இஸ்' என்றிருந்தாலும் 'வாஸ்' என்று இருந்தாலும், இப்போதுள்ளவர் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும், ரிஸைன் செய்து வெளியே போனாலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்,

30th March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

ரிஸைன் செய்து வெளியே போய் பழைய மெம்பராக இருந்தாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் 'வாஸ்' என்று போட்டிருந்தால். 'while acting as a member' என்று போட்டிருந்தாலும் பழைய மெம்பர்களின் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை ஏற்படக்கூடும். முன்பு இப்படி ஒரு கஷ்டம் ஏற்பட்டது. ஒரு சமயத்தில் ஆலோசனை செய்து ஒரு கமிட்டியில் தவறுகள் நடந்தது என்பதற்காக கமிட்டியை சூப்பர்ஸீட் செய்தோம். அந்த நேரத்தில் கமிட்டியிலிருந்தவர்கள் ரிஸைன் செய்துவிட்டார்கள். ஆனால் திரும்பவும் அவர்கள் எலக்ஷனில் வெற்றிபெற்று வந்துவிட்டார்கள். அப்போதும் அந்த கமிட்டியை சூப்பர்ஸீட் செய்தோம். பின்னால் அவர்கள் ஹை கோர்ட்டுக்கு போன போது முன்னால் இருந்த கமிட்டி வேறு, எலக்ஷன் ஆகிவந்த கமிட்டி வேறு என்று சொல்லிவிட்டார்கள். ஆதலால் தான், இப்போது மெம்பராக இருந்தாலும் சரி, அல்லது முன்னால் மெம்பராக இருந்திருந்தாலும் சரி, அவர்கள் மீது டிஸ்க்வாலிஃபிகேஷன் நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான அளவில் இந்த மாறுதலை செய்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் **'while acting as a member'** என்று சொல்லியிருப்பதைப் போட்டால், நான் சொல்லுகின்ற கருத்தை பிரதிபலிப்பதாக இராது, முன்பு இருந்தவர்களைக் குறிக்காது, சர்க்கார் கொடுத்திருக்கின்ற திருத்தம் தான் பொருத்தமானதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வேறு சில விவகாரங்களுக்காகத் தண்டனை பெற்றிருந்தாலும், கூட்டுறவு சொஸைட்டியில் வரக்கூடாது என்பது. அதாவது **cheating, misappropriation** இப்படிப்பட்ட வேறு இனங்களில் குற்றம் செய்திருக்கிறார் என்று நிரூபிக்கப்பட்டாலும் கூட்டுறவு சொஸைட்டியில் மெம்பராக இருக்கக்கூடாது, வேறு ஒரு சொஸைட்டியில் வேறு எந்த இனத்திலேனும் குற்றம் செய்திருந்தாலும் இந்த சொஸைட்டியில் மெம்பராக இருக்கக்கூடாது என்ற கருத்தை விரிவுபடுத்தக்கூடிய வகையில் அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். இதில் பல பிரச்னைகள் வருகின்றன. வேறு சில குற்றங்கள் செய்தார்கள் என்றால் அதற்குரிய சட்டத்தின்படி குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அதோடு கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருப்பது போல் moral delinquency இருக்கிறது, moral turpitude இருக்கிறது; இப்படி பல புதிய பிரச்னைகள் ஏற்படும். சர்க்காரைப் பொறுத்தளவில், கூட்டுறவு சம்பந்தமாக ஏதாவது குற்றம் செய்தால் கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக்கூடிய சட்டத்தின்படி தண்டனை கொடுப்பது தான் நியாயமாக இருக்கும். இவர்களே வேறு தவறு செய்தால் 12-00 noon. வேறு சட்டங்கள் மூலமாகக் கூட தண்டனை கொடுக்க முடியும். ஆதலால் தான் இதிலே போட்டிருக்கிறோம் "Registrar without prejudice to any other action that he may take" என்று இப்போது கூட்டுறவுத் துறையில் ஒருவர் மோசடி செய்து விட்டார் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படி மோசடி செய்து விட்டால், இதிலே சட்டப்படி டிஸ்க்வாலிஃபை செய்ய வேண்டுமென்பது மாத்திரம் அல்ல. இண்டியன் பீனல் கோடின் கீழும் நடவடிக்கை

[திரு. ஆர். வெங்கட்டராமன் [30th March 1966

எடுக்கலாம். இந்தச் சட்டத்தின் கீழ் டிஸ்க்வாலிஃபிகேஷன் கொடுக்கலாம். இப்போது இங்கே போட்டிருப்பது இந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களுக்கு டிஸ்க்வாலிஃபிகேஷன் என்றும், வேறு சட்டத்தின் கீழ் அந்தச் சட்டப்படி தண்டனை கொடுப்பது என்பது தான் சரி என்று நினைக்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சிரஞ்சீவலு நாயுடு அவர்கள் இதை யொட்டிச் சொன்னார்கள். அதிகாரிகள் தவறு செய்தால் அந்தத் தவறுகளுக்கு என்ன டிஸ்க்வாலிஃபிகேஷன் என்று சொன்னார்கள். அவர்களும் பிராஸிக்யூஷன் போட்டு தண்டிக்கப்படுகிறார்கள். பிராஸிக்யூஷனுக்கு உள்ளாகும் தவறு செய்தால் அவர்களும் பிராஸிக்யூஷன் போட்டு தண்டிக்கப்படுகிறார்கள். கவர்ன்மெண்ட் சர்வெண்ட்ஸ் காண்டக்ட் ரூல்ஸ் பிரகாரம் டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுக்கிறோம். நான்-அஃபிஷியல்ஸ் மீது டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுக்க முடியாது. ஆகவேதான் டிஸ்க்வாலிஃபிகேஷன் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி எல்லா அமெண்ட்மெண்ட்களையும் வாபஸ் பெறுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

The amendments of Sri C. Chiranjeevulu Naidu and Sri K. S. Subramania Goundar were, by leave, withdrawn.

The amendment of Pulavar K. Govindan was put and lost.

The Government amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clause 4.

MR. SPEAKER: The question is—

"That Clause 4 do stand part of the Bill".

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, I move the following amendment:—

Delete the words beginning from "in sub-section (2)" and ending with "shall be inserted" and substitute the following:—

In sub-section (1) in Clause (*a*) after the words "made under" the word, figures and letter "section 28-A" shall be inserted.

The amendment was duly seconded.

MR. SPEAKER: The Clause and the amendment are before the House for discussion.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, the object behind this amendment is rather simple. Regarding 'surcharge' provision has been made to appeal against the orders of the Registrar, to the Tribunal. Here also my point is whether we could not consider the question of providing an appeal. Here the Registrar has passed orders. Whether an appeal could lie to the

30th March 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

Tribunal is the point. There is also a view that Government is the appellate authority. The Tribunal being a quasi-judicial authority whether it would not be proper to allow the members of the Committee to make an appeal to the Tribunal is my point.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, நாம் செக்ஷன் 96-ல், (2)-வது பிரிவின் கீழே சர்க்காருக்கு அப்பீல் கொடுத்திருக்கிறோம். செக்ஷன் 96 (1)-ன் கீழ் இருக்கிற பிரிவுகளைப் பார்த்தால் அவைகளெல்லாம் பணம் சம்பந்தமான 'க்ளெயிம்ஸ்', 'ஆர்பிட்ரேஷன்' அந்த விதமான வைகளை அடிப்படையாகக் கொண்டது. அதனால் ரிஜிஸ்டிரார் போட்ட உத்திரவுக்கு மேல் சர்க்கார் பரிசிலனை செய்வது தான் பொருத்தமாக இருக்கும், க்ளெயிம்ஸ் விஷயத்தில் ட்ரிப்யூனல் பரிசிலனை செய்வது பொருத்தமாக இருக்கும் என்று தான் அப்படிக் கொடுத்திருக்கிறோம்.

The amendment of Sri C. Chiranjeevulu Naidu was, by leave, withdrawn.

Clause 4 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Sir, I move—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 2 of 1966), as amended, be passed".

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 2 of 1966), as amended, be passed".

* **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா நிறைவேறுகிற இந்த இறுதிக் கட்டத்தில் நான் ஒன்றும் விவாதத்திற்குப் போகவில்லை, ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்காக நான் மந்திரி சபையைப் பாராட்டுகிறேன். முன்பே செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் . . . (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: "Better late than never" Better late than never என்று சொல்லுவது போல (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்குக் கூட நான் தான் ஹெல்ப் செய்கிறேன் பார்த்தீர்களா?) ஆம், நீங்கள் தானே ஹெல்ப் செய்யவேண்டும். ஏனென்றால், நீங்கள் எனக்கு முன்னவர். காலதாமதம் ஆகியாவது வந்திருக்கிறது என்பது கூட அல்ல, இந்தத் திருத்தங்களோடு வந்திருந்தால் முழுமை பெற்றிருக்கும். அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்படுகிற அதிகாரங்கள் நல்ல வகையில் அமல்படுத்த முயற்சி இருக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிற நேரத்தில், மூன்று ஆண்டிற்கு மேல் இருக்கக் கூடாது என்று சொல்லுவதற்கு; ... கனம்

[திரு. கே. ஏ. மதியழகன்] [30th March 1966

சபாநாயகர் அவர்கள் சட்டசபை உறுப்பினர்களெல்லாம் இல்லையா என்று கேட்டார்கள். நான் சார்ந்திருக்கிற அரசியல் கட்சி தேர்தல் பிரகடனத்தில் 'ரீகால்' என்று கொடுத்திருக்கிறது . . . .

MR. SPEAKER : The hon. Member need not talk generally about the Bill.

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member may talk about the particular amendments that have been passed just now.

MR. SPEAKER : Yes.

SRI K. A. MATHIALAGAN : I may be permitted . . .

MR. SPEAKER : The hon. Member should remember that this is the third reading of the Bill. He should not talk generally about the Bill.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I am rising only to explain the rules. During the third reading of a Bill, hon. Members can only make comments on the amendments accepted or rejected.

திரு. கே. ஏ. மதியழகன் : What I am talking is a comment on the amendments that had been passed. ஆகவே, கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தங்களுடைய உணர்வுகளை யாவது மதித்து வருகிற காலத்திலாவது மசோதாக்கள் மூலம் திருத்தங்களைக் கொண்டுவரவேண்டுமென்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 2 of 1966) as amended be passed".

The motion was put and carried and the Bill, as amended, was passed.

(2) THE MADRAS ELECTRICITY DUTY (AMENDMENT) BILL, 1966 (L.A. BILL NO. 6 OF 1966)

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1966* (L.A. Bill No. 6 of 1966) be taken into consideration".

Under sub-section (1) of Section 3 of Electricity Duty Act, 1939, every licencee has to pay a duty calculated at the rate of 3 paise per unit of energy sold by him at a price exceeding 15 paise per unit as fixed in 1939. With a view to augment the resources for implementing the development schemes and meeting the additional responsibilities devolving on the State Government on account of the National emergency, it has been found necessary to increase the rate from 3 paise to 5 paise. I wish to make it clear

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th March 1966.

30th March 1966] [Sri R. Venkataraman]

that this will not in any way be a burden on the people, as the duty is directly payable by the licensees and it cannot be passed on by them. An additional revenue of Rs. 18 lakhs per annum is expected. The draft Bill seeks to give effect to the above increase in the rate of duty.

Under rule 3 of the Madras Electricity Duty Rules, 1939, electricity duty in respect of a month should be paid to Government before the expiry of the following month. Section 6 of the Madras Electricity Duty Act, 1939 and the rules made thereunder provide for recovery of duty as arrears of land revenue in case of default but do not provide for payment of penal interest in the case of belated payment. There is a tendency on the part of certain licensees to pay the duty after the due date and then apply for condonation. In order to provide an incentive for prompt payment of duty, it is necessary to make provision in the Act for payment of penal interest for the belated payment of duty. Similar provision exists in the Madras Electricity (Taxation on Consumption) Act, 1962. The draft Bill provides for this also.

I request the House, to accept the motion.

திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதா மீது நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். சர்க்கார் கொண்டு வந்திருக்கும் திருத்தம் தவறு என்ற அளவிலே, 12 சதவிகிதம் வட்டி பெறுகின்ற நிலையை அகற்றுகின்ற அளவிலே என்னுடைய திருத்தம் இருக்கிறது. தனிப்பட்ட ஸ்தாபனத்தார் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய பணத்தை குறித்த காலத்திற்குள் செலுத்தாமல் காலதாமதமாக செலுத்தினால், அதற்கு 12 சதவிகிதம் வட்டியுடன் அவர்கள் செலுத்த வேண்டும் என்கின்ற திருத்தம் வரவேற்கவேண்டிய ஒன்றுதான். அதே சந்தர்ப்பத்தில் 3 புதுக்காசு என்ற விகிதத்தை 5 புதுக் காசாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் தன்னுடைய குறிப்பில் இதனால் மின்சாரத்தைப் பெறுவோர், மின்சாரத்தை நுகர்வோர் எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொன்னார்கள். அதைச் சற்று விளக்கமாகச் சொல்லியிருந்தால் கூட நன்றாக இருந்திருக்கும். என்னுடைய பயம் எல்லாம், 3 புதுக்காசு என்பதை 5 புதுக்காசாக உயர்த்தியிருக்கிற காரணத்தினால், எப்படி சர்க்கார் செய்கின்ற செலவு அதிகரித்தால், அதற்கு வரவு என்கின்ற முறையிலே, மக்கள் மீது புது வரி விதித்து சர்க்காருடைய வருவாய் இனங்களைப் பெருக்கி, அந்தச் செலவை ஈடுசெய்கிறார்களோ, அதைப் போலவே தனிப்பட்ட ஸ்தாபனங்களும் அவர்களுக்கு ஏற்படுகிற செலவை மின்சாரம் உபயோகிப்பவர்களிடமிருந்து பெறுவதற்கு முயற்சி செய்யக்கூடும். அப்படி அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டால், அதை அரசாங்கம் எந்த அளவுக்குத் தவிர்க்கும் என்று விளக்கித் தந்தால், நான் என்னுடைய திருத்தத்தைக் கூட வாபஸ் பெறுவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இத்தகைய நியாயமான சந்தேகத்தைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள்

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [30th March 1966

விளக்கம் தரவேண்டும். இதிலே நியாயமான பயம் இருக்கிறது. ஏற்கனவே கூட இந்த மன்றத்தில் சொல்லப்பட்டது, தனிப்பட்டவர்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தமாட்டார்கள் என்று சொல்லப்பட்டது. அதற்குப் பின்னால் கட்டணம் உயர்த்தப்பட்டது, மீண்டும் உயர்த்தப்பட்டது. அதேபோல் இதிலும் நேர்ந்துவிடக்கூடாது. காலதாமதமாகக் கட்டுகிற பணத்திற்கு வட்டி விதிப்பது நியாயம். ஏனென்றால் தனிப்பட்டவர்கள் விளக்கு எரித்ததற்குரிய கட்டணத்தை குறித்த காலத்தில் செலுத்தவில்லை என்றால், அதற்காக பெனல்டி, தண்டம் கட்டவேண்டியிருக்கிறது. இது நாள் வரையில் வட்டி செலுத்தப்படாமலும், தண்டம் செலுத்தப்படாமலும் இருக்கிற நிலை மிகவும் வருந்தத்தக்கது தான். அரசாங்கம் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்த மசோதா வரவேற்கத்தக்கதுதான். அது மின்சாரம் உபயோகிக்கிறவர்களை பாதிக்குமா, பாதிக்காதா, பாதிக்கின்ற வகையில் தனிப்பட்டவர்கள் நடவடிக்கையில் ஈடுபட்டால், அதை அரசாங்கம் எந்த வகையில் தடுக்கும் என்கின்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தந்தால், நான் என்னுடைய திருத்தத்தை வாபஸ் பெறுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முதலிலே என்னுடைய உரையிலே சொன்னேன். 3 பைசாவிலிருந்து 5 பைசாவாக உயர்த்திய கட்டணத்தை லைசென்ஸி தான் கொடுக்கவேண்டும். அதுவும் 15 பைசா விலைக்கு மேல் யாருக்கு விநியோகம் செய்கிறார்களோ, அதற்குத் தான் இந்தக் கட்டணம் கொடுக்கவேண்டும் என்று போட்டிருக்கிறோம். ஆகவே, விவசாயிகள் போன்றவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அவர்கள் வாங்கவும் முடியாது. சர்க்கார் என்ன ரேட்டுக்குத்தான் அவர்கள் எலெக்டிரிஸிடி விநியோகம் செய்யவேண்டும் என்று ஒப்பந்தம் எல்லாம் செய்து வைத்திருக்கிறோம். Duty is a direct tax on the licensee. ஆகவே, அவர்கள் தான் கொடுக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறேன்.

அடுத்து, கனம் உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்திலே சர்க்கார் கொடுக்கவேண்டிய தொகையிலே 'ஸெட் ஆப்' பண்ணவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் கொடுக்கவேண்டிய தொகை ஒன்றும் இருக்காது. நாம் பீனல் இன்டரெஸ்டு போட்டு வாங்க வேண்டியதுதான் நியாயம். பீனல் இன்டரெஸ்டுக்கு நாம் இப்பொழுது ப்ரொவிஷன் செய்திருக்கிறோம்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: நான் 'ஸெட்-அப்' செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 'by deduction from any amount payable by the State Government to the licensee' என்று திருத்தத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் தான் நான் சொன்னேன்.

30th March 1966]

MR. SPEAKER: The question is—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 6 of 1966) be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 6 of 1966) be passed".

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1966 (L.A. BILL NO. 8 OF 1966)

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966[a] (L.A. Bill No. 8 of 1966) be taken into consideration".

This Bill has been necessitated by certain proposals of the Economy Committee of the Government which have been accepted by the Government. After surveying the quantum of work in administering the Agricultural Income-tax Act both in respect of plantations and non-plantations, the Economy Committee came to the conclusion that we need not retain separate Agricultural Income-tax Officers in most of the non-plantation areas and that this work could be distributed amongst the Taluk Tahsildars who can be empowered to discharge the functions under the Agricultural Income-tax Act. The Committee considered that in order that the step may prove successful the orders of composition under section 34 of the Amending Act of 1958 in respect of non-plantation crops should also be valid for three years as in the case of order of composition passed under section 65 of the principal Act. The Bill is principally intended to give effect to these proposals and in the process certain pressing amendments in respect of some sections which have been considered necessary by the Board of Revenue are being incorporated.

According to section 14 of the Madras Agricultural Income-tax Act, 1955 (Madras Act V of 1955) Agricultural Income-tax Officers are now appointed by the Government. As these officers are in the grade of Tahsildars who are usually appointed by Collectors from lists approved by the Board of Revenue, it is considered that Agricultural Income-tax Officers may be appointed by the Commis-

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 29th March 1966.

[Sri V. Ramiah] [30th March 1966

sioner of Agricultural Income-tax who is an officer in the grade of Collector and that necessary powers for the purpose may be vested in him. Section 14 is proposed to be amended suitably. The proposed amendment will also facilitate the quick appointment of Taluk Tahsildars, wherever considered feasible, as Agricultural Income-tax Officers without having to come up to Government every time.

There are at present two sets of provisions in regard to composition of agricultural income-tax. Under section 65 of the Madras Act V of 1955 any person holding not exceeding 50 standard acres of plantation land can apply for composition and the composition orders will be in force for a period of three years. But under section 34 of the Madras Plantations Agricultural Income Tax (Amendment) Act, 1958 (Madras Act XXIX of 1958) and section 14 of the Madras Agricultural Income-tax (Extension to Added Territory) Act, 1961 (Madras Act II of 1961) which is applicable to the territory added to this State from the State of Andhra Pradesh, any person holding land other than plantation up to any extent can apply for composition and the composition orders will be in force for a period of one year only. This is a temporary provision which has been extended up to the year 1968–69. Legal opinion is to the effect that a person having both plantations and non-plantations should apply under section 65 in respect of plantations if it is below 50 standard acres or file a return in respect of the same if it is more than 50 standard acres and apply under section 34 of the amending Act of 1958 in respect of non-plantation lands irrespective of extent of non-plantations. With reference to the above provisions a person owning both plantation and also non-plantation land gets a double exemption in that he can either apply separately for composition for plantation and non-plantation lands and get the first 12½ standard acres exempted under each head or get his first Rs. 3,600 of agricultural income from plantation free from agricultural income-tax and also get the first 12½ standard acres of non-plantation lands exempt.

(Mr. Deputy Speaker in the Chair.)

It was never the intention of the Government to give the double exemption and the Government have therefore decided to remedy this and the provisions under sections 65 (*a*), (*b*) and (*c*) are intended to have this effect. Also in consonance with the recommendations of the Economy Committee, it is provided that all composition orders should be valid for three years, subject however to the concession that if there is reduction of extent, the assessee can apply for a reduction of the composition amount and also the freedom is given to him to opt to submit a return in the succeeding year. As a result of this provision, the Government are hoping to achieve substantial economy by transferring the bulk of the work in the non-plantation areas to Taluk Tahsildars while retaining the special staff in the plantation areas.

30th March 1966] [Sri V. Ramaiah]

Provision has also been made for reassessmnt of the agricultural income of any year in cases where the closing stock of agricultural produce has not been taken into account in the year concerned, if the assessee applies for composition in the next year.

There has been doubt regarding the position of members of registered firms who apply for composition under section 65. In order to make the position clear we have stated that each individual partner of a firm is entitled to apply for composition together in respect of the lands held by him individually and his share of the partnership lands.

Certain other amendments of a minor and consequential nature have also been proposed.

Sir, I request the House to accept the motion.

MR. DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 8 of 1966) be taken into consideration".

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: கனம் உதவி சபாநாயகர்
அவர்களே, இந்த மசோதாவிலே முக்கியமான பிரிவு கம்பவுண்ட்
பண்ணிக் கொள்வது. மூன்று வருஷத்திற்கு ஒரு முறை செய்து
கொள்ளலாம் என்கிறோம். இதை ஒவ்வொரு வருஷமும் கம்பவுண்ட்
பண்ணுவதற்கு ஒரு வாலிடேஷன் டெம்பரரியாகச் செய்யும் முறை
யில் வைத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு காலமாகவே
இப்படிச் செய்து கொண்டிருப்பதற்குப் பதிலாக அதை நிரந்தர
மாகச் செய்ய வேண்டும் என்று சென்ற ஆண்டில் நான்தான்
கேட்டுக்கொண்டேன். அப்பொழுது பர்மனெண்டாகவே ஒரு
சட்டம் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். கம்பவுண்ட்
பண்ணுவதற்கு ஆப்ஷன் கொடுக்கவேண்டும். இப்பொழுது
கம்பவுண்ட் செய்துகொண்டுவிட்டு, அடுத்த ஆண்டு கணக்கைக்
கொடுக்கிறேன், கம்பவுண்ட் வேண்டாம் என்றால் அதை
அனுமதிக்க வேண்டும். இப்பொழுது குறைந்த பட்சம் மூன்று
வருஷம் என்று செய்வது நலமாக இருக்கும், அதை நான்
வரவேற்கிறேன். ஆனால் ஒரு சந்தேகம்; அதற்கு கிளாரிபிகேஷன்
கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஷெட்யூல்
பார்ட் மூன்றில் on the next 50 standard acres என்று இருக்
கிறது. சீலிங் பிரகாரம் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் தானே. நெக்ஸ்ட்
50 ஏக்கர் என்று எப்படி வருகிறது என்பது புரியவில்லை. ஒருக்கால்
எக்ஸெம்ஷன் கொடுத்திருக்கிறார்களா? அல்லது அப்படி 30 ஏக்கர்
என்பதை 50 ஏக்கர் என்று மாற்றப் போகிறார்களா என்று
விளக்க வேண்டும். முப்பது ஏக்கர் எகனாமிக் ஹோல்டிங் இல்லை
என்று செய்யப் போகிறார்களா?

இந்த அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் ஒரு நல்ல முறை. நம்
மாநிலம் பொறுத்தவரையில் இந்த சட்டத்தின் மூலம்தான்
அதிகமாக வரி வருகிறது. இந்த அடிப்படையில் நில வரியையே
கூட எடுத்து விடலாம். இந்தச் சட்டத்தை ஸ்ட்ரெங்தன் செய்து

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [30th March 1966

விட்டு, நில வரியையே எடுத்து விடவேண்டும். இந்த ஒரு ஆக்ட் தான் இருக்க வேண்டும். இதன் மூலம் அரசாங்கத்தின் வருமானம் பூராவும் வாங்கவேண்டும், நிலத்திற்குக் கணக்கு வேண்டும் என்றால் நாமினலாக ஏக்கருக்கு 10 பைசா, 20 பைசா என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். இந்தத் திருத்தத்தை நான் ஆதரித்து வரவேற்கிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I welcome this Bill which seeks to entrust the work relating to the collection of agricultural income-tax to the regular Tahsildars instead of to the Agricultural Income-tax Officers. It is a good thing that the Government have come forward to accept the recommendation of the High Power Committee on Economy to entrust this work to the Tahsildars.

Regarding the agricultural income-tax, as the hon. Member, Sri Swaminathan, has pointed out, a person having 30 standard acres is not so very happy with his present state of affairs. I want to know whether it is desirable to continue to collect this tax in addition to land revenue and so many other surcharges. In this connection, I suggest that certain exemptions may be given to certain classes of persons.

According to sub-section (4) of section 32, and section 65, if a person has filed a return which is not correct, he is liable for prosecution. What is the basis on which we can find out whether the agricultural income-tax assessed by the Tahsildar or the Revenue Inspector concerned is correct and how they can decide whether a return filed by that person is wrong ? There are certain difficulties in regard to this matter as the enquiring authorities are not properly assessing the levy of the tax and are coming to wrong conclusions. Sometimes the information supplied by the village officers is also not correct. So, I request the Government to consider all the aspects of the matter. With these words, I welcome the measure.

கனம் திரு. வெ. ராமையா : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், மூன்று வருஷத்திற்கு ஒரு முறை கம்பவுண்ட் செய்து கொள்ள லாம் என்கிற இந்தப் புது முடிவை வரவேற்றதற்காக சந்தோஷம். முன்பு இந்த ஆக்டைப் பொறுத்தவரையில் இதைத் தாற்காலிக மாக வைத்துக்கொண்டு யோசிக்க வேண்டும் என்று இருந்ததால், முதல் சட்டம் வந்து, அதன் பிறகு வருஷா வருஷம் என்று வைத்துக் கொண்டிருந்தோம். பிளாண்டேஷனைப் பொறுத்த வரையில் 50 ஏக்கர் என்று இருந்தது. பிளாண்டேஷன் சம்பந்த மாக ஒரு பிரிவும், பிளாண்டேஷன் அல்லாத நிலத்திற்கு ஒரு பிரிவும் என்று இருந்தது. பிளாண்டேஷன் என்றால் 50 ஏக்கர் என்றும், மற்ற நிலங்களுக்கு 12½ ஏக்கருக்குமேல் என்றும் காம் பொசிஷன் சலுகை கொடுக்கப்பட்டது. அதில் இருந்த 'லாகுனா'

30th March 1966] [திரு. வெ. ராமையா]

பற்றிச் சொன்னேன். இன்றைக்கு நாம் செய்யும் ஏற்பாட்டில் விவசாயிகள் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை அதிகாரிகளை அணுகினால் போதும்.

மற்றொன்று, இந்த எகானமி கமிட்டி ஆலோசனைப்படி, ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த சாதாரண அதிகாரியிடமே இந்த வேலையையும் கொடுக்கலாம் என்பது. அதையும் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம்.

அடுத்து, ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஐம்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைக்கும்போது, வேறு காரணங்கள் இருக்கின் றனவோ என்று அவர்கள் நினைத்தார்கள். ஸீலிங் ஆக்ட் அடிப் 12-30 p.m.
படையில் நாம் முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் தான் உச்ச வரம்பு வைத்திருக்கிறோம். ஐம்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்னும்போது என்ன காரணம் என்று கனம் அங்கத்தினர் சந்தேகப்பட்டது போல், எனக்கும் சந்தேகம் ஏற்பட்டது. ஐம்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அரசாங்கச் சட்டங்களிலே வரும்போது நாம் மிக ஜாக்கிரதையாக இருக்கிறோம். 'கம்பவுண்டிங்' கைப் பொறுத்த வரையில், இதற்கு முன்பு ப்ளாண்டேஷனுக்குத் தனியாக எக்ஸெம்ப்ஷன் வசதி இருந்தது. ப்ளான்டேஷன் அல்லாத மற்ற நிலங்களுக்குத் தனியாக எக்ஸெம்ப்ஷன் இருந்தது. இப்பொழுது எக்ஸெம்ப்ஷனைப் பொறுத்து, இரண்டும் ஒன்றாக இணைக்கப் படுகிறது. இந்தப் புது நிலைப்படி, ப்ளாண்டேஷன் நிலமும், ப்ளாண்டேஷன் அல்லாத நிலமும் ஒன்றாகச் சேர்கிற போது, கம்பவுண்டிங் எக்ஸெம்ப்ஷன் பூராவுக்குமாகச் சேர்த்து நிர்ணயிக் கப்படுகிறது. ப்ளாண்டேஷன் நிலங்களும் மற்ற நிலங்களும் சேர்ந்துவிடும்போது, ப்ளாண்டேஷன் இல்லாதவர்களுக்குத் தனியாக என்கிற வாதமே கிடையாது. இப்பொழுதிருக்கும் நிலையில், ப்ளாண்டேஷன் நிலமும், ப்ளாண்டேஷன் அல்லாத நிலமும் சேரக்கூடிய நிலையில், 50 ஏக்கர் என்று சொல்லும்போது, எக்ஸெம்ப்ஷனுக்காகத்தான் அமைக்கிறோமே தவிர, வேறு எந்தக் காரணமும் கிடையாது. நில உச்ச வரம்புச் சட்டத்திலே எந்த விதமான மாறுதலும் செய்வதில்லை. அந்த விதமான சந்தேகம் நம்மைப் பொறுத்தவரையில் கிடையாது. ஷுகர் கேனுக்காக எக்ஸெம்ப்ஷன் கொடுத்திருக்கிறார்கள், அவர்களுக்கும் ஏதேனும் கொடுக்கமுடியுமா என்று கேட்டால், லாண்டு ஸீலிங் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் எதையும் செய்ய முடியுமே தவிர, அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு, அதிலிருந்து விதிவிலக்கு செய்து, அதை ஏமாற்றுகிறவர்களுக்கு எந்த விதமான நன்மையும் வேறொரு சட்டத்திலே ஏற்பட முடியாது என்று நான் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் பேசும்போது, அக்ரிகல்சரல் இன்கம்-டாக்ஸினுடைய அவசியத்தைக் குறித்து, பொருத்தத்தைக் குறித்துச் சொன்னார்கள். இது தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் இப்பொழுது பொதுவாக அவர்கள் எழுப்பிய கருத்துக்கு நான்

[திரு. வெ. ராமைய்யா] [30th March 1966

பதில் சொல்ல விரும்பவில்லை. அக்ரிகல்சரல்-இன்கம் டாக்ஸைப் பொறுத்த வரையில், பல கனம் அங்கத்தினர்கள் நினைக்கக்கூடிய நினைவுகளுக்கெல்லாம் இப்பொழுது பதில் சொல்ல சந்தர்ப்பம் இல்லையென்றாலும், மொத்தமாக அரசாங்கம் தன்னுடைய வரி விதிப்புக் கொள்கைகளுக்குத் திருத்தங்கள் ஏற்படவேண்டும் என்று நினைக்கும்போது, நிச்சயமாக இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் என்ற கருத்தை மட்டும் சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 8 of 1966) be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 10 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move—

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 8 of 1966), be passed".

The motion was put and carried and the Bill was passed.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn. . .

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, we have some more business to be finished. So, I move—

"That the House do resume its sittings".

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the House do resume its sittings".

The motion was put and carried and the House resumed its sittings.

MR. DEPUTY SPEAKER: The Hon. Minister for Local Administration may now move the motion standing in his name.

VII.—GOVERNMENT MOTIONS.

(1) DRAFT AMENDMENT TO RULE UNDER THE MADRAS DISTRICT MUNICIPALITIES ACT, 1920

THE HON. SRI S. M. A. MAJID: Sir, I move—

"That the following draft of an amendment to sub-rule (1) of rule 3 of Schedule III to the Madras District Municipalities Act,

30th March 1966] [Sri S. M. A. Majid]

1920 (Madras Act V of 1920), proposed to be made by the Governor of Madras under sub-section (1) of section 305 of the said Act be approved:—

Draft amendment.

In sub-rule (1) of rule 3 of Schedule III to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920) after the first sentence, the following shall be inserted, namely:—

"Only urgent matters of local importance relating to municipal administration which cannot wait till the next ordinary or urgent meeting shall be considered at special meetings and not more than one subject shall be considered at such meetings".

Under Rule 3 (1) of the rules relating to mode of transaction of business at meetings of municipal councils in Schedule III to the Madras District Municipalities Act, 1920, the Chairman shall, on the requisition in writing of not less than one-third of the members then on the Council, convene a meeting of the Council, provided that the requisition specifies the day (not being a public holiday as defined) when and the purpose for which the meeting is to be held. The requisition shall be delivered at the municipal office during office hours to the Chairman, Secretary, Manager or any other person who may then be in charge of the office at least ten clear days before the day of the meeting.

Under rule 3 (2), if the Chairman fails within forty-eight hours from the delivery of such requisition to call a meeting on the day specified therein, or within three days thereafter, the meeting may be called by the members who signed the requisition on giving the notice provided for in sub-rule (1) of rule 2 to the other members of the Council.

According to the rule, the requisition should specify the purpose for which the meeting is to be held. The term 'purpose' does not preclude more than one subject or a number of subjects being considered at the meeting. There is nothing in the Rules or Regulations framed by Government to restrict the number of times a special meeting can be called for either, provided the prescribed formalities are observed. The Chairman also is left with no option but to convene such meetings, as in case he fails to call for the meeting, the members who signed the requisition can themselves call for the meeting. It is however open to the Chairman to adjourn the meeting for valid reasons to be recorded in writing. Though the occasions for calling such meetings should be few and far between and the object of such meetings should be to consider a specified, yet the rule as it stands, gives unlimited powers to councillors in the matter of convening special meetings. Such powers are likely to lead to abuses.

In order to prevent misuse of the rule, it is proposed to amend the said rule 3 (1) by providing therein that only urgent matters of local importance relating to municipal administration which cannot

wait till the next ordinary or urgent meeting shall be considered at special meetings and not more than one subject shall be considered at such meetings.

The above amendment will not entail legislation, but under section 305-A of the Madras District Municipalities Act, 1920, a draft of the proposed amendment should be laid before the Chambers of the State Legislature and their approval obtained. I ask for the approval of the House accordingly.

The motion was put and carred.

(2) DRAFT RULE UNDER THE MADRAS MOTOR VEHICLES TAXATION ACT, 1931

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the following draft of a rule proposed to be made by the State Government under section 17 (1) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931), amending Schedule III to the said Act, be approved :—

Draft Rule.

In the said Schedule III, after item 4 the following item shall be inserted, namely :—

Classes of vehicles.	*Maximum tax for vehicles fitted with pneumatic tyres.*		*Maximum tax for other vehicles.*	
	For a period not exceeding seven days.	*For a period exceeding seven days, but not exceeding thirty days.*	*For a period not exceeding seven days.*	*For a period exceeding seven days but not exceeding thirty days.*
(1)	(2)	(3)	(4)	(5)
	RS. P.	RS. P.	RS. P.	RS. P.
"4-A Motor Vehicles not themselves constructed to carry any load, but used for haulage only—				
(a) weighing not more than 2,500 Kgs. unladen.	12.00	35.00	18.00	53.00
(b) weighing more than 2,500 kgs. unladen.	17.00	50.00	26.00	75.00 "

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது குறுகிய காலத்திற்கு மோட்டார் வாகனங்கள் மீது வரி வாங்குவதற்கு விதிகள் இருக்கின்றன. ஆனால், ட்ராக்டர்களுக்குக் குறுகிய காலத்திற்கு வரி வாங்க விதிகள் இல்லை. அதனால் டிராக்டர்கள் குறுகிய காலத்தில் ஓட வேண்டுமென்றாலும் முழு வரி கட்ட வேண்டியிருக்கிறது. அதைக் குறித்து ஷெட்யூல் போட்டிருக்கிறோம். அதை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

The motion was put and carried.

(3) DRAFT RULE UNDER THE MADRAS MOTOR VEHICLES (TAXATION OF PASSENGERS AND GOODS) ACT, 1952.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the following draft of a rule proposed to be made by the Government of Madras under Section 4 (2) of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952) amending the Schedule to the Act be approved :—

Draft Rule.

In sub-rule (1) of rule 1-A of the said Schedule Explanations I and II shall be renumbered as Explanations II and III respectively; and before the Explanation II as so renumbered, the following Explanation shall be inserted namely :—

" *Explanation I.*–The composition fee paid at the alternative rate of twenty-five rupees per seat per quarter in respect of a stage carriage shall be valid only where the actual permitted daily distance of the vehicles does not exceed the ordinarily permissible maximum daily distance filed by the Government from time to time, for the respective classes of services and where the actual permitted distance of the stage carriages exceeds such ordinarily permissible maximum limit, an additional fee at the rate of 48 paise per seat per year per kilometre shall be paid for the distance permitted in excess of such ordinarily permissible maximum limit."

Buses are permitted to run a distance of 200 miles in the plains. I shall explain in Tamil, Sir.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது பஸ்களையெல்லாம் ஒரு நாளைக்கு 200 மைல் ஓட்டலாம் என்று இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் அவர்கள் 200 மைலுக்கு அதிகமாக ஓட்டுகிறார்கள். 200 மைலுக்கு அதிகமாக ஓட்டினால் அதற்குரிய கட்டணம் வாங்க விதிகள் இல்லை. அதை மாற்றி, கட்டணம் வாங்குவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

The motion was put and carried.

[30th March 1966

(4) Draft Rule under the Madras Motor Vehicles Taxation Act, 1931.

The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the following draft of a rule proposed to be made by the Government under sub-section 1 of section 17 of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931) amending Schedule II to the said Act, be approved :—

Draft Rule.

In the said Schedule, in item 1, for the figures and letters '408 Kgs. ', the figures and letters ' 600 Kgs. ' shall be substituted ".

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது மத்திய சர்க்காரிலே மூன்று சக்கரங்கள் போட்ட வண்டிகள் எல்லாவற்றையும் மோட்டார் சைக்கிள்களாக இனங்கண்டு பண்ண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். த்ரீ வீலர் வண்டிகளை மோட்டார் சைக்கிள்களாகச் செய்யும்பொழுது அதனுடைய கன அளவு, அதாவது வெயிட், எவ்வளவு இருக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கன அளவை 900 பவுண்டிலிருந்து 1,300 பவுண்டாக உயர்த்தவேண்டுமென்று விதி ஏற்படுத்தி இருக்கிறார்கள். அன்லேடன் வெயிட் ஆப் தி மோட்டார் சைக்கிள் 408 லிருந்து 600 கிலோ கிராமாக உயர்த்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நாம் நம்முடைய விதிகளை அவர்களுடைய விதிகளுக்கு ஒத்ததாகச் செய்யப் போகிறோம்.

The motion was put and carried.

(5) Draft Amendment to Rule under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948.

The Hon. Sri V. RAMAIAH : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the following draft amendment to the rules published with Revenue Department Notification, dated the 21st December 1949 at pages 397-398 of the rules supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 27th December 1949, as subsequently amended, which it is proposed to make in exercise of the powers conferred by section 40 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948) be approved :—

Draft Amendment.

In the said rules, for sub-rule (1) of rule 6, the following sub-rule shall be substituted, namely :—

"(1) Any sum payable to a religious, educational or charitable institution under sub-section (1) of section 38 as tasdik allowance, or under sub-section (2) of that section to make good the deficiency referred to in that sub-section in respect of any fasli year commencing from the fasli year in which the basic annual

30th March 1966] [Sri V. Ramaiah]

sum referred to in the said sub-section (1) is finally determined, shall be made in cash direct from the sub-treasury of the taluk in which the village is situated, disbursement from the beriz being permitted only in cases where the disbursing officer deems it expedient to direct the disbursement from the beriz of the village in consideration of the smallness of the amount involved, or for any other adequate reason ".

The necessity for this amendment arose in this way. According to the existing rules, the payment of tasdik allowance and additional compensation payable under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), is made by deductions from the beriz of the village and in cases in which it cannot be so paid, payment is made in cash from the sub-treasury of the taluk in which the village is situated. In actual administration of the rules, it has been found that the amounts payable to the institutions are very appreciable and it is not possible to pay even the entire tasdik allowance from the beriz of the village. Further, it has to be pointed out that in most cases, the payments do not depend upon the village collections at all and that they are fixed amounts and have to be paid irrespective of the collections made in the villages concerned. It is therefore considered necessary to amend sub-rule (1) of rule 6 of the rules framed under section 40 (1) of the said Madras Act XXVI of 1948 suitably so as to provide for payments direct from the sub-treasury, disbursement from the beriz being permitted only in cases where the disbursing officer deems it expedient to direct the disbursement from the beriz of the village in consideration of the smallness of the amounts involved or for any other adequate reason.

The amendment relates to a question of administrative nature and it is a simple one.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Mr. Deputy Speaker, Sir, the tasdik allowance payable to the religious and charitable institutions under the Madras Estates Abolition Act is not adjusted for years together and the payment has been pending for a very long time. Many of these institutions are suffering from inadequacy of funds. Repeated representations in this regard have not produced any good result. Government may issue necessary instructions to the Board of Revenue to take expeditious action in the matter of payment of tasdik allowance to the religious and charitable institutions.

The Hon. Sri V. RAMAIAH : The hon. Member is referring to the entire question of tasdik allowance. That should be dealt with separately.

The motion was put and carried.

12-46 p.m. MR. DEPUTY SPEAKER : The House will now adjourn *sine die.*

The House then adjourned *sine die.*

VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

* 182. *Notification issued with G.O. Ms. No. 390, Home, dated the 8th February 1966 making certain amendments to the Madras Motor Vehicles Rules, 1940, relating to the issue of temporary permits to buses for special trips for Fairs and Festivals published with Home Department Notification No. 357, dated the 29th March 1940, at pages 1 to 40 of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

183. *Notification issued with G.O. Ms. No. 453, Public (Tamil Development 1), dated the 24th February 1966 directing that, with effect on and from the first day of May 1966, Tamil shall be used in respect of all official communications in certain Departments of the Secretariat. [Laid on the Table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).]*

184. *Notification issued with R.O.C. No. 110323/65-F5, dated the 28th January 1966 declaring that the provisions of the Madras District Municipalities Act, 1920 specified in the schedule of the notfication and the rules framed thereunder shall be extended to and be in force in the entire area of Berigai Panchayat, Hosur taluk in Dharmapuri district, with effect from 23rd February 1966. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

185. *Appropriation Accounts of the Government of Madras for the year 1964-65 and Audit Report 1966. [Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India).]*

186. *Finance Accounts of the Government of Madras for the year 1964-65. [Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India).]*

B. Reports, Notifications and other papers.

* 81. *Notification issued with G.O. Ms. No. 297, Industries, Labour and Co-operation (Labour), dated the 28th January 1966 making certain amendments to the Madras Industrial Employment (Standing Orders) Rules, 1947, published with the late Development Department Notification No. 47, dated the 10th November*

* Laid on the Table of the House on 29th March 1966.

1947, at pages 229-234 of the Rules Supplement to Part I of the Fort St. George Gazette, *dated the 9th December 1957 as subsequently amended.*

* 82. *Resume of work done by the Madras Legislative Council from 26th February to 7th March 1966—Twenty-seventh Session—Part II.*

† 83. *The Madras Appropriation Bill, 1966 (L.A. Bill No. 5 of 1966).*

‡ 84. *The Madras Appropriation (No. 2) Bill 1966 (L.A. Bill No. 7 of 1966).*

§ 85. *Resume of work done by the Madras Legislature Assembly from 28th January 1966 to 5th February 1966—Third Assembly—Eighth Session.*

|| 86. *Unstarred list of questions and answers from Nos. 4 to 8.*

|| 87. *The Madras Electricity Duty (Amendment) Bill, 1966 with Annexure (L.A. Bill No. 6 of 1966).*

|| 88. *The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 with Annexure (L.A. Bill No. 8 of 1966).*

* Despatched to Members on 29th March 1966.
† Despatched to Members on 26th March 1966.
‡ Despatched to Members on 28th March 1966.
§ Despatched to Members on 21st March 1966.
|| Circulated to Members on 29th March 1966.

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 517 at page 424.]

The scheme of land acquisition for forming a link road connecting the National Highways 4, 5 and 45 in Madras City was approved by the Government of India under the III Five-Year Plan. The three National Highways branch from the City—the Great Southern Trunk Road (National Highway 45) on the south, the Great Western Trunk Road (National Highway 4) on the west and the Great Northern Trunk Road (National Highway 5) on the north. The fast developing city traffic and the through traffic from all the roads pass through heavily congested area hampering easy and quick movement. It is, therefore, considered essential to form a Ring Road on the outskirts of the city so that the through traffic bypasses the crowded city.

The alignment of the proposed bypass takes off from National Highway 45 (Madras–Tiruchi–Dindigul Road) and runs north west, intersects the existing Pallavaram-Thiruneermalai road and runs up to Pallavaram-Kunnathur road. Crossing the above road it then runs north and crosses the river Adyar and joins the Kodambakkam-Sriperumbudur road and runs along the same road. It then intersects the Mount-Poonamallee road and running further north, it intersects the existing National Highway 4 and crosses the river Cooum. Continuing in the same direction, the alignment crosses Madras-Trivellore road before joining the existing Pulal road. From here, the alignment is taken along the existing road in north-east direction up to its junction with National Highway 5.

The Chief Engineer (Highways and Rural Works) has prepared an estimate for Rs. 44.75 lakhs for acquisition of lands required for the above link road and it has been forwarded to the Government of India. Their approval is awaited.

சென்னை மாநகரில் 4, 5, 45-ம் எண் தேசிய நெடுஞ்சாலைகளை இணைத்து இணைப்புச்சாலை ஒன்றை அமைக்கும் பொருட்டு நிலம் அடையும் திட்டத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்திய அரசு அனுமதி வழங்கியது. இம்மூன்று தேசிய நெடுஞ்சாலைகளும் சென்னை மாநகரிலிருந்து பிரிந்து செல்கின்றன; பெரிய தெற்கு டிரங்க்சாலை (தேசிய நெடுஞ்சாலை 45) தெற்கிலும், பெரிய மேற்கு டிரங்க்சாலை (தேசிய நெடுஞ்சாலை 4) மேற்கிலும், பெரிய வடக்கு டிரங்க்சாலை (தேசிய நெடுஞ்சாலை 5) வடக்கிலும், பிரிகின்றன. நகரில் விரைந்து பெருகிவரும் போக்குவரத்து வண்டிகளும், மேற்சொன்ன சாலைகள் வழியே வெளியூர்களுக்குச் செல்லும் வண்டிகளும், மிகுந்த போக்குவரத்து நகரில் நெரிசல் நிறைந்த பகுதி வழியாகச் செல்வதால், வண்டிகள் எளிதாக விரைந்து செல்வது தடைப்படுகிறது. எனவே வெளியூர் செல்லும் வண்டிகளை நகரின் நெரிசலில் இருந்து திருப்பிவிடும் வகையில், நகர எல்லைகளைச் சுற்றி வட்டச்சாலை ஒன்றை அமைப்பது மிகவும் அவசியம் எனக் கருதப்பட்டது.

அமைக்கக் கருதியுள்ள இவ் வட்டச்சாலை தேசிய நெடுஞ்சாலை 45-லிருந்து (சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலை) தொடங்கி, வட மேற்காக ஓடி, தற்போதுள்ள பல்லாவரம்-திருநீர்மலை சாலைக்குக் குறுக்காகச் சென்று பல்லாவரம்-குன்னத்தூர் சாலைவரை செல்கின்றது. பிறகு அது மேற்கூறிய சாலையைக் கடந்து வடக்காக ஓடி அடையாற்றைத் தாண்டி, கோடம்பாக்கம்-ஸ்ரீபெரும்புதூர் சாலையுடன் சேர்ந்து, அதே சாலை நெடுகச் செல்கிறது. பிறகு அது மவுண்ட்-பூவிருந்தவல்லிச் சாலைக்குக் குறுக்கே சென்று, மேலும் வடக்காக ஓடி, தற்போதைய 4-வது எண் தேசிய நெடுஞ்சாலைக்குக் குறுக்கே சென்று கூவம் நதியைக் கடக்கின்றது. அதே திசையில் சென்று, இச்சாலை தற்போதுள்ள புழல் சாலையுடன் சேர்வதற்குமுன் சென்னை-திருவள்ளூர் சாலையைக் கடக்கிறது. அங்கிருந்து அது தற்போதுள்ள சாலை நெடுக வடகிழக்காகச் சென்று 5-வது எண் தேசிய நெடுஞ்சாலையுடன் சேர்கிறது.

மேற்படி இணைப்புச்சாலைக்காக நிலங்கள் அடையும் பொருட்டு (நெடுஞ்சாலைகள்-கிராமப்பணிகள் துறை) தலைமைப் பொறியாளர் ரூபாய் 44.75 லட்சம் செலவில் மதிப்பீடு தயாரித்துள்ளார். அது இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 520 at page 427.]

Statement showing the particulars of surplus lands notified under section 18 (1) *of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act*, 1961.

Name of the district.	Extent of surplus lands notified.				Extent of surplus lands leased out.				
	Wet.		Dry.		Wet.		Dry.		Number of persons to whom leased.
	A.	C.	A.	C.	A.	C.	A.	C.	
(1)	(2)		(3)		(4)		(5)		(6)
Chingleput ..	141	85	351	75	..		..		..
North Arcot ..	146	43	226	39	..		37	00	6
Salem	12	28	217	90	..		..		..
Dharmapuri ..	93	75	442	36	..		..		..
Coimbatore ..	14	65	579	96	..		122	00	20
South Arcot ..	620	35	494	18	53	15	1	14	57
Thanjavur ..	1,635	09	291	63	..		..		..
Tiruchirappalli ..	298	68	649	70	..		..		..
Madurai ..	84	18	1,377	92	..		..		..
Ramanathapuram	134	35	830	21	..		..		..
Tirunelveli ..	353	09	1,117	52	..		..		..
Total ..	3,534	70	6,579	52	53	15	160	14	83

	Acres.	Cents.
Wet and Dry total ..	10,114	22

[30th March 1966

விவர அறிக்கை.

மாவட்டத்தின் பெயர்.		அறிவிக்கப்பட்ட உபரி நிலங்களின் பரப்பளவு.				குத்தகைக்கு விடப்பட்ட உபரி நிலங்களின் பரப்பளவு.				
		நன்செய். ஏ.	செ	புன்செய். ஏ.	செ.	நன்செய். ஏ.	செ.	புன்செய். ஏ.	செ.	குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை.
(1)		(2)		(3)		(4)		(5)		(6)
செங்கற்பட்டு	..	141	85	351	75	..		..		..
வட ஆற்காடு	..	146	43	226	39	..		37	00	6
சேலம்	..	12	28	217	90	..		..		..
தர்மபுரி	..	93	75	442	36	..		..		..
கோயம்புத்தூர்	..	14	65	579	96	..		122	00	20
தென் ஆற்காடு	..	620	35	494	18	53	15	1	14	57
தஞ்சாவூர்	..	1,635	09	291	63	..		..		..
திருச்சிராப்பள்ளி	..	298	68	649	70	..		..		..
மதுரை	..	84	18	1,377	92	..		..		..
ராமநாதபுரம்	..	134	35	830	21	..		..		..
திருநெல்வேலி	..	353	09	1,117	52	..		..		..
மொத்தம்	..	3,534	70	6,579	52	53	15	160	14	83

		ஏக்கர்.	சென்ட்.
நன்செய், புன்செய் மொத்தம்	..	10,114	22

APPENDIX III.

[*Vide* Answer to Starred Question No. 523 at page 431.]

For the first crop period of 1965 water was let down from Aliyar dam through the Pollachi Canal and Vettaikaranpudur Canal to a total extent of 27,151 acres. An extent of 8,876 acres utilised the canal waters while the remaining extent of 18,275 acres did not utilise the canal waters. The reasons for non-utilisation of project waters by the ayacut of 18,275 acres are as follows :—

	ACRES.
(i) Ryots choice	15,754
(ii) Uncommandable at present and requiring reclamation	74
(iii) Land left fallow from agricultural consideration	407
(iv) Dispute among pattadars	407
(v) Other minor causes	1,633
Total ...	18,275

30th March 1966]

A large extent of 15,754 acres did not use canal water because the ryots in Pollachi taluk are accustomed to raise groundnut under rainfed condition. The summer showers (April–May) started well in time and the ryots ploughed the land and sowed groundnut crop commencing from April 1965. Many of the ryots did not utilise the canal waters let down in April 1965, for the irrigation of groundnut crop, as they were not accustomed to it and as the ryots would render themselves liable to water cess, if the project water is taken. Such of those ryots who utilised canal water derived substantial benefit by way of increased yield in crops. This substantial yield from irrigated fields has brought home to the ryots the need for taking canal waters. It is hoped that last year's experience will induce other ryots to take to irrigation from canal waters.

Only an extent of 74 acres is uncommandable and require lowering of level. The remaining extent of non-utilisation comprises areas where there were disputes among the ryots for proper distribution of water and due to failure on the part of ryots to excavate field bothies below 25 acre limit. The Government have approved a scheme for loan assistance to the ryots through the Land Mortgage Banks and the Agricultural Refinance Corporation under which loans up to Rs. 600 per acre is given for reclamation. Demonstration farms have also been opened to educate the ryots on the methods of irrigated dry cropping.

In an irrigation project of this magnitude there is bound to be considerable time lag between creation of irrigation potential and its actual utilisation, particularly in the case of dry irrigation. For the purpose of reducing this lag and to ensure rapid utilisation in this project, a Project Utilisation Team has been set up headed by a senior I.A.S. Officer. This team is looking into the causes for non-utilisation and taking remedial measures.

1965-ன் முதல் பட்டத்தில் ஆழியாறு அணையிலிருந்து, பொள்ளாச்சிக் கால்வாய் மூலமும், வேட்டைக்காரன்புதூர் கால்வாய் மூலமும் மொத்தம் 27,151 ஏக்கருக்கு நீர் விடப்பட்டது. 8,876 ஏக்கர் நிலத்தில் கால்வாய் நீர் பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய 18,275 ஏக்கர் நிலம் கால்வாய் நீரைப் பயன்படுத்தவில்லை. 18,275 ஏக்கர் ஆயக்கட்டில் மேற்கண்ட திட்டத்தின் நீரைப் பயன் படுத்தாதற்குரிய காரணங்கள் பின்வருமாறு :

	ஏக்கர்.
(1) குடியானவர்கள் விரும்பாத காரணத்தால்	15,754
(2) தற்போது பாசனம் ஏறாத பகுதிகளில் உள்ளவையும் பண்படுத்தப்பட வேண்டியவையுமான நிலங்கள்	74
(3) தரிசாக விடப்பட்ட நிலங்கள்	407
(4) பட்டாதார்களிடையே தகராறுள்ள நிலங்கள்	407
(5) ஏனைய சிறு காரணங்கள்	1,633
	18,275

15,754 ஏக்கர் உள்ள பெரும் பாப்பு நிலம் கால்வாய் நீரைப் பயன்படுத்தவில்லை. ஏனெனில், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள குடியானவர்கள் நிலக்கடலையை வானம் பார்த்த பயிராகப் பயிரிடும் பழக்கமுள்ளவர்கள். கோடை மழை (ஏப்ரல்-மே) உரிய காலத்தில் ஆரம்பித்தது. 1965 ஏப்ரலிலிருந்து தொடங்கி குடியானவர்கள் நிலத்தை உழுது நிலக்கடலை பயிரிட்டனர். பல குடியானவர்கள் இந்த நிலக்கடலைப் பயிருக்கு 1965 ஏப்ரலில் விடப்பட்ட கால்வாய் நீரைப் பயன்படுத்தவில்லை. ஏனென்றால் நிலக்கடலைப் பயிருக்கு அவர்கள் கால்வாய் நீரைப் பாய்ச்சிப் பழக்கப்படாதது ஒருபுறமிருக்க, அவர்கள் அந்நீரை பயன்படுத்தினால், தண்ணீர்த் தீர்வை செலுத்தவேண்டிவரும். ஆனால், கால்வாய் நீரைப் பயன்படுத்திய குடியானவர்கள் அதிக விளைச்சல் மூலம் கணிசமான பலனை அடைந்தனர். பாசனம் பெற்ற வயல்களில் கிடைத்த இந்தக் கணிசமான விளைச்சல், கால்வாய் நீரைப் பயன்படுத்தும் அவசியத்தைக் குடியானவர்களுக்கு உணர்த்தியுள்ளது. கடந்த ஆண்டு அனுபவம், ஏனைய குடியானவர்களையும் கால்வாய் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்குத் தூண்டுகோலாக அமையும் என்றும் நம்பப்படுகின்றது.

74 ஏக்கர் நிலம் பாசனம் ஏறாத மேட்டுப் பகுதியில் உள்ளது, அதைத் தாழ்த்தவேண்டியுள்ளது. பாசனத்திற்குக் கால்வாய் நீரைப் பயன்படுத்தாத பிற பகுதிகளில், தண்ணீர் சரியான முறையில் வழங்கப்படுவதற்காகவும், 25 ஏக்கர் வரையறைக்குக் குறைவான இடங்களில் குடியானவர்கள் வயற்கண்ணிகளை வெட்டத்தவறியதாலும் குடியானவர்களிடையே தகராறு எழுந்த பகுதிகள் அடங்கும். நில அடைமான பாங்குகள் மூலமும், வேளாண்மை மறுகடன் உதவிக் கார்ப்பொரேஷன் (Agricultural Refinance Corporation) மூலமும் குடியானவர்களுக்குக் கடன் உதவி வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இதன்கீழ் நிலத்தைப் பயன்படுத்துவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 600 வரை கடன் உதவி வழங்கப்படுகின்றது. பாசனம் மூலம் புன்செய்ப் பயிர் விளைவிக்கும் முறைகளைக் குடியானவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்காக செய்முறை விளக்கப் பண்ணைகளும் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வளவு பெரிய பாசனத்திட்டம் ஒன்றில் பாசனவசதியினை ஏற்படுத்துவதற்கும் அதைப் பயன்படுத்துவதற்கும் இடையே, குறிப்பாக புன்செய்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் கால இடைவெளி அதிகமாய்த்தான் இருக்கும். இந்த இடைவெளியைக் குறைப்பதற்காகவும், இத்திட்ட நீரைப் பாசனத்திற்கு விரைவில் பயன்படுத்தும்படிச் செய்வதற்காகவும் முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரைத் தலைவராகக் கொண்ட திட்டப்பயன்பாட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு, திட்ட நீரைப் பயன்படுத்தாமல் விடும் காரணங்களை ஆராய்ந்து, அதைத் [illegible]யதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

APPENDIX IV.

[Vide Answer to Starred Question No. 527 at page 435]

The details of expenditure of Tiruchirappalli Collector's discretionary grant for 1964–65 and 1965–66 are given below :—

Serial number and name of the grantee. (1)	Purpose. (2)	Amount granted. (3) RS.
For the year 1964–65—		
1 Families of the eight persons who were drowned in the ferry mishap on 7th August 1964.	For payment to the family of the eight persons who have lost their lives in the ferry mishap on 7th August 1964 in the river Cauvery near Mohan river bank.	200
2 Secretary, Central Jail Recreation Club, Tiruchirappalli.	For the purchase of furniture to the Recreation Club.	50
3 Secretary, United Circuit Club, Collectorate, Tiruchirappalli.	For payment for the purchase of articles for the United Circuit Club.	80
4 Kamaraj Vasaga Manram, Thanjavur Road, Tiruchirappalli.	For purchase of a petromax light to Welfare Association.	60
5 Secretary, Scheduled Caste Women Welfare Association, Tiruchirappalli.	For purchase of articles to the Welfare Association.	100
6 Nehru Youngsters Club, Cantonment, Tiruchirappalli.	To purchase play materials to the club.	200
7 President, Madar Sangam Ariyalur.	For purchasing of a radio for the Madar Sangam.	250
8 President, Sengattupatti Madar Sangam.	To purchase an electric motor pump-set for the Mid-day Meals Scheme Garden at Sengattupatti.	300
9 Secretary, N.G.G.O.'s Recreation Club, Veppur.	Purchase of volley-ball net and other games materials.	50
10 Sri Kalapiah, Mangadu village, Alangudi taluk.	Sprayer for the vegetable garden run by the individual at Mangadu.	100
11 Tahsildar, Alangudi ..	Purchase of play materials to the Recreation Club of the N.G.G.O.'s Union, Alangudi.	100
12 Commissioner, Panchayat Union, Alathur.	For masonry works.	500
13 Tahsildar, Lalgudi ..	For the construction of the N.G.G.O.'s Home, Lalgudi.	200
14 Commissioner, Panchayat Union, Manapparai.	To purchase a radio to the Recreation Club of the Union Staff.	250

Serial number and name of the grantee. (1)	Purpose. (2)	Amount granted. (3) RS.
15 Tahsildar, Kulithalai ..	To purchase a radio and books for the Recreation Club of the staff.	50
16 Commissioner, Panchayat Union, Kadavur.	For the erection of a play-ground at Tharangampatti.	50
17 Commissioner, Panchayat Union, Sendurai.	Play materials to the Union Elementary School at Sendurai.	50
18 Area Leader, Subramania-puram, St. Christopher Pastorate Church, Tiruchirappalli.	For the benefit of the poor children education in the mission.	100
19 Commissioner, Panchayat Union, Lalgudi.	Purchase of play materials to the Recreation Club, Lalgudi.	50
20 Tahsildar, Karur	To pay to Sri Palani Navithan, who lost his grandson and properties in a fire accident occured on 1st March 1965.	40
21 President, Madar Sangam, Ariyamangalam.	For the improvement of the vegetable cultivation in the garden.	20
	Total ..	2,800
For the year 1965–66—		
22 Sri Jamal Mohammed, Mookanamalaipatti.	For running a petty shop ..	100
23 Sri Karimalakavandan, Pichapalayam, Musiri Taluk.	To compensate the loss of his two bullocks died due to lightning.	100
24 To poor children	For the purchase of books, stationery, etc., to the poor children in the district.	500
25 Sri Duraisami, Sendapala-yam, Musiri taluk.	Purchase of a sprayer ..	100
26 President, N.G.G.O.s' Union, Tiruchirappalli.	To electrify the New N.G.G.O.s' Home, Tiruchirappalli.	200
27 Sri M. E. Abdulgani, a Burma repatriate whose shop has been affected by fire on 31st May 1965.	To purchase grocery articles to his shop.	100
28 Srimathi Flora Lebon, Hon. Secretary of Guild of Ser-vice, Tiruchirappalli.	Pay for the staff working in the Free Nursery School, Woriyur, Tiruchirappalli.	200
29 Mrs. D. Miles, Subramania-puram.	To meet out the expenditure incurred for burrying her child who died on 16th January 1966.	20
	Total	1,3[illegible]0

1964–65, 1965–66-ம் ஆண்டுகளில் திருச்சிராப்பள்ளி கலெக்டரின் யுக்த மானியத்திலிருந்து செய்த செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும், மானியம் பெற்றவரின் பெயரும். (1)	மானியம் வழங்கப்பட்ட காரணம். (2)	மானியத் தொகை. (3) ரூ.
1964–65-ம் ஆண்டுக்காக—		
1 1964-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி அன்று நடந்த படகு விபத்தில் சிக்கி மூழ்கிய 8 நபர்களின் குடும்பங்கள்.	1964-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி அன்று மோகனூர் கரை அருகே காவிரி ஆற்றில் படகு விபத்தில் உயிரிழந்த 8 நபர்களின் குடும்பங்களுக்குக் கொடுப்பதற்காக.	200
2 செயலாளர், மத்திய சிறைச் சாலைப் பணியாளர் பொழுது போக்குச் சங்கம், திருச்சிராப்பள்ளி.	சங்கத்திற்கு வேண்டிய மேசை, நாற்காலி போன்ற பொருள்களை வாங்குவதற்காக.	50
3 செயலாளர், யுனைடெட் சர்க்யூட் கிளப், கலெக்டர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.	சங்கத்திற்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்காக.	80
4 காமராஜர் வாசக மன்றம், தஞ்சாவூர் சாலை, திருச்சிராப்பள்ளி.	மன்றத்திற்காக பெட்ரோமாக்ஸ் விளக்கு வாங்குவதற்காக.	60
5 செயலாளர், ஹரிஜன மகளிர் நல மன்றம், திருச்சிராப்பள்ளி.	இம் மகளிர் நல மன்றத்திற்கான பொருள்களை வாங்குவதற்காக.	100
6 நேரு இளைஞர் சங்கம், கன்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி.	சங்கத்திற்கான பொருள்களை வாங்குவதற்காக.	200
7 தலைவி, மாதர் சங்கம், அரியலூர்.	மாதர் சங்கத்திற்காக ரேடியோ வாங்குவதற்காக.	250
8 தலைவி, செங்கிரட்டுப்பட்டி மாதர் சங்கம்.	செங்காட்டுப்பட்டியில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக மின்சார மோட்டார் பம்பு செட்டு வாங்குவதற்காக.	300
9 செயலாளர், அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் பொழுது போக்குச் சங்கம், வேப்பூர்.	எறி பந்து வலை (volley ball net) பிற விளையாட்டுப் பொருள் வாங்குவதற்காக.	50
10 ஸ்ரீ கலப்பையா, மாங்காடு கிராமம், ஆலங்குடி தாலுக்கா.	இவர் மாங்காட்டில் நடத்தும் காய்கறித் தோட்டத்தில் பயன் படுத்துவதற்காக தெளிப்பான்களை வாங்குவதற்காக.	100
11 தாசில்தார், ஆலங்குடி ..	ஆலங்குடி, அரசிதழ் பதிவு பெறா ஊழியர் பொழுது போக்கு சங்கத்திற்காக விளையாட்டுக் கருவிகள் வாங்குவதற்காக.	100
12 கமிஷனர், பஞ்சாயத்து யூனியன், ஆலத்தூர்.	கட்டிட வேலைகளுக்காக ..	500

தொடர் எண்ணும், மானியம் பெற்றவரின் பெயரும். (1)	மானியம் வழங்கப்பட்ட காரணம். (2)	மானியத் தொகை. (3)
		ரூ.
13 தாசில்தார், நெல்குடி ..	நெல்குடி அரசிதழ் பதிவு பெறு ஊழியர் இல்லத்தைக் கட்டுவதற்காக.	200
14 கமிஷனர், பஞ்சாயத்து யூனியன், மணப்பாறை.	பஞ்சாயத்து யூனியன் பணியாளர்களுக்கான பொழுது போக்கு சங்கத்திற்காக ரேடியோ வாங்க.	250
15 தாசில்தார், குளித்தலை ..	பணியாளர் பொழுதுபோக்குச் சங்கத்திற்காக ரேடியோ புத்தகங்கள் வாங்குவதற்காக.	50
16 கமிஷனர், பஞ்சாயத்து யூனியன், கடவூர்.	தரங்கம்பட்டியில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்காக.	50
17 கமிஷனர், பஞ்சாயத்து யூனியன், செந்துறை.	செந்துறையிலுள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளிக்கான விளையாட்டுக் கருவிகள் வாங்குவதற்காக.	50
18 பகுதித் தலைவர், சுப்ரமண்யபுரம் தெரு, செயின்ட் கிறிஸ்தோபர் சர்ச், திருச்சிராப்பள்ளி.	இக் கிருஸ்துவ சபையின் பாதுகாப்பிலுள்ள ஏழைச் சிறுவர்களது கல்விக்காக.	100
19 கமிஷனர், பஞ்சாயத்து யூனியன், நெல்குடி.	நெல்குடி பொழுது போக்குச் சங்கத்திற்கு விளையாட்டுக் கருவிகள் வாங்குவதற்காக.	50
20 தாசில்தார், கரூர்	1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதி அன்று தீ விபத்தில் தமது பேரனையும், சொத்தினையும் இழந்த ஸ்ரீ பழனி நாவிதனுக்குக் கொடுப்பதற்காக.	40
21 தலைவி, மாதர் சங்கம், அரிய மங்கலம்.	தோட்டத்தில் காய்கறி உற்பத்தியை அதிகரிப்பதற்காக.	20
	மொத்தம் ..	2,800
1965–66ம் ஆண்டுக்காக—		
22 ஸ்ரீ ஜமால் முகம்மது, மூக்கணமலைப்பட்டி.	சிறு கடை ஒன்றை வைத்து நடத்துவதற்காக.	100
23 ஸ்ரீ கரிமால் கவுண்டன், பிச்சப் பாளையம், முசிரி தாலுகா.	இடி மின்னல் தாக்கி இறந்த இரண்டு காளை மாடுகளுக்கு நஷ்ட ஈடாக.	100
24 ஏழைச் சிறுவர்களுக்கு ..	இம் மாவட்டத்திலுள்ள ஏழைச் சிறுவர்களுக்குப் புத்தகங்கள், எழுதுபொருள்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக.	500
25 ஸ்ரீ துரைசாமி, சேந்தபாளையம், முசிரி தாலுகா.	தெளிப்பான் வாங்குவதற்காக.	100

தொடர் எண்ணும், மானியம் பெற்றவரின் பெயரும். (1)	மானியம் வழங்கப்பட்ட காரணம். (2)	மானியத் தொகை. (3)
		ரூ.
26 தலைவர், அரசிதழ் பதிவு பெறு ஊழியர் சங்கம், திருச்சிராப்பள்ளி.	திருச்சிராப்பள்ளியில் அரசிதழ் பதிவு பெறு ஊழியர்களுக்காகப் புதிதாகக் கட்டப்பட்ட இல்லத்திற்கு மின்சக்தி இணைப்புக் கொடுப்பதற்காக.	200
27 ஸ்ரீ M. E. அப்துல்கனி, பர்மா அகதி (இவரது கடை 1965-ம் ஆண்டு மே மாதம் 31-ந் தேதி அன்று தீ விபத்தினால் பாதிக்கப்பட்டது).	அவருடைய கடைக்கான சரக்குகளை வாங்குவதற்காக.	100
28 திருமதி ஃப்ளோரா லெப்பான், கௌரவச் செயலாளர், சேவா சமாஜம், திருச்சிராப்பள்ளி.	திருச்சிராப்பள்ளி உறையூர் இலவச நர்சரி பள்ளிக்கூடத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கான சம்பளம்.	200
29 திருமதி D. மைல்ஸ், சுப்ரமணியபுரம்.	1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி அன்று இறந்த அவரது குழந்தையைப் புதைப்பதற்கான செலவிற்காக.	20
	மொத்தம் ..	1,350

APPENDIX V.

[*Vide* Answer to Starred Question No. 529 at page 436.]

Statement showing the concessions granted to Repatriates from Ceylon in Madras State.

1. Relaxation of rules relating to age, educational qualifications, etc., in the case of repatriates from Ceylon who are otherwise found *prima facie* suitable for appointment to posts in Government departments

2. Preference after War service candidates to Ceylon repatriates for purposes of appointment to posts in the Last Grade Service.

3. Preference to students repatriated from Ceylon in the matter of admission to training schools, other things being equal.

4. Grant of loans not exceeding Rs. 500 to artisan repatriates from Ceylon, e.g., tailors, blacksmiths, soap makers, barbers, dhobies, etc.

5. Grant of following concessions to Ceylon repatriates applying for licences to start commercial and industrial undertakings:—

(i) Treatment of business conducted in Ceylon by the repatriates as business conducted in India, where previous experience in India is a condition for the grant of the licence; and

(ii) Preference over other applicants, other things being equal.

6. Grant of loans up to a maximum of Rs. 1,000 in the form of birds and other equipments to Ceylon repatriates for poultry farming.

7. Grant of boarding expenses to children of repatriates.

Consideration to Ceylon repatriates in the matter of granting licences under the following Acts and Rules :—

(1) Indian Arms Act (Central Act 11 of 1878)

(2) Indian Arms Rules, 1951.

(3) Explosives Act, 1884 (Central Act IV of 1884).

(4) Explosive Rules, 1940.

(5) Petroleum Act, 1934 (Central Act XXX of 1934).

(6) The petroleum Rules, 1937.

(7) The Poisons Act, 1919 (Central Act XII of 1919).

(8) The Poisons Rules.

8. This Government have also taken the following measures to afford employment opportunities to repatriates from Ceylon :—

(i) Establishment of a Spinning Mill at Nazareth, Tirunelveli at a cost of Rs. 10 lakhs.

(ii) Establishment of a Coir Training-*cum*-Production Centre one each at Keelakarai and Adiramapatnam.

Leasing of palmyrah trees near Pallipatti village (Tirunelveli district) to Tirunelveli District Co-operative Palm-Gur Industry Association.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைக் காட்டும் விவர அறிக்கை.

1. இலங்கையிலிருந்து இம் மாநிலத்திற்குத் திருப்பி அனுப்பப் பட்டவர்கள் அரசாங்கத் துறைகளில் நியமிக்கப்படுவதற்குப் பிற வகைகளில் தகுதியுள்ளவராக இருப்பின், அவர்களது வயது, கல்வித் தகுதி முதலிய வற்றைக் குறித்த விதிகள் தளர்த்தப்படுகின்றன.

2. கடைநிலை ஊழியர் பணிகளில் நியமனம் செய்கையில் இலங்கையி லிருந்து திரும்பியவர்களுக்கு, முன்னாள் இராணுவ வீரர்களுக்கு அடுத்த படியாகச் சலுகை அளிக்கப்படுகிறது.

3. ஏனைய தகுதிகள் எல்லாம் சரியாக இருப்பின், பயிற்சிப் பள்ளி களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் இலங்கையிலிருந்து திருப்பி யனுப்பப்பட்ட மாணவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது.

4. இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட தையற்காரர்கள், கருமார்கள், சோப்புத் தயாரிப்பவர்கள், முடிதிருத்துபவர்கள், சலவைத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு ரூ. 500-க்கு மேற்படாத கடன்கள் வழங்கப்படுகின்றன.

5. இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்பட்டவர்களுக்கு வர்த்தக தொழில் நிறுவனங்களைத் துவக்க உரிமம் வேண்டி விண்ணப்பம் செய்து கொண்டால் அவர்களுக்கு அடியிற்கண்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன:—

(i) உரிமம் வழங்குவதற்கு இந்தியாவில் முன் வர்த்தக அனுபவம் வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாக இருப்பின், இலங்கையில் செய்த வர்த்தகம் இந்தியாவில் செய்த வர்த்தகமாகக் கருதப்படுகிறது.

(ii) மற்ற நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மற்ற விண்ணப்ப தாரிகளைவிட இவர்களுக்கு முதற் சலுகை அளிக்கப்படுகிறது.

6. இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் கோழிப்பண்ணை நடத்த விரும்பினால், அவர்களுக்குப் பறவைகள், பிற சாதனங்கள் வகை யில் 1,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.

7. இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கு உணவுச் செலவுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அடியிற்கண்ட சட்டங்கள், விதிகளின்கீழ் உரிமம் வழங்குவதில் இலங்கை யிலிருந்து திருப்பியனுப்பப்பட்டவர்களுக்குச் சலுகை காட்டப்படுகிறது :—

(1) இந்தியப் படைக் கலச் சட்டம் (மத்தியச் சட்டம் 11/1878).

(2) இந்தியப் படைக் கல விதிகள், 1951.

(3) வெடி மருந்துகள் சட்டம், 1884 (மத்தியச் சட்டம் 4/1884).

[30th March 1966

(4) வெடி மருந்துகள் விதிகள், 1940.

(5) பெட்ரோலியச் சட்டம், 1934 (மத்தியச் சட்டம் 30/1934).

(6) பெட்ரோலியம் விதிகள், 1937.

(7) நஞ்சுகள் சட்டம், 1919 (மத்தியச் சட்டம் 12/1919).

(8) நஞ்சு விதிகள்.

8. இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிப்பதற்காக அடியிற்கண்ட நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது :—

(i) திருநெல்வேலி மாவட்டம் நாசரத்தில் ரூ. 10 லட்சம் செலவில் நூற்பு ஆலை ஒன்றை நிறுவுதல்.

(ii) கீழக்கரை, அதிராம்பட்டினம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் கயிற்றுத் தொழில் பயிற்சி உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவுதல்.

(iii) திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிப்பட்டி கிராமத்தில் உள்ள பனைமரங்களை, திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பனைவெல்ல உற்பத்தி தொழிற் சங்கத்திற்குக் குத்தகைக்கு விடுதல்.

APPENDIX VI

[*Vide* Answer to Starred Question No. 535 at page 438]

The districtwise particulars of the gold subscribed towards Gold Bonds Scheme are as follows :—

Districts. (1)	Gold collected (in Grammes.) (2)
Madras	1,15,986
Chingleput	1,04,147
North Arcot	1,55,977
South Arcot	1,81,009
Thanjavur	2,34,347
Tiruchirappalli	1,05,144
Madurai	1,46,041
Ramanathapuram	1,07,880
Tirunelveli	2,63,555
Kanyakumari	30,557
Nilgiris	18,267
Salem	2,56,845
Dharmapuri	44,631
Coimbatore	1,71,134
Total	19,35,520

30th March 1966]

தங்கப் பத்திரத் திட்டத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ள தங்கத்தின் விவரங்கள் மாவட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மாவட்டங்கள். (1)	திரட்டப்பட்ட தங்கம் (கிராம் கணக்கில்.) (2)
சென்னை	1,15,986
செங்கற்பட்டு	1,04,147
வட ஆற்காடு	1,55,977
தென் ஆற்காடு	1,81,009
தஞ்சாவூர்	2,34,347
திருச்சிராப்பள்ளி	1,05,144
மதுரை	1,46,041
இராமநாதபுரம்	1,07,880
திருநெல்வேலி	2,63,555
கன்னியாகுமரி	30,557
நீலகிரி	18,267
சேலம்	2,56,845
தர்மபுரி	44,631
கோயம்புத்தூர்	1,71,134
மொத்தம்	19,35,520

APPENDIX VII.

[*Vide* Answer to Unstarred Question No. 5 at page 444]

Particulars about stage carriages other than spare buses having primary permits in North Arcot District till 31st October 1965.

Serial number. (1)	*Register number of the vehicle.* (2)	*Name of the route.* (3)	*Seating capacity.* (4)	*Total daily mileage.* (5)	*Amount of tax per quarter.* (6)
					RS.
1	MDJ 4363 ..	.. Alangayam to Tiruvannamalai (via) Tiruppattur, Singarapet and Chengam.	48	184	2,160
2	MDJ 3986 ..	.. Alangayam to Krishnagiri (via) Vaniyambadi ..	45	176	2,025
3	MDJ 3937 ..	.. Do. ..	42	176	1,890
4	MDJ 2639 ..	.. Tindivanam to Cheyyar (via) Wandiwash	48	148	1,920
5	MDJ 2919 ..	.. Vettiyanthozuyam to Wandiwash (via) Arni, S. V. Nagaram, Cheyyar.	40	175	1,800
6	MDJ 3852 ..	.. Padavedu to Cheyyar (via) Senthavasal, Arni and Gorukkai.	50	166	2,000
7	MDJ 2862 ..	.. Polur to Sathanur Dam (via) Kalasapakkam, Kadaladi and Chengam.	48	176	2,160
8	MDJ 4311 ..	.. Polur to Neepathurai (via) Kadaladi and Chengam.	52	184	2,340
9	MDJ 4284 ..	.. Thiruvannamalai to Kancheepuram (via) Polur, Arni, Cheyyar and Dusi.	52	200	2,340
10	MDJ 2522 ..	.. Vedal to Kancheepuram (via) Desur, Wandiwash and Perungar.	45	176	2,025
11	MSX 3927 ..	.. Tiruvannamalai to Kancheepuram (via) Manalurpet and Tirukoilur.	63	191½	2,835
12	MDJ 3593 ..	.. Chetput to Mothakkal (via) Avalurpet, Mangalam, Tiruvannamalai and Thanipadi.	53	157½	2,120
13	MDJ 2989 ..	.. Vettavalam to Vanapuram (va) T. Malai, Sirupakkam, Radhapuram, Seppapattu.	45	200	2,025
14	MDJ 3299 ..	.. Tiruvannamalai to Tirukoilur (via) Manalurpet ..	59	176	2,655
15	MDJ 2637 ..	.. Moongilthuraipet to Tiruvannamalai (via) Tirukoilur.	49	194	2,205
16	MDJ 4564 ..	.. Tiruvannamalai to Samalpatti (via) Chengam and Singarapet.	62	172	2,790
17	MDJ 3056 ..	.. Tiruvannamalai to Veraiyur (via) Tirukoilur ..	61	194	2,830
18	MDJ 3864 ..	.. Melpallipet to Tindivanam (via) Chengam, Kottakulam, Thandiampet, Tiruvannamalai and Gingee.	45	146	1,800
19	MDJ 4199 ..	.. Tiruvannamalai to Cuddalore (via) Veraiyur, Tirukoilur, Madapet and Panruti.	60	198-3/8	2,700
20	MDJ 4299 ..	.. Do.	60	Do.	2,700
21	MDJ 3726 ..	.. Thiruvannamalai to Neyveli (via) Manalurpet, Tirukoilur and Cuddalore.	60	190	2,700

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					RS.
22	MDR 3059	Vellore to Wandiwash (via) Arcot and Cheyyar	53	208	2,385
23	MDJ 2337	Do.	44	208	1,980
24	MDY 4859	Vellore to Tindivanam (via) Arcot, Cheyyar and Wandiwash.	64	152	2,560
25	MDJ 4182	Do.	65	152	2,600
26	MDJ 4087	Do.	64	152	2,560
27	MDR 3186	Mavallavadi to Nerkundram (via) Thellar	45	194-2	2,025
28	MDJ 3031	Arni to Villupuram (via) Chetput, Gingee	47	110	1,645
29	MDJ 3219	Wandiwash to Tindivanam	62	200	2,790
30	MDJ 2695	Do.	50	200	2,250
31	MDJ 3827	Polur to Madras (via) Chetpet, Wandiwash	64	210	2,880
32	MDJ 3957	Do.	64	210	2,880
33	MDJ 2585	Vellore to Odugathur (via) Oosur	48	172	2,160
34	MDJ 2287	Athurai to Veeralur (via) Polur and Devikapuram	45	138	1,800
35	MDJ 2849	Odugathur to Gudiyatham (via) Madanur	45	138	1,800
36	MDJ 3114	Veeralur to Vellore (via) Polur	45	156	1,800
37	MDH 2514	Vellore to Ekambaranallur (via) Puttuthakku, Tiruvalam and Ranipet.	49	186	2,205
38	MDJ 2345	Vellore to Tiruvannamalai (via) Polur	49	208	2,205
39	MDJ 2779	Vellore to Kancheepuram (via) Arcot and Randam.	49	192	2,205
40	MDJ 3866	Thiruvannamalai to Neepathurai (via) Chengam and Ravandavadi.	50	200	2,250
41	MDJ 2985	Bagayam to Kalpudur (via) Auxilium Village (Town Service).	42+15	198	2,040

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
42	MDJ 3995	Banavaram to Arkonam (via) Nemili	52	168	2,080
43	MDJ 4212	Vellore to Mahadeyamalai (via) Katpadi, Latheri and K. V. Kuppam.	54	176	2,430
44	MDJ 3995	Vadapudupet to Vadapudupet (via) Ambur, Pernambut, Malpatti and Alinjikuppam.	52	183	2,340
45	MDJ 2481	Thorapadi to Katpadi (Town Service)	46+15	165	2,220
46	MDJ 3735	Vellore to Sathanur Dam (via) Polur and Tiruvannamalai.	59	184	2,655
47	MDJ 3155	Vellore to Arni (via) Kannamangalam	55	192	2,475
48	MDJ 4055	Vellore to Kancheepuram (via) Arcot, Randam and Perungattur.	49	192	2,205
49	MDJ 4295	Vellore to Tiruvannamalai (via) Polur	65	208	2,925
50	MDJ 2769	Vellore to Onnupuram (via) Kaniyambadi and Kannamangalam.	49	192-2	2,205
51	P. 2343	Arni to Uthiramerur (via) Vallam, Anaibogai, Irumbedu, Ammaiappanallur, Vadalpalayam.	48	192½	2,160
52	MDJ 2621	Veppankaranai to Arni (via) Wandiwash	45	156	1,800
53	MDJ 1779	Tiruvannamalai to Tirupathur (via) Chengam and Singarapet.	56	208	2,520
54	MDJ 3213	Do.	59	208	2,655
55	MDJ 2841	Do.	48	208	2,160
56	MDJ 4084	Tiruvannamalai to Hosur (via) Chengam, Singarapet and Krishnagiri.	64	204	2,880
57	MDJ 4370	Do.	60	204	2,700
58	MDJ 4095	Tiruvannamalai to Salem (via) Chengam, Singarapet and Harur.	59	198	2,655
59	MDJ 3589	Do.	59	198	2,655

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					RS.
60	MDJ 3150 ..	.. Vellore to Tiruvannamalai (via) Polur	59	208	2,655
61	MDJ 2719 ..	.. Wandiwash to Paramanandal (via) Chetpet, Polur, T. Malai, Chandrampet and Chengam.	46	174½	2,070
62	MDJ 3989 ..	.. Athurai to Badur (via) Polur, Chetput and Wandiwash.	49	200	2,205
63	MDJ 2009 ..	.. Narayanakuppam to Paramanandal (via) Thandarampet and Chengam.	40	162	1,600
64	MDJ 1987 ..	.. Vellore to Kalavai (via) Kannamangalam and Kavanur.	45	180	2,025
65	MDH 1739 ..	.. Do.	45	180	2,025
66	MDJ 2387 ..	.. Vellore to Vediyangadu (via) Katpadi, Tiruvalam and Ponnai.	48	198	2,160
67	MDF 1560 ..	.. Ambur to Gudiyatham (via) Pernampet	63	184	2,835
68	MDS 3704 ..	.. Sayanakunta to Ambalur	49	186	2,205
69	MDJ 3696 ..	.. Tiruvannamalai to Pondy (via) Vettavalam and Villupuram.	59	210	2,655
70	MDJ 3939 ..	.. Do.	59	210	2,655
71	MDJ 4257 ..	.. Tiruvannamalai to Villupuram (via) Vettavalam ..	54	200	2,430
72	MDJ 4221 ..	.. Tiruvannamalai to Tirukoilur (via) Vettavalam ..	50	153	2,000
73	MDJ 4252 ..	.. Vellore to Arni (via) Kannamangalam	52	192	2,340
74	MDJ 3639 ..	.. Thazayuthu to Kilkodungalur	52	180	2,340
75	MDJ 4041 ..	.. Gundaleri to Walajah (via) Timiri, Arcot, and Ranipet.	52	194	2,340

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
76	MDJ 4241 ..	.. T. Malai to Vettavalam (via) Kilpennathur and Kolathur.	45	200	2,025
77	MDJ 2489 ..	.. T. Malai to Perungalathur (via) Thandrampet and Narayanakuppam.	40	150	1,600
78	MDJ 2474 ..	.. Banavaram to Arkonam (via) Nemili and Nagavedu.	48	162	1,920
79	MDS 4828 ..	.. Banavaram to Arkonam (via) Nemili and Nagavedu	48	162	1,920
80	MDJ 2474 ..	.. Kaveripakkam to Arkonam (via) Panapakkam ..	49	184	2,205
81	MDJ 4227 ..	.. Arni to Ponnur (via) Wandiwash	52	160	2,080
82	MDJ 3237 ..	.. Vellore to Tirupathur (via) Pallikonda, Ambur and Vaniyambadi.	55	165	2,200
83	MDJ 3794 ..	.. Vellore to Tirupathur (via) Pallikonda, Ambur and Vaniyambadi (Express).	52	119	..
84	MDJ 3935 ..	.. Vellore to Tirupathur (via) Pallikonda, Ambur and Vaniyambadi (Ordinary).	59	165	2,360
85	MDJ 3795 ..	.. Vellore to Tirupathur (via) Pallikonda, Ambur and Vaniyambadi.	52	165	2,080
86	MDJ 3931 ..	.. Katpadi to Thorapadi (via) Vellore (Town Service) ..	40+15	165¼	1,750
87	MDJ 4136 ..	.. Do. ..	40+15	165¼	1,750
88	MDJ 1641 ..	.. Do. ..	31+15	165¼	1,390
89	MDJ 4235 ..	.. Vellore to Krishnagiri (via) Pallikonda, Ambur, Vaniyambadi and Tirupathur.	59	160	2,360
90	MDJ 3570 ..	.. Do.	49	160	1,960
91	MDJ 1771 ..	.. Alangayam to Krishnagiri (via) Vaniyambadi ..	39	176	1,755
92	MDJ 3033 ..	.. Vaniyambadi to Krishnagiri (via) Kandili ..	48	188	2,160
93	MDJ 3580 ..	.. Tirupathur to Salem (via) Uthangarai and Hosur.	55	144	2,200
94	MDJ 4569 ..	.. Do.	60	216	2,700
95	MDJ 4570 ..	.. Do.	60	216	2,700

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6) RS.
96	MDJ 3227	Vellore to Dharmapuri (via) Pallikonda, Ambur, Vaniyambadi and Tirupathur.	48	180	2,160
97	MDJ 4237	Do.	59	180	2,655
98	MSW 2553	Pillur to Sathanur Dam (via) Kalasapakkam, Kadaladi and Chengam.	47	176	1,980
99	MDH 1795	Mansurabad to Veeralur (via) Polur	41	160	1,640
100	MDJ 2715	Vellore to Tazapandal (via) Arni	45	186	2,025
101	MDJ 4076	Katpadi to Thorapadi (Town Service)	39+15	165	1,710
102	MDJ 3101	Do.	44+15	165	1,910
103	MDJ 3044	Do.	44+15	165	1,910
104	MDJ 4037	Vellore to Wandiwash (via) Arni & Anaicut	49	193½	2,205
105	MDJ 2475	Vellore to Arni (via) Kannamangalam	44	144	1,760
106	MDJ 2570	Vellore to Periakozapalur	45	188	2,025
107	MDJ 3429	Vellore to Valathy (via) Arni and Chetpet	52	180	2,340
108	MDJ 4019	Vellore to Ananthapuram	52	200	2,340
109	MDJ 2815	Katpadi to Thorapadi (Town Service)	42+15	165	1,830
110	MDJ 4307	Vellore to Vazanachanur	64	198	2,880
111	MDJ 3727	Vellore to Tiruvannamalai (via) Polur	59	208	2,655
112	MDJ 4167	Vellore to Vallimalai (via) Katpadi, Tiruvalam, Vallimalai, Ponnai.	53	195	2,340
113	MDJ 4251	Vellore to Vediyangadu (via) Katpadi, Tiruvalam, Vallimalai, Ponnai.	53	198	2,385
114	MDJ 4214	Vellore to Thethurai (via) Arni and Wandiwash	52	186	2,340
115	MDJ 3977	Do.	48	186	2,160
116	MDJ 3606	Vellore to Kilnarma (via) Arni & Cheyyar	60	198	2,700
117	MDJ 3613	Do.	60	198	2,700
118	MDJ 4274	Vellore to Chengam (via) Polur, Kadaladi	53	120	18,55
119	MDJ 3463	Vellore to Thanipadi (via) Polur, T. Malai and Thandrampet.	64	184	2,880
120	MDJ 3714	Polur to Sathanur Dam (via) Kalasapakkam, Kadaladi and Chengam.	52	176	2,340
121	MDJ 3873	Vellore to Valathy (via) Arni and Chetpet	59	180	2,655
122	MDJ 2730	Valapandal to Padavedu (via) Melpudupakkam S. V. Nagaram, Arni, Arni Rd. R.S., Santhavasal.	49	184	2,205
123	MDJ 4179	Vellore to Ananthapuram (via) Arni, Chetpet, Gingee and Karliampundi.	53	200	2,385
124	MDJ 3959	Kuvam to Guruverajapet (via) Arkonam	59	168¾	2,655
125	MDJ 3513	Vellore to Cheyyar (via) Arni and Gorukkai	59	184	2,655
126	MDJ 3220	Vellore to Tiruvannamalai (via) Polur	59	208	2,655
127	MDJ 3439	Vellore to Sathanur Dam (via) Polur	59	184	2,655
128	MDJ 4479	T. Malai to Pondy (via) Vettavalam and Villupuram	63	210	2,835
129	MDY 4791	Arcot to Kancheepuram	64	180	2,880
130	MDY 4792	Do.	64	180	2,880
131	MDY 4861	Do.	64	180	2,880
132	MDY 4862	Do.	64	180	2,880
133	MDY 4863	Do.	64	180	2,880
134	MDY 5204	Do.	64	180	2,880
135	MDJ 3397	Vellore to Arcot	53	140	2,120
136	MDY 5029	Do.	64	140	2,560
137	MDJ 2749	Do.	60	140	2,400
138	MDJ 3255	Do.	65	140	2,600
139	MDJ 2750	Do.	60	140	2,400

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3).	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					Rs.
140	MSY 2508	Vellore to Tindivanam (via) Arcot, Cheyyar and and Wandiwash.	60	152	2,400
141	MSV 3507	Vellore to Natteri (via) Arcot	50	188	2,250
142	MSY 2698	Vellore to Cheyyar (via) Katpadi, Tiruvalam, Ranipet and Arcot.	64	180	2,880
143	MDJ 3389	Vellore to Pernamallur (via) Arcot, Valapandal	48	168	1,920
144	MDJ 3256	Vellore to Sathambakkam (via) Arcot	65	176	2,925
145	MDJ 3404	Vellore to Sakaramallur (via) Arcot	48	146	1,920
146	MDJ 2687	Kaniyanur to Kancheepuram (via) Arcot, Kaveripakkam and Damal.	60	178½	2,700
147	MDY 5028	Kalavai to Kancheepuram (via) Arcot, Kaveripakkam and Damal.	64	172	2,880
148	MDJ 4190	Vellore to Kancheepuram (via) Arcot, Kaveripakkam.	65	176	2,925
149	MDJ 4190	Do.	65	176	2,925
150	MSY 2699	Vellore to Walajapet (via) Arcot	60	180	2,700
151	MDJ 4033	Arcot to Ponnai (via) Ranipet and Lalapet	59	166	2,360
152	MDJ 2875	Arcot to Madras (via) Kaveripakkam, Sunkuvarchatram, Poonamallee, St. Thomas Mount.	60	144	2,400
153	MDJ 2882	Arcot to Vazapandal (via) Kalavai	60	184	2,700
154	MDY 4858	Cheyyathuvannam to Kancheepuram (via) Arcot, Ranipet, Walajah, Kaveripakkam, Damal.	64	180	2,880
155	MDJ 2689	Arcot to Kalavai	60	182	2,700
156	MSX 6802	Arcot to Gudiyatham (via) Katpadi and K.V. Kuppam	63	185	2,835

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3).	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
157	MDF 1821	Desur to Panrutti (via) Tindivanam, Pondy and Palur.	45	164	1,800
158	MDJ 2927	Wandiwash to Vedal (via) Desur	45	150	1,800
159	MDJ 3849	Avalurpet to Thurinjapuram (via) T. Malai, Kanji, Agarasibbandi.	52	188·4	2,340
160	MDJ 2516	Chengam to Avalurpet (via) Kanji & T Malai	45	176	2,025
161	MDH 4285	Avalurpet to Kanja (via) Mangalam, T. Malai, Thurinjapuram, Agarasibbandi.	52	185	2,340
162	MDH 2838	Wandiwash to Purusai (via) Cheyyar, Dusi, Kancheepuram and Ekanapuram.	61	184	2,295
163	MDJ 3164	Vellore to Sathanur Dam (via) Polur, T Malai	59	184	2,655
164	MDJ 4172	Vellore to Reddipalayam (via) Polur, T. Malai	59	198	2,655
165	MDJ 4394	Vellore to Tiruvannamalai (via) Polur	59	208	2,655
166	MDJ 3519	Do.	59	208	2,655
167	MDJ 3082	Tiruvannamalai to Kancheepuram (via) Polur, Arni, Cheyyar and Dusi.	52	200	2,340
168	MDY 6491	Vellore to Tirupathur (via) Pallikonda, Ambur, Vaniyambadi (Express).	64	165	2,400
169	MDY 6492	Do.	64	165	2,400
170	MDJ 3521	Vellore to Tirupathur (via) Pallikonda, Ambur, Vaniyambai (Ordinary).	59	165	2,360
171	MDJ 3522	Do.	59	165	2,360
172	MDJ 3523	Do.	59	165	2,360
173	MDJ 3650	Do.	59	165	2,360
174	MDJ 2048	Do.	52	119	1,820
175	MDJ 2648	Do.	50	119	1,750
176	MDJ 2805	Do.	48	119	1,680
177	MDJ 2804	Do.	48	119	1,680

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					RS.
178	MDY 4731	Vellore to Tirupathur (via) Pallikonda, Ambur, Vainyambai (Ordinary.)	64	119	2,240
179	MDJ 3740	Do.	59	119	2,065
180	MDY 6256	Vellore to Odugathur (via) Abdullapuram, Elavambadi and Anaicut.	64	184	2,880
181	APC 2292	Sholinghur to Madras (via) Banavaram, Sunkuvar Chatram and Poonamallee.	53	208	2,385
182	MDJ 3555	Do.	53	208	2,385
183	MDJ 3685	Tiruthani to Chingleput (via) Arkonam, White-gate, Kancheepuram, Walajabad.	51	176	2,295
184	MDJ 3169	Arcot to Arkonam (via) Sholinghur	47	176	2,115
185	MDY 5286	Arcot to Guruvarajapet (via) Sholinghur and Arkonam.	64	180	2,880
186	MDJ 3565	Arcot to Guruvarajapet (via) Kaveripakkam, Panapakkam and Arkonam.	53	192	2,385
187	MDJ 4500	Vellore to Arkonam (via) Arcot, Sholinghur	51	144	2,040
188	MDH 3443	Vellore to Arkonam (via) Arcot, Ranipet, Walajah, Kullateri; Sholinghur.	64	150	2,120
189	MDY 5992	Sholinghur to Kaveripakkam (via) Banavaram	64	180	2,880
190	MDY 5226	Arkonam to Tirupathi (via) Tiruthani, Puthur and Renigunta.	51	150	2,040
191	MDJ 4565	Kancheepuram to Tirupathi (via) white-gate, Arkonam, Tiruthani, Puthur and Renigunta.	64	199·2	2,880

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
192	MDE 294	Arcot to Arumbakkam (via) Athithangal Velur, Sembedu and Karikanthangal.	48	170	2,160
193	MDJ 4177	Vilapakkam to Tiruthani (via) Arcot, Kaveripakkam, Panapakkam and Arkonam.	59	184	2,655
194	MDF 1689	Kancheepuram to Gudiyatham (via) Damal, Kaveripak and Katpadi.	48	199¼	2,160
195	MDJ 3969	Tiruvannamalai to Tindivanam (via) Pennathur and Gingee.	50	168	2,000
196	MDJ 3353	Sathanur Dam to Tindivanam (via) T. Malai Pennathur and Gingee.	50	186	2,250
197	MDJ 2472	Thazayathu to Keekalur (via) T. Malai, Pennathur and Mekkalur.	45	165	1,800
198	MDJ 2526	Chetpet to Mothakkal (via) Tiruvannamalai	45	157½	1,800
199	MDJ 3907	Arni to Villupuram (via) Chetpet, Gingee	50	174	2,250
200	MDU 7929	Do.	58	174	2,610
201	MDJ 3847	Ponnur to Kancheepuram (via) Wandiwash	50	148	2,000
202	MDJ 3512	Cheyyar to Kancheepuram (via) Suruttal	45	200	2,025
203	MDH 3499	Chingleput to Palkipet (via) Walajabad, Kancheepuram, Damal, Kaveripakkam, Banavaram and Sholinghur.	50	192	2,250
204	MDJ 3929	Ozugur to Walajah Road (via) Arni, Arcot	50	156	2,000
205	MDH 1843	Valarpuram to Kancheepuram (via) Arkonam, Tirumalpur RS. and Ganapathipuram.	42	184	1,890
206	MDJ 4030	Arcot to Valarpuram (via) Sholinghur, Arkonam	50	177	2,250
207	MDF 2338	Vaziyur to Soraiyur (via) Arni, S. V. Nagaram	54	188½	2,430
208	MDF 2975	Vellore to Ananthapuram (via) Kannamangalam, Arni, Chetpet, Gingee and Kaliyampundi.	53	200	2,385
209	MDJ 3947	Vellore to Virinjipuram (via) Seduvalai	62	192	2,790

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					RS.
210	MDJ 2640	Vellore to Chengam (via) Kannamangalam, Polur, Vilvarani and Kadaladi.	45	180	2,025
211	MDJ 2745	Katpadi to Thorapadi (via) Vellore (Town Service).	37+15	165	1,815
212	MDJ 2498	Vellore to Arni (via) Kannamangalam	45	192	2,025
213	MDJ 2953	Vellore to Tindivanam (via) Arcot, Cheyyar, Wandiwash.	48	152	1,920
214	MDJ 4154	Tiruvannamalai to Tirupathi (via) Polur, Vellore, Katpadi, Chittoor, Chandragiri (Express).	49	232	2,205
215	MDJ 3945	Tiruvannamalai to Kancheepuram (via) Polur, Arni, Timiri, Kalavai, Mornam and Vambakkam.	47	170	2,115
216	MDJ 4464	Polur to Madras (via) Chetpet, Cheyyar, Kancheepuram, Sunkuvarchatram, Poonamallee and Aminjikarai.	60	212	2,700
217	MDJ 4053	Vellore to Kancheepuram (via) Arcot, Randam and Perungattur.	57	192	2,565
218	MDJ 2382	Reddiyapalayam to Paramanandal (via) Thandrampet, Kottakulam, Chengam.	39	166	1,560
219	MDJ 4085	Ravandavadi to Thanipadi (via) Melpallipet, Chengam, Tiruvannamalai, Thandrampet.	52	180	2,340
220	MDJ 2987	Tiruvannamalai to Perungalathur (via) Thandrampet, Narayanakuppam.	40	150	1,600
221	MDJ 2764	Tiruvannamalai to Mothakkal (via) Reddipalayam.	40	165	1,600
222	MDJ 2002	Alangayam to Krishnagiri (via) Vaniyambadi	40	176	1,800
223	MDS 2898	Asanampet to Natrampalli (via) Alangayam and Vaniyambadi.	40	184	1,800

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
224	MDJ 2961	Kothur to Alangayam (via) Natrampalli	45	148	1,800
225	MDJ 3156	Ambalur to Tirupathur (via) Natrampalli	45	170	2,025
226	MDJ 3413	Natrampalli to Kurusilapattu	52	190	2,340
227	MDJ 2764	T. Malai to Mothakkal (via) Reddiapalayam.	40	165	1,600
228	MDJ 3805	Arcot to Arkonam (via) Sholinghur and Minnal R.S.	59	186¾	2,655
229	MDJ 4065	Do.	64	186¾	2,880
230	MDJ 3804	Arcot-Valarpuram (via) Sholinghur, Arkonam	59	177	2,655
231	MDJ 4174	Arcot to Thakkolam (via) Sholinghur, Arkonam	60	178	2,700
232	MDJ 3965	Periakorapalay to Jambukulam (via) Arni, Arcot and Ranipet.	59	201½	2,655
233	MDJ 4266	Vellore to Arkonam (via) Arcot, Ranipet, Walajah, Narasingapuram, Kullateri and Sholinghur.	64	200	2,880
234	MDJ 1825	Batrapalli to Arni (via) Pernambur, Mailpatti. Gudiyatham, Pallikonda, Anaicut, Sathumadurai and Kaniyambadi.	45	174	2,025
235	MDY 4530	Vellore to Tirupathur (via) Katpadi, K. V. Kuppam, Gudiyatham, Mailpatti, Pernambut, Ambur and Vaniyambadi.	59	176½	2,655
236	MDY 4769	Vellore to Tirupathur (via) Katpadi, K. V. Kuppam, Mahadevamalai, Gudiyatham, Pernambut, Ambur and Vaniyambadi.	64	172¾	2,880
237	MDJ 2699	Arcot to Gudiyatham (via) Ranipet, Tiruvalam, Katpadi and K. V. Kuppam.	63	185	2,835
238	MDJ 2741	Do.	63	185	2,835
239	MDJ 3422	Gudiyatham to Tirupathur (via) Pernambut, Ambur and Vaniyambadi.	64	188	2,880
240	MDJ 3901	Ambur to Gudiyatham (via) Pernambut	63	184	2,835
241	MDJ 2902	Do.	63	184	2,835

Serial number (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					RS.
242	MDJ 2625	Odugathur to Kumaramangalam (via) Madanur, Ambur and Oomarabad.	53	177	2,385
243	MDJ 2693	Do.	53	177	2,385
244	MDJ 2442	Arni to Badrapalli (via) Kaniyambadi, Sathumadurai Anaicut, Pallikonda, Gudiyatham and Pernambut.	51	174	2,295
245	MDJ 2624	Ambur to Gudiyatham (via) Mailpatti	50	180	2,250
246	MDJ 3892	Ambur to Gudiyatham (via) Pernambut	60	184	2,700
247	MDJ 2739	Vellore to Tirupathur (via) Katpadi, K. V. Kuppam, Gudiyatham, Mailpatti, Pernambut, Ambur and Vaniyambadi.	63	166¼	2,720
248	MDJ 2732	Vellore to Tirupathur (via) Katpadi, K. V. Kuppam, Gudiyatham, Pernambut, Ambur, Vaniyambadi touching Mahadevamalai.	63	172¾	2,825
249	MDJ 2701	Arcot to Gudiyatham (via) Ranipet, Tiruvalam and Katpadi.	63	185	2,835
250	MDJ 2746	Do.	63	185	2,835
251	MDJ 3019	Vellore to Paradarami (via) Pallikonda and Gudiyatham.	59	159	2,360
252	MDJ 3799	Gudiyatham to Tirupathur (via) Pernambut, Ambur and Vaniyambadi.	65	188	2,925
253	MDJ 4581	Gudiyatham to Madras (via) Katpadi, Ranipet, Kaveripak, Sunkuvarchatram, Poonamallee, and St. Thomas Mount.	60	210	2,700
254	MDJ 4024	Do.	60	210	2,700

Serial number (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
255	MDJ 3863	Polur to Osur (via) Chetpet and Wandiwash	59	184	2,655
256	MDJ 3571	Cheyyar to Kuvalai (via) Purusai Cross Road, Thenilluppai, Vengodu and Kilnarma.	45	193	2,025
257	MDJ 4175	Arni to Chetpet (via) Vinnamangalam	50	139	2,000
258	MDJ 4171	Chetpet to Cheyyar (via) Thavasi	52	182	2,340
259	MDJ 3972	Tiruvannamalai to Kilkodungalur (via) Polur, Chetpet and Wandiwash.	50	180¾	2,250
260	MDJ 3831	Do.	50	180¾	2,250
261	MDJ 2884	Ambur to Gudiyatham (via) Pernambur	40	184	1,800
262	MDJ 2885	Ambur to Gudiyatham (via) Mailpatti	40	180	1,800
263	MDS 4461	Vellore to Panamadangi (via) Katpadi and Latheri.	46	192½	2,070
264	MDJ 3984	Cheyyar to Vembakkam (via) Randam and Perangattur.	45	189—4	2,025
265	MDJ 3993	Timiri to Cheyyar (via) Kalavai and Mambakkam.	52	195¾	2,340
266	MDJ 2629	Chittoor to Tirupathur (via) Paradarami, Gudiyatham, Ambur and Vaniyambadi.	49	146	1,960
267	MDJ 4059	Do.	59	146	2,360
268	MDJ 3797	Gudiyatham to Chittoor (via) Paradarami	59	150	2,360
269	MDJ 2368	Vellore to Asanambut (via) Oosur, Anaicut and Odugathur.	39	166¼	1,560
270	MDJ 3132	Do.	45	166¼	1,560
271	MDJ 2599	Vellore to Arkonam (via) Arcot and Sholinghur	48	144	1,920
272	MDJ 2964	Vellore to Arcot	45	140	1,800
273	MDJ 4491	Vellore to Arkonam (via) Arcot, Kaveripakkam and Panapakkam.	64	200	2,880
274	MDJ 2424	Kanji to Avalurpet (via) Tiruvannamalai and Kilpennathur.	45	148	1,800
275	MDJ 2519	Veeralur to Avalurpet (via) Siruvallur, Adamangalampudur, Kadaladi, Kanji, Tiruvannamalai and Kilpennathur.	45	181	2,025

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6) RS.
276	MDJ 2864	Chengam to Avalurpet (via) S. Pudupalayam, Kanji, Tiruvannamalai and Kilpennathur.	45	276	2,025
277	MDJ 2865	Jayapuram to Tiruvannamalai (via) Tirupathur, Singarapet and Chengam.	45	164	1,800
278	MDJ 4279	Chengam to Vazavachanur (via) Kottakulam, Thatchampet, Radapuram, Kambattu and Vanapuram.	52	173.2	2,340
279	MDJ 2391	Tiruvannamalai to Tirupathur (via) Chengam and Singarapet.	48	208	2,160
280	MDJ 2119	Tiruvannamalai to Kancheepuram (via) Polur, Arni and Cheyyar.	60	180	2,700
281	MDJ 2460	Do.	50	180	2,250
282	MDJ 3361	Kanalapadi to Kancheepuram (via) Tiruvannamalai, Polur, Arni and Cheyyar.	50	160	2,000
283	MDJ 2694	Madam to Kancheepuram (via) Cheyyar	..	200	2,160
284	MDJ 3381	Polur to Kancheepuram (via) Arni, Cheyyar and Mornam.	50	170	2,250
285	MDJ 2419	Polur to Kancheepuram (via) Arni, Cheyyar and Dusi.	48	172	2,160
286	MDJ 2644	Sirumur to Walajah Road (via) Sevur Arni, Timiri and Arcot.	52	168	2,080
287	MDJ 2579	Kelur to Walajah Road (via) Santhavasal, Arni Road, Arni, Timiri and Arcot.	45	190	2,025
288	MDJ 2420	Vedamadimangalam to Walajapet (via) Arni Road, Arni and Arcot.	48	162	1,920

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6) RS.
289	MDJ 3052	Walajah Road to Athurai (via) Arcot and Arni	48	174	2,160
290	MDJ 3120	Wandiwash to Thalayuthu (via) Arni, Polur, Kadaladi and Chengam.	48	163	1,920
291	MDJ 2783	Walajah Road to Tiruvannamalai (via) Arcot, Arni and Polur.	48	183	2,160
292	MDJ 3630	Do.	60	183	2,700
293	MDJ 4362	Arni to Madras (via) Kancheepuram, Aminjikarai	60	190	2,700
294	MDJ 4359	Arni to Madras (via) Arcot, Kaveripakkam, Sunkuvarchatram and St. Thomas Mount.	60	184	2,700
295	MDJ 3979	Do.	60	184	2,700
296	MDJ 4312	Arni to Madras (via) Arcot, Kaveripakkam, Sunkuvarchatram and Aminjikarai.	60	180	2,700
297	MDJ 4365	Do.	60	180	2,700
298	MDJ 3631	Tiruthani to Polur (via) Arkonam, Kancheepuram, Dusi, Cheyyar and Arni.	60	162	2,400
299	MDJ 3483	Poondi to Arkonam (via) Polur, Arni, Cheyyar, Mornam and Kancheepuram.	50	186	2,250
300	MDJ 4360	Polur to Madras (via) Chetpet, Cheyyar, Kancheepuram, White gate, Sunkuvarchatram and Aminjikarai.	60	212	2,700
301	MDJ 2317	Vazapandal to Padavedu (via) Melpudupakkam, Arni, Arni Road and Santhavasal	45	172	2,025
302	MDJ 2867	Vazapandal to Athurai (via) Melseshamangalam, Arni, Thatchur and Devikapuram.	48	176	2,160
303	MDJ 2897	Arni to Wandiwash (via) Anaicut	48	162	1,920
304	MDJ 3115	Arni to Cheyyar (via) Anaicut, Parasur and Vakkadai.	48	150	1,920
305	MDJ 3867	Chetpet to Kancheepuram (via) Dusi, Cheyyar, Pernamallur and Chinnakozapalur.	52	168	2,080

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					RS.
306	MDJ 3802	Arni to Kancheepuram (via) Kalavai, Mornam and Perunattur.	60	170	2,700
307	MDJ 2815	Balur to Vaniyambadi (via) Ambur	40	196	1,800
308	MSV 8503	Vaniyambadi to Komutteri (via) Alangayam, Kavalur and Naickenpudur.	47	178	2,250
309	MDJ 2214	Alangayam to Krishnagiri (via) Vaniyambadi	40	132	1,600
310	MDJ 3009	Do.	45	132	1,800
311	MDJ 2422	Tirupathur to Odugathur (via) Alangayam and Asanampet.	48	181½	2,160
312	MDJ 2869	Alangayam to Kothur (via) Natrampalli and Tirupathur.	45	148	1,800
313	MDJ 4042	Sundarampalki to Kandili (via) Tirupathur	59	186¼	2,655
314	MDU 9297	Katpadi to Thorapadi (via) Vellore (Town Service).	46+25	165	2,090
315	PYS 115	Do.	41+25	165	1,890
316	MDJ 3038	Do.	50+15	165	2,150
317	MDJ 3039	Do.	50+15	165	2,150
318	MDJ 3649	Vellore to Tiruvannamalai (via) Kannamangalam and Polur.	58	208	2,340
319	MDJ 4192	Arcot to Guruvarajapet (via) Sholinghur and Arkonam	62	162	2,480
320	APC 2705	Tiruvannamalai to Kancheepuram (via) Polur, Arni, Timiri, Kalavai, Mornam, Vembakkam.	52	170	2,340
321	MDJ 3349	Chengam to Mansurabad (via) Kanji, Tiruvannamalai, Mangalam and Arpakkam.	45	174	2,025
322	MDJ 4196	Tiruvannamalai to Tindivanam (via) Pennathur and Gingee.	60	168	2,400

323	MDJ 4069	Tiruvannamalai to Mangalam (via) Avalurpet and Chetpet.	60	196	2,700
324	MDJ 3769	Thurinjapuram to Arni (via) T. Malai, Mangalam, Avalurpet and Chetpet.	49	184	2,025
325	MDJ 4275	Tiruvannamalai to Pernamallur (via) Mangalam, Avalurpet and Chetpet.	49	179½	2,205
326	MDF 1453	Kanji to Avalurpet (via) Tiruvannamalai and Kilpennathur.	45	180	2,025
327	MDJ 2263	Thalakunram to Vazavachanur (via) Kaplambadi, Avalurpet, Pennathur, T. Malai and Vanapuram.	45	160	1,800
328	MDJ 2767	Kanalapadi to Tirupathur (via) T. Malai, Chengam and Singarapet.	49	156	1,960
329	MDJ 3209	Vellore to Chengam (via) Polur, Kadaladi	48	180	1,960
330	MDJ 3479	Vellore to Vazavachanur (via) Polur, T. Malai and Vanarpuram.	50	198	2,250
331	MDJ 3974	Kothur to Alangayam (via) Natrampalli and Tirupathur.	52	148	2,080
332	MDY 5990	Vellore to Vettavalam (via) Polur and T. Malai	60	186	2,700
333	MDJ 3061	T. Malai to Alangayam (via) Chengam, Singarapet and Tirupathur.	52	144	2,080
334	MDJ 3643	Alangayam to Theertham (via) Tirupathur, Krishnagiri and Veppanapalli.	45	183	2,025
335	MDJ 4293	Kangeyanallur to Kilarasampet (via) Vellore, Pennathur, Sholavaram and Palambakkam.	52	193½	2,340
336	MDJ 3811	Minnal R.S. to Tiruthani (via) Guruvarajapet	52	137½	2,080
337	MDJ 3897	Do.	52	137½	2,080
338	MDJ 4361	T. Malai to Dharmapuri (via) Chengam, Singarapet and Tirupathur.	53	176	2,385

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					RS.
339	MDJ 3921	Avalurpet to Pochampalli (via) Mangalam, T. Malai, Chengam, Singarapet, Uthangarai, Samalpatti and Kallavi.	52	140	2,080
340	MDF 1667	Kangeyanallur to Keelarasampet (via) Vellore, Pennathur, Sholavaram and Palambakkam.	50	207	2,700
341	MDJ 3036	Katpadi to Thorapadi (via) Vellore (Town Service)	28+15	165	1,270
342	MDJ 3332	Do.	40+15	165	1,750
343	MDJ 3644	Vellore to Periakozapalur (via) Kannamangalam and Arni.	45	166	1,800
344	MDJ 3861	Vellore to Arni (via) Kannamangalam	49	155	1,960
345	MDJ 3925	Vellore to Wandiwash (via) Arni and Anaicut	39	145½	1,560
346	MDJ 3665	Arcot to Vaziyur (via) Kavanur, Kannamangalam and Vannankulam.	42	192	1,890
347	MDJ 2997	Arni to Sornavur (via) Chetput, Gingee, Villupuram and Valavanur.	53	140	2,120
348	MDJ 2724	Chetpet, Walaja Road (via) Devikapuram, Thatchur and Arni.	53	168	2,120
349	MDJ 4051	Vellore to Madras (via) Arcot, Kaveripak, Sunkuvarchatram, and St. Thomas Mount.	60	267	2,700
350	MDJ 4585	Do.	65	178	2,925
351	MDJ 4300	(Express) Vellore to Madras (via) Arcot, Kaveripakkam, Sunkuvarchatram and St. Thomas Mount.	63	267	2,835
352	MDJ 4325	Chittoor to Madras (via) Naraharipet, Ranipet, Kaveripakkam, Olimohamedpet, White-gate, Sunkuvarchatram and Mount.	61	196	2,740
353	MSX 3905	Chittoor to Madras (via) Naraharipet, Ranipet, Kaveripak, Kancheepuram, Sunkuvarchatram and Mount.	59	202	2,655
354	MDJ 3338	Do.	63	202	2,835
355	MDJ 3288	Chittoor to Madras (via) Olimohamedpet	63	196	2,835
356	MDJ 2688	Polur to Madras (via) Chetpet, Cheyyar, Kancheepuram, Sunkuvarchatram, Aminjikarai.	63	212	2,835
357	MSY 6447	Vellore to Gudiyatham (via) Pallikonda	64	158	2,560
358	MDJ 2279	Gudiyatham to Vettuvanam (via) Pallikonda	44	96	1,540
359	MDY 6255	Vellore to Odugathur (via) Abdullapuram	64	184	2,880
360	MDO 3189	Vellore to Odugathur (via) Oosur, Anaicut	64	172	2,880
361	MDJ 2434	Vellore to Gudiyatham (via) Pallikonda	45	78	1,575
362	MDJ 2435	Do.	45	78	1,575
363	MDJ 2736	Do.	59	78	2,065
364	MDJ 2737	Usoor to Gudiyatham (via) Vellore and Pallikonda.	59	105	2,065
365	MDJ 3015	Vellore to Gudiyatham (via) Pallikonda	59	78	2,065
366	MDJ 3524	Do.	59	78	2,065
367	MDJ 3747	Do.	59	78	2,065
368	MDJ 2589	Vellore to Sayanagunta (via) Pallikonda, Gudiyatham.	45	120	1,575
369	MDJ 2590	Do.	45	120	1,575
370	MDJ 3016	Vellore to Pachakuppam (via) Gudiyatham and Alinjikuppam.	59	115·4	2,065
371	MDJ 3949	Vellore to Pernambut (via) Pallikonda, Gudiyatham	59	198	2,655
372	MDJ 3626	Oomarabad to Odugathur (via) Madanur	45	138	1,575
373	MDJ 2759	Vellore to Tirupathur (via) Vaniyambadi	59	119	2,065
374	MDJ 2760	Do.	59	119	2,065

Serial number. (1)	Register number of the vehicle. (2)	Name of the route. (3)	Seating capacity. (4)	Total daily mileage. (5)	Amount of tax per quarter. (6)
					RS.
375	MDJ 3035	Vellore to Tirupathur (via) Vaniyambadi	59	165	2,360
376	MDJ 3950	Do.	59	165	2,360
377	MDJ 3242	Do.	49	119	1,715
378	MDJ 3034	(Express) Do.	59	165	2,360
379	MDJ 3084	Vellore to Palamaner (via) Gudiyatham	49	130·4	1,960
380	MDJ 3085	Do.	49	130·4	1,960
381	MDJ 4155	Gudiyatham to Chittoor (via) Paradarami	59	151·4	2,360
382	MDJ 4424	Arcot to Illuppai (via) Chakramallur	51	180	2,295
383	MDJ 2555	Thengal to Kannamangalam (via) Arcot and Kavanur.	48	170¾	2,160
384	MDJ 2634	Arcot to Arkonam (via) Kaveripakkam, Panapakkam.	45	140	1,800
385	MYD 6799	Arukkunram to Illuppai (via) Arcot, Chakramallur.	54	184	2,430
386	MDJ 3871	Arcot to Chittoor (via) Arcot, Tinuvalam and Naraharipet.	52	180	2,340
387	MDJ 3872	Do.	49	180	2,205
388	MDS 4159	Kandili to Jolarpet (via) Tirupathur	49	194·4	2,205
389	MDJ 4225	Do.	46	154½	1,840
390	MDH 1924	Gundaleri to Walajah (via) Timiri, Arcot and Ranipet.	45	126	1,575
391	MDH 3672	Kancheepuram to Kilnethapakkam (via) Mangal Road Junction, Ukkamperumabbak, Akkur.	52	180	2,340
392	MDJ 4309	Kallapadi to Mahadevamalai (via) Ramalai, Gudiyatham and Kavanur.	65	174	2,925

393	MDJ 1957	Vellore to Tindivanam (via) Arni, Valapandal and Thellar.	48	156	1,920
394	MDJ 2910	Walajah Road to Padavedu (via) Arcot, Arni and Santhavasal.	45	158	1,800
395	MDS 5493	Melalathur to Paradaramai (via) Natham, Beemavaram, Gudiyatham.	48	180	2,160
396	MDJ 4626	Tiruparkadal to Sholinghur (via) Kaveripakkam, Banavaram.	45	197	2,025
397	MDE 1669	Vellore to Vallimalai (via) Katpadi, Kandipedu and Vennampalli.	49	195	2,205
398	MDH 3682	Kancheepuram to Gudiyatham (via) Damal, Kaveripakkam.	50	199·4	2,250
399	MDF 1662	Melalathur to Paradarami (via) Natham, Beemavaram, Gudiyatham and Kallapadi.	45	180	2,205

APPENDIX VIII.

[*Vide* Answer to Unstarred Question No. 6 at page 444.]

I. *List of river crossings where Major bridges are in existence.*

Serial number. (1)	Name of road, mileage and river crossing. (2)
	Vellore Division.
	-Chittoor-Bangalore road at mile 57/4 across Macklean channel.
2.	Madras-Chittoor-Bangalore road at mile 75/8-76/8 across Ponnaiyar river.
3.	Ranipet-Krishnagiri road at mile 7/15 across Palar river.
4.	Ranipet-Krishnagiri road at mile 87/2 across Nakkal river.
5.	Ranipet-Krishnagiri road at mile 87/2 across channel crossing.
6.	Ranipet-Krishnagiri road at mile 100/1 across Payyar river.
7.	Ranipet-Krishnagiri road at mile 101/5 across Agaram river.
8.	Ranipet-Krishnagiri road at mile 128/7 across channel crossing.
9.	Ranipet-Krishnagiri road at mile 130/5 across Kallar river.
10.	Guddalore-Chittoor road at mile 119/2-6 across Palar river.
11.	Arkonam-Kancheepuram road at mile 3/3-4, across Kallar river.
12.	Arkonam-Ocheri road at mile 13/2 across Agavalam river.
13.	Tirupathur-Singarapet road at mile 1/3 across Tirupathur taluk surplus channel.
1 .	Tirupathur-Singarapet road at mile 6/2 across Pambar river.
15.	Tirupathur-Alangayam road at mile 9/8 of Pambar river.
16.	Katpadi-Venkatagirikotta road at mile 18/6-8 across Goundanya river.
17.	Abdullapuram-Pakkam road at mile 11/1 across Peyyar river.
18.	Abdullapuram-Asanampet-Alangayam road at mile 16/6 across Agaram river.
19.	Abdullapuram-Pakkam road at mile 22/4 across Asanambut river.
20.	Kalavai-Valapandal road at mile 1/8 across Melanathapakkam tank surplus channel.
21.	Kalavai-Valapandal road at mile 6/6 of Ippedu river.
22.	Kaveripauk-Sholinghur road at mile 10/6 across Veeranam tank surplus channel.
23.	Kaveripauk-Sholinghur road at mile 13/5 of Kaveripauk tank surplus channel.
24.	Salem-Tirupathur road at mile 65/3 across Koratti river.
	Tiruvannamalai Division.
25.	Tiruvannamalai–Thanipadi road at M. 39/2 across Pennar.
26.	Tiruvannamalai–Kanchi road at mile 22/1 across Cheyyar.
27.	Guddalore–Chittoor road at mile 99/4 across Padavattar.
28.	Wandiwash–Polur road at mile 31/4 across Cheyyar.
29.	Polur–Chengam road at mile 15/5 across Kallar river.

Serial number. (1)	Name of road, mileage and river crossing. (2)
	***Tiruvannamalai Division*—cont.**
30.	Arcot–Tindivanam road at mile 25/3-4 across Cheyyar.
31.	Arcot–Arni–Wandiwash road at mile 16/1 across Kamandalanaganadhi.
32.	Cuddalore–Chittoor road at mile 105/4 across Naganadhi.
33.	Arcot–Tindivanam road at mile 37/6 across Suganadhi.

Clause (*b*).

II. *List of river crossings where causeways are in existence.*

Serial number. (1)	Name of road, mileage and river crossing. (2)
	Vellore Division.
1.	Pallikonda–Palamanur road at mile 0/7-1/1 across Palar river.
2.	Pallikonda–Palamanur road at mile 11/7 across Guddar river.
3.	Ambur–Sathagur road at mile 0/7-8 across Palar river.
4.	Ambur–Sathagur road at mile 8/7 and 8 across Malattar river.
5.	Vaniyambadi–Dharmapuri road at mile 151/2-3 across Pambar river.
6.	Tirupathur–Alangayam road at mile 12/8 across Pambar river.
7.	Puttuthakku–Causeway road at mile 2/1-3 across Palar river.
8.	Arkonam–Ocheri road at mile 8/2 across Kallar river.
9.	Arkonam–Kancheepuram road at mile 8/8 across Kallar river.
10.	Arkonam-Sholinghur road at mile 9/7 across channel.
11.	Minnal Railway Station to Amirpet road at mile 2/4 across Kallingal madagu.
12.	Pachakuppam Causeway across Palar river (Alinjikuppam village road at mile 0/5 across Palar river).
	Tiruvannamalai Division.
13.	Cuddalore–Chittoor salai at mile 82/1-2 across Cheyyar.
14.	Polur–Chengam road at mile 8/5 across Erumboondi river.
15.	Arni–Padavedu road across mile 12/3 across Padavettar.
16.	H. C. Veeralur road at mile 9/3 across Kattar.
17.	Conjeevaram–Wandiwash road at mile 11/7-8 across Cheyyar.
18.	Arni–Chetpet road at mile 6/1 across Cheyyar.
19.	Acharapakkam-Wandiwash road at mile 21/6 across Wandiwash Suga river.
20.	Acharapakkam-Wandiwash road at mile 28/6 across Salavedu Suga Nadhi.
21.	Arcot-Arni Wandiwash road at mile 25/8 across Cheyyar.

[30th March 1966

III. *List of river and road crossings without bridges or culverts.*

Serial number. (1)	Name of road, mileage and river crossing. (2)

Vellore Division.

1. Katpadi–Venkatagirikotta road at mile 32/7 and 8 across Goddar river.
2. Abdullapuram–Pakkam road at mile 11/4 across Payyar river.
3. Abdullapuram–Pakkam road at mile 19/6 across Agaram river.
4. Abdullapuram–Pakkam road at mile 20/4 across Agaram river.
5. Abdullapuram–Pakkam road at mile 20/8 across Agaram river.
6. Abdullapuram–Pakkam road at mile 24/2 across Agaram river.
7. Abdullapuram–Pakkam road at mile 28/6 across Agaram river.
8. Abdullapuram–Pakkam road at mile 28/8 across Agaram river.
9. Chittoor–Tiruthani road at mile 14/7-8 across Ponnaiyar river.
10. Banavaram–Sendamangalam road at mile 3/1 across Mahadadi tank surplus channel.
11. Banavaram–Sendamangalam road at mile 10/4-5 across Nemili river.
12. Gudiyatham–Gadambur road at mile 13-1 and 2 across Goddar river.
13. Salem–Tirppathur road at mile 68/4.
14. Chinnammapet–Thakkolam road at mile 5/7.
15. Madanar–Agaram road at mile 4/8 across Agaram river.
16. Thakkolam–Koovam road at mile 1/1 across Koovam river.
17. Puduppadi–Illuppai road at mile 4/7 across Chakaramallur channel.
18. Ranipet–Ponnai road at mile 9/9 across odai.
19. Ranipet–Ponnai road at mile 11/1 across odai.
20. Ranipet–Ponnai road at mile 11/6 across odai.
21. Ranipet–Ponnai road at mile 12/2 across odai.
22. Othiyathur branch road at mile 0/7 across Peyyar river.
23. Ulli–Madanoor road at mile 1/3 across Palar river.
24. Jolarpet–Ambalaore road (Eklasapuram causeway).
25. Melasampattu branch road at mile 0/1 across Uthrakaveri Nathi.

30th March 1966]

Serial number. (1)	Name of road, mileage and river crossing. (2)

Vellore Division—cont.

26. Nimmiyambattu mittur road at mile 0/8.
27. Agraharam Gittapalli road at mile 5/1 across Gittapalli channel.
28. Minnoor Vadakarai road across Palar.
29. Virinjipuram Railway Feeder road at mile 1/5-6 and 2/5-6 across Goddar river and Palar river.
30. Vaniyambadi Kailasagiri road (near Udayandram) at mile 1/5 across Palar river.
31. Minnal Railway station to Amirpet road at mile 2/6 across channel.
32. Thakkolam–Koovam road at mile 1/2 across Koovam river.
33. Minnal Railway station to Kilveethi road at mile 3/5 across Arasankuppam channel.
34. Panappakkam-Pallur road at mile 4/7 across channel.
35. Kilarasampattu branch road at mile 1/1 across Naganathi.

Tiruvannamalai Division.

36. Polur–Chengam road at mile 29/6 across Cheyyar.
37. Chengam–Paramananthal road at mile 0/7 across Cheyyar.
38. N.C. Veeralar road at mile 4/3, 5/2, 7/1 across Kattar.
39. Kalavai-Valapandal road at mile 12/4-5 across Cheyyar.
40. Vada Illupai-Perambakkam road across Palar river.
41. Arni–Devikapuram road at mile 7/2 across Cheyyar.
42. Arcot-Arni-Wandiwash road at mile 25/8 across Cheyyar (Proposal for new bridge near existing Anicut).
43. Ponnar-Bondai road at mile 2/5 across Pennar.
44. Polur–Pilasur road across Cheyyar.
45. Polur–Chengam road at mile 24/1.
46. Acharapakkam–Wandiwash road at mile 21/6 across Wandiwash Suga nadhi.
47. Acharapakkam–Wandiwash road at mile 28/8 across Salavedu Suga Nadhi.
48. Arni–Chetpet road at mile 6/1 across Cheyyar.

Clause (e).

IV. *List of works sanctioned and those proposed to be taken up under Fourth Five-Year Plan.*

Serial number.	Name of road, mileage and river Crossing.
(1)	(2)
1.	Polur–Chengam road at mile 29/6 across Cheyyar.
2.	Banavaram–Sendamangalam road at mile 10/4–5 across Nemili river.
3.	Salem–Tirupathur road at mile 68/4.
4.	Chinnammapet-Thakkolam road at mile 5/7.
5.	Ulli Madanoor road at mile 1/3 across Palar river.
6.	Jolarpet-Ambalore road (Ekalasapuram causeway).
7.	Melasampattu Branch road at mile 0/1 across Utbrakaver Nathi.
8.	Nimmiyambattu-Mittur road at mile 0/8.
9.	Agraharam-Gittapalli road at mile 5/1 across Gittapalli channel.
10.	Minnor-Vadakarai road across Palar.
11.	Arni-Devikapuram road at mile 7/2 across Cheyyar.
12.	Arcot-Arni-Wandiwash road at mile 25/8 across Cheyyar.
13-	Pennar-Bondai road at mile 2/5 across Pennar.
14.	Polur-Pilasur road across Cheyyar.
15.	Arni-Chetpet road at mile 6/1 across Cheyyar.

நதியின் குறுக்கே தற்போதுள்ள பெரிய பாலங்களின் பட்டியல்

வேலூர் கோட்டம்.

தொடர் எண். (1)	சாலையின் பெயர். (2)	மைல் அளவு எதற்குக் குறுக்கே என்பவை. (3)
1	சென்னை–சித்தூர்–பெங்களூர் சாலையில்	57/4 மைலில், மெக்லீன் கால்வாயின் குறுக்கே.
2	ஷை	75/8–76/8 மைலில், பெண்ணையாறு நதியின் குறுக்கே.
3	இராணிப்பேட்டை–கிருஷ்ணகிரி சாலையில்	71/5 மைலில், பாலாற்றின் குறுக்கே.
4	ஷை	87/2 மைலில், நக்கல் நதியின் குறுக்கே.
5	ஷை	87/2 மைலில், கால்வாயின் குறுக்கே.
6	ஷை	100/1 மைலில், பையாற்றின் குறுக்கே.
7	ஷை	101/5 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.
8	ஷை	128/7 மைலில், கால்வாயின் குறுக்கே.
9	ஷை	130/5 மைலில், கல்லாற்றின் குறுக்கே
10	கடலூர்–சித்தூர் சாலையில்	119/2–6 மைலில், பாலாற்றின் குறுக்கே.
11	அரக்கோணம்–காஞ்சீபுரம் சாலையில்	3/3–4 மைலில், கல்லாற்றின் குறுக்கே.
12	அரக்கோணம்–ஓச்சேரி சாலையில்	13/2 மைலில், அகவலம் ஆற்றின் குறுக்கே.
13	திருப்பத்தூர்–சிங்காரப்பேட்டை சாலையில்	1/3 மைலில், திருப்பத்தூர் தாலூகா உபரி நீர்க் கால்வாயின் குறுக்கே.
		6/2 மைலில், பம்பையாற்றின் குறுக்கே.
14	ஷை	9/8 மைலில், பம்பையாற்றின் குறுக்கே.
15	திருப்பத்தூர்–ஆலங்காயம் சாலையில்	18/6–8 மைலில், கௌண்டன்ய ஆற்றின் குறுக்கே.
16	காட்பாடி–வேங்கடகிரி கோட்டை சாலையில்	11/1 மைலில், பெய்யாற்றின் குறுக்கே.
17	அப்துல்லாபுரம்–பாக்கம் சாலையில்	16/6 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.
18	அப்துல்லாபுரம்–அசனம்பேட்டை–ஆலங்காயம் சாலையில்	22/4 மைலில், அசனம்பேட்டை ஆற்றின் குறுக்கே.
19	அப்துல்லாபுரம்–பாக்கம் சாலையில்	1/8 மைலில், மேல்நந்தபாக்கம் ஏரி உபரி நீர்க் கால்வாயின் குறுக்கே.
20	கலவை–வாழைப்பந்தல் சாலையில்	

தொடர் எண். (1)	சாலையின் பெயர். (2)	மைல் அளவு எதற்குக் குறுக்கே என்பவை. (3)
	நதியின் குறுக்கே தற்போதுள்ள பெரிய பாலங்களின் பட்டியல்—தொடர்ச்சி	
	வேலூர் கோட்டம்—தொடர்ச்சி.	
21	கலவை-வாழைப்பந்தல் சாலையில்	6/6 மைலில், பேடு ஆற்றின் குறுக்கே.
22	காவேரிப்பாக்கம்-சோழசிம்மபுரம் சாலையில்	10/6 மைலில், வீராணம் ஏரி உபரி நீர்க்கால்வாயின் குறுக்கே.
23	ஷ	13/5 மைலில், காவேரிப்பாக்கம் ஏரி உபரி நீர்க் கால்வாயின் குறுக்கே.
24	சேலம்-திருப்பத்தூர் சாலையில்	65/3 மைலில், கொரட்டி ஆற்றின் குறுக்கே.
	திருவண்ணாமலை கோட்டம்.	
25	திருவண்ணாமலை-தானிப்பாடி சாலையில்	39/2 மைலில், பெண்ணையாற்றின் குறுக்கே.
26	திருவண்ணாமலை-காஞ்சீபுரம் சாலையில்	12/1 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
27	கடலூர்-சித்தூர் சாலையில்	99/4 மைலில், படவட்டாற்றின் குறுக்கே.
28	வந்தவாசி-போளூர் சாலையில்	31/4 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
29	போளூர்-செங்கம் சாலையில்	15/5 மைலில், கல்லாற்றின் குறுக்கே.
30	ஆர்க்காடு-திண்டிவனம் சாலையில்	25/3–4 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
31	ஆர்க்காடு-ஆரணி-வந்தவாசி சாலையில்	16/1 மைலில், கமண்டல நாக நதியின் குறுக்கே.
32	கடலூர்-சித்தூர் சாலையில்	105/4 மைலில், நாகநதியின் குறுக்கே.
33	ஆர்க்காடு-திண்டிவனம் சாலையில்	37/6 மைலில், சுகநதியின் குறுக்கே.
	ஊடுபாதைகளுள்ள நதிக் குறுக்கீடுகளின் பட்டியல்.	
	வேலூர் கோட்டம்.	
1	பள்ளிகொண்டான் பலமநேர் சாலையில்	0/7–1/1 மைலில், பாலாற்றின் குறுக்கே.
2	ஷ	11/7 மைலில், கோட்டாற்றின் குறுக்கே.
3	ஆம்பூர்-சாத்தகூர் சாலையில்	0/7–8 மைலில், பாலாற்றின் குறுக்கே.
4	ஷ	8/7, 8 மைலில், மலட்டாற்றின் குறுக்கே.
5	வாணியம்பாடி-தர்மபுரி சாலையில்	151/2–3 மைலில், பம்பையாற்றின் குறுக்கே.
6	திருப்பத்தூர்-ஆலங்காயம் சாலையில்	12/8 மைலில், பம்பையாற்றின் குறுக்கே.
7	புட்டுத்தாக்கு-ஊடுபாதைச் சாலையில்	2/1–3 மைலில், பாலாற்றின் குறுக்கே
8	அரக்கோணம்-ஒச்சேரி சாலையில்	8/2 மைலில், கல்லாற்றின் குறுக்கே.
9	அரக்கோணம்-காஞ்சீபுரம் சாலையில்	8/8 மைலில், கல்லாற்றின் குறுக்கே.
10	அரக்கோணம்-சோழசிம்மபுரம் சாலையில்	9/1 மைலில், கால்வாயின் குறுக்கே.
11	மின்னல் ரயில்வே நிலையம்-அமீர்பேட்டை சாலையில்	2/4 மைலில், கலிங்கல் மதகின் குறுக்கே.
12	பச்சகுப்பம் ஊடுபாதையில் பாலாற்றின் குறுக்கே (அழிஞ்சிக்குப்பம் கிராமச் சாலையில்).	0/5 மைலில், பாலாற்றின் குறுக்கே.
	திருவண்ணாமலை கோட்டம்.	
13	கடலூர்-சித்தூர் சாலையில்	82/1–2 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
14	போளூர்-செங்கம் சாலையில்	8/5 மைலில், எறும்பூந்தி ஆற்றின் குறுக்கே.
15	ஆரணி-படவேடு சாலையில்	12/3 மைலில், படவெட்டாற்றின் குறுக்கே.
16	ஹெச். சி. வீரலூர் சாலையில்	9/3 மைலில், காட்டாற்றின் குறுக்கே.
17	காஞ்சீபுரம்-வந்தவாசி சாலையில்	11/7–8 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
18	ஆரணி-சேத்துப்பட்டு சாலையில்	6/1 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
19	அச்சிறுபாக்கம்-வந்தவாசி சாலையில்	21/6 மைலில், வந்தவாசி சுகநதியின் குறுக்கே.
20	ஷ	28/6 மைலில், சாலவேடு சுகநதியின் குறுக்கே.
21	ஆர்க்காடு-ஆரணி-வந்தவாசி சாலையில்	25/8 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
	பாலங்கள் அல்லது ஊடுபாதைகள் அற்ற ஆறுகள் சாலைகள் குறுக்கீடுகளின் பட்டியல்.	
	வேலூர் கோட்டம்.	
1	காட்பாடி-வேங்கடகிரி கோட்டை சாலையில்	32/7–8 மைலில், கோட்டாற்றின் குறுக்கே.
2	அப்துல்லாபுரம்-பாக்கம் சாலையில்	11/4 மைலில், பையாற்றின் குறுக்கே.
3	ஷ	19/6 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.

	சாலையின் பெயர்.	மைல் அளவு, எதற்குக் குறுக்கே என்பவை.
	(2)	(3)

பாலங்கள் அல்லது ஊடுபாதைகள் அற்ற ஆறுகள் சாலைகள் குறுக்கீடுகளின் பட்டியல்—தொடர்ச்சி

வேலூர் கோட்டம்—தொடர்ச்சி

4	அப்துல்லாபுரம்-பர்க்கம் சாலையில்	20/4 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.
5	ஷை	20/8 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.
6	ஷை	24/2 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.
7	ஷை	28/6 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.
8	ஷை	28/8 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.
9	சித்தூர்-திருத்தணி சாலையில்	14/7–8 மைலில், பெண்ணையாற்றின் குறுக்கே.
10	பாண்டிவரம்-சேந்தமங்கலம் சாலையில்	3/1 மைலில், மஹாளதி ஏரி உபரி நீர்க் கால்வாயின் குறுக்கே.
11	ஷை	10/4–5 மைலில், நெமிலி ஆற்றின் குறுக்கே.
12	குடியாத்தம்-கடம்பூர் சாலையில்	13–1, 2 மைலில், கோமடாற்றின் குறுக்கே.
13	சேலம்-திருப்பத்தூர் சாலையில்	68/4 மைலில்.
14	சின்னம்மாபேட்டை-தக்கோலம் சாலையில்	5/7 மைலில்.
15	மாடனூர்-அகரம் சாலையில்	4/8 மைலில், அகரம் ஆற்றின் குறுக்கே.
16	தக்கோலம்-கூவம் சாலையில்	1/1 மைலில், கூவம் ஆற்றின் குறுக்கே.
17	புதுப்பாடி-இலுப்பை சாலையில்	4/7 மைலில், சக்கரமல்லூர் கால்வாயின் குறுக்கே
18	இராணிப்பேட்டை-பொன்னை சாலையில்	9/9 மைலில், ஓடையின் குறுக்கே.
19	ஷை	11/1 மைலில், ஓடையின் குறுக்கே.
20	ஷை	11/6 மைலில் ஓடையின் குறுக்கே.
21	ஷை	12/2 மைலில், ஓடையின் குறுக்கே.
22	ஒதியத்தூர்-இணைச்சாலையில்	0/7 மைலில், பெய்யாற்றின் குறுக்கே.
23	உள்ளிமாடனூர்-சாலையில்	1/3 மைலில், பாலாற்றின் குறுக்கே.
24	ஜோலார்பேட்டை-அப்பனூர் சாலையில்	(எக்லாசபுரம் ஊடு பாதை).
25	மேலசம்பட்டு-இணைச்சாலையில்	0/1 மைலில், உத்தரகாவேரி ஆற்றின் குறுக்கே.
26	நிம்மியம்பட்டு-(கிட்டூர் சாலையில்)	0/8 மைலில்.
27	அக்ரஹாரம்-கிட்டாபள்ளி சாலையில்	5/1 மைலில், கிட்டாபள்ளி கால்வாயின் குறுக்கே.
28	மின்னூர்-வடகரை சாலையில்	பாலாற்றின் குறுக்கே.
29	விரிஞ்சிபுரம் ரயில்வே ஸ்டேஷன் பீடர் சாலையில்	1/5–6; 2/5–6 மைலில், கோட்டாற்றின், பாலாற்றின் குறுக்கே.
30	வாணியம்பாடி-கைலாசகிரி சாலையில் (உதயாந்திரம் அருகே)	1/5 மைலில், பாலாற்றின் குறுக்கே.
31	மின்னல் ரெயில்வே நிலையம்-அமீர்பேட்டை சாலையில்	2/6 மைலில் கால்வாயின் குறுக்கே.
32	தக்கோலம்-கூவம் சாலையில்	1/2 மைலில், கூவம் ஆற்றின் குறுக்கே.
33	மின்னல் ரெயில்வே நிலையம்-கீழ்வீதி சாலையில்	3/5 மைலில், அரசன்குப்பம் கால்வாயின் குறுக்கே.
34	பணப்பாக்கம்-பள்ளூர் சாலையில்	4/7 மைலில், கால்வாயின் குறுக்கே.
35	கீழரசம்பட்டு இணைச் சாலையில்	1/1 மைலில், நாகநதியின் குறுக்கே.

திருவண்ணாமலை கோட்டம்

36	போளூர்-செங்கம் சாலையில்	29/6 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
37	செங்கம்-பரமனந்தல் சாலையில்	0/7 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
38	என். சி. வீரலூர் சாலையில்	4/3, 5/2, 7/1 மைலில் காட்டாற்றின் குறுக்கே.
39	கலவை-வாழைப்பந்தல் சாலையில்	12/4–5 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
40	வீட்டு இலுப்பை-பெரும்பாக்கம் சாலையில்	பாலாற்றின் குறுக்கே.
41	ஆரணி-தேவிகாபுரம் சாலையில்	7/2 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
42	ஆர்க்காடு-ஆரணி-வந்தவாசி சாலையில் (தற்போதுள்ள அணைக் கட்டின் அருகில் புதிய பாலம் அமைக்கும் திட்டம்).	25/8 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
43	பொன்னூறு-போந்தை சாலையில்	2/5 மைலில், பொன்னூற்றின் குறுக்கே.
44	போளூர்-மிலாசூர் சாலையில்	செய்யாற்றின் குறுக்கே.
45	போளூர்-செங்கம் சாலையில்	24/1 மைலில்.
46	அச்சிறுபாக்கம்-வந்தவாசி சாலையில்	21/6 மைலில், வந்தவாசி சுகாநதியின் குறுக்கே.
47	அச்சிறுபாக்கம்-வந்தவாசி சாலையில்	28/8 மைலில், சாலகவுடு சுகாநதியின் குறுக்கே.
48	ஆரணி-சேத்துப்பட்டு சாலையில்	6/1 மைலில், செய்யாற்றின் குறுக்கே.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டவையும் செயலுக்கு எடுத்துக்கொள்ள எண்ணியுள்ளவையுமான பணிகளின் பட்டியல்

வரிசை எண். (1)	சாலையின் பெயர். (2)	மைல் அளவு, எதற்குக் குறுக்கே என்பவை. (3)
1	போளூர்–செங்கம் சாலையில்	29/6 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
2	பாணாவரம்–சேந்தமங்கலம் சாலையில்	10/4–5 மைலில், நெமிலி ஆற்றின் குறுக்கே.
3	சேலம்–திருப்பத்தூர் சாலையில்	68·/4 மைலில்.
4	சின்னம்மாபேட்டை–தக்கோலம் சாலையில்	5/7 மைலில்.
5	உள்ளி–மாடனூர் சாலையில்	1/3 மைலில், பாலாற்றின் குறுக்கே.
6	ஜோலார்பேட்டை–ஆம்பலூர் சாலையில்	(ஏகலபுரம் ஊடுபாதை)
7	மேலசம்பட்டு கிளைச் சாலையில்	0/1 மைலில், உத்தர காவிரி ஆற்றின் குறுக்கே.
8	நிம்மியம்பட்டு–மிட்டூர் சாலையில்	0/8 மைலில்.
9	அக்ரஹாரம்–கிட்டாபள்ளி சாலையில்	5/1 மைலில், கிட்டாபள்ளி கால்வாயின் குறுக்கே.
10	மின்னூர்–வடகரை சாலையில்	பாலாற்றின் குறுக்கே.
11	ஆரணி–தேவிகாபுரம் சாலையில்	7/2 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
12	ஆற்காடு–ஆரணி–வந்தவாசி சாலையில்	25/8 மைலில், செய்யாற்றின் குறுக்கே.
13	பொன்னூறு–திபாந்தை சாலையில்	2/5 மைலில், பெண்ணையாற்றின் குறுக்கே.
14	போளூர்–பிலாசூர் சாலையில்	செய்யாற்றின் குறுக்கே.
15	ஆரணி–சேத்துப்பட்டு சாலையில்	6/1 மைலில், செய்யாற்றின் குறுக்கே.

600 009 B3 RG 3077